## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### சித்திரை 14, யுவ - திருவள்ளுவர் ஆண்டு-2026

### 1995, ஏப்ரல் 27, வியாழக்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10.00 மணியளவில் பேரவை கூடியது.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :*

*"யாண்டுச்சென்று யாண்டும் உளராகார் வெந்துப்பின்*

*வேந்து செறப்பட் டவர்".*

*மிகுந்த வலிமை பொருந்திய அரசினால் சினந்து, வெகுளப்பட்டவர்கள் எங்கு சென்றாலும் எந்தவொரு இடத்திலும் வாழவே முடியாது.*

### 1. வினாக்கள்— விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

*மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 461, டாக்டர் மு. சீனியம்மாள், மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர்.*

**461—**

### தாசராபாளையத்தில் நியாய விலைக் கடை திறத்தல்

***38862—டாக்டர் மு. சீனியம்மாள்:***

*மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கோயம்புத்தூர் மாவட்டம், அவினாசி தொகுதியில் பொங்கலூர் பெத்தநாயக்கன்பாளையத்தில் உள்ள நியாய விலைக்கடையைப் பிரித்து தாசரார்பாளையத்தில் புதியதாக விற்பனைக் கடை திறக்க ஆவன செய்யப்படுமா ?*

[1995 ஏப்ரல் 27

*மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவுத் துறை அமைச்சர்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பொங்கலூர் பெத்தநாயக்கன்பாளையத்தில் உள்ள நியாயவிலைக் கடையைப் பிரித்து தாசராபாளையத்தில் புதியதாக நியாயவிலைக்கடை திறக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

*டாக்டர் மு. சீனியம்மாள்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் அவர்கள், கோயம்புத்தூர் மாவட்டம், அவினாசி தொகுதியிலுள்ள பெத்தநாயக்கன்பாளையத்தில் இருக்கின்ற நியாயவிலைக் கடையைப் பிரித்து தாசராபாளையத்திற்குக் கொடுக்க முடியாது என்று சொன்னார்கள். தாசராபாளையத்தின் அருகிலுள்ள கிராமங்களில் ஆதி திராவிட மக்கள் அதிக அளவிலே வாழ்கிறார்கள். அவர்கள் அந்த நியாயவிலைக் கடைக்குச் சென்று வருவதென்பது சிரமம். காரணம், தாசராபாளையத்திலிருந்து பொங்கலூர் பக்கத்தில் இருக்கின்ற பெத்தநாயக்கன்பாளையம் என்பது சுமார் 5. கி.மீ. தூரத்தில் உள்ளது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஏழை ஆதி திராவிட தாழ்த்தப்பட்ட மக்களின் இரட்சகராகத் திகழ்ந்து கொண்டிருக்கின்ற மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் நல்லாட்சியிலே மீண்டும் பரிசீலனை செய்து அங்கே நியாயவிலைக் கடை வருவதற்கு ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. இராம வீரப்பன் :* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாசராபாளையம் பகுதியைச் சேர்ந்த குடும்ப அட்டைகள் இணைப்பில் இருக்கின்ற பொங்கலூர் கடையில் மொத்தமே 274 அட்டைகள்தான் இருக்கின்றன. 800 அட்டைகளுக்குக் குறைவாக இருந்தால் அதிலே மிகப் பெரிய இழப்பு அரசுக்கும் கூட்டுறவுத் துறைக்கும் வருகிறது. ஆகவேதான 800-க்குக் குறைவாக இருக்கிறது என்கின்றபோது, அதைப் பிரிப்பதற்கு அரசு பல வகைகளிலே யோசிக்க வேண்டிய அவசியம் இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தாசராபாளையம் பகுதி ஆதி திராவிட மக்கள் வாழ்கின்ற பகுதி என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆதி திராவிட மக்கள் வாழ்கிறார்கள் என்பதற்காக, அவர்களுக்கென்று ஒரு தனி நியாயவிலைக் கடையைக் கேட்பதோ, அமைப்பதோ சரியாக இருக்காது. ஆனால் உறுப்பினர் அவர்கள் 5.கி.மீ. தொலைவில் இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். இங்கே துறையில் இருந்து 2.கி.மீ தூரம்தான் என்று குறிப்பு தருகிறார்கள். நான் பல கேள்விகளுக்குப் பதில் அளிக்கின்றபோது இதுபோன்ற பிரச்சினை விவாதத்திற்கு வருகின்றது. உறுப்பினர்கள் 3. கி.மீ., 4. கி.மீ. என்றெல்லாம்

1995 ஏப்ரல் 27]

குறிப்புகளைத் தருகின்றபோது, துறையிலே 1½ கி.மீ.—தான் என்று தருகிறார்கள். மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எத்தனை தூரம் என்பது பிரச்சினையல்ல, பெண்கள் நீண்ட தூரம் சென்று நியாயவிலைக் ,கடைகளில் பொருட்கள் வாங்குகின்ற அவசியம் ஏற்படுகிறது, அந்தச் சூழ்நிலையை மாற்றி அந்த கிராமத்திலே வாழ்கின்ற பெண்களுக்கு வசதி செய்து தருவதற்கு முயற்சி எடுக்கவேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதையொட்டித்தான் இலாப நஷ்டத்தை மனதிலே கொள்ளாது, அந்தப் பகுதியிலே இருப்பவர்கள் பொறுப்பு ஏற்றுக்கொண்டால், அங்கே 200 அட்டைகளோ அல்லது 150 அட்டைகளோ இருந்தால், அங்கே முக்கியமான மெயின் ஷாப்பினுடைய ஏஜன்ஸியாக அதைப் பிரித்து அங்கேயிருந்து பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்கு ஏற்பாடு செய்யலாம் என்று முடிவெடுத்திருக்கிறோம். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற தாசராபாளையத்தில் இருப்பவர்கள் பொறுப்பு ஏற்றுக்கொண்டு யாராவது ஒரு பெண்மணியை ஏஜன்ஸியாக நியமிப்பதற்கு அவர்கள் குறிப்பிட்டுக் காட்டுவார்களானால், அவர்களுக்கு ஒரு ஏஜன்ஸியை அமைத்து அந்தப் பகுதியில் பொருட்களை அங்கேயே கொண்டு போய் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யலாம். அந்தப் பொறுப்பை அவர்கள்தான் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

முற்பகல் 10-05

டாக்டர் மு. சீனியம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பாதகம் செய்பவர்களைக் கண்டால் நாம்
பயங்கொள்ளல் ஆகாது பாப்பா
மோதி மிதித்து விடு பாப்பா
அவர் முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பா

என்றபடி வீரத்தை முழங்கிக் கொண்டிருக்கிற டாக்டர் புரட்சித் தலைவியினுடைய நல்லாட்சியில், பெண்களுக்குச் சிறப்பைத் தந்து கொண்டிருக்கிற நல்லாட்சியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பெண்களாலே நடத்தப்படுகின்ற ஒரு நியாயவிலைக் கடையை ஏற்படுத்தி நிறைய பெண்களை இந்த கூட்டுறவுச் சங்கத்திலே அங்கத்தினர்களாக்கி நாங்களும் அதில் பொறுப்பேற்று நடத்துவதற்கு ஆவன செய்வதாக கூறியிருக்கிறார்கள். இதற்கு ஏதேனும் சட்டதிட்டங்கள் உள்ளதா? இத்தனை பெண்கள் இருக்க வேண்டும் என்பதற்கான ஏதாவது அளவு இருக்கிறதா? என்னுடைய அவினாசி தொகுதியிலே பெண்களே

TRUTH ALONE TRIUMPHS

[1995 ஏப்ரல் 27

நிருவகிக்கின்ற கடையை வந்து திறப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. இராம வீரப்பன் :* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்களை உறுப்பினர்களாகக் கொண்ட கூட்டமைப்பை உருவாக்குவது என்பது இதனுடைய நோக்கம் அல்ல. அந்தப் பகுதியிலே இருக்கிற மக்கள் ஒரு பெண்ணைத் தேர்ந்தெடுத்து அறிவித்தால், அவரை இந்த கடையினுடைய ஏஜென்சியாக, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அறிமுகப்படுத்தி, இந்த கடைக்காரர்கள் ஏற்றுக்கொள்வார்கள். இந்தப் பகுதியிலுள்ள 156 அட்டைகளுக்குள்ள அரிசி. சர்க்கரை, மண்ணெண்ணெய், கோதுமை போன்ற அந்தப் பொருள்களை எல்லாம் ஒரு மாதத்திற்குரியதை, மாதத்திற்கு ஒரு முறையோ, இரண்டு முறையோ, எப்படி வசதி இருக்கிறதோ அந்த அளவுக்கு இந்த கடையிலிருந்து மொத்தமாக இவர்கள் பெற்றுக்கொண்டு போய் விடுவார்கள். அவ்வாறு அந்த பொருள்களை பெற்றுக்கொண்டு போனதற்குப் பிறகு, அதை அங்கு வைத்து கொடுப்பதற்கு நீங்கள் ஒரு இடத்தை ஏற்பாடு செய்ய வேண்டும். அங்கே அந்தப் பெண் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்தப் பெண்ணை கண்காணிக்க அந்த கிராமப்பகுதியிலே இருக்கிற 5 நபர்களை நியமிக்க வேண்டும். அந்தக் குழுவிலே பெண்கள் அதிகமாக இருந்தால் நல்லது. பெண்கள் பொறுப்பேற்கின்ற காரணத்தினாலே, பெண்களுக்கு இந்த கஷ்டங்கள் புரிகிற காரணத்தால், பெண்களாக 5 நபர்களைக் கொண்ட 4, 3, என்று அந்தக் கிராமத்திற்கேற்றவாறு ஒரு குழுவை அமைத்தால், இந்த பொருள்களை வாங்குவதற்கும், விநியோகிப்பதற்கும் நீங்கள் குறிப்பிடுகிற பெண்ணை இவர்கள் கண்காணிப்பார்கள். ஆகவே, இது கூட்டுறவுக் கடை அல்ல. நீங்கள் குறிப்பிடுகிற அந்த பெண்ணை, கலெக்டர் ஏஜென்சியாக நியமனம் செய்து, அறிவித்து அவர்களுக்கு அந்த பொருள்கள் எல்லாம் தரப்படும். அந்தப் பகுதியிலுள்ள கிராமத்து மக்கள் அந்த இடத்திலே வாங்குவதற்கு இயற்கையாகவே இந்த ஏற்பாட்டின் மூலம் செய்யப்பட்டுவிடும். ஆகவே, இடத்தை நீங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும். ஒரு நபரை அறிமுகப்படுத்த வேண்டும். அந்த பொருள்களுக்குரிய பணத்தைக் கொடுத்து வாங்குவது என்கிற பிரச்சினை இருக்கிறது. நபரையும், இடத்தையும் நீங்கள் தேர்வு செய்து நடைமுறைப்படுத்துகிறபோது இதற்கு ஒரு முறையை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* வினா எண் 462, டாக்டர் சு. மணிமேகலை, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

1995 ஏப்ரல் 27]

**462—**

## அரசு மருத்துவமனைகளில் இருப்பிட வசதி ஏற்படுத்துதல்

**36775—டாக்டர் சு. மணிமேகலை :*

*மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தமிழ்நாட்டில் பெரிய அரசு மருத்துவமனைகளில் தங்கி சிகிச்சை பெறும் நோயாளிகளைப் பார்க்க வருபவர்கள் தங்குவதற்காக மருத்துவமனைக்கு அருகாமையில் இருப்பிட வசதி ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?*

*மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*ஆம். 1995-96 ஆம் ஆண்டிற்குரிய பகுதி 2 திட்டத்தில் 22½ லட்ச ரூபாய் செலவில் 15 மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் `வெயிட்டிங் ரூம்ஸ்' கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அரசு ஒப்புதல் அளித்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)*

*டாக்டர் சு. மணிமேகலை:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 4 ஆண்டுகளில் நான் கேட்ட கோரிக்கைகளுக்கு இன்றுதான் அமைச்சர் அவர்கள் ஆம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ரிமோட் பிளேசிலிருந்து பேஷண்ட்டாக கவர்மென்ட் ஹாஸ்பிட்டலில் அட்மிட் செய்யும்போது— பார் எ புரலாங்குடு டிரிட்மெண்ட்க்கு, ஹெளிஸியா, கோமா கேஸஸ், சர்ஜிகல் கேஸஸ், அங்கே, ஹாஸ்பிட்டலிலே லாங் டைம் இருக்க வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதே சமயத்தில் அவர்களை அட்டெண்டு செய்ய வேண்டிய அவசியமும் இருக்கிறது. இந்தச் சூழ்நிலையிலே அட்டெண்டர்ஸ் அவர்கள் கூடவே இருக்க வேண்டிய ஒரு சூழ்நிலை இருப்பதால் அவர்களுக்கென்று பிரத்யேகமாக தனி அறையை அமைத்து, இதற்கு ஏதாவது ஒரு தொகையை வசூல் பண்ணி, இந்த அட்டெண்டர்ஸ்க்கு என்று உள்ள இந்தத் திட்டத்தினை எப்பொழுது அமைச்சர் அவர்கள் செயல்படுத்துவார்கள் என அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நான்கு ஆண்டு காலத்திலே ஆம் என்று சொல்கிற அளவிலே அவர்கள் கேள்வி கேட்டதற்காக (சிரிப்பு) அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்பொழுது பணம்

ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கட்டிடங்களைக் கட்டிய உடனே பயனுக்கு கொண்டு வரலாம். இதிலே சில கட்டுப்பாடுகளை நாம் விதிக்க இருக்கிறோம். இதிலே தொடர்ச்சியாக பல பேர் வந்து தங்கிவிடக்கூடாது. அங்கு இருக்கிற நோயாளிகளுடன் வரக்கூடிய, அட்டெண்டு பண்ணுகிறவர்கள் மட்டும்தான் இருக்க வேண்டும். காரணம் அரசாங்கத்தினுடைய இடம் என்று சொன்னால் எல்லோரும் அதிலே சொந்தம் கொண்டாட ஆரம்பித்து விடுவார்கள். அதைக் கட்டுப்படுத்துகிறபோது வேண்டாத பிரச்சினைகள் எல்லாம் வரும். எனவே, இதை மிகக் கட்டுப்பாடாக நடத்த வேண்டுமென்று நான் கருதுகிறேன். எனவே, தொடர்ச்சியாக தங்க நிச்சயமாக அனுமதி கிடையாது. அந்த வகையிலேதான் இதை அமைக்க இருக்கிறோம். கட்டியவுடனே அந்தப் பயன் மக்களுக்குக் கிடைக்கும்.

*முற்பகல் 10-10*

**டாக்டர் சு. மணிமேகலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவ்வாறு கட்டும்பொழுது, அந்த அறைகளை கிரானிக் பேஷண்ட்ஸ்-ஸுக்கு என்று வகைப்படுத்தி அதைத் தனியாரிடம் டெண்டர்-ஆக விட்டு, அவர்களே அதை மெயின்டெயின் செய்ய அரசு ஆவன செய்யுமா? ஏனென்றால், நாம் தனியாக ஆஸ்பிடல் மெயின்டெனன்ஸோடு ஒன்றாக விட்டோமேயானால் அது அவ்வளவு சரிவராது. ஆகவே, அதைத் தனியாரிடம் டெண்டர் மூலம் விட்டோம் என்றால் அவர்கள் அதை முறையாகச் செயல்படுத்துவார்கள். இதுமாதிரி, கிரானிக் பேஷன்ட்ஸ்-களுக்கு மட்டும் தேவைப்படும் அட்டெண்டரும் கட்டாயமாக உள்நோயாளிகளுடன் இருக்க வேண்டும் என்ற தகுதியுள்ள பேஷன்ட்ஸ்களுக்கு மட்டும் அந்த அறையை ஒதுக்கி, அதற்காக அந்த டெண்டர் விடுபவர்களிடம் ஒரு நிபந்தனையைப் பெற்று, அதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப் பற்றி அரசு பரிசீலிக்கும். ஏற்கெனவே, காஞ்சீபுரம் காரப்பேட்டை மருத்துவமனையிலே, பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பெயரிலே அமைந்திருக்கிற மருத்துவமனையிலே இது போன்ற கட்டிடம் கட்டி முடித்து, குறைந்த வாடகையிலே அங்கே வருகின்ற நோயாளிகளுடைய அட்டெண்டருக்கு நாம் கொடுத்திருக்கிறோம். அதைப் போலதான் இதையும் செய்ய வேண்டும் என்று நாம் கருதுகிறோம். ஆனால், எல்லா மாவட்டங்களிலும், இது அமைக்கப்படுகிறபொழுது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல், ஏதாவது ஒரு

1995 ஏப்ரல் 27]

நடவடிக்கை எடுத்தால்தான் அதை சிறப்பாகப் பராமரிக்க முடியும். இன்னும், நாம் கட்டுகிற இந்தக் கட்டிடம் பெண்களுக்குத் தனியாக, ஆண்களுக்குத் தனியாக, தங்குவதற்கான வசதிகள், கழிப்பறைகள், இப்படி அனைத்து வசதிகளையும் அதிலே செய்ய வேண்டுமென்று நாம் இருக்கிறோம். இதுவரை அதைப்போல வசதிகள் இல்லை. புரட்சித் தலைவியினுடைய அரசுதான் அந்த நடவடிக்கையை எடுத்து இப்போது முதன் முறையாக அப்படிப்பட்ட முயற்சி எடுத்திருக்கிறது. எனவே, பொதுமக்களுடைய ஒத்துழைப்பு இதிலே சிறப்பாக இருக்கிறவரை அரசாங்கமே நடத்தலாம். அப்போது மக்களுக்குப் பிரச்சினை இருக்காது. பொதுமக்களுடைய ஒத்துழைப்பு சரியாக இல்லையென்ற நிலை ஏற்படுமேயானால், அதை தனியாரிடத்திலே கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. கே. சின்னசாமி.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மாவட்ட அளவிலே இருக்கின்ற அரசு மருத்துவமனைகளில் மட்டும் இப்படிப்பட்ட தங்குகின்ற கட்டிடம் கட்டுகின்ற வசதி ஏற்படுமா? அல்லது கோட்ட அளவில், தாலூகா அளவில் இருக்கின்ற அரசு மருத்துவமனைகளிலும் இப்படி கட்டப்படுமா? எங்களுடைய பகுதியைச் சேர்ந்த கோபிசெட்டிபாளையத்தில் மாவட்ட அளவிலே பெரிய அரசு மருத்துவமனை இருக்கிறது. அதிலே முன்னுரிமை கொடுத்து கட்டப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல்கட்டமாக மாவட்டத் தலைமை மருத்துவமனையிலே இதைக் கட்டுவதற்காக அரசு நடவடிக்கை எடுக்கும். அதற்குப் பின்னாலே, தாலூகா மருத்துவமனையில், எவையெல்லாம் பெரிய மருத்துவமனைகளாக இருக்கிறதோ, அங்கு கட்டுவதற்கான நடவடிக்கையை தொடர்ந்து எடுக்கலாம். கால அளவு எப்போது என்பதை இப்போது என்னால் குறிப்பிட்டுச் சொல்லமுடியாது. ஆகையால், எங்கே அவசியம் இருக்கிறதோ, அங்கே செய்யலாம். தாலூகா மருத்துவமனையைப் பொறுத்தவரை, பெரும்பகுதி வந்து போய்விடுகிற வாய்ப்பு அவர்களுக்கு இருக்கிறது. இருந்தாலும் பெரிய மருத்துவமனைகளாக 100 படுக்கைகளுக்கு மேல் இருக்கின்ற மருத்துவமனைகளிலே அவசியம் இருக்கும். ஆனால், இப்போதுள்ள நிதி நிலைமையிலே அங்கும் அதைச் செய்ய முடியாது. இவற்றையெல்லாம் முடித்துவிட்டு அடுத்த கட்டமாக அதை எடுக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 463, திரு. கே. செல்வராஜ், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**463—**

## அரசு மருத்துவமனைக் கட்டிடங்களைப் பொதுச் சுகாதாரத்துறை பராமரித்தல்

***40272— திரு. கே. செல்வராஜ் :***

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு மருத்துவமனை கட்டிடங்களை புதுப்பித்து பராமரிக்கும் பணியை பொதுப்பணித்துறையிடமிருந்து மாற்றி பொது சுகாதாரத் துறையிடம் ஒப்படைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும்?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை

(ஆ) கேள்விக்கே இடமில்லை.

**திரு. கே. செல்வராஜ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் மின்னல் வேகத்தில் பதில் சொல்லிவிட்டார். இந்த அரசு மருத்துவமனை கட்டிடங்களில் ஒருசில மருத்துவமனைகளில் பொதுப் பணித்துறையினுடைய அதிகாரிகள் மேற்பார்வையிட்டு பணிகளைச் செய்து கொண்டிருக்கிறபொழுது, இந்த மருத்துவமனை அதிகாரிகள் அங்கு இருக்கின்ற குறைகளை, குறிப்பாக ஜன்னல்கள், கண்ணாடிகள் உடைந்து விட்டாலும் கூட, குடிநீர் குழாய்கள், மின்பிரிவு போன்ற இந்தப் பணியைச் சொன்னாலும், இவர்கள் சொல்லுகின்ற குறைகளை இவர்கள் நேரடியாக அவர்களுக்கு சொல்வதில்லை. இவர்கள் கடிதம் அனுப்பி அந்தக் கடிதம் சென்று, அதன் பிறகு அவர்கள் நடவடிக்கை எடுக்கிறபொழுது, மருத்துவமனைகளில், நோயாளிகளுக்கு முறையாக அந்த பாரமரிப்பு பணிகள் சரியாக செய்யப்பட முடிவதில்லை. அதனால், மருத்துவமனைக் கட்டிடங்களைப் பொறுத்தவரை, உடனுக்குடன் சிறு, சிறு பணிகளைக் கூட உடனே புதுப்பிப்பதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தத் துறையே மருத்துவமனைக் கட்டிடங்களை பழுதுபார்க்கும் பணியையாவது எடுத்து நடத்துவதற்கு உத்தரவிட முன்வருவாரா என அறிய விரும்புகிறேன்.

1995 ஏப்ரல் 27]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில குறைபாடுகள் இருப்பதென்பது தவிர்க்க முடியாததுதான். இப்போது, பெரிய மருத்துவமனைகளிலே, பொதுப்பணித்துறையிலிருந்து ஒரு செயற்பொறியாளரை அங்கே நிரந்தரமாக இருக்க வேண்டும் என்று கேட்டு அங்கே அந்தப் பணியை அவர்கள் செய்து வருகிறார்கள். மற்ற இடங்களைப் பொறுத்தவரை, பொதுப்பணித்துறை அந்த பொறுப்பை ஏற்றுக்கொண்டு செய்கிறார்கள். சில நேரங்களிலே இவர்கள் கொடுக்கின்ற சில வேலைகள் மாற்றி செய்யப்படுகின்றன என்ற குறைபாடு வருகிறது. அதேபோல அவசரமாகச் செய்ய வேண்டிய வேலையை நல்வாழ்வுத்துறையிலிருந்து சரியாக அவர்கள் பரிந்துரை செய்யவில்லை என்ற பிரச்சினையும் வருகிறது. இதற்காக, இப்பொழுது சீப் எஞ்சினியர் அளவிலே கூட்டம் போட வேண்டும் என்று சொல்லி, அவர்கள் கூட்டம் போட்டு, அதிலே சில நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள். இதை சீர் செய்வதற்கான வேறு முறைகளை நாங்கள் இப்போது பார்த்துக் கொண்டிருக்கிறோம். இப்போது, நாம் ஏற்படுத்தியிருக்கிற மருத்துவக் கழகம் என்பது இந்தப் பொறுப்பை வருங்காலத்திலே எடுத்துக்கொள்ள வேண்டும் என்று ஒரு முடிவு எடுத்து, அந்த வகையிலே இந்த நடவடிக்கையையும் நாம் எடுத்து வருகிறோம். எனவே பராமரிப்பு என்ற இந்த பணியை அவர்கள் எடுத்துக்கொள்ள முடியுமா அவர்களால் செய்யமுடியுமா, என்பதைப் பற்றி பின்னாலே ஆய்வு செய்து சரியான முடிவுகளை எடுக்கலாம்.

முற்பகல் 10-15

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய கருத்துக்களின் அடிப்படையிலே பார்க்கின்ற போதுகூட இந்த குடிநீர் குழாய்கள் உடைந்துவிட்டால்கூட, அதை மாற்றுவதற்கு என்று இவர்கள் கடிதம் எழுதி புகார் சென்று 2,3 மாதங்கள் கழித்து மாற்றுகின்ற நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட அத்தியாவசியப் பணிகளை உடனுக்குடன் எடுத்துச் செய்வதற்கு அந்த பைப்புகளை, வாஷ்பேசின்களை அந்த மருத்துவ மனையிலே இருக்கக்கூடிய பராமரிப்பு வேலைகளை மட்டும் உடனடியாக எடுத்துச் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீலனை செய்து, அதற்கு மருத்துவத் துறை அதிகாரிகளும் பொதுப்பணித்துறை அதிகாரிகளும் தினசரி சந்திக்கிற விதத்திலாவது, நீங்கள் நியமிக்கின்ற அந்த என்ஜினியராவது தினசரி மருத்துவ மனையில் மருத்துவ அதிகாரிகள் ஒரு புகார் புத்தகத்திலே இருக்கின்ற குறைகளை எழுதி வைப்பதும், தினசரி மாலையிலே அந்த புகார்களைப் பார்த்து அதன் அடிப்படையில்

நடவடிக்கை எடுக்கின்ற விதத்திலாவது அவர்களுக்குள் ஒரு கோ-ஆர்டினேசன் செய்துவைத்தால் இன்னும் அந்தப் பணி முறையாக நடப்பதற்கு ஏதுவாக இருக்கும். அந்த அளவிலாவது நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னபடி, பெரிய மருத்துவமனைகளிலே அதற்காக தனி அதிகாரிகளை நியமித்திருக்கிறார்கள். சென்னையிலே இருக்கின்ற மிகப்பெரிய பொது மருத்துவமனையிலே நம்மிடத்திலேயே ஒரு அதிகாரியைக் கொடுத்துவிட்டார்கள். அவர் டீன்-க்குக் கீழே அவர் பணியாற்றிக்கொண்டிருக்கிறார். எனவே அந்த பணிகளைச் சொல்வதற்கும், அவைகளைச் செய்வதற்கும் சுலபமாக இருக்கிறது. மற்ற மருத்துவமனைகளிலே அதற்காக ஒரு அதிகாரியை, என்ஜினியரை அங்கே போட்டுவிட்டார்கள். ஆனால் அவர்கள் நேரடியாக பி.டபிள்.யூ. கன்ட்ரோலிலே இருப்பார். அங்கே ஏற்படுகிற பணியை உடனே அவர் எடுத்துச் செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆனால் சில இடங்களிலே ஏதாவது ஒரு காரணத்தினால் குறைபாடுகள் ஏற்படத்தான் செய்கிறது. இவர்கள் எழுதுவதிலே காலதாமதம் ஏற்பட்டுவிடுகிறது அல்லது எழுதிய பின்னாலே அவர்கள் வந்து பார்ப்பதிலே காலதாமதம் ஏற்பட்டுவிடும். இது எங்காவது இரண்டொரு இடங்களிலே இருக்காது என்று சொல்ல முடியாது. இருந்தாலும் அவைகளை எல்லாம் சீர் செய்வதற்கு சம்பந்தப்பட்ட இரண்டு துறைகளினுடைய அதிகாரிகள் ஒன்றாகச் சேர்ந்து, ஒரு கூட்டம் நடத்தி, செயலாளர் அளவிலே கூட்டம் நடத்தி அதற்கான சில வரைமுறைகளை வகுத்துக் கொடுத்திருக்கிறார்கள். அதற்குப் பின்னாலே இந்தப் பணி சிறப்பாக இருக்கின்றது என்ற தகவல் எங்களுக்கு வந்திருக்கிறது. எனவே இந்த பராமரிப்புப் பணியைப் பொறுத்தவரையில் வேறுவிதமாக எப்படிச் செய்யலாம் என்பதைப் பற்றி துறை ஆராய்ந்து கொண்டிருக்கிறது.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* திரு. கே. பி. ராஜூ.

*திரு. கே. பி. ராஜூ :* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மருத்துவமனைகளில் பழுதடைந்த ஜன்னல்கள், கண்ணாடிகள் மற்றும் கட்டடங்கள் போன்றவற்றை பழுதுபார்ப்பதற்கு இப்போது பொதுப்பணித் துறையிலிருந்து பில்டிங் டிவிஷன் அல்லது பொதுப்பணித் துறை ரெகுலர் சர்வீஸ்தான் செய்கின்றார்கள். அதே சமயத்திலே ஈ.எஸ்.ஐ. போன்ற பெரிய மருத்துவமனைகளில் தனியாக ஒரு பொதுப்பணித் துறை டிவிஷனே இருக்கின்றது. ஒரு ஈ.ஈ. இருக்கிறார். ஒரு எஸ்.ஈ. இருக்கிறார், ஒரு ஜே.ஈ. இருக்கிறார். அவர்கள் போன்றவர்கள் எல்லாம் இருக்கிறார்கள்.

1995 ஏப்ரல் 27]

அதே போல அரசு மருத்துவமனைகளில் அதிகமாக கட்டடங்கள் கட்டுகின்ற பணிகள் இருக்கின்ற காரணத்தினாலே, அதிலே பழுதுபார்க்கின்ற வேலைகள் அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலே, அரசு மருத்துவ மனைகளுக்கு என்று தனியாக தமிழ்நாடு லெவலில் ஒரு டிவிஷன் அமைக்கப்படுமா அல்லது ஒரு எஸ்.ஈ., சி.ஈ., லெவலிலே ஒரு தனித் துறை அமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துறையைப் பொறுத்தவரையில் கட்டடங்கள் சிறப்பாக பராமரிக்கப்படவேண்டும் என்பதுதான். அதை என்னுடைய கோரிக்கையாக தான் வைக்கமுடியுமே தவிர நீங்கள் சீ.ஈ. போடுங்கள் அல்லது எஸ்.ஈ. போடுங்கள் என்று நான் கேட்க முடியாது. இப்போது ஏற்கெனவே இருக்கிற அமைப்பே சரியான அமைப்பாக இருக்கிறது. எனவே அந்த சில நேரங்களிலே இரண்டு மூன்று துறைகள் ஒன்றாகப் பணியாற்றுகின்றபோது சில கோ-ஆர்டினேஷனிலே சில பிரச்சினைகள் வந்திருக்கின்றன. அந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகத்தான் சமீபத்திலே இரண்டு துறைகளினுடைய செயலாளர்களும் சேர்ந்து ஒரு கூட்டம் நடத்தி அதிலே முடிவெடுத்திருக்கிறார்கள். எனவே அந்த முடிவின்படி சில வரைமுறைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதிலே யார் தவறு செய்தார்கள், யார் சரியாக உரிய நேரத்திலே பணியாற்றவில்லை என்று கண்டுபிடிக்கின்ற அளவுக்கு ஒரு வரைமுறை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதைச் செயல்படுத்துகிறபோது யார் தவறு செய்தார்களோ அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியும். அப்படி நடவடிக்கை எடுக்கிறபோது இந்தப் பிரச்சினை தீரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இரா. தாமரைக்கனி.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறை அதிகாரிகளுக்கு பெரிய வேலைகள் இருக்கின்றன. பெரிய பெரிய பில்டிங்ஸ், பெரிய பெரிய கட்டடங்கள் இருக்கின்றன. நிரந்தர வேலைகளைச் செய்வதற்கே அவர்களுக்கு நேரம் போதவில்லை. அதிகாரிகளும் பற்றாக்குறையாக இருக்கிறார்கள். இது மெயின்ட்டனன்ஸ் வேலை. மெயின்டனன்ஸ் வேலையை சுகாதாரத் துறை கவனித்தால் பொது மக்களுக்கு சிரமம் இல்லாமல் இருக்கும். அது நல்லமுறையில் அமையும். ஆகவே துறை அதிகாரிகள் கலந்து பேசி ஆலோசனை பண்ணுவதற்கு நாளாகும். ஆகவே பக்கத்திலே தான் பொதுப்பணித் துறை அமைச்சர் அமர்ந்திருக்கிறார். சுகாதாரத் துறை அமைச்சர் இருக்கின்றார். மெயின்டனன்ஸ் பண்ணுகின்ற வேலையை மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரே பார்த்துக்கொள்ளட்டும் என்று அப்படி

ஒரு வார்த்தையை பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னால்தான் என்ன? உடனே கவர்ன்மென்ட் ஜீ.ஓ. வந்து, மெயின்ட்டனன்ஸ் வேலை நல்லமுறையில் நடக்கும். அதனால் அரசுக்கு நல்ல பெயர்தான் ஏற்படும். பொதுப்பணித் துறை அமைச்சரும், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரும் அதிகாரிகள் பேசுவதை விட இவர்கள் தனித்து நின்று பேசினால் (சிரிப்பு) இது வேகமாக முடியும். முதலமைச்சர் உத்தரவு போடவும் ரெடியாக இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு ஆக்கபூர்வமான வேலையைச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 10.20*

*மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்களுடைய யோசனைக்கு நான் ரொம்ப நன்றி சொல்ல வேண்டும். நான் ஏற்கெனவே சொன்னபடி அவர்களிடம் கட்டிடம் கட்டுவதற்காக ஒரு தனி டிவிசன், தனி விங் இருக்கிறது. அதைப்போல், மெயின்டெனன்ஸ்-க்காக தனி விங் வைத்து இருக்கிறார்கள். எனவே, என்னென்ன பணி பொதுப் பணித் துறையிலே இருக்கிறதோ அத்தனைக்கும் தனித் தனியாக ஒரு அமைப்பே இருக்கிறது. அந்த அமைப்புதான் இந்த காரியத்தையே செய்துகொண்டிருக்கிறது. நான் ஏற்கெனவே சொன்னதைப்போல இங்கே தனியாக ஒரு மெடிசின் கார்ப்பரேசன் என்ற ஒன்றை நாம் ஆரம்பித்திருக்கிறோம். அந்த கார்ப்பரேசனில் எல்லா பாரமரிப்புகளையும் நாம் எடுத்துக்கொள்ளலாம் என்ற ஒரு முடிவு இருக்கிறது. நான் ஏற்கெனவே இங்கு பேசும்போதுகூட சொன்னேன், மருந்து வாங்குவது, வினியோகிப்பது மட்டுமல்லாமல் அங்கே வாங்குகிற கருவிகளை ரிப்பேர் செய்வது, இப்படிப்பட்ட காரியங்களைச் செய்ய வேண்டுமென்று நாம் முடிவு எடுத்திருக்கிறோம். அப்படி வருகிறபொழுது, தனியாக சின்னச் சின்ன மருத்துவமனையாக இருக்கிற மிகக் குறைந்த செலவிலே வருகிற அந்த மெயின்டெனன்ஸ் வேலையையும்கூட அவர்கள் எடுத்துக்கொள்ளலாம் என்ற ஒரு கருத்து இப்பொழுது அதிலே ஆராயப்படுகிறது. ஆனால், இந்த ஆண்டும், அடுத்த ஆண்டும் அப்படி முடியாது. கொஞ்ச காலப்போக்கிலேதான் அதை செய்யமுடியும். எனவே, காலப்போக்கிலே அதைப்பற்றி யோசிக்கலாம்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* வினா எண் 464, திரு. வெ. பழனிசாமி, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்.

1995 ஏப்ரல் 27]

**464—**

## திருப்பூரிலிருந்து பேருந்துகள் இயக்குதல்

**26526*—திரு. வெ. பழனிசாமி :

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூரிலிருந்து திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் திருப்பதி, திருநள்ளாறு, திருநெல்வேலி ஆகிய பகுதிகளுக்கு பேருந்து இயக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் இயக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): இல்லை.

திரு. வெ. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் நிறைந்த பகுதியான திருப்பூர் பகுதியிலிருந்து திருப்பதி, திருநள்ளாறு, திருநெல்வேலிக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக பேருந்து விட வேண்டுமென்று நீண்டநாளாக கோரிக்கை வைத்திருக்கிறோம். மாண்புமிகு அமைச்சர் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். இருப்பினும்கூட, தற்பொழுது திருப்பதிக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பெயரால் இயங்குகிற ஜெ.ஜெ. போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. அதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கும், போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும், நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுபோல திருநள்ளாறு பக்கத்திலுள்ள பாண்டிச்சேரி மாநிலம் காரைக்காலுக்கு அருகில் இருக்கிற காரணத்தால் அங்கேயும் ஜெ.ஜெ. போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக பேருந்து விடுவதற்குண்டான முயற்சியை மாண்புமிகு அமைச்சர் மேற்கொள்வாரா? அதேபோல், திருநெல்வேலிக்கு, அதுபோல் குற்றாலம், திருச்செந்தூர் ஆகிய பகுதிகளுக்கு அதிகமானபேர் திருப்பூரிலிருந்து சென்று வருகிற காரணத்தாலும், மதுரை போன்ற பகுதிகளிலிருந்தும் ஏராளமான தொழிலாளர்கள் திருப்பூரில் பணியாற்றுகிற காரணத்தாலும், திருநெல்வேலி வரை திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக வருகிற ஆண்டிலாவது விடுவதற்குண்டான முயற்சிகளை மேற்கொள்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் :* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வி, திருப்பூரிலிருந்து திருப்பதிக்கு பேருந்துகள் இயக்கப்படுமா என்ற கேள்வி. மற்றொன்று பாண்டிச்சேரி மாநிலமான காரைக்காலுக்கு பேருந்துகள் இயக்கப்படுமா என்ற கேள்வியைக் கேட்டிருந்தார். ஆகவேதான், நான் இல்லையென்று சொன்னேன். இரு மாநிலத்திற்கும் ஒப்பந்தம் முடிந்த காரணத்தாலே திடீரென்று திருப்பூரிலிருந்து திருப்பதிக்கு பேருந்துகளை இயக்க வேண்டுமென்று சொன்னால், அந்த ஒப்பந்தத்திலே அது இடம் பெற வேண்டும். அதேநேரத்திலே, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக அண்டை மாநிலங்களுக்கு நாம் பேருந்துகளை இயக்குவது நிறுத்தப்பட்டிருக்கிறது. அண்டை மாநிலத்திற்கு இயக்குகிற போக்குவரத்துக் கழகமாக மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய போக்குவரத்துக் கழகம் இயங்கிக் கொண்டிருக்கிற காரணத்தினாலே நான் இல்லையென்று சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் மற்றொரு கேள்வியைக் கேட்டார்கள். மற்றும் இருக்கின்ற பல்வேறு வழித்தடங்களில், திருப்பூரிலிருந்து மதுரை வழியாக இரண்டு, மூன்று வழித் தடங்களைக் குறிப்பிட்டு இயக்க வேண்டுமென்று அவர் கேட்டிருக்கிறார். திருநெல்வேலி போன்ற பகுதிகளுக்கு அதை உடனடியாக இயக்குவதற்கு அரசு நடவடிக்கையை மேற்கொள்ளும்.

*திரு. வெ. பழனிசாமி :* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக திருப்பூரிலிருந்து திருப்பதி வரை பேருந்து விடக் கேட்டிருந்தேன். ஆனால், இடையில் திருப்பூரிலிருந்து திருப்பதிக்கு ஜெ.ஜெ. போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக பஸ்கள் விடப்பட்டு இயங்கிக் கொண்டிருக்கின்றன. அவை நல்ல முறையிலே சென்று கொண்டிருக்கின்றன. அந்தப் பேருந்துகளில் அதிகமானபேர் சென்று கொண்டிருக்கிறார்கள். ஆகவே, எஞ்சிய திருநள்ளாறு, திருநெல்வேலி ஆகிய பகுதிகளுக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக பஸ் விடப்படுமானால் என்னுடைய கோரிக்கை முழுமையாக நிறைவேறும். அதற்கு உண்டான முயற்சியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்ந்து செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் :* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபோன்ற கோரிக்கையை உடனடியாக அரசு பரிசீலித்து நடவடிக்கையை மேற்கொள்ளும்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* வினா எண் 465, திரு. மா. சுந்தரதாஸ், இருக்கையில் இல்லை.

1995 ஏப்ரல் 27]

வினா எண் 466, திரு. து. மூர்த்தி, மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர்.

**466—**

## அரசூர் ரயில்வே கேட்டில் மேம்பாலம் கட்டுதல்

***16117—**திரு. து. மூர்த்தி:*

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதியில் நாகப்பட்டினம்-சென்னை நெடுஞ்சாலையில் அரசூர் ரயில்வே கேட்டில் மேம்பாலம் அமைக்க மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்யுமா?

*மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சீர்காழி தொகுதியில் நாகப்பட்டினம்-சென்னை நெடுஞ்சாலையில் அரசூர் ரயில்வே கேட்டில் மேம்பாலம் கட்டுவதற்கு தற்போது சாத்தியக் கூறுகள் இல்லை.

முற்பகல் 10.25

திரு. து. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சீர்காழி தொகுதியில் நாகப்பட்டினம்-சென்னை நெடுஞ்சாலையில் அரசூர் என்ற இடத்தில் ரெயில்வே கேட் ஒன்று உள்ளது. அந்த வழியாகச் சென்னை செல்ல வேண்டுமென்றாலும், நாகப்பட்டினம் அல்லது தஞ்சாவூர் மற்றும் அதற்கு மேலே செல்ல வேண்டிய நிலை வந்தாலும், அரசூர் என்ற இடத்திலுள்ள ரயில்வே கேட்டைக் கடந்துதான் செல்ல வேண்டும். அந்த ரயில்வே கேட் சாத்தப்பட்டுவிட்டால், பஸ் பிரயாணிகளும், கார் மற்றும் வண்டிகளில் செல்லும் பிரயாணிகளும் மிகுந்த அவதிக்கு உள்ளாகிறார்கள். மேலும் சிகிச்சைக்காக சீர்காழியிலிருந்து சிதம்பரம் செல்ல வேண்டுமென்றாலும், கடலூர் செல்ல வேண்டுமென்றாலும், அந்த ரெயில்வே கேட் மூடப்படுவதால் பொது மக்கள் பெரிதும் அவஸ்தைக்குள்ளாகி, சில நேரங்களில் காலதாமதத்தால் நோயாளிகள் அங்கே இறந்துவிடும் நிலைமை ஏற்படுகிறது. எனவே இத்தகைய பல்வேறு காரணங்களுக்காகவும், பொது மக்கள் நலன் கருதியும் அரசூர் ரயில்வே கேட்டில் அவசியம் மேம்பாலம் அமைக்க மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசில் மாண்புமிகு அமைச்சரவர்கள் மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்து, ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரயில்வே மேம்பாலம் கட்ட வேண்டிய, ரயில்வே சந்திக்கடவு அமைந்துள்ள, நெடுஞ்சாலைத் துறையின் முக்கிய மாவட்டச் சாலையான கும்பகோணம்-சீர்காழி சாலையில் 59/4 கிலோமீட்டரில் அரசூர் என்ற கிராமம் அமைந்துள்ளது. இந்த சந்திக்கடவில் ஒரு பக்கம் அரசூர் கிராமமும் மறு பக்கம் சீர்காழி புகைவண்டி நிலையமும் அமைந்துள்ளது. இவ்விடத்தில் இரு பக்கமும் சுமார் 200 மீட்டர் அணுகு சாலை — அப்ரோச் ரோட் — அமைத்து, ரயில்வே மேம்பாலம் கட்டுவதற்கு ஏறத்தாழ 2 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. இந்தப் பாலத்தைக் கட்டுவதற்கான நிர்வாக ஒப்புதல் அளிக்கப்படுவது எந்தத் திட்டத்திலும் இடம் பெறவில்லை. இந்த சந்திக்கடவில் மேம்பாலம் கட்டுவதற்குத் தகுதியான ஒரு இலட்சம் ரயில்வே வாகன ஊர்தி அலகுகளையும் அடையவில்லை. அதற்கு கணக்கு இருக்கிறது. இத்தனை வாகன ஊர்தி அலகுகள் என்ற கணக்கு இருக்கிறது. ஏறத்தாழ ஒரு இலட்சம் வாகன ஊர்தி அலகுகள் தேவைப்படும், ரயில்வே மேம்பாலம் கட்டுவதற்கு. அந்த அலகையும் இந்தப் பகுதி எட்டவில்லை. ஆகவேதான் இந்த ரயில்வே மேம்பாலம் கட்டுவதற்குத் தற்போது சாத்தியக் கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*திரு.து. மூர்த்தி :* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசூர் ரயில்வே கேட் சாத்தப்பட்டுவிடுவதால் சில நேரங்களில் முக்கிய வி.ஐ.பி.-க்கள் மற்றும் நமது அமைச்சர் பெருமக்கள் கூட அந்த வழியாக அவசரமாகச் செல்லுகிறபோது மிகுந்த அவஸ்தைக்கு உள்ளாகின்றனர். இந்தப் பகுதி வழியாக தலைஞாயிறு மற்றும் அதற்கு அருகில் உள்ள கூட்டுறவுச் சர்க்கரை ஆலைக்கு, குறிப்பாக 75 விழுக்காடு கரும்பு எங்களுடைய பகுதியிலிருந்து செல்லும் நிலைமை இருக்கிறது. மேலும் இந்தப் பகுதி சென்னை-நாகப்பட்டினம் நெடுஞ்சாலையில் இருப்பதால் பல ஆண்டுகளாக அந்தப் பகுதியில் இந்தக் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொது மக்களுடைய நலன் கருதியும், அவர்கள் படுகிற அவஸ்தைகளைப் போக்குவதற்கும் இந்தப் பகுதியில் ரயில்வே மேம்பாலம் அமைக்க மீண்டும் பரிசீலனை செய்து, ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரயில்வே மேம்பாலம் கட்டுவதைப் பொறுத்த வரையில் ஆண்டுக்கு ஒன்றிரண்டைத்தான் நாம் எடுத்துக் கொள்கிறோம். ஆகவே முன்னுரிமை அடிப்படையிலே எந்தப் பகுதியில் போக்குவரத்துச் செறிவு அதிகமாக இருக்கிறதோ, அந்தப் பகுதியில்தான் கட்ட முடிகிறது

1995 ஏப்ரல் 27]

என்பதை நான் ஏற்கெனவே தெரிவித்தேன். அமைச்சர்கள் எல்லாம் அடிக்கடி வருவதாகச் சொன்னார்கள். அமைச்சர்கள் எல்லா நேரத்திலும் வர மாட்டார்கள். அதையெல்லாம் நாம் கணக்கிலே எடுக்க முடியாது. போக்குவரத்து அலகுகளை வைத்துத்தான் நாம் கணக்குப் பார்க்க முடியும். அந்த அடிப்படையிலேதான் இந்த மேம்பாலம் கட்டுவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்று தெரிவித்தேன். ரயில்வே துறையுடன் கலந்து பேச வேண்டும். அவர்களும் அதற்கு நிதி ஒதுக்க வேண்டும். பல இடங்களில் ரயில்வே மேம்பாலம் கட்ட வேண்டுமென்று தமிழக அரசின் சார்பிலே மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் ஒன்றிரண்டு பாலங்களை மாத்திரம்தான் கட்டுவதற்கு அனுமதி தருகிறார்கள் வருடத்திற்கு. அப்படி வருகின்றபோது நாமும் நிதி ஆதாரத்தை ஒதுக்க வேண்டியிருக்கிறது. ஆகவே பல்வேறு சூழ்நிலைகளைக் கருதித்தான் இதுபோன்று பாலங்களைக் கட்டுவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. இருந்தாலும், எதிர்காலத்தில் போக்குவரத்து வசதி மேம்பாடுகள் குறித்து, அந்தக் கணக்கை எடுத்து, இந்த அரசு நிதிநிலைமைக்கு ஏற்ப பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எம். பூராசாமி.*

*முற்பகல் 10.30*

*திரு. எம். பூராசாமி :* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசூர் சாலை என்பது, இந்துக்களின் முக்கியக் கோயிலான திருநள்ளாறு சனீஸ்வரர் ஆலயத்திற்கும், முஸ்லீம்களின் தலமான நாகூருக்கும், கிருஸ்தவர்களின் முக்கியத் தலமான அன்னை வேளாங்கன்னி ஆலயத்துக்கும் செல்கின்ற சாலையாகும். கிழக்குக் கடற்கரைச் சாலையாகவும் இருக்கிறது. பூம்புகாரையும் உள்ளடக்கியிருக்கிறது. நாகை காயிதே மில்லத் மாவட்டத்தின் வேதாரண்யம் மற்றும் அதற்கு அப்பால் ராமேஸ்வரம் போன்ற புண்ணியத் தலங்களுக்கும் இந்தச் சாலை செல்கிறது. சென்னையிலிருந்து ராமேஸ்வரம் செல்லும் இந்த ரயில்பாதைமீது அரசூரில் மேம்பாலம் கட்டினால் அது மிகப் பயனுள்ளதாகவும், கோடிக் கணக்கான மக்களுக்கு ஒரு புண்ணியமாகவும் அமையும். ஆகவே பணத்தைப்பற்றிக் கவலைப்படாத இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அரசு இந்த மேம்பாலத்தைக் கட்ட மத்திய அரசை வற்புறுத்துமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருள்மிகு சனீஸ்வரர் கோயிலுக்கும், வேளாங்கன்னி

ஆலயத்திற்கும், நாகூருக்கும் இப்போதும் போகிறவர்கள் போய்க் கொண்டுதான் இருக்கிறார்கள். இந்த மேம்பாலம் இல்லாததால் யாரும் போகாமல் நின்றுவிடவில்லை. வசதி குறித்து வேண்டுமானால் அதைப் பரிசீலிக்கலாம் என்ற அடிப்படையில் எடுத்துக் கொள்ளலாமே தவிர, போக்குவரத்துக்கு இந்தப் பாலம் இருந்தால்தான் நடக்கும் என்பதைப் போல ஒரு தோற்றத்தை உருவாக்கக்கூடாது. பணத்தைப் பற்றிக் கவலை இல்லை என்று சொன்னார்கள். பணம் வேண்டுமே? பணம் இருந்தால்தானே கட்ட முடியும்? வெறும் கை முழம் போடாது. திட்டங்களை வெறுமனே அறிவித்துவிட்டால் பின்னர் பேசாமல் இருந்தால் மறுபடியும் கேட்பீர்கள். அறிவித்தீர்களே, என்ன ஆயிற்று என்பீர்கள். உறுதிமொழி தந்தீர்களே, என்ன ஆயிற்று என்று கேட்பீர்கள். ஆகவே செய்வதைத்தான் சொல்லமுடியும். செய்யாததை எல்லாம் சொல்லிவிட்டு, கெட்ட பெயர் வாங்க இந்த அரசுக்கு மனமில்லை. எந்த அளவுக்குச் செய்ய முடியுமோ அவைகளை மட்டும் செய்ய வேண்டுமென்ற அடிப்படையில் இவைகளைச் சொல்லியிருக்கிறோம். நான் ஏற்கெனவே தெரிவித்ததைப்போல இந்த மேம்பாலத்தின் முக்கியத்துவத்தைக் கருதி இது சம்பந்தமாக அரசு பரிசீலிக்கும் என்று தெரிவித்திருக்கிறேன். வருங்காலத்தில் இதுபற்றி அரசு ஆராயும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** *வினா எண் 467, திரு. வி. கே. சின்னசாமி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.*

**467—**

**பவானி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுதல்**

***35805*—*திரு. வி. கே. சின்னசாமி :***

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், கோபி வட்டம், அக்கரை கோடிவேரியையும், நான்கு சாலைகளையும் இணைக்க பவானி ஆற்றின் குறுக்கே புதிய பாலம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், பணி எப்பொழுது துவக்கப்படும்?

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அத்தகைய திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

ஆலயத்திற்கும், நாகூருக்கும் இப்போதும் போகிறவர்கள் போய்க் கொண்டுதான் இருக்கிறார்கள். இந்த மேம்பாலம் இல்லாததால் யாரும் போகாமல் நின்றுவிடவில்லை. வசதி குறித்து வேண்டுமானால் அதைப் பரிசீலிக்கலாம் என்ற அடிப்படையில் எடுத்துக் கொள்ளலாமே தவிர, போக்குவரத்துக்கு இந்தப் பாலம் இருந்தால்தான் நடக்கும் என்பதைப் போல ஒரு தோற்றத்தை உருவாக்கக்கூடாது. பணத்தைப் பற்றிக் கவலை இல்லை என்று சொன்னார்கள். பணம் வேண்டுமே? பணம் இருந்தால்தானே கட்ட முடியும்? வெறும் கை முழம் போடாது. திட்டங்களை வெறுமனே அறிவித்துவிட்டால் பின்னர் பேசாமல் இருந்தால் மறுபடியும் கேட்பீர்கள். அறிவித்தீர்களே, என்ன ஆயிற்று என்பீர்கள். உறுதிமொழி தந்தீர்களே, என்ன ஆயிற்று என்று கேட்பீர்கள். ஆகவே செய்வதைத்தான் சொல்லமுடியும். செய்யாததை எல்லாம் சொல்லிவிட்டு, கெட்ட பெயர் வாங்க இந்த அரசுக்கு மனமில்லை. எந்த அளவுக்குச் செய்ய முடியுமோ அவைகளை மட்டும் செய்ய வேண்டுமென்ற அடிப்படையில் இவைகளைச் சொல்லியிருக்கிறோம். நான் ஏற்கெனவே தெரிவித்ததைப்போல இந்த மேம்பாலத்தின் முக்கியத்துவத்தைக் கருதி இது சம்பந்தமாக அரசு பரிசீலிக்கும் என்று தெரிவித்திருக்கிறேன். வருங்காலத்தில் இதுபற்றி அரசு ஆராயும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** *வினா எண் 467, திரு. வி. கே. சின்னசாமி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.*

**467—**

## பவானி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுதல்

***35805**—திரு. வி. கே. சின்னசாமி :*

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், கோபி வட்டம், அக்கரை கோடிவேரியையும், நான்கு சாலைகளையும் இணைக்க பவானி ஆற்றின் குறுக்கே புதிய பாலம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், பணி எப்பொழுது துவக்கப்படும்?

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அத்தகைய திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

1995 ஏப்ரல் 27]

திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று எனது கேள்விக்கும், திரு. மூர்த்தி அவர்களின் கேள்விக்கும் அமைச்சர் 'இல்லை' என்ற பதிலைச் சொல்லியிருக்கிறார்கள். புரட்சித் தலைவி அவர்களுக்கு உழைத்து புகழைச் சேர்ப்பதே தன்னுடைய பிறவிப் பயன் என்று நினைத்துக் கொண்டிருக்கிற மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் இதை மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். காரணம் அந்தப் பகுதியிலே அதிக அளவிலே விவசாயப் பெருங்குடி மக்களும் கிருஸ்தவ சமுதாயத்தினரும் வாழ்கிறார்கள். கோடிவேரி என்பதே இரண்டு ஊராக இருக்கின்றது. இடதுபுறத்தில் பெரிய கோடிவேரியும், அக்கரை கோடிவேரி என்று வலது புறத்திலும் இருக்கின்றன. மேற்கே சத்தியமங்கலம் செல்ல வேண்டுமானால் 25 கிலோ மீட்டரும், கிழக்கே தூக்க நாயக்கன்பாளையம், மற்றும் பங்களா புதூர் செல்ல வேண்டுமானால் 30 கிலோ மீட்டரும் செல்லவேண்டும். அங்கேதான் பாலம் இருக்கிறது. பக்கத்திலே பன்னாரி சர்க்கரை ஆலை இருக்கிறது. ஆகவே அந்த வழியாக ஒரு பாலம் அமைப்பது மிகவும் அத்தியாவசியமானது. இதற்கு எவ்வளவு செலவாகும்? மாண்புமிகு போக்குவரத்து அமைச்சருக்கும் அந்தப் பாலத்தின் முக்கியத்துவம் பற்றித் தெரியும். ஆகவே அதனுடைய முக்கியத்துவத்தைக் கருதி, அவசியம் மறுபரிசீலனை செய்யவேண்டும். எத்தனையோ பாலங்களையும் சாலைகளையும் அமைத்து, புதிய வரலாற்றுச் சாதனைகளைப் படைத்திருக்கிற மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள், புரட்சித் தலைவி அவர்களுக்கு சோதனை வந்த காலத்திலே எல்லாம் அவர்களுக்குப் பின்னாலே உறுதியோடு இருக்கிற பெரியார் மாவட்ட மக்களுக்கு இந்தப் பாலத்தைக் கட்டித்தர முன்வருவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவிக்குச் சோதனை வருகிறபோது பின்னாலே எல்லா மாவட்டங்களும் நின்றுகொண்டிருக்கின்றன. ஒரு மாவட்டம் மட்டும் நின்றால் போதாது. எல்லோரும் நின்றால்தான் புரட்சித் தலைவிக்கு மிகவும் பலமாக இருக்கும். அந்த அடிப்படையில்தான் நாம் எல்லோரும் துணையாக இருக்கிறோம். அதிலே யாரும் சளைத்தவர்கள் அல்ல. பாலம் கட்டுவதற்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை. எல்லா மாவட்டங்களிலும் உள்ள மக்களும் புரட்சித் தலைவியை நம்பித்தான் வாக்களித்திருக்கிறார்கள். எல்லா மாவட்ட மக்களுக்கும் செய்ய வேண்டிய கடமைகள் இருந்தாலும், ஈரோடு போன்ற மாவட்டங்கள் ஏற்கெனவே வளர்ந்துவிட்ட மாவட்டங்கள். இன்னும் வளரவேண்டிய மாவட்டங்கள் நிறைய இருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி).

[1995 ஏப்ரல் 27

*முற்பகல் 10-35*

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரும், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரும் இந்த ஒலிகளின் அர்த்தத்தைப் புரிந்து கொண்டால் சரி. *(சிரிப்பு).*

*மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுடைய குரல்களும் எனக்குக் கேட்கிறது. உண்மை என்று அனைவரும் ஒப்புக் கொள்கிறார்கள். *(சிரிப்பு)* ஆகவே வளர்ந்துவிட்ட மாவட்டமாக இருந்தாலும் காரியங்கள் செய்ய வேண்டியது அவ்சியம். ஏனென்று சொன்னால், அந்தப் பகுதியில், கோவை, பெரியார் மாவட்டங்கள் தான் நமக்கு அன்னியச் செலாவணியை அதிகமாக ஈட்டித் தருகின்றன. தொழிற்சாலைகள் அதிகமாக இருக்கின்றன. இவைகளையும் ஒரு பக்கம் நாம் பார்க்க வேண்டியிருக்கிறது. அரசின் பொறுப்பில் இருக்கிற அமைச்சர்கள் நடுநிலையோடு இருந்து பார்க்க வேண்டிய கடமையில் இருக்கிற காரணத்தால்தான் சொல்கிறேன். இப்போதுகூட பவானி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டியிருக்கிறோம். மற்றும் அந்தப் பகுதியில் நிறைய பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. நெடுஞ்சாலைத் துறை சார்பில் பாலங்கள், சாலைகள், கிராமச் சாலைகள், தேசிய நெடுஞ்சாலைகள், இன்னர் ரிங் ரோட்ஸ், ஓவர் பிரிட்ஜஸ் எல்லாம் கோவை, பெரியார் மாவட்டத்தில் நிறைய நடந்து கொண்டிருக்கின்றன. இந்தப் பாலத்திற்கு எவ்வளவு மதிப்பீடு என்று கேட்டார்கள். ஒரு கோடி ரூபாய் ஆகும். தோராயமாக ஒரு கோடி ரூபாய் தேவைப்படுகிறது. அக்கரை கோடிவேரியையும், நான்கு சாலைகளையும் இணைக்க பவானி ஆற்றின் குறுக்கே அந்தப் பாலம் கட்ட வேண்டுமென்றால் ஒரு கோடி ரூபாய் ஆகும். ஆகவேதான் தொகை அதிகமாக இருக்கிற காரணத்தால் தான் இதுபோன்ற திட்டங்களை எல்லாம் உடனுக்குடன் எடுத்துச் செய்வதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*திரு. வி. கே. சின்னசாமி :* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் ஒரு கோடி ரூபாய் ஆகும் என்கிறார்கள். இந்தப் பாலம் கட்டுவதற்கு சத்தியமங்கலம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் பரிந்துரை செய்திருக்கிறார்கள். அந்தியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும் பரிந்துரை செய்திருப்பார். ஏனென்றால் அந்த ஊருக்கு போகிற வழி. இதைவிட முக்கியமாக போக்குவரத்துத் துறை

1995 ஏப்ரல் 27]

அமைச்சர் அவர்கள் பாலம் கட்டினால் அடிக்கடி அந்த வழியாகப் போவதற்கு வாய்ப்பு ஏற்படும். ஆகவே, நாங்கள் எல்லோரும் சேர்ந்து இந்த ஒரு கோடி ரூபாயை—மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பாலம் கட்டித் தருவார்களானால்—பொது மக்கள் மூலமாக, அந்த வழியாகச் செல்கிற வண்டிகள் மூலமாக......

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* உங்கள் நான்கு பேர்களுக்காக ஒரு கோடி ரூபாயா? *(சிரிப்பு).*

*திரு. வி. கே. சின்னசாமி :* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான்கு தொகுதி மக்களுக்காக, அந்தப் பகுதிகளை ஒன்றாக இணைக்கிற இந்தப் பாலம் வேண்டும். ஆகவே, இந்த ஒரு கோடி ரூபாயையும் நான்கு தொகுதி மக்களும் சேர்ந்து அல்லது அந்த வழியாகச் செல்கிற வண்டிகள் மூலமாக வசூல் செய்து கொள்ளலாம். பன்னாரி அம்மன் சுகர்ஸ் ஆலைக்கு ஒரு நாளைக்கு குறைந்தது 300, 400 வண்டிகள் அந்த வழியாகச் செல்லும். ஆகவே, அந்த வண்டிகள் மூலமாக, லாரிகள் மூலமாக அந்தப் பணத்தை வசூல் செய்து கொள்ளலாம். ஒரே வருடத்தில் ஒரு கோடி ரூபாயை வசூல் செய்துவிடலாம். அதைப் போல கரும்புச் சாலைகள் அபிவிருத்தித் திட்டம் என்று இருக்கிறது. அதன் மூலமாகக் கூட செய்வதற்கு வாய்ப்பு இருக்கலாம். ஆகவே, நிச்சயமாக மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் காலத்தில் கட்டவில்லை என்றால் எப்போதும் முடியாது என்று பொதுமக்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். விரைவில் முடிந்துவிடும் என்று எங்கள் பகுதி மக்கள் எங்களிடம் வந்து சொல்கிறார்கள். ஆகவே, நிச்சயமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து இந்தப் பாலத்தை கட்டித் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எத்தனை தடவை கேட்டாலும் கூட இருக்கிற நிலைமையைத் தான் நான் சொல்ல முடியும். இங்கே ஒரு உறுப்பினர், சட்டியில் இருந்தால்தான் அகப்பையில் வரும் என்கிறார். ஆகவே, நிதி வேண்டும். நம்முடைய கரும்புச் சாலை திட்டத்தின் கீழ் இவ்வளவு பெரிய திட்டங்களை எல்லாம் எடுத்துச் செய்ய வாய்ப்பு இல்லை. கரும்புச் சாலைகள் திட்டத்தின் கீழே இந்தச் சாலைகளைப் பராமரிக்கத் தான் நிதி ஒதுக்கப்பட்டு, நாம் அந்தப் பணிகளை நம்முடைய நெடுஞ்சாலைத் துறையின் மூலமாகச் செய்கிறோம். அவர்கள் டெபாசிட் ஓர்க்காக நம்மிடத்தில் கொடுக்கிறார்கள். நாம் வேலைகளைச் செய்கிறோம். சுகர் கார்ப்பரேஷனிலிருந்து பணம்

கொடுக்கிறார்கள். அதிலே இவ்வளவு பெரிய தொகையை ஒதுக்கீடு செய்ய முடியாது. நம்முடைய தனியார் துறையைச் சேர்ந்த, அந்தப் பகுதியில் இருக்கிற கரும்பு ஆலைகள் வைத்திருப்பவர்கள் டெபாசிட் செய்து இந்தப் பாலத்தைக் கட்டுவதற்கு ஏதாவது உதவி செய்வார்களானால் அரசு அதைப் பரிசீலிக்கலாம். அதுபோன்ற ஒரு நிலையை உருவாக்கலாம். ஆகவே நிதியாதாரத்தை எப்படித் தேடுவது என்பதை விரைவிலே அதிகாரிகளோடுகூட பரிசீலித்து இதற்கான முயற்சியிலே அரசு நிச்சயமாக இறங்கும். இதை ஒதுக்கிவிடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்று சொன்னால் எதையும் உறுதிமொழி தந்துவிட்டால் நிறைவேற்ற வேண்டும். ஆனால் பரிசீலனையில் வைத்துக் கொண்டிருக்கிறோம். மிக முக்கியமான பாலத்தைக் கட்டுகிறபோது இவைகளை எல்லாம் செய்ய வேண்டுமென்றுதான் அரசு நினைக்கிறது. ஆகவே இது சம்பந்தமாக அரசு நிச்சயமாகப் பரிசீலிக்கும். இன்னும் பத்து நாட்களில் அதிகாரிகளை அழைத்து, இது சம்பந்தமாகப் பேசி, எப்படி இதற்கு ஒரு வழி செய்யலாம் என்பதை இந்த அரசு ஆராயும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி அ. தி. சரஸ்வதி.*

*முற்பகல் 10-40*

*திருமதி அ. தி. சரஸ்வதி:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மதிப்பிற்குரிய பவானிசாகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கூறியதைப்போல, பவானிசாகர் மற்றும் சத்தியமங்கலம் ஆகிய இரண்டு தொகுதியையும் சேர்த்து இணைக்கக்கூடிய பாலமாக அது இருக்கிறது. நமது மதிப்பிற்குரிய மாண்புமிகு போக்குவரத்து மற்றும் `வனத்துறை அமைச்சர் அவர்களிடம், பல தடவை அந்தப் பகுதியில் வாழும் விவசாய மக்கள் எல்லாம் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். சிறப்பாக பொதுப்பணித் துறையை வழி நடத்திச் செல்லும் பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களிடம் சொல்லி, ஏற்பாடு செய்யப்படும் என்று மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் அவர்கள் எங்களுக்கு எல்லாம் வாக்குறுதியே கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே தற்போது அமர்ந்து கொண்டிருக்கிறார்கள். புரட்சித் தலைவியின் இரண்டு கண்களாகச் செயல்படும் இரண்டு மாண்புமிகு அமைச்சர்களும் சேர்ந்து, அந்தப் பாலத்தை அந்தப் பகுதியில் அமைக்க, பன்னாரி அம்மன் சுகர்ஸ் ஆலையினுடைய நிர்வாக இயக்குநர் அவர்களை அணுகி, அவர்களுடைய நிதி உதவியைப் பெற்று ஏற்பாடு செய்தால் நல்லது. அந்தப் பகுதியில்

1995 ஏப்ரல் 27]

வாழ்கின்ற - இரண்டு தொகுதிகளிலும் கிட்டத்தட்ட 4 லட்சம் மக்களுக்கு மேல் வாழ்கின்றார்கள் - விவசாயிகளின் மேல் அக்கறை கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணை கூர்ந்து, தயவுகூர்ந்து, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் இல்லை என்ற சொல்லுக்கே இடம் இல்லாமல் துறைகளை வழிநடத்திச் செல்லும், இரண்டு அமைச்சர்களும் சேர்ந்து, எங்களுடைய இரண்டு எம்.எல்.ஏக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருவார்களா என்று பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிறைவேற்றுவதில் இருக்கிற பிரச்சினை எல்லாம் பணப் பிரச்சினைதான். வேறு ஒன்றும் கிடையாது. நிறைவேற்றுவதற்கான வசதி வாய்ப்புகளும் இருக்கின்றன. அதிகாரிகள் இருக்கிறார்கள்; தொழில் நுட்பம் இருக்கிறது. நிதி ஆதாரம்தான் பிரச்சினை. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் பக்கத்திலே இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். பக்கத்திலே இருந்தாலும் நடப்பதுதானே நடக்கும். பக்கத்திலே இருப்பதற்காக நாம் தனியாக ஒரு காரியத்தைச் செய்ய முடியாது. ஆகவே, இருக்கின்ற நிலைமைகளை அனுசரித்து, தனியார் கரும்பு ஆலை அதிபரிடத்திலே பேசி, ஏதாவது நிதி ஆதாரத்தை அவர்களிடத்திலிருந்து பெற்று, இதற்கு ஒரு ஏற்பாட்டைச் செய்யலாமா என்ற ஒரு நிலையை உருவாக்கலாம். அந்த அடிப்படையிலேதான் நான் ஏற்கனவே தெரிவித்தேன். ஆகவே, இதைத் தீவிரமாக இந்த அரசு பரிசீலிக்கும். தனியார் துறை ஆலை அதிபரை அழைத்து, நிதி ஆதாரங்களைத் திரட்டுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து, அரசினுடைய பங்காக அதிலே ஏதாவது செய்து, எப்படியாவது அந்தப் பாலத்தைக் கட்டுவதற்கான முயற்சியை அரசு எடுக்கும் என்பதை மாத்திரம் தெரிவித்துக் கொள்கிறேன். ஏன் என்றால், இத்தனை உறுப்பினர்களும், அதனுடைய முக்கியத்துவத்தைக் கருதி, ஆர்வமாக இருக்கிறார்கள். ஆகவே, புரட்சித் தலைவியினுடைய ஆட்சிக் காலத்திலே கட்ட வேண்டும் என்று விரும்புகிறார்கள். நிச்சயமாக அதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* வினா எண் 468, திரு. எஸ். எஸ். ராமசுப்பு, இருக்கையில் இல்லை.

வினா எண் 469, திரு. வி. ரவிச்சந்திரன், இருக்கையில் இல்லை. டாக்டர் சு. மணிமேகலை, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

**469—**

## உப்பிலியாபுரம் தொகுதியில் கயிறு திரிக்கும் தொழிற்சாலை ஏற்படுத்துதல்

***21330—**திரு. வி. ரவிச்சந்திரன்:*

மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உப்பிலியாபுரம் தொகுதியில் சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் மூலம் கயிறு திரிக்கும் தொழிற்சாலை ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

*மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

*டாக்டர் சு. மணிமேகலை:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை என்பதற்காகவா நான் இவ்வளவு கஷ்டப்பட்டு கேட்டேன். உப்பிலியாபுரம் பகுதியில் குடிசைத் தொழிலாக கயிறு திரிக்கும் தொழில் நடந்து வருகின்றது. கேரளாவில் உள்ள காயர்குளம் மற்றும் கொல்லம் பகுதியில், சிட்கோ மூலமாக தொழிற்சாலைகள் நடைபெற்று வருகின்றன. உப்பிலியாபுரம் பகுதி மிகவும் பிற்படுத்தப்பட்ட பகுதி. எனவே, கயிறு திரிக்கும் தொழிலில் உள்ள தொழில் முனைவோர்களைச் சேர்த்து, அங்கே தொழிற்சாலை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. துரை ராமசாமி :* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரளாவினுடைய நிலை வேறு. தமிழகத்தினுடைய நிலை வேறு. கேரளாவிலே தென்னை அதிகமாக இருக்கின்ற காரணத்தால், அங்கே அதிகமாக மஞ்சு கிடைக்கின்ற காரணத்தால், அந்த மாதிரி ஒரு ஏற்பாட்டைச் செய்திருக்கிறார்கள். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் நாம் கயிறு திரிக்கின்ற தொழிற்சாலையை ஏற்படுத்திக் கொடுத்துக் கொண்டு இருக்கிறோம். சிட்கோ மூலம் நாம் செய்வதில்லை. மேலும் இது உப்பிலியாபுரம் தொகுதியைப் பொறுத்த ஒரு கேள்வி. அங்கே சிட்கோ மூலம் பெரிய அளவிலே, தொழிற்சாலையை நிறுவுகின்ற அளவுக்கு போதுமான மஞ்சு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1995 ஏப்ரல் 27]

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* வினா எண் 470, திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**470—**

**பேராவூரணியில் களப்பிரிவு அமைத்தல்**

***20742—**திரு. ஆர். சிங்காரம்:

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தென்னை வளர்ச்சிக் கழகத்தின் களப்பிரிவு ஒன்று தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணியில் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

*மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை. ஆனால் தமிழ்நாட்டில் தென்னை வளர்ச்சி வாரியத்தின் களப்பிரிவு ஒன்றினை நிறுவுவது குறித்து மைய அரசின் முடிவு தெரிந்த பின்னர், எங்கே நிறுவுவது என்பது பற்றி பரிசீலிக்கப்படும்.

*திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்கிற அதே நேரத்தில், மத்திய சர்க்காருடைய அனுமதியைப் பெற்ற பிறகு, இதுபற்றி பரிசீலிக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், நம்முடைய தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், பேராவூரணி தொகுதியைப் பற்றி மிக நன்றாகத் தெரிந்திருக்கும். அங்கே கேரளாவைப் போல் மிக அதிகமாக தென்னை மரங்கள் இருக்கின்றன என்பது உங்களுக்குத் தெரியும். ஆகவேதான் இந்தக் கேள்வியை நான் தொடுத்து இருக்கிறேன். ஆகவே, தமிழகத்தில் அதை அமைப்பதற்குண்டான சாத்தியக் கூறுகள் குறித்து மத்திய அரசுக்கு சிபாரிசு செய்யப்பட்டு இருக்கிறதா? அப்படி சிபாரிசு செய்யப்பட்டு இருந்தால், அந்த சிபாரிசு எப்போது செய்யப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-45*

*மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டத்தில் ஏற்கெனவே தென்னை வளர்ச்சிக் கழகத்தினுடைய மாநிலக் கிளை ஒன்று இயங்கி வந்தது. அதை மத்திய அரசாங்கம் அங்கே இருப்பது பல்வேறு நடவடிக்கைகளுக்கு உகந்ததாக இல்லை எனக் கருதி, கோவைக்கு அவர்கள் மாற்றிவிட்டார்கள்.

[1995 ஏப்ரல் 27

கடந்த 3 மாதங்களுக்கு முன்னாலே தென்னை வளர்ச்சி வாரியத்தினுடைய மாநில அளவிலான கருத்தரங்கம் சென்னையிலே நடைபெற்றது. அந்தக் கூட்டத்திலே நான் வலியுறுத்திப் பேசினேன். கோவையைவிட தஞ்சை, காயிதே மில்லத், திருச்சி, தென்னாற்காடு பகுதிகளில் தென்னை மரங்கள் நிறைய இருக்கின்றன. நிறைய தேங்காய் உற்பத்தியாகிறது. எனவே மேலும் ஒரு கிளை வேண்டுமென்று நாங்கள் வலியுறுத்தினோம். எனவே அவர்கள் நம்முடைய கோரிக்கையை ஏற்று மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறார்கள். மத்திய அரசினுடைய அனுமதி வந்த பிறகு, எங்கே வைத்தால் அனைவரும் பயன்படத் தக்க வகையிலே அமையும் என்பதைக் கருத்திலே கொண்டு, அரசு ஆய்வு செய்யும்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் எடுத்த முயற்சிக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிற அதே நேரத்தில் அதை மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னதுபோல் தஞ்சை மாவட்டம், காயிதே மில்லத் மாவட்டங்களில் குறிப்பாக பேராவூரணி, தம்பிக்கோட்டை, பட்டுக்கோட்டை பகுதிகளில் மிக அதிகமாக தென்னை மரங்கள் இருப்பதனால் அப்படி மத்திய அரசிலிருந்து சிபாரிசு வந்தவுடனே அதை பேராவூரணியில் தொடங்குவதற்கு அமைச்சரவர்கள் முயற்சிப்பாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசிடமிருந்து அனுமதி வந்ததற்குப் பின்னாலே கனிவோடு அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 471, திருமதி அ. தி. சரஸ்வதி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**471—**

### செண்டுமல்லியின் விலையை உயர்த்துதல்

***80008—**திருமதி அ. தி. சரஸ்வதி:

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சத்தியமங்கலத்தில் செண்டுமல்லி அதிகமாகப் பயிரிடப்படுவதால் அந்த விவசாயிகள் பயனடைய செண்டுமல்லியின் விலையை உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

கடந்த 3 மாதங்களுக்கு முன்னாலே தென்னை வளர்ச்சி வாரியத்தினுடைய மாநில அளவிலான கருத்தரங்கம் சென்னையிலே நடைபெற்றது. அந்தக் கூட்டத்திலே நான் வலியுறுத்திப் பேசினேன். கோவையைவிட தஞ்சை, காயிதே மில்லத், திருச்சி, தென்னாற்காடு பகுதிகளில் தென்னை மரங்கள் நிறைய இருக்கின்றன. நிறைய தேங்காய் உற்பத்தியாகிறது. எனவே மேலும் ஒரு கிளை வேண்டுமென்று நாங்கள் வலியுறுத்தினோம். எனவே அவர்கள் நம்முடைய கோரிக்கையை ஏற்று மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறார்கள். மத்திய அரசினுடைய அனுமதி வந்த பிறகு, எங்கே வைத்தால் அனைவரும் பயன்படத் தக்க வகையிலே அமையும் என்பதைக் கருத்திலே கொண்டு, அரசு ஆய்வு செய்யும்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் எடுத்த முயற்சிக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிற அதே நேரத்தில் அதை மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னதுபோல் தஞ்சை மாவட்டம், காயிதே மில்லத் மாவட்டங்களில் குறிப்பாக பேராவூரணி, தம்பிக்கோட்டை, பட்டுக்கோட்டை பகுதிகளில் மிக அதிகமாக தென்னை மரங்கள் இருப்பதனால் அப்படி மத்திய அரசிலிருந்து சிபாரிசு வந்தவுடனே அதை பேராவூரணியில் தொடங்குவதற்கு அமைச்சரவர்கள் முயற்சிப்பாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசிடமிருந்து அனுமதி வந்ததற்குப் பின்னாலே கனிவோடு அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 471, திருமதி அ. தி. சரஸ்வதி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**471—**

## செண்டுமல்லியின் விலையை உயர்த்துதல்

***80008*—திருமதி அ. தி. சரஸ்வதி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சத்தியமங்கலத்தில் செண்டுமல்லி அதிகமாகப் பயிரிடப்படுவதால் அந்த விவசாயிகள் பயனடைய செண்டுமல்லியின் விலையை உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1995 ஏப்ரல் 27]

இல்லை. சத்தியமங்கலத்திலோ அல்லது எந்தப் பகுதியிலோ விளையும் செண்டுமல்லியின் விலையை உயர்த்தவோ அல்லது கட்டுப்படுத்தவோ அரசிடம் விதிகள் ஏதுமில்லை.

*திருமதி அ. தி. சரஸ்வதி:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் இல்லை என்று பதில் சொன்னாலும், சத்தியமங்கலத்திலும், அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் எல்லாம் 1/2 ஏக்கர், ஒரு ஏக்கர் வைத்திருப்பவர்கள் எல்லாம் இந்த செண்டு மல்லியைத்தான் - செண்டு மல்லிக்கு மெரிகோல்ட் என்ற பெயரும், சாமந்திப் பூ என்ற பெயரும், இந்தப் பூவிற்கு மூன்று வகைப் பெயர்கள் உண்டு—இந்தப் பகுதியிலுள்ள அனைத்து விவசாயப் பெருங்குடி மக்கள் எல்லாம் நிறைய செண்டு மல்லிப் பூவைத்தான் பயிரிட்டு வருகிறார்கள். செண்டு மல்லிப் பூ விதை போட்ட மூன்று மாதத்திற்குள் பூக்கிறது. பூ பறிப்பதில், இரண்டு மாதத்திற்கு ஆறு தடவை பறிக்கலாம். தற்போது விலை ரூ.2 தான் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் பூ சிவப்பு, மஞ்சள் கலருக்காக மட்டும் எடுத்து மெக்சிகோவிற்கு எக்ஸ்போர்ட் பண்ணுகிறார்கள். அங்கே கோழித் தீவனக் கலருக்கு மிக்ஸ் பண்ணுகிறார்கள். கோழி சாப்பிட்டவுடன் கோழிக்கறி மஞ்சள் கலராகிறது. முட்டையும் மஞ்சள் நிறம் மாறி சிவப்பாக இருக்கும். சிவப்புக் கலருக்கு நல்ல டிமாண்டு இருக்கிறது. முட்டை 'ஹாஃப் பாயில்டு' மஞ்சள் நிறம் மாறி சிவப்பாக இருக்கும். இந்த செண்டு மல்லி பேக்டரி எனது தொகுதியில் இருப்பதால்—அதனுடைய பயனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே—இவ்வளவு பயன்தரும் இந்த செண்டு மல்லிப் பூவிற்கு அமைச்சரவர்கள் விலையை உயர்த்தி அந்தப் பகுதி விவசாய மக்களின் வாழ்க்கை முன்னேற, சிறப்பாக துறையை வழிநடத்திச் செல்லும் அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்தியமங்கலம் பகுதியில் (ஏ.வி.டீ.) - ஏ.வி. தாமஸ் என்ற நிறுவனம் இன்றைக்கு மெரிகோல்ட் என்று சொல்லக்கூடிய அந்த செண்டு மல்லியை அதிக அளவில் பயிரிடுவதற்கு அவர்கள் வகை செய்திருக்கிறார்கள். இந்த விதை மெக்சிகோ நாட்டிலேயிருந்து ஹைபிரிட் சீட்-ஆக இறக்குமதி செய்யப்படுகிறது. அங்கே பயிரிடக் கூடிய விவசாயிகளுக்கு இந்த விதைகளைத் தருகின்றபோதே அந்தப் பூக்களையும் நாங்களே பெற்றுக்கொள்கிறோம் என்று ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்தி, அதன் வாயிலாக இப்போது பூக்களை அவர்களே கொள்முதல் செய்கிறார்கள். கொள்முதல் செய்வதற்கு முன்னாலே விதைக்கின்ற நேரத்திலேயே விலை நிர்ணயம் செய்து கொண்டிருக்கிறார்கள். அதாவது

கம்பெனியும் விவசாயிகளும். எனவே அந்த அடிப்படையிலே அவர்கள் கொள்முதல் செய்து பதப்படுத்தி இன்றைக்கு அமெரிக்க நாட்டிற்கு அனுப்புகிறார்கள். குறிப்பாக மேலை நாடுகளிலே நாம் அணியக் கூடிய ஆடைகளில்கூட இரசாயனக் கலவை இல்லாத கலர் வரவேண்டும். இயற்கையாக கலர் வரவேண்டும் என்ற நோக்கிலேதான் இன்றைக்கு அதை ஏற்றுமதி செய்து கொண்டிருக்கிறார்கள். ஏனென்று சொன்னால் அதாவது வண்ணத்தின் ஆரம்பம் மஞ்சள். வண்ணத்தின் முடிவு கருப்பு. எனவே எல்லா வண்ணங்களையும் உருவாக்குவதற்கு மஞ்சள் நிறம் தேவை என்ற அடிப்படையிலே அவர்கள் அதனை அனுப்புகிறார்கள். அதே நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல இன்றைக்கு கோழித் தீவனத்திற்கு வெகுவாகப் பயன்படுத்துவதற்கு அதனை ஏற்றுமதி செய்து அங்கிருந்து மருந்தாகப் பெற்று இங்கு தந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*முற்பகல் 10-50*

திருமதி அ. தி. சரஸ்வதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் மிகச் சிறப்பாக இந்த செண்டு மல்லிப் பூவின் மகத்துவத்தை இங்கே கூறினார்கள். அதற்கு அமைச்சரவர்களுக்கு நன்றி கூறி, அந்தப் பூவின் விலையை உயர்த்துவது பற்றி அமைச்சரவர்கள் பதில் கூறாமல் இருக்கிறார்கள். செண்டு மல்லி பூ பறிக்கும் பெண்களுக்கு, அந்தப் பகுதியில் வேலை செய்யும் பெண்களுக்கெல்லாம் கையில் வெடிப்பு ஏற்படுகிறது. காலில் புண் ஏற்படுகிறது. சில பெண்களின் உடம்புக்கு அலர்ஜியாகவும் இருக்கிறது. அங்கே ஏ.வி.டி. போன்ற இரண்டு கம்பெனிகள் இருக்கின்றன. அந்த கம்பெனிகளின் சார்பில் கையுறை, கிளவுஸ் கொடுப்பதற்கு அவர்களிடம் சொல்லி அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா அல்லது அமைச்சர் அவர்களே ஏதாவது வேறு திட்டம் வைத்திருக்கிறார்களா? மற்றும் இந்தப் பகுதியில் விவசாயம் செய்யும் போது அந்த நிலமும் பாதிக்கப்படுகிறது. மற்ற வெள்ளாமை செய்யும்போது அதிக உரம் போட வேண்டியதாக இருக்கிறது. அந்த செண்டுமல்லி பூவைப் பயிரிடும் விவசாயிகள், அந்தப் பயிர் பூமியினுடைய ஈர்ப்பு சக்தியையெல்லாம் எடுத்துக் கொள்வது தெரியாமல் பயிரிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கூறி அந்தப் பூவுக்கு விலையை உயர்த்திக் கொடுக்க வேண்டுமாய் கேட்டிருக்கிறார்கள். அப்படி விலைய்யை உயர்த்தித் தருவாரா என இந்த மன்றத்தின் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த செண்டு மல்லி என்பது பழங்காலத்திலேயிருந்து

1995 ஏப்ரல் 27]

தமிழகத்திலே பயிரிடப்பட்டு வரும் ஒரு வகை பூ தான். இன்றைக்கு ஒட்டு விதைகளாகத்தான் அதைக் கொண்டு வந்து சத்தியமங்கலம் பகுதியிலே பயிரிட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஒரு கிலோ பூவிற்கு 2 ரூபாய் என்று அவர்கள் ஒப்பந்தம் செய்துதான் வாங்குகிறார்கள். சாதாரணமாக நம்முடைய பழக்கத்திலே இருக்கக்கூடிய விதைகளைப் பயன்படுத்தி உற்பத்தி செய்தால் விவசாயிகளுக்கு 2 டன் பூ கூட கிடைப்பது அரிது. ஆனால் இன்று ஏ.வி.டி. தாமஸ் போன்ற நிறுவனங்களிலிருந்து வரக் கூடிய அந்த விதைகளிலே உற்பத்தி செய்யும் போது ஒரு ஹெக்டேருக்கு ஏறத்தாழ 7-லிருந்து 9 டன் வரை கிடைக்கிறது. 90 நாட்களிலே ஏறக்குறைய 14 ஆயிரத்திலிருந்து 18 ஆயிரம் வரை வருமானம் கிடைக்கிறது. எனவே நல்ல வருமானம் கிடைக்கிற காரணத்தாலேதான் அந்த விவசாயிகள் அதைப் பயிடுகிறார்கள். இன்றைக்கு குன்னூர் பகுதியிலே கூட செண்டுமல்லிப் பூவை பயிரிட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல, இந்தப் பூவை பயிரிடுகிற போது, அறுவடை செய்கின்றபோது இது அலர்ஜியாகவோ காலில் மற்றும் கையில் வெடிப்பு வருவதாகவோத் தெரியவில்லை. ஏனென்று சொன்னால் இந்தப் பயிரை பயிரிட முனைகின்றபொழுதே நான் அவர்களிடத்திலே பேசியிருக்கிறேன். அவர்களிடத்திலேயிருந்து விதைகளை வாங்கி சென்னையிலே போட்டிருந்தேன். இரண்டு மாதங்களுக்கு முன்பு நிறைய பூத்திருந்தது. இங்கே கூட அந்தப் பூவை பறித்தபோது எந்த விதமான அலர்ஜியும இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 472, திரு. தா. வேடியப்பன், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

**472—**

## கறவை மாடுகள் வாங்க கடனுதவி வழங்குதல்

***21932**—திரு.தா. வேடியப்பன்:*

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் வட்டத்தில் உள்ள பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கறவை மாடு வாங்க கடனுதவி வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எத்தனை கறவை மாடுகள் வழங்கப்படும்?

1995 ஏப்ரல் 27]

தமிழகத்திலே பயிரிடப்பட்டு வரும் ஒரு வகை பூ தான். இன்றைக்கு ஒட்டு விதைகளாகத்தான் அதைக் கொண்டு வந்து சத்தியமங்கலம் பகுதியிலே பயிரிட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஒரு கிலோ பூவிற்கு 2 ரூபாய் என்று அவர்கள் ஒப்பந்தம் செய்துதான் வாங்குகிறார்கள். சாதாரணமாக நம்முடைய பழக்கத்திலே இருக்கக்கூடிய விதைகளைப் பயன்படுத்தி உற்பத்தி செய்தால் விவசாயிகளுக்கு 2 டன் பூ கூட கிடைப்பது அரிது. ஆனால் இன்று ஏ.வி.டி. தாமஸ் போன்ற நிறுவனங்களிலிருந்து வரக் கூடிய அந்த விதைகளிலே உற்பத்தி செய்யும் போது ஒரு ஹெக்டேருக்கு ஏறத்தாழ 7-லிருந்து 9 டன் வரை கிடைக்கிறது. 90 நாட்களிலே ஏறக்குறைய 14 ஆயிரத்திலிருந்து 18 ஆயிரம் வரை வருமானம் கிடைக்கிறது. எனவே நல்ல வருமானம் கிடைக்கிற காரணத்தாலேதான் அந்த விவசாயிகள் அதைப் பயிடுகிறார்கள். இன்றைக்கு குன்னூர் பகுதியிலே கூட செண்டுமல்லிப் பூவை பயிரிட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல, இந்தப் பூவை பயிரிடுகிற போது, அறுவடை செய்கின்றபோது இது அலர்ஜியாகவோ காலில் மற்றும் கையில் வெடிப்பு வருவதாகவோத் தெரியவில்லை. ஏனென்று சொன்னால் இந்தப் பயிரை பயிரிட முனைகின்றபொழுதே நான் அவர்களிடத்திலே பேசியிருக்கிறேன். அவர்களிடத்திலேயிருந்து விதைகளை வாங்கி சென்னையிலே போட்டிருந்தேன். இரண்டு மாதங்களுக்கு முன்பு நிறைய பூத்திருந்தது. இங்கே கூட அந்தப் பூவை பறித்தபோது எந்த விதமான அலர்ஜியும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 472, திரு. தா. வேடியப்பன், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

**472—**

**கறவை மாடுகள் வாங்க கடனுதவி வழங்குதல்**

***21932*—திரு.தா. வேடியப்பன்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் வட்டத்தில் உள்ள பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கறவை மாடு வாங்க கடனுதவி வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எத்தனை கறவை மாடுகள் வழங்கப்படும்?

*மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால்வளத்துறை அமைச்சர்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ஒவ்வொரு ஆண்டும் கடன் உதவி வழங்கப்படுகிறது. கடந்த ஆண்டு 1994-95-ல் 89 நபர்களுக்கு கடன் உதவி வழங்கப்பட்டது.

*திரு. தா. வேடியப்பன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டுதோறும் கறவை மாடுகள் வழங்குவதற்கு ஆணை பிறப்பித்து இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களது அரசிலே சிறப்பான முறையிலே வழங்கி வந்தாலும், இந்த ஆண்டும் தொடர்ந்து வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன். அத்தோடு போளூரிலே வேளாண்மை செய்யும் மக்கள் அதிகமாக இருக்கிற காரணத்தாலும், போளூர் வட்டத்தில் அதிகமாக பால் உற்பத்தி இருப்பதாலும் கூடுதலாக இந்த மாடுகளை வழங்குவதற்கும், குறிப்பாக மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு அதிகமாக கறவை மாடுகள் வழங்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறிய கருத்துக்கள் அத்தனையும் நிறைவேற்றப்படும்.

*திரு. தா. வேடியப்பன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு தமிழ்நாட்டிலே எனது போளூர் வட்டத்திற்கு அதிகமான மாடுகள் வழங்குவதற்கு ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்:* பரிசீலிக்கப்படும்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* வினா எண் 473. திரு. ஏ.கே.சி. சுந்தரவேல், மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

**473—**

## தனியார் மருத்துவமனையில் அதிக கட்டணம் வசூலித்தல்

***35149*—திரு. ஏ.கே.சி.சுந்தரவேல்:**

மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) தனியார் மருத்துவமனைகளில் குளிர் சாதனம் பொருத்தப்பட்டு மிக அதிகமான கட்டணம்/வாடகை வசூலிக்கப்பட்டு வருவதை அரசு அறியுமா?

*மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால்வளத்துறை அமைச்சர்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ஒவ்வொரு ஆண்டும் கடன் உதவி வழங்கப்படுகிறது. கடந்த ஆண்டு 1994-95-ல் 89 நபர்களுக்கு கடன் உதவி வழங்கப்பட்டது.

*திரு. தா. வேடியப்பன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டுதோறும் கறவை மாடுகள் வழங்குவதற்கு ஆணை பிறப்பித்து இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களது அரசிலே சிறப்பான முறையிலே வழங்கி வந்தாலும், இந்த ஆண்டும் தொடர்ந்து வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன். அத்தோடு போளூரிலே வேளாண்மை செய்யும் மக்கள் அதிகமாக இருக்கிற காரணத்தாலும், போளூர் வட்டத்தில் அதிகமாக பால் உற்பத்தி இருப்பதாலும் கூடுதலாக இந்த மாடுகளை வழங்குவதற்கும், குறிப்பாக மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு அதிகமாக கறவை மாடுகள் வழங்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறிய கருத்துக்கள் அத்தனையும் நிறைவேற்றப்படும்.

*திரு. தா. வேடியப்பன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு தமிழ்நாட்டிலே எனது போளூர் வட்டத்திற்கு அதிகமான மாடுகள் வழங்குவதற்கு ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்:* பரிசீலிக்கப்படும்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* வினா எண் 473. திரு. ஏ.கே.சி. சுந்தரவேல், மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

**473—**

## தனியார் மருத்துவமனையில் அதிக கட்டணம் வசூலித்தல்

***35149**—திரு. ஏ.கே.சி.சுந்தரவேல்:*

மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) தனியார் மருத்துவமனைகளில் குளிர் சாதனம் பொருத்தப்பட்டு மிக அதிகமான கட்டணம்/வாடகை வசூலிக்கப்பட்டு வருவதை அரசு அறியுமா?

1995 ஏப்ரல் 27]

*(ஆ) ஆம் எனில், மிக அதிகமாக நிர்ணயிக்கப்பட்டுள்ள வாடகைக்கு சொகுசு வரி விதிக்க அரசு முன்வருமா?*

*மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி, வணிக வரித்துறை அமைச்சர்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தனியார் மருத்துவ மனைகளில் தங்கி சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கு மிக அதிகமாகக் கட்டணம் வசூலிப்பதை, வாடகை வசூலிப்பதை அரசு அறியும்.

(ஆ) 1981-ஆம் வருடம் தமிழ்நாடு ஹோட்டல் மற்றும் விடுதிகள் சொகுசு வரிச் சட்டப்படி சொகுசு வரியாக ஹோட்டல் மற்றும் தங்கும் விடுதிகளில் தங்குபவர்களிடமிருந்து வரி வசூல் செய்யப்படுகிறது. மருத்துவ மனைகள் இதில் அடங்காது.

*திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சி தலைவி ஆட்சி பொறுப்பேற்ற இந்த 4 ஆண்டு காலத்திலே எந்த முதலமைச்சரும் சாதிக்க முடியாத மகத்தான சாதனைகளைப் படைத்து வரும், நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய நல்லாட்சியில், நட்சத்திர ஓட்டல்களைக் காட்டிலும் தமிழகத்தில் சில மருத்துவ மனைகளில் நோயாளிகளிடம் அதிகமாக வாடகை வசூல் செய்யப்படுகிறது. அப்படி வசூலிக்கப்படும் வாடகைக் கட்டணத்திற்கு ஆடம்பர வரி விதிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-55*

*மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நட்சத்திர ஹோட்டல்களைக் காட்டிலும் தனியார் மருத்துவமனைகளில் தங்கி சிகிச்சை பெறும் நோயாளிகளிடம் அதிகமாக வாடகை வசூலிக்கப்படுகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கின்றார்கள். இது ஓரளவு உண்மையும்கூட. அதே நேரத்தில் வளர்ந்து வரும் தமிழகத்தில் சிகிச்சை பெறுவதற்காக பல்வேறு மாநிலங்கள், பிற நாடுகளிலிருந்துகூட வந்து சிகிச்சை பெற்று சென்று கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையில் நல்ல ஆரோக்கியமான நிலையில் மருத்துவமனைகள் பராமரிக்கப்படுவதை அரசு ஊக்குவிக்கக் கடமைப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் அந்த மருத்துவமனைகள் சேவை நோக்கை விட்டுவிட்டு வருமானத்தை மட்டும் கருத்தில் கொண்டு செயல்படுமானால் அது கண்காணிக்கப்படக்கூடிய ஒன்று. ஆனால் இப்போதைக்கு சட்டத்தில் வரி வசூல் செய்வதற்கு இடம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவர் அல்லாதவர்களும் கட்டிடங்களைக் கட்டி வைத்துக் கொண்டு வாடகைக்கு விடுகிறார்கள். தனியார் மருத்துவமனைகள் சில வியாபார ஸ்தலமாகவே செயல்படுவதை வணிகவரித் துறை கவனத்தில் கொண்டுள்ளதா? அதிகம் வாடகை வசூல் செய்யப்படுவதை கட்டுப்படுத்தும் வகையில் வரி விதிக்கும் முறையை ஏற்படுத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி:* பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய கவனத்தில் இல்லாமல் எதுவுமே தமிழகத்தில் நடந்துவிடுவது இல்லை. நான் ஏற்கனவே சொன்னபிரகாரம் மருத்துவமனைகள பல வசதிகளை உட்படுத்தி, பல நவீன நுட்பங்களைப் பயன்படுத்தி உலகளவில் ஆராய்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்டு இருக்கின்ற சாதனைகள் இங்கே சிகிச்சைக்குப் பயன்படுத்தி வரப்படுகிறது. அதே நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போன்று தனவந்தர்கள், அவர்கள் மருத்துவர்கள் இல்லை என்றாலும்கூட இதனை வருமானம் ஈட்டும் ஒரு தொழிலாக இன்றையதினம் பல்வேறு தனியார் மருத்துவமனைகளைக் கட்டி மருத்துவர்களுக்குத் தனியாகக் கட்டணம் வசூல் செய்கின்றார்கள். மருந்துக்குத் தனியாக வசூல் செய்கிறார்கள். அவர்களுடைய மற்ற சேவைகளுக்கு தனியாக வசூல் செய்கின்றார்கள். அறுவை சிகிச்சை செய்வதற்கு அங்கே தனி அரங்கம் இருக்குமானால் அதற்கு தனியாக வசூல் செய்கின்றார்கள். இதுபோக அங்கே தங்க வைக்கின்ற நோயாளிகளிடமிருந்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போன்று நட்சத்திர ஹோட்டல்களில் வசூல் செய்வதைக் காட்டிலும் பன்மடங்கு கூடுதலாக வசூல் செய்யப்படுவது கவனத்தில் கொள்ளப்பட்டு வருகிறது. அந்த வகையில் நோயாளிகள் பாதிக்கப்படாமல் நோயாளிகள் வரி கட்டக் கூடாத வகையில் அதே நேரத்தில் அந்த கட்டிடத்தை பராமரிப்பவர்கள் அபரிமிதமான லாபத்தைப் பெறுவார்களானால் ஒரு குறிப்பிட்ட கட்டணம்தான் வாடகையாக நிர்ணயிக்கப்படவேண்டும் என்று நடைமுறைப்படுத்தலாம். வணிக வரித் துறை மட்டும் அப்படிப்பட்ட ஒரு கட்டுப்பாடு கொண்டுவர முடியாது. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சருடன் கலந்து பேசி தனியார் மருத்துமனைகளில் மிகக் கூடுதலாக வாடகை வசூல் செய்யப்படுவதை தடுக்க நடவடிக்கை எடுக்க முன்வரலாம். அப்படி இல்லை என்று சொன்னால் குறிப்பிட்ட கட்டணத்திற்கு மேல் அவர்கள் விதிப்பார்களேயானால் அதற்கு சொகுசு வரி விதிப்பதற்கு ஆலோசிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* வினா எண் 474, திரு.என்.ஆர். ராஜேந்திரன், மாண்புமிகு தொழில்துறை அமைச்சர்.

**474—**

## சேஷசாயி நிறுவனத்தைத் திறத்தல்

***15871-**திரு. என்.ஆர். ராஜேந்திரன்:*

*மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வடலூர் சேஷசாயி நிறுவனம் திறக்கப்படாததால் அங்கு பணியாற்றிய தொழிலாளர்கள் சிரமப்படுவதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், அந்நிறுவனத்தைத் திறக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில்துறை அமைச்சர்:*

*(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடலூரிலுள்ள சேஷசாயி இண்டஸ்டிரீஸ் லிமிடெட் நிறுவனத்தில் சுமார் 1,600 பேர் பணிபுரிந்து வந்தனர். இந்த நிறுவனம் ஒரு நலிவுற்ற நிறுவனமாக பி.ஐ.எப்.ஆர்-ல் அறிவிக்கப்பட்டது. பண நெருக்கடியின் காரணமாக 12-4-1991 முதல் இந்நிறுவனம் இயங்கவில்லை. நிர்வாகத்தால், நிறுவனத்தைத் திறக்க வெளிநாட்டிலிருந்து நிதியுதவி பெற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிகிறது. இந்நிறுவனத்தில் பணியாற்றிய ஒவ்வொரு தொழிலாளிக்கும் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து 1992 மற்றும் 93-ம் ஆண்டுகளுக்கு தீபாவளிப் பண்டிகையின் போது ரூ. 400 உதவித் தொகை அளிக்கப்பட்டது. நிறுவனத்தை மீண்டும் இயக்க நிர்வாகம் எடுத்து வரும் முயற்சிகளை அரசு உன்னிப்பாக கவனித்து வருகிறது.*

திரு. என். ஆர். ராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது காட்டுமன்னார் கோயில் தொகுதி தொழிற்சாலை இல்லாமல் வெறும் விவசாயத்தையே நம்பி வாழும் பகுதி. வடலூர் சேஷசாயி நிறுவனத்தில் எனது தொகுதியிலிருந்து நிறைய பேர் பணியாற்றி வந்தனர். இந்தத் தொழிற்சாலை மூடப்பட்டதால் அப்பகுதி மக்களுக்கு வேறு வேலைகள் இல்லாத காரணத்தினால் (மணியடிக்கப்பெற்றது.)

*முற்பகல் 11-00*

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* பேரவையின் முன்அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. திரு. ராஜேந்திரன் கேள்வியை வேகமாகக் கேளுங்கள்.

*திரு. என்.ஆர். ராஜேந்திரன்:* அவர்கள் மீண்டும் சொந்த ஊர்களுக்கு வந்து தங்களுடைய வாழ்க்கையை அமைத்துக் கொள்ள முடியாமல் இந்த ஆலை மறுபடியும் திறக்கப்படுமா, திறக்கப்படாதா என்ற சந்தேகத்திலும் குழந்தைகளின் பள்ளி வாழ்க்கையை எங்கே தொடங்குவது என்ற சஞ்சலத்திலும் உள்ளார்கள். பெரும்பாலும் பல ஊர்களிலிருந்து வந்து குடியேறிய மக்களே இதில் பணியாற்றி வந்தாலும் குறைந்த சம்பளமே பெற்று வந்ததாலும், தற்போதைய வாழ்க்கை அவர்களுக்குக் கேள்விக் குறியாகவே உள்ளது. பலர் தாங்கள் குடியிருக்கின்ற வீடுகளைக்கூட விற்க வேண்டிய சூழ்நிலைகளெல்லாம் ஏற்பட்டிருக்கின்றன. ஏழைகளின் குடும்பங்களைக் காக்கும் இதய தெய்வம் ஆட்சியில், இவர்களுக்கு மாற்று ஏற்பாடு செய்து தரப்படுமா என அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. ம. சின்னசாமி:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடலூரிலுள்ள சேஷசாயி நிறுவனம் ஒரு தனியார் நிறுவனம். இந்த ஆலையில் 1,600 தொழிலாளர்கள் வேலை பார்த்து வந்தார்கள். இந்த நிறுவனம் மிகவும் நலிவடைந்து 12-4-1991-ல் மூடப்பட்டது. இதை மீண்டும் திறக்க தொழிலாளர் நலத்துறை அதிகாரி மூலம் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு பலன் ஏதும் ஏற்படவில்லை. இந்த நிறுவனம் ஒரு அமெரிக்க நிதி நிறுவனத்திடமிருந்து தொழில் முதலீட்டுக்கு நிதி பெற முயற்சி செய்வதாக முதலில் கூறியது. இந்த நலிவுற்ற நிறுவனம் பி.ஐ.எஃப்.ஆர். நிறுவனத்தால் 30-12-1993 நாளிட்ட ஆணைப்படி முடிவுக்குக் கொண்டுவர ஆணையிடப்பட்டது. இதனை எதிர்த்து தொழிற்சாலை நிறுவனம் அந்த பி.ஐ.எஃப்.ஆர். நிறுவனத்தினுடைய மேல் முறையீட்டு நிறுவனமாக இருக்கிற ஏ.ஏ.ஐ.எஃப்.ஆர். நிறுவனத்திற்கு மேல்முறையீடு செய்தது. பி.ஐ.எஃப்.ஆர். எடுத்த முடிவு சரியானது என்று ஏ.ஏ.ஐ.எஃப்.ஆர். 9-8-1994 நாளிட்ட தேதியில் ஆணையை உறுதி செய்தது. தொழிற்சாலை நிறுவனம் ஐ.சி.ஐ.சி.ஐ., என்ற நிறுவனத்துடன் மறுபுணரமைப்புத் திட்டம் ஒன்றை சமர்ப்பித்துள்ளதாகவும், அதனால் ஏ.ஏ.ஐ.எஃப்.ஆர்., தனது மறுபரிசீலனையை செய்யவேண்டுமென்றும் நிறுவனம் கேட்டுக் கொண்டது. இந்த மனுவையும் ஏ.எ.ஐ.எஃப்.ஆர். நிறுவனம் 23-11-1994-இல் தள்ளுபடி செய்துவிட்டது. இந்த நிலையில் ஐ.சி.ஐ.சி.ஐ. நிறுவனம் தனது

கடன்களை வசூல் செய்வதற்காக பம்பாய் உயர்நீதி மன்றத்தில் ஒரு வழக்கு தொடுத்து அதன்மூலம் 27-12-1994-ஆம் தேதியன்று அந்தத் தொழிற்சாலையை ஐ.சி.ஐ.சி.ஐ. தன்னுடைய கையிலே எடுத்துக் கொண்டது. இவ்வாறு பி.ஐ.எஃப்.ஆர்.. ஏ.ஏ.ஐ.எஃப்.ஆர். மற்றும் ஐ.சி.ஐ.சி.ஐ. ஆகிய நிறுவனங்கள் மூன்றும் இந்தத் தொழிற்சாலையைப் புணரமைக்க எடுத்த நடவடிக்கைகள் எதுவும் பலன் அளிக்காததால் இதில் அரசு தலையிட்டு ஒன்றும் செய்வதற்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* திரு. கு. சிவசுப்பிரமணியன்.

*திரு. கு. சிவசுப்பிரமணியன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்ததைப் போல இந்த நிறுவனம் திமுக ஆட்சியினுடைய இரண்டு ஆண்டு காலத்தில் செய்த சாதனைகளில் ஒன்றாக மூடப்பட்ட ஒன்று. இதனை நம்முடைய தற்போதைய வீட்டுவசதித் துறை அமைச்சர் அவர்கள் தொழிலாளர் நலத்துறை அமைச்சராக இருந்தபோது பல்வேறு தொழிற்சங்கங்களையும் நம்முடைய தொழிலாளர் துறை ஆணையாளர்களையும், நிர்வாகத்தையும் அழைத்துப் பேசி உடனடியாக அந்த நிறுவனத்தைத் திறக்க வேண்டுமென்று சொல்லி, தொழிலாளர்களுடைய நலனில் அக்கறை கொண்ட நம்முடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு இதிலே எடுத்துக்கொண்ட முடிவின் காரணமாகத்தான் அதனை உடனடியாக ஒரு முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். அந்த அடிப்படையிலே அவர்கள் பி.ஐ.எஃப்.ஆர்-க்கும் நம்முடைய மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அறிவித்ததைப் போல ஏ.எ.ஐ.எஃப்.ஆர். மற்றும் ஐ.சி.ஐ.சி.ஐ எல்லாம் தற்போது இதனை ஒரு முடிவுக்கு கொண்டுவந்து இதைத் திறக்க முடியாது என்ற ஒரு சூழ்நிலையை உருவாக்கி இருக்கிறார்கள். ஆனால், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்வதெல்லாம் நம்முடைய காட்டுமன்னார்கோயில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப்போல அங்கே இருந்த தொழிலாளர்களினுடைய குடும்பங்கள் பல்வேறு சிக்கல்களிலே இன்றைய தினம் தவித்துக் கொண்டு இருக்கின்றன. அதனைக் கருத்திலே கொண்டு, அமெரிக்க . . .

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* சிவசுப்பிரமணியன், உங்களை துணைக் கேள்வி கேட்கத்தான் அனுமதித்து இருக்கிறேன். ஒரு நிமிடத்திற்குள் கேட்பதற்குத்தான் துணைக்கேள்வி என்று பெயர்.

**திரு. கு. சிவசுப்பிரமணியன்:** மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததைப் போல இன்றைக்கு தனியார் நிறுவனம் முன் வந்து இதனை நடத்துவதற்குத் தயாராக இருந்தாலும்கூட அந்த நிர்வாகம் அதற்கு ஒத்துழைப்புத் தருவதில்லை என்று அங்கே உள்ள தொழிலாளர்களிடையே பெரிய கொந்தளிப்பு இருந்து வருகிறது. அதிருப்தியும் இருந்து வருகிறது. அதனைக் கருத்திலே கொண்டு நம்முடைய மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் மீண்டும் அந்த நிர்வாகத்தை அழைத்துப் பேசி, அதில் ஒரு நல்ல முடிவை எடுக்க முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 11.05*

**மாண்புமிகு திரு. ம. சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிறுவனத்தால் அந்தத் தொழிற்சாலையில் போடப்பட்டிருக்கிற அந்த முதலீடுகள் முழுவதுமாக அதிலே மோசமாகிப்போன பிறகுதான், பி.ஐ.எஃப்.ஆர். என்று சொல்லப்படுகின்ற தொழில் நிதி சீரமைப்பு வாரியத்திற்கு மனுபோடுகிறார்கள். அப்பொழுது அந்தத் தொழில் நிதி சீரமைப்பு வாரியம் பல முயற்சிகளை எடுத்து, பல்வேறு கட்டங்களில் விசாரணைகளுக்குப் போடுகிறார்கள். அப்பொழுது அந்தத் தொழிற்சாலையினுடைய நிறுவனம், அந்த தொழிற்சாலை அதிபர் மீண்டும் முதலீடுகளைக் கொண்டு வருவதற்கான வாய்ப்புகளெல்லாம் கொடுக்கப்படுகிறது. அப்படிக் கொண்டு வராத பட்சத்திலேதான் அதனை மூட வேண்டுமென்று உத்தரவு போடுகிறார்கள். அதற்குப்பிறகு இந்த நிறுவனமானது ஐ.சி.ஐ.சி.ஐ. என்ற நிறுவனத்திடம் நாங்கள் ஒரு திட்டத்தைக் கொடுத்திருக்கிறோம் என்று சொன்னார்கள். அதற்குப் பிறகும் அவர்கள் சரியாக இல்லாத காரணத்தால்தான் மேல் முறையீடு, அதாவது பி.ஐ.எஃப்.ஆர்-உடைய மேல்முறையீடு, ஏ.ஏ.ஐ.எஃப் ஆர்.-இலே செய்யப்பட்டு அதுவும் தள்ளுபடி செய்யப்பட்டது. அதற்குப்பிறகு இந்த ஆலைக்கு கடன் கொடுத்த ஐ.சி.ஐ.சி.ஐ. என்ற நிதி நிறுவனம் தன்னுடைய கடனை வசூலிப்பதற்காகப் பம்பாய் உயர்நீதிமன்றத்தில் ஒரு வழக்கைப் போட்டு இப்பொழுது அவர்கள் அதைக் கையில் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த மூன்றுகட்டமாக இது பி.ஐ.எஃப்.ஆர்.-க்கும். ஏ.ஏ.ஐ.எஃப்.ஆர்.-க்கும் போய்விட்டு இப்பொழுது ஐ.சி.ஐ.சி.ஐ. அதனைக் கையில் எடுத்துக்கொண்ட காரணத்தால் அரசு இதில் தலையிடாது. தலையிடுவதற்கு வாய்ப்பும் இல்லை. எனவே அரசாங்கத்தை எதிர்பார்த்து இனிப் பலன் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *475.* திரு. ஏ.தா.பொன்னுவேலு, மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்.

1995 ஏப்ரல் 27]

**475—**

**மிகவும் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்க நடவடிக்கை**

**26180—திரு. ஏ.தா. பொன்னுவேலு:*

*மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —*

*(அ) பிற்பட்டோர் பட்டியலில் உள்ள உப்பரா, உப்பிலியா, சகரா இனத்தவரை மிகவும் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்க அரசுக்கு ஏதேனும் பரிந்துரை வந்துள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன?*

*மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

*திரு. ஏ.தா. பொன்னுவேலு:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பிற்பட்டோர் பட்டியலில் உள்ள உப்பரா, உப்பிலியா, சகரா இனத்தவர்கள் பொருளாதாரத்திலே மிகவும் பின்தங்கிய நிலையிலே இருக்கிறார்கள். சென்னை, கோவை, மதுரை, சேலம், திருச்சி, ஈரோடு போன்ற பகுதிகளில் தமிழ் கலந்த தெலுங்கு பேசும் இனத்தவர்கள் இன்னும் பொருளாதாரத்திலே மேம்படாமல் இருக்கிறார்கள். இது சம்பந்தமாகக் கூட அகில இந்திய உப்பரா குலப் பேரவைத் தலைவர் மூலம் சீனிவாசன் அவர்கள் மூலம் இந்தக் கோரிக்கையைப் பிற்பட்டோர் ஆணையரிடத்தில் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, அந்த மக்களை மிகவும் பிற்படுத்தப்பட்ட பட்டியலில் சேர்க்க அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்:* மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் பிற்படுத்தப் பட்டோரைச் சேர்ப்பதும், பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்படாத வகுப்புகளைப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்ப்பதும் குறித்து தமிழ்நாடு இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் நலக் குழு விரிவாக ஆய்வு செய்தது. ஆனால் இந்த சமுதாயங்களையெல்லாம் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்ப்பதற்காக அந்த ஆணையம் பரிந்துரை செய்யாத காரணத்தால் அரசால் செய்ய இயலவில்லை. தற்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தற்போது இருக்கிற

ஆணையத்தில் அவர்கள் மனு கொடுத்து இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆணையம் பரிந்துரை செய்யுமேயானால் அது குறித்து அரசு பின்னர் முடிவெடுக்கும்.

திரு. ஏ.தா. பொன்னுவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு முதல் மாநாடு சென்னையில் கம்பர் அரங்கத்திலே நடைபெற்றது. அதிலே மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. கே.வி. தங்கபாலு அவர்களும், முன்னாள் பிற்பட்டோர் நலத்துறை அமைச்சரவர்களும் கலந்து கொண்டிருந்தார்கள். ஆகவே அப்படிப்பட்ட அந்தமிகவும் பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களுக்கு அதை மீண்டும் பரிசீலனை செய்து அந்த மாநாட்டினுடைய கருத்துக்களை ஏற்று அதை மாண்புமிகு அமைச்சரவர்கள் பரிசீலனை செய்து இதை இந்த ஆண்டிலே அதற்கான ஏற்பாடு செய்து அந்தப் பட்டியலில் சேர்ப்பார்களா என வலியுறுத்தி வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அமைச்சர்களெல்லாம் இப்படிப்பட்ட மாநாடுகளில் கலந்து கொள்ளலாம். ஆனால், நடவடிக்கை எடுப்பது என்பது மத்திய அமைச்சர்களே எடுக்காமல் இருக்கிறார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையில் பிற்படுத்தப்பட்டவர்கள் பட்டியலில் 143 இனங்களும், மிகவும் பிற்படுத்தப்பட்டவர் பட்டியலில் 68 ஜாதியும் இருக்கிறது. ஆனால் மத்திய அரசு இன்னும் 32 ஜாதிகளுக்கு மேல் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்காமல் இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். சமூகம், கல்வி இவைகளில் பின் தங்கி இருந்தாலும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இணைப்பது என்பது தீண்டாமைக் கொடுமைக்கு ஆளாகாத ஜாதியைச் சார்ந்தவர்களைத்தான் குறிப்பாகத் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் இருக்கிற ஜாதிகளைப் போன்று இருக்கிற ஜாதிகள்: கல்வி, சமூக நிலையில் மட்டும் பின்தங்கி இருந்து தீண்டாமைக் கொடுமைக்கு ஆளாகாமல் இருக்கிற சூழ்நிலையில் இருக்கிற சமுதாயத்தினர்தான் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டு வருகிறார்கள். எனவே இந்த சமுதாயத்தைப் பொறுத்தவரையில் இதுகாறும் விசாரித்த அந்தக் குழு, இது குறித்து பரிந்துரை செய்யாத காரணத்தினால்தான் செய்யமுடியாமல் இருந்தது. அண்மைக் காலத்தில் மண்டல் கமிஷன் தீர்ப்புரைக்குப் பின்னர், தமிழக அரசு, இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், ஒரு நிரந்தர ஆணையத்தை தமிழகத்திலே இன்றைக்கு உருவாக்கியிருக்கிறார்கள். பிற்பட்டவர்கள் அந்த ஆணையத்தில் தங்களுடைய முறையீடுகளை செய்து, அந்த ஆணையம் விசாரித்து மிகவும் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமானால், அவர்கள்

பரிந்துரை செய்தால் மட்டும்தான் நாம் அதை நடவடிக்கைக்கு உட்படுத்த முடியும் என்பது மண்டல் கமிஷன் தீர்ப்புரை. எனவே, அந்தத் தீர்ப்புரையை மதிக்கிற இந்த அரசு, அதை நிறைவேற்ற அந்த ஆணையத்தினுடைய பரிந்துரை தேவைப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*முற்பகல் 11-10*

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* திரு. எஸ். ஆண்டித் தேவர்.

*திரு. எஸ்.ஆண்டித் தேவர்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரையின்போது தமிழகத்திலே பிற்பட்ட வகுப்பினரைச் சார்ந்தவர்கள் 30 பேரும், இன்னும் மிகவும் பிற்பட்ட பட்டியலில் உள்ளவர்களும் மத்தியிலே 27 சதவீத பிற்பட்டோர் பட்டியலிலே சேர்க்கப்படாமல் இருக்கிறார்கள் என்றார். அதிலே குறிப்பாக, பிரமலைக்கள்ளர் வகுப்பு இங்கே மிகவும் பிற்பட்டோர் பட்டியலிலே இருக்கிறது. மத்திய அரசு பட்டியலிலே இல்லை. அதை அமைச்சர் அவர்கள் மத்திய அரசுக்கு தெரிவித்து, அதைச் சேர்க்க ஏற்பாடு செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* இது வேறு இரண்டு வகுப்புகளைச் சார்ந்த கேள்வி. அதற்குத் தேவைப்படும் பதில் இருக்காது. தனிக் கேள்வி போடவும்.

வினா எண் 476, திரு. காஞ்சி பன்னீர் செல்வம், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்.

**476—**

### திருமுருக கிருபானந்தவாரியாருக்கு மணிமண்டபம்

***38155**—திரு. காஞ்சி பன்னீர் செல்வம்:*

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) தவத்திரு திருமுருக கிருபானந்தவாரியார் அவர்களுக்கு சென்னை மாநகரில் மணிமண்டபமும், சிலையும் வைப்பதற்கான செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும்?

*மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பரிந்துரை செய்தால் மட்டும்தான் நாம் அதை நடவடிக்கைக்கு உட்படுத்த முடியும் என்பது மண்டல் கமிஷன் தீர்ப்புரை. எனவே, அந்தத் தீர்ப்புரையை மதிக்கிற இந்த அரசு, அதை நிறைவேற்ற அந்த ஆணையத்தினுடைய பரிந்துரை தேவைப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11-10

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* திரு. எஸ். ஆண்டித் தேவர்.

*திரு. எஸ்.ஆண்டித் தேவர்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரையின்போது தமிழகத்திலே பிற்பட்ட வகுப்பினரைச் சார்ந்தவர்கள் 30 பேரும், இன்னும் மிகவும் பிற்பட்ட பட்டியலில் உள்ளவர்களும் மத்தியிலே 27 சதவீத பிற்பட்டோர் பட்டியலிலே சேர்க்கப்படாமல் இருக்கிறார்கள் என்றார். அதிலே குறிப்பாக, பிரமலைக்கள்ளர் வகுப்பு இங்கே மிகவும் பிற்பட்டோர் பட்டியலிலே இருக்கிறது. மத்திய அரசு பட்டியலிலே இல்லை. அதை அமைச்சர் அவர்கள் மத்திய அரசுக்கு தெரிவித்து, அதைச் சேர்க்க ஏற்பாடு செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* இது வேறு இரண்டு வகுப்புகளைச் சார்ந்த கேள்வி. அதற்குத் தேவைப்படும் பதில் இருக்காது. தனிக் கேள்வி போடவும்.

வினா எண் 476, திரு. காஞ்சி பன்னீர் செல்வம், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்.

**476—**

### திருமுருக கிருபானந்தவாரியாருக்கு மணிமண்டபம்

****38155*—திரு. காஞ்சி பன்னீர் செல்வம்:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) தவத்திரு திருமுருக கிருபானந்தவாரியார் அவர்களுக்கு சென்னை மாநகரில் மணிமண்டபமும், சிலையும் வைப்பதற்கான செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும்?

*மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

திரு. காஞ்சி பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினத்திலே தமிழகத்திலே இருக்கின்ற நெசவாளர் பெருங்குடி மக்களுக்கு, ஏழை எளிய குடும்பத்திலே பிறந்த கிருபானந்த வாரியார் அவர்களுக்கு, நெசவாளர்கள் வாழ்க்கையிலே இன்றைக்கு ஒளிவிளக்காகத் திகழ்கின்ற தமிழகத்தினுடைய நிரந்தர முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், நலத் திட்ட உதவிகள் அறிவிக்கின்ற அந்த நேரத்திலே, அவர் வாழ்ந்த, அவர் பிறந்த அந்த மண்ணான காங்கேயநல்லூரிலே மணிமண்டபமும், சிலையும் அமைக்கப்படும் என்று அறிவித்தார்கள். அதற்கு நெசவாளர் பெருமக்கள் மிகுந்த மகிச்சியையும் அதே நேரத்திலே நன்றியையும் புரட்சித் தலைவி அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறார்கள். அப்பேற்பட்ட வாரியார் அவர்கள் காங்கேயநல்லூரிலே பிறந்ததாலும், சென்னையிலே, சிந்தாதரிப்பேட்டைப் பகுதியிலேதான் வாழ்ந்தார். உலகத்திலே பல பகுதிகளிலே தமிழினுடைய எழிச்சியையும், தமிழ்க் கடவுளுடைய பெருமையையும் மிகச் சிறப்பாக எடுத்துரைத்த அப்பேற்பட்ட வாரியார் அவர்களுக்கு, தலைநகரமாக இருக்கின்ற இந்தச் சென்னையிலே மணிமண்டபமும், சிலையும் அமைப்பதற்கு ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இதயதெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அண்மையிலே வேலூரில் நடைபெற்ற ஒரு பிரம்மாண்டமான விழாவிலே கலந்து கொண்டு உரையாற்றுகிறபோது திருமுருக கிருபானந்த வாரியாருக்கு அவர் பிறந்த ஊரான காங்கேயநல்லூரிலே மணிமண்டபம் அமைக்கப்படும் என்று அறிவித்தார்கள். அதற்கான பணி துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

திரு. காஞ்சி பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தச் சிலை காங்கேயநல்லூரின் அருகிலே இருக்கின்ற தலைநகரமாக இருக்கின்ற காரணத்தினால் வேலூரில் அந்த இடத்திலோ அல்லது சென்னையிலோ அமைப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று கேட்டுக்கொள்வதோடு, அவர்கள் வாழ்ந்த பகுதியான சிந்தாதிரிப்பேட்டை பகுதிக்கு, இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சருடைய ஆலோசனையோடு, அந்தப் பகுதிக்கு அவர்களுடைய திருப்பெயரை வைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. மு. தென்னவன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலே மணிமண்டபம் கட்டுகின்ற எண்ணம் இந்த அரசுக்கு இல்லை. இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஏற்கெனவே உத்தரவிட்டதற்கிணங்க அவர் பிறந்த ஊரான காங்கேயநல்லூரில் மணிமண்டபம் கட்டப்பட இருக்கிறது. அதற்கானஇடம் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகிறது. அந்த இடம் கையகப்படுத்தப்பட்டதற்குப் பிறகு பொதுப்பணித் துறையிடம் மதிப்பீடு பெற்று மணிமண்டபம் கட்டுவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கும். சென்னையிலே சிந்தாதரிப்பேட்டையிலே அவர் வாழ்ந்த பகுதிக்கு அவருடைய பெயர் வைக்கப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். உள்ளாட்சித் துறை அமைச்சரோடு கலந்தாலோசனை செய்து அதுபற்றி அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11-15

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* வினா எண் 477 டாக்டர் ஜெ. பரந்தாமன், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்.

**477—**

## டாக்டர் அம்பேத்கார் சிலை அமைத்தல்

***78859*—டாக்டர் ஜெ. பரந்தாமன்:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வடாற்காடு-அம்பேத்கார் மாவட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள டாக்டர் அம்பேத்கார் சிலை விரைவில் வெண்கல சிலையாக மாற்றப்படுமா?

*மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வடாற்காடு-அம்பேத்கார் மாவட்ட ஆட்சித் தலைவரின் அலுவலக வளாகத்தில் நிறுவப்பட்டிருக்கிற டாக்டர் அம்பேத்காருடைய சிலை வெண்கலத்தால் செய்யப்பட்டது. ஆகவே அதை மாற்ற வேண்டிய அவசியம் இல்லை.

*டாக்டர் ஜெ. பரந்தாமன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடாற்காடு-அம்பேத்கார் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்தில் சிலை நிறுவ டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சியில் திட்டமிடப்பட்டு நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டன.

1995 ஏப்ரல் 27]

*மாண்புமிகு திரு. மு. தென்னவன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலே மணிமண்டபம் கட்டுகின்ற எண்ணம் இந்த அரசுக்கு இல்லை. இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஏற்கெனவே உத்தரவிட்டதற்கிணங்க அவர் பிறந்த ஊரான காங்கேயநல்லூரில் மணிமண்டபம் கட்டப்பட இருக்கிறது. அதற்கானஇடம் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகிறது. அந்த இடம் கையகப்படுத்தப்பட்டதற்குப் பிறகு பொதுப்பணித் துறையிடம் மதிப்பீடு பெற்று மணிமண்டபம் கட்டுவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கும். சென்னையிலே சிந்தாதரிப்பேட்டையிலே அவர் வாழ்ந்த பகுதிக்கு அவருடைய பெயர் வைக்கப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். உள்ளாட்சித் துறை அமைச்சரோடு கலந்தாலோசனை செய்து அதுபற்றி அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*முற்பகல் 11-15*

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* வினா எண் 477 டாக்டர் ஜெ. பரந்தாமன், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்.

**477—**

### டாக்டர் அம்பேத்கார் சிலை அமைத்தல்

***78859—டாக்டர் ஜெ. பரந்தாமன்:***

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வடாற்காடு-அம்பேத்கார் மாவட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள டாக்டர் அம்பேத்கார் சிலை விரைவில் வெண்கல சிலையாக மாற்றப்படுமா?

*மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வடாற்காடு-அம்பேத்கார் மாவட்ட ஆட்சித் தலைவரின் அலுவலக வளாகத்தில் நிறுவப்பட்டிருக்கிற டாக்டர் அம்பேத்காருடைய சிலை வெண்கலத்தால் செய்யப்பட்டது. ஆகவே அதை மாற்ற வேண்டிய அவசியம் இல்லை.

*டாக்டர் ஜெ. பரந்தாமன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடாற்காடு-அம்பேத்கார் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்தில் சிலை நிறுவ டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சியில் திட்டமிடப்பட்டு நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டன.

ஆனால் அதைத் திறந்தது தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும் என்பதைப் போல வேறு சிலர். கம்பீரமாக டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் வடிவமைக்கப்பட்ட கட்டடத்திற்கு முன்னால் எளிமையாக திரு. கிருஷ்ணன் என்கிற நல்லவர் ஒருவரால் நன்கொடையாகப் பெறப்பட்ட அந்த டாக்டர் அம்பேத்கார் சிலை வைக்கப்பட்டது. அதைத் திறந்து வைத்தது தாழ்த்தப்பட்ட மக்களிடம் இரட்டை வேடம் போடும் இன்றும் இரட்டை வேடம் போட்டுக்கொண்டிருக்கின்ற ஒருவர். அந்த சிலை வெண்கலச் சிலை அல்ல என்ற மர்மமும் ஐயப்பாடும் இருக்கிறது. கட்டடத்திற்கும் அதைத் திறந்தவருக்கும் சம்பந்தம் இல்லை. அங்கே திறக்கப்பட்ட சிலையும் நன்கொடையாக வந்த சிலை. அடுத்தவன் வீட்டு நெய்யே என்பதைபோல் பெயர் மட்டும் ஒருவருக்கு இருப்பதா என்று அம்பேத்கார் மாவட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் கேட்கிறார்கள்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* கேள்வியாகக் கேளுங்கள்.

*டாக்டர் ஜெ. பரந்தாமன்:* தாழ்த்தப்பட்ட மக்கள் மீது டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் திடீரென்று பாசம் கொண்டவர் அல்ல. படிப்படியாக, ஆண்டுக்காண்டு சென்னையில் டாக்டர் அம்பேத்காருக்கு ஒரு மண்டபம், டாக்டர் அம்பேத்காருக்கு சிலை, டாக்டர் அம்பேத்கார் பெயரில் போக்குவரத்துக் கழகம், தந்தை சிவராஜ்க்கு சிலை, என்று தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னேறுவதற்கான முன்னோடித் திட்டங்களை, டாக்டர் அம்பேத்கார் கனவை நனவாக்கும் ஒரே தலைவியாக, தர்மம் மறுபடியும் வெல்லும் என்று நிருபிக்கின்ற டாக்டர் புரட்சித் தலைவி (மேசையைத் தட்டும் ஒலி) டாக்டர் அம்பேத்கார் சிலையைத் திறக்கத் தகுதியுள்ள ஒரே தலைவி புரட்சித் தலைவி என்பதால் அது கம்பீரமாக மாற்றியமைக்கப்படுமா? மேலும் திறந்த வெளிச் சிலையாக இருப்பதால் சிலைக்கு மேல் சிறிய மண்டபம் கட்டப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. மு. தென்னவன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நிறுவப்பட்ட சிலை வெண்கலச் சிலை. டாக்டர் அம்பேத்காருடைய திருவுருவச் சிலை *1,39,000* ரூபாய் செலவில் அங்கே நிறுவப்பட்டிருக்கிறது. அந்தச் சிலையிலே கூட மோசடி இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படி இருக்குமேயானால் அதுகுறித்து அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கம்பீரமாக அம்பேத்காருக்கு சிலை வைக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்கள். இதயதெய்வம், தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி டாக்டர் அம்பேத்கார் அவர்களுக்கும் கம்பீரமான சிலை சென்னையில் அற்புதமான இடத்தில் நிறுவி

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இருக்கிறார்கள் என்பதை இங்கே நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதுமட்டுமல்ல. ஆதிதிராவிட மக்களுக்காகப் பணியாற்றுகிற ஒரு சமூகத் தொண்டருக்கு டாக்டர் அம்பேத்கார் பெயரிலே ஒரு இலட்சம் ரூபாயிலே ஒரு விருது வழங்குவதற்கும் புரட்சித்தலைவி உத்தரவிட்டு இருக்கிறார்கள் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*டாக்டர் ஜெ. பரந்தாமன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை, அச்சமில்லை, அச்சமென்பதே இல்லையே என்பதற்கேற்ப துணிவாக, நேர்மையாக, பாரதி கண்ட புதுமை தெய்வமாக விளங்குகிறார் டாக்டர் புரட்சித் தலைவி. தங்களுக்கு ஆட்சி கிடைத்தவுடன் தொகுதியை மறந்து தலைநகரிலேயே தஞ்சம் அடைந்துவிடுகிற அரசியல் வாதிகளுக்கிடையில், சொந்த தொகுதியைச் சார்ந்த ஆதிதிராவிட மக்களை தன் சொந்தச் செலவில் சென்னைக்கு தனிப்பேருந்தில் ராஜ மரியாதையோடு வரவழைத்து விருந்து வைக்கப்பட்டது என்பதைப் பார்க்கிற போது டாக்டர் புரட்சித் தலைவி அவர்களால் மட்டுமே அது முடியும் என்பதால் தான் கவிஞர் தாகூர் அன்றே பாடிவிட்டார் என்று தாழ்த்தப்பட்ட மக்கள் பாராட்டுகிறார்கள். நன்றி சொல்கிறார்கள்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* கேள்வியைக் கேளுங்கள்.

*டாக்டர் ஜெ. பரந்தாமன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடாற்காடு-அம்பேத்கார் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகத்தில் டாக்டர் அம்பேத்கார் சிலை வைக்கப்பட்டுள்ள இடத்தில் நிறைய இடம் இருப்பதால், அது பயன்படுத்தப்படாமல் இருப்பதால் சென்னை காந்தி மண்டபத்தைப் போல அரசு நிதிநிலைக்கேற்ப மண்டம் அல்லது நினைவுச் சின்னம் அங்கே அமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. மு. தென்னவன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலைக்கேற்ப அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* திரு.செ.கு. தமிழரசன்.

*திரு. செ.கு.தமிழரசன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பேத்கார் மாவட்டத் தலைநகரான வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிக் காலத்திலே திறக்கப்பட்ட சிலை டாக்டர் அம்பேத்காரின் உருவ ஒற்றுமைக்கு நேர்மாறாக இருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் கூட அதை மாற்றியமைக்கலாம் என்கிற ஒரு பரிந்துரையை அரசுக்கு அனுப்பி

இருக்கிறார். எனவே அதை மாற்றுவதற்கு அரசு முன் வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. மு. தென்னவன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பேத்கார் சிலையின் தோற்றத்தைப் பற்றிச் சொன்னார்கள். அப்படிப்பட்ட நிலையிலே அந்தச் சிலை இருக்குமேயானால் அதை மாற்றம் செய்வதற்குத் தகுந்த நடவடிக்கையை அரசு எடுக்கும்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* வினா எண் 478. திரு. சி. குழந்தைவேலு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**478—**

## கீரனூரில் பேருந்து நிலையம் கட்டுதல்

***25311**—திரு. சி. குழந்தைவேலு:*

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா-

குளத்தூர் தொகுதி, கீரனூரில் பேருந்து நிலையம் எப்பொழுது கட்டி முடிக்கப்படும்?

*மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருத்திய கருத்துரு மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து கிடைக்கப்பெற்று நகர் ஊரமைப்பு இயக்குநரால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதும், பேருந்து நிலையம் கட்டும் பணி துவக்கப்படும்.

*முற்பகல் 11.20*

*திரு. சி. குழந்தைவேலு :* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியான குளத்தூர் தொகுதியினுடைய தலைமையிடமாக கீரனூர் இருந்து வருகிறது. கீரனூர் மக்களுடைய நீண்டநாள் கோரிக்கை பேருந்து நிலையம் கட்டவேண்டும் என்பதாகும். பேருந்து நிலையம் இல்லாததால், அங்குள்ள பொதுமக்கள், வெயிலிலும் மழையிலும், கஷ்டப்பட வேண்டிய சூழ்நிலை உள்ளது. பேருந்து நிலையக் கட்டிடம் கட்டும் திட்டப்பணி நீண்ட நாட்களுக்கு முன் சேங்ஷன் ஆகியும் நிலுவையில் உள்ளதாகத் தெரியவருகிறது. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தப் பணியை துரிதப்படுத்தி விரைவில் கட்டிடம் கட்ட ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

இருக்கிறார். எனவே அதை மாற்றுவதற்கு அரசு முன் வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. மு. தென்னவன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பேத்கார் சிலையின் தோற்றத்தைப் பற்றிச் சொன்னார்கள். அப்படிப்பட்ட நிலையிலே அந்தச் சிலை இருக்குமேயானால் அதை மாற்றம் செய்வதற்குத் தகுந்த நடவடிக்கையை அரசு எடுக்கும்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* வினா எண் 478. திரு. சி. குழந்தைவேலு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**478—**

**கீரனூரில் பேருந்து நிலையம் கட்டுதல்**

***25311**—திரு. சி. குழந்தைவேலு:*

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா-

குளத்தூர் தொகுதி, கீரனூரில் பேருந்து நிலையம் எப்பொழுது கட்டி முடிக்கப்படும்?

*மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருத்திய கருத்துரு மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து கிடைக்கப்பெற்று நகர் ஊரமைப்பு இயக்குநரால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதும், பேருந்து நிலையம் கட்டும் பணி துவக்கப்படும்.

*முற்பகல் 11.20*

*திரு. சி. குழந்தைவேலு :* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியான குளத்தூர் தொகுதியினுடைய தலைமையிடமாக கீரனூர் இருந்து வருகிறது. கீரனூர் மக்களுடைய நீண்டநாள் கோரிக்கை பேருந்து நிலையம் கட்டவேண்டும் என்பதாகும். பேருந்து நிலையம் இல்லாததால், அங்குள்ள பொதுமக்கள், வெயிலிலும் மழையிலும், கஷ்டப்பட வேண்டிய சூழ்நிலை உள்ளது. பேருந்து நிலையக் கட்டிடம் கட்டும் திட்டப்பணி நீண்ட நாட்களுக்கு முன் சேங்ஷன் ஆகியும் நிலுவையில் உள்ளதாகத் தெரியவருகிறது. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தப் பணியை துரிதப்படுத்தி விரைவில் கட்டிடம் கட்ட ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

1995 ஏப்ரல் 27]

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம் குளத்தூர் தொகுதி, கீரனூர் பேரூராட்சியைப் பொறுத்தமட்டில் அங்கே அமைக்க இருப்பதாக இருந்த பேருந்து நிலையத்தினுடைய மொத்த மதிப்பீடு சுமார் 25 லட்ச ரூபாய் ஆகும். அங்கே இருக்கிற அந்தப் பேரூராட்சியின் நிதி ஆதாரத்தைப் பார்க்கிறபோது ரீ-பேயிங் கெப்பாசிட்டி என்று சொல்லப்படுகின்ற அந்தப் பணத்தைத் திருப்பிக் கட்டுகின்ற அந்தத் தன்மை குறைந்து இருக்கிற காரணத்தாலே, அந்த பேருந்து நிலையத்திற்கு 25 லட்ச ரூபாய் அதிகம் என்பதாலும், அதற்கு திருத்திய மதிப்பீடு தேவைப்படுகிற காரணத்தாலே, திருத்திய திட்ட மதிப்பீட்டுக்காக மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து கருத்துரு கேட்கப்பட்டது. அதன் அடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவரும், தன்னுடைய தகவலை ஊரமைப்பு இயக்குநருக்கு தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே நகர் ஊரமைப்பு இயக்குநர் அது சம்பந்தமாக நடவடிக்கையை எடுக்க இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரூராட்சியின் வருமானத்தைப் பெருக்கும் வகையில் அந்தப் பேருந்து நிலையத்தோடு சேர்த்து ஒரு ஷாப்பிங் காம்ப்ளக்ஸ் கட்டுவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கீரனூர் பேரூராட்சியின் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் வாயிலாகத்தான் 25 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் பேருந்து நிலையம் மற்றும் வணிக வளாகம் சேர்த்துத்தான் அந்தத் திட்டம் உருவாக்கப்பட்டது. அந்த அடிப்படையில் தற்போது திருத்திய மதிப்பீடுகள் சுமார் 10 லட்ச ரூபாய்க்குள் தயாரிக்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் அங்கே பேருந்து நிலையமும், அதனோடு சேர்த்து வணிக வளாகமும் உருவாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 479, திரு. வே. பெரியசாமி, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

**479—**

## அத்தாணி மாணவர் இல்லத்திற்கு இல்லக்காப்பாளர் நியமனம்

**24989*—திரு. வே. பெரியசாமி :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1995 ஏப்ரல் 27]

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம் குளத்தூர் தொகுதி, கீரனூர் பேரூராட்சியைப் பொறுத்தமட்டில் அங்கே அமைக்க இருப்பதாக இருந்த பேருந்து நிலையத்தினுடைய மொத்த மதிப்பீடு சுமார் 25 லட்ச ரூபாய் ஆகும். அங்கே இருக்கிற அந்தப் பேரூராட்சியின் நிதி ஆதாரத்தைப் பார்க்கிறபோது ரீ-பேயிங் கெப்பாசிட்டி என்று சொல்லப்படுகின்ற அந்தப் பணத்தைத் திருப்பிக் கட்டுகின்ற அந்தத் தன்மை குறைந்து இருக்கிற காரணத்தாலே, அந்த பேருந்து நிலையத்திற்கு 25 லட்ச ரூபாய் அதிகம் என்பதாலும், அதற்கு திருத்திய மதிப்பீடு தேவைப்படுகிற காரணத்தாலே, திருத்திய திட்ட மதிப்பீட்டுக்காக மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து கருத்துரு கேட்கப்பட்டது. அதன் அடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவரும், தன்னுடைய தகவலை ஊரமைப்பு இயக்குநருக்கு தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே நகர் ஊரமைப்பு இயக்குநர் அது சம்பந்தமாக நடவடிக்கையை எடுக்க இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரூராட்சியின் வருமானத்தைப் பெருக்கும் வகையில் அந்தப் பேருந்து நிலையத்தோடு சேர்த்து ஒரு ஷாப்பிங் காம்ப்ளக்ஸ் கட்டுவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கீரனூர் பேரூராட்சியின் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் வாயிலாகத்தான் 25 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் பேருந்து நிலையம் மற்றும் வணிக வளாகம் சேர்த்துத்தான் அந்தத் திட்டம் உருவாக்கப்பட்டது. அந்த அடிப்படையில் தற்போது திருத்திய மதிப்பீடுகள் சுமார் 10 லட்ச ரூபாய்க்குள் தயாரிக்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் அங்கே பேருந்து நிலையமும், அதனோடு சேர்த்து வணிக வளாகமும் உருவாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 479, திரு. வே. பெரியசாமி, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

**479—**

## அத்தாணி மாணவர் இல்லத்திற்கு இல்லக்காப்பாளர் நியமனம்

**24989*—திரு. வே. பெரியசாமி :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அந்தியூர் தொகுதியில் அத்தாணி அரசினர் மாணவர் இல்லத்திற்கு இல்லக் காப்பாளர் நியமிக்கப்படாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் பணியிடம் நிரப்பப்படும்?

**மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : பெரியார் மாவட்டம் அந்தியூர் தொகுதியில் அத்தாணி அரசினர் மாணவர் இல்லத்திற்கு இல்லக்காப்பாளர் நிய்மிக்கப்பட்டு, காப்பாளர் பணியாற்றி வருகிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** காப்பாளர் நியமிக்கப்பட்டு விட்டார் என்று அமைச்சர் சொல்லுகிறாரே.

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்டபோது நியமனம் செய்யப்படாமல் இருந்தது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய கனிவான வார்த்தைகளால் அந்தப் பகுதிக்கு இல்லக் காப்பாளர் நியமனம் செய்யப்பட்டுவிட்டார் என்று சொன்னார்கள். அதற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அந்த விடுதிக்கு கட்டிட வசதி இல்லாமல் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கான கட்டிடத்தை எப்போது கட்டிக் கொடுக்க ஆவன செய்வார்கள் என்பதை தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தனிக் கேள்வி போடவும். இல்லக் காப்பாளர்பற்றிக் கேட்டுவிட்டு, கட்டிடத்திற்குப் போனால் எப்படி?

வினா எண் 480, டாக்டர் பெ. வீரபாண்டியன், மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.

**480—**

## இராட்டைகளைப் பழுதுபார்த்தல்

***33334—டாக்டர் பெ. வீரபாண்டியன் :**

மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அந்தியூர் தொகுதியில் அத்தாணி அரசினர் மாணவர் இல்லத்திற்கு இல்லக் காப்பாளர் நியமிக்கப்படாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் பணியிடம் நிரப்பப்படும்?

*மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : பெரியார் மாவட்டம் அந்தியூர் தொகுதியில் அத்தாணி அரசினர் மாணவர் இல்லத்திற்கு இல்லக்காப்பாளர் நிய்மிக்கப்பட்டு, காப்பாளர் பணியாற்றி வருகிறார்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* காப்பாளர் நியமிக்கப்பட்டு விட்டார் என்று அமைச்சர் சொல்லுகிறாரே.

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்டபோது நியமனம் செய்யப்படாமல் இருந்தது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய கனிவான வார்த்தைகளால் அந்தப் பகுதிக்கு இல்லக் காப்பாளர் நியமனம் செய்யப்பட்டுவிட்டார் என்று சொன்னார்கள். அதற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அந்த விடுதிக்கு கட்டிட வசதி இல்லாமல் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கான கட்டிடத்தை எப்போது கட்டிக் கொடுக்க ஆவன செய்வார்கள் என்பதை தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தனிக் கேள்வி போடவும். இல்லக் காப்பாளர்பற்றிக் கேட்டுவிட்டு, கட்டிடத்திற்குப் போனால் எப்படி?

வினா எண் 480, டாக்டர் பெ. வீரபாண்டியன், மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.

**480—**

## இராட்டைகளைப் பழுதுபார்த்தல்

***33334*—டாக்டர் பெ. வீரபாண்டியன் :**

மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1995 ஏப்ரல் 27]

(அ) செங்கம் தொகுதி, பரமனந்தல் கிராமத்தில் "தாட்கோ" கட்டிடத்தில் இயங்கும் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரிய கிராமிய நூற்பு நிலையத்தில் 25 மெரிகோட்ஸ் பழுது அடைந்துள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், மெரிகோட்ஸ்களை பழுதுபார்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி, கதர்த் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) செங்கம் தொகுதி பரமனந்தல் கிராமத்தில் "தாட்கோ" கட்டிடத்தில் இயங்கும் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரிய நூற்பு மையத்தில் பழுதடைந்த 25 இராட்டைகள் தற்சமயம் பழுது நீக்கப்பட்டு நல்ல முறையில் இயங்கிவருகின்றன.

**டாக்டர் பெ. வீரபாண்டியன், :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரமனந்தல் கிராமத்தில் உள்ள கிராமிய நூற்புமையம் ஜவ்வாது மலையினுடைய அடிவாரத்தில் அமைந்துள்ளது. கிட்டத்தட்ட ஒரு வருடத்திற்கு முன்னால் போடப்பட்ட கேள்வி இது. அதற்கு முன்னால் 25 "மெரிகோட்ஸ்" (இராட்டை) ஒரு வருடமாக பழுதடைந்து இருந்தது. அங்கே, பெரும்பாலும், ஆதிதிராவிட பெண்களும், மலைவாழ் பெண்களும்தான் பணி செய்கிறார்கள். இவ்வாறு பழுதடைந்தவுடன், உடனுக்குடன் அந்த பழுதை நீக்கி, ஒரு உப தொழிலாக கிராமிய நூற்புமையம் அந்தத் தாய்மார்களுக்கு அமையச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்தக் கேள்வியை நான் கொடுத்திருந்தேன். இராட்டைகளைப் பழுதுபார்த்ததற்கு அரசுக்கு நன்றி. அங்குள்ள தாட்கோ கட்டிடத்தில் பரமனந்தல் கிராமத்தில் கிட்டத்தட்ட 300 முதல் 400 மெரிகோட்ஸ் (இராட்டை) இயந்திரங்களை வைக்கலாம். அவ்வளவு பெரிய இடம் அங்கே இருக்கிறது. இப்போது 25 இராட்டைகள்தான் அங்கே இருக்கின்றன. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஆதிதிராவிட மக்களுடைய நன்மையைக் கருதி, இன்னும் 25 மெரிகோட்ஸ் பரமனந்தல் தாட்கோ கட்டிடத்தில் அமைத்துத்தர ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-25

**மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்பத்தில் நூற்பு மையங்கள் அமைக்கப்படும்போது 25 ராட்டைகள் கொண்டுதான் அமைக்கிறோம். அந்தப் பகுதியிலே

இருக்கக்கூடிய பெண்களுடைய வருகையை முன்னிட்டு, அங்கு இருக்கக்கூடிய ஏழை மக்களுடைய வாழ்வுக்கு அது எந்த அளவு பயன்படுகிறது, எந்த அளவு அந்த கிராம மக்கள் அதற்கு முக்கியத்துவம் கொடுத்து வருகிறார்கள் என்பதை ஆராய்ந்து, அதற்குப் பிறகு அதன் தேவைக்கு ஏற்ப விரிவாக்கம் செய்து வருகிறோம். அதன் அடிப்படையிலே இந்த ஆண்டு 20 நூற்பு மையங்கள் விரிவாக்கம் செய்யப்பட இருக்கிறது. அந்த அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைக் கனிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

*டாக்டர் பெ. வீரபாண்டியன் :* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமிய நூற்பு நிலையம் செங்கம் தொகுதியில் காளம்பட்டு, பரமனந்தல், தோக்கவாடி, குயிலம் ஆகிய கிராமங்களிலே இருக்கிறது. அங்கே ஒரே ஒரு பெண் சூப்பர்வைசர்தான் பணியமர்த்தப்பட்டிருக்கிறார். அவர் மாதத்திற்கு ஒருமுறை கூட ஒவ்வொரு நிலையத்திற்கும் சென்று பயிற்சி அளிக்க முடியவில்லை. எனவே, இன்னொரு மேற்பார்வையாளரை தாங்கள் நியமிக்க ஆவன செய்வீர்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி :* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மானியக் கோரிக்கைக்கான பதிலிலே விளக்கமாகக் கூறியிருக்கிறேன். பயிற்சி நிலையங்கள் அமைப்பற்கு வருகின்ற நிதி ஆண்டில் வாய்ப்பு உள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**465—**

## பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் கூட்டு முயற்சி

***35122**—திரு. மா. சுந்தரதாஸ்:*

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் ஒரு கூட்டு முயற்சியாக சம அளவில் பங்கேற்கும் வகையில் உலக அளவில் ஒப்பந்தப்புள்ளிகளை சமீபத்தில் கோரியுள்ளதா ?

(ஆ) அவற்றின் விவரங்கள் யாவை ?

*மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:*

(அ) ஆம்.

(ஆ) இக்கருத்து அரசின் பரிசீலனையில் உள்ளது.

இருக்கக்கூடிய பெண்களுடைய வருகையை முன்னிட்டு, அங்கு இருக்கக்கூடிய ஏழை மக்களுடைய வாழ்வுக்கு அது எந்த அளவு பயன்படுகிறது, எந்த அளவு அந்த கிராம மக்கள் அதற்கு முக்கியத்துவம் கொடுத்து வருகிறார்கள் என்பதை ஆராய்ந்து, அதற்குப் பிறகு அதன் தேவைக்கு ஏற்ப விரிவாக்கம் செய்து வருகிறோம். அதன் அடிப்படையிலே இந்த ஆண்டு 20 நூற்பு மையங்கள் விரிவாக்கம் செய்யப்பட இருக்கிறது. அந்த அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைக் கனிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

*டாக்டர் பெ. வீரபாண்டியன் :* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமிய நூற்பு நிலையம் செங்கம் தொகுதியில் காளம்பட்டு, பரமனந்தல், தோக்கவாடி, குயிலம் ஆகிய கிராமங்களிலே இருக்கிறது. அங்கே ஒரே ஒரு பெண் சூப்பர்வைசர்தான் பணியமர்த்தப்பட்டிருக்கிறார். அவர் மாதத்திற்கு ஒருமுறை கூட ஒவ்வொரு நிலையத்திற்கும் சென்று பயிற்சி அளிக்க முடியவில்லை. எனவே, இன்னொரு மேற்பார்வையாளரை தாங்கள் நியமிக்க ஆவன செய்வீர்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி :* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மானியக் கோரிக்கைக்கான பதிலிலே விளக்கமாகக் கூறியிருக்கிறேன். பயிற்சி நிலையங்கள் அமைப்பதற்கு வருகின்ற நிதி ஆண்டில் வாய்ப்பு உள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**465—**

## பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் கூட்டு முயற்சி

***35122**—திரு. மா. சுந்தரதாஸ்:*

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் ஒரு கூட்டு முயற்சியாக சம அளவில் பங்கேற்கும் வகையில் உலக அளவில் ஒப்பந்தப்புள்ளிகளை சமீபத்தில் கோரியுள்ளதா ?

(ஆ) அவற்றின் விவரங்கள் யாவை ?

*மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:*

(அ) ஆம்.

(ஆ) இக்கருத்து அரசின் பரிசீலனையில் உள்ளது.

**468—**

## கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்தின் மூலம் கடன் வழங்குதல்

***20646—**திரு. எஸ். எஸ். ராமசுப்பு:*

*மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம், வீ. கே. புதூர், தென்காசி போன்ற கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்தின் மூலமாக வீடு கட்ட கடன் வழங்குவதில் காலதாமதமாவதை அரசு அறியுமா ?*

*(ஆ) ஆம் எனில், விரைவில் கடன் பணம் கிடைக்க அரசு ஆவன செய்யுமா ?*

***மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:***

*(அ) மற்றும் (ஆ)*

*திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம், வீரகேரளம் புதூர், தென்காசி போன்ற கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களில் வீடு கட்ட கடன் கோரி விண்ணப்பிப்பவர்கள் முதலில் தங்களது சொந்த நிதியிலிருந்து அஸ்திவாரம் கட்டி முடித்தப் பின்னரே கடன் பெற தகுதி பெறுகிறார்கள். அஸ்திவாரம் கட்டி முடித்தப் பணியை களப்பணியாளர்கள் நேரிலே பார்வையிட்டு சான்றளித்த பின்னரே கடன் மனுக்கள் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்திற்கு பரிந்துரை செய்யப்படுகிறது. தகுதியுள்ள நபர்களுக்கு அனுமதிக்கப்படுகின்ற கடன் தொகை கீழ்க்கண்ட விவரப்படி மூன்று தவணைகளில் கட்டுமானத்தின் நிலைக்கேற்றவாறு பட்டுவாடா செய்யப்படுகிறது.*

| | | |
|---|---|---|
| *1. முதல் தவணைத்தொகை* | .. | *அஸ்திவாரம் போட்ட பிறகு கடன் தொகையில் 30 சதவீதம்.* |
| *2. இரண்டாம் தவணைத்தொகை* | .. | *கட்டிடம் நிலை மட்டம் வரை கட்டிய பின்பு 30 சதவீதம்.* |
| *3. மூன்றாம் தவணைத்தொகை* | .. | *கூரை மூடியபின்பு எஞ்சியுள்ள 40 சதவீதத் தொகை.* |

மேற்சொன்னவாறு அனுமதிக்கப்படுகின்ற கடன் தொகை மூன்று தவணைகளில் வழங்கப்படுவதால், மேற்சொன்ன பணிகளைச் செய்து முடிக்க 1 முதல் 2½ மாதங்கள் வரை ஆகிறது. மேலும் கட்டுமானப் பணியினை நேரில் பார்வையிட்டு களப் பணியாளர்களிடமிருந்து சான்று பெற்ற பின்னரே தவணைத் தொகைகள் பட்டுவாடா செய்யப்படுவதால், இப்பணிகளுக்கு ஆகும் குறைந்த அளவு நேரத்தைத் தவிர கடன் பட்டுவாடா செய்வதில் எவ்வித தாமதமும் ஏற்படுவதில்லை.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[*குறிப்பு :* ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்]

***2. உறுப்பினர்கள் (திரு. கோ. விசுவநாதன் மற்றும் திரு அழகு திருநாவுக்கரசு) பதவி இழப்பு என அறிவிக்கக் கோரிய மனு மீது பேரவைத் தலைவரின் அறிவிப்பு—(உயர்நீதிமன்றத் தடையை நீக்க நடவடிக்கை மேற்கொள்ளுதல் மற்றும் அவ்வுறுப்பினர்கள் பேரவையில் கலந்து கொள்ள அனுமதித்தல்)***

*திரு. எஸ். டேனியல்ராஜ் :* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.......

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* எதிர்க்கட்சித் துணைத் தலைவர், இருங்கள். An announcement to the House (குறுக்கீடு) அதற்கு முன்னால் எனக்கு உரிமை இருக்கிறது. உங்களுக்கு முன்னால் எனக்கு உரிமை இருக்கிறது.

HON. SPEAKER : An announcement to the House:

``I have received orders from the High Court of Madras to-day at 10.15 a.m. giving interim injunction to my orders in respect of Thiru G. Viswanathan and Thiru Alagu Thirunavukkarasu, as per the Tenth Schedule of the Constitution of India. In this respect, I am to inform the House that the High Court shall be moved immediately to vacate the stay. Meanwhile, the concerned Members be allowed to attend the House without prejudice to moving the Court to vacate the stay". எதிர்கட்சித் துணைத் தலைவர்.

மேற்சொன்னவாறு அனுமதிக்கப்படுகின்ற கடன் தொகை மூன்று தவணைகளில் வழங்கப்படுவதால், மேற்சொன்ன பணிகளைச் செய்து முடிக்க 1 முதல் 2½ மாதங்கள் வரை ஆகிறது. மேலும் கட்டுமானப் பணியினை நேரில் பார்வையிட்டு களப் பணியாளர்களிடமிருந்து சான்று பெற்ற பின்னரே தவணைத் தொகைகள் பட்டுவாடா செய்யப்படுவதால், இப்பணிகளுக்கு ஆகும் குறைந்த அளவு நேரத்தைத் தவிர கடன் பட்டுவாடா செய்வதில் எவ்வித தாமதமும் ஏற்படுவதில்லை.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு : *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்*]

***2. உறுப்பினர்கள் (திரு. கோ. விசுவநாதன் மற்றும் திரு அழகு திருநாவுக்கரசு) பதவி இழப்பு என அறிவிக்கக் கோரிய மனு மீது பேரவைத் தலைவரின் அறிவிப்பு—(உயர்நீதிமன்றத் தடையை நீக்க நடவடிக்கை மேற்கொள்ளுதல் மற்றும் அவ்வுறுப்பினர்கள் பேரவையில் கலந்து கொள்ள அனுமதித்தல்)***

*திரு. எஸ். டேனியல்ராஜ் :* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.......

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* எதிர்க்கட்சித் துணைத் தலைவர், இருங்கள். An announcement to the House (குறுக்கீடு) அதற்கு முன்னால் எனக்கு உரிமை இருக்கிறது. உங்களுக்கு முன்னால் எனக்கு உரிமை இருக்கிறது.

HON. SPEAKER : An announcement to the House:

``I have received orders from the High Court of Madras to-day at 10.15 a.m. giving interim injunction to my orders in respect of Thiru G. Viswanathan and Thiru Alagu Thirunavukkarasu, as per the Tenth Schedule of the Constitution of India. In this respect, I am to inform the House that the High Court shall be moved immediately to vacate the stay. Meanwhile, the concerned Members be allowed to attend the House without prejudice to moving the Court to vacate the stay". எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

## 3. தகவல் கோரல்

### (அ) அனுமதி மறுக்கப்பட்ட பிரச்சினையைக் (ஆளுங்கட்சி உறுப்பினர்கள் சிலர் கைது செய்யப்பட்டு, விடுவிக்கப்பட்டது) குறித்து

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் 26-4-95 அன்று இரவு 7 மணி அளவில் ஆளுங்கட்சியைச் சேர்ந்த சில சட்டமன்ற உறுப்பினர்கள் ....

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* : எதிர்க்கட்சித் துணைத் தலைவர், உட்காருங்கள். நான் அனுமதி மறுத்து இருக்கிறேன். அனுமதி மறுத்ததற்கான காரணமும் கூறியிருக்கிறேன். ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் 13 பேர் நேற்றைய தினம் ஒரு மறியலில் ஈடுபட்டு கைது செய்யப்பட்டு, பின்னர் விடுவிக்கப்பட்டார்கள் என்கிற செய்தியை காவல்துறை ஆணையாளர் எனக்குக் கொடுத்திருக்கிறார். (குறுக்கீடு) இது எல்லாப் பகுதிகளிலும் நடப்பதுதான். நீங்கள் நாளைக்கு மறியல் செய்கிறீர்கள் என்றால், உங்களைக் கைது செய்வார்கள், பின்னர் உடனே விடுவிப்பார்கள். அந்தத் தகவலை எனக்குத் தெரிவிப்பார்கள். (குறுக்கீடு) அதைப்போல, அவர்களுக்கு இருக்கிற உரிமை, அவர்கள் மறியல் செய்திருக்கலாம். அவர்கள் விடுதலை செய்யப்பட்டிருக்கலாம். அதுபற்றிய அறிவிப்பு எனக்கு வந்து விட்டது. மேற்கொண்டு இதிலே விவாதம் தேவையில்லை. (குறுக்கீடு) எல்லோருக்கும் இருக்கிற உரிமை. அதனால், அதற்கு அனுமதி மறுத்து இருக்கிறேன். நான் உங்களுக்கு அனுமதி மறுத்தப் பிரச்சினையை இங்கே எழுப்ப முடியாது. அதுகூட, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் என்னைச் சந்தித்துச் சொன்ன காரணத்தினாலே நான் சொல்லிவிட்டேன். (குறுக்கீடு) நீங்கள் சந்தித்து, என்னிடத்திலே கொடுத்தீர்கள். (குறுக்கீடு) அதைப்பற்றி ஏன் விவாதம்? எனக்குத்தான் தகவல் வந்திருக்கிறது என்று சொல்கிறேன் அல்லவா? அவர்கள் மறியல் செய்திருக்கிறார்கள். மறியல் செய்தவர்கள், கைது செய்யப்பட்டிருக்கிறார்கள், பின்னர் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள். (குறுக்கீடு) நீங்கள் என்னைக் கண்டித்து அண்ணாசாலையிலே போய் மறியல் செய்தீர்கள். உங்களையும் அதைப்போலக் கைது செய்தார்கள். அப்புறப்படுத்தினார்கள், அதற்குப் பின்னர் விடுவித்தார்கள். அதைப் பற்றிய செய்தியும் இங்கே வந்தது. இதெல்லாம் ஒவ்வொருவருக்கும் இருக்கிற உரிமை. (குறுக்கீடு) உங்களுக்கு மட்டும்தான் உரிமை இருக்கிறதா? பாக்கி இருக்கிற உறுப்பினர்களுக்கு உரிமை இல்லை என்று சொல்லுகிறீர்களா? நீங்களே ஏதேதோ செய்திருக்கிறீர்கள். (குறுக்கீடு) என்னைக் கண்டித்து அண்ணாசாலையில்

போய் மறியல் செய்தீர்கள். உங்களையும கைது செய்து அப்புறப்படுத்தி, பின்னர் விடுவிக்கப்பட்டதை, இதே போன்று காவல்துறை ஆணையர் எனக்குச் செய்தி அனுப்பினார். அதையெல்லாம் விவாதித்துக் கொண்டிருந்தது கிடையாது. (குறுக்கீடு) அதையெல்லாம் விவாதிக்க அனுமதிப்பது இல்லை. (குறுக்கீடு) அதையெல்லாம் விவாதிப்பது இல்லை. நீங்களும் சட்டமன்ற உறுப்பினர்தான். நீங்கள் போய் ஒரு மறியல் செய்கிறீர்கள். உங்கள் மீது எந்த வகையில் நடவடிக்கை எடுக்கப்படுகிறதோ, அதைப்போன்று அவர்கள் மீதும் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். (குறுக்கீடு) இதில் வேறு ஒன்றும் இல்லை. அடுத்து, சிறப்புக் கவன ஈர்ப்பு (குறுக்கீடுகள்) மறியல் செய்வது என்பது ஒவ்வொருவருக்கும் இருக்கிற உரிமை. அந்த உரிமையைச் சிலர் பயன்படுத்துகிறார்கள். காவல் துறையினர் உரிய நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்.

*முற்பகல் 11-30*

அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் என்கிற காரணத்தினால். எனக்கும் அதுபற்றிய அறிவிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். எனவே, இந்தப் பிரச்சினை, எனக்கே தெரிந்த பிரச்சினை. (குறுக்கீடுகள்) இதிலே மேற்கொண்டு விவாதம் ஒன்றும் வேண்டாம். (குறுக்கீடுகள்) விவாதத்திற்குரிய பொருளே இதுவல்ல. இது விவாதத்திற்குரிய பொருள் என்றால், மிகவும் அவசரப் பொது முக்கியத்துவம் இருக்க வேண்டும். இதிலே ஒன்றும் பெரிய முக்கியத்துவம் இல்லை. (குறுக்கீடுகள்) இதிலே, பொது முக்கியத்துவம் இல்லை என்பதால், அடுத்த பிரச்சினையை எடுக்க என்னை அனுமதிக்க வேண்டும். எதிர்க்கட்சித் துணைத் தலைவர் உட்கார வேண்டும். (குறுக்கீடுகள்) இல்லை ; நான் இதை அனுமதிக்க முடியாது. நீங்கள் கேட்டீர்கள் ; நான் சொல்லிவிட்டேன். (குறுக்கீடுகள்) ஒவ்வொரு முறையும் இதேமாதிரி முறைகேடாக நடப்போம் என்றிருந்தால், என்ன அர்த்தம்? (குறுக்கீடுகள்) ஒவ்வொரு முறையும் இதேபோன்று முறைகேடாக நடந்து கொண்டிருப்போம் என்றால், நான் இதை அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) நான் இதை அனுமதிக்க முடியாது. அடுத்தப் பிரச்சினைக்கு நான் செல்ல வேண்டும். (குறுக்கீடுகள்) 25-4-1995 அன்று, அதிகாலையில் பெரியார் மாவட்டம் வெள்ளக்கோயில் அருகே, லாரி விபத்தில் பலர் இறந்தது குறித்து, திரு. ஆ. சுப்புரத்தினம், திரு. இரா. தாமரைக்கனி, திரு. ஆர். சிங்காரம், திரு. சி. ஞானசேகரன் ஆகியோர், அவையின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டுமென்று என்னிடத்தில் ஒரு பிரச்சினையைக் கொடுத்திருக்கிறார்கள். (குறுக்கீடுகள்)

(திரு. வே. கண்ணன், திரு. ஆர். சிங்காரம், திரு. கே. கே. சின்னப்பன், திரு. இரா. அப்பு நடேசன் மற்றும் திருமதி ஜீனத் சர்புதீன் ஆகியோரைத்

தவிர, அவையிலிருந்த மற்ற காங்கிரஸ் உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்)

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* இதுதான் மூத்த உறுப்பினர் திருமதி பொன்னம்மாள் நடந்துகொள்ளும் முறை ! (குறுக்கீடுகள்) பல உறுப்பினர்களுக்கு, வெளியே போவதற்கு மனமே இல்லை. (குறுக்கீடுகள்)

## (ஆ) முன் அனுமதியின்றி பிரச்சினையை எழுப்புதல்

*திரு. இளம்வழுதி :* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ...

*திரு. அ. செல்வராசன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே .... (குறுக்கீடுகள்)

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* திரு. ரங்கநாதன் நீங்கள் சட்டமன்ற உறுப்பினரா ? அல்லது வேறு ஏதாவது முறைகேடான ஆளா என்பது எனக்குத் தெரியவில்லை. (குறுக்கீடு)

*திரு. இளம்வழுதி :* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ...

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* திரு. இளம்வழுதி, நீங்கள் எதுவும் கொடுக்கவில்லை. என்னிடத்தில் அறிவிப்புக் கொடுத்தால்தான் நான் அனுமதி கொடுக்க முடியும். (குறுக்கீடு) என்னிடம் அறிவிப்புக் கொடுக்க வேண்டும் என்பதை நடைமுறையிலே வைத்திருக்கிறோம். (குறுக்கீடு) அவ்வாறு கொடுக்க வேண்டும் என்ற நடைமுறையும் இருக்கிறது. என்னிடம் அறிவிப்புக் கொடுக்காமல், எதையும் எழுப்ப முடியாது. (குறுக்கீடு) என்ன சொல்ல வருகிறீர்கள் என்பதற்கும் என்னிடம் அறிவிப்புக் கொடுக்க வேண்டும். (குறுக்கீடு) என்னுடைய அறைக்கு வந்து, என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வராமல், எந்த பிரச்சினையையும் இங்கே எழுப்ப முடியாது. (குறுக்கீடு)

## 4. சிறப்புக் கவன ஈர்ப்பு

### பக்தர்கள் சென்ற லாரி வெள்ளக்கோவில் அருகே விபத்துக்குள்ளாகி பலர் இறந்தது குறித்து,

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* பெரியார் மாவட்டம், வெள்ளக்கோயில் அருகே ஏற்பட்ட லாரி விபத்தில் பலர் இறந்தது குறித்த பிரச்சினையைப் பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வந்து, அரசின் நடவடிக்கை பற்றி அறிய வேண்டுமென்று, மாண்புமிகு உறுப்பினர்கள்

தவிர, அவையிலிருந்த மற்ற காங்கிரஸ் உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்)

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* இதுதான் மூத்த உறுப்பினர் திருமதி பொன்னம்மாள் நடந்துகொள்ளும் முறை ! (குறுக்கீடுகள்) பல உறுப்பினர்களுக்கு, வெளியே போவதற்கு மனமே இல்லை. (குறுக்கீடுகள்)

## (ஆ) முன் அனுமதியின்றி பிரச்சினையை எழுப்புதல்

*திரு. இளம்வழுதி :* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ....

*திரு. அ. செல்வராசன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே .... (குறுக்கீடுகள்)

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* திரு. ரங்கநாதன் நீங்கள் சட்டமன்ற உறுப்பினரா ? அல்லது வேறு ஏதாவது முறைகேடான ஆளா என்பது எனக்குத் தெரியவில்லை. (குறுக்கீடு)

*திரு. இளம்வழுதி :* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ...

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* திரு. இளம்வழுதி, நீங்கள் எதுவும் கொடுக்கவில்லை. என்னிடத்தில் அறிவிப்புக் கொடுத்தால்தான் நான் அனுமதி கொடுக்க முடியும். (குறுக்கீடு) என்னிடம் அறிவிப்புக் கொடுக்க வேண்டும் என்பதை நடைமுறையிலே வைத்திருக்கிறோம். (குறுக்கீடு) அவ்வாறு கொடுக்க வேண்டும் என்ற நடைமுறையும் இருக்கிறது. என்னிடம் அறிவிப்புக் கொடுக்காமல், எதையும் எழுப்ப முடியாது. (குறுக்கீடு) என்ன சொல்ல வருகிறீர்கள் என்பதற்கும் என்னிடம் அறிவிப்புக் கொடுக்க வேண்டும். (குறுக்கீடு) என்னுடைய அறைக்கு வந்து, என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வராமல், எந்த பிரச்சினையையும் இங்கே எழுப்ப முடியாது. (குறுக்கீடு)

## 4. சிறப்புக் கவன ஈர்ப்பு

### பக்தர்கள் சென்ற லாரி வெள்ளக்கோவில் அருகே விபத்துக்குள்ளாகி பலர் இறந்தது குறித்து,

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* பெரியார் மாவட்டம், வெள்ளக்கோயில் அருகே ஏற்பட்ட லாரி விபத்தில் பலர் இறந்தது குறித்த பிரச்சினையைப் பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வந்து, அரசின் நடவடிக்கை பற்றி அறிய வேண்டுமென்று, மாண்புமிகு உறுப்பினர்கள்

என்னிடத்தில் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். அந்தப் பிரச்சினையை எழுப்ப நான் அனுமதியளித்திருக்கிறேன். அந்தத் தொகுதி சம்பந்தப்பட்ட உறுப்பினர் திரு. ஆ. சுப்புரத்தினம்.

*திரு. ஆ. சுப்புரத்தினம் :* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

## 3. தகவல் கோரல்—தொடர்ச்சி.

### (ஆ) முன் அனுமதியின்றி பிரச்சினையை எழுப்புதல்—தொடர்ச்சி.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* திரு. இளம்வழுதி, என்னிடம் எதுவுமே கொடுக்காமல், அனுமதிக்க முடியாது. (குறுக்கீடு) என்னிடம் அறிவிப்புக் கொடுக்காமல் இங்கே எழுப்புவதற்கு அனுமதி கிடையாது. என்னுடைய கவனத்திற்கு எதையும் கொடுக்காமல் இப்படி நடந்துகொள்ளக்கூடாது. (குறுக்கீடு) நான் அனுமதி மறுத்தால், மறுத்ததுதான். (குறுக்கீடு) பரிதி இளம்வழுதி, இவையெல்லாம் முறைகேடானவை. இதை நான் அனுமதிக்க முடியாது. இப்படி முறைகேடாகவே நடந்து கொண்டிருந்தால், அனுமதிக்க முடியாது. எதற்கும் ஒரு எல்லை உண்டு. (குறுக்கீடு) வரம்புமீறிப் போய்க் கொண்டிருந்தால், நான் அனுமதிக்க முடியாது. ஒவ்வொரு முறையும், என்னிடம் எதையும் கொடுப்பதில்லை. கொடுக்காமல், (குறுக்கீடு) பரிதி இளம்வழுதி, இப்படி முறைகேடாக நடக்கிறீர்கள். முறைகேடாக நடப்பதை அனுமதிக்க முடியாது. (குறுக்கீடு) என்னைப் பார்த்து இப்படிக் கேள்வி கேட்கிற அதிகாரம், உங்களுக்கு யாரும் கொடுக்கவில்லை. வேண்டுமானால், உங்கள் தலைவர் சொல்லி அனுப்பியிருக்கலாம். பேரவையிலே போய், நீ வாய்க்கு வந்தபடி பேசு என்று உங்களுடைய தலைவர் சொல்லி அனுப்பியிருக்கலாம். (குறுக்கீடு) அதை நீங்கள் நடைமுறைப்படுத்தினால், நான் இங்கே அனுமதிக்க முடியாது. (குறுக்கீடு) நீங்கள் எதுவும் கொடுக்கவில்லை.

### (இ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை குறித்து.

*திரு. இளம்வழுதி :* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கவன ஈர்ப்பு கொடுத்து ஒருமாதம் ஆகிறது.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* கவன ஈர்ப்புத் தீர்மானம் முறைப்படி வரும். தினசரி இரண்டு, இரண்டாக எடுத்துக் கொண்டிருக்கிறோம். (குறுக்கீடு) நீங்கள் கொடுத்த உடனேயே எடுத்துக் கொள்வது என்பது எப்படி ? (குறுக்கீடு) 234 உறுப்பினர்களின் பிரச்சினைகள்

தவிர, அவையிலிருந்த மற்ற காங்கிரஸ் உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்)

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* இதுதான் மூத்த உறுப்பினர் திருமதி பொன்னம்மாள் நடந்துகொள்ளும் முறை ! (குறுக்கீடுகள்) பல உறுப்பினர்களுக்கு, வெளியே போவதற்கு மனமே இல்லை. (குறுக்கீடுகள்)

### (ஆ) முன் அனுமதியின்றி பிரச்சினையை எழுப்புதல்

*திரு. இளம்வழுதி :* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே .. .

*திரு. அ. செல்வராசன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே .... (குறுக்கீடுகள்)

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* திரு. ரங்கநாதன் நீங்கள் சட்டமன்ற உறுப்பினரா ? அல்லது வேறு ஏதாவது முறைகேடான ஆளா என்பது எனக்குத் தெரியவில்லை. (குறுக்கீடு)

*திரு. இளம்வழுதி :* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ...

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* திரு. இளம்வழுதி, நீங்கள் எதுவும் கொடுக்கவில்லை. என்னிடத்தில் அறிவிப்புக் கொடுத்தால்தான் நான் அனுமதி கொடுக்க முடியும். (குறுக்கீடு) என்னிடம் அறிவிப்புக் கொடுக்க வேண்டும் என்பதை நடைமுறையிலே வைத்திருக்கிறோம். (குறுக்கீடு) அவ்வாறு கொடுக்க வேண்டும் என்ற நடைமுறையும் இருக்கிறது. என்னிடம் அறிவிப்புக் கொடுக்காமல், எதையும் எழுப்ப முடியாது. (குறுக்கீடு) என்ன சொல்ல வருகிறீர்கள் என்பதற்கும் என்னிடம் அறிவிப்புக் கொடுக்க வேண்டும். (குறுக்கீடு) என்னுடைய அறைக்கு வந்து, என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வராமல், எந்த பிரச்சினையையும் இங்கே எழுப்ப முடியாது. (குறுக்கீடு)

## 4. சிறப்புக் கவன ஈர்ப்பு

### பக்தர்கள் சென்ற லாரி வெள்ளக்கோவில் அருகே விபத்துக்குள்ளாகி பலர் இறந்தது குறித்து,

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* பெரியார் மாவட்டம், வெள்ளக்கோயில் அருகே ஏற்பட்ட லாரி விபத்தில் பலர் இறந்தது குறித்த பிரச்சினையைப் பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வந்து, அரசின் நடவடிக்கை பற்றி அறிய வேண்டுமென்று, மாண்புமிகு உறுப்பினர்கள்

என்னிடத்தில் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். அந்தப் பிரச்சினையை எழுப்ப நான் அனுமதியளித்திருக்கிறேன். அந்தத் தொகுதி சம்பந்தப்பட்ட உறுப்பினர் திரு. ஆ. சுப்புரத்தினம்.

*திரு. ஆ. சுப்புரத்தினம் :* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

## 3. தகவல் கோரல்—தொடர்ச்சி.

### (ஆ) முன் அனுமதியின்றி பிரச்சினையை எழுப்புதல்—தொடர்ச்சி.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* திரு. இளம்வழுதி, என்னிடம் எதுவுமே கொடுக்காமல், அனுமதிக்க முடியாது. (குறுக்கீடு) என்னிடம் அறிவிப்புக் கொடுக்காமல் இங்கே எழுப்புவதற்கு அனுமதி கிடையாது. என்னுடைய கவனத்திற்கு எதையும் கொடுக்காமல் இப்படி நடந்துகொள்ளக்கூடாது. (குறுக்கீடு) நான் அனுமதி மறுத்தால், மறுத்ததுதான். (குறுக்கீடு) பரிதி இளம்வழுதி, இவையெல்லாம் முறைகேடானவை. இதை நான் அனுமதிக்க முடியாது. இப்படி முறைகேடாகவே நடந்து கொண்டிருந்தால், அனுமதிக்க முடியாது. எதற்கும் ஒரு எல்லை உண்டு. (குறுக்கீடு) வரம்புமீறிப் போய்க் கொண்டிருந்தால், நான் அனுமதிக்க முடியாது. ஒவ்வொரு முறையும், என்னிடம் எதையும் கொடுப்பதில்லை. கொடுக்காமல், (குறுக்கீடு) பரிதி இளம்வழுதி, இப்படி முறைகேடாக நடக்கிறீர்கள். முறைகேடாக நடப்பதை அனுமதிக்க முடியாது. (குறுக்கீடு) என்னைப் பார்த்து இப்படிக் கேள்வி கேட்கிற அதிகாரம், உங்களுக்கு யாரும் கொடுக்கவில்லை. வேண்டுமானால், உங்கள் தலைவர் சொல்லி அனுப்பியிருக்கலாம். பேரவையிலே போய், நீ வாய்க்கு வந்தபடி பேசு என்று உங்களுடைய தலைவர் சொல்லி அனுப்பியிருக்கலாம். (குறுக்கீடு) அதை நீங்கள் நடைமுறைப்படுத்தினால், நான் இங்கே அனுமதிக்க முடியாது. (குறுக்கீடு) நீங்கள் எதுவும் கொடுக்கவில்லை.

### (இ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை குறித்து.

*திரு. இளம்வழுதி :* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கவன ஈர்ப்பு கொடுத்து ஒருமாதம் ஆகிறது.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* கவன ஈர்ப்புத் தீர்மானம் முறைப்படி வரும். தினசரி இரண்டு, இரண்டாக எடுத்துக் கொண்டிருக்கிறோம். (குறுக்கீடு) நீங்கள் கொடுத்த உடனேயே எடுத்துக் கொள்வது என்பது எப்படி ? (குறுக்கீடு) 234 உறுப்பினர்களின் பிரச்சினைகள்

எல்லாம் இருக்கின்றன. தினசரி இரண்டு, இரண்டு கவன ஈர்ப்பு தீர்மானங்கள் எடுத்தது போக, 80, 90 கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் நிலுவையில் இருக்கின்றன. (குறுக்கீடுகள்) இந்தமாதிரி முறைகேடாக நடந்து கொண்டிருந்தால் நான் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) என்னிடம் எதுவும் கொடுக்காமல், (குறுக்கீடுகள்) பேரவையின் அலுவல்களைத் தடை செய்ய அனுமதிக்க முடியாது. திரு. பரிதி இளம்வழுதி, பேரவையின் அலுவல்களைத் தடை செய்ய அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) நான் திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டு இருக்கிறபோது, பரிதி இளம்வழுதியும், செல்வராசனும் நின்று கொண்டிருப்பது முறைகேடு. (குறுக்கீடுகள்) நீங்கள் என்னிடம் கேட்காமல் (குறுக்கீடுகள்). என் கவனத்திற்குக் கொண்டுவராமல் என் அறையிலே வந்து எதுவும் சொல்லாமல், நீங்கள் இங்கே எழுப்புவதை நான் என்றைக்கும் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களேகூட என்னிடத்திலே வந்து கொடுத்தார்கள். நான் அனுமதி மறுத்து இருக்கிறேன். (குறுக்கீடுகள்) என்னிடம் கேட்காமல் எழுப்ப முடியாது. என்னிடம் கேட்டுத்தான் எழுப்ப முடியும். (குறுக்கீடுகள்) ஜீரோ ஹவரில் எழுப்பலாம், என்னிடம் அனுமதி கேட்டுவிட்டுத்தான் எழுப்ப வேண்டும். (குறுக்கீடுகள்) ஜீரோ ஹவரில் என்னிடம் கேட்காமல் எழுப்புவதை நான் அனுமதிக்க முடியாது ; உட்காருங்கள், உட்காருங்கள். இந்தமாதிரி முறைகேடாக நடக்க வேண்டாம்.

*முற்பகல் 11-35*

*திரு. அ. செல்வராசன் :* நான் வெளிநடப்புச் செய்கிறேன்.

(திரு. அ. செல்வராசன் அவையிலிருந்து வெளியேறினார்) (குறுக்கீடுகள்)

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* திரு. பரிதி இளம்வழுதி, இது முறையல்ல. (குறுக்கீடுகள்) முறைகேடாக நடக்க வேண்டாம். நான் உங்களை பலமுறை எச்சரித்து விட்டேன். (குறுக்கீடுகள்) திரு. பரிதி இளம்வழுதி, நாளை என்னுடைய அறையிலே வந்து கேளுங்கள்.

## 4. சிறப்புக் கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

### பக்தர்கள் சென்ற லாரி வெள்ளக்கோவில் அருகே விபத்துக்குள்ளாகி பலர் இறந்தது குறித்து—தொடர்ச்சி

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* திரு. ஆ. சுப்புரத்தினம்.

*திரு. ஆ. சுப்புரத்தினம் :* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனி வட்டம், காளிங்கநாயக்கன்பட்டியிலிருந்து 89பேர் ஒரு தனியார்

லாரியில் கொடுமுடிக்குச் சென்றபோது, அந்த லாரியானது, வெள்ளக்கோயில் மாதாபுரம் என்ற இடத்தில் ஒரு கிணற்றில் விழுந்ததன் காரணமாக மிகக் கொடூரமான முறையில் சற்றொப்ப 30 பேர் அந்த இடத்திலே இறந்தும், பலர் காயமுற்றும் இருக்கக்கூடிய துயரமான சம்பவம் நடைபெற்று இருக்கிறது. இந்தச் சம்பவத்தை அறிந்தவுடன் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அதிர்ந்து போய், துடிதுடித்துப் போய் இன்றைக்கு அந்த மக்களுக்கு ஆறுதல் செய்தி அனுப்பி இருப்பதோடு மட்டுமல்லாமல், இறந்தவர்கள் குடும்பம் ஒவ்வொன்றிற்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பொது நிவாரண நிதியிலிருந்து தலா 10 ஆயிரம் ரூபாய் வழங்கியும், காயமுற்றோர்க்கு 5 ஆயிரம் ரூபாய் வழங்கியும், லேசான காயமுற்றோர்க்கு 2500 ரூபாய் வழங்கியும் இருக்கிறார்கள். அந்த விபத்து அனைவருடைய நெஞ்சத்திலும் வேதனையை உருவாக்கக்கூடிய ஒரு துயர நிகழ்ச்சியாக அமைந்து இருக்கிறது. அந்த தனியார் லாரியில் சென்ற 89 பேரும் ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள், அந்த ஏழை எளிய மக்கள் சென்ற இடத்திலே இந்த துயரச் சம்பவம் நடந்தது இன்றைக்கு பழனி பகுதியில் மட்டும் அல்லாமல், அந்தக் கிராமத்திலேயே ஒரு சோகத்தை உருவாக்கி இருக்கிறது. இங்கே குறிப்பிட்டுச் சொல்லப்போனால், இந்த நிகழ்ச்சியை அறிந்தவுடன் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களுக்கும், வெள்ளக்கோவில் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினரும் ஊரகத் தொழில் துறை அமைச்சருமான மரியாதைக்குரிய அண்ணன் துரை ராமசாமி அவர்களுக்கும் தகவல் தெரிவித்து, அவர்கள் எல்லாம் நிவாரண நடவடிக்கைகளில் ஈடுபட்டு—நிகழ்ச்சி நடந்த அந்த இரவு 1 மணி என்றால், 1 1/2 மணிக்கு எல்லாம் போக்குவரத்துத் துறையினுடைய வின்ச் கருவி, பேருந்து போன்றவைகள் எல்லாம் அனுப்பப்பட்டு நிவாரணப் பணிகள் முடுக்கிவிடப்பட்டு, அந்த மக்களினுடைய துயர் தணிப்பு நடவடிக்கைகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன. அதன்விளைவாக 50 அடி ஆழம் நீருக்கடியில் மூழ்கிக் கிடந்த அந்த லாரியானது போக்குவரத்துத் துறையினுடைய கிரேன் மூலம் மேலே தூக்கப்பட்டு, அந்த நீரில் லாரிக்கு அடியில் சிக்கிக் கிடந்த 30 சடலங்கள் மீட்கப்பட்டன. குறிப்பாக நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களும், ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களும், மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண நடவடிக்கைகள் எடுத்ததோடு உணவு, உடைகள் போன்றவற்றையும் அந்த இடத்திலேயே வழங்கி அவர்களுடைய கண்ணீரைத் துடைத்து இருக்கிறார்கள். அந்தத்

தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் என்ற வகையிலே நான் என்னுடைய நன்றியை அந்த அமைச்சர் பெருமக்களுக்கும், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இன்றைக்கு இதய தெய்வம் அவர்கள் மறைந்தவர்களின் குடும்பத்திற்கு 10 ஆயிரம் ரூபாய் வழங்கி இருக்கிறார்கள். நான் கேட்க விரும்புவது, இறந்தவர்கள் அனைவரும், பாதிக்கப்பட்டவர்கள் அனைவரும் ஆதிதிராவிடப் பெருமக்கள் என்ற காரணத்தினால், அவர்கள் குடும்பத்திற்கு வழங்கப்பட்ட 10 ஆயிரம் ரூபாய் நிதி உதவியோடு, பாதிக்கப்பட்ட அந்த 89 குடும்பங்களுக்கும் இந்த ஆண்டு ஐ.ஆர்.டி.பி. லோன் என்ற வகையிலே மேலும் 10 ஆயிரம் ரூபாயை வழங்கியும், அவர்களுக்கு இலவசப் பட்டாக்களை வழங்கியும், இன்னும் அரசினுடைய உதவிகள் என்னென்ன செய்யமுடியுமோ அத்தனையும் செய்து அந்த மக்களுடைய துயரத்தினை நீக்கி அவர்களுடைய வாழ்வில் ஒரு புதிய பாதையையும் உருவாக்கித் தரவேண்டும் என்று இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொண்டு, இன்று இதய தெய்வம் அவர்களுக்கு நிவாரணப் பணிகளை முடுக்கிவிட்டதற்காக நன்றியைச் சொல்லிக்கொண்டு, அந்த நிவாரண நிதிகளை, உதவிகளை வழங்குவதற்காக அமைச்சர் பெருமக்களும் அங்கே வருகை புரிந்து அவர்களுக்கு நேரடியாக ஆறுதல் கூறி நிவாரணத் தொகையை வழங்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்த துயர நிகழ்ச்சியை அவையின் கவனத்திற்குக் கொண்டு வந்து அமர்கிறேன்.

முற்பகல் 11-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர். (குறுக்கீடு) இது சிறப்புக் கவன ஈர்ப்பு தான். இதில் எல்லோரும் பேசுவது கிடையாது. இந்தப் பிரச்சினை அவ்வளவுதான்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல்-அண்ணா மாவட்டம், பழனியை அடுத்த கலிங்க நாய்க்கன்பட்டியைச் சார்ந்த 89 பக்தர்கள் திரு. தங்கவேலு என்பவருடைய தலைமையில் 25-4-1995 காலை ஒரு மணி அளவில் கொடுமுடிக்குச் சென்று காவிரியிலிருந்து புனித நீர் கொண்டுவருவதற்காக டி.என்.க்யூ. 4969 எண் லாரியில் பயணமானார்கள். அந்த லாரி தொப்பம்பட்டி, மூலனூர் மற்றும் வெள்ளக்கோயில் வழியாக கொடுமுடியை நோக்கிச் சென்றபோது மாண்டபுரம் கிராமத்தில் ஒரு கிணற்றிலே சுமார் 3.30 மணியளவில் விழுந்து விபத்துக்குள்ளானது.

விவசாயக் கிணறு சுற்றுச் சுவர் இல்லாமல் இருந்தது. அதன் ஆழம் 65 அடி ஆகும். அக்கிணற்றின் நீளம் சுமார் 30 அடி என்றும் அகலம் 60 அடி என்றும், இக்கிணற்றில் நீர்மட்டம் சுமார் 60 அடி ஆழத்திற்கு இருப்பதாகவும் சொல்லப்பட்டது. இவ்விபத்தின் காரணமாக லாரியில் பயணம் செய்த 89 நபர்களில் 59 பேர்கள் உயிர் பிழைத்துத் தப்பினார்கள். அவர்கள் தன் முயற்சியின் காரணமாகவும், மற்றவர்கள் உதவியுடனும் தப்பிப் பிழைத்துள்ளார்கள்.

இவ்விபத்தில் தப்பிப் பிழைத்த லாரி ஓட்டுநர் முருகன் வெள்ளக்கோயில் காவல் நிலையத்திற்குச் சென்று சம்பவத்தைக் குறித்து தகவல் தெரிவித்தார். இதன் அடிப்படையில் வெள்ளக்கோயில் காவல் நிலைய குற்ற எண் 166/95-ல் இந்தியன் பீனல் கோட் 279, 337 மற்றும் 304 ஆகிய செக்ஷன் கீழ் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது. சம்பவம் பற்றித் தகவல் அறிந்தவுடன் பெரியார் மாவட்ட ஆட்சித் தலைவர், கோவை காவல் துறைத் துணைத் தலைவர், பெரியார் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர், வருவாய்த்துறை அதிகாரிகள் மற்றும் மருத்துவ அதிகாரிகள், தீ அணைப்பு அதிகாரிகள் ஆகியோர் சம்பவம் நடந்த இடத்திற்கு விரைந்து சென்று மீட்பு நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொண்டுள்ளனர். அரசு மருத்துவர்களும் ஸ்தலத்திற்கு விரைந்து சென்று பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான மருத்துவ உதவிகளை அளித்தனர்.

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களுடைய வீட்டிற்கு அருகாமையிலே இருந்த காரணத்தினாலே, அவர்களுக்குத் தேவையான உதவி, உணவு மற்றும் அனைத்து உதவிகளும் செய்யப்பட்டன. கிணற்றில் சுமார் 60 அடி ஆழம் நீர் இருந்தாலும், லாரி கிணற்றில் அடிப்பகுதியில் மூழ்கி இருந்ததாலும், லாரியின் அடியில் சிக்கிக் கொண்டிருந்த இறந்தவர் சடலங்களை வெளியிலே கொண்டு வரவும், லாரியை வெளியிலே எடுக்கவும் ஜீவா போக்குவரத்துக் கழகம், அண்ணா போக்குவரத்துக் கழகம் மற்றும் சேரன் போக்குவரத்துக் கழகம் ஆகியவற்றிற்குச் சொந்தமான ரெக்கவரி வேன்கள் இப்பணிக்கு ஈடுபடுத்தப்பட்டது. கிணற்றின் ஆழம் அதிகமாக இருந்ததாலும் லாரியின் எடை அதிகமாக இருந்ததாலும், சாதாரண கிரேன்களை இதிலே பயன்படுத்த முடியாத காரணத்தால் தமிழ்நாடு நியூஸ்பிரிண்ட் நிறுவனம் மற்றும் சேலம் எக்காலை ஆகியவற்றின் கிரேன்களை பயன்படுத்தி நேற்று 11.20 மணியளவில் லாரி கிணற்றிலிருந்து எடுக்கப்பட்டது. இவ்விபத்தில் 30 பயணிகள் இறந்துள்ளனர். ஆண்கள் 7, பெண்கள் 18, ஆண்குழந்தைகள் 2 மற்றும் பெண்குழந்தைகள் 3, வெளியே எடுக்கப்பட்ட அனைத்து சடலங்களும் உடனடியாக பிரேதப் பரிசோதனைக்கு

உட்படுத்தப்பட்டு ஜீவா போக்குவரத்துக் கழகத்திற்கு சொந்தமான பேருந்துகளின் மூலமாக அவர்கள் சொந்த ஊருக்கு நல்லடக்கம் செய்வதற்காக எடுத்துச் செல்லப்பட்டு உதவி அளிக்கப்பட்டது.

சம்பவம் குறித்து தகவல் கிடைத்தவுடன், அந்த நேரத்தில் இருந்து இன்று காலை வரையிலே முழுமையாக அனைத்துப் பணிகளும் நிறைவேறும் வரையிலும் விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கும், அவர்தம் குடும்பத்தினரைச் சேர்ந்தவர்களுக்கும் தேவையான அனைத்து உதவிகளும் செய்யப்பட்டன. விபத்தில் காயமுற்ற பயணிகள் இருவர் ஈரோடு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த சம்பவத்திற்கான உண்மையான காரணம் உடனடியாகத் தெரியவில்லை என்றாலும் லாரி ஓட்டுநரின் கவனக் குறைவே காரணம் என்று அறியப்படுகிறது. இந்தச் சம்பவம் பற்றி தகவல் அறிந்ததும் தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் விபத்தில் மரணம் அடைந்தவர்களின் குடும்பத்தினர்களுக்கு தனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொண்டதோடு விபத்தில் காயம் அடைந்து சிகிச்சை பெற்றபிறகு பூரணகுணம் அடைய வேண்டும் என்பதோடு, விபத்தில் மரணமடைந்தவர்களுடைய குடும்பத்திற்கு தலா 10 ஆயிரம் ரூபாயும், பலத்த காயம் அடைந்தவர்களுடைய குடும்பத்தினருக்கு தலா 5 ஆயிரம் ரூபாயும், சாதாரண காயம் அடைந்தவர் குடும்பத்தினருக்கு தலா 2500 ரூபாயும் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க ஆணையிட்டுள்ளார்கள்.

முற்பகல் 11-45

இந்திய துணைக் கண்டத்திலே உள்ள எல்லா மாநில முதலமைச்சர்களுக்கும் முன்னோடியாகத் திகழ்ந்து வரும் நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் விபத்து என்றால் உடனடியாக முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து உதவிகள் வழங்கியும், நிவாரணப் பணிகள் மேற்கொண்டும் ஆணையிட்டு இருக்கும் ஒரே முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்தான். (மேசையை தட்டும் ஒலி) அன்னை தெரசா அவர்கள் பாராட்டைப் பெற்ற இந்திய துணைக் கண்டத்திலே நடுநிலையோடு செயல்படுகின்ற இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உடனடியாக நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்ள ஆணையிட்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் பாதிக்கப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு அரசு நலத் திட்டங்கள், உதவிகள் வழங்குவதில் முன்னுரிமை வழங்குமாறு திண்டுக்கல் அண்ணா மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு

அறிவுறுத்தியிருக்கிறார்கள். எனவே, இந்த நிலையில் இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து இந்தப் பொருள் குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* ஒத்திவைக்கவேண்டுமென்று அவர் கோரவில்லை. இது ஸ்பெசல் மென்ஷன் தான். இந்தப் பிரச்சினை இத்தோடு முடிந்தது. (குறுக்கீடு) மேற்கொண்டு இதில் விளக்கங்கள் எதுவும் வேண்டாம். வேறு சந்தர்ப்பத்தில் பேசிக்கொள்ளலாம்.

## 5. மானியக் கோரிக்கைகள், 1995-96 விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

### (அ) கோரிக்கை எண் 17—கல்வி

### (ஆ) கோரிக்கை எண் 51—தமிழ் வளர்ச்சி—பண்பாடு

*1995-96 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும்—தொடர்ச்சி. மானியக் கோரிக்கை எண் 17 - கல்வி, மாண்புமிகு கல்வி அமைச்சர்,*

### (அ) கோரிக்கை எண். 17—கல்வி

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி :* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கல்வி பற்றிய 17-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 2233,16,97,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்" எனக் கோருகிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2481, திரு. ஆர். சிங்காரம்.

*திரு. ஆர். சிங்காரம் :* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேராவூரணியில் ஒரு கலைக்கல்லூரி தொடங்குவது குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"கல்வி பற்றிய 17-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2233,16,97,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* வெட்டுத் தீர்மானம் எண்.3125, திரு. ஜி. பழனிசாமி.

என்னிடத்தில் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். அந்தப் பிரச்சினையை எழுப்ப நான் அனுமதியளித்திருக்கிறேன். அந்தத் தொகுதி சம்பந்தப்பட்ட உறுப்பினர் திரு. ஆ. சுப்புரத்தினம்.

*திரு. ஆ. சுப்புரத்தினம் :* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

## 3. தகவல் கோரல்—தொடர்ச்சி.

### (ஆ) முன் அனுமதியின்றி பிரச்சினையை எழுப்புதல்—தொடர்ச்சி.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* திரு. இளம்வழுதி, என்னிடம் எதுவுமே கொடுக்காமல், அனுமதிக்க முடியாது. (குறுக்கீடு) என்னிடம் அறிவிப்புக் கொடுக்காமல் இங்கே எழுப்புவதற்கு அனுமதி கிடையாது. என்னுடைய கவனத்திற்கு எதையும் கொடுக்காமல் இப்படி நடந்துகொள்ளக்கூடாது. (குறுக்கீடு) நான் அனுமதி மறுத்தால், மறுத்ததுதான். (குறுக்கீடு) பரிதி இளம்வழுதி, இவையெல்லாம் முறைகேடானவை. இதை நான் அனுமதிக்க முடியாது. இப்படி முறைகேடாகவே நடந்து கொண்டிருந்தால், அனுமதிக்க முடியாது. எதற்கும் ஒரு எல்லை உண்டு. (குறுக்கீடு) வரம்புமீறிப் போய்க் கொண்டிருந்தால், நான் அனுமதிக்க முடியாது. ஒவ்வொரு முறையும், என்னிடம் எதையும் கொடுப்பதில்லை. கொடுக்காமல், (குறுக்கீடு) பரிதி இளம்வழுதி, இப்படி முறைகேடாக நடக்கிறீர்கள். முறைகேடாக நடப்பதை அனுமதிக்க முடியாது. (குறுக்கீடு) என்னைப் பார்த்து இப்படிக் கேள்வி கேட்கிற அதிகாரம், உங்களுக்கு யாரும் கொடுக்கவில்லை. வேண்டுமானால், உங்கள் தலைவர் சொல்லி அனுப்பியிருக்கலாம். பேரவையிலே போய், நீ வாய்க்கு வந்தபடி பேசு என்று உங்களுடைய தலைவர் சொல்லி அனுப்பியிருக்கலாம். (குறுக்கீடு) அதை நீங்கள் நடைமுறைப்படுத்தினால், நான் இங்கே அனுமதிக்க முடியாது. (குறுக்கீடு) நீங்கள் எதுவும் கொடுக்கவில்லை.

### (இ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை குறித்து.

*திரு. இளம்வழுதி :* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கவன ஈர்ப்பு கொடுத்து ஒருமாதம் ஆகிறது.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* கவன ஈர்ப்புத் தீர்மானம் முறைப்படி வரும். தினசரி இரண்டு, இரண்டாக எடுத்துக் கொண்டிருக்கிறோம். (குறுக்கீடு) நீங்கள் கொடுத்த உடனேயே எடுத்துக் கொள்வது என்பது எப்படி ? (குறுக்கீடு) 234 உறுப்பினர்களின் பிரச்சினைகள்

எல்லாம் இருக்கின்றன. தினசரி இரண்டு, இரண்டு கவன ஈர்ப்பு தீர்மானங்கள் எடுத்தது போக, 80, 90 கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் நிலுவையில் இருக்கின்றன. (குறுக்கீடுகள்) இந்தமாதிரி முறைகேடாக நடந்து கொண்டிருந்தால் நான் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) என்னிடம் எதுவும் கொடுக்காமல், (குறுக்கீடுகள்) பேரவையின் அலுவல்களைத் தடை செய்ய அனுமதிக்க முடியாது. திரு. பரிதி இளம்வழுதி, பேரவையின் அலுவல்களைத் தடை செய்ய அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) நான் திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டு இருக்கிறபோது, பரிதி இளம்வழுதியும், செல்வராசனும் நின்று கொண்டிருப்பது முறைகேடு. (குறுக்கீடுகள்) நீங்கள் என்னிடம் கேட்காமல் (குறுக்கீடுகள்). என் கவனத்திற்குக் கொண்டுவராமல் என் அறையிலே வந்து எதுவும் சொல்லாமல், நீங்கள் இங்கே எழுப்புவதை நான் என்றைக்கும் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களேகூட என்னிடத்திலே வந்து கொடுத்தார்கள். நான் அனுமதி மறுத்து இருக்கிறேன். (குறுக்கீடுகள்) என்னிடம் கேட்காமல் எழுப்ப முடியாது. என்னிடம் கேட்டுத்தான் எழுப்ப முடியும். (குறுக்கீடுகள்) ஜீரோ ஹவரில் எழுப்பலாம், என்னிடம் அனுமதி கேட்டுவிட்டுத்தான் எழுப்ப வேண்டும். (குறுக்கீடுகள்) ஜீரோ ஹவரில் என்னிடம் கேட்காமல் எழுப்புவதை நான் அனுமதிக்க முடியாது ; உட்காருங்கள், உட்காருங்கள். இந்தமாதிரி முறைகேடாக நடக்க வேண்டாம்.

முற்பகல் 11-35

திரு. அ. செல்வராசன் : நான் வெளிநடப்புச் செய்கிறேன்.

(திரு. அ. செல்வராசன் அவையிலிருந்து வெளியேறினார்) (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பரிதி இளம்வழுதி, இது முறையல்ல. (குறுக்கீடுகள்) முறைகேடாக நடக்க வேண்டாம். நான் உங்களை பலமுறை எச்சரித்து விட்டேன். (குறுக்கீடுகள்) திரு. பரிதி இளம்வழுதி, நாளை என்னுடைய அறையிலே வந்து கேளுங்கள்.

## 4. சிறப்புக் கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

### பக்தர்கள் சென்ற லாரி வெள்ளக்கோவில் அருகே விபத்துக்குள்ளாகி பலர் இறந்தது குறித்து—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆ. சுப்புரத்தினம்.

திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனி வட்டம், காளிங்கநாயக்கன்பட்டியிலிருந்து 89பேர் ஒரு தனியார்

அறிவுறுத்தியிருக்கிறார்கள். எனவே, இந்த நிலையில் இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து இந்தப் பொருள் குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* ஒத்திவைக்கவேண்டுமென்று அவர் கோரவில்லை. இது ஸ்பெசல் மென்ஷன் தான். இந்தப் பிரச்சினை இத்தோடு முடிந்தது. (குறுக்கீடு) மேற்கொண்டு இதில் விளக்ககங்கள் எதுவும் வேண்டாம். வேறு சந்தர்ப்பத்தில் பேசிக்கொள்ளலாம்.

## 5. மானியக் கோரிக்கைகள், 1995-96 விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

### (அ) கோரிக்கை எண் 17—கல்வி

### (ஆ) கோரிக்கை எண் 51—தமிழ் வளர்ச்சி—பண்பாடு

*1995-96 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும்—தொடர்ச்சி. மானியக் கோரிக்கை எண் 17 - கல்வி, மாண்புமிகு கல்வி அமைச்சர்,*

### (அ) கோரிக்கை எண். 17—கல்வி

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி :* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கல்வி பற்றிய 17-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 2233,16,97,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்" எனக் கோருகிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2481, திரு. ஆர். சிங்காரம்.

*திரு. ஆர். சிங்காரம் :* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேராவூரணியில் ஒரு கலைக்கல்லூரி தொடங்குவது குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"கல்வி பற்றிய 17-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2233,16,97,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* வெட்டுத் தீர்மானம் எண்.3125, திரு. ஜி. பழனிசாமி.

1995 ஏப்ரல் 27]

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழகத்தில் உள்ள உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளிகளில் பெஞ்சு, மேஜை, நாற்காலி, டெஸ்க் போன்றவை பழுதடைந்து உள்ளதை அகற்றி புதிதாக அமைப்பதன் அவசியம் குறித்து " விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2233,16,97,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்"

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3073, திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"திருவாரூர், விஜயபுரம் நகரத்தில் நீண்ட காலமாக தனியார் கட்டிடத்தில் நகராட்சி நடுநிலைப் பள்ளி செயல்பட்டு வந்ததை அக்கட்டிட சொந்தக்காரர் காலி செய்ய நிர்பந்தித்து வருவது குறித்து " விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2233,16,97,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும் ".

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 51-தமிழ் வளர்ச்சி-பண்பாடு, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

### (ஆ) கோரிக்கை எண் 51-தமிழ் வளர்ச்சி—பண்பாடு

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 10,33,03,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்" எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண்.2426, திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மொழிப் போராட்டத் தியாகிகளுக்கும் எல்லை போராட்டத் தியாகிகளுக்கும் வழங்கப்படும் உதவித் தொகையை அதிகரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து " விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,33,03,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும் ".

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் தன்னுடைய முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

*மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி :* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கை எண் 17-கல்வி, மற்றும் மானியக் கோரிக்கை எண்.51-தமிழ் வளர்ச்சி-பண்பாடு குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சிடப்பட்டு பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளன.

இவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை @ இப்பேரவையில் நான் ஆற்றிய உரையாக ஏற்று பேரவைப் பதிவேட்டில் பதிவு செய்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்களின் மேலான கருத்துக்களின் அடிப்படையில் என்னுடைய பதிலுரையை வழங்குகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களுக்காக மகாகவி பாரதியார் கவிதைகள் தொகுப்பு நூல்களின் பிரதிகள் சட்டமன்ற நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* மற்ற அமைச்சர்கள் எல்லாம் நாவுக்குச் சுவையானவற்றைக் கொடுத்தார்கள். (சிரிப்பு)

*மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி :* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செவிக்கு உணவு இல்லாதபோது சிறிது வயிற்றுக்கு ஈயப்படும் என்று தான் வள்ளுவர் சொல்லியிருக்கிறார். இன்று செவிக்கும் இருக்கிறது ; வயிற்றுக்கும் தரப்பட்டிருக்கிறது.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* நீங்கள் செவிக்கு மட்டுமல்லாமல் சிந்தனைக்கும் கொடுத்திருக்கிறீர்கள். (சிரிப்பு)

நேற்றையதினமே காலை, மாலை இரண்டு வேளையிலும் கல்வி பற்றிய மானியக் கோரிக்கைகள் மீது விவாதம் நடைபெறுவதாக இருந்தது. ஆனால் அரசினர் தனித் தீர்மானத்தை நேற்று எடுத்துக் கொண்ட

---

@(461 முதல் 657 வரையிலான பக்கங்களில் இணைப்பு I மற்றும் II ஆக அச்சிடப்பெற்றுள்ளன.)

காரணத்தால் நேற்றைய தினம் இந்த விவாதம் எடுத்துக்கொள்ளப்பட முடியவில்லை. இருந்தாலும் இன்று எடுத்துக்கொள்கிறோம். இன்று காலை எடுத்துக்கொள்வதாக இருந்த மானியக் கோரிக்கைகள் மற்றும் மாலையில் எடுத்துக்கொள்வதாக இருந்த மானியக் கோரிக்கைகள் இவைகள் எல்லாம் கூட இன்று எடுக்க வேண்டியிருக்கிறது. எனவே, கல்வி பற்றிய மானியக் கோரிக்கையின் விவாதத்தில் கலந்துகொள்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை மிகச் சுருக்கமாக சொன்னால்தான் ஏற்கனவே எடுத்துக்கொள்வதாக இருந்த இரண்டு அமைச்சர்களுடைய மானியக் கோரிக்கைகளை மாலையில் எடுத்துக்கொள்ள முடியும். எனவே, சுருக்கமாகத் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். திரு. கே.கே. சின்னப்பன்

முற்பகல் 11.50

திரு. கே. கே. சின்னப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி மற்றும் தமிழ் வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கையின்மீது இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக பேசுவதற்கு வாய்ப்பினை நல்கிய தங்களுக்கு அன்புகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு, இன்றையதினம் இந்தத் துறைக்கு நம்முடைய வருவாயிலே அதிகப்படியான தொகையை ஒதுக்கி, ஏழையெளிய மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், ஆதிதிராவிட மக்கள் எல்லாம் கல்வி அறிவினைப் பெறுகின்ற வகையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் மிகக் கடுமையாக நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள், குழந்தைகள் நலத் திட்டத்தினைத் துவக்கி அதில் 15 அம்சத் திட்டத்தைத் துவக்கி, அதில் 8-வது திட்டமாக அனைவருக்கும் கல்வி என்ற திட்டத்தினை இந்தியாவிலேயே மிகச் சிறப்பாக நடத்தி வருகின்ற ஒரு தன்மையை இன்றையதினம் பார்க்கின்றோம். அதற்காக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களையும், நம்முடைய கல்வி அமைச்சர் அவர்களையும் நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் அனைத்துக் கிராமங்களுக்கும் பள்ளிகளைக் கொடுத்த பிறகு, அதற்கு எல்லாம் அடிப்படை வசதிகள் இல்லாமல் இருந்ததைப் பார்த்த முதல்வர் அவர்கள் இன்றையதினம் அனைத்துப் பள்ளிகளுக்கும் சுகாதார வசதிகளும், கழிப்பிட வசதிகளும், புதிய பள்ளிக் கூடங்களும் இன்றையதினம் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக நான் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

[திரு. கே.கே. சின்னப்பன்] [1995 ஏப்ரல் 27

அடுத்து, இன்றையதினம் நம்முடைய பட்ஜெட்டிலே அதிகப்படியான ஒரு தொகையை ஒதுக்கியிருப்பது கல்வித் துறைக்கு. கல்வித் துறை பல ஆண்டுக்காலமாக பள்ளிக் கல்வி இயக்குநருடைய கட்டுப்பாட்டிலே இயங்கி வருகின்றது. இதுபோன்று மக்கள் முன்னேற்றத்திற்காகச் செயல்படுகின்ற இந்த இலாகாவிற்கு இதுவரையிலும் ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி நியமிக்கப்படாமல் இருப்பதை மிகவும் வருந்தத்தக்க ஒரு செயலாக எண்ணுகின்றோம். ஏனென்று சொன்னால், ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியினுடைய கட்டுப்பாட்டிலே பள்ளிக் கல்வி இயக்குநருடைய பணியை ஒப்படைக்க வேண்டுமென்று நான் இந்த மாமன்றத்தின் சார்பாக அன்போடு கேட்டுக் கொள்கின்றேன். மேலும், இன்றையதினம் பல்வேறு கட்டிடங்களையும், பல்வேறு கழிப்பிட வசதிகளையும், இதுவரையிலே உயர்நிலைப் பள்ளிகளுக்குக் கொடுக்காவிட்டாலும், இன்றையதினம் பரவலாக்கப்பட்ட திட்டத்தின் மூலமாக ஒவ்வொரு தொகுதிகளிலும் இருக்கின்ற பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்கின்ற பகுதிகளில், மரத்தடியிலே வாழ்கின்ற மக்கள் எல்லாம் பயிலுகின்ற வகையிலே இன்றையதினம் பரவலாக்கப்பட்ட திட்டத்திலே உயர்நிலைப் பள்ளிகளுக்குப் பள்ளிக் கட்டிடங்களைக் கொடுத்திருக்கின்றார்கள். இதன் மூலம், இன்றையதினம் கிராமப் பகுதிகளில் இருக்கின்ற ஏழையெளிய மக்கள் எல்லாம் பயன்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அதேபோன்று என்னுடைய தொகுதியிலே மிகவும் பின்தங்கிய பகுதிகள் நிறைய இருக்கின்றன. அங்கே யாரும் வசதிபடைத்தவர்கள் இல்லாத, மிகவும் பின்தங்கிய மக்கள் வாழ்கின்ற பகுதியாகும். அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்களுக்கு பள்ளிக் கூடங்கள் இல்லாமல் இன்றையதினமும் மரத்தடியிலே இருந்து படிக்கின்ற ஒரு நிலை இருக்கின்றது. அதை எல்லாம் போக்குகின்ற வகையிலே, இதுபோன்ற பின்தங்கிய பகுதிகளாக என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற பகுதிகளுக்கு, குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், நாயனபெரியாள், கங்கைகொண்ட சோழபுரம், கருப்பூர் ஆகிய இடங்களில் எல்லாம் இன்றையதினம் மரத்தடியிலே பிள்ளைகள் படித்துக் கொண்டிருக்கின்ற ஒரு மோசமான நிலையைக் காண்கின்றேன். எனவே, அதுபோன்ற இடங்களுக்கு முன்னுரிமை கொடுத்து, அங்கே பள்ளிக் கூடங்கள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று மிக அன்போடு கேட்டுக் கொள்கின்றேன்.

மேலும் இன்றையதினம் என்னுடைய தொகுதி மிகவும் பின்தங்கிய பகுதியாகும். அந்தப் பகுதியிலே கல்வி பயிலுவதற்குப் பல்வேறு இடங்களிலே உயர்நிலைப் பள்ளிகள் இருந்தாலும், மேல்நிலைப்பள்ளி வசதி இல்லாமல் கடந்த காலங்களிலே மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். கடந்த இரண்டு ஆண்டுக் காலமாக கோடாலி

1995 ஏப்ரல் 27] [திரு. கே.கே. சின்னப்பன்]

கருப்பூர் என்ற ஊரில் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப்பள்ளி ஆக்குவதற்கு அந்தப் பகுதியிலே இருக்கின்ற, கிராமத்திலே இருக்கின்ற ஏழையெளிய மக்கள் எல்லாம், ஆதிதிராவிட மக்கள் எல்லாம், மிகவும் பின்தங்கிய மக்கள் அனைவரும் தங்களுடைய ஒவ்வொரு வீட்டிலிருந்தும் ஒவ்வொரு ரூபாய் வசூல் செய்து இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக ஒரு லட்சம் ரூபாயை அரசுக்கு வேண்டிய தொகையைச் செலுத்தியிருக்கின்றார்கள். ஆனால், அந்த உயர்நிலைப் பள்ளியை இதுவரையில் மேல்நிலைப்பள்ளி ஆக்காததால் அந்தப் பகுதியிலே இருக்கின்ற ஆதிதிராவிட மக்கள், மிகவும் பின்தங்கிய மக்கள் மிகவும் சிரமத்துக்கு உள்ளாகியிருக்கின்றார்கள். எனவே, கடந்த இரண்டு ஆண்டுக் காலத்திற்கு முன்பு கட்டப்பட்ட, அதுபோன்ற பின்தங்கிய பகுதியிலே இருக்கின்ற பள்ளிகளை உடனடியாக மேல்நிலைப்பள்ளி ஆக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கின்றேன்.

அதேபோன்று இன்றையதினம் ஆசிரியர் பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு ஆசிரியர் கல்வி வாரியத்தின் மூலமாகக் காலியிடங்களை நிரப்புவதற்கு இன்டர்வியூ நடத்தப்படுகின்றது. இந்த நேரத்தில் நான் அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புவது எல்லாம், இந்த ஆசிரியர் நியமனம் என்பது மாநில அளவிலே நியமிக்கப்படுகின்ற காரணத்தாலே, மிகப் பின்தங்கிய பகுதிகளாக இருக்கின்ற, எங்களைப் போன்றவர்களுடைய பகுதிகளிலே படித்தவர்களுக்கு வேண்டிய வசதி வாய்ப்புகள் கிடைக்காத ஒரு நிலை ஏற்படும். எனவே இந்தக் காலியிடங்களை நிரப்புகின்றபோது, ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலும் எவ்வளவு காலியிடங்கள் இருக்கின்றதோ அதைக் கருத்திலேகொண்டு, அந்தப் பகுதியிலே இருக்கின்ற ஆசிரியப் பெருமக்களை நியமிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் மாநில அளவிலே எடுக்கின்றபோது, பின்தங்கிய பகுதியிலே படித்த ஆசிரியப் பெருமக்களுக்கு வாய்ப்பு கிடைக்காது. அதே நேரத்தில் பல்வேறு இடங்களிலிருந்து - நகரங்களிலே இருக்கிறவர்களைக் கிராமங்களிலே நியமிக்கும்போது அந்த ஆசிரியர்கள் அங்கே பணிபுரிய முடியாத ஒரு நிலை ஏற்படும். எனவே ஆசிரியர்களை நியமிக்கின்றபோது, ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலேயும் எவ்வளவு காலியிடங்கள் இருக்கின்றனவோ அந்தக் காலியிடங்களுக்கு ஏற்றவாறு, ரொட்டேஷன் முறையிலே, அந்தப் பகுதியிலே உள்ள பின்தங்கிய மக்கள், மிகவும் பின்தங்கிய மக்கள், ஆதிதிராவிட மக்களுக்கு இருக்கக்கூடிய ஒதுக்கீடுகளைக் கொடுத்து, அந்தப் பதவிகளில் நியமிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11.55

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர்.

*மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆசிரியர்கள் தேர்வு செய்யப்பட்ட பின்பு, அவர்கள் எந்தெந்த மாவட்டங்களைச் சேர்ந்தவர்களோ, அந்த மாவட்டத்திலேயே பணியமர்த்தப்பட வேண்டுமென்று ஆணையிட்டிருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து முன்பே அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே அவரது பகுதி உள்பட, பிறபட்ட பகுதிகளிலே நிச்சயமாக அந்தந்தப் பகுதியைச் சேர்ந்தவர்களே பணியமர்த்தப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. கே. சின்னப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்ற ஏழை எளிய மக்களுக்காக உழைக்கின்ற புரட்சித் தலைவி அரசு, இதுபோன்ற கோரிக்கைகளை நிறைவேற்றியமைக்க மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கும், கல்வி அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தையும், நன்றியையும் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றையதினம் மாவட்ட அளவிலே நியமிப்பதாக அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். அதைக் கல்வி மாவட்ட அளவிலே நியமிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி மாவட்ட அளவிலேயும் இது நடைபெறும்.

திரு. கே. கே. சின்னப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு, அனேகமாக ஒவ்வொரு தாலூகாவிலும் பெண்கள் மேல்நிலைப் பள்ளிகளைத் துவக்கியிருக்கிறார்கள். எங்களுடைய பகுதியிலே, குறிப்பாக உடையார்பாளையம் தாலூகாவில் அதிகப்படியான பெண்கள் படிக்கிறார்கள். ஆனால் எங்களுக்கு என்று ஒரு பெண்கள் மேல்நிலைப்பள்ளி அந்தப் பகுதியில் இல்லாத காரணத்தால், பிளஸ் 2 படிப்பதற்கு மாணவிகள் எல்லாம் திருச்சி நகருக்கும், 100, 120 கிலோமீட்டர் சென்றும் படிக்க வேண்டிய நிலை இருக்கிறது. ஜெயங்கொண்டத்தில் அரசு மேல்நிலைப் பள்ளியில் மாணவர்களும், மாணவிகளும் படிக்கின்ற நிலை இருக்கின்ற காரணத்தால், பல மாணவிகள் படிப்பை நிறுத்துகின்ற

1995 ஏப்ரல் 27] [திரு. கே.கே. சின்னப்பன்]

ஒரு நிலை இருக்கிறது. ஜெயங்கொண்டம் அரசு மேல்நிலைப் பள்ளியில் சுமார் 750க்கும் மேலான மாணவிகள் படித்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கே, அந்தப் பள்ளியிலே வேண்டிய கட்டிட வசதி இருக்கிறது, வேண்டிய விளையாட்டுத் திடல் இருக்கிறது. எனவே அந்த ஆண்கள் மேல்நிலைப் பள்ளியை இரண்டாகப் பிரித்து, பைபர்கேட் செய்து, அங்கே பெண்களுக்கென்று தனியாக ஒரு மேல்நிலைப் பள்ளியை உருவாக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து எங்களுடைய பகுதி அதிகமான சாதிக் கலவரங்கள் உண்டாகிற பகுதியாக இருக்கிறது. தேர்வுக் காலங்களிலேதான் அங்கே இருக்கும் ஒருசில அரசியல் கட்சிகளால் கலவரம் ஏற்பட்டு, பஸ்கள் செல்ல முடியாத காரணமாக, அங்கே இருக்கும் ஆதிதிராவிட மாணவர்கள், பின்தங்கிய வகுப்பு மாணவர்கள் தேர்வு மையத்திற்குச் செல்லுவதில் மிகவும் சிரமமான ஒரு நிலைமை இருக்கிறது. எனவே என்னுடைய தொகுதியில் உள்ள கங்கைகொண்ட சோழபுரம், உள்கோட்டை மற்றும் பல்வேறு இடங்களில், கிராமப்புறங்களில் தேர்வு மையங்களை ஏற்படுத்திக் கொடுத்தால்தான், அவர்கள் சைக்கிளில் சென்றாவது தேர்வு மையங்களில் தேர்வு எழுத ஏதுவாக இருக்கும். 15, 20 கிலோமீட்டர் சென்று பரீட்சை எழுதுவதற்கு அந்தப் பகுதியில் உள்ள மாணவர்களால் முடியாத காரணத்தாலே, என்னுடைய பகுதியில் 10 கிலோமீட்டருக்குள்ளாக அனைத்து இடங்களிலும் தேர்வு மையங்களை ஏற்படுத்தி, அந்தப் பகுதியில் வாழ்கின்ற ஆதிதிராவிடர்கள், பின்தங்கிய மக்கள் பயன்படும் வகையிலே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இன்றையதினம் எல்லைப் போராட்ட வீரர்களுக்கு, திருத்தணியை மீட்ட வீரர்களுக்கு, ஒரு சில பேர்களுக்கு மட்டும் பென்ஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்தப் போராட்டத்தில் ஈடுபட்ட பலருக்கு இன்றையதினம் பென்ஷன் கிடைக்காத நிலை இருக்கிறது. அவர்களுடைய நிலையைக் கருத்திற்கொண்டு இந்த அரசு அவர்களுக்கு பென்ஷன் வழங்குவதற்கு நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நண்பகல் 12-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு கல்வி அமைச்சர்.

*மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி :* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உதவித் தொகை வழங்குகிற திட்டத்தில் அவர்கள் சிறைச்சாலையில் இருந்ததற்கான சான்றிதழ் இருந்தால்தான் அதைச் செய்ய வேண்டுமென்று அதற்காக அமைக்கப்பட்டிருக்கிற குழுவிலே முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே தகுதியுள்ளவர்கள் நிச்சயமாகப் பரிசீலிக்கப்பட்டு உரிய பென்ஷன் தொகை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும்.

திரு. கே. கே. சின்னப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சில நபர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தும்கூட கிடைக்கவில்லை என்ற புகார் இருக்கிறது.

*மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி :* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறைச்சாலை சான்றிதழ் இருந்தாலும்கூட அதிகப்படியான எண்ணிக்கையில் அவர்கள் உதவித் தொகை கேட்கிறார்கள். குறைந்த அளவு நிதியே ஒதுக்கப்படுகிறது. ஆகவே ஒரு குறிப்பிட்ட வரையறை வைத்திருக்கிறோம். 3 மாதங்களுக்கு மேலாக சிறைச்சாலையில் இருந்தவர்களுக்கு தொகை வழங்கப்பட்டு வருகிறது. படிப்படியாக இந்த அளவு குறைக்கப்பட்டு அனைவரும் பெறுகிற வாய்ப்புகள் உருவாகும்.

திரு. கே. கே. சின்னப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற எல்லை மீட்ட தியாகிகளுக்கு நம்முடைய அரசு முன்னுரிமை கொடுத்து பரிசீலனை செய்து அவசியம் இந்த நிதியாண்டில் அவர்களுக்கு உதவி கிடைத்திட ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்றையதினம் நம்முடைய தமிழக அரசால் ஆசிரியர் தின விழாவில் பல்வேறு ஆசிரியர்களுக்கு நல்லாசிரியர் விருதுகள் கொடுக்கப்பட்டு வருகிறது. இந்த நல்லாசிரியர் விருதுகளைப் பொறுத்தவரையில் இன்றையதினம் மேல்நிலைப் பள்ளிகளுடைய தலைமையாசிரியர்களுக்கும், உயர்நிலைப் பள்ளிகளுடைய ஆசிரியர்களுக்கும் தான் பரிசீலனை செய்யப்படுகிறது. இதை நம்முடைய அரசு கிராமப் பகுதிகளில் பல்லாண்டு காலமாக நல்லமுறையில், சிறப்பாக ஆரம்பப் பள்ளிகளில் பணியாற்றக்கூடிய தலைமை யாசிரியர்களாக இருந்தாலும் அல்லது ஆசிரியர்களாக இருந்தாலும் அவர்களில் நல்லாசிரியர்களை இந்த அரசு கண்டறிந்து அவர்களுக்கு இந்த விருதுகளை வழங்குவதற்கு வேண்டிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்று சொன்னால், அதிகப்படியாக ஆசிரியர் பெருமக்கள் கிராமப்புறங்களில் இருக்கிறார்கள்.

அவர்களுக்கு இதுவரையில் வழங்கியதாக எனக்குத் தெரியவில்லை. ஆகவே, கிராமப் பகுதிகளில் அதிகப்படியாக இருக்கிற அந்தத் தொடக்கப் பள்ளிகளில் பணியாற்றுகிற நல்லாசிரியர்களைக் கண்டறிந்து அவர்களை ஊக்குவிக்க வேண்டுமென்கிற வகையில் அவர்களுக்கு நல்லாசிரியர் விருதுகளை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய மரியாதைக்குரிய பேரவைத் தலைவர் அவர்கள் இன்றையதினம் சுருக்கமாகப் பேச வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். இந்த கல்வி இலாக்காவைப் பொறுத்தவரையில் இவ்வளவு பெரிய தொகை ஒதுக்கப்படுகிறது. இருந்தாலும் எங்களுடைய கட்சியைச் சார்ந்தவர்கள் இதுபோன்ற மக்களுக்குப் பயன்படுகிற மானியக் கோரிக்கைகளில் பேசுவதைத் தவிர்த்துவிட்டு, ஏதோ ஒருசில தனி நபர்களுக்காக இந்தச் சட்டசபையில் பேசி மக்களை எல்லாம் ஏமாற்றுகிற நிலை இருப்பதால், எங்களைப் போன்றவர்களை எல்லாம் வெளியே செல்கிறபோது நீங்கள் இந்தத் தனி நபர்களுக்காகச் செல்கிறீர்களா அல்லது சட்டமன்றத்தில் மக்களுக்காகப் பிரச்சினைகளை வாதாடுவதற்காகச் செல்கிறீர்களா என்று கேட்கிற நிலை இருக்கிறது. எனவே, நேற்றையதினம் கேட்டுக் கொண்டதைப் போல இதுபோன்ற மானியக் கோரிக்கைகளில் பேசுவதற்கு அதிகப்படியாக எங்களுக்கு வாய்ப்புகள் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* நீங்கள் சொல்கிறமாதிரி தனி நபர்களுக்காக வருகிறார்கள், போகிறார்கள் என்பதோடு கூட, என்னைப் பொறுத்தவரையில் இந்த அவையினுடைய நேரத்தை வீணாக்கி விட்டே தினமும் போகிறார்கள்.

*திரு. கே. கே. சின்னப்பன் :* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை கேட்டுக் கொள்வதெல்லாம் இதுபோன்று மக்களுக்காகப் பயன்படுகிற, ஏழையெளிய மக்களுக்குப் பயன்படுகிற மானியக் கோரிக்கைகளில் அதிகப்படியாகக் கவனம் செலுத்துவதற்கு நீங்கள் எங்களுக்கு வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், வெளியே வருகிறபோது இந்த அவையில் இவ்வளவு செலவு செய்து மக்களுக்காக உழைப்பதற்குப் பல்வேறு திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிற தமிழகத்தின் முதலமைச்சர் அவர்களுடைய திட்டங்களை அவர்களால் பாராட்ட முடியவில்லை என்றாலும் கூட இந்த அவையிலிருந்து அவர்கள் பல்வேறு கருத்துக்களைக் கூறினாலும் பரவாயில்லை. ஆனால் ஒருசில தனி நபர்களுக்காக வந்து போகிறார்கள். இது நாள் வரை ஒரு நாள் கூட மக்களுக்காகவோ அல்லது

இன்றையதினம் வறட்சி அதிகப்படியாக ஏற்பட்டிருக்கிறது அல்லது இன்றையதினம் ஒரு விபத்தில் *30* பயணிகள் எல்லாம் உயிர் இழந்திருக்கிறார்கள், இதுபோன்ற பொதுமக்களுடைய பிரச்சினைகள் பற்றியோ ஒரு நாளும் பேசாமல் ஒருசில தனி நபர்களுக்காகப் பேசி இந்திய தேசிய காங்கிரஸ் கொள்கைக்கு எதிராகவும், எங்களுடைய அன்னை இந்திரா காந்தி அவர்களுடைய கொள்கைக்கு வேறுபாடாகவும், எங்களுடைய பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களுடைய கொள்கைக்கு எதிராகவும் இன்றையதினம் செயல்பட்டுக் கொண்டிருப்பதைப் பார்க்கிறபோது, எங்களைப் போன்ற காங்கிரஸ் பேரியக்கத்தைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் வெட்கித் தலை குனியக்கூடிய நிலையை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக நாங்கள் எல்லோரும் மிகவும் வருந்துகின்ற நிலையிலே இருக்கிறோம். எங்களைப் போன்றவர்கள், இந்தச் சட்டமன்றத்திலே மக்களுடைய பிரச்சினைகளைப் பற்றியும், தொகுதியினுடைய பிரச்சினைகளைப் பற்றியும், - எங்களுடைய அன்புத் தலைவர் ராஜீவ் காந்தி காட்டிய வழியிலே ஜனநாயக வழியிலே இன்றையதினம் எதிர்க்கட்சியாக இருந்து, - அரசு செய்கின்ற நல்ல வேலைகளை எல்லாம் பாராட்டி, அதேநேரத்தில் செய்யவேண்டிய பணிகள் எவை என்பதை எல்லாம் சுட்டிக்காட்டி, சட்டமன்றத்திலே பேசிக் கொண்டிருக்கிறோம். அதனால், இன்றைக்குத் தமிழகத்திலே இருக்கிற காங்கிரஸ் கட்சிக்கு, அன்னை இந்திரா காந்தியினுடைய ஆவியும், எங்களுடைய அன்புத் தலைவர் ராஜீவ் காந்தியினுடைய ஆவியுமாவது, எங்களைப் போன்றவர்களால், அவர்களை மன்னித்து அருளட்டும் என்ற வேண்டுகோளையும் வைக்க விரும்புகிறேன். இன்றையதினம் இந்த மானியக் கோரிக்கையில், ஏழை எளிய மக்கள் பயன்படுகின்ற வகையிலே பல புரட்சிகரமான திட்டங்களை எல்லாம் எடுத்து வைத்திருக்கிறார்கள். இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக இந்தக் கல்வி மற்றும் தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத்துறை மானியக் கோரிக்கைகளின் மீது பேசுவதற்கு வாய்ப்பு நல்கிய உங்களுக்கு எங்களது அன்பு கலந்த வணக்கத்தையும் நன்றியையும் கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 12-05*

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் வெ. சரோஜா.

டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *1995-96* ஆம் ஆண்டிற்கான கல்வி மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு, என்னுடைய கருத்துக்களை இந்த

1995 ஏப்ரல் 27] [டாக்டர் வெ. சரோஜா]

அவையில் எடுத்து வைக்க வாய்ப்பு அளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கல்விக்கு இவ்வாண்டு 2233.17 கோடி நிதி ஒதுக்கீடு செய்து, தனிப் பெரும் துறையாக ஆக்கி, நல்லதொரு வருங்கால சமுதாயத்தை உருவாக்க உயர்வான திட்டங்களை எல்லாம் நல்கிய எங்கள் உன்னதத் தலைவி, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய திசை நோக்கி வணங்கி என் உரையைத் துவக்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு எழுமையும் ஏமாப் புடைத்து' என்ற வள்ளுவரின் வாக்குக்கு ஏற்ப, ஒரு தலைமுறையில் நாம் கற்கும் கல்வி 7 பிறவிக்கும் நமக்குப் பெருமை சேர்க்கும் என்ற கல்வியின் சிறப்பை இங்கே நினைவு கூர்ந்து என்னுடைய உரையைத் துவக்குகிறேன்.

மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய தலைமையின் கீழ், தமிழ்நாட்டு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தை உருவாக்கி அதிலே என்னையும் ஒரு உறுப்பினராக ஆக்கியமைக்கு என்னுடைய நெஞ்சம் நிறைந்த நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன். தமிழ்நாட்டு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், இந்திய விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தோடு இணைந்து, இந்திய விளையாட்டு ஆணைய விளையாட்டு விடுதி ஒன்றை சென்னையிலும், சிறப்புத் திட்ட வளர்ச்சிப் பகுதி மையம் ஒன்றை மாநிலத்திற்கு என்று சேலத்தில் அமைத்துக் கொடுத்தமைக்கு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்கால அரசுக்கு நன்றி தெரிவிக்கும் அதேநேரத்தில் சேலத்திற்கும், ஈரோட்டிற்கும் நீச்சல்குளம் அமைக்க வேண்டிய மைய அரசுக்கு மாநில அரசு அறிக்கை அனுப்பியுள்ளது. அதை விரைவில் பெற்றுத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஏழரை மாத காலத்தில், பிரமிக்கதக்க வகையில் கட்டப்பட்ட ஜவஹர்லால் நேரு ஸ்டேடியத்தில் சர்வதேச அளவுக்கு இணையாக தடகள விளையாட்டுக்கு என்று செயற்கை ஓடு தளத்தையும், பூப்பந்து, கைப்பந்து மற்றும் டென்னிஸ் ஆகிய விளையாட்டுக்களுக்காக செயற்கையிலாலான தரை விரிப்புகளையும் இறக்குமதி செய்வதற்கு, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு ஏற்பாடு செய்துள்ளதை மாணவச் சமுதாயங்கள், குறிப்பாக விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் சார்பாக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[டாக்டர் வெ. சரோஜா] [1995 ஏப்ரல் 27

1995 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில், ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டியை நடத்தும் வாய்ப்பினை நம்முடைய புனித அரசு பெற்றுள்ளது. இந்த விளையாட்டுத் திட்டம் சுமார் 120 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும். மேலும் கோயம்பேட்டில் 70 கோடி ரூபாய் செலவில், விளையாட்டு கிராமமும், 45.46 கோடி ரூபாய் செலவில் பன்னாட்டுத் தரத்தில் டென்னிஸ், ஹாக்கி, நீச்சல் போட்டி, துப்பாக்கிச் சுடுதல் ஆகியவற்றுக்கான அரங்கங்களை, அனைத்து வசதிகளுடன் கூடிய அரங்கங்களை அமைக்க இருப்பதைக் காணும்போது, விளையாட்டுத் துறையின், மணிமகுடத்தில் பதிக்கப்பட்ட வைரக்கற்கள் என்றால், அது மிகையாகாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இத்தனை சிறப்புகளை உள்ளடக்கிய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், விளையாட்டுத் துறை என்றால் என்ன என்பதை உலகத்திற்குக் காட்டிய, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பெயரில், விளையாட்டுப் பல்கலைக் கழகம் ஒன்றை, சேலத்தில் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்ற கோரிக்கையை நான் விடுக்க ஆசைப்படுகிறேன். இதை சேலம் மாவட்டத்தில் உள்ள அனைத்து சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பாகவும், சேலம் மாவட்டத்து மக்கள் சார்பாகவும் விடுத்துள்ள நீண்டகாலக் கோரிக்கையை நிறைவேற்றித் தரும்படி, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்குக் கோரிக்கையாக விடுக்கிறேன். இந்தப் பல்கலைக் கழகத்தை அமைப்பதன் மூலம், படித்த மாணவச் சமுதாயம் மட்டுமல்லாமல், படிக்காத மாணவச் சமுதாயமும் பயன்பெறும் வகையில், வாலிபால், கபடி, புட் பால் மற்றும் உள்ள அத்தலட்ஸ் ஆகியவற்றுக்கும் முக்கியத்துவம் கொடுத்தால், வரும் ஒலிம்பிக் போட்டிகளில், தமிழகம் நிச்சயமாக முதலிடத்தில் வரும் என்பதில் சிறிதும் ஐயப்பாடு இல்லை.

பிற்பகல் 12.10

சமூக நீதிகாத்த வீராங்கனை, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சியில் பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவச் சமுதாயங்களுடைய நன்றியினை இந்த அவையில் தெரிவித்து, அந்த மாணவச் சமுதாயம், மாண்புமிகு இதய தெய்வம் பெற்றுத் தந்த 69 சதவீத இட ஒதுக்கீட்டை, முழுமையாகப் பெற்று பயன்பெறும் வண்ணம், தற்போது மருத்துவம் மற்றும் பொறியியல் கல்லூரிகளில் அட்மிஷன் செய்வதற்கு 60 சதவீதம் குறைந்தபட்சம் மார்க் இருக்கவேண்டும் என்று இருப்பதை, 50 சதவீதமாக மாற்றிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். காரணம்

1995 ஏப்ரல் 27] [டாக்டர் வெ. சரோஜா]

இந்தக் கல்வி நிறுவனங்களில் நாம் அப்ளை செய்யும்போது அக்ரிகேட் 140 என்று இருந்தாலும் ஒவ்வொரு தனிப் பாடத்திலும் 60 மதிப்பெண்கள் இருக்க வேண்டுமென்று இருப்பதால் ஒரு மாணவன் ஒரு பாடத்தில் 90 மார்க் வாங்கி, இன்னொரு பாடத்தில் 59 வாங்குவானேயானால் அவன் அப்ளை செய்வதற்கான எலிஜிபிளிட்டியை இழப்பதோடு, அவன் விருப்பமின்றி, கலைக் கல்லூரி மற்றும் அறிவியல் கல்லூரியில் சேர்ந்து படித்துப் பட்டம் பெற்று வெளியில் வந்த பிறகு அவர்களுக்கு வேலைவாய்ப்பு என்பது அரிதாகிவிடும் இந்த நாளில் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சியில் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவ சமுதாயங்கள் சார்பாக இந்தக் கோரிக்கையினைப் பரிசீலித்து, இந்த அவையிலே மாண்புமிகு அமைச்சரவர்கள் முடிவான நல்ல பதிலைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து தமிழ்நாட்டில் 15-க்கும் மேற்பட்ட பல்கலைக் கழகங்களும், 22-க்கும் மேற்பட்ட தன்னாட்சி கல்லூரிகளும் இருக்கின்றன. ஒவ்வொரு பல்கலைக் கழகமும், ஒவ்வொரு கல்லூரியும் தனித்தனியே பாடத் திட்டங்களையும், கேள்வித் தாள்களையும் தயாரித்து, மாணவர்களுக்குக் கொடுக்கும்போது, ஒரு மாணவன் நம்முடைய தமிழகத்திலிருந்து படித்துப் பட்டம் பெற்று, முதுகலைக் கல்வியும் கற்று, குரூப் 1 சர்வீஸ், ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., போன்ற தேர்வுகளுக்குச் செல்லும்போது எல்லாத் துறைகளிலும் சிறந்தவனாக இருக்க முடிவதில்லை. ஒரு வேளை இதுதான் காரணமோ, ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். தேர்வுகளில் நம்முடைய தமிழகத்தைச் சேர்ந்த மாணவர்கள் குறைவாக இருக்கிறார்களோ என்ற ஐயப்பாடும் எழுகின்ற இந்த வேளையில் அனைத்துப் பல்கலைக் கழகங்களுக்கும் ஒரே வினாத் தாளாக ஒரே மாதிரியான கல்வித் திட்டத்தையும் மற்றும் அனைத்துப் பல்கலைக் கழகங்களுக்கும் சேர்த்து ஒரு முடிவான கொள்கையை வகுத்து, மாணவ சமுதாயங்கள் பயன்பெறும் வகையில் பாடத் திட்டத்தை அமைத்து, அதிகப்படியான குரூப் 1, குரூப் 2 சர்வீசில் அதிகமான தமிழக மாணவர்கள் பயன்பெற வேண்டுமென்ற என்னுடைய கோரிக்கையினை துறை விரிவாகப் பரிசீலித்து நல்ல முடிவை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம் இருப்பதுபோல அனைத்துப் பொறியியல் கல்லூரிகளையும் ஒன்றிணைத்து மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பெயரைத் தாங்கிய - டாக்டர் மாண்புமிகு இதய தெய்வம் அவர்கள் பெயரில் பொறியியல் பல்கலைக் கழகம் ஒன்றை அமைத்து, அதிலே அதாவது படித்துப் பட்டம் பெற்ற பட்டதாரிகளுக்கு ஒரே சீரான கல்வியும்

வேலைத் தகுதியும் இருப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அறிவொளி இயக்கத்தில் தமிழகம் முன் நிலையில் நிற்கிறது என்பதில் இரு வேறு கருத்து இல்லை. அனைவருக்கும் கட்டாயக் கல்வி என்ற கனவை நனவாக்கும் வண்ணம் 1995-96 ஆம் ஆண்டில் படித்த தன்னார்வத் தொண்டர் பணித் திட்டத்தை அமலுக்குக் கொண்டு வந்திருக்கிற நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில் 30 லட்சம் சிறார்கள், தெரு ஓரக் குழந்தைகள் பயனடைவார்கள் என்ற நல்ல திட்டத்தை வரவேற்கும் அதே வேளையில், இதை மேலும் வலுப்படுத்தும் வண்ணம், என்னுடைய சிறு கருத்தாக துறையினுடைய ஆய்விற்காக வைக்கின்றேன்.

மருத்துவ வசதி எப்படி மக்களைத் தேடி கிராமங்களுக்குச் செல்கின்றதோ, அதேபோன்று கல்வியும், கிராமப்புறக் குழந்தைகளுக்கும், தெரு ஓரக் குழந்தைகளுக்கும் சென்றடைகின்ற போது தான் அனைவருக்கும் கல்வி என்ற தேசிய கொள்கையை நாம் முழுமையாக அடைந்ததாக இருக்கும். ஆதலால் இதை கல்வித்துறை, சமூக நலத்துறை, போக்குவரத்துத்துறை ஆகிய மூன்று துறைகளும் ஒருங்கிணைந்து செயல்படுமேயானால், அதற்கு நடமாடும் கல்வியகங்கள் என்ற பெயர் கொடுத்து அதைச் செயல்படுத்தமுடியும். எப்படியென்றால், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் 2 பேருந்துகளை இலவசமாக வழங்கியும், அந்தக் குழந்தைகளுக்கு அந்தந்தப் பகுதியிலே உள்ள சத்துணவுக் கூடங்களிலிருந்து சத்துணவு வழங்கியும், கல்வித் துறை அந்தக் குழந்தைகளுடைய பாடத் திட்டத்தை வீடியோ அல்லது ஆடியோ கேசட்டுகளாக தயார் செய்து, காலை, மாலை இரு வேளைகளிலும் ஒரு மணி நேரம் அல்லது 2 மணி நேரம் அந்தக் குழந்தைகளுக்கு அவர்கள் இருக்கும் இடம் தேடி நாம் கல்வியை எடுத்துச் சென்று சேர்ப்போமேயானால், இந்தத் திட்டத்தில் 30 லட்சம் குழந்தைகள் பயனடைவதை ஏறத்தாழ குறுகிய காலத்தில் நாம் 50 லட்சமாகக் கூட உயர வாய்ப்புகள் இருக்கின்றன என்பதை நான் இங்கே கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

பாடத் திட்டங்கள் குறிப்பாக சிலபஸ் மாற்றப்படும் பொழுது குவஸ்டின் பேங்க் உடனடியாக தயார் செய்து மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் கொடுக்கும் வண்ணம் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு) ஒரே ஒரு நிமிடம். காரணம் சிலபஸ் மாற்றும் பொழுது தேர்வு நேரம் வரும் வரை மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையே தெளிவான ஒரு கருத்து இருப்பதாகத்

தெரியவில்லை. ஆதலால் எப்போது சிலபஸ் மாறுகிறதோ, சிலபஸ் மாறி மாணவர்களுக்கு புத்தகங்கள் வினியோகிக்கப்படுகிறதோ அப்போது குறுகிய காலத்தில் குவஸ்டின் பாங்க் தயார் செய்து அதை அவர்களுக்கு கொடுப்பதன் மூலமாக......

பிற்பகல் 12-15

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* மாண்புமிகு கல்வி அமைச்சர்.

*மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி :* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே முதன் முதலாக தமிழகத்தில் தான் இந்த ஆண்டிலே பாட புத்தகங்கள் முழுவதுமாக மாற்றப்பட்டிருக்கின்றன. அதற்கான புத்தகங்கள் எழுதப்பட்டு, 1, 6, 11 வகுப்புகளுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டிலே புத்தகத்திலேயே பாட திட்டமும் அச்சடிக்கப்பட்டிருக்கும். அத்தோடு புத்தகங்கள் தயாரிக்கிற நேரத்திலேயே அதற்காக குவஸ்டின் பேங்கும் தயாராகி வருகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இப்படிப்பட்ட அச்சம் தேவையில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* சீக்கிரம் பேசி முடித்துக் கொள்ளுங்கள்.

*டாக்டர் வெ. சரோஜா :* மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சருடைய பதிலுக்கு நன்றி. அனைத்து மகளிர் காவல் நிலையம் இருப்பது போல அனைத்து மகளிர் நூலகம் ஒன்று ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். டி.என்.பி.எஸ்.சி.-யிலே இருப்பதைப் போன்று டீச்சர்ஸ் ரெக்ரூட்மெண்ட் போர்டிலும் அரசு அதிகாரிகளை நியமிக்கும்போது தொடர்ந்து 3 ஆண்டுகளாவது அந்த அதிகாரிகள் அங்கு இருக்க வேண்டும் என்று வலியுறுத்த விரும்புகிறேன். நிர்வாக நலன் கருதி இதை அதிகமாக பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக என்னுடைய தொகுதியில் ஒரு சில கோரிக்கைகளை வைக்க விரும்புகிறேன். சங்ககிரி பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றிக் கொடுக்க வேண்டும். சேலம் அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு பள்ளிக் கட்டிடம் அமைத்துக்

[டாக்டர் வெ. சரோஜா] [1995 ஏப்ரல் 27

கொடுக்க வேண்டும். சங்ககிரியில் பெண்கள் தொழில் பயிற்சிக் கல்லூரி ஒன்றை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். ரூரல் ஸ்போர்ட்ஸ் காம்பிளக்ஸ் ஏற்படுத்துவதில் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சியில் விரைந்து செயல்பட வேண்டும் என்று கோரிக்கை வைக்கிறேன். ஏனென்றால் வருகிற கல்வி ஆண்டிலே எந்தெந்தக் குழந்தைகள் விளையாட்டில் ஆர்வமாக இருக்கிறார்கள் என்பதை அவர்களை வகைப்படுத்தி செயல்படுத்துவதற்கு அது ஏதுவாக இருக்கும். மல்லசமுத்திரம் ஒன்றியம், வையப்பமலை ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு பிளஸ் 2-விற்கு தேர்வு மையம் வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். முடிவாக தஞ்சையிலே நெஞ்சம் உருக்கும் வண்ணம் தாய்த் தமிழுக்காக உலகத் தமிழ் மாநாட்டை உரிய முறையிலே உயரிய தன்மையில் நடத்திக் காட்டிய தாய், எங்கள் அன்புத் தாய், தங்கத் தலைவி, எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்று கொங்கு தமிழினையும் உள்ளடக்கிய, சங்கத் தமிழாம் அமுதத்தைத் தரணிக்குத் தந்து முத்தமிழ் வளர்த்திட்ட எங்கள் முடிசூடா ராணியே, அறிவியல் தமிழை நாட்டுக்குத் தந்த எங்கள் அன்னையே, முடியாட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, குடியாட்சியை அற வழியிலே அமைத்து அதன் முறையிலே அரியாசனத்தில் சான்றாக அமர்ந்து, சரிசமமாக எல்லோரையும் தன் ரத்தத்தின் ரத்தமாகப் பாவித்து, சகோதர சகோதரிகளுக்கு உற்றதோர் உடன்பிறப்பாக குடும்பத் தலைவியாக நித்தமும் நினைத்து நெகிழ்ந்த மனதுடன் நித்தம் ஒரு நலத் திட்டத்தை நாள்தோறும் அறிவித்து நலிந்தவர்களின் வாழ்வை வளம் பெறச் செய்துவந்த எங்கள் தாயே, நயவஞ்சக நண்பர்களை விட எதிரிகளே ஏற்றம் மிக்கவர்கள் என்று எண்ணிய போதெல்லாம் பயிர்களைச் சேர்ந்த களைகளைக் களைந்தெறிவது போல களைந்து எடுத்து, கட்சிக்கும் ஆட்சிக்கும் நல்ல உரமிட்டு நல்ல பாதுகாப்பைத் தந்து, நல் முத்துகளை விளைவித்து, நன் மணிகளை நாட்டுக்கு நல்கிக் கொண்டிருக்கும் நளவெண்பா, ஆசிரியப்பா - எங்கள் தங்கத் தாயின் தாள் பணிந்து இந்தத் துறையை மெத்த செம்மையாக நடத்திக் கொண்டு வரும் அரசு அதிகாரிகளுக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாணவ சமுதாயத்தை ஒரு நல்ல வழியிலே எதிர்கால சமுதாயத்தை ஒரு உயர்ந்த சமுதாயமாக ஒரு பலமுள்ள சமுதாயமாக ஆக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ள மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் நன்றி கூறி வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* திரு. கே. சிங்காரம். 5 நிமிடம் தான் பேசுவதற்கு முடியும். ஒவ்வொரு உறுப்பினரும் பேச வேண்டும். பேச வேண்டிய உறுப்பினர்கள் கிட்டத்தட்ட 14 பேர்கள்

இருக்கிறார்கள். எனவே ஒவ்வொரு உறுப்பினருக்கும் 5 நிமிடம் தான் தர முடியும். அதற்கு மேல் நீங்கள் பேசிக் கொண்டிருந்தால் நான் உங்களுடைய பேச்சுக்கு ஒரு கில்லட்டின் போட வேண்டியதுதான், வேறு ஒன்றும் வழியில்லை. *(சிரிப்பு).*

பிற்பகல் 12-20

*திரு. கே. சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்வி மற்றும் தமிழ்ப் பண்பாடு ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது பேசுகின்ற வாய்ப்பை நல்கிய தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தர்மம் புரிந்தால் அதர்மம் தானே அழிந்து விடும் என்ற நிலைக்கேற்ப இந்த அவையினுள் மட்டும் அல்லாமல் அவைக்கு வெளியிலேயும், மக்கள் செல்வாக்கே சிறிதும் இல்லாத சிலரால் தினம், தினம் தோற்றுவிக்கப்படுகின்ற அதர்மம் எல்லாம் தானே அழிந்து போய்விடும் என்ற வகையிலே வறுமை மற்றும் எழுத்தறிவின்மை ஆகிய இரண்டு தீமைகளைக் களைந்துவிடுகின்ற வகையிலே வரியில்லா நிதிநிலையைத் தந்து வாக்குச் சாவடிகளுக்கு மட்டும் வாக்குறுதி அளிக்காமல், வாழ்கின்ற மானிட மக்களின் வருங்காலச் சந்ததியினரின் வாழ்விற்கும் வாக்குறுதி அளிக்கின்ற வகையில், பல்வேறு செயல் திட்டங்களைத் தீட்டி பணியாற்றிக் கொண்டு, ஏழை, எளிய மக்களுடைய இதயங்களை எல்லாம் மகிழச் செய்து வரும் எம் இதய தெய்வம் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு, இங்கே பேசுகின்ற நிலையைத் தந்திட்டமைக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியை அவர்களுடைய பொற்பாதங்களில் காணிக்கையாக்கிக் கொள்கிறேன்.

எத்தனையோ முதலமைச்சர்கள் ஆண்டு இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் திராவிட இனத்தவர்கள், பச்சைத் தமிழர்கள் என்று கூறிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அப்படிப்பட்டவர்கள் எல்லாம் கூனி, குருகி, வெட்கி, தலைகுனியும்படி, இன்றைக்குத் தஞ்சையிலே தரணிபோற்றுகின்ற அளவிற்கு தமிழ் மாநாட்டை,. உலகமே வியக்கின்ற அளவுக்கு நம்முடைய இதய தெய்வம் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நடத்தியிருக்கிறார்கள். இன்றும் தமிழ், என்றும் தமிழ், எதிலும் தமிழ் என்று முழங்கிக்கொண்டிருப்பவர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி ஒருவர் மட்டுமே என்பதையும், 10 மற்றும் 12 ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வுகளில், தமிழ்ப் பாடத்தில் முதல் மதிப்பெண் பெறுகின்ற இரண்டு மாணவர் மற்றும், இரண்டு மாணவியர்களுக்கு, புரட்சித் தலைவி அவர்களுடைய பெயரிலே பரிசுத் திட்டம் ஒன்றைத் தொடங்கவுள்ள, தங்கப் பதக்கம் வழங்குகின்ற அந்த

[திரு. கே. சிங்காரம்] [1995 ஏப்ரல் 27

நிகழ்வினை வழங்கியிருக்கின்ற காரணத்தினாலே, தங்கத் தமிழுக்காக உழைத்துக் கொண்டிருக்கின்ற ஒரே தலைவி நம் தங்கத் தலைவி என்பதை, இன்றைக்குத் தங்களைத் தேர்ந்தெடுத்த மக்களுக்காக உழைக்காமல் இந்த அவையில் சிறிது நேரம், பேரவை வளாகத்தில் சிறிது நேரம், அண்ணாசாலையில் சிறிது நேரம், டெல்லிக்குக் காவடி தூக்கிக் கொண்டு சில நாள் என்று சுற்றிக் கொண்டிருக்கின்றவர்கள் உணரவில்லை என்றாலும் கூட, நம்முடைய இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு பக்கபலமாக இருந்து கொண்டிருக்கின்ற நாட்டு மக்கள் நன்றாக உணர்ந்து இருக்கிறார்கள்.

பின்தங்கிய நிலையிலிருக்கும் தர்மபுரி மாவட்டத்திற்கு பல்வேறு திட்டங்களை இன்றைக்குத் தந்து, அவற்றையெல்லாம் செயற்படுத்துகின்ற நம்முடைய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மாவட்ட தொடக்கக் கல்வித் திட்டம் என்ற செயல் திட்டத்தை தர்மபுரி மாவட்டத்திற்குத் தந்தமைக்காகவும், நூல்கள் வாங்கிட தர்மபுரி நூலக ஆணைக் குழுவிற்கு பல இலட்சம் ரூபாயை வழங்கியுள்ளமைக்காகவும், இந்திய அரசின் தொழில்நுட்பவியல் மேம்பாட்டு தொழில் முனைவோர் மேம்பாட்டு வாரியத்தோடு இணைந்து தொழில்வள வாய்ப்பு விவர நூல் தயாரிக்கும் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கியுள்ளமைக்காகவும், பர்கூர் அரசினர் பொறியியல் கல்லூரிக்கு கட்டிடங்கள் கட்டுவதற்காகவும் பல லட்சம் ரூபாய் வழங்கியுள்ளமைக்காகவும், ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியிடங்கள் தோற்றுவித்தமைக்காகவும், தர்மபுரி மாவட்ட மக்களின் சார்பில் என்னுடைய நன்றியைக் காணிக்கையாக்கிக் கொள்கிறேன்.

சமுதாய மறுமலர்ச்சிக்குக் கல்வி ஒன்றே சாதனம் என்று சொன்னால் காந்தியடிகளுடைய மறு உருவமாகவும், பெண்களுக்குக் கல்வி, சமவுரிமைக் கல்வி என்று கொள்கையளவில் சொன்ன தந்தை பெரியார் அவர்களுடைய அந்தக் கொள்கைக்கு இன்றைக்குச் செயல்வடிவம் தந்து கொண்டு இருக்கின்ற நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் பெரியாருடைய மறு உருவமாகவும், தன்னுடைய இறுதி மூச்சு உள்ளவரை தமிழ் என்று முழங்கிக் கொண்டிருந்த அண்ணா அவர்களுடைய தமிழ்ப் பற்றுக்கு ஆக்கம் தருகின்ற வகையிலே செயல்படுகின்ற காரணத்தினாலே, பேரறிஞர் அண்ணா அவர்களுடைய மறு உருவமாகவும், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு அவர்களுடைய வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கின்ற வகையிலே புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தந்த இட ஒதுக்கீட்டை இன்றைக்கு சட்டமாக்கித் தந்திட்ட நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள், நம்முடைய இதய

1995 ஏப்ரல் 27] [திரு. கே. சிங்காரம்]

தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய மறு பதிப்பாகவும், விளங்கிக் கொண்டிருக்கின்ற நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள், இன்று கடுமையான நிதி நெருக்கடி இருந்தாலும், தேவையான நிதியை ஒதுக்கீடு செய்து, கல்விக்காக பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்ற காரணத்தினாலே, இன்றைக்குக் கல்லூரியினுடைய எண்ணிக்கையிலும், பரப்பளவிலும் பெரிய அளவைக் கொண்டிருக்கிற சென்னைப் பல்கலைக் கழகத்தை இரண்டாகப் பிரித்து நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் திருப்பெயரிலேயே தர்மபுரியை தலைமையிடமாகக் கொண்டு ஒரு பல்கலைக் கழகத்தைத் துவக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போலவே, என்னுடைய தொகுதியில் பாபிரெட்டிப்பட்டி ஒன்றியம், பி. துரிஞ்சிப்பட்டி என்ற கிராமத்தில் உள்ள அரசினர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த வேண்டுமென்று அவ்வூர் பொதுமக்கள் அரசுக்கு செலுத்த வேண்டிய பங்குத் தொகையினை 1980-ல் செலுத்தியும் இன்று வரையில் ஆண்டுக்காண்டு முன்மொழிவுகளை மட்டும்தான் மக்கள் கண்டுகொண்டு இருக்கிறார்கள்.

பிற்பகல் 12-25

ஆகவே நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசாங்கத்திலே இந்த உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக ஆக்கவேண்டுமென்று பல்வேறு சந்தர்ப்பங்களில் நம்முடைய கல்வி அமைச்சரிடம் எடுத்துக் கூறியிருக்கிறேன். ஆகவே இந்த உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக ஆக்கித்தரும்படி கேட்டுக் கொள்கிறேன். அதைப் போலவே என்னுடைய சொந்த ஊரான மொரப்பூரில் சுமார் பத்து ஆண்டுகளாக பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவராக நான் இருந்துக் கொண்டிருக்கிறேன். 4 ஆண்டுகளுக்கு முன்பு அந்த மேல்நிலைப் பள்ளியை இரண்டாகப் பிரித்து புதிய பெண்கள் உயர்நிலைப் பள்ளி வேண்டும் என்று நான் கேட்டிருந்தேன். கடந்த ஆண்டுகூட தமிழக அரசால் 8 புதிய பெண்கள் உயர்நிலைப் பள்ளிகளை துவக்குவதற்காக முன்மொழிவுகள் நிதித்துறை வரையிலும் சென்றிருந்தது. அந்த முன்மொழிவுகளில் மொரப்பூர் இரண்டாவது இடத்தில் இருந்தது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே மொரப்பூரிலே புதியதாக ஒரு பெண்கள் உயர்நிலைப் பள்ளியைத் துவக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதைப் போலவே பொறியியல் கல்லூரி, பாலிடெக்னிக் போன்றவை எல்லாம் தமிழக அரசு அனுமதி அளித்து வந்ததை என்ஜினியரிங் கவுன்சில் அனுமதிக்க வேண்டுமென்று சுப்ரீம் கோர்ட்

அளித்த தீர்ப்புக்கிணங்க இன்றைக்கு அதுபோன்ற ஒரு நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறதா இல்லையா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலுரையில் குறிப்பிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர்.*

*மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி :* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பதிலுரையில்தான் இதைக் குறிப்பிட வேண்டும் என்று இல்லை. பொறியியல் கல்லூரி மற்றும் பல்தொழில் பயிலகங்களைப் பொறுத்தவரையில் ஆல் இண்டியா கௌன்சில் ஆஃப் டெக்னிக்கல் எஜுகேஷன் அவர்களுக்குத்தான் முழு உரிமை இருக்கிறது என்று இப்போது தெரிவித்திருக்கிறார்கள். உச்சநீதிமன்றத்திலும் அப்படி ஒரு தீர்ப்பைத் தந்திருக்கிறார்கள். ஆகவே மாநில அரசுக்கு இதில் ஏதும் பொறுப்பே இல்லை என்பதைப்போல அவர்கள் நடந்து கொண்டிருக்கிறார்கள். இது மாநிலத்திற்கு கல்வித் துறையிலே இருக்கின்ற கல்வி வளர்ச்சியிலே இருக்கின்ற ஒரு வாய்ப்பை தடுப்பதாக அமையும் என்று இந்த அரசு கருதுகிறது. இருப்பினும் பொதுவாக கான்ஸ்டிடியூஷன்படி எங்களுக்கு அந்த அதிகாரம் இருக்கிறது என்று அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இதுகுறித்து வர இருக்கின்ற 29-ந் தேதி ஒரு கூட்டம் அங்கே நடைபெற இருக்கிறது. கல்வித் துறையின் செயலாளர் அவர்கள் அதிலே கலந்து கொண்டு அரசின் கருத்தை வலியுறுத்த இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*திரு. கே. சிங்காரம் :* துணைத் தலைவர் அவர்களே, அதைப் போலவே என்ஜினியரிங் ஆசிரியர்களாக பணியாற்றிக் கொண்டிருக்கிற ஆசிரியர்களுக்கு மற்ற ஆசிரியர்களுக்குக் கொடுக்கின்ற சலுகைகள் அனைத்தும் கொடுப்பதற்கு மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் வழி செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதைப்போல என்ஜினியரிங் ஆசிரியர்களாக பணியாற்றிக் கொண்டிருப்பவர்கள் எம்.ஏ.பி.எட். பட்டம் பெற்று மேல்நிலைப் பள்ளியிலே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அவர்கள் மேல்நிலைப் பள்ளிகளில் தலைமை ஆசிரியர்களாகப் பணிபுரிவதற்கு மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்குத் தமிழினுடைய வளர்ச்சிக்காக பல்வேறு நிலைகளில் எல்லாம் சிறப்பாக எந்த ஒரு முதலமைச்சரும் செய்திராத அளவுக்கு பல்வேறு பணிகளை செய்து கொண்டிருக்கிற நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியிலே 'கல்வியிற் சிறந்த தமிழ்நாடு, புகழ்

கம்பன் பிறந்த தமிழ்நாடு' என்று நாம் பாடுவதை 'கல்வியிற் சிறந்த தமிழ்நாடு புகழ் கம்பன் பிறந்த தமிழ்நாடு. தமிழ் வளர்த்த புரட்சித் தலைவி நாடு' (மேசையைத் தட்டும் ஒலி) என்று நாம் கூறுவோம் என்று கூறி, பேசுகின்ற வாய்ப்பு நல்கிய தங்களுக்கு நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்வித்துறை, தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத் துறை மீது என்னுடைய கருத்தினைக் கூற விரும்புகிறேன். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கொள்கைக் குறிப்பிலே பல்வேறு கல்வி வளர்ச்சித் திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். குறிப்பாக கல்விக்காக சென்ற ஆண்டைவிட அதிகமான நிதிகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அதிலே திட்டச் செலவுக்காக நிதிகளை அதிகப்படுத்தி இருப்பதை நான் மனப்பூர்வமாக வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில் தொடக்கக் கல்வி, நடுநிலைக் கல்வி, உயர்நிலைக் கல்வி, மேல்நிலைக் கல்வி போன்ற இடங்களுக்கு இன்றைக்கு ஆசிரியர்கள் பற்றாக்குறை இருப்பதால் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக நிரப்ப வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தப் பள்ளிக்ளிலே ஆசிரியர் பணியிடங்கள் மிகப் பற்றாக்குறையான நிலையிலேயும் இன்றைய தினத்திலே தமிழ்நாடு முழுவதும் இந்தப் பாடங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. குறிப்பாக இதிலே நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் கொடுக்கின்ற அந்த விகிதாச்சார அடிப்படையிலே பார்க்கின்றபோது ஆசிரியர் மாணவர் விகிதாச்சாரம்—தொடக்கப் பள்ளிகள் 50, நடுநிலைப் பள்ளிகள் 52, உயர்நிலைப் பள்ளிகள் 44, மேல்நிலைப் பள்ளிகள் 32 என்றெல்லாம் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதுவெல்லாம் உண்மைக்கு மாறானதாகவே தமிழ்நாட்டில் இருக்கிறது என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-30

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆசிரியர் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன என்பதை அரசு ஏற்றுக் கொள்கிறது. ஆசிரியர்கள் தேர்வு தற்போது நடைபெற்று வருகிறது. இந்தத் தேர்வு முடிந்தவுடன் வரும் ஜூன் மாதத்திலே இடைநிலை ஆசிரியர்கள் பணியிடங்கள் ஏறத்தாழ முழுமையாக நிரப்பப்படுகின்ற வாய்ப்பு உருவாக்கப்பட்டிருக்கிறது.

அதற்கும் மேலே காலியிடங்கள் இருக்குமானால் தொடர்ந்து ஆசிரியர்கள் தேர்வு வாரியம் ஆசிரியர்கள் பணியிடங்களுக்காகத் தேர்வை நடத்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்ற புள்ளி விவரங்கள் சரியானது அல்ல என்ற வகையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். இருக்கின்ற ஆசிரியர்கள் எண்ணிக்கையையும், மாணவர்கள் எண்ணிக்கையையும் அப்படியே அவர்கள் கணக்குப் போட்டுப் பார்க்கக்கூடாது. பொதுவாக எத்தனைப் பணியிடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன; எவ்வளவு மாணவர்கள் பயிலுகிறார்கள், அந்த வகையில் இந்த விகிதாச்சாரம் எப்படி இருக்கிறது என்று ஒட்டுமொத்தமாகப் பார்க்கவேண்டும். ஒரு குறிப்பிட்டப் பள்ளியில் ஒரு சில நேரங்களில் 2, 3 ஆசிரியர்கள் இல்லாத நிலை இருக்கலாம். ஆகவே, ஒட்டுமொத்தமாக அதை மட்டும் வைத்துக்கொண்டு தமிழ்நாடு முழுவதும் இப்படியிருக்கிறது என்ற ஒரு தோற்றத்தை உருவாக்க மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முயலக்கூடாது; உண்மையிலேயே எத்தனை ஆசிரியர் பணியிடங்கள் இருக்கின்றன, எவ்வளவு மாணவர்கள் பயிலுகிறார்கள் என்பதைக் கணக்கிட்டுத் தான் இந்தக் குறிப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குறிப்பாக ஒரு ஆசிரியருக்கு 50 மாணவர்கள் என்று சொன்னால் இன்றைக்கு என்னுடைய தொகுதியில் பல்வேறு பள்ளிகளில் நான் உதாரணமாகச் சொல்ல முடியும். அனேகமாக 100-லிருந்து 120 குழந்தைகள் வரை இன்றையதினம் படிக்கின்ற நிலைமை இருக்கிறது. இரண்டு ஆசிரியர்கள் பாடம் நடத்தக்கூடிய இடத்தில், 3 ஆசிரியர்கள் பாடம் நடத்தக் கூடிய இடத்தில் ஒரு ஆசிரியர் பாடம் நடத்தினால் எப்படி அந்தப் பள்ளிகளின் மூலம் நாம் எதிர்பார்க்கக்கூடிய மாணவர்களை தமிழ்நாட்டில் உருவாக்க முடியும் என்பதைத் தான் நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட நிலைமைகள் இருப்பதை உணர்ந்து தான் அரசு ஓராசிரியர் பள்ளிகளை, இரண்டு ஆசிரியர் பள்ளிகளாகவும்; இரண்டு ஆசிரியர் பள்ளிகளை மூன்று ஆசிரியர் பள்ளிகளாகவும்; தொடர்ந்து படிப்படியாக முன்னேற்றிக் கொண்டு வருகிறது. ஆசிரியர் பணியிடங்கள் அதற்காக ஆண்டுதோறும் தோற்றுவிக்கப்படுகிறது. ஒரு சில இடங்களில் ஆசிரியர்கள் அதிகமாக இருந்தால் அந்த ஆசிரியர்களை, ஆசிரியர் பணியிடங்கள் பற்றாக்குறையாக இருக்கின்ற இடங்களுக்கு மாற்றியும் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

1995 ஏப்ரல் 27]

படிப்படியாக இது சீரடைந்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகிற கருத்து ஒரு சில பள்ளிகளைப் பொறுத்தவரையில் உண்மையாக இருக்கலாம். அப்படிப்பட்ட நிலைமை இருந்தால் குறிப்பாக அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்.

*திரு. ஜி. பழனிசாமி :* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதை நான் மிகைப்படுத்திச் சொல்லவேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை. குறிப்பாக என்னுடைய தொகுதியில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி ஒன்று இருக்கிறது. அதில் 120 குழந்தைகள் இருக்கிறார்கள். அந்தக் குழந்தைகளுக்காக அந்தத் தலைமை ஆசிரியர் கேட்டுக் கொண்டிருக்கிற கோரிக்கை உங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் சட்டமன்றத்தில் பேசி, பொதுக் கூட்டத்தில் பேசுவதைப் போல எங்களுக்கு மைக் வாங்கிக் கொடுத்து விடுங்கள். நான் அதன் மூலமாக அந்தக் குழந்தைகளுக்கு பாடம் நடத்துகிறோம் என்று சொல்லி அவர்கள் கொடுத்திருக்கிற கோரிக்கையின் அடிப்படையில் அந்த ஸ்கூலில் மைக் வைத்து, ஸ்பீக்கர் வைத்து பாடம் நடத்த......

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* திரு. பழனிசாமி, நீங்கள் அந்த ஸ்கூல் என்று பொதுவாகச் சொல்லுகிறீர்கள். அதைக் குறிப்பாக இந்த ஸ்கூல், இந்தத் தலைமை ஆசிரியர் என்று சொன்னால் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள். எனவே குறிப்பிட்டுச் சொல்லுங்கள்.

*மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி :* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை இருந்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை முன்பே என்னிடத்தில் தெரிவித்து இருக்கலாம். அதற்கான உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கும். இந்த நாள் வரை காத்திருந்து, சட்டமன்றத்தில்தான் அதை வந்து சொல்லவேண்டும் என்ற ஒரு உள்நோக்கத்தோடு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே பேசுவதாக நான் கருதுகிறேன். உண்மையிலேயே அவரது தொகுதியில் இருக்கின்ற அந்தப் பள்ளிக்கு அவர் ஏதாவது செய்ய வேண்டும் என்று எண்ணியிருந்தால் அந்த நிலைமை உருவான நேரத்திலேயே அவர் என்னுடைய கவனத்திற்கு அல்லது துறை அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்திருக்கவேண்டும். அப்படி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொண்டு வந்ததாக எனக்கும் நினைவில்லை, அதிகாரிகளும் அதைப்பற்றி தெரிவிக்கவில்லை. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட ஒரு பள்ளியை வைத்துக்கொண்டு அப்படி தமிழகம் முழுவதும் இருப்பது போன்ற ஒரு மாயத் தோற்றத்தை உருவாக்குவதற்கு முயற்சிக்கக் கூடாது.

**திரு. ஜி. பழனிசாமி** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இடத்திலே சொல்வதே இந்த மா-மன்றத்தை மிகப் புனிதமாக கருதுகிற காரணத்தால்; அந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணவேண்டும் என்பதற்காக இந்த அவையில் குறிப்பிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மா-மன்றத்தில் சொல்லுவது மிகவும் புனிதமானது. இந்த மா-மன்றத்திற்கு என்று தனியாக ஒரு இறையாண்மை உண்டு. அதை நான் மறுக்கவில்லை. ஆனால் எப்போதோ நடைபெற்ற ஒன்றை, 2, 3 மாத காலமாக இருந்த ஒரு பிரச்சினையை, என்னிடத்திலும் தெரிவிக்காமல், துறைக்கும் தெரிவிக்காமல் அதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் நேரடியாக சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் அவருக்கு இருக்கின்ற ஜனநாயகக் கடமையை ஆற்ற முற்படாமல், இந்த மன்றம் தொடங்கவேண்டும், இங்கே வந்து தான் சொல்ல வேண்டும் என்று பிடிவாதமாக இந்த உறுப்பினர் இருந்ததைத்தான் நான் குறை சொல்கிறேன். இந்த மன்றத்திலே சொல்லுவது எந்தவகையிலும் பொருத்தமானது என்பதை நான் ஒத்துக் கொள்கிறேன்.

**திரு. ஜி. பழனிசாமி** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது போல் நான் ** இருக்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : திரு. பழனிசாமி, ** அவ்வாறு அவர் சொல்லவில்லை.

**திரு. ஜி. பழனிசாமி** : **

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : ** என்றும் அமைச்சர் சொல்லவில்லை. சொல்லாத வார்த்தையை நீங்கள் சொல்லக்கூடாது. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

*பிற்பகல் 12.35*

**திரு. ஜி. பழனிசாமி** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய கடமையை சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே நான் சரியாகவே செய்திருக்கின்றேன். சென்ற மாதம்கூட 1 இலட்சத்து 12 ஆயிரம் ரூபாயை பொது மக்களிடத்திலே வசூல் செய்து, அது அரசாங்கத்திடம் கொடுக்கப்பட்டு, இப்போது அந்தப் பள்ளியினுடைய பணிகள் துவக்கப்பட்டு இருக்கின்றன. ஒரு பொறுப்பான

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

சட்டமன்ற உறுப்பினர் என்ற காரணத்தால்தான் என்னாலே அதைச் செய்ய முடிந்தது. பஞ்சாயத்து யூனியனுக்குச் சொந்தமான இடம் அந்த பெண்கள் உயர்நிலைப் பள்ளி இருக்கின்ற இடம். அது ஒரு குறுகிய இடம். அதிலே கிட்டத்தட்ட 800 குழந்தைகள் படிக்கிறார்கள். அதற்கு 3 ஏக்கர் நிலத்தை 5 இலட்சம் ரூபாய் கொடுத்து வாங்கப்பட்டு அதற்கு நம்முடைய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், சமீபத்திலே நான் அவரிடத்திலே போகாதபோதுகூட, அந்த இடத்திற்கு பட்டா வழங்கப்பட்டு இருக்கிறது என்று சொன்னால், * எல்லா சட்டமன்ற உறுப்பினர்களைப் போல் நானும் மிகச் சிறப்பாகச் செய்திருக்கிறேன். ஆகையால் ** என்பது என்னிடத்திலே கிடையாது என்பதை......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் நான் சொன்னதைத் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். இவ்வளவு பொறுப்புணர்வோடு இதையெல்லாம் செய்தவர்கள், அந்த ஒரு குறிப்பிட்ட விஷயத்தை ஏன் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வரவில்லை என்ற ஆதங்கத்திலேதான் நான் கேட்கிறேன். அவர் அதைக் கொண்டு வந்திருந்தால் எப்போதோ இந்தப் பிரச்சினையைத் தீர்த்திருக்க முடியும். ஆசிரியர் இல்லை என்று சொன்னால், ஆசிரியர் பணியிடம் தேவை இருக்கிறது என்று சொன்னால் அதை அரசால் செய்து கொடுக்க முடியும். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எல்லோரும் உட்காருங்கள். திரு. சுப்புரத்தினம் உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிக்கொண்டிருக்கும்போது, இப்படி எழுந்து நின்றுகொண்டு இருக்கக் கூடாது, உட்காருங்கள், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லி முடிக்கட்டும்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உரிய காலத்தில் துறைக்கு அல்லது அமைச்சருக்குத் தெரிவித்து இருக்கலாமே; நாம் அடிக்கடி சந்தித்துக் கொண்டு இருக்கிறோமே; அப்போது ஏன் இதைத் தெரிவிக்கவில்லை. தெரிவித்திருந்தால் முன்பே செய்திருக்கலாமே என்றுதான் நானும் சொல்கிறேன். ஆக, இருவருக்கும் ஒரே கருத்துதான். அந்தப் பள்ளிக்கு வரவேண்டிய சலுகை வரவேண்டும்.

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

ஆசிரியர் பணி இடங்கள் நிரப்பப்பட வேண்டும். அதிகமான ஆசிரியர்கள் வர வேண்டும். அதை உரிய காலத்திலே சொல்லவில்லையே என்றுதான் குறிப்பிட விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** எல்லோரும் உட்காருங்கள். திரு. சுப்புரத்தினம், என்ன பாயின்ட் ஆஃப் ஆர்டர்?

**திரு. ஆ. சுப்புரத்தினம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. பழனிசாமி அவர்கள் பேசுகின்றபோது, * எல்லா சட்டமன்ற உறுப்பினர்களைப் போல தானும் மிகச் சிறப்பாக செய்திருக்கிறேன் என்று குறிப்பிட்டு இருக்கிறார். அது அவையிலே இருக்கக்கூடிய மற்ற உறுப்பினர்களுடைய உணர்வுகளையும் திறமைகளையும் குறைத்து மதிப்பிடுவதாக அமையும், எனவே, அப்படி அவர் பேசியதை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கிவிட வேண்டுமென்று நான் தங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் பேசும்போது ** என்று மற்ற சட்டமன்ற உறுப்பினர்களெல்லாம் குறைபடுவதைப்போல கூறியிருக்கிறார். எனவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் பேசிய அந்தச் சொற்றொடரை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பழனிசாமி, மற்ற சட்டமன்ற உறுப்பினர்களையெல்லாம் குறைத்து மதிப்பிடுவதாக எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் கருதுவதனால், எல்லா சட்டமன்ற உறுப்பினர்களைப் போல நானும் மிகச் சிறப்பாக செய்திருக்கிறேன் என்று வேண்டுமானால் மாற்றிக் கொள்ளலாம். எனவே, அதை அப்படி மாற்றம் செய்து கொள்ளலாம்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உண்மையிலேயே சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் மனவேதனைப்பட வேண்டுமென்ற நோக்கத்திலே நான் அப்படிச் சொல்லவில்லை. அப்படியானால் அதை நீக்கி விடுங்கள். அது தேவையில்லை. இருந்தாலும் ஒரு சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே நான் என்னுடைய கடமையைச் சரியாக செய்து இருக்கிறேன் என்று வேண்டுமானால் சேர்த்துக் கொள்ளலாம்.

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதேபோன்று, பள்ளிகளுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கட்டிடங்கள் கட்டிக் கொடுப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்கு உதவி செய்ய வேண்டும். அதேபோன்று பள்ளிகளுடைய கட்டிடங்கள் எல்லாம் கீற்றுக்கொட்டகைகளிலே இருக்கின்றன. பல இடங்களில் கான்கிரீட் கட்டிடங்கள் இல்லை. உயர்நிலைப் பள்ளிகளில் அப்படி இருக்கின்றன; மேல்நிலைப் பள்ளிகளிலே அப்படி இருக்கின்றன. ஆகவே, அவற்றுக்கெல்லாம் நீங்கள் கட்டிடங்களைக் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்* : மாண்புமிகு கல்வி அமைச்சர்.

*மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி:* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் இதுவரை எந்த முதலமைச்சரும் செய்திராத அளவில் கல்வித் துறையைச் சார்ந்த அலுவலர்களையும் அமைச்சரையும் அழைத்து, தமிழகம் முழுவதும் இருக்கின்ற அனைத்து நிலைப் பள்ளிகளிலும், அது தனியார் பள்ளியாக இருந்தாலும் சரி; அரசு பள்ளியாக இருந்தாலும் சரி, அதில் ஒரு சர்வே நடத்த வேண்டுமென்றும், என்னென்ன குறைபாடுகள் இருக்கின்றன; கட்டிட வசதிகள் வேண்டுமா; கழிப்பறை வசதி வேண்டுமா; குடிநீர் வசதி வேண்டுமா; தளவாடங்கள் வேண்டுமா; விளையாட்டுத் திடல் வேண்டுமா என்பதுபோன்ற எல்லா பிரச்சினைகளையும் ஆராய்ந்து ஒரு அறிக்கை தரவேண்டுமென்று தெரிவித்தார்கள். அதில் அரசு தொடர்பான பள்ளிகளைப் பொறுத்தவரையில் ஏறத்தாழ 1400 கோடி ரூபாய்க்கு மேல் தேவைப்படும் என்ற ஒரு அறிக்கையை நாங்கள் தந்திருக்கிறோம். அந்த அடிப்படையில் 3 ஆண்டுகாலத்திலே இதையெல்லாம் நிறைவேற்றவேண்டுமென்று படிப்படியாக நிதி ஒதுக்கி இதைச் செய்வதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அனுமதி அளித்து இருக்கிறார்கள். முதல் கட்டமாக இப்போது பணிகள் நடந்து வருகின்றன. ஆகவே, கட்டிடங்கள், விளையாட்டுத் திடல்கள், சுற்றுச்சுவர், கழிப்பறை வசதி, குடிநீர் வசதி மற்றும் மின் வசதி போன்ற அனைத்தும் எல்லா பள்ளிகளுக்கும் இன்னும் மூன்று ஆண்டுக்காலத்திலே தருவதற்கான ஒரு திட்டத்தை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தீட்டி, அதைப் படிப்படியாக நடைமுறைப்படுத்தி வருகிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையும் இதிலே அடங்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. பழனிசாமி, இரண்டு நிமிடங்களிலே பேசி முடித்துக் கொள்ளலாம். சுருக்கமாகப் பேசி முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** எல்லாப் பள்ளிகளுமே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சரி, எல்லாப் பள்ளிகளுக்கும் சேர்த்து.

**திரு. ஜி. பழனிசாமி:** அதுவும் எங்கள் தொகுதியிலே, அப்படி வைத்துக் கொள்வோம். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உங்கள் தொகுதிக்கு வேண்டாம், தமிழ்நாட்டுக்கு வேண்டாம், எங்கள் தொகுதியிலே செய்யுங்கள். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் சொன்னதற்கு மிக்க நன்றி, ஆனால் இன்றைக்கு அரசினுடைய பள்ளிகளைப் பற்றியெல்லாம் அமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். தனியார் பள்ளிகளைப்பற்றி இன்றைக்கு அரசாங்கத்திலே என்ன வழிகாட்டுதல் இருக்கிறது, என்ன கொள்கை நிலை இருக்கிறது? இன்றைக்குத் தனியார் பள்ளிகள் தமிழ்நாடு முழுமையும் இருக்கக்கூடிய பள்ளிகள் வியாபார முறையிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆக, அங்கேயும் ஆசிரியர் பற்றாக்குறை இருக்கிறது. ஆகவே, இதற்கெல்லாம் அரசாங்கம் அதற்கான கொள்கையை வகுத்து இருக்கிறதா? அதற்கு வழிகாட்டி நெறிமுறைகள் இருக்கிறதா என்று சொன்னால், ஒரு வியாபாரம் போன்று இன்றைக்குத் தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய கல்வி நிலையத்தினுடைய நிலைகள் இருக்கின்றன. இதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்லும்பொழுதுகூட அவர்கள் சொல்லலாம் என்று நான்....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே இயங்கி வருகிற உதவி பெறுகின்ற மற்றும் தனியார் பள்ளிகளைக் கட்டுப்படுத்துவதற்காக ஒரு சட்டம் இருக்கிறது. அதைப்போலத் தனியார் பள்ளிகளிலே ஒரு சிலவற்றில் கல்வி வியாபாரம் ஆக்கப்படுகிறது. என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அப்படி எங்கேயாவது நிகழ்ந்தால் அதைத் தடுப்பதற்கும், தண்டனை தருவதற்கும் இங்கே ஒரு சட்டமே இயற்றப்பட்டு

1995 ஏப்ரல் 27] [பேராசிரியர் க. பொன்னுசாமி]

அது நடைமுறையிலே இருக்கிறது. எனக்கிருக்கிற வருத்தமெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் இப்படிப் பொதுவாகக் கல்வி வியாபாரமாக்கப்படுகிறது என்று சொல்லிவிட்டுப் போய்விடுகிறார்களே தவிர எந்தவொரு பள்ளியில், குறிப்பிட்ட ஒரு இடத்தில் இப்படி நடந்திருக்கிறது என்று புகார் தருவதற்கு யாருமே முன் வருவதில்லை. அப்படி ஒரு புகாரை மாண்புமிகு உறுப்பினர் அவர்களோ அல்லது அவர்களைச் சார்ந்தவர்களோ அல்லது அதனால் பாதிக்கப்பட்டவர்களோ தருவதற்கு முன்வந்தால் அரசு உடனடியாக நடவடிக்கையெடுத்துத் தண்டனை வழங்குவதற்குத் தயாராக இருக்கிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இதிலே மிகவும் அக்கறையோடு இருக்கிறார்கள். எங்களுக்கெல்லாம் ஆணையிட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* திரு. ஜி. பழனிசாமி.

*திரு. ஜி. பழனிசாமி:* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவரம் இருக்கிறது. பிறகு உங்களுக்குத் தருகிறேன். அதேபோன்று....

*மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி:* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவரங்கள் கொடுத்தால் போதாது. ஏதாவது ஒரு புகாரின் அடிப்படையிலேதான் நடவடிக்கை எடுக்க முடியும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அது தெரியாதது அல்ல. ஒரு புகார் வர வேண்டும். ஏதாவது ஒரு வகையிலே ஒரு புகார் இருக்குமானால் அந்தப்புகாரின் அடிப்படையில் நடவடிக்கை எடுப்பதற்கு அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*திரு. ஜி. பழனிசாமி:* நான் கொடுத்துவிடுகிறேன். (குறுக்கீடு) நான்தான் கொடுக்கிறேன் என்று சொல்லுகிறேனே. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்பொழுதே வேண்டுமானாலும் கொடுக்கிறேன், நான் கொடுத்து விடுகிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, அதை நான் உங்களுடைய நினைவுக்குக் கொண்டு வருகிறேன்.

அதேபோன்று, ஆரம்பப் பள்ளிகளிலேயே தமிழை ஆங்கிலம் போன்று கற்றுக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு கல்வியமைச்சரவர்கள் பல தடவை பேசியிருக்கிறார்கள். இன்றைய தினம் தமிழ்நாட்டிலே ஆங்கில வழி மெட்ரிகுலேஷன் பள்ளிகள் தெருவுக்குத் தெரு தொடங்கப்பட்டு இருக்கின்றன. ஆனால் அரசால் அறிவிக்கப்பட்டிருக்கிற திட்டம் தமிழ்நாட்டிலே ஏதாகிலும் நிறைவேற்றப்பட்டிருக்கிறதா என்றுதான்...

*மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி:* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நர்சரி பள்ளிகளுக்கு அங்கீகாரம் வழங்கப்படும்போதே, தமிழ்ப்பாடம் கட்டாயமாக நடத்தப்பட வேண்டுமென்ற ஒரு நிபந்தனையோடுதான் அங்கீகாரம் தரப்படுகிறது. அதற்குப் பின்னாலும் அவர்கள் தவறு செய்தால் அதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசு கூறியிருக்கிறது. அதைப்போலவே மெட்ரிகுலேஷன் பள்ளிகளிலே இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை ஏற்பட்டதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

ஆகவே, இதையெல்லாம் கருத்திலே கொண்டு, கட்டாயமாக தமிழைத் தமிழ்நாட்டிலே படித்தேயாக வேண்டும் என்ற வகையில் ஒரு ஆணை பிறப்பிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்த ஆணை விரைவிலே வெளியிடப்படும். மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களைப் பொறுத்தவரையில், தமிழ் படிக்காமல் தமிழ்நாட்டில் யாரும் பட்டம் பெறவே முடியாது என்ற ஒரு நிலைமை உருவாக்கப்பட வேண்டும் என்றுதான் கருதுகிறார்கள். ஆகவே, அந்த அடிப்படையிலே நடவடிக்கையெடுக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் சற்றுப் பொறுத்திருக்க வேண்டும். பொறுத்திருந்து பார்த்தால் அந்த ஆணை வெளிவந்த பின்பு இது எப்படி நடைமுறைப்படுத்தப்படுகிறது என்பதையும், அதை அவரே பாராட்டுகின்ற அளவிற்கு இருக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* திரு. பழனிசாமி, உரையை முடித்துக்கொள்ளலாம். ஒரு நிமிடம்.

*திரு. ஜி. பழனிசாமி:* முடித்து விடுகிறேன், கொஞ்சம் இருங்கள். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதேபோன்று என்னுடைய தொகுதி அநேகமாக அதிகமாகத் தாழ்த்தப்பட்ட ஏழை எளிய மக்கள் இருக்கக்கூடிய ஒரு பகுதியாகும். அங்கே ஒரு (குறுக்கீடு) தஞ்சாவூரையும் சேர்த்து - அங்கே ஒரு தொழில் கல்லூரியை நீங்கள் துவங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

பல்வேறு பல்கலைக் கழகங்களைப்பற்றி - ஐந்து பல்கலைக் கழகங்களைப்பற்றி இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஒன்று, அண்ணாமலைப் பல்கலைக் கழகக் கல்லூரிகளைப் பற்றி விவரமே இதில் தரப்படவில்லை. என்ன காரணம் என்று தெரியவில்லை. எதற்காக, ஒரு விவாதத்திற்கு வரக்கூடாது என்பதற்காக (குறுக்கீடு) அண்ணாமலைப் பல்கலைக் கழகம் (குறுக்கீடு) ஆமாம், கல்லூரி. அது சம்பந்தமான........

*மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி:* அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைப்பற்றி எந்தப் பிரச்சினையும் இல்லை. (குறுக்கீடு) பிறகு என்ன பிரச்சினை இருக்கிறது? சொல்லுங்கள்.

*திரு. ஜி. பழனிசாமி:* சொல்லுகிறேன். இதைப்பற்றியெல்லாம் இங்கே நீங்கள் குறிப்பிடவில்லை. அநேகமாக மத்திய மாநில அரசு சார்பாக மூன்று கோடி ரூபாய் நாம் அந்தப் பள்ளிகளுக்கு நிதி அளிக்கிறோம். அதைப்போன்று சின்டிகேட் மெம்பர்கள் (குறுக்கீடு) இல்லையா? செனட் மெம்பர்களையெல்லாம் நாம் நியமனம் செய்கிறோம். ஆனால் அந்தப் பல்கலைக் கழகத்தைப் பற்றி விவாதம் வரக் கூடாது என்பதற்காக இதிலே கொண்டு வரவில்லை என்று நான்.......

பிற்பகல் 12.45

*மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி:* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பல்கலைக் கழகங்களைப் பற்றி விவாதம் வரக் கூடாது என்று கல்வித் துறை நிச்சயமாகக் கருதாது. விவாதங்கள் வர வேண்டும், வந்தால், அங்கே தவறுகள் ஏதாவது இருக்குமானால் அதற்கான நடவடிக்கை எடுக்க முடியும். அந்த அடிப்படையிலேதான் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையின்பேரில் அனைத்துப் பல்கலைக் கழகங்களுக்கும் பொதுவான ஒரு சட்டம் கொண்டுவர வேண்டுமென்று முடிவு எடுத்து சட்டத்தை இயற்றி அனுப்பியிருக்கிறோம். அது எங்கோ மூலையிலே போட்டு அமுக்கி வைக்கப்பட்டிருக்கிறது. இன்னும் அதற்கான ஒப்புதல் கிடைக்காததால்தான் இந்த நிலையெல்லாம் தமிழ்நாட்டிலே இருக்கிறது. தமிழ்நாட்டிலே இருக்கின்ற பல்கலைக்கழகங்கள் ஒவ்வொன்றும் தன்னாட்சி பெற்றவை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். அரசு நேரிடையாக அதிலே தலையிட முடியாது. அரசின் கடமை அதற்கு நிதி தருவதோடு நின்றுவிடுகிறது. அதற்கு மேல் அங்கே தவறுகள் நிகழுமானால் அரசு நேரிடையாகத் தலையிட முடியவில்லை. இதற்கான அதிகாரம் அரசுக்கு வேண்டுமென்று கேட்கிறபோதுதான் அங்கே இருப்பவர்கள் எதிர்க்கிறார்கள். இங்கேயிருந்து சட்டத்தை இயற்றி அனுப்பினாலும்கூட அந்தச் சட்டத்திற்கு இன்னும் ஒப்புதல் கிடைக்காத காரணத்தினால் நடைமுறைப்படுத்துவதிலே சிக்கல் இருக்கிறது. ஆனாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல பல்கலைக் கழகங்களில் தவறுகள் இருந்தால் அதை இங்கே விவாதிப்பதிலே தவறு இல்லை. அந்தப் புகார் இன்னும் அரசுக்கு வரவில்லை. வேண்டுமானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புகார்களைத் தரலாம். அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்.

*திரு. ஜி. பழனிசாமி:* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அங்கே மாணவர்களைச் சேர்க்கிறபோது, கட் ஆப் மார்க் எல்லாம் சேர்க்கப்படவில்லை என்று சொல்கிறார்கள். ஆக சிபாரிசின் அடிப்படையிலேதான் மாணவர்களை அங்கே சேர்க்கிறார்கள். பொதுவாக, அங்கே இன்ஜினியரிங் கல்லூரியாக இருந்தாலும், மருத்துவக் கல்லூரியாக இருந்தாலும், ஒதுக்கக்கூடிய இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் மாணவர்களைச் சேர்ப்பதில்லை. இப்படி குறைபாடுகள். அது மட்டுமல்ல, அங்கே அநேகமாக, இந்தக் கல்வி வியாபாரம் என்பதே அந்தப் பல்கலைக் கழகத்திலேதான் துவக்கமாக இருக்கிறது. இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்போது, முன்பு இருந்த கல்வி அமைச்சர், இது சம்பந்தமாக ஒரு விவரத்தைக்கூட அவர்கள் அறிவித்தார்கள். ஆகவே, அதுபோன்று இன்றைக்கு அந்த அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே இருக்கிறது. பணம் மட்டும் கொடுப்பதற்கு அதிகாரம் பெற்றிருக்கிறோம், கண்காணிக்க முடியாது என்று சொன்னால், அதற்குரிய சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்து உடனடியாக நடவடிக்கையை நீங்கள் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு)

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:* மாண்புமிகு கல்வி அமைச்சர்.

*மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி:* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அண்ணாமலைப் பல்கலைக் கழகம் ஒருதன்னாட்சி பெற்ற தனிப் பல்கலைக் கழகம். அது மற்ற பல்கலைக் கழகங்களிலேயிருந்து வேறுபட்டது. அதற்கு என்று தனி சட்டமே இருக்கிறது. அவர்களுக்கு என்று சில தனி உரிமைகள் தரப்பட்டிருக்கின்றன. அவர்களை ஒரு அளவுக்கு மேல் அரசு கேள்வி கேட்க முடியாது. இருப்பினும் அங்கே நடைபெறுகின்ற தவறுகள் ஏதாவது இருக்குமானால், அங்கே பிரச்சினைகள் ஏதும் எழுமானால், அரசு தலையிட்டு அதைச் சரிசெய்து கொண்டிருக்கிறது. குறிப்பிட்டு ஏதாவது புகார்களை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தருவார்களேயானால் அது தொடர்பாக உரிய முறையிலே ஆராய்ந்து, தக்க நடவடிக்கை எடுக்க அரசு தயாராக இருக்கிறது.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:* திரு. பழனிசாமி, உரையை முடித்துவிடுங்கள்.

*திரு. ஜி. பழனிசாமி:* மனோன்மணியம் உயர்நிலைப் பள்ளியிலே நாம் நடவடிக்கை, ஆசிரியர்கள் மீது எடுத்திருக்கிறோம். ஆம், சுந்தரனார் பள்ளியிலே நீங்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள். அதைப்போன்று ஏன் இங்கே எடுக்க முடியாது? (குறுக்கீடு)

1995 ஏப்ரல் 27]

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர்.*

*மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி:* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் சொல்கிறேன். நீங்கள் புகார் கொடுங்கள், நாங்கள் நடவடிக்கை எடுக்கிறோம். புகார் தருவதற்கு ஏன் தயங்குகிறீர்கள்? புகார் கொடுங்கள், நடவடிக்கை எடுக்க அரசு தயாராக இருக்கிறது.

*திரு.ஜி. பழனிசாமி:* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதேபோன்றுதான் இன்றைய தினத்திலே போலிச் சான்றிதழ்களைப் பள்ளிகளிலே கொடுத்து மாணவர்களைச் சேர்க்கின்ற புகார்கள் வந்துகொண்டிருக்கிறது. ஆகையால், அரசாங்கம் நேரிடையாக அந்தப் பட்டியலைப் பெற்று அவர்களைப் போன்று போலிச் சான்றிதழ் மூலம் பள்ளியிலே சேருபவர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். *(குறுக்கீடு)*

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர்.*

*மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி:* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து அரசு சென்ற ஆண்டிலிருந்து மிகத் தீவிரமாக நடவடிக்கை எடுத்து வருகிறது. சென்ற ஆண்டிலே ஏறத்தாழ 162 போலிச் சான்றிதழ்கள் கண்டறியப்பட்டு, அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு சான்றிதழ் போலி என்று கண்டுபிடித்தவுடனே, அவர்கள் எழுதிய தேர்வு முதலிலே ரத்து செய்யப்படுகிறது. அதற்கடுத்து அவர்கள் மீது காவல் துறையினரால் உரிய நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இந்த ஆண்டிலேகூட இடைநிலை சான்றிதழ் 62-ம்., அதேபோன்று 10-ஆம் வகுப்பிலும் போலிச் சான்றிதழ் 62-ம் கண்டறியப்பட்டு, அவர்கள் மீது நடவடிக்கை தொடரப்பட்டிருக்கிறது. கல்வித் துறை மூலமாக ஒரு ஆணையிடப்பட்டிருக்கிறது. இந்தப் போலிச் சான்றிதழ்களை ஏன் அவர்கள் உருவாக்குகிறார்கள் என்பதை ஆராய்ந்தபோது, இரண்டு காரணங்களுக்காக அவர்கள் செய்கிறார்கள். ஒன்று வேலைவாய்ப்பு பெறுவதற்கு, மற்றொன்று தொழிற்கல்வி பெறுவதற்கு. இந்த இரண்டிலும், இப்படிப்பட்ட தவறுகளைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் ஒரு ஆணையிட்டு, தொழிற்கல்வியிலே மாணவர்கள் சேர்க்கை முடிந்தவுடன், அந்த மாணவர்களது சான்றிதழ்கள், அரசு தேர்வு இயக்ககத்திற்கு அனுப்பப்பட்டு அங்கே ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டு, அது போலி என்று கண்டறிந்தால் அந்த மாணவர்கள் கல்லூரியைவிட்டு வெளியே அனுப்பப்படுகிறார்கள்.

இப்படி சென்ற ஆண்டிலேகூட 4 மாணவர்கள் வெளியிலே அனுப்பப்பட்டிருக்கிறார்கள். அரசு இதிலே மிகவும் கவனமாக இருக்கிறது. போலிச் சான்றிதழ்கள் நடமாடுவதைத் தவிர்ப்பதற்கு, தடுப்பதற்கு, தடைசெய்வதற்கு, இந்த அரசு எப்போதும் தயங்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. பழனிசாமி, உரையை முடித்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) திரு. தம்புசாமி பேசட்டும். மீதி இருக்கின்ற கருத்துக்களை தம்புசாமி சொல்வார். அவர் நன்றாகப் பேசுவார். (குறுக்கீடு) உரையை முடித்துவிடுங்கள், 22 நிமிடம் ஆகிவிட்டது. ஒரு மணிக்கு முடிக்க வேண்டும். இன்னும் 6 உறுப்பினர்கள் பேச வேண்டும். (குறுக்கீடு) ஒரே ஒரு நிமிடம் பேசி முடித்துவிடுங்கள்.

பிற்பகல் 12.50

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுக் கழகத்தின் தஞ்சை சரஸ்வதி மகாலில் 3 ஆண்டுக் காலமாக இயக்குநர் நியமிக்கப்படாமல் இருக்கிறார். எனவே அங்கே உடனடியாக நியமிக்கவேண்டும்.

அதேபோன்று அந்த தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தில் 4 பேராசிரியர்களுக்கு ஓய்வூதியம் வழங்கவில்லை. உலகத் தமிழ் மாநாடு நடத்தப்பட்டு அதிலே சில புத்தகங்கள் எல்லாம் எங்களுக்குக் கொடுத்தீர்கள். அந்தப் புத்தகங்களை வாங்கிப் பார்த்தால் நன்கு விவரமாக இருந்தது. தமிழைப் பற்றியும், தமிழ் வளர்ச்சி பற்றியும் விரிவாகப் பேசுகிறோம். 70 கோடி ரூபாய் செலவு செய்து உலகத் தமிழ் மாநாடு நடத்தியிருக்கிறோம். ஆனால் அதிலே கல்வி அமைச்சர் உட்பட அனைத்து அமைச்சர்களும் தமிழ் கையெழுத்துப் போடாமல் ஆங்கிலத்தில் கையெழுத்துப்போட்டிருக்கிறீர்கள். அது ஏன் என்று எனக்குத் தெரியவில்லை. இது என்ன தமிழ் வளர்ச்சி? ஏன் ஆங்கிலத்தில் போட்டிருக்கிறீர்கள் என்று எல்லோருக்கும் ஒரு குழப்பம் வந்திருக்கிறது. 6,7 அமைச்சர்கள் கையெழுத்துப் போட்டிருக்கிறார்கள். எல்லோருமே ஆங்கிலத்தில்தான் போட்டிருக்கிறார்கள். இதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் அளிப்பார்களா என்று கேட்டு பேசுவதற்கு அனுமதி தந்ததற்காக நன்றிகூறி முடிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருமதி ரெ. சியாமளா.

திருமதி ரெ. சியாமளா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

1995 ஏப்ரல் 27] [திருமதி ரெ. சியாமளா]

பார் போற்றும் புகழ்மிக்க பாரதி கண்ட புதுமைப்பெண்ணே! கன்னித் தமிழகத்தை ஆளுகின்ற கனிவுமிக்க எங்கள் அன்னையே!

அன்னை தெரஸாவால் பாராட்டப் பெற்ற எங்கள் இதய தெய்வமே! ஆறு கோடி மக்களின் நம்பிக்கை நட்சத்திரமே!

தாழ்த்தப்பட்ட மக்களின் ஒளிவிளக்கே!

சோதனைகளை சாதனைகளாக மாற்றிடும் எங்கள் இதய தெய்வமே! சமூகநீதி காத்த வீராங்கனையே!

அன்னையே, தாயே, ஆதிபராசக்தியே!

பெண் சிசு கொலையைத் தவிர்க்க தொட்டில் குழந்தை திட்டத்தை அறிவித்த எங்கள் ஏற்றமிகு தலைவியே!

பெண்குலத்தின் ஒளி விளக்கே!

எங்கள் குடும்ப தெய்வமே!

வரலாற்றுச் சிறப்பு மிக்க வரி இல்லாத பட்ஜெட்டை அறிவித்த எங்கள் தங்கத் தலைவியே!

கோவில்பட்டியில் ஆண்டாண்டுக் காலமாக இருந்து வந்த குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க ரூ.1 கோடி 32 இலட்சத்திற்கான ஆணை வழங்கி கோவில்பட்டி குடிநீர்த்திட்டம் நிரந்தரமாகச் செயல்பட உத்தரவு பிறப்பித்த எங்கள் தங்கத் தலைவிக்கு எங்கள் தொகுதியின் மக்கள் சார்பாக குறிப்பாக ஏழைத் தாய்மார்களின் சார்பாக எனது நன்றியைத் தங்கள் பொற்பாதங்களில் காணிக்கையாகச் சமர்ப்பிக்கிறேன்.

கோயில்பட்டி நகரில் அனைத்து மகளிர் காவல் நிலையம் மற்றும் தீப்பெட்டி பட்டாசுத் தொழிற்சாலைகளில் வேலைசெய்யும் குழந்தைகளுக்கான ஒரு முறைசாராக் கல்வி மையம் அமைக்க ஆணை வழங்கிய எங்கள் அன்பு அன்னைக்கு எனது நன்றியினை மீண்டும் ஒரு முறை காணிக்கையாக்கிக்கொண்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் வழகாட்டுதலின்படி கல்வித்துறையில் பல புதிய அரிய சிறந்த சாதனைகள் நிகழ்த்திவரும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கொணர்ந்துள்ள கல்வி மானியக் கோரிக்கையை வரவேற்றுப் பேச வாய்ப்பளித்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தங்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, எனக்குக் கூடுதலாக ஐந்து நிமிடம் தர வேண்டும் என்று தங்களிடம் பணிவன்பாகக் கேட்டுக்கொள்கிறேன். கல்வியைப் பற்றி நமது தேசத்தந்தை மகாத்மா காந்தி அவர்கள்

``Education is the manifestation of perfection that is already in man."

[திருமதி ரெ. சியாமளா] [1995 ஏப்ரல் 27

என்று குறிப்பிட்டுள்ளார்கள். ஒரு நாடு முன்னேற அதாவது மக்களின் வாழ்க்கைத் தரம் முன்னேற அதன் கல்வித்தரம் கண்டிப்பாக உயரவேண்டும். எனவேதான் நமது இதயதெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கல்விக்காக அதிக நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள். இவ்வாண்டு நமது அரசின் செலவான ரூ.9910/- கோடியில் 23 விழுக்காடு அதாவது ரூ.2233/- கோடியை அதாவது சுமார் 1/4 பங்கு அளவினை கல்விப் பணிக்கென நமது இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒதுக்கியுள்ளார்கள். அனைத்துக் கல்விக்கும், ஏன், வாழ்க்கைக்குமே அடித்தளம் தொடக்கக் கல்வியாகும். கல்விக்கான நிதி ஒதுக்கத்தில் ஏறத்தாழ பாதியான ரூ.1015கோடி தொடக்கக் கல்விக்காக அதாவது 3350 தொடக்கப் பள்ளிகளுக்கும் 5578 நடுநிலைப் பள்ளிகளுக்கும் தரப்பட்டுள்ளது மிகவும் பாராட்டுக்குரிய விஷயமாகும். உயர்நிலைப் பள்ளிகளில் உள்ள 6 முதல் 8 வகுப்புகளுக்கான ஒதுக்கீட்டையும் சேர்த்தால் தொடக்கக் கல்விக்கான மொத்த ஒதுக்கீடு இன்னும் அதிக அளவில் கூடும். ஒன்று முதல் ஐந்து வகுப்புகளில் படிப்பதற்குரிய ஆறு முதல் பதினொன்று வயது சிறுவர் சிறுமியர்கள் அனைவரையும் நாம் பள்ளிகளில் சேர்த்துள்ளோம். இது ஒரு மிகப் பெரிய சாதனையாகும். அதுபோலவே ஆறு முதல் எட்டு வகுப்புகளில் படிப்பதற்குரிய பதினொன்று முதல் பதினான்கு வயது சிறுவர் சிறுமியர்களில் சுமார் 98 விழுக்காடு நாம் பள்ளிகளில் சேர்த்துள்ளோம்.

பிற்பகல் 12.55

இவ்வாண்டு தொடக்கப் பள்ளிகள் 100 புதிதாகத் தொடங்கவும் 25 தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக உயர்த்தவும் நமது புரட்சித் தலைவி அவர்களின் அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் குழந்தைகள் நலம் தழுவிய 15 அம்சத் திட்டத்தின்கீழ் எடுக்கும் நடவடிக்கைகளும் தொடக்கக் கல்வியை மேலும் முழுமையாக்க உதவுகின்றன.

ஒன்று முதல் ஐந்து வகுப்புகளில் சேரும் சிறுவர் சிறுமியரில் தொடர்ந்து படிக்காமல் நின்று விடுவோர் எண்ணிக்கை தற்போது 16 விழுக்காடாகவும் ஆறு முதல் எட்டு வகுப்புகளில் இந்த டிராப்அவுட் 34.74 விழுக்காடாகவும் குறைந்துள்ளது. தொடக்கப் பள்ளிகளை நன்கு கவனிக்க ஒவ்வொரு மாவட்டத்திலும் தனியே "மாவட்ட தொடக்கக் கல்வி அதிகாரி"யை நமது புரட்சித் தலைவி அவர்கள் நியமித்துள்ளார்கள். இது தொடக்கக் கல்வி மேம்பாட்டுக்கான ஒரு சிறந்த நிருவாக சீர்திருத்தமாகும்.

தற்போதுள்ள 3340 உயர்நிலைப் பள்ளிகளுக்கும் 2318 மேல்நிலைப் பள்ளிகளுக்கும் மேலாக இவ்வாண்டு நமது மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் 40 உயர்நிலைப்பள்ளிகளையும் 30 மேல்நிலைப் பள்ளிகளையும் தொடங்குவதாக அறிவித்துள்ளதை நான் மனமார வரவேற்கிறேன், பாராட்டுகின்றேன். மேல்நிலை வகுப்புகளான 11,12 வகுப்புகளில் பயிலும் 6.07 இலட்சம் மாணவ மாணவியரில் 1.15 இலட்சம் மாணவ மாணவியர் தொழில் பாடங்களை பயின்று வருவது ஒரு அகில இந்திய சாதனையாகும், இதை நாம் மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களின் பல்வேறு நீண்ட நாளையப் பிரச்சனைகளைத் தீர்த்ததோடு அல்லாமல் பகுதி நேரத் தொழிற் கல்வி ஆசிரியர்களின் பணியிடங்களை முழுநேரப் பணியிடங்களாக ஆக்கிய எங்கள் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு எங்கள் நன்றியினைக் காணிக்கையாக்குகின்றோம்.

முறையான ஆசிரியப் பணியிடங்களுக்குப் பல ஆண்டுகள் அரசு மானியமின்றி அவதிக்குட்பட்டு வந்த அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகளின் நெடுநாளைய கோரிக்கையை ஏற்று அப்பணியிடங்களுக்கு மானியம் வழங்கிய நமது இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பல நூறு ஆசிரிய ஆசிரியைகளின் வாழ்வில் விளக்கேற்றி வைத்துள்ளார்கள். இப்பிரச்சினையில் இன்னும் பாக்கியிருக்கும் சில பள்ளிகள், பணியிடங்கள், ஆசிரியர்கள் பற்றிய கோரிக்கைகளை எங்கள் புரட்சித் தலைவி அவர்கள் தாயுள்ளத்துடன் கருணையுடன் கவனித்துத் தீர்த்து வைப்பார்கள் என நம்புகிறேன்.

பள்ளிப் பாடத் திட்டத்தை அறிவியல் வளர்ச்சிக்கேற்ப அவ்வப்பொழுது திருத்தியமைக்க வேண்டுமென்ற நோக்கில் அரசு அண்மையில் அறிவித்துள்ள புதிய பாடத் திட்டத்தை வரவேற்கக் கடமைப்பட்டுள்ளேன்.

மாவட்டக் கல்வி அதிகாரிகள் அதாவது D.E.O. அலுவல் சார்ந்த ஒரு சிறு விவரத்தை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அன்பான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அவர்கள் கீழ் உள்ள தனியார் பள்ளிகளின் ஆசிரியர்கள், பிற பணியாளர்கள் ஒவ்வொருவருடைய பணிப் பதிவேடுகளில் ஊதிய உயர்வு, விடுப்பு ஆகிய எல்லாப் பதிவுகள் ஒவ்வொன்றுக்கும் மாவட்டக் கல்வி அதிகாரிதான் கையொப்பம் இட வேண்டுமென்ற ஒரு சூழ்நிலை உள்ளது. அதுபோலவே தனியார் பள்ளிகளின் சம்பளப் பட்டியல்கள் உட்பட எல்லாப் பட்டியல்களுக்கும், ஒவ்வொன்றுக்கும் உள்ள ஏராளமான இணைப்புகள் (Annexure)

எல்லாவற்றிலும் மாவட்டக் கல்வி அதிகாரிகள்தான் கையொப்பம் இட வேண்டும் என இருக்கிறது. இந்த கையெழுத்துப் போடும் வேலை மாவட்டக் கல்வி அதிகாரிகளுக்கு நாள்தோறும் பல மணி நேரம் ஆகிவிடுகிறது. மாதத்தில் கடைசி வாரத்தில் இன்னும் கூடுதலாக நேரம் ஆகிவிடுகிறது. பள்ளிக் கல்வி அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இதற்கு ஒரு பரிகாரம் கண்டால் மாவட்டக் கல்வி அதிகாரிகளுடைய நிருவாகம் மற்றும் கல்விப் பணிகளைக் கவனிக்க அவர்களுக்கு அதிக நேரம் கிடைக்கும். சர்வீஸ் புத்தகங்களில் மாவட்டக் கல்வி அதிகாரிகளின் P.A.-க்கள் அல்லது அலுவலக சூப்பரிண்டெண்டுகள் கையெழுத்திட்டால் போதும் என்ற சூழ்நிலையை உருவாக்கித் தந்தால் நன்றாக இருக்கும் என்ற எனது தாழ்மையான கோரிக்கையை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் முன்பாக நான் வைக்க விரும்புகிறேன்.

*1992*-ல் நமது அரசு நிறுவிய தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றத்தின் மூலம் கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள், நிருவாக மேம்பாட்டுக்கும், உயர் கல்வியின் தர உயர்வுக்கும் அரசு பாடுபட்டு வருவது வரவேற்கத் தக்கது. அது பிரிட்டிஷ் கவுன்சில் போன்ற அமைப்புகளின் உதவியையும் பெறுவதாக இங்கே அறிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்கா, ஆஸ்திரேலியா, மலேசியா, மொரிஷியஸ் போன்ற நாடுகளில் உள்ள உயர்கல்வி அமைப்புகளுடன் இம்மன்றம் தொடர்பு கொண்டு தன் பணிகளை விரிவாக்கினால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

பொது நூலகங்களுக்கு நூலக வாரியாக வசூலித்து அரசு வழங்கும் தொகை *1990-91*ல் 2½ கோடி ரூபாயாக இருந்தது. இப்பொழுது இந்த நிதி *6* கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. நிதிவளம் குறைந்த புதுக்கோட்டை, தருமபுரி மாவட்டங்களில் உள்ள மாவட்ட நூலக ஆணைக் குழுக்களுக்கு நிதிவளம் மிகுந்த சென்னை நூலக ஆணைக் குழுவிலிருந்து இந்தத் தொகையினை மாற்றம் செய்ய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அனுமதித்தால் அரசுக்கு செலவின்றி பின்தங்கிய மாவட்டங்களில் நூலக வசதியைப் பெருக்க ஏராளமான நிதி ஒதுக்கீடு கிடைக்கும் என்ற என் கருத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் *1.00*

ஐ.ஏ.எஸ்., ஐ.எப்.எஸ்., ஐ.பி.எஸ்., தேர்வுகளில் நமது தமிழ்நாட்டு மாணவர்கள் அதிக அளவில் வெற்றி பெறுவதில்லை என்பது பெரும்பாலான ஒரு கருத்தாகும். அதில் அதிக அளவில் மாணவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமாய் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களை நான் தாழ்மையுடன் கேட்டுக்

கொள்கிறேன். விளையாட்டு வளர்ச்சிக்காக பல்வேறு வகைகளில் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஊக்குவித்து வருகிறார்கள். பார்புகழ கட்டப்பட்டுள்ள நேரு விளையாட்டு அரங்கம் உலகத்தோரால் பாராட்டப்படுகிறது. இந்த ஆண்டு கடைசியில் சென்னையில் நடைபெறவுள்ள 7-வது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளைச் சிறந்த முறையில் நடத்துவதற்கான பணிகள் உலகத் தமிழ் மாநாட்டுப் பணிகள் போன்று தீவிரமாகத் தொடங்கப்பட்டுள்ளன. இந்த விளையாட்டுப் போட்டிகள் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களது சாதனைகளில் மேலும் ஒரு வைரக்கல்லாக நிச்சயமாக அமையும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். கடைசியாக என்னுடைய தொகுதி சம்பந்தமான சில கோரிக்கைகளை நான் இங்கே வைக்க விரும்புகிறேன். எங்களது கோவில்பட்டி தொகுதியில் திருவேங்கடம் பகுதியில் நிட்சோப நதியின் குறுக்கே ஒரு பாலம் கட்டித்தர வேண்டுமாய் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களைத் தங்கள் மூலமாக நான் கேட்டுக் கொள்கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:* போதும், பேசி முடித்துவிடுங்கள்.

*திருமதி ரெ. சியாமளா:* நன்றி சொல்லி முடித்துவிடுகிறேன்.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:* சரி.

*திருமதி ரெ. சியாமளா:* கோவில்பட்டி தாலுக்காவை இரண்டாகப் பிரித்து எட்டயபுரத்தைத் தலைமை இடமாகக் கொண்டு தனித் தாலுக்கா அமைக்கும் திட்டம் நீண்ட நெடுங்காலமாக அரசின் பரிசீலனையில் உள்ளது. அதை டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தாயுள்ளத்துடன் பரிசீலனை செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன். கோவில்பட்டியில் ஒரு சப்-கோர்ட் அமைக்க வேண்டுமென்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். எட்டயபுரம் அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள், மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தித்தர வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன். கோவில்பட்டி நகரில் பெண்கள் கலைக் கல்லூரி ஒன்றினை அமைத்துத்தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். கோவில்பட்டி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியிலும், பெண்கள் மேல்நிலைப் பள்ளியிலும் சுமார் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட மாணவ மாணவியர்கள் படிக்கிறார்கள். அவர்களுக்குக் கூடுதல் கட்டிடங்கள் கட்டித்தர வேண்டுமாய் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டு, இந்த மானியக் கோரிக்கை மீது பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

[1995 ஏப்ரல் 27

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* திருமதி கற்பகம் இளங்கோ.

*திருமதி கற்பகம் இளங்கோ:* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாய்க்குலத்தின் தனிப்பெருந் தலைவியாகவும், பெண்ணினத்தின் காவல் தெய்வமாகவும் விளங்கும் நமது இதயதெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எங்களது காரைக்குடி நகரத்தில் அனைத்து மகளிர் காவல் நிலையம் அமைக்க ஆணையிட்டது குறித்து எனது தொகுதி மக்கள் சார்பில் முதற்கண் எனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டு கல்வி மானியக் கோரிக்கையில் பேச விழைகிறேன். *1995-96*-ம் ஆண்டில் கல்வித் துறைக்கென *2233.17* கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்ததிலிருந்து நமது புரட்சித் தலைவி அவர்கள் கல்விக்குக் கொடுக்கின்ற முக்கியத்துவம் தெள்ளத் தெளிவாக உள்ளங்கை நெல்லிக்கனிபோல் அனைவருக்கும் புலனாகிறது. கிராமப்புறப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கும், நகரங்களில் பயிலும் மாணவச் செல்வங்களுக்கும் இடையே அறிவுத் திறனில் வேறுபாடு இருப்பதால், அனைவருக்கும் கட்டாயக் கல்வி என்ற கோட்பாட்டினைத் தரணியில் உள்ள அனைவருக்கும் கல்வி கிடைக்கும் வகையில் கிராமப்புறங்களிலுள்ள கல்வி நிலையங்களிலுள்ள இடர்ப்பாடுகளைக் கண்டறிந்து, அதனை அகற்றி, இந்தியாவின் முதுகெலும்பாகத் திகழும் கிராமப்புறங்களில் தரமான கல்வியைத் தாராளமயமாக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். கிராமப்புறங்களில் பணிபுரியும் ஆசிரியப் பெருமக்களுக்கும் குறிப்பிட்ட ஒரு காலத்திற்கு சிறப்பு வல்லுநர்களைக் கொண்டு பயிற்சி கொடுத்து நல்ல முறையிலே அவர்கள் மாணவச் செல்வங்களுக்கு கல்வி போதிக்க ஆவன செய்ய வேண்டுமாய் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். அதனைப்போன்று நடைமுறை வாழ்க்கையும், கல்வியும் வேறுபட்டு நிலவுகின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. கல்வி கற்றோர் என்று கூறும் பலரும், எந்த நேரத்தில் எப்படி பாங்க் சலானைப் பூர்த்தி செய்வது, மணியார்டரை எப்படி நிரப்புவது என்றுகூடத் தெரியாத சூழ்நிலையில், அவலமான சூழ்நிலையில் இருந்து வருகிறார்கள். எனவே மாணவச் செல்வங்களுக்குக் கற்றுக் கொடுக்கும் கல்வியானது நடைமுறை வாழ்க்கைக்குப் பயன்படக்கூடிய கல்வியாக இருக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் என்னுடைய கோரிக்கையாக வலியுறுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). *1995-96*-ம் ஆண்டில் *25* தொடக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகளாகவும், *40* நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், *30* உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்படுவதை மனதார வரவேற்று எனது தொகுதியான காரைக்குடி நகரில் வ.உ.சி., நகரவை துவக்கப்பள்ளி

மற்றும் சாக்கோட்டை ஒன்றியத்திலுள்ள தென்கரை ஊராட்சி ஒன்றியத் துவக்கப்பள்ளி ஆகியவற்றை இந்த ஆண்டு நடுநிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துமாறும், அதேபோன்று காரைக்குடி நகர, பாரதி நகரவை நடுநிலைப்பள்ளி மற்றும் சாக்கோட்டை ஒன்றியத்திலுள்ள இலுப்பக்குடி நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துமாறும் அன்போடு வேண்டுகிறேன்.

*பிற்பகல் 1.05*

கல்லல் ஒன்றியத்தில் தக்கட்டியிலும், முத்துராமலிங்கபுரத்திலும் இதுவரை தொடக்கப் பள்ளியே கிடையாது. அங்கு தொடக்கப் பள்ளி ஒன்று அமைத்திட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வேப்பங்குளம், கல்லல், அரங்கநல்சிறுவயல் ஊர்களிலுள்ள நடுநிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றித்தர வேண்டுமென்று வலியுறுத்த விரும்புகிறேன்.

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்திலே அரசு உயர்நிலைப் பள்ளி இருக்கிறது என்றால் அது சிவகங்கையிலும், காரைக்குடியிலும்தான் இருக்கின்றன. கல்விக்குக் கண்ணாகத் திகழும், மையமாகத் திகழும் காரைக்குடியில் இதுவரையில் அரசு மகளிர் பள்ளி இல்லை என்பது மிகவும் அவல நிலையாக இருக்கிறது. எனவே, காரைக்குடியில் முத்துப்பட்டிணத்தில் இருக்கும் அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளியை இந்த ஆண்டே தயவுசெய்து பரிசீலனை செய்து, கருணையுள்ளத்தோடு, அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டுமென்று வேண்டுகோள் வைக்கிறேன். பெண்கள் அதிகமாகப் பயிலும் அந்தப் பள்ளியில் கழிப்பறை தனியே கிடையாது. எனவே, அதனையும் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோன்று, பல்வேறு மகளிர் நடுநிலைப் பள்ளிகளில் கழிப்பறை வசதி இல்லாமல் இருக்கின்றன. அவற்றையும் அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு விளையாட்டு மைதானத்தை அமைத்து ஒரு பயிற்றுநரை அமர்த்தி அதன் மூலம் சிறப்புறச் செயல்பட்டு வரும் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில், இந்தத் திட்டத்தை நகராட்சிகளுக்கும் விரிவுபடுத்தி அங்கேயும் ஒரு விளையாட்டு மைதானம் அமைத்து, ஒரு பயிற்றுநரை அமர்த்திக் கொடுத்தால் அப்பகுதி மக்களும் பயன் அடைவார்கள் என்ற கோரிக்கையை வைக்க விரும்புகிறேன். (மணி அடிக்கப்பெற்றது). (குறுக்கீடு)

*மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி:* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதற்குப் பெயரே ஊரக வளர்ச்சி மையங்கள். ஊரகப் பகுதிகளிலேதான் அமைக்கப்பட வேண்டுமென்ற கருத்தோடு இது துவங்கப்பட்டது. ஆகவே, நகராட்சிப் பகுதிகளிலே அமைக்கப்படுவதற்கான வாய்ப்புகள் தற்போது இல்லை.

*திருமதி கற்பகம் இளங்கோ:* தற்போது அந்தத் திட்டம் இல்லையென்றாலும், வருங்காலத்தில் பரிசீலனை செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் ஆதி திராவிடர் நலத் துறையின் சார்பில் அமைக்கப்பெறும் விடுதிகளில் வார்டன் ஒருவரை நியமித்து இருக்கிறார்கள். அங்கு ஒரு இன்ஸ்டிரக்டர் ஒருவரை நியமித்தால் அந்த விடுதிகளில் பயிலும் அந்த...

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:* கோரிக்கையாகக் கேளுங்கள். கல்வி அமைச்சர் சம்பந்தப்பட்டது இல்லை. மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

* *மாண்புமிகு திரு.எம். ஆனந்தன்:* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மாணவர்கள் விடுதிகளில் இருக்கிற வார்டன்களை டியூட்டர் - வார்டன் என்றுதான் போட்டிருக்கிறோம். அந்த டியூட்டர் கோச்சிங் கொடுக்கிறார்.

*திருமதி கற்பகம் இளங்கோ:* அமைச்சர் அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தென் மாவட்டங்களிலே அரசு மகளிர் ஐ.டி.ஐ., என்றால் அது மதுரையில்தான் இருக்கிறது. வேறு பகுதிகளில் கிடையாது. ஆகவே, காரைக்குடியில் அரசு மகளிர் ஐ.டி.ஐ., ஒன்று அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காரைக்குடி நகராட்சியில் இருக்கும் வ.உ.சி., நகர மன்றத் தொடக்கப் பள்ளிக்கும், ஆலங்குடி நகர மன்றத் தொடக்கப் பள்ளிக்கும் நிலையான கட்டிடம் இல்லாமல் மாணவர்களும், ஆசிரியர்களும் அவதியுறுகிறார்கள். எனவே, இந்த ஆண்டு அதனைப் பரிசீலனை செய்து நிலையான கட்டிடம் அமைத்துத்தர ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* சீக்கிரம் பேசி முடியுங்கள்.

*திருமதி கற்பகம் இளங்கோ:* பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தில் காரைக்குடியில் 1985-ஆம் ஆண்டு அழகப்பா கல்வி நிறுவனங்களை ஒருங்கிணைத்து அழகப்பா பல்கலைக் கழகம் பாரத

ரத்னா டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களால் அமைக்கப்பட்டது. அப்படி அழகப்பா உடற்பயிற்சிக் கல்லூரி மற்றும் அழகப்பா கலைக் கல்லூரியில் முதுகலைப் பாடப் பகுதிகள் அழகப்பா கல்வியியல் கல்லூரி முதலியவை அழகப்பா பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்டு அழகப்பா கலைக் கல்லூரி மட்டும், தாயிடமிருந்து குழந்தையைப் பிரிப்பது போல தனித்து விடப்பட்டது. பிறகு அழகப்பா மாதிரி மேல்நிலைப்பள்ளியும் அழகப்பா பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்டது. காரைக்குடி பகுதியில் கல்விக் கண்ணை திறந்த வள்ளல் அழகப்பா செட்டியார் அவர்களது கனவு அழகப்பா கல்லூரியையும் சேர்த்துதான் அழகப்பா பல்கலைக் கழகம் உருவாக்கப்பட வேண்டும் என்பதுதான். டாக்டர் அழகப்பா செட்டியார் கல்வி அறக் கட்டளை கடந்த 29-9-1984 அன்று தமிழக அரசுடன் செய்து கொண்ட ஒப்பந்தமே அழகப்பா கல்லூரியையும் ஒருங்கிணைத்துதான் அழகப்பா பல்கலைக் கழகம் உருவாக்க வேண்டும் என்பது. அவ்வாறு இணைக்கப்படுவதன் மூலம் தமிழக அரசுடன் டாக்டர் அழகப்பா செட்டியார் கல்வி அறக் கட்டளை செய்து கொண்ட ஒப்பந்தம் முழுமையாக நிறைவேறப் பெறுவதுடன் காரைக்குடி பகுதியைச் சுற்றியுள்ள கிராமப்புற மக்களும் கல்வியில் முன்னேற வேண்டும் என்று டாக்டர் அழகப்பா செட்டியார் கண்ட கனவும் நனவாகும் சூழ்நிலை உருவாகும் என்பதை இந்த நேரத்தில் காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் வலியுறுத்த விரும்புகிறேன். (குறுக்கீடு)

*மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி:* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே ஒரு கருத்தைச் சொன்னார்கள். அந்தக் கல்லூரியை அழகப்பா பல்கலைக் கழகத்தோடு இணைக்க வேண்டுமென்று ஒரு ஒப்பந்தம் இருப்பதாக அழகப்பா பல்கலைக் கழக துணைவேந்தர் அவர்களும் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் அந்தக் கல்லூரியிலே பணியாற்றுகின்ற ஆசிரியர்களில் சிலர் அதற்கு எதிர்ப்பு தெரிவித்திருக்கிறார்கள். அரசுக் கல்லூரி ஆசிரியர் கழகத்தைச் சேர்ந்தவர்களும் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார்கள். அரசின் கொள்கையே மதுரைப் பல்கலைக் கழகத்திலே இணைந்திருக்கிற அழகப்பா கல்லூரியோடு இன்னும் அந்தப் பகுதியிலே இருக்கிற 10 கல்லூரிகளைச் சேர்த்து 11 கல்லூரிகளாக அந்தப் பல்கலைக் கழகத்திலே இணைக்கும் முறையிலே கொண்டு வரவேண்டும் என்பதுதான். ஆகவே, இதற்கிடையில் அப்படிப்பட்ட ஒரு பிரச்சினையை எழுப்புவது சரியாக இருக்காது என்பதையும், அழகப்பா கலைக் கல்லூரியை இணைக்கின்ற நேரத்திலே மற்றக் கல்லூரிகள் எல்லாம் அதிலே இணைக்கப்படுவதற்கான

வாய்ப்பு உருவாக்கப்படுவதற்கு அரசு முயற்சி எடுத்து வருகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். தனித்து இப்போது செய்துவிட்டால், அடுத்து மற்றவற்றிற்குக் கொண்டுவருவதற்கு இயலாத சூழ்நிலை ஆகிவிடும். ஏனென்றால், இது ஒரு யூனிட்டரி யுனிவர்சிட்டி.

*பிற்பகல் 1.10*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி கற்பகம் இளங்கோ, நீங்கள் இதோடு பேச்சை முடித்துக் கொள்ளலாம்.

**திருமதி கற்பகம் இளங்கோ:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மற்ற 10 கல்லூரிகளையும் நீங்கள் அஃப்ளியேட் செய்யுங்கள். ஆனால் காரைக்குடி அழகப்பா அரசு கலைக் கல்லூரியை மட்டும் நீங்கள் இன்டக்ரேட் செய்யுங்கள் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதை இணைப்புச் செய்வதற்குத்தான் அங்கே இருக்கிற ஆசிரியர்களிலே ஒரு பகுதியினர் எதிர்ப்புத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை அழைத்துப் பேசி அரசு இது தொடர்பாக ஒரு இணக்கமான சூழ்நிலையை உருவாக்கும்.

**திருமதி கற்பகம் இளங்கோ:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவ்வாறு ஒருங்கிணைப்பு செய்யும்பொழுது அழகப்பா அரசு கலைக் கல்லூரியில் தற்போது பணிபுரிந்துவரும் பிற அரசு கலைக் கல்லூரிகளில் இருந்து இடப்பெயர்வு பெற்று வந்துள்ள ஆசிரியர்கள் விரும்பினால் அவர்களது பணிமூப்பு 'சீனியாரிட்டி' பாதிக்காத வகையில் அவர்களையும் பல்கலைக் கழக கல்லூரியோடு இணைக்கப்படும் கலைக் கல்லூரியில் தொடர்ந்து பணியாற்றிட அனுமதிக்கப்பட வேண்டுமென்றும், கட்டண வசூலில் எதுவும் வித்தியாசம் இருக்கக்கூடாது என்றும், அதனைப் போன்று பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் இட ஒதுக்கீட்டுக் கொள்கைக்கு எந்தவித பங்கமும் விளைவிக்காத வண்ணமும், தாங்கள் உத்தரவுகள் பிறப்பித்து, 'இன்டக்ரேஷன்' ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, அவ்வாறு 'இன்டக்ரேட்' செய்தால் புதிதாகப் பாடப்பிரிவுகள் அதாவது இளநிலைப் பாடப்பிரிவுகள் B.B.S., B.B.A., B.V.N. போன்ற இளநிலை பாடப்பிரிவுகள் அந்தக் கல்லூரியில் வைக்க வேண்டும். ஏன் என்றால், பல்கலைக் கழகத்தில் அனைத்து வசதிகள் இருக்கின்றன. அதனைப் பயன்படுத்தி, அரசு கலைக் கல்லூரி மாணவர்களுக்கு பயன்பெறலாம்.

அதுபோக, புதிய கட்டிடங்களைக் கட்டவேண்டிய சூழ்நிலையோ அல்லது வேறு இடத்திற்கு மாற்ற வேண்டிய சூழ்நிலையோ நேராது என்ற காரணத்தினால், வள்ளல் அழகப்பச் செட்டியார் கண்ட கனவு நனவாக வேண்டுமென்றால், இந்தக் கலைக் கல்லூரியை இன்டக்ரேட் செய்தால்தான் அது முழுமையாக நிறைவேறும் என்று சொல்லிக் கொண்டு, ஒரேயொரு கோரிக்கையை மட்டும் சொல்லி முடித்துவிடுகிறேன்.

அதாவது காரைக்குடி நகரத்தில் ஒரு ஸ்டேடியம் அமைக்க வேண்டும். பல்வேறு விளையாட்டு வீரர்கள், பல்வேறு விளையாட்டு வீராங்கனைகளையும் தத்தெடுத்து அவர்களை ஊக்கப்படுத்திக் கொண்டுவரும் நமது இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவியின் ஆட்சிக் காலத்தில், காரைக்குடியின் பல்வேறு விளையாட்டுகளில் சிறந்து விளங்குகிறது. அங்கே பிசிகல் எஜுகேஷன் இன்ஸ்டியூட் இருக்கிறது. நான் ஏற்கனவே கேட்டு இருந்தேன், விளையாட்டுக்கான பல்கலைக் கழகம் அமைக்க வேண்டும் என்று. அமைச்சர் அவர்கள் அதைமட்டும் இப்போது கேட்காதீர்கள் என்று சொல்லிவிட்டார்கள். இப்பொழுது சிவகங்கையில் ஸ்டேடியம் அமைத்து விட்டார்கள். காரைக்குடிக்கு அடுத்தபடியாக நீங்கள் பிரையாரிட்டி கொடுத்து, ஸ்டேடியம் அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காரைக்குடியில் பெரியார் சாலையிலிருந்து 100 அடி ரோடு வழியாக கண்ணதாசன் மணிமண்டபம் செல்லும் சாலைக்கு என்.ஆர்.சாமி சாலை என்று பெயரிட வேண்டும். ஏனென்றால் அவர் பல்வேறு தொண்டுகள் புரிந்திருக்கிறார். எனவே, அந்தக் கோரிக்கையும் வைத்து, இப்போது புதிதாகக் கட்டப்பட இருக்கும் பேருந்து நிலையத்திற்கு வள்ளல் அழகப்பச் செட்டியார் அவர்கள் பெயரை வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்த சிறப்புமிக்க வாய்ப்பினைத் தந்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: டாக்டர் பிட்ரிக்ஸ் டி' 'சோசா.*

***Dr. Beatrix D' Souza:** Hon'ble Deputy Speaker Sir, I would like to first thank the Hon'ble Deputy Speaker for providing me with this opportunity to speak in this very important demand. I will confine myself to speaking about the Anglo Indian Schools as well as the Anglo-Indian School children and the demands of College and University Teachers.

For the past four years I have spoken with little success on the urgent need to update the Fee Exemption grant for Anglo Indian Schools admitting Anglo Indian Children. I recently had the privilege of getting an appointment with the Hon'ble Chief Minister. I explained the situation to her and she said there should'nt be any problem.

**Hon. Prof. K. Ponnusamy:** Hon. Deputy Speaker Sir, the Hon'ble Chief Minister has already ordered to increase the grant from Rs. 30 to 100 in case of the Anglo Indian Children.

(Mr. Speaker occupied the Chair)

**Dr. Beatrix D' Souza:** Mr. Speaker Sir, I would like to thank the Hon'ble Minister for the information. I would like to state that actually something that has been pending for 13 long years is now moving with one stroke of her pen the Hon'ble Chief Minister has cut the Gordian knot of bureaucratic red tape.

We need to harness our human resources. In a climate of economic liberalisation, it is important to gear our educational pattern to produce a work force for the new markets in the future. In this respect I am happy to note that there are 66 Vocational Courses and this should fulfill the demand of future Job markets.

According to the Policy Note, the Government of India is offering 100 % financial assistance for constructing work-sheds, providing vocational equipment and a sum of Rs. 152.96 lakhs has been granted as salary component. I would like to know whether the aided Anglo-Indian Schools can apply for the assistance under this Scheme or whether it is limited to the Government Schools only.

**Hon. Prof. K. Ponnusamy:** Mr. Speaker Sir, that may be extended to the Anglo-Indian School also.

**Dr. Beatrix D'Souza:** Mr. Speaker Sir, I would like to thank the Hon'ble Education Minister. I think this is a fortunate day for the Anglo-Indian Community as well as myself.

*பிற்பகல் 1.15*

This will be of great help to the Anglo-Indian Schools because we cater to the middle class children and they can be encouraged to take up vocational courses. Also, I would like to suggest that wherever there are plus-2 vocational courses a compulsory drop out programme should also be present because many school children drop out at Std. VIII and they can make use of the infrastructure already existing for vocational courses.

I would like to bring to the notice of the Department of School Education, that there is a dearth of Open School programmes. I personally know of only 2 private open school programmes. I know that people even after the age of 30 and 40 have come back to complete their education at these open schools.

A distinctive feature of the policy note is the statement regarding the growth of elementary education in the State in terms of infrastructure, teaching-training, revision of the syllabus, especially the very important factor called 'minimum levels of learning approach' of which we don't have sufficient information, which appears to be a very good programme. What I would like to say is that while higher education gets State funding and even U.G.C. funding, the aided schools get very little. So, if we say that we want to encourage elementary education, we should also fund the schools more rather than the colleges. It takes about Rs. 3,000/- for a child to enter Std. I with Rs. 3,000/- a parent can send a student right through a three-year degree course.

**Hon. Prof. K. Ponnusamy:** Honourable Speaker Sir, the allotment of fund in the Central Government is roughly about Rs. 651 crores for primary education. But, in Tamil Nadu we are alloting Rs. 1,015 crores towards primary education and the aid is extended to the private institutions also. So, the Honourable Member can be assured that the grant will be extended to almost all the aided schools and the primary education will be taken care of.

**Dr. Beatrix D'Souza:** Sir, while it is necessary and vital to revise or upgraded the syllabus from time to time, it is not necessary to have a uniform syllabus for all school patterns. There is a suggestion that the Anglo-Indian School pattern follows the same syllabus as the Matriculation. We would like to keep a separate identity our Anglo-Indian Schools are 100 years old.

We have a very good Syllabus, particularly, in respect of 'English'. Perhaps the 'Tamil' syllabus will have to be upgraded. But, that can be started only from Std. 1 and not right in the middle.

Sir, this is an important point. I understand that there are various Central Government Schemes providing financial assistance for the promotion of Sanskrit, which have to be routed through the State Government to the Centre. But, it appears that every year, applications are not forwarded on time, and even the scholarship amount is not properly utilised. So this appears to be a.....

**Hon. Prof. K. Ponnusamy:** Honourable Speaker, Sir, We don't find such encouragement from the persons who are involved in that or who are interested in that.

**Dr. Beatrix D' Souza:** Sir, I would now like to put forth the demands of College teachers. I know the Honourable Minister for Education has always looked into their demands.

*பிற்பகல் 1-20*

The first demand is that while the Central Government and the State Government employees are getting interim relief pending pay revisions, the college teachers are denied this relief and I believe there is an agreement reached between the college teachers and the Directorate of Collegiate Education at the Salem Conference on 20-11-1994. The college teachers also would like a pension revision where the basic pay plus 20 percent of the D.A. is calculated for terms of pension. But the college teachers do not get the State Government pension neither do they get the UGC pension. What happens is, if the State Government employee and a college professor retire at Rs. 4,500/- the college teacher loses Rs. 500/- in pension. The State Government employee gets more. I think I may be one of the people who are losing 500 rupees a month.

And a last but important thing Sir. The State Government is holding Rs. 60 Crores in impounded D.A. That is the money that is impounded from the college teachers who are drawing basic pay more than 3,500 rupees. The AUT and MUTA have gone to Court and it seems they are getting the money back and the college teachers naturally feel aggrieved.

Finally Sir, there are vacancies in many Government Colleges. I am sure that the Hon. Minister is aware of this. In Ambedkar College, Vyasarpadi, there is only one staff member in Computer Science Department.

**Hon.Prof. K.Ponnusamy:** Hon. Speaker, Sir, the Teachers Recruitment Board has already announced the examination for the selection of college teachers and over 300 college lecturers are to be selected now. The examinations are to be conducted by July. Immediately after that the interview will be conducted and the necessary number of teachers will be selected and posted in the vacancies that are available in all the Government arts colleges.

**Dr. Beatrix D' Souza:** Thank you, Sir. Just a final point regarding sports. I find that the women here are rather discriminated against. For example the M.R.F and some other organisations have some schemes. They help boys to be trained. There is a B.A.T. Programme that helps in Tennis and M.R.F. helps men fast bowlers. I really do not know whether women are capable of being fast bowlers in Cricket. But we should have some type of encouragement for women's cricket and women's hockey teams in this State. Thank you, Sir.

1995 ஏப்ரல் 27]

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* திரு. வே. தம்புசாமி.

*திரு. வே. தம்புசாமி:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி மானியக் கோரிக்கை மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல அனுமதி தந்ததற்கு தங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். பொதுவாக, கல்வி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பிலே தேசிய வழிகாட்டி அடிப்படையிலே சுயநிதிக் கல்லூரி, தன்னாட்சிக் கல்லூரி, நிதிபெறாத கல்லூரிகள் இன்றையதினம் அதிகமாக அளிக்கப்பட்டு இருப்பதாக கூறப்பட்டு இருக்கிறது. அப்படி ஒரு தேசிய வழிகாட்டுதல் அடிப்படையிலே என்கிறபோது, மத்திய அரசு கல்விக்காக அளித்திருந்த மான்யம் அந்த அளவுக்குக் குறைக்கப்பட்டதினுடைய விளைவுகளே இதிலே பிரதிபலிக்கக்கூடிய சூழ்நிலைமை ஏற்பட்டு இருக்கிறது சாதாரணம்தான். அப்படி மத்தியிலே இருக்கிற அரசு ஒரு மாநிலத்திலே ஒரு சமுதாயத்தினுடைய வளர்ச்சிக்கு அடித்தட்டாக அமைந்து இருக்கக்கூடிய அந்தக் கல்வியை வளர்ப்பதிலே, செயல்படுத்துவதிலே, ஊக்கம் அளிப்பதிலே ஒரு அக்கறை காட்டாத அரசு மத்தியிலே இருந்து இந்த நாட்டினுடைய சமுதாயத்தினுடைய அடித்தளத்து மக்களைப் பாதுகாக்கக்கூடிய கல்விக்கு அளிக்கப்பட்ட மானியத்தைக் குறைத்து இருப்பது என்பது மிக மோசமான ஒரு செயலாகும். இதனுடைய விளைவால் இன்றைய தினம் பல்வேறு சூழ்நிலைமைகள் உருவாகக்கூடிய நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. இது மெல்ல மெல்ல கல்வி ஸ்தாபனங்கள் முழுமையும் ஒரு தனியார் கைக்கு மாறுகின்ற ஒரு எதிர்கால ஆபத்து இதிலே சுட்டிக் காட்டப்பட்டு இருக்கிறது என்றுதான் இதிலே கருத வேண்டிய சூழ்நிலையாக இருக்கிறது. அப்படி தனியார் கைக்கு கல்வி மாறுமேயானால், அமைச்சர் அவர்கள் கூட சொன்னார்கள், வியாபாரம் எங்கே நடக்கிறது? சொல்ல முடியுமா என்று. ஆனால் தனியார் கைக்கு கல்வி மாறுகிறபோது வியாபாரமாக எதிர்காலத்திலே மாறும். இன்றைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கன்னியாகுமரி மாவட்டத்தில் 4 கல்லூரிகளிலே கட்டணம் அதிகமாக வசூலிக்கப்பட்டதாகவும் அவற்றின் மீது நடவடிக்கை எடுப்பதற்கும் நிச்சயமாக நான் நன்றி சொல்கிறேன்.

ஆனால் தனியார் கைக்கு கல்வி மாறுகிறபோது என்ன விளைவுகள் எதிர்காலத்திலே ஏற்படும், அதனுடைய விளைவுகள் என்னவாக இருக்கும் என்று எண்ணிப் பார்க்கிறபோது அது அச்சமாக இருக்கிறது.

*பிற்பகல் 1-25*

*மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மத்திய அரசு

[பேராசிரியர் க. பொன்னுசாமி] [1995 ஏப்ரல் 27

கல்விக்கு தரவேண்டிய தொகையை குறைத்துக் கொண்டு வருவதால் இப்படிப்பட்ட சூழ்நிலை தமிழ்நாட்டில் ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெளிவாகச் சொல்லி இருக்கிறார்கள். தமிழ்நாட்டிலே இருக்கிற நிதிநிலை அடிப்படையில்தான் புதிய கல்லூரிகளை அரசு தொடங்க முடிகிறது. வளர்ந்து வருகின்ற மக்கள் தொகைக்கு ஏற்ப, படிப்பதற்காக கல்லூரிகள் ஆண்டுதோறும் அதிக எண்ணிக்கையிலே வருகின்ற மாணவ-மாணவியர்களின் தேவைக்கேற்ப கல்லூரிகளைத் தொடங்க வேண்டியிருக்கிறது. புதிய வகுப்புகளைத் தொடங்கவேண்டியிருக்கிறது. இதற்கெல்லாம் அரசிடம் நிதி இல்லை. ஏறத்தாழ 2,233 கோடி ரூபாயைக் கல்விக்காக ஒதுக்கினாலும்கூட, உயர் கல்விக்கு அதிகமாகச் செலவிடுகின்ற அளவுக்கு இங்கே நிதிநிலைமை சீராக இல்லை. ஆகவே சுய நிதிக் கல்லூரிகளுக்கு அனுமதி அளிக்க வேண்டிய கட்டாய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இருந்தாலும்கூட அரசு இதை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கிறது. எந்தெந்த சுயநிதி கல்லூரிகளில் தவறுகள் ஏற்படுகிறதோ, எங்கெங்கே குறைபாடுகள் இருப்பதாகத் தெரிகிறதோ, அதைப்பற்றிக் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டால் அவற்றை எல்லாம் சீர் செய்ய வேண்டுமென்று அரசு கருதுகிறது. இது தொடர்பாக தமிழ்நாடு உயர்கல்வி மன்றம், Tamil Nadu State Council for Higher Education—சுயநிதிக் கல்லூரிகளை ஒழுங்குபடுத்துவதற்காகவும் கட்டுப்படுத்துவதற்காகவும் ஒரு சட்டம் இயற்றப்படவேண்டும் என்று பரிந்துரை செய்திருக்கிறது. அந்த அடிப்படையிலே அரசு ஆலோசனை செய்து வருகிறது. விரைவில் அந்தச் சட்டம் வருமானால், உண்மையிலேயே சுயநிதிக் கல்லூரிகள் முழுமையான அளவிற்கு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அப்படிப்பட்ட அச்சம் வரத் தேவையில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டுப்படுத்துவதற்கான சட்டம் கொண்டுவரப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். நான் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே போன்று தன்னாட்சிக் கல்லூரிகளுக்குக் கட்டுப்படுத்தமுடியாத சில சட்டங்கள் இருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். உண்மையிலேயே அப்படிப்பட்ட சட்டங்கள் இருக்குமேயானால் அந்த சட்டத்தை மாற்றுவதற்கு இந்த சட்டமன்றம் கூட வேறு ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வரலாம். அப்படிக் கொண்டுவருவதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதுபோன்று இன்றைக்குச் சாதாரணமாக எல்.கே.ஜி., யு.கே.ஜி...........

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தன்னாட்சிக் கல்லூரிகளைக் கட்டுப்படுத்துவதற்கு சட்டம் இல்லை என்று நான் சொல்லவில்லை. தன்னாட்சிக் கல்லூரியிலே தவறுகள் நடைபெற்றால் அதை குறிப்பிட்ட வகையில் புகாராகக் கொடுத்தால்தான் நடவடிக்கை எடுக்கமுடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புகார்களைத் தரலாம். புகார்களின் அடிப்படையிலே நடவடிக்கை எடுப்பதற்கு எல்லா சட்டங்களிலும் வழிவகை இருக்கின்றது. அரசு அதற்குத் தயாராக இருக்கிறது.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் ஆதாரம் சேகரிப்பதை விட அரசுத் துறையிலே பல்வேறு சாதனங்கள் இருக்கின்றன.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசே போய் ஆதாரங்களைத் தேடிக் கொண்டிருக்க முடியாது. தரப்படுகின்ற ஆதாரங்களின் அடிப்படையிலே, அந்த ஆதாரங்கள் உண்மையிலே ஏற்றுக் கொள்ளப்படத்தக்கதாக இருந்தால், உண்மையாக இருந்தால், அதன் மீது அரசு நடவடிக்கை எடுக்க எப்போதும் தயங்காது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் இடத்திலே புகார்கள் அதிகமாக வரக்கூடும். ஏனென்றால் உங்கள் தொகுதியிலே மக்களோடு மக்களாக பின்னிப் பிணைந்து ஒன்றாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறீர்கள் என்று சொல்கிறீர்கள். உங்களிடத்திலேதான் அவர்கள் புகார்களைத் தரமுடியும். ஆகவே புகார்களைக் கொண்டு வந்து நீங்கள் அதைப் பரிந்துரை செய்துகூட தரலாம். அரசு நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறது.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று சாதாரணமாக எல்.கே.ஜி. யூ.கே.ஜி. போன்ற பள்ளிகளிலே சேர்ப்பதற்குக்கூட 5 ஆயிரம் ரூபாய், 10 ஆயிரம் ரூபாய் வரையில் செலவாகிறது. அது போன்று கல்லூரிகள், உயர்நிலைப்பள்ளிகளுக்குச் செல்கிறபோது அதிகமான தொகைகள் நன்கொடை என்ற பெயராலே கொடுக்க வேண்டிய சூழ்நிலைமைகள் இருக்கின்றன.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். பொதுவாக சூழ்நிலை இருக்கிறது. கேபிட்டேஷன் ஃபீ வாங்குகிறார்கள், நன்கொடை வாங்குகிறார்கள் என்றெல்லாம் இங்கு சொல்வதில் பொருள் இல்லை.

எந்தக் கல்வி நிறுவனத்திலே வாங்குகிறார்கள் என்பதற்கு ஒரு புகார் தரப்படுமானால் நிச்சயமாக அதன் மீது நடவடிக்கை எடுக்க அரசு தயாராக இருக்கிறது. பத்திரிக்கையாளர்கள் இங்கே இருக்கிறார்கள். அவர்கள் இதற்கு ஒத்துழைப்பு தரலாம். எந்தெந்த கல்வி நிறுவனங்களில் இப்படித் தவறு நடைபெறுகிறது என்று பத்திரிக்கைகள் வெளிப்படுத்தலாம். அதன்மீது கூட அரசு நடவடிக்கை எடுக்கமுடியும். அதை ஆராயமுடியும். ஆகவே அவர்களும் இதற்கு ஒத்துழைப்புத் தருவார்கள் என்று நம்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புகார்களைத் தருவதற்கு முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து இன்றையதினம் ஆசிரியர்கள் பற்றாக்குறை இருக்கிறது. இந்த பற்றாக்குறையைப் போக்குவதற்காக பணியிடங்கள் அறிவிக்கப்பட்டு இருக்கின்றன. இந்த பணியிடங்கள் நிச்சயமாக போதுமானதாக இல்லை.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஆண்டிலும் குறிப்பிட்ட எண்ணிக்கையிலே தான் ஆசிரியர்களைத் தேர்வு செய்யமுடிகிறது. முந்தைய ஆண்டில் எந்த அளவுக்குக் காலியாக பணியிடங்கள் இருந்தன என்ற அடிப்படையிலேதான் ஆசிரியர் தேர்வு வாரியம் ஆசிரியர்களை தேர்வு செய்ய முடிகிறது. அந்த அடிப்படையிலே மூன்று ஆண்டுகளுக்கு முன்பு அறிவித்த 8 ஆயிரம் பணியிடங்களுக்காக ஆசிரியர்களை இப்போது தேர்வு செய்கிறோம். 3 ஆண்டுகளுக்கு முன்பு என்று நான் சொல்வதற்குக் காரணம், ஆசிரியர் தேர்வு நடைபெற ஏற்பாடு செய்த காலத்தில் அதை எதிர்த்து நீதிமன்றத்திற்கு சென்றார்கள். நீதிமன்றத்திலே தீர்ப்பு வழங்கினார்கள். அந்த தீர்ப்பின் அடிப்படையிலே மீண்டும் ஆசிரியர்களைத் தேர்வு செய்யலாம் என்ற நிலையை உருவாக்கியபோது, இட ஒதுக்கீட்டுப் பிரச்சினை வந்தது.

பிற்பகல் 1.30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: காலை நிகழ்ச்சியை திரு. தம்புசாமி அவர்கள் பேசி முடிக்கும்வரை வைத்துக்கொள்ளலாம் என்று நினைக்கிறேன். அதனால், அவருடைய பேச்சை முடிக்க விடுங்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: அடுத்து, இட ஒதுக்கீட்டுப் பிரச்சினை காரணமாக ஓராண்டுக்காலம் ஆசிரியர்களை தேர்வு செய்ய முடியாத ஒரு சூழ்நிலை தமிழ்நாட்டிலே உருவாக்கப்பட்டது. இதனால் தான் முன்பு அறிவித்த அந்த 8 ஆயிரம் ஆசிரியர்களை தேர்வு செய்கின்ற முறையில் இப்போது ஆசிரியர் தேர்வு வாரியம் நடவடிக்கை எடுத்து

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வருகிறது. இவர்கள் தேர்வு செய்யப்பட்டதற்குப் பின்பு உடனடியாக மேலும் காலியாக இருக்கிற அனைத்துப் பணியிடங்களுக்கும் ஆசிரியர் தேர்வு வாரியம் அறிவித்து, எழுத்துத் தேர்வு நடத்தி, நேர்முகத் தேர்வு நடத்தி ஆசிரியர்களை தேர்வு செய்யும். அனைத்துப் பணியிடங்களையும் நிரப்புவதற்கு அரசு ஏற்பாடு செய்யும்.

*திரு. வே. தம்புசாமி:* இந்த ஆசிரியர்கள் பணியிடங்களை நிரப்புகிறபோது, தேர்வாணையம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி வைக்கிறபோது, அந்த வயது சீனியாரிட்டிபடி வழங்குவதுதான் பொருத்தமாக இருக்கும். இல்லையென்று சொன்னால், நீண்டகாலமாக படித்து முடித்த பலபேருக்கு வேலை கிடைக்காத ஒரு அபாய சூழ்நிலைமை இருக்கிறது.

*மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வயது சீனியார்ட்டி என்று எடுக்கவில்லை. வேலைவாய்ப்பகத்தில் பதிவு செய்திருக்கிறார்களே, அந்த சீனியாரிட்டியை எடுத்துக் கொள்கிறோம். அதற்காக ஒரு ஆண்டு சீனியாரிட்டிக்கு ஒரு மதிப்பெண் என்று 5 ஆண்டுகளுக்கு 5 மதிப்பெண்கள் நேர்முகத் தேர்விலே தரப்படுகிறது. ஆகவே இந்தப் பிரச்சினை எழவில்லை.

*திரு. வே. தம்புசாமி:* அடுத்து, பாடத் திட்டத்தை சுலபமாக ஆக்குவோம் என்று கொள்கைக் குறிப்பிலே கூறப்பட்டிருக்கிறது. அது விரைவாக செய்யப்பட வேண்டும். அதேபோன்று, அந்த பாடத் திட்டம் என்று வருகிறபொழுது மாணவர்களுக்கு விருப்பப்பாடம் படிப்பதற்கான அனுமதி வழங்கப்பட வேண்டும். ஆனால், விருப்பப் பாட அடிப்படையிலே, தேவையான அளவுக்கு இடமும் அளிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அது போன்று பாடத்திட்டத்திலே, அந்த ஏமாற்றுகின்ற சில கதைகள் எல்லாம் வருகின்றன. அதுபோன்ற கதைகள் தவிர்க்கப்பட வேண்டும். *(சிரிப்பு)*

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* பாடத் திட்டத்தில் ஏமாற்றுகின்ற கதைகள் என்றால் எப்படி? *(சிரிப்பு)* பெரிய ஏமாற்றமாக அல்லவா இருக்கிறது. *(சிரிப்பு)* அதைத் தெளிவாகச் சொல்லுங்கள்.

*திரு. வே. தம்புசாமி:* அதுபோன்று தமிழ் படிக்கக்கூடிய மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்குவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. தமிழ்

[திரு. வே. தம்புசாமி] [1995 ஏப்ரல் 27

படிக்கக்கூடிய மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்குவதைவிட அவர்களுக்கு தமிழ் படித்தால் வேலை கிடைக்கும் என்ற உத்தரவாதம் ஏற்படுகிறபோது நிச்சயமாக, அதிகமானபேர் தமிழ் படிக்க முன்வருகின்ற சூழ்நிலைமை வரும். இதற்கு முன்னாலே 4 ஆண்டுக்காலம் தமிழ் படித்து வேலை கிடைக்காமல், தமிழ் ஆசிரியர்கள் உண்மையிலே ஓட்டல்களிலே வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட அந்த தமிழ் ஆசிரியர்களுக்கு வேலைக்கு உத்தரவாதம் ஏற்படுத்த வேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோன்று, ஒரு பள்ளிக்கூடம் கட்டுவதற்கு 50 சதவீதம் பொதுமக்களும், 50 சதவிகிதம் அரசும் செலவு செய்ய வேண்டுமென்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதை எல்லா இடங்களிலும் அமுல்படுத்தினால் அதைப் பூர்த்தி செய்ய முடியாது. உதாரணத்திற்கு சொன்னால், குரலூர் என்ற ஊரிலுள்ள உயர்நிலைப் பள்ளி. அந்தப் பள்ளியைச் சுற்றி 10 கிலோமீட்டருக்கு சாதாரண விவசாயத் தொழிலாளிகள், குறிப்பாக ஆதிதிராவிட மக்கள் அதிகமாக குடியிருக்கக்கூடிய பகுதி அது. அதற்கு கட்டிடம் கிடையாது. உயர்நிலைப் பள்ளியாக அது ஆக்கப்பட்டது. ஆனால் கட்டிடம் கிடையாது. ஆனால் அதற்கு போய் 50 சதவிகிதம் கேட்டால் பொருத்தமானதாக இல்லை. ஆதலால் அப்படிப்பட்ட ஏழ்மை நிலைப் பகுதிகளில், அதாவது பிற்படுத்தப்பட்ட பகுதிகளைத் தேர்ந்தெடுத்து, முழுச் செலவையும் அரசே கொடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இப்பொழுது அதிகமான பள்ளிகளிலே இடமே கிடையாது. நகரத்தை ஒட்டியிருக்கும் புலிவலத்தில் இடம் கிடையாது. அதேபோன்று மாணவர்கள் படிப்பதற்கு பொள்ளாச்சி என்ற நகரத்திலே இருக்கிற பள்ளிக்கூடத்திலே மரத்தடியிலே மாணவர்கள் படித்துக் கொண்டிருக்கிறார்கள். அதுபோன்று சூரனூர் போன்ற இடங்களில் இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. அந்தமாதிரி இடங்களுக்கு கட்டிடம் கட்டுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதுமாதிரி அத்திக்கடை பள்ளிக்கூடத்திற்கு பணம் கட்டப்பட்டிருக்கிறது. தொடர்ந்து நான் அமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்துக் கொண்டே இருக்கிறேன். இந்த நிதியாண்டிலாவது அங்கீகரிப்பதற்கு அந்த நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். 4 ஆண்டுகள் ஆகிறது பணம் கட்டி. அதுபோன்று கல்லூரி ஆசிரியர்களுக்கு அகவிலைப்படி உயர்வு என்று கோர்ட்டிலே தீர்வு ஆகி கூட 3 மாதமாக அது வழங்கப்படவில்லை. அதை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1995 ஏப்ரல் 27] [திரு. வே. தம்புசாமி]

பிற்பகல் 1-35

அடுத்து, காரைக்குடி அழகப்பா கல்லூரியை பல்கலைக்கழகத்தோடு இணைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் காரைக்குடி பகுதியிலே உள்ள மக்கள் பூராவும் அதைப் பல்கலைக்கழகத்தோடு இணைக்கக்கூடாது, அழகப்பா கல்லூரி தனியாக இருக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலேதான் நான் பேசுகிறேன். அது அரசுக் கல்லூரியாக இருப்பதால் சாதாரண ஏழை எளிய மாணவர்கள் படிப்பதற்கு ஒரு சிறப்பான வாய்ப்பு ஏற்படுகிறது. இது பல்கலைக் கழகத்தோடு இணைக்கப்படுமேயானால், ஏழை எளிய மக்கள் கடுமையாகப் பாதிக்கப்படுவார்கள் என்பது காரைக்குடி பகுதியில் உள்ள மக்களின் கருத்து. அதை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* திருமதி கற்பகம் இளங்கோ.

*திருமதி கற்பகம் இளங்கோ:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வள்ளல் அழகப்பச் செட்டியார் அந்தக் கல்லூரியை ஆரம்பிக்கும்போது அழகப்பா பல்கலைக் கழகத்தோடு அதை ஒருங்கிணைக்க வேண்டும், அப்படி ஒருங்கிணைத்தால்தான் காரைக்குடி மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமப்புறங்களில் உள்ள மக்கள் பலனடைவார்கள் என்ற எண்ணத்தில்தான் அதனை உருவாக்கினார்கள். எனவே அவருடைய கனவை நனவாக்க வேண்டுமென்ற எண்ணத்தில்தான் நானும் இதனைக் கூறுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. தம்புசாமி அவர்களுடைய உணர்வு நியாயமானதுதான். ஏனென்றால் நமது அரசு பராமரிப்பில் இருக்கும்போது நல்லமுறையில் இருந்து வருகிறது. ஆனால் வள்ளல் அழகப்பச் செட்டியார் கண்ட கனவு அந்தப் பகுதி வளர்ச்சிக்காக இருக்க வேண்டுமென்பதால், நிச்சயமாக அதை ஒருங்கிணைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* அவர் சொன்னதை ஒத்துக் கொள்வதற்கு நீங்கள் ஏன் எழுந்து பேச வேண்டும்?

*திரு.வே.தம்புசாமி:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் சொல்கிறேன். மக்கள் அரசுக் கல்லூரியாக இருக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* மாண்புமிகு கல்வி அமைச்சர்.

*மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள்

இங்கே பேசும்போது, அழகப்பச் செட்டியார் அவர்கள் அவரது உடமைகளை எல்லாம், அவரது நிறுவனங்களை எல்லாம் அரசுக்கு அளித்து, அதன் அடிப்படையில் ஒரு பல்கலைக்கழகம் உருவாக்க வேண்டுமென்று எண்ணியதன் அடிப்படையில் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. ஒப்பந்தத்திலே அந்தப் பல்கலைக் கழகத்தின் ஒரு பகுதியாக அழகப்பா கலைக் கல்லூரியும் இருக்க வேண்டுமென்று இருக்கிறது. ஆகவே அதைச் செய்ய வேண்டுமென்ற அடிப்படையிலே அவர்கள் கருத்தைச் சொல்லி இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. தம்புசாமி அவர்கள் பொது மக்கள் கருத்து என்று சொல்லுகிறார்கள். பொது மக்களது கருத்து என்ன என்றும் ஆய்வு செய்து, அரசு அதற்குப் பின்பு நடவடிக்கை எடுக்கும்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* எல்லோருமே இதிலே தவறு செய்கிறீர்கள். அழகப்பச் செட்டியார் காலமாகி ரொம்ப நாள் கழித்துத்தான் நீங்கள் சொல்லுகிற முடிவெல்லாம் வந்தது. ஆகவே அழகப்பச் செட்டியார் கண்ட கனவு என்பதெல்லாம் இதிலே இல்லை. அழகப்பச் செட்டியார் இருந்தவரையில், அவர் தனியே வைத்துக்கொள்ள வேண்டுமென்பதுதான் அவருடைய நினைப்பு, அவருடைய எண்ணம், அதற்குப் பிறகு அவருடைய மகளோடு ஒப்பந்தம் செய்துதான், அரசாங்கம் எடுத்தது. அதனால் அழகப்பச் செட்டியார் பெயரை இழுக்க வேண்டாம். நான் அவர் கட்டிய வீட்டிலே குடியிருக்கிறேன். திரு. தம்புசாமி.

*திரு. வே. தம்புசாமி:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர்களுக்கு 1,400 ரூபாய் அடிப்படைச் சம்பளம் வழங்க வேண்டுமென்று 26-11-1992-ல் ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. அது இன்னும் நிறைவேற்றப்படவில்லை. அந்த விவரங்களைத் தருகிறேன். ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கக்கூடிய ஆசிரியர்களுக்கு 1,400 ரூபாய் அடிப்படை சம்பளம் வழங்க வேண்டுமென்று 26-11-1992-ல் முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. அதை அமல் படுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளிலிருந்து அரசு உயர்நிலைப் பள்ளிக்கும், மேல்நிலைப் பள்ளிக்கும் ஈர்க்கப்பட்டிருக்கிற ஆசிரியர்களின் ஒன்றியப் பணிக் காலத்தையும் இணைத்து, அந்த அடிப்படையிலே பதவி உயர்வு வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு)

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* திரு. தம்புசாமி, நீங்கள் அமைச்சர்களோடு பேசிப் பேசி, நேரத்தைக் கடத்துகிறீர்கள். என்னைப் பார்த்துக் கொஞ்சம் பேசுங்கள். நான் தான் உங்களுக்கு நேரம் கொடுக்க வேண்டும். நீங்கள் அமைச்சர்களைப் பார்த்துப் பேசுகிறீர்கள், அவர்களா உங்களுக்கு நேரம் கொடுத்தார்கள்? ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர்கள் பயிற்சி முடித்து, அவர்கள் பரீட்சை எழுதியும் அவர்களுக்கு இன்றையதினம் சர்ட்டிபிகேட் கொடுக்காத அவல நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். மாநிலம் முழுவதும் அவர்களுக்கு இன்னும் வழங்கவில்லை. அப்படி வழங்காதவர்கள்மீது சட்டப்படி நடவடிக்கை எடுத்து, சர்ட்டிபிகேட்டுகள் அந்த மாணவர்களுக்குக் கிடைக்க அரசு உத்தரவாதம் வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து திருவாரூர் கல்லூரியில் 25 ஆசிரியர்கள் பற்றாக்குறை இருக்கிறது. அதனால், மாணவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். அந்தக் காலியிடங்களை நிரப்ப வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். திருவாரூர் விஜயபுரத்தில் ஒரு தனியார் கட்டிடத்தில் ஏறத்தாழ 100 ஆண்டுகளாக ஒரு பள்ளிக்கூடம் இயங்கி வருகிறது. இப்போது தனியார் கோர்ட்டுக்குச் சென்று அந்தக் கட்டிடத்தைக் காலி செய்ய வேண்டுமென்று உத்தரவு வாங்கியிருக்கிறார்கள். அங்கே அதைத் தவிர வேறு இடம் கிடையாது. கிட்டத்தட்ட 800 மாணவர்கள் அந்த நகராட்சிப் பள்ளியில் படிக்கிறார்கள். ஆகவே அந்தக் கட்டிடத்தை விலைக்கு வாங்குவதற்கு அமைச்சரவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை காயிதே மில்லத் மாவட்டம், திருவாரூரில் தனியார் பள்ளி 1942-லே தொடங்கப்பட்டு, 1979-லே அது நகராட்சியால் எடுக்கப்பட்டு, தனியார் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. அதற்கு 1,185 ரூபாய் மாத வாடகையாக நகராட்சி தந்து வருகிறது.

இந்தப் பள்ளியை காலி செய்ய வேண்டுமென்று கேட்டு, உரிமையாளர் முன்சீப் கோர்ட்டிற்கு போய் நீதிமன்றத்தில் வெற்றி பெற்றார். அதை எதிர்த்து துணை நீதிமன்றத்திற்கு சென்றபோது அங்கேயும் அவர் வெற்றி பெற்றிருக்கிறார். இதை எதிர்த்து உயர்நீதிமன்றத்திலே வழக்கு தொடர இருக்கிறார்கள். அந்தத் தீர்ப்பாணை 17-4-1995 அன்றுதான், நகராட்சி ஆணையருக்கு கிடைக்கப் பெற்றது. இதனை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்தப்பள்ளி தற்போது நடைபெற்று வரும் கட்டடத்திலிருந்து மாற்றப்பட்டு விடும் என்ற அச்சம் ஏற்படத் தேவையில்லை. இந்த கட்டடத்தை விலைக்குத் தருவதற்கு அந்தக் கட்டடத்தின் சொந்தக்காரர் தயாராக இல்லை. ஆகவே, இதை எதிர்த்து மேல் முறையீடு செய்ய நகராட்சி ஆணையர் ஏற்பாடு செய்து வருகிறார்.

*பிற்பகல் 1-40*

**திரு. வே. தம்புசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கட்டடக்காரர் கொடுக்காமல் இருந்தாலும் கூட திருவாரூர் நகரத்தில் இருக்கிற பிரமுகர்கள் தலையிட்டு அந்தக் கட்டடத்தை கிடைப்பதற்கான ஏற்பாடு செய்யலாம். பின்னாலே கோர்ட்டிலே நமக்கு பாதகமாக தீர்ப்பு வந்தாலும் கூட அதை நாம் வாங்குவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அந்த ஏற்பாட்டைச் செய்ய முடியும்.

அடுத்து, திருவாரூர் நகரத்தில் தொடர்ந்து வற்புறுத்துகிற பெண்கள் கல்லூரி. அதற்கு ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து நாகையிலே ஆசிரியர்கள் பணத்தை மோசடி செய்தது குறித்து ஒரு வழக்கு நடந்து கொண்டிருக்கிறது..

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது நடவடிக்கையில் இருக்கிறது. ஒரு சிலர் அந்தப் புகாரின் அடிப்படையில் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. வே. தம்புசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை விரைவு படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி சீனியம்மாள், மாலையில் பேசலாம்.

பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் மாலை 4.00 மணிக்குக் கூடும் என்று பேரவையின் ஒப்புதலோடு அறிவிக்கிறேன்.

*பின்னர் பேரவை பிற்பகல் 1.41 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

*பிற்பகல் 4-00*

*மாண்புமிகு பேரவைத் தலைவர், திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் பிற்பகல் 4.00 மணியளவில் பேரவை மீண்டும் கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1995-96-ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின் மீது விவாதம் தொடர்ச்சி. டாக்டர் மு. சீனியம்மாள்:

1995 ஏப்ரல் 27]

டாக்டர் மு. சீனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1995-96-ஆம் ஆண்டிற்கான கல்வித்துறையின் மானியத்தில் எனக்குப் பேச அனுமதி தந்தமைக்காக, தங்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவிக்கும் முன்பு,

தூசு படிந்த தமிழகத்தை தூய்மைப்படுத்தி
வாடிக்கிடந்த பயிருக்குத் தண்ணீராய்
வாழ்விழந்தோர் வாழ்வில் வசந்தமாய்
ஊதாமல் கிடந்த புல்லாங்குழலின்
ஒட்டுமொத்த கீதமாய்-தாயே
எங்கள் இதயத்தைக் கோவிலாக்கி,
அன்பெனும் விளக்கெடுத்து,
பண்பெனும் நெய்யூற்றி, பாசமெனும் திரியால்
தமிழக மக்களின் ஒவ்வொருவர் இல்லத்திலும்
இதயத்திலும் கல்வி ஒளியேற்றிய திராவிடத்தின்
திருவிளக்கே, தென்னாட்டு தெரசாவே,

உங்கள் பாதம் பணிந்து இந்தக் கல்வி மானியத்தின் மீது பேசத் தொடங்குகிறேன்.

'கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்கு தக'

என்ற வள்ளுவர் வாக்குக்கு இணங்க இன்றைக்கு கல்வி மானியத்திற்காக சுமார் 2,233.17 கோடி ரூபாய் ஒதுக்கி, 1998-ஆம் ஆண்டில் அனைவருக்கும் கல்வி என்ற குறிக்கோளை அடைய எண்ணியதற்காக என் தொகுதி மக்களின் சார்பாகப் பாராட்டுகிறோம்.

கல்வி ஒன்றுதான் மறுமலர்ச்சிக்கு வழி என்ற காந்தி அடிகளின் கூற்றுக்கு ஏற்ப, தொடக்கக் கல்விக்குத் தனி முக்கியத்துவம் அளிக்கப்பட்டு, அதன் மூலம் இப்போது தொடக்கக் கல்விக்கு சிறப்பிடம் அளிக்கப்படுகிறது. 1995-96-ஆம் ஆண்டில், புதிதாக 100 தொடக்கப் பள்ளிகள் தொடங்க நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளதை நான் மனதார வரவேற்கிறேன். கல்வி என்பது ஏட்டளவில் இருந்துவிடலாகாது. கற்கும் கல்விக்கும் வேலைக்கும் நேரடி இணைப்பு வேண்டும். அப்படியிருந்தால்தான் படித்தவுடன், அரசு வேலை தரவேண்டும் என்ற எண்ணமின்றி, சொந்தக் காலில் நிற்பதற்கு

நம்பிக்கை வரும். இதன் அடிப்படையில், மாண்புமிகு அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், புதிய கோணத்தில் சிந்தித்து, புதுவகைத் தொழில் உத்திகளைக் கையாளுகிற விதத்தில் அடிப்படைக் கல்வி தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தொடக்கக் கல்வி என்று வருகிற போது, ஓரிரு கோரிக்கைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அஸ்திவாரம் நன்றாக இல்லாத கட்டிடங்களால் எந்தவிதமான பிரயோஜனமும் இல்லை. அது போன்று கிராமங்களில் சில பள்ளிகளில் கல்வியின் தரம் உயர்த்தப்படவேண்டும். ஏன் என்று கேட்டால், ஒன்றிலிருந்து 5-ஆம் வகுப்பு வரை ஒரே அறையில் ஓராசிரியர் அல்லது இரு ஆசிரியர்கள் உள்ளனர். எல்லா வகுப்பு குழந்தைகளுக்கும் அவர்களால், தரமான கல்வியை வழங்குவதில் கண்டிப்பாக சிரமம் ஏற்படுகிறது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஒன்றிலிருந்து 5-ஆம் வகுப்பு வரை, ஒரு ஆசிரியர் என்பதை விடுத்து, அனைவருக்கும் கல்வி தர வகுப்புக்கு ஒரு ஆசிரியர் வீதம் 5 ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், ஒரே அறையாக உள்ள பள்ளிகளில் ஒரு வகுப்புக்கும் இன்னொரு வகுப்புக்கும் இடையே ஒரு செங்கல் சுவரை வைத்துத் தடுத்தால் மாணவர்களுடைய சத்தத்தைக் குறைத்து, நல்ல கல்வியைத் தர ஏதுவாக இருக்கும் என்று யோசனையைத் தங்களுக்கு நான் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், கடமையைப் பல பேர்கள் ஆற்றினாலும் கூட, ஒருசில ஆசிரியர்கள் அந்தத் தொழிலை உபதொழிலாகவும், சொந்தத் தொழிலை பிரதான தொழிலாகவும், செய்து வருகின்ற ஒரு கசப்பான சூழ்நிலை இருந்து வருகிறது. முன்பெல்லாம், தலைமை ஆசிரியராக இருப்பவர், அந்த ஊரிலேயே குடியிருக்கும்போது, நல்ல கல்வியைத் தர முடிந்தது. ஆனால் இன்றைக்கு வேறு ஒரு ஊரிலேயிருந்து வருவதால், நல்ல கல்வியைத் தர முடிவதில்லை என்பதை அடிப்படையாக மனதிலே கொண்டு, தலைமை ஆசிரியர்கள் அந்தந்த ஊர்களிலே தங்குவதற்கு அறிவுறுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அவினாசி தொகுதியில் உள்ள அன்னூர் ஒன்றியத்தில் உள்ள வாக்கனாம்கொம்பு என்ற இடத்திலும், அவினாசி தொகுதியில் முருககவுண்டம் பாளையம் என்ற இடத்திலும் சுமார் 1,000 பேர்களுக்கு மேல் குடியிருக்கிறார்கள். அன்னூரிலிருந்து சுமார் 8 கிலோமீட்டர் தொலைவில் உள்ள வாக்கனாம்கொம்பு என்ற இடத்தில் இதுவரையில்

1995 ஏப்ரல் 27] [டாக்டர் மு. சீனியம்மாள்]

பள்ளிகளே இல்லை. மாவட்ட ஆட்சித் தலைவருடைய உதவியோடு டி.இ.ஓ. மற்றும் அறிவொளி இயக்கத்தின் சார்பாக அங்கே தொடக்கக் கல்விப் பள்ளி ஒன்று தொடங்கப்பட்டு இருக்கிறது. இதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஒரு மாதத்திற்கு முன்பே நான் கொண்டு வந்திருக்கிறேன். எனவே, உடனடியாக அந்தப் பள்ளிக்கு அங்கீகாரத்தைக் கொடுத்து, ஆசிரியர்களையும் பணித்திட வேண்டும். என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதேபோல் முருககவுண்டன் புதூரிலும் பள்ளி ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. அதற்கும் அங்கீகாரத்தையும் ஆசிரியர்களையும் நியமிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

உயர்நிலைப்பள்ளிக் கல்வியை எடுத்துக் கொள்கின்றபோது, உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி, நடுநிலைப்பள்ளி, தொடக்கப்பள்ளி ஆகிய அனைத்திற்கும் போதிய அளவிற்கு அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்கும் வகையில், 7,202 நடுநிலைப்பள்ளிகளுக்கும், தொடக்கப்பள்ளிகளுக்கும் கூடுதலாகக் கட்டிடம் கட்டிக் கொடுக்க முயற்சி எடுத்துள்ளதை மனதார நான் வரவேற்கிறேன்.

மகளிர் நடுநிலைப் பள்ளிக்கு 342 கோடி ரூபாய் செலவில் கழிப்பறை வசதிகளைச் செய்து கொடுக்கின்ற திட்டம் மிகச் சிறந்த திட்டம். இதையும் நான் பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனது தொகுதியில் உள்ள, பெரியாயிபாளையம், கருவலூர், சேவூர், செர்க்கம்பாளையம், அன்னூர் அரசுப் பள்ளிகளுக்குக் கூடுதலாகக் கட்டிடங்கள் மற்றும் ஆய்வுக்கூடங்களைக் கட்டிக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பெண் ஆசிரியர்களும், பெண் மாணக்கியர்களும் சிரமப்படக்கூடாது என்று கழிப்பிடம் கட்டிக் கொடுத்த இந்த அரசை நான் பாராட்டுகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வரும் ஆண்டில், 25 தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாகவும், 40 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும் 30 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப்பள்ளிகளாகவும் உயர்த்தப்பட உள்ள திட்டத்தை வரவேற்கின்ற அதே நேரத்தில், என்னுடைய அவிநாசி தொகுதியில் சுமார் 31 பஞ்சாயத்துக்கள் உள்ளன. அவிநாசியில் ஒரே ஒரு மேல்நிலைப் பள்ளிதான் இருக்கிறது. இந்த 31 பஞ்சாயத்துகளிலும் உள்ள படிக்கின்ற மாணவியர்கள் ஒரே ஒரு பள்ளியினைத் தான் நம்பி இருக்கின்றனர். எனவே அனைவருக்கும் இடம் அளிக்கமுடியாத ஒரு சூழ்நிலை உள்ளது. இதனால் பலபேர் படிப்பை பாதியில் நிறுத்துகின்ற சூழ்நிலையும் உள்ளது.

[டாக்டர் மு. சீனியம்மாள்] [1995 ஏப்ரல் 27

பிற்பகல் 4-05

இன்றைக்கு 6-லிருந்து 14 வயது வரை பள்ளி செல்லாது பள்ளிப் படிப்பைப் பாதியில் நிறுத்தியுள்ள சிறுவர்களை கல்வி புகட்டி முறையான கல்விப் பாதையில் அழைத்துச் செல்ல வேண்டும் என்ற சிறப்பை ஏற்படுத்தியிருக்கின்ற டாக்டர் புரட்சித் தலைவியின் ஆட்சியில் உடனடியாக அவிநாசி தொகுதியில் ஒரு மேல்நிலைப் பள்ளியோ அல்லது ஏதேனும் ஒரு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

40 பேர்களுக்கு ஒரு ஆசிரியர் என்று இருந்தால் நல்ல தரமான கல்வி வழங்க இயலும். ஆனால் அவிநாசி, பல்லடம், திருப்பூர் மேல்நிலை அரசுப் பள்ளிகளில் தற்போது அரசு பள்ளிகளின் தரம் கூடியுள்ளதால் மாணக்கர்களின் எண்ணிக்கையும் வருகையும் கூடியிருக்கிறது. ஒரு கிளாசில் சுமார் 40-லிருந்து 80-90 வரை உள்ளனர். பெரும்பாலும் கணக்கு, அறிவியல் பாடங்கட்கு ஆளில்லாத குறை உள்ளது. இவற்றை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்ந்து வகுப்புகளைக் கூட்டியும், 40 மாணவர்கட்கு ஓராசிரியர் என நியமித்து, கணிதம், அறிவியல் சிறப்பு ஆசிரியர்களை நியமிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல போதிய தளவாடச் சாமான்கள் தந்து உதவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொடக்கக் கல்விக் கூடங்களில் அரசால் வழங்கப்பெறும் இலவசப் புத்தகங்கள், சிலேட்டு, காலணிகள் முதலியவற்றை உரிய நேரத்தில் குழந்தைகளுக்குக் கொடுப்பதற்கு அந்தப் பள்ளியினுடைய ஆசிரிய பெருமக்களுக்கு அறிவுறுத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது தலைமையாசிரியர்களுடைய பொறுப்பு மற்றும் பணிப் பளு அதிகமாக இருப்பதால், உதவி தலைமையாசிரியர்களைப் பள்ளிகளில் நன்றாக உபயோகப்படுத்தலாம். ஆனால் உதவி தலைமை ஆசிரியர்களுடைய பணி குறித்து சரியான ஆணைகள் போடப்படவில்லை. எனவே உதவி தலைமை ஆசிரியர்களிடம் பணிகளைப் பள்ளிக் கல்வி இயக்குநர் எழுத்துமூலம் வரைமுறைப்படுத்த வேண்டுகிறேன்.

ஒரு சில பணிகள், உதாரணமாக 'அட்டெண்டன்ஸ் ஆப் டீச்சரஸ் ரிஜிஸ்டர்ஸ், பிரிபரேஷன் ஆப் டைம் டேபிள், எக்சாமினேஷன் சிஸ்டம்' போன்றவற்றை அசிஸ்டன்ட் எச்.எம். பொறுப்பில் விடலாம். ஒரு சில பள்ளிகளில் எலிமெண்டரி ஸ்கூல், ஹைஸ்கூல், ஹையர் செகண்டரி ஸ்கூல்-க்கு என்று தனித்தனி அசிஸ்டன்ட் எச்.எம். உள்ளனர். இவ்வாறு இருக்கும் இடங்களில் தலைமை ஆசிரியர் இல்லாத நாட்களில் மேனிலை

கல்வி அசிஸ்டண்ட் எச்.எம். பள்ளியைக் கவனிக்க வேண்டுமென்று அரசாணை உள்ளதால் அவர்களை கூடுதல் தலைமையாசிரியர் என்ற பெயரில் அழைக்க ஏற்பாடு செய்யலாம். இதற்கு எந்தச் செலவும் இல்லை. ஒரு 'ஜாப் சேடிஸ்பேக்ஷன்' இருக்கும். எனவே உடனடியாக ஆணைப் பிறப்பித்திட கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மிக முக்கியமான ஒன்று. கிராமத்து மாணவர்கள் ஆங்கிலம் பேசுவதிலும், கற்பதிலும் மிகவும் கடினமாக இன்றைக்கு இருந்துகொண்டிருக்கின்றனர். எனவே மாண்புமிகு அமைச்சரவர்கள் புதுப் புது சிந்தனைகளைப் புகுத்துக்கொண்டிருக்கிற டாக்டர் புரட்சித் தலைவியின் நல்லாட்சியில் 'ஸ்போக்கன் இங்கிலீஷ் வித் கான்வர்சேஷன்' என்ற வகையில் கிராமங்களில் உள்ள மாணவர்கள் பயனடையக் கூடிய வகையில் அட்லீஸ்ட் ஒரு பீரியட் ஸ்போக்கன் இங்கிலீஷ் வித் கான்வர்சேஷன் என்று வைக்கவேண்டுமென்று கூறிக்கொள்கின்றேன். 'ஒன் வர்டு, ஒன் டே' என்று ரயில்வேயில் இந்தியைப் படிப்பது போல வாரம் ஒரு கேள்வி, ஒரு பதில் என்று ஆங்கிலத்தில் மாணவர்களுக்கு படிப்பித்தால் கிராமத்திலிருந்து படிக்கும் மாணவர்கள் பயன்பெறுவார்கள் என்று கூறிக்கொள்கின்றேன்.

தற்போது ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். போன்ற தேர்வுகளில் பொது அறிவு என்ற ஒரு தாள் உள்ளது. பொது அறிவைப் பொறுத்து, 1/2 மணி நேரமோ அல்லது ஒரு மணி நேரமோ, 'தூர்தர்ஷனில்' ஆங்கிலப் பொது அறிவு வினா விடையை தொலைக்காட்சி மூலமாக தமிழில் மொழி பெயர்த்து அளித்திட்டால், நமது தமிழ்ச் சமுதாயத்தில் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ் போன்ற படிப்புகளுக்குப் போகின்ற மாணவர்களுக்கு மிகவும் உபயோகமாக இருக்குமென்று நான் கூறிக்கொள்கிறேன்.

ஒரு வீடு, ஒரு நூலகம் என்ற அறிவுரையின்கீழ், புரவலர்களின் உதவியோடு எல்லா கிராமங்களிலும் நூலகம் அமைத்திட கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 4-10

இன்றைக்கு அன்னை தெரசாவினுடைய பல்கலைக்கழகத்திற்கு என்னைப் போன்றவர்களை எல்லாம் சிண்டிகேட் உறுப்பினர்களாக போட்டு அழகு பார்த்துக்கொண்டிருக்கிற அன்னை டாக்டர் புரட்சித் தலைவியினுடைய பொற்பாதங்களில் நன்றியை சமர்ப்பிப்பதோடு, அன்னை தெரசா பல்கலைக்கழகத்தின் சில சங்கடமான சூழ்நிலைகளை அமைச்சருடைய பார்வைக்குக் கொண்டுவருவது என் கடமை என்று கருதுகிறேன். நேற்று நமது அறிவியல் தலைவி, டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அன்னை தெரசா பல்கலைக்கழகத்தில் சுமார் ஒரு ஆண்டாக

காலியாக இருக்கின்ற வைஸ் சேன்சலர் பதவியைப் போடவேண்டுமென்று கேட்டார்கள். பெண்கள் மேம்பாட்டிற்காக ஒரு ஆராய்ச்சி நிறுவனம் சர்வதேச அளவில் ஒரு தலைசிறந்த நிறுவனமாக அமையவேண்டுமென எண்ணி, புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் அன்னை தெரசாவின் பெயரால் அன்னை தெரசா பல்கலைக்கழகத்தை கொடைக்கானலில் நிறுவினார்கள் என்ற ஒரே காரணத்திற்காக திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில் அதை சென்னைக்கு மாற்றிவிட்டனர். புரட்சித் தலைவி அவர்கள், டாக்டர் எம்.ஜி.ஆர் விட்டுச் சென்றுள்ள சாதனைகளையும், திராவிட முன்னேற்றக் கழகத்தால் இடையூறு செய்து மறைக்கப்பட்ட பல நிகழ்ச்சிகளுக்கு இன்றைக்கு உயிர் கொடுத்து, டாக்டர் புரட்சித் தலைவருடைய பாதையில் அண்ணா மாவட்டத்தினுடைய மக்களின் கோரிக்கைகளை மீண்டும் ஏற்று, தங்கத் தலைவி, தமிழகத்தின் தன் நிகரில்லாத வரலாற்றுச் சிறப்புமிக்க நாயகி, டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தால் சென்னைக்கு மாற்றப்பட்ட அன்னை தெரசா பல்கலைக் கழகத்தை மீண்டும் கொடைக்கானலுக்குக் கொண்டுவந்தார்கள். (மேசையை தட்டும் ஒலி)

அண்ணா மாவட்டத்து மக்களும் கொடைக்கானல் மக்களும் இதய பூர்வமாக அவர்களைப் பாராட்டிக் கொண்டிருக்கிற இந்தவேளையில் இந்தப் பல்கலைக்கழகத்தை ஆரம்பித்து 10 ஆண்டுகள் ஆகியும் இதுவரையில் ஒரு முன்னேற்றம் கூட இல்லை, என்பதை மிக வேதனையோடு கூறிக்கொள்கிறேன். 1994-95 ஆம் ஆண்டு இங்கு உள்ள துணை வேந்தர்—அந்தக் கல்லூரிக்கு மாணவர்கள் கம்பியூட்டர் சைன்ஸ் என்ற கோர்ஸுக்கு 150 பேர்கள் விண்ணப்பம் செய்துள்ளனர். அந்த 150 பெர்ட்டிஷன்களில் 52 பேர் முதல் வகுப்பில் தேர்வு பெற்றிருக்கிறார்கள்—இந்த 52 பேர்களையும் தேர்வு எழுத வைத்து அவர்களில் 7 பேரை மட்டுமே தேர்வு செய்திருக்கிறார்கள். இதில் வியப்பு என்னவென்றால் இவ்வளவு பெரிய பல்கலைக்கழகத்தில் மாணக்கர்களுடைய மொத்த எண்ணிக்கை 19. மொத்த ஆசிரியர்களும் பணியாளர்களும் சேர்ந்து எண்ணிக்கை 92. மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும் நான் கனிவான கவனத்திற்கு கொண்டு வருவது என்னவென்றால், இது தங்களுக்கு தெரியுமா, கல்வித் துறை செயலாளர் இதை தங்களுக்கு தெரிவித்திருக்கிறார்களா, ஏனென்று கேட்டால் 19 மாணாக்கர்களை மாத்திரம் வைத்துக்கொண்டு 92 ஆசிரியர்களும் மற்ற பணியாளர்களும் போட்டு அரசாங்கத்தினுடைய நிதியை பெறுகின்ற இந்த பல்கலைக் கழகத்தை இன்னும் விரிவுபடுத்தாமல் இருப்பது மனதிற்கு மிக

1995 ஏப்ரல் 27] [டாக்டர் மு. சீனியம்மாள்]

வேதனையாக இருக்கிறது என்று சொல்லிக் கொள்கிறேன். துணை வேந்தர் அவர்கள் சென்னையில் தங்க வேண்டும் என்பதற்காகவே, எந்த நோக்கத்திற்காக டாக்டர் புரட்சித் தலைவர் ஆரம்பித்தாரோ அது நிறைவேறாமல் பெண்கள் சமுதாயத்திற்கு கொடுமையை நிகழ்த்திக் கொண்டிருக்கிறார்கள். ஏதோ கொடைக்கானலில் மாணவர்கள் சேரவில்லை என்பது போல போலி தோற்றத்தை ஏற்படுத்தி இந்தப் பல்கலைக்கழகத்தை மீண்டும் சென்னைக்கே மாற்றி உள்ளார்கள் என்பதைப் பார்க்கிற பொழுது மனது மிக வேதனையாக இருக்கிறது. அப்படி இல்லாவிட்டால் மாணவர்களின் எண்ணிக்கை 19-ம், ஆசிரியர்கள் மற்ற பணியாளர்கள் எண்ணிக்கை 92-மாக இருந்தால் இது எப்படி சரியாகும் என்பதை அமைச்சர் அவர்கள் சிந்தித்து இதற்கு என்ன காரணம் என்பதற்கு இந்த அவையிலேயே எங்களுக்கு பதிலைத் தரவேண்டும். பாக்கி தேர்வு செய்யாத 45 பேர்களும் கோர்ட்டிற்கு போயிருக்கிறார்கள். அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து, இந்தக் கல்லூரியிலேயே அனுமதிப்பதற்கு தாங்கள் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அரசு எத்தனையோ நிதி உதவிகளையும் அடிப்படை தேவைகளையும் செய்து கொடுத்தும் துணை வேந்தர் ஏன் இந்தக் கல்லூரியை விரிவாக்கம் செய்யவில்லை. இதைக் கல்வித்துறை செயலாளர், அமைச்சர் அவர்களுக்கு அறிவித்தார்களா? இனிமேல் வரும் விண்ணப்பங்களை தனி நபர் வைத்து ஆராய்ந்து ரெஜிஸ்டரில் மெயின்டெயின் பண்ணி, விண்ணப்பங்களின் மேல் கல்லூரியில் சேர்ப்பதற்கும், ரிஜக்ஷன் செய்வதற்கும் உரிய காரணத்தை எப்போதுகேட்டாலும் சொல்வதற்கு கல்வித் துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நான் சிண்டிகேட் மெம்பராக இருப்பதால் ஆட்சி மன்றக் குழு கூட்டத்தில் பேசுகிற பொழுது அரசு சட்டத்தின் பிரகாரம் new appointments and any promotions cannot be given என்று இருப்பது ஒரு தீர்மானமாக போட்டு நாங்கள் கொண்டு வந்த போது, வைய்ஸ் சேன்சலர் அவர்கள், அதையும் மீறி நியூ அப்பாயிண்ட்மென்ட்டும் பிரமோஷனும் கொடுத்திருக்கிறார்கள். அதை கல்வித் துறை செயலாளர் அவர்களுடைய கவனத்திற்கு வராமல் எப்படி செய்ய இயலும். சிண்டிகேட் மெம்பர் சொன்னதற்கும் ஆட்சி மன்றக் குழு கூட்டத்திற்கும் என்ன அர்த்தம் இருக்கிறது என்பதே தெரியவில்லை. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடன்டியாக இதைக் கருத்தில் கொண்டு இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். செயலாளர் இதற்கு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். ஏன் இந்த வைய்ஸ் சான்சலர் இப்படி பண்ணுகிறார்கள் என்பதை எங்களுக்கு தெரிவிக்க வேண்டுமாய் .... *(குறுக்கீடு)*

[1995 ஏப்ரல் 27

*மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி :* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்னை தெரசா பல்கலைக்கழக துணை வேந்தருக்கு வேறு எங்கேயோ ஆதரவு இருக்கிறது என்று மக்கள் மத்தியிலே ஒரு எண்ணம் ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் வந்த வண்ணம் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்து வைத்திருக்கிற இந்த குற்றச்சாட்டுகளின் அடிப்படையிலும் ஏற்கெனவே பெறப்பட்டிருக்கிற குற்றச்சாட்டுகளின் அடிப்படையிலும் கல்வித் துறை தகுந்த நடவடிக்கைகளை எடுக்கும்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* பேசி முடித்துவிடுங்கள்.

*டாக்டர் மு. சீனியம்மாள் :* இதைப் பேசிக் கொண்டிருக்கும் போது மாண்புமிகு புரோசான்சிலர் அவர்களும், வைஸ் சான்சிலர் அவர்களும் இந்த அரசு நாளை கவிழ்ந்து விடும். கவர்னர் அவர்களும்....

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* கவர்னர் என்று இங்கே பேசக் கூடாது. நேற்றுப் பேசியதோடு சரி. நேற்றுதான் அந்த விதி விலக்கு அளித்தோம்.

*டாக்டர் மு. சீனியம்மாள்:* மன்னிக்கவேண்டுகிறேன் பேரவைத் தலைவர் அவர்களே, துணை வேந்தர் அவர்களும், சான்சிலர் அவர்களும் சேர்ந்து ஆட்சியை நான் நாளைக்கு கவிழ்த்து விடுவேன். இது கவிழ்ந்து விடும், நீங்கள் பயப்பட வேண்டாம். இங்கே நாராயணபுரத்திலே இருக்கிற பழைய இடம் அப்படியே இருக்கிறது. நீங்கள் இங்கே வந்துவிடலாம் எனவே நீங்கள் பயந்து கொள்ள வேண்டாம், கொடைக்கானலில் இருந்து நான் மாற்றிச்செய்கிறேன், என்று கூறியிருப்பதாக தகவல் அறிகிறேன். மனதிற்கு மிக வேதனையாக இருக்கிறது. யாரும் வெற்றிகொள்ள இயலாத சூழ்நிலையில் வெற்றி மேல் வெற்றி பெற்றுக் கொண்டிருக்கிற டாக்டர் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் (மேசையைத்தட்டும் ஒலி) எந்தக் கொம்பன் இப்படி பேசுவது என்றால் அது மனதிற்கு மிக வேதனையாக இருக்கிறது, என்பதைக் கூறிக் கொண்டு .... ...(குறுக்கீடு)

*மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி :* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைத்தான் நான் முன்பே தெரிவித்தேன். எங்கிருந்தோ அவர்களுக்கு ஒரு ஆதரவு இருக்கிறது என்ற எண்ணம் பொதுமக்களிடத்திலே ஏற்படுகிற விதத்திலே நடவடிக்கை அங்கே அமைந்திருக்கிறது. செனட்டிலும் சிண்டிகேட்டிலும் இருக்கிற உறுப்பினர்கள் கூட இப்படிப்பட்ட புகார்களை எழுத்து மூலமாகவும் தந்திருக்கிறார்கள். ஆகவே அதன் அடிப்படையிலே அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 4-15

டாக்டர் மு. சீனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் அரிய சிந்தனையாளர். தயவுசெய்து நீங்கள் நினைத்துப் பார்க்க வேண்டும். நாம் கொண்டு வந்த இந்த பல்கலைக் கழகத்தில் 19 மாணவர்களை வைத்துக் கொண்டு 10 வருஷம் ஆகியும் இன்னமும் விரிவாக்கம் பண்ணாமல் இருந்தால் எவ்வளவு வேதனையாக இருக்கும். பொதுமக்கள் நமது அரசு பற்றி என்ன நினைப்பார்கள். இப்படிப்பட்ட ஒரு 19 பிள்ளைகளுக்காக இப்படி ஒரு பல்கலைக்கழகத்தை நடத்தி வேஸ்ட் பண்ணுகிறார்கள் என்று நினைக்க மாட்டார்களா? அடிப்படைத் தேவைகளையும், கட்டிடங்களையும், பணத்தையும் குவித்துக் கொண்டிருக்கிற இந்த அரசு, எல்லா பெண்களையும் மேன்மைப்படுத்த வேண்டுமென்று நினைக்கிற இந்த காலத்தில், தாங்கள் சென்னைக்கு வரவேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக, பிள்ளைகள் எல்லாம் கொடைக்கானலுக்கு படிக்க வரமாட்டார்கள் என்ற போலி தோற்றத்தை உருவாக்குவதை அமைச்சர் அவர்கள் ஒழித்துவிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு ......

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடைக்கானலிலேயே அந்தப் பல்கலைக் கழகம் அமையவேண்டும் என்பதற்காக இடமெல்லாம் தேர்வு செய்யப்பட்டு, கட்டிடங்கள் தேர்வு செய்யப்பட்டு, இப்பொழுது அங்கே நடைபெற்று வருகிறது. இருக்கின்ற எல்லா வகுப்புகளும் அங்கே செல்ல வேண்டுமென்று அரசு ஆணையிட்டு இருக்கிறது. அதைக் கொண்டு செல்லாவிட்டால் அதற்கான நடவடிக்கை நிச்சயமாக எடுக்கப்படும். வரும் ஆண்டிலே அந்தப் பிரச்சினை இருக்காது.

டாக்டர் மு. சீனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நியு அப்பாயிண்ட்மென்ட் விஷயத்தை கல்வித்துறைச் செயலாளருக்குத் தெரிவித்தேன். இந்த மாதிரி 19 ஸ்டுடண்ட்ஸ்-க்கு 92 ஸ்டாப் இருக்கிறார்கள் என்று தெரிவித்தேன். (மணியடிக்கப்பெற்றது) இந்த மாதிரி போடக்கூடாது என்று தெரிவித்தேன். ஆட்சி மன்றக் கூட்டத்தில் முடிவு எடுத்தப்பிறகு, இவர்கள் தன்னிச்சையாகச் செயல்படுகிறார்களே, உங்களுடைய கவனத்திற்கு வந்ததா? என்று கேட்கின்றபோது, அதற்கு ஒரு சரியான பதிலே கொடுக்கவில்லை.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். நேரிடையாக அரசு அதிலே தலையிட முடியாத

சூழ்நிலை இருக்கிறது. அது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் தெரியும். அங்கே முறைகேடுகள் நடந்திருந்தால் முறைப்படிதான் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அது ஒரு தன்னாட்சி நிறுவனமாக இருக்கிறது. ஆகவே, அரசின் அதிகாரம் அங்கே முழுமையாக இல்லை, என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப்போல், நடப்பு நிதியாண்டில் பெண்களுக்கென்று தனியாக அங்கே கல்லூரி ஒன்றை தொடங்குவதற்கும் இப்போது அரசு அனுமதி அளித்திருக்கிறது. வரும் ஆண்டில் முழுமையாக அன்னை தெரசா பல்கலைக்கழகம், கொடைக்கானலிலேயே இயங்கும் என்று இதயதெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டு இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* உரையை முடித்து விடுங்கள். 1/4 மணி நேரம் ஆயிற்று.

*டாக்டர் மு. சீனியம்மாள் :* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுக்கின்ற நடவடிக்கைகளுக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதோடு, தொழிற்கல்வி மாதிரி டேனிங், பிரிண்டிங் டெக்னாலஜி, ஆடிட்டிங், அக்கௌண்டன்ஸி போன்ற தொழிலை ஏற்படுத்தித் தர பி.ஜி. கோர்ஸ்-ஐ ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு ஒரு கோரிக்கை வைக்கிறேன். **

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* நேற்றுப் பேசியதோடு சரி. நேற்றுத்தான் அந்த விதிவிலக்கை அளித்தோம். அதற்குப் பிறகு பேசுவதற்கு வாய்ப்பு இல்லை. எனக்கு நீங்கள் வேண்டுகோள் வைத்ததினால், நானே அதைச் சொல்லிவிடுகிறேன். எனவே, அந்தப் பிரச்சினையை அதோடு விட்டுவிடுங்கள். நீங்கள் உரையை முடிக்கலாம். அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

*டாக்டர் மு. சீனியம்மாள் :* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்மைக்குத் துரோகம் இழைத்தவர்களை நாட்டை விட்டே ஓட்டி, மக்கள் காவியம் படைக்கும் முன்னர், மத்திய அரசு கெட்டவர்களைத் தண்டித்து மாசுபோக்கிட வேண்டுமென்று கேட்டு எனக்கு இந்த வாய்ப்பினைக் கொடுத்த தங்களுக்கு மீண்டும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

பிற்பகல் 4-20

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கு. தங்கமுத்து.

திரு. கு. தங்கமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி, தமிழ்வளர்ச்சி பண்பாட்டுத்துறை இந்த இரண்டு மானியக் கோரிக்கைகளின் மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்து இந்த தகுதியினை உருவாக்கிக் கொடுத்த இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்து என்னுடையக் கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மாக்கள் கூட்டத்திலிருந்து, மக்கள் கூட்டமாகப் பிரித்து தனி மனித நிலையை உருவாக்க வேண்டுமென்று சொன்னால், அதற்கு அடிப்படை அறிவினைப் பெற்றிருக்க பல வழிகள் இருந்தாலும், அதை பிரதானமாக பெறுகின்ற வழி கல்வியாகும். எனவே, அந்தக் கல்வியினைப் பெறுகின்ற இந்தச் சமுதாயத்தைப் பொறுத்தவரை எந்த நாட்டிலே கல்வியானது, ஒழுங்காக உருவெடுப்பதற்கு உருவாக்குகிறார்களோ, அந்த நாட்டை மட்டும்தான் உண்மையான வளர்ந்த நாடு, உண்மையாக வளர்ந்திருக்கின்றது என்று ஏற்றுக்கொள்கின்ற, அங்கீகாரம் கொடுக்கிற நிலைமையினை நாம் பார்க்கிறோம். எனவே, அந்த வகையில் தமிழகத்தைப் பொறுத்தவரை, கல்வியாக உயர்ந்திருக்கிற தன்மையில், ஆண்டுக்காண்டு அந்தக் கல்வியை உயர்த்துவதற்கு எந்த எந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அவற்றையெல்லாம் எடுத்து, கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு சுமார் 230 கோடி ரூபாய் நிதி ஒதுக்கினை அதிகமாகக் கொடுத்து, இந்தக் கல்வி பெறுகின்ற சூழ்நிலையை, சமுதாய உயர்வினை உயர்த்தியிருக்கிற இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களையும், மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் நான் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன். வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, இந்தத் துறையைப் பொறுத்தவரை எண்ணுகிற எண்ணத்தை வெளிப்படுத்துவதுதான் மொழி ஆகும். எனவே அந்த மொழியினை வளர்ப்பதற்கு தமிழ் மொழியைப் பொறுத்தவரை வளர்ப்பதில் மன்னர் காலத்திலே பல்வேறு சங்கங்களை வைத்து வளர்த்துக்கொண்டிருந்தார்கள். ஆனால் இந்த நூற்றாண்டில் பேரறிஞர் அண்ணா அவர்கள் உலகத் தமிழ் மாநாடு நடத்தி ஆய்வு நடத்தி வளர்த்து இருக்கின்ற கட்டத்தினை உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள். அதற்குப் பின்னால் இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இதேபோல் மாநாடு நடத்தி அத்தகைய நிலையை உருவாக்கி கொடுத்திருக்கிறார்கள். அதற்குப் பின்னால் இந்தத் தமிழகத்தின் முதலமைச்சர், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தஞ்சையிலே எட்டாவது உலகத் தமிழ்

மாநாடு நடத்தி அந்த மொழிக்கான உயர்வினை மறுபடியும் உருவாக்கி கொடுத்திருக்கிறார்கள். எனவே மன்னர்கால கட்டிடங்களில் சங்கம் வைத்து தமிழ் வளர்த்து பெயர் எடுத்திருக்கிறார்கள். இந்த நூற்றாண்டில் பேரறிஞர் அண்ணா அவர்களும், இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும், அவர் வழி வந்த இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களும் இந்த மொழிக்காக மாநாடு நடத்தி மொழியினுடைய உயர்வினை உருவாக்கி கொடுத்திருக்கிறார்கள். எனவே அந்த மொழி மாநாடு தஞ்சையிலே நடைபெறுகின்றபோது தஞ்சையினுடைய தன்மையை பொறுத்தவரை அது நாகரீகமாக உயர்ந்திருப்பது 50 ஆண்டுகளுக்கு பின்னர் எப்படி அந்த நகரமானது முன்னேறமுடியுமோ அந்த முன்னேற்றத்தை வளர்ச்சிப் பணிகளிலும், மற்ற அடிப்படைத் தேவைகளைப் பெறுகின்ற எல்லா வகைகளிலும் இப்போது பெற்று முன்னேறியிருக்கிறது. அதேபோல 800 ஆண்டுகளுக்கு முன்னால் மன்னர்கள் ஆட்சியில், சோழர்களுடைய ஆட்சியில் தஞ்சை நகரமானது எப்படி இருந்ததோ அப்படிப்பட்ட நிலையில் அரண்மனை, அங்கேயிருக்கின்ற சரஸ்வதி மஹால் அங்கே இருக்கின்ற மற்றைய கட்டிடங்கள் எல்லாம் நிறுவப்பட்டிருக்கின்ற தன்மையை தொல்பொருள் ஆய்வுத்துறை மூலமாகவும் அதேபோல் அரசே மறுபடியும் புதுப்பித்து அந்த பழங்கால நினைவுச் சின்னங்களாக மறுபடியும் அந்த நிலையையும் உருவாக்கி கொடுத்திருக்கிறது. எனவே மன்னர் காலத்திலிருந்த அந்த மரபுகளும் அந்த கலாச்சாரங்களும் மறுபடியும் புதுப்பிக்கப் பட்டிருக்கின்றன ஒருபுறம். அதேபோல இந்த உலகத் தமிழ் மாநாடு நடத்துகின்ற வேளையில் அதனுடைய வளர்ச்சியைப் பொறுத்தவரை இன்னும் 50 ஆண்டுகளுக்குப் பின்னாலே அந்த நகரமானது எப்படி வளர்ச்சிபெற வேண்டுமோ அந்த அளவுக்கு வளர்ச்சி பெற்று இருக்கிறது. எனவே இந்த மொழியினுடைய வளர்ச்சிக்காக ஆய்வு நடத்துகின்றபோது அந்த தஞ்சையைப் பொறுத்தவரை, அந்த நகரத்தைப் பொறுத்தவரை இப்படிப்பட்ட சூழ்நிலை உயர்ந்திருக்கின்ற தன்மையையும் அந்த உலகத் தமிழ் மாநாடு நடத்துகின்ற வாய்ப்பினை தஞ்சைக்குக் கொடுத்தமைக்காகவும் இந்தத் தருணத்தில் தமிழ்கூறும் நல்லுலகத்தின் சார்பிலும், தஞ்சை மாவட்ட மக்களின் சார்பிலும் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல இந்த மொழியைப் பொறுத்தவரை இப்படியெல்லாம் வாழ்த்தி உயர்த்துகின்ற அதே வேளையில் கல்வியைப் பொறுத்தவரை சமுதாய உயர்வுக்காக அடிப்படைத் தேவைகளை உயர்த்துகின்ற எல்லா கட்டங்களிலும் ஒவ்வொரு ஆண்டும் தொடக்கப் பள்ளிகளுடைய தன்மையை உயர்த்துவது அல்லது இடைநிலைப் பள்ளிகளுடைய தன்மையை உயர்த்துவது அல்லது உயர்நிலைப்

பள்ளிகளுடைய தன்மையை உயர்த்துவது, மேல்நிலைப்பள்ளி அதேபோல கல்லூரி கல்வி இப்படி ஒவ்வொரு ஆண்டும் இந்த பள்ளியினுடைய கல்வித் தன்மைகளையெல்லாம் உயர்த்துவது ஒருபுறம் இருந்தாலும் இந்த ஆண்டைப் பொறுத்தவரை அத்தனையிலும் இரட்டிப்பு மடங்கு கூட்டிக் கொடுத்து எல்லா நிலை கல்விகளிலுமே கூடுதலாக உருவாக்கி அந்தக் கல்வி நிலையினை உயர்த்துகின்ற தன்மையை இந்தத் துறை உருவாக்கி கொடுத்ததற்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல இதை உயர்த்துகின்றபோது என்னுடைய வேண்டுகோளாக என்னுடைய அபிப்பிராயமாக சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த ஆசிரியர்கள் நியமனம் செய்கின்றபோது கல்லூரிகள், மேல்நிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் இப்படிப்பட்ட பள்ளிகளில் எல்லாம் நியமிக்கின்ற அந்த நியமனங்களைவிட தொடக்கப் பள்ளிகளைப் பொறுத்தவரை அந்த விகிதாச்சாரம் கூடுதலாக இருக்க வேண்டும். காரணம் ஒரு ஆசிரியருடைய சொல்லிக் கொடுக்கின்ற திறன் - டீச்சிங் கெப்பாசிட்டியைப் பொறுத்தவரை 30 பிள்ளைகளிலிருந்து 35 பிள்ளைகள்வரைதான் அவராலே சொல்லிக் கொடுக்க முடியும். அதே நேரத்தில் ஒரு கல்லூரியிலே சொல்லிக் கொடுக்கின்றபோது 100 பேர்களுக்கு சொல்லிக்கொடுக்க முடியும். எனவே அப்படிப்பட்ட திறன் வேறுபாடு இருக்கின்ற காரணத்தினால் தொடக்கப் பள்ளியைப் பொறுத்தவரை அந்த விகிதாச்சாரத்தைக் கூட்டி தொடக்கக் கல்வியிலே ஆசிரியர் நியமனங்களைக் கூடுதலாக்கிக் கொடுக்க வேண்டுமென்று இந்தத் தருணத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் எண்ணமும் அதுதான். இருக்கின்ற நிதிநிலையின் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டிலும் பணியிடங்கள் அனுமதிக்கப்படுகின்றன. படிப்படியாக அந்த நிலையை உருவாக்க அரசு நிச்சயமாக முயற்சி எடுக்கும்.

திரு. கு. தங்கமுத்து : தலைவர் அவர்களே, நன்றி, எனவே நான் என்னுடைய எண்ணத்தை இத்தகைய தன்மைகள் இருக்க வேண்டும் என்பதற்கு இந்த வாய்ப்பிலே தெரிவித்தேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல கட்டிடங்கள் கட்டுவதைப் பொறுத்தவரை தொடக்கப் பள்ளிக்கூடங்களுக்கு கட்டிடங்களைக் கட்டுகிறோம். இடைநிலைப் பள்ளிக்கூடங்களுக்கு கட்டிடங்கள் கட்டுகிறோம். இவை அனைத்தும் ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்தும் மற்ற நிதியிலிருந்தும் கட்டுகின்றபோது அந்தக் கட்டிடங்களைத் தேவையான அளவுக்கு

ஓரளவிற்கு கட்டிக்கொடுத்து விடுகிறார்கள். ஆனால் உயர்நிலைப் பள்ளிகளுக்கும், மேல்நிலை பள்ளிகளுக்கும் கட்டிடங்கள் கட்டுவது அரசிலிருந்து நிதி ஒதுக்க விகிதாச்சாரத்தைப் பொறுத்துதான் கட்டப்படுகிறது. ஆனால் தேவையான அளவிற்கு கட்டுவதற்கு முடியவில்லை. ஆனால் அதே நேரத்தில் ஒரு வாய்ப்பாக ஜவஹர் வேலைவாய்ப்பு திட்டத்தை பொறுத்தவரை இந்தத் தொடக்கக் கல்வியிலே பல்வேறு நிலைகளில் எல்லாம் கட்டிடங்கள் கட்டுகிறோம். அதையே உயர்நிலைப் பள்ளிகளுக்கும் கட்டிடங்கள் கட்டலாம் அல்லது மேல்நிலைப் பள்ளிகளுக்கும் கட்டிடங்கள் கட்டலாம் என்கின்ற வகையில் இரண்டு துறையையும் ஒரு முகமாக ஒரு முடிவை எடுத்து அதைக் கட்டிடம் கட்டுவதற்கு தேவையான முயற்சி எடுத்தால் அந்த உயர்நிலைப் பள்ளிகள்........

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரவலாக்கப்பட்ட திட்டத்தின் கீழ் மேல்நிலை, உயர்நிலைப் பள்ளிகளுக்கும் தற்போது கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

பிற்பகல் *4-25*

திரு. கு. தங்கமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனவே தான் இப்போது ஒரு குறிப்பிட்ட மாவட்டத்தில் அதிகமாக எடுத்திருக்கிறார்கள். அதைப்போல எல்லா மாவட்டங்களிலும் அதை விரிவாக்கம் செய்தால் நிச்சயமாக நம் தேவைக்கு ஏற்ப அந்தக் கட்டிடங்களின் தேவையைப் பூர்த்தி செய்திடமுடியும் என்ற நம்பிக்கையில் தான் இதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியில் நீண்ட காலமாக தஞ்சாவூர் ஒன்றியம் மாரியம்மன் கோவிலைப் பொறுத்தவரையில் மேல்நிலைப் பள்ளி இருக்கிறது. அந்த மேல்நிலைப் பள்ளியை இரண்டாகப் பிரித்து பெண்கள் உயர்நிலைப் பள்ளியை தனியாக உருவாக்கிக் கொடுக்கவேண்டுமென்று 6 ஆண்டு காலமாக இந்தக் கோரிக்கையை முன்வைத்துக்கொண்டிருக்கிறோம். எனவே, இந்த ஆண்டு தயவுசெய்து இந்தக் கோரிக்கையை நிறைவேற்றி பெண்கள் உயர்நிலைப் பள்ளியை தனியாகப் பிரித்து உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதற்கு நிதிநிலை ஒதுக்கீடு பொறுத்தவரையில் கூட ஒரு தலைமை ஆசிரியர் நியமித்தால் போதும் என்ற நிலையில் இருக்கின்ற காரணத்தால் இதனை உருவாக்கிக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி உருவாக்கிக் கொடுக்கிறபோது அந்தப் பகுதியிலுள்ள பெண்கள் படிப்பதற்கு அதிக வாய்ப்பு இருக்கிறது என்பதை இந்தத் தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல் தஞ்சாவூர் ஒன்றியத்தில் மருங்குளம் ஊராட்சியில் இருக்கின்ற உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்திக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். திருவோணம் ஒன்றியத்திலுள்ள சென்னியாவிடுதி நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக ஆக்கவேண்டும் என்பதற்கும் வெட்டுவாபட்டு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக ஆக்குவதற்கும் முன்மொழிவுகள் அனுப்பப்பட்டிருக்கிற காரணத்தால் இதனை உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் திருவோணம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள திருநள்ளார், ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியத்திலுள்ள தும்மத்திக்கோட்டை, காட்டுக்குறிச்சி இவைகளை தொடக்கப் பள்ளியிலிருந்து நடுநிலைப் பள்ளியாக ஆக்கவேண்டுமென்று முன்மொழிவுகள் அனுப்பப்பட்டு இருப்பதை அதை செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் கல்லூரியைப் பொறுத்தவரையில் தஞ்சையிலுள்ள சரபோஜி கல்லூரி நீண்ட, பழைய காலத்தில் தொடங்கப்பட்ட முதல் கல்லூரி ஆகும். எனவே அந்தக் கல்லூரியினுடைய கட்டிடங்கள் பல்வேறு நிலையில் பழுது பார்த்து இப்போது முன்பை விட அதிகமாக சீர் செய்யப்பட்டு இருந்தாலும் அதில் இருக்கின்ற அரங்கம், சரபோஜி கல்லூரியினுடைய அரங்கமானது இப்போது மிகவும் பழுதடைந்த நிலையில் இருக்கிறது. எனவே முன்னுரிமை அடிப்படையில் அதனைச் சீர்செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல திருவையாறில் இருக்கின்ற அந்த புலவர் கல்லூரியைப் பொறுத்தவரையில் அது சத்திரம் நிர்வாகத்தால் நடத்தப்படுகின்ற கல்லூரி ஆகும். எனவே, அந்த சத்திர நிர்வாகமே இன்னும் கூடுதலாக விரிவாக்கம் செய்வதற்கு எவ்வளவு நிதி தேவை என்று கேட்கிறீர்களோ அதைக் கொடுப்பதற்கு தயாராக இருக்கின்ற காரணத்தால் தாங்கள் விரும்புவது போல், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரும்புவது போல் அல்லது அரசு விரும்புவது போல் இன்னும் கூடுதலாக வகுப்புகளைத் தொடங்க அந்தக் கல்லூரியை விரிவாக்கம் செய்வதற்கு வாய்ப்பு இருக்கின்ற காரணத்தால் அதனை செய்துக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் தேர்வு மையங்களைப் பொறுத்தவரையில் ஒரத்தநாடு ஒன்றியத்திலுள்ள வாண்டையார் இருப்பு உயர்நிலைப் பள்ளியில் தேர்வு மையம் உருவாக்கிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் பட்டுக்கோட்டை ஒன்றியம் நம்பிவேலில் இருக்கின்ற அந்த உயர்நிலைப் பள்ளியிலும் தேர்வு மையம் உருவாக்கிக் கொடுக்கவேண்டும்.

இந்த இரண்டு பள்ளிகளிலிருந்து தேர்வுக்காக அடுத்த பள்ளிக்குச் செல்ல வேண்டியிருப்பதால் கூடுதலான தூரம் செல்ல வேண்டியிருக்கிறது அதனால் அவர்கள் தேர்வு எழுதி வெற்றி பெறுகிற வாய்ப்புகள் பாதிக்கப்படுகின்ற சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால் இதனை நிறைவேற்றிக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த திருவோணம் ஒன்றியத்தைப் பொறுத்தவரையில், கிலாமங்கலம், சங்கராகுடிக்காடு, கோட்டைக்காடு, நெய்வேலி இந்த 4 உயர்நிலைப் பள்ளிக் கட்டிடங்கள் தொடக்கக் காலத்தில் கட்டப்பட்ட கட்டிடங்களாக இருக்கின்ற காரணத்தால் இதற்கு முன்னுரிமைக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள பாச்சூர், உளூரிலுள்ள உயர்நிலைப் பள்ளிகள், ஈச்சங்கோட்டை, வல்லம் போன்ற மேல்நிலைப் பள்ளிகள், தஞ்சை ஒன்றியத்திலுள்ள மருங்குளம், ஆலக்குடி இரண்டு உயர்நிலைப் பள்ளிகளுக்கும் கட்டிடங்கள் கட்டுவதற்கு நிதியை உருவாகிக் கொடுக்கவேண்டுமென்று கேட்டு இத்தகைய தன்மையில் உருவாக்கியிருக்கின்ற இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 4-30*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். வி. சண்முகம், சரியாக 5 நிமிடத்தில் பேசி முடிக்கவேண்டும்.*

*திரு. எஸ். வி. சண்முகம் :* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கு என்னுடைய வணக்கத்தையும், பேசுகின்ற வாய்ப்பை தந்தமைக்கு நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

"அக்கினிக் குஞ்சொன்று கண்டேன்;—அதை
அங்கொரு காட்டிலோர் பொந்திடை வைத்தேன் ;
வெந்து தணிந்தது காடு ;—தழல்
வீரத்திற் குஞ்சென்று மூப்பென்று முண்டோ ?

என்று பாடிய பாரதியாருடைய கவிதைகளை நமக்கு அன்பளிப்பாகத் தந்து இமைப்பொழுதும் சோராது இருத்தல் வேண்டும் என்ற வரிகளை நமக்கு நினைவுப்படுத்தியிருக்கின்ற மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைக் கூறி தமிழ் சார்ந்த சில விஷயங்களை மட்டும் சுருக்கமாகச் சொல்லலாம் என்று கருதுகிறேன்.

1995 ஏப்ரல் 27] [திரு. எஸ்.வி. சண்முகம்]

தமிழ்மொழி தாய்மைக்கு முன்னுரிமை தருகின்ற மொழி. அதனாலேதான் அலைமகள் என்கிறோம் ; கலைமகள் என்கிறோம். பூமாதேவி என்கிறோம். ஒரு தமிழ் கவிஞன்கூட, தமிழை தாயாக சித்தரித்து ஒரு கவிதை எழுதி இருக்கிறான்.

காதொளிரும் குண்டலமும்
கைக்கு வளையாபதியும்
கருணை மார்பின் மீதொளிர் சிந்தாமணியும்
மெல்லிடையில் மேகலையும்,
சிலம்பார் இன்பப் போதொளிரும் திருவடியும்,
பொன்முடி சூடாமணியும்
நீதியொளிர் நூலாய் திருக்குறளை
தாங்கு தமிழே வாழ்க

என்று எழுதி இருக்கிறான்.

தமிழ்த்தாய் காதுகளிலே ஒலிக்கின்ற கம்மலாக, குண்டலகேசி என்ற நூலையும், கைகளிலே குலுங்குகின்ற வளையலாக வளையாபதி என்கின்ற நூலையும், மார்பிலே ஒளிருகின்ற சங்கிலியாக சிந்தாமணி என்கின்ற நூலையும், மெல்லிடையிலே மணிமேகலையையும், திருவடிகளிலே சிலப்பதிகாரத்தையும், மகுடமாக, பொன்முடியாக சூடாமணியையும், செங்கோலாக திருக்குறளையும் ஏந்தி, தமிழ்த்தாய் வீற்றிருப்பதாகக் கவிதை எழுதி இருக்கிறாள். தமிழ் அன்னைக்கு இந்த 7 சிறப்புக்களைத் தந்த கவிஞனுடைய வழியிலே நின்று, எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டை நடத்தி, தமிழ்த்தாய்க்கு அறிவியல் தமிழ் என்கின்ற எட்டாவது அணிகலனை அணிவித்தவர் நம்முடைய புரட்சித் தலைவியார் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழுக்கு நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை இவையெல்லாம் போதாது. இந்த விஞ்ஞான உலகத்தை சிந்திக்கின்ற அறிவியல் தமிழ் வேண்டும். அதனை, தமிழ் தன்னகத்தே இணைத்துக் கொள்ளாமல், இந்த விஞ்ஞான உலகத்தை சந்திக்க முடியாது. சமாளிக்க முடியாது என்பதனாலேதான் அறிவியல் தமிழை தமிழ்த்தாய்க்கு இன்றைக்கு புரட்சித் தலைவியார் அவர்கள் தந்து இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ் தோன்றிய காலந்தொட்டு, தமிழுக்குப் பெருமைச் சேர்க்கின்ற பலர் தோன்றி இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் வராத சிந்தனை, அவர்களுக்கெல்லாம் தோன்றாத ஒரு ஞானம் இந்த நூற்றாண்டிலே இந்த சகாப்தத்திலே, நம் காலத்திலே தோன்றிய புரட்சித்

தலைவியார் அவர்களுக்குத்தான் (மேசையைத் தட்டும் ஒலி) அறிவியல் தமிழ் வேண்டுமென்ற சிந்தனை தோன்றி இருக்கிறது. ஏதோ அறிவித்தார்கள் என்று இருந்து விடாமல், நிற்க, அதற்குத் தக என்பதுபோல, அறிவியல் தமிழ் தமிழகத்திலே, தமிழ் மொழியிலே ஆழ்ந்து வேரூன்றுவதற்காக மிகுந்த அக்கறையோடு ஏராளமான நிதியையும் ஒதுக்கி இருக்கிறார்கள். ஆகவே, இந்த நூற்றாண்டு என்பது, இந்தத் தலைமுறை என்பது புரட்சித் தலைவியார் அவர்கள் காலத்திலே, இதற்குமுன் எந்த காலத்திலும் சந்திக்காத ஒரு சாதனையை தமிழக அரசு சந்தித்துக்கொண்டு இருக்கிறது. (மேசையை தட்டும் ஒலி) இன்றைக்கு இருக்கக்கூடிய இளைய சமுதாயத்திற்கு இத்தகைய பலன்கள் கிடைத்தாக் வேண்டும்.. என்றால் இன்னும் நீண்ட நெடிய காலத்திற்கு தமிழகத்தினுடைய முதலமைச்சராக டாக்டர் புரட்சித் தலைவியார் அவர்கள் இருந்தாக வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு வித்திட்டு இருக்கிறார்கள். இந்த விதையினுடைய பலனை இந்தச் சமுதாயம் பெற்றாக வேண்டும் என்பதை இந்த நேரத்திலே நினைவுபடுத்தி, இன்றைக்கு டாக்டர் புரட்சித் தலைவியார் அவர்கள் தமிழறிஞர்களுக்கும், மொழிப் போராட்ட வீரர்களுக்கும் ரூபாய் 400 வீதம் உதவித் தொகை வழங்கி இருக்கிறார்கள். இதில் மொழிப் போராட்ட வீரர்களுக்கு இலவசப் பேருந்துப் பயணச்சீட்டு வழங்கப்பட்டு இருக்கிறது. தமிழ் அறிஞர்களுக்கும் இந்த இலவசப் பேருந்து பயணச் சீட்டு வழங்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன். மொத்தம் 410 பேர்கள்தான் இருப்பார்கள். ஆகவே, இந்தக் கோரிக்கையை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் ஏற்று, அறிவிப்பார்கள் என நம்புகிறேன்.

அதேபோல, தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் ஒழுங்காற்றுச் சட்டம் என்று ஒன்று இருக்கிறது. அதில் 19(3) என்ற விதி இருக்கிறது. பல கல்லூரிகள் அதை கடைப்பிடிப்பது இல்லை. உதாரணமாக, எங்கள் மதுரை நகரிலே இருக்கக்கூடிய அறிவியல் கல்லூரி கண்டிப்பாகக் கடைப்பிடிப்பது இல்லை. அந்தக் கல்லூரியிலே இருக்கின்ற 4 ஊழியர்களை விதிக்குப் புறம்பாக வேலை நீக்கம் செய்து வைத்திருக்கிறார்கள். 19 (3) விதி என்பது — தற்காலிக வேலை நீக்கம் என்பது நான்கு மாதங்களுக்கு மேல் நீடிக்கக் கூடாது என்று கூறுகிறது. கல்வித்துறை தலையிட்டு, கல்வித்துறை அதிகாரிகள் தலையிட்டு விதிகளை நினைவுபடுத்தி பல நினைவூட்டுக் கடிதங்களை எழுதியதற்குப் பின்பும் அவர்கள் வேலையிலேயிருந்து நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறார்கள் கடந்த மூன்றாண்டுக்காலமாக. ஆகவே, இதுகுறித்து நம்முடைய கல்வியமைச்சரவர்கள் பரிசீலிக்க வேண்டுமென நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

1995 ஏப்ரல் 27] [திரு. எஸ்.வி. சண்முகம்]

பிற்பகல் 4-35

அதைப்போல, மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் இருக்கக்கூடிய சட்டங்கள் நெல்லை மனோன்மணியம் பல்கலைக்கழகத்தில் உள்ளதுபோல் இல்லை. நெல்லை மனோன்மணியம் பல்கலைக்கழகத்திலே இருக்கக்கூடிய சட்டங்களைப் போன்றச் சட்டங்கள் மதுரை காமராசர் பல்கலைக் கழகத்திற்கும் கொண்டு வர வேண்டுமென நான் வலியுறுத்திக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

நேற்றைக்கு நம்முடைய அவைமுன்னவர் அவர்கள் தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய பல்கலைக்கழகங்களுடைய நிலைமைகளையெல்லாம் சொல்லும்பொழுது பல்வேறு விஷயங்களைச் சொன்னார்கள். பல முற்றைகேடுகள் ஏற்பட்டிருக்கின்றன. நெல்லையிலே இருக்கக்கூடிய கல்லூரிக்கு எல்லூரிலேயிருந்து ஒருவர் வந்திருக்கிறார்.

ஆகவே, அத்தகைய குறைகளையெல்லாம் நிவர்த்தி செய்யக்கூடிய நடவடிக்கைகளைச் செய்ய வேண்டும் என நான் கேட்டுக் கொண்டு, நன்றி கூறி அமைகிறேன், வணக்கம்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* டாக்டர் எஸ். சுந்தரராஜ், திரு. சண்முகம் முடித்தது மாதிரி பேச்சை முடிக்க வேண்டும்.

*டாக்டர் எஸ். சுந்தரராஜ் :* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பளித்தத் தங்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைக் கூறிக் கொண்டு, ஒருசில கருத்துக்களை இந்த மாமன்றத்தில் வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

"அச்சம் என்பது மடமையடா அஞ்சாமை திராவிடர் உடமையடா" (மேசையைத் தட்டும் ஒலி) என்பது இன்றையதினம் திராவிட இயக்க வரலாற்றில் தந்தை பெரியாருடைய அஞ்சாமையையும், பேரறிஞர் அண்ணா அவர்களுடைய அறிவாற்றலையும், புரட்சித்தலைவர் அவர்களுடைய ஈகைக் குணத்தையும் ஒருங்கே அமையப்பெற்ற ஒப்பற்ற திராவிடச் சக்தியின் ஒளிவிளக்காக இன்றையதினம் தமிழ்நாட்டில் நல்லாட்சி நடத்திக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) எனது மனமார்ந்த நன்றியை இந்தத் தருணத்தில் காணிக்கையாக்கிக் கொள்கிறேன்.

இன்றையதினம் சமுதாய வளர்ச்சிக்குக் கல்வி எவ்வாறு தேவைப்படுகிறது என்பதை உணர்ந்து மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அதிக நிதியை ஒதுக்கி இன்றையதினம் 2233 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதிலேயிருந்து இன்றையதினம் எவ்வாறு கல்வி சமுதாய வளர்ச்சிக்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்பது சரியாகப் புலப்படுகிறது.

[டாக்டர் எஸ். சுந்தரராஜ்] [1995 ஏப்ரல் 27

இன்றையதினம் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்குக் கல்வி நிறுவனங்களுக்குப் பல்வேறுச் சலுகைகளை வழங்கி, ஆசிரியர் பணியிடங்களை அதிகமாக்கி, நல்லாசிரியர் விருதுகள் வழங்கி, எவ்வாறெல்லாம் சிறப்பித்து இந்தக் கல்வியின் தரத்தை மேம்படுத்த முயற்சித்தாலும், இன்றையதினம் கிராம அளவில் கல்வியின் தரம் வளர்ந்திருக்கிறதா என்றால் உண்மையிலேயே இன்னும் அந்த அளவிற்கு மக்களைப் போய்ச் சேரவில்லை என்பதைத்தான் திறம்பட உணர்த்திக் கொண்டிருக்கிறது.

இன்றையதினம் ஒவ்வொரு ஆரம்பப்பள்ளி மாணவர்களும் பல்வேறு கட்டுக்கள் அடங்கிய புத்தகங்களைச் சுமந்து கொண்டு, பாடச்சுமை அதிகமாக இருப்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். புதிய பாடத்திட்டத்தில் இந்தப் பாடச் சுமையைக் குறைப்பதற்குத் துறை சரியான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று எனது வேண்டுகோளாகவும் இன்றையதினம் விடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 95-96 ஆம் நிதியாண்டில் இந்தக் கல்வி மானியக் கோரிக்கையில், 100 புதிய தொடக்கப் பள்ளிகளையும், 25 தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக உயர்த்தியும், அதேபோன்று 40 ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்தியும், 30 அரசு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தியும் இன்றையதினம் கல்வி மானியத்தில் தமிழக மக்களுக்குப் பல்வேறு சலுகைகளை வழங்கியிருக்கின்றார்கள்.

என்னுடைய இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி தொகுதியில் வேந்துண்ணி பஞ்சாயத்தில் சரஸ்வதி நகரிலும், அரியனேந்தல் பஞ்சாயத்தில் வாகைக்குளத்திலும், வெங்கடக்குறிச்சி பஞ்சாயத்தில் கனக்களந்திலும் ஆரம்பப்பள்ளி வேண்டும் என்பதையும் கேட்டுக்கொள்கிறேன்.

அதேசமயம் பரமக்குடி நகரில் பாரதிநகரில் ஒரு ஆரம்பப்பள்ளியும், மணிநகரில் ஒரு ஆரம்பப்பள்ளியும் வேண்டுமென்பதை இந்தத் தருணத்தில் மாண்புமிகு கல்வியமைச்சரவர்களுக்கு வேண்டுகோளாக விடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு கல்வியமைச்சரவர்கள் எனக்கு முதலாண்டு மருத்துவத் துறை வகுப்பில் ஆசிரியராக இருந்து பணியாற்றினார்கள். ஆகவே மாண்புமிகு கல்வியமைச்சரவர்கள் .....

1995 ஏப்ரல் 27]

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* ஆசிரியருக்கு நேரே பேசுகிறீர்கள் என்பதை மனத்திலே வைத்துப் பேசுவது நல்லது. ரொம்ப சுருக்கமாகப் பேசவேண்டும். பய பக்தி கூடுதலாக இருக்க வேண்டும்.

*டாக்டர் எஸ். சுந்தரராஜ் :* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்கள் கேட்பதை ஆசிரியர்கள் அவ்வாறே வழங்குவார்கள் என்பதை மனத்திலே கொண்டுதான் மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு மாணவன் என்ற கருத்தில் இந்தக் கருத்தைக் கூறக் கடமைப்பட்டிருக்கறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* இது என்ன புது தியரி சொல்லுகிறீர்கள். எப்போதும் மாணவர்கள் கேட்பதைக் கொடுக்காதவர்களுக்குப் பெயர்தான் ஆசிரியர்கள். (சிரிப்பு)

பிற்பகல் 4-40

*டாக்டர் எஸ். சுந்தரராஜ் :* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் எங்களுடைய இராமநாதபுரம் மாவட்டத்தில் பெரியபட்டிணத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக ஆக்குவதற்குப் பணம் கட்டி ஆறு வருடங்களாகக் காத்திருக்கிறார்கள். அதே போன்று பரமக்குடி தொகுதியில் நயினார் ஒன்றியத்தில் ஒரு மேல்நிலைப் பள்ளிகூட இல்லாத சூழ்நிலை இருக்கிறது. மேலாயக்குடியில் பணம் கட்டி ஒரு வருடமாகக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். அதேபோன்று அரியநந்தலில் நடுநிலைப்பள்ளியாக இருக்கின்றதை உயர்நிலைப்பள்ளியாக மாற்றுவதற்குக் கிட்டத்தட்ட 20 ஆண்டுகாலமாகக் காத்திருக்கிறார்கள். அங்கே தனியார் நடுநிலைப் பள்ளியை அரசு உயர்நிலைப் பள்ளியாக்க வேண்டுமென்ற கோரிக்கையை விடுத்திருக்கிறார்கள். அதையும் ஏற்படுத்தித்தர வேண்டுமென்று இந்த நல்ல நேரத்திலே உங்களுக்கு வேண்டுகோளாக விடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றையதினம் கழிப்பிடங்கள் கட்டுவதற்காக 54 இலட்சத்தை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். ஆனால், இவையெல்லாம் நன்றாக மாணவர்களுக்குப் பயன்படுவதற்கு முதலில் தண்ணீரை கண்டுபிடித்து, தண்ணீர் வசதிகளுடன் கழிப்பிடத்தைக் கட்ட வேண்டுமென்று இந்தத் துறைக்கு வேண்டுகோளாக வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றையதினம் பள்ளிக் கட்டிடங்கள் கிராமங்கள்தோறும், நகரங்கள்தோறும் இருக்கின்றன. ஆகவே, கல்வித் துறைக்கு என்று தனியாக ஒரு தலைமைப் பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர்களை அமைத்து இதற்காக ஒரு திட்டத்தை மாண்புமிகு தமிழக முதல்வர்

டாக்டர் புரட்சித் தலைவி அவர்களிடம் எடுத்துரைத்து, இத்துறைக்குக் கட்டாயம் பெற்றுத்தர வேண்டுமென்று இந்தத் தருணத்தில் உங்களுக்கு வேண்டுகோளாக வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன. ஒவ்வொரு ஊரிலும் கட்டிடங்கள் இருக்கின்றன. நகரங்கள்தோறும் கல்லூரிகள் இருக்கின்றன. ஆகவே இவற்றின் முக்கியத்துவம் கருதி, கல்வித் துறைக்கு என்று Under the control of the Director of Elementary Schools அல்லது Collegiate Education னிலிலோ தனியாக ஒரு இன்ஜினியரிங் பொறியாளரை நீங்கள் அமைத்துத்தர வேண்டுமென்று இந்தச் சமயத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய இராமநாதபுரம் மாவட்டத்தில் பரமக்குடி நகராட்சியாக இருந்தும் கல்லூரியே இல்லாத சூழ்நிலை இருக்கிறது என்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களிடம் உணர்த்தியவுடன் அங்கே ஒரு கல்லூரி ஆரம்பிக்கப்படும் என்று உறுதி கூறினார்ககள். நாங்கள் எல்லாம் போஸ்டர்கள் அடித்து அங்கே கட்டாயம் இந்த நிதியாண்டில் கல்லூரி பரமக்குடிக்கு வருகிறது என்று தொகுதி மக்களுக்கு விளக்கியிருந்தோம். ஆகவே, அதிகமான நிதியை ஒதுக்கி இந்தக் கல்வியாண்டிலேயே நீங்கள் துவக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்தத் தருணத்தில் உங்களை கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்தான் பழையத் திட்டங்களையெல்லாம் இன்றையதினம் தூசுத் தட்டி எடுத்து அவைகளையெல்லாம் நிறைவேற்றுகிறார்கள். கரும்பலகைத் திட்டத்தின்கீழ், பல்வேறு கிராமப் பள்ளிகளில் இன்றையதினம் அந்தப் பெட்டிகள் பிரிக்கப்படாமலேயே இருக்கின்றன.

புத்தறிவு பயிற்சி மூலம் அந்த Elementary School ஆசிரியர்களுக்கு பயிற்சிகள் கொடுத்து, அந்தப் பொருள்களையெல்லாம் பயன்படுத்த வேண்டுமென்று இந்த நல்ல நேரத்தில் உங்களை கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றையதினம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்தில்தான் தனியாக Elementary School நிர்வாகத்திற்கு என்று மாவட்டங்கள்தோறும் தொடக்கக் கல்வி அலுவலரைப் போட்டிருக்கிறார்கள். அதை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேசமயம் இந்த மாவட்டக் கல்வி அலுவலர், ஒவ்வொரு கிராமங்களில் உள்ள, பஞ்சாயத்துக்களில் உள்ள அனைத்துப் பள்ளிகளையும் பார்க்க வேண்டும். ஏ.யி.ஓ. அவர்களே கட்டாயம் ஒவ்வொரு பள்ளிக்கும் சென்று நேரிடையாக பார்த்தால்தான் ஆரம்பக் கல்வித் தரம் எவ்வாறு இருக்கிறது

என்று மக்கள் புரிந்துகொள்கின்ற அளவில் அரசுக்கு எடுத்துரைக்க வேண்டும். அதற்கு இவர்களை சரியாக நீங்கள் வேலை வாங்கி, இந்தத் திட்டம் சரியாகச் செயல்படுகிறதா என்பதை நீங்கள் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டுமென்று இந்தத் தருணத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றையதினம் பள்ளிகள் அனைத்திலும், அடிப்படைவசதி இல்லாது இருப்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குக் கோடிட்டுக் காட்டுகிறேன். மேசைகள், கட்டிடங்கள் இல்லாமல், குடிதண்ணீர் இல்லாமல், விளையாட்டு மைதானம் இல்லாமல் இருக்கின்றன. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களிடம் எடுத்துச்சொல்லி பள்ளிகளில் அடிப்படை வசதிகளை நிறைவேற்றி சரியான, சிறப்பான திட்டத்தை உங்கள் காலத்தில், நீங்கள் இந்தத் தமிழக மக்களுக்கு கல்வித் துறைக்கு என்று ஏற்படுத்தித்தர வேண்டுமென்று இந்தத் தருணத்தில் உங்களை கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மக்களோடு தொடர்புடைய துறையாக இன்றையதினம் அறிவொளி இயக்கத்தின் மூலம் கல்வித் துறை செயல்பட்டு வருகிறது. ஆனால், என்னுடைய மாவட்டத்தில் இந்த அறிவொளி இயக்கம் மூலம் பல்வேறு அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்கள் கருத்துக்களை பரப்பிக் கொண்டிருக்கிறார்கள் என்ற கருத்தை மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன்.

இன்றையதினம், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்தில்தான் எந்த ஆட்சியிலும் இல்லாத அளவிற்கு செனட் உறுப்பினர்கள், ஆட்சிமன்ற உறுப்பினர்கள், பல்வேறு பகுதியிலிருந்து போடுகின்ற சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, சட்டத் திருத்தம் கொண்டுவந்து, மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக நீங்கள் இந்தச் சட்டத்தை நிறைவேற்றி இங்குள்ள பகுதிகளுக்கு நம்முடைய கல்வி பற்றி, நம்முடைய மக்கள் பற்றி தெரிந்த மக்களை நீங்கள் செனட் உறுப்பினராக, ஆட்சிமன்ற உறுப்பினராக நியமிக்க வேண்டுமென்று இந்தத் தருணத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். என்னுடைய மாவட்டத்தில் பரமக்குடியில் ஈவினிங் காலேஜ் இருக்கிறது. அங்கே 250 மாணவர்கள் படிக்கிறார்கள். இதில் 76 மாணவர்கள் ஆதிதிராவிட மாணவர்கள். இவர்களுக்கு அரசிடமிருந்து scholarship வழங்குவதற்குத் திட்டம் இல்லை. திண்டுக்கல், சிவகாசி, பரமக்குடி போன்ற பகுதியிலுள்ள ஈவினிங் காலேஜ் படிக்கின்ற மாணவர்களுக்கு நீங்கள் கல்வித் துறை மூலமாக scholarship வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்தத் தருணத்தில் உங்களுக்கு வேண்டுகோளாக விட கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 4-45*

இப்போது உயர் கல்விக்காக வேறு நாடுகளுக்கெல்லாம் செல்கிறார்கள். பல்வேறு துறைகளிலிருந்தும் தலைவர்கள் மற்றவர்கள் எல்லாம் வெளிநாடுகளுக்குச் செல்கிறார்கள். அவர்கள் அவ்வாறு சென்று வந்ததை அந்தந்தத் துறைகள் பயன்படுத்தியிருக்கிறதா என்பதைப் பார்க்கவேண்டும். அவர்களின் அந்த உயர் கல்வியை எல்லாம் அரசு பயன்படுத்த வேண்டும். அடுத்து..

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* உங்களுக்குக் கூடுதலாகவே பேச நேரம் கொடுத்திருக்கிறேன். சீக்கிரம் பேசி முடியுங்கள்.

*டாக்டர் எஸ். சுந்தரராஜ்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் விளையாட்டுத் துறைக்கு முக்கியத்துவம் கொடுத்து பல்வேறு திட்டங்களை எல்லாம் நிறைவேற்றிக்கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தமிழக மக்கள் கண்டுகொண்டிருக்கிறார்கள். இளம் சிறுவர்களுக்குக் கூட விளையாட்டுத் துறையில் முக்கியத்துவம் கொடுத்து, கிராமப்புறங்களில் இருந்தாலும் கூட அவர்களை எல்லாம் பொறுக்கி எடுத்து அவர்களுக்கு டிரெயினிங் கொடுத்து வருவதை நாம் காண்கிறோம். இவ்வாறு செயல்பட்டுக்கொண்டிருக்கிற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இந்த விளையாட்டுத் துறைக்கு பல்வேறு காரியங்களைச் செய்துக்கொண்டிருக்கிறார்கள். நான் எல்லாவற்றையும் சொல்லாவிட்டாலும் என்னுடைய தொகுதியின் நலன் கருதிச் சொல்கிறேன். பரமக்குடி நகராட்சியில் கிட்டத்தட்ட 7 நடுநிலைப் பள்ளிகள் இருக்கின்றன. அவர்களுக்குக் கட்டடமே இல்லை. அதற்காக 7 இலட்சம் ரூபாய் வேண்டும் என்று கல்வித் துறைக்கு வந்திருக்கிறது. நகராட்சிப் பள்ளிகளை எல்லாம் சீர் செய்யவேண்டும் என்ற அடிப்படையில் இந்தக் கல்வித் துறையின் மூலம் ஒரு சிறப்பான திட்டத்தை ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* திரு. இரா. அப்பு நடேசன்.

*திரு. இரா. அப்பு நடேசன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி மற்றும் தமிழ்ப்பண்பாடு தொடர்பான மானியத்தில் பேச வாய்ப்பளித்தமைக்காக முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கல்வி மனித வாழ்க்கைக்கும், சமுதாயத்திற்கும் எவ்வளவு தேவை என்பது எல்லோருக்கும் தெரியும். மனித உறுப்புகளில் கண்கள் எவ்வளவு முக்கியமானதாகத் தேவைப்படுகிறதோ அதைவிட முக்கியமானது இந்தக் கல்வி. அதுமட்டுமல்லாமல் எந்தப் பொருளாக இருந்தாலும் எடுத்து

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1995 ஏப்ரல் 27] [திரு. இரா. அப்பு நடேசன்]

கொடுக்க, கொடுக்க அது தேய்ந்துகொண்டே போகிறது. ஆனால் இந்தக் கல்வியைப் பொறுத்தவரையில் நாம் கொடுக்க கொடுக்க அது வளர்ந்துகொண்டிருக்கிறது. அந்த அளவுக்கு மிகச் சிறப்பான விஷயமாகும் இந்தக் கல்வி. அப்படிப்பட்ட இந்தக் கல்வி மானியத்திற்காக, கல்விக்காக நமது புரட்சித் தலைவியின் சிறப்பான ஆட்சியில் வரவு-செலவுத் திட்டத்தின் மொத்தத் தொகையில் 22 1/2 சதவீதத்தை அதாவது ஏறத்தாழ 2,234 கோடி ரூபாய் அளவுக்கு இந்தச் சிறப்பான மானியத்திற்காக ஒதுக்கி நம்முடைய கல்வியைப் பெருக்கி நம்முடைய நாட்டின் முன்னேற்றத்தைப் பெருக்குவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அது பாராட்டத் தக்கதாகும். கல்வி கற்காதவர்கள் இந்த மாநிலத்தில் இருக்கக்கூடாது என்ற அளவில் எத்தனையோ நல்ல திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதோடு மட்டுமல்லாமல் ஏழை எளிய பாமர மக்களை கல்வி, மற்றும் வாழ்க்கைத் தரத்தில் உயர்த்துவதற்காக இலவசமாக நோட்டுப் புத்தகங்கள், காலணிகள், சீருடைகள், இலவச பஸ் பாஸ், இலவச சத்துணவு இப்படி எல்லாம் கொடுத்து ஊக்குவித்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படி எல்லாம் ஊக்குவித்து நாம் பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காத்து, நல்ல திறமையான சந்ததியினரை உருவாக்க வேண்டும் என்ற அடிப்படையில் போடப்பட்டிருக்கின்ற இந்தக் கல்வி மானியத்தை வரவேற்பதோடு ஒரு கோரிக்கையை வைக்க விரும்புகிறேன்.

நம்முடைய தமிழகத்தில் தனியார் கல்விக் கூடங்களில் உரிமத்தைப் புதுப்பிக்க வரும்போது கட்டட உறுதிச் சான்றிதழ் தேவைப்படுகிறது. அந்தக் கட்டட உறுதிச் சான்றிதழுக்காக அப்ளிகேஷன்கள் போடுகிறபோது சுமார் ஒரு வருடம் கூடக் கிடைக்கவில்லை. அதாவது மிகச் சிறப்பாக இருக்கின்ற நல்ல உறுதியான கான்க்ரீட் கட்டடங்களுக்குக் கூட 2 வருஷம், 3 வருஷம்தான் உறுதிச் சான்றிதழ் வழங்குகிறார்கள். தனியார் பள்ளிகளைப் பொறுத்தவரையில் இது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. எனவே நல்ல சிறப்பான கான்க்ரீட் கட்டடங்களைப் பொறுத்தவரையில் 10 வருஷத்திற்கு உறுதிச் சான்றிதழ் அளிக்கவும், 10 வருஷத்திற்கு லைசன்ஸைப் புதுப்பித்துத் தரவும் ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கேரள மாநிலத்திலிருந்து பிரித்து இங்கே தமிழ்நாட்டோடு சேர்க்கப்பட்ட பகுதி என்பதால் மலையாளத்தைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் நிறையபேர் இருக்கிறார்கள். அவர்களின் வசதிக்காக மலையாள பாடப்புத்தகங்கள் வருகின்ற வருஷத்திலிருந்து கொடுப்பதாக புரட்சித் தலைவி அவர்கள் அன்று சொன்னார்கள். அதற்கான ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன என்று நினைக்கிறேன்.

[திரு. இரா. அப்பு நடேசன்] [1995 ஏப்ரல் 27

பிற்பகல் 4-50

மலையாள ஆசிரியர்கள் எங்கெங்கு தேவைப்படுகிறதோ அங்கெல்லாம் அந்தக் குறையைப் போக்கும் வகையில் அந்த ஆசிரியர்கள் பதவியை உருவாக்கித் தருமாறு பணிவன்புடன் வேண்டிக்கொள்கிறேன். அதோடு நீண்ட நாட்களாக எங்களுடைய மாவட்டத்திலே ஒரு எஞ்ஜினியரிங் கல்லூரி வேண்டுமென்ற கோரிக்கை இருக்கின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணை கூர்ந்து இந்த வருடமோ அல்லது அடுத்த வருடமோ அந்தக் கல்லூரியை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எங்களுடைய மாவட்டத்திலே அரசு கலைக் கல்லூரியே கிடையாது, எனவே அந்த கலைக் கல்லூரியும் அமைத்துக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் இந்த வருடம் ஒரு பாலிடெக்னிக் அமைத்துத் தரவேண்டுமென்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதி திருவட்டாறு பஞ்சாயத்து யூனியனில் விளையாட்டு அரங்கம் இல்லை. எனவே என்னுடைய தொகுதிலோ அல்லது எங்கேயாவது பக்கத்திலோ ஒரு விளையாட்டு அரங்கம் கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையம் ஒன்றை என்னுடைய மாவட்டத்திலே அமைத்து தரவேண்டும். படித்தவர்கள் நிறைய பேர் வேலையில்லாமல் இருக்கிறார்கள், அதனால்தான் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையம் ஒன்று வேண்டுமென்று கேட்கிறேன். அத்துடன் மாராயபுரம் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கான விண்ணப்பம் கொடுத்து பல வருடங்களாகின்றன. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணை கூர்ந்து இந்த நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்றுவதோடு, திருவட்டாறு உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்ற வேண்டுமென்ற ஒரு கோரிக்கை நீண்டநாட்களாக இருந்து வருகிறது. எனவே, அதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு. இப்படிப்பட்ட நல்ல ஒரு மானியத்திலே பேச வாய்ப்பு தந்தமைக்கும், சீரும் சிறப்புமாக இந்தக் கல்வித் திட்டத்தை நடத்திக் கொண்டு வருகின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் என் நன்றியைத் தெரிவித்து இந்த மானியத்தை வரவேற்று விடைபெறுகிறேன், வணக்கம்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் பதிலுரை. சிறந்த பேராசிரியர், இன்னும் இரண்டு அமைச்சர்கள் மானியக் கோரிக்கைக்குக் காத்துக்கொண்டு இருக்கிறார்கள்.

1995 ஏப்ரல் 27]

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழக மக்கள் நெஞ்சில்
அமுதமாய்த் திகழும் எங்கள் சந்தியாத்தாய் ஈன்றெடுத்த
விந்தைச் சரித்திரமே!
வீரமே! வெற்றிக்கே பொருள் தந்த கொற்றவையே!
கொத்தாகப் பகைவர் எல்லாம்
கூட்டணி சேர்ந்து நின்று மொத்தமாய் எதிர்த்த போதும் மக்களின் சக்தி கொண்டு
அத்தனைபேர் ஆற்றலையும்
அற்புதமாய் வெற்றி கண்ட
வித்தகச் செல்வமே (மேசையைத் தட்டும் ஒலி) வீணர்
வித்தைகள் அழித்த தாயே!
முத்தமிழ்நாடு கண்ட
முதல்வர்கள் வரிசை தன்னில்
இத்தனை அறிவும் ஆற்றல்
இணையில்லா வீர நெஞ்சம்
மொத்தமாய் கொண்ட தாயே!
மேதினி அறிஞர் எல்லாம்
நித்தமும் பரிசு தந்தார்!
நிகரிலாப் பட்டம் தந்தார்!
சத்தியத் தாயே தங்கள்
சாதனை புகழுகின்றார்!
இத்தரை வாழும் ஏழை
எளியவர் மனங்குளிர்ந்து
சக்தியாய் வணங்கும் அந்தத்
தத்துவம் அறியாராகிப்
பித்தராய்ப் பேத லித்துப்
பகைவர்கள் புலம்பு கின்றார்.
கட்டாயத் தொடக்கக் கல்வித்

திட்டத்தை வகுத்துத் தந்து
சட்டமாய் ஆக்கி நாட்டில்
சரித்திரம் படைத்த தாயே!
எட்டாத கனியாய் நின்ற
ஏழைக்கும் தொழிற்கல்வி
கிட்டிட வழிவகுத்த கேண்மையே!
கல்லூரி செல்லும் பெண்கள்
எண்ணிக்கை பெருகச் செய்த
ஏந்தலே! பெண்கள் கல்வி
மண்ணிலே செழிக்கச் செய்த
மாமணியே! கல்லா மக்கள்
எண்ணமும் குளிரும் வண்ணம்
அறிவொளி இயக்கம் மூலம்
திண்ணிய வெற்றி கண்ட
திராவிடச் சக்தி நீயே!
தாயே! தமிழே
தங்கள் திருப்பாதம்
பணிந்தேவல் செய்கின்ற
தொண்டருள் தொண்டனாம்
என்னையும் ஆட்கொண்டு
இதமான அன்புகாட்டி ஆளாக்கி
இதுதான் நெறி என வழிப்படுத்திக்
கல்வி அமைச்சராய்
ஏற்றம் தந்து
இன்னருள் பொழிந்து வரும்
வாழ்வின் ஒளியே!
இடஒதுக்கீடு திட்டத்திற்குச்
சட்டப் பாதுகாப்பு ஏற்படுத்தி
சமூக நீதிகாத்த வீராங்கனையே!
புதுமைத் திட்டம் பலகண்டு
உலகப் புகழ் ஈட்டி வரும்
மாண்புமிகு தமிழக முதல்வர்
டாக்டர் புரட்சித் தலைவி அவர்களே!

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1995 ஏப்ரல் 27] [பேராசிரியர் க. பொன்னுசாமி]

அருள் மணம் கமழும் தங்கள்
திருவடித் தாமரைகளைப்
பணிந்து வணங்குகிறேன் தாயே!
"கல்வி சிறந்த தமிழ்நாடு - புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு" - என்று
பாரதி பாடிய
தமிழகத்தின் கல்விப் பெருமை
என்றும் நின்று நிலவ!
1998-ல் அனைவருக்கும் கல்வி என்னும்
தங்கள் திருவாக்கைத்
தாரகமந்திரமாய்த் தாங்கி
"எல்லோரும் கல்வி கற்று
இன்புற்றார் என்ற நிலை
இன்பத் தமிழ் நாட்டில்—இன்னும் சில ஆண்டில்"
என்ற உறுதி மொழியுடன் -
வரலாற்றுப் பொன்னேட்டில்
வைரமணிகளாய்ச் சாதனைச்
சரித்திரம் படைத்து வரும்
வணக்கத்திற்குரிய எங்கள் தலைவியே! தங்கள்
புகழ் கொஞ்சும் பொற்கால ஆட்சியில்
புதிய பல திட்டங்களைக்
கொண்டுள்ள
இந்த நிதி ஆண்டின்
"கல்வி" "தமிழ் வளர்ச்சி பண்பாடு" ஆகிய

மானியக் கோரிக்கைகள் மீதான பதிலுரையைக் கருணை பொங்கும் தங்கள் திருவருள் ஆசியுடன் - இப்பேரவையில் பெருமையுடன் படைக்கிறேன்.

பிற்பகல் 4-55

"அற்றம் காக்கும் கருவி" என்று கல்வியைக் கூறுவார் திருவள்ளுவர். தமிழகத்திலே வாழும் ஏழைஎளியவர் வாழ்வு வளம் பெற வேண்டுமெனில் கல்வி கைவிளக்காய்த் திகழ வேண்டும் என்பதிலே உறுதி கொண்டுள்ள நம் ஒப்பில்லா முதல்வர் அவர்கள் இந்த ஆண்டின் வரவு-செலவுத்

திட்டத்தில் கல்வி வளர்ச்சிக்காக 2,233 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து வரலாறு படைத்திருக்கிறார்கள்.

ஆட்சி பொறுப்பேற்ற நான்காண்டுக் காலத்தில், கல்வித்துறை வளர்ச்சிக்கு ஒதுக்கப்படும் நிதியை ஏறத்தாழ இரண்டு மடங்காக உயர்த்திய சிறப்பு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களை மட்டுமே சாரும் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகக் கல்வி வளர்ச்சியில், ஏழை எளிய மக்களின் கல்வி மேம்பாட்டில் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கொண்டுள்ள ஆழ்ந்த ஈடுபாட்டினை இது தெளிவுபடுத்துகிறது. கி.பி. 2000-இல் அனைவருக்கும் தொடக்கக் கல்வி என்பது நடுவண் அரசின் குறிக்கோள். எனினும் இந்த இலக்கை 1998-லேயே எயிதிடப் புரட்சித் தலைவி அவர்கள் முயற்சி மேற்கொண்டிருக்கிறார்கள். குழந்தைகளின் ஒருங்கிணைந்த ஆற்றல் வளர்ச்சிக்கு ஒரு கூட்டு முயற்சியாக இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களால் உருவாக்கப்பட்டு, அன்னை தெரசா அவர்களாலும் பிற சான்றோர்களாலும் புகழப்பட்டு வரும் உன்னதமான திட்டம், 15 அம்சக் குழந்தைகள் நலத் திட்டம். இதன் எட்டாவது அம்சமாய் இடம் பெற்றுள்ளது 'அனைவருக்கும் தொடக்கக் கல்வித் திட்டம்'. இத்திட்டம், இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் நேரடிப் பார்வையில் சிறப்புக் கவனத்துடன் தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. எனவேதான் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்களை நியமித்து தொடக்கப் பள்ளிகள் மேம்பாட்டிலே தனிக் கவனம் செலுத்தி தொடக்கக் கல்வியின் நிர்வாகத்தைச் சீரமைத்திருக்கிறார்கள். உடல் முழுவதும் ஓடும் நாடி நரம்புகள் போல் 30,351 தொடக்கப் பள்ளிகளும் 5,578 நடுநிலைப் பள்ளிகளும் தமிழகத்தில் கல்விச் செல்வத்தை வளர்த்து வருகின்றன. ஏழை எளிய பிரிவைச் சார்ந்த எல்லா மக்களுக்கும் கல்வி வசதி சென்று சேர வேண்டும் என்ற உயர்ந்த நோக்கதோடு ஐநூறும் அதற்கு மேலும் மக்கள் தொகை கொண்ட ஒவ்வொரு குடியிருப்புக்கும் ஒரு கிலோ மீட்டர் தொலைவிற்குள் ஓர் தொடக்கப் பள்ளி என்னும் உன்னதக் குறிக்கோளுடன் புதிய தொடக்கப் பள்ளிகள் தமிழகத்திலே தொடங்கிட இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அனுமதி அளித்திருக்கிறார்கள். தொடக்கப் பள்ளிகளில் 6 முதல் 14 வயதுடைய குழந்தைகள் அனைவரையும் சேர்ப்பதும், சேர்ந்த குழந்தைகள் அனைவரையும் படிப்பை இடையில் விடாமல் காப்பதும், இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசின் சீரிய முயற்சியாய் அமைந்திருக்கிறது. இந்தியாவுக்கே முன்னோடியாக இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கட்டாய தொடக்கக் கல்விக்குச் சட்டமியற்றி

அனைவர்க்கும் தொடக்கக் கல்வி என்னும் இலக்கை எய்துவதில் முனைப்புடன் ஈடுபட்டுள்ளார்கள். இதற்கு உறுதுணையாக புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம், இலவச பாடநூல்கள், இலவசச் சீருடை, இலவசக் காலணி, இலவச பஸ் பாஸ், இலவச சிலேட்டுகள் ஆகிய பல்வேறு நலத் திட்டங்கள் தீவிரமாய் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மேற்கொண்டு வரும் இத்தகைய ஒருங்கிணைந்த கூட்டு முயற்சிகளின் விளைவாகத் தொடக்கப் பள்ளிகளில் 1984-85-ஆம் ஆண்டில் 48.92 லட்சமாய் இருந்த மாணவர் சேர்க்கை 1994-95இல் 57.34 இலட்சமாய் உயர்ந்துள்ளது என்பதனை இப்பேரவையில் தெரிவிப்பதில் பெருமிதம் கொள்கிறேன். இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் போற்றுதலுக்குரிய நடவடிக்கைகள் காரணமாக தொடக்க நடுநிலைப் பள்ளிகளில் படிப்பை இடையில் விடும் குழந்தைகளின் எண்ணிக்கையும் வெகுவாகக் குறைந்திருக்கிறது. தொடக்கப் பள்ளிகளில் 1984-85-இல் இடையில் படிப்பை விடும் குழந்தைகளின் சதவீதம் 23.14 ஆக இருந்தது. 1994-95-ல் 16.54 சதவீதமாகக் குறைந்துவிட்டது. நடுநிலைப் பள்ளிகளில் இடையில் படிப்பை விடும் குழந்தைகள் சதவீதம் 1984-85 இல் 58.75 என இருந்தது. ஆனால் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் சீரிய நிர்வாகத் திறமை காரணமாக இன்று 34.74 ஆகக் குறைந்து மாபெரும் சாதனையை படைத்திருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நமது தமிழகத்தில் வாழும் மழலைச் செல்வங்களின் சீரான கல்வி வளர்ச்சியில் பேரார்வம் கொண்டுள்ள காரணத்தால், குழந்தைகளுக்குக் கல்வியில் பாடச் சுமை கூடாது என்பதைக் கொள்கையாகக் கொண்டுள்ளார்கள். இத்தகைய கொள்கைக்கேற்ப குறைந்தபட்ச இலக்குகளைக்கொண்டு பாடத் திட்டங்கள் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன. இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் சீரிய அறிவுரைகளுக்கேற்பத் திருத்தி அமைக்கப்பட்டுள்ள பாடத் திட்டத்தின்படி வரும் கல்வி ஆண்டு முதல் 1,6,11 ஆகிய வகுப்புகளுக்குப் புதிய பாடநூல்கள் அறிமுகப் படுத்தப்படுகின்றன என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்பு நடேசன் அவர்கள் கேட்டுக் கொண்டதைப்போல் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆணையை ஏற்று மலையாளத்திலும் பாடப் புத்தகங்கள் வெளிவர இருக்கின்றன என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி). இந்தியாவிலேயே, இந்தக் கல்வி ஆண்டில் புதிய பாடத் திட்டத்தையும், அதற்கான புதிய புத்தகங்களையும் வழங்கும் ஒரே மாநிலம் தமிழகம்தான் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[பேராசிரியர் க. பொன்னுசாமி] [1995 ஏப்ரல் 27

மாவட்ட தொடக்கக் கல்வி திட்டத்தின்கீழ் 1995-96-ம் ஆண்டில் பல்வேறு சிறப்பான திட்டங்கள் செயல்பட இருக்கின்றன Thinking well is wise; Planning well is wiser; Doing well is the wisest and best of all. என்ற மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் தாரக மந்திரத்தை ஏற்று மாவட்ட தொடக்கக் கல்வித் திட்டம் தனியாக ஒரு இயக்குநரின் தலைமையில் மிகச் சிறப்பாக செயல்படுத்தப்படுகிறது. மாவட்ட தொடக்கக் கல்வித் திட்டம், தமிழகத்தில், தர்மபுரி, திருவண்ணாமலை-சம்புவராயர், விழுப்புரம்—இராமசாமி படையாச்சியார் மற்றும் தென்னாற்காடு-வள்ளலார் ஆகிய 4 மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

மாவட்ட தொடக்கக் கல்வித் திட்டத்திற்காக இயக்குநரகம் மற்றும் பயிற்சி மையக் கட்டிடம் ரூ.85 லட்சம் செலவில் டி.பி.ஐ. வளாகத்தில் கட்டப்பட இருக்கிறது. ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம் மற்றும் 3 மாவட்ட ஆசிரியர் பயிற்சி மையங்களை வலுப்படுத்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதிலே கிருஷ்ணகிரி, கீழ்ப்பெண்ணாத்தூர் மற்றும் வடலூர் ஆகியவை அடங்கும்.

பிற்பகல் 5-00

இத்திட்டங்களுக்கு முத்தாய்ப்பு வைத்தாற்போல், தலைமையிடத்திலும் மற்றும் மாவட்டத் தலைமை இடங்களிலும் நிர்வாகத் தகவல் அமைப்புச் சாதனங்கள் Managemement Information System ரூ. 50 லட்சம் செலவில் நிறுவப்பட உள்ளன. இம்மையங்கள், மாநில மற்றும் மைய அமைப்புடன் இணைக்கப்பட உள்ளன.

பாடத்திட்டங்கள் மாற்றி அமைக்க, புதிய பாடப் புத்தகங்கள் மற்றும் பயிற்சி ஏடுகள் தயாரிக்க, தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் வலுப்படுத்தப்பட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1995-96-ஆம் ஆண்டில் ரூ. 3.7 கோடி செலவில் 122, 3 வகுப்பறைக் கட்டிடங்கள் கட்டப்பட உள்ளன. ரூ. 5.5 கோடி செலவில் 266, 2 வகுப்பறைக் கட்டிடங்கள் கட்டப்பட உள்ளன. ரூ. 65 லட்சம் செலவில் 538 பள்ளிகளில், மாணவியர்களுக்குக் கழிப்பறை வசதி செய்து கொடுக்கப்பட இருக்கிறது. ரூ. 42 லட்சம் செலவில் 538 பள்ளிகளில் குடிநீர் வசதி செய்து தரப்பட உள்ளது. பள்ளிகளின் வசதிகளைப் பெருக்குவதற்காக 6,520 பள்ளிகளுக்கு பள்ளி ஒன்றிற்கு ரூ.2,000- வீதம் ரூ. 1.3 கோடி வழங்கப்பட உள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

1995 ஏப்ரல் 27] [பேராசிரியர் க. பொன்னுசாமி]

கற்றல்-கற்பித்தல் உபகரணங்கள் வாங்குவதற்கு ஆசிரியர் ஒருவருக்கு ரூ. 500/- வீதம் 27,000 ஆசிரியர்களுக்கு ரூ. 1.35 கோடி வழங்கப்பட உள்ளது. மேற்படி நான்கு மாவட்டங்களில், 72 ஊராட்சி ஒன்றியங்களில், ஒன்றிய ஆசிரியப் பயிற்சி மையங்கள் Block Resource Centres துவங்குவதற்கும், அவைகளுக்குத் தேவையான உபகரணங்கள், தளவாடச் சாமான்கள் வழங்கவும் ரூ. 1.08 கோடி செலவிடப்பட உள்ளது. ஒவ்வொரு பயிற்சி மையங்களிலும், பட்டதாரி ஆசிரியர் நிலையில் ஒரு மேற்பார்வையாளரையும், பணியிடைப் பயிற்சி செவ்வனே திட்டமிட்டுச் செயல்படுத்த பணிமூப்புடைய 3 இடைநிலை ஆசிரியர்களையும் பணியமர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது. 1995-96-ஆம் கல்வி ஆண்டில் முதல் வகுப்பு மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ள புதிய பாடப் புத்தகங்களுக்குத் தேவையான மாணவர் பயிற்சி ஏடுகள் ரூ. 88 லட்சம் செலவில் வழங்கப்படவுள்ளன. நலிந்த மற்றும் பின்தங்கிய சமூகத்தைச் சேர்ந்த மாணவியர்களின் சேர்க்கை மற்றும் தொடர்ந்து கல்வி பயில ஏற்ற வகையில் 3,800 மையங்களில் சிறப்புப் பயிற்சி வகுப்புகள் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளன.

மாணவப் பருவத்தின் பல்வேறு மனவளர்ச்சிக் கட்டங்களில் முக்கிய இடம் வகிக்கும் உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிப் பருவம் செம்மையுற, முறையான புதிய பாடத் திட்டங்களை வகுத்து முனைப்போடு செயல்படுத்திட, முன்னுரிமை தந்து இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் புதுநெறி காட்டி வருகிறார்கள். மாநிலம் முழுவதும் 3,340 உயர்நிலைப் பள்ளிகளும் 2,318 மேல்நிலைப் பள்ளிகளும் இயங்கி வருகின்றன. 27.39 லட்சம் மாணவர்களும், 20.55 லட்சம் மாணவியரும் (மொத்தம் 47.94 லட்சம்) இப்பள்ளிகளில் பயில்கிறார்கள்.

15 அம்சத் திட்டத்தின்கீழ் கி.பி. 2000-க்குள் 100 சதவீத மகளிர் கல்வியை எய்தும் வகையில் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கல்வி கற்ற பெண்களுக்குத் திருமண உதவித் தொகை வழங்கியும், ஆதி திராவிட வகுப்பைச் சார்ந்த பெண் குழந்தைகளைக் கூடுதலாய்ப் பள்ளியில் சேர்க்கும் தலைமையாசிரியர்களுக்குப் பணப் பரிசு வழங்கியும், தொடக்கப் பள்ளி ஆசிரியர்களாய்ப் பெண்களையே நியமித்தும், பெண்கள் கல்வி பெருகிட ஊக்கமளித்து உற்சாகப்படுத்துகிறார்கள்.

இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அறிவியல் நெறி வளர்க்கும் ஆர்வலர் ஆதலால், பள்ளிப் பருவம் முதல் மாணவ மாணவியரிடையே அறிவியல் உணர்வை வளர்த்திட, பள்ளிகளில் அறிவியல் கூடங்களை ஏற்படுத்தி வருகிறார்கள்.

இதய தெய்வம் மாண்புமிகு முதல்வர் அவர்களின் உதவியுடன் ஆண்டுதோறும் அறிவியல் பொருட்காட்சி மாநில அளவில் நடத்தப்படுகின்றது. இதய தெய்வம் மாண்புமிகு முதல்வர் அவர்கள், அறிவியல் கல்விக்கு அளித்து வரும் ஊக்கம் காரணமாய் தென்னிந்திய அறிவியல் பொருட்காட்சியில் பங்குபெறும் தமிழகப் பள்ளிகள் கடந்த மூன்றாண்டுகளாய்த் தொடர்ந்து வென்று சுழல் கேடயத்தைத் (மேசையைத் தட்டும் ஒலி) தக்கவைத்துக் கொண்டுள்ளார்கள் என்பதனைப் பெருமையுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் தீவிர முயற்சி காரணமாக தமிழகத்தில் மொத்தமுள்ள 1,757 மேல்நிலைப் பள்ளிகளில் 1,313 பள்ளிகளில் தொழிற்கல்விப் பாடங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு 18.28 சதவீத மாணவர்களுக்குத் தொழிற் பாடங்களை கற்பித்து வருவதால், அகில இந்திய அளவில் தமிழகத்திற்குப் பாராட்டு கிடைத்திருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பள்ளி இணைச் செயல்களாக பாரத சாரண சாரணியர் இயக்கம், நாட்டு நலப் பணித் திட்டம், தேசிய மாணவர் படை முதலிய அமைப்புகள் மூலம் சேவை மனப்பான்மையுடன் மாணவர் சமுதாயம் வளரத் தமிழகப் பள்ளிகளிலே சிறந்த முறையில் வாய்ப்புகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

தேசிய மாணவர் படையைச் சேர்ந்த தமிழக மாணவர்கள் 8 ஆண்டுகளுக்குப் பிறகு, இந்த ஆண்டில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அளித்த ஊக்கம் காரணமாக குடியரசுதின அணி வகுப்பிலே கலந்து கொண்டு முதலிடத்தை வென்று அந்த பேனரோடு (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்திற்குத் திரும்பி வந்தார்கள். தமிழகத்திற்கு பெருமை சேர்த்த அந்த மாணவர்களை, மாணவிகளை, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், அவர்களுடைய இல்லத்திலே சந்தித்து அவர்களோடு புகைப்படம் எடுத்துக் கொண்டு, அவர்களுக்கு தேநீர் விருந்தும் அளித்து, அவர்களைப் பாராட்டும் வகையிலே 2 லட்சத்து 7 ஆயிரம் ரூபாயை பரிசாக வழங்கியிருக்கிறார்கள் என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன்.

ஒருசில தனியார் பள்ளிகளில் முதல் ஆண்டிலே பிளஸ் 1 தேர்வுக்குரிய பாடங்களை நடத்தாமல், பிளஸ் 2 தேர்வுக்குரிய பாடங்களை

1995 ஏப்ரல் 27]  [பேராசிரியர் க. பொன்னுசாமி]

நடத்துவதாகவும், தேர்விலே ஒரு சிலர் தேறவில்லை என்றால் அவர்களை அந்த வகுப்பிலேயே தொடரவும் அனுமதிப்பதில்லை., மற்ற பள்ளிகளிலே அவர்கள் சேர்வதற்கும் வழியில்லை என்பதை கவனத்தில் கொண்டு, இதை நீக்கும் வகையிலும், மாணவர்களுக்கு பயன் அளிக்கும் வகையிலும், மாணவர்கள் திறன்களை வளர்க்கும் நோக்கத்திலும், மேல்நிலை முதல் ஆண்டிற்கும் அரசுத் தேர்வு நடத்த இந்த அரசு முடிவு செய்துள்ளது என்பதையும், *1995-96* ஆம் கல்வி ஆண்டிலிருந்து பிளஸ் *1* வகுப்பிற்கும் அரசுத் தேர்வு நடக்க இருக்கிறது என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

பிற்பகல் *5-05*

தமிழகத்தில் மேல்நிலைக் கல்வி அறிமுகம் செய்யப்பட்ட *1978*-ஆம் ஆண்டு தொடங்கி கடந்த *16* ஆண்டுகளாகத் தீர்க்கப்படாமல் இருந்த மேல்நிலைப் பள்ளிகளின் தொழிற்கல்வி ஆசிரியர்களின் பிரச்சினையைத் தீர்க்க மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அறிவுரை நல்கி, அந்தப் பிரச்சினை இப்போது தீர்க்கப்பட்டு, *3,000* தொழிற்கல்வி ஆசிரியர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் வகையில் பணி நிரந்தரம் செய்யப்பட இருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆசிரியர் கல்வியின் இன்றியமையாத தேவையை உணர்ந்து *1990*-ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம், இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் அறிவுரைகள்படி சிறப்பாகச் செயல்பட்டு மாநில அரசு, நடுவண் அரசு, தேசிய கல்வி ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம் ஆகியவற்றின் திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது.

தொடக்கப் பள்ளிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு ஆங்கிலம் கற்பித்தல் முறை, இலக்கணம் பேசும் முறை ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்பட்டு, தரமான ஆங்கிலக் கல்வி வளர்ச்சிபெற ஆவன செய்யப்படுகிறது.

மாவட்ட கல்வி பயிற்சி நிறுவனங்கள் மூலம் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களின் ஆற்றலை வளர்க்கும் பொருட்டு அவர்களுக்கு நெறிப்படுத்தும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் இந்த ஆண்டில் *32* ஆயிரம் ஆசிரியர்கள் பயிற்சி பெற்று இருக்கிறார்கள். தொடர்ந்து இன்னும் *3* ஆண்டுகளில் மொத்தம் ஒரு இலட்சத்து இருபத்தெட்டாயிரம் ஆசிரியர்கள் பயிற்சியைப் பெறுவார்கள் என்பதையும்,

இந்தியாவிலேயே இதை நிறைவு செய்கின்ற முதல் மாநிலமாகத் தமிழகம்தான் இருக்கிறது என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

ஆசிரியர் பெருமக்கள் பாராட்டும் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் கோட்பாட்டின்படி மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிலையங்களில் பணிபுரியும் ஆசிரியர்களை ஊக்கப்படுத்தும் நோக்கத்துடன், அவர்களுள் சிறந்தவர்களுக்கு ஆண்டுதோறும் புரட்சித் தலைவி நல்லாசிரியர் விருது வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பல வருடங்களாக அரசு நிதி உதவியுடன் நடைபெற்று வரும் 42 தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களின் அங்கீகாரம் நீதிமன்றத்தால் ரத்து செய்யப்பட்டது. அரசு ஆணை எண் 803, கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் துறை, நாள் 16-9-1994-ல் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளை முழுவதுமாக நிறைவு செய்த நிறுவனங்களுக்கு அங்கீகாரம் வழங்கலாம் என நீதிமன்றம் ஆணையிட்டுள்ளது. அதனபடி மேற்கூறிய 42 ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களும் வல்லுநர்கள் குழுவினரால் ஆய்வு செய்யப்பட்டன. எட்டு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள்தான் அனைத்து நிபந்தனைகளையும் நிறைவு செய்துள்ளதாகப் பரிந்துரை பெறப்பட்டிருக்கிறது.

பன்னிரண்டு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் நிலம் தொடர்பான பதிவு ஒப்பந்தம் மட்டும் சமர்ப்பிக்க வேண்டியிருக்கிறது. எஞ்சியுள்ள 22 நிறுவனங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட நிபந்தனைகளை நிறைவு செய்ய வேண்டியுள்ளது. அனைத்து நிபந்தனைகளையும் முழுவதுமாக நிறைவு செய்த நிறுவனங்களுக்கு அங்கீகாரம் வழங்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. மற்ற நிறுவனங்களுக்கும் நிபந்தனைகளை நிறைவு செய்தபின் அங்கீகாரம் வழங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

அடிப்படை வசதிகள் இன்றி செயல்பட்டு வந்த 219 ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களின் தற்காலிக அங்கீகாரம் உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் ரத்து செய்யப்பட்டதால், அவைகளில் பயின்ற ஏறத்தாழ 30 ஆயிரம் மாணவர்கள் தேர்வு எழுத முடியாமலும், முழுமையாய் படித்து முடிக்காமலும் தவித்து வருவதை, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு உணர்ந்து, பரிவோடு அவர்கள் பிரச்சினை தீர தீவிர நடவடிக்கைகளை எடுத்தது. அந்த மாணவர்களுக்காக ஏற்பாடு செய்த புத்தொளிப் பயிற்சியையும் நீதிமன்றம் தடை செய்து விட்டது.

இந்த மாணவர்களைத் தேர்வுக்கு அனுமதிக்கத் தேவையான வழிவகைகளைக் கூறுமாறு நடுவண் அரசின் தேசிய ஆசிரியர் கல்விக் கவுன்சிலுக்குத் (National Council for Teacher Education) தமிழக அரசு கடிதம் எழுதியுள்ளது. புதுடெல்லியில் உள்ள அந்தக் கவுன்சில் தமிழக அரசின் இந்தக் கோரிக்கையை ஆராய்ந்து வருவதாகக் கூறி, மேற்கொண்டு சில விவரங்களை *14-3-1995*–ஆம் நாள், 'பேக்ஸ்' மூலம் கோரியது. தமிழ்நாடு அரசு *22-3-1995*—ஆம் நாளிட்ட கடிதத்தில் விவரங்களைத் தெரிவித்துள்ளது. அங்கிருந்து பெறப்படும் வழிகாட்டுதல் அடிப்படையில், இந்த மாணவர்கள் வாழ்க்கையில் ஒளியேற்றும் வகையில், அவர்கள் ஆசிரியர் கல்வியை முடிப்பதற்கு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் 4-4-1995-ல் டெல்லியில் என்.சி.டி.இ. தலைவர் திரு. ராஜ்புத் அவர்களிடம் நானும் நேரில் இது குறித்து விவாதித்து, உடன் நடவடிக்கை கோரியுள்ளேன் என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசின் அரசு தேர்வுகள் இயக்ககம் 44 வகையான தேர்வுகளை நடத்துகிறது. இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், கிராமப்புற மாணவர்களின் திறனைத் தேர்வு மூலம் ஆராய்ந்து அவர்களை ஊக்கப்படுத்திட வேண்டுமெனக் கருதினார்கள். அதன் அடிப்படையில் ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திலும் 50 மாணவர்கள், 50 மாணவிகள் வீதம் தேர்வு செய்யப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு மாணவருக்கும் ரூ. *1,000* வீதம் ஆண்டுதோறும் உதவித் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது.

மைய அரசின் பணியாளர் தேர்வாணைக் குழுவினால் (Staff Selection Commission) நடத்தப்படும் தேர்வுகள், மற்றும் மையத் தேர்வாணைக் குழுவினால் (Union Public Service Commission) நடத்தப்படும் இந்திய ஆட்சிப் பணிக்கான ஆரம்ப மற்றும் இறுதித் தேர்வுகள் கூட இத்துறையின் மூலமே நடத்தப்பட்டு வருகின்றன. மற்ற மாநிலங்களில் இத்தேர்வுகள் அந்தந்த மாநிலப் பணியாளர் தேர்வாணையங்களாலேயே நடத்தப்பட்டு வருவதால், இது நம் மாநிலத் தேர்வுத் துறைக்கு கிடைத்துள்ள மாபெரும் பெருமை என்பதை இங்கே நான் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

[பேராசிரியர் க. பொன்னுசாமி] [1995 ஏப்ரல் 27

பிற்பகல் 5-10

கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் மாணவர்கள் சேர்க்கையின்போது, பெறப்படும் மதிப்பெண் சான்றிதழ்கள் அனைத்தும் இத்துறையினரால் ஆய்வு செய்யப்பட்டு, போலிச் சான்றிதழ்கள் கண்டறியப்படுகின்றன.

1993-ஆம் ஆண்டில், 171 மேல்நிலைச் சான்றிதழ்களும், 140 இடைநிலைச் சான்றிதழ்களும், 1994-ஆம் ஆண்டில் 62 மேல்நிலைச் சான்றிதழ்களும், 62 இடைநிலைச் சான்றிதழ்தளும் போலிகள் எனக் கண்டறியப்பட்டு, அவர்களது தேர்வுகள் இரத்து செய்யப்பட்டதுடன், உரியவர்கள்மீது, புகார் தரப்பட்டு, காவல்துறை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இதனால், போலிச் சான்றிதழ்கள் முழுமையாக நீக்கப்பட்டு விட்டன என்பதையும், குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்களுக்கு இது மனநிறைவு அளிக்கும் என்று நம்புகிறேன்.

இத்துறையினரால், ஏறத்தாழ 56,000 பேர் பங்குபெற்ற இடைநிலை ஆசிரியர்களுக்கான நியமனத் தேர்வும் கடந்த ஆண்டிலே நடத்தப்பட்டுள்ளது. இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கொண்டுள்ள உன்னத இலட்சியங்களுக்கு உயிரூட்டும் வகையில் இலட்சக்கணக்கான மாணவ, மாணவிகள் பங்குபெற்ற பல்வேறு தேர்வுகளை இந்த ஆண்டிலே எந்தவித குற்றச்சாட்டுகளும் இன்றிச் சிறப்பான முறையில் அரசுத் தேர்வு இயக்ககம் நடத்தியுள்ளது என்பதனை இப்பேரவையில் குறிப்பிடுவதில் பெருமிதம் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முதுநிலை ஐ.ஏ.எஸ். அலுவலர் ஒருவரின் தலைமையில் இயங்குகிறது, தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியம். திறன் வாய்ந்த ஆசிரியர்களைத் தேர்வு செய்யும் பணியைத் தடுத்திடும் வகையில் நீதிமன்றத் தடை கோரி பலர் எடுத்த முயற்சிகளை எல்லாம் தவிடுபொடியாக்கியது, தமிழ்நாடு உயர் நீதிமன்றம். ஆசிரியர் நியமனக் கொள்கையை வகுத்துக் கொள்ள தமிழ்நாடு அரசுக்கு உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பின் அடிப்படையில், வகுக்கப்பட்ட நெறிமுறைகளின்படி. 8,000 இடைநிலை ஆசிரியர்களைத் தேர்வு செய்ய, விரிவான முறையில் விளம்பரம் செய்தது தேர்வு வாரியம். எழுத்துத் தேர்வில் பங்குபெற்ற 56,000 பேரில், தேர்ச்சிபெற்ற 13,148 பேருக்கு மட்டும் திறமை, தகுதி அடிப்படையில் நேர்முகத் தேர்வினை, 30-1-1995 முதல் ஆசிரியர் தேர்வு வாரியம் நடத்தி வருகிறது. வரும் ஜூன் இறுதிக்குள், தரமான நல்ல தகுதிவாய்ந்த ஆசிரியப் பெருமக்கள் ஆற்றல் அடிப்படையில் மட்டுமே தேர்வு செய்யப்பட்டு பணியில்

1995 ஏப்ரல் 27] [பேராசிரியர் க. பொன்னுசாமி]

அமர்த்தப்படுவார்கள் என்பதையும், அவர்கள் ஆற்றல் அடிப்படையில் மட்டுமே தேர்ந்தேடுக்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள் என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி) , பள்ளிகளில் ஆசிரியர் பற்றாக்குறை விரைவிலேயே தீரும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். எழுத்துத் தேர்வின் முடிவு வெளியானபின், தேர்வு எழுதாத ஒரு மாணவிக்கு நேர்முகத் தேர்வு அழைப்பு வந்துள்ளதாய் பொறுப்பு வாய்ந்த ஓர் அரசியல் தலைவர் கூறிய புகார் ஆராயப்பட்டது. அவரால், குறிப்பிடப்பட்ட அந்த மாணவி, மதுரை சௌராஷ்டிரா மேல்நிலைப் பள்ளியில் தேர்வு எழுதிய விவரம் வெட்ட வெளிச்சமாக்கப்பட்டது. இதன்மூலம் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில், சத்தியம் வெல்லும் என்பது மற்றுமொரு முறை நிருபிக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வழங்கிய ஆணையின்படி, அரசுக் கல்லூரிகளில், 300-க்கு மேற்பட்ட ஆசிரியர் பணியிடங்களும் உரிய முறையில் விரைவில் நிரப்பப்பட தேர்வு வாரியம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. சென்ற ஆண்டில், பட்டதாரி மற்றும் முதுநிலைப் பட்டதாரி ஆசிரியப் பணியிடங்களுக்கு 114 ஆசிரியர்களையும், இந்த வாரியம் தேர்வு செய்துள்ளது.

தொடக்கக் கல்வி, பள்ளிக் கல்வி, கல்லூரிக் கல்வி மற்றும் தொழில்நுட்பக் கல்வித் துறைகளில் காலியாக இருக்கும் ஆசிரியர் பணியிடங்கள் அனைத்தையும் விரைவில் நிரப்பிட ஆசிரியர் தேர்வு வாரியம் விரைந்து செயல்படும் என்பதையும் மகிழ்வுடன் தெரிவிக்கிறேன்.

இதயதெய்வம் டாக்டர் புரட்சி த்தலைவி அவர்களின் அறிவுரை வழியில் நெறியுடன் இயங்கும் தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம், தரமான பாடநூல்களைக் குறைந்த விலையில் உரிய நேரத்தில் தயாரித்து வழங்குவதில், இந்திய நாட்டின் இதர மாநிலங்களுக்கு முன்னோடியாக விளங்குகின்றது. மத்திய அரசின் பொறுப்பற்ற போக்கால், காகித விலை உயர்ந்துள்ள நிலையிலும், புத்தக விலையை சற்றும் ஏற்றாமல், சென்ற ஆண்டின் விலையிலேயே மாணவர்களுக்கு வழங்க, ஏழை நலம் காக்கும் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

தமிழகக் குழந்தைகள், கல்வி நலம் காக்கும் காவல் தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், குறிப்பேடுகளின் விலை கூடிவிடாமல்

காப்பதற்காக, 1000 டன் தாளில் குறிப்பேடுகள் தயாரித்து, குறைந்த விலையில் வழங்குவதற்கும் வழிவகை செய்துள்ளார்கள் என்ற இனிக்கும் செய்தியைத் தமிழக மாணவச் செல்வங்களுக்கு இப்பேரவை மூலம் கூறி மகிழ்கிறேன். புத்தகம் அச்சிடும் பெரும்பணி புரியும் பாடநூல் கழகம், இதய தெய்வத்தின் இனிய பெயரால், இந்த ஆண்டு முதல் மாபெரும் பரிசுத் திட்டம் ஒன்றை மாணவர்களுக்கு அறிவிக்கிறது. பத்தாம் வகுப்பிலும், பன்னிரெண்டாம் வகுப்பிலும், மாநில அளவில் தமிழ்ப் பாடத்தில் முதல் மதிப்பெண் பெறும் 2 மாணவிகளுக்கும், 2 மாணவர்களுக்கும் ஆக நான்கு பேர்களுக்குத் தங்கப் பதக்கங்கள் வழங்கிடும் ''டாக்டர் புரட்சித் தலைவி பரிசுத் திட்டம்'' தொடங்கப்பட்டிருக்கிறது என்பதை பெருமகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

தமிழகப் பள்ளிகளின் கல்வித் தரத்தை உயர்த்திடும் வகையில், ஆசிரியர்-பெற்றோர் அனைவர்தம் ஒத்துழைப்பையும் ஒன்று திரட்டும் அரும்பணியைச் செய்து வருகிறது, தமிழ்நாடு பெற்றோர் ஆசிரியர் கழகம். இந்தக் கழகத்தின் மூலம் இந்த ஆண்டில் வருவாய் மாவட்டம் ஒவ்வொன்றிலும், ஒரு பள்ளி வீதம் 23 பள்ளிகளுக்கு மொத்தம் ரூ. 6.9 இலட்சம் செலவில் குடிநீர், கழிப்பிட வசதிகளும், இருக்கை வசதிகளும் செய்து கொடுக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது. மேலும், படிப்படியாக மாவட்ட பெற்றோர்–ஆசிரியர் கழகங்கள் அனைத்திற்கும் சொந்தக் கட்டடம் அமைத்துக் கொடுக்கும் திட்டத்தின்கீழ் இந்த ஆண்டில் காஞ்சீபுரம், கொடைக்கானல், சிவகங்கை, சேலம், தூத்துக்குடி, விருதுநகர் ஆகிய ஆறு மாவட்டங்களுக்கும் கட்டடம் அமைத்துக் கொடுத்திட திட்டமிடப்பட்டிருக்கிறது.

பிற்பகல் 5-15

மாவட்டக் கல்வி அலுவலர் அலுவலகங்களுக்கு தொலைபேசி இணைப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அனைத்து மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகங்களுக்கும், தொடக்கக் கல்வி இயக்ககத்திற்கும், அரசுத் தேர்வு இயக்ககத்திற்கும் 'பேக்ஸ்' கருவிகள் வழங்கவும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

கல்லாத மக்கள் எல்லோருக்கும் எழுத்தறிவு நல்கும் இனிய பணியினை, அறிவொளி இயக்கம் என்னும் பெயரில் பள்ளிசாரா மற்றும் வயதுவந்தோர் கல்வித்துறை ஆற்றி வருகிறது.

TRUTH ALONE TRIUMPHS

1995 ஏப்ரல் 27] [பேராசிரியர் க. பொன்னுசாமி]

இதய தெய்வத்தின் ஆட்சி இம்மண்ணில் உதயமான 1991 ஆம் ஆண்டு தொடங்கித் தமிழகத்தில் தொடர்ந்து நடக்கும் இயக்கம் இந்த அறிவொளி இயக்கம்.

தமிழகத்தின் மொத்த மாவட்டங்கள் இருபத்து மூன்றினுள் இதுவரை 21 மாவட்டங்களில் இத்திட்டம் செயல்பட்டு வருகிறது.

எஞ்சியுள்ள சென்னை, விழுப்புரம்-இராமசாமி படையாட்சியார் மாவட்டங்களுக்கும் இந்த இயக்கத்தை நீட்டித்திட ஐந்து கோடி ரூபாய் நிதி ஒதுக்கி வரலாற்றுப் புகழ் கொண்ட வரியில்லா இந்த ஆண்டின் வரவு செலவு திட்டத்தில் வகை செய்துள்ளார்கள் தகைமைசால் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்.

கல்லாத மக்கள் ஏறத்தாழ 82.60 லட்சம் பேர் இதுவரை இந்த அறிவொளி இயக்கத்திலே சேர்ந்து பயன்பெற்று இருக்கிறார்கள்.

எஞ்சிய மாவட்டங்கள் இரண்டிலும் ஏறத்தாழ 4.8 லட்சம் பேர் எழுத்தறிவு பெறுவார்கள்.

இதன் மூலம் இலக்காய்க் குறித்த இந்த ஆண்டின் இறுதிக்குள் எழுத்தறிவில்லா மக்கள் எல்லோரும் கல்வி பெற ஏற்ற வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவதில் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால அரசு புதிய சாதனையைப் படைக்கும் என்பதையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

எழுத்தறிவு நல்கும் பணி முடித்துப் பதினோரு மாவட்டங்கள் தொடர்கல்வி இயக்கத்தை தொடர்ந்து நடத்துகின்றன. எஞ்சிய மாவட்டங்களும் விரைவில் தொடர்கல்விப் பணிகளைத் தொடரும்.

புரட்சித் தலைவி அவர்களின் அரிமா நோக்குப் பார்வையில் அருமையாய்ச் செயல்படும் அறிவொளி இயக்கம் தமிழகத்தின் புகழை இந்தியத் தரணியில் இமயமாய் உயர்த்தி இருக்கிறது.

நடுவண் அரசின் மாண்புமிகு மனித ஆற்றல் மேம்பாட்டுத் துறை அமைச்சர் “அறிவொளி இயக்கத்தை நெறியுடன் இயக்குவதில் முதலிடம் பெறுவது தமிழகமே” என்று புகழ்ந்து கூறி புரட்சித் தலைவியைப் போற்றிப் பாராட்டினார் என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாட்டிலே இருக்கும் காங்கிரஸ்காரர்களிலே சிலர் குற்றம் சாட்டுவதிலே குறியாய் இருந்தபோதிலும், மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் பாராட்டுகிறார். இதற்குப் பிறகாவது இங்கே இருக்கிற காங்கிரஸ்காரர்கள் போலித்தனமான வாதங்களில் ஈடுபடாமல், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசை மனம் திறந்து பாராட்ட முன்வருவார்கள் என்று நான் கருதுகிறேன்.

தமிழக அறிவொளி இயக்கத்தில் விரும்பி ஈடுபடும் மக்கள் கருத்தறிந்த மேன்மைசால் யுனெஸ்கோ அறிஞர் குழுவினர் தமிழக அரசை மனமாரப் பாராட்டி இருக்கிறார்கள்.

"இந்தியத் திருநாட்டில் எங்கும் காணா மக்கள் எழுச்சியை இங்கே—தமிழகத்தில் தமிழக அறிவொளியில் காண்கிறோம்" என்று கூறி தேசிய பத்திரிகையாளர் குழு திரண்டு நின்று பாராட்டியது புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியை. அந்தக் குழுவினர் தமிழ்நாட்டிற்கு வந்திருந்த நேரத்தில் ஒரு கேள்வியை என்னிடத்திலே கேட்டார்கள். தமிழ்நாட்டிலே இவ்வளவு சிறப்பாக இந்த அறிவொளி இயக்கம் நடைபெறுவதற்குக் காரணம் என்ன என்று கேட்டார்கள். புரட்சி தலைவி அவர்கள் மக்கள் செல்வாக்கு மிக்க தலைவி. அந்தப் புரட்சித் தலைவிக்கு ஒரு அரசியல் உறுதிப்பாடு political will இருக்கிறது. ஆகவே, அந்த உறுதியோடு புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிடுகிறார்கள். புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டால் மக்கள் ஏற்றுக் கொள்கிறார்கள். புரட்சித் தலைவி அவர்களுக்கு இருக்கிற மக்கள் செல்வாக்குதான் எங்களை இந்த அளவுக்கு வெற்றிகரமாக இந்த இயக்கத்தை நடத்துவதற்குத் தூண்டுகிறது; துணை இருக்கிறது என்று நான் தெரிவித்தேன். இப்படி தமிழகம் முழுவதும் நீங்கள் அறிவொளி இயக்கத்தைப் பரப்பி விட்டால் எல்லோரும் கேள்வி கேட்கத் தொடங்கிவிடுவார்களே; அரசின் திட்டங்களை விமர்சிப்பார்களே, கேள்விகளை கேட்பார்களே; என்ன செய்வீர்கள் என்று கேட்டார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் துணிச்சல் மிக்கவர்கள்; எதையும் சந்திப்பதற்குத் தயாராக இருப்பவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆட்சி மக்களால் மக்களுக்காக நடத்தப்படுகிற ஆட்சி; மக்களுக்குச் சென்று சேரவேண்டிய சலுகைகள் அனைத்தும் கட்டாயமாகச் சென்று சேரவேண்டும் என்பதிலே குறியாக இருக்கிறார்கள். அப்படி அவர்கள் கேள்வி கேட்டாலும் அதைச் சந்திக்கிற ஆற்றலும் திறமையும் எங்கள் புரட்சித் தலைவிக்கு உண்டு (மேசையைத் தட்டும் ஒலி) என்று நான் தெரிவித்தேன். அவர்கள் `She is a dynamic 'leader' என்று சொல்லி, அதை டில்லியிலே பத்திரிகைகளிலேயும் எழுதி இருக்கிறார்கள் என்பதை இங்கே இருக்கிறவர்களுக்கு நான் எடுத்துத் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். இங்கே இருக்கிறவர்கள் என்று சொன்னால், அவையிலே இருக்கிறவர்கள் மட்டுமல்ல, வெளியிலேயிருந்து விமர்சிக்கிறவர்களுக்கும் பொருந்தும் என்பதையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்படி எவர்வரினும் எக்கண் கொண்டு நோக்கினும் தமிழக அறிவொளி இயக்கம் தலைநிமிர்ந்து நிற்கிறது ! இந்தப் பாராட்டுகளும்

பெருமைகளும் பலப்பலவாய்க் கிடைக்கக் காரணம், எதிலும், தமிழகம் முதலிடம் பெற வேண்டும் என்னும் நோக்குடன் வழிகாட்டி நெறிப்படுத்தும் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் சிந்தனைச் சிறப்பே எனக் குறிப்பிடுவதில் மட்டிலா மகிழ்ச்சி அடைகிறேன்.

பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வித் துறை ஆற்றும் மற்றும் ஒரு மகத்தான திட்டம் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வகுத்துத் தந்த அவர்களது சிந்தனையிலே உதித்த சீரிய ஒரு திட்டம்.

படித்த இளைஞர்கள் 1 1/2 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கும் "விருப்பப் பணிப் பள்ளிசாராக் கல்வித் திட்டம்" என்னும் புனிதத் திட்டம்.

பல்வேறு சமூகப் பொருளாதாரக் காரணங்களால் பள்ளிப் படிப்பைத் தொடங்க முடியாத குழந்தைகள், தொடங்கிய படிப்பைத் தொடராது இடையிலே விட்ட குழந்தைகள், ஏறத்தாழ 15 லட்சம் பேர் படிக்க மேலும் ஒரு வாய்ப்பை வழங்கும் புதுமையான திட்டம்.

தொடக்கக் கல்விக்கு இணையாக வகுக்கப்பட்டுள்ள இத்திட்டத்தின் மூலம் 3.5 லட்சம் குழந்தைகள் பயன் பெறுகிறார்கள். இவ்வாண்டில் மேலும் 10 லட்சம் குழந்தைகள் பயன் பெறுவார்கள்.

படித்து வேலையின்றி வேலை வாய்ப்பகத்தில் பதிவு செய்துள்ள இளைஞர்கள் 39,285 பேர் இந்த வேலை வாய்ப்பைப் பெற்றுள்ளார்கள்.

கிராமப் பகுதிகளில் ஒரு லட்சம் பேருக்கும் கூடுதலான படித்த இளைஞர்கள் இவ்வாண்டில் வேலை வாய்ப்பைப் பெறுவார்கள்.

ஐந்தாண்டு தொடக்கக் கல்வியை மூன்றாண்டு காலத்தில் பெறும் குழந்தைகள் - இத்திட்டத்தின் மூலம் ஆறாம் வகுப்பில் சேர்ந்து பயிலவும் ஆணை வழங்கியுள்ளது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால அரசு.

பிற்பகல் 5.20

ஏழை எளியவரின் இல்லக் குழந்தைகள் வாழ, வளர, வளமான வாழ்வு பெற, வழிகாட்டும் இந்தத் திட்டம் மது ஒழிப்புப் பிரச்சாரத்தையும் மாலை நேரங்களில் செய்து ஏழை எளியவரின் வாழ்வில் ஒளியாய்த் திகழ்கிறது. பள்ளிப் படிப்பை இடையில் விடும் பிள்ளைகள் பிரச்சினை பெருகி வரும் இந்நாளில், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி

அவர்களின் இந்த மகத்தான திட்டத்தின் மகிமை அறிந்து மற்ற மாநிலங்கள் எல்லாம் விவரம் கேட்கின்றன. ஆனால் இங்கே இருப்பவர்கள் சிலர் விவரம் புரியாமல் இருக்கிறார்கள் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மத்திய அரசும் புரட்சித் தலைவியைப் போற்றிப் பாராட்டுகிறது என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவிப்பதில் மட்டிலா மகிழ்ச்சியடைகிறேன்.

இந்தத் திட்டங்களுடன் குழந்தைத் தொழிலாளர் பிரச்சினை நிலவும் சாத்தூர், சிவகாசி, வெம்பக்கோட்டை, கோவில்பட்டி, குடியாத்தம், திருப்பத்தூர் ஆகிய பகுதிகளிலும் சென்னை மாநகர் குடிசைப் புறங்களிலும் மொத்தம் 17,500 குழந்தைகள் பயன்பெற 700 பள்ளி சாராக்கல்வி மையங்கள் திறக்கப்பட 7 திட்டங்களை இதய தெய்வம் அவர்கள் அனுமதித்துள்ளார்கள். அம்மையங்கள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

தமிழக மக்களின் உரிமை நலம் காக்கும் அற்புதத் தலைவியின் ஆட்சிச் சிறப்பினால் உயர்கல்வி வளர்ச்சியில் உன்னத நிலை பெற்று ஓங்கியிருக்கிறது தமிழகம்.

இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உயர் கல்வி வளர்ச்சியில் சமூக நீதி காத்து சரித்திரம் படைத்திருக்கிறார்!

கல்வி பெறுவதில் பெண்கள் ஆண்களுக்கிணையாக உயர வேண்டுமென ஊக்கம் தருகிறார்!

புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களால் கொண்டு வரப்பட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் தாழ்த்தப்பட்டோர் இட ஒதுக்கீடு உச்ச நீதிமன்றத்தால் தடை செய்யப்பட்டபோதும், துணிவோடும், விவேகத்தோடும் சட்டம் இயற்றி குடியரசுத் தலைவரது ஒப்புதலைப் பெற்று தமிழ்நாட்டு மக்களின் தலையாயதான பிரச்சினையான 69 சதவிகித இட ஒதுக்கீட்டை நிலைநாட்டி சமூக நீதி காத்த வீராங்கனையாக புரட்சித் தலைவி அவர்கள் திகழ்கிறார்கள்.

பெண்களுக்கெனத் தனியே கல்லூரி இல்லாப் பகுதிகளில் உள்ள ஆடவர் கல்லூரி அனைத்திலும் முப்பது விழுக்காடு இடங்களில் பெண்களைச் சேர்க்க ஆணைகள் இட்ட அன்னை, நம் அருமை முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

பெண்கள் கல்விக்கு ஊக்கமளிக்கும் வகையில் சாதி இன மத வேறுபாடின்றி எல்லாப் பெண்களுக்கும் இலவசக் கல்வி வழங்கும் பெரியார் ஈ.வே.ரா. நாகம்மை இலவசக் கல்வித் திட்டத்திற்கு 45 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கியிருக்கிறார்கள்.

1995 ஏப்ரல் 27] [பேராசிரியர் க. பொன்னுசாமி]

வேலை வாய்ப்புகள் பெருகிட வேண்டி உதவி பெறும் கல்லூரிகளில் வேலை வாய்ப்புக்கு உதவும் கணினி அறிவியல், மின்னணுவியல், மக்கள் தொடர்பு, வணிக மேலாண்மை போன்ற பாடப் பிரிவுகளில் வகுப்புகள் தொடங்க நிதியுதவியின்றி அனுமதி அளிப்பதை அரசு கொள்கையாக ஏற்றிருக்கிறது.

தேசிய மாணவர் கடனுதவித் திட்டத்தை மாணவர் நலனில் அக்கறை காட்டாமல் நடுவண் அரசு நிறுத்தி விட்டாலும் கூட, மாணவர்க்கு ஏற்படும் மனக்கவலை போக்கிட நான் இருக்கிறேன் என்று தாயுள்ளத்துடன் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மாநில அரசின் சார்பிலே ஒரு மாற்றுக் கடனுதவித் திட்டத்தை நடைமுறைப்படுத்த ரூபாய் 25 லட்சம் வழங்கியிருக்கிறார்.

இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்காலத் தமிழ் அரசு, 1995-96 ஆம் ஆண்டிற்காக ரூ.43.00 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்து, பல்வேறு அறிவியல் மேம்பாட்டுத் திட்டங்களை நிறைவேற்றக் கருதியிருக்கிறது.

1995-96 ஆம் ஆண்டில் அறிவியல் திறன்மிக்க மாணவர்களை ஊக்குவிப்பதற்காக ரூ.3 லட்சம் செலவில் மாணவர் ஆய்வுத் திட்டத்தைச் செயல்படுத்த உள்ளது.

தகுதியுள்ள விஞ்ஞானிகளை ஊக்குவிக்க ரூ.1.50 லட்சம் செலவில் ஒரு புதிய திட்டம் வரும் ஆண்டில் செயல்படுத்தப்படவுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் தமிழகத்தில் பொறியியல், மருத்துவம், விவசாயம் போன்ற துறைகளில் புதிய கண்டுபிடிப்புகள், புதிய மாடல்கள், முறைகள் போன்றவற்றால் விஞ்ஞான அறிவுக்கு ஆக்கம் தேடிய விஞ்ஞானிகள் ஒவ்வொருவருக்கும் ரூ.10 ஆயிரம் கொண்ட பொற்கிழியும் வழங்கப்படவுள்ளது.

அண்ணா பல்கலைக் கழக உயர்மட்ட மையங்களுடன் அறிவியல் தொழில்நுட்பப் பிணைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மக்கள் மத்தியில் அறிவியல் கண்ணோட்டத்தை ஏற்படுத்தும் நோக்கில் தமிழ்நாடு அரசு தென்சென்னையில், அறிவியல் நகரம் ஒன்றை நிறுவிட முடிவு செய்து அதற்கென ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியை துணைத் தலைவராக நியமித்திருக்கிறது. இந்தியாவிலேயே இப்படி எந்த மாநில முதலமைச்சரும் ஒரு அறிவியல் நகரத்தை உருவாக்குகின்ற முயற்சியில் இதுவரை ஈடுபடவில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

உயர்கல்வி வளர்ச்சிக்கு உறுதுணை புரியும் நோக்கில் உருவாக்கப்பட்ட உயர் கல்வி மற்றும் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கரங்களால் தொடங்கி வைக்கப்பட்ட பெருமை கொண்டது. இது இந்திய நாட்டின் இதர மாநிலங்களுக்கு எடுத்துக் காட்டாய், முன்னோடியாய் இயங்கி வருகிறது.

தமிழ்நாட்டு பல்கலைக் கழகங்கள் எல்லாம் இதுவரை தனித் தன்மை என்ற பெயரால் ஒன்றுக்கொன்று வேறுபட்டும் முரண்பட்டும் இயங்கி வந்திருக்கிறது. நவக்கிரகங்கள் ஒன்றையொன்று பார்க்காது என்று சொல்வார்கள். அதேபோல பல்கலைக் கழகங்கள் ஒன்றோடு ஒன்று தொடர்பு கொள்ளாமல், ஒன்றோடு ஒன்று உறவுகொள்ளாமல் தனித்தனியாக இயங்கி வந்த சூழ்நிலை இருந்து வந்தது. அப்படி இருந்த நிலைமையை முற்றிலும் மாற்றி அனைத்துப் பல்கலைக் கழகங்களின் துணை வேந்தர்களையும் ஒரு குடையின் கீழ் கொண்டுவந்து துணை வேந்தர்கள் ஆலோசனைக் குழுவை அமைத்து, அந்தக் குழு அடிக்கடி சந்தித்து கலந்துரையாடி உயர்கல்வி வளர்ச்சிக்கு ஒருங்கிணைந்த நல்லுறவைக் காணும் நிலையை ஏற்படுத்திய பெருமை மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை மட்டுமே சாரும் என்பதை மகிழ்வுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

சீரான செம்மையான நிதி நிர்வாகச் செயற்பாடு, பாடத் திட்டங்கள், தேர்வு முறைகள், ஆராய்ச்சித் துறைகள் இவற்றில் ஒரே வகையாகப் பல்கலைக் கழகங்கள் அனைத்தும் பின்பற்றிடும் வகையில் இம்மன்றம் வழங்கிய அறிக்கையும் அரசின் ஆய்வில் உள்ளது.

தமிழக மக்களின் வாழ்க்கை வளம் சிறக்க, தொழில்வளம் பெருக வேண்டியதன் அவசியத்தை தொலைநோக்கோடு திட்டமிட்டு வருபவர் இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்.

கனடா-இந்தியா பயிலகக் கூட்டுறவுத் திட்டம், உலக வங்கி உதவி பெறும் இரண்டாம் பொறியியல் கல்வித் திட்டம், ஆகியவற்றின் மூலம், தொழில்நுட்பக் கல்வியில் விரிவாக்கம், தர மேம்பாடு, திறன், முன்னேற்றம் ஆகிய கண்ணோட்டத்தில் தமிழகத்தில் உள்ள தொழில்நுட்பப் பயிலகங்கள் அனைத்தும் வலிவு பெற, மேம்படுத்த வழிவகை செய்யப்பட்டு வருகிறது.

*பிற்பகல் 5-25*

உயர் கல்வி மேம்பாட்டில் தனிக் கவனம் செலுத்திவரும் தமிழ்நாடு உயர் கல்வி மன்றத்தின் செயல்பாடுகளில் முழுமையாக ஈடுபாடு

கொண்டு செயலாற்றி தமிழக கல்வித் துறைக்கு பெருமை சேர்க்கும் தமிழ்நாடு உயர் கல்வி மன்றத்தின் துணைத் தலைவர், உறுப்பினர்-செயலர், மன்றத்தின் அனைத்து உறுப்பினர்கள், உறுதுணையாக இருக்கும் பல்கலைக் கழகங்களின் துணை வேந்தர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகம் முழுவதும் உள்ள கல்லூரிகளில் கடந்த ஆண்டிலே மாணவர் பேரவை தேர்தல் பணிகள் சிறப்பாய் நடந்தன. தமிழக மண்ணில் வேரூன்றியுள்ள சனநாயக மரபுக்கு இதனையன்றி வேறு சாட்சி தேவையில்லை. ஆனால் எங்கிருந்தோ இருட்டில் புகுந்த குருடர்கள்போல நியமன முறையில் வருவோர், தம்மை நீதிமானாக நினைத்துக்கொண்டு நெறிகெட்டுச் செயல்படும்போதுதான் பிரச்சினைகள் எழுகின்றன என்பதை தமிழகம் வரலாறாக கண்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

பல்கலைக் கழகச் சிண்டிகேட் / செனட் குழு உறுப்பினர் நியமனத்தில் ஆந்திர இறக்குமதிகள் அதிகமாகி வருவதை இந்த நாடே நன்கறியும். குறிப்பிட்ட ஓரினத்தார் மட்டுமே சிறப்பாய் நியமனம் ஆகின்றனர். அவர்களும் இம்மாநிலத்தைச் சேர்ந்தவர் அல்லர் என்ற மனக்குறை தமிழ்நாட்டுக் கல்வியாளரிடையே ஏற்பட்டிருக்கிறது. ஏனிந்த இறக்குமதி ?அறிவும் ஆற்றலும் வாய்ந்தோர் அறவே இல்லையா நம் தமிழ்நாட்டில்? முறைமை உடையவர்க்கு உரிய வாய்ப்புகள் பிறரால் பறிக்கப்படுவது தவறெனப் புரிந்து கொண்டு இருக்கிறார்கள் மக்கள். ஆனால் தமிழ் மக்களின் ஒரே தலைவர் என்று தன்னைத் தானே விளம்பரப்படுத்திக் கொள்பவர்கள் ஆந்திரத்து ஆட்களை இவ்வாறு முறைகேடாக நியமிப்பதை இன்று வரையில் கண்டித்திருக்கிறார்களா என்றால் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இப்படி கண்டிக்க முன்வராதது தமிழனுக்கும், தமிழ் உணர்வுக்கும், செய்யப்படும் மாபெரும் துரோகம் என்பதை தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தத் துரோகச் செயலை தமிழக மக்கள் என்றென்றும் மன்னிக்கமாட்டார்கள்.

இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் புகழை உலகிற்கு வெளிப்படுத்தும் தலையாய நிலைக்களனாய்த் திகழ்கிறது தமிழ்நாடு அரசின் விளையாட்டுத் துறை. தஞ்சைப் பெரிய கோவிலை எடுப்பித்து, ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாய் மக்கள் நெஞ்சில் நிலைத்து வாழும் சோழ மாமன்னன் இராசராசனைபோல், பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் உலக வரலாற்றில் ஒப்பிலாப் புகழுடன் நிலைக்கும் உன்னதமான சாதனையைப் புரிந்துள்ளார்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்.

[பேராசிரியர் க. பொன்னுசாமி] [1995 ஏப்ரல் 27

7-1/2 மாத கால அளவில் ஈடும் இணையுமில்லா வண்ணம் ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கத்தை எடுப்பித்து, விளையாட்டுத் துறை வளர்ச்சிக்கு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆற்றிவரும் அளப்பரிய சாதனைக்காக உலக நாடுகளின் ஒலிம்பிக் குழுவினர் நேரில் வந்து விருது தந்து பாராட்டிப் போற்றியுள்ளார்கள் என்பதை தமிழ்நாடு மக்கள் இன்று பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித் தனியே உலகக் கால்பந்தாட்டப் போட்டிகளைச் சென்னையில் நிகழ்த்திச் சரித்திரச் சாதனை புரிந்த நம் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் முக்கிய விளையாட்டுகள் அனைத்திற்கும் தேவைப்படும் வசதிகளை பன்னாட்டுத் தர நிலையில், இந்தச் சென்னை மாநகரில் ஏற்படுத்திட உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆழ்ந்த விருப்பத்தின் காரணமாக 1995 டிசம்பரில் சென்னையில் நடைபெற இருக்கும் 7-வது தெற்கு ஆசிய நாடுகள் கூட்டமைப்பின் விளையாட்டுப் போட்டிகளுக்காக ரூபாய் 21.12 கோடி செலவில் பல்நோக்கு உள்ளரங்கம், நுங்கம்பாக்கத்தில் ரூ.6.86 கோடி செலவில் டென்னிஸ் அரங்கம், மேயர் இராதாகிருஷ்ணன் ஸ்டேடியத்தில் ரூ.7.23 கோடி செலவில் ஹாக்கி அரங்கம், வேளச்சேரி சாலையில் ரூ.10.25 கோடி செலவில் நீச்சல்குளம் ஆகிய வசதிகளைப் பன்னாட்டுத் தர நிலைகளுக்கு இணையாக படைத்து வருகிறார்கள் நம் பார் புகழும் புரட்சித் தலைவி அவர்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி).

வெளிநாட்டு விளையாட்டு வீரர்கள் வந்து தங்குவதற்கு வசதியாகக் கோயம்பேட்டில் ரூ.70 கோடி செலவில் விளையாட்டு கிராமம் அமைக்கும் விந்தையையும் நிகழ்த்திக் கொண்டிருக்கிறார்கள் நம் வெற்றித்தாய் அவர்கள்.

தமிழக விளையாட்டு வீரர்களை ஊக்கப்படுத்திடச் சாதனைகள் நிகழ்த்துவோர்க்குப் பணமாகவும், வீடுகளாகவும், மனைகளாகவும் இதய தெய்வம் அவர்கள் பரிசுகளாக வழங்கி வருவதை இந்த வையகம் பாராட்டிக் கொண்டிருக்கிறது. கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம் பெற்றுள்ள தமிழக வீரச் சிறுவன் குற்றாலீசுவரன் படைக்கும் நீச்சல் சாதனைகளுக்கு எல்லாம் ஊக்க சக்தியாய் விளங்கும் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மூலம் ஏறத்தாழ ரூ.15.19 லட்சம் நிதி வழங்கி உற்சாகப்படுத்தி வருகிறார்கள் என்பதையும் நான் இங்கே குறிப்பிட்டாக வேண்டும். தமிழக இளைஞர்களின் விளையாட்டுத் திறன்களை வளர்க்கும் முயற்சியில் தமிழகத்தின் மாவட்டத் தலைநகரங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு

விளையாட்டரங்கம், ஒரு நீச்சல்குளம், ஓர் உள்விளையாட்டரங்கம் ஆகியவைகள் அமைக்கப்படுவதைக் கொள்கையாகக் கொண்டு, அவற்றைப் படிப்படியாக அமைத்து வருகிறது மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு.

இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அறிவுரைகளின்படி விளையாட்டுத் திறன்படைத்த மாணவச் செல்வங்களுக்குப் பயிற்சிகள் அளிக்கப்படுவதற்காக விளையாட்டுப் பள்ளிகளையும், சிறப்பு விடுதிகளையும் நடத்திக் கொண்டிருக்கிறது தமிழ்நாடு அரசு. தனித் தனி விளையாட்டு வீரர்களுக்கும், வெவ்வேறு அமைப்புகளுக்கும் தேவையான நிதி வழங்கி விளையாட்டுக் கலைகளைத் தமிழகத்தில் வளர்த்து வருகிறார்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்.

டாக்டர் புரட்சித் தலைவி அவர்களே ஒரு சிறந்த விளையாட்டு வீராங்கனை என்பதாலும், பள்ளியிலே படிக்கின்ற நேரத்தில் அவர்கள் ஒரு ஆல்-ரவுண்டர் என்பதாலும், தமிழகத்தில் இதுவரை வேறு எந்த முதலமைச்சரும் செய்திராத அளவில் விளையாட்டுத் துறையை மேம்படுத்த அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறார்கள். இந்த பொற்கால ஆட்சியில்தான் விளையாட்டுக் கலைத் துறை வைரமாய் ஒளி வீசுவதை இந்த வையகமே வாழ்த்தி நிற்கிறது.

இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களது அறிவுரையின்படி, தமிழக அரசு விளையாட்டுத் திட்டக் கொள்கை ஒன்றை உருவாக்கி வருகிறது. அது மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களால் விரைவில் வெளியிடப்பட இருக்கிறது என்பதை மாமன்றத்திலே தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

*பிற்பகல் 5-30*

சீரோடும், சிறப்போடும் தஞ்சையில் நடைபெற்ற எட்டாம் உலகத் தமிழ்நாடு இதய தெய்வம் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் கொள்கை உறுதிப்பாட்டிற்கு ஓர் உரைகல்லாய் அமைந்தது. உலகம் முழுவதும் பரவி வாழும் தமிழர்களின் கலை பண்பாட்டு மரபுகளைக் காக்கும் ஓர் உன்னத நோக்கத்தின் அடிப்படையில் நடைபெற்று வருவது இந்த உலகத் தமிழ் மாநாடு. தமிழர்களின் தாயகமாகிய இந்தத் தமிழகத்தில் இதற்கு முன் பேரறிஞர் அண்ணா அவர்கள் சென்னையில் 1968-ல் இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டை நடத்திக் காட்டினார்கள். டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.

அவர்கள் மதுரையில் 1981 ஆம் ஆண்டில் ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டை முன்னின்று நடத்தி உலகெங்கும் வாழும் தமிழர்கள் நெஞ்சுக்கு உரமூட்டினார்கள். அவர்களுக்குப் பின்னால் ஏறத்தாழ 14 ஆண்டுக் காலத்திற்குப்பின், தமிழக ஆட்சிக்கட்டில் ஏறிய இரண்டாம் ஆண்டிலேயே எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டை தமிழகத்தில் நடத்துவேன் என்று அறிவித்து, உலகின் பிறநாடுகள் எல்லாம் வியக்கும் வண்ணம் தஞ்சையிலே நடத்திக்காட்டி, வெற்றி பெற்றிருக்கிறார்கள் மாமேதை இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்.

இடைப்பட்ட காலத்தில் ஏறத்தாழ 10 ஆண்டு காலம் தமிழகத்தை ஆண்டு அனுபவித்தவர்கள் தமிழுக்கும் தமிழருக்கும் தமிழகத்திற்கும் தாமே ஏக வாரிசு என்று எக்காளமிட்டவர்கள் உலகத் தமிழ் மாநாட்டை நடத்திட முன்வரவில்லையே, அவர்களுக்கு உலகத் தமிழ் மாநாட்டை நடத்திடும் எண்ணம் வரவில்லையே, ஏன் என்பதை இந்த நாட்டிலே வாழ்கின்ற மக்கள் எண்ணிப் பார்த்திட வேண்டும்.

அப்போதுதான் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் தமிழ் ஆர்வம், தமிழ்மொழிப்பற்று, தமிழக நலன் காக்கும் தூய தமிழ் உணர்வு இந்த உலகுக்குப் புரியும். இதய தெய்வம் அவர்கள் உலகத் தமிழ் மாநாட்டை நடத்தினால் புகழும் பெருமையும் அவருக்குச் சேர்ந்துவிடுமே என்ற எரிச்சல், பொறாமை காரணமாக, மாநாட்டை எப்படியும் தடுத்துவிட வேண்டுமெனக் கங்கணம் கட்டிக்கொண்டு வானில் பறந்தவர்கள் பலபேர், வீணில் அலைந்தவர்கள் சிலபேர். குடியரசுத் தலைவரையும், இந்தியப் பிரதமரையும் மாநாட்டில் பங்கு பெற வேண்டாமென அடாவடியாகத் தடாலடிப் போராட்டம் நடத்தியவர்கள் பலபேர். என்றாலும் மக்கள் செல்வாக்கு மிக்க மாபெரும் தலைவியாய் விளங்கும் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசியல் உறுதிப்பாடு காரணமாக மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் அன்பான அழைப்பினை ஏற்று, தொடக்க விழாவில் குடியரசுத் துணைத் தலைவர் அவர்களும், நிறைவு விழாவில் இந்தியப் பிரதமர் அவர்களும் கலந்துகொண்டு தமிழ் மொழியும், தமிழர்களும் இந்தியப் பண்பாட்டு வளர்ச்சியில் ஏற்படுத்தியுள்ள வலிவையும், வளமையையும் பலபடப் புகழ்ந்து போற்றி, தமிழகத்திற்குப் பெருமை ஏற்படுத்தியிருக்கிறார்கள். மாநாட்டில் உரையாற்றிய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் "இன்றும் தமிழ், என்றும் தமிழ்" என்னும் புதிய முழக்கத்தை தந்து வருங்கால வளமைக்கு வழிகாட்டும் அறிவியல் தமிழை நான்காம் தமிழாய் வளர்க்க தீர்க்கதரிசனத்தோடு உலகத் தமிழ் அறிஞர்களுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். ஒன்பது அம்ச செயல் திட்டம் ஒன்றையும் அறிவித்தார்கள்.

தமிழ் மொழியின் மாண்பையும், தமிழர்களின் பண்பாட்டையும் பாதுகாத்து வளர்க்கும் வகையில் தமிழகத்தில் உள்ள பல்வேறு அமைப்புகளுக்கு நிதியும் வழங்கி உதவியுள்ளார்கள். அமரர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களால் 5-ஆம் உலகத் தமிழ் மாநாட்டின் மூலம் மதுரையில் அமைக்கப்பட்ட உலகத் தமிழ்ச் சங்கம் புதுப்பிக்கப்பட ரூ.25 இலட்சம் நிதியுதவி அளித்திருக்கிறார்கள். விரிவான வகையில் கலைக் களஞ்சியத் தொகுதிகள் உருவாக்கப்படவும், தமிழ்ச் சொற் பிறப்பியல் அகர முதலிப் பணிகளை முடித்திடவும் தேவையான நிதி ஒதுக்கித் தந்துள்ளார்கள்.

இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் இளைஞர் இல்லம் ஒன்றை ஏற்படுத்திடவும், பிற பணிகளுக்காகவும் கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்கு ரூ. 75 இலட்சம் மானியம் அளித்துள்ளார்கள். ஐந்து நாட்கள் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டில் உலகெங்கிலும் உள்ள 28 நாடுகளைச் சேர்ந்த 1101 அறிஞர் பெருமக்கள் கலந்துகொண்டு தமிழ் மொழிக்கு வளம் சேர்க்கும் வகையில் அரும்பெரும் கருத்துச் செல்வங்களை வாரி வழங்கி, மாநாட்டிற்குச் சிறப்பை ஏற்படுத்தினார்கள்.

புரட்சித் தலைவி அவர்களின் புனித முயற்சிகளால் அற்புதத் திருவிழாவாய் நடந்து முடிந்த இந்த எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டின் மூலம் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் புகழும் பெருமையும் உலகம் முழுவதும் பொங்கிப் பெருகுகிறது. லட்சக்கணக்கான மக்கள் கூடிய இந்த மாநாடு எவருடைய இடையூறு இருந்தாலும், எந்த ஒரு சிறு தடையுமின்றி வெற்றியுடன் நடந்து முடிந்ததன் மூலம் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கொண்டுள்ள மக்கள் சக்தியை உலகம் கண்டு வியந்தது என்பதையும் குறிப்பிட்டாக வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி).

இப்படி, தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறையின் சார்பில் வரலாற்றுப் புகழ்கொண்ட இந்த எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டைத் தலைமை ஏற்று நடத்தித் தந்ததன் மூலம், உலகத் தமிழ் மக்கள் அனைவரிடமும் புத்துணர்வையும் புதிய தெம்பையும் அளித்துள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சி தலைவி அவர்களுக்குத் தமிழக மக்கள் சார்பில் என் நன்றியை அவர்களது பாதங்களில் காணிக்கையாய்ச் சூட்டிப் பணிகிறேன்.

இதய தெய்வம் அவர்கள் உலகத் தமிழ் மாநாட்டில் முழங்கியபடி அறிவியல் தமிழ் வளர்க்கும் அரிய முயற்சியாய் கணினியின் பயன்பாட்டைப் பெருக்கிடத் தமிழ்ப் பல்கலைக் கழகம் வலுப்படுத்தப்படும். கணினி விசைப் பலகை முறைப்படுத்தும் பணி விரைவுபடுத்தப்படும்.

சென்னைப் பல்கலைச் சுவடிகள் நூலகத்திற்கு ரூ.23.62 இலட்சம் செலவிலும், சென்னை அருங்காட்சிப் படிமக் கலைக் கூடத்திற்கு ரூ.22 இலட்சம் செலவிலும் சீர்வளி வசதி செய்து தரப்படும். மொரீசியன் நாட்டுப் பல்கலைக் கழகத்தில் தமிழ் இருக்கை ஏற்படுத்தப்படும். ஆஸ்திரேலியா உள்ளிட்ட கீழ்த்திசை நாடுகளின் பல்கலைக் கழகங்களிலும் தமிழ் இருக்கைகள் அமைக்கப்படும்.

கலை பண்பாட்டு இயக்ககக் கட்டுப்பாட்டில் இயங்கும் கல்வி நிறுவனங்களில் கல்வித் தரம் உயரவும், முதுகலைப்பட்ட வகுப்புகள் தொடங்கவும், ஆசிரியர் தரத்தை உயர்த்தவும் ஆலோசனை வழங்க அரசு ஒரு குழு அமைத்திருக்கிறது. குழுவின் அறிக்கையினைத் தொடர்ந்து அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும். எனினும், முதற்கட்டமாக அரசு கலைத் தொழில் கல்லூரிக்குத் தன்னாட்சித் தகுதி அளித்து மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணை வழங்கியுள்ளார்கள்.

இளங்கலைஞர்களை ஊக்குவிக்குத் திட்டம் இவ்வாண்டும் செயல்படுத்தப்பட உள்ளது. ஏப்ரல் 7 ஆம் தேதி முதல் 15 ஆம் தேதி வரை தமிழ்ப் புத்தாண்டையொட்டி சிங்கப்பூரில் நடைபெற்ற தமிழ்மொழி வார விழாவில் கலந்துகொள்ள கலை. பண்பாட்டு இயக்கக ஆணையர் அவர்கள் தலைமையில் 19 கலைஞர்கள் அடங்கிய கிராமியக் கலைக் குழுவினர் சிங்கப்பூர் சென்று கலை நிகழ்ச்சிகள் நடத்திவிட்டு, பாராட்டுகளுடன் திரும்பி இருக்கிறார்கள் என்பதைப் பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 5-35

இத்துறை அரசு கலைத்தொழில் கல்லூரிகள் மற்றும் அரசு இசைக் கல்லூரிகளில் மாணவ, மாணவியர் கல்வித்தரம் உயர்த்தும் பொருட்டு, புதியதாக இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் வாங்க ரூ.10 இலட்சமும், சென்னை அரசு இசைக் கல்லூரியில் பரத நாட்டியம் மற்றும் நட்டுவாங்கம் வகுப்புகள் நடத்த புதியதாக சிலம்புக்கூடம் கட்ட ரூ.3 இலட்சமும், மதுரை அரசு இசைக் கல்லூரிக்கு புதியதாகக் கட்டடம் கட்ட ரூ.4.35 இலட்சமும், இக்கல்லூரியில் வெண்கலத்தில் நடராஜர் சிலை அமைக்க ரூ.1.45 இலட்சமும், கும்பகோணம் அரசினர் கலைத் தொழில் கல்லூரியில் கூடுதலாக மாணவர்களின் கல்வி வசதித் தேவைக்கு, புதியதாகக் கட்டிடம் கட்ட ரூ.10 இலட்சமும் செலவிட உள்ளது என்பதைப் பெருமையுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

1995 ஏப்ரல் 27] [பேராசிரியர் க. பொன்னுசாமி]

பேரறிஞர் அண்ணா அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டுப் புரட்சித் தலைவர் அவர்களால் நடைமுறைப்படுத்தப்பட்ட இருமொழிக் கொள்கையில், மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மிகவும் உறுதியாக இருக்கிறார்கள்.

தமிழகத்தில் இருமொழிக் கொள்கை பின்பற்றப்படுவதன் காரணமாகவே மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், இந்தியைக் கட்டாயப் பாடமாக்கும் நவோதயா பள்ளிகளைத் தமிழகத்தில் தொடங்க மறுப்புத் தெரிவித்திருக்கிறார்கள். மத்திய அரசுக்கு எழுதிய கடிதத்தில் இந்தி கட்டாயப் பாடம் இல்லையென்றால்தான், நவோதயா பள்ளிகளைத் தமிழக அரசு தொடங்கும் என்றும் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் நர்சரி மற்றும் மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் கட்டாயமாகத் தமிழ் கற்பிக்கப்பட வேண்டும் என்பதில் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் மிகவும் அக்கறை கொண்டிருக்கிறார்கள். நர்சரிப் பள்ளிகளுக்கு அங்கீகாரம் வழங்கும்போது, இதை ஒரு நிபந்தனையாக அரசு வலியுறுத்தி ஆணை பிறப்பித்திருக்கிறது. எனினும் ஒருசில பள்ளிகளில் தமிழைக் கற்பிப்பதில் தயக்கம் காட்டுவதைக் கருத்தில் கொண்டு, நர்சரி மற்றும் மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் தமிழைக் கட்டாயமாகக் கற்பிக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வரும் கல்வியாண்டில் இதை நடைமுறைப்படுத்துவதற்கான எல்லா ஏற்பாடுகளையும் புரட்சித் தலைவி அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்வதோடு, தமிழகத்தில் எவரும் தமிழைப் படிக்காமல் பட்டம் பெறமுடியாது என்ற நிலையை உருவாக்க வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆணையிட்டு இருக்கிறார்கள் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு"

என்று சொன்ன அரசியல் அறிஞர் திருவள்ளுவரின் நெறியில் ஆட்சியை நிகழ்த்திவரும் இதய தெய்வம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கல்விக்குக் கூடுதலாய் நிதியொதுக்கி அனுமதிக்கும் புதிய திட்டங்களை மகிழ்ச்சியோடு அறிவிக்க விரும்புகின்றேன்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் சிலவற்றைக் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். 100 புதிய தொடக்கப் பள்ளிகள் தொடங்குவதற்கு புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். 25 தொடக்கப் பள்ளிகள் 8.81 லட்சம் ரூபாய் செலவில் நடுநிலைப்

பள்ளிகளாக மேம்படுத்தப்படும். 60.41 லட்சம் ரூபாய் செலவில் 40 ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகள் அரசு உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்படும். ரூ.86.04 லட்சம் செலவில் 30 அரசு உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும். பெண்கள் பள்ளிகளுக்கு அடிப்படைத் தேவைகள் செய்து கொடுக்கப்பட வேண்டும் என்னும் புரட்சித் தலைவி அவர்களின் சிறப்புத் திட்டத்தின்கீழ் ரூ.54.10 லட்சம் செலவில், 541 நடுநிலைப் பள்ளிகளில் கழிப்பறை வசதிகள் செய்து தரப்படும். இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் சிறப்புத் திட்டத்தின் கீழ் 655 பெண்கள் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு 2 கோடி ரூபாய் செலவில் கழிப்பறைகள், கட்டட வசதிகள் செய்து தரப்படும்.

இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், பள்ளிகளுக்குத் தேவைப்படும் அறிவியல் ஆய்வுக் கூடங்களின் இன்றியமையாமை கருதி 30 அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் ஆய்வுக் கூடங்கள் அமைக்கவும், உபகரணங்கள் வழங்கவும் ரூ.60 லட்சம் ஒதுக்கீடு செய்துள்ளார்கள். புரட்சித் தலைவி அவர்கள் ஆய்வுக் கூடங்கள் இல்லாமல் எப்படி ஒரு பள்ளி இயங்கமுடியும் என்ற கேள்வியைக் கேட்டு, யாரும் கேட்காமலேயே நாங்கள் வேண்டுகோள் விடுக்காமலேயே அவர்களாகவே தானாகவே முன்வந்து ரூ.30 லட்சம் என்றிருந்ததை ரூ.60 லட்சம் என்று இதற்கு நிதி ஒதுக்கீடு செய்து தந்தார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கேட்காமலேயே தருகின்றார் புரட்சித் தலைவி என்று உறுப்பினர்கள் இங்கே சொல்வதை, வெளியிலே இருப்பவர்கள் வேறுவிதமாகப் பேசுவதை, இதைக் கேட்டபின்பாவது அவர்கள் நிறுத்திக் கொள்வார்கள் என்ற நம்பிக்கையை தெரிவித்துக் கொள்கிறேன்.

அனைவர்க்கும் ஆரம்பக் கல்வித் திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்திட, ஆசிரியர்களுக்குக் குறைந்தபட்சக் கற்றல் இலக்குகளில் ரூ.25 லட்சம் செலவில் பயிற்சிகள் அளிக்கப்பட இருக்கிறது. பர்கூர், இராமநாதபுரம் அரசு மகளிர் கல்லூரிகளில் 28.58 லட்சம் ரூபாய் செலவில் ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியிடங்களைத் தொடங்க, இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் அனுமதி வழங்கியுள்ளார்கள். 3 ஆடவர் கல்லூரிகளில் பெண்கள் சேர்க்கப்பட்டிருப்பதால், காத்திருப்பு அறையும் (வெயிட்டிங் ரூம்), கழிப்பிட அறையும் கட்டித்தர ரூ.10.50 லட்சம் அரசு நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். திருச்சி பெரியார் ஈ.வெ.ரா. கல்லூரி, மயிலாடுதுறை அரசு மகளிர் கல்லூரிகளில் கூடுதல் வகுப்பறைகள் கட்ட ரூ. 20.25 லட்சம், புரட்சித் தலைவி அவர்களால் ஒதுக்கப்பட்டுள்ளது.

1995 ஏப்ரல் 27] , [பேராசிரியர் க. பொன்னுசாமி]

மழலையர் பள்ளிகளை மேம்படுத்தும் நோக்கில் ஒரு தனி இயக்ககம் புதிதாக அமைப்பது குறித்து, ஆலோசனை வழங்கப்பட இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அறிவித்ததற்கிணங்க ஒரு ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. இதய தெய்வம் அவர்களின் அறிவுரையின்படி, நிர்வாக மேம்பாடு கருதி பள்ளிக் கல்வி இயக்ககம் கணினி மயமாக்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

பிற்பகல் 5-40

கல்லூரிக் கல்வித் துறை, பள்ளிக் கல்வித் துறை மற்றும் தொழில் நுட்பக் கல்வித் துறை ஆகியவற்றில் பணிபுரிந்து வரும் ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லா பணியாளர்களது பணிமுறைமைகள் - சர்வீஸ் கண்டிஷன்ஸ் - ஆராயப்படுவதற்கும் குறைகள் தீர்க்கப்படவும் புரட்சித் தலைவி அவர்களின் அரசு தனித் தனியே குழுக்கள் அமைத்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளும். இத்துறைகளில் பணியாற்றும் அனைத்து நிலை அலுவலர்களது பணிமூப்புப் பட்டியல் - இண்டர் 'சீ' சீனியாரிட்டி தயாரித்து உரிய காலத்தில் வெளியிட அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

ஆங்கிலோ-இந்தியப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை ரூ.30-லிருந்து 100 ஆக உயர்த்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆணை வழங்கி இருக்கிறார்கள்.

நடுநிலைப் பள்ளிகளில் பணியாற்றி வரும் தலைமையாசிரியர்களைப் படிப்படியாக உதவிக் கல்வி அலுவலர்களாக நியமித்திட இதய தெய்வத்தின் அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

தொடக்கக் கல்வித் துறையில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு நல்லாசிரியர் விருதுகள் ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலும் இரண்டு ஆசிரியர்களுக்கு மட்டும் தற்போது வழங்கப்படுகிறது. இந்த எண்ணிக்கையை உயர்த்திட வேண்டுமென்று கோரிக்கைகள் வந்ததன் அடிப்படையில் அதை உயர்த்துவதற்காக அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையின்படி நூலகம் இல்லாத 5000 மக்கள்தொகை கொண்ட 625 கிராமங்களில் புதிய நூலகங்கள் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

இதய தெய்வத்தின் ஆணையின்படி சென்னை அண்ணா சாலை தேவநேயப் பாவாணர் நூலகக் கட்டட வளாகத்தில் சென்னை மாவட்ட மைய நூலகத்திற்குப் பல அடுக்கு மாடிக் கட்டடம் ரூ.2.75 கோடி செலவில் நவீன வசதிகளுடன் கட்டப்படும்.

மாதர் நலம் காக்கும் எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அறிவுரைகள்படியும் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்கவும் பெண்களுக்காகப் பெண்களே நடத்தும் பெண்கள் நூலகம் இந்த ஆண்டில் சென்னை, கோவை, சேலம், மதுரை, திருச்சி ஆகிய மாவட்டங்களில் அமைக்கப்படும். படிப்படியாக இத்திட்டம் பிற மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படும் என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

உலகப் புகழ் பெற்ற கன்னிமாரா நூலகத்தின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடிட விழாக்குழு ஒன்று அமைக்கப்படும்.

அண்ணா நகரில் உள்ள நூலக வளாகத்தில் 75 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு சமுதாயக் கூடமும் அமைக்கப்பட இருக்கிறது.

தொழிற் கல்வி சேர்க்கைக்கு நுழைவுத் தேர்வை எழுதும் கிராமப்புற மாணவர்களும் பயன்பெறும் வகையில் தமிழ்நாடு பெற்றோர்-ஆசிரியர் கழகத்துடன் இணைந்து பயிற்சி மையங்கள் நடத்தப்படும்.

இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அறிவுரைகளின்படி சிறந்த நூல்களை படைக்கும் நூலாசிரியர் மூவருக்குப் "பேரறிஞர் அண்ணா நூலாசிரியர் விருது" என்னும் பெயரில் பரிசு வழங்கப்படும். முதல் பரிசாக ரூபாய் ஐம்பதாயிரமும், இரண்டாம் பரிசாக ரூபாய் முப்பதாயிரமும், மூன்றாம் பரிசாக ரூபாய் இருபதாயிரமும் ஆண்டுதோறும் நூலக வார விழாவின்போது பொது நூலகத் துறையின் சார்பாக வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசுக்குள்ள கடுமையான நிதி நெருக்கடிக்கு இடையிலும் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பெண்கள் கல்வி வளர்ச்சியில் கொண்டுள்ள பேரார்வம் காரணமாக இந்த ஆண்டில் இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் தமிழ்நாடு அரசு சார்பில் ஒரு பெண்கள் கலைக் கல்லூரி தொடங்க ஆணையிட்டுள்ளார்கள்.

தமிழகத்தில் உள்ள சுயநிதிக் கல்லூரிகளில் கல்விக் கட்டணம், ஆசிரியர் ஊதியம், அடிப்படை வசதிகளின்மை போன்றவற்றில் புகார்கள் அரசுக்கு வந்ததைத் தொடர்ந்து, மேற்படிக் கல்லூரிகளின் செயல்பாடுகளை ஒழுங்குப்படுத்திக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் நோக்குடன், தமிழ்நாடு உயர் கல்வி மன்றத்தின் பரிந்துரைகளை ஏற்று விரைவில் சுயநிதிக் கல்லூரிகள் ஒழுங்காற்றுச் சட்டம் - செல்ப் பைனான்சிங் காலேஜஸ் ரெகுலேஷன் ஆக்ட் - இயற்றிட டாக்டர் புரட்சித் தலைவியின் அரசு நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது.

TRUTH ALONE TRIUMPHS

1995 ஏப்ரல் 27] [பேராசிரியர் க. பொன்னுசாமி]

கல்லூரிக் கல்விக்குத் தேவைப்படும் தமிழ் வழிப்பாட நூல்களை தற்கால வளர்ச்சி நிலைகளுக்கேற்பத் தரமாகத் திருத்தி வெளியிட இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

தமிழகத்தில் உள்ள அரசுக் கல்லூரிகளில் ஏறத்தாழ 30 ஆண்டுகளுக்கு மேல் எந்த விதமான பதவி உயர்வு வாய்ப்பும் இல்லா நிலையில் பணியாற்றிய பட்டதாரிப் பயிற்றுநர், விளக்குநர்களுள் 10 ஆண்டுக்காலம் பணிபுரிந்தவர்களுக்குத் தேர்வுநிலை உயர்வும், 20 ஆண்டுக்காலம் பணிபுரிந்தவர்களுக்குச் சிறப்பு நிலை உயர்வும் வழங்க இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒப்புதல் அளித்திருக்கிறார்கள். இதற்கான ஆணைகள் விரைவில் வழங்கப்படும்.

உயர் கல்வி வழங்குவதில் உன்னத நிலை பெற்று திகழும் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு கல்லூரி நிர்வாகத்தை மேலும் சீரமைக்கும் நோக்கில் இதுவரையில் மண்டல கல்லூரிக் கல்வி துணை இயக்குநர் என்றிருந்த பதவிகளை இணை இயக்குநர்களாக மேம்படுத்தி ஆணை வெளியிட்டிருக்கிறது.

கல்லூரி ஆசிரியர்களுக்கு 1-9-1993 முதல் இடைக்கால நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை இந்த அரசு கனிவுடன் பரிசீலித்து வருகிறது. இடைக்கால நிவாரணம் அளிப்பது குறித்து விரைவில் அரசு ஆணை வெளியிடப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்லூரி ஆசிரியர் பணிப்பளு - ஒர்க் லோடு - தொடர்பாக விரைவில் அரசு ஆணை வெளியிடப்படும்.

கல்லூரிக் கல்வி இயக்குநரகத்தில் துணை இயக்குநர் பதவியில் ஆசிரியர் அல்லாப் பணியாளர் ஒருவர் நியமிக்கப்பட அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

கல்லூரி ஆசிரியர்களுக்கு ஒவ்வொரு ஆண்டிலும் நல்லாசிரியர் விருது வழங்கவும் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

தமிழ்நாட்டில் இயங்கி வரும் அரசு கல்லூரிகள், உதவி பெறும் கல்லூரிகள் மற்றும் சுயநிதி கல்லூரிகளில் பெற்றோர்-ஆசிரியர் கழகங்கள் தொடங்கவும், மாநில அளவில் இவற்றை ஒருங்கிணைக்கவும் அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. ஒவ்வொரு கல்லூரியிலும் தேவையான வகுப்பறைகள், கழிப்பறை, நூலகம், விளையாட்டு இடம், குடிநீர்,

[பேராசிரியர் க. பொன்னுசாமி] [1995 ஏப்ரல் 27

தளவாடங்கள், சுற்று சுவர் போன்ற அடிப்படை வசதிகளை விரிவுபடுத்தவும் கல்லூரிகள் மற்றும் இணை இயக்குநர் அலுவலகங்களுக்கு 'ஃபாக்ஸ்' வசதி செய்யவும் இது வாய்ப்புகளை உருவாக்கும்.

பிற்பகல் *5-45*

இதுவரை மேல்நிலைத் தேர்வின் முடிவுகள் வந்த பின்னரே மாணவர்கள் தொழிற்கல்வி நுழைவுத் தேர்வுகளுக்கு விண்ணப்பித்து ஜுன் இறுதியில் தேர்வுகளை எழுதி வந்தார்கள். தொழிற்கல்லூரியில் இடம் கிடைக்காதோ என்னும் ஐயத்தில் உயர்ந்த மதிப்பெண்கள் பெற்றவர்கள்கூடக் கலைக் கல்லூரிகளில் சேர்ந்து வந்தார்கள். கலைக் கல்லூரிகளில் சேர்க்கை ஆகஸ்ட்டில் முடிவடைவது இயல்பு. ஆனால் தொழில் கல்லூரிகளின் சேர்க்கையோ அக்டோபருக்கு மேலும் நீண்டு விடுகிறது. தொழிற் கல்லூரிகளில் இடம் கிடைத்தபின், கலைக் கல்லூரியை விட்டு விலகும் மாணவர்கள் பலருக்கு கட்டிய கல்விக் கட்டணம் திரும்பக் கிடைப்பதில்லை. தொழிற் கல்லூரி சேர்க்கைகளால் காலம் கடந்து கலைக் கல்லூரிகளில் ஏற்படும் காலி இடங்களை நிரப்ப முடிவதில்லை. இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் புதிய திட்டப்படி, தொழிற்கல்வி நுழைவுத் தேர்வுகள் இந்த ஆண்டில் ஏப்ரல் *29*, மற்றும் *30* ஆகிய நாட்களில் நடத்தப்படும். தொழிற் கல்லூரி சேர்க்கைப் பட்டியல் வெளியிடப்பட்ட .பின்னரே தமிழகம் முழுவதும் உள்ள கலைக் கல்லூரிகளில் முதலாம் ஆண்டு மாணவர் சேர்க்கை தொடங்கப்படும். இதனால், மாணவர்களுக்கு பொருள் இழப்பு தவிர்க்கப்படுகிறது. கல்லூரிகளில் காலி இடங்கள் தோன்றும் நிலையும் தவிர்க்கப்படுகிறது. தொழிற் கல்வியில் மாணவர்கள் சேர்க்கை இவ்வாண்டு முதல் தமிழக கல்வி வரலாற்றில் இதுவரை கண்டிராத வகையில், *2* மாதங்கள் முன்பாகவே, தொடங்கப்படுவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. இந்தத் திட்டத்தை அறிவித்து, இதை நடைமுறைப்படுத்த ஆணையிட்ட மாண்புமிகு தமிழக முதல்வர், புரட்சித் தலைவி அவர்களுக்கும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்தில் *43* சுயநிதிப் பொறியியல் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகளில் அனுமதிக்கப்படும் மாணவர்களிடம் இரண்டு வகையான கட்டணங்கள் வசூலிக்கப்படுகின்றன. அரசு ஒதுக்கீடு செய்யும் குறைந்த கட்டண இடங்களுக்கு செலுத்த வேண்டிய தொகை *6,500* ரூபாய். அதிகக் கட்டணம் செலுத்தும் இடங்களுக்கு செலுத்த வேண்டியது ரூ. *32,500*. இந்தக் கட்டண விகிதங்கள் அதிகம் என்றும், ஒரு சில சுயநிதிக் கல்லூரிகளில் இவ்வளவு அதிகமான கட்டணங்கள் வசூலிக்கப்பட்டும் அடிப்படை வசதிகள் அமைக்கப்படவில்லை என்றும், அரசுக்கு பல்வேறு முறையீடுகள், மாணவர்கள், பெற்றோர்களிடமிருந்து வந்த வண்ணம்

இருக்கின்றன. இது தொடர்பான ஒரு வழக்கின் முடிவையொட்டி உச்ச நீதிமன்றம் தெரிவித்த கருத்தின் அடிப்படையில் அகில இந்திய தொழில் நுட்பக் கல்விக் குழு, மாநில அளவிலான குழுவை நியமிக்க வேண்டும் என்றும் தெரிவித்தது. இந்தப் பின்னணியில், அகில இந்திய தொழில் நுட்பக் குழுவும், தமிழக அரசும் கலந்து ஆலோசித்து மாநில அளவில் பாரதியார் பல்கலைக் கழக துணை வேந்தர் அவர்களின் தலைமையில் ஒரு குழு அமைத்துள்ளது. இக்குழு, கோவை, சென்னை, திருச்சி முதலிய நகரங்களுக்கு வருகை புரிந்து மாணவர், பெற்றோர் பொதுமக்கள், சுயநிதி பொறியியல் கல்லூரி நிர்வாகிகள், ஆகியோரை நேரில் சந்தித்து கருத்துக்களைப் பெற்றது. ஏழை மற்றும் நடுத்தர வகுப்பைச் சேர்ந்த மாணவ மாணவியர் சிரமமின்றி கட்டணம் செலுத்தி, கல்வி பெறும் வகையில் நியாயமான கட்டணத்தை நிர்ணயம் செய்ய இந்தக் குழு பரிசீலித்து வருகிறது. ஏழை எளிய குடும்பங்களின் வாழ்வில் ஒளியேற்ற சபதம் ஏற்று இருக்கும் தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு மேற்கண்ட குழுவின் அறிக்கை பெற்றதும், சுயநிதி பொறியியல் கல்லூரிகளுக்கு நியாயமான கட்டணம் நிர்ணயம் செய்ய ஆணை வெளியிடும்.

உண்மையிலேயே சிறுபான்மை இனத்தைச் சார்ந்த கல்வி நிறுவனங்களுக்கு அளிக்கப்படும் சலுகைகளை ஒரு சில தகுதியற்ற கல்வி நிறுவனங்கள் தவறாக அனுபவித்து வந்தன. இதனால் தகுதி வாய்ந்த மாணவர்களுக்கு அளிக்கப்பட வேண்டிய கல்லூரி இடங்கள் அதிகக் கட்டணத்திற்கு குறைவான மதிப்பெண்கள் பெற்றவர்களுக்கு அந்தந்த சுயநிதிக் கல்லூரிகளால் சட்டவிரோதமாக விற்கப்படும் நிலை இருக்கிறது என்ற புகார்கள் பெறப்பட்டன. இந்திய உச்ச நீதிமன்றம் இது தொடர்பான வழக்கு ஒன்றில் வழங்கிய தீர்ப்பில், சிறுபான்மை நிறுவனம் என அறிவிக்கும் அதிகாரம் இனி மாநில அரசுக்கு மட்டும் உண்டு என்று தெளிவாகக் கூறியிருக்கிறது. இத்தீர்ப்பின் அடிப்படையில் சிறுபான்மை கல்வி நிறுவனங்கள் என்ற தகுதியை வழங்க விதிமுறைகளை வரையறுத்திட மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களது ஆணைக்கு ஏற்ப, குழு ஒன்று அமைக்கப்பட்டது. அந்தக் குழுவின் அறிக்கையைப் பெற்று அரசு விரிவாக ஆய்வு செய்து வருகிறது. இனிமேல், மதம், மற்றும் மொழி வாரியாக சிறுபான்மைக் கல்வி நிறுவனங்களுக்கு தகுதி அடிப்படையில் மட்டுமே அரசு அனுமதி வழங்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஃப்பீரிஸ்கூல் டீச்சர் என்ற சான்றிதழைப் பெற்றவர்கள், இடைநிலை ஆசிரியர்களாக தேர்வு செய்யப்பட தகுதியில்லாதவர்கள் என்று நீதிமன்றம் தீர்ப்பு அளித்த காரணத்தால், தற்போது நடைபெறும் ஆசிரியர்கள்

தேர்வில், அவர்கள் இடம் பெற இயலவில்லை. அந்த வகையைச் சேர்ந்தவர்கள் தமிழ்நாட்டில் சுமார் 2,000 பேர்கள் மட்டுமே இருக்கிறார்கள். தற்போது இதற்கான பாடப்பிரிவும் நிறுத்தப்பட்டுவிட்டது. எனவே, இவர்களுக்கு வாய்ப்பு அளிக்கும் வகையிலே, அவர்களை குறைந்த கல்வித் தகுதி பெற்றவர்களாகக் கருதி, இடை நிலை ஆசிரியர் பணி நிலைக்கும் கீழாக புதியதாக ஒரு பணி நிலையை உருவாக்கி, ஒன்று மற்றும் இரண்டாம் வகுப்புகளுக்கு மட்டும் கற்பிக்கும் வகையில், அவர்களை பணி அமர்த்த மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு நடவடிக்கை எடுக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாட்டில் தொடக்கக் கல்வி, பள்ளிக் கல்வி, கல்லூரிக் கல்வி மற்றும் தொழில்நுட்பக் கல்வி ஆகிய துறைகளில் அரசு மற்றும் தனியார் கல்வி நிறுவனங்களில் பல்வேறு பணி நிலையில் பணியாற்றும் ஆசிரியர்களும் கல்விசாராப் பணியாளர்களும் தங்களது கோரிக்கைளை அவ்வப்போது அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அவர்களது கோரிக்கைகளில் பலவற்றில் உள்ள நியாயத்தின் அடிப்படையில், அரசின் நிதி நிலை அடிப்படையிலும் அரசு கனிவோடு பரிசீலித்து வருகிறது. ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர் அல்லாப் பணியாளர்களுக்கு உள்ள தனிப்பட்ட பிரச்சினைகளுக்கு உடனுக்குடன் தீர்வு காணும் வகையில், குறை தீர்க்கும் பிரிவுகள் கிரிவன்ஸ் செல் முறைப்படுத்தப்பட்டு சிறப்புடன் செயல்படவும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பரமக்குடியில் அமைக்கப்பட இருப்பது கோ-எஜுகேசன் கல்லூரி என்பதை இங்கே திருத்தமாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

*பிற்பகல் 5-50*

இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் கல்வி வளர்ச்சிப் பணிகளுக்கு உறுதுணைபுரிந்து ஒத்துழைப்பு நல்கும் வகையில் கல்வி நிலையங்களில் அமைதியைப் பாதுகாத்து, தமிழக கல்வி வளர்ச்சிப் பணிகளில் முழுமையாய் தங்களை ஈடுபடுத்திக் கொண்ட தமிழகத்திலுள்ள அனைத்து நிலை பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பணியாற்றும் ஆசிரியப் பெருமக்களுக்கும், கல்வித் துறை பணியாளர்களுக்கும் என் அகம் கனிந்த நன்றியையும், இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் சார்பில் அவர்களது பாராட்டுகளையும் தெரிவிக்கிறேன். இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் சார்பில் கல்வித் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி, இந்திய அளவில் தமிழகத்தின் பெருமையை நிலைநாட்டி வரும் தமிழக கல்வித் துறையின் செயலாளர், கூடுதல் செயலாளர், தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத் துறை செயலாளர், இணைச் செயலாளர், துணை மற்றும்

1995 ஏப்ரல் 27] [பேராசிரியர் க. பொன்னுசாமி]

சார்புச் செயலர்களுக்கும் துறையில் பல்வேறு இயக்குநர் பெருமக்கள் மற்றும் அலுவலர்கள் அனைவருக்கும் எனது மனம் கனிந்த நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் இங்கே வெட்டுத் தீர்மானங்களைத் தந்திருக்கிறார்கள். புதிய அரசுப் பள்ளிகள் கேட்டும், தொடக்கப்பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக, நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக, உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக மேம்படுத்தவும், புதிய கல்லூரிகள் ஏற்படுத்தவும், பள்ளிகள், கல்லூரிகளுக்கு புதிய கட்டிடங்கள் கேட்டும், கூடுதல் கட்டிடங்கள், கழிப்பிட வசதிகள் குடிநீர் வசதி, விளையாட்டுத்திடல் போன்ற அடிப்படை வசதிகள் வேண்டியும், பள்ளிகளில் ஆசிரியர் பற்றாக்குறையை நீக்குவது குறித்தும், மொழிப் போராட்ட தியாகிகளுக்கும், எல்லைப் போராட்டத் தியாகிகளுக்கும் வழங்கப்படும் உதவித் தொகையை அதிகரிக்க வேண்டியதன் அவசியம் குறித்தும், மற்றும் இதுபோன்ற கோரிக்கைகளை வலியுறுத்தியும் மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிற மாண்புமிகு உறுப்பினர்களின் உணர்வுகளை இந்த அரசு மதிக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்களின் வெட்டுத் தீர்மானங்களுக்கு உரிய விளக்கங்கள் என்னுடைய பதிலுரையில் கிடைத்திருக்கும் என நம்புகிறேன். ஏதேனும் விடுபட்டிருப்பின் மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்துள்ள கருத்துகளின் அடிப்படையில் அரசு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் மானியக் கோரிக்கை எண் 17 மற்றும் தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத் துறையின் மானியக் கோரிக்கை எண் 51 ஆகியவற்றை நிறைவேற்றித் தருமாறு அன்புடன் வேண்டிக் கொள்கிறேன். எனக்கு இந்த வாய்ப்பினைத் தந்த மாண்புமிகு இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் எனது நன்றியைத் காணிக்கையாக்கி, அமைகிறேன், நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

## (அ) கோரிக்கை எண் 17- கல்வி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம்: இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சிங்காரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஜி. பழனிசாமி அவர்கள் தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. வே. தம்புசாமி அவர்கள் தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. வே. தம்புசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வே. தம்புசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"கல்வி பற்றிய 17-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 2233,16,97,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்" என்னும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்..

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்கு கோரிய தொகை வழங்கப்பெறுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இது வரையிலும் கோரிய மானியங்களிலே அதிகமான தொகை கல்வித்துறைக்குத்தான் வழங்கப்படுகிறது.

## (ஆ) கோரிக்கை எண் 51-தமிழ் வளர்ச்சி-பண்பாடு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு.ஆர்.சிங்காரம்.

**திரு. ஆர். சிங்காரம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சிங்காரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 51-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 10,33,03,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்" என்னும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்கு கோரிய தொகை வழங்கப்பெறுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) வாழ்த்துக்கள்.

## (இ) கோரிக்கை எண் 29 – சமூகநலன்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த மானியக் கோரிக்கையின் மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 29 - சமூக நலன். மாண்புமிகு சமூகநலன் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

* **மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

" சமூகநலன் பற்றிய 29-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 507,64,03,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத்தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2231. திரு. ஆர். சிங்காரம்.

**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சத்துணவுத் திட்ட அமைப்பாளர்களையும் ஊட்டச் சத்து அமைப்பாளர்களையும் முழு நேர அரசு ஊழியர்களாக்கி உரிய சம்பளம் தருவது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூகநலன் குறித்த 29-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.507,64,03,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு சமூகநலன் மற்றும் கைத்தறித் துறை அமைச்சரவர்கள் தன்னுடைய முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். ஏதேனும் சத்துணவு உறுப்பினர்களுக்கு வழங்குவதாக இருந்தாலும் வழங்கலாம்.

பிற்பகல் 5-55

**மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு அவைமுன் வைக்கப்பட்டுள்ளன. இதில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்பினை @ நான் இந்த

---

@ 659 முதல் 744 வரையிலான பக்கங்களில் இணைப்பு III-ஆக அச்சிடப் பெற்றுள்ளது)

அவையில் படித்ததாக இந்த அவைக் குறிப்பிலே ஏற்றிக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்களின் மேலான யோசனைகளுக்குப் பின் என்னுடைய பதிலுரையை அளிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏதேனும் சத்துணவு வழங்குகிறீர்களா? *(சிரிப்பு)*

**மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதியம் சத்துணவு வழங்கப்பட்டது. இப்போது மாலையும் ஊட்டச் சத்து வைக்கப்பட்டிருக்கிறது. *(சிரிப்பு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஊட்டச் சத்து என்று சொன்னதும் உடனே பழனிசாமி அவர்கள் போகிறார்கள். *(சிரிப்பு)* விவாதம் தொடங்குகிறது. திருமதி ஜீனத் சர்புதீன்.

**திருமதி ஜீனத் சர்புதீன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, 1995-96-ஆம் ஆண்டிற்கான சமூக நலத்துறை மானியத்தின் கீழ் பேச வாய்ப்பு தந்தமைக்கு தங்களுக்கு என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் காணிக்கையாக்குகிறேன். சமூக நீதி காத்த வீராங்கனை அவர்கள் சமூக நலத்துறையிலும் அக்கறை காட்டி 507 கோடிக்கு மேல் பாரி வள்ளலுக்கு மேலாக வாரி வழங்கியிருக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட தலைவி அவர்களை நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். ஏனென்றால் கையில் காசு இல்லாதவனை கடவுள் ஆனாலும் கதவைச் சாத்து என்று சொல்லுகிற காலத்தில் வருமானமே இல்லாத இந்தத் துறைக்கு இவ்வளவு தொகையை வாரி வழங்கியிருக்கிறார்கள் என்றால், அது அவர்களுடைய உண்மையான தாய்ப் பாசத்தையும் இந்தச் சமூகத்தின் மேல் கொண்டுள்ள அக்கறையையும் தான் காட்டுகிறது. ஏனென்றால் கொண்டு வந்தால் சகோதரி, கொண்டு வந்தாலும் வராவிட்டாலும் தாய் என்று சொல்லுவார்கள். மதுரை மீனாட்சியே அதிக சீர் கேட்டதாக அவர்களுடைய அண்ணன் சொன்னதாக ஒரு கதை இருக்கிறது. சொக்கன் சொன்னாராம், "மானாமதுரை விற்றேன், மதுரையிலே பாதி விற்றேன், தல்லா குளமும் கொடுத்தேன், தங்கச்சி மீனாவுக்கு ஆனால் இன்னும் காணலியே அவளுக்கு" என்று சொன்னானாம். அந்தக் காலத்திலேயே அப்படி இருந்திருக்கிறது. கொண்டு வந்தாலும் வராவிட்டாலும் தாய் தாய்தான். ஆகையினால்தான் நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் உண்மையான தாய்ப் பாசத்தோடு 507 கோடி ரூபாயை வாரி வழங்கியிருக்கிறார்கள் என்றால் அதைப்பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

1995 ஏப்ரல் 27] [திருமதி ஜீனத் சர்புதீன்]

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஊனம் உற்றோர் மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ் நம்முடைய மாநிலம் முன்னோடி மாநிலமாக இருக்கிறது. பாரதத்தில் உள்ள எல்லா மாநிலங்களைக் காட்டிலும் நம்முடைய மாநிலத்தில்தான் ஊனம் உற்றோர்களுக்காகச் சிறு வயதிலிருந்தே ஊனத்தின் காரணம் என்ன என்று கண்டு பிடித்து, சிகிச்சை அளித்து அவர்களுக்குத் தொழில் செய்ய பணமும் கொடுத்து கடன் உதவியும் செய்கிற திட்டத்தைச் செய்ததால் தான் நம் பாரதத்தில் உள்ள அத்தனை மாநிலங்களைக் காட்டிலும் முன்னோடியாக இருந்து கொண்டிருக்கிறோம். மகத்தில் பிறந்து ஜகத்தை ஆண்டு கொண்டிருக்கும் நம்முடைய மங்கல நாயகி, மங்கையர்க்கரசி (மேசையைத் தட்டும் ஒலி) மாண்பு உடைய தலைவி அவர்களுடைய ஆட்சியில் மகளிருடைய மேம்பாட்டிற்காகப் பலப் பல நல்ல நல்ல திட்டங்களை எல்லாம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். உதாரணத்திற்கு ஒன்றிரண்டை மட்டும் சொல்ல விரும்புகிறேன். உதாரணமாக தையல் கூட்டுறவு சங்கங்கள், காலணி தயாரிக்கும் சங்கங்கள், இறால் ஊறுகாய்கள் தயாரிக்கும் கூட்டுறவுச் சங்கங்கள் என்று இப்படி பல கூட்டுறவு சங்கங்களை ஏற்படுத்தி பெண்களுக்குச் சுய வேலை வாய்ப்பு கொடுத்து அவர்களுக்கு அவர்களுடைய காலிலேயே நிற்கும்படி பொருளாதாரத்தில் தனித்து நின்று யாருக்கும் அஞ்சாமல் துணிச்சலுடன் அவர்கள் நன்றாக இருக்க வேண்டும் என்பதற்காக நம்முடைய புரட்சித்தலைவி அவர்கள் இவற்றைச் செய்திருக்கிறார்கள். புரட்சித் தலைவியின் ஆணையைச் சிரமேற்கொண்டு நம்முடைய சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள் அதைச் செம்மையாகவும் சீரோடும் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகையால் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். அது மட்டும் அல்ல, எத்தனையோ அகதிகள் இருக்கிறார்கள். கணவனால் கைவிடப்பட்டவர்கள், தாய் இல்லாதவர்கள், தந்தை இல்லாதவர்கள், வீட்டை விட்டு ஓடிவந்தவர்கள் என்று இவர்களுக்கெல்லாம் டெஸ்டியூட் ஹோம், ஷார்ட் ஸ்டே ஹோம் என்று வைத்திருக்கிறார்கள். அது தவிர 30 சதவீதம் பெண்களுக்கு எல்லாத் துறைகளிலும் வழங்கிவிட்டோம். வேலை செல்லும் பெண்களுக்கு என தங்குவதற்கு இடம். எல்லாப் பெண்களுக்கும் அவரவர்கள் சொந்த ஊரிலேயே வேலை பார்க்க முடியாது. பட்டணங்களில்தான் அதிக வேலை இருக்கும். பட்டணங்களுக்கு வந்து வேலை செய்து விட்டு திரும்புபவர்களுக்கு வீடு கிடையாது. ஆகையினால் அவர்கள் பாதுகாப்பாக இருப்பதற்காகவும் நல்ல உணவு உண்ணுவதற்காகவும் வொர்க்கிங் வுமன்ஸ் ஹாஸ்டல் ஏற்படுத்தியிருக்கிறார்கள். நம்முடைய அரசாங்கம் நம்முடைய மாநிலத்தில் கிட்டத்தட்ட 8 வொர்க்கிங் வுமன் ஹாஸ்டல்களை நடத்திக் கொண்டிருக்கிறது. இது தவிர தொண்டு நிறுவனங்கள் மூலமாக

[திருமதி ஜீனத் சர்புதீன்] [1995 ஏப்ரல் 27

*1994*-லிருந்து *1995* வரைக்குள்ளாக *64* வொர்க்கிங் வுமன் ஹாஸ்டலை ஏற்படுத்தித் தந்திருக்கிறார்கள். அதற்கு நான் முழுமனதாக நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களையும், நம்முடைய அமைச்சர் அவர்களையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். எல்லாவற்றிற்கும் மேலாக, *1947*-ஆம் ஆண்டிலிருந்து *1991*-ஆம் ஆண்டு வரைக்கும் எத்தனையோ முதலமைச்சர்கள் வந்தார்கள். அவர்கள் யாருமே பெண் சிசுக் கொலையைப் பற்றி நினைத்ததேயில்லை. ஒருவேளை, அவர்கள் எல்லாம் ஆண் முதலமைச்சராக இருந்ததினால் அப்படி நினைக்கவில்லையோ என்ற சந்தேகம் கூட எனக்கு எழுகிறது. அதற்காக, இங்கு இருக்கும் ஆண்கள் யாரும் என்மேல் கோபப்பட வேண்டாம் என்று மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். நம்முடைய முதலமைச்சர் வந்த பிறகுதான் இதற்கு ஒரு தீர்வு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரிகள் துறை அமைச்சர்.

பிற்பகல் *6.00*

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மட்டும் ஆண்கள் முதலமைச்சராக இருந்திருக்கவில்லை. இந்திய நாடு முழுவதும், பல பேர், ஆண்களும், பெண்களும் முதலமைச்சராக இருந்திருக்கிறார்கள். உலக நாடு பூராவும் ஆண், பெண் எத்தனையோபேர் ஆட்சியில் இருந்திருக்கிறார்கள். இந்தச் சிந்தனை புரட்சித் தலைவி பெண் முதல்வர் என்ற காரணத்தினால் மட்டும் வரவில்லை. புரட்சித் தலைவி அவர்கள் உலகிலேயே தலைசிறந்த சிந்தனைவாதி, மனிதாபிமானவாதி என்பதால் அவருக்கு இந்தச் சிந்தனை ஏற்பட்டிருக்கிறது.

திருமதி ஜீனத் சர்புதீன்: உலகத்திலேயே மிகச் சிறந்த சிந்தனைச் சிற்பி என்பதாலும், பெண்களாக இருப்பதால்தான் என்று நான் ஆணித்தரமாக எடுத்துச் சொல்வேன். ஏனென்றால் நாங்களெல்லாம், ஒரே பெண்குலத்தைச் சேர்ந்தவர்கள். எங்களுடைய அமைச்சரவர்களும் பெண்குலத்தைச் சேர்ந்தவர்கள். ஆகையால், எங்களுக்குத்தான் அதிகமான உரிமையுண்டு. அதை நான் நிலைநாட்டத்தான் செய்வேன். தொட்டில் குழந்தை திட்டத்திற்காக, பெண் சிசுக் கொலையை நிறுத்துவதற்காக, தொட்டில் குழந்தைத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அந்தத் திட்டத்தைக் கொண்டுவந்து விட்டு, சும்மா அப்படியே வைத்துவிடவில்லை. அந்த சிசுக் கொலையைச் செய்வதற்கு, அதனுடைய ரூட் காஸ் என்ன என்பதை ஆராய்ந்து, அதை முழுமையாகக் களைந்து எறிய வேண்டும் என்பதற்காக, எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், சோஷியல் வெல்பேர் போர்டு மெம்பர்கள், அலுவலர்கள், எல்லோரையும் சேலத்திற்கு அனுப்பினார்கள். அதில் நானும், சங்ககிரி சட்டமன்ற உறுப்பினர்

1995 ஏப்ரல் 27] [திருமதி ஜீனத் சர்புதீன்]

திருமதி சரோஜா அவர்களும் சென்றிருந்தோம். அங்கு சென்று மகா ஜனங்களே என்றெல்லாம் மீட்டிங் போடாமல், அந்த அந்தக் கிராமங்களுக்குச் சென்று, அவர்களை அணுகி, ஏன் இப்படி நடக்கிறது, எதற்காக இப்படிச் செய்கிறீர்கள், எப்படிச் செய்கிறீர்கள் என்றெல்லாம் கண்டறிந்தோம். வீட்டுக்காரர்கள் மிகவும் கொடுமைப்படுத்துவதாகவும், குடித்துவிட்டு வந்து அடிப்பதாகவும், எங்களுடைய பெண் குழந்தைகளும், இப்படி அவர்களுடைய வீட்டுக்காரர்களிடம் கஷ்டப்பட வேண்டுமா என்றும் சொன்னார்கள். இது ஒரு காரணம். இரண்டாவது காரணம் என்னவென்றால், எல்லோரும் பெண்களைக் கல்யாணம் பண்ணிக் கொள்வதற்கு நிறைய காசு கேட்கிறார்கள். பெண்கள் கல்யாணம் பண்ணிக்கொள்ள முடியாமல் போய்விடுகிறது. இதற்குக் காரணம் பொருளாதார நிலைமைதான். அவர்களுடைய பொருளாதார நிலைமையைச் சரி செய்ய வேண்டும் என்பதற்காக, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அங்கு சேலத்திலுள்ள மக்களுக்கு சுயவேலைவாய்ப்புத் திட்டத்தை சமூகநலத் துறையின் மூலமாகவும், கூட்டுறவுத் துறையின் மூலமாகவும் ஏற்படுத்திக்கொடுத்தார்கள். நாங்கள் 10,15 கிராமங்களுக்குச் சென்றிருந்தோம். அங்குள்ள மக்கள் பட்டுப்பூச்சி வளர்ப்பது, விவசாயத்தை கூட்டுறவு முறையில் செய்வது, ஆடு மாடு வளர்ப்பது, கோழி வளர்ப்பது, இத்தொழில்களைச் செய்து நல்லமுறையில் பொருளீட்டிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் எப்படி அந்த சிசுக் கொலைகளைச் செய்தார்கள் என்பதையும், சொல்லி காண்பித்தார்கள். குழந்தை பிறந்தவுடன் பாலில் எருக்கம்பாலைக் கலந்து கொடுத்துவிடுவது ஒரு முறை. இரண்டாவது முறையில், முனை முறியாத நெல்லை பாலில் கலந்துகொடுக்கும்போது குழந்தை இறந்துவிடுமாம். மூன்றாவது முறைதான் மிகக் கொடுமையாக இருந்தது. குழந்தையின் முகத்தில் ஈரத் துணியைப் போட்டு, அதைத் தலையணையில் வைத்து அப்படியே அமுக்கிக் கொன்றுவிடுவார்களாம். இவற்றையெல்லாம் கேட்டபொழுது, எங்களுக்குக் கஷ்டமாக இருந்தது. இவற்றையெல்லாம் ஸ்டாடிஸ்டிக்ஸ் தயாரித்து, நம்முடைய மாண்புமிகு அமைச்சரிடத்தில் கொடுத்தேன். அதன்பிறகுதான், அவர்கள் அவர்களுடைய பொருளாதார நிலையை உயர்த்த வேண்டும் என்று கருதி, சமூக நலத் துறையின் மூலமாக நல்ல பல காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். என்னுடைய தொகுதியைப் பொறுத்த மட்டில் எதுவும் குறையில்லை என்று நினைக்க வேண்டாம். குறைகள் அவ்வப்போது வரும். நான் இந்த ஊரிலேயே இருக்கிறதினாலே, அப்போதைக்கப்போதே அமைச்சரிடத்தில் சென்று அதை நிவர்த்தி செய்து விடுவேன்.

அடுத்ததாக, ஊட்டச்சத்து, சத்துணவு இவையெல்லாம் நிறைய இருக்கிறது. நீங்கள் நாட்டுப்புறத்திற்கு மட்டும் கொடுக்கீறீர்கள். எங்கள் ஊரிலும், ஸ்லம் ஏரியாவிலும் கொஞ்சம் ஊட்டச் சத்துக் கொடுத்தீர்கள்

என்றால், என் ஜனங்களும் நன்றாக இருப்பார்கள். அதனால், என் ஜனங்களுக்கும் வேலைவாய்ப்புத் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எனக்கு இரண்டே இரண்டு சந்தேகம். மக்கள் நல்வாழ்வுத்துறையிலே ஒரு மருந்தை வாங்கினபொழுது *90* ரூபாய்க்கு வாங்கினதாகவும் அதே மருந்தை சமூக நலத்துறையிலே வாங்கியபொழுது, அதையே *140* ரூபாய்க்கு வாங்கினதாகவும் சொல்கிறார்கள். இது உண்மையா? அல்லது உண்மைக்குப் புறம்பானதா என அறிய விரும்புகிறேன்.

*பிற்பகல் 6.05*

**மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி:** துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்த அவையில் அதைப்பற்றி கேட்கப்பட்டு நான் தெளிவான பதில் கொடுத்திருக்கிறேன். ஹெல்த் டிப்பார்ட்மெண்ட் வாங்கிய மருந்தை ஒருங்கிணைந்த ஊட்டச் சத்து திட்டத்திற்காக உலக வங்கியின் மூலமாக எங்களுடைய சமூக நலத்துறை பெறுகிறது என்று சொன்னால் உலக வங்கி டெண்டர் முறையில் அந்த மருந்துகளைப் பெற வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் டெண்டர் விடுகிறோம். டெண்டரிலே பல கம்பெனிகள் கலந்துகொள்கிறார்கள். அப்படிக் கலந்து கொள்கின்றபோது அந்த டெண்டரிலே போடுகின்ற மருந்துகளுடைய விலைகளில் அந்த மருந்தை யார் குறைவான விலை போடுகிறார்களோ அந்த குறைவான விலை போட்டவர்களுக்குத்தான் டெண்டர் கொடுக்க முடியும். ஹெல்த் டிப்பார்ட்மெண்டிலே அவர்கள் டெண்டர் விட்டால் அந்த டெண்டர் விட்டவர்களைக் கூப்பிட்டுப் பேசமுடியும். அதற்கு சட்டத்திலே இடம் இருக்கிறது. அதற்கு துறைக்கு அதிகாரம் இருக்கிறது. அது தமிழகத்திலே வாங்கக்கூடிய மருந்துகள். ஆனால் உலக வங்கித் திட்டத்திலே டெண்டர் விட்டால் அதைக் கூப்பிட்டுப் பேச முடியாது. அவர்களோடு நெகோஷியேட் பண்ண முடியாது. ஆகவே உலக வங்கியினுடைய நிதியில் டெண்டர் விட்டால் அவர்கள் என்ன விலை போடுகிறார்களோ அதிலே எந்த விலை குறைவாக இருக்கிறதோ அந்த விலைக்கு அப்படியே வாங்கியாக வேண்டும். அதிலே எந்தவித மாறுதலையும் எங்களுக்குச் செய்வதற்குரிய அதிகாரம் கிடையாது. இன்னொன்றையும் நான் சொல்ல விரும்புகிறேன். நாங்கள் *145* ரூபாய்க்கு வாங்கிவிட்டோம் .வாங்கிவிட்டோம் என்று சொல்கிறார்கள். அதே மருந்தை, நாங்கள் *145* ரூபாய்க்கு வாங்கிய மாத்திரையை ஐ.டி.பி.எல். மத்திய சர்க்காருடைய நிறுவனம் ஜாயின்ட் செக்டார் அந்த கம்பெனி *186* ரூபாய்க்கு போட்டிருந்தது. அந்த *186* ரூபாய்க்கு போட்டிருந்த மருந்தை நாங்கள் வாங்கவில்லை. *145*-க்குக் குறைவான விலைக்குத்தான் வாங்கியிருக்கிறோம். நாங்கள் இவர்களைக் கூப்பிட்டுப் பேசமுடியும் என்று சொன்னால் அதற்கு இடம் கிடையாது. நெகோஷியேட் செய்ய

1995 ஏப்ரல் 27] [திருமதி இரா. இந்திரகுமாரி]

முடியாது. அவர்களோடு நாங்கள் பேச்சு வார்த்தை நடத்த முடியாது இந்த டெண்டர்கள் அனைத்தும் உலக வங்கிக்கு அனுப்பப்படுகிறது. இதிலே முறைகேடு இருந்தால் இதுவரை இதிலே ஏதாவது தவறு நடந்திருக்குமானால் உலக வங்கி உடனடியாக அதை ரத்து செய்திருக்கும். அதற்குப் பின்னாலே இந்த மருந்தை வாங்க முடிந்திருக்காது. ஆனால் உலக வங்கி இந்தியாவிலேயே முறையாக மருந்து வாங்கப்படுகிற இடம் தமிழகம்தான் என்பதைப் பாராட்டியிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

திருமதி ஜீனத் சர்புதீன்: துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் விளக்கத்திற்கு நன்றி, ஏனென்றால் இப்படி அனாவசியமாகப் பேசுகிறவர்களுக்கு நான் பதில் சொல்லும்போது சாட்டையடிபோல் பதிலுரைக்க எனக்குச் சாதகமாக இருக்கும். அதற்காக மறுமுறையும் நன்றி சொல்லிக் கொள்கிறேன். அடுத்தப்படியாக சத்துணவுப் பணியாளர்கள் 2, 3 நாளைக்கு முன் வேலை நிறுத்தம் செய்திருந்தார்கள். ஆனால் சென்னையைப் பொறுத்த வரையில் எந்தச் சத்துணவு கூடத்திலும் குழந்தைகள் சத்துணவு சாப்பிடாமல் போகவில்லை. எல்லா சத்துணவு கூடங்களிலும் சத்துணவு போடப்பட்டது. மற்ற ஊர்களில் எப்படி விவரம் என்று எனக்குத் தெரியவில்லை. அதையும் அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சத்துணவில் 2½ இலட்சம் பணியாளர்கள் பணியாற்றுகிறார்கள். இதில் ஒரு சில கட்சிகளைச் சேர்ந்த சங்கங்கள் இந்தப் போராட்டங்களை நடத்தி சத்துணவுக் கூடங்களைப் பூட்டிவிடுவோம் என்று சொல்லி அறிவித்தார்கள். ஆனால் ஒரு இடத்திலேகூட சத்துணவுகூடம் பூட்டப்பட்டு குழந்தைகளுக்கு உணவு அளிக்காமல் இல்லை. எல்லா இடங்களிலேயும் இந்தப் போராட்டம் நடத்தினாலும் இதிலே மிகக் குறைவாக கலந்து கொண்டார்கள். எல்லா இடங்களிலேயும் பணியாளர்கள் ஒழுங்காக சத்துணவுக் கூடங்களைத் திறந்து வைத்து உணவு வழங்கினார்கள். சில இடங்களிலே பூட்டியிருந்ததையும் உடைத்து அங்கேயும் அரசு அதிகாரிகளாலே சத்துணவு வழங்கப்பட்டிருக்கிறது. எந்த இடத்திலேயும் நிறுத்தப்படவில்லை. *(மேசையைத் தட்டும் ஒலி)*

திருமதி ஜீனத் சர்புதீன்: துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி. இந்தத் துறையை மிகச் சீராகவும், சிறப்பாகவும் நடத்திச் செல்லும் எங்களுடைய இதயம் கவர்ந்த

இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கும், புரட்சித் தலைவி அவர்களின் ஆணையைச் சிரமேற்கொண்டு செம்மையாக இந்தத் துறையை நடத்தி சென்று கொண்டிருக்கும் எங்களுடைய அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் காணிக்கையாக்கி அமர்கிறேன். வணக்கம்.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:* டாக்டர் ச. ஆரோக்கியசாமி.

*டாக்டர் ச. ஆரோக்கியசாமி:* பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆண்டவருடைய ஆவி என் மேலே ஏனெனில் என்னை அவர் அபிஷேகம் செய்துள்ளார். எளியோர்க்கு நற்செய்தி சொல்லவும் ஒடுக்கப்பட்டோருக்கு விடுதலை வழங்கவும், சிறைபட்டோர் விடுதலை அடையவும் குருடர் பார்வை பெறவும் அவர் என்னை அனுப்பினார் என்ற நற்செய்தி வாக்குக்கு ஒப்ப இன்றைக்கு ஒடுக்கப்பட்ட மக்களுக்காகக் கண்ணீர் சிந்துகின்ற மக்களுக்காக உழைக்கின்ற என்னுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களை வணங்கி இந்த மானியத்தின் கீழ் பேச விழைகிறேன். சமூக நலத்துறை சார்பிலே 507 கோடியே 64 இலட்சம் ரூபாய் இன்றைக்கு ஒதுக்கீடு செய்திருக்கின்ற இதய தெய்வத்திற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

*பிற்பகல் 6.10*

மாண்புமிகு புரட்சித் தலைவியின் புனித ஆட்சியில் ஈடுபாட்டோடு சிறப்பாகச் செயல்படும் மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்களுக்கு எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். திருச்சி நகரத்தில் தெருக்களில் சுற்றித் திரியும் சிறுமிகளுக்கும், சிறுவர்களுக்கும் தங்கும் இல்லங்கள் ஏற்படுத்த தொகை ஒதுக்கிய புரட்சித் தலைவிக்கு இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் திருச்சி மாநகரத்தில் குறிப்பாக எனது தொகுதியில் உள்ள சத்துணவுக் கூடங்களில் 11 மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளன. சிறப்பாகச் செயல்படும் மாண்புமிகு புரட்சித் தலைவியின் அன்புக்குரிய சகோதரி மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் இந்த சத்துணவுக் கூடங்களைப் புதுப்பிக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். திருச்சியில் மகளிர் தையல் கூட்டுறவு சங்கம் ஒன்று உள்ளது. அதன் தனி அதிகாரி ஆணாக இருக்கிறார். அதனை மாற்றி பெண் அலுவலரை நியமனம் செய்யவேண்டும் என்று சென்ற ஆண்டும் இதே மா மன்றத்தில் நான் கேட்டுக் கொண்டேன், அதைப்போல் அந்த அதிகாரியை பெண் அதிகாரியாக அந்த இடத்திலே போடும்படி அன்போடு நான் கேட்டுக் கொள்கிறேன்.

1995 ஏப்ரல் 27] [டாக்டர் ச. ஆரோக்கியசாமி]

அதேபோல திருச்சி மாநகரில் ஜனத்தொகையைக் கணக்கில் கொண்டு மேலும் ஒரு தையல் கூட்டுறவுச் சங்கம் பெண்களுக்காக அமைக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஊனமுற்றோர், பார்வையற்றோர், காது கேளாதோர், மனவளர்ச்சி குன்றியோர் ஆகியோர்களுக்கு இதய தெய்வம் புரட்சித் தலைவியின் ஆட்சியில் ஏராளமான உதவிகள் கிடைக்கிறது. அதே நேரத்தில் திருச்சி மாநகரத்தில் உள்ள செர்லைட் சகோதரிகள் நடத்தும் டாலர்ஸ் காது கேளாதோர் உயர் பள்ளிக்கு ஆசிரியர் பணியிடங்களை அரசு அனுமதிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன். சென்ற ஆண்டும் இதே கோரிக்கையை நான் வைத்திருக்கிறேன் என்பதை மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் அவர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

அதேபோல் நாகமங்கலத்தில் உள்ள உடல் ஊனமுற்றோர் பள்ளியாகிய ஜெரிக்கோ உயர்நிலைப் பள்ளியிலும் ஆசிரியர் பணியிடங்களை அரசு அனுமதிக்காமல் உள்ளது. லால்குடி வட்டத்தில் உள்ள 'இன்பெண்ட ஜீசஸ்' ஊனமுற்றோர் பள்ளி ஆகியவற்றிற்கு இந்த ஆண்டிலாவது ஆசிரியர் பணியிடங்களுக்கு அனுமதி வழங்க வேண்டுமென்று நான் மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

உடல் ஊனமுற்றோர் சலுகைக் கட்டணத்தில் பயணம் செய்ய தற்போது வசதி உள்ளது. நன்றி, அதேநேரத்தில் உடல் ஊனமுற்றோர், காது கேளாதோர் ஆகியோருக்கு இலவச பஸ் பாஸ் வழங்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

தொண்டு நிறுவனங்கள் உடல் ஊனமுற்றோரைப் பராமரிக்கும் வகையில் 35 தனியார் சேவை நிறுவனங்களுக்குப் பணம் ஒதுக்கியதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொண்டு நிறுவனங்கள் வளரவும், அதனை ஊக்குவிக்கவும் நமது அரசு மேலும் ஊக்கப்படுத்த வேண்டுமென்று நான் கேடடுக் கொள்கிறேன். உடல் ஊனமுற்றோர், காது கேளாதோர், பார்வையற்றோர் ஆகியோரைப் பராமரிக்கும் தொண்டு நிறுவனங்கள் நிறைய உள்ளன. அவற்றிற்கும் உதவி செய்ய அரசு மேலும் முன்வர வேண்டும். எல்லாத் தொண்டு நிறுவனங்களையும் ஆதரிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியைப் பற்றி ஒருசில கருத்துக்களைச் சொல்ல நான் விழைகிறேன். இன்றைக்கு திருச்சி நகரமானது மாநகராட்சியாக புரட்சித் தலைவி அவர்களால் உயர்த்தப்பட்டிருக்கிறது. அதற்காக என்னுடைய இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். திருச்சி நகரமானது இன்றைக்கு ஜனத்தொகையில் மிகவும் அதிகமாக உள்ள நகரமாகக் காட்சி அளிக்கிறது.

திருச்சி மாநகரைச் சுற்றி அதாவது சுற்றுச் சாலை ரிங்ரோடு அமைக்கப்படவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

திருச்சி நகரத்தில் கரூர் ரோடிலிருந்து திருச்சி ஜங்ஷனை இணைக்கின்ற யூ.என்.டி.பி. சாலைத் திட்டத்தை உடன் நிறைவேற்ற வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

திருச்சி நகரத்தில் உள்ள கழிப்பிடங்களைச் சீர் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மலைக்கோட்டை மல்லிகைப்புரம், கருவாட்டுப்பேட்டை, சூரஞ்சேரி, நத்தர்ஷாப்பள்ளி வாசல், ஒடுக்கட்டாஞ்சேரி ஆகிய கழிப்பிடங்களைப் புதிதாகக் கட்டவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

திருச்சி மாநகரத்தில் உள்ள சத்துணவுக் கூடங்களுக்குச் சரியான கட்டிடங்கள் இல்லாததால் சிரமமாய் உள்ளது. புதிய கட்டிடங்களைக் கட்ட வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒருமுறை நேரில் வந்திருந்தார்கள். ஆனால் இதுவரையில் அந்தக் கட்டிடங்கள் கட்டப்படாமல் இருக்கிறது. அதைக் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனியாக நிதி ஒதுக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருச்சி மாநகரத்திற்கு வந்து செல்கின்ற பஸ்களின் எண்ணிக்கை அதிகமாய் உள்ளதால் புதிய பஸ் நிலையம் டோல்கேட் அருகில் ஏற்படுத்தவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

திருச்சி மாநகருக்கென்று வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்த சிறப்பு நிதியொன்று ஒதுக்கப்படவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதியில் உள்ள அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக மாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

1995 ஏப்ரல் 27] [டாக்டர் ச. ஆரோக்கியசாமி]

பிற்பகல் 6.15

திருச்சி ஜங்ஷன் வழியாக காந்தி மார்கெட் கீழப்புலிவார்டு ரோடு, மேலப்புலிவார்டு ரோடு ஆண்டார் தெருவிலிருந்து மத்திய சத்திரம் பேருந்து நிலையம் வரை புதிய மின் பேருந்து வசதி செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருச்சி நகரத்தின் குறுக்கே ஓடிய வாய்க்கால்கள் சாக்கடைகளாக மாறியுள்ள இந்த நேரத்தில் அவற்றையெல்லாம் தூர் எடுக்க வேண்டும். மாநகரத்திற்குள் போடப்பட்டுள்ள குடிநீர்க் குழாய்களெல்லாம் பிரிட்டிஷ் காலத்தில் போடப்பட்டவை. அவை துருப்பிடித்து கழிவு நீரோடு கலந்து வரும் அபாயம் உள்ளது. ஆகவே, புதிய குடிநீர்க் குழாய்களை அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். திருச்சி மாநகரத்திற்குத் தனியாக மின்விநியோக வட்டம், சிட்டி எலக்ட்ரிசிட்டி சிஸ்டம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்படாத ஜீவா நகர், வசந்த் நகர், பொன்னகர், மிளகுபாறை போன்ற இடங்களில் நிறைவேற்றப்பட வேண்டுமென்றும், திருச்சி, பாலக்கரை டவுன்ஹால் போலீஸ் ஸ்டேஷன்களுக்குப் புதிய கட்டிட வசதிசெய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கம்ப்யூட்டர் வசதியும், நவீன தகவல் தொடர்பு வசதியும் செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாநகரக் காவலர்களுக்குக் கட்டப்பட்டிருக்கிற வீடுகள் பற்றாக்குறையாக உள்ளதால் அவர்களுக்குப் புதிய வீடுகள் கட்டப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பீடித் தொழிலாளர்களுக்கு வீடு கட்டும் திட்டம் திருச்சி மாநகரத்தில் நிறைவேற்றப் படவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பாலக்கரை, இருதயபுரம் தெருவிலேயிருந்து பெரியார் நகருக்குச் செல்லும் குறுக்கு இரும்பு பாலம் பழுதடைந்துள்ளது. அது செப்பனிடப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். திருச்சி மாநகரத்தின் சாலைகள், கப்பியிடப்பட்ட சாலைகள், புதுப்பிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருச்சியிலுள்ள காந்தி மார்க்கெட் பகுதி எப்போதும் நெரிசல் உள்ள பகுதியாக இருப்பதால் புதிய மார்க்கெட் ஒன்றைக் கூடுதலாக ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். திருச்சி மாநகரத்தில் தேவர் அரங்கம் கட்டப்படாமல் இருக்கிறது. அதை உடனடியாகக் கட்ட வேண்டுமென்று சொல்லி, திருச்சி நகரத்திற்கு எழில் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பொய் சாகத்தான் சாகும்; புரட்டு அழியத்தான் அழியும்; மெய் பூத்து, காய்த்து குலை தள்ளும்; அது மென்மேலும் கனிந்து பகை வெல்லும்

என்ற சொல்லுக்கு ஒப்ப, பொய்யை உண்மை வெல்லும்; இருளை ஒளி வெல்லும்: சாவை வாழ்வு வெல்லும்.

"அசதோமார் சத் கமய
தமசோமார் ஜோதிர் கமய
மிருத்யோர்மார் அமிர்தம் கமய"

.பொய்யை உண்மை வெல்லும்; இருளை ஒளி வெல்லும்: சாவை வாழ்வு வெல்லும் என்று கூறி, உண்மையின் தலைவியாய்; நேர்மையின் தலைவியாய்; நீதியின் தலைவியாய்; எடுத்துக்காட்டாகச் செயல்படும் புரட்சித் தலைவிக்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

**மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, தையல் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பெண்களையே நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். அந்த ஐ.சி.ஓ.-க்கள் தொழில் துறையிலே இருந்து நியமிக்கப்படுகின்றவர்கள். ஆகவே, தொழில் துறையிடத்திலே இதைப்பற்றி கலந்து பேசி, பெண்களை நியமிப்பதற்குப் பரிசீலிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி கே. எம். கலைச்செல்வி.

**திருமதி கே.எம். கலைச்செல்வி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமூக நலத் துறையின் மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொண்டு,

"தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாய்மொழிக்கு இணங்க, இன்று 5 1/2 கோடி தமிழக மக்களின் நெஞ்சங்களில் எல்லாம் நீக்கமற நிறைந்து வீற்றிருக்கும் எங்கள் புரட்சித் தலைவி, மாதர்குல மாணிக்கமாய், மகத்தில் பிறந்து ஜகத்தை ஆள வந்து, பெண் குலத்தின் வீராங்கனையாய், இன்று தனிப் பெரும் தலைவியாய் விளங்கிக் கொண்டு வரும் எங்களுடைய அன்னை இருக்கும் திசை நோக்கி வணங்கி, இந்தச் சமூகநலத் துறையின் மீது ஒருசில கருத்துக்களைச் சொல்ல நான் விழைகிறேன். சமூக நலத் துறை என்பது, சமுதாயத்தில் நலிவுற்றவர்களைக் கைதூக்கி, அவர்களுக்கு

1995 ஏப்ரல் 27] [திருமதி கே.எம். கலைச்செல்வி]

ஒரு சமூக அந்தஸ்தை வழங்கக்கூடிய ஒரு நல்ல துறை. அதை நாம் இப்போது நெஞ்சார பாராட்டி ஆக வேண்டும். ஒரு காலத்தில் சமூக நலத்துறை என்றால், அந்தத் துறை என்ன பணி புரிகின்றது; அதில் என்ன திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன என்பதே தெரியாத காலம் என்று ஒன்று இருந்தது. ஆனால் நம்முடைய அன்னையின் ஆட்சியில்தான் இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழகத்தில்தான் சமூக நலத்துறை மிகச் சிறப்பாக விளங்குகின்றது என்பதற்குப் பல்வேறு நல்ல திட்டங்களை அளித்து, கடந்த வாரத்தில்கூட நம்முடைய மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் டெல்லிக்குச் சென்று இந்தச் சமூக நலத் துறையின் மூலம் மகளிருக்காக தமிழகத்தில் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்காக விருது பெற்று வந்துள்ளார்கள் என்பதை நாம் பெருமையோடு சொல்லிக் கொள்வதில் (மேசையைத் தட்டும் ஒலி) மிகவும் பெருமை அடைகின்றோம். இந்தியத் துணைக் கண்டத்தின் வரலாற்றிலேயே சமூக நலத் துறை, நம்முடைய தமிழகத்தில் மட்டுந்தான் மிகச் சிறப்பாக செயல்படுகிறது என்று சொன்னால் அது மிகையாகாது. அதில் நாளொரு வண்ணம் பொழுதொரு வண்ணமுமாக செயல்படுத்தப்படும் திட்டங்கள் விரிப்பின் அகலும்; தொகுப்பின் எஞ்சும்.

நம்முடைய அன்னையின் ஆட்சியின் காலத்தில்தான் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் மேலான ஆலோசனைக்கு இணங்க நம்முடைய சமூக நலத் துறை அமைச்சரவர்கள் நம்முடைய அன்னை, வெட்டி வா என்றால், நான் கட்டியே வருகிறேன் என்று சொல்லக்கூடிய அளவிற்கு இந்தத் துறையை மிகச் சிறப்பாக வழிநடத்திக் கொண்டிருக்கின்றார்கள். இந்தத் துறைக்கே ஒரு பரிணாம வளர்ச்சி ஏற்பட்டு, தமிழகத்தில் ஒரு சிறப்பான துறையாக இதை மிளிரச் செய்கின்ற பெருமை இந்தத் துறையை வழி நடத்துகின்ற அமைச்சரவர்களையே சாரும் என்பதைச் சொல்லிக்கொள்ளுவதில் நான் பெரிதும் மகிழ்வு எய்துகின்றேன்.

*பிற்பகல் 6-20*

இப்படி இந்தத் துறையைப் புரட்சித் தலைவியின் காலத்தில் இந்தத் துறையில் பல்வேறு திட்டங்கள் வகுக்கப்படுகின்றன. இன்றைக்குப் பெண்களுக்கு ஏற்படுத்தப்படுகின்ற திட்டங்களிலே நம்முடைய புரட்சித் தலைவி மிகவும் கண்ணுங்கருத்துமாக இருக்கின்றார்கள். ஒரு சமுதாயத்தில் பெண்களை உயர்த்தினால்தான் இந்தச் சமுதாயம் உயரும்,. நாடு உயரும் என்ற அளவிற்குப் பெண்களுக்காக நலத் திட்டங்களை அள்ளி வழங்கி அவற்றைச் செயல்படுத்துவதில், அந்தப் பயன்கள் அந்தப் பெண்களுக்காகச் சென்று சேர வேண்டுமென்பதிலும் கண்ணுங்கருத்துமாக இருக்கின்றார்கள்.

இன்று பெண்களுக்காக அவர் செயல்படுத்துகின்ற திட்டங்களில் ஒருசிலவற்றைக் கோடிட்டுக் காட்ட விழைகின்றேன்.

குறிப்பாக கடந்த ஆண்டு நம்முடைய அன்னை' தலைமையில் உலகமே போற்றும் பாரத ரத்னா விருது பெற்ற அன்னை தெரஸா அவர்கள்கூட நம்முடைய தமிழகத்திற்கு வந்து 15 அம்சக் குழந்தைகள் நலத்திட்டத்தை இந்தத் தமிழகத்திற்கு அறிமுகப்படுத்திச் சிறப்புச் செய்து சென்றுள்ளார்கள். உலகமே போற்றுகின்ற அன்னை தெரஸா அவர்கள் நம்முடைய அன்னையின் திட்டத்திற்குச் சிறப்பான ஒரு சான்றிதழை அள்ளித் தந்து, என்னுடைய நோக்கமும் புரட்சித் தலைவியின் நோக்கமும் ஒன்றாக இருக்கிறது என்பதைச் சொல்லுகின்ற அளவிற்கு அந்தத் திட்டத்தின் மூலம் புரட்சித் தலைவி அவர்களை இப்பொழுது உலகமே பாராட்டி விட்டது என்பதைத்தான் இங்கே நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அந்த 15 அம்சக் குழந்தைகள் நலத்திட்டத்தில் குழந்தைகளுக்கான சிறப்பான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. அதிலும் குறிப்பாக, மகளிருக்கு, விதவைகளுக்கு, ஊனமுற்றவர்களுக்கு, இப்படிச் சமுதாயத்தில் நலிவுற்றவர்களுக்காகத் திட்டங்கள் செயல்படுத்தப்படும்பொழுது அது இன்று கிராமங்களில் ஒன்றுமே அறியாத பாமர மக்கள்கூட நம்முடைய புரட்சித் தலைவியின் ஆட்சியில் இப்படிப்பட்ட திட்டங்களெல்லாம் இருக்கின்றன. அதன் பலன்களை நாம் பெற்றே தீர வேண்டுமென்ற அளவிற்கு அவர்கள் தெரிந்து கொள்ளுகிற அளவிற்கு அதற்கு இன்று விளம்பரம் தேடித் தந்துள்ளார்கள். அந்த அளவிற்கு இந்தத் துறை மிகச் சிறப்பாகச் செயல்படுகிறது என்றால் அது நிச்சயம் உண்மைக்கு மாறாக இருக்க முடியாது.

அதே போன்று இந்தியத் துணைக் கண்டத்திலேயே எந்த முதலமைச்சர் உள்ளத்திலும் உதிக்காத ஒரு அருமையான திட்டம் நம்முடைய புரட்சித் தலைவியின் மனதில் உதித்தது. அதுதான் தொட்டில் குழந்தைத் திட்டம். அந்தத் தொட்டில் குழந்தைத் திட்டத்தின் மூலம் நம்முடைய மாநிலத்தில் சேலம் மாவட்டத்திலும், மதுரை உசிலம்பட்டியிலும் ஒருசில வகுப்பினர் பெண் குழந்தைகளைப் பிறந்தவுடனேயே கொன்று விடுகின்ற ஒரு கொடுமையான நிகழ்ச்சியை அறிந்த புரட்சித் தலைவி அவர்கள் தொட்டில் குழந்தைத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். இந்தியத் துணைக் கண்டத்திலேயே இப்படிப்பட்ட திட்டம் எந்த மாநில முதலமைச்சரும் கொண்டு வராத ஒரு திட்டம் என்ற அளவிற்கு இன்று உலக அளவில் அதற்கு மிகவும் பாராட்டப்படக்கூடிய ஒரு நல்ல ஒரு சிறப்பான திட்டத்தை நம்முடைய தமிழகத்திற்கு அளித்துள்ளார்கள்.

1995 ஏப்ரல் 27] [திருமதி கே.எம். கலைச்செல்வி]

அந்தத் திட்டத்தின் மூலம் இன்று தமிழகத்தில் பெற்ற தாயே அந்தக் குழந்தையை ஒதுக்கி விடுகின்ற நேரத்தில் நம்முடைய அரசாங்கம் அதை எடுத்து வளர்க்கின்ற ஒரு அற்புதமான திட்டமாக அதை மாற்றி இன்று 70 குழந்தைகளுக்கு அத்திட்டத்தின் மூலம் ஒளிமயமான ஒரு எதிர்காலத்தை நம்முடைய அன்னை அவர்கள் அளித்துள்ளார்கள். அதில் 22 குழந்தைகள், குழந்தைகள் இல்லாத பெற்றோர்கள் எடுத்துச் சென்று வளர்ப்பதாகவும் கொள்கைக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளார்கள். இப்படி நம்முடைய அன்னை தொட்டில் குழந்தைத் திட்டத்தின் மூலம் இந்தப் பெண் சமுதாயத்திற்கு மிகப் பெரிய நன்மையைச் செய்திருக்கிறார்கள். உலகத்தில் எந்த முதலமைச்சருக்கும் இப்படிப்பட்ட ஒரு நல்ல எண்ணம், இப்படிப்பட்ட ஒரு உயர்வான சிந்தனை நோக்கு இல்லை என்ற அளவிற்குப் புரட்சித் தலைவி அவர்கள் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தியதன் மூலம் தமிழக மக்களுக்கு மட்டுமல்ல, தமிழகத்தில் வாழ்கின்ற பெண்குலத்திற்கு மட்டுமல்ல, இந்தியத் துணைக் கண்டத்திற்கு மட்டுமல்ல, உலக அளவிற்கே பெண் சமுதாயத்திற்கு ஒரு நல்ல அந்தஸ்தை வழங்கியுள்ளார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 6-25

அதேபோன்று எல்லாத் துறைகளிலும் பெண்களுக்கு மிகச் சிறப்பான பங்கு அளிக்க வேண்டுமென்பதில் புரட்சித் தலைவி கண்ணுங்கருத்துமாக இருக்கின்றார்கள். இன்று பெண்கள் வாழ்ந்தால்தான், பெண்கள் உயர்ந்தால்தான் இந்தச் சமுதாயம் உயரும் என்பதைக் கருத்திற்கொண்டு பெண்கள் கல்விக்கு மிக முக்கியத்துவம் அளிக்கின்றார்கள்.

பெண்கள் கல்வித் திட்டத்தின் மூலம்தான் ஒரு சமுதாயம் வாழ முடியும், உயர முடியும் என்பதை அறிந்து புரட்சித் தலைவி அவர்கள் இன்று ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை படிக்கின்ற ஆரம்பக் கல்விக் கூடங்களில் பெண்களை மட்டுமே நியமிக்க வேண்டும் என்ற ஆணை பிறப்பித்துள்ளார்கள். இது எவ்வளவு பெரிய மகத்தானத் திட்டம். அதுபோல், நம்முடைய கூட்டுறவுக் கடைகளில், இனி வருங்காலங்களில் பெண்களே நடத்துகின்ற கூட்டுறவுக் கடைகளாக மாற்ற வேண்டுமென்று புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டார்கள். அதேபோல் வருங்காலத்தில் சத்துணவுக் கூடங்களில் பெண்களே பணிபுரிய வேண்டும், பெண்களைத்தான் அமர்த்த வேண்டுமென்ற அளவுக்கு புரட்சித் தலைவி அவர்கள், பெண்களுக்கு மிகச் சிறப்பான உயர்வை அளிக்க இத்தகைய நல்ல திட்டங்களையெல்லாம் அளித்துள்ளார்கள். எல்லாவற்றிற்கும்

மேலாக இந்தியத் துணைக் கண்டத்திலே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு நம்முடைய தமிழகத்தில் 25 பெண் சட்டமன்ற உறுப்பினர்களை (மேசையைத் தட்டும் ஒலி) அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகத் தேர்ந்தெடுத்து இந்த அவையில் உட்கார வைத்து அழகு பார்க்கும் எங்கள் அன்னையை, எங்கள் உயிர் உள்ளவரை மறக்க முடியாது, பாராட்டியாக வேண்டும். நாங்கள் பிறவிப் பெரும் பயனை அடைந்தே விட்டோம் என்று சொல்லுகின்ற அளவுக்கு புரட்சித் தலைவி அவர்கள், பெண் குலத்திற்கு ஒரு நல்ல அந்தஸ்த்தை வழங்கியுள்ளார்கள்.

நம்முடைய சமூக நலத் துறையைப் பொறுத்தமட்டில், சத்துணவுத் திட்டம் நமக்கு முதலாக கண்முன் தெரிகிறது. புரட்சித் தலைவர் பொன்மனச் செம்மல் அவர்களால் அவர் ஆட்சியில் இருந்தபோது இந்தத் திட்டத்தைத் கொண்டு வந்தார்கள். ** இந்த நேரத்தில் நம்முடைய துறைக்கு........

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:* ** என்பது உங்களுக்கு எப்படித் தெரியும்.? எனவே, அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

*திருமதி கே.எம். கலைச்செல்வி:* புரட்சித் தலைவர் பொன்மனச் செம்மல் மீது பற்று கொண்டவர்கள் அந்தத் துறையில் மிகுதியாக பணியாற்றி வருகிறார்கள் என்பது இந்த நாடறிந்த உண்மை. அதை யாரும் மறுக்க முடியாது, மறைக்க முடியாது. அப்படிப்பட்டவர்கள் இன்று தங்களுடைய சில கோரிக்கைகளை நம்முடைய தங்கத் தலைவியின் ஆட்சியின்முன் கோரிக்கைகளாக வைத்துள்ளார்கள். நம்முடைய துறை அமைச்சர் அவர்கள், கனிவாக அந்தக் கோரிக்கைகளை பரிசீலித்து அவர்களுடைய ஊதியத்தை உயர்த்தி அவர்களை நிரந்தரப் பணியாளர்களாக ஆக்க ஆவன செய்ய வேண்டுமென்று மெத்தப் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் இந்தப் பெண்கள் கூட்டுறவுச் சங்கங்கள் நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தமட்டில் 77 கூட்டுறவுச் சங்கங்கள் இயங்குவதாக கொள்கைக் குறிப்பிலே குறிப்பிட்டுள்ளீர்கள். அந்தக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் பெண்கள் சீருடை தைக்கிறார்கள். காலணி தைக்கிறார்கள்,. மற்றும் அவர்கள் குடும்பத்திலே இருந்துகொண்டு அவர்களுடைய வருமானத்தைப் பெருக்கிக்கொள்கின்ற அளவிற்கு ஜவ்வரிசி தயாரித்தல், அப்பளம் தயாரித்தல், ஊறுகாய் தயாரித்தல் போன்ற பல்வேறு திட்டங்கள் இந்தத் துறையில் செயல்படுத்தப்படுகின்றன. அப்படிப் பெண்கள் முன்வரும்போது அதிலும் குறிப்பாக இந்தத் தையல்

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

1995 ஏப்ரல் 27] [திருமதி கே.எம். கலைச்செல்வி]

கூட்டுறவுச் சங்கங்களில் பெண்கள் பணிபுரிய வரும்போது, அவர்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் காட்பாடி ஒன்றியத்தில், பிரம்மபுரம் ஊராட்சியில் தையல் கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் பெண்கள் குடியாத்தத்திற்குச் சென்று அந்தச் சங்கங்களிலேயிருந்து துணிகளை வாங்கி தைத்துக் கொடுக்கிறார்கள். அவர்கள் போக்குவரத்து செலவிற்கே அந்த ஊதியம் போதவில்லை என்ற அளவிற்கு அவர்கள் வருமானம் மிகவும் குறைவாக இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் காட்பாடி ஒன்றியம், பிரம்மபுரம் ஊராட்சியில் ஒரு பெண்கள் தையல் கூட்டுறவுச் சங்கம் அமைத்துத்தர வேண்டுமென்றும், அதற்கு அனுமதியை அளிக்க வேண்டுமென்றும் மெத்தப் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

சத்துணவுத் திட்டத்தில் சுமார் 63 இலட்சம் குழந்தைகள் சீருடை பெற்று, புரட்சித் தலைவர் பொன்மனச் செம்மல் சத்துணவுத் திட்டத்தின் மூலம் பயன்பெறுகிறார்கள். இந்தக் கூட்டுறவுச் சங்கங்களிலே பயன்பெறுகின்ற பெண்கள், சுமார் 26 இலட்சத்து 500 பெண்கள் இந்தக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் பயன்பெறுகிறார்கள். அப்படிப்பட்ட பெண்களுக்கு, அவர்கள் செய்கின்ற தொழில்களுக்கு நம்முடைய துறையின் மூலம் அவர்கள் விண்ணப்பித்தால் அவர்களுக்கு உடனடியாக உதவி புரிகின்ற அளவுக்கு முன்னுரிமை அளித்து, விரைவில் செய்கின்ற அளவுக்கு வாய்ப்புத் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். *(மணியடிக்கப்பட்டது)*

அதே நேரத்தில் ஊனமுற்ற மாணவர்கள் அதிலும் குறிப்பாக, படிக்கின்ற மாணவர்கள், 3 சக்கர வண்டிகளைக் கேட்டு அவர்கள் விண்ணப்பிக்கும்போது, மற்றவர்களைக் காட்டிலும் அவர்களுக்கு முன்னுரிமை அளித்து அவர்களுக்கு விரைவில் அந்த 3 சக்கர வண்டிகளை, அவர்கள் பள்ளிக்குச் சென்றுவர ஏதுவாக இருக்கின்ற அளவுக்கு அவர்களுக்கு உதவி புரிய வேண்டுமென்று மெத்தப் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் நம்முடைய ஊராட்சி ஒன்றியங்களில் திருமண உதவித் திட்டத்தின் மூலம் மூவலூர் ராமாமிர்தம் திருமண உதவித் திட்டத்தின் மூலம் விண்ணப்பிக்கின்றவர்களுக்கு, மிகக் குறைந்த அளவுக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது. அதை அதிகப்படுத்த வேண்டும். காத்திருப்போர் பட்டியலில் நிறையப் பேர் காத்துக்கொண்டிருக்கிறார்கள். விண்ணப்பிக்கின்ற அவர்களுக்கு உடனடியாகக் கிடைக்கின்ற ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று மெத்தப் பணிவன்போடு இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திருமதி கே.எம். கலைச்செல்வி] [1995 ஏப்ரல் 27

பிற்பகல் 6.30

இப்படி சமூகநலத் துறையில் நம்முடைய அன்னையின் ஆட்சிக் காலத்தில் பல்வேறுபட்ட நலத்திட்டங்களின் மூலம் சமுதாய வளர்ச்சிக்காக, பெண்களின் உயர்வுக்காக அற்புதமாகத் திட்டமிடப்பட்டு பணிகள் எல்லாம் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. இப்படிப்பட்ட நேரத்தில் நம்முடைய புரட்சித் தலைவியைப் பார்த்து வெளியில் இருக்கின்ற எத்தனையோ பேர் கடந்த 25 ஆம் தேதி கூட நம்முடைய சத்துணவு ஊழியர்கள் எல்லாம் இந்த அரசுக்கு எதிராக எவ்வளவோ கோரிக்கைகளை வைத்தார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையை உருவாக்குகிற அளவுக்கு அரசியல் ஆதாயம் தேடுவதற்காக மற்றவர்கள் அவ்வாறு தூண்டிவிடுகிறார்கள். அவ்வாறு அவர்களின் எண்ணத்தை மாற்றுகிற அளவுக்கு சிலர் செயல்படுகிறார்கள். அப்படிப்பட்டவர்களை நீங்கள் அடையாளம் கண்டு புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மலின் மீது பற்றுக்கொண்ட அந்த ஊழியர்களின் கோரிக்கையை நீங்கள் கனிவோடு பரிசீலித்து கட்டாயம் அவர்களுக்கு நல்ல எதிர்காலத்தை உருவாக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

உள்ளாட்சித் தேர்தலில் பெண்களுக்கு 30 சதவீதம் ஒதுக்கி இருப்பதைப் போல வருகிற சட்டமன்ற, பாராளுமன்றத் தேர்தல்களிலும் பெண்களுக்காக 30 சதவீதம் ஒதுக்கித் தந்து, மற்ற மாநிலங்களுக்கெல்லாம் புரட்சித் தலைவியின் அரசுதான், தமிழகம்தான் முன்னோடியாக இருந்தது, இருக்கிறது என்பதைக் காட்டுகிற அளவுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) எல்லா வகையிலும் புரட்சித் தலைவிதான் முன்னிலை வகிக்கின்ற இந்த நேரத்தில் மத்திய அரசை வருகிற காலத்தில் அதை நடைமுறைப்படுத்த வற்புறுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் மாண்புமிகு இதயதெய்வம் அவர்களுக்கு மெத்தப் பணிவன்போடு இந்தக் கோரிக்கையைச் சமர்ப்பித்துக்கொள்கிறேன். இந்தத் துறையில் இன்னும் பல்வேறு திட்டங்கள் எல்லாம் இருக்கின்றன. அந்தத் திட்டங்கள் எல்லாம் ஒன்றிய அளவுக்கு வரும்போது மிகக்குறைந்த இலக்குதான் நிர்ணயிக்கப்படுகிறது. முத்துலட்சுமி மகப்பேறு நலத்திட்டம் போன்ற திட்டங்களுக்கெல்லாம் அவர்கள் விண்ணப்பிக்கும்போது விரைவில் அந்த உதவித் தொகை கிடைக்க ஆவன செய்யவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முத்துலட்சுமிரெட்டி மகப்பேறு உதவித் திட்டத்தின் கீழ் எவ்வளவு பேர்கள் விண்ணப்பித்தாலும் அவர்களுக்குக்

கொடுக்கப்படுகிறது. அதில் நிதி நிரம்ப இருக்கிறது. எவ்வளவு பேர்கள் விண்ணப்பிக்கிறார்களோ அவர்கள் அனைவருக்கும் கொடுக்கப்படுகிறது. எனவே இதில் இருக்கிற நிதி எஞ்சிய நிதியாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திருமதி கே.எம். கலைச்செல்வி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சரின் விளக்கத்திற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மற்ற மாநிலங்களில் பெண்கள் கமிஷனுக்கு சட்ட அங்கீகாரம் கொடுக்கப்படுகிறது. அதுபோல் தமிழகத்திலும் மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் ஆட்சியிலே இந்தப் பெண்கள் கமிஷனுக்கு சட்ட அங்கீகாரம் கொடுக்கவேண்டும். இந்த அளவுக்கு இந்தத் துறையின் மேல் கருத்துக்களை எடுத்துச் சொல்ல வாய்ப்பளித்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி சொல்லி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வே. தம்புசாமி. 10 நிமிடங்களுக்குள் பேசி முடிக்கவேண்டும். காலையில் பேசியாகி விட்டது, இப்போதும் பேசியாகிவிட்டது மாலையிலும் பேசுகிறீர்கள். எனவே சுருக்கமாகப் பேசி முடியுங்கள்.

**திரு. வே. தம்புசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமூகநலத் துறையின் மீதான மானியக் கோரிக்கைகளின் மீது ஒருசில கருத்துக்களைக் கூற அனுமதி தந்த தங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்த சமூகநலத் துறையோடு சத்துணவுத் துறையும் இணைந்திருக்கிறது. சத்துணவுத் துறையைத் தனியாகப் பிரித்து, அது ஒரு தனித் துறையாகச் செயல்படுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். காரணம், (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீண்டகாலமாக இந்தக் கோரிக்கை கேட்கப்பட்டு, சத்துணவு டிப்பார்ட்மெண்ட் தனியாகப் பிரிக்கப்பட்டு தமிழக முதல்வர் இதயதெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி முதலமைச்சராகப் பொறுப்பேற்றதற்குப் பின்னால்தான் உங்களுடைய கோரிக்கைகள் எல்லாம் கவனிக்கப்பட்டு தனியாக, தனித் துறையாகப் பிரிக்கப்பட்டு—அதற்குத் தனியான அலுவலர்கள் எல்லாப் பகுதிகளிலும் நியமிக்கப் பட்டிருக்கிறார்கள்.

[1995 ஏப்ரல் 27

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கேட்பது என்னவென்றால் தனி அமைச்சரின் கீழ் தனித் துறையாக அது இருக்கவேண்டும் என்பதுதான். சமூகநலத் துறையிலிருந்து அது தனியாகப் பிரிக்கப்பட வேண்டும் என்பதுதான். ஏனென்றால் ஏறத்தாழ 68,056 சத்துணவு மையங்கள் இருக்கின்றன. அதில் ஏறத்தாழ 2 இலட்சம் ஊழியர்கள், அதற்கான அதிகாரிகள் என்றெல்லாம் வருகிறார்கள். அப்படி எல்லாம் செயல்பாடுகள் இருக்கின்றன. எனவே இது தனித் துறையாக இருந்து, எதிர்காலத்தில் அதன் அபிவிருத்திக்கு, பணிகள் (குறுக்கீடு)

பிற்பகல் 6.35

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர்.

*மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்ட பணியாளர்கள் இருந்தாலும்கூட, ஒரு அமைச்சர் இந்த இரண்டு லட்சம் பேர்களையும் தினம் சந்தித்து அவர்களுக்கு வேண்டியது என்ன? அவர்களுடைய கோரிக்கைகள் என்ன? என்று கேட்டுக்கொண்டிருக்க வேண்டியது இல்லை. நிர்வாகம் தனித் தனியாகப் பிரிக்கப்பட்டு அந்தந்தப் பணி அந்தந்தப் பிரிவின்கீழ் ஒரு அமைச்சரின்கீழ் சிறப்பாக நடைபெற்று வருவதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெளிவாக உணர்வார்கள். அந்த வகையிலே இப்போது இருக்கின்ற சத்துணவுத் துறை அமைச்சர் கூடுதலான பொறுப்பு வைத்திருந்தாலும் அவர் மிகச் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார் என்பதை நாட்டு மக்கள் நன்றாக உணர்வார்கள் (மேசையைத் தட்டும் ஒலி)......... (குறுக்கீடு).

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எந்த அமைச்சர் கையிலே என்ன பொறுப்பு இருக்கிறது என்பதில்லை, எந்த அமைச்சர் கையிலே எந்த பொறுப்பு இருந்தாலும் இதனை அங்கேயிருந்து ஆட்டுவித்து அதற்குரிய அறிவுரைகளை வழங்கி இந்தத் துறை சிறப்பாகச் செயல்படுவதற்கு மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவருக்கும் தெரியும், ஆனால் ஏதோ உங்கள் மேலே இருக்கிற கோபத்திலே சொல்லியிருப்பார் என்று நினைக்கிறேன்.

1995 ஏப்ரல் 27]

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் முழுமையாக என்ன சொல்லப் போகிறேன் என்று கேட்பதற்கு முன்பு குறுக்கிட்டால் எப்படி.? நான் சொல்ல வந்தது, எதிர்காலத்திலே வளர்கின்ற துறை, சமூகம் வளர்கின்றபோது, இதனுடைய நிருவாகம், இதனுடைய செயல்பாடுகள், இதனுடைய நிதி, ஊழியர்கள் எல்லாம் தொடர்ந்து ஆண்டுதோறும் வளர்ச்சி பெறுகிறார்கள். அதனாலேதான் நான் சொன்னேனே தவிர, அவரிடம் இருக்கக்கூடாது, அதை வேறு ஒருவருக்கு பிரித்துக் கொடுக்கவேண்டுமென்று சொல்லவில்லை. அதேநேரத்திலே அதில் செயல்படுகின்ற ஊழியர்களின் சம்பளம் என்று எடுத்துக்கொள்கிறபோது, அமைப்பாளருக்கு ஒரு மாதம் 340 ரூபாய் வழங்கப்படுகிறது, அங்கன்வாடி ஊழியர்களுக்கு 450 ரூபாய் வழங்கப்படுகிறது, மதிய உணவு திட்டத்தில் உள்ள ஊழியர்களுக்கு 170 ரூபாய் அளிக்கப்படுகிறது. குழந்தைகள் நல காப்பக ஊழியர்களுக்கு 340 ரூபாய் வழங்கப்படுகிறது. அங்கன்வாடி உதவியாளர்களுக்கு 200 ரூபாய் என விகிதாச்சார அடிப்படையிலே ஊதியம் வழங்கப்படுகிறது. அதேபோன்று ஊட்டச் சத்து ஊழியர்களுக்கு 340 ரூபாய் வழங்கப்படுகிறது. இதிலே என்ன நிலைமை என்று சொன்னால், சாதாரணமாக தமிழகத்திலே விவசாயத் தொழிலாளிக்கு குறைந்தபட்ச கூலிச் சட்டம் அமலில் இருக்கிறது. இந்தக் குறைந்தபட்ச கூலி சட்ட அடிப்படையில் கூட சம்பளம் வழங்கலாம். அந்த கூலிச் சட்டத்தை நாம் ஏற்கிறோமா? அல்லது நிராகரிக்கிறோமா? என்பதுதான் இங்கே இருக்கக்கூடிய பிரச்சனை.. (குறுக்கீடு)

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. இந்த சத்துணவுத் திட்ட ஊழியர்கள் என்று சொல்லப்படுபவர்கள் முழுக்க முழுக்க பகுதிநேரப் பணியாளர்கள். இவர்கள் 9 மணியிலிருந்து 2 மணி வரை மட்டுமே வேலை பார்க்கிறார்கள். இவர்கள் நிரந்தரப் பணியாளர்கள் இல்லை. ஆகவே நீங்கள் சொல்கிற சட்டத்தின்கீழ் இவர்கள் வரமாட்டார்கள். 9 மணியிலிருந்து 2 மணி வரை பணியாற்றுகிறார்கள். ஊதிய உயர்வைப் பற்றி நீங்கள் கேட்டீர்கள். ஏறக்குறைய பத்து ஆண்டு காலமாக ஊதிய உயர்வைப் பற்றி கேட்டுக் கேட்டு. கொடுக்க முடியாது இருந்த சூழ்நிலையில் வெறும் 240 ரூபாய் மட்டுமே வாங்கிக் கொண்டு வந்தவர்கள், நமது மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்ற பிறகுதான் 1-4-1992 அன்று 240 ரூபாய் வாங்கியவர்கள், 1-7-1992 முதல் 260 ரூபாய் வாங்கினார்கள், 1-12-1992 முதல் 275 ரூபாய் வாங்கினார்கள். 1-1-1994 முதல் 335 ரூபாய் வாங்கினார்கள், 1-7-1994 முதல் 340 ரூபாய் வாங்கினார்கள். அதுபோல சமையலர்கள் பத்தாண்டுக் காலமாக 115 ரூபாய் வாங்கிக் கொண்டிருந்தவர்கள் இன்றைக்கு 150 ரூபாய் வாங்குகிறார்கள், 75 ரூபாய்

மட்டுமே வாங்கிக் கொண்டு இருந்த உதவியாளர்கள் அது 85 ஆக மாறி, 140 ஆகி இன்றைக்கு 140 ரூபாய் சம்பளம் பெறுகிறார்கள் என்றால் வேறு எந்த ஆட்சியிலும் இல்லை, நமது இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி) இன்னொன்றையும் நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு பேரவைத் தலைவர் வாயிலாகச் சொல்ல விரும்புகிறேன். சத்துணவுப் பணியாளர்கள் சத்துணவுத் திட்டத்திற்காகவே தவிர, பணியாளர்களுக்காக சத்துணவுத் திட்டத்தை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தொடங்கவில்லை. அது ஒரு தியாகத்தன்மை படைத்த பணியாகும். ஆங்காங்கே கிராமப்புறத்தில் இருக்கின்ற பெண்கள் அங்கே குழந்தைகளுக்கு வந்து சமைத்துப் போட்டுவிட்டுப் போகவேண்டும். அதற்காகத்தான் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இதை உருவாக்கினார்கள். இந்தப் பணியைவிட அதிகம் சம்பளம் கிடைத்தால் அவர்கள் வேறு பணியில் சேர்ந்து கொள்ளலாம். அதைவிட்டுவிட்டு இதிலே இருந்துகொண்டு சம்பளம் குறைவாக இருக்கிறது என்று சொல்லக் கூடாது. இது ஒரு தியாகமான பணி என்று சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 6.40

திரு.வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் பணியாற்றக்கூடிய ஊழியர்கள். பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கு தியாக உணர்வைப் பற்றி போதிப்பது என்பது — அவர்களுக்கு வயிறு இருக்கிறது, பசி இருக்கிறது, குடும்பம் இருக்கிறது, பட்டினி இருக்கிறது...

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வயிறு இருக்கிறது, பசி இருக்கிறது, பட்டினி இருக்கிறது. ஆகவே இதைவிட அதிகமான சம்பளம் கிடைத்தால் அவர்கள் அதற்கு தாராளமாகப் போகலாம் என்பதைத்தான் சொல்லுகிறேன். இந்தப் பணிக்கு வரும்போது * அவர்கள் விருப்பத்தின் பேரில் இந்த வேலையிலே சேருகிறார்கள். 9 மணியிலிருந்து இரண்டு மணி வரை பணியாற்றுகின்ற அவர்களுக்கு வேறு பணிகிடையாது. 9 மணியிலிருந்து 2 மணி வரை குழந்தைகளுக்கு சாப்பாடு போட்டுவிட்டு பொருள்களை எடுத்துக் கொடுத்துவிட்டு போகவேண்டும், அவ்வளவுதான். ஆயா சமைத்துப் போடுவார். இது தவிர சத்துணவுப் பணியாளர்களுக்கு வேறு பணி கிடையாது. ஆகவே அவர்களை நிரந்தரப் பணியாளர்களாக ஆக்க முடியாது. ஆனால் அவர்களுடைய சம்பளத்தை இந்த அரசுதான் கனிவோடு பரிசீலித்து இருக்கிறது. வேறு எந்த அரசும் பரிசீலிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

1995 ஏப்ரல் 27]

*திரு. வே. தம்புசாமி:* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுவரையில் யாரும் ஒரு பணியில் இருப்பவர்கள் சம்பளம் கேட்கிறார்கள் என்பதற்காக அதை விட்டுப் போகவேண்டும் என்று கூறியது இல்லை.

*மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி:* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். வேறு பணிகள் என்று சொல்வது, அரசாங்கத்தினுடைய பைல்களை பார்க்கக்கூடிய பணி, அரசாங்கத்தில் எழுதுகின்ற பணி, இவைகள் எல்லாம் சாதாரண பணிகள் அல்ல. அப்பணிகள் நின்றுவிட்டாலும், அடுத்த நாள் செய்யலாம், அடுத்தநாள் வரலாம் போகலாம். ஆனால் குழந்தைகளுக்கு சாப்பாடு போடுகிற பணி என்பது மிகவும் தியாகத்தன்மை படைத்த பணி. அந்தப் பணியிலே போராட்டம் செய்வது என்பது ஏற்றுக்கொள்ளவே முடியாத ஒன்றாகும். அவர்களுக்கு வேறு வேலை கிடையாது. அவர்கள் காலையில் 10 மணிக்கு அலுவலகத்திற்கு வந்து 5 மணிவரை அரசு ஊழியர்களைப் போல் வேலை பார்க்கிறார்கள் என்பது இல்லை. ஆனால் அவர்கள் 9 மணிக்கு வந்தால் ஒரு மணி நேரத்திலே பொருட்களை எடுத்துக் கொடுத்துவிட்டுப் போய்விடுகிறார்கள். அவர்களுக்கு வேறு பணி இல்லை. பணி இருந்தாலும் அவர்களுடைய கோரிக்கையை நியாயமாகப் பரிசீலிக்கலாம். ஆனாலும்கூட பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எந்த ஆட்சியிலும் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படாமல் தொட்டில் குழந்தைகளைப்போல் இருந்தது. ஆனால் இன்றையதினம் புரட்சித் தலைவி அவர்கள், அவர்கள் கோரிக்கையைப் பரிசீலித்து, இந்த ஆட்சியிலேதான் 340 ரூபாய் சம்பளம் கொடுக்கப்பட்டது மட்டும் அல்ல அவர்களுக்கு அரியர்சும் வழங்கியிருக்கிறார்கள். அங்கன்வாடி பணியாளர்கள் மத்திய அரசினுடைய ஊழியர்கள். அவர்களுக்குக்கூட கடந்த ஆட்சிக் காலத்திலே மத்திய அரசு கொடுத்த சம்பளத்தை ஒழுங்காகக் கொடுக்கவில்லை. ஆனால் புரட்சித் தலைவி அவர்கள் முதலமைச்சர் ஆனதற்குப் பின்னாலேதான் அவர்களுக்கு மத்திய அரசு என்ன சம்பளம் கொடுக்கிறதோ அதை அப்படியே கொடுக்க வேண்டுமென்று உத்தரவிட்டு, அதன்படி இன்றைக்கு அங்கன்வாடி பணியாளர்களுக்கும் முழுச் சம்பளம் வழங்கப்படுகிறது, அரியர்சும் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:* திரு. தம்புசாமி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது அது பார்ட்டைம் ஒர்க்காக இருப்பதால் கன்சாலிடேட்டட் பேமென்ட்டாகக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

அதையேகூட கூடுதலாகக் கொடுத்திருக்கிறோம் என்றார்கள். அவர்கள் விருப்பப்பட்டு வேறு தொழிலுக்குப் போகலாம், வேறு வேலைக்கு போகலாம் என்றாலும், அவர்கள் போகலாம் என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்களே தவிர, தவறான நோக்கத்தில் அல்ல. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன கருத்து, அதைவிடக் கூடுதலாக ஏதாவது ஒரு வேலை வாய்ப்புக் கிடைக்குமானால், அந்தப் பணிக்கு அவர்கள் செல்வதற்குத் தடை ஒன்றும் இல்லை என்பதைத்தான் அப்படிச் சொன்னார்களே தவிர, தவறான நோக்கத்துடன் அல்ல. அமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள், எனவே வேறு சப்ஜெட்டுக்குச் செல்லுங்கள்.

*மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி:* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் பகுதிநேர ஊழியர்கள். ஒரு மணி நேரம்தான் வேலை பார்க்கிறார்கள். அதைவிட அவர்களுக்கு நல்ல வேலை, நல்ல பணி கிடைக்கும் என்றால் அந்த வேலையிலே சேர்வதில் யாருக்கும் ஆட்சேபம் இல்லை என்பதைத்தான் இப்போதும் தெரிவிக்கிறேன். ஒரு மணி நேரம்தான் சத்துணவுப் பணியாளர்கள் வேலை செய்கிறார்கள், பொருட்களை அவர்கள் எடுத்துக் கொடுத்துவிட்டு போகிறார்கள். ஆயா சமைத்துத் தருகிறார். அவ்வளவுதான். ஒரு மணிநேரம் பணியாற்றும் பகுதிநேர ஊழியர்கள்தான். அவர்கள் நிரந்தரப் பணியாளர்கள் அல்ல. அவர்கள் மிகவும் பாவப்பட்டவர்கள்தான், அவர்களுக்கு அதைவிட அதிகமான ஊதியம் கிடைத்தால் போகலாம் என்றுதான் சொன்னேன்.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:* (குறுக்கீடு) திரு. பழனிசாமி, அமைச்சர் அவர்கள் விளக்கமாகத் திரும்பவும் சொல்லியிருக்கிறார்கள், இதிலே என்ன இருக்கிறது. அவர்கள் ஒன்றும் தவறாகச் சொல்லவில்லை. (குறுக்கீடு). கூடுதலாக நல்ல பணி கிடைத்தால் அவர்கள் செல்வதற்கு எந்தத் தடையும் இல்லை, செல்லலாம், அவர்களுடைய விருப்பம்தான் என்று சொல்லியிருக்கிறார்கள், அவ்வளவுதான். இப்போது திரு. தம்புசாமி அவர்கள் அதைத் தவறான கருத்தில் எடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். அவ்வளவுதான். (குறுக்கீடு) வேண்டாம். இதிலே என்ன பாயின்ட் ஆப் ஆர்டர், உட்காருங்கள். (குறுக்கீடு)

திரு. தம்புசாமி பேசட்டும், உங்களுடைய தோழர் அவரே பேசட்டும் (குறுக்கீடு) திரு. தம்புசாமி பேசட்டும். (குறுக்கீடு) சரி சொல்லுங்கள்.

1995 ஏப்ரல் 27]

*திரு.ஜி. பழனிசாமி:* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நமது சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள் சத்துணவு அமைப்பாளர்களுக்கு சம்பளம் உயர்த்திக் கொடுப்பது ** என்று சொல்லிவிட்டார்கள் (குறுக்கீடு)

பிற்பகல் 6.45

*மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி:* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சம்பளம் அளிக்கப்படவில்லை** என்று நான் சொல்லவில்லை. சம்பள உயர்வை இந்த அரசு வந்தபிறகுதான் கனிவோடு கவனித்து உயர்த்திக் கொடுத்து வந்திருக்கிறது. எனவே ** என்று நான் சொல்லவில்லை. அவர்கள் பகுதி நேர ஊழியர்கள் என்பதைத்தான் உங்களுக்குக் கவனப்படுத்த விரும்புகிறேன்.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* திரு. பழனிசாமி, நீங்கள் பேசுகின்றபோது அமைச்சர் ** என்று கூறியதாகச் சொல்லியிருக்கின்றீர்கள். அமைச்சர் அப்படிச் சொல்லவில்லை. ஆகவே, அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. அப்படிச் சொல்லாததை நீங்கள் சொல்லக்கூடாது.

*திரு. ஜி. பழனிசாமி:* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த பார்ட் டைம் ஆக பணியாற்றக்கூடிய சத்துணவு அமைப்பாளர்கள் காலையில் 9 மணிக்கு வந்துவிட்டு 10 மணிக்கு அவர்கள் வேறு வேலைக்குப் போகலாம் என்று அமைச்சர் சொல்கிறார்கள். ஆக இங்கு ஒரு மணி நேரம் வேலை செய்து விட்டு வேறு வேலைக்கு போக முடியுமா? ஆகவே, இதே நிருவாகத்தில் வேறு பணிகள் இருந்தால் அந்த பணியைக் கொடுங்கள். அனேகமாக அங்கு இருக்கிற சத்துணவு அமைப்பாளர்கள் அத்தனைப் பேரையும் முதியோர் கல்விக்காக முழுமையாகப் பயன்படுத்துகிறார்கள். ஆகையால், அவர்களுடைய கோரிக்கையை நியாயமாகப் பரிசீலித்து ஆவன செய்ய வேண்டுமே தவிர, இந்த பணியில்லை என்று சொன்னால், சம்பளம்கூட வந்தால் வேறு பணிக்குச் சென்று விடலாம் என்று சொல்வது—அப்படியானால் சமீபத்திலே சத்துணவு மையத்தை கலைப்பதற்காக திட்டம் உங்களிடத்திலே இருக்கிறதா என்று நான்.... (குறுக்கீடு)

*மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி:* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் நிரந்தரமான பணியாளர்கள் இல்லை. சத்துணவுத் திட்டத்தினைக் கலைப்பதற்கான உத்தேசம் இருக்கிறதா என்று கேட்கிறார்கள். தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நிரந்தரமாக முதலமைச்சராக இருக்கிற வரை

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

சத்துணவுத் திட்டத்தை விரிவுபடுத்தப்படுகிற திட்டமே அரசினிடத்திலே இருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் நிரந்தரப் பணியாளர்கள் இல்லை என்பதைத்தான் திரும்ப திரும்பச் சொல்லிக் கொள்கிறேன். ஆனாலும்கூட இந்த அரசு, அரசு ஊழியர்களுக்கு வழங்குவது போலவே பஞ்சப்படி, மற்றவைகள் எல்லாம் இன்றைக்கும் சத்துணவுப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுக்கொண்டு இருக்கிறது. இதையும் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்..

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* திரு.வி.பி. சந்திரசேகர்.

*திரு. வி.பி. சந்திரசேகர்:* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகின்றபோது இந்த சத்துணவுப் பணியாளர்கள் * என்று சொன்னதற்குப் பதிலாக அவர்கள் விருப்பத்தின் பேரில் இந்த வேலையிலே சேருகிறார்கள் என்று இருந்தால் நன்றாக இருக்கும் என்பதை நான் பணிவோடு சொல்லிக் கொள்கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* அமைச்சர் அவர்களுடைய அந்த வார்த்தைகள் அப்படி மாற்றிக் கொள்ளப்படுகிறது. திரு. தம்புசாமி.

*திரு.வே. தம்புசாமி:* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். பகுதி நேர வேலை என்று. நான் ஆரம்பத்திலேயே சொன்னேன். சாதாரண ஒரு விவசாயத் தொழிலாளிக்கும் கூட குறைந்த பட்ச கூலிச் சட்டம் இருக்கிறது. அவர்களும் காலையில் 8 மணிக்கு.... (குறுக்கீடு)

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* திரு. தம்புசாமி, அவர்கள் சொன்னதும் அதுதான். அவர்கள் பார்ட் டைம் வேலை பார்க்கிறார்கள். அவர்களுக்கு கன்சாலிடேட்டட் பேமென்ட் கொடுக்க முடியுமே தவிர டெய்லி வேஜஸ் கொடுக்க முடியாது என்று சொல்லி இருக்கிறார்கள். ஆகவே, திரும்பத் திரும்ப அதே கருத்தைச் சொல்லிக் கொண்டிருக்காதீர்கள்.

*திரு. வே. தம்புசாமி:* விவசாயத் தொழிலாளி 2 மணி வரையில் வேலை செய்கிறார்கள். ஒரு வேளை உணவு அளிக்கிறார்கள். உணவு அளித்து 20 ரூபாய் சம்பளம் கொடுக்கிறார்கள். ஆகையால் அந்த சம்பளத்தை விட இந்த சம்பளம் மிகக் குறைவாக இருக்கிறது. சாதாரணமாக ஒரு குறைந்த பட்ச கூலி சட்டத்தைக் கூட அந்த... (குறுக்கீடு)

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1995 ஏப்ரல் 27]

திரு. வி.கே. சின்னசாமி: பாயிண்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பாயிண்ட் ஆப் ஆர்டர் ஒன்றுமில்லை, உட்காருங்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. தம்புசாமி அவர்கள் இதற்கு முன்னாலேயும் சட்டமன்ற உறுப்பினராக இருந்திருக்கிறார். அப்பொழுது எல்லாம் வேகமாகப் பேசினாரா என்று எனக்குத் தெரியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அப்பொழுது சம்பளம் மிகக் குறைவாக இருந்திருக்கிறது. புரட்சித் தலைவர் அவர்கள் காலத்திலே என்ன கொடுத்தார்களோ அதையேதான் கொடுத்துக் கொண்டு வந்திருக்கிறார்கள். இப்பொழுது இந்த ஆட்சி இருக்கிற காரணத்தால் சம்பளத்தை உயர்த்தி 100 ரூபாய், 150 ரூபாய் மேலே உயர்த்திக் கொடுத்த பின்னாலே இந்த ரோஷம் எல்லாம் வந்திருக்கிறது என்று நான் கருதுகிறேன். இப்போது அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால் (மேசையைத் தட்டும் ஒலி) அமைச்சர் அவர்கள் சொன்னது இது ஒரு பார்ட்டைம் ஜாப், இதிலே அவர்களுக்கு சம்பளத்தைக் கொடுத்து - அவர்கள் ஆதங்கப்பட்டது என்னவென்றால், சின்னக் குழந்தைகளுக்கு உணவு போடுகிற ஒரு உபாயமான வேலை அந்தப் பணியிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கக்கூடியவர்கள் வயது முதிர்ந்தவர்கள், அவர்கள் விஷயம் தெரிந்தவர்கள், தாய்மார்கள், இவர்கள் போராட்டத்திலே இறங்கக்கூடாது என்று ஆதங்கத்திலேதான் அவர்கள் அதைப் பேசி இருக்கிறார்கள். ஆனால் ஒவ்வொரு முறையும் கேபினட் கூட்டங்களிலே மற்ற இடங்களிலே அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் எவ்வளவு வாதாடியிருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். எனவே, இதனை திசை திருப்புகிற நோக்கத்திலே போகக்கூடாது என நான் கருதுகிறேன். ஒரு நல்ல நோக்கத்திற்காக இருக்கிற ஒரு நல்ல திட்டம். இதிலே அரசு ஊழியர்கள் சம்பளத்தைப் போல் கொடுக்க வேண்டும் என்று இதயபூர்வமாக நீங்கள் சொல்ல விரும்பினால் தயவுசெய்து சொல்லலாம். எனவே, எந்த அளவுக்கு அரசாங்கம் தன்னுடைய சக்தியை முழுமையாகப் பயன்படுத்தி அவர்களுக்கு உதவி செய்ய முடியமோ அந்த அளவுக்கு உதவி இருக்கிறது. அதோடு அவர்கள் சொல்லிய இன்னொரு கருத்து. இதிலே பணியாற்றும் - அரசுப் பணியாளர்களாக இருந்தால் அனுமதி பெற வேண்டும், அவர்கள் ராஜினாமா செய்ய வேண்டும். அதிலே நிறைய பார்மாலிட்டீஸ் இருக்கின்றன. இதிலே அவ்வளவு பார்மாலீட்டீஸ் இல்லை. காரணம், இது பார்ட்-டைம் ஜாப். எனவே, இதைவிட அதிகமான சம்பளத்திலே

நிரந்தரமான வேலை கிடைத்தால் போய்விடுவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதைத்தான் அவர்கள் சொன்னார்கள். எனவே, நீங்கள் இருக்கிற நிலைமையையும் இத்திட்டத்தையும் மனதிலே வைத்துக்கொண்டு பேச வேண்டும். எங்களுக்கு இரண்டிலேயும் அக்கறை இருக்கிறது. நீங்கள் ஒருபக்கம் மட்டும் அக்கறை காட்டுவதுபோலத் தோன்றுகிறது.

பிற்பகல் *6-50*

**திரு. வே. தம்புசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், ஒருபக்கம் மட்டும் அக்கறை காட்டுவதாகச் சொன்னார்கள். அப்படி இல்லை. இரண்டு பக்கமும் எங்களுக்கு அக்கறை உண்டு. முன்னர் இருக்கும்போது வேகமாகப் பேசாமல் இப்போது வேகமாகப் பேசுகிறார் என்று சொன்னார்கள். எந்தக் காலத்திலேயும், யாருக்கும் ஒரு பாதிப்பு வருமேயானால், அதற்காக நிற்கக் கூடியவன் என்ற முறையிலேதான் நான் கேட்டுக் கொண்டு இருக்கிறேனே தவிர....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு.சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதை நான் தவறு என்று சொல்லவில்லை. அந்த தாய்மார்கள் மீது நிச்சயமாக இந்த அரசாங்கத்திற்கு அதிகமாக அக்கறை இருக்கிறது. தினந்தோறும் அந்தக் குழந்தைகளைக் கவனித்துக் கொள்கிறார்கள். அந்த அக்கறை எங்களுக்கு இருக்கிறது. நீங்கள் நிலைமைகளைப் புரிந்து கொள்ளவேண்டும் என்பதற்காகச் சொல்லுகிறேன் காரணம், குழந்தைகளாக ஒரு சங்கத்தை ஆரம்பித்து, உங்களிடத்திலே வந்து முறையிட முடியாது. அதற்காக, நாமாகத்தான் பேசி ஆகவேண்டும். எனவே, அதையும் மனதிலே கொண்டு பேசவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தைப் பொறுத்தமட்டிலே, குழந்தைகளுக்கு உணவு அளிப்பது ஒன்றுதான் முதல், தலையாய கடமை. அதற்கு அடுத்துத்தான் பணியாளர்களுடைய சம்பளம். ஆக, இரண்டையும் நீங்கள் இணைக்கின்றபோது இதில் எது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை மனதிலே கொண்டு பேசவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மத்திய அரசால் செயல்படுத்தப்படுகிற, ஐ.சி.டி.எஸ். நீங்கள் சொன்னீர்களே, அங்கன்வாடி பணியாளர்கள் திட்டம், அதிலேயும் குறைந்தபட்ச கூலிச் சட்டத்தில் குறிப்பிட்டதைவிட குறைந்த சம்பளத்தைத்தான் மத்திய அரசு

அந்தப் பணியாளர்களுக்கும் நிர்ணயம் செய்திருக்கிறது. நேற்றையதினம் பாராளுமன்றத்திலே அதற்குப் பதில் அளித்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு.வே. தம்புசாமி, சீக்கிரம் பேசிமுடித்து விடுங்கள்.

*திரு. வே. தம்புசாமி:* பேரவைத்துணைத் தலைவர் அவர்களே, ஒரு பக்கம் மட்டுமல்ல, இரண்டு பக்கமும் இருக்கக்கூடிய பிரச்சினைகளைத்தான் நான் சொல்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், அதற்காகச் சொல்ல வேண்டியிருக்கிறது. இப்போது அவர்கள் சம்பளக் கோரிக்கை வைத்துப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை அழைத்துப் பேசவேண்டுமென மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

*மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி:* பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, போராட்டம் என்பது எப்படி இருக்க வேண்டும் என்றால் மற்ற போராட்டம் என்பது வேறு. இதிலே போராட்டம் நடத்துகின்றபோது, இது ஒரு 'சென்சிடிவ்'- விஷயம். குழந்தைகளுக்குச் சோறு போடாமல் இருப்பது என்பதை இந்த அரசினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எந்தக் காலத்திலேயும் அனுமதிக்கமாட்டார்கள். சத்துணவுக்கூடங்களைப் பூட்டிவிட்டு, அதிலே உள்ள குழந்தைகளுக்கு நாங்கள் சோறுபோடுவதற்குக் கூட அனுமதிக்க மாட்டோம் என்று சொல்லி போராட்டம் நடத்தினால், எப்படி அவர்களை அழைத்துப் பேசவேண்டும் என்று நீங்கள் சொல்லுகிறீர்கள் என்பதை விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. வே. தம்புசாமி:* பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் தொடர்ந்து கோரிக்கை வைக்கிறார்கள். அவர்களுடன் பேச மறுக்கிறபோதுதான், அவர்களுடைய அதிருப்தியைக் காட்டுவதற்கு அவர்கள் முன்வருகின்றார்கள். ஆகவே, அவர்களை அழைத்துப் பேசமாட்டேன் என்பது ஒரு ஜனநாயக நாட்டில், ஜனநாயக உரிமைகூட மறுக்கப்படுவது என்பது நியாயம் அல்ல.

*மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி:* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிரச்சினைகள் தெரியாமல் இருக்கிற சங்கங்களை அழைத்துத்தான் பேசவேண்டுமேயொழிய, பிரச்சினை தெரிந்த, நீங்கள் நடத்துகின்ற சங்கங்களைக் கூப்பிட்டுப் பேசுவதற்கு அவசியமே இல்லை. அவ்வளவு விஷயங்களையும் அவர்கள் தெரிந்து கொண்டிருக்கிறவர்கள்.

திரு.வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாங்கள் நடத்துகின்ற சங்கம் என்பதால் அழைத்துப் பேசமாட்டேன் என்று சொல்வது, ஜனநாயகத்திற்கு விரோதமானது....

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் நல்ல அறிவாற்றல் படைத்தவர்கள். உங்களைப் போல அவர்கள் விஷயம் அறிந்தவர்கள். அவர்களுக்கு நாங்கள் சொல்லிக் கொடுக்கின்ற அளவிலே இல்லை என்பதைத்தான் தெரிவித்தேன்.

திரு.வே. தம்புசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, போராடுகிறவர்களை அழைத்துப் பேசவேண்டும் என்ற மரபு இருக்கிறதா, இல்லையா? எல்லாத் துறைகளிலேயும் போராடுகிறவர்களை அழைக்கின்றார்கள், பேச்சுவார்த்தை நடத்துகின்றார்கள்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இவர்களை அழைத்து நானே பலமுறை பேசியிருக்கிறேன். ஆனால், குழந்தைகளுக்குச் சோறு போடமாட்டேன், பூட்டி விடுவேன் என்று போராட்டம் நடத்தும்போது அவர்களை அழைத்துப் பேசுவதில் என்ன பலன் இருக்கிறது? குழந்தைகளுக்குச் சோறுபோட்டுவிட்டு, போராட்டம் நடத்துகிறோம் என்று அறிவித்தால், அவர்களை மனதார வரவேற்றுப் பேசலாம். அதிலே தவறு இல்லை. போராட்டம் நடத்தி உரிமைகளைக் கேட்க வேண்டியது பணியாளர்களுடைய கடமை. ஆனால், நான் குழந்தைகளுக்குச் சோறுபோட மாட்டேன், பூட்டிவிடுவேன் என்று சொல்லிவிட்டு, போராட்டம் நடத்துகின்றவர்களுடன் நான் பேசவேண்டும், எப்படி நான் பேசமுடியும் என்பதை நீங்கள் தெரிவிக்கவும்.

திரு.வே. தம்புசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேசமுடியாது என்ற நிலை வந்தபோது....

பிற்பகல் 6.55

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. தம்புசாமி, இதுவரை அமைச்சரிடம் நீங்கள் கேட்டுக் கொண்டிருந்தீர்கள்; நானும் பார்த்துக் கொண்டிருந்தேன். இப்போது அமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொல்லி விட்டார்கள். சத்துணவு எந்தக் காரணத்திற்காக, எந்த நோக்கத்திற்காக ஆரம்பித்தார்களோ, அதை விட்டுவிட்டு, அந்தக் குழந்தைகளை வயிற்றுப் பசியோடு விட்டுவிட்டு, பூட்டிவிட்டு, ஒரு போராட்டம் நடத்துவோம் என்று சொன்னால், அதை நாங்கள்

ஏற்கமாட்டோம், அமைதியாக வந்து கேட்டால் நாங்கள் பேசுவதற்குத் தயாராக இருக்கிறோம், பேசியிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இவ்வளவு விளக்கத்தையும் சொன்னதற்குப் பிறகும், மீண்டும் மீண்டும் இதிலே நீங்கள் போய்ப்பேசுவது என்பது, சரியாக இருக்காது. சீக்கிரம் வேறு பிரச்சினையைப் பேசி முடியுங்கள்.

*திரு. வே. தம்புசாமி:* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேசமாட்டேன் என்று சொல்வதிலே என்ன நியாயம் இருக்கிறது?

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* திரு. தம்புசாமி, பேசமாட்டேன் என்று அவர்கள் சொல்லவில்லை. தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். திரும்பத் திரும்ப நீங்கள் உங்கள் கருத்திலே தான் இருக்கிறீர்கள். நீங்கள் தவறான கருத்தைச் சொல்லிக் கொண்டே இருக்கிறீர்கள். (குறுக்கீடு) சத்துணவு மையத்தைப் பூட்டிவிட்டு, பேசுவதற்கு வாருங்கள் என்று சொன்னால், நாங்கள் பேசமாட்டோம், ஆனால், அமைதியாக, ஜனநாயக முறையில் கேட்டால், நாங்கள் பேசுவோம் என்று அமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். அதற்குப் பின்னால், உங்களுக்கு என்ன விளக்கம் வேண்டும்? (குறுக்கீடு) திரு. தம்புசாமி, அவர்கள்தான் ஜனநாயக முறையில் நீங்கள் வாருங்கள்; நாங்கள் பேசுவதற்குத் தயாராக இருக்கிறோம் என்று சொல்லி விட்டார்கள். அடுத்த கட்டத்திற்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்)

*திரு. கி. பாலசுப்பிரமணியன்:* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர்.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:* திரு. பாலசுப்பிரமணியம், இதிலே பாயின்ட் ஆப் ஆர்டர் ஒன்றுமில்லை; உட்காருங்கள். (குறுக்கீடு)

*திரு. தேனி பன்னீர்செல்வம்:* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே........

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* திரு. பன்னீர்செல்வம், உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. தம்புசாமி, தயவுசெய்து நீங்கள் என்னிடம் பேச வேண்டும்.

*திரு.வே. தம்புசாமி:* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நானே அமைச்சர் அவர்களைக் கேட்டேன்.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* திரு. தம்புசாமி, அதையேதான் திரும்பத் திரும்பப் பேசுகிறீர்கள். அமைச்சர் அவர்கள்

சொல்லி விட்டார்கள். நீங்கள் நியாயமாகக் கேட்டால், நாங்கள் பேசுவதற்குத் தயாராக இருக்கிறோம் என்று சொல்லிவிட்டார்கள். அதோடு முடித்துக் கொள்ளுங்கள். பேச்சு வார்த்தைகளுக்கு தயாராக இருக்கிறோம், நியாயமாகக் கேட்டால், என்று அவர்கள் சொல்லி விட்டார்கள். அந்தப் பிரச்சினையை அதோடு முடித்துக்கொள்ள வேண்டும். *(குறுக்கீடு)* அடுத்த பிரச்சினைக்குச் செல்லுங்கள். *(குறுக்கீடு)*

**திரு. வே. தம்புசாமி:** பேசமாட்டேன் என்று சொல்வது...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் திரும்பத் திரும்ப அதையே பேசிக்கொண்டிருக்க முடியாது.

**மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே........

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அமைச்சர் அவர்களே, இதிலே வேண்டாம். இந்தப் பிரச்சினைக்கு வேண்டாம். *(குறுக்கீடு)* இந்தப் பிரச்சினைக்கு வேண்டாம். *(குறுக்கீடு)* திரு. தம்புசாமி, உட்காருங்கள்; மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர்.

**மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லி, நான் பலமுறை அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறேன். இவர்கள் எப்போதுமே, இந்த மானியக் கோரிக்கை வருகிறது என்றால், அதற்கு இரண்டு தினங்களுக்கு முன்னால் போராட்டம் நடத்துகிறார்கள். மானியக் கோரிக்கையிலே, நாங்கள் அவற்றையெல்லாம் அறிவித்தவுடன், 'நாங்கள்தான் அவற்றையெல்லாம் செய்தோம்' என்று அவர்கள் பிரச்சாரம் செய்கிறார்கள். ஆகவேதான் இந்த முறை மானியக் கோரிக்கை முடியட்டும்; அதற்குப் பின்னாலே பேச்சுவார்த்தை நடத்தலாம் என்று மாண்புமிகு உறுப்பினரிடத்திலே அறிவித்தேன். இதற்குப் பின்னால், பேச்சு வார்த்தை நடத்த எப்போதும் தயார்.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தம்புசாமி, பேச்சுவார்த்தை நடத்தத் தயார்; எனவே, அடுத்த கோரிக்கைக்குச் செல்லுங்கள். நானும் அப்பொழுதிருந்தே பார்க்கிறேன். பேச்சுவார்த்தை, பேச்சுவார்த்தை என்றே மணி *6.57* ஆக்கிவிட்டீர்களே?

**திரு.வே. தம்புசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பேசுவோம் என்று சொன்னதற்கு நான் உண்மையிலேயே நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, இப்போது ஒரு குழந்தைக்கு, காய்கறி மற்றும் மற்றவற்றிற்கு வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருக்கிற தொகை என்பது போதாது. அதனைக் கூடுதல் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு, சோயா மாவு, 50% கலக்கப்படுகிறது. அப்படி சோயா மாவு கலக்கப்படுவதால், அதிலிருந்து வரும் ஏதோ ஒருவகை வாடை, குழந்தைகளுக்கு பிடிக்காமல், சாப்பிடுவதே கிடையாது. இது எல்லா இடங்களிலும் இருக்கக்கூடிய பிரச்சினை. ஆகவே, சோயா மாவை நீக்கி, பருப்பாக வழங்குவதற்கு........

*மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சோயா மாவு கலக்கப்படுவது என்பது, உலக வங்கித் திட்டத்தின்கீழ் வழங்கப்படுவதாகும். அதாவது வைட்டமின் ஏ டெஃபிசியன்ஸி குழந்தைகளுக்கு ஏற்படுகிறது. குழந்தைகளுக்கு சில நேரங்களில் மருந்து பிடிக்கவில்லை என்றாலும், அவர்கள் உடல்நலத்தைக் கருதி, அதைக் கொடுப்பதைப்போல, வைட்டமின் ஏ டெஃபிசியன்ஸியைப் போக்க வேண்டுமென்றால், சோயா மாவைக் கலந்தளிக்க வேண்டும் என்பது, உலக வங்கியினுடைய உத்தரவு. அதை நல்ல முறையிலே கொடுத்து வருகிறோம். எந்த இடத்திலேயும், குழந்தைகள் அதைச் சாப்பிடாமல் போவதில்லை. இன்னும் கேட்டால், அதிலே பல்வேறு பலகாரங்களைச் செய்து கொடுக்கும்போது, இன்னும் நல்லமுறையிலே அவற்றை உபயோகித்துச் சாப்பிடுகிறார்கள். எந்த இடத்திலேயிருந்தும் அப்படிப்பட்ட புகார்கள் வரப்பெறவில்லை.

*திரு. வே. தம்புசாமி:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து, சமூகநலத் துறை மூலம், திருமண உதவித் தொகை வழங்கப்படுகிறது. நான் சென்ற ஆண்டே சொன்னேன், அது நிறுத்தப்பட்டுள்ளது என்று. இப்போதும் கூறுகிறேன். அந்தத் திருமண உதவித் திட்டம் இப்போது நிறுத்தப்பட்டிருக்கிறதா அல்லது வழங்கப்படுகிறதா என்றும். அப்படி வழங்கப்படுகிறது என்றால், யாருக்கு வழங்கப்படுகிறது, எதற்கு வழங்கப்படுகிறது என்பதும் தெரியவே இல்லை. ஆனால் உண்மையிலேயே ஏழைக் குடும்பத்திலே தந்தை இல்லாத குடும்பத்திலே, தாய் இல்லாத குடும்பத்திலே அந்த திருமண உதவி கேட்டு மனுப் போட்டால் கூட அது திருப்பி அனுப்பப்படுகிறது என்பதால் உண்மையிலேயே அந்தத் திட்டம் இருக்கிறதா, செயல்படுகிறதா என்பதை அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 7.00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மனுப்போட்டு திருப்பி அனுப்பப்படுகிறது என்பது வரைக்கும் சொல்கிறீர்கள். அப்படியானால் அந்தத் திட்டம் இருந்து தானே திருப்பி அனுப்பப்படுகிறது ? அது இல்லை என்றால், இல்லை என்று சொல்லி இருப்பார்கள் அல்லவா? பிராசஸிலே திரும்பி வருவதைப் போய் திட்டம் இருக்கிறதா, இல்லையா என்று கேட்டால் என்ன பொருள்?

**மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தத் திருமண உதவியும் இந்த ஆட்சியிலே நிறுத்தப்படவில்லை. இன்னும் கேட்டால், ஆதரவற்ற மகளிர் திருமண உதவிக்கு 1000 ரூபாய் தான் கடந்த 10 ஆண்டுக் காலமாக இருந்தது. மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதற்குப் பின்னாலேதான், புரட்சித் தலைவி அவர்கள் அந்த ஆயிரம் ரூபாயை இரண்டாயிரம் ஆக உயர்த்தி வழங்கி இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டத்தின்படி 1992-93-ல் 62 பயனாளிகளுக்கு ஒரு லட்சம் ரூபாய் தான் ஒதுக்கினோம். ஆனால், 1.24 லட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டு இருக்கிறது. 1994-95-ல் 1.30 லட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டு இருக்கிறது. மனு திருப்பி அனுப்பப்படுகிறது என்று சொன்னால், கடந்த காலங்களிலே எல்லாம் இந்தத் துறையை நம்பி, இந்தத் திருமண உதவித் திட்டத்தை நம்பி கடன் வாங்கி எல்லாம் செய்து பின்னாலே இந்த திருமண உதவித் திட்டத்திற்காக பணத்தை தேடி அலைவார்கள். ஆனால், இப்போது அப்படி இல்லை. முன்னெச்சரிக்கையாகவே, ஒதுக்கப்படுகிற தொகைகளுக்கு உட்பட்டு அந்தப் பயனாளிகளை தேர்ந்தெடுத்துக் கொண்டு, மீதிப் பயனாளிகளுக்கு, அவர்களுக்கு உடனடியாக மறுத்து கடிதம் எழுதி அனுப்பப்படுகிறது. இது முதல் முறையாக தமிழ்நாட்டிலேதான் இந்தத் திட்டத்தில் இவ்வளவு தெளிவாக செயல்படுகிறது. இந்தத் துறையை நம்பி கடன் வாங்கி கஷ்டப்படக்கூடாது என்கின்ற நல்ல உணர்வோடு, எடுக்கப்படுகிற பயனாளிகள் பட்டியல் அனைத்தையும் எடுத்துக்கொண்டு, இல்லாதவர்களுக்கு இந்தத் திட்டத்தில் உங்களுக்கு இல்லை என்கின்ற கடிதம் அவர்களுக்கு உடனடியாக அனுப்புகிறோம்.

**திரு. வே. தம்புசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டப்படி வழங்கப்படுகிற தொகை ஏழ்மை நிலையில் இருக்கிற குடும்பங்களுக்குக் கிடைக்கவில்லை.

1995 ஏப்ரல் 27]

*மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தில் ஏழ்மை நிலையிலே உள்ளவர்களுக்கு மட்டும்தான் உதவி கிடைக்க முடியும்; இல்லை என்றால், இந்தத் திட்டத்திலே கிடைக்க முடியாது. அதனாலேதான் மனு திருப்பி அனுப்பப்படுகிறது. அதற்கு முன்னாலே இதிலே எல்லா சலுகைகளும் உண்டு. திருமண மண்டபத்திலே கல்யாணம் செய்பவர்கள், தங்க செயின், தங்க தாலி, இவற்றை எல்லாம் வாங்கிப் போடக்கூடியவர்களுக்கும் சலுகைகள் இருந்தன. ஆனால் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் இதை மிகவும் வெகுவாகக் கண்காணித்து, திருமண மண்டபத்திலே திருமணம் செய்தால், தற்போது அவர்களுக்கு திருமண உதவி இல்லை. ஏனென்றால் அவர்கள் 5 ஆயிரம், 4 ஆயிரம் ரூபாய் கொடுத்து மண்டபம் எடுத்து பண்ணக்கூடிய நிலையில், இந்த 5 ஆயிரம் ரூபாய் உதவித் தொகை அவர்களுக்குத் தேவையில்லை. அதேபோல், தங்கத்திலே செயின் செய்து, தாலி போடக் கூடியவர்களுக்கு இந்த திருமணத் திட்டத்தில் உதவி இல்லை. இன்றைக்கு எல்லாவற்றையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் குறுக்கி இருக்கிறார்கள். அதன்மூலம் வீட்டிலே, கோயிலிலே திருமணம் நடத்தக்கூடிய ஏழைத் தாய்மார்களுக்கு, அவர்களுடைய பிள்ளைகளுக்கு இந்த உதவி நேரடியாகப் போய்ச் சேரக்கூடிய அளவிற்கு இந்தத் திட்டத்தில் பல்வேறு விதிமுறைகள் இன்றைக்கு போடப்பட்டு இருக்கிறது. அதனாலேதான் நீங்கள் சொல்கிற பெட்டிஷன்களுக்கு எல்லாம் எங்களாலே கொடுக்க இயலவில்லை.

*திரு.வே. தம்புசாமி:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கொடுக்கிற பெட்டிஷன்களுக்கு கொடுக்க வேண்டும் என்று நான் கூறவில்லை. இப்போதும் சொல்வேன்; சென்ற ஆண்டும் சொன்னேன். ஏழைகளுக்கு அந்த உதவி கிடைக்கவில்லை. அப்படியானால் நீங்கள் கொடுத்த பட்டியலை, என்னுடைய ஒன்றியத்திலே கொடுத்த பட்டியலை நீங்கள் கொடுத்தால் நான் நிரூபிக்கத் தயார் என்று சொன்னேன்.

*மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலேயும் இந்தப் பட்டியல் இருக்கிறது. நீங்கள் உங்கள் மாவட்ட ஆட்சித் தலைவரை அணுகி உங்கள் ஒன்றியத்தினுடைய பட்டியலை தாராளமாகப் பெற்றுக் கொள்ளலாம்; அதிலே எந்த சந்தேகமும் இல்லை.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* திரு. ஜி. பழனிசாமி.

*திரு. ஜி. பழனிசாமி:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் அவர்கள் சொல்கிற

விதிமுறைகளை நான் ஏற்றுக் கொள்கிறேன். அவை அத்தனையும் உண்மை. ஆனால், அதிலே ஒரு திருத்தத்தை அவர்கள் கொண்டுவர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம் என்பதில் கிராமப்புறங்களிலே 8-ஆம் வகுப்பு படித்திருக்கிற பெண்களுக்கு 18 வயதிலே திருமணம் நடைபெறுகிறது. ஆனால், திருமண வயதே 20 வயதாக இருந்தால் தான் அந்தத் திட்டத்தின்கீழ் பண உதவி வழங்கப்படும் என்று அந்த உத்திரவு இருக்கிற காரணத்தினால், சாதாரண ஏழை எளிய மக்களுக்கு, யாருக்குக் கிடைக்க வேண்டுமோ அவர்களுக்கு அது கிடைக்காமல் போய்விடுகிறது. ஆகவே, அதைப் பெற 18 வயதாக நீங்கள் அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமண வயது என்பதே 21 வயதுதான். அதைக் குறைக்கின்ற எண்ணம் அரசின் பரிசீலனையிலேயே இல்லை. 21 வயதிலே திருமணமானால்தான், மெட்சூரிட்டி உள்ள வயதிலே திருமணமானால்தான் 3 கிலோ எடையுள்ள குழந்தை பிறக்கும், நல்ல திடகாத்திரமான குழந்தை பிறக்கும், உடல் ஊனம் இல்லாத குழந்தை பிறக்கும். இவை எல்லாம் இருக்கிற காரணத்தினால், 18 வயதிலே திருமணம் செய்தால், அவை எல்லாம் நடைமுறையிலே எடுபடாது. ஆகவேதான் 21 வயது என்பதை வைத்து இருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தம்புசாமி, முடித்துவிட்டீர்கள் அல்லவா? (குறுக்கீடு)

**திரு. சிங்கை கோவிந்தராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாய்ன்ட் ஆஃப் ஆர்டர்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தம்புசாமி பேசட்டும். (குறுக்கீடுகள்) அமைச்சர் சொல்லி இருக்கிறார்கள் அல்லவா? (குறுக்கீடு) அதிலே ஒன்றும் வேண்டாம். 8 ஆம் வகுப்பு 18 வயதிலே முடித்தவர்கள் பிறகு போய் 21 வயதிலே கல்யாணம் பண்ணிவிட்டுக் கேட்கலாம் அல்லவா! அது ஒன்றும் பெரிதல்ல. (குறுக்கீடு) திரு. தம்புசாமி முடித்துவிடுங்கள்.

**திரு. வே. தம்புசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூகநலத்துறையின் மீதான மானியக் கோரிக்கை மீது ஒருசில கருத்துகளைக் கூற அனுமதித்த தங்களுக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

## 6. விதி 110-ன் கீழ் அமைச்சரின் அறிக்கை.

### இறால் பண்ணைகளால் பொதுமக்களும் விவசாய நிலங்களும் பாதிக்கப்படுவதைத் தடுக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து மீனளத்துறை அமைச்சரின் அறிக்கை.

*பிற்பகல் 7.05*

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* பேரவை விதி 110-ன் கீழ் ஒரு முக்கிய அறிவிப்பினைப் பேரவைக்கு வெளியிட மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர் அவர்கள் என்னிடம் அனுமதி கோரியுள்ளார்கள். அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இப்போது அந்த அறிவிப்பினைப் பேரவைக்கு வைக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

*மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டில் 1,000 கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரை அமைந்துள்ளது என்பது எல்லோரும் அறிந்த ஒன்று. கடற்கரையைச் சார்ந்துள்ள உவர்நீர் பரப்புகள் இறால் பண்ணை அமைப்பதற்கு மிகவும் ஏற்றதாக அமைந்துள்ளன என்ற காரணத்தினால், பல தனியார் நிறுவனங்கள் கடற்கரையை ஒட்டி தனியார் நிலங்களில் இறால் பண்ணைகள் அமைத்தும், அமைக்க முயற்சித்தும் வருகின்றன. அதிலும் குறிப்பாக நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டத்தில் பெரும்பான்மையான இறால் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த இறால் பண்ணைகள் மூலம் விவசாய நிலங்கள் இறால் பண்ணை நிலங்களாக மாற்றப்பட்டு வருகின்றன என்றும், அதனால் விவசாய நிலங்களை இழப்பதோடு மட்டுமல்லாமல் விவசாயத்தையே நம்பி வாழ்கின்ற ஏழைக் கூலித் தொழிலாளர்களுடைய வாழ்க்கை வேலைவாய்ப்பு இன்றி இருண்டுவிடுமென்றும், குடிநீர் நிலைகள், நீர்பாசன ஏரிகள் மற்றும் வாய்க்கால்கள், குடியிருப்புப் பகுதிகள் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளன என்றும், இறால் பண்ணை கழிவு நீரால் இனம் தெரியாத நோய்கள் வருகின்றனவென்றும் காரணம் காட்டி பல்வேறு அமைப்புகள் இறால் பண்ணை அமைப்பதை எதிர்த்து போராட்டம் நடத்தி வந்தன. இந்த நேரத்தில் நமது மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நாகை காயிதே மில்லத் மாவட்டத்துக்கு 15-9-1994 அன்று மக்கள் நலத் திட்டங்களை அறிமுகப்படுத்திடச் சென்றிருந்தபோது, நமது மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பேருரையாற்றியதில் ஒரு பகுதியை நினைவுகூரக் கடமைப்பட்டுள்ளேன்.

"சமீப காலமாக இந்த மாவட்டத்து மக்களை பாதிக்கின்ற ஒரு முக்கியமான பிரச்சினையை எங்கள் அரசு உன்னிப்பாக கவனித்து வருகின்றது. மீன் வளத்தைப் பெருக்குவதற்காக, கடற்கரையோர மாவட்டங்களில், உப்புத் தன்மையுடைய நீரைக் கொண்டு இறால் மீன் பண்ணைகள் அமைப்பதால் எழுந்துள்ள பொருளாதார மற்றும் சமூகப் பிரச்சினைகளைப் பற்றித்தான் நான் குறிப்பிடுகிறேன். இன்று தமிழ்நாட்டில் உள்ள பல கடற்கரையோரக் கிராமங்களில், இறால் மீன் பண்ணைகள் மற்றும் மீன் பண்ணைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. ஆனால், இந்த இறால் பண்ணைகளில், கடல் உப்பு நீரைத் தொட்டிகளில் தேக்கி வைப்பதாலும், திறந்த கால்வாய்கள் வழியாக கடல் நீரை பண்ணையில் உள்ள தொட்டிகளுக்குக் கொண்டு செல்வதாலும், இந்த உப்புத் தன்மை நிலத்தடி நீரையும் பண்ணைக்கு அருகே அமைந்துள்ள விவசாய நிலங்களையும் மண் வளத்தையும் பாதித்து வருவதையும் பல இடங்களில் இதனால் சுற்றுப்புறச் சூழலுக்கும் தீங்கு உண்டாகும் சூழ்நிலைகள் அமைந்துள்ளதையும் இதன் காரணமாக தேவையற்ற சமூக இடர்பாடுகள் ஏற்பட்டு வருவதையும் நான் நன்கறிவேன்.

தொழில் வளத்தைப் பெருக்க வேண்டும் என்று நாம் விரும்பும் அதே நேரத்தில் வேளாண் தொழிலுக்கு எள்ளளவும் குந்தகம் ஏற்பட்டு விடக்கூடாது என்பதிலும், சுற்றுப்புறச் சூழல் பாதிக்கப்படாமல் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதிலும், உங்கள் அன்புச் சகோதரியின் அரசு மிக உறுதியாக உள்ளது. நிகழ்காலத்தில் கிடைக்கும் ஒரு சிறு இலாபத்திற்காக எதிர்காலத்தை பாதிக்கும் செயல்களை நிச்சயம் நாங்கள் அனுமதிக்க மாட்டோம். சுற்றுப்புறச் சூழலையும் நமக்கு இயற்கை அன்னை அளித்த வளங்களையும் ஊனப்படுத்திவிடக்கூடாது என்பதில் நான் மிகுந்த தீவிரம் காட்டி வருகின்றேன். அடுத்த தேர்தலைப் பற்றி கவலைப்படுவதை விட்டுவிட்டு, அடுத்த தலைமுறையைப் பற்றி கவலைப்படுகின்ற (மேசையைத் தட்டும் ஒலி) அக்கறை கொண்டிருக்கிற ஒரு அரசு தான் உங்கள் அன்புச் சகோதரியின் அரசு. எனவே தான் இறால் மீன் பண்ணைகள் அமைப்பதால் எழுந்துள்ள பிரச்சினைகளை ஆராய்வதற்காக கடந்த மாதம் எனது ஆணையின் பேரில் ஒரு வல்லுநர் குழு (Expert Committee) ஏற்படுத்தப்பட்டது.

இந்தக் குழு, கடலோர கிராமங்களில் இறால் மீன் பண்ணைகள் அமைப்பதற்கு அனுசரிக்க வேண்டிய வரைமுறைகளையும் நிபந்தனைகளையும் வகுத்துக் கொடுக்கும். மேலும் தனி நபர் இலாபத்தை மட்டுமே கருத்தில் கொண்டு நல்ல விளை நிலங்கள் இறால் மீன் பண்ணைகளாக உருவாவதைத் தடுக்கவும், மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் மீனவர்களின் மரபு சார்ந்த முறையில் கடற்கரைப்

பகுதிகளையும் கடல் நீரையும் உபயோகிக்கின்ற உரிமைகளை பாதுகாக்கவும், கடற்கரையின் தொடர்ச்சியை பாதிக்கின்ற அளவில், பண்ணைகள் ஏற்படுவதைத் தடுக்கவும், கடலோர கிராமங்களில் வசிக்கும் மக்கள் இதுவரை அனுபவித்து வந்த பாதை உரிமை போன்ற மரபு வழி உரிமைகள் பாதிக்கப்படாமலும், நிலத்தடி நீர் பாதிக்கப்படும் விதத்தை, தடுக்கும் உத்திகளைக் கண்டறிவதும் இந்த குழுவின் நோக்கமாகும்.

மேலும், இந்த பண்ணைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீரின் நச்சுத் தன்மையை அறிவதோடு, நிலம், காற்று, ஆகாயம் ஆகியவற்றிற்கு இந்த மாசுகளால் ஏற்படுகின்ற பாதிப்பை தவிர்ப்பதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய தடுப்பு நடவடிக்கைகள் குறித்தும் இந்தக் குழு முழுமையாக ஆராய்ந்து தனது பரிந்துரைகளை வழங்கும்.

எனவே, நடைமுறையில் உள்ள விவசாய விளைநிலங்கள் பாதிக்கப்படாமலும், சுற்றுப்புறச் சூழல் கெடாமலும், இறால் மீன் பண்ணைகள் அமைக்கின்ற புதிய வரைமுறைகளை மிக விரைவில் எங்கள் அரசு வெளியிடும். சுற்றுப்புறச்சூழல், எதிர்கால சந்ததியினரின் நல்வாழ்க்கை, மக்களின் எதிர்பார்ப்புகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு உங்கள் சகோதரியின் அரசு இந்த பிரச்சினையில் நல்ல முடிவுகளை எடுக்கும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 7-10

இம் மாவட்டத்து விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், பொதுமக்கள், இதுகுறித்து தேவையற்ற கவலையிலும், பிரச்சினையிலும் ஈடுபட வேண்டாமென்று இந்த கூட்டத்தின் வாயிலாக நான் வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

தேவையற்ற முறையில், இந்தப் பிரச்சினையை பூதாகாரமாக்கி, மக்கள் மனதில் ஒரு பீதியை உண்டாக்குகின்ற முயற்சியில் யாரும் ஈடுபடக்கூடாது என்பதே எனது வேண்டுகோள். அதேநேரத்தில், இந்த கட்டுப்பாட்டை மீறுபவர்களை பார்த்துக்கொண்டு இந்த அரசாங்கம் கை கட்டிக்கொண்டு, வாளா இருக்காது என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி) சுட்டிக் காட்டுவதும் எனது கடமை என்று கருதுகின்றேன்."

மேற்கூறிய மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பேருரையின் அடிப்படையில் ஆற்றல் மிக்க நமது தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்ததற்கிணங்க இப்பிரச்சினை குறித்து ஆராய்வதற்காக ஒரு வல்லுநர் குழுவை அமைத்து, அந்த வல்லுநர் குழு விரைவில்

அறிக்கை தயார் செய்து அரசுக்கு அனுப்ப வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணை பிறப்பித்தார்கள். அந்த ஆணையின்படி, மீனளத்துறை ஆணையாளர் அவர்கள் தலைமையில் பதினைந்து பேர் கொண்ட வல்லுநர் குழு ஒன்று 23-8-1994 அன்று அமைக்கப்பட்டு, அந்தக் குழுவும் தனது அறிக்கையை 1994 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் அரசுக்கு அனுப்பி வைத்தது.

இறால் பண்ணைத் திட்டம் அரசின் மூலம் நடைமுறையிலில்லாத வேளையில், பல தனியார் நிறுவனங்கள் அவர்களாகவே முன்வந்து அரசின் முன் அனுமதியின்றி, எந்தவித உரிமமும் வழங்கப்படாத நிலையில், கட்டுப்பாடு இல்லாத, ஒழுங்குமுறையில்லாத இறால் பண்ணைகள் அமைத்தல் கூடாது என்றும், இறால் பண்ணைகள் வைப்பதற்கு பல்வேறு விதிமுறைகளை வைத்து விவசாயமும், விவசாய நிலங்களும், குடிநீர் நிலைகளும், நீர்ப்பாசன ஆதாரங்களும், சுற்றுப்புறச்சூழலும் பாதிக்கப்படாத வகையில் இறால் பண்ணைகளை முறைப்படுத்துதல் அவசியம் என்றும் வல்லுநர் குழு அறிக்கை சமர்ப்பித்தது. வல்லுநர் குழு அறிக்கையை அரசு தீவிரமாக ஆராய்ந்து, தமிழ்நாடு நீர்வாழ் உயிரின வளர்ப்பு (முறைப்படுத்துதல்) சட்டம், சட்டமன்றத்தில் சட்டமாக்கப்பட்டது. மேற்படி சட்டம் விவசாயிகளுக்கும், விவசாயத்தைச் சார்ந்துள்ளவர்களுக்கும் பயன்படும் வகையிலும், சுற்றுப்புறச் சூழல் பாதிக்கப்படாத வகையிலும் பல்வேறு பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது. உதாரணமாக, ஒருவர் இறால் பண்ணை அமைக்க விரும்பினால் அவர் மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சித் தலைவரை தலைவராகக் கொண்ட குழுவிற்கு விண்ணப்பிக்க வேண்டும். அவ்வாறு பெறப்பட்ட விண்ணப்பத்தை மாவட்டக் குழு, உரிமம் வழங்கப்படுவதற்கான விண்ணப்பம் சட்டத்தின் விதிமுறைகளுக்கு இணங்க உள்ளதா என்பதையும், நீர்வாழ் உயிரினம் வளர்ப்பதற்கு தகுதியான இடந்தானா என்பதையும், விவசாய பயிர் நிலங்கள் பயன்படுத்தப்படுகிறதா என்பதையும், நிலத்தடி நீர் எடுக்கப்படுவதை எதிர்நோக்கி அமைகின்றதா என்பதையும் ஆராயும். பயிர் நிலங்கள் பயன்படுத்தப்பட்டாலோ, நிலத்தடி நீர் எடுக்கப்பட்டாலோ உரிமம் வழங்குவதற்கு மீனளத் துறை ஆணையர் அவர்களுக்கு மாவட்டக் குழு பரிந்துரை செய்யாது. மேலும், சட்டத்தில் நஞ்சை நிலங்கள், இடம் விட்டு இடம் பெயரும் பறவைகளின் வழித்தடங்கள் மற்றும் இன வளர்ச்சிக்கான நிலங்கள், சரணாலயங்கள், தேசியப்பூங்காக்கள், பாதுகாக்கப்பட்ட பரப்பினங்கள், உயிரின வாழ்வுக்குரிய இயற்கைச் சூழல்களான ஒதுக்குப்புறங்கள், சமூகப் பாதுகாப்பிற்காக அல்லது வனவள உற்பத்திக்காக உட்படுத்தப்பட்ட பரப்பினங்கள், மரபு

வழியிடங்கள் அல்லது தொழுகை இடங்கள் போன்ற இடங்களில் இறால் பண்ணை அமைப்பது முழுவதுமாகவே தடை செய்யப்பட்டுள்ளன. அதேபோல கடல் நீரை ஆதாரமாகக் கொண்ட பண்ணைகளுக்கும், கழிமுக நீரை ஆதாரமாகக் கொண்ட பண்ணைகளுக்குமாக, ஒவ்வொரு பண்ணையும் எவ்வாறு அமைய வேண்டும், எவ்வளவு இடைவெளி அமைய வேண்டும் என்ற விதிமுறைகள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. அதேபோல மக்கள் வாழ்கின்ற பகுதியிலிருந்து எவ்வளவு தொலைவிற்கு மேல் இறால் பண்ணைகள் அமைக்கப்பட வேண்டும் என்றும் சட்டத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

சட்டத்தில் குறிக்கப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு மாறாக தவறான தகவல் தந்தோ, அல்லது மறைத்தோ உரிமம் பெறப்பட்டிருந்தால், அந்த உரிமத்தை அறவே நீக்கவும் சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. சட்டத்தின் விதிகளை மீறினாலும் அல்லது மீறுவதற்கு முயற்சி செய்தாலும் அது தண்டனைக்குரியதாகக் கருதப்பட்டு ரூ. 20,000/- வரை பணத்தண்டம் விதிப்பதற்கும் சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் அரசு விவசாய நிலங்களோ மற்றும் விவசாயத்தைச் சார்ந்துள்ளவர்களோ எந்த வகையிலும் பாதிக்கப்படக்கூடாது என்பதில் உறுதியாக இருப்பதோடு மட்டுமின்றி, இந்தியாவிற்கே முன்னோடியாகவும், வழிகாட்டியுமாக இருக்கின்ற ஒரு சட்டத்தை நம்முடைய தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்த நிலையில், (மேசையைத் தட்டும் ஒலி) இறால் பண்ணை அழிப்புப் போராட்டம் வருகின்ற மே திங்கள் முதல் நாள் நடத்தப்படுவதாக பத்திரிகை செய்திகள் மூலம், அதிலும் குறிப்பாக நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்தில் போராட்டம் தீவிரமாக நடைபெறும் என்று செய்திகள் வந்தது தொடர்பாக மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உத்திரவிட்டு மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களையும், என்னையும் உடனே நாகப்பட்டினத்திற்குச் சென்று அங்கு போராட்டத்தில் ஈடுபடுவதாக அறிவித்துள்ள அமைப்புகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி, அவர்களுடைய கோரிக்கைகள் என்ன என்று ஆராயும்படி ஆணை பிறப்பித்தார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆணையை ஏற்று நானும், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களும் கடந்த 25-4-1995 அன்று நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் கூட்டிய கூட்டத்தில் கிராம சுயராஜ்ஜிய இயக்கம், லாப்டி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்), ஸ்நேகா போன்ற

அமைப்புகளிலிருந்து பிரதிநிதிகள் கலந்துகொண்டு, ஆக்கப்பூர்வமான பல நல்ல கருத்துக்களைத் தெரிவித்தார்கள். மேலும், அரசு கொண்டு வந்துள்ள சட்டத்தை அவர்கள் மனமார வரவேற்றார்கள். அவ்வாறு உளமார தெரிவித்தக் கருத்துக்களுக்காக அவர்களுக்கு, மேற்சுட்டிய அமைப்புகளுக்கும். அந்த அமைப்புகளைச் சார்ந்தவர்களுக்கும், உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். எல்லா அமைப்புகளைச் சார்ந்தவர்களும் பொதுவாக கீழ்க்கண்ட கோரிக்கைகளை முன் வைத்தனர்:

பிற்பகல் 7-15

1. தமிழ்நாடு அரசு இயற்றியுள்ள நீர்வாழ் உயிரின வளர்ப்பு (முறைப்படுத்துதல்) சட்டத்தை உளமார வரவேற்கிறோம் என்றாலும் அந்த சட்டத்தின் விதிமுறைகளை முழுமையாகவும், செம்மையாகவும் உடனே நிறைவேற்றித் தர வேண்டும்.
2. விவசாய நிலங்கள், இறால் பண்ணை நிலங்களாக மாற்றப்படக் கூடாது. அரசு மற்றும் கோவில் நிலங்களில் இறால் பண்ணையாளர்கள் மேற்கொண்டுள்ள ஆக்கிரமிப்புகளை உடனே அகற்ற வேண்டும்.
3. வடிகால் பகுதிகளை ஆக்கிரமித்து இறால் பண்ணைகள் அமைக்காமல் இருக்க வழிவகைகள் செய்ய வேண்டும்.
4. தங்களுடைய குடியிருப்புகளை விட்டு, ஆதிதிராவிட மக்கள், மீனவர்கள் வெளியேற்றப்படாத வண்ணம் தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.
5. மாவட்டக் குழுவில் பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும்.
6. மீனவர்களுக்காக வழங்கப்பட்ட பட்டாக்களை இறால் பண்ணை முதலாளிகள் வாங்குவதைத் தடை செய்ய வேண்டும்.
7. இறால் பண்ணைகள் அமைப்பதாகச் சொல்லி, மரங்கள் வெட்டப்படுவதைத் தவிர்க்க வேண்டும்.
8. இறால் பண்ணைகள் மூலம் பாதிக்கப்பட்ட மக்கள் நீதி வேண்டி, நீதிமன்றத்திற்குச் செல்லுகின்ற வகையில் சட்டத்தில் வழிவகை செய்ய வேண்டும்.
9. மேங்குரோவ் காடுகள் அழிக்கப்படாமல் பாதுகாக்கப்பட வேண்டும்.
10. சுற்றுப்புறச் சூழலைக் காப்பதற்காக ஏற்பட்டுள்ள நிதி அமைப்பில் அதன் தற்போதைய உச்சபட்ச நிதியாகிய ரூ. 5000 என இருக்கும் அந்தத் தொகையை மேலும் உயர்த்த வேண்டும்.

மேற்சுட்டிய வகையில் ஆக்கபூர்வமான கருத்துக்களையும், ஆலோசனைகளையும் வழங்கி, சட்டத்தை மனமார வரவேற்கிறோம் என்று அவர்கள் கூறியதற்காகவும், வருகின்ற 1-ஆம் தேதி நடக்கவிருக்கின்ற போராட்டத்தில் தாங்கள் கலந்துகொள்ளப் போவதில்லை என்று உறுதி அளித்ததற்காகவும் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியை இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சார்பில் தெரிவிக்கின்றோம்.

இன்று மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், நாகப்பட்டினத்தில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பல்வேறு அமைப்புகளுடன் நாங்கள் நடத்திய பேச்சுவார்த்தை குறித்து எங்களையும், பிற அரசு உயர் அதிகாரிகளான தலைமைச் செயலர், பொதுத் துறைச் செயலர், உள்துறைச் செயலர், கால்நடை பராமரிப்பு மற்றும் மீனளத் துறைச் செயலர், மீனளத் துறை ஆணையர், காவல் துறை இயக்குநர், காவல் துறை கூடுதல் இயக்குநர், ஐ.ஜி. (புலனாய்வு) ஆகியோரையும் அழைத்து விவாதித்தார்கள். பேச்சு வார்த்தையில் வைத்த கோரிக்கைகளை எல்லாம் தாயுள்ளம் கொண்ட தமிழகத்தினுடைய முதலமைச்சர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கேட்டறிந்தபின்னர், விவசாயிகளுக்கோ, விவசாய நிலங்களுக்கோ, குடிநீர் நிலைகளுக்கோ, குடியிருப்புப் பகுதிகளுக்கோ, நீர்ப்பாசன ஆதாரங்களுக்கோ அல்லது வடிகால் பகுதிகளுக்கோ, மேங்குரோவ் வனப் பகுதிகளுக்கோ அல்லது சுற்றுப்புறச் சூழலுக்கோ எந்தவித தீங்கும் விளையக்கூடாது என்பதில் உறுதியாக இருக்க வேண்டும் எனவும் தவறு செய்பவர்கள் மீது அவர்களுடைய தவறுகளைத் திருத்தி வழிப்படுத்தவும்; மீறி தவறு செய்பவர்கள் மீது கடுமையான தண்டனை அளிக்கப்படவும் வேண்டும் என்றும் நம்முடைய இதயதெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள் என்பதை இந்த மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) விவசாய நிலங்களுக்கும், அதைச் சார்ந்த பிற இடங்களுக்கும் தீங்கு நேராத வகையிலும், மக்களை இறால் பண்ணைகளால் பாதிக்கப்படாத வகையில் பாதுகாப்பதற்கும் தேவையான சார்பு விதிகளை உடனே இயற்றி, அவை வருகின்ற 3-ஆம் தேதி முதல் அமல்படுத்தப்பட வேண்டுமென்று ஆணை பிறப்பித்துள்ளார் என்பதை இந்த மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆணைப்படி தமிழ்நாடு நீர்வாழ் உயிரின வளர்ப்பு (முறைப்படுத்துதல்) சட்டம் மற்றும் விதிகள் வருகின்ற மே திங்கள் 3-ஆம் தேதி முதல் உடனே அமலுக்கு வரும் என்று மகிழ்ச்சியுடன்

தெரிவித்துக்கொள்கிறேன். அரசின் வேண்டுகோளை ஏற்று இறால் பண்ணை போராட்டத்தில் பங்குகொள்ளப் போவதில்லை என்று உறுதி அளித்த கிராம சுயராஜ்ஜிய இயக்கம், லாப்டி இயக்கம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) மற்றும் ஸ்நேகா முதலிய அமைப்புகளுக்கும் அரசின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, அமர்கிறேன்.

## 5. மானியக் கோரிக்கைகள், 1995-96 விவாதமும் வாக்கெடுப்பும் - தொடர்ச்சி.

### (இ) கோரிக்கை எண்.29 - சமூக நலன்--தொடர்ச்சி.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* திரு. தம்புசாமி, திரு. பழனிசாமி, நல்லதுதானே ! (குறுக்கீடு) மகிழ்ச்சி. திரு. தா. வேடியப்பன், சுருக்கமாகப் பேசி முடியுங்கள்.

*பிற்பகல் 7-20*

*திரு. தா. வேடியப்பன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதயதெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி இருக்கும் திசை நோக்கி வணங்கி, இந்த சமூகநலத்துறை மானியக் கோரிக்கையை வரவேற்றுப் பேசுவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். இந்தத் துறையைப் பார்க்கும் முகத்தான், இந்தியாவிலேயே சிறப்பான முறையில் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் அரசின் சமூக நலத்துறைதான் சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதனைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். எந்த ஒரு ஆட்சிக்காலத்திலும் இல்லாத அளவுக்கு வெளிமாநிலத்தில் உள்ளவர்கள் எல்லாம் புரட்சித் தலைவி அவர்களின் திட்டங்களைப் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள். புரட்சித் தலைவி அவர்களின் திட்டங்கள் எல்லாம் வெளிமாநிலங்களால் பின்பற்றப்படும் வகையில், வெளிமாநிலங்கள் எல்லாம் இதுபோன்ற திட்டங்களுக்கு நிதி ஒதுக்கும் வகையில், புரட்சித்தலைவி ஆட்சியிலே சமூகநலத்துறையை ஊக்குவித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில், நம்முடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவிக்கு கேரள மாநிலத்தின் சீரிய தொண்டு நிறுவனமான இந்திய விடுதலைப் போராட்ட வீரர் ஸ்ரீதர் தொண்டு நிறுவனத்தின் சார்பிலே, புரட்சித்தலைவிக்கு ராஷ்டிரீய பீஷ்மாச்சாரியா பட்டம் வழங்கியதைப் பார்த்தால், மற்றும் அன்னை தெரசா அவர்கள் வந்து பாராட்டியதைப் பார்த்தால், டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் சமூக நலத்துறை மூலம்,

[திரு. தா. வேடியப்பன்]

எந்த அளவுக்கு மக்களுக்குச் சேவை செய்திருக்கிறார்கள் என்பதை நாம் புரிந்து கொள்ளமுடியும். அன்று வருகை தந்த மதிப்பிற்குரிய மத்திய மந்திரி சீதாராம் கேசரி அவர்களும் சிறப்பான முறையில், இந்தியாவிலேயே புரட்சித்தலைவி ஆளுகிற தமிழகத்திலேதான் சமூக நலத்துறை மூலம் பெண் குழந்தைகளைப் பாதுகாக்கும் திட்டத்திலே சிறப்பாகச் செயலாற்றுகிறார்கள் என்பதை மிகவும் வெளிப்படையாகப் பாராட்டியிருக்கிறார்கள். குறிப்பாகச் சொல்லவேண்டுமானால், 2, 3 நாட்களுக்கு முன்பு கூட சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள் மைய அரசிலே போய் சமூக நல மாநாட்டில், பேச்சுவார்த்தையில் ஈடுபட்டபோது, மைய அரசில் ஆட்சி புரிந்து கொண்டிருக்கிற பாரதப்பிரதமர் அவர்கள் சிறப்பான முறையில் தமிழக சமூக நலத்துறை இயங்குகிறது என்று பாராட்டும் முகத்தான் பாராட்டை அளித்து ஒரு சான்றிதழையும் அளித்திருக்கிறார்கள் என்பதைத் தெளிவாகக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட சத்துணவுத்திட்டம் ஏழை மக்களுக்காக, அடித்தளத்திலே இருக்கிற குழந்தைகளுக்காக ஆரம்பிக்கப்பட்டாலும், அவர்கள் கல்வியும் பெறவேண்டும், அவர்களுடைய வயிற்றுப் பசியும் தீரவேண்டும் என்ற அடிப்படையிலே மக்களுக்கு சேவை செய்யும் முகத்தான் அந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார்கள். அன்றைக்கு பலர் இதுபற்றி பல கருத்துக்களைச் சொன்னார்கள். புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். எப்படி இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவார் என்றெல்லாம் அப்போது கேள்வி எழுப்பப்பட்டது. ஆனால் ஏறத்தாழ 10 ஆண்டுகளுக்குப் பின்பு இன்றைக்குப் பார்க்கும்போது, புரட்சித்தலைவி அவர்கள் புரட்சித்தலைவர் அவர்களைப் பாராட்டும் முகத்தான், புரட்சித்தலைவர் பெயரால் அறிவிக்கப்பட்ட அந்த சத்துணவுத் திட்டத்திற்கு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் என்ற பெயரைச் சூட்டியிருக்கிறார்கள். அப்படி அந்த திட்டத்தை 10 ஆண்டுகளுக்குப் பிறகு பார்க்கும்போது எப்படி சிறப்பாக இருக்கிறதோ அதே அடிப்படையில், இன்றைக்கு புரட்சித்தலைவி அவர்கள் அறிவித்திருக்கிற 15 அம்சக் குழந்தைகள் நலத் திட்டமும், தொட்டில் குழந்தை திட்டமும் இன்னும் 10 ஆண்டுகள் கழித்து, 21 ஆம் நூற்றாண்டில் புகழ் பெறப்போகின்றன என்பதை நான் இன்றே தெளிவாகக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த இரண்டு திட்டங்களும் புகழ் பெறப் போகின்றன. இந்த இரண்டு திட்டங்களினாலும் பயன் அடைகின்ற குழந்தைச் செல்வங்கள் எதிர்காலத்தில் இருக்கப்போகிறார்கள் என்பதைப் பார்க்கும்போது அன்றுதான் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்திற்கு என்ன

[திரு. தா. வேடியப்பன்] [1995 ஏப்ரல் 27

மரியாதையோ அந்த அளவுக்கு புரட்சித்தலைவி அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட பெண் குழந்தைகள் திட்டத்திற்கும் 15 அம்சக் குழந்தைகள் திட்டத்திற்கும் மதிப்பு வரும் என்பதை நான் இன்றே கூற கடமைப்பட்டிருக்கிறேன். பெண் குழந்தைகள் தொட்டில் குழந்தைகள் திட்டத்திலே, புரட்சித்தலைவி அவர்கள் 72 குழந்தைகளைக் காப்பதற்காக பொது தொண்டு நிறுவனங்களிடம் கொடுத்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல, அந்த குழந்தைகளுக்காக 5,000 ரூபாய் டெபாசிட் செய்து அவர்களுக்குத் தங்க மோதிரமும், வெள்ளிக் கொலுசும் அளித்திருக்கிறார்கள். அந்தக் குழந்தைகள் படிப்பதற்கும் இயற்கையாகவே ஆரம்பத்திலே இருந்தே நிதி ஆதாரம் திருமணம் ஆகும் வரையிலும், பராமரிக்கப்பட்டு, கடைசியில் 20,000 ரூபாய் பணமும் கொடுக்கிறார்கள். அது மட்டுமின்றி, இரண்டு பெண் குழந்தைகள் பெற்றவர்கள், தாயோ, தந்தையோ குடும்ப நல அறுவை சிகிச்சை செய்துகொண்டால், அந்தக் குழந்தைகள் பெயரில் 5,000 ரூபாய் டெபாசிட் செய்யப்படுகிறது. எதிர்காலத்திலே அந்தக் குழந்தைகள் படிப்பதற்காக நிதி தரப்படுகிறது. அதுமட்டுமின்றி, அந்தக் குழந்தைகளின் 21-வது வயதில் 20,000 ரூபாய் நிதி கொடுக்கப்படுகிறது. அப்படி அந்தத் திட்டத்தைப் பார்க்கிறபோது, புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியிலே பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் என்பது தமிழகம் முழுவதும் நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கிறது என்பதை கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். புரட்சித் தலைவி அரசு சார்பிலே 5,000 ரூபாய் டெபாசிட் செய்து அந்தக் குழந்தைகளைக் காப்பது வரவேற்கத்தக்க ஒன்றாகும். அது மட்டுமின்றி, 1993-94-ல் இளம்பிள்ளை வாதம் 400 ஆக இருந்தது. இன்று 1994-95-ல் 200 ஆகக் குறைந்து 50 சதவீதம் குறைக்கப்பட்டிருக்கிறது. புரட்சித் தலைவி அவர்களின் 15 அம்சத் திட்டத்திலே இளம்பிள்ளை வாதத் தடுப்புக்காக தடுப்பூசி போடுவதில் யூனிசெப் தொண்டு நிறுவனத்தோடு இங்கே சிறப்பான முறையிலே கருணையுள்ளத்தோடு புரட்சித்தலைவி அவர்கள் இந்தத் திட்டத்தை அறிவித்து, 2000-ஆவது ஆண்டுக்குள் அந்த நோயே இல்லாத அளவுக்கு செய்ய திட்டமிட்டிருக்கிறார்கள் என்பதைக் கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 7.25

இன்றைய நிலையில் நம்முடைய புரட்சித்தலைவி அவர்கள் அரசு பொறுப்பேற்ற பிறகு இருதய நோயாளிகளுக்கு எல்லாம், குழந்தைகளுக்கு எல்லாம் தனியாக ஒரு மருத்துவமனையை ஆரம்பித்து இருக்கிறார்கள். தனியார் மருத்துவமனையில் அறுவை சிகிச்சை செய்து கொண்டாலும் அவர்களுக்காக இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நிதியாதாரத்தைக் கொடுக்கிறார்கள்.

நம்முடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் அரசு பொறுப்பேற்ற பிறகு தான் பிறப்பு விகிதத்தை ஆயிரத்திற்கு 75 என்பதை 30 என்ற அளவுக்கு குறைத்து இருக்கிறார்கள். இறப்பு விகிதத்தை ஆயிரத்திற்கு 9-ஆக குறைத்து இருக்கிறார்கள். இப்படிப்பட்ட சாதனையை புரிவது தான் நம்முடைய புரட்சித்தலைவி அவர்கள் அரசு.

*(மாண்புமிகு மாற்றுத்தலைவர்-தலைமை)*

நம்முடைய புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட சத்துணவுத் திட்டம் சிறப்பான முறையில் செயல்படுவதைப்போல நம்முடைய புரட்சித்தலைவி அவர்கள் இந்தத் திட்டத்தைத் தொடர்ந்து மக்களுக்கு சேவை செய்வதற்கு சிறப்பான முறையில் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுக் கூடங்களின் நிறைய கட்டடங்கள் பழுதடைந்திருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உள்ளாட்சித் துறை மூலமாக ஒதுக்கப்படுகிற 80% ஜே.வி.வி.டி.யில் அத்தனை மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் உத்தரவு அளித்து அத்தனை சத்துணவுக் கூடங்களையும் ரிப்பேர் செய்து பராமரிப்பதற்கு வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்கள் அரசு, உயர்நிலைப் பள்ளி அமைப்பாளர்கள், ஆரம்பப் பள்ளி அமைப்பாளர்கள், சத்துணவு அமைப்பாளர்கள் ஆகியவர்களுக்கு குறைந்த ஊதியமாக இருக்கிறது என பல கோரிக்கைகளைக் கூறி இருக்கிறார்கள் என்பதால் அவர்களைப் பகுதி நேர அமைப்பாளர்களாக இல்லாமல் முழுநேர அமைப்பாளர்களாக மாற்றி, நகர்ப் பகுதிகளில் எல்லாம் குழந்தைகள் கான்வெண்டில் படிப்பதைப்போல அந்த சத்துணவுக் கூடங்களில் அவர்களை முழுநேர அமைப்பாளர்களாக்கி அவர்கள் சம்பளத்தை உயர்த்திக் கொடுத்து அங்கே இளம்செல்வங்கள் ஆரம்பக் கல்வி பெற அறிவுறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தில் அரசு மூலமாக இலவச சீருடைகள், காலணிகள் வழங்கப்படுகின்றன. இதனை ஒவ்வொரு ஆண்டிலும் நம்முடைய புரட்சித்தலைவி அவர்களின் அரசு சார்பில் ஆண்டு தொடக்கத்திலேயே அந்தக் குழந்தைகள் பயனடையும் வகையில் வழங்க ஆணை பிறப்பிக்க வேண்டும் எனக் கோருகிறேன்.

சத்துணவுக் கூடங்களில் குழந்தைகளை சென்சஸ் கணக்கு எடுக்கும் போது வாரத்தில் 3 நாட்கள் கணக்கு எடுத்து குழந்தைகள் வருகை பதிவேட்டில் பதியப்படுகிறது. இலவச செருப்புகளும் காலணிகளும்

[திரு. தா. வேடியப்பன்] [1995 ஏப்ரல் 27

வழங்கும்போது அன்று குழந்தைகளுக்கு பிரச்சினை வருகிறது. ஆகவே பள்ளிக்கூடத்தில் வருகிற குழந்தைகள் எத்தனைபேர் என்று உணர்ந்து ரெஜிஸ்டரில் பதிவு செய்ததைப் போல அத்தனை குழந்தைகளுக்கும் வழங்க நீங்கள் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விதவை திருமணத் திட்டத்திற்காக நம்முடைய புரட்சித்தலைவி அவர்களின் ஆட்சியில் சிறப்பான முறையில் 2000 ரூபாய் பணம் கொடுத்து உதவுகிறார்கள். அதைப்போல முதியோர் உதவித்தொகை ஒருவர் ஆட்சிக்காலத்தில் 50 ரூபாய் கொடுத்தார்கள். ஆனால் அன்று என்ன செய்தார்கள்? மணியார்டரில் அவர்களுடைய உருவப் படத்தை பதித்தார்கள். ஆனால் இன்று புரட்சித்தலைவி அவர்கள் 75 ரூபாயாக உயர்த்தியும், 100 ரூபாயாக உயர்த்தியும், எந்தவிதமான விளம்பரமும் இல்லாமல் மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்கள் ஏழையெளிய மக்களுக்காக 100 ரூபாய் கொடுக்கிறார்கள் என்றால் அந்த தாயை நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

முதியோர் உதவித் தொகை முன்பெல்லாம் மிகவும் நபர்கள் குறைவாக இருந்தது. இப்போது வளர்ந்திருக்கிற காலத்தில் நம்முடைய புரட்சித்தலைவி அவர்கள் ஆட்சியில் அதிகமான நபர்களுக்கு வழங்கும் முகத்தான் நிதியாதாரத்தை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கருவுற்ற தாய்மார்களுக்கு 300 ரூபாய் கொடுக்கிறீர்கள். இன்று இலவசமாக ஒருவேளை சத்துணவு அளிக்க புரட்சித்தலைவி அவர்கள் ஆணை பிறப்பித்து இருக்கிறார்கள். நீங்கள் அதை தயவுசெய்து தேவையான நிதியாதாரத்தை ஒதுக்கி 100 ரூபாயாகக் கொடுக்க வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 7.30

உடல் ஊனமுற்றவர்களுக்கு 2300 வண்டிகள் என்பதை 2420 வண்டிகளாக உயர்த்தி இருக்கிறீர்கள். இதற்கு ரூ. 54.35 இலட்சம் ஒதுக்கி இருக்கிறீர்கள். இதையெல்லாம் பார்க்கிற போது உடல் ஊனமுற்றவர்களுக்கு எவ்வளவு சிறப்பான அம்சங்களைச் செய்திருக்கிறோம் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். என்னுடைய போளூர் தொகுதியில் கணேசபுரம், சோழங்குப்பம், முனியன்குடிசை போன்ற கிராமங்களுக்கு எல்லாம் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டங்களை ஆரம்பிக்க வேண்டும். குறிப்பாக இதைக் கூறுவதற்குக் காரணம் பல கிராமங்களில் சத்துணவுக் கூடங்கள் இல்லாமல் இருக்கின்றன. சத்துணவு அமைப்புகளே இல்லாமல் இருக்கின்றன.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்தையும் எடுத்துக் கொண்டால் பல மதுரா கிராமங்கள் இருக்கின்றன. எனவே, நீங்கள் தயவு செய்து ஆய்வு செய்து, மக்கள் தொகைக் கணக்கு எடுப்பு மூலமாகவோ, அல்லது குழந்தைகளினுடைய கணக்கு எடுப்பு மூலமாகவோ, கணக்கு எடுத்து, ஒவ்வொரு ரெவின்யூ கிராமங்களிலும் கிராமங்களைப் பொறுக்கி எடுத்து, அந்தந்த கிராமங்களிலே சத்துணவுக் கூடங்களை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைய நிலையில், என்னுடைய போளூர் தொகுதிவாழ் மக்களின் சார்பாக 4 கோரிக்கைகளை மட்டும் வைக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். அந்தந்த துறை அமைச்சர்கள் இல்லை என்றாலும் கூட பொதுவான கோரிக்கையாக வைக்கிறேன்.

என்னுடைய போளூரிலே குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக ஆய்வு செய்து, குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக 64 லட்சம் ரூபாய் அளவில் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டுவதற்கு ஆய்வுகள் செய்யப்பட்டு இருக்கின்றன. மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் இதை இந்த ஆண்டில் நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய போளூர் பகுதியிலே செண்பகத் தோப்பு அணை கட்டவேண்டும் என்று போளூர் தொகுதி வாழ் மக்கள் சார்பாக பல வருடங்களாகக் கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. எனவே, தயவுசெய்து மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் போளூரில் செண்பகத் தோப்பு அணையைக் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

போளூரில் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்தின் பணிமனை ஒன்றை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். பல நாட்களுக்கு முன்பாகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதற்கான இடமும் ஒப்படைக்கப்பட்டு இருக்கிறது. எனவே, இந்த ஆண்டிலே கூடிய விரைவிலே அதைச் செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய போளூர் தொகுதி மக்கள் சார்பாக இங்கே பேச வாய்ப்பு அளித்த மாற்றுத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். நன்றி வணக்கம்.

*மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ஏ. கே.சி. சுந்தரவேல்):* மாண்புமிகு சமூக நலத்துறை மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *3 3/4* நாழிகையாவது இதிலே உட்கார்ந்து பார்த்துவிடவேண்டும் என்று சொன்னார் அதனால்தான். *(சிரிப்பு)*

**மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்த்தாய் வணக்கத்துடன் எதையும் தொடங்குவது மரபு. நானும் தமிழ்த்தாய் வணக்கத்துடன்தான் தொடங்குகின்றேன். புவியெலாம் போற்ற, புலவர்கள் பாராட்ட, எட்டு திசைகளும் வியக்கும் வண்ணம், எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டை ஏற்றமுடன் நடத்தி முடித்த எங்கள் புரட்சித் தலைவியாம், தமிழ்த்தாயை வணங்கியே என் உரையை தொடங்குகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி).*

'அகர முதல எழுத்தென்பார் வள்ளுவனார். எங்கள் வாழ்க்கை வாசகத்தில் 'அம்மா' தான் முதலெழுத்து. 'எண்ணிய எண்ணியாங்கு எய்துவ எண்ணியார் திண்ணிய ராகப் பெறின்' என்ற தெய்வப் புலவர் திருவள்ளுவரின் வாக்கிற்கு ஏற்ப, எடுத்த செயல் எதுவானாலும் வெற்றி மாலையைத் தொடுத்துக் காட்டும் வித்தகத் திறன் பெற்றவர் எங்கள் புரட்சித் தலைவி *(மேசையைத் தட்டும் ஒலி).* புரட்சித் தலைவி அவர்களே, உங்கள் விரல் அசைவை உலகமே உற்றுப் பார்க்கும். உங்கள் இதயத்தின் உறுதிகள் இமயமும் தோற்கும். வெற்றி உங்கள் விலாசத்தை விசாரித்துத் தேடிவரும். நீங்கள் பகலின் வெளிச்ச ஓலை: பைந்தமிழ்ப் பாமாலை. 'துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி இன்பம் பயக்கும் வினை' என்ற வள்ளுவர் வாக்கு, உங்கள் வாழ்க்கையின் போக்கு. நாட்டுக்கும், நம் தமிழர் வீட்டுக்கும் நலம் பயக்கும் செயல் என்றால், எவருடைய கூட்டுக்கும் அஞ்சாமல் எதிரிகளின் கோட்டைக்கும் அஞ்சாமல் குரல் கொடுக்கும் குயில் நீங்கள். கீறல் விழுந்த இசைத்தட்டுக்களின் பாட்டுக்கா அஞ்சுவீர். பாராட்டிப் பணிகின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

திசைமாறிப் பொழிகின்ற வசைமாறிகளுக்கு, நீங்கள் இசை மாரி என்று தெரியாது. உங்கள் கீத மழை எங்கள் வாழ்வின் வேதமழை. ஏழைக் குழந்தைகளின் எதிர்காலத்திற்குச் சத்துணவு பொழியும் சாத மழை. *(மேசையைத் தட்டும் ஒலி)* கீர்த்தி மிகுந்த எங்கள் கீர்த்தனையே, அனுபல்லவிகளாய் உங்கள் அருகில் நாங்கள். நீங்களோ எங்கள் தமிழகத்தின் ஏற்றம் மிகுந்த பல்லவியாய்ப் பரிணமிக்கிறீர்கள். சங்கீதத்தைப் பற்றி சரியாகத் தெரியாத துக்கடாக்களுக்கு உங்கள் ஆலாபனை கேட்டதுமே அஜீரணம் வருகிறது. காற்றிருக்கும் வரை உங்கள் பெயர் காற்று என்றே இருக்கட்டும். புறப்பட்ட பின்னரோ நீங்கள் புயலென்று தெரியட்டும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

திசைகளெல்லாம் போற்றும் தேவதையே, வெற்றித் திருவுருவே. இந்த இடத்தில் விசிறிகளா உங்களை வெற்றி கொள்ள முடியும்? (மேசையைத் தட்டும் ஒலி) கோடிக்கணக்கான தமிழர்களின் இதயத்தில் குற்றாலச் சாரலாய், கொள்கைக் குல விளக்காய், குடியிருக்கும் கோட்டைத் தலைவி, எம் நெஞ்சக் கூட்டின் தலைவி, எங்கள் நாட்டின் தலைவி அன்பு அன்னையாம் புரட்சித்தலைவி இருக்கிற அவருடைய திசை நோக்கி அவர்களுடைய பொற்பாதங்களை வணங்கி இந்த மானியக் கோரிக்கையை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* மானியக் கோரிக்கையை ஏற்கனவே சமர்ப்பித்துவிட்டீர்கள். மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கான பதில் உரையைச் சமர்ப்பியுங்கள்.

பிற்பகல் 7.35

*மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கு எனது பதிலுரையை சமர்ப்பிக்கிறேன்.

"வயிற்றுக்குச் சோறிட வேண்டும் - இங்கு வாழும் மனிதருக்கெல்லாம் பயிற்றிப் பல கல்வி தந்து - இந்தப் பாரை உயர்த்திட வேண்டும்" என்று தொலைநோக்கோடு பாடினான் மகாகவி பாரதி. "சோறு போடு, பின்பு சொல்லிக் கொடு" என்று ஆணையிட்டது போல் அந்த முண்டாசுக் கவிஞன் அன்றே முழங்கினான்.

பள்ளிக் கூடங்களில் படிக்கும் பிள்ளைக் கனிகளின் வயிறு வாடிவிடக் கூடாது. அவர்கள் வலிமையுடன் வளரவேண்டும் என்று சத்துணவுத் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார் நம் புரட்சித் தலைவர். பிறந்த குழந்தைகளுக்கு சத்துணவு வழங்கி மகிழ்ந்தார் புரட்சித் தலைவர்.

தாயை தெய்வமென்று வணங்குகிறோம், ஏன் தெரியுமா? குழந்தையைப் பத்துமாதம் வயிற்றுக்குள் சுமந்து, வடிவமைத்து, பெற்றெடுத்துக் காத்துப் பேணி கண்போல் வளர்ப்பதனால்... (குறுக்கீடு)

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* பேசுகின்ற அமைச்சருக்கு முன்னர் நடக்கிறபோது கொஞ்சம் குனிந்து நடக்க வேண்டும்.

*மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி:* கையில் வைத்திருக்கும் சிறு பையைக் கூட கனமாக இருக்கிறது என்று கீழே வைத்துவிடுகிறோம் நாம். எந்தக் கர்ப்பிணிப் பெண்ணாவது தன் வயிறு கனக்கிறதே என்று

வருத்தப்பட்டது உண்டா? இளைப்பாறச் சிறிது நேரம் வயிற்றுச் சுமையை இறக்கி வைப்போம் என்று எண்ணிப் பார்த்ததுண்டா? தங்கள் கனவை, கருவை, பிள்ளைக் கனியை பித்தாக்கும் சித்திரத்தை, முல்லை மலரை, மொட்டவிழாத் தேன் சிமிழை முன்னூறு நாள் தனது வயிற்றுக்குள் சுமக்கும் அற்புதத்தை நாம் ஆராதனை செய்ய வேண்டாமா? புதிய வரலாறு படைக்கும் நம் புரட்சித் தலைவி அவர்கள் அதனாலேதான் தாயின் வயிற்றுக்குள் தவழும் குழந்தைக்கும் சத்துணவு வழங்கி சாதனை புரிந்தார். (மேசையைத் தட்டும் ஒலி)

கருவுற்ற மகளிருக்கும் சத்துணவு நல்குவதைக் கடமையாய் மேற்கொண்டார் நம் கருணைத் தலைவி. இதன் மூலம் ஒரே சமயத்தில் தாய்க்கும், சேய்க்கும் சேர்த்து சத்துணவு வழங்குவதற்கு புரட்சித் தலைவி உத்தரவிட்டிருக்கிறார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

புரட்சித் தலைவர் தொடங்கி வைத்தார். புரட்சித் தலைவியோ அதை மேலும் வளர்த்து துலங்க வைத்தார். வெற்றித் திட்டமாய் விளங்க வைத்தார். சத்துணவுத் திட்டத்தை விரிவுபடுத்தி இந்தியாவுக்கே முன்னோடியாய் இலங்க வைத்தார். இன்று சரித்திரச் சாதனையாய் விளங்கும் இந்தச் சத்துணவுத் திட்டத்தை உலகமே பாராட்டுகிறது. இதைப் பின்பற்ற வேண்டுமென்று பிற நாடுகளும் முயன்று பார்க்கின்றன. முடியாமல் வேர்க்கின்றன. இத்திட்டத்தைச் செயல்படுத்தி வெற்றிகரமாய் நடத்தி வரும் நம் அன்னையை வியப்போடு பார்க்கின்றன. எத்தனையோ 'கைகள்' மக்களை ஏமாற்றும் கைகளாக உள்ளன. அவையெல்லாம் கையல்ல - நம் தாயின் 'கை' தான் மெய். நம் தாய் 'கை' கொடுக்கவில்லையென்றால் பல 'கைகள்' சட்டமன்றத்திற்கு வந்து சபாநாயகரைப் பார்த்து நீண்டிருக்குமா? நம் தாயின் கருணையல்லவா அந்தக் கைக்கும் கை கொடுத்தது. பேரவைத் தலைவர் அவர்களே, நம்பிக்கை வையுங்கள். உங்கள் இருக்கை நோக்கி இரு கை நீட்டி அடிக்கடி பேசிய சில கை எதிர்காலத்தில் இந்த அவைக்கு வருகை இல்லாமலேயே போய்விடும். (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவியின் அருள் நெஞ்சம் இந்த ஆண்டுமுதல் கர்ப்பிணிப் பெண்களுக்கும் சத்துணவு வழங்கி கருணை புரிகிறது. ஏன் தெரியுமா? நம் அன்னையின் கை அன்னமிட்ட கை - நம்மை அரவணைக்கும் கை, நம் தாயின் கை. உன்னை என்னை உயரவைத்த கை, உலகமெல்லாம் வாழவைத்த கை.

நாடெங்கும் சத்துணவுக் கூடங்கள். அதிலே நாள்தோறும் பணியாற்றும் தியாக தீபங்கள், தாயின் பரிவைக் காட்டி, குழந்தைகளுக்குச் சத்துணவு ஊட்டும் பாசப் பீடங்கள். அவர்கள் 'சத்துணவு ஆயாக்கள்' என்று

அழைக்கப்பட்டார்கள். சதி வலை பின்னும் சாகசக்காரர்களின் சாமர்த்தியப் பேச்சுக்கு, சத்துணவு ஊழியர்கள் சில நேரங்களில் இரையான போதும், அவர்களைக் கறை என்று எண்ணிக் களையாமல், அவர்களின் குறைகளைத் தீர்ப்பதில் நம் தலைவி குறிப்பாக இருக்கிறார். பகுதி நேரப் பணியாய் சமுதாய சேவையாய் பங்களிக்கும் அவர்களை, வேலைக்காரர்கள் என்று பொருள்படும்படி தகுதியற்ற ஒரு சொல்லால் அழைப்பதைக் கூட நம்முடைய தாயின் உள்ளம் பொறுக்கவில்லை. தூய சேவையில் ஈடுபடுவோரை ஒரு சொல்லினால் கூடச் சுடக்கூடாது என்பதில் நம் கருணைத் தலைவி கருத்துச் செலுத்தினார். அதன் விளைவாக இன்று 'சத்துணவுத் திட்ட ஆயா' என்று அழைக்கப்படுகின்ற அவர்கள், இனிமேல் 'சத்துணவுத் திட்ட உதவியாளர்கள்' என்று கௌரவமான அடைமொழியினால் அழைக்கப்படுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வார்த்தையால் கூட யாரையும் வாட வைத்துவிடக் கூடாது என்பதில் பொன்மனம் கொண்ட நம் புரட்சித் தலைவி எத்தனை கவனமாய் இருக்கிறார் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு.

பிற்பகல் 7-40

'உன்னைக் கண்டு நானாட, என்னைக் கண்டு நீயாட, உல்லாசம் பொங்கும் இன்ப தீபாவளி' என்று பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரனார் பாடினார். தீபாவளி மட்டுமா உல்லாசத்தையும் உற்சாகத்தையும் உண்டாக்கும் - எத்தனையோ பண்டிகைகள், ஒவ்வொருவர் பண்டிகையும் உல்லாசமாகவும் உற்சாகமாகவும் உலா வரவேண்டுமல்லவா, அதற்குப் புத்தாடைக் சூடிப் பூரிக்க வேண்டாமா? பண்டிகைக் காலங்களில் கோ-ஆப்டெக்சில் துணிமணிகளைக் கடனாகப் பெற்றுக் கொள்ளும் வசதி இதுவரை அரசு ஊழியர்களுக்கு மட்டுமே இருந்தது. சத்துணவுப் பணியாளர்களுக்கு அந்த வாய்ப்பு வழங்கப்படவில்லை. "ஊரெங்கும் மணக்கும் ஆனந்தம் நமக்கு காணாத தூரமடா" என்று கவலைப்பட்ட சத்துணவுப் பணியாளர்களுக்கும் அவர்களுடைய துயரத்தைத் துடைப்பது போல், அவரவர் பண்டிகையின் போது ரூபாய் 500 அளவிலான துணிகளை கோ-ஆப்டெக்ஸ் மூலமாகக் கடனாகப் பெற்றுக் (மேசையைத் தட்டும் ஒலி) கொள்ள நம்முடைய புரட்சித் தலைவி அன்புத்தாய் உத்திரவிட்டிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

வீடு வரை உறவு, வீதி வரை மனைவி, காடு வரை பிள்ளை, கடைசி வரை யாரோ, என்று கவிஞன் கேட்ட கேள்விக்கு எங்கள் புரட்சித் தலைவி பொருத்தமாக விடை தந்திருக்கிறார். காடு செல்லும் கடைசி

நேரத்திலும் கூட, கருணையோடு உதவுவதற்கு நம்முடைய தாயின் அரசு இருக்கிறது என்பதை நிரூபித்திருக்கிறார். எப்படி என்று நீங்கள் திகைப்பது எனக்கு தெரிகிறது. சத்துணவுத் திட்டத்தில் வேலை பார்க்கும்போது பணியாளர்கள் இறந்து விட்டால் அவர்களின் குடும்பத்திற்கு அரசு 60,000 ரூபாயை வழங்குகிறது. ஆனால் எளியோரின் வாழ்வில் ஈமச் சடங்கிற்குக் கூட உரிய வழியில்லாமல் போகிறது. அதனால் இறந்து போன பணியாளருக்கு வழங்கப்படும் தொகையிலிருந்து உடனடியாக அவர்களுடைய ஈமச் சடங்கிற்கு இரண்டாயிரம் ரூபாயை வழங்க வேண்டும் என்று இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் கருணையோடு உத்தரவிட்டிருக்கிறார். ரூ. 2000 தருவது எளிய உதவி தான் என்றாலும் காலத்தால் செய்த உதவி சிறிதெனினும் ஞாலத்தில் மானப் பெரிது என்ற வள்ளுவன் வாக்கிற்கு ஏற்ப வாழ்ந்து கொண்டிருக்கிறார் எங்கள் தாய்.

தாலாட்டி சீராட்டி வளர்த்து என தங்கமே என்றெடுத்து அணைத்து வாழவேண்டுமென்று நினைத்து வாழ வைக்கவேண்டிய 'தாய்' (குறுக்கீடு)

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* மாண்புமிகு அமைச்சர்கள் கொஞ்சம் கவனிக்க வேண்டும். அவர்களைப் பதில் சொல்ல விடுங்கள்.

*மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி:* அரசு தொட்டிலிலே என்னை வீசி மறந்து போனாளே என்று புலம்புகின்ற குழந்தைக்கும் தொட்டிலிட்டார் நம் கருணைத்தாய். சிங்காரக் கண்ணே உன் தேனூறும் சொல்லாலே தீராத துன்பங்கள் தீர்ப்பாயடி என்று சொன்னார்கள். தங்கள் துன்பத்தைத் தீர்க்குமாறு தாய் குழந்தைகளிடம் விண்ணப்பித்தார்கள். ஆனால் குழந்தைகளின் துன்பத்தைத் தீர்க்குமாறு என் தாயைப் போல் எண்ணம் கொண்டவர்கள் இந்த மண்ணில் யாராவது உண்டா? (மேசையைத் தட்டும் ஒலி) தொட்டில் குழந்தைகளுக்கு 5000 ரூபாயை வைப்புநிதியாக வழங்க வேண்டும் என்று போன ஆண்டு புரட்சித் தலைவி உத்தரவிட்டார். இந்த ஆண்டு தன் இதயக் கருணையின் விஸ்தரிப்பின் வெளிப்பாடாய் தொட்டில் குழந்தைகளிலும் மன வளர்ச்சி குன்றிய உடல் ஊனமுற்ற குழந்தைகளுக்கு மட்டும் மேலும் 5000 ரூபாயைச் சேர்த்து வழங்க (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி ஆணையிட்டிருக்கிறார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நண்டுக்குச் சொந்தமாய் வலையிருக்கு, நரிக்குச் சொந்தமாய் புதரிருக்கு, பாம்புக்குச் சொந்தமாய் புற்றிருக்கு, பறவைகளுக்கும் சொந்தமாய் கூடிருக்கு நம் பைந்தமிழ் நாட்டில் பாலுண்டு வளரும் ஆதரவற்ற குழந்தைகளுக்கு அடைக்கல இடங்கள் இது வரை வாடகைக்குத்தான்

வழி செய்யப்பட்டது. இந்நிலை மாற்றி நன்னிலை ஒன்றைக் காட்டியிருக்கிறார் புரட்சித் தலைவி. ஆம் இனி அரசின் சொந்தக் கட்டிடங்களிலேயே இந்தக் குழந்தைகள் சுகவாழ்வு பெறவேண்டும் என்று எண்ணி, முதல் முறையாக விருதுநகரில் சொந்தமாகக் கட்டிடம் கட்ட புரட்சித் தலைவி உத்தரவிட்டிருக்கிறார் என்பதை அவைக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பணிபுரியும் பெண்கள் பணி முடிந்து வீடு திரும்பும் வரை பாசத்தோடு அவர்தம் குழந்தையைப் பார்த்துக் கொள்ள ஆளில்லை என்ற ஏக்கத்தைப் போக்க ராஜா சின்னராஜா பூந்தளிரே இன்பக் கனியே உன்னை நெஞ்சில் ஏற்றிக் கொள்ளத் தாவும் தாயின் உள்ளம் என்றும் தெய்வம் உன்னைக் காக்கும் என்று நம்பிக்கையோடு பணிக்குச் செல்லும் பெண்களின் பாதுகாவலராய், குழந்தைகளைப் பாசத்தோடு அணைக்கின்ற தமிழ் மக்களின் தெய்வத் தாயாய் விளங்குகின்ற புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்திலே புதிதாக 25 குழந்தைகள் காப்பகங்களை ஏற்படுத்துவதற்கு உத்திரவிட்டிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மங்கையராய் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டுமம்மா என்று கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை பாடினார். ஆனால் இந்த மண்ணில் மங்கையாக வாழ்வதற்கே மாதவம் செய்ய வேண்டியிருக்கிறது. சித்திரத்தில் பெண்ணெழுதி சீர்படுத்தும் மாநிலமே ஜீவனுள்ள பெண்ணினத்தை வாழ விட மாட்டாயா என்று கவிஞன் கேட்ட கேள்வி இன்றைக்கும் எதிரொலித்துக் கொண்டிருக்கிறது. அதற்கு பதில் காணும் முயற்சிதான் நம் புரட்சித் தலைவியின் அரசியல் பயணம். புதுமைப் பெண்களடி பூமிக்கு கண்களடி என்று புலவர்கள் புகழ்ந்து பாடினால் மட்டும் போதுமா?

பிற்பகல் 7-45

எந்தக் கைகளையும் நம்பாமல், சொந்தக் காலில் நிற்பதற்கு வழிகாட்ட வேண்டாமா? தாயுள்ளம் கொண்ட எங்கள் தங்கத்தலைவிதான் வாழ்க்கைப் போர்களத்தில் அந்தப் பூக்கள் புறமுதுகு காட்டக்கூடாது என்பதற்காக, ஒரு லட்சம் பெண்களுக்கு வேலைவாய்ப்பு என்ற திட்டத்தை இதுவரை கிராமப்புறப் பகுதிகளிலே செயல்படுத்தினார். இதுவரை கிராமப்புற பகுதியிலுள்ள பெண்களுக்கு மட்டுமே இந்த சுயவேலைவாய்ப்புத் திட்டம் இருந்தது. முதன்முதலாக, அதை நகரத்திற்கு விரிவுபடுத்தி இந்த ஆண்டு முதல் 3500 பெண்களுக்கு நகரபுறத்திலேயும் சுயவேலைவாய்ப்பு வழங்கவேண்டும் என்று உத்திரவிட்டு இருக்கிறார்கள்

என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). ஏழை எளியவர்கள், உடலை மறைத்து உடுத்துகின்ற ஆடையில், தறி நெய்த நூலைவிட கிழிசல்களைத் தைத்த நூலே அதிகம் என்பார்கள். அத்தகைய கிழிந்த ஆடைகளின் நிலை தான் ஆதரவற்ற கைம்பெண்கள், கணவனால் கைவிடப்பட்டவர்கள், இவர்களுடைய வாழ்க்கையாகும் வகையில்லாமல் பேசும் வல்லடி வழக்குக்காரர்களின் வாய்களைத் தைக்க வேண்டுமென்று மக்கள் குமுறுகிறார்கள். நம் பொன்மனம் கொண்ட புரட்சித் தலைவியோ வாடிக்கிடக்கும் மக்களின் வறுமைக் கிழிசலைத் தைப்பதற்காகவே வாழ்க்கையை அர்ப்பணித்துள்ளார். நேருக்கு நேராய் வரட்டும் நெஞ்சில் துணிவிருந்தால், என் கேள்விக்குப் பதிலைத் தரட்டும் நேர்மைத் திறன் இருந்தால், என்று எதிரிகளைப் பார்த்து இதயத்தில் நகைத்து விட்டு, உருக்குலைந்தவர்களின் வாழ்க்கையில் உதயத்தை உண்டாக்குகிறார் நம் உயிரினும் மேலான உத்தமத் தலைவி. (மேசையைத் தட்டும் ஒலி). ஆதரவற்ற கைம்பெண்கள், கணவனால் கைவிடப்பட்ட காரிகைகள் இவர்கள் சமுதாயத்தின் அவல ஓவியங்களாய் காட்சியளிக்கிறார்கள். தையல்கள் என்று பெண்ணை தமிழ்த்தாய் அழைக்கிறாள். ஆனால், இந்தத் தையல்களின் இதயத்தில்தான் எத்தனைக் கிழிசல்கள்? தடுமாறிக் கொண்டிருக்கும் அந்தத் தங்கங்களின் வாழ்க்கைக் கிழிசலைத் தைக்க வேண்டாமா? அதற்காகத்தான் கருணை மனங்கொண்ட நம் காவியத் தலைவி அவர்கள் ஒவ்வொரு ஆண்டும் ஆயிரம் தையல் இயந்திரங்களை அவர்களுக்கு வழங்குகிறார்கள். ஆனாலும், கோரிக்கை விடுக்கும் குரல்கள் குறைவதாய் இல்லை. ஆதரவற்ற அபலைகளின் ஏராளமான விண்ணப்பங்கள் எஞ்சி விடுகின்றன. தமிழகத்தில் தையல் இயந்திரம் கேட்டு இன்று வரை 5000 கோரிக்கை மனுக்கள் காத்திருக்கின்றன. இந்த ஆண்டு அனைத்து விண்ணப்பங்களுக்கும் தையல் இயந்திரங்களை வழங்க புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). இதற்கு ஆகிற செலவு ரூபாய் 75 லட்சம் ஆகும். பரிதாபம் நெஞ்சில் சிறிதேனும் இல்லா, படுபாவியர்களால் வாழ்வைப் பறிகொடுத்த மங்கையருக்கு மறுவாழ்வு தருவதற்கு 6 சேவை இல்லங்கள் ஏற்கனவே இயங்கி வருகின்றன. அவர்கள் தேவை எது என்று யாருமே தெரிந்துகொள்ளாத சூழ்நிலையிலும், நம் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி மட்டும் தான் அவர்கள் வாழ்வில் உயர்வுபெற தாம்பரம், திருநெல்வேலி, காரைக்குடி ஆகிய 3 நகரங்களில் உள்ள சேவை இல்லங்களில் ஏற்கனவே கடந்த ஆண்டு தொழில் வகுப்புகளை உருவாக்கினார். கணிப்பொறி, நர்சிங், நெசவு போன்ற அந்த தொழிற்கல்விகள் இந்த ஆண்டு, மேலும் விரிவுபடுத்தப்பட்டு, கடலூர், தஞ்சாவூர், சேலம் ஆகிய 3 நகரங்களில் சேவை இல்லங்களில்

தொடங்குவதற்கு உத்தரவிட்டிருக்கிறார் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். பெண்ணிற் பெருந்தக்க யாவுள என்றார் வள்ளுவர் பெருமகனார். இன்று இந்திய துணைக் கண்டத்திலேயே பெண்களுக்கான திட்டங்களைத் தீட்டுவதிலும், பெண்கள் முன்னேற்றத்தில் பாடுபடுவதிலும், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்தியாவிலேயே முதல், முதல் அமைச்சராக விளங்குகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). அதனாலே தான் இங்கேயுள்ள காங்கிரஸ்காரர்களுக்கு புரியவில்லை என்றாலும் காங்கிரஸுடைய தலைவர் பாரதப் பிரதமர் மாண்புமிகு திரு. நரசிம்மராவ் அவர்கள் இந்திய துணைக் கண்டத்திலேயே பெண்களுக்கான சிறந்த திட்டங்களைத் தீட்டுவதில் முன்னோடியாக உள்ள தமிழகத்திற்கு சிறு சேமிப்புத் திட்டத்தைப் போன்ற 'மகிளா சம்ரிதி யோஜனா' என்ற திட்டத்தில் முதல் மாநிலமாக முதல் பரிசையும் மாவட்ட வாரியாக 10 பரிசுகளையும் வழங்கியிருக்கிறார்கள். மக்களுக்கு நன்மை செய்கிற எந்தத் திட்டமாக இருந்தாலும் அதனை முதலாவதாகச் செயல்படுத்துகின்ற முதலமைச்சர் நம்முடைய புரட்சித் தலைவி ஆவார்கள். பலன் எதிர்பாராது பணியாற்றும் எந்தத் துறையின் பணியாளர்களுக்கும், பலன் கொடுப்பதில் தயங்காது செயல்படும் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்தப் பரிசுக்குக் காரணமாக இருந்த அங்கன்வாடி பணியாளர்கள், கிராம சேவிகா, முக்கிய சேவிகா, மேற்பார்வையாளர்கள், குழந்தை வளர்ச்சித்திட்ட அலுவலர்கள், ஊட்டச்சத்து பயிற்றுநர்கள் ஆகியவர்களில் சிறப்பாக பணியாற்றியவர்களுக்கு ரூ. 1 இலட்சம் ஊக்கத் தொகையாக பகிர்ந்து அளிக்குமாறு உத்திரவிட்டு இருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 7-50

அதன் அடிப்படையில் மகத்தின் மகளிர் குழுக்களிடம் இந்த நியாய விலைக்கடைகளை நடத்தும் பொறுப்பை ஒப்படைக்க புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதன் அடிப்படையில் தர்மபுரி, சேலம், மதுரை, இராமநாதபுரம், விழுப்புரம் ராமசாமி படையாச்சியார், வள்ளலார் ஆகிய மாவட்டங்களில் எல்லாம், பெண்கள் குழுக்களிடம் நியாய விலைக் கடைகள் முதல் கட்டமாக ஒப்படைக்கப்படுகிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) வீட்டுக்குள்ளே பெண்ணை பூட்டி வைக்கும் விந்தை நிலையை மாற்றிட வீட்டுக்குத் தேவையான பொருட்களை விற்பனை செய்வதற்கும் பெண்களை உயர்த்தி பெண் இனத்திற்கு

பெருமை சேர்த்திருக்கிறார் எங்கள் தாய் புரட்சித் தலைவி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) வானம்பாடிகளாய் கானம் பாட வேண்டியவர்கள் உடலில் நேர்ந்த குறையால், ஊனமுற்றவர்கள் என்று உரைக்கப்படுகிறார்கள். ஆகாயத்தில் வலம்வர ஆசைகள் உண்டு, ஆனால் சிறகில்லாப் பறவைகளாய்ச் சிந்தையெல்லாம் நொந்தார்கள் அந்த ஊனமுற்றவர்களின் வாழ்வை உயர்த்த வேண்டாமா? அதற்காக எங்கள் சாதனைத் தலைவி சமூக நலத்துறையைச் சாதனமாக்கினார். விதியை நொந்தவர்களின் விழிகளைத் திறந்தார். நம்பிக்கையோடு வாழ்வில் அவர்கள் நடைபோடுவதற்கு நாளெல்லாம் சிந்தித்துத் திட்டங்கள் தீட்டினார். புதுப்பாதை காட்டினார். அதன்பயனாக ஏராளமான உதவிகள், ஊனமுற்றவர்களின் வாழ்க்கையை உயர்த்துவதற்கு நம்முடைய அன்புத்தலைவியின் கருணையினால் இன்றைக்கு அறிவிக்கப்படுகின்றன. வாதங்கள் உண்டு விவாதங்கள் உண்டு. அவையெல்லாம் முறையோடு நடந்தால்-எண்ணி மகிழத்தக்கவை. முறையற்ற வாத விவாதங்களெல்லாம் சமுதாயத்தின் இளம்பிள்ளை வாதங்களே. கருத்துக்களைக் குரல் வளையிலேயே நசுக்கிடும் கொடியவை அவை. அதுபோன்றுதான் மழலைப் பருவத்திலேயே குழந்தைகள் நசுக்கிடும் கொடிய நோய் இளம்பிள்ளை வாதம் என்பது.

சின்ன மலர்களுக்குச் சிரச்சேதம் நடப்பதோ? வண்ணப் பூக்களை வாள்களால் சிதைப்பதோ? அன்னையாம் புரட்சித் தலைவியின் கருணை உள்ளம், அதற்காக அறிமுகப்படுத்திய திட்டமே - போலியோ திட்டம் என்பது. கொடிய நோயின் கொலைக்கரங்களிலிருந்து • குழந்தைச் செல்வங்களை மீட்க, சென்ற ஆண்டு தர்மபுரி மாவட்டம் முழுவதும் இத்திட்டத்தில் எடுக்கப்பட்டது. இந்த ஆண்டு வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம் முழுவதும் போலியோ திட்டத்தில் எடுக்கப்படுகிறது என்பதை இம்மாமன்றத்தில் மகிழ்ச்சியோடு அறிவிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நம்மைத் தேடிவந்த மனுக்கள் அனைத்திற்கும் பொருட்கள் கொடுப்பதோடு மட்டும் நிற்கவில்லை. இதற்கென்று ஒரு மறுவாழ்வு திட்டம் தீட்டப்பட்டு வீடு வீடாக தேடிச் சென்று இப்படிப்பட்ட குழந்தைகளைக் கண்டெடுத்து அவர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் வழங்க இந்த ஆண்டு மூன்று மாவட்டங்கள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. இந்த ஆண்டு இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு ரூபாய் 28 இலட்சத்து 30 ஆயிரம் ஒதுக்கி புரட்சித் தலைவி அவர்கள் உத்திரவு வழங்கி உள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தங்கத்திலே ஒரு குறை இருந்தாலும் தரத்தினில் குறைவதில்லை மனிதன் அங்கத்திலே ஒரு குறையிருந்தாலும் அன்பு

1995 ஏப்ரல் 27] [திருமதி. இரா. இந்திரகுமாரி]

குறைவதில்லை என்று உடல் ஊனமுற்றவர்களின் உள்ளத்தைத் தமிழால் தட்டிக் கொடுத்தார் கவிஞர் கண்ணதாசன். பிள்ளை நெஞ்சில் கள்ளம் இல்லை, சிரித்தால்தானே தெரியும், பிழைகள் கொண்ட உடலை அந்த தேவன் கொடுக்கக்கூடும் என்று மன வளர்ச்சி குன்றிய மங்கைக்குக் கூட அன்னைத் தமிழால் அவர் ஆறுதல் கூறுவார். மனிதனின் படைப்பில் சிறு குறை நேர்ந்து விட்டாலும் கடுமையாகக் கண்டனம் தெரிவிக்கிறோம். இறைவனின் படைப்பில் ஏற்படும் குறைகளை என்னென்பது? எவரிடம் சொல்வது? மேலே உள்ள உதடுகள் பிளந்திருக்கும் குழந்தைகளின் கொடுந்துயரை மேலை நாடான அமெரிக்கா மட்டுமே சரி செய்ய முயன்றது. மேலே உள்ள ஆண்டவனின் படைப்பில் நேர்ந்த இக்கொடுமை மேன்மை தங்கிய எங்கள் தாயின் கவனத்திற்கு வந்தது. பிளவுபட்ட மேலண்ணம், பிளவுபட்ட மேல் உதடு இவற்றுடனே பிறந்த, பேச்சுத் தடுமாற்றத்துடன் வளரும் பிள்ளைகளைப் பற்றி யாராவது எந்த அரசிலாவது கவலைப்பட்டிருக்கிறார்களா? இயற்கையின் இந்த கோர விளையாட்டிற்குப் பரிகாரம் தேட வேண்டுமென்று எண்ணிப்பார்த்த நம் கருணைத் தலைவி, இதில் கவனம் செலுத்தினார், பிளவுபட்ட மேலண்ணம், பிளவுபட்ட மேல் உதடு இவற்றை ஓர் அறுவை சிகிச்சை மூலம் சரிசெய்ய முடியும். ஆனால் குழந்தை பிறந்த 2 மாதங்களுக்குள் அந்த அறுவை சிகிச்சையை நடத்த வேண்டும். மருத்துவமனைகளில் இதற்காகப் பதிந்துவைத்திருக்கும் தாய்மார்கள் ஏராளம். ஆனால் அதற்காகச் செலவு செய்ய வசதியற்றவர்கள். அவர்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழ்ப்பட்டவர்கள். 'நல்ல பேரை வாங்கவேண்டும் பிள்ளைகளே, நம் நாடு என்ற தோட்டத்திலே நாளை மலரும் முல்லைகளே' என்று பாடிப் பாராட்டப்படும் அந்த அரும்புகளின் நிலையை எண்ணி நம் அன்னை ஆதரவுக் கரம் நீட்டினார். ஒரு குழந்தையின் சிகிச்சைக்கு ரூபாய் 3000 செலவாகிறது. அதனால் இனி அரசே அந்தச் செலவை ஏற்கும் என்று மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். ஒவ்வொரு ஆண்டும், அரசின் பொது மருத்துவமனைக்கு குழந்தைகளின் எண்ணிக்கைக்கேற்ப சமூகநலத்துறை இந்த நிதியை வழங்கும். அமெரிக்கா மட்டுமே அமுல்படுத்தும் இத்திட்டத்தை உலகத்தில் இரண்டாவது நாடாகவும் இந்தியாவில் முதல் முதலாவதாகவும் தமிழகத்திலேதான் செயல்படுத்தப்படுகிறது என்பதைப் பெருமிதத்துடன் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவியின் புகழ் மகுடத்தில் இத்திட்டம் ஒரு 'பொற் சிறகு'.

*பிற்பகல் 7-55*

பெண்கள் நாட்டின் கண்கள் என்பார்கள்; அந்தக் கண்களே கலங்கலாமா? வீட்டுக்கு விளக்கேற்றும் பெண்களின் சொந்த வாழ்வில் சோக இருள் சூழலாமா?

"துன்பம் நேர்கையில் யாழெடுத்து-நீ
இன்பம் சேர்க்கமாட்டாயா?"

என்று பாவேந்தர் பாரதிதாசன் பெண்ணைப் பார்த்துப் பாடினார். அந்தப் பெண்ணின் வாழ்விலேயே துன்பம் நேர்ந்தால் யார் யாழ் எடுத்து மீட்டுவது? பெண்களுக்காகப் பெண்களின் நலனுக்காக அல்லும் பகலும் ஆய்ந்து வினையாற்றும் பெண்ணரசி-எங்கள் பேரரசி - புரட்சித் தலைவியைத் தவிர வேறு யார் மீட்ட முடியும்? (மேசையைத் தட்டும் ஒலி) விபத்தினால் தண்டுவடம் பாதிக்கப்பட்டு கால்களும், கைகளும் வாதநோயால் சேதமடைந்து வாழ்விழந்து நிற்பவர்களில் ஆண்களே பெரும்பாலோர்; ஆண்டு ஒன்றுக்கு 300 பேர் இவ்வியாதியால் பாதிக்கப்படுகிறார்கள். நோய் அவர்களை தாக்கிய பிறகு ஏற்கனவே செய்து வந்த பணியைச் செய்ய முடியாத நிலைக்கு ஆளாகிறார்கள்; அவர்களுடைய மனைவியரே குடும்பப் பொறுப்பை ஏற்கவேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகிறார்கள். தோகை நல்லாரின் துயர்தீர்க்க வேண்டாமா? நோய்க்கு ஆளான ஆடவர்களுக்கு மருத்துவச் செலவுகள் மட்டும் மாதம் ஒன்றுக்கு இருநூறு ரூபாய் தேவைப்படுகிறது. நடுக்கடலில் கப்பல் கவிழ்கிறபோது, அங்கு ஒரு தெப்பமாகவாவது நாம் செயல்பட வேண்டுமல்லவா?

ஆகவே, இந்த ஆண்டு முதற்கொண்டு இந்த வியாதியால் பாதிக்கப்பட்டவரின் குடும்பத் தலைவிக்கு மாதம் 100 ரூபாய் மருத்துவ செலவிற்கு வழங்க, புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஊனமுற்றவராய் இருக்கலாம், அதற்காக சமுதாயத்தில் அவர்கள் நாணமுற்றவராய் நடமாடலாமா? கௌரவத்தோடு சமுதாயத்தில் வாழ்வதற்கு அவர்களுக்குக் கை கொடுப்பது கல்வி அல்லவா? படிப்பில் கவனம் செலுத்தும் மாணவர்களுக்குப் பாராட்டும் பரிசும் கிடைத்தால், இன்னும் முழுமையாய் கவனம் செலுத்தி முன்னேறுவார்களன்றோ? அதனால் சிறந்த மதிப்பெண் வாங்கும் ஊனமுற்ற மாணவர்களை புரட்சித் தலைவியின் அரசு உற்சாகப்படுத்தக் கருதியது. அதனால் இனி வருங்காலத்தில் பள்ளி இறுதித் தேர்வில் கை, கால் ஊனமுற்ற மாணவர்கள் 500-க்கு 350 மதிப்பெண்கள் வாங்கினால் பரிசுத் தொகையாக அவர்களுக்கு ரூ. 500 வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

காது கேளாத மாணவர்கள் 500-க்கு 300 மதிப்பெண்கள் வாங்கினால், இந்த பரிசுத் தொகையைப் பெறுவதற்கு அவர்களும் தகுதி உடையவர்கள் ஆவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பார்வையற்ற மாணவர்கள் மேலும் நம் பரிவிற்கு உடையவர்கள் அன்றோ? அதனால் 500-க்கு 250 மதிப்பெண்கள் வாங்கினாலே போதும் அவர்களுக்கும் இந்தப் பரிசுத் தொகை நீட்டிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுபோன்றே மேல்நிலை இறுதி வகுப்பில் பிளஸ் 2 பயிலும் ஊனமுற்ற மாணவர்களில், உடல் ஊனமுற்றோர் 1200-க்கு 850 மதிப்பெண்கள் வாங்கினால் அவர்களுக்கு ரூ. 750 பரிசுத் தொகையாக வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

காது கேளாத, பார்வையற்ற மாணவர்களுக்கோ மேலும் பரிவு காட்டப்படுகிறது. 1200-க்கு 600 மதிப்பெண்கள் வாங்கினாலே போதும், அவர்களுக்கும் இந்தப் பரிசுத் தொகை வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

"தலைவாரிப் பூச்சூடி உன்னை பாடசாலைக்கு போவென்று சொன்னாள் உன் அன்னை" என்று பாவேந்தர் பாரதிதாசன் பாடியது நம் அன்னை புரட்சித் தலைவிக்காகவே எழுதிய அமுத வரிகள் அல்லவா?

ஊனமுற்றோர், காதுகேளாதோர், விழியிழந்தோர் ஆகிய ஒவ்வொரு பிரிவிலும் முதல் மார்க் வாங்குகிறவர்களுக்கு சிங்கத் தலைவியை பெற்றெடுத்த தங்கத் தாய் அன்னை சந்தியாவின் பெயரிலே விருது வழங்கப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு"

என்று கல்வியின் பெருமையை வள்ளுவப் பெருந்தகை வாய் மலர்ந்தார்.

அந்தக் கல்விக்கு உரிய உதவித் தொகையாக 18,000 குழந்தைகளுக்கு மத்திய அரசு உதவி வந்தது. திடீரென்று மைய அரசு கையை விரித்தது. நிதி ஒதுக்கீட்டை நிறுத்தியது.

"நல்ல நல்ல பிள்ளைகளைநம்பி - இந்த
நாடே இருக்குது தம்பி"

என்பது நம் புரட்சித் தலைவர் இசைத்த புதுப்பாட்டல்லவா? (மேசையைத் தட்டும் ஒலி) அந்த 18,000 பிள்ளைகளின் கல்வி பாதிக்கப்படலாமா? மத்திய அரசு நிதியை நிறுத்தியது, ஆனாலும் எங்கள் தாயின் அரசோ அக்குறையை திருத்தியது. (மேசையைத் தட்டும் ஒலி) இனி அந்த 18,000 பிள்ளைகளின் எதிர்காலம் பாதிக்கப்படாத வகையில் அவர்களுக்கு உரிய உதவியை, எத்தனையோ கடுமையான நிதி நெருக்கடியிலும் மாநில அரசே வழங்க எங்கள் தாயுள்ளம் கொண்ட புரட்சித் தலைவி உத்தரவிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நிறுத்தியதை, தொடர்ந்து வழங்க ஆணையிட்டது மட்டுமா? உதவித் தொகையை மேலும் உயர்த்தியும் ஆணையிட்டுள்ளார்கள். அதன்படி இனிமேல் 10 ரூபாய் பெறுபவர்கள் புத்தகத்திற்கு

25 ரூபாய் பெறுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி);

16 ரூபாய் பெறுபவர்கள் 30 ரூபாய் பெறுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

34 ரூபாய் பெறுபவர்கள் 50 ரூபாய் பெறுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

44 ரூபாய் பெறுபவர்கள் 60 ரூபாய் பெறுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

50 ரூபாய் பெறுபவர்கள் 75 ரூபாய் பெறுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

70 ரூபாய் பெறுபவர்கள் 80 ரூபாய் பெறுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

80 ரூபாய் பெறுபவர்கள் 90 ரூபாய் பெறுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

84 ரூபாய் பெறுபவர்கள் 100 ரூபாய் பெறுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 8-00

மத்திய அரசு நட்டாற்றிலே குழந்தைகளை விட்டாலும் நம் தாய் கருணையோடு அவர்களை கரைசேர்த்தது மட்டுமல்ல (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களை தோளிலும் தூக்கி வைத்துக் கொள்கின்ற தாயுள்ளம், தம் தலைவியைத் தவிர யாருக்கு வர முடியும். (மேசையைத் தட்டும் ஒலி)

"அன்னையைப் போல் ஒரு தெய்வமில்லை,
அவர் அடி தொழ மறப்பவர் மனிதரில்லை"

என்று அன்றே பாடினார்கள். மறப்பவரே மனிதர் இல்லை என்று சொன்னால், அன்னையைப் பற்றித் தவறாக விமரிசிப்பவர்களை என்னவென்று சொல்வது? கண்ணியமிக்க அவை உறுப்பினர்களின் கற்பனைக்கே விட்டுவிடுகிறேன்.

"செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை"

என்று காதுகளின் பயனை கவுரவிப்பார் திருவள்ளுவர். (மணியடிக்கப்பெற்றது)

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 1/2 மணி நேரம் போதும் என்றீர்கள்.

*மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் 10 நிமிடங்களில் உரையை முடித்துக் கொள்கிறேன்.

"செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை"

என்று காதுகளின் பயனை கவுரவிப்பார் திருவள்ளுவர். 'கற்றலின் கேட்டல் நன்று' என்பார். காது இல்லாமல் எப்படிக் கேட்க முடியும்? நம் அவையில் காது இருந்தும் கேளாத கண்ணியவான்களைப் பற்றியோ தேர்ந்தெடுத்த மக்களுக்காகக் குரல் கொடுக்க மனமில்லாமல் கருப்புத் துணியால் வாயைக் கட்டி கொள்கிறவர்கள் பற்றியோ நாம் கவலைப்படவில்லை. இயற்கையிலேயே காது கேளாதவராய் வாழ்பவரைப் பற்றியே கருத்துச் செலுத்துகிறோம். இயற்கை தன் நீதியை இவர்களுக்கு வழங்க மறுத்தது. மேல்முறையீடு எங்கள் மேன்மைமிக்க முதலமைச்சரின் முன் வைக்கப்பட்டது. இயற்கை வழங்கத் தவறிய நீதிக்கு, பரிகாரத்தை எங்கள் பாட்டுடைத் தலைவி, பைந்தமிழ் முதல்வர் வழங்கினார்கள். பல்கலைக்கழகத்தில் கண்பார்வையற்றோருக்கு அளிக்கப்படும் தேர்வுக் கட்டண விதி விலக்கினை இனி காது கேளாதோருக்கும் வழங்குமாறு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்கள் தாய் புரட்சித் தலைவி கண்ணிழந்த மனிதருக்கு கல்வி தந்தார் அன்று. 'இருகை'யிழந்த மனிதருக்கும் கல்வித் திட்டம் தருகிறார் இன்று. தற்போது பார்வை அற்றவர்களுக்குத் தேர்வு எழுத உதவும் 'ஸ்கிரைப்' உதவித் திட்டம் அமுலிலே உள்ளது. அவர்களுக்குப் பிறரைவிட அரைமணி நேரம் அதிகமாக ஒதுக்கீடு செய்யும் திட்டமும் அமுல்படுத்தப்பட்டு வருகிறது. இன்றுமுதல் இவை இரண்டையும் கை ஊனமுற்றவர்களுக்கும் வழங்க வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். அதன்மூலமாக இனிமேல் தேர்வு எழுதுவதற்கு உதவியாக ஒரு ஆளையும், 1/2 மணி நேரம் அதிக ஒதுக்கீட்டையும் இன்றுமுதல் கை ஊனமுற்றவர்களும் பெறுவார்கள் என்பதை மகிழ்ச்சியோடு அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

"ஓடி விளையாடு பாப்பா - நீ
ஓய்ந்திருக்கலாகாது பாப்பா" என்று பாரதி பாடினார்.

ஓடி விளையாட இயலாமல், இளம்பிள்ளை வாதத்தால் ஓய்ந்து கிடக்கும் குழந்தைகள் உலவி வருவதற்குத் தேவையான உபகரணங்கள் இந்த அரசியால் உதவியாக வழங்கப்படுகின்றன. ஆண்டுதோறும் வழங்கப்படும் இந்த அன்பளிப்பு அனைவருக்கும் கிடைப்பதில்லை. பரிசீலனையில் தேர்வு பெறும் விண்ணப்பங்களுக்கான தேவைகளே நிறைவு செய்யப்படுகின்றன. உபகரணங்கள் கிடைக்காத இளம்பிள்ளை வாதமுற்ற குழந்தைகளின் உள்ளங்கள் வாடுமே என்று உருகினார் நம் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். அருள் நெஞ்சத்தோடு நம் அன்னை ஆணையிட்டதனால் இனிமேல் விண்ணப்பங்கள் தேர்வு செய்யப்படாமல், எவ்வளவு குழந்தைகள் விண்ணப்பிக்கிறார்களோ அவர்கள் அனைவருக்கும் உபகரணங்கள் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஊனமுற்றவர்கள் ஓய்ந்து கிடக்காமல் ஊரெங்கும் சென்று பணி புரிவதற்காக அவர்களுக்கு மூன்று சக்கர சைக்கிள் வண்டிகள் ஆண்டுதோறும் வழங்கப்படுகின்றன. இதை நம்முடைய அரசு அவர்களுக்கு அன்புக் கொடையாய் அளித்து வருகிறது. ஆனால் வாங்கிக்கொள்கிறவர்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் வளர்ந்து வருகிறதல்லவா? கூடுகிற ஊனமுற்றவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப கொடுக்கின்ற வாகனங்களின் எண்ணிக்கையும் அதிகரிக்க வேண்டுமென்று, அன்னை சந்தியாவின் அருந்தவப் புதல்வியாம், எங்கள் ஆருயிர்த்

தலைவி (மேசையைத் தட்டும் ஒலி) எண்ணிய எண்ணங்களின் விளைவு, அவர்களுடைய ஈர மனத்தின் வெளிப்பாடு. இந்த ஆண்டு கூடுதலாக 1,500 மூன்று சக்கர சைக்கிள் வண்டிகளை வழங்குமாறு உத்தரவிட்டு இருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். இதனால் நடமாட முடியாமல் தடுமாறிக் கொண்டிருக்கும் ஊனமுற்றவர்களுக்கு வழங்கப்படும் உதவி அதிகரித்து இருக்கிறது.

இசை என்பது இதயத்தோடு மட்டும் பேசும் இனியமொழி; பாடகன் சப்தத்தைப் படம் வரைகிறான். அதற்குத் தலைப்புத்தான் சங்கீதம். விழிகளால் உலகைப் பார்க்க இயலாதவர்கள் ஒலிகளால் அல்லவா உலகைப் பார்க்கிறார்கள். அவர்களுக்கு உதவ வேண்டாமா? 'எனது விழியில் உனது பார்வை' என்று ஆதரவு கூறி அரவணைக்கும் தாயல்லவா நம் புரட்சித் தலைவி? விழிவிளக்கை இழந்தவர்களின் வாழ்வில் ஒளிவிளக்காய் நிற்கும் நம் புரட்சித் தலைவியின் ஆணைக்கேற்ப, இன்று முதல் இசைப்பயிற்சி பெற்ற பார்வையற்றோர் அனைவருக்கும் அவர்களுக்குத் தேவையான இசைக் கருவிகளை இலவசமாக அரசு வழங்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

"வாழ்க்கையே ஒரு பயணம்" என்றார்கள்; பயணங்கள் இல்லாமல் வாழ்க்கை ஏது? எத்தனையோ இடங்களுக்குச் சென்றுவர வேண்டிய தேவை நகரிலும், நாட்டிலும் ஏராளமாய் இருக்கிறது. எங்கள் புவியரசி, புரட்சித் தலைவியின் ஆட்சி வருவதற்குமுன், 15 வயது வரை இலவச பஸ்பாஸ் என்றிருந்ததை உடல் ஊனமுற்றோர் நலன் கருதி 20 வயது வரை அரசு நீட்டித்துத் தந்தது. இன்று நம் அன்புத்தாய் அதையும் தளர்த்தினார். உடல் ஊனமுற்றோரின் பாதுகாவலாக விளங்கும் பைந்தமிழ்த்தாய் புரட்சித் தலைவி அவர்கள் இனிமேல் வயதுவரம்பின்றி உடல் ஊனமுற்ற அனைவருக்கும் இலவச பஸ் பாஸ் வழங்க உத்தரவிட்டிருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 8.05

இதுவரை சமூக நலத் துறை ஒரு அடையாள அட்டையைக் கொடுத்தால் அதைக் கொண்டு போய் போக்குவரத்துக் கழகத்திலே கொடுத்து பஸ் பாஸை பெற்றுக்கொள்ள வேண்டும் என்று முறை இருந்தது. அதனால் இரண்டு முறை ஒவ்வொரு துறைக்கும் உடல்

[திருமதி. இரா. இந்திரகுமாரி] [1995 ஏப்ரல் 27

ஊனமுற்றோர் அலையும் நிலை இருந்தது. அதைச் சிந்தித்தார் நம் அன்னை. இது சிறிய விஷயம் தான். போக்குவரத்துக் கழகத்திலே இருந்து பஸ் பாஸை இனிமேல் சமூக நலத் துறையே பெற்று, அந்த மாவட்டத்திலே உள்ள உடல் ஊனமுற்றவர்களுக்கு, நேரிடையாக, அம்மாவட்ட உடல் ஊனமுற்ற நலத்துறை அதிகாரிகளே வழங்க அன்புத்தாய் புரட்சித் தலைவி உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதை இந்த அவையில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஊனமுற்றவர்களின் வாகனங்களுக்கு வழங்கப்படும் பெட்ரோல் மானியத்தை திடீரென்று தற்போது மத்திய அரசு நிறுத்திவிட்டது.

அளவற்ற கருணையினால், இனி தொடர்ந்து அதை இனிமேல் மாநில அரசே வழங்கும் என்று புரட்சித் தலைவி உத்தரவிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மக்களுக்கு உதவிடும் நற்பணிகளையெல்லாம் மைய அரசு கைவிடும் போதெல்லாம், எங்கள் தாயின் அரசோ மக்களுக்கு உதவிடும் வகையில் நிதி நெருக்கடி ஏற்பட்டாலும் அதைக் கைதூக்கி விட்டுக்கொண்டே இருக்கிறது. உடல் ஊனமுற்றவர்களின் வாழ்க்கை ஓட்டம் மட்டுமல்ல; அவர்கள் வாகனங்களின் ஓட்டமும் தடைப்பட்டு விடக் கூடாது என்பதில், எங்கள் அன்னையின் அரசு எத்தனை அக்கறையோடு இருக்கிறது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு.

நிலை மாறும் உலகில் நிலைக்கும் என்ற கனவில் - இங்கு வாழும் மனித ஜாதி - இதில் வாழவில்லை நீதி என்று உள்ளத்தின் வேதனைகளை உரையாடும் உலகம் இது. வானத்தைத் தொடுகிற வல்லமைச் சிறகுகள் சந்தர்ப்பச் சூழல்களால் புழுதி மண்ணுக்குள்ளே புதைந்து விடுகின்றன. விளையும் பயிர் முளையிலே தெரிகிறது. முளையைக் கண்டறிந்து முன்னேறவில்லை என்றால் விளையும் பயிர் வளையும் பயிராகி சமுதாயத்திலிருந்து களைய வேண்டிய களையாக அல்லவா மாறிவிடுகிறது. வண்ணப் பூக்களாம் சின்னஞ் சிறுவர்கள். அவர்களை வாரியணைத்து வாழவைக்காமல் சமுதாயம் புறக்கணித்தால் அவர்கள் சருகாகிவிட மாட்டார்களா? திசை காட்டி இல்லாமல் பயணம் ஏது? பாதை தெரியாமல் பரிதவிக்கும் சிறுவர்களைப் பரிவோடு அரவணைத்து, பிஞ்சு உள்ளங்கள் நஞ்சு கலந்துவிடாமல் - அவர்களுடைய நெஞ்சங்களையெல்லாம் நேர்வழியில் செலுத்துவதற்கு, நம் அரசு கவலையோடு கவனம் செலுத்துகிறது. சென்னை மாநகரம், சிங்கார நகரம். இங்கு தொழுநோயாளிகள், பிச்சைக்காரர்கள் இவர்களின் குழந்தைகளை, உயிர்வாழ்விற்கு உரியவர்களாய் உருவாக்க வேண்டும் என்று நம் புரட்சித் தலைவியினுடைய அரசு உறுதி எடுத்துள்ளது. கொடி மலர்களாம் குழந்தைச் செல்வங்களைக் கோபுரங்களாய் உருவாக்குவதற்கு

வழிகாட்டும் ஒளி விளக்காய், வாழ்வளிக்கும் வேடந்தாங்கலாய் - இளைஞர் இல்லம் ஒன்று அரசு சாரா அமைப்பின் கீழ் 3.86 இலட்சம் செலவில் சென்னையிலே ஆரம்பிக்கப்படுகிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) சோகக் கடலில் தத்தளிக்கும் சிறுவர்கள் இதன் மூலம் கரை சேர்க்கப்பட்டு கௌரவமாய் உயர்வார்கள். சென்னையில் இப்படிப்பட்ட சிறுவர்கள் இதன் மூலம் பயன் அடைவார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சமூகப் பாதுகாப்புத் துறையின் கீழ் இயங்கும் இளைஞர் இல்லங்களிலும், மகளிர் காப்பகங்களிலும் இசைக் குழுக்கள் இயங்கி வருகின்றன. அவைகள் மக்களை மகிழ்வித்து, அவர்கள் மனதிலும் இடம் பெற்று வருகின்றன.

வாத்தியக் கருவிகளே மனத்துயரங்களுக்கு மருத்துவம் பார்க்கிற வைத்தியக் கருவிகளாய் மாறிவிடுகின்றன என்பார்கள். வாத்தியக்கருவிகள் நம் வாழ்வின் வைத்தியக் கருவிகள் என்பதை உணர்ந்து, கலைகளின் காவல் தெய்வம் நம் புரட்சித் தலைவி அவர்கள் இளைஞர் இல்லங்களிலும், மகளிர் காப்பகங்களிலும் உள்ள இசைக்குழுவிற்கு ஏற்ற பயிற்சியைத் தந்து இலவசமாக இசைக் கருவிகளை வழங்க உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சாலையோரச் சிறுவர்களுக்கு மட்டுமா தொழில்கல்வி? ஆதரவற்ற அனைத்துச் சிறுவர்களையும் நம் அன்னையின் கருணை அரவணைக்கிறது. கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள், கவலை உனக்கில்லை ஒப்புக்கொள் என்பது பழமொழி அல்ல. காலம் என்றென்றும் போற்றிப் பின்பற்றும் பொன்மொழி. அந்த நன்மொழியை வாழ்க்கை நடைமொழியாய்க் கொண்டு ஆக்குகிறது நம் அரசு. சமுதாயத்தால் புறக்கணிக்கப்பட்ட, ஆதரவற்ற சிறுவர்களைப் பராமரித்துக் கல்வி அளிக்கும் - தஞ்சாவூர், இராணிப்பேட்டை, செங்கற்பட்டு நகரங்களில் இருக்கும் அரசு இல்லங்களில் உள்ள தடுமாறிக் கொண்டிருக்கும் சிறுவர்களுக்கு வாழ்க்கை தடம் மாறாமல் இருக்க அவர்களுக்குத் தொழிற்பயிற்சி தருவதற்கு இந்த ஆண்டு நம்முடைய அன்னை புரட்சித் தலைவி அவர்கள் 3.59 இலட்சம் ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

செய்யும் தொழிலே தெய்வம், அதில் திறமைதான் நமது செல்வம், கையும், காலுமே உதவி, கொண்ட கடமையே நமக்குப் பதவி என்பது சுட்டும் விழிச்சுடராம் நம் தலைவியின் சூளுரை அல்லவா.

தொழில் பயிற்சி மையம், "நல்லதோர் வீணை செய்தே அதை நலங்கெட புழுதியில் எறிவதுண்டோ" என்று பாடினான் பாரதி. இன்ப

[திருமதி. இரா. இந்திரகுமாரி] [1995 ஏப்ரல் 27

ஸ்வரங்களாய்ப் பிறந்து இல்லத்தில் வளர வேண்டிய சிறுவர்கள் சாலையோரங்களில் வாழ்க்கையைத் தொலைத்துவிட்டு குப்பைகளைப் பொறுக்குகிறவர்களாய், குறிக்கோள் இல்லாதவர்களாய் வாழ்வதைப் பார்த்து, வேதைனையால் மனம் வெதும்பி அந்த வீணைகளுக்கு நல்வாழ்வு அளிக்க வேண்டுமென்று நம் அரசு பல் திட்டங்களைத் தீட்டி வருகிறது. சென்னை, மதுரை, கோவை, சேலம், வேலூர், விழுப்புரம் ஆகிய நகரங்களில், அரசு சாரா அமைப்பின் கீழ், சாலையோரச் சிறுவர்களுக்குத் தங்குமிடங்கள் துவங்கி, அங்கே தொழிற்கல்வி அளிக்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டில் இத்தகைய சிறுவர்களுக்குத் தொழிற்பயிற்சி மையங்கள் இரண்டு திருச்சியிலே துவங்கப்படுகிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அங்கிருந்து அவர்கள் வெளியேறும்பொழுது சொந்தக்காலில் நிற்பதற்குரிய வல்லமை பெற்றவர்களாய், தொழில் வல்லுநர்களாய் அவர்கள் வெளியேறி வருவார்கள்.

*பிற்பகல் 8.10*

“முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு இறை என்று வைக்கப்படும்” என்றார் வாழ்வியலை வகுத்த வள்ளுவப் பெருந்தகை. அதனால்தான் தாயே, உங்களை ‘இதய தெய்வமே’ என்று எந்நாளும் போற்றுகின்றோம்.

*“குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்*
*அடிதழீஇ நிற்கும் உலகு’*

என்று திருவள்ளுவர் பெருமான்தான் தெரிவித்தார். அதனால்தான் தாயே, உங்கள் பாதங்களை நாள்தோறும் பணிகின்றோம். நாடெங்கும் நடந்து நலம் பயக்கும் காற்றை உள்ளே வராதே என்று அனுமதி மறுப்பதற்கும், அனுமதி கொடுப்பதற்கும் உலகத்தில் யாருக்காவது உரிமை இருக்கிறதா? காற்றுக்கு யாராவது வேலி கட்ட முடியுமா? கடலுக்கு யாரேனும் மூடி போட முடியுமா? மயிலாட வான்கோழி தடை செய்வதோ, குயில்பாட கோட்டான்கள் குறை சொல்வதா (மேசையைத் தட்டும் ஒலி) முயல் கூட்டம் சிங்கத்தின் எதிர் நிற்பதா (மேசையைத் தட்டும் ஒலி) அவர்தம் முறையற்ற செயலை நாம் பொறுத்திருப்பதா? கங்கை வெள்ளம் சங்குக்குள்ளே அடங்கிவிடாது, தமிழ் மங்கை உள்ளம் பொங்கும்போது தடைகளும் ஏது? (மேசையைத் தட்டும் ஒலி) புதிய சமுதாயம் காண புறப்பட்டவர்களைத் தடுத்து நிறுத்தும் சக்தி இந்த பூமிக்கும் கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) எந்த சாமிக்கும் கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) காரிருளால் உலக ஒளி மாறுவதுண்டோ, கரை சேற்றால் தாமரையின் வாசம் போமோ, பேர்

எதிர்ப்பால் உண்மைதான் இன்மையாமோ, பிறர் சூழ்ச்சி தமிழ்நாட்டில் வெல்வதுண்டோ, (மேசையைத் தட்டும் ஒலி) முண்டி முண்டி வந்தாலும் முந்திவர முடியாமல், பின்னாலேயே நுரைதள்ளி வருகின்ற குதிரைகள் கிண்டியிலே வென்றதாய் சரித்திரமில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

அண்ணாவின் கொள்கை வழி அடலேராய் செல்பவரை குறைசொல்லி எந்நாவும் ஜெயித்ததில்லை. வெங்கொடுமை சாக்காட்டில் விளையாடும் தோள்கள் எங்கள் தாயின் வெற்றித் தோள்கள். கங்கையைப் போல், காவிரிபோல், கருத்துக்கள் ஊறும் உள்ளம் எங்கள் தாயின் கருணை உள்ளம். (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் தாய் சுதந்திர ஜோதி, சுடர் விளக்கு, சூறாவளிக் காற்று, சுட்டெறிக்கும் நெருப்பு, (மேசையைத் தட்டும் ஒலி) கட்டுப்பாடில்லாமல் நம்மை கட்டிப்போட முயன்றவர்கள், தலைமறைவில் இன்று தங்கள் காயங்களுக்கு கட்டுப்போட்டு கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இது காலத்தின் வெளிப்பாடு, கன்னித் தமிழகத்தின் குமுறல், கொந்தளிப்பு, விலகட்டும் காரிருள், தொடங்கட்டும் ஒளியின் ஊர்வலம். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றும் வெற்றி என்தாயே, உமக்கு என்றும் வெற்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

என்னுடைய உரையில் வெட்டுத் தீர்மானங்களுக்கு பலவற்றிற்கு நான் பதில் அளித்திருக்கிறேன். இன்னும், தேவைப்படுகின்ற வெட்டுத் தீர்மானங்களுக்கு இங்கே பதிலை நான் வைத்திருக்கிறேன். என்னுடைய உரையிலிருந்து போதுமான பதில்கள் உங்களுக்குக் கிடைத்திருக்கும் என்று நம்புகிறேன். ஆகவே, உங்களுடைய வெட்டுத் தீர்மானங்களை திரும்பப் பெற்றுக்கொண்டு, மானியக் கோரிக்கையை நிறைவேற்றித்தர வேண்டுமென்று அன்போடு கேட்டு, விடைபெறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* திரு. வி. கே. சின்னசாமி, ஏன் எழுந்து போகிறீர்கள்? இது அவை. கொஞ்ச நேரம் மெல்லிய பூங்காற்று வலம் வந்து கொண்டிருந்தது, அதைப் பாராட்டச் சென்றீர்களா? இருக்கின்ற இடத்திலிருந்தே நீங்கள் பாராட்டலாம். (சிரிப்பு)

*மாண்புமிகு திரு. ம. சின்னசாமி:* ஒரு பாராட்டு, **

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* ** அது எல்லாம் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. அவர் சொன்னது ** நான் சொன்னது எல்லாம்.

விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

## (இ) கோரிக்கை எண் 29 - சமூக நலன்

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* மானியக் கோரிக்கை எண் 29 - சமூக நலன்.

வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம்: இல்லை.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* திரு. ஆர். சிங்காரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

"சமூக நலன் பற்றிய 29-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 507,64,03,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு சமூக நலன் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

## (ஈ) கோரிக்கை எண் 28 - தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* அடுத்த மானியக் கோரிக்கை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. மானியக் கோரிக்கை எண் 28 - தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும். மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

*மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் பற்றிய 28-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 71,38,41,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2301, திரு. ஆர். சிங்காரம்.

1995 ஏப்ரல் 27]

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பத்து ஆண்டுகளுக்கு மேலாக பதிவு செய்து காத்திருக்கும் ஆதிதிராவிட மற்றும் பழங்குடி இன மக்களுக்கு, அரசுத் துறையில் உடனடி பணி நியமனம் செய்வது குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் பற்றிய 28-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெற்ற ரூ. 71,38,41,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* மானியக் கோரிக்கையும், வெட்டுத் தீர்மானமும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

பிற்பகல் 8.15

**மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் என்ற தலைப்பின் கீழ் கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அவற்றில் @ தமிழில் இருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புகளை நான் இந்த அவையில் ஆற்றிய உரையாகக் கருதி அவைக்குறிப்பில் பதிவு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களையும், ஆலோசனைகளை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இறுதியில் மாண்புமிகு உறுப்பினர்களுடைய கருத்துக்களுக்கு என்னுடைய பதிலுரையையும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அரசு எடுத்த கொள்கை முடிவுகளைப் பற்றியும் தெரிவிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள், தன்னுடைய மானியக் கோரிக்கைக்காகக் கொடுத்த சிற்றுண்டி முதலியவை எல்லாம் சமூகநலத் துறை அமைச்சரின் மானியக் கோரிக்கைக்குக் கொடுத்துவிட்டார். தொழிலாளர்கள் என்றாலே இப்படித்தான். மற்றவர்களுக்காக உழைத்து, உழைத்து ஓடாகப் போகிறார்கள். (சிரிப்பு) (குறுக்கீடு) நீங்களும் சத்துணவு கொடுத்தீர்கள்.

---

@ *745* முதல் *835* வரையிலான பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் அவருடைய மானியக் கோரிக்கைக்காகக் கொடுத்த சிற்றுண்டியை உங்களுடைய மானியக் கோரிக்கைக்கே கொடுத்துவிட்டார். அதுவும் உங்களுடைய கோரிக்கைக்கே போய்விட்டது. அதாவது அவருடைய உழைப்பை எல்லாம் உங்களுக்குக் கொடுத்து இருக்கிறார். எனவே அவர் நல்ல தொழிலாளிதான். (சிரிப்பு)

விவாதம் தொடர்கிறது. திரு. ஆர். சிங்காரம்..

**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலன் குறித்த மானியக் கோரிக்கையில் காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாகப் பேச எனக்கு அளிக்கப்பட்ட வாய்ப்புக்காக தங்களுக்கு என் நன்றியை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன். நான் பேச எழுந்தவுடன் அனைவரும் விரைவாக முடித்துக்கொள்ளவேண்டும் என்று இருப்பதை உணர்ந்து ஒன்றிரண்டு கோரிக்கைகளை மட்டும் கூறி விடைபெற எண்ணுகிறேன்.

தமிழகத்தில் உள்ள 51 தொழிற்பயிற்சி நிலையங்களில் - கண்ணாடி வேறு சரியில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தொழிலாளர் நலனை மிகுந்த அக்கறையோடு பார்த்துக்கொள்கிறவர்கள் அமைச்சர் அவர்கள். அதனால் நீங்கள் எதற்கும் கவலைப்பட வேண்டாம்.

**திரு. ஆர். சிங்காரம்:** தமிழகத்தில் உள்ள 51 தொழிற்பயிற்சி நிலையங்களில் 14 தொழிற்பயிற்சி நிலையங்களில் 400 மாணவர்களுக்கு மேல் பயிற்சி பெறுவதால் இந்திய நேஷனல் கவுன்சில் ஆஃப் வொக்கேஷன் டிரெயினிங் அறிவுரையின்படி இணை இயக்குநர் நிலையில் முதல்வர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும் என்று விதி உள்ளது. ஆனால் இதுவரை 6 தொழிற்பயிற்சி நிலையங்கள் தான் துணை இயக்குநர் நிலைக்கு உயர்த்தப்பட்டதே தவிர மீதம் உள்ள 8 தொழிற்பயிற்சி நிலையங்கள் துணை இயக்குநர் நிலைக்கு உயர்த்தப்படாமல் உள்ளது. இந்தியாவில் மற்ற மாநிலங்களில் 400 பேருக்கு மேல் பயிற்சி பெறும் தொழிற்பயிற்சி நிலையங்கள் துணை இயக்குநர்/முதல்வர்கள் இருந்தும், தமிழகத்தில் பல தடவைகளில் கோரிக்கைகள் வைத்தும் இதுவரை நியமனம் செய்யப்படவில்லை என்பதைத் தங்களது மேலான பார்வைக்குத் தெரிவிப்பதோடு, தற்போது முதுநிலையில் உள்ளவர்கள் துணை இயக்குநர் நிலைக்கு மேல் ஊதியம் பெறுவதால் இதனால் அரசுக்கு பண இழப்பு ஏதுமில்லை என்பதையும் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். எனவே தமிழ்நாட்டில் 400-க்கு மேல் பயிற்சி பெறும் மீதம் உள்ள 8 தொழிற்பயிற்சி நிலையங்களில் உள்ள முதல்வர் பதவியை துணை இயக்குநர் நிலைக்கு உயர்த்தித் தந்திட வேண்டுமாய் பணிவுடன் வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்.

தமிழகத்தில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை 5 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு துணை இயக்குநர் நிலையில் இதுவரை இயங்கி வந்தது. வேலைப் பளு மற்றும் நிர்வாக நேர்த்தி ஆகியவைகளை முன்னிட்டு சமீப காலத்தில் சென்னை மற்றும் கோவை மண்டலங்கள் இணை இயக்குநர் நிலைக்கு உயர்த்தி செயல்பட்டு வருகிறது. தற்போது மீதம் உள்ள மதுரை, திருச்சி மற்றும் திருநெல்வேலி ஆகிய மண்டலங்களையும் இணை இயக்குநர் நிலைக்கு உயர்த்தி தமிழக அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடும், நன்றிப் பெருக்கோடும் தெரிவித்துக் கொள்கிறேன். தற்சமயம் முதுநிலை அடிப்படையில் பதவி உயர்வு கொடுத்து துணை இயக்குநர் நிலையில் சிறப்போடு நிர்வாகம் நடந்து வருகின்றது என்பதையும், முன்னரே உயர்த்தப்பட்ட இரண்டு மண்டல இணை இயக்குநர் பதவிக்கு பணி மூப்பு அடிப்படையில் இல்லாமல் பி.இ. படித்த இருவர் முதுநிலையில் உள்ளவர்களைப் பின்னுக்குத் தள்ளி பதவி உயர்வு பெற்றுள்ளார்கள் என்பதையும் தங்கள் மேலான கவனத்திற்குத் தெரிவிப்பதோடு புதியதாகத் தோற்றுவிக்கப்பட்ட மூன்று இணை இயக்குநர் பதவிக்கும் முதுநிலையைப் பின்னுக்குத் தள்ளி பதவிகளைப் பெற சிலர் முயற்சிப்பதாகத் தெரிய வருகிறது. இதுவரையில் மண்டல இணை இயக்குநர் பதவிகள் உருவாகாததால், இயக்குநரகத்திலுள்ள இணை இயக்குநர் பதவிக்கு பட்டம் பெற்றவர்கள் மட்டுமே தற்காலிக விதிகள் (அட்ஹாக் ரூல்ஸ்)-படி நியமனம் செய்யப்பட்டு வந்தனர். தற்போது மண்டல இணை இயக்குநர் பதவிகள் உருவாகிய காரணத்தாலும் இப்பதவிகளை ஏற்கனவே துணை இயக்குநர் நிலையிலுள்ள பட்டயப் படிப்பு படித்தவர்களால் திறமையாக நிர்வகிக்கப்பட்டு வருவதாலும், பணிமூப்பு அடிப்படையில் பட்டயப் படிப்பு படித்தவர்களையும் பதவி உயர்வு பெற்று நியமனம் செய்வதற்கு ஏதுவாக, தற்காலிக விதிகளை (Adhoc Rules) மாற்றியமைத்து, பணிமூப்பு அடிப்படையில் நியமனம் செய்திட வேண்டுமாய் மாண்புமிகு அமைச்சர் அவர்களை வேண்டிக்கொள்கிறேன். தற்சமயம் தொழில் வணிகத்துறையில் பட்டயப் படிப்பு படித்தவர்களுக்கு இணை இயக்குநர் நியமனம் செய்வதற்கு விதிகள் உள்ளது என்பதையும் தங்களது மேலான பார்வைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னும் பல கோரிக்கைகள் இருக்கின்றன. ஆனால் நேரம் ஆகிவிட்ட காரணத்தாலும், என்னுடைய வெட்டுத் தீர்மானத்திற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிப்பார்கள் என்ற காரணத்தாலும் இத்துடன் என்னுடைய உரையை முடித்து விடை பெறுகின்றேன். நன்றி வணக்கம்.

*பிற்பகல் 8.20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பே. தர்மலிங்கம்.

[1995 ஏப்ரல் 27

**திரு. பே. தர்மலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தர்மத்தின் வாழ்வுதன்னை சூது கவ்வும், இறுதியில் தர்மமே வெல்லும்" என்பார்கள். இன்றையதினம் தர்மத்தை சூது கவ்வியது, இறுதியில் தர்மமே வெல்லும் என்று கூறி, இந்தியத் துணைக் கண்டத்திலே இந்த இருபதாம் நூற்றாண்டிலும் இனி அடுத்த இருபத்தி ஒன்றாவது நூற்றாண்டிற்கும் தமிழகத்தின் நிரந்தர முதல்வராகத் திகழும் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்ட இந்த மானியத்தை வரவேற்று எனக்கு பேச வாய்ப்பு கொடுத்த மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

நெல்லை மாவட்டம் தொழிலில் மிகவும் பின்தங்கிய மாவட்டம். இங்கு விவசாயத்திற்கு அடுத்தபடியாக பீடிச் சுற்றும் தொழில் மட்டுமே உள்ளது. சுமார் 6 லட்சம் பீடி சுற்றும் தொழிலாளர்கள் இந்த மாவட்டத்தில் உள்ளனர். குறிப்பாக எனது தொகுதியில் உள்ள மேலப்பாளையம், மற்றும் ஆலங்குளம், முக்கூடல், தென்காசி, சுரண்டை, புளியங்குடி போன்ற பகுதிகளில் சுமார் 60 சதவீத மக்கள் பீடி சுற்றும் தொழிலையே நம்பி வாழ்கின்றனர். இவர்களுக்கு பீடிக் கம்பெனிகளில் இருந்து வழங்கப்படும் கச்சாப் பொருட்களான இலை, புகையிலை போன்ற மூலப் பொருட்களை தரம் உள்ளதாக வழங்கவேண்டும். அதே சமயம் எடை குறைவாகக் கொடுத்து பீடி முதலாளிகள் பீடித் தொழிலாளிகளை ஏமாற்றுகிறார்கள். இதில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தலையிட்டு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல எனது தொகுதி மேலப்பாளையத்தில் இயங்கி வரும் தொழிலாளர் நல மருத்துவமனை நகரின் ஒதுக்குபுறத்தில் வாடகைக் கட்டிடத்தில் உள்ளது. அதனை பீடித் தொழிலாளர் நலன் கருதி நகரின் மத்திய பகுதிக்குக் கொண்டு வருவதற்கும் மேற்படி மருத்துவமனையில் பீடித் தொழிலாளர்களின் நலன் கருதி ஒரு எக்ஸ்ரே கருவி அமைக்கவும் மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் இங்கு ஒரு நவீன மருத்துவமனை புதியதாக கட்டவும் அன்புடன் வேண்டுகிறேன்.

அடுத்து எனது தொகுதியில் போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கென தனியாக பாலிடெக்னிக் உள்ளது. அதேபோல் எனது தொகுதி மேலப்பாளையத்தில் பீடிச் சுற்றும் தொழிலாளர்கள் அதிகமாக

வாழ்கின்றனர். ஏழை பீடிச் சுற்றும் தொழிலாளர்களின் நலன் கருதி அங்கு ஒரு பாலிடெக்னிக் தொடங்கவேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நெல்லை மாவட்டத்தில் ஆறு லட்சத்திற்கும் மேல் பீடி சுற்றும் தொழிலாளர்கள் உள்ளனர். ஆனால் நெல்லை மாவட்ட பிராவிடண்ட் பண்ட் அலுவலகத்தில் 2 இலட்சம் பேருக்குத்தான் கணக்கு இருக்கிறது. மீதி தொழிலாளர்களுக்கு பிராவிடண்ட் பண்ட் கணக்கு தொடங்காமல் சில பீடி கம்பெனிகள் ஏமாற்றி வருகின்றன. பீடி சுற்றும் தொழிலாளர் அனைவருக்கும் பிராவிடண்ட் பண்ட் கணக்கு தொடங்க தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை).

நமது புரட்சித் தலைவி அரசு அறிவித்த கூலி உயர்வை எதிர்த்து பீடிக் கம்பெனிகள் உயர்நீதிமன்றத்தில் அப்பீல் செய்தனர். உயர்நீதிமன்றத்தில், அரசு ஆணைப்படி 1-4-1993 முதல் 31-3-1995-க்குள் கூலி உயர்வை மூன்று தவணைகளாக வழங்க வேண்டுமென்று உத்திரவிடப்பட்டுள்ளது. ஆனால் சில கம்பெனிகள் வழங்காமல் இருக்கின்றன. அப்படி வழங்காத கம்பெனிகள் மீது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தலையிட்டு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோன்று என்னுடைய பாளையங்கோட்டை தொகுதியில் குறிப்பாக மேலப்பாளையத்தில் சுமார் 50 ஆயிரம் இஸ்லாமியர்கள் பீடித் தொழிலாளர்களாக உள்ளனர். அவர்களுக்கு 500 வீடுகளைக் கட்டிக் கொடுப்பதாக கடந்த மானியத்திலே அறிவித்தீர்கள். அது இன்னும் நடைபெறாமல் உள்ளது. எனவே அந்த வீடு கட்டும் பணியை விரைவிலே தொடங்க வேண்டும் என்று இந்த நேரத்திலே அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் நெல்லை மாவட்டத்தில் லட்சக்கணக்கான பீடித் தொழிலாளர்கள் இருப்பதினால் கூட்டுறவு முறையில் பீடி உற்பத்தி சங்கம் அமைக்கவும் பொருட்களை நியாயமான முறையில் வழங்கவும் ஏற்பாடு செய்ய வேண்டுகிறேன்.

பீடித் தொழிலாளர்களுக்கு பென்ஷன் திட்டம் கொண்டு வருவதாக மத்திய அரசு அறிவித்து அதனை நடைமுறைப்படுத்தாமல் உள்ளது. அதனை தாயுள்ளம் கொண்ட இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பீடி சுற்றும் ஏழைத் தாய்மார்களின் நலன் கருதி

மத்திய அரசிடம் வற்புறுத்தி விரைவில் இந்த பென்ஷன் திட்டத்தினை அமுல்படுத்தும்படி அன்புடன் வேண்டி கேட்டுக்கொள்கிறேன். அதுபோன்று தமிழ்நாட்டில் முக்கியமாக நெல்லை மாவட்டத்தில் 6 இலட்சம் பெண்களும், குழந்தைகளும் பீடித் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். ஆனால் பீடித் தொழிலாளர் சட்டத்தின்கீழ் கொடுக்கப்பட வேண்டிய அடையாள அட்டை இவர்களுக்குக் கொடுக்கப்படாமல் இவர்களின் குடும்பத் தலைவரின் பெயருக்கு கொடுக்கப்படுகிறது. இதனால் பெண்களுக்கு கிடைக்க வேண்டிய சம்பளம், பேறு கால சட்டப் பயன்கள் பெண்களுக்குக் கிடைப்பதில்லை. பெண்களின் பொருளாதாரம் உயர்ந்தால்தான், பெண்களுக்கு சம உரிமை கிடைக்கும், நல்லதோர் வாழ்க்கை அமையும் என்பதால், அடையாள அட்டை வேலை செய்யும் பெண்களின் பெயரில்தான் கொடுக்கப்பட வேண்டும். இதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உதவிட வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 8-25.*

அதேபோன்று, தற்சமயம் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து தீப்பெட்டி, பட்டாசுத் தொழிலில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும் ஒரு காப்பீட்டுத் திட்டம் உள்ளது. இதன்படி எந்தத் தொழிலாளியாவது தொழிற்சாலையிலோ அல்லது வெளியிலேயோ ஏதாவது விபத்து ஏற்பட்டு மரணமடைய நேர்ந்தால் ரூ. 50,000/-காப்பீட்டுத் தொகை கொடுக்கப்படுகிறது. இத்தகைய திட்டம் பீடித் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு இல்லை. பெண்களும், குழந்தைகளும் அதிகமாக வேலை செய்யும் பீடித் தொழிலுக்கும் இதுபோன்ற ஒரு காப்பீட்டுத் திட்டம் உருவாக்கப்பட வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொண்டு, இதன் மூலம் ஆயிரக்கணக்கான பெண்களும் குழந்தைகளும் பயனடைவார்கள் என்று கூறி, தொழிலாளர்களின்பால் அன்புள்ளம் கொண்டு நேசக்கரம் நீட்டும் இரக்க சிந்தனையுள்ள எங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இத்திட்டத்தினைத் துவக்கி வைக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொண்டு, இந்த வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவருக்கு நன்றி கூறி அமைகிறேன், வணக்கம்.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* திரு. பாலகங்காதரன்.

**திரு. ஜெ. பாலகங்காதரன்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்ற இடமெல்லாம், வெற்றி வாகை சூடும், வீரத்திருமகள், எங்களுடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்பாதம் தொட்டு (மேசையைத் தட்டும் ஒலி) வணங்கி,

தொழிலாளர் மற்றும் தொழிற்சாலைகள், வேலை வாய்ப்பு பயிற்சி பற்றிய கொள்கை விளக்கத்திலே என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்கலாம் என்று எண்ணியிருக்கிறேன். இந்த வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த ஆட்சியாளர்கள் காலத்தில் இல்லாத அளவுக்கு, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சி கட்டிலிலே ஏறி அமர்ந்த பிறகுதான் தொழிலிலே ஒரு அமைதி ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக, தொழிலாளர்களுக்கும், தொழில் அதிபர்களுக்கும் இடையே ஒரு சுமூகமான நல்ல உறவு, இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபின்தான் ஏற்பட்டுள்ளது என்பதை நான் இங்கே கூற விழைகின்றேன். ஏனென்றால் கடந்த 4 ஆண்டுகளில் எங்களுடைய தொகுதியான சிவகாசி தொகுதியிலே, தொழிலாளர்களுக்கும், தொழிலதிபர்களுக்கும் எவ்வித கருத்து வேறுபாடும் ஏற்படவில்லை. அதோடு மட்டுமல்லாமல் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிவகாசிக்கு கிட்டத்தட்ட 5, 6 முறைகள் வருகை தந்து அங்கே ஒரு நல்ல அமைதியான சூழ்நிலை ஏற்படும் வண்ணம் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதிய மறுநிர்ணயம் செய்யும் வண்ணம் தொழிலதிபர்களோடு பேச்சு வார்த்தைகள் நடத்தி ஒரு நல்ல நிலையை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். மேலும், மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சிப் பொறுப்பை ஏற்றபிறகுதான் குழந்தைத் தொழிலாளர்கள் அங்கே குறைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். உலகம் முழுவதும் குழந்தைத் தொழிலாளர்கள் என்றாலே சிவகாசிதான் நினைவுக்கு வருகிற ஒரு சூழ்நிலையிலே, தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிலிலே குழந்தைத் தொழிலாளர்கள் அதிகமாக பணிபுரிகிறார்கள் என்ற ஒரு கருத்து, ஐயம் நிலவி வருகிறது. அந்தக் கருத்தை, ஐயத்தை இன்றையதினம் மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மற்றும் அவர்களுடைய அமைச்சரவையிலே இருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அதை இங்கே குறைத்து இருக்கிறார்கள் என்பதை நான் கூற கடமைப்பட்டுள்ளேன். இன்றையதினம் 5 ஆண்டுகளுக்குள்ளாக, அங்கே குழந்தைத் தொழிலாளர்களை படிப்படியாக பேஸ்ட் மேனர் என்று சொல்லக்கூடிய அளவில் குறைக்கப்பட்டு வந்துகொண்டு இருக்கிறார்கள். அதோடு மட்டும் அல்லாமல் ஒரு நல்ல கமிட்டியை அமைத்து, அந்தக் கமிட்டியிலே என்னையும், கோவில்பட்டி சட்டமன்ற உறுப்பினரையும், அதில் உறுப்பினர்களாக சேர்த்து அதன் மூலம் குழந்தைத் தொழிலாளர்களை ஒழிப்பதற்கு ஒரு நல்ல உதாரணத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள்

தொடங்கி வைத்திருக்கிறார்கள். கடந்த 4 ஆண்டுகளில் அங்கே இருக்கிற குழந்தைத் தொழிலாளர்களின் அளவு கிட்டத்தட்ட 90 சதவீதம் குறைக்கப்பட்டிருக்கிறது.

*பிற்பகல் 8.30*

நான் உறுதியாகக் கூற விரும்புவது பட்டாசுத் தொழிற்சாலைகளைப் பொறுத்தமட்டிலும், குழந்தைத் தொழிலாளர்கள் அறவே கிடையாது என்பதுதான். மேலும், தீப்பெட்டித் தொழிற்சாலைகளைப் பொறுத்தமட்டில், 'சி' கிளாஸ் என்று குறிப்பிடுகிற சற்றுப் பெரிய தொழிற்சாலைகளில் குழந்தைத் தொழிலாளர்கள் அறவே இல்லை என்பதை நான் உறுதியாகத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

அதுபோலவே, 'டி' கிளாஸ் பேக்டரிகளையும் பேக்டரி ஆக்டின் கீழே கொண்டுவர வேண்டுமென்று சொன்னபோது அதை உடனடியாக ஏற்பாடு செய்து இன்றைய தினம் கொண்டு வந்திருப்பதை நான் வரவேற்கிறேன். மேலும், அங்கே ஆட்சித் தலைவராக இருந்த திரு. வெங்கட்ரமணன் அவர்கள் ஒரு சிறப்பான திட்டத்தின் கீழே மிகக் குறைந்த அளவுக்கு குழந்தை தொழிலாளர்களின் எண்ணிக்கையை கொண்டு வந்திருக்கின்றார்கள். அவரையும் நான் பாராட்டி என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிவகாசியில் தொழிலாளர் நல அலுவலகங்களுக்கு ஒரு கட்டிடம் கட்டித் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன்.

சிவகாசி மற்றும் ராஜபாளையத்தில் அதிக அளவு இண்டஸ்டிரியல் டிஸ்பியூட் ஏற்படுகிற காரணத்தால் டிஸ்பியூட் வழக்குகளை தீர்க்க அவர்கள் மதுரைக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. அந்தத் தொழிலாளர் நீதிமன்றத்தினை விருதுநகருக்கோ, சிவகாசிக்கோ மாற்றி அமைக்க வேண்டும் என்று நான் அமைச்சரை கேட்டுக் கொள்கிறேன்.

எடையளவு மற்றும் அளவியல் சட்டத்தின்கீழ் பெட்ரோல் பங்குகளை அதிக அளவு நீங்கள் செக் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். மேலும், சட்டமன்ற உறுப்பினர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் எப்பொழுது வேண்டுமானாலும், எந்த இடத்திலும் எடையளவுகளை சரிபார்ப்பதற்கு அனுமதிக்க வேண்டும் (மேசையைத் தட்டும் ஒலி) என்று கேட்டுக் கொள்ள கடமைப்பட்டுள்ளேன். மேலும், அவர்கள் கூறுகின்ற புகார்களை அந்தத் துறை அலுவலர்கள் கேட்டு, அந்த இடங்களுக்குச் சென்று,

பெட்ரோல் பங்குகளாக இருந்தாலும் சரி, மற்ற கடைகளாக இருந்தாலும் சரி, அந்த இடங்களுக்குச் சென்று உடனடியாக அவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பீடித் தொழிலாளர்கள் வசிக்க என்று வீட்டு வசதி வாரியத்தின் மூலம் ஆயிரம் வீடுகள் கட்டப்படவுள்ளதை நான் வரவேற்கிறேன். அதைப் போலவே சிவகாசி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக இருக்கின்ற பட்டாசு தீப்பெட்டி மற்றும் அச்சகத் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டித் தரப்பட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் மூலம் 52 தொழிலாளர் மையங்களையும் 20 தையல் பயிற்சி மையங்களையும் நடத்தி வருகிறது என்பதை கொள்கை விளக்கக் குறிப்பிலே இருந்து அறிந்தேன். சிவகாசி, திருத்தங்கல் போன்ற பகுதிகளிலே இவற்றை எல்லாம் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதிக அளவு தொழில் இருக்கின்ற கிராமப்புறங்களில் தையல் பயிற்சி மையங்களை அமைத்துத் தர ஏற்பாடு செய்ய வேண்டும். தொழிலாளர் மையங்களை அங்கெல்லாம் அமைத்து, அங்கு இருக்கின்ற சிறார்களுக்கும், குழந்தைகளுக்கும் சத்துணவு தர வேண்டுமென்று நான் அமைச்சரை கேட்டுக் கொள்கிறேன்.

பெரிய தொழிற்சாலைகளை 4 மாதங்களுக்கு ஒரு முறை இன்ஸ்பெக்டு செய்யலாம் என்ற ஒரு விதி இருக்கிறது. அந்த விதியைத் தளர்த்தி தீப்பெட்டித் தொழிற்சாலைகளுக்கும் மாற்றப்பட வேண்டுமென்று இங்கே கொள்கை விளக்கக் குறிப்பிலே கூறப்பட்டிருக்கிறது. தயவுசெய்து அதை மாற்றி 3 ஆண்டிற்கு ஒரு முறை அல்லது ஆண்டிற்கு ஒரு முறை இன்ஸ்பெக்ட் செய்யலாம் என்று மாற்றினால் நன்றாக இருக்கும் என கருதுகிறேன். *(மணி அடிக்கப்பெற்றது)*

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* முடித்துக் கொள்ளுங்கள்.

*திரு. ஜெ. பாலகங்காதரன் :* ஒரு நிமிடத்தில் முக்கியமானவற்றை பேசி முடித்து விடுகிறேன். இன்ஸ்பெக்ட்டர் ஆப் பேக்டரிஸ் ஒரு தொழிற்சாலைக்கு செல்கிறபோது அங்கே ஒரு பதட்டமும் ஐயமும் ஏற்படுகிறது. அப்படி பதட்டப்படுகிறபோது பட்டாசுத் தொழிற்சாலையில் ஏதாவது ஆக்ஸிடென்டு ஏற்பட சான்ஸ் இருக்கிறது என்பதை நான் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டுள்ளேன். எனவே, அமைச்சர் அவர்கள் உடனடியாக இதில் தலையிட்டு அதை வருடத்திற்கு ஒரு முறை அல்லது மூன்று வருடத்திற்கு ஒரு முறை இன்ஸ்பெக்ட் செய்யும்படி மாற்ற வேண்டும்.

[திரு. ஜெ. பாலகங்காதரன்] [1995 ஏப்ரல் 27

Eradication of Child Labour என்ற திட்டத்தின்கீழ் ஐ.ஆர். டி. பி. லோன் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் காமராஜர் மாவட்டத்திற்கு வருகை தந்து கொடுத்தார்கள். ஐ.ஆர்.டி.பி. லோன் பெற்றவர்கள் 10,000 ரூபாயை மட்டும் பெற்றுக்கொண்டு எந்த பலனையும் பெறமுடியாமல் உள்ளார்கள். எனவே, வேறு ஒரு திட்டத்தின் மூலம் அந்தக் கடன் தொகையை அதிகப்படுத்தி, பெற்றோர்களை ஊக்கப்படுத்தி, குழந்தைத் தொழிலாளர்களை தடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். காமராஜர் மாவட்டத்தில் தனியார் தொழிற்பயிற்சி மையங்கள் ஆரம்பிக்க அனுமதி அளித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 8.35

அதற்கு அடுத்தபடியாக வேலைவாய்ப்பு மையங்களிலே மறுபதிவு செய்வதைத் தவற விட்டுவிட்டால் ஆறுமாதம் ஆகிவிட்டால் சென்னைக்கு வருகைதந்துதான் மீண்டும் புதுப்பிக்க வேண்டியிருக்கிறது. அந்த விதியைத்தளர்த்தி, ஓர் ஆண்டு வரை தகுந்த ஆவணங்களோடு அந்த அந்த மாவட்டங்களிலேயே பதிவு செய்யலாம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைச் செய்து தரவேண்டும்.

அதற்கு அடுத்தபடியாக Man-Power Corporation என்று இருக்கின்ற அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் மூலம் வெளிநாடுகளுக்கு எத்தனை பேர்களை அனுப்பினார்கள் என்பது இதுவரை யாருக்கும் தெரியவில்லை. தயவுசெய்து அவற்றையெல்லாம் சரிபார்த்து, தமிழகத்திலிருந்து எண்ணற்ற ஆட்களை அனுப்புவதற்கு ஒரு சிறந்த முறையைக் கையாண்டு வரவேண்டும். ஏனென்று சொன்னால், மகாராஷ்டிராவிலே பம்பாயிலே வேலைவாய்ப்பு அலுவலகம் மிகச் சிறப்பாகச் செயல்படுகின்றது என்று அவர்கள் மார்தட்டிக் கொள்கிறார்கள். ஆனால், தமிழகத்திலிருந்துதான் அதிக அளவுக்கு ஆட்கள் பம்பாய்க்குச் சென்று ஏமாற்றப்பட்டு, திரும்பி வந்து கொண்டிருக்கிறார்கள். எனவே, தயவு செய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இவற்றை ஒழுங்குபடுத்தி தனியார்களிடம் ஏமாறாமல் Man -Power Corporation என்ற அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் மூலம் தமிழகத்தில் இருக்கின்ற எண்ணற்ற மக்களுக்கு அதிக அளவு வெளிநாட்டிலே வேலை வாய்ப்பு வாங்கித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள், ஒரு நல்ல தீர்வை ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தீப்பெட்டித் தொழிலாளர்களுக்கும், பட்டாசுத் தொழிலாளர்களுக்கும் இருக்கின்ற குரூப் இன்சூரன்ஸ் என்பதில் 50 ஆயிரம் என்று சீலிங்

இருக்கிறது. அதன்மூலம், தொழிலாளர்களுக்கு மரணம் சம்பவிப்பதால் ஒரு இலட்சம் கொடுக்க வேண்டும் என்று இருப்பதை அதிகப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதோடு மட்டுமல்லாமல், தீக்காயம் மற்றும் சிறு காயம் ஏற்பட்டாலும் குரூப் இன்சூரன்ஸ் மூலம் ஒரு கணிசமான தொகை கொடுக்கப்பட வேண்டுமென்பதையும் நான் கேட்டுக் கொள்கிறேன். தீக்காயங்கள் 25 சதம் ஏற்பட்டுவிட்டாலே மரணம் சம்பவித்து விடும். சுமார் 12-1/2 சதம் என்பது அதில் பாதி இருக்கின்ற காரணத்தினால் அவர்களுக்கு 2,500 ரூபாய்தான் சிறு காயம் என்ற முறையிலே கொடுக்கப்படுகிறது. அப்படி தீக்காயம் 12-1/2 சதம் இருந்தாலும் அவர்களுக்கும் 50 ஆயிரம் ரூபாய் அளிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டும். ஏனென்று சொன்னால் அவர்கள் பெர்மனன்ட் டிஸ்ஸபிளிட்டி ஆகிவிடுகிறார்கள். எந்த ஒரு வேலையும் அவர்களால் செய்ய முடியவில்லை, ஆகவே வெய்யில் நேரத்திலே அவர்களால் வெளியே செல்ல முடியவில்லை என்ற காரணத்தால் அவதிப்படுகிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிவகாசியில் இருக்கின்ற தொழிலாளர்களைப் பாதுகாப்பது போல, தொழில் அதிபர்களையும் கூப்பிட்டு குழந்தைத் தொழிலாளர்களை பேஸ்டுமேனர் என்ற முறையில் நாம் வெளியேற்றுகிறோம் என்று சொல்லி இருக்கின்றோம். அப்படிப்பட்ட சூழ்நிலையிலே தொழிலையும் பாதுகாக்கவேண்டும், தொழில் அதிபர்களையும் ஹராஸ்மெண்டுக்குள்ளே நாம் கொண்டு செல்லக்கூடாது என்பதைக் கூறி, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைக் கூறி விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களுடைய பதிலுரை.

*மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன் :* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் உலகத்தின் நலம் காத்து, உழைப்பவரை உயர்த்த, தான் உழைக்கும் உத்தமத் தலைவிதான் எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி. (மேசையைத் தட்டும் ஒலி)

" தேனை மறந்திருக்கும் வண்டும் - ஒளிச்
சிறப்பை மறந்திருக்கும் பூவும்
வானை மறந்திருக்கும் பயிரும் - இந்த
வையம் முழுதுமில்லை ....

என்று வண்ணத்தமிழில் பாடினார் புரட்சிக் கவிஞர். (மேசையைத் தட்டும் ஒலி)

தேனை மறந்திருக்கும் வண்டுகூட இருக்கலாம். ஆனால் இதயதெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியின் புகழை மறந்திருக்கும் தமிழன் இல்லை. அப்படி மறந்திருப்பான் என்றால் அவன் தமிழன் இல்லை.

எட்டுத் திசையும் வியக்க, எட்டாம் உலகத் தமிழ் மாநாடு கண்டவர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி.

வாழும் தமிழுக்குப் புது வரலாறு படைத்து, அறிவியல் தமிழ் வளர்க்கும் அன்னை எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி.

காவிரி உரிமை காக்க, காலமகள் நமக்களித்த புறநானூற்றுத் தலைவிதான் எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி.

தாழ்த்தப்பட்டவரும், பழங்குடியினரும், பிற்படுத்தப்பட்டவரும், மிகவும் பிற்பட்டவரும் தலைநிமிர்ந்து வாழ, சமூகநீதி காத்த வீராங்கனைதான் எங்கள் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி.

இதய தெய்வமே! இணையில்லாத் தாயே! என்றும் எங்கள் நிரந்தர முதல்வரே! பொற்காலம் படைக்கும் புரட்சித் தலைவி அவர்களே! உங்களை வணங்கி என் உரையைத் தொடங்குகின்றேன்.

எங்களது வெற்றித் திருமகள், தமிழகத்தின் முழுமதி, தான் ஏற்றிடும் பொறுப்பில் எல்லாம் ஏற்றமே காணும் இதயதெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் தொழிலாளர் துறையின் சாதனைகள் பலப்பல.

தொட்டதெல்லாம் துலங்கும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் தொழில் வளர்வதையும், தொழிலாளர் நலன் சிறப்பதையும் அனைவரும் அறிவீர்கள்.

*பிற்பகல் 8-40*

இன்று தமிழகத்தில் தொழில் அமைதி நிலவுகிறது. தமிழகம் தொழில் உறவு பூங்காவாகப் பூத்துக் குலுங்குகிறது. அதற்குக் காரணம், ஆறுகோடி தமிழர்களின் இதயதெய்வமாக விளங்கும் மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் தீர்க்கதரிசன தொழிலாளர் நலக்கொள்கைகள் ஆகும்.

தமிழகத்தில் தொழில் அமைதியும், தொழிலாளர் நல்லுறவும் இருப்பதால்தான், தமிழகத்தில் மொத்தமுள்ள 12 இலட்சத்து 50 ஆயிரம் தொழிலாளர்களில், 1,410 தொழிலாளர்கள் மட்டுமே வேலைநிறுத்தம் மற்றும் கதவடைப்பினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இது சரித்திரச் சாதனையாகும். இந்தச் சாதனை எந்த மாநிலத்திலும் இல்லை. இதனைப்

பொறுக்காத கெடுமதியாளர்கள் வெட்கித் தலைகுனியும் வகையில், மேலும், மேலும் சாதனைகளை, சரித்திரமாக்கிக் கொண்டு வருகிறார் இதயதெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன் . (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில், 3,902 தொழிற்சாலைகள் புதிதாக வந்துள்ளன. அவற்றில் 1 இலட்சத்து 7 ஆயிரத்து 583 தொழிலாளர்கள் புதிதாக வேலை நியமனம் பெற்றுள்ளனர் என்பதை மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியின் ஆட்சியின் சாதனையாக இங்கே பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

1991 ஆம் ஆண்டில் இழந்த மனித நாட்கள், 72 இலட்சத்து 78 ஆயிரத்து 968 ஆகும். ஆனால், 1994-ஆம் ஆண்டில் இழந்த மனித நாட்கள் 16 இலட்சத்து 68 ஆயிரம் ஆக மிகவும் குறைந்துள்ளது.

மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில் தொழிலாளர்களும், நிர்வாகத்தினரும் பிரச்சினைகளை நேரடியாகப் பேசி தீர்த்துக் கொள்ள வேண்டும் என்ற புதிய பண்பாடு வளர்ந்து, உறவு வலுப்பெற்று வருகிறது என்பதோடு மட்டுமல்லாமல், தொழிற் தகராறு பிரச்சினைகளே இல்லை என்ற சகாப்தத்தை உருவாக்கும் சூழ்நிலை ஏற்பட்டு வருகிறது என்பதையும் இங்கே மிக்க மகிழ்ச்சியுடனும், பெருமையுடனும் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கலைமிகு கட்டடங்களைக் கண்டபோதெல்லாம், அவற்றைக் கட்டிய தொழிலாளர்கள் துயர்தான் இதயதெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் கண்முன் வந்துள்ளது. எனவே, இதயதெய்வம் ஆட்சியிலே தீட்டிய திட்டம்தான், கட்டடத் தொழிலாளர்கள் நலத்திட்டம். கட்டடத் தொழிலாளர்கள் துயர் துடைக்க, வாரியம் அமைக்கப்பட்டு, அதன்மூலம் தொழிலாளர்கள் குழந்தைகள் காப்பகம், மருத்துவ வசதி, ஈட்டுறுதி வசதி போன்ற பல்வேறு நலத் திட்டங்கள் செயல்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) முதல்கட்டமாக, சென்னை, மதுரை மற்றும் கோவை ஆகிய மாநகர்களில் உள்ள கட்டடத் தொழிலாளர்களைப் பதிவு செய்ய நடவடிக்கை துவங்கப்பட்டுவிட்டது என்பதைப் பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தோட்டத் தொழிலாளர்கள் வாட்டம் நீங்கி, வளமுடன் வாழ, வீட்டுவசதி, குழந்தைகள் காப்பகம், மருத்துவ வசதிகள், முதல்நிலை பள்ளிகள், கம்பளிகள் வழங்குதல் ஆகியவை தொடர்ந்து செய்து

[திரு. ஏ. எம். பரமசிவன்] [1995 ஏப்ரல் 27

கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில், இதயதெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதையும் இங்கே மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

பீடித் தொழிலில் ஈடுபட்டுள்ள சுமார் 7 இலட்சம் தொழிலாளர்களின் பல்வேறு கோரிக்கைகள் குறித்து பல்வேறு கட்ட பேச்சுவார்த்தைகளுக்குப் பின், இதயதெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆலோசனையின்பேரில், எனது முன்னிலையில், 6-4-1995 அன்று ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. பீடித் தொழிலாளர்களின் வாழ்வில் ஒளி ஏற்றும் வகையில், கீழ்க்கண்ட ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப்பட்டன :

(1) 1000 பீடிக்கு அடிப்படை ஊதியம் ரூ. 16.25 ஆக இருந்தது. தற்போது பஞ்சப்படியும் சேர்த்து 1000 பீடிக்கு ரூ. 27.90 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. *(மேசையைத் தட்டும் ஒலி)* (2) பஞ்சப்படி 5 புள்ளிக்கு 5 காசு என்று இருந்தது. தற்போது ஒவ்வொரு புள்ளிக்கும் 2 பைசாவாக உயர்த்தப்பட்டுள்ளது. (3) ஆயிரம் பீடிக்கு போனஸ் ரூ. 1.50 என்று இருந்தது, தற்போது போனஸ் சட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டு, குறைந்தபட்ச போனஸ் 8.33 சதவிகிதம் வழங்க ஒப்பந்தம் வகை செய்கிறது. இதன்படி, 1000 பீடிக்குக் கூலி ரூ. 30.90 வழங்கப்படும்.

இந்த ஒப்பந்தத்தினால், பஞ்சப்படி 100 சதவிகிதம் உயர்த்தப்பட்டுள்ளது. அதோடு மட்டுமின்றி, முதன்முறையாக பீடித் தொழிலாளர்கள் போனஸ் சட்டத்தின்கீழ் போனஸ் பெற வகை செய்யப்பட்டுள்ளது.

இந்த வரலாற்று சிறப்புமிக்க ஒப்பந்தத்தை ஏற்படுத்திட, தக்க ஆலோசனைகளை வழங்கிய இதயதெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு இம்மாமன்றத்திலே எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*பிற்பகல் 8.45*

பீடித் தொழிலாளர்களின் நலனுக்கென நடப்பாண்டில் ஒரு முனைப்பான செயல்திட்டம் உருவமைத்து அதன்படி அவர்களின் வாழ்வு வளம் பெறும் வகையில் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து உரிமைகளையும் பெற வழிவகுக்கும்படி மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அறிவுரை வழங்கியுள்ளார்கள் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

1995 ஏப்ரல் 27] [திரு. ஏ. எம். பரமசிவன்]

குறைந்தபட்ச ஊதிய சட்டத்தின்படி உயர்நீதிமன்றம் வரை வாதிட்டு பெற்று, 1 இலட்சத்து 21 ஆயிரம் பீடித் தொழிலாளர்களுக்கு ரூபாய் 8 கோடியே 51 இலட்சம் நிலுவைத்தொகை வழங்கப் பெற்றுள்ளது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும் இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் பல்வேறு தொழில்களுக்கும் குறைந்தபட்ச சம்பளம் நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. குறைந்தபட்ச சம்பளம் தொழிலாளர்களுக்கு சரியாக கிடைக்க வேண்டும் என்பதற்காக இந்த அரசு தீவிரமாக நடவடிக்கை எடுத்துவருகிறது. தொழிலாளர் துறையைச் சேர்ந்த ஆய்வாளர்களே தொழிலாளர்களின் சார்பில் கோரிக்கை மனுவை தாக்கல் செய்து அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய தொகையை வசூலித்துக் கொடுக்கிறார்கள் என்பதையும் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த ஆண்டில் கடைகள் மற்றும் வர்த்தக நிறுவனங்களில் பணிபுரிவோர்க்கு குறைந்தபட்ச சம்பளத்தை அதிகரிக்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

"ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்" என்றார் பேரறிஞர் அண்ணா ; "ஏழை எளிய மக்களின் சிரிப்பிலே வாழ்வின் அர்த்தத்தையே காண்கிறேன்" என்றார் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மக்களின் இதயக் கோயிலில் நீங்காது நிலைத்திருக்கும் தமிழகத்தின் நிரந்தர முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சி, பீடித் தொழிலாளர் நலநிதிச் சட்டத்தின் கீழ் தொழிலாளர்களுக்கு வீடு கட்ட நடவடிக்கை எடுத்து வருகிறது. நெல்லை-கட்டபொம்மன் மாவட்டத்தில் முக்கூடல் மற்றும் மேலப்பாளையம் ஆகிய இடங்களில் 1000 வீடுகள் கட்டிக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) பெரியார் மாவட்டத்தில் அந்தியூரில் 100 தொழிலாளர்களுக்கும், வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் காசிக்குட்டை மற்றும் சேவூர் பகுதிகளில் 250 தொழிலாளர்களுக்கும், வாலாஜா, வன்னிமேடு பகுதிகளில் 50 தொழிலாளர்களுக்கும் வீடு கட்டித் தரும் திட்டம் உள்ளது. இந்தத் திட்டம் தொடர் திட்டமாகும். இதர மாவட்டங்களிலும் பீடித் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. ஏ. எம். பரமசிவன்] [1995 ஏப்ரல் 27

நல்ல திட்டங்கள் சட்டப் புத்தகத்தில் மட்டும் இருந்தால் அது காகிதப் பூவாகத்தான் இருக்கும். அந்தத் திட்டங்களின் பலன் தொழிலாளர்களுக்குச் சேர வேண்டும். ஏழைகளுக்காக உழைக்கும் உத்தமத் தலைவி இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், தந்தை பெரியாரின் வழியில் எவருக்கும் அஞ்சாமல், பேரறிஞர் அண்ணாவின் வழியில் ஆணவக்காரர்களின் ஆதிக்கத்தை எதிர்த்து, டாக்டர் புரட்சித் தலைவர் வழியில் எதிரிகளை நேருக்கு நேர் சந்தித்து முறியடித்து (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு சட்டத்தை மீறுபவர்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுத்து, சட்டத்தை செயல் படுத்தி வருவதன் மூலம் தொழிலாளர் நலனும், தொழில் வளமும் பாதுகாக்கப்பட்டு வருகிறது என்பதைப் பெருமையோடு இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

தொழிலாளர் நலச் சட்டங்களை செயல்படுத்தாமைக்கு தொழிலாளர் துறை மட்டும் 1994 ஆம் ஆண்டில் 14 ஆயிரத்து 537 வழக்குகள் தொடர்ந்துள்ளது. அதனால் வசூலிக்கப்பட்ட அபராதத்தொகை ரூ. 25 இலட்சத்து 22 ஆயிரத்து 520 ஆகும். தொழிலாளர் துறை எடையளவு சட்டத்தையும் செம்மையாக செயல் படுத்தி வருகிறது என்பதையும் அறிவீர்கள். இன்றைக்கு பல்வேறு பொருட்கள் பொட்டலங்களாக போடப்பட்டும் அளந்தும் விற்பனை செய்யப்படுகிறது. அவற்றில் ஏதேனும் குறைபாடுகள் ஏற்படும்போது இத்துறை திடீர் ஆய்வுகள் மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. இத்தகைய நடவடிக்கையால் 1994-ஆம் ஆண்டு குறைபாடுகள் காணப்பட்டமைக்கு 30 ஆயிரத்து 211 வழக்குகள் போடப்பட்டு அவற்றின் மூலம் அபராதமாக ரூ. 43 இலட்சத்து 18 ஆயிரத்து 835-ம் வசூலிக்கப்பட்டுள்ளன.

1994-ஆம் ஆண்டில் 14 ஆயிரத்து 187 பெட்ரோல் பங்குகள் ஆய்வு செய்யப்பட்டு, அளவு குறைவாக விற்பனை செய்தமைக்காக 672 பெட்ரோல் பங்குகளின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சமையல் எரிவாயு சிலிண்டரில் உள்ள எரிவாயுவின் எடை குறைவாக உள்ளதற்கு 79 வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

பிற்பகல் 8.50

இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், கலைத் துறையில் உள்ள தொழிலாளர்களுக்கும் நன்மைகள் செய்ய வேண்டும் என்று சிந்தித்ததின் பயனாக, தமிழகத்திலே முதன்முறையாக திரைப்படத் தொழிலாளர்களுக்கு பல்வேறு திட்டங்களை அறிவித்துள்ளார்கள். திரைப்படத் தொழிலாளர் பணியில் ஈடுபட்டிருக்கும் போது இறந்தால் ரூ. 50 ஆயிரம் கொடுக்கும் வகையில் விபத்து ஈட்டுறுதித்

திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதே போன்று 60 வயது முடிந்தவர்களுக்கு, மாதம் ரூ. 300/- ஓய்வூதியம் வழங்கும் ஓய்வூதியத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த இரண்டு திட்டங்களையும் 20-4-1995 அன்று இதயதெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் துவக்கி வைத்துள்ளார்கள் என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

## தொழிற்சாலைகள் ஆயவகத் துறை

மாண்புமிகு தமிழக முதல்வர், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் தொழிற்சாலைகள் சட்டம், தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையால் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் பதியப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 1993-ம் ஆண்டு இறுதியில் 20 ஆயிரத்து 589 ஆக இருந்தது. 1994-ல், ஒரு ஆயிரத்து 375 தொழிற்சாலைகள் புதியதாக பதிவு செய்யப்பட்டு தற்போது 21 ஆயிரத்து 964 தொழிற்சாலைகளாக உயர்ந்துள்ளது என்பதை பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

1994-ல் புதியதாக 36 ஆயிரத்து 551 தொழிலாளர்கள் தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளனர்.

விபத்துக்களை குறைக்கும் தொழிற்சாலைகளை உற்சாகப்படுத்தும் வகையில் அத்தகைய தொழிற்சாலைகளுக்கு மாநில பாதுகாப்பு விருதுகள் வழங்கப்படுகின்றன. அதே போல் தொழிலாளர்களிடம் மறைத்துள்ள தொழில் நுட்பத் திறனை வெளிக்கொண்டுவரும் வகையில், சிறந்த ஆலோசனை கூறும் தொழிலாளர்களுக்கு 'உழைப்பின் உயர்வு' (சிரம் வீர்) விருதுகள் வழங்கப்படுகின்றன.

இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசு தொழிலாளர்களையும், நிர்வாகத்தினரையும் உற்சாகப்படுத்தி அரவணைத்துச் செல்லும் மிகச் சிறந்த அரசு என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவீர்கள்.

தங்கத் தமிழகத்தின் தாயுள்ளம் கொண்ட தங்க மனத் தலைவி இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், தமிழகத்தின் எதிர்காலம் குழந்தைகளின் கையிலே இருக்கிறது என்பதை உணர்ந்து, அவர்களின் வாழ்வு வளம்பெற 15 அம்சத் திட்டம் கொண்டு வந்தார்கள். அதில் "குழந்தைத் தொழிலாளர் முறை' யினை அறவே நீக்கிட வேண்டும் என்ற ஒரு அம்சத்தையும் சேர்த்துள்ளார்கள் என்பது பெருமையுடன் இங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

அவர்கள் காட்டிய வழியிலே அடியெடுத்து வைத்து, குழந்தைத் தொழிலாளர் முறையினை அறவே களைந்துவிடவேண்டும் என்பதற்காகப் பல செயல் திட்டங்களை இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசு உருவாக்கி வருகின்றது.

குழந்தைத் தொழிலாளர் தடைச் சட்டம் முனைப்போடு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

'குழந்தைத் தொழிலாளர் மாநில ஆலோசனைக் குழு' அமைக்கப்பட்டு பல பரிந்துரைகளை எடுத்துரைத்துள்ளது.

மேலும் மாநில அளவில் குழந்தைத் தொழிலாளர் நலனுக்காக 'முனைந்து செயலாற்றுக் குழு' ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

முதல் கட்டமாக, காமராசர், திருநெல்வேலி-கட்டபொம்மன், வடாற்காடு அம்பேத்கார், வ.உ.சிதம்பரனார், கோயம்புத்தூர், திருச்சி, புதுக்கோட்டை ஆகிய 7 மாவட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, குழந்தைத் தொழிலாளர் முறையினை அறவே நீக்குவதற்கு ரூ. 244.19 கோடி செலவில் செயல் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கணக்கெடுத்தல், முறை சாராக் கல்வி வசதி செய்து தருதல், குழந்தைத் தொழிலாளரின் குடும்பத்தின் நிதி நிலையினை மேம்படுத்துதல், அவர்களுடைய உடல்நலம் பேணுதல், மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல், சட்டங்களையும், விதிகளையும் தீவிரமாக செயல்படுத்துதல் ஆகிய வழிகளில் குழந்தைத் தொழிலாளர் முறையினை ஒழிக்க இதயதெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசு அரும்பாடுபட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1994-ஆம் ஆண்டில் 1099 குழந்தைத் தொழிலாளர்கள் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டு பள்ளியில் சேர்க்கப்பட்டுள்ளனர். இக்குழந்தைகளில் பெற்றோர்களுக்கு ஐ.ஆர்.டி.பி. திட்டத்தின்கீழ் ரூ.5,000/- முதல் ரூ. 10,000/- வரை கடன் வசதி செய்து தரப்பட்டது.

பிற்பகல் 8-55

1995-96-ஆம் ஆண்டில் 56 ஆயிரத்து 500 குழந்தைத் தொழிலாளர்களை தொழிற் கூடங்களிலிருந்து மீட்டு, கல்விக் கூடங்களில் சேர்க்கவும், 29 ஆயிரத்து 883 குழந்தைத் தொழிலாளர்களின் குடும்ப வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தவும், இலக்கு நிர்ணயித்து, அதனை ஈடேற்றும் வகையில் திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்று இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

1995 ஏப்ரல் 27] [திரு. ஏ. எம். பரமசிவன்]

1994-ஆம் ஆண்டில் குழந்தைத் தொழிலாளர்களை பணியில் ஈடுபடுத்தியற்காக தொழிற்சாலை உரிமையாளர்களுக்கு ரூ. 70 ஆயிரம் அபராதமாக விதித்துள்ளது.

குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு முறை மீது தீவிர ஆய்வு மேற்கொள்ளப்பட்டு தற்போது 75 தொழிற்சாலைகளில் குழந்தைத் தொழிலாளர்களை பணியில் ஈடுபடுத்தியதற்காக தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேலும், தமிழகத்தில் தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழிற்சாலைகளில் குழந்தைத் தொழிலாளர்களை பணியில் ஈடுபடுத்துவதை அறவே நீக்கும் திட்டத்தினை தமிழகத்தின் காவல் தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அரசு (மேசையைத் தட்டும் ஒலி) முழு மூச்சுடன் செயலாற்றி வருகிறது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைப் பொறுத்தவரை தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் புதுமையான திட்டங்கள் பல நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். உடல் ஊனமுற்றோரின் இன்னல்கள் களையப்பட்டு அவர்கள் வாழ்க்கையில் வளமையும், செழுமையும் பெருகி, வேலைவாய்ப்பு அலுவலகங்களின் மூலமாக 1994-ஆம் ஆண்டில் 853 உடல் ஊனமுற்ற மனுதாரர்கள் பல்வேறு பணிகளில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். அதுபோல, பார்வையற்ற மனுதாரர்கள் 1135 பேர்களுக்கு 1994-ஆம் ஆண்டு மட்டும் ரூ. 20 லட்சம் நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களின் வாழ்க்கையில் ஒளியேற்றிட பல்வேறு நலத் திட்டங்களை இதயதெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தினந்தோறும் அறிவித்து வருகின்றார்கள். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பல்வேறு தேர்வாணைய போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றி பெறுவதற்கு வேலைவாய்ப்புத் துறை மூலம் பயிற்சி அளிக்கப்படுகிறது. 1994-ஆம் ஆண்டு மட்டும் இதன்மூலம் ஏறத்தாழ 10 ஆயிரம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இந்தப் பயிற்சியின் மூலம் பயனடைந்துள்ளார்கள்

[திரு. ஏ. எம். பரமசிவன்] [1995 ஏப்ரல் 27

என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பயிற்சிக்காக மட்டும் மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசினால் 1994-95-ஆம் ஆண்டு மட்டும் ரூ. 25.6 லட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்ற ஆண்டு சட்டமன்றத்தில் அறிவித்தவாறு கிராமப்புறங்களில் படிக்கின்ற மாணவர்களுக்கு, அவர்களுடைய எதிர்காலத் திட்டங்களைத் தீட்டிட, ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு கிராமப்புற பள்ளிக்கூடத்தைத் தேர்ந்தெடுத்து, ஆலோசனையும், பயிற்சியும் அளிக்கப்படுகிறது. இந்தப் பயிற்சியின் மூலம் கிராமப்புற மாணவர்களும், நகர்ப்புற மாணவர்களுடன் சமமாக எல்லா வகையிலும், போட்டியிட தகுதி உடையவர்களாகிறார்கள். இத்திட்டம் மாணவர்களால் வெகுவாக வரவேற்கப்பட்டுள்ளது. இதன்மூலம் மாணவர்களிடையே புதிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியுள்ளோம் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

பெண்ணுரிமை, பேணி பாதுகாக்கப்பட வேண்டுமானால் சமுதாயத்தின் அனைத்துத் துறைகளிலும் அவர்கள் செயல்பட வாய்ப்புகள் உருவாக்கப்பட வேண்டுமென்ற, புதிய எண்ணத்தைக் கொண்ட மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு

வீட்டிலோர் பொந்தில் வளர்வதை
வீரப் பெண்கள் விரைவில் ஒழிப்பாராம் ...

என்ற மகாகவி பாரதியின் எண்ணக் கனவுகளை நனவாக்கும் வகையில் பெண்களுக்கு மோட்டார் வாகனம் ஓட்டுவதற்கான சிறப்பு பயிற்சி கொடுக்க முடிவெடுத்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் 50 பெண்கள் மோட்டார் வாகன ஓட்டுனராகப் பயிற்சி பெறுவார்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) இத்திட்டம் இன்னும் ஓரிரு மாதங்களில் துவக்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அறிவியல் அற்புதங்கள் ஒவ்வொரு துறையிலும் புகுத்தப்பட்டு அவை பொதுமக்களுடைய சேவைக்காகப் பயன்படுத்தப்பட வேண்டும் என்கிற கொள்கை உடைய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசில் இதுவரை 14 வேலைவாய்ப்பு அலுவலகங்கள் கம்ப்யூட்டர் மயமாக்கப்பட்டுள்ளன. 1995-96-ஆம் ஆண்டு 3 வேலைவாய்ப்பு அலுவலகங்கள் - ஈரோடு, தூத்துக்குடி மற்றும் சேலம் ஆகியன கம்ப்யூட்டர் மயமாக்கப்பட உள்ளன என்பதையும் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன்மூலம் விரைவாக நல்லமுறையில் பணியினை வேலைவாய்ப்பு அலுவலகங்கள் ஆற்றிட இயலும்.

1995 ஏப்ரல் 27] [திரு. ஏ. எம். பரமசிவன்]

வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ளவர்கள் மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை பதிவினை புதுப்பிக்க வேண்டும். புதுப்பிக்க தவறுபவர்களின் பதிவினை மருத்துவச் சான்றிதழ் அடிப்படையில் மீண்டும் புதுப்பிக்கப்பட்டு வந்தது. இந்த முறையில் மனுதாரர்களுக்கு சங்கடங்கள் பல ஏற்படுகிறது என்று அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

பிற்பகல் 9.00

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. பாலகங்காதரன் அவர்கள் பேசும்போது மெடிக்கல் சர்ட்டிபிகேட் வாங்காமல் ஓராண்டுக்குள் பதிவு செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். அதனை ஏற்று இதயதெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு (மேசையைத் தட்டும் ஒலி) மனுதாரர்களின் இன்னல்களைக் களையும்பொருட்டு, தற்போதுள்ள முறையினை மாற்றி, புதுப்பிக்கத் தவறியவர்களின் பதிவினை ஒரு வருடம்வரை மருத்துவச் சான்றிதழ் இல்லாமலேயே புதுப்பிக்கத் தக்க ஆணை வழங்கப்பட்டுள்ளது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மட்டற்ற மகிழ்ச்சியுடன் இந்த மன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

நீண்டகால கோரிக்கையினை ஏற்றிடும் வகையில் புதியதாக கட்டப்படும் சென்னை மாவட்ட ஆட்சியாளர் வளாகப் புதிய கட்டிடத்தில், வேலை வாய்ப்பு இயக்ககம் மற்றும் தலைமைத் தொழிற்சாலைகள் ஆய்வகத் துறைக்கு இடம் ஒதுக்கீடு செய்து தந்தமைக்கு தானைத் தலைவி, இதயதெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு எனது சார்பாகவும், எனது துறையின் சார்பாகவும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## பயிற்சிப் பிரிவு

தமிழகத்திலுள்ள பின்தங்கிய மாவட்டங்களில் ஒன்றான இராமநாதபுரத்தில் உள்ள அரசு தொழிற் பயிற்சி நிலையத்திற்கு புதிய கட்டிடம் கட்ட கடந்த ஆண்டு ரூ. 45 இலட்சம் செலவிட மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அனுமதி அளித்துள்ளார்கள். இதன்மூலம் புதிய தொழிற்பிரிவுகளைத் துவக்கிட இயலும். தொழில் வளமும் வேலைவாய்ப்பும் இதன்மூலம் பெருக வாய்ப்புகள் உள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு தமிழக முதல்வர், இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு மகளிர் முன்னேற்றத்திற்காகப் பல்வேறு திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறது என்பதை உலகறியும்.

தற்போது 'புத்தம் புதிய கலைகள் பஞ்ச பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்' என்ற மகாகவி பாரதியின் சிந்தனைக்குச் செயல்வடிவம் கொடுக்கும் வகையில், மகளிருக்கென்று நவீன முறையில் அச்சிடும் தொழிற்பிரிவு சென்னை கிண்டி அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்கென ரூ. 7.5 இலட்சம் மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களால் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் ஒவ்வொரு ஆண்டும் 100 பெண்கள் புதிய தொழில் நுட்பத்தினைக் கற்று, வாழ்க்கையில் முன்னேற இயலும் என்பதைப் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறும் பயிற்சியாளர்களை சமூகத் தொண்டில் ஈடுபடுத்தும் நோக்கத்துடன் ஒவ்வொரு தொழிற் பயிற்சி நிலையமும் ஒவ்வொரு கிராமத்தினைத் தத்து எடுத்துக்கொண்டு, அந்தக் கிராமத்தின் அடிப்படை வசதிகளை உடனடியாகச் சீர்செய்து, கிராம மக்கள் அந்த அடிப்படை வசதிகளைப் பெறும் இத்திட்டம் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களால் நடைமுறைப்படுத்தப்பட்ட இத்திட்டம் கிராம மக்களால் வெகுவாக வரவேற்கப்பட்டுள்ள ஒரு திட்டமாகும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாகப்பட்டினம்-காயிதேமில்லத் மாவட்டம், நீடாமங்கலத்தில் அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் துவக்கக் கோரி அப்பகுதி மக்களின் நீண்ட நாளைய கோரிக்கையை ஏற்று இதயதெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நீடாமங்கலத்தில் அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் துவக்க அனுமதி அளித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வரும் ஆகஸ்டு மாதம் இத்தொழிற் பயிற்சி நிலையம் செயல்படத் துவங்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

விழுப்புரம் இராமசாமி படையாச்சி மாவட்டம், கல்வராயன் குன்றுகளில் பழங்குடிவாழ் இளைஞர்களுக்கென்று சுயவேலைவாய்ப்பு அளிக்கும் தொழிற் பிரிவுகளில் குறுகிய கால பயிற்சி அளிக்கும் வாழ்வியல் பயிற்சி நிலையம் துவக்க மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணை வழங்கியுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இப்பயிற்சி நிலையம் ஆகஸ்டு 95 முதல் துவக்கப்பட உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் பழங்குடி இளைஞர்கள் வாழ்க்கையில் புத்துணர்வும் புதிய ஒளியும் ஏற்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 9.05

தற்போது தொழிற்சாலைகள் நவீன மயமாக்கப்பட்டு புதிய புதிய இயந்திரங்கள் உபயோகப்படுத்தப்படுகின்றன. அதற்கு ஏற்றார்போல அரசினர் தொழிற்பயிற்சி நிலைய மாணவர்களுக்கு புதிய தொழில் நுட்பப் பயிற்சிகள் அளிக்கின்ற வகையில், சென்னை, மதுரை, கோவை, ஓசூர் ஆகிய இடங்களில் உள்ள அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் புதிய தொழில் நுட்ப சி.என்.சி. இயந்திரங்களை நிறுவி — கம்ப்யூட்டர் மூலம் இயந்திரச் செயல்பாட்டைக் கட்டுப்படுத்தும் இயந்திரம் — பயிற்சி அளிக்க ஆணையிட்டுள்ளார்கள். இத்திட்டத்தை சீரிய முறையில் செயல்படுத்த மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ரூ. 32 லட்சம் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள் என்பதைப் பெரு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம் வாழ்வியல் தொழிற்கல்வியின் தரம் உயரும். அதன்மூலம் வேலைவாய்ப்பு பெருகும்.

அரசின் தொழிற்பயிற்சி நிலையங்களில் இதுவரை மின்விசிறிகளும், தண்ணீரைக் குளிரவைக்கும் கருவிகளும் போதுமான அளவில் இல்லாமல் இருந்தன. பயிற்சியாளர்கள் மற்றும் பயிற்றுநர்களின் பணி செம்மையாக அமைய, இதயதெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சுமார் 800 மின் விசிறிகளும் மற்றும் தண்ணீரைக் குளிரவைக்கும் கருவிகளும் வாங்க ரூ. 8.19 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளார்கள் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

## அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்

அயல்நாடுகளில் வேலைவாய்ப்பினைத் தேடும் ஏழை எளிய மக்கள், சில மோசடி நிறுவனங்களால் ஏமாற்றப்படுவதைத் தடுத்து, அவர்களுக்கு உதவுவதற்காக 1978-ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் மூலம் இதுவரை 4,509 நபர்கள் பயனடைந்துள்ளனர். 1990-91-ம் ஆண்டுவரை, நஷ்டத்தில் இயங்கி வந்த இந்த நிறுவனம், மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு பொறுப்பேற்ற பின்னர், இலாபத்தில் இயங்கி வருகின்றது. 1994-95 ஆம் ஆண்டில், ரூ. 6,39,000 லாபம் ஈட்டியுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த வருடம் ரூ. 10 இலட்சம் வரை இலாபம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

எல்லையில்லா கொடையுள்ளம் கொண்ட எங்கள் இதயதெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில், கீழ்க்கண்ட நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன என்பதைப் பெருமையுடன் இம்மாமன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

## பெண் தொழிலாளர்களுக்கு பேறுகால விடுப்பினை அதிகரித்தல்

அகிலம் போற்றும் அன்னை தெரசாவால் பாராட்டப்பட்ட, மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், மகளிர் நலனுக்காக பல திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறார்கள். தற்போது தொழிற்சாலைகளில் பணியாற்றும் பெண் தொழிலாளர்களுக்கு மேலும் ஒரு சலுகையை அறிவித்துள்ளார்கள். பெண் தொழிலாளர்களுக்கு தற்போது பேறு கால விடுப்பு 12 வாரங்கள் வழங்கப்படுகிறது. தாய்ப்பால் ஊட்டி வளர்க்கப்படும் குழந்தைகள்தான், உடல், மன வளர்ச்சியில் உன்னதமான நிலை அடைவார்கள் என்பது மருத்துவ வல்லுநர்களின் கருத்தாகும். குழந்தைப் பேறுக்குப் பிறகுதான், நீண்டகாலம் தாய்ப்பால் ஊட்டுவதற்கு ஏதுவாக, பேறுகால விடுப்புக் காலத்தை, 24 வாரங்களுக்கு அதிகரிக்கவும், முழுப் பணிக்காலத்தில் பேறுகால விடுப்பாக 48 வாரங்கள் வரை அளிக்கும் வகையில், சட்டத்திருத்தம் கொண்டுவரப்படும் என்பதை இந்த மாமன்றத்தில் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

## தொழிலாளர் சட்டங்களை தீவிரமாக அமல் செய்ய கூடுதல் வாகனங்கள்

தொழிலாளர் நலச் சட்டங்களை விரைவாகவும், குறித்த நேரத்திலும் ஆய்வு செய்து அமுல்படுத்தினால் மட்டுமே சட்டங்களின் பயன், தொழிலாளர்களைச் சென்றடையவும், இச்சட்டங்களை அமுல் செய்யும் அலுவலர்களுக்கு, வாகனங்கள் அவசியம் தேவைப்படுகிறது. எனவே, வாகனங்கள் இல்லாத பகுதியில் உள்ள அலுவலர்களுக்கும் இவ்வாண்டு முதல் படிப்படியாக வாகனங்கள் வழங்கப்பட்டு, சட்டங்களைத் தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில் அமுலாக்க, தங்கமனத்தலைவி, தானைத்தலைவி மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

## கல் உடைப்போருக்கு தொழிலாளர் நலச்சட்டம் இயற்றுதல்

முறைப்படுத்தப்பட்ட தொழில் துறையில் வேலை செய்யும் தொழிலாளர்களின் நடைமுறைப் பிரச்சினைகளைச் சமாளிக்க, மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அரசு பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. தற்போது முறைப்படுத்தப்படாத வகையில் திட்டங்கள் தீட்டவேண்டும் என்பதில் அரசு உறுதியாக உள்ளது. ஏற்கெனவே திரைப்படத் தொழிலாளர்களுக்கு திட்டம் அறிவிக்கப்பட்டு

இதன் செயல்பாடு துவங்கப்பட்டுள்ளது. அதேபோல கட்டிடத் தொழிலாளர்களுக்கும் நலத்திட்டங்கள் அறிவிக்கப்பட்டு செயலாக்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன. தற்போது கடுமையான உடல் உழைப்பைக் கொண்ட கல்லுடைக்கும் தொழிலில் ஈடுபட்டு வாழும் தொழிலாளர்களுக்கு நலத்திட்டங்கள் கொண்டுவரவேண்டுமென்று இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். எனவே கல்லுடைக்கும் தொழிலாளர்களுக்கு நலச்சட்டம் ஒன்று இவ்வாண்டு கொண்டுவரப்படும் என்று இந்த மாமன்றத்திலே மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன் . (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 9.10

முறைப்படுத்தப்படாத தொழில் துறையில் உள்ள தொழிலாளர் நலச் சட்டங்களை, சீரிய முறையில் செயல்படுத்த, தேவையான திருத்தங்களைக் கொண்டுவரலாம் என மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு கருதுகிறது. எனவே, திருத்தங்களைப் பரிந்துரைக்க தொழிலாளர் துறையில் உள்ள ஒரு மூத்த அலுவலரின் கீழ் ஒரு குழு அமைக்க மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இக்குழு உடல் உழைப்போர் (கட்டடத் தொழிலாளர் ) சட்டத்திற்குத் தேவைப்படும் சட்ட திருத்தங்கள் பற்றி அரசுக்கு ஆலோசனை வழங்கும். மேலும் முறைப்படுத்தப்படாத தொழில் துறையில் பல்வேறு பிரிவுகளில் உள்ள தொழிலாளர்களுக்குத் தேவைப்படும் நலத் திட்டங்கள் குறித்தும், வேலையளிப்போர் மற்றும் தொழிலாளர்களின் பங்குத் தொகைகளை நிர்ணயிப்பது பற்றியும் ஆய்வு செய்து பரிந்துரை செய்யும் என்பதையும் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழிலாளர் துறை, தொழிற்சாலைகள் ஆய்வகத் துறை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆகிய மூன்று துறைகளின் கீழ் உள்ள அலுவலகங்கள் பல்வேறு இடங்களில் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. இவைகள் அனைத்தும் ஒரே கட்டடத்தில் இயங்க கட்டட வளாகம் அமைக்கலாம் என்று அரசு கருதுகிறது. கோயம்புத்தூரில் கட்டட வளாகம் ஒன்று ஏற்கனவே நிறுவப்பட்டுள்ளது. மதுரை மற்றும் சேலம் நகரங்களில் இத்தகைய கட்டட வளாகங்கள் அமைக்க, தானைத் தலைவி, மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

தற்போது எடை மற்றும் அளவுகள் சட்டத்தின் கீழ் குற்றங்களுக்கு அபராதம் வசூலித்து சமாதானம் செய்து கொள்ளப்படுவதால் வழக்குகள் விரைவாக முடிக்கப்படுகின்றன. ஆனால் தொழிற்சாலைகள் சட்டம், கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம், உணவு நிறுவனங்கள் சட்டம் போன்ற சட்டங்களில் சமாதானம் செய்துகொள்வதற்கான வழிவகை இல்லை. எனவே, சட்ட விதிகள் முழுமையான அளவில் செயலாக்கம் பெறவேண்டும் என்ற நோக்கத்திலும், வணிகர்கள் மற்றும் முனைவர்கள் வழக்குகளில் காலதாமதத்தை தவிர்க்க வேண்டும் என்பதையும் கருத்தில் கொண்டு, குற்றங்களுக்கு சமாதானம் செய்துகொள்ளும் முறையை கொண்டுவர, மற்ற தொழிலாளர் நலச் சட்டங்களில் தேவையான திருத்தங்களை மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு கொண்டு வர தீர்மானித்துள்ளது.

தவிர்க்க முடியாத காரணங்களால் சில நேரங்களில் சில தொழிற்சாலைகள் மூடப்படும்போது தொழிலாளர்கள் வேலை இழக்கின்றனர். சில தொழிலாளர்கள் தன்னிச்சை ஓய்வு பெறுகின்றனர். ஆனால், அவர்கள் தொடர்ந்து பணியாற்ற தகுதியுடையவர்களாக இருக்கிறார்கள். மேலும் சில பயிற்சிகள் மூலம் அவர்களின் வேலைவாய்ப்புகளை மேம்படுத்திட முடியும். அதன்மூலம் வேலைவாய்ப்பும் நிரந்தர வருமானமும் அவர்களுக்கு ஏற்படுத்திட இயலும். அதற்கு அவர்களுக்கு ஆலோசனையும், நல்ல பயிற்சியும் தேவை. இந்தத் தொழிலாளர்களுக்கு ஆலோசனை மற்றும் பயிற்சி வழங்க, முதல் கட்டமாக, சென்னை, மதுரை, கோவை மற்றும் சேலம் ஆகிய இடங்களில் வேலைவாய்ப்பு உதவி மையங்கள் அமைக்க, தினந்தோறும் திட்டங்களையும், சட்டங்களையும் அறிமுகப்படுத்தி, சரித்திரம் படைத்து வரும் மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* இந்தத் திட்டம் தொழிலாளர்களின் வாழ்வில் ஒரு ஒளிமயமான திட்டமாகும் என்பதில் சந்தேகமில்லை.

கிராமப்புறப் பள்ளிகளைத் தத்தெடுத்துக் கொள்ளும் தனிப்பெரும் திட்டத்தை, தன்னிகரற்ற தமிழக முதல்வர், இதயதெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களால் கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்டு, சீரிய முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது இத்திட்டத்தின் பயனை மேலும் 4000 மாணவ, மாணவியர்கள் பயன்பெறும் வகையில், திருச்சி, மதுரை, கோவை, தர்மபுரி மற்றும் சேலம் ஆகிய ஐந்து மாவட்டங்களில் ஒவ்வொரு மாவட்டத்தில் ஐந்து பள்ளிகள் என 25

மேல்நிலைப் பள்ளிகளில் இந்தத் தொழில்முறை வழிகாட்டும் திட்டத்தை விரிவுபடுத்த, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மட்டற்ற மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

நான்கு ஆண்டுகளில் நாற்பது ஆண்டு காலச் சாதனைகளைப் படைத்து வரும் மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மாணவர்களுக்காக மேலும் ஒரு திட்டத்தை அறிவித்துள்ளார்கள். இத்திட்டத்தின்படி, பல்வேறு துறைகளில் உள்ள வேலைவாய்ப்புகள், அவற்றிற்கான கல்வி மற்றும் பயிற்சித் தகுதிகள், தேர்வு முறைகள் இவற்றை விளக்கும் வகையில் ஒளி நாடாவில் பதிவு செய்து, கல்வித்துறை மூலமாகவும், செய்தி மக்கள் தொடர்புத் துறை மூலமாகவும் பள்ளிகளுக்கு அனுப்பி எண்ணற்ற மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில் 'நடமாடும் தொழில்முறை வழிகாட்டித் திட்டம்' செயல்படுத்தப்படும் என்பதை இந்த மாமன்றத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இரவு 9.15

அறியாமை இருள் நீங்க அறிவொளி இயக்கம் தந்த அறிவார்ந்த முதல்வர், மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில், ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த சுமார் 5000 வேலையில்லாப் பட்டதாரிகளுக்குப் பல்வேறு போட்டித் தேர்வுகள் மற்றும் சுய வேலைவாய்ப்புகள் குறித்த சிறப்புப் பயிற்சித் திட்டத்தைச் செயல்படுத்த, இதய தெயவம், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டத்தில் ஊனமுற்றோர், பெண்கள் ஆகியோருக்கு இப்பயிற்சியில் சேர முன்னுரிமை அளிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

(மாண்புமிகு பேரவைத் தலைவர்)

தமிழ்நாட்டில் உள்ள அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் தேசிய வாழ்வியல் பயிற்சித் திட்டத்தில் பயிற்சி பெறுபவர்கள், பெரிய தொழிற்சாலைகளிலேயே வேலை செய்ய விரும்புகின்றனர். அதனால் சிறு தொழில் நிறுவனங்களுக்குப் போதுமான பயிற்சியும் தகுதியும் உள்ள தொழிலாளர்கள் கிடைப்பதில்லை. இந்நிலை மாற, இந்த ஆண்டிலேயே 15 குறுகிய கால தொழிற் பிரிவுகள் ஏற்படுத்த மாண்புமிகு இதயதெய்வம்,

டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதன் மூலம் வருடம் ஒன்றிற்கு 3000 இளைஞர்கள் வாழ்வில் நம்பிக்கை ஒளி ஏற்றப்படும் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் பேசிய கருத்துகளுக்கும் மற்றும் அவர்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானங்களுக்கும் என்னுடைய உரையில் அளித்த விவரங்கள் நிறைவு தரும் என்று நம்புகிறேன். மேலும் அவைக்குறிப்பில் பதிவான மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்துகளின் மீது பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களை திரும்பப் பெற்றுக் கொண்டு, தொழிலாளர் நலனும்-தொழிற்சாலைகளும் ஆகியவற்றிற்கான மானியக் கோரிக்கையினை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொண்டு, (மேசையைத் தட்டும் ஒலி)

" தொழிலாளர் வாழ்க்கையிலே
பட்ட துயர் இனி மாறும் - ரொம்பக்
கிட்ட நெருங்குது நேரம்" என்று கனவு கண்டார் மக்கள் கவிஞர் பட்டுக் கோட்டை கல்யாணசுந்தரம். அந்த மாபெரும் கனவை செயல்படுத்தி வருகிற மகத்தான தலைவி, உழைக்கும் வர்க்கத்தின் ஒரே ஒப்பற்ற தலைவி, இந்தியாவில் ஈடு இணையில்லா முதல்வராகத் திகழும் நிரந்தர முதல்வர், மாண்புமிகு இதயதெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்தின் ஒளி விளக்காய்
தர்மத்தின் தலைமகளாய்
தலையாய பணிபுரியும் தாயே
உங்கள் பாதச் சுவடுகளைத் தொடர்ந்து
தொடர்ந்து வெற்றி காண்போம்
சதிகளை முறியடிப்போம்,
சூழ்ச்சிகளை தூளாக்குவோம்,
தரணி முழுவதும் உங்கள் புகழ் பரப்புவோம்

எனக் கூறி, தங்களை வணங்கி முடிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பாலகங்காதரன்.

SECRETARIAT DU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1995 ஏப்ரல் 27]

திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகாசியில் 4 மாதத்திற்கு ...... (குறுக்கீடு) ** சிவகாசியில் பட்டாசு மற்றும் தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் 4 மாதங்களுக்கு ஒரு முறை இன்ஸ்பெக்ட் செய்யும் முறையை ஓர் ஆண்டுக்கு ஒரு முறை என்று மாற்றித் தந்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் வெ. சரோஜா.

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்ககிரி பேரூராட்சிக்கு உட்பட்ட கழுகுமேடு என்ற இடத்தில் இ.எஸ்.ஐ. மருத்துவமனை கேட்டு 2 ஆண்டுகளாக கோரிக்கை வைத்து உள்ளேன். மாண்புகு அமைச்சர் அவர்கள் அதைக் கருத்தில் கொண்டு, இந்த ஆண்டே அதைச் செய்து முடிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏராளமான திட்டங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அதற்கெல்லாம் நன்றி சொல்லப்போகிறீர்களோ என்று பார்த்தேன்.

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கருத்து பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வே. பெரியசாமி.

திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு சிறப்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய அந்தியூர் தொகுதிக்கு, கருணை உள்ளத்தோடு எங்களுடைய தானைத் தலைவி, தங்கத் தலைவி, நாங்கள் எல்லாம் கடவுளாக வணங்கிக் கொண்டிருக்கிற, இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், நீண்ட நெடும் காலமாக நாங்கள் கேட்டுக் கொண்டிருந்த - திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் இருந்து கேட்டுக் கொண்டிருந்த - பீடி சுற்றும் தொழிலாளர்களுக்கு வீட்டு மனையும், வீடும் கட்டித் தரவேண்டும் என்று கேட்டேன். வீட்டு மனையை கடந்த மாதம் கொடுத்தார்கள். இன்றைக்கு வீடு கட்டித் தருவதற்காக நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அவர்களுக்கு எங்கள் சார்பாகவும், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு எங்களுடைய வாழ்த்துக்களையும் தெரிவித்து, விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* ஆனால் மேஜையைத் தட்டுவதைப் பொறுத்தவரையில், இதுவரைக்கும் தட்டியதைப் போல் தட்டவில்லை. அதற்கு நான் உங்களுக்கு நன்றி சொல்கிறேன்.

இரவு 9-20

## (ஈ) கோரிக்கை எண் 28 - தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும்

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மானியக் கோரிக்கை எண். 28, தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும், வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஆர். சிங்காரம்.

*திரு. ஆர். சிங்காரம் :* இல்லை.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* திரு. ஆர். சிங்காரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

“தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.71,38,41,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்” என்னும் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

## 7. அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்)

### கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு 1995

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்). 1995-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/1995). மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

1995 ஏப்ரல் 27]

## 6. விதி 110-ன் கீழ் அமைச்சரின் அறிக்கை.

### இறால் பண்ணைகளால் பொதுமக்களும் விவசாய நிலங்களும் பாதிக்கப்படுவதைத் தடுக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து மீனளத்துறை அமைச்சரின் அறிக்கை.

பிற்பகல் 7.05

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* பேரவை விதி 110-ன் கீழ் ஒரு முக்கிய அறிவிப்பினைப் பேரவைக்கு வெளியிட மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர் அவர்கள் என்னிடம் அனுமதி கோரியுள்ளார்கள். அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இப்போது அந்த அறிவிப்பினைப் பேரவைக்கு வைக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

*மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டில் 1,000 கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரை அமைந்துள்ளது என்பது எல்லோரும் அறிந்த ஒன்று. கடற்கரையைச் சார்ந்துள்ள உவர்நீர் பரப்புகள் இறால் பண்ணை அமைப்பதற்கு மிகவும் ஏற்றதாக அமைந்துள்ளன என்ற காரணத்தினால், பல தனியார் நிறுவனங்கள் கடற்கரையை ஒட்டி தனியார் நிலங்களில் இறால் பண்ணைகள் அமைத்தும், அமைக்க முயற்சித்தும் வருகின்றன. அதிலும் குறிப்பாக நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டத்தில் பெரும்பான்மையான இறால் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த இறால் பண்ணைகள் மூலம் விவசாய நிலங்கள் இறால் பண்ணை நிலங்களாக மாற்றப்பட்டு வருகின்றன என்றும், அதனால் விவசாய நிலங்களை இழப்பதோடு மட்டுமல்லாமல் விவசாயத்தையே நம்பி வாழ்கின்ற ஏழைக் கூலித் தொழிலாளர்களுடைய வாழ்க்கை வேலைவாய்ப்பு இன்றி இருண்டுவிடுமென்றும், குடிநீர் நிலைகள், நீர்பாசன ஏரிகள் மற்றும் வாய்க்கால்கள், குடியிருப்புப் பகுதிகள் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளன என்றும், இறால் பண்ணை கழிவு நீரால் இனம் தெரியாத நோய்கள் வருகின்றனவென்றும் காரணம் காட்டி பல்வேறு அமைப்புகள் இறால் பண்ணை அமைப்பதை எதிர்த்து போராட்டம் நடத்தி வந்தன. இந்த நேரத்தில் நமது மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நாகை காயிதே மில்லத் மாவட்டத்துக்கு 15-9-1994 அன்று மக்கள் நலத் திட்டங்களை அறிமுகப்படுத்திடச் சென்றிருந்தபோது, நமது மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பேருரையாற்றியதில் ஒரு பகுதியை நினைவுகூரக் கடமைப்பட்டுள்ளேன்.

"சமீப காலமாக இந்த மாவட்டத்து மக்களை பாதிக்கின்ற ஒரு முக்கியமான பிரச்சினையை எங்கள் அரசு உன்னிப்பாக கவனித்து வருகின்றது. மீன் வளத்தைப் பெருக்குவதற்காக, கடற்கரையோர மாவட்டங்களில், உப்புத் தன்மையுடைய நீரைக் கொண்டு இறால் மீன் பண்ணைகள் அமைப்பதால் எழுந்துள்ள பொருளாதார மற்றும் சமூகப் பிரச்சினைகளைப் பற்றித்தான் நான் குறிப்பிடுகிறேன். இன்று தமிழ்நாட்டில் உள்ள பல கடற்கரையோரக் கிராமங்களில், இறால் மீன் பண்ணைகள் மற்றும் மீன் பண்ணைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. ஆனால், இந்த இறால் பண்ணைகளில், கடல் உப்பு நீரைத் தொட்டிகளில் தேக்கி வைப்பதாலும், திறந்த கால்வாய்கள் வழியாக கடல் நீரை பண்ணையில் உள்ள தொட்டிகளுக்குக் கொண்டு செல்வதாலும், இந்த உப்புத் தன்மை நிலத்தடி நீரையும் பண்ணைக்கு அருகே அமைந்துள்ள விவசாய நிலங்களையும் மண் வளத்தையும் பாதித்து வருவதையும் பல இடங்களில் இதனால் சுற்றுப்புறச் சூழலுக்கும் தீங்கு உண்டாகும் சூழ்நிலைகள் அமைந்துள்ளதையும் இதன் காரணமாக தேவையற்ற சமூக இடர்பாடுகள் ஏற்பட்டு வருவதையும் நான் நன்கறிவேன்.

தொழில் வளத்தைப் பெருக்க வேண்டும் என்று நாம் விரும்பும் அதே நேரத்தில் வேளாண் தொழிலுக்கு எள்ளளவும் குந்தகம் ஏற்பட்டு விடக்கூடாது என்பதிலும், சுற்றுப்புறச் சூழல் பாதிக்கப்படாமல் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதிலும், உங்கள் அன்புச் சகோதரியின் அரசு மிக உறுதியாக உள்ளது. நிகழ்காலத்தில் கிடைக்கும் ஒரு சிறு இலாபத்திற்காக எதிர்காலத்தை பாதிக்கும் செயல்களை நிச்சயம் நாங்கள் அனுமதிக்க மாட்டோம். சுற்றுப்புறச் சூழலையும் நமக்கு இயற்கை அன்னை அளித்த வளங்களையும் ஊனப்படுத்திவிடக்கூடாது என்பதில் நான் மிகுந்த தீவிரம் காட்டி வருகின்றேன். அடுத்த தேர்தலைப் பற்றி கவலைப்படுவதை விட்டுவிட்டு, அடுத்த தலைமுறையைப் பற்றி கவலைப்படுகின்ற (மேசையைத் தட்டும் ஒலி) அக்கறை கொண்டிருக்கிற ஒரு அரசு தான் உங்கள் அன்புச் சகோதரியின் அரசு. எனவே தான் இறால் மீன் பண்ணைகள் அமைப்பதால் எழுந்துள்ள பிரச்சினைகளை ஆராய்வதற்காக கடந்த மாதம் எனது ஆணையின் பேரில் ஒரு வல்லுநர் குழு (Expert Committee) ஏற்படுத்தப்பட்டது.

இந்தக் குழு, கடலோர கிராமங்களில் இறால் மீன் பண்ணைகள் அமைப்பதற்கு அனுசரிக்க வேண்டிய வரைமுறைகளையும் நிபந்தனைகளையும் வகுத்துக் கொடுக்கும். மேலும் தனி நபர் இலாபத்தை மட்டுமே கருத்தில் கொண்டு நல்ல விளை நிலங்கள் இறால் மீன் பண்ணைகளாக உருவாவதைத் தடுக்கவும், மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் மீனவர்களின் மரபு சார்ந்த முறையில் கடற்கரைப்

பகுதிகளையும் கடல் நீரையும் உபயோகிக்கின்ற உரிமைகளை பாதுகாக்கவும், கடற்கரையின் தொடர்ச்சியை பாதிக்கின்ற அளவில், பண்ணைகள் ஏற்படுவதைத் தடுக்கவும், கடலோர கிராமங்களில் வசிக்கும் மக்கள் இதுவரை அனுபவித்து வந்த பாதை உரிமை போன்ற மரபு வழி உரிமைகள் பாதிக்கப்படாமலும், நிலத்தடி நீர் பாதிக்கப்படும் விதத்தை, தடுக்கும் உத்திகளைக் கண்டறிவதும் இந்த குழுவின் நோக்கமாகும்.

மேலும், இந்த பண்ணைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீரின் நச்சுத் தன்மையை அறிவதோடு, நிலம், காற்று, ஆகாயம் ஆகியவற்றிற்கு இந்த மாசுகளால் ஏற்படுகின்ற பாதிப்பை தவிர்ப்பதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய தடுப்பு நடவடிக்கைகள் குறித்தும் இந்தக் குழு முழுமையாக ஆராய்ந்து தனது பரிந்துரைகளை வழங்கும்.

எனவே, நடைமுறையில் உள்ள விவசாய விளைநிலங்கள் பாதிக்கப்படாமலும், சுற்றுப்புறச் சூழல் கெடாமலும், இறால் மீன் பண்ணைகள் அமைக்கின்ற புதிய வரைமுறைகளை மிக விரைவில் எங்கள் அரசு வெளியிடும். சுற்றுப்புறச்சூழல், எதிர்கால சந்ததியினரின் நல்வாழ்க்கை, மக்களின் எதிர்பார்ப்புகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு உங்கள் சகோதரியின் அரசு இந்த பிரச்சினையில் நல்ல முடிவுகளை எடுக்கும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

*பிற்பகல் 7-10*

இம் மாவட்டத்து விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், பொதுமக்கள், இதுகுறித்து தேவையற்ற கவலையிலும், பிரச்சினையிலும் ஈடுபட வேண்டாமென்று இந்த கூட்டத்தின் வாயிலாக நான் வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

தேவையற்ற முறையில், இந்தப் பிரச்சினையை பூதாகாரமாக்கி, மக்கள் மனதில் ஒரு பீதியை உண்டாக்குகின்ற முயற்சியில் யாரும் ஈடுபடக்கூடாது என்பதே எனது வேண்டுகோள். அதேநேரத்தில், இந்த கட்டுப்பாட்டை மீறுபவர்களை பார்த்துக்கொண்டு இந்த அரசாங்கம் கை கட்டிக்கொண்டு, வாளா இருக்காது என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி) சுட்டிக் காட்டுவதும் எனது கடமை என்று கருதுகின்றேன்."

மேற்கூறிய மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பேருரையின் அடிப்படையில் ஆற்றல் மிக்க நமது தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்ததற்கிணங்க இப்பிரச்சினை குறித்து ஆராய்வதற்காக ஒரு வல்லுநர் குழுவை அமைத்து, அந்த வல்லுநர் குழு விரைவில்

அறிக்கை தயார் செய்து அரசுக்கு அனுப்ப வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணை பிறப்பித்தார்கள். அந்த ஆணையின்படி, மீனளத்துறை ஆணையாளர் அவர்கள் தலைமையில் பதினைந்து பேர் கொண்ட வல்லுநர் குழு ஒன்று 23-8-1994 அன்று அமைக்கப்பட்டு, அந்தக் குழுவும் தனது அறிக்கையை 1994 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் அரசுக்கு அனுப்பி வைத்தது.

இறால் பண்ணைத் திட்டம் அரசின் மூலம் நடைமுறையிலில்லாத வேளையில், பல தனியார் நிறுவனங்கள் அவர்களாகவே முன்வந்து அரசின் முன் அனுமதியின்றி, எந்தவித உரிமமும் வழங்கப்படாத நிலையில், கட்டுப்பாடு இல்லாத, ஒழுங்குமுறையில்லாத இறால் பண்ணைகள் அமைத்தல் கூடாது என்றும், இறால் பண்ணைகள் வைப்பதற்கு பல்வேறு விதிமுறைகளை வைத்து விவசாயமும், விவசாய நிலங்களும், குடிநீர் நிலைகளும், நீர்ப்பாசன ஆதாரங்களும், சுற்றுப்புறச்சூழலும் பாதிக்கப்படாத வகையில் இறால் பண்ணைகளை முறைப்படுத்துதல் அவசியம் என்றும் வல்லுநர் குழு அறிக்கை சமர்ப்பித்தது. வல்லுநர் குழு அறிக்கையை அரசு தீவிரமாக ஆராய்ந்து, தமிழ்நாடு நீர்வாழ் உயிரின வளர்ப்பு (முறைப்படுத்துதல்) சட்டம், சட்டமன்றத்தில் சட்டமாக்கப்பட்டது. மேற்படி சட்டம் விவசாயிகளுக்கும், விவசாயத்தைச் சார்ந்துள்ளவர்களுக்கும் பயன்படும் வகையிலும், சுற்றுப்புறச் சூழல் பாதிக்கப்படாத வகையிலும் பல்வேறு பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது. உதாரணமாக, ஒருவர் இறால் பண்ணை அமைக்க விரும்பினால் அவர் மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சித் தலைவரை தலைவராகக் கொண்ட குழுவிற்கு விண்ணப்பிக்க வேண்டும். அவ்வாறு பெறப்பட்ட விண்ணப்பத்தை மாவட்டக் குழு, உரிமம் வழங்கப்படுவதற்கான விண்ணப்பம் சட்டத்தின் விதிமுறைகளுக்கு இணங்க உள்ளதா என்பதையும், நீர்வாழ் உயிரினம் வளர்ப்பதற்கு தகுதியான இடந்தானா என்பதையும், விவசாய பயிர் நிலங்கள் பயன்படுத்தப்படுகிறதா என்பதையும், நிலத்தடி நீர் எடுக்கப்படுவதை எதிர்நோக்கி அமைகின்றதா என்பதையும் ஆராயும். பயிர் நிலங்கள் பயன்படுத்தப்பட்டாலோ, நிலத்தடி நீர் எடுக்கப்பட்டாலோ உரிமம் வழங்குவதற்கு மீனளத் துறை ஆணையர் அவர்களுக்கு மாவட்டக் குழு பரிந்துரை செய்யாது. மேலும், சட்டத்தில் நஞ்சை நிலங்கள், இடம் விட்டு இடம் பெயரும் பறவைகளின் வழித்தடங்கள் மற்றும் இன வளர்ச்சிக்கான நிலங்கள், சரணாலயங்கள், தேசியப்பூங்காக்கள், பாதுகாக்கப்பட்ட பரப்பினங்கள், உயிரின வாழ்வுக்குரிய இயற்கைச் சூழல்களான ஒதுக்குப்புறங்கள், சமூகப் பாதுகாப்பிற்காக அல்லது வனவள உற்பத்திக்காக உட்படுத்தப்பட்ட பரப்பினங்கள், மரபு

வழியிடங்கள் அல்லது தொழுகை இடங்கள் போன்ற இடங்களில் இறால் பண்ணை அமைப்பது முழுவதுமாகவே தடை செய்யப்பட்டுள்ளன. அதேபோல கடல் நீரை ஆதாரமாகக் கொண்ட பண்ணைகளுக்கும், கழிமுக நீரை ஆதாரமாகக் கொண்ட பண்ணைகளுக்குமாக, ஒவ்வொரு பண்ணையும் எவ்வாறு அமைய வேண்டும், எவ்வளவு இடைவெளி அமைய வேண்டும் என்ற விதிமுறைகள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. அதேபோல மக்கள் வாழ்கின்ற பகுதியிலிருந்து எவ்வளவு தொலைவிற்கு மேல் இறால் பண்ணைகள் அமைக்கப்பட வேண்டும் என்றும் சட்டத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

சட்டத்தில் குறிக்கப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு மாறாக தவறான தகவல் தந்தோ, அல்லது மறைத்தோ உரிமம் பெறப்பட்டிருந்தால், அந்த உரிமத்தை அறவே நீக்கவும் சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. சட்டத்தின் விதிகளை மீறினாலும் அல்லது மீறுவதற்கு முயற்சி செய்தாலும் அது தண்டனைக்குரியதாகக் கருதப்பட்டு ரூ. 20,000/- வரை பணத்தண்டம் விதிப்பதற்கும் சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் அரசு விவசாய நிலங்களோ மற்றும் விவசாயத்தைச் சார்ந்துள்ளவர்களோ எந்த வகையிலும் பாதிக்கப்படக்கூடாது என்பதில் உறுதியாக இருப்பதோடு மட்டுமின்றி, இந்தியாவிற்கே முன்னோடியாகவும், வழிகாட்டியுமாக இருக்கின்ற ஒரு சட்டத்தை நம்முடைய தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்த நிலையில், (மேசையைத் தட்டும் ஒலி) இறால் பண்ணை அழிப்புப் போராட்டம் வருகின்ற மே திங்கள் முதல் நாள் நடத்தப்படுவதாக பத்திரிகை செய்திகள் மூலம், அதிலும் குறிப்பாக நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்தில் போராட்டம் தீவிரமாக நடைபெறும் என்று செய்திகள் வந்தது தொடர்பாக மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உத்திரவிட்டு மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களையும், என்னையும் உடனே நாகப்பட்டினத்திற்குச் சென்று அங்கு போராட்டத்தில் ஈடுபடுவதாக அறிவித்துள்ள அமைப்புகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி, அவர்களுடைய கோரிக்கைகள் என்ன என்று ஆராயும்படி ஆணை பிறப்பித்தார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆணையை ஏற்று நானும், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களும் கடந்த 25-4-1995 அன்று நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் கூட்டிய கூட்டத்தில் கிராம சுயராஜ்ஜிய இயக்கம், லாப்டி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்), ஸ்நேகா போன்ற

அமைப்புகளிலிருந்து பிரதிநிதிகள் கலந்துகொண்டு, ஆக்கப்பூர்வமான பல நல்ல கருத்துக்களைத் தெரிவித்தார்கள். மேலும், அரசு கொண்டு வந்துள்ள சட்டத்தை அவர்கள் மனமார வரவேற்றார்கள். அவ்வாறு உளமார தெரிவித்தக் கருத்துக்களுக்காக அவர்களுக்கு, மேற்சுட்டிய அமைப்புகளுக்கும், அந்த அமைப்புகளைச் சார்ந்தவர்களுக்கும், உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். எல்லா அமைப்புகளைச் சார்ந்தவர்களும் பொதுவாக கீழ்க்கண்ட கோரிக்கைகளை முன் வைத்தனர்:

பிற்பகல் 7-15

1. தமிழ்நாடு அரசு இயற்றியுள்ள நீர்வாழ் உயிரின வளர்ப்பு (முறைப்படுத்துதல்) சட்டத்தை உளமார வரவேற்கிறோம் என்றாலும் அந்த சட்டத்தின் விதிமுறைகளை முழுமையாகவும், செம்மையாகவும் உடனே நிறைவேற்றித் தர வேண்டும்.
2. விவசாய நிலங்கள், இறால் பண்ணை நிலங்களாக மாற்றப்படக் கூடாது. அரசு மற்றும் கோவில் நிலங்களில் இறால் பண்ணையாளர்கள் மேற்கொண்டுள்ள ஆக்கிரமிப்புகளை உடனே அகற்ற வேண்டும்.
3. வடிகால் பகுதிகளை ஆக்கிரமித்து இறால் பண்ணைகள் அமைக்காமல் இருக்க வழிவகைகள் செய்ய வேண்டும்.
4. தங்களுடைய குடியிருப்புகளை விட்டு, ஆதிதிராவிட மக்கள், மீனவர்கள் வெளியேற்றப்படாத வண்ணம் தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.
5. மாவட்டக் குழுவில் பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும்.
6. மீனவர்களுக்காக வழங்கப்பட்ட பட்டாக்களை இறால் பண்ணை முதலாளிகள் வாங்குவதைத் தடை செய்ய வேண்டும்.
7. இறால் பண்ணைகள் அமைப்பதாகச் சொல்லி, மரங்கள் வெட்டப்படுவதைத் தவிர்க்க வேண்டும்.
8. இறால் பண்ணைகள் மூலம் பாதிக்கப்பட்ட மக்கள் நீதி வேண்டி, நீதிமன்றத்திற்குச் செல்லுகின்ற வகையில் சட்டத்தில் வழிவகை செய்ய வேண்டும்.
9. மேங்குரோவ் காடுகள் அழிக்கப்படாமல் பாதுகாக்கப்பட வேண்டும்.
10. சுற்றுப்புறச் சூழலைக் காப்பதற்காக ஏற்பட்டுள்ள நிதி அமைப்பில் அதன் தற்போதைய உச்சபட்ச நிதியாகிய ரூ. 5000 என இருக்கும் அந்தத் தொகையை மேலும் உயர்த்த வேண்டும்.

மேற்சுட்டிய வகையில் ஆக்கபூர்வமான கருத்துக்களையும், ஆலோசனைகளையும் வழங்கி, சட்டத்தை மனமார வரவேற்கிறோம் என்று அவர்கள் கூறியதற்காகவும், வருகின்ற 1-ஆம் தேதி நடக்கவிருக்கின்ற போராட்டத்தில் தாங்கள் கலந்துகொள்ளப் போவதில்லை என்று உறுதி அளித்ததற்காகவும் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியை இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சார்பில் தெரிவிக்கின்றோம்.

இன்று மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், நாகப்பட்டினத்தில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பல்வேறு அமைப்புகளுடன் நாங்கள் நடத்திய பேச்சுவார்த்தை குறித்து எங்களையும், பிற அரசு உயர் அதிகாரிகளான தலைமைச் செயலர், பொதுத் துறைச் செயலர், உள்துறைச் செயலர், கால்நடை பராமரிப்பு மற்றும் மீனளத் துறைச் செயலர், மீனளத் துறை ஆணையர், காவல் துறை இயக்குநர், காவல் துறை கூடுதல் இயக்குநர், ஐ.ஜி. (புலனாய்வு) ஆகியோரையும் அழைத்து விவாதித்தார்கள். பேச்சு வார்த்தையில் வைத்த கோரிக்கைகளை எல்லாம் தாயுள்ளம் கொண்ட தமிழகத்தினுடைய முதலமைச்சர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கேட்டறிந்தபின்னர், விவசாயிகளுக்கோ, விவசாய நிலங்களுக்கோ, குடிநீர் நிலைகளுக்கோ, குடியிருப்புப் பகுதிகளுக்கோ, நீர்ப்பாசன ஆதாரங்களுக்கோ அல்லது வடிகால் பகுதிகளுக்கோ, மேங்குரோவ் வனப் பகுதிகளுக்கோ அல்லது சுற்றுப்புறச் சூழலுக்கோ எந்தவித தீங்கும் விளையக்கூடாது என்பதில் உறுதியாக இருக்க வேண்டும் எனவும் தவறு செய்பவர்கள் மீது அவர்களுடைய தவறுகளைத் திருத்தி வழிப்படுத்தவும்; மீறி தவறு செய்பவர்கள் மீது கடுமையான தண்டனை அளிக்கப்படவும் வேண்டும் என்றும் நம்முடைய இதயதெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள் என்பதை இந்த மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) விவசாய நிலங்களுக்கும், அதைச் சார்ந்த பிற இடங்களுக்கும் தீங்கு நேராத வகையிலும், மக்களை இறால் பண்ணைகளால் பாதிக்கப்படாத வகையில் பாதுகாப்பதற்கும் தேவையான சார்பு விதிகளை உடனே இயற்றி, அவை வருகின்ற 3-ஆம் தேதி முதல் அமல்படுத்தப்பட வேண்டுமென்று ஆணை பிறப்பித்துள்ளார் என்பதை இந்த மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆணைப்படி தமிழ்நாடு நீர்வாழ் உயிரின வளர்ப்பு (முறைப்படுத்துதல்) சட்டம் மற்றும் விதிகள் வருகின்ற மே திங்கள் 3-ஆம் தேதி முதல் உடனே அமலுக்கு வரும் என்று மகிழ்ச்சியுடன்

தெரிவித்துக்கொள்கிறேன். அரசின் வேண்டுகோளை ஏற்று இறால் பண்ணை போராட்டத்தில் பங்குகொள்ளப் போவதில்லை என்று உறுதி அளித்த கிராம சுயராஜ்ஜிய இயக்கம், லாப்டி இயக்கம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) மற்றும் ஸ்நேகா முதலிய அமைப்புகளுக்கும் அரசின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, அமர்கிறேன்.

## 5. மானியக் கோரிக்கைகள், 1995-96 விவாதமும் வாக்கெடுப்பும் - தொடர்ச்சி.

### (இ) கோரிக்கை எண்.29 - சமூக நலன்--தொடர்ச்சி.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* திரு. தம்புசாமி, திரு. பழனிசாமி, நல்லதுதானே ! (குறுக்கீடு) மகிழ்ச்சி. திரு. தா. வேடியப்பன், சுருக்கமாகப் பேசி முடியுங்கள்.

*பிற்பகல் 7-20*

*திரு. தா. வேடியப்பன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதயதெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி இருக்கும் திசை நோக்கி வணங்கி, இந்த சமூகநலத்துறை மானியக் கோரிக்கையை வரவேற்றுப் பேசுவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். இந்தத் துறையைப் பார்க்கும் முகத்தான், இந்தியாவிலேயே சிறப்பான முறையில் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் அரசின் சமூக நலத்துறைதான் சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதனைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். எந்த ஒரு ஆட்சிக்காலத்திலும் இல்லாத அளவுக்கு வெளிமாநிலத்தில் உள்ளவர்கள் எல்லாம் புரட்சித் தலைவி அவர்களின் திட்டங்களைப் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள். புரட்சித் தலைவி அவர்களின் திட்டங்கள் எல்லாம் வெளிமாநிலங்களால் பின்பற்றப்படும் வகையில், வெளிமாநிலங்கள் எல்லாம் இதுபோன்ற திட்டங்களுக்கு நிதி ஒதுக்கும் வகையில், புரட்சித்தலைவி ஆட்சியிலே சமூகநலத்துறையை ஊக்குவித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில், நம்முடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவிக்கு கேரள மாநிலத்தின் சீரிய தொண்டு நிறுவனமான இந்திய விடுதலைப் போராட்ட வீரர் ஸ்ரீதர் தொண்டு நிறுவனத்தின் சார்பிலே, புரட்சித்தலைவிக்கு ராஷ்டிரீய பீஷ்மாச்சாரியா பட்டம் வழங்கியதைப் பார்த்தால், மற்றும் அன்னை தெரசா அவர்கள் வந்து பாராட்டியதைப் பார்த்தால், டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் சமூக நலத்துறை மூலம்,

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* ஆனால் மேஜையைத் தட்டுவதைப் பொறுத்தவரையில், இதுவரைக்கும் தட்டியதைப் போல் தட்டவில்லை. அதற்கு நான் உங்களுக்கு நன்றி சொல்கிறேன்.

இரவு 9-20

## (ஈ) கோரிக்கை எண் 28 - தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும்

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மானியக் கோரிக்கை எண். 28, தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும், வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஆர். சிங்காரம்.

*திரு. ஆர். சிங்காரம் :* இல்லை.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* திரு. ஆர். சிங்காரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.71,38,41,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

## 7. அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்) கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு 1995

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்). 1995-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/1995). மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/1995) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும் "*

எனக்கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து கூட்டுறவுச் சங்கத்தினுடைய தனி அதிகாரிகளின் நியமனத்தைக் கூட்டிக்கொண்டே போவது என்பது ஜனநாயக முறைப்படி அந்தத் தேர்தலை நடத்துவதற்குத் தயாராக இல்லை என்பதைக் காட்டுகிறது. ஆகவே தொடர்ந்து இப்படி தனி அதிகாரிகளின் நியமனத்தை நீட்டிக்கின்ற இந்தச் சட்டம் கொண்டுவருவதை நான் ஆட்சேபித்து வெளிநடப்பு செய்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர், திரு. வே. தம்புசாமி வெளிநடப்புச் செய்தார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதற்காகத்தான் இவ்வளவு நேரமாக உட்கார்ந்துகொண்டிருந்தீர்களா ? (சிரிப்பு) திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய கூட்டுறவுத் துறை அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்தச் சட்டத்தை அவர்கள் இதுவரையில் இந்த மாமன்றத்தில் சொன்ன காரணங்களை முன்னிட்டு, வழக்குகள் கோர்ட்டிலே இருக்கின்ற காரணத்தினாலே இந்தச் சட்டத்திலே கூட்டுறவுச் சங்கங்களுடைய ஸ்பெஷல் ஆபிசர் பதவியை நீட்டிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கின்ற காரணத்தினாலே, நிர்வாக சவுகர்யத்தை முன்னிட்டு நீட்டிக்கின்ற இந்தச் சட்டத்தை நான் காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக மனப்பூர்வமாக வரவேற்று அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கா.ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தருமாறு வேண்டுகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அவர் ஏதோ காரணத்தைச் சொல்லிவிட்டுப் போயிருக்கிறார். அதற்கு ஏதேனும் சொல்ல விரும்புகிறீர்களா ? அப்படியிருந்தால் சொல்லலாம்.

**மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் வெளிநடப்புச் செய்துவிட்ட காரணத்தாலே அதற்குப் பதில் சொல்லத் தேவையில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : வெளிநடப்புச் செய்தாலும் ஒரு காரணத்தைச் சொல்லிவிட்டுத்தான் வெளிநடப்புச் செய்திருக்கிறார்.

**மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன்** : அதற்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் பல முறை இந்த மாமன்றத்திலே சொல்லியிருக்கிறேன். நீதிமன்றங்களில் வழக்குகள் இருக்கின்ற காரணத்தினாலே, அதாவது ஆரம்ப கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடைபெற்றால்தான் அடுத்தபடியாக அதற்கு மேலேயிருக்கிற கூட்டுறவுச் சங்கங்களுக்கும், அதற்கு மேலேயிருக்கின்ற மூன்றாவது தட்டிலே இருக்கின்ற கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தேர்தல் நடைபெறமுடியும். ஆகவே ஆரம்ப கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தல் முடிகின்ற வரையில் மேல் மட்டங்களிலே இருக்கின்ற அந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தேர்தலை நடத்த முடியாது. ஆரம்ப கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடத்தவேண்டுமென்றால், நீதிமன்றங்களிலே இருக்கின்ற வழக்குகள் முடிவு பெற வேண்டும். அந்த வழக்குகள் அங்கே நிலுவையிலே இருக்கின்ற காரணத்தினாலே, அதுவரையிலே தடையாணை இருக்கிறது என்பதை நான் இந்த மாமன்றத்திலேயே பல முறை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அந்த தடையாணைகள் உடைக்கப்படுகின்ற வரையிலே, கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தல் நடைபெறுகின்ற வாய்ப்பில்லை. என்றாலும் இந்த அரசைப் பொறுத்தமட்டிலே எந்த நேரத்திலும் தேர்தலை நடத்துவதற்குத் தயாராக இருக்கிறோம். எந்தவிதமான நிலைமையிலும் இந்தத் தேர்தல் நடப்பதற்கு நாங்கள் எல்லாவிதமான ஏற்பாடுகளையும் எடுத்துக் கொண்டிருக்கிறோம். நீதிமன்றங்களிலே அதற்கான எல்லாவிதமான மனுக்களையும் போட்டு அந்தத் தடையாணைகளை சீக்கிரமாக விடுவிப்பதற்கான முயற்சிகளையும் எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித்தர வேண்டுகிறேன்.

இரவு 9.25

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1995-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/1995) நிறைவேற்றப்பெற வேண்டும் "

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

*சட்டமுன் வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)*

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை *(28-4-1995)* காலை *10-00* மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர் பேரவை பிற்பகல் 9-26 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

*117. 1993-94-ஆம் ஆண்டு தமிழ்நாடு சரிகை லிமிடெட்டின் இருபத்திரெண்டாவது ஆண்டறிக்கை (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).*

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*144. கோரிக்கை எண் 29 - சமூக நலம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1995-96. (தமிழ், ஆங்கிலம்).*

*145. சமூக நலம் பற்றிய செயல்முறைத் திட்டம், 1995-96. (ஆங்கிலம்)*

*146. மானியக் கோரிக்கை எண் 28 - தொழிலாளர், தொழிற்சாலை மற்றும் வேலைவாய்ப்புப் பயிற்சிப் பற்றிய ஆய்வு மற்றும் கொள்கை விளக்கக் குறிப்பு, 1995-96 (ஆங்கிலம்).*

*147. மானியக் கோரிக்கை எண் 28 - தொழிலாளர் தொழிற்சாலை மற்றும் வேலைவாய்ப்பு பயிற்சிப் பற்றிய ஆய்வு மற்றும் கொள்கை விளக்கக் குறிப்பு, 1995-96 (தமிழ்).*

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

*சட்டமுன் வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)*

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (28-4-1995) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர் பேரவை பிற்பகல் 9-26 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

*117. 1993-94-ஆம் ஆண்டு தமிழ்நாடு சரிகை லிமிடெட்டின் இருபத்திரெண்டாவது ஆண்டறிக்கை (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).*

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*144. கோரிக்கை எண் 29 - சமூக நலம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1995-96. (தமிழ், ஆங்கிலம்).*

*145. சமூக நலம் பற்றிய செயல்முறைத் திட்டம், 1995-96. (ஆங்கிலம்)*

*146. மானியக் கோரிக்கை எண் 28 - தொழிலாளர், தொழிற்சாலை மற்றும் வேலைவாய்ப்புப் பயிற்சிப் பற்றிய ஆய்வு மற்றும் கொள்கை விளக்கக் குறிப்பு, 1995-96 (ஆங்கிலம்).*

*147. மானியக் கோரிக்கை எண் 28 - தொழிலாளர் தொழிற்சாலை மற்றும் வேலைவாய்ப்பு பயிற்சிப் பற்றிய ஆய்வு மற்றும் கொள்கை விளக்கக் குறிப்பு, 1995-96 (தமிழ்).*

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன் வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (28-4-1995) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 9-26 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

*117. 1993-94-ஆம் ஆண்டு தமிழ்நாடு சரிகை லிமிடெட்டின் இருபத்திரெண்டாவது ஆண்டறிக்கை (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).*

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*144. கோரிக்கை எண் 29 - சமூக நலம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1995-96. (தமிழ், ஆங்கிலம்).*

*145. சமூக நலம் பற்றிய செயல்முறைத் திட்டம், 1995-96. (ஆங்கிலம்)*

*146. மானியக் கோரிக்கை எண் 28 - தொழிலாளர், தொழிற்சாலை மற்றும் வேலைவாய்ப்புப் பயிற்சிப் பற்றிய ஆய்வு மற்றும் கொள்கை விளக்கக் குறிப்பு, 1995-96 (ஆங்கிலம்).*

*147. மானியக் கோரிக்கை எண் 28 - தொழிலாளர் தொழிற்சாலை மற்றும் வேலைவாய்ப்பு பயிற்சிப் பற்றிய ஆய்வு மற்றும் கொள்கை விளக்கக் குறிப்பு, 1995-96 (தமிழ்).*

# இணைப்பு-I

*(238 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## அத்தியாயம்-1

## முன்னுரை

'சமுதாய மறுமலர்ச்சிக்கு கல்வி ஒன்றே சிறந்த சாதனம்' என்பது நம் தேசத் தந்தை காந்தியடிகளின் கூற்று. தமிழக அரசு தன் வரவு-செலவு திட்டங்களில் உயர்ந்த ஒரு முன்னுரிமையை கல்விக்கே தொடர்ந்து வழங்கி வருகிறது. தேசிய அளவில் பரிந்துரைக்கப்பட்டதும் புறஅமைப்புகளின் நிதி உதவியுடன் மேற்கொள்ளப்படுவதுமான திட்டங்களைச் செயல்படுத்துதலில் தமிழகம் முன்னணியில் இருந்து வருகிறது. மேலும் நம் மாநிலத்தில் மட்டுமே செயல்படுகிற புதுமையான சில செயல்திட்டங்களும் உள்ளன.

நம் கல்விப்பணிகளில் சீரிய பல கூறுகள் உள. குறிப்பாக, அனைத்து நிலைகளிலேயும் கல்வியின் தரத்தை மேம்படுத்துதல், கல்வி நிறுவன அமைப்புகளுக்கு புத்துயிர் வழங்கல், பல்லாயிரக்கணக்கான ஆசிரியப்பெருமக்கள் தத்தம் பணிப்பொறுப்புகளை உணரும் வண்ணமும், அப்பணியினை அவர்கள் உளமாற நிறைவேற்றும் வகையிலும் சிறந்த மனப்பான்மைகளை அவ்வப்போது வழங்கல், நல்லாசிரியர்களுக்கு விருதுகளும், பாராட்டுகளும் வழங்கி கல்வித் துறையில் பரவலாக ஒரு ஊக்க நிலையை உருவாக்குதல் ஆகியவை அவற்றின் சில பரிமாணங்களாகும்.

கல்வியில் நடைமுறையிலிருக்கும் திட்டங்கள் மட்டுமன்றி புதிதாக நாம் இனம் காணும் தேவைகளையும் ஒட்டி நம்முடைய பணிநிரலை வடிவமைக்கிறோம்.

பள்ளியில் பாடச்சுமையை குறைப்பது குறித்து 'யாஷ்பால்' குழு வழங்கிய பரிந்துரைகள் மற்றும் குறைந்த பட்ச கற்றல் இலக்குகள் (Minimum Levels of Learning-M.L.L.) அணுகுமுறை ஆகியவற்றின் அடிப்படையில் பள்ளிப் பாடத்திட்டம் மாற்றி அமைக்கப்படுகிறது. படிப்படியாக நடைமுறைப்படுத்தப்படவிருக்கும் இப்புதிய பாடத்திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு புதிய கூறு "பள்ளி ஆயத்தத் திட்டம்" (School Readiness Programme) பாட ஏற்பாட்டினோடு இணைத்துத் தரப்படும். இத்திட்டம் நம் கல்வி சீர்திருத்தப் பணிகளில் காலப்போக்கில் பயன்தரக்கூடிய ஒரு முயற்சியாகும்.

கி.பி. 2000 ஆண்டிற்குள் 'அனைவர்க்கும் கல்வி' என்ற சீரிய இலக்கினை (Universalisation of Primary Education) நம்முடைய அரசு

ஏற்றுக் கொண்டுள்ளது. குழந்தை நலத்திற்காக, நம்முடைய மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் 15-அம்சச் செயல் திட்டத்தில் 8-வது திட்டமாக இது வற்புறுத்தப்படும். இத்திட்டத்திற்கு ஏற்ப வேறுபல செயல்திட்டங்களும் கொள்கை முடிவுகளும் அமைந்துள்ளன.

தேசத்தந்தை எதிர்பார்த்திருந்த வகையில், நம் கல்வித் திட்டம் எப்போதும் செயல்துடிப்போடும் தேவைகளுக்கு ஏற்ப நெகிழ்ந்து கொடுக்கக்கூடியதுமான தன்மையில் அமைதல் அவசியம். இந்த வகையில், நிதி நெருக்கடி நிலையையும் பொருட்படுத்தாமல், தேவையான நிதி ஒதுக்கீடுகளோடும், கொள்கை முயற்சிகளோடும் இந்த அரசு கல்வியின் பலவகைப் பிரிவுகளிலும் நீடித்த ஒரு முன்னேற்றத்தை ஏற்படுத்தி வருகின்றது.

## மாநில வரவு - செலவு திட்டத்தில் கல்வி குறித்தச் செலவு

மானியக் கோரிக்கை 17 "கல்வி" என்ற தலைப்பின் கீழ் மூலதனச் செலவு ரூ. 2,233.17 கோடியாகும். இதில் ரூ. 133.17 கோடி திட்டப் பணிகளுக்கானதாகும். இது மாநிலத்திலுள்ள ஒவ்வொரு குடும்பத்திலும் கல்வி என்ற ஒளி விளக்கை ஏற்றுவதற்கு அரசு பொறுப்பேற்றிருப்பதைக் காட்டுகிறது. மேற்குறிப்பிட்ட மூலதன ஒதுக்கீடு 1994-95-இல் ஒதுக்கப்பட்ட (ரூ.2002.46 கோடி) தொகையை விட ரூ. 230.71 கோடி அதிகமாகும். வருவாய் கணக்கின் பேரிலான மொத்தச் செலவான ரூ. 9,910.62 கோடியில் மூலதனச் செலவு 22.53 % எனக் கணக்கிடப்படுகிறது.

1. மேலே குறிப்பிட்டவாறு 1995-96-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் "புதிய திட்டங்கள்" கொண்டு வரப்பட்டுள்ளன. சிலத் திட்டங்களுக்கு ஏனைய துறைகளில் வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடுகளிலிருந்து பின்வரும் பக்கங்களில் விவரித்துக் கூறியுள்ளபடி, நிதியுதவி அளிக்கப்பட்டு வருகின்றன.

## 1995-96 ஆம் ஆண்டு செலவுத் திட்ட மதிப்பீடு

| கணக்குத் தலைப்பு (1) | திட்டப்பணி (2) | திட்டத்தில் சேராதது. (3) | மொத்தம். (4) |
|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 2059 அரசுப் பள்ளிகள், கல்லூரிகள் முதலியவற்றின் கட்டடங்கள் பராமரித்தலும், செப்பனிடுதலும் .. | | 10,56.51 | 10,56.51 |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 2202 பொதுக் கல்வி | | | |
| 01. தொடக்கக் கல்வி | 47,83.91 | 9,67,61.48 | 10,15,45.39 |
| 02. இடைநிலைக் கல்வி | 28,10.10 | 7,22,55.99 | 7,50,66.09 |
| 03. பல்கலைக்கழகக் கல்வியும் உயர்கல்வியும் | 3,74.21 | 2,09,54.12 | 2,13,28.33 |
| 04. முதியோர் கல்வி | 21,49.59 | 19.09 | 21,68.68 |
| 05. மொழி வளர்ச்சி | 0.27 | 1,97.75 | 1,98.02 |
| 80. பொதுவானவை-ஏனைய செலவு | 0.01 | 30,00.00 | 30,00.01 |
| மொத்தம்-பொதுக்கல்வி | 1,01,18.09 | 19,31,88.43 | 20,33,06.52 |
| 2203 தொழில் நுட்பக் கல்வி | 8,94.58 | 57,02.98 | 65,97.56 |
| 2204 விளையாட்டுகளும்-இளைஞர் நலனும் | 8,27.15 | 8,06.46 | 16,33.61 |
| 2205 கலையும் பண்பாடும் பொது நூலகங்கள், ஆவணக் காப்பகங்கள் | 68.62 | 15,73.01 | 16,41.63 |
| 2225 ஆதி திராவிடர்/பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்-பட்டோர் நலன் | 8,50.00 | 8.97 | 8,58.97 |
| 2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் | 2,50.00 | 10.54 | 2,60.54 |
| 2351 மலைப்பிரதேச மேம்பாடு | 0.01 | .. | 0.01 |
| 3425 அறிவியல் பணிகளும் ஆராய்ச்சியும் | 252.00 | .. | 252.00 |
| 3454 மக்கள் தொகை கணக்கெடுப்பு ஆய்வு புள்ளியியல் விவரம் | 12.13 | .. | 12.13 |
| 4202 மூலதன ஒதுக்கீடு மற்றும் பள்ளிக் கட்டடம் | 17,60.24 | 1.98 | 17,62.22 |
| திருப்பி வசூலிக்கப்பட்டவை | 44.85 | 76,52.79 | 76,97.64 |
| மொத்த மானியம் | 1,33,17.43 | 20,99,99.69 | 22,33,17.12 |
| கோரிக்கை எண் 17 கல்வி | | | |

2. இவை தவிர கல்விக் கட்டடங்கள் முதலியவற்றிற்கான மானியக் கோரிக்கைகளில் 1995-96 இல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அவ்விவரம் வருமாறு:

| கணக்குத் தலைப்பு | 1995-96ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு | | |
|---|---|---|---|
| | திட்டத்தில் சேர்ந்தவை. | திட்டத்தில் சேராதவை. | மொத்தம் |
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| ஏ. வருவாய்க் கணக்கிற்கு உட்பட்ட செலவு | | | |
| **மானியக் கோரிக்கை எண் 27** | | | |
| சமுதாய மேம்பாடு, சமூகக் கல்வி | 32.89 | .. | 32.89 |
| **மானியக் கோரிக்கை எண். 36** | | | |
| பொதுப்பணிகள், அரசினர் பள்ளிகள், கல்லூரிகளுக்கான கட்டடங்கள் -சிறு பணிகள் | 6.00 | 16.80 | 22.80 |
| **மானியக் கோரிக்கை எண். 41** | | | |
| 2071 அரசு மானியம் பெறுகின்ற உள்ளாட்சி அமைப்பின் கீழ் வருகின்ற கல்வி நிலையங்களில் பணியாளர்களுக்கு ஓய்வூதியம் | .. | 1,44,24.24 | 1,44,24.24 |
| பி. வருவாய் கணக்கிற்கு உட்படாத செலவு | | | |
| **மானியக் கோரிக்கை எண். 55** | | | |
| 4202 கல்வி, கலை, பண்பாடு குறித்த மூலதனச் செலவு, அரசினர் கல்வி நிலையங்களுக்குக் கட்டடங்கள் | 17,60.24 | 1.98 | 17,62.22 |
| **மானியக் கோரிக்கை எண். 61** | | | |
| 6202 கடன் அடிப்படையில் வழங்கப்பட்ட தேசியப் படிப்புதவித் தொகையும் தொழில் நுட்பக் கல்வி மாணவர்களுக்கு கடனும் | 25.01 | 0.06 | 25.07 |
| 7615 மானிய உதவி பெறும் கல்வி நிலையங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்குக் கடன்கள் | .. | 8.75 | 8.75 |
| மொத்தம் | **18,24.14** | **1,44,51.83** | **1,62,75.97** |

மேற்கூறிய ஒதுக்கீடுகள் அனைத்தையும் கணக்கில் எடுத்துக் கொண்டால் கல்வி குறித்தச் செலவு 1995-96—இல் ரூ. 2,395.93 கோடிக்கு மிகையாக இருக்கும்.

மேலேக் குறிப்பிட்டக் கணக்கில் ஆதி திராவிடர் பிற்பட்ட வகுப்பினருக்கான பள்ளிகள், விடுதிகளுக்கான ஒதுக்கீடுகள், ஆதி திராவிடர்கள், பழங்குடியினர், பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் ஆகியோருக்கான படிப்புதவித் தொகைகள், சீர்திருத்தப் பள்ளிகள், உடல் ஊனமுற்றோருக்கான பள்ளிகள், தொழிற் பயிற்சி நிலையங்கள் முதலியவற்றிற்கான நிதி ஒதுக்கீடும் மற்றும் மருத்துவக் கல்வி, வேளாண்மைக் கல்வி, கால்நடைக் கல்வி ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீடும் அடங்காது.

## 1995-96இல் கல்விப் பணித் திட்டங்கள் குறித்த நிதி ஒதுக்கீடு

*1995-96இல் கல்வி குறித்த பல்வேறு துறைகளுக்காகும் திட்டச் செலவு (2202 பொதுக் கல்வி, 4202 கல்வி குறித்த மூலதன ஒதுக்கீடு 6202 கடன்கள் முதலிய அனைத்துத் தலைப்புகளின் கீழ்) வருமாறு :*

*(+ குறியீடு உள்ள தொகை நடுவண் அரசு பொறுப்பேற்கும் திட்டங்களுக்கான செலவைக் குறிக்கும்)*

| கணக்குத் தலைப்பு | ஏற்றுக்கொள்ளப் பட்டது. | புதிய திட்டங்கள் 1995-96-இல் அனுமதிக்கப்பட்டது. | மொத்தம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| I. பொதுக்கல்வி | | | |
| (i) தொடக்கக் கல்வி | 57,71.18 | 2,18.37 | 59,89.55 |
| | +0.03 | .. | +0.03 |
| (ii) பள்ளிக் கல்வி | 20,53.22 | 5,87.86 | 26,41.08 |
| | +962.51 | .. | +962.51 |
| (iii) ஆசிரியர் கல்வி மற்றும் ஆராய்ச்சி | 57.70 | 25.00 | 82.70 |
| | +5,50.13 | .. | +5,50.13 |
| (iv) முதியோர் கல்வி | 19,36.14 | .. | 19,36.14 |
| | +2,06.55 | .. | +2,06.55 |
| (v) பல்கலைக் கழகக் கல்வியும் உயர்கல்வியும் | 5,64.49 | 72.50 | 6,36.99 |
| | .. | .. | .. |

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

| கணக்குத் தலைப்பு | ஏற்றுக்கொள்ளப் பட்டது. | புதிய திட்டங்கள் 1995-96-இல் அனுமதிக்கப்பட்டது. | மொத்தம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| II. தொழிற் கல்வி | 14,86.51 | 76.11 | 15,62.62 |
| | +5.86 | .. | +5.86 |
| III. விளையாட்டும், இளைஞர் நலனும் | 32,53.50 | 32.50 | 32,86.00 |
| | +1,47.30 | .. | +1,47.30 |
| IV. கலை, பண்பாடு, கல்வி, ஆவணக் காப்பகம், பொது நூலகம் | 1,19.49 | 16.52 | 1,36.01 |
| | +0.07 | .. | +0.07 |
| V. அறிவியல் பணிகளும் ஆராய்ச்சியும் | 2,51.99 | 44.50 | 2,96.49 |
| | +22.00 | .. | +22.00 |
| மொத்தம் | **1,54,94.22** | **10,73.36** | **1,65,67.58** |
| | **+18,94.45** | .. | **+18,94.45** |

## 1995-96-க்கான புதிய திட்டங்கள்

### (1) 305 புதிய இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் தோற்றுவித்தல்

கல்வியின் தரத்தினை மேம்படுத்தவும் 6-11, 11-14 வயது மாணவர்களின் கூடுதல் சேர்க்கையின் காரணமாகவும், அரசு 305 இடைநிலை ஆசிரியர் பணியிடங்களைத் தோற்றுவிக்க முடிவு செய்துள்ளது. இத்திட்டத்திற்காக 1995-96 வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 1,07.48 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### (2) இடைநிலை ஆசிரியர் பணியிடங்களை பி.டி. தகுதிபெற்ற தலைமை ஆசிரியர்ப் பணியிடங்களாக உயர்த்துதல்

ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிகளுக்கு பி.டி. தகுதி பெற்ற தலைமை ஆசிரியர்கள் தேவை என்பதைக் கருத்திற்கொண்டு, 25 இடைநிலை ஆசிரியர் பணியிடங்களை, பி.டி. தலைமை ஆசிரியர்ப் பணியிடங்களாக உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கென 1995-96ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 2.01 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (3) 25 தமிழ் ஆசிரியர் பணியிடங்கள் ஏற்படுத்துதல்

ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளுக்கென தமிழ் ஆசிரியர் தேவையைக் கருதி, 25 தமிழ் ஆசிரியர் பணியிடங்களை ஏற்படுத்த (பி.டி. தகுதி) அரசு உத்தேசித்துள்ளது. இதற்கென 1995-96 வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 12.97 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### (4) புதிதாக 100 தொடக்கப் பள்ளிகளைத் தோற்றுவித்தல்

500க்கு மேற்பட்ட மக்கள் தொகையும், 1 கி.மீ. தூரத்திற்கிடையே தொடக்கப்பள்ளிகளோ, நடுநிலைப்பள்ளிகளோ இல்லாத கிராமங்களில் புதிதாக தொடக்கப்பள்ளிகளை ஏற்படுத்துவது அரசின் கொள்கை முடிவு ஆகும். குக்கிராமங்களில் வாழும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனைக் கருத்தில் கொண்டும், பெருகிவரும் மகளிரின் எண்ணிக்கையைக் கருதியும், அரசு புதியதாக 100 தொடக்கப் பள்ளிகளைத் தோற்றுவிக்க உள்ளது. இதற்கென 1995-96 வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 35.22 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### (5) 25 தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக உயர்த்துதல்

எல்லோருக்கும் தொடக்கக் கல்வி என்ற குறிக்கோளின்படியும், இடையில் படிப்பை நிறுத்துவோரின் எண்ணிக்கையை குறைக்கவும், பள்ளியிலுள்ள மாணவர் எண்ணிக்கையை நிலைநிறுத்தவும், 25 ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக உயர்த்த அரசு திட்டமிட்டு, இதற்கென 1995-96 வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 8.81 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்துள்ளது.

### (6) 541 நடுநிலைப் பள்ளிகளுக்கு கழிப்பிடக் கட்டடம் கட்டுதல்

அடிப்படை வசதிகளில் கழிப்பிட வசதி மிக முக்கியமான ஒன்று. முதலமைச்சரின் சிறப்புத் திட்டத்தின் கீழ், 1994-95-ல் 2532 நடுநிலைப் பள்ளிகளில் கழிப்பிட வசதி அமைக்கப்பட்டுள்ளது. 1995-96-இல் 541 நடுநிலைப் பள்ளிகளில் கழிப்பிட வசதி ஏற்படுத்தப்படும். இத்திட்டத்திற்காக 1995-96 வரவு செலவு திட்டத்தில் ரூ. 54.10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (7) 40 ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை அரசு உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்துதல்

ஒவ்வொரு 5 கி.மீ. எல்லைக்குள் ஒரு உயர்நிலைப் பள்ளி இருக்க வேண்டும் என்ற கருத்தில், 40 ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை

அரசு உயர்நிலைப் பள்ளிகளாக மேம்படுத்த அரசு தீர்மானித்துள்ளது. இதற்கென 1995-96 வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 60.41 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### (8) 30 அரசு உயர்நிலைப் பள்ளிகளை, மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்துதல்

கிராமப் புறங்களில் வாழும் அனைத்து மாணவர்களுக்கும் மேல்நிலைக் கல்வி வசதி கிடைக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தின் அடிப்படையில் 30 அரசு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்த அரசு திட்டமிட்டுள்ளது. இதற்கென 1995-96 வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 86.04 லட்சம் நிதியொதுக்கம் உள்ளது.

### (9) 25 இடைநிலை ஆசிரியர் பணியிடங்களைத் தோற்றுவித்தல்

11 முதல் 14 வயதுள்ள மாணவர் சேர்க்கை எண்ணிக்கை சீராகக் கூடி உள்ளதால் அரசு மேல்நிலை/உயர்நிலைப் பள்ளிகளுக்கு 25 இடைநிலை ஆசிரியர் பணியிடங்களை கூடுதலாக வழங்க அரசு திட்டமிட்டுள்ளது.

### (10) 25 பி.டி., தகுதி ஆசிரியர் பணியிடங்கள் தோற்றுவித்தல்

14 முதல் 16 வயதுள்ள மாணவர்களின் சேர்க்கை கூடுதலாக இருப்பதாலும், கல்வியின் தரத்தினை உயர்த்தும் பொருட்டும், 25 பி.டி., தகுதி ஆசிரியர்ப் பணியிடங்களை கூடுதலாக வழங்க அரசு திட்டமிட்டுள்ளது. இதற்கென 1995-96 வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 10.81 இலட்சம் ஒதுக்கீடுச் செய்யப்பட்டுள்ளது.

### (11) பள்ளிக் கட்டடங்கள் கட்டுதல்

1995-96-ல் அரசு மேல்நிலைப்பள்ளி/உயர்நிலைப் பள்ளிகளுக்குத் தேவையான கட்டடங்கள் கட்ட ரூ. 1,50 லட்சம் வழங்க அரசு திட்டமிட்டுள்ளது. பள்ளிகளை மேம்படுத்தும் பணியில் சமுதாயத்தினரின் பங்கினை ஊக்குவிப்பது அவசியம் என்பதால் கட்டடம் கட்ட ஆகும் செலவில் 50 சதவீத அளவை அரசு வழங்கும். இதற்கென ரூ. 3,00 லட்சம் வழங்க முடியுமென அரசு கருதுகிறது.

**(12) உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் அறிவியல் ஆய்வுக் கூடம் அமைத்தல்**

உயர்நிலைப் பள்ளிகளில் அறிவியல் ஆய்வுக்கூடம் ஏற்படுத்தும் நோக்கத்தில் மொத்தமுள்ள 1,589 உயர்நிலைப் பள்ளிகளில் 1,174-இல் அறிவியல் ஆய்வுக்கூடம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் 30 அரசு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் அறிவியல் ஆய்வுக்கூடங்கள் அமைக்கவும், அறிவியல் உபகரணங்கள் வழங்கவும், 1995-96 வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 60 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(13) உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கு கழிப்பறைக் கட்டடங்கள் கட்டுதல்**

3,163 பள்ளிகளுக்கு கழிப்பறைக் கட்டட வசதிகள் ஏற்படுத்தித்தர வேண்டியதிருந்தாலும், முதற் கட்டமாக 1,967 அரசு பெண்கள் உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கு இந்த வசதியினை ஏற்படுத்த அரசு முடிவு செய்தது. இதில் 665 அரசு பெண்கள் உயர்நிலை/மேல்நிலைப்பள்ளிகளில், 1994-95-ஆம் ஆண்டில் ரூ. 4 கோடியில் கழிப்பிட வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும் 655 பெண்கள் பள்ளிகளுக்கு 1995-96-ல் இவ்வசதி அளிக்கப்படும். இதற்கென ரூ. 2 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(14) குறைந்தபட்ச கற்றல் இலக்குகளில் ஆசிரியர் பயிற்சித் திட்டம்**

எல்லோருக்கும் ஆரம்பக் கல்வியை அளிக்கவேண்டும் என்ற கொள்கைச் செயல்பாடுகளில், ஒவ்வொரு பாடத்திலும் குறைந்தபட்ச கற்றல் அறிவை ஊட்டவேண்டியதும் ஒன்றாகும். இத்திட்டத்தில் தொடக்கக்கல்வி ஆசிரியர்களை முதற்கண் உட்படுத்தவேண்டிய திருப்பதால் அவர்களுக்கு குறைந்தபட்ச கற்றல் இலக்குகளைப் பற்றிய புரிந்துணர்வை ஊட்டுவதும் அதற்கான பயிற்சிகளை அளிப்பதும், மேற்காண் பயிற்சியாளர்களுக்குரிய பயிற்சியை வழங்குவதும் அவசியம் ஆகும். இத்திட்டத்திற்கென 1995-96 வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(15) அரசுத் தேர்வுகள் இயக்ககத்தில் இருக்கும் பழைய ஊர்திகளுக்குப் பதில் புதிய ஊர்திகள் வாங்குதல்**

ரூ. 5.70 இலட்சம் மதிப்பீட்டில் அரசு தேர்வுகள் துறைத் தலைவருக்கு மாருதி கார் வாங்கவும் பழைய ஊர்திக்குப் பதிலாக புதிய (டெம்போ

டிராவலர் வேன்) ஊர்தி வாங்கவும் அரசுத் தேர்வுகள் இயக்குநருக்கு அரசு அனுமதி அளித்துள்ளது.

**(16) முதல் (18). மின் தட்டச்சு, ஜெராக்ஸ் இயந்திரம், கணிப்பான் வழங்குதல்**

அரசுத் தேர்வுகள் இயக்ககத்தின் உபயோகத்திற்காக 1995-96-ல் ரூ. 1.10 இலட்சத்தில் ஒரு ஜெராக்ஸ் இயந்திரம், ரூ. 40,000-ல் ஒரு மின்தட்டச்சு மற்றும் ரூ. 3 இலட்சத்தில் ஒரு கணிப்பான் ஆகியவற்றை வாங்க அரசு உத்தேசித்துள்ளது.

**(19) அரசுத் தேர்வுகள் இயக்ககச் சுற்றுப்புறச் சுவர் எழுப்புதல்**

இடைநிலைக் கல்விச் சான்றிதழ் பொதுத்தேர்வு, மேல்நிலைத் தேர்வு, மெட்ரிகுலேஷன் தேர்வு, ஆங்கிலோ இந்திய இடைநிலைக் கல்விச் சான்றிதழ் பொதுத்தேர்வு ஆகிய தேர்வுகள் உள்பட 45 தேர்வுகளை அரசுத் தேர்வுகள் துறை நடத்தி வருகிறது. தேர்வுகள் பற்றிய விவரங்கள் மிகுந்த கவனத்துடன் இயக்ககத்தால் பாதுகாக்கப்பட வேண்டியுள்ளதால், 1995-96-ல் ரூ. 1.60 இலட்சம் மதிப்பீட்டில் வளாகத்தைச் சுற்றி ஒரு மதில்சுவர் கட்ட அரசு தீர்மானித்துள்ளது.

**(20) பர்கூர் மற்றும் இராமநாதபுரம் அரசு மகளிர் கல்லூரிகளில் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாப் பணியிடங்கள் தோற்றுவித்தல்**

1993-94-ல் பர்கூரில் ஒரு அரசு மகளிர் கல்லூரியையும், 1994-95-ல் இராமநாதபுரத்தில் ஒரு மகளிர் கல்லூரியையும் அரசு நிறுவியுள்ளது. இக்கல்லூரிகள் செயல்பட, 1995-96-ல் ரூ. 28.58 இலட்சம் மதிப்பீட்டில் ஆசிரிய மற்றும் ஆசிரியரல்லாத பணியிடங்கள் தோற்றுவிக்க அரசு முடிவு செய்துள்ளது.

**(21) மூன்று அரசு கல்லூரிகளில் மாணவிகளுக்கென காத்திருப்பு அறை மற்றும் கழிப்பறை வசதிகள் செய்து கொடுத்தல்**

மூன்று ஆடவர் கல்லூரிகளில், பெண்கள் சேர்க்கப்பட்டிருப்பதால், மகளிருக்கென தனியாக காத்திருப்பு அறையும், கழிப்பறை வசதியும் ரூ. 10.50 இலட்சம் ஒதுக்கீட்டில் செய்து கொடுக்க அரசு உத்தேசித்துள்ளது.

1995 ஏப்ரல் 27]

## (22) கல்லூரிக் கல்வி ஆணையர் அலுவலகத்திற்கு ஒரு ஜெராக்ஸ் பொறி வாங்குதல்

கல்லூரிக் கல்வி ஆணையர் அலுவலகம் 63 அரசுக்கல்லூரி, 160 உதவி பெறும் கல்லூரி மற்றும் 5 மண்டல அலுவலகங்கள் ஆகியவற்றின் பணியை கவனித்து வருகிறது. உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டிய நேர்வுகளில் இதர அலுவலகங்களுக்கு உடனடியாக பல செய்திகள் அனுப்ப வேண்டியிருப்பதால் கல்லூரிக் கல்வி ஆணையர் அலுவலகத்திற்கு ஒரு ஜெராக்ஸ் பொறி மிகவும் தேவைப்படுகிறது. இதற்கென 1995-96-ல் ரூ. 1.17 இலட்சத்தை அரசு ஒதுக்கியுள்ளது.

## (23) பல்கலைக் கழக நல்கை நிதிக்குழுவின் நிதி உதவி பெறுகின்ற அரசுக் கல்லூரிகளுக்கென கட்டடங்கள் கட்டுவதற்காக அரசு இணை உதவி நிதி வழங்குதல்

பல்கலைக்கழக நல்கை நிதிக்குழுவின் நிதி உதவி பெறுகின்ற (குறைந்தது) 8 கல்லூரிகளிலாவது கூடுதல் கட்டடங்கள் கட்ட 1995-96-ல் (25 விழுக்காடு) ரூ. 10 இலட்சத்தை தனது பங்காக கொடுக்க அரசு திட்டமிட்டுள்ளது.

## (24) திருச்சி, பெரியார் ஈ.வெ.ரா. கல்லூரி மற்றும் மயிலாடுதுறை அரசு மகளிர் கல்லூரிகளில் கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல்

திருச்சி ஈ.வெ.ரா. கல்லூரி மற்றும் மயிலாடுதுறை மகளிர் கல்லூரி ஆகிய கல்லூரிகளில் புதிதாக தொடங்கப்பட்ட பட்டப்படிப்பு மற்றும் பட்ட மேற்படிப்புகளுக்கு தேவையான கூடுதல் வகுப்பறை வசதிக்காக 1995-96-ல் ரூ. 20.25 இலட்சத்தை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

## (25) தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தில் தொலைபேசி வசதிகள் ஏற்படுத்துதல்

தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தில் உள்ள தொலைபேசி (5+20) இணைப்பு பெட்டியை மாற்றி புதிதாக (10+20) தொலைபேசி இணைப்புப் பெட்டியைஅமைக்க 1995-96 வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 1.11 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## (26) பர்கூர் அரசினர் பொறியியற் கல்லூரிக்கு கட்டடங்கள் கட்டுதல்

தற்போது, கிருஷ்ணகிரி தொழில்நுட்ப பயிலகத்தில் செயல்பட்டுவரும் பர்கூர் அரசினர் பொறியியற் கல்லூரிக்கு, பர்கூரில்

உள்ள நிரந்தர இடத்தில், முதலாம் ஆண்டு, இரண்டாம் ஆண்டு வகுப்புகள் நடத்த வேண்டி நிரந்தரக் கட்டடங்கள் கட்ட 1995-96 வரவு-செலவு திட்டத்தில் ரூ. 60 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது (மொத்த மதிப்பீடு ரூ. 1,50 இலட்சம்).

**(27) தமிழ்நாடு ஆவணக் காப்பக வளாகத்தில் நூலகத்திற்கென ஒரு தனிக் கட்டடம் கட்டுதல்**

இனி அடுத்துவரும் 25 ஆண்டுகளில் சேகரிக்கப்படவுள்ள புத்தகங்களையும், வெளியீடுகளையும் பாதுகாக்க தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் தனியாக ஒரு நூலகத்தை கட்ட, 1995-96 வரவு-செலவுத் திட்டத்தில் அரசு ரூ. 10 இலட்சம் ஒதுக்கியுள்ளது. மொத்தச் செலவு ரூ. 25 இலட்சம்.

**(28) கன்னிமாரா பொது நூலகத்தின் நூற்றாண்டு விழா**

தமிழ்நாடு பொது நூலக விதி 1948-ன்படி கன்னிமாரா பொது நூலகம் மாநில மத்திய நூலகமாக அறிவிக்கப்பட்டது. கன்னிமாரா பொது நூலகத்தின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, ஒரு ஆண்டுக்கு மட்டும் சிறப்பு மானியமாக ரூ. 5.00 இலட்சம் வழங்க 1995-96 வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(29) தென்னாற்காடு மாவட்டத்திலிருந்து பிரிந்த விழுப்புரம் இராமசாமி-படையாச்சியார் மாவட்டத்திற்கு நூலக ஆணைக்குழு மற்றும் மாவட்ட நூலக அலுவலர் அலுவலகம் அமைத்தல்**

தமிழ்நாடு பொது நூலகச் சட்டம் 1948 பிரிவு 5-ன்படி ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனித்தனி நூலக ஆணைக்குழு அமைக்கப் படவேண்டும். அதன் அடிப்படையில் தென்னாற்காடு மாவட்டத்திலிருந்து பிரிந்து புதிதாக அமைக்கப்பட்ட விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார் மாவட்டத்திற்கு தனியாக மாவட்ட நூலக ஆணைக்குழு அமைக்க அரசு தீர்மானித்துள்ளது. இதற்கென 1995-96 வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 1.52 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**(30) புதிய அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் ஆராய்ச்சித் திட்டங்கள்**

அறிவியல் தொழில் நுட்பவியல் ஆய்வின் மூலம் வளர்ச்சிப்பணிகளை மேம்படுத்த கீழ்க்கண்டத் திட்டங்கள் செயலாக்கப்பட உள்ளன.

(1) வளர்ச்சித் துறைகளின் தேவைகளையும் அவற்றில் எழக்கூடிய சிக்கல்களையும் தீர்க்க முயலும் ஆய்வுத் திட்டங்கள்.

(2) குறிப்பிட்ட இடங்களில் சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவும் ஆய்வுத் திட்டங்கள்.

(3) சமுதாயத்தில் காணப்படும் சிலக் குறிப்பிட்ட பிரச்சினைகளுக்கு நிபுணர்கள் தெரிவு செய்து தீர்வு காணும் ஆய்வுத் திட்டங்கள்.

மூன்றாண்டுகளுக்கான மொத்தச் செலவு ரூ. 30 இலட்சம் ஆகும். 1995-96-ல் ஆகும் செலவு ரூ. 10 இலட்சம்.

**(31) மாணவர் ஆய்வுத் திட்டம்**

தமிழ்நாடு மாநில அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் மன்றம், சமுதாயத்திற்குத் தேவைப்படும் திட்டங்களைத் தயாரிக்க, மாணவர்களை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் மாணவர் ஆய்வுத்திட்டத்தினை செயலாக்கத் திட்டமிட்டுள்ளது. இதற்கென 1995-96-ல் ரூ. 3 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(32) தமிழ்நாடு அறிவியலார் பரிசுத்திட்டம்**

தமிழ்நாடு மாநில அறிவியல் தொழில் நுட்பவியல் மன்றம் 1995-96 ஆம் ஆண்டில் அறிவியலார்க்கு பொற்கிழி வழங்கும் திட்டம் ஒன்றை செயல்படுத்த உள்ளது. இதற்கென ரூ. 1.5 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(33) திருச்சிராப்பள்ளியில் மண்டல அறிவியல் மற்றும் தொழில் நுட்ப மையம் நிறுவுதல்**

அறிவியல் மற்றும் தொழில் நுட்பக் கொள்கைகளை நகர மற்றும் ஊரகப் பிரிவுகளில் பரப்ப, சென்னையில் தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம் ஒன்றை தமிழ்நாடு அரசு நிறுவியுள்ளது. தென் பகுதியில் உள்ள மக்களின் நலனைக்கருதி திருச்சிராப்பள்ளியில் அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் மையத்துடன் கோளரங்கம் ஒன்றும் அமைக்கப்படும். மொத்த மதிப்பீடான ரூ. 86 இலட்சத்திற்கு, 1995-96-ல் ரூ. 30 இலட்சம் செலவிட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(34) சிவகங்கை மற்றும் திண்டுக்கல்லில் மாவட்ட அளவிலான விளையாட்டு வளாகங்கள் கட்ட உதவுதல்:**

விளையாட்டு வளாகம் இல்லாத மாவட்டத் தலைநகரங்களுக்கு படிப்படியாக விளையாட்டு வளாகம் கட்ட அரசு திட்டமிட்டுள்ளது. இதன்படி *1995-96* இல் சிவகங்கையிலும் திண்டுக்கல்லிலும் மாவட்ட விளையாட்டு வளாகங்கள் அமைக்கப்படும். மொத்த மதிப்பீடான ரூ. *38* இலட்சத்திற்கு *1995-96* இல் ரூ. *19* இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(35) சேலம் மற்றும் ஈரோட்டில் நீச்சல் குளங்கள் அமைக்க உதவுதல்:**

ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் ஒரு திறந்தவெளி விளையாட்டரங்கம், உள்விளையாட்டரங்கம் மற்றும் நீச்சல் குளம் அமைத்திட வேண்டுமென அரசு திட்டமிட்டுள்ளது. சேலம் மற்றும் ஈரோட்டிலுள்ள மாவட்ட விளையாட்டு வளாகங்கள், திறந்தவெளி விளையாட்டு அரங்கத்தையும், உள்விளையாட்டு அரங்கத்தையும் பெற்றிருக்கின்றன. சேலத்திலும், ஈரோட்டிலும் நீச்சல் குளங்கள் அமைக்க மொத்த மதிப்பீடான ரூ. *27* இலட்சத்திற்கு *1995-96*–இல் ரூ. *13.50* இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(36) அண்ணா பல்கலைக்கழகத்தில் உள்ள பயோடெக்னாலஜி கட்டடத்தில் போதுமான இடவசதி பெற கட்டடம் கட்டுதல்:**

நம்நாட்டில் பயோ-டெக்னாலஜி பாடம் கற்பிக்கும் பல்கலைக் கழகங்களில் அண்ணா பல்கலைக் கழகமும் ஒன்று. வருகின்ற காலத்தில், அதிக எண்ணிக்கையில் பயோ-டெக்னாலஜி பாடத்தை கற்க மாணவர்கள் சேர்வார்கள் என்ற எதிர்பார்ப்பின் அடிப்படையில், இப்பொழுதுள்ள பயோ-டெக்னாலஜி துறையின் இடவசதியை விரிவுபடுத்தும் வகையில் கட்டடம் கட்ட *1995-96*-இல் ரூ. *15* இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

# அத்தியாயம் - 2
# பள்ளிக் கல்வி.

## (I) தொடக்கக் கல்வி

### எல்லோருக்கும் தொடக்கக் கல்வி

*இந்திய அரசியமைப்புச் சட்டத்தின் வழி காட்டும் கொள்கையின்படி 14 வயது வரையிலுள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் இலவச, கட்டாயத் தொடக்கக் கல்வியளிக்கத் தமிழ்நாடு அரசு அனைத்து அடிப்படை முயற்சிகளையும் மேற்கொண்டு அதனைச் செம்மையாக நிறைவேற்றியும் வருகிறது.*

*மேற்கண்ட அரசியலமைப்பின் நோக்கத்தை அடைவதற்காக வேர்மட்ட அளவில் தேவைப்படும் அனைத்து இடங்களிலும் ஆரம்பப் பள்ளிகளை நிறுவுவதில் அரசு வெற்றிகண்டுள்ளது. அரசின் கவனம் தற்போது அனைவருக்கும் கல்வி மற்றும் ஆரம்பக்கல்வி மேம்பாடு என்பதில் ஒன்றுபடுத்தப்பட்டுள்ளது. மேற்குறித்தவகையில் "அனைவருக்கும் தொடக்கக் கல்வி" என்ற இலட்சியத்தை அடைய இவ்வரசு அதிக முக்கியத்துவம் அளிக்கிறது. இந்நோக்கில் இவ்வரசு முன்னுரிமை தரும் கூறுபாடுகளாவன:*

*(அ) பள்ளி வயதுக் குழந்தைகள் அனைவரையும் பள்ளியில் சேர்த்து 14 வயது வரை தொடர்ந்து அவர்களைப் படிக்கச்செய்தல்.*

*(ஆ) கல்வியின் தரத்தில் நிறைவான முன்னேற்றத்தை, குறைந்தபட்சக் கற்றல் இலக்குகளை அடைவதன் வழியே நிறைவேற்றுதல்.*

*(இ) மகளிர் கல்வியை மேம்படுத்துதல்.*

*(ஈ) கல்வி கற்பதில் ஆண், பெண் என்ற பால்பாகுபாடுகளைக் களைதல் மற்றும்*

*(உ) சமுதாயத்தில் பிற்படுத்தப்பட்டுள்ளவர்களுக்குக் கல்வியளித்தல்.*

[1995 ஏப்ரல் 27

## முதலமைச்சரின் 15 அம்சத் திட்டம்

இவ்வரசு அனைவருக்கும் தொடக்கக் கல்வி என்ற கொள்கையை நடைமுறைப்படுத்துவதில் மிகவும் ஈடுபாட்டுடன் முனைந்துள்ளது. அதை கட்டாயப்படுத்தும் வகையில் சட்டம் இயற்றப்பட உள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இதற்காக அரசு 29-1-94 அன்று தமிழ்நாடு கட்டாய ஆரம்பக் கல்வி மசோதா '94 (Bill) கொண்டு வந்து, குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பியுள்ளது. பள்ளி வயதுக் குழந்தைகள் அனைவரையும் பள்ளிப்படுத்தவும் குறைந்தபட்சம் ஐந்தாண்டுகள் வரையிலாகிலும் அவர்கள் பள்ளிக்குச் சீராக வருகை தந்து தொடக்கக் கல்வியை நிறைவு செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வகையில் பெண்களுக்கும் பின்தங்கிய, தாழ்த்தப்பட்ட பிரிவினருக்கும் சிறப்பு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. டாக்டர் ஜெ. ஜெயலலிதாவின் குழந்தைகள் நலம் தழுவிய 15 அம்சத் திட்டத்தின் எட்டாவது அம்சம் அனைவருக்கும் தொடக்கக் கல்வியைச் சட்டபூர்வமாக்கி அந்த இலக்கினை மேற்கொள்ளுவதுப் பற்றியதாகும். சுகாதாரம், சமூகநலம், ஊரகவளர்ச்சி போன்ற அரசின் பல்வேறு துறைகளிடையே ஒரு கூட்டுச் செயல்பாட்டுக்கு இத்திட்டம் வழிவகுக்கிறது.

## குழந்தைகள் சேர்க்கை

1982-ஆம் ஆண்டில் தமிழக அரசு சத்துணவுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி பள்ளிகளில் மாணவர்கள் சேர்க்கையில் அபரிமிதமானதொரு முன்னேற்றத்தை வரலாறாக்கியது. 1981-82-க்கு முன்பெல்லாம் தமிழகத் தொடக்கப் பள்ளிகளில் சேர்க்கை 44.72 இலட்சத்துக்கும் குறைவாகவே காணப்பட்டது. ஆனால் சத்துணவுத் திட்டத்தின் பயனாக தொடக்கப்பள்ளி மாணவர் சேர்க்கை இன்றைக்கு 5,734 இலட்சம் என்கிற அளவுக்கு வளர்ச்சி கண்டுள்ளமை போற்றத்தக்கதொரு முன்னேற்றம் எனலாம். பள்ளியை விட்டு இடையில் நின்றுவிடுபவர்களின் எண்ணிக்கையை இச்சத்துணவுத் திட்டம் மட்டுப்படுத்தி தமிழகத்தில் கல்வியறிவு பெற்றோரின் எண்ணிக்கையையும் அதே போலவே கல்வித்தரத்தையும் வெகுவாக அதிகரிக்கச் செய்துள்ளது. இதன் விளைவாக, சமூகத்தின் நலிந்த பிரிவினரின் வாழ்க்கைத் தரத்தில் கணிசமான முன்னேற்றமும் உறுதி செய்யப்பட்டுள்ளது. 1983-84 முதல் 1994-95 வரையிலான மாணவர் சேர்க்கையில் ஆண்டுவாரி அதிகரிப்பை கீழ்வரும் அட்டவணை நன்கு புலப்படுத்தும்:

1995 ஏப்ரல் 27]

| வ.எண். | ஆண்டு | மாணவர் | மாணவியர் | மாணவர்களின் சேர்க்கை மொத்தம். |
|---|---|---|---|---|
| | | (இலட்சங்களில்) | | |
| 1. | 1983-84 | 26.21 | 21.85 | 48.06 |
| 2. | 1984-85 | 26.53 | 22.39 | 48.92 |
| 3. | 1985-86 | 27.30 | 23.12 | 50.42 |
| 4. | 1986-87 | 28.09 | 23.68 | 51.77 |
| 5. | 1987-88 | 28.58 | 24.14 | 52.72 |
| 6. | 1988-89 | 28.99 | 24.63 | 53.62 |
| 7. | 1989-90 | 29.41 | 25.05 | 54.46 |
| 8. | 1990-91 | 29.80 | 25.70 | 55.50 |
| 9. | 1991-92 | 30.19 | 26.06 | 56.25 |
| 10. | 1992-93 | 30.39 | 26.33 | 56.72 |
| 11. | 1993-94 | 30.61 | 26.60 | 57.20 |
| 12. | 1994-95 | 30.66 | 26.68 | 57.34 |

பொதுவாக மாநிலத்தில் ஏற்பட்டுள்ள மக்கள் தொகைப் பெருக்கத்திற்கேற்ப 6-11 வயதுப்பிரிவிலும் 11-14 வயதுப்பிரிவிலும் அதற்கேற்றவாறு மாணவர் சேர்க்கையும் அதிகரித்து அரசுக்குக் கூடுதலான பொறுப்பை ஏற்படுத்தியுள்ளது. 6 முதல் 14 வயது வரையிலான மாணவர் சேர்க்கையில் கடந்த ஆண்டுகளில் காணப்படும் கூடுதல் வளர்ச்சியின் சீரான போக்கை கீழ்வரும் அட்டவணை காட்டுகிறது.

| வயது | வகுப்பு | 1984-85 | 1990-91 | 91-92 | 92-93 | 93-94 | 94-95 |
|---|---|---|---|---|---|---|---|
| 6-11 | 1-5 தொடக்கக் கல்வி | 70.44 | 77.64 | 78.50 | 79.36 | 80.21 | 81.07 |
| 11-14 | 6-8 நடுநிலை | 23.19 | 31.59 | 32.84 | 34.09 | 35.35 | 36.58 |

6-14 வயதுள்ள குழந்தைகள் சேர்க்கையை நூற்றுக்கு நூறு என ஈட்டுவதும், அவ்வாறே அக்குழந்தைகளின் தொடர்கல்வியை நூற்றுக்கு நூறு காப்பதும், அதன் வழியே பள்ளிக்கு வராத குழந்தைகளே இல்லை என்ற நிலையைக் கொண்டுவருவதும் மாவட்டத்தின் கல்வியறிவு

பெற்றோரின் விகிதத்தை வெகுவாக உயர்த்துவதுமே இவ்வரசின் முதன்மையான இலக்குகளாக அமைந்துள்ளன.

## மாநிலத்தில் தொடக்கக் கல்வியின் வளர்ச்சி

"அனைவருக்கும் தொடக்கக் கல்வி" என்ற நிலையை எய்த மாநிலத்தின் தொடக்கப் பள்ளிகளின் எண்ணிக்கையும் சீராக அதிகரித்துவர வேண்டியுள்ளது. அன்றியும் மாணவர்தம் இருப்பிடங்களுக்கு அருகாமையில் பள்ளிகள் அமைவதும் இன்றியமையாததாகும். இன்றுள்ள நிலவரப்படி *5,000* மற்றும் அதற்கும் கூடுதலான மக்கள் தொகை கொண்ட *340* மக்கள் வாழிடங்களில் தொடக்கப் பள்ளி வகுப்புகள் இடம் பெற்றுள்ளன. *2,000*-ல் இருந்து *4,999* வரை மக்கள் தொகை அளவைக் கொண்ட *2,906* வாழிடங்களிலும் *2,793* தொடக்கப்பள்ளி வகுப்புகள் இயங்கி வருகின்றன. எனினும் பள்ளிகளுக்கிடையே ஒரு கி.மீ. எனக் கணிக்கையில் *99.6%* வாழிடங்கள் இவ்வசதியைப் பெற்று *99.7%* மக்கள்தொகை பயன் பெற்றுள்ளனர். *1,000* முதல் *1,999* மக்கள் தொகைக்கு பயன்பெற்றோர் *98.99%* ஆகும். *500* மற்றும் அதற்கு மேல் மக்கள் தொகை கொண்டதும் *1* கி.மீ. தூரத்திற்கு பள்ளிகளில்லாததுமான பகுதிகளில் புதிய தொடக்கப்பள்ளிகளை ஆரம்பிப்பது அரசின் கொள்கை ஆகும். *1983-84*-ல் *28,548* ஆக இருந்த தொடக்கப் பள்ளிகளின் எண்ணிக்கை *1994-95*-ல் *35,929* ஆக உயர்ந்துள்ளது. ஆண்டுக்கு ஆண்டு தொடக்கப் பள்ளிகளின் எண்ணிக்கை உயர்ந்துகொண்டே வருவதை கீழ்க்காணும் அட்டவணை காட்டுகிறது:

| வ. எண். | ஆண்டு | தொடக்கப் பள்ளிகளின் எண்ணிக்கை | நடுநிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | 1983-84 | 28,548 | 5,635 | 34,183 |
| 2. | 1984-85 | 28,847 | 5,691 | 34,538 |
| 3. | 1985-86 | 29,118 | 5,691 | 34,809 |
| 4. | 1986-87 | 29,268 | 5,663 | 34,931 |
| 5. | 1987-88 | 29,319 | 5,749 | 35,068 |
| 6. | 1988-89 | 29,359 | 5,707 | 35,066 |
| 7. | 1989-90 | 29,491 | 5,651 | 35,142 |
| 8. | 1990-91 | 29,979 | 5,624 | 35,603 |
| 9. | 1991-92 | 30,004 | 5,581 | 35,585 |

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

1995 ஏப்ரல் 27]

| வ. எண். | ஆண்டு | தொடக்கப் பள்ளிகளின் எண்ணிக்கை | நடுநிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை | மொத்தம் |
|---|---|---|---|---|
| *10.* | *1992-93* | *30,098* | *5,608* | *35,706* |
| *11.* | *1993-94* | *30,329* | *5,593* | *35,922* |
| *12.* | *1994-95* | *30,351* | *5,578* | *35,929* |

வேறுபட்ட மக்கள் தொகை அளவுகளைக் கொண்ட வாழிடங்களையும் அவற்றின் மக்கள் தொகை பெறும் தொடக்கப் பள்ளி வசதியையும் காட்டும் அட்டவணை (அனைத்திந்திய ஐந்தாவது தொடக்கக் கல்வி கணக்கீடு, 1986 ஆம் ஆண்டின் அறிக்கையின் அடிப்படையிலானது) கீழே உள்ளது:-

| மக்கள் தொகை | வாழிடங்கள் | தொடக்கப்பள்ளிகள் பெற்ற வாழிடங்கள் எண்ணிக்கை | சதவீதம் | 1கிமீ வரை எண் | சதவீதம் | தொடக்கப்பள்ளி வசதி பெற்ற மக்கள் தொகை 1கி.மீக்குள் | 1கிமீ வரை |
|---|---|---|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | *(5)* | *(6)* | *(7)* | *(8)* |
| *5000*-க்கு மேல் | *340* | *340* | *100* | *340* | *100* | *100* | *100* |
| *2000-4999* | *2,906* | *2,792* | *96.1* | *2,895* | *99.6* | *96.2* | *99.7* |
| *1000-1999* | *7,624* | *7105* | *93.2* | *7,542* | *98.9* | *93.1* | *98.7* |
| *500-999* | *1,2361* | *10,204* | *82.5* | *11,960* | *96.8* | *84.0* | *97.0* |
| *400-499* | *3,962* | *653* | *66.0* | *3,680* | *92.8* | *67.6* | *92.9* |
| *300-399* | *4,873* | *2,610* | *43.6* | *4193* | *86.0* | *55.9* | *85.9* |
| *200-299* | *5,641* | *1,589* | *28.2* | *4,429* | *78.5* | *28.9* | *77.8* |
| *100-199* | *6,268* | *648* | *16.3* | *4,417* | *70.5* | *10.7* | *70.5* |
| *100*-கீழ் | *3,418* | *164* | *4.8* | *2,178* | *63.7* | *6.8* | *64.3* |
| | ***47392*** | ***28105*** | ***99.3*** | ***41629*** | ***87.8*** | ***83.9*** | ***96.8*** |

*1995-96*-இல் மேலும் கல்வி முன்னேற்றத்திற்கென *100* தொடக்கப் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட உள்ளன.

## பள்ளியைவிட்டு விலகுவோர்

அனைவருக்கும் கல்வியென்ற கொள்கையின்படி பள்ளியை விட்டு விலகுவோர் எண்ணிக்கையை கட்டுப்படுத்தவேண்டியது

அவசியமாகிறது. அனைவருக்கும் கல்வியென்ற இலட்சியத்தை அடைய இது அவசியமானதாகும். மாணவர்கள் பள்ளியைவிட்டு இடையில் நின்று போவதற்கு வழிகோலும் முக்கிய காரணங்கள்:-

1. குழந்தைகளின் குடும்பங்களின் ஏழ்மை மற்றும் பொருளாதார சூழ்நிலை, குடும்பத் தேவைகளுக்காக குழந்தைகள் வேலைக்கு சென்று பொருளீட்டவேண்டிய கட்டாய நிலை.
2. வீட்டிலுள்ள சிறு குழந்தைகளைக் கவனிக்க வேண்டிய அவசியம்.

*1994-95*-ஆம் ஆண்டில் வகுப்புகளைவிட்டு இடையில் நின்றுபோன மாணவர்களின் சதவீதம்:

| வகுப்புகள் | மாணவர்கள் | மாணவியர் (சராசரியாக) | மொத்தம் |
|---|---|---|---|
| 1 முதல் 5 வரை | 15.58 | 17.65 | 16.54 |
| 1 முதல் 8 வரை | 30.75 | 39.36 | 34.74 |

பள்ளிப் படிப்பை இடையில் விட்டுசெல்லும் மாணவிகளின் எண்ணிக்கை அவ்வாறு விலகும் மாணவர்களின் எண்ணிக்கையைவிட அதிகமாக உள்ளதால் 6-14 வயதுள்ள மாணவிகளின் சேர்க்கைக்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. கடந்த பத்தாண்டுகளில் ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளிலிருந்து இடையில் நின்றுபோன மாணவ மாணவிகளின் எண்ணிக்கை குறைந்தும் படிப்பைத் தொடர்வோரின் எண்ணிக்கை அதிகரித்தும் வருகிறது.

தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளை விட்டு விலகுவோரின் எண்ணிக்கை

| வ.எண் | ஆண்டு | தொடக்க விழுக்காடு | |
|---|---|---|---|
| | | 6-11 வயதுப்பிரிவு | 6-14 வயதுப்பிரிவு |
| (1) | (2) | (3) | (4) |
| 1. | 1984-85 | 23.14 | 58.75 |
| 2. | 1985-86 | 22.48 | 56.45 |
| 3. | 1986-87 | 22.29 | 52.45 |
| 4. | 1987-88 | 21.78 | 48.22 |
| 5. | 1988-89 | 21.42 | 45.97 |
| 6. | 1989-90 | 21.05 | 45.43 |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 7. | 1990-91 | 20.32 | 44.48 |
| 8. | 1991-92 | 19.31 | 41.67 |
| 9. | 1992-93 | 18.27 | 30.86 |
| 10. | 1993-94 | 17.30 | 36.35 |
| 11. | 1994-95 | 16.54 | 34.74 |

ஆகையால், பள்ளியை விட்டு விலகுவோரின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டி கீழ்வரும் நலநோக்குத் திட்டங்கள் தீவிரப்படுத்தப்பட உள்ளன:-

1. புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்
2. இலவசப் பாடப்புத்தகங்கள் வழங்கும் திட்டம்
3. இலவச சீருடை வழங்கும் திட்டம்
4 இலவச காலணி வழங்கும் திட்டம்
5. இலவச பஸ்பாஸ் வழங்கும் திட்டம்
6. 1-ஆம் வகுப்பு குழந்தைகளுக்கு இலவசப் பலகைகள் வழங்கும் திட்டம்.

1994-95-ஆம் கல்வியாண்டில் 200 இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

தற்போதைய ஆரம்பக் கல்வியின் தரத்தை உயர்த்தவும் குறைந்தபட்சம் கற்றல் இலக்குகளை மாணவர்கள் அடைவதை உறுதிப்படுத்தவும் தொடக்கப் பள்ளியில் அனைத்து வகுப்புகளுக்கும் தேர்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

## கரும்பலகைத் திட்டம்

நமது நாட்டின் ஆரம்பக் கல்வியை மேம்படுத்தி முழுமைப்படுத்தும் நோக்கத்தில் கரும்பலகைத் திட்டம் அமைந்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் ஓராசிரியர் பள்ளிகள், ஈராசிரியர் பள்ளிகளாக மாற்றப்பட்டிருக்கின்றன. கட்டட வசதியில்லாத பள்ளிகளுக்கு இரண்டு அறைகள் கொண்ட கட்டடம் கட்டித் தரப்படுகிறது. கற்பிப்பதற்கும், கற்பதற்கும் துணைசெய்யும் பொருட்கள் தொடக்கப்பள்ளிகளுக்கு வழங்கப்படுகின்றன. இவை மூன்று கட்டங்களில் வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்ட 1,829 இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் ஏற்கனவே உள்ள 1,829 ஓராசிரியர் பள்ளிகளுக்குப்



TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

பயன்படுத்தப்பட்டன. இவ்வாசிரியர்கள் நியமனத்திற்காக 31-3-1992 வரை ஆன செலவினம் ரூ. 1,204.28 இலட்சமாகும். இத்தொகை நடுவண் அரசால் வழங்கப்பட்டுள்ளது. இதற்கென ஒதுக்கப்பட்ட 2,386.66 இலசங்களில் ரூ. 2,300.92 இலட்சங்கள் செலவிடப்பட்டுள்ளது. கற்பிப்பதற்குத் துணையாகும் பொருட்களும் நூலகப் புத்தகங்களும் 29,875 தொடக்கப்பள்ளிகளுக்கு 3 கட்டங்களில் வழங்கப்பட்டமையும் இதில் அடங்கும்.

இப்பொழுதுள்ள 895 ஓராசிரியர் பள்ளிகளை ஈராசிரியர் பள்ளிகளாக மாற்றவும் 4,613 ஈராசிரியர் பள்ளிகளை மூன்றாசிரியர் பள்ளிகளாக மாற்றவும், 120 தொடக்கப் பள்ளிகளுக்கும் 560 நடுநிலைப் பள்ளிகளுக்கும் கற்பித்தல்-கற்றல் கருவிகளை கரும்பலகைத் திட்டத்தின் 4- வது கட்டமாக வழங்க வேண்டியும் கருத்துருக்கள் நடுவணரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. வகுப்பறைகள் தேவைப்படுகிற 1,197 பள்ளிகளுக்கு மூன்றாவது வகுப்பறைகள் 30.48 கோடி செலவில் கட்டித் தரவேண்டியும் இக்கருத்துரு கோருகிறது. 560 நடுநிலைப் பள்ளிகளுக்கு கற்றல், கற்பித்தல் கருவிகள் வழங்கும்பொருட்டு ரூ.2,33.70 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

**நடுநிலைப் பள்ளிகளில் அறிவியல் கல்வியினை மேம்படுத்துதல்:**

உயர் தொடக்கக் கல்வியை மேம்படுத்துவதில் அறிவியல் கல்வி முக்கிய பங்காற்றுகிறது. இத்திட்டத்தின் கீழ் அறிவியல் பெட்டகங்கள் வழங்கப்படுகின்றன. இதுவரை 4 தொடர் கட்டங்களில் 5,340 நடுநிலைப் பள்ளிகளுக்கு இப்பெட்டகங்கள் ரூ. 77.61 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளன.

**மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலகங்களை நிறுவுதல் மற்றும் உதவிக்கல்வி அலுவலர்களை அமர்த்துதல்.**

தொடக்கக் கல்வி இயக்குநரகம் தனியே பிரிக்கப்பட்டு செயல்பட்டாலும், தொடக்கக் கல்வி மற்றும் உயர் தொடக்கக்கல்வி சார்ந்த பணிகளை மாவட்ட அளவில் மாவட்டக் கல்வி அலுவலர்கள் உயர்நிலை மற்றும் மேநிலைப்பள்ளிப் பணிகளோடு சேர்த்து கவனித்து வருகின்றனர்.

எனவே, மாவட்ட அளவில் தொடக்கக் கல்வியின் நிர்வாகத்தினை வலுப்படுத்தும் பொருட்டு 23 மாவட்டங்களிலும் தனி மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர்களை அரசு நியமித்துள்ளது. அதன்படி உதவிக் கல்வி அலுவலர்களின் அமைப்பினை மாற்றி மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலரின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது. இவ்வாறு கொண்டு வரப்பட்ட நிர்வாக மறு அமைப்பின் மூலம்

பள்ளிகளில் தொடக்கக் கல்வியின் கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பின் முன்னேற்றத்தினை எதிர்நோக்கி செய்யப்பட்டுள்ளது.

**மாவட்ட தொடக்கக்கல்வித் திட்டம்.**

'மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம்' என்பதொரு செயல் திட்டம் வடிவமைக்கப்பட்டு தர்மபுரி, விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார், தென்னாற்காடு-வள்ளலார், திருவண்ணாமலை-சம்புவராயர் ஆகிய பின்தங்கிய மாவட்டங்களில் ரூ. 126 கோடி அளவில் செயல்படுத்தப்பட உள்ளமை சிறப்பாகக் குறிப்பிடத் தக்கதாகும்.

மேற்கண்ட திட்டம் "தமிழ்நாடு மாநில அனைவருக்கும் கல்வி இயக்கம்" என்ற பெயருடன் கூட்டுறவுச் சட்டத்தின்படி பதிவு பெற்ற சங்கத்தின் மூலம் செயல்படுத்தபட்டு வருகிறது. மைய அரசு, இத்திட்டத்திற்காக 1994-95-ஆம் ஆண்டிற்கு தனது பங்காக திட்டத்தின் 85 சதவீதத் தொகையான ரூ. 3,56.75 இலட்சத்தை அனுமதித்துள்ளது. தமிழக அரசும், தனது பங்காக 15 சதவீதத் தொகையான ரூ. 56.00 இலட்சத்தை ஒதுக்கீடு செய்துள்ளது. இவ்வாறு அனுமதிக்கப்பட்ட தொகை மாணவர்கள் பள்ளிகளில் சேரும் உணர்வை வளர்த்தல், பள்ளியில் தொடர்ந்து கற்றல் மற்றும் கற்றல் திறனை வளர்த்தல் பள்ளிகளில் மாணவர்கள் சேர்க்கைக்கேற்ப இடவசதி செய்தல் ஆகியவற்றிற்காகப் பயன்படுத்தப்படும்.

இத்திட்டத்தினை நன்முறையில் செயல்படுத்தவும், கண்காணிக்கவும் திட்டப் பணியை ஆய்வு செய்யவும், பணியாளர்களுடன்கூடிய ஒரு தனி இயக்குனரகம் உருவாக்கப்பட்டுள்ளது. மாநில மற்றும் மாவட்ட அளவில் இத்திட்டத்தினைச் செம்மையாக நடைமுறைப்படுத்த, தனித் தனியான குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தினை நன்முறையில் செயல்படுத்தி மாணவர்களின் சேர்க்கையினை அதிகரிக்கவும் மாணவர்களின் கற்கும் திறனை மேம்படுத்தவும் பல்வேறு அரசு நிறுவனங்கள், அரசு அல்லாத நிறுவனங்கள், ஆசிரியர்கள் மற்றும் அன்னை ஆசிரியர் கழகம், பெற்றோர் ஆசிரியர் சங்கம் ஆகியன ஈடுபடுத்தப்படும். கற்பிக்கப்படும் கல்வியின் தரத்தினை உயர்த்துவதற்காக ஆசிரியர்கள், தலைமை ஆசிரியர்கள் மற்றும் இதர பிரிவினருக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படும்.

1994-95-ஆம் ஆண்டில் 118 பள்ளிகளுக்கு 2,91 இலட்சம் ரூபாய் செலவில் 2 (அல்லது) 3 வகுப்பறைகளுடனும், குடிநீர் மற்றும் கழிப்பிட வசதிகளுடனும், கூடிய கட்டடங்கள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. 1994-95-ஆம் ஆண்டில் மாநிலத் தலைமை அலுவலகம் மற்றும் பயிற்சி

மையம் ரூ. 50.00 இலட்சம் செலவில் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. வட்டார அளவில் ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிக்க ஒன்றிய ஆதார மையம் நிறுவப்படும். ஆசிரியர்கள், தலைமை ஆசிரியர்கள் மற்றும் களப்பணியாளர்கள் ஆகியோருக்கு, ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம், மாவட்ட கல்விப் பயிற்சி நிலையம் மற்றும் ஒன்றிய ஆதார மையங்கள் மூலம் பயிற்சியளிக்கப்படும்.

*1994-95*-ஆம் ஆண்டில் நடைமுறையிலுள்ள திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்திட *1995-96*-ஆம் ஆண்டிற்கு ரூ. *340.693* இலட்சங்கள் மாநில அளவு திட்டங்களுக்குக் குறியீட்டு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. சிறப்புச் செயல்பாடாக வழிகாட்டிக் கையேடு தயாரிக்கவும் மேலாண்மைத் தகவல் அமைப்பு (MIS) ஒன்றை நிறுவவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் பள்ளியில் சேரும் வாய்ப்பை மேம்படுத்தல், பள்ளியில் தொடர்ந்து நின்று கற்றல், முழுத் திறன்களையும் மாணவர்கள் பெறுதல், மற்றும் கற்பிக்கும் திறனை ஆசிரியர்களிடம் வளர்த்தல் ஆகிய பிரிவுகளுக்கு, மாவட்ட அளவில் ரூ. *21,77.35* இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ரூ. *898.00* இலட்சம் செலவில் பள்ளி மாணவர்களின் கூடுதல் சேர்க்கைக்கு ஏற்ப புதிதாக *1,153* இடைநிலை ஆசிரியர்களை நியமனம் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. பழங்குடியினர் குழந்தை நலனுக்காக திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில் *3* உறைவிடப் பள்ளிகள் (Residential Schools) ரூ. *40.08* இலட்சம் செலவில் நிர்மாணிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. முறைசாராக் கல்வித் திட்டக் களப்பணியாளர்களுக்கு வட்டார அளவில் பயிற்சி அளிப்பதற்கான ஒன்றியக் கருவூல மையம் அமைத்தல், சமூக விழிப்புணர்வு இயக்கம் மற்றும் முன்னோடிப் புதுமைத் திட்டங்கள் ஆகியவை, இத்திட்டத்தில் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இதற்காக *1995-96*-ஆம் ஆண்டில் ரூ. *2518.043* இலட்சம் செலவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

மாவட்டத் தொடக்க கல்வித் திட்டத்தை அமுல்படுத்த நடப்பாண்டில் மைய அரசு ரூ. *3,56.75* இலட்சம் மானியமாக வழங்கியுள்ளது. தமிழக அரசு இணை மானியத் தொகையாக ரூ. *54.00* இலட்சம் வழங்கியுள்ளது. மொத்த மானியமாகப் பெற்ற ரூ. *4,10.75* இலட்சத்தில்,. இதுவரையில் ரூ. *2,31.147* இலட்சம் பல்வேறு செயல்பாடுகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள ரூ. *1,79.603* இலட்சமும் அடுத்த நிதியாண்டில் மைய, மாநில அரசுகள் வழங்கவுள்ள மானியத் தொகையுடன் சேர்த்து *1995-96*-ம் நிதியாண்டில் செலவிடப்படவுள்ளது.

1995 ஏப்ரல் 24 ]

**அனைத்து அரசு தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுத்தல்.**

அனைத்து அரசு பள்ளிகளுக்கு அடிப்படை வசதிகளை செய்து கொடுக்கும் நோக்கில் 14.7.94ல் ஒரு செயல்திட்ட நடவடிக்கைக்கு அரசு ஒப்புதலளித்தது. அந்த அரசு ஆணையின்படி அனைத்து அரசு பெண்கள் மற்றும் ஆண்கள் தொடக்க /நடுநிலை/உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு வகுப்பறை வசதிகள் 1994-95லிருந்து 3 ஆண்டுகளுக்குள் படிப்படியாக செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன்படி கீழ்க்குறிப்பிடப்பட்ட தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கு வகுப்பறைக் கட்டடங்கள் கட்டிக் கொடுக்கப்படும்:

| | | | | வகுப்பறைகள் கட்டப்பட வேண்டிய தொடக்க/நடுநிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|
| கட்டம் | 1 | 1994-95 | .. | 1600 |
| கட்டம் | 2 | 1995-96 | .. | 2802 |
| கட்டம் | 3 | 1996-97 | .. | 2800 |
| | மொத்த பள்ளிகள் | | .. | **7202** |

1832 அரசு பெண்கள் நடுநிலைப் பள்ளிகளில் கழிப்பறை கட்டட வசதிக்காக 1994-95-ஆம் ஆண்டிற்கு ரூ. 1,83,20,000 ம், மேலும் 26183 தொடக்க/நடுநிலைப் பள்ளிகளுக்கு குடிநீர் வசதியும், 1994-95 முதல் 3 ஆண்டுகளில் விளையாட்டு மைதானம், விளையாட்டு சாதனங்கள், இருக்கை வசதிகள், உயிர்வேலி அமைத்தல் முதலான வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.

மொத்த ஒதுக்கீடு

| வரிசை எண் | ஆண்டு | வரவு செலவு மதிப்பீடு | | திருத்திய மதிப்பீடு | |
|---|---|---|---|---|---|
| | | திட்டத்தில் சேராதது. | திட்டம் | திட்டத்தில் சேராதது. | திட்டம் |
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | | |
| 1. | 1992-93 | 60290.47 | 3205.14 | 70474.37 | 4539.80 |
| 2. | 1993-94 | 84644.24 | 3830.67 | 82095.43 | 4074.90 |
| 3. | 1994-95 | 83007.81 | 4109.91 | 88925.12 | 4840.53 |
| 4. | 1995-96 | 96761.48 | 4783.91 | .. | .. |

## (II.) உயர்நிலை மற்றும் மேல்நிலைக்கல்வி

மாணவர்களின் பல்வேறுபட்ட வளர்ச்சிக் கட்டங்களுள் தொடக்கக் கல்விக்கும் உயர் கல்விக்கும் இடைப்பட்ட அங்கமாக இடைநிலைக் கல்வி உள்ளது. ஆகவே, தமிழக அரசு உயர்/மேல்நிலைப் பள்ளிக் கல்விக்கு எப்பொழுதும் முன்னுரிமை அளித்து வருகிறது.

**உயர்நிலைப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை:**

30.9.94-ஆம் நாளைய கணக்குப்படி பள்ளி செல்லும் 14 முதல் 16 வயது நிலையிலுள்ள 20.68 இலட்சம் குழந்தைகளில் 13.63 இலட்சம் குழந்தைகள் 9 மற்றும் 10ம் வகுப்புகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். இது 65.92 விழுக்காடு ஆகும். பள்ளிகளில் ஒவ்வொரு ஆண்டிலும் 14-16 வயது வரம்பிலுள்ள 0.50 இலட்சம் குழந்தைகளை கூடுதலாகச் சேர்க்க வேண்டும் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

1994-95-ஆம் ஆண்டில் 50199 மாணவர்கள் கூடுதலாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். இக்கூடுதல் மாணவர் சேர்க்கைக்காக 1994-95ல் அரசு 24 பி.டி. ஆசிரியர் பணியிடங்களை அனுமதித்துள்ளது. அதேபோன்று 1995-96ம் ஆண்டிற்கு கூடுதலாக 25 பி.டி. ஆசிரியர் பணியிடங்களைத் தோற்றுவிக்க அரசு உத்தேசித்துள்ளது. தமிழ்நாட்டில் 3340 உயர்நிலைப் பள்ளிகளும் 2318 மேல்நிலைப் பள்ளிகளும் உள்ளன. இவற்றுள் மாநில இடைநிலைக் கல்விப் பாடத் திட்டம், மெட்ரிகுலேஷன் பாடத்திட்டம் மற்றும் ஆங்கிலோ இந்தியப் பாடத்திட்டத்தினை 3257 உயர்நிலைப் பள்ளிகளும், 2225 மேல்நிலைப் பள்ளிகளும் பின்பற்றுகின்றன. இப்பள்ளிகளில் பயிலும் குழந்தைகளின் எண்ணிக்கை வருமாறு:

| | | |
|---|---|---|
| மாணவர்கள் | : | 27.39 இலட்சங்கள் |
| மாணவியர் | : | 20.55 இலட்சங்கள் |
| மொத்தம் | : | 47.94 இலட்சங்கள் |

**புதிய உயர்நிலைப் பள்ளிகள் திறத்தல்:**

1986-87-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் நடத்தப்பெற்ற 5வது கல்வி அளவீட்டின்படி 6 கி.மீ. தூரத்திற்கு அப்பால் உயர்நிலைப் பள்ளிக் கல்வி வசதியுடைய குடியிருப்புப் பகுதிகள் எண்ணிக்கை பின்வருமாறு:

| | மக்கள் தொகை | குடியிருப்புப் பகுதிகள் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | 5000ம் பேரும் அதற்கு மேலும் | 11 |
| 2. | 2000ம் பேரிலிருந்து 4999 பேர்வரை | 198 |
| 3. | 1000ம் பேரிலிருந்து 1999 பேர்வரை | 944 |

குடியிருப்புப் பகுதிகளில், தேவைக்கேற்ப 14-16 வயது நிலையிலுள்ள மாணவர்களைப் பள்ளிகளில் அதிகம் சேர்க்கும் பொருட்டு ஒவ்வொரு ஆண்டும் புதிய உயர்நிலைப் பள்ளிகள் திறக்கப்படுகின்றன. 1995-96-ஆம் ஆண்டில் 40 ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகள் அரசு உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்படவுள்ளன. அரசுக் கொள்கையின்படி கிராமப்புறங்களில் புதிய அரசுப் பள்ளிகள் திறக்க அனுமதி வழங்கப்படுகிறது.

அரசுக் கொள்கையின்படி 1991-92 ஆம் ஆண்டிலிருந்து திறக்கப்படும் /அங்கீகரிக்கப்படும் தனியார் பள்ளிகள், சுயநிதியில் செயல்பட வேண்டும் என்ற நிபந்தனையின் கீழ் அனுமதிக்கப்படுகின்றன. இன்றியமையாத் தேவையை முன்னிட்டே அரசு/ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகள் அரசு உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்படும்.

**அறிவியல் கல்வி முன்னேற்றம் :**

உயர்நிலைப் பள்ளிகளில் ஆய்வகம் அமைக்கப்படவேண்டும் என்னும் மாநிலத் திட்டத்தின் கீழ், 1994-95ம் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட 13 பள்ளிகளையும் சேர்த்து 1176 உயர்நிலைப் பள்ளிகளில் அறிவியல் ஆய்வகம் அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் அரசு உயர்நிலைப் பள்ளி ஒவ்வொன்றுக்கும் ரூ. 1.70 இலட்சம் செலவில் ஆய்வகக் கட்டடம் கட்டப்படும். ரூ. 30,000 மதிப்புள்ள அறிவியல் ஆய்வகக் கருவிகள் வழங்கப்படும். 1995-96ம் ஆண்டில் 30 அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கு ரூ.60 இலட்சம் செலவில் அறிவியல் ஆய்வக வசதிகள் செய்து கொடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**தென் இந்தியா அறிவியல் பொருட்காட்சி:**

தென் இந்தியா அறிவியல் பொருட்காட்சியில் தமிழகத்தில் உள்ள பள்ளிகளும் 1980-ஆம் ஆண்டு முதல் பங்கேற்கின்றன. இந்த பொருட்காட்சி ஆண்டுதோறும் பெங்களூரில் உள்ள விஸ்வேஸ்வரய்யா தொழில்நுட்ப அருங்காட்சியகத்தால் நடத்தப்படுகிறது. தமிழகத்தில் உள்ள பள்ளிகள் தொடர்ந்து இந்த அறிவியல் பொருட்காட்சியில்

பங்கேற்கின்றன. கடந்த மூன்று ஆண்டுகளாக அறிவியல் பொருட்காட்சியில் வழங்கப்படும் சுழல் கேடயத்தை தமிழகத்தில் உள்ள பள்ளிகள் தக்க வைத்துக்கொண்டது குறித்து நாம் பெருமைப்படுகிறோம்.

மாணவர்களுக்கு உதவித்தொகையும் சிறந்த ஆசிரியர்களுக்கு விருதும் வழங்கப்படுகின்றன.

**மாநில அறிவியல் பொருட்காட்சி:**

ஆண்டுதோறும் மாநில அளவில் அறிவியல் பொருட்காட்சி நடத்தப்படுகின்றது. இந்த ஆண்டு 1995 பிப்ரவரியில் மாநில அறிவியல் பொருட்காட்சி திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில் நடைபெற்றது. இந்த அறிவியல் பொருட்காட்சி (என்.சி.இ.ஆர்.டி.-யின்) தேசீய கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சிக் குழுவின் ஒத்துழைப்புடன் நடத்தப்படுகின்றது.

**பள்ளிக் கட்டடங்கள் கட்டுதல்.**

அனைத்துப் பள்ளிகளுக்கும் கட்டடத் தேவை மிகுந்துள்ளது. இதற்கென மாநில அரசு ஈட்டுமானிய அடிப்படையில் ஆண்டுதோறும் நிதி ஒதுக்கீடு அளித்து வருகிறது. இதற்காக 1994-95-இல் தமிழக அரசு ரூ. 75.00 இலட்சம் அனுமதித்துள்ளது. இவ்வகையில் 1995-96-ஆம் ஆண்டிற்கென ரூ. 150.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**தமிழகத்தில் உள்ள அனைத்துப் பள்ளிகளுக்கும் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தல்.**

அரசு ஆணையின்படி அரசு பள்ளிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் குறித்து பள்ளிக் கல்வி இயக்குநரால் அளவை (Survey) ஒன்று மேற்கொள்ளப்பட்டது. பள்ளிக் கல்வி இயக்குநரால் தயாரிக்கப்பட்ட அறிக்கையின்படி, பள்ளிகளுக்கு தேவையான வகுப்பு கட்டட வசதிகள், குடிநீர் வசதி, கழிப்பறை வசதி, அறிவியல் உபகரணங்கள், நூலக வசதி, விளையாட்டு மைதானம், மேசை நாற்காலி ஆகிய தளவாடங்கள் போன்றவற்றை 1994-95-ஆம் ஆண்டு முதல் மூன்று ஆண்டுகளில் வழங்க அரசு திட்டம் ஒன்றை வகுத்துள்ளது. இதற்கான விரிவான ஆணைகளையும் ஜூலை 1994-ல் வழங்கியுள்ளது.

உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளுக்கு அடிப்படை வசதிகளை அமைத்துத் தரல் என்ற மாண்புமிகு முதலமைச்சரின் சிறப்புத் திட்டத்தின் கீழ் 665 அரசு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவியர்களுக்கென கழிப்பறை வசதி செய்து கொடுக்கும்

வகைக்கென 1994-95-ஆம் ஆண்டில் அரசு ரூ. 4.00 கோடி ஒதுக்கியுள்ளது. மேலும், இத்திட்டத்தின் கீழ் 1995-96-ஆம் ஆண்டிற்கென அரசு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவியர்களுக்கென கழிப்பறை வசதி செய்து கொடுக்க ரூ. 2 கோடி ஒதுக்க திட்டமிடப்பட்டுள்ளது. 1994-95 முதல் 2390 உயர்/மேல்நிலைப் பள்ளிகளுக்கு 3 ஆண்டுகளில் வகுப்பறைகள் கட்டித் தரப்படவிருக்கிறது.

## பாடத்திட்டம் புதுப்பித்தல்:

தற்போது பள்ளிகளில் பின்பற்றப்படும் பாடத்திட்டம் 6 ஆண்டுகளுக்கு முன்னர் புதுப்பிக்கப்பட்டது. அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியலில் கண்டுள்ள தற்போதைய முன்னேற்றங்களைக் கருத்திற்கொண்டு பள்ளிப் பாடத்திட்டத்தைத் திருத்தியமைக்க அரசு முடிவெடுத்து, இரு உயர்மட்டக் குழுக்களை அமைத்தது. (1 முதல் 5ம் வகுப்பு முடியவுள்ள பாடத்திட்டத்திற்கு ஒரு உயர்மட்டக்குழுவும், 6வது வகுப்பிலிருந்து 12ம் வகுப்புகளுக்குண்டான பாடத்திட்டத்தைத் திருத்தியமைக்க மற்றொரு உயர்மட்டக்குழுவும்) 6 முதல் 12ம் வகுப்புகளுக்கான பாடத்திட்டம் பள்ளிக்கல்வி இயக்குநரின் தலைமையில் அமைக்கப்பட்ட உயர்மட்டக்குழுவால் திருத்தியமைக்கப்பட்டு அதற்கு அரசும் ஒப்புதல் அளித்துள்ளது.

திருத்தியமைக்கப்பட்ட பாடத் திட்டம் 1995-96-ஆம் ஆண்டு முதல் 1, 6, 11 வகுப்புகளில் அமுலாக்கப்படும்.

## பெண் கல்வி முன்னேற்றம்:

விகிதாச்சார வளர்ச்சியும் சமூக நீதியும் பெற, பெண் கல்வியும் சமத்துவமும் இன்றியமையாதவையாகும்.

பள்ளியில் சேரத் தகுதியுடைய வயதிலுள்ள பெண்களின் எண்ணிக்கையும் பள்ளியில் சேர்ந்து பயிலும் பெண்களின் எண்ணிக்கையும் கீழ் வருமாறு:

| வயதுநிலை | பள்ளிசெல்லும் வயதுள்ள பெண்களின் எண்ணிக்கை | பள்ளியில் சேர்ந்துள்ள பெண்களின் எண்ணிக்கை | பள்ளியில் சேர்க்கை விழுக்காடு. |
|---|---|---|---|
| 6-11 | 39,78,800 | 37,62,635 | 94.57 |
| 11-14 | 18,45,600 | 16,14,565 | 87.48 |
| 14-16 | 10,21,800 | 5,52,370 | 53.96 |
| 16-18 | 9,63,600 | 2,50,729 | 26.02 |

பள்ளிகளில் 1 முதல் 12ம் வகுப்புவரை சேர்ந்துள்ள 137.39 இலட்சம் குழந்தைகளில் 61.79 இலட்சம் பேர், அதாவது 44.98 விழுக்காடு மாணவியர் ஆவர். பள்ளிகளில் பணியாற்றும் 2,95,710 ஆசிரியர்களில் 1,27,352 பேர் ஆசிரியைகள் ஆவர். இது மொத்தத்தில் 43.07 விழுக்காடு ஆகும். நம் மாநிலத்தில் பெண் கல்விக்கு பெரும் ஊக்கம் அளிக்கப்படுகிறது. பெண்கள் கல்வியையும், சமத்துவத்தையும் நிலைநாட்ட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிமுகப்படுத்தியுள்ள திட்டங்களாவன:

1. கல்வி அறிவு பெற்றுள்ள பெண்களுக்கு சிறப்புத் திருமண மான்யம் அளித்தல்.
2. சிறு குடும்ப நெறியைப் பின்பற்றும் பெண்களுக்கு சிறப்பு ஊக்க நிதி வழங்கல்.
3. 11 முதல் 14 மற்றும் 14 முதல் 16 வயது வரம்பிலுள்ள ஆதி திராவிடர் / மலைவாழ் மக்கள் இனத்தைச் சார்ந்த பெண் குழந்தைகளைப் பள்ளிகளில் அதிக அளவில் சேர்த்து இப்பெண் குழந்தைகளைத் தொடர்ந்து கல்வி பயிலச் செய்தல், மேலும் இதில் சிறப்புத் திறன் பெற்ற பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு பணப்பரிசு வழங்கல்.
4. பெண் கல்வியை ஊக்குவிக்கும் வகையில் 1 முதல் 5 வகுப்புகளுக்கு ஆசிரியைகளே நியமிக்கப்படுகின்றனர்.
5. மகளிர் கல்வியின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு தமிழ் நாடு அரசால் தயாரிக்கப்பட்ட டாக்டர். ஜெயலலிதா 15 அம்ச குழந்தைகள் நலத் திட்டத்தின் கீழ் இதுவும் ஒன்றாக கொணரப்பட்டுள்ளது. இதன்படி கி.பி.2000 ஆண்டுக்குள் மகளிர் கல்வியில் 100 விழுக்காட்டை அடைய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## பள்ளி ஒருங்கிணைப்பு:

கல்வி முன்னேற்றத்தினைக் கருத்திற் கொண்டு பள்ளி ஒருங்கிணைப்புத் திட்டம் சீரிய முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினால் மேல்நிலைப் பள்ளிகளிலுள்ள அறிவியல் ஆய்வக வசதிகள், நூலகம், விளையாட்டு மைதானம், ஒலி ஒளிக் கருவிகள், சிறப்பாசிரியர்களின் பணி ஆகியவை அருகிலுள்ள, இவ்வகையான வசதிகளில்லாத பள்ளிகளுக்கும் பயன்படுத்தப்பட்டு அங்குள்ள மாணவர்களும் பயனடைகிறார்கள்.

**சிறப்பு மேற்பார்வைக் கல்வி:**

*ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ/மாணவிகளின் கல்வியை மேம்படுத்தும் வகையில் 8,9,10-ம் வகுப்பு மாணவ/மாணவியர்க்கு ஆங்கிலம், கணக்கு மற்றும் அறிவியல் பாடங்களில் பள்ளி வேலை நாட்களில்-மாலை வேளைகளில் பள்ளி முடிந்த பின்னர் சிறப்பு மேற்பார்வைக் கல்வி நடைபெற்று வருகிறது. இத்திட்டம் 625 உயர்நிலைப் பள்ளிகளில் நடைபெற்று வருகிறது. 11 மற்றும் 12-ஆம் வகுப்புகளில் பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ/மாணவியர் பயன்பெறும் வகையில் 375 மேல்நிலைப் பள்ளிகளிலும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.*

*இது தவிர வீட்டில் போதிய வசதிகளற்ற பிற மாணவர்களும் கல்வியில் முன்னேற்றம் காணும் வகையில், அனைத்துப் பள்ளிகளிலும் பள்ளி உணவு இடைவேளையிலோ அல்லது மாலையிலோ ஆசிரியர்களின் மேற்பார்வையின் கீழ் மாணவர்களைப் பயிலச் செய்யும் முறையும் தீவிரமாக நடைமுறைப்படுத்தப்படுகிறது.*

**பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள்:**

*அனைத்து கல்வி வளர்ச்சிச் செயல்பாடுகளிலும் பொதுமக்களின் ஈடுபாடு அதிகரித்துவருவது என்பது விரும்பத்தக்க ஒன்றாக தற்போது உணரப்படுகிறது. பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் மூலமாக கல்வி வளர்ச்சிச் செயல்பாடுகளில் தமிழகம் முன்னோடி மாநிலமாக விளங்குகிறது. 1993-94 மற்றும் 1994-95-ஆம் ஆண்டுகளில் மேற்படித் திட்ட முயற்சியின் விளைவாக ரூபாய் 28.85 கோடி மதிப்புள்ள அசையும் மற்றும் அசையாச் சொத்துக்கள் பெறப்பட்டு பள்ளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டம் 1995-96-க்கான செயல்முறைத் திட்டங்களில் இடம் பெறுகிறது.*

**பள்ளிக் கல்வி புரவலர் திட்டம்:**

*ஆசிரியர்கள் விடுப்பில் செல்லும்போது பள்ளிகளில் கற்பித்தல்-கற்றல் பாதிக்கப்படாதிருக்கும் பொருட்டும், அனைத்துப் பள்ளி வேலை நாட்களும் கற்பித்தல்-கற்றல் நாளாக இருத்தல் வேண்டும் என்பதற்காகவும் விடுப்புக் காலியிடங்களில் பதிலி ஆசிரியர்களை நியமிக்க வேண்டியுள்ளது. இந்தச் செலவினத்திற்காக அரசின் நிதியை எதிர்நோக்காமல், ஊர் பொதுமக்களில் கொடையுள்ளம் கொண்டவர்களின் ஒத்துழைப்பை நாடி, பள்ளியின் வளர்ச்சிக்கென ரூ.1,000/- க்கு குறையாமல் பள்ளிக்கு நன்கொடையாக வழங்கிடுவோரை*

பள்ளிக் கல்விப் புரவலர்களாக அங்கீகாரம் செய்யும் திட்டம் அமுலாக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு பள்ளிக்கும் கல்விப் புரவலர்களால் அளிக்கப்படும் நன்கொடைத் தொகை அஞ்சலக சிறுசேமிப்புக் கணக்கில் முதலீடு செய்யப்பட்டு அத்தொகைக்கு கிடைக்கும் வட்டிப் பணத்தில் இருந்து பள்ளியில் விடுப்புப் பணியிடங்களில் நியமனம் செய்யப்படும் பதிலி ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்கப்படுகிறது. கல்விப் புரவலர் திட்டத்தின் கீழ் 1994-95-ஆம் ஆண்டில் 11,837 கல்விப் புரவலர்களால் ரூ. 1.19 கோடி நன்கொடையாகப் பள்ளிகளுக்கு வழங்கப்பட்டு உள்ளது. 1995-96-ம் ஆண்டிலும் மேலும் தீவிர முயற்சிகள் மேற்கொண்டு கல்விப் புரவலர்களைச் சேர்ந்து அதன்மூலம் கற்பித்தல் கற்றல் செம்மையாக நடைபெறச் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

**பள்ளிகளை தத்து எடுத்துக் கொள்ளல்:**

பள்ளிகளின் பெருக்கம் (மற்றும்) வளர்ச்சி ஆகியவற்றுக்கு ஈடுகொடுத்து வசதிகளைப் பெருக்க பொதுமக்களின் ஈடுபாடு இன்னும் அதிகம் தேவைப்படுகிறது. இதற்கு வாய்ப்பு அளிக்கின்ற வகையில் அரசு பள்ளிகளைத் தத்து எடுத்துக்கொள்ளும் திட்டத்தை அரசு அறிவித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் அரசு நிறுவனமோ, தனியார் நிறுவனமோ, தொழிற்சாலைகளோ, வங்கிகளோ, சமூகசேவை நிறுவனங்களோ, தொழில் நிறுவனங்களோ, வணிக நிறுவனங்களோ அல்லது தனி நபரோ பள்ளிகளை தத்து எடுத்துக்கொள்ள முன்வரலாம். இத்திட்டத்தினால் பள்ளிகளின் இன்றியமையாத தேவைகளான போதிய கட்டட வசதி, குடிநீர், ஆய்வகக் கருவி, தளவாடங்கள் போன்றவைகளை பெற ஏதுவாகும்.

**பெற்றோர் ஆசிரியர் கழகம்:**

பள்ளிகளின் கல்வித் தரத்தை உயர்த்திடும் வகையில் ஆசிரியர்களும் பெற்றோர்களும் அரசுடன் ஒத்துழைக்க பெற்றோர் ஆசிரியர் கழகம் ஒரு சிறந்த அமைப்பாக விளங்குகிறது. 1994-95-ம் ஆண்டிலிருந்து 1975-ஆம் ஆண்டு சங்க விதியின்படி பதிவு செய்யப்பெற்ற சங்கமாக இது இயங்கிவருகிறது.

பெற்றோர் - ஆசிரியர் சங்கம் அமைக்கப்பட்டதன் நோக்கங்களாவன:-

(1) பள்ளி செல்லும் வயதிலுள்ள குழந்தைகளைப் பள்ளிகளில் சேர்த்தல்.

(2) பள்ளிப் படிப்பை இடையில் விட்டுவிடும் மாணவர்களின் எண்ணிக்கை இல்லாமல் செய்வது.

(3) கற்பித்தல்-கற்றல் ஆகியவற்றைச் சிறப்பாக்கி ஒரே வகுப்பில் மாணவர் தேக்கத்தை இல்லாமல் செய்வது.

பள்ளி நலனுக்காகப் பொதுமக்களிடமிருந்து நன்கொடைகள் பெறல், கட்டடம் கட்டுதல், மின்வசதி செய்தல், குடிநீர் வசதி செய்தல், கழிவறை வசதி, ஆய்வகக் கருவி வாங்கல், நூலகப் புத்தகங்கள் வாங்கல் ஆகிய பணிகளையும் பெற்றோர் ஆசிரியர் கழகம் செய்து வருகிறது.

## கல்வி இணைச் செயல்பாடுகள்

### பாரத சாரண/சாரணியர் இயக்கம்:

மாநிலத்திலுள்ள பள்ளிகளில் 3,462 பள்ளிகளில் பாரத சாரண/சாரணியர் இயக்கம் நடைபெற்று வருகிறது. இந்த இயக்கத்தின்கீழ் 83,640 சாரணர்களும், 49,980 சாரணியர்களும் பொதுத் தொண்டில் ஈடுபட்டு வருகின்றனர்.

## மேல்நிலைப் பள்ளிக் கல்வி:

### புதிய மேல்நிலைப் பள்ளிகள் தொடங்குதல்:

கோத்தாரி கல்விக் குழுவின் (1964-66) பரிந்துரையின்படி 10+2+3 கல்விமுறை தமிழ்நாட்டில் 1978-79-ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்டது. 11 மற்றும் 12-ம் வகுப்புகள் பள்ளிகளில் இடம்பெற்றன. இந்த அமைப்பினால் கிராமப்புற மாணவர்கள் அதிக எண்ணிக்கையில் பயனடைந்து வருகின்றனர்.

5-வது அகில இந்தியக் கல்வி அளவீட்டின்படி 8 கி.மீ. தொலைவில் மேல்நிலைப் பள்ளி வசதியுள்ள மக்கள் தொகையும் குடியிருப்புகளும் வருமாறு:-

| மக்கள் தொகை | குடியிருப்பு பகுதிகள் |
|---|---|
| 1. 5000 பேரும் அதற்கு மேலும் | 28 |
| 2. 2000 பேருக்கு மேல் 4999 பேர்வரை | 680 |



சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1992-93 முதல் 1994-95 முடிய 234 மேல்நிலைப் பள்ளிகள் திறக்கப்பட்டன. (1994-95-ம் ஆண்டு திறக்கப்பட்ட 12 பள்ளிகளையும் சேர்த்து) 1995-96-ம் ஆண்டில் பல்வேறு பகுதிகளில் மேலும் 30 அரசினர் உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது. 30-9-1994-ம் நாளைய கணக்கின்படி 16 முதல் 18 வயது வரையிலான 19.50 இலட்சம் பேரில் 16.07 இலட்சம் மாணவர்கள் மேல்நிலை வகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளனர். இது 31.13 விழுக்காடு ஆகும்.

**மேல்நிலைப் பள்ளிக் கல்வி நிலையில் தொழிற்கல்வி:**

மேல்நிலைப் பள்ளி நிலையில் தொழிற் கல்வியை அறிமுகப்படுத்துவதில் நம் தமிழகத்திற்கு அகில இந்திய அளவில் பெருமை கிடைத்துள்ளது.

விவசாயம், மனையியல்,வணிகவியல், பொறியியல் மற்றும் தொழில்நுட்பவியல், பொது சுகாதாரம் மற்றும் இதர பாடங்கள் என்ற 6 இனங்களில் 66 பாடங்கள் மேல்நிலைப் பள்ளி நிலையில் தொழிற் கல்வித் திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற்கல்வி பற்றிய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:-

| | | | 1994-95 |
|---|---|---|---|
| 1. | மேல்நிலைப் பள்ளிகளின் மொத்த எண்ணிக்கை | - | 1,757 |
| 2. | தொழிற்கல்வி வழங்கப்படும் மேல்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை | - | 1,313 |
| 3. | 11 மற்றும் 12-ம் வகுப்புகளில் பயிலும் மொத்த மாணவர் எண்ணிக்கை | - | 6,07,207 |
| 4. | தொழிற்கல்வி வகுப்புகளில் பயிலும் மாணவர் எண்ணிக்கை | - | 1,15,233 |
| 5. | மொத்த மாணவர் எண்ணிக்கையில் தொழிற் கல்வி பயிலும் மாணவர் விழுக்காடு | - | 18.28 |
| 6. | தொழிற்கல்வி ஆசிரியர்களின் எண்ணிக்கை | - | 3,534 |

தமிழ்நாட்டில் தொழிற்கல்வியை மேல்நிலைப் பள்ளிகளில் மேலும் சிறப்பாகச் செயல் முறைப்படுத்த உரிய வழிமுறைகளைப் பரிந்துரைக்க வல்லுநர் குழுவை அரசு அமைத்தது. இக்குழு, அரசு மட்டத்தில்

1995 ஏப்ரல் 24 ]

எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் பற்றிய பரிந்துரைகள் அளித்துள்ளது. இப்பரிந்துரைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

பகுதிநேர தொழிலாசிரியர்களின் குறைகளைத் தீர்க்கும் முகத்தான் அரசு 23-9-1994 அன்று 1,990 முழுநேர பணியிடங்களைப் புதிதாக ஏற்படுத்தி அவற்றில் முழுத் தகுதி வாய்ந்த பகுதிநேர தொழிலாசிரியர்களை நியமிக்க ஆணை வழங்கியது. அதன்படி 1,990 முழுத் தகுதி பெற்ற பகுதிநேர தொழிலாசிரியர்கள் ரூ. 1400-2600 என்ற சம்பள விகிதத்தில் முறையான பணியில் 23-9-1994 முதல் ஈர்த்துக் கொள்ளப்பட்டனர். 16-12-1992-ம் தேதிக்குப் பிறகு முழுக் கல்வித் தகுதி பெற்ற 35 பகுதிநேர தொழிலாசிரியர்களும் இடைநிலை ஆசிரியர் ஊதிய விகிதத்தில் முறையான பணியில் அமர்த்தப்பட்டனர். மேலும், இதுநாள் வரை முழுக்கல்வி தகுதி பெறாத 1,059 பகுதிநேர தொழில் ஆசிரியர்கள் மாவட்டக் கல்வி பயிற்சி நிறுவனத்தில் 17-1-1995 முதல் அளிக்கப்படும் குறுகிய காலப் பயிற்சிக்கு அனுப்பப்பட்டுள்ளனர். இப்பயிற்சி முடிந்த பிறகு இவர்களும் இடைநிலை ஆசிரியர் ஊதியவிகிதத்தில் முறையான பணியின் கீழ் அமர்த்தப்படுவார்கள்.

அரசின் மேற்காணும் நடவடிக்கை பகுதிநேர தொழில் ஆசிரியர்களிடையே பத்தாண்டுகளுக்கும் மேலாக இருந்து வந்த பிரச்சினையைத் தீர்த்துவைத்துள்ளது.

**மைய அரசின் திட்டங்கள்:**

1986-ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட தேசியக் கல்விக் கொள்கையின்படி கீழே குறிப்பிடப்பட்டுள்ள மைய அரசின் திட்டங்கள் பள்ளிக் கல்வித்துறையினால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன:-

**அறிவியல் கல்வி வளர்ச்சி:**

அறிவியல் கல்வி வளர்ச்சி என்னும் திட்டத்தின்கீழ் 3,302 உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கு அறிவியல் கருவிகளும், அறிவியல் நூல்களும் வழங்கப்படுகின்றன. மாவட்டங்களில் மாவட்டக் கருத்து மையங்கள் தொடங்கப் பெற்றுள்ளன. மைய அரசு இதுவரையில் 1,212.81 இலட்சம் ரூபாயை நான்கு கட்டங்களாக இத்திட்டத்திற்கென வழங்கியுள்ளது.

**மேல்நிலைப் பள்ளிக் கல்வியைத் தொழில் மயமாக்குதல்:**

1986 தேசிய கல்விக் கொள்கையில் குறிப்பிட்டபடியும், தொழிற் கல்விக்கென மாநிலத்திற்கு உதவிட வேண்டும் என்ற நோக்கத்திலும்

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

[1995 ஏப்ரல் 24

மேல்நிலைக் கல்வி நிலையில் தொழிற்கல்வி மயமாக்கும் திட்டத்திற்கு மைய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. அதன்படி தொழிற்கூடம் அமைக்கவும், தொழில் கருவிகள் வாங்குவதற்குமான 100% பொருளுதவி கொண்ட மைய அரசு திட்டத்தின்படி 660 மேல் நிலைப் பள்ளிகளில் தொழிற்கூடம் கட்டுவதற்காகவும், தொழில் கருவிகள் வாங்குவதற்காகவும், மைய அரசு ரூ. 1,841.46 இலட்சங்களை தமிழக அரசுக்கு வழங்கியுள்ளது. மேலும் தொழிற்கல்வி ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்க மைய அரசு ரூ. 152.96 இலட்சங்களை வழங்கியுள்ளது.

## இயலாதோர் ஒருங்கிணைந்த கல்வித் திட்டம்:

பள்ளிகளில் இயலாத குழந்தைகளையும் பிற நல்ல நிலையில் உள்ள மாணவர்களுடன் கலந்து கல்வி பயில வாய்ப்பளிக்க வேண்டும் என்று 1986 தேசிய கல்விக் கொள்கை கூறுகிறது. இதன்படி (1) பார்க்க இயலாத (2) கேட்க இயலாத (3) மனவளர்ச்சி குறைந்த (4) உடற்குறையுடைய குழந்தைகளைப் பிற குழந்தைகளுடன் இணைத்து கல்விப் பயிலச் செய்யவேண்டும். வாழ்வைத் துணிவுடன் எதிர்கொள்ள உரிய வழியில் அவர்களை உருவாக்க வேண்டும். இத்திட்டம் தமிழகத்தில் 6 ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்கென நடுவண் அரசு ரூ. 31.85 இலட்சம் வழங்கியுள்ளது.

## கணினி வழி எழுத்தறிவு

1984-85-ம் ஆண்டு முதல் நாடு முழுவதிலும் தெரிந்து எடுக்கப்பட்ட உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் ஒரு முன்னோடித் திட்டமாகக் கணினி எழுத்தறிவு மற்றும் கல்வி திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்காகத் தமிழ்நாட்டில் 147 பள்ளிகள் தெரிந்து எடுக்கப்பட்டன. அவற்றுள் 138 பள்ளிகள் பள்ளிக் கல்வி இயக்குனரின் நிர்வாகத்தின்கீழ் வருகின்றன. மீதமுள்ள 9 பள்ளிகள் கேந்திரிய வித்யாலயா பள்ளிகள் ஆகும். மேலும் 57 பள்ளிகள் புதிதாகத் தெரிந்தெடுக்கப்பட உள்ளன.

397 மேல்நிலைப் பள்ளிகளில் பொதுக் கல்வியில் தொழிற் பிரிவாகக் கணினி கற்பிக்கப்படுகிறது.

நடுவண் அரசால் புதிதாக வழங்கப்பட்டுள்ள வழிமுறைகளின்படி தமிழக அரசு இந்தத் திருத்தப்பட்ட திட்டத்தை அமுல்படுத்த விரிவான ஆணைகள் வழங்கியுள்ளது.

திருத்தப்பட்ட திட்டத்தின்கீழ் கீழ்க்கண்டுள்ள வசதிகள் செய்து தர வழிவகை செய்யப்பட்டுள்ளது:

1995 ஏப்ரல் 24 ]

(1) பள்ளிக் கல்வி இயக்ககத்தில் தனியாக ஒரு அமைப்பு (Separate Cell) அமைத்தல்.

(2) இத்திட்டத்தின் கீழ் தெரிந்தெடுக்கப்பட்ட பள்ளிகள் 11 மற்றும் 12-ஆம் வகுப்புகளில் பயிலும் அனைத்து மாணவர்களிடமிருந்தும் மாதம் ரூ. 40/- கட்டணமாக வசூலித்தல்.

(3) எல்லா வசதிகளுடன் கூடிய வகுப்பு அறை. முழுநேர ஆசிரியர் ஒருவர் நியமித்தல், மேற்கண்ட பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்தல், தேர்தெடுக்கப்பட்ட கணினி வழி எழுத்தறிவு உபகரணங்கள் மாணவர்களுக்கு வழங்குதல்.

இத்திட்டத்தைச் செயல்படுத்த நடுவண் அரசு ரூ. 169.90 இலட்சம் வழங்கியுள்ளது.

**கல்வித் தொலைக்காட்சி:**

தமிழகத்தில் கல்வித் தொலைக்காட்சி நிலையம் ஒன்று மைய அரசின் உதவியுடன் ரூ. 85/- இலட்சம் செலவில் நிறுவப்பட்டுள்ளது. மாநில கல்வி நுட்பவியல் நிறுவனம் வானொலி மற்றும் தொலைக்காட்சிக்கு ஒலி/ஒளி நாடாக்கள் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. அவ்வாறு வழங்கப்பட்ட கருவிகள் மூலம் மாநிலத்தின் பெரும் கல்வி வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும்.

**நாட்டு நலப்பணித்திட்டம்:**

நாட்டு நலப்பணித் திட்டம் மைய அரசின் பொருளுதவி பெறும் திட்டமாகும். மைய மற்றும் மாநில அரசுகள் 7 : 5 விகிதத்தில் இத்திட்டத்திற்கான செலவினத்தை மேற்கொள்கின்றன. தமிழ்நாட்டில் 1,000 மேல்நிலைப் பள்ளிகளில் நாட்டு நலப்பணித் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. ஒரு பள்ளிக்கு 50 மாணவர்கள் என்ற முறையில் 50,000 மாணவர்கள் இத்திட்டத்தில் சேர்த்து நாட்டு நலப்பணி புரிகிறார்கள். மரம் நடுதல், பள்ளி வளாகங்களைச் சீரமைத்தல், விளையாட்டு மைதானங்களை உருவாக்கி, எழுத்தறிவின்மையைப் போக்குதல், கிராமப்புறச் சாலை அமைத்தல், போக்குவரத்தை ஒழுங்குபடுத்தல், மருத்துவப் பணி செய்தல் ஆகிய சேவைகளில் நாட்டு நலப் பணித்திட்ட மாணவர்கள் ஈடுபடுத்தப் படுகிறார்கள். நாட்டு நலப் பணி நடைமுறைப்படுத்தப்படாத

மேல்நிலைப் பள்ளிகளில் டாக்டர் ஜெ. ஜெயலலிதா மாநில நலப்பணித் திட்டம் என்ற புதிய திட்டத்தைத் தொடங்க அரசு தீர்மானித்துள்ளது. 1994-95-ஆம் ஆண்டில் இப்புதிய திட்டம் 100 மேல்நிலைப் பள்ளிகளில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

## மொத்த நிதி ஒதுக்கீடு

| வரிசை எண் | ஆண்டு | வரவு செலவு மதிப்பீடு | | திருத்திய மதிப்பீடு | |
|---|---|---|---|---|---|
| | | திட்டத்தில் சேராதது. | திட்டம் | திட்டத்தில் சேராதது. | திட்டம் |
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | | |
| 1. | 1992-93 | 44,849.82 | 864.77 | 48,421.22 | 854.63 |
| 2. | 1993-94 | 52,130.14 | 1,145.97 | 59,366.41 | 1,361.22 |
| 3. | 1994-95 | 61,922.16 | 1,638.73 | 64,995.01 | 1,418.88 |
| 4. | 1995-96 | 70,907.43 | 2,179.19 | | |

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1995 ஏப்ரல் 24 ]

## (iii) ஆசிரியர் கல்வி, ஆய்வு மற்றும் பயிற்சி

### ஆசிரியர் கல்வி:

தொடக்கப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்குப் பணியிடைப் பயிற்சி வழங்குவதற்காக மாநிலக் கல்வி நிறுவனம் 1965-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. 1976 மே திங்களில் மாநிலக் கல்வி நிறுவனம் மாநிலக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனமாக மேம்படுத்தப்பட்டது. மறுபடியும், வளர்ந்து வரும் ஆசிரியர் கல்வியின் தேவையை உணர்ந்து 1990-ஆம் ஆண்டு அக்டோபர் முதல் நாளிலிருந்து "ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம்" தனியே உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இடைநிலை ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் 21 மாவட்டக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் இவ்வியக்கத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

இவைகளைத் தவிர இவ்வியக்ககம் மாநில நடுவண் அரசு, யுனிசெப், தேசிய கல்வி ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம் ஆகியவற்றின் திட்டங்களையும் செயற்படுத்துகிறது. யுனிபா (UNIFA) ஊனமுற்ற குழந்தைகளுக்கான ஒருங்கிணைந்த கல்வி (PIED) வட்டார தீவிரக் கல்வித் திட்டம் (AIEP) மழலையர் கல்வி (ECE), குறைந்தபட்ச கற்றல் இலக்குகள் (MLL) பர்கூரில் தொடங்கப்பட்டுள்ள புரட்சித் தலைவி சீர்மிகு உயர்பள்ளி (School of Excellence) (தற்பொழுது கிருஷ்ணகிரியில் அமைக்கப்பட்டு, மாவட்ட ஆசிரியர் கல்வி நிறுவனத்தில் நடைபெறுகிறது) பள்ளிகளில் கணிப்பொறிக் கல்வி (CLASS PROJECT) மக்கள் தொகைக் கல்வித் திட்டம், தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கான நெறிப்படுத்தும் பயிற்சி (SOPT), திறந்தவெளிப் பள்ளித் திட்டம் ஆகிய திட்டங்கள் 1993-94-ஆம் ஆண்டிலிருந்து இவ்வியக்கத்தால் திறம்பட செயல்படுத்தப்பட்டு வருகின்றன. திறந்த வெளிப் பள்ளித் திட்டத்தில் முதல் கட்ட மாணவர்களுக்கு தேர்வு நடைபெற்றுள்ளது. 1993-94-ஆம் ஆண்டில் மழலையர் கல்வித் திட்டத்தின்மூலம் குழந்தைகளின் ஒருமித்த வளர்ச்சியை மையமாகக் கொண்டு இவ்வியக்ககம் பல பயிற்சிகள் நடத்தி வருகின்றது. மாநிலத்தில் உள்ள சமூக நலத்துறையைச் சார்ந்தவர்களும், மாவட்ட ஆசிரியர் கல்வி நிலைய ஆசிரியர்களும் பயனடையுமாறு செங்கை எம்.ஜி.ஆர், வடஆற்காடு அம்பேத்கார், சேலம் மற்றும் பெரியார் மாவட்டங்களில் 34 பயிற்சிக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. இத்திட்டம் மேலும் ஒன்பது மாவட்டங்களில் 1994-முதல் நடைபெற்று வருகிறது.

[1995 ஏப்ரல் 24

## குறைந்தபட்ச கற்றல் இலக்குகள் திட்டம்

குறைந்தபட்ச கற்றல் இலக்குகள் திட்டம் (Minimum Levels of Learning) தமிழகத்தில் 1993-94-ஆம் ஆண்டு முதல் தெரிந்தெடுக்கப்பட்ட 420 தொடக்கப் பள்ளிகளில் இருபத்தியொன்று மாவட்டக் கல்வி பயிற்சி மையங்களின் உதவியுடன் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்றது. 1994-95-ஆம் கல்வியாண்டில் தமிழக அரசு இத்திட்ட மேம்பாட்டிற்கென ரூ. 5 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து திட்டம் மேம்பாடுற உள்ளது. ஒன்று முதல் மூன்று வகுப்புகள் வரை வெற்றிகரமாக இத்திட்டம் செயல்படுவதால் 1994-95-ஆம் ஆண்டில் நான்கு மற்றும் ஐந்தாம் வகுப்புகளிலும் இத்திட்டம் விரிவு-படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் அடிப்படையில் முதல் மற்றும் ஐந்தாம் வகுப்புப் பாடத்திட்டங்கள் இந்த அணுகு முறைகளில் உருவாக்கப்பட்டுள்ளது. இப்புதிய பாடத் திட்டம் படிப்படியாக, அடுத்த ஆண்டு துவங்கி செயல்படுத்தப்படும்.

ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககத்தைச் சேர்ந்த மக்கள் தொகைக் கல்விப் பிரிவு 5 வகைகளில் செயலாற்றுகிறது.

செங்கை எம்.ஜி.ஆர். சேலம், மதுரை மற்றும் காமராசர் ஆகிய நான்கு மாவட்டங்களில் 1994-ஆம் ஆண்டு தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு 26 'ஒரு நாள் பயிற்சியும்', புதுக்கோட்டை மாவட்டத்தில் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு 2 பயிற்சிகளும், ஆசிரியர் பயிற்சியாளர்களுக்கு 2 பயிற்சிகளும் நடத்தப்பட்டன. ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கு "26" ஒரு நாள் பயிற்சி வகுப்புகளும், இடைநிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கான இரண்டு நாள் பயிற்சியும் இரு மையங்களிலும் நடத்தப்பட்டன.

தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கான சிறப்பு புத்தறிவுப் பயிற்சி தமிழகத்தில் 3,200 ஆசிரியர்கள் பயன்பெறும் விதத்தில் நடத்தப்படுகிறது. பாடம் நடத்தும் முறையிலும், பாட அறிவிலும் பயன்பெறும் விதத்தில் இத்திட்டம் அமைந்துள்ளது. கரும்பலகைத் திட்டத்தில் வழங்கப்பட்ட உபகரணங்களைப் பயன்படுத்துவதில் ஆசிரியர்கள் பயிற்சி பெறுகின்றனர். மேலும் நான்காண்டுகள் நடைபெற்று தமிழகத்தில் உள்ள அனைத்து ஆசிரியர்களும் பயன்பெறுவர்.

"புரட்சித் தலைவி நல்லாசிரியர் விருது" என்னும் புதுமையான திட்டம் இவ்வியக்ககத்தால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

1995 ஏப்ரல் 24 ]

இக்கல்வியாண்டு முதல் மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனம் மற்றும் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் பணிபுரிவோரின் தரம் உயர இத்திட்டம் செயல்படுகிறது. 1993-94-ஆம் ஆண்டில் சிறந்த ஆசிரியர் கற்பிப்போர்களுக்காக மாண்புமிகு தமிழகக் கல்வித்துறை அமைச்சரால் ரூ. 90,000/- வழங்கப்பட்டுள்ளது.

## மொத்த நிதி ஒதுக்கீடு.

| வரிசை எண் | ஆண்டு | வரவு செலவு மதிப்பீடு | | திருத்திய மதிப்பீடு | |
|---|---|---|---|---|---|
| | | திட்டத்தில் சேராதது. | திட்டம் | திட்டத்தில் சேராதது. | திட்டம் |
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | | |
| 1. | 1992-93 | 280.26 | 422.11 | 308.16 | 477.51 |
| 2. | 1993-94 | 312.65 | 451.64 | 247.26 | 565.78 |
| 3. | 1994-95 | 265.60 | 504.30 | 268.74 | 558.80 |
| 4. | 1995-96 | 257.60 | 607.84 | - | - |

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

## (iv) அரசுத் தேர்வுகள்

இவ்வியக்கத்தின் பொறுப்பில் 44 வகையான அரசுத் தேர்வுகள் நடத்தப்பட்டுவருகின்றன. இவற்றுள் இடைநிலை மற்றும் மேல்நிலைத் தேர்வுகள் பெரிய அளவிலானவை ஆகும். இவை மட்டுமின்றி ஆங்கிலோ இந்தியன், மெட்ரிக்குலேஷன் ஆசிரியர் கல்வி பட்டயத் தேர்வு மற்றும் கைத்தறி நெசவு, இசை, மரவேலை, தையல், அச்சு, விவசாயம் போன்ற தொழில் தொடர்பான தேர்வுகளும் இவ்வியக்ககத்தினால் நடத்தப்படுகின்றன.

கடந்த மூன்று ஆண்டுகளில் பெரிய அளவில் நடத்தப்படும் கீழ்ச்காண் தேர்விற்கு பதிவு செய்தோர், தேர்ச்சி பெற்றோர் மற்றும் தேர்ச்சி விழுக்காடு ஆகியவை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:

| தேர்வின் பெயர் | ஆண்டு | மாணாக்கர்களின் எண்ணிக்கை | | தேர்ச்சி விழுக்காடு பள்ளி மாணவர்கள் மட்டும். |
|---|---|---|---|---|
| | | பதிவு செய்தோர் | தேர்ச்சி பெற்றோர் | |
| இடைநிலை | 1992 | 5,62,079 | 3,03,498 | 68.5 |
| | 1993 | 5,63,041 | 2,94,097 | 68.8 |
| | 1994 | 5,62,419 | 2,96,808 | 66.5 |
| மேல்நிலை | 1992 | 3,15,998 | 1,72,449 | 73.0 |
| | 1993 | 3,44,663 | 1,93,840 | 75.6 |
| | 1994 | 3,80,062 | 2,00,572 | 66.5 |
| மெட்ரிகுலேஷன் | 1992 | 23,295 | 20,536 | 92.0 |
| | 1993 | 27,507 | 24,320 | 93.0 |
| | 1994 | 33,051 | 29,467 | 93.0 |
| ஆங்கிலோ-இந்தியன் | 1992 | 3,801 | 3,270 | 89.0 |
| | 1993 | 4,021 | 3,551 | 93.0 |
| | 1994 | 4,046 | 3,793 | 97.0 |

1995 ஏப்ரல் 24 ]

தேர்வு முடிவுகளை விரைவாக வெளியிடும் பொருட்டு கீழ்க்காணும் தேர்வுகளுக்கு மைய மதிப்பீடு முறை செயலாக்கப்பட்டு வருகிறது:

| தேர்வின் பெயர் | மைய மதிப்பீடு துவங்கப்பட்ட ஆண்டு |
|---|---|
| இடைநிலைப் பொதுத் தேர்வு | 1968 |
| மேல்நிலை தேர்வு | 1980 |
| மெட்ரிகுலேஷன் மற்றும் ஆங்கிலோ இந்தியன் தேர்வு | 1991 |
| ஆசிரியர் கல்வி பட்டயத்தேர்வு | 1992 |

விடைத்தாட்கள் மதிப்பீட்டின்போது இரகசியத்தன்மை காத்திடும் பொருட்டு மேல்நிலை, மெட்ரிகுலேஷன், ஆங்கிலோ இந்தியன் மற்றும் ஆசிரியர் கல்வி பட்டயம் போன்ற தேர்வின் விடைத்தாட்களுக்கு மாற்று எண் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

அகில இந்திய ரீதியிலான தேசிய திறனாய்வுத் தேர்வு கடந்த 1994-இல் 8043 தேர்வர்களுக்கு நடத்தப்பட்டது. அதில் 245 தேர்வர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு புதுடில்லி தேசிய கல்வியராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் நடத்தப்படும் இரண்டாம் நிலை தேர்வு எழுத அனுமதிக்கப்பட்டு அத்தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு இந்திய அரசால் அவர்களின் மேற்படிப்புக்காக உதவித் தொகை வழங்கப்படுகிறது.

மாநில அரசால் புதிதாக புகுத்தப்பட்ட தமிழ்நாடு ஊரகப் பகுதி மாணவர்களின் (எட்டாம் வகுப்பு) திறனாய்வுக்கான தேர்வு கடந்த 91-92-ஆம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு, கீழ் குறிப்பிட்டுள்ள எண்ணிக்கையிலான மாணவர்களின் மேற்படிப்புக்கு படிப்புதவித் தொகையாக ஆண்டுதோறும் ரூ. 1,000/- வீதம் பெற்று பயனடைந்து வருகின்றனர். ஒவ்வொரு மாவட்டத்திலும் 50 மாணவர்கள் 50 மாணவிகள் வீதம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

| ஆண்டு | தேர்வெழுதியோர் | பயனடைந்தோர் |
|---|---|---|
| 1991 | 14,597 | 2,100 |
| 1992 | 22,732 | 2,100 |
| 1993 | 19,533 | 2,100 |
| 1994 | 17,200 | 2,200 |

இடைநிலை ஆசிரியர்களுக்கான நியமனத் தேர்வு (Screening) கடந்த '94-ல் இத்துறையினால் நடத்தப்பட்டது. சுமார் 56,000 தேர்வர்கள் கலந்து கொண்டு தேர்வெழுதினர்.

இந்திய தேர்வாணைக்குழு நடத்தும் இந்திய ஆட்சிப்பணித்தேர்வு, பொறியியல் தேர்வு மற்றும் ஏனைய தேர்வுகளும், பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தேர்வுகளும் இத்துறையினால் நடத்தப்படுகிறது. மேற்படி தேர்வுகள் மற்ற மாநிலங்களில் அந்தந்த மாநிலத்தைச் சார்ந்த தேர்வாணைக் குழுவினரால் நடத்தப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கல்லூரிகளிலும், பள்ளிகளிலும், மாணவர்கள் சேர்க்கையின்போது பெறப்படும் அனைத்து மதிப்பெண் சான்றிதழ்களும் இத்துறையினால் ஆய்வு செய்யப்பட்டு போலி சான்றிதழ்கள் எனக் கண்டறியப்பட்ட நேர்வுகளில் அம்மாணவர்களின் மீது காவல் துறையினரால் மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கல்லூரிகளிலும், +1 வகுப்புகளிலும் சேர்க்கப்படும் மாணவர்களின் சான்றிதழ்கள் சரிபார்க்கப்படும்.

**மண்டல அலுவலகம்:**

இத்துறையில் பெருகி வரும் பணியினை பகிர்ந்திடும் வகையில் தமிழக அரசால் மதுரை, கோவை, திருச்சி, சென்னை மற்றும் திருநெல்வேலி ஆகிய ஐந்து இடங்களில் ஏற்கனவே மண்டல அலுவலகங்கள் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

1994 முதல் இயக்ககம் சில பணியிடங்களை மாற்றம் செய்து கடலூரில் ஒரு மண்டல அலுவலகம் துவங்கிடும் வகையில் அரசு அனுமதி வழங்கியுள்ளது.

**திட்ட மதிப்பீடு:**

| வரிசை எண் | ஆண்டு | வரவு செலவு மதிப்பீடு | | திருத்திய மதிப்பீடு | |
|---|---|---|---|---|---|
| | | திட்டத்தில் சேராதது. | திட்டம் | திட்டத்தில் சேராதது. | திட்டம் |
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | | |
| 1. | 1992-93 | 765.04 | 8.09 | 970.86 | 8.15 |
| 2. | 1993-94 | 1,039.92 | 12.81 | 1,084.00 | 15.43 |
| 3. | 1994-95 | 1,048.17 | 16.42 | 1,189.08 | 15.88 |
| 4. | 1995-96 | 1,090.96 | 22.97 | - | - |

## அத்தியாயம் 3

## ஆசிரியர் தேர்வு வாரியம்

ஆசிரியர் தேர்வு வாரியம் மூத்த இந்திய ஆட்சிப்பணி அலுவலரைத் தலைவராகவும், பள்ளிக் கல்வி இணை இயக்குநர் பணி நிலையில் ஒரு உறுப்பினர் மற்றும் உறுப்பினர் செயலர் (ஒருவர் பள்ளிக் கல்வித் துறையை சார்ந்தவராகவும் மற்றொருவர் கல்லூரிக் கல்வித் துறையை சார்ந்தவராகவும்) ஆகியோரைக் கொண்டு இயங்கி வருகிறது. அரசுப் பணியாளர் தேர்வாணையத்திடம் இருந்து ஆசிரியர்கள் தேர்ந்தெடுப்பது நிறுத்தப்பட்டு ஆசிரியர் தேர்வு வாரியமே ஆசிரியர்களை தேர்வு செய்ய முடிவெடுத்துள்ளதால், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணய அதிகாரம் ஒழுங்கு நடவடிக்கை விதிகள் போன்றவற்றை ஆசிரியர் தேர்வு வாரியத்திற்கு வழங்கிட அரசு தீர்மானித்து நடவடிக்கை எடுத்து வருகிறது.

*1994-95* இல் (நவம்பர்'*94* வரை) முதுகலைப் பட்டதாரி மற்றும் பி. டி. நிலையிலான பணியிடங்களுக்கு இவ்வாரியம் *114* நபர்களை தேர்வு செய்துள்ளது. ஆதிதிராவிடர் நலம் மற்றும் பழங்குடியினர் பள்ளியினை வரன் முறைப்படுத்த மேற்படி துறையைச் சார்ந்த *196* .பட்டதாரி ஆசிரியர்களுக்கான நேர்காணல் நடத்தப்பட்டது. அத்துடன் அரசினர்/ மாநகராட்சி/நகராட்சி/ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் இடைநிலை மற்றும் அதே நிலையிலான சிறப்பாசிரியர்களை நியமனம் செய்யும் பணியும் இவ்வாரியத்திற்கு தற்போது அளிக்கப்பட்டுள்ளது.

அரசினர்/மாநகராட்சி/நகராட்சி/ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் இடைநிலை மற்றும் அதன் தொடர்பான ஊதிய நிலையில் உள்ள சிறப்பாசிரியர்கள் ஆகியோரது நியமனத்திற்காக தகுதியும் திறமையும் கொண்ட ஆசிரியர்களை தேர்வு செய்ய தேர்வு முறையை மாற்றி மேற்படி ஆசிரியர்களை தேர்வு செய்யும் பணி இவ்வாரியத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆரம்பக் கல்வி இயக்குநர்/பள்ளிக் கல்வி இயக்குநர் மற்றும் மாநகராட்சி ஆணையரிடமிருந்து பெறப்படும் காலிப் பணியிடங்களுக்கான மதிப்பீடுகளின் அடிப்படையில் இவ்வாரியம் ஆசிரியர்களை தேர்வு செய்யும், இடைநிலை ஆசிரியர்களை தேர்ந்தெடுக்க சென்னை அரசுத் தேர்வுகள் இயக்குநர் மூலமாக மாநில அளவிலான எழுத்துத் தேர்வு நடத்தப்பட்டது. அரசாணைப்படி *8000* பணியிடங்களுக்கான ஆசிரியர்களை தேர்வு செய்ய *6.8.94* நாளிட்ட செய்தித் தாட்களில் விண்ணப்பங்கள் கோரப்பட்டு அதற்கான எழுத்துத் தேர்வும் *9.10.94*-ல் நடத்தப்பட்டது. மேற்படி எழுத்துத் தேர்வில் கலந்து கொண்ட சுமார் *55,000* விண்ணப்பதாரர்களில் *13,200* மனுதாரர்கள் *30.1.95* முதல் நேர்காணலுக்கு அழைக்கப்பட்டு உள்ளனர்.

## அத்தியாயம் 4

## தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம்.

புதிய கல்வி கொள்கைக்கிணங்க தேசீயமயமாக்கப்பட்ட பாடநூல்களை 1 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரைக்கும் இக்கழகம் வெளியிடுகிறது.

இப்பாடநூல்கள் தரமாகத் தயாரிக்கப்பட்டு நியாயமான விலையில் விற்பனை செய்யப்படுகின்றன. இப்புதிய நூல்கள் 1988-89-ஆம் ஆண்டு முதல் 1990-91-ஆம் ஆண்டு வரை வெளியிடப்பட்டன. தமிழ் மற்றும் ஆங்கிலம் வழியில் 70 தலைப்புப் பாடநூல்களும், 67 தலைப்புகளில் ஆசிரியர் கையேடுகளும் தயாரித்து அளிக்கப்பட்டுள்ளன.

இப்பாடநூல்களின் நியாயமான குறைந்தபட்ச விலைகள் தமிழ்நாடுஅரசால் நிர்ணயிக்கப்படுகின்றன.

இக்கழகம் 1995-96-ஆம் கல்வியாண்டில் புதிய பாடத்திட்டத்தின்படியான பாடநூல்களையும் சேர்த்து 305 தலைப்புகளில் 594 லட்சம் பிரதிகள் அச்சிட உள்ளது. இதனால் தோராயமாக 122 லட்சம் மாணவர்கள் பயனடைவர்.

இலவசப் பாடநூல் வழங்கும் திட்டத்தின் கீழ் ரூ. 30 கோடி மதிப்புள்ள 405 லட்சம் பிரதிகளை இக்கழகம் அச்சிட்டு தமிழ் நாட்டில் 1 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் லட்சம் மாணவ மாணவியர்கள் பயனடையும் வகையில் விநியோகிக்க உள்ளது.

61 தாலுக்கா கூட்டுறவு மொத்த விற்பனைச் சங்கங்கள், 2099 கூட்டுறவு சில்லரை விற்பனைக் கடைகள் மற்றும் 1422 தனியார் சில்லரை விற்பனையாளர்கள் இப்பெரும் பணியில் ஈடுபடுத்தப்பட்டு தமிழ்நாட்டின் மூலை முடுக்குகளிலுள்ள கிராமப்புற மாணவர்களுக்குங் கூட பாடப்புத்தகங்கள் சிரமமின்றிக் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

சலுகை விலைத்தாளில் குறிப்பேடுகள் தயாரித்து விநியோகிக்கும் பணி இக்கழகத்திடம் 1980 ஆம் ஆண்டு ஒப்படைக்கப்பட்டது. சலுகை விலையில் மைய அரசினால் தாள் வழங்கும் திட்டம் தொடராததால் வெளிச்சந்தையில் தாள் கொள்முதல் செய்யப்பட்டு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மாணவர்களுக்கும் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் மாணவ மாணவியர்களுக்கும் அரசு

கொள்கைப்படி இலவசமாக வழங்க குறிப்பேடுகள் (NOTE BOOKS) தயாரித்து வழங்கப்பட்டுள்ளன. மாநிலம் முழுவதும் உள்ள 300 குறிப்பேடு தயாரிப்பாளர்கள் இப்பணியினை மேற்கொண்டனர். இதனால் ரூ. 350 லட்சம் மதிப்புள்ள குறிப்பேடுகள் ஆதிதிராவிடர் மற்றும் மலை வாழ் மக்கள் நலத்துறைப் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கும், பொதுப் பள்ளிகளில் பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் மலை வாழ் மாணவ மாணவியர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

வரும் கல்வியாண்டில் 1995-'96லும் இத்திட்டம் தொடர உள்ளது. தற்போது இக்கழகம் திருத்தப்பட்ட பாடத்திட்டத்திற்கேற்ப புதிய வரிசைப் பாடநூல்களை தயாரித்தளிக்கவும் தயாராக உள்ளது.

இந்த ஆண்டு முதல் சிறுபான்மை மொழி பாடநூல்களை வெளியிடும் புதிய திட்டம் தொடங்கப்படுகிறது. அவரவர் தாய்மொழி வழியாக அடிப்படைக் கல்வி கற்பதன் மூலமே அனைவருக்குமான குறைந்தபட்சக் கல்வி கற்பிக்கும் திட்டம் சிறப்பாக அமலாக்கப்பட இயலும். எனவே வரும் 1995-96 கல்வியாண்டிலிருந்து 1 முதல் 5 ஆம் வகுப்புகளுக்கான சிறுபான்மை மொழிப் பாடநூல்களையும் தமிழ்நாட்டுப் பாடநூல் கழகமே தயாரித்து வழங்க உள்ளது. மாநிலத்தில் உள்ள மலையாளம், கன்னடம், தெலுங்கு மற்றும் உருது மொழிகளில் இத் திட்டத்தில் 40 மொழிப் பாடநூல்கள் தயாரிக்கப்படுகின்றன.

இதுவரை வெளி மாநிலங்களிலிருந்து சிறுபான்மை மொழிப் பாடநூல்கள் கொள்முதல் செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டு வந்தன. இனி 1995-96 ஆம் கல்வியாண்டிலிருந்து இக்கழகமே சிறுபான்மை மொழியிலும் (மலையாளம், கன்னடம், தெலுங்கு, உருது) பாடநூல்களை தயாரித்து வெளியிட உள்ளது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

## மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி பரிசுத் திட்டம்

இக்கல்வியாண்டிலிருந்து தமிழ்நாட்டுப் பாடநூல் கழக நிதியிலிருந்து ரூ. 2 இலட்சம் தொகை ஒதுக்கி ஓர் அறக்கட்டளை ஏற்படுத்தி, அரசு மற்றும் உள்ளாட்சிப் பள்ளிகளில் பயின்று 10 மற்றும் 12 ஆம் வகுப்புகளுக்கான அரசு பொதுத் தேர்வுகளில் தமிழ் மொழிப் பாடத்தில் முதல் மதிப்பெண் பெறும் 2 மாணவர் மற்றும் 2 மாணவியர் வீதம் தங்கப் பதக்கங்கள் வழங்கிடும் மாண்புமிகு முதல்வர் "டாக்டர் புரட்சித் தலைவி பரிசுத் திட்டம்" தொடங்கப்படுகிறது.

## பாடநூல் கழக விரிவாக்கத் திட்டங்கள்

பாடநூல் கழகத்தின் வாயிலாக பாடநூல் கழக வட்டார அலுவலகங்கள் உள்ள மாவட்டங்களில் கிடங்குகள், வட்டார அலுவலகம் மற்றும் அலுவலர் குடியிருப்புகள் கட்டுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக 10 மாவட்டங்களில் இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. பர்கூரில் ரூ. 65 இலட்சம் மதிப்பில் கிடங்குகள், வட்டார அலுவலகம் மற்றும் அலுவலர் குடியிருப்புகள் கட்டும் பணி முடிவடையும் நிலையில் உள்ளது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

# அத்தியாயம் 5

## பள்ளிச்சாரா மற்றும் வயதுவந்தோர் கல்வி

இந்திய அரசியல் அமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, அனைவருக்கும் தொடக்கக் கல்வி எனும் இலக்கை அடைய, வயதுவந்தோர் கல்வி, பள்ளிசாராக் கல்வி ஆகியவை முக்கியக் கல்விக் கோட்பாடுகளாய் அமைந்துள்ளன. தமிழ்நாடு அரசு கி.பி. 2000-க்குள் அனைவருக்கும் தொடக்கக் கல்வி எனும் இலக்கை அடைந்திடச் செயல் திட்டம் ஒன்றை வகுத்துள்ளது. அத்தகைய பெருமைக்குரிய திட்டம் நூறு சத எழுத்தறிவு இலக்கை அடைதல் மூலமும் தொடக்கப் பள்ளிகளில் மாணவர்கள் படிப்பை இடையில் விடும் போக்கைத் தடுப்பதன் மூலமும்தான் வெற்றி பெற முடியும். பள்ளிக் கல்வித் திட்டத்துடன் முழு எழுத்தறிவு இயக்கத்தையும் ஒருங்கிணைத்துச் செயல்படுத்திட மாநில அரசு முயற்சிகள் மேற்கொண்டுள்ளது. முழு எழுத்தறிவு இயக்கத்திற்குக் குழந்தைகளுக்கான பள்ளிச்சாராக் கல்வித் திட்டமும், மதுவிலக்கு பிரச்சாரத் திட்டமும் துணைத் திட்டங்களாக விளங்குகின்றன.

### முழு எழுத்தறிவு இயக்கம்:

### தமிழக மக்கள் தொகை ஒரு கண்ணோட்டம்:

| | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| | | (மில்லியனில்) | |
| 1. 1991 மக்கள் கணக்கெடுப்பின்படி மொத்த மக்கள் தொகை | 28.30 | 27.56 | 55.86 |
| 2. 7 வயதும் அதற்கு மேலும் உள்ளோர் தொகை | 24.48 | 23.93 | 48.41 |
| 3. நகரங்களில் வாழ்வோர் | | | 19.07 |
| 4. ஊரகப் பகுதிகளில் வாழ்வோர் | | | 36.78 |

இவர்களில் தாழ்த்தப்பட்டோர் 19.17 சதவீதமும், மலைவாழ் மக்கள் 1.02 சதவீதமும் உள்ளனர். தமிழகத்தில் மொத்தம் 23 மாவட்டங்கள் உள்ளன.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1995 ஏப்ரல் 24

## 1991 எழுத்தறிவு நிலையில் தமிழகம்:

இந்தியாவில் உள்ள பெரிய மாநிலப் பகுதிகள் வரிசையில் தமிழகக் கல்வி நிலை 2-வது இடத்தில் உள்ளது.

| | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| | | (சதவீதத்தில்) | |
| 1. மொத்த மக்களில் எழுத்தறிவு பெற்றோர் | 73.75 | 51.33 | 63.72 |
| 2. தாழ்த்தப்பட்டோரில் எழுத்தறிவு பெற்றோர் | 58.36 | 34.89 | |
| 3. மலைவாழ் மக்களில் எழுத்தறிவு பெற்றோர் | 35.25 | 20.23 | |

தமிழகத்தில் பள்ளிசாராக் கல்விக்கும், வயதுவந்தோர் கல்விக்கும் சிறப்பு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகிறது. இதில் ஏற்பட்டுள்ள சாதனை மிகவும் ஊக்கம் தருவதாய் உள்ளது. 1991 கணக்கெடுப்பில் இவ்வுண்மை நிருபிக்கப்பட்டுள்ளது. 1981-இல் 7 வயதும் அதற்கு மேலும் உள்ளோரில் 54.38 சதவீதத்தினர் கல்வியறிவு பெற்றிருந்தனர். ஆனால் 1991 இல் இது 63.72 சதவீதமாக உயர்ந்துள்ளது. அதாவது, 9.34 சதவீதம் உயர்ந்துள்ளது.

## அறிவொளி இயக்கம்:

1979 முதல் தொடர்ந்து புதிய புதிய அணுகுமுறைகளுடன் வயதுவந்தோர் கல்வித் திட்டங்களைச் செயல்படுத்தியபின், 1990-91-இல் முழு எழுத்தறிவு இயக்கம் என்னும் அறிவொளி இயக்கம் தமிழகத்தில் செயல்படத் தொடங்கியது. இந்த இயக்கம் அனைத்துப் பிரிவு மக்களின் ஒத்துழைப்புடன் குறிப்பிட்ட காலத்திற்குள் எழுத்தறிவின்மையை அகற்றும் பணியில் நிறைந்த நம்பிக்கையை அளித்துள்ளது.

அறிவொளி இயக்கத்தின் மூலம் 1995-க்குள் 15-35 வயதுப் பிரிவில் 100 சத எழுத்தறிவை எய்திடத் தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது. இதன் பொருட்டு மூன்று கட்டங்களைக் கொண்ட எழுத்தறிவு இயக்கத்தை அரசு வகுத்துள்ளது. முதல் கட்டமாக, 1991-92-இல் 7 மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்ட இந்த அறிவொளி இயக்கத்தினால், 17.80 இலட்சம் பேர் பயன் பெற்றனர். இரண்டாம் கட்டமாக 1992-93 இல் 6 மாவட்டங்களில் 27.75 இலட்சம் கல்லாதவர்

1995 ஏப்ரல் 24 ]

பயன் பெற்றனர். மூன்றாவது இறுதிக் கட்டத்தில் இதுவரை 1993-94 இல் 5 மாவட்டங்களில் நிறைவேற்றப்பட்டுள்ள இந்த இயக்கத்தில் 25.15 இலட்சம் பேர் பயன் பெற்றுள்ளனர். 1994-94 -ல் வ.உ.சிதம்பரனார், நீலகிரி, செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டங்களில் அறிவொளி இயக்கத்திற்கு அனுமதியளிக்கப்பட்டு, திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள விழுப்புரம் இராமசாமி படையாச்சியார், சென்னை மாவட்டங்களிலும் விரைவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

அறிவொளி இயக்கம், அறிவொளித் தொடர் கல்வி இயக்கம் ஆகியவற்றைச் செயல்படுத்துவதற்கு ஆகும் மொத்த செலவை மைய அரசும் மாநில அரசும் முறையே மூன்றில் இரண்டு, மூன்றில் ஒன்று என்ற பங்கு விகிதத்தில் ஏற்கின்றன.

இதுவரை 62.76 இலட்சம் பேர் அறிவொளி இயக்கத்தால் எழுத்தறிவு பெற்றுள்ளனர். எஞ்சியோர் 1995 இறுதிக்குள் பயன் பெறுவர்.

**நிதி:**

**அறிவொளி இயக்கம்:-(Total Literacy Campaign)**

பதினெட்டு மாவட்டங்களுக்கு ஏற்கப்பட்டுள்ள மொத்த திட்டச் செலவு ரூ. 45.38 கோடியாகும். இதில் மைய அரசு தன்பங்கான ரூ. 30.25 கோடியில் ரூ. 25.24 கோடியையும் மாநில அரசு தன் பங்கான ரூ. 15.12 கோடியில் ரூ. 8.01 கோடியையும் இதுவரை அனுமதித்துள்ளது.

**அறிவொளித் தொடர் கல்வி இயக்கம்:(Post Literacy Compaign)**

அறிவொளி இயக்கத்தின் முக்கிய நோக்கம், கல்லாத வயதுவந்தோருக்கு அடிப்படை எழுத்தறிவைக் கற்கும் வாய்ப்பை அளிப்பது மட்டுமல்லாமல் அவர்கள் பெறும் எழுத்தறிவை நிலைநிறுத்தி வளர்த்துக் கொள்ள அறிவொளித் தொடர்கல்வி வாய்ப்பை உறுதி செய்வதும் ஆகும். இல்லையேல், புதிதாக எழுத்தறிவு பெற்றோர் விரைவில் அதனை மறந்திடுவர். எனவே, அறிவொளி இயக்கம் செயல்படுத்தப்படும் பகுதிகளில் அது முடிந்தவுடன், இரண்டாண்டுகளுக்கு அறிவொளித் தொடர் கல்வி இயக்கம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. புதிதாக எழுத்தறிவு பெற்றோர், தம் எழுத்தறிவுத் திறனைக் கொண்டு வளர்ச்சித் திட்டங்களில் பயன் பெற ஒன்றிய அளவில் வாய்ப்புகள் அளிக்கப்படுகின்றன. தொடர் கல்வி மையங்கள், அவ்வப்பகுதிகளில் உள்ள தன்னார்வத் தொண்டர்களால்

நிர்வகிக்கப்படுகின்றன. தமிழகத்தில் 1) காமராஜர், 2) புதுக்கோட்டை, 3) பசும்பொன் முத்துராமலிங்க தேவர், 4) கன்னியாகுமரி, 5) மதுரை, 6) வட ஆற்காடு அம்பேத்கார், 7) திருநெல்வேலி-கட்டபொம்மன், 8) இராமநாதபுரம், 9) திண்டுக்கல் அண்ணா ஆகிய 9 மாவட்டங்களுக்கு அறிவொளித் தொடர்கல்வி இயக்கம் அனுமதிக்கப்பட்டுச் செயல்படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் இதுவரை 13.43 இலட்சம் பேர் பயன் பெற்றுள்ளனர்.

### நிதி:

அறிவொளித் தொடர்கல்வி இயக்கத்திற்கு ஏற்பளிக்கப்பட்டுள்ள மொத்த தொகை ரூ. 12.64 கோடி. இதில் நடுவண் அரசு ரூ. 8.42 கோடியையும் மாநில அரசு ரூ. 4.22 கோடியையும் ஏற்கின்றன. இவற்றில் இதுவரை நடுவண் அரசு ரூ. 5.03 கோடியையும், மாநில அரசு ரூ. 1.15 கோடியையும் அனுமதித்துள்ளன.

## தமிழ்நாடு அறிவொளி இயக்க ஆணையம்

எழுத்தறிவு நல்கும் அறிவொளி இயக்கங்களைச் செவ்வையாகத் தமிழகத்தில் செயல்படுத்த உதவும் நோக்கில், 'தமிழ்நாடு அறிவொளி இயக்க ஆணையம்' 1992-இல் அமைக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு கல்வியமைச்சர் இந்த ஆணையத்தின் தலைவர். தலைமைச் செயலாளர் தலைமையில் ஒரு நிர்வாகக் குழுவும் இதில் உள்ளது. புகழ் வாய்ந்த கல்வியாளர்கள், மக்கள் தொடர்பு சாதன வல்லுநர்கள்,சமூகப் பணிபுரிவோர், தொண்டு முகமையினர், நாடாளுமன்ற-சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் அந்த அமைப்பில் அங்கம் வகிக்கின்றனர்.

மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்ட, மாவட்ட எழுத்தறிவுப் பேரவையின் (District Literacy Council) மூலம் தமிழகத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் அறிவொளி இயக்கம் செயல்படுத்தப்படுகிறது. அறிவொளி இயக்கப் பாடநூல்களில் தேசிய ஒருமைப்பாடு, சுற்றுச் சூழல் பாதுகாப்பு, சிறு குடும்ப நெறிகள், அடிப்படை சுகாதாரம் முதலியன பற்றிய மூலக் கருத்துக்கள் இடம் பெற்றுள்ளன. இந்தப் பாடநூல்கள் நடுவண் அரசு வழங்கியுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின் அடிப்படையில் மாநில கருவூல மையத்தினால் தயாரிக்கப்பட்டு வடிவமைக்கப்படுகின்றன. கற்போரின் எண்ணத்தில் எழுச்சியை ஏற்படுத்தும் வகையில் ஒலி, ஒளிக் கருவிகள்

பயன்படுத்தப்படுகின்றன. நலிந்த பிரிவினருக்கு அரசு வழங்கும் பல்வேறு நலத் திட்ட உதவிகள் பற்றிய விவரங்கள் இந்த அறிவொளி இயக்கத்தின் மூலம் விளக்கப்படுகின்றன.

தமிழ்நாடு அறிவொளி இயக்க ஆணையத்தின் உறுப்பினர்-செயலர் இந்த இயக்கத்தைச் செம்மையாய்ச் செயல்படுத்திடவும், மாவட்ட அறிவொளி இயக்கங்களுக்குத் தொழில் நுட்ப ஆலோசனைகளை வழங்கிடவும் செயல் திட்டம் ஒன்றை வகுத்துள்ளார். அதன் முக்கிய அம்சங்களைக் கீழே காணலாம்:

1) தமிழ்நாடு அறிவொளி இயக்க ஆணைய அலுவலகத்தில் அறிவொளி இயக்கத் தகவல் மையம் ஒன்றை அமைத்தல், இதன் துணை கொண்டு தமிழக அறிவொளி இயக்கம் குறித்த பல்வேறு தகவல்களைத் திரட்டி வழங்குதல், இதற்குத் துணையாக தொலைக்காட்சி, வீடியோ, வானொலிப் பெட்டி, 16 எம்.எம். திரைப்படக் கருவி, ஆகியவற்றுடன் விளம்பர ஊர்தியை உருவாக்குதல்.

2) மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டத்தை மாதந்தோறும் நடத்தி, அறிவொளி இயக்க அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளல். செயல் திட்ட அணுகுமுறைகளை வகுத்தல்.

3) அறிவொளி இயக்க விளம்பரத்திற்காகப் படச்சுருள்கள் (Film Strips), நழுவங்கள் (Slides), செய்தி நறுக்குகள் (Clips), சுவரொட்டிகள் (Posters) முதலியன தயாரிப்பதற்காகப் பயிலரங்கம் நடத்துதல், பொதுப்பேரவையின் பிற கருத்துரைகள் மீது நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்.

**தொடர் கல்வி நிலையங்கள்**

நடுவண் அரசின் உதவியுடன் பள்ளிசாரா மற்றும் வயதுவந்தோர் கல்வி இயக்ககத்தின் கட்டுப்பாட்டில் தமிழகம் முழுவதிலும் 1363 தொடர் கல்வி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த நிலையங்கள் தொடர்பாளர்களால் நிர்வகிக்கப்படுகின்றன. புதிதாக எழுத்தறிவு பெற்றோர் பெற்ற எழுத்தறிவை நிலைநிறுத்திக் கொள்ள உதவும் வகையில் இந்த நிலையங்களில் அவர்களுக்குப் புத்தகங்கள், வார, மாத இதழ்கள் செய்தித்தாள்கள், விளையாட்டுக் கருவிகள், தொழில் திறன்களை வளர்த்துக் கொள்ளும் வாய்ப்பு ஆகியவை அளிக்கப்படுகின்றன.

இந்தத் தொடர் கல்வி நிலையங்கள் அறிவொளி/தொடர் அறிவொளி இயக்கப் பகுதிகளில் உள்ள புதிதாக எழுத்தறிவு பெற்றோருக்கும் பயன்படுகின்றன.

4) மாவட்ட ஆட்சியர்கள், மாநில கருவூல மையம், மதிப்பீடு மற்றும் ஆராய்ச்சி இயக்ககம், நிக்நெட் (NICNET), சென்னை வளர்கல்வி நிறுவனம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன், அறிவொளி/அறிவொளித் தொடர் கல்வி இயக்ககத்தின் பல்வேறு நிலைகளில் பலவகைத் தகவல்களைத் திரட்டுவதற்கும் வழங்குவதற்கும் உரிய பொறுப்புகளில் உள்ளோர்க்கு வழி காட்டுதற்காகக் கருத்தரங்குகளை நடத்துதல்.

**நடவடிக்கைகள்:**

தமிழ்நாடு அறிவொளி இயக்க ஆணைய பொதுப் பேரவை முடிவின்படி, அறிவொளி இயக்கத் தகவல் மையம் 16.10.94 அன்று அமைக்கப்பட்டுள்ளது

மாவட்ட அறிவொளி/தொடர் அறிவொளி இயக்கத் திட்ட ஒருங்கிணைப்பாளர்களின் கூட்டம் மாதந்தோறும் நடத்தப்பட்டு வருகிறது.

**உழைப்போர் பல்நோக்குக் கல்வி நிறுவனம் தொழில்திறன் மேம்படுத்தும் திட்டம்:**

தொழிலாளர் குடும்பங்களைச் சார்ந்த இளைஞர்களிடையே தொழில் நுட்பத்திறன்களை மேம்படுத்தும் நோக்கில், உழைப்போர் பல்நோக்குக் கல்வி நிறுவனம் என்னும் தொழிலாளர் கல்வி நிறுவனங்கள் நடுவண் அரசின் நிதியுதவியுடன் சென்னை, மதுரை, திருச்சி ஆகிய நகரங்களில் செயல்பட்டு வருகின்றன. இந்நிறுவனங்கள் தொழிலாளர்கள் மற்றும் அவர்கள் குழந்தைகளின் தொழில் திறன்களை மேம்படுத்தும் வகையில் குறுகிய மற்றும் நீண்ட காலப் பயிற்சி வகுப்புகள் பலவற்றிற்கு ஏற்பாடு செய்கின்றன.

**நீண்ட காலப் பயிற்சிகள்:**

வீட்டு மின் இணைப்புகள், பம்புசெட் பழுதுபார்த்தல், தட்டச்சுப் பயிற்சி, ஸ்கிரீன் பிரிண்டிங், சுவரொட்டி தயாரிப்பு, தொலைக்காட்சி, வானொலிப்பெட்டிகள் பழுதுபார்த்தல், புகைப்படம் எடுத்தல், தையல் ஆகிய நீண்ட காலப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. மேலும்

கம்ப்யூட்டர் பயிற்சி, ஆட்டோமொபைல் மெக்கானிசம் ஆகியவைகளில் புகழ்பெற்ற நிறுவனங்களுடன் இணைந்து பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

### குறுகிய காலப் பயிற்சிகள்:

சோப்பு, சோப்புத்தூள், ஷாம்பு, வாசனைப்பத்தி முதலியன தயாரிப்பதில் குறுகிய காலப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இதுவரை பல்வேறு பயிற்சிகளில் 2,28,524 பேர்களுக்குப் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.

### படித்த இளைஞர்களுக்கான விருப்பப்பணித் திட்டம்:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 1993 பிப்ரவரியில் அறிவிக்கப்பட்ட இப்பள்ளிச்சாராக் கல்வித் திட்டம் மது ஒழிப்பு விளம்பர இயக்கத்துடன் இணைக்கப்பட்டதாகும். மாநில அரசின் நிதி உதவியில் 6-14 வயதுடைய படிப்பை இடையில் விட்ட மற்றும் படிப்பைத் தொடங்காத 35.57 இலட்சம் (மாணவர் 14.92 இலட்சம், மாணவியர் 20.65 இலட்சம்) குழந்தைகள் அனைவருக்கும் படிப்படியாகக் கல்வி கற்பிப்பதற்குரிய திட்டமாக இது திகழ்கிறது.

படிப்பை இடையில் விடும், தொடராதவர்களில் பெண் குழந்தைகள் அதிகம் இருப்பதால் பெண்களில் பலருக்கு விருப்பப் பணியாளராகவும், மேற்பார்வையாளராகவும் வேலை வாய்ப்பினை வழங்கும் விதத்தில் பெண்கள் மையங்கள் அதிக எண்ணிக்கையில் அமைக்கப்படும்.

1993-94-இல் தொடங்கப்பட்டுள்ள இத்திட்டம் மூன்று ஆண்டுகள் தொடர்ந்து செயல்படும். 6-14 வயதுடைய படிப்பை இடையில் விட்ட/ படிப்பைத் தொடங்காத குழந்தைகளில் 15 இலட்சம் பேர் இதன்மூலம் பயன் பெறுவர். இத்திட்டத்தை 1993-94-ஆம் ஆண்டில் ரூ.20 கோடி செலவு மதிப்பீட்டில் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. இதன் மூலம் வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித்தொகை பெற்றுவரும் 1.50 இலட்சம் பேர் வேலைவாய்ப்பைப் பெறுவர்.

### இப்புதிய திட்டத்தின் நோக்கங்கள்:

1. அனைவருக்குமான தொடக்கக் கல்வி இலக்கினை விரைந்து அடைய வழி வகுத்தல்.
2. குடிப்பழக்கத்தினால் விளையும் தீமைகளை, தொடர்ந்து விளம்பரம் செய்தல்.

3. மிகுந்த எண்ணிக்கையில் உள்ள படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களை சமுதாயத்திற்குப் பயன்படும் பணிகளில் ஈடுபடுத்துவதன் மூலம் அவர்களுக்கு தற்காலிக நிவாரணம் அளித்தல்.

இத்திட்டம், அறிவொளி இயக்கத்தைத் தமிழகத்தில் செயல்படுத்தி வரும் தமிழ்நாடு எழுத்தறிவு முனைப்பு ஆணையத்தினால் செயல்படுத்தப்படும். மாநில அளவில் இத்திட்டம், தலைமைச் செயலாளர் தலைமையில் உள்ள தமிழ்நாடு எழுத்தறிவு முனைப்பு ஆணையத்தின் நிர்வாகக் குழுவினால் அவ்வப்போது ஆய்வு செய்யப்படும். மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்ட மாவட்ட எழுத்தறிவுக் குழுவினால் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். கள அளவில், இத்திட்டத்தை மேற்பார்வை செய்தல், செயல்படுத்துதல் ஆகியவைகள் வட்டார வளர்ச்சி அலுவலரின் பொறுப்பாகும். கிராம அளவில் கிராமக் கல்விக் குழு அமைக்கப்படும். இக்குழு, மையங்களை ஆங்காங்கே நடத்திடத் தேவையான வசதிகளுக்கு ஏற்பாடு செய்யும்.

எஸ்.எஸ்.எல்.சி வரை படித்த கற்பிப்பாளர்கள் (வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள்) பத்து மாணவர்களுக்குக் கற்பிக்க ரூ. 150, பிளஸ் 2 வரை படித்த கற்பிப்பாளர்கள் 15 மாணவர்களுக்குக் கற்பிக்க ரூ. 225/, பட்டதாரி இளைஞர்கள் 20 மாணவர்களுக்குக் கற்பிக்க ரூ. 300/ பெறுவர். (இரண்டு மாதங்களுக்கு ஒரு குழந்தைக்கு ரூ. 15/ வீதம் கணக்கிட்டு மேற்கண்டவாறு தொகை வழங்கப்படும்.)

மதுவிலக்குப் பிரசாரம் இணைந்த கல்வி கற்றோர் தனி விருப்பப் பணி புரியும் பள்ளி சாராக் கல்வித் திட்டம் 1993 இல் அமுல்படுத்தப்பட்டது. இளைஞர்களின் திறமையை ஒழுங்குப்படுத்தி சமுதாயப் பணிக்குப் பயன்படுத்தும் நோக்கில், வேலையற்றோருக்கு நிவாரணம் வழங்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. தற்போது 39285 தன் விருப்பப் போதகர்கள் இத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டனர். மகளிர் உள்ளிட்ட தன்விருப்பப் போதகர்களை அதிக எண்ணிக்கையில் ஈர்க்கும் வகையில், முந்தைய ஆணைகளில் விதிக்கப்பட்ட சில நிபந்தனைகளைத் தளர்வு செய்து அக்டோபர் 1994 இல் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. இத்தளர்வாணையினால் தன் விருப்பப் போதகர்களின் எண்ணிக்கை வரும் மாதங்களில் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்திற்குத் தேவையான பாடநூல்கள் தமிழ்நாட்டுப் பாடநூல் கழகத்தினால் அச்சிடப்பட்டுள்ளன. சிலேட்டு, குறிப்பேடு, பென்சில், பலப்பம், சுருள், கரும்பலகை முதலியன திட்டப் பகுதிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. அனைத்து மாவட்டங்களிலும்

1995 ஏப்ரல் 24 ]

"கணக்கெடுக்கும் பணி" நடைபெற்றுள்ளது. மையங்கள் அமைக்கப்படும் இடங்கள், படிப்பை விட்ட, தொடங்காத குழந்தைகளைக் கண்டறியும் பணிகள் விருப்பக் கற்பிப்பாளர்களால் கிராமக் கல்வி குழுவினர் உதவியுடன் செய்யப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தில் சேர்ந்து கற்றுத் தேர்ச்சிப் பெற்றுவரும் மாணவர்கள் பள்ளிகளில் சேர்த்துக் கொள்ளப்படுவர். இத்திட்டத்தின் முதலாண்டு கல்வியை முடிப்பவர்கள் தொடக்கக் கல்வியில் மூன்றாம் வகுப்பில் சேர்வதற்குத் தகுதி பெறுவர். இரண்டாமாண்டு கல்வியைப் பெறுபவர்கள் தொடக்கக் கல்வியில் நான்காம் வகுப்பில் சேர்வதற்குத் தகுதி பெறுவர். மூன்றாம் ஆண்டு கல்வியைப் பெறுபவர்கள் பள்ளிக் கல்வியில் 6ஆம் வகுப்பில் சேர்வதற்குத் தகுதி பெறுவர். பள்ளிப் படிப்பைத் தொடங்காத குழந்தைகளுக்கும் கல்வி அளிக்கும் பொறுப்பை ஏற்றுள்ள மாநில அரசின் முழு நிதி உதவியினால் செயல்படும் இந்த சிறப்பு வாய்ந்த பள்ளிச்சாராக் கல்வித் திட்டம் எழுத்தறியாமையை தடுத்து நிறுத்தும் என்பது உறுதி.

**தீப்பெட்டி, பட்டாசுத் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் குழந்தைகளுக்கான சிறப்புப் பள்ளிசாராக் கல்வித் திட்டம்:**

படித்த இளைஞர்களுக்கான விருப்பப் பணித் திட்டம், பள்ளிப் படிப்பை இடையில் விட்ட குழந்தைகளுக்காக நடத்தப்படுவதுடன், தீப்பெட்டி, பட்டாசுத் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் குழ்ந்தைகளுக்காகவும், மாநகர குடிசைப் பகுதிகளில் வாழும் படிப்பை விட்ட 6-14 வயதுடைய குழந்தைகளுக்காகவும் கல்வியளிக்கும் சிறப்புப் பள்ளி சாராக் கல்வித் திட்டம் நடுவண் அரசின் நிதி உதவியுடன் கீழ்க்கண்ட ஏழு திட்டப் பகுதிகளில் செயப்படுத்தப்பட உள்ளன. ஒரு திட்டத்தின் கீழ் 100 மையங்கள் தொடங்கப்படும். ஒரு மையத்தில் படிப்பை இடையில் விட்ட 25 குழந்தைகள் சேர்க்கப்படுவர்.

| மாவட்டம் | வட்டாரம் |
|---|---|
| 1. காமராசர் | 1. சாத்தூர<br>2. சிவகாசி<br>3. வெம்பக்கோட்டை |
| 2. வ.உ.சிதம்பரனார் | 4. கோவில்பட்டி |
| 3. வட ஆற்காடு அம்பேத்கார் | 5. குடியாத்தம் |
| 4. கோயம்புத்தூர் | 6. திருப்பூர் |
| 5. சென்னை | 7. சென்னை மாநகர குடிசைப்பகுதிகள். |

இத்திட்டங்களுக்கான செலவு மைய மாநில அரசுகளால் கீழ்க்கண்டவாறு ஏற்கப்படும்.

| | | மாநில அரசு | மத்திய அரசு |
|---|---|---|---|
| 1. | நிர்வாகச் செலவு | 40% | 60% |
| 2. | களச் செலவு அ) கலப்பு மையங்கள் | 40% | 60% |
| | ஆ) பெண்கள் மையங்கள் | 10% | 90% |

ஏழு திட்டங்களுக்கும் மொத்த செலவு மதிப்பீடு ரூ. 35.40 இலட்சம். இதில் மைய அரசு ரூ. 24.85 இலட்சத்தையும் மாநில அரசு ரூ. 10.55 இலட்சத்தையும் ஏற்கின்றன. இத்திட்டங்களின் மூலம் 17,500 குழந்தைகள் பயன்பெறுவர்.

## மொத்த நிதி ஒதுக்கீடு விவரம்

| வரிசை எண் | ஆண்டு | வரவு செலவு மதிப்பீடு | | திருத்திப்பட்ட மதிப்பீடு | |
|---|---|---|---|---|---|
| | | திட்டம் சாராத செலவினம். | திட்டம் சார்ந்த செலவினம். | திட்டத்தில் சாராத செலவினம். | திட்டம் சார்ந்த செலவினம். |
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | | |
| 1. | 1992-93 | 140.43 | 494.68 | 149.33 | 525.00 |
| 2. | 1993-94 | 639.00 | 375.52 | 20.55 | 1959.69 |
| 3. | 1994-95 | 17.23 | 1771.16 | 17.33 | 1484.78 |
| 4. | 1995-96 | 19.09 | 2149.59 | - | - |

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

# அத்தியாயம் 6

## கல்லூரிக் கல்வி

தமிழகத்தில் கடந்த ஆண்டுகளில் கல்லூரிகள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க வகையில் அதிகரித்துள்ளது. தற்போது கல்லூரிக் கல்வி ஆணையரகத்தின் கீழ் 261 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் (அரசு கல்லூரிகள் 57 நிதியுதவி கல்லூரிகள் 132; நிதியுதவி பெறாத கல்லூரிகள் 72) 22 கல்வியியல் கல்லூரிகளும் (அரசு 7, நிதி உதவி பெறுபவை 14, நிதியுதவி பெறாதவை 1) 15 கீழ் திசை கல்லூரிகளும் (நிதியுதவி பெறுபவை 9, நிதியுதவி பெறாதவை 6) 4 உடற்கல்வி கல்லூரிகளும் (நிதியுதவி பெறுபவை 3, நிதியுதவி பெறாதவை 1) 2 சமுதாயப் பணி பள்ளிகளும் இயங்கி வருகின்றன.

தமிழ்நாட்டிலுள்ள 15 பல்கலைக் கழகங்களில் 10 பல்கலைக் கழகங்கள் கல்வித் துறையின் கீழ் வருவனவாகும். அவற்றில் கீழ்க்காணும் 5 பல்கலைக் கழகங்கள் கல்லூரிகளை உள்ளடக்கியுள்ளன.

| வரிசை எண்ணும், பெயரும் | இணைவு பெற்ற கலைக் கல்லூரிகள் எண்ணிக்கை |
|---|---|
| 1. சென்னை பல்கலைக் கழகம், சென்னை | 111 |
| 2. மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை | 58 |
| 3. பாரதியார் பல்கலைக் கழகம், கோவை | 44 |
| 4. பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி | 45 |
| 5. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி | 46 |
| மொத்தம் | **304** |

இதர ஐந்து பல்கலைக் கழகங்களான அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணா பல்கலைக்கழகம், அழகப்பா பல்கலைக் கழகம், அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகம் மற்றும் அவினாசிலிங்கம் மகளிர் மனை அறிவியல் மற்றும் உயர்கல்வி நிறுவனம் (பல்கலைக் கழகமாக கருதப்படுவது) ஆகியன தன்னடங்கிய பல்கலைக் (கல்லூரிகளை இணைக்காத) கழகங்களாகும். கல்லூரிகளின் நிர்வாகம், நிதிக் கட்டுப்பாடு ஆகியவை கல்லூரிக் கல்வி ஆணையரகத்தின் அதிகாரத்தின் கீழும், கல்வி பற்றிய செயல்முறை சாராக் கட்டுப்பாடு அந்தந்தப் பல்கலைக் கழகங்களிடமும் உள்ளன.

கல்லூரிகள் மற்றும் பல்கலைக் கழகங்களில் உள்ள ஆசிரியர்களின் நலத்திற்கு அரசு அதிக முன்னுரிமை அளிக்கிறது. 1988-ஆம் ஆண்டில் 1-1-1986 முதல் முன்மேவு பலனுடன் அமுல்படுத்தப்பட்ட பல்கலைக் கழக மானியக்குழு திருத்திய ஊதிய விகிதங்களை தென் மாநிலங்களுக்குள் தமிழக அரசே முதலாவதாக நடைமுறைப்படுத்தியது.

## மகளிர் கல்வி

மொத்தமுள்ள 261 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் அரசுக் கல்லூரி 17 உதவிபெறும் கல்லூரிகள் 38 மற்றும் சுயநிதிக் கல்லூரிகள் 28 ஆக 83 கல்லூரிகள் மகளிர் கல்லூரிகளாகும். மகளிருக்கென தனியாகக் கல்லூரிகள் இல்லாத இடங்களில் அங்குள்ள ஆடவர் கல்லூரிகளில் மொத்த இடங்களில் 30 விழுக்காட்டிற்குக் குறையாமல் மாணவிகள் 1990-91-லிருந்து சேர்க்கப்படுகின்றனர்.

கடுமையான நிதி நெருக்கடிகளுக்கிடையேயும், இராமநாதபுரத்தில் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஒன்று ரூ. 35.57 இலட்சம் மொத்த செலவில் கீழ்கண்ட வேலை வாய்ப்புக்கு அந்தத் பாடப் பிரிவுகளுடன் புதிதாகத் தொடங்கப்பட்டு நவம்பர் '94 முதல் வாடகை கட்டிடத்தில் செயல்பட்டு வருகிறது.

1. பி.எஸ்ஸி. கணினி அறிவியல்
2. பி.எஸ்ஸி. மின்னணுவியல்
3. பி.எஸ்ஸி. மனையியல் (ஊட்டச்சத்தும், சரிவிகித உணவும்)
4. பி.ஏ. வணிகமேலாண்மை
5. பி.ஏ. பத்திரிக்கைவியல்

மேற்படி கல்லூரிக்கென நிரந்தரமாகக் கட்டடம் கட்ட அரசால் ரூ. 20.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நிலம் கையகப்படுத்தும் பணி நிறைவு பெற்றவுடன் கட்டடப் பணி துவங்கப்படும்.

பர்கூர் மற்றும் இராமநாதபுரத்தில் தொடங்கப்பட்டுள்ள மகளிர் கல்லூரிகளில் 1995-96-ஆம் ஆண்டுக்கு தேவைக்கேற்ப ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாப் பணியிடங்களை ரூ. 28.58 இலட்சம் செலவில் தோற்றுவிப்பதற்கு அரசு இசைந்துள்ளது.

மேலும் 1995-96-ஆம் ஆண்டில் அரசு கல்லூரிகள் மூன்றில் மாணவிகளுக்கென தனியே ஓய்வறை மற்றும் கழிப்பறைகள் ரூ.10.50 இலட்சம் செலவில் (ஒவ்வொரு கல்லூரிக்கும் ரூ. 3.50 இலட்சம்) கட்டப்படும்

1995 ஏப்ரல் 24 ]

மேலும் தற்போதுள்ள ஆசிரியர்கள் மற்றும் அடிப்படை வசதிகளைக் கொண்டு அரசு கல்லூரிகளில் 2 இளநிலை மற்றும் 8 முதுநிலை பாட வகுப்புகளைத் தொடங்க அரசு அனுமதித்துள்ளது. சுயநிதி அடிப்படையில், 1 இளநிலை பாட வகுப்பும், பல்கலைக் கழக மானியக் குழுவின் நிதியுதவியுடன் 2 கல்லூரிகளில் 5 முதுநிலை பாட வகுப்பும் 1994-95 இல் தொடங்க தொடங்க அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

நிதி நெருக்கடியைக் கருத்திற் கொண்டு, நிதி உதவி பெறும் கல்லூரிகளில் வளர்ச்சியடைந்து வரும் புதிய இனங்களில் வேலை வாய்ப்புக்கு உதவும் பாடப் பிரிவுகளான கணினி அறிவியல், மின்னணுவியல், மக்கள் தொடர்பு மற்றும் வணிக மேலாண்மை ஆகிய பாடங்களை அரசு நிதியுதவி இல்லாத வகையில் தொடங்க அனுமதிப்பது என அரசு ஒரு கொள்கை முடிவு எடுத்து தொடர்ந்து இசைவளித்து வருகிறது.

**சுயநிதிக் கல்லூரிகள்:**

1994-95-ஆம் ஆண்டில் சுயநிதிக் கல்லூரிகளை ஊக்குவிக்கும் கொள்கையின் அடிப்படையில் மேலும் 20 சுயநிதிக் கல்லூரிகளை திறக்க அரசு ஒப்புதலளித்துள்ளது. அவற்றில் 19 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் நிதியுதவி பெறாதவை. தன்னாட்சி கல்லூரிகளை அதிக எண்ணிக்கையில் பெற்று 'உயர் கல்வியில் தன்னாட்சி' என்ற பரிசோதனை வெற்றிகரமாக உள்ள மாநிலங்களில், அதிக எண்ணிக்கையில் தன்னாட்சிக் கல்லூரிகளைப் பெற்று தமிழகம் முன்னிலை வகிக்கிறது. புதிய கல்விக்கொள்கை 1986-ன்படி 10 விழுக்காட்டினைத் தன்னாட்சி பெற்ற கல்லூரிகளாக்குதல் வேண்டும். அதன்படி 37 கல்லூரிகளுக்கு தன்னாட்சி உரிமை வழங்கப்பட்டுள்ளது. 1977-78-ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இப்பரிசோதனை முறையில் உள்ள இந்த தன்னாட்சி கல்லூரிகளின் செயல்பாடுகளை மதிப்பீடு செய்வதற்கு இப்போது தகுந்த நேரம் என தமிழக அரசு கருதியது. அவ்வாறு மதிப்பீடு செய்வதினால் குறைகளைக் கண்டறிந்து நிவர்த்திக்கலாம். தன்னாட்சி பெற்ற கல்லூரிகளின் செயல்பாட்டினை மதிப்பீடு செய்யவும் பிரச்சினைகள் உள்ள சூழல்களை இனம் கண்டு இக்கல்லூரிகளில் கல்வியின் தரத்தை வளர்ப்பதற்கும் மாநில அளவிலான ஒரு குழுவை தமிழக அரசு அமைத்தது. இக்குழுவின் பரிந்துரைகளை அரசு ஏற்று அதனை சம்பந்தப்பட்ட பல்கலைக்கழக ஆட்சிக்குழுவின் ஒப்புதல் பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொள்ள பல்கலைக்கழகங்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன.

தமிழ்நாடு பல்கலைக்கழகங்களின் அஞ்சல் வழிக் கல்வி செயல்பாட்டினை ஒழுங்குப்படுத்தும் நோக்கோடு ஜனவரி 92-இல் திரு கே. ஆளுடையபிள்ளை அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு அதன் பரிந்துரைகள் அரசால் பெறப்பட்டு .அவை ஆய்வில் இருந்து வருகின்றன.

சமுதாயத்தில் உள்ள எல்லாப் பிரிவினரிடையேயும் உள்ள தகுதியுள்ள மாணவர்களுக்கு கல்வியில் சமவாய்ப்பளிக்கும் நோக்கோடு படிப்புதவித்தொகை வழங்கப்படுகிறது. இது உயர் கல்விக்கும் பொருந்தும். கல்லூரிக் கல்வித்துறை பல்வேறு படிப்பு உதவித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை வருமாறு:-

(1) இந்திய அரசு வழங்கும் தேசிய படிப்புதவித் திட்டம்

(2) மாநில அரசின் உயர் கல்வி கடன் படிப்புதவித் திட்டம்

(3) பள்ளி ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு மாநில அரசு வழங்கும் படிப்புதவித் தொகைத்திட்டம்

(4) மாநில அரசின் தகுதி படிப்புதவித் திட்டம்

(5) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி இன மாணவர்களுக்கு மதிப்பு உதவி மானியம்

(6) தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்ட மாணவர்களுக்கு ஊக்க உதவித் தொகைத் திட்டம்

(7) மாணவிகளுக்கான உதவித்தொகை

## 1. இந்திய அரசு வழங்கும் தேசிய படிப்புதவித் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் சம்பந்தப்பட்ட மாணவர்கள் பயிலும் பாடத்திட்டத்தை பொறுத்து படிப்புதவித் தொகை ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 720-லிருந்து ரூ.3600 வரை வழங்கப்படுகிறது. 1994-95-ஆம் ஆண்டில் 4050 மாணவர்கள் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளனர்.

## 2. மாநில அரசின் உயர்கல்வி கடன் படிப்புதவித் திட்டம்.

மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் 1963-64-ஆம் ஆண்டு முதல் இந்திய அரசின் நிதியுதவியோடு செயல்படுத்தப்பட்டு வந்த இத்திட்டத்திற்கு 1991-92 முதல் மைய அரசின் நிதியுதவி நிறுத்தப்பட்டுவிட்டது. கடுமையான நிதி நெருக்கடிக்கிடையேயும்

இத்திட்டத்தை தொடர்ந்து நிறைவேற்ற மாநில அரசு ஆண்டொன்றுக்கு ரூ.25 இலட்சத்தை 1994-95 முதல் வழங்குகிறது.

**3. பள்ளி ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு மாநில அரசு வழங்கும் படிப்பு உதவித்தொகை திட்டம்.**

இத்திட்டத்தின் கீழ் ஆண்டு வருமானம் ரூ. 12,000/-க்கு மிகாத பள்ளி ஆசிரியர்களின் குழந்தைகள் பயனடைகின்றனர். 1995-96-ஆம் ஆண்டிற்கான வரவு-செலவு மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கு ரூ.2 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4. மாநில அரசின் தகுதி படிப்புதவித் திட்டம்**

பள்ளி இறுதி வகுப்பு பொதுத்தேர்வுகளில் முதலிடம் பெறும் மாணவர்களுக்கு மாநில அரசால் படிப்புதவித்தொகை வழங்கப்படுகிறது. 1994-95ம் ஆண்டில் 9 மாணவர்கள் இதற்கு தகுதியுடையவராகின்றனர். 1995-96ம் ஆண்டிற்கான வரவு செலவு மதிப்பீட்டில் ரூ. 20,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**5. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இன மாணவர்களுக்கு மதிப்பு உதவி மான்யம்.**

இவ்வுதவித்தொகை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்கள் வழங்கமாக பெறும் உதவித்தொகை நீங்கலாக வழங்கப்படுகிறது. 1994-95-ஆம் ஆண்டில் 3863 மாணவர்கள் இத்திட்டத்தின் கீழ் பயனடைகின்றனர். 1995-96 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென 5600 மாணவர்கள் பயன்பெறுவதை எதிர்நோக்கி ரூ. 17 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**6. தமிழை பயிற்றுமொழியாகக் கொண்ட மாணவர்களுக்கு ஊக்க உதவித் தொகைத் திட்டம்.**

அரசின் கொள்கை அடிப்படையில் கல்லூரிகளில் தமிழ் வாயிலாகப் பயிலும் மாணவர்களுக்கு ஆண்டொன்றுக்கு தலா ரூ. 180 ஊக்கத்தொகையாக அரசால் வழங்கப்படுகிறது. 1994-95 இல் இத்திட்டத்தின் கீழ் 30,000 மாணவர்கள் பயனடைந்துள்ளனர். 1995-96 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் இத்திட்டத்திற்கென

ஏறத்தாழ 30,000 மாணவர்கள் பயனடையும் பொருட்டு ரூபாய் 50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 7. மாணவிகளுக்கான ஊக்க உதவித்தொகை.

சாதி இன மத வேறுபாடின்றி அனைத்து வகுப்பைச் சார்ந்த மாணவிகளும் பயன்பெறும் வகையில் "பெரியார் ஈ.வே.ரா நாகம்மை இலவசக் கல்வித் திட்டம்'' செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் மாணவிகளுக்கு படிப்புக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் ஏழாவது ஆண்டான 1995-96 ஆம் ஆண்டின் வரவு செலவு திட்டத்தில் இந்த திட்டத்திற்கென ரூ. 45 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழ் வெளியீடுகளை வெளியிடுவதற்கென்று 1.4.1962-இல் தோற்றுவிக்கப்பட்ட தமிழ் பதிப்பகக்குழு புதிய தமிழ் வெளியீடுகளையும் தமிழில் மொழி பெயர்த்த நூல்களையும் வெளியிட்டு வருகிறது. கல்லூரி மட்டத்திலான தமிழ் பாடநூல்களை வெளியிடுவதற்காக ரூ. 1 கோடி இந்நிறுவனத்திற்கு அளிக்கப்பட்டது. இந்நிறுவனம் தொடர்ந்து தனது பணியினை மேற்கொள்ள ஏதுவாக விற்பனை மூலம் வரும் தொகையினை சுழல் நிதியாகப் பயன்படுத்திக் கொள்ள அதனிடம் நிறுத்தி வைக்கப்பட்டது. தமிழ் பதிப்பகக்குழு பின்னர் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்துடன் இணைக்கப்பட்டு இத்திட்டத்தின்கீழ் கல்லூரி மட்டத்திலான 910 பாடப் புத்தகங்களை வெளியிட்டது. இதற்கென பல்கலைக் கழகங்களுக்கு ரூ. 50 இலட்சம் அளிக்கப்பட்டது. அண்ணா பல்கலைக் கழகம், தமிழ்ப் பல்கலைக்கழகம் மற்றும் பாரதிதாசன் பல்கலைக்கழகம் ஆகியவை இந்நிதியினைப் பெற்றுள்ளன.

### மொத்த நிதி ஒதுக்கீடு

| வரிசை எண் | ஆண்டு | வரவு செலவு மதிப்பீடு | | திருத்திய மதிப்பீடு | |
|---|---|---|---|---|---|
| | | திட்டத்தில் சேராதது. | திட்டம் | திட்டத்தில் சேராதது. | திட்டம் |
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | | |
| 1. | 1992-93 | 14131.05 | 288.50 | 15955.39 | 309.28 |
| 2. | 1993-94 | 16089.42 | 240.16 | 15439.71 | 177.15 |
| 3. | 1994-95 | 16380.58 | 364.03 | 17789.63 | 181.72 |
| 4. | 1995-96 | 19650.60 | 137.37 | .. | .. |

## II. தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றம்

1986ம் ஆண்டின் தேசியக் கல்விக் கொள்கை, உயர் கல்வியின் ஒருங்கிணைப்பிற்கு ஒன்று பட்ட அமைப்பு ஒன்று மாநில மற்றும் தேசிய அளவில் உருவாக வேண்டும் என்பதை வலியுறுத்தியிருக்கிறது. இக்கொள்கைக்கு செயல்வடிவம் கொடுத்தும் மற்றும் பல்கலைக் கழக மானியக் குழுவின் வழி நெறிகளைப் பின்பற்றியும், 1992ம் ஆண்டு தமிழ் நாடு சட்டப்பேரவை சட்ட எண் 40ன்படி தன்னாட்சி அமைப்பாக தமிழ் நாடு மாநில உயர் கல்வி மன்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இம்மன்றம் 1992-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 9-ஆம் நாளிலிருந்து செயல்படத் துவங்கியுள்ளது.

இம் மன்றத்தின் கடமைகள் பின்வரும் செயற்பாட்டுப் பகுதிகளாகப் பிரிக்கப் பட்டுள்ளன.

(அ) திட்டமிடுதல் மற்றும் ஒருங்கிணைப்பு

(ஆ) கல்விசார் பணிகள்

(இ) ஆலோசனைப் பணிகள்

(ஈ) நிருவாகப் பணிகள்

### திட்டமிடுதல் மற்றும் ஒருங்கிணைப்பு:

மாணவர்களின் இடம், பெயர், செயற்பாடு, புதிய பாடப் பிரிவுகளைச் துவக்குதல், ஒவ்வொரு ஆய்வறிஞரின் கீழ் உள்ள ஆய்வு மாணவர்களின் எண்ணிக்கையை ஒருமுகப்படுத்துதல் மற்றும் பல்கலைக் கழகக் கட்டண முறைகளைச் சீரமைத்தல் போன்ற சில உயர்கல்வி தொடர்புற்ற நடவடிக்கைகளை, தமிழ் நாடு மாநில உயர்கல்வி மன்றம் திட்டமிட்டு ஒருங்கிணைக்கும் பணிகளை மேற்கொண்டது.

இம் மாநிலத்தில் உள்ள அனைத்து பல்கலைக் கழகங்களுக்கான 10 ஆண்டு தொலைநோக்குத் திட்டம் தயாரிப்பதில் கணிசமான அளவு வேலை நடந்து கொண்டிருக்கிறது. இந்த ஆய்வின் அடிப்படையில், கல்வி நிருவாகம் மற்றும் திட்ட வல்லுநர்கள், கல்வி வளர்ச்சியின் செயற்பாட்டுப் பகுதிகளை இனம் காணவும் மேலும் முன்னேற்றத்திற்கு வழிகோலவும் ஏதுவாக திட்டவட்டமான அறிக்கை உருவாகி வருகின்றது.

## கல்வி சார் பணிகள்:

தமிழ் நாடு மாநில உயர்கல்வி மன்றம் கல்வி சார்ந்த நடவடிக்கைகளை ஊக்கப்படுத்தும் நோக்கத்தில் 1994ம் ஆண்டு டிசம்பர் வரை பல செய்திகள் குறித்து 15 கருத்தரங்குகளை நடத்தியுள்ளது. அவற்றுள் சில அனைத்திந்தியப் போட்டித் தேர்வுகளில் தமிழ் நாட்டு மாணவர்களின் செயல்திறனை மேம்படுத்துதல், கல்லூரி நிருவாகம் மற்றும் மேம்பாடு, நிதி மற்றும் நிருவாகம், பாடத் திட்டங்களைத் திருத்தியமைத்தல், மற்றும் பாடப்பிரிவுகளை மாற்றியமைத்தல் என்பனவாகும். இது போன்ற கருத்தரங்குகளை நடத்தும் போது தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றம், சென்னைப் பல்கலைக் கழகம், பாரதியார் பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக் கழகம், மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், பாண்டிசேரி பல்கலைக்கழகம், ஆகியவற்றின் கல்வியாளர் பயிற்சிக் கல்லூரிகளுடனும் மற்றும் அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகம் மற்றும் அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களுடனும் இணைந்து செயல்பட்டது. மேலும் இம்மன்றம், சென்னையில் உள்ள பிரிட்டிஷ் தூதரக மன்றத்தின் உதவி மற்றும் கருத்துரைகளையும் பெற்றுள்ளது.

## ஆலோசனைப் பணிகள்:

தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம், மாநில அரசிடம் பல்வேறு பட்ட உயர்கல்வி தொடர்பான செய்திகள் குறித்து அதன் பரிந்துரைகளையும் அறிவுரைகளையும் வழங்கியுள்ளது. அவற்றுள் சில:-

(அ) அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல்.

(ஆ) தமிழகத்தில் திறந்த வெளிப் பல்கலைக் கழகம் ஒன்றினை அமைத்தல்.

(இ) மாநில ஆங்கில பயிற்றுவிப்பு நிறுவனம் ஒன்றை ஏற்படுத்துதல்.

(ஈ) பல்கலைக் கழகங்களின் இணைப்புக் கட்டணம்/மதிப்பாய்வுக் கட்டணத்தை ஒருமுகப்படுத்துதல்.

## நிருவாகப் பணிகள்:

திறமையான நிருவாக அமைப்பின் அத்தியாவசியத்தை உணர்ந்து, தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றம், மூவர் அடங்கிய குழுவை,

பல்கலைக் கழகங்கள் சம்பந்தப்பட்ட நிதி மற்றும் நிருவாக செயற்பாடுகளை ஒருமுகப்படுத்துமுகத்தான் பரிந்துரைகளை அளிக்க அமைத்தது. இக்குழு தன் அறிக்கையை சமர்ப்பித்துள்ளது. துணை வேந்தர்களின் அறிவுரைக் குழுமம் மற்றும் தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம் ஆகியவை இவ்வறிக்கையை பல்வேறு கோணங்களிலிருந்து ஆய்ந்து வருவதனால் ஒரு சீரான செம்மையான நிதி நிருவாகச் செயற்பாட்டினை மாநிலத்தில் உள்ள பல்கலைக் கழகங்கள் அனைத்தும் பின்பற்ற முடியும் என்று கருதப்படுகிறது, மேலும், அனைத்து பல்கலைக் கழகங்களும் பின்பற்றும்படியான இரு பருவ விடுமுறைகளுக்கு இடமளிக்கும் ஒரு கல்வி நாட்காட்டி பற்றியும் பரிந்துரை செய்துள்ளது.

சுருங்கக்கூறின், இம்மன்றத்தின் பணிகள் படிப்படியாக வளர்ந்து வருகின்றன, மேலும் 1994ம் ஆண்டில் புதிய சில பணிகளையும் மேற்கொண்டுள்ளது. தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றம் இரு பல்கலைக் கழகங்களுக்கு கருத்தரங்குகளை நடத்த நிதி உதவி அளித்துள்ளது, மற்றம் அழகப்பா பல்கலைக் கழகத்திற்கு படிம ஆய்வு மைய நிறுவனத்தை அமைக்க நிதி நல்கியுள்ளது, மேலும் இம்மன்றம், மாநிலத்தில் உள்ள 15 கல்லூரிகளிலும் மற்றும் பல்கலைக்கழகமென ஏற்கப்பட்டுள்ள இரு உயர்கல்வி நிலையங்களிலும் பட்டப்படிப்பில் தொழிற் கல்விப் பாடங்களை அறிமுகப்படுத்துவதில் பல்கலைக் கழக மான்யக் குழுவுடன் இணைந்து பணியாற்றுகிறது. துணைவேந்தர்கள், பல்கலைக் கழக மான்யக்குழு மற்றும் தமிழக அரசு ஆகியவற்றுடன் நெருங்கி தொடர்பு கொண்டு செயலாற்றி தமிழ் நாடு மாநில உயர் கல்வி மன்றம் உயர்கல்வியின் தரத்தை மேம்படுத்த, தனது பணிகளை மேலும் விரிவுபடுத்த முடியும் என்று நம்புகிறது.

TRUTH ALONE TRIUMPHS

[1995 ஏப்ரல் 24

## (iii.) ஆங்கில மொழிக்கான மாநில நிறுவனம்.

இருமொழிக் கொள்கையை ஏற்றுக்கொண்டுள்ள தமிழக அரசு, தமிழ் மொழியோடு ஆங்கில மொழியறிவையும் வளர்த்திடும்பொருட்டு, கல்வியின் அனைத்து நிலைகளிலுமுள்ள ஆங்கிலக் கற்பிப்பினை சீரமைத்துச் செழுமைப்படுத்த, பள்ளிகளிலும், கல்லூரிகளிலுமுள்ள 'ஆங்கில மொழிக் கற்பிப்பு' மையங்களை 23.9.94ல் ஒருங்கிணைத்து, ஆங்கில மொழிக்கான மாநில நிறுவனத்தினை தோற்றுவித்துள்ளது. மேலும், கல்வி நிறுவனங்களில் ஆங்கில மொழித்திறன் சார்ந்த அனைத்திந்திய பொதுத் தேர்வுகளில் தமிழக மாணவர்கள் போதுமான அளவில் போட்டியிட இயலாத சூழ்நிலையையும் கவனித்து வந்த தமிழக அரசு இத்தகு நிறுவனமொன்றைத் தோற்றுவிக்கத் தீர்மானித்தது.

பள்ளிகள் மற்றும் கல்லூரி மாணவர்களின் ஆங்கில மொழித் திறத்தினை மேம்படுத்துவதற்கேதுவாக, கற்பிப்புத்திறன் வளர்ச்சி மற்றும் உபகரண விரிவாக்க நிகழ்ச்சிகளை இந்நிறுவனம் ஏற்று நடத்தும்.

தொடக்கக்கல்வி வகுப்புகள் வரைக்கும் உரிய ஆசிரியர் பயிற்சி முனைவுகள் மற்றும் ஆங்கிலக் கற்பிப்பு விதிகளை ஒருங்கிணைத்து இயக்குவதில் இந்தியாவிற்கே முன்மாதிரியாக இந்நிறுவனம் திகழ்கிறது. ஆங்கிலம் மற்றும் அயல்மொழிகளுக்கான மைய நிறுவனம், பல்கலைக்கழக நல்கை நிதிக்குழு மற்றும் தமிழகப் பல்கலைக்கழகங்களுக்கிடையே இந்நிறுவனம் ஒரு பாலமாக இருந்து கருத்தரங்கள் மற்றும் பயிலரங்கங்களை நடத்தி வருகிறது.

ஆங்கில மொழிக் கற்பிப்பினைச் செழுமைப்படுத்தும் செயல்பாட்டுக்கு இந்தியாவிலேயே தாராளமாகத் தொடர்ந்து செலவிடும் மாநிலம் தமிழகமே. மாநில அரசின் நிதி தவிர்த்து பிறவகை நிதியினைத் திரட்டும் நோக்குடன் இந்நிறுவனம் பல்வேறு திட்டங்களை ஆற்ற உள்ளது. அதாவது பொதுமக்கள், குடும்பப் பெண்கள் மற்றும் பணியாளர்கள் ஆங்கிலத்தில் பேசவும் எழுதவும் விவாதிக்கவும், கவிதையாக்கவும், நாடகம் புனையவுமான திறனை வளர்த்திட அவர்களுக்கென தனியாக தேவைக்கேற்ப நடத்தவுள்ள வகுப்புகள் இதில் அடங்கும்.

# அத்தியாயம் - 7

## தொழில் நுட்பக் கல்வி

மனித வள மேம்பாட்டுத் துறையின் கீழ் இயங்கிவரும் ஒரு பகுதியான தொழில் நுட்பக் கல்வியானது, மாணவர்களின் திறமையை அதிகரிப்பதிலும், தேசத்தின் பொருளாதாரத்தை மேம்படுவத்துவதிலும், நாட்டு மக்களின் அன்றாட வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதிலும் மிக முக்கிய பங்களிக்கிறது. இந்நிலையினை நன்குணர்ந்த தமிழக அரசு தொழில் நுட்பக் கல்வி வளர்ச்சிக்கு பெரும் முன்னுரிமை தந்துள்ளது. 1957 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட மாநில தொழில்நுட்பக் கல்வித் துறை பட்டயப்படிப்பு பட்டயமேற்படிப்பு, சிறப்புத் துறைகளில் பட்டயப்படிப்பு, பட்டப்படிப்பு, பட்டமேற்படிப்பு, ஆராய்ச்சி துறை போன்ற பல்வேறு நிலைகளில் பெரும் வளர்ச்சியடைந்துள்ளது. எட்டாம் ஐந்தாண்டு திட்டக் காலத்தின் முதல் மூன்றாண்டுகளான 1992-93 முதல் 1994-95 வரையிலான காலகட்டத்தில் தமிழகத்தில் கணிசமான அளவில் தொழில் நுட்பக் கல்வி வளர்ச்சியடைந்துள்ளது. பர்கூரில் ஒரு அரசு பொறியியல் கல்லூரி உட்பட 11 புதிய பொறியியல் கல்லூரிகள் அனுமதிக்கப்பட்டு இயங்கி வருகின்றன. மாநிலத்தில் இயங்கி வரும் பொறியியற் கல்லூரிகள் மற்றும் தொழில் நுட்பப் பயிலகங்களின் விவரம்:-

| | பொறியியல் கல்லூரிகள் | பாலிடெக்னிக்குகள் (சிறப்புப் பயிலகங்கள் உள்பட) |
|---|---|---|
| 1. அரசு பயிலகங்கள் | 7 (மண்டல பொறியியல் கல்லூரி, திருச்சி உள்பட) | 21 |
| 2. அரசு மானியம் பெறும் பயிலகங்கள் | 3 | 35 |
| 3. சுயநிதி பயிலகங்கள் | 44 | 76 |
| | **54** | **132** |

தொழில் நுட்பக் கல்வி வளர்ச்சியின் ஒரு பகுதியாக புதிய பொறியியல் கல்லூரிகளின் மாணவர் சேர்க்கை மற்றும் பழைய கல்லூரிகளில் புதிய பாடத்தொடக்கத்தினால் உண்டான கூடுதல் மாணவர் சேர்க்கை, பொறியியல் கல்லூரிகளின் மாணவர்

சேர்க்கையினை சென்ற ஆண்டை விட 2815 அதிகமாக அதாவது 36 சதவீதம் அதிகரித்துள்ளது. இதே போல் பாலிடெக்னிக்குகளில் மாணவர் சேர்க்கை 3 சதவீதம் உயர்வான 640 மாணவர்கள் கூடுதலாக சேர்க்கப்பட்டுள்ளனர்.

பொறியியல் கல்லூரிகள் மற்றும் பாலிடெக்னிக்குகளில் மாணவர் சேர்க்கையின் விவரம்.

| வ. எண். | பயிலகங்கள் | எண்ணிக்கை | படிப்பு விவரம் | முழு நேரம் | பகுதி நேரம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | பொறியியல் கல்லூரிகள் (திருச்சி, மண்டல பொறியியற் கல்லூரி உள்பட) | 54 | பட்டப்படிப்பு | 13185 | 1160 | 14345 |
| | | | பட்டமேற்படிப்பு | 276 | 56 | 332 |
| | | | பட்டயமேற்படிப்பு | | | |
| | | | பட்டயம் | 21 | 5 | 26 |
| 2. | பாலிடெக்னிக்குகள் மற்றும் சிறப்புப் பயிலகங்கள் | 132 | பட்டயப்படிப்பு | 23679 | 1675 | 25354 |
| | | | பட்டயமேற்படிப்பு | 203 | 90 | 293 |
| | | | சான்றிதழ் படிப்பு | 10 | 210 | 220 |
| | | | | **37374** | **3196** | **40570** |

## 2. கனடா-இந்தியா பயிலக கூட்டுறவுத் திட்டம்

8.5 மில்லியன் கனடா டாலர் தொகையுடன் கனடா சமுதாயக் கல்லூரிகள் குழு கனடா-இந்தியா பயிலகக் கூட்டுறவுத் திட்டத்தினை தொடங்கியுள்ளது. கனடா-அனைத்துலக முன்னேற்றக் குழு தேர்ந்தெடுத்த சில பாலிடெக்னிக்குகளில் இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தி 4 வருடங்களாகின்றன. இவற்றுடன், தமிழ் நாட்டிற்கென மகளிர் முன்னேற்ற அமைப்பு ஒன்று, இத்திட்டத்தின் ஒரு பகுதியாக தொழில் நுட்பக் கல்வியில், குறிப்பாக சிறப்புப் பாடங்கள் மற்றும் மேலாண்மை பயிற்சியிலும், அதிக அளவில் மகளிர் பயன் பெறுவதற்கென தொடங்கப்பட்டுள்ளது.

3. பொறியியல் கல்லூரிகள், பாலிடெக்னிக்குகள் தொடர்பான கல்வி நடவடிக்கைகளுடன் வணிகப் படிப்புப் பிரிவுகளான தட்டச்சு, சுருக்கெழுத்து, கணக்கியல் போன்றவற்றிற்கும் இத்துறை தேர்வுகள் நடத்தி வருகின்றது. ஆண்டிற்கு இரண்டு தேர்வுகள் நடத்தப்படுகிறது. ஒவ்வொரு தேர்விலும் சுமார் 1.50 இலட்சம் பேர் தேர்வு எழுதுகின்றனர். இத்துறையின் தேர்வுக் குழுவிற்கு பாலிடெக்னிக்குகளில் தேர்வுகள் நடத்தி பட்டய மற்றும் பட்டய மேற்படிப்பு சான்றுகள் வழங்கவும், வணிகவியல் துறையில் தேர்வு நடத்தி சான்றுகள் வழங்கவும் பொறுப்பளிக்கப்பட்டுள்ளது. பாலிடெக்னிக்குகள், வணிகவியல் தட்டச்சுப் பயிலகங்கள் இத்துறையின் மாநில தொழில் நுட்பக் கல்வி மற்றும் பயிற்சிக் குழுவின் அங்கீகாரம் கொண்டுள்ளன.

**4. சமுதாய பாலிடெக்னிக்குகள் திட்டம்**

பொருளாதாரம், கல்வி இவற்றில் பின் தங்கியுள்ள கிராமப்புற இளைஞர்களுக்கு பயன்படும் வகையில் மைய அரசின் நிதி உதவியுடன் 24 பாலிடெக்னிக்குகளில் சமுதாய பாலிடெக்னிக்குகள் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

## உலக வங்கி உதவி பெறும் இரண்டாம் பொறியியல் கல்வித் திட்டம்

இந்திய நாட்டில் கல்வி பற்றிய தேசிய கொள்கைக்கு மிகவும் குறிப்பாக பத்து ஆண்டு பொறியியல் கல்வி முதலீட்டு திட்டத்திற்கு துணை நிற்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

தொழில் மற்றும் சமுதாயத்தின் மாறிவரும் தேவைகளுக்கு ஏற்ப நெகிழ்வாகவும், பயனுடையதாகவும் ஈடு கொடுக்கும் வகையில் பல்தொழில் நுட்பக் கல்வி முறையில் கொள்கைகளை புதுப்பிக்கவும், சீராக்கம் செய்யவும் இந்த திட்டம் உறுதுணையாக உள்ளது.

**தமிழ்நாட்டின் திட்டப் பணியின் தொகுப்புரு:**

தமிழ்நாட்டின் இரண்டாம் பொறியியற் கல்வித் திட்டம் 21 அரசினர் தொழில் நுட்பப் பயிலகங்களையும் 34 அரசு மானியம் பெறும் தொழில் நுட்பப் பயிலகங்களையும் உள்ளடக்கி உள்ளது. திட்டப் பணியின் மொத்தத் தொகை ரூ. 76.00 கோடியாகும்.

**திட்ட நோக்கம்/எய்குறி - தமிழ்நாட்டில் :**

இத்திட்டத்தின் நோக்கம் (1) கொள்ளளவு விரிவாக்கம், (2) தர மேம்பாடு மற்றும் (3) திறன் முன்னேற்றம் ஆகிய மூன்று வடிவ

அணுகுமுறை மூலமாக தமிழ்நாட்டிலுள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் 55 பல்தொழில் நுட்பப் பயிலகங்களை புது வலிவு பெற செய்தலும் மேல்நிலைப்படுத்தலும் ஆகும். இந்த கொள்கைகளும் வழி முறைகளும் உலக வங்கியால் உருவாக்கப்பட்டதும் அமலாக்கப்பட்டதும் ஆகும். ஜனவரி 1992 முதல் இத்திட்டம் செயல்பாட்டிற்கு வந்துள்ளது. இதன் நிறைவு நாள் ஜுன் 1999 ஆகும்.

**திட்ட முன்னேற்றம் :**

1. 24 பட்டய / 2 மேல் பட்டயப் படிப்புகள் புதிதாக நவீன தொழில் நுட்பத் துறையில் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

2. தரம் உயர்த்தும் திட்டத்தின் கீழ் 1800 ஆசிரியர்களுக்கு கணிப்பொறி பழுது பார்த்தல், பராமரிப்பு செய்தல் மற்றும் டிரபுள் ஷீட்டிங் செய்தல் ஆகிய துறைகளில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மேலும் மேல்நிலையாக்கப்பட்ட கணிப்பொறி துறைகளில் ஆசிரியர்களின் தொழில் நுட்ப அறிவை வளர்க்கவும், மேம்படுத்தவும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

3. தொடர் கல்வி மையம் 55 தொழில் நுட்பப் பயிலகங்களிலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. 5000 நபர்களுக்கு தேவையான நவீன நிகழ்ச்சிகள்/பயிற்சிகள் சிக்கன முறையில் தகுதிக்குட்பட்ட தொகையில் நடத்தப்பட்டுள்ளது.

4. குறிப்பிட்ட 10 தொழில் நுட்பப் பயிலகங்களில் தன்னாட்சி மற்றும் பன்முறை நுழைவு முறைகள் எல்லா கிளைகளிலும் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

5. அரசினர் தொழில் நுட்பப் பயிலகங்களில் 11 மகளிர் விடுதிகளும், 40 ஆசிரியர்களுக்கு குடியிருப்புகளும், 50 பணியாளர் குடியிருப்புகளும் மற்றும் பயிலகக் கட்டடங்கள் இத்திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு உள்ளன.

6. 30 பயிலகங்களில் கணிப்பொறி இயந்திரங்கள் நவீனப்படுத்தப்பட்டு புதுப்பிக்கப்பட்டு உள்ளன. 170 பட்டய படிப்புகளில் ஆய்வுக் கூடங்களின் வசதிகள் புதுப்பிக்கப்பட்டு, ஆய்வுக் கூடங்களின் தரம் மேம்படுத்தப்பட்டுள்ளது.

7. இத்திட்டத்திற்காக 1994-95-இல் ரூ. 6,36.60 இலட்சமும் 1995-96-ல் ரூ.599.75 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

1995 ஏப்ரல் 24 ]

# மொத்த நிதி ஒதுக்கீடு

| வரிசை எண் | ஆண்டு | வரவு செலவு மதிப்பீடு | | திருத்திய மதிப்பீடு | |
|---|---|---|---|---|---|
| | | திட்டத்தில் சேராதது. | திட்டம் | திட்டத்தில் சேராதது. | திட்டம் |
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | | |
| 1. | 1992-'93 | 37,26.72 | 2,47.96 | 41,93.86 | 2,32.91 |
| 2. | 1993-'94 | 42,34.08 | 2,21.52 | 45,48.52 | 8,67.57 |
| 3. | 1994-'95 | 47,86.21 | 8,33.87 | 46,68.23 | 8,49.48 |
| 4. | 1995-'96 | 49,40.82 | 842.66 | - | - |

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

## 2. அண்ணா பல்கலைக்கழகம்

நாட்டின் மிகப் பெரிய தொழில்நுட்பப் பல்கலைக் கழகமாகத் தோற்றுவிக்கப்பட்டது அண்ணா பல்கலைக் கழகம் ஆகும். இப்பல்கலைக் கழகத்தில் நடப்புக் கல்வியாண்டில் 5131 மாணாக்கர்கள் பயிலுகின்றனர். அவர்களுள், 893 பேர் மகளிர். பொறியியல் தொழில் நுட்பக் கல்வி பயிலும் மகளிர் அதிகமாக இடம் பெற்றிருப்பது இப்பல்கலைக் கழகத்தில்தான் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அண்ணா பல்கலைக் கழகத்தில் பயிற்றுவிக்கப்படும் 22 இளநிலைப் பட்டப்படிப்புப் பிரிவுகளிலும் 38 முதுநிலைப் பட்டப் படிப்புப் பிரிவுகளிலும் 4 முதுநிலைப் பட்டயப் படிப்புப் பிரிவுகளிலும் பயிற்றுவிக்கப்படும் பாடங்கள் நாட்டின் முன்னேற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் உறுதுணை புரிவனவாகும்.

உயிர்சார் நுட்பவியல், படிக வளர்ச்சி, தொலையுணர்வுத் தொழில் நுட்பம், சுற்றுச்சூழல் நீர்வளமும் மேலாண்மையும், மின்னணுவியல் போன்ற துறைகளில் இப்பல்கலைக்கழகம் சிறப்பான பணிகளைச் செய்கிறது. நீர்ப்பாசனம் நீர் மேலாண்மை, பொறி அறிவியல் மற்றும் பொறியியல் போன்ற துறைகளில் நாட்டுக்குத் தேவையான மனித ஆற்றலை வெளிப்படுத்தக் கூடிய கல்வியறிவைப் பயிற்றுவிப்பதோடு, அவை தொடர்பான ஆய்வுகளையும் மேற்கொண்டுள்ளது.

புதிய துறைகளில் பட்டப்படிப்புகளை அறிமுகப்படுத்தவும், புலத்துறையை மேம்படுத்தவும், பிற ஏந்துகளின் வளர்ச்சி நிதியாதாரங்களைப் பெறுவதற்கான முயற்சி முடுக்கிவிடப்பட்டுள்ளது. இந்தியாவில் மட்டுமின்றி அயல்நாடுகளிலுள்ள நிதி நிறுவனங்களிட மிருந்தும் நிதியுதவி பெறுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மனிதவள மேம்பாட்டுத் துறையின் உதவியுடன் ரூ. 11.54 கோடி (6 வது திட்டம் முதல் 1993-94 வரை) பெற்று பல்துறைகளில் உள்ள பல ஆய்வுக்கூடங்களை நவீனப்படுத்தும் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதில் பல்கலைக்கழகம் ஈடுபட்டு வருகிறது. இதுவரை 293 எம்.பில் மற்றும் 223 பிஎச்.டி. பட்டங்கள் இந்த பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்டுள்ளன.

பல்கலைக்கழக மானியக்குழு சிறப்பு உதவித்திட்டத்தின்படி கீழ்கண்ட துறைகளுக்கு நிதியுதவி செய்துள்ளது:-

1995 ஏப்ரல் 24 ]

*(1)* கணினி அறிவியல் மற்றும் பொறியியல் பள்ளி

*(2)* மெக்கானிகல் பொறியியல் (இதற்காக ரூ. 39.50 இலட்சம் அளிக்கப்பட்டுள்ளது.)

*(3)* வேதிப்பொறியியல் துறை

*(4)* சூழ்நிலையியல் மையம்.

*(5)* மின்னியல் மற்றும் மின்னணு பொறியியல் துறை.

*(6)* கட்டடப் பொறியியல் துறை

இதற்காக ரூ. 104 இலட்சம் அளிக்கப்பட்டுள்ளது. படிக வளர்ச்சி மையத்தின் உயர்தர பணியினை பாராட்டும் பொருட்டு பல்கலைக்கழக மானியக்குழு அனைத்து பல்கலைக்கழகங்களின் ஆய்வு மையமாக உயர்த்தியுள்ளது. இதனால் அகில இந்திய அளவில் பல்கலைகழக ஆய்வாளர்களுக்கு தகுந்த வசதிகள் செய்துதரப்படும். அம்மையத்தின் வளர்ச்சிக்கு பல்கலை மான்யக்குழு ரூ. 150 இலட்சத்திற்கு ஒப்புதலளித்து இதுவரையிலும் ரூ. 117.50 இலட்ச நிதியினை அளித்துள்ளது.

அண்ணா பல்கலைக் கழகத்திலுள்ள இராமானுஜம் கணினி மையம் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பயன்படும் வகையில் சிறந்த மையக் கணினி வசதியினைக் கொண்டு இயங்கி வருகிறது. இத்துடன் சென்னை நகரத்திலுள்ள உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கான ஞாயிற்றுக் கிழமைகளில் வகுப்புகளும், கிராமப்புற மாணவர்களுக்கான கணினி வகுப்புகளையும் குறிப்பிடத்தக்க திட்டங்களாக நடத்தி வருகிறது. இத்திட்டத்தின் மூலம் பள்ளிகளுக்கும், பல்கலைக் கழகங்களுக்கும் இடையே உள்ள ஒருங்கிணைப்பு வலுப்படுத்தப்படுகிறது. மேலும் பல்கலைக்கழகம் தொழில் - பள்ளி இணைப்பு திட்டத்திற்கு எடுத்துக்காட்டாக புதுமையான அண்ணா-ஜெம் அறிவியல் பூங்காப் பள்ளி மற்றும் தொழில் நுட்பப் பூங்கா மையமும் இவ்வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

இந்தியாவில் பெருமைப்படத்தக்க பொறியியல் கல்லூரியான இந்த பல்கலைக்கழகம் இருநூற்றாண்டு விழாவினைச் சிறப்பாக கொண்டாடியமை இங்கு குறிப்பிடத்தக்கது. இதனை நினைவு கூறும் வகையில் மைய அரசின் தபால் தந்தித் துறை சிறப்புத் தபால் தலையினை வெளியிட்டுள்ளது. உயர்கல்விப் பணி வளர்ச்சியில் கற்பிப்பு, ஆய்வு மற்றும் தொடர் பணிகள் பலவற்றை இப்பல்கலைக்கழகம் சிறப்புற செய்துள்ளது. மைய, மாநில அரசுகளின் பெருத்த உதவிகளையும், ஆதரவையும் இப்பல்கலைக்கழகம் பெற்று

வருகிறது. 1994-95 பல்கலைக்கழக தொழில் கூட்டுறவு வளர்ச்சிக்கு இப்பல்கலைக் கழகத்தில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. இப்பல்கலைக்கழகத்திற்கும் பிற தொழில் நிறுவனங்களுக்கும் நல்லுணர்வு இணக்கத்திற்காக 5 உடன்பாடுகள் செய்யப்பட்டன. அண்ணா பல்கலைக் கழகம் ஜெர்மனி மற்றும் பிரிட்டிஷ் குடியரசுகளின் பன்னாட்டு கூட்டுறவினையும் பெற்றுள்ளது.

***1991-92, 1993-94*** மற்றும் ***1994-95***-ஆம் ஆண்டுகளில் தமிழக அரசின் நிதி ஒதுக்கீடு கீழ்க்கண்டவாறு பட்டியலிடப்பட்டுள்ளது :-

| | 1991-92 | 1992-93 | 1993-94 | 1994-95 |
|---|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | | | (10-1-1995 வரையில்) |
| 1. தொழில் நுட்பக் கல்வி | 46.09 | 38.78 | 46.79 | 23.09 |
| 2. அறிவியல் மற்றும் தொழில் நுட்பம் | 38.50 | 44.75 | 45.39 | 29.50 |
| 3. தொகுதி மான்யம் | 376.78 | 594.00 | 594.00 | 594.00 |

1995-96-ல் முந்தைய ஆண்டுகளின் செயல்பாடுகளை ஒன்றுபடுத்தி பல நிறுவனங்களின் உதவியுடன் அதனை மேம்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1995 ஏப்ரல் 24 ]

# அத்தியாயம்-8

## பொது நூலகத் துறை

*"குறைந்த செலவில் நிறைந்த மக்களுக்கு சிறந்த படிப்பு"*

இதுவே பொது நூலகப் பணியின் குறிக்கோளாகும்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் " நாடு நலம் பெற வீட்டுக்கொரு நூலகம் தேவை " என வலியுறுத்தியுள்ளார்கள்.

பொது நூலகத் துறை கிராமப் பகுதிகள் உள்ளிட்டு மாநிலம் முழுவதும் நூலகப் பணியினைச் சீரிய முறையில் செய்து வருகிறது. 1994-95ம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் இத்துறைக்கென ரூ. 1491.45 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2. கன்னிமாரா பொது நூலகம்.**

தமிழ்நாடு பொது நூலகச் சட்டம் 1948-ன்படி சென்னையிலுள்ள கன்னிமாரா பொது நூலகம் மாநிலத்தின் மைய (தலைமை) நூலகமாகும். நூல் விநியோகச் சட்டம், 1954-ன்படி இந்தியாவில் வெளியிடப்படும் அனைத்து நூல்கள், நாளேடுகள் மற்றும் பருவ ஏடுகள் ஒவ்வொன்றிலும் ஒரு பிரதியை இலவசமாகப் பெறும் நான்கு தேசிய வைப்பு நூலகங்களில் இந்நூலகமும் ஒன்றாகும். நூலகப் பணி இங்கு மேம்படுத்தப்பட்ட நிலையில் தனித் தனிப் பிரிவாக அதாவது குறிப்புதவும் பிரிவு, பாடநூல் பிரிவு, பருவ ஏடுகள் பிரிவு, நூற்றொகைப் பிரிவு, இந்திய மொழி நூல்கள் பிரிவு, ஆங்கில நூல்கள் பிரிவு, நகலெடுக்கும் பிரிவு மற்றும் வீடு தோறும் நூல் வழங்கும் பிரிவு, எனச் செயல்பட்டு வருகிறது. 1956 முதல் இது யுனஸ்கோ நிறுவன தகவல் மையமாகவும் செயல்பட்டு வருகிறது. இந்நூலகத்தில் தொலைக்காட்சி, படப்பதிவுப் பெட்டி மற்றும் கருவி ஆகியவைகளும் வாசகர்களின் நலன் கருதி வைக்கப்பட்டுள்ளன. இந்நூலகத்தில் நூல்கள் கட்டுமானப் பிரிவு மற்றும் நூல்கள் செப்பனிடும் பிரிவு ஆகியவைகளும் செயல்பட்டு வருகின்றன.

இந்நூலகத்தில் 119 பணியாளர்கள் பணிபுரிகின்றனர்.1994-95-ஆம் நிதியாண்டில் (30-11-1994 வரை) இந்நூலகத்தில் மொத்தம் 4.95 இலட்சம் நூல்கள் இருப்பில் சேர்க்கப்பட்டுள்ளன. இந்நூலகத்தைப் பயன்படுத்திய வாசகர்களின் எண்ணிக்கை 5.74 இலட்சம் ஆகும். இந்நூலகத்திலுள்ள 55,166 உறுப்பினர்கள் 1994-95-ம் நிதியாண்டில் இரவலாகப் பெற்றுச் சென்ற நூல்களின் எண்ணிக்கை 1.57 இலட்சம். 1994-95-ம் ஆண்டில்

இந்நூலகத்தில் இலவசமாகப் பெறப்பட்ட பருவ ஏடுகளின் எண்ணிக்கை 3,667, செய்தித்தாள்களின் எண்ணிக்கை 244 ஆகும்.

## 3. நூலக ஆணைக் குழுக்கள்:

தமிழ்நாடு பொது நூலகச் சட்டம் 1948 பிரிவு 5-ன் படி ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திலும் ஒரு நூலக ஆணைக்குழு ஏற்படுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஆகவே தற்போது மாநில அளவில் 21 நூலக ஆணைக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. நாகப்பட்டினம் காயிதே மில்லத் மற்றும் விழுப்புரம் ராமசாமி படையாட்சியார் மாவட்டங்களில் நூலக ஆணைக்குழுக்கள் தோற்றுவிக்க வேண்டியுள்ளது. தற்சமயம் இந்நூலக ஆணைக்குழுக்களின் கீழ் 18 மாவட்ட மைய நூலகங்கள் 7 இயங்கு நூலகங்கள் உட்பட 1545 கிளை நூலகங்கள் மற்றும் 1091 பகுதி நேர நூலகங்கள் இம்மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன. 1-1-1995 நிலவரப்படி அலுவலர்கள் உட்பட 3549 பணியாளர்கள் நூலகப் பணியினைச் செம்மையாக செய்து வருகின்றனர்.

இந்நூலகப் பணி விவரம் கீழ் வருமாறு (1-3-1994 நிலவரப்படி)

1. நூலிருப்பு .. 180.00 இலட்சம்
2. வாசகர்கள் .. 423.47 இலட்சம்
3. இரவல் வழங்கப்பட்ட நூல்களின் எண்ணிக்கை .. 123.32 இலட்சம்
4. உறுப்பினர்கள் .. 22.94 இலட்சம்

## 4. நூலகவரி

1993-94-ம் நிதியாண்டில் நூலக ஆணைக் குழுக்களில் நூலக வரியாக வசூலித்துள்ள தொகை ரூ. 549.54 இலட்சம். கடந்த 10 ஆண்டு காலத்தில் உள்ளாட்சி நிறுவனங்களிலிருந்து வசூலிக்கப்பட்ட நூலக வரி வசூல் கீழே தரப்படுகிறது.

| வ.எண். | ஆண்டு | நூலகவரி வசூல் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | 1984-85 | 144.32 |
| 2. | 1985-86 | 126.51 |
| 3. | 1986-87 | 163.14 |

1995 ஏப்ரல் 24 ]

| | | |
|---|---|---|
| 4. | 1987-88 | 163.51 |
| 5. | 1988-89 | 201.75 |
| 6. | 1989-90 | 260.51 |
| 7. | 1990-91 | 263.43 |
| 8. | 1991-92 | 314.28 |
| 9. | 1992-93 | 510.00 |
| 10. | 1993-94 | 549.54 |

**5. நலிந்த நூலக ஆணைக் குழுக்களுக்கு சிறப்பு மான்யம்:**

புதுக்கோட்டை, தருமபுரி போன்ற நூலக ஆணைக் குழுக்களில் வருவாய் போதுமானதாக இல்லை. இத்தகைய நலிந்த நூலக ஆணைக் குழுக்களுக்கு உதவும் வகையில் நூல்கள் வாங்க 1994-95 நிதியாண்டில் அரசு சிறப்பு மானியமாக ரூ. 51/- இலட்சம் அனுமதித்துள்ளது. இத்தகைய உதவி 1995-96 நிதியாண்டில் தொடருகிறது.

**6. ஒளிப்படப் பிரதி எடுக்கும் கருவி/தொலைக்காட்சிப் பெட்டி இணைந்த படப் பதிவு நாடாச்சுருள் கருவிகள் :**

வாசகர்களின் நலனையும் நூலகப் பணிச் சிறப்பினையும் கருதி கல்கத்தா, இராமனுஜம் மோகன்ராய் அறக்கட்டளை நிறுவன இணைமானிய உதவியுடன் 21 மாவட்ட நூலக ஆணைக் குழுக்களுக்கும் தொலைக்காட்சிப் பெட்டி இணைந்த படப் பதிவுப் பெட்டிகள் அளிக்கப்பட்டுள்ளன.

தேவையான நகல்களை வாசகர்கள் உடனுக்குடன் பெற்றுக் கொள்ள உதவும் நோக்கத்துடன் சென்னை, மதுரை கோயம்புத்தூர், திருச்சி, சேலம் மற்றும் செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். ஆகிய மாவட்ட நூலக ஆணைக்குழுக்களில் ஒளிப்படப் பிரதி எடுக்கும் கருவி பொருத்தப்பட்டுள்ளது. இச்சேவை இதர மாவட்டங்களுக்கும் விரிவுப்படுத்தப்படும்.

**7. பொது நூலகத் துறையின் எட்டுத் திட்டங்கள் :**

பொது மக்களின் ஒத்துழைப்புடன் அனைத்து மக்களும் பங்கு கொள்ளத் தக்க வகையில் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக நூலகத்தை சிறப்புற அமைக்க தமிழ்நாடு அரசு எட்டு அம்ச திட்டம் வகுத்து

செயல்படுத்தி வருகிறது. இந்த எட்டு அம்ச திட்டத்தை நிறைவேற்றுவதில் அடைந்துள்ள சாதனைகளின் விவரம் பின்வருமாறு.

**i. தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு பொது நூலகத்திற்கும் இலவச நிலம் பெறுதல்.**

தமிழகத்திலுள்ள மொத்தம் 1560 நூலகங்களில் தற்போது 311 நூலகங்களுக்கு மட்டுமே சொந்த நிலம் உள்ளது. நூலக வளர்ச்சிக்கு ஒவ்வொரு நூலகத்திற்கும் சொந்த மனை மிகவும் அவசியமாகும். ஆனால் நிதிப் பற்றாக்குறை காரணமாக அங்காடி விலைக்கு மனைகள் வாங்குவதென்பது இயலாததாகும். எனவே பொது மக்களிடம் இலவச மனைகள் கோரிப் பெற வேண்டியது அவசியமாகிறது. இந்த வகையிலும் கீழ்க்காணும் விவரப்படி இலவச மனைகள் பெறப்பட்டுள்ளன.

| | எண்ணிக்கை | அங்காடி விலை | அரசு நிர்ணய விலை |
|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| பொது மக்களிடமிருந்து இலவசமாகப் பெற்று பதிவு செய்யப்பட்டவைகளின் எண்ணிக்கை | 385 | 250.50 | 102.50 |
| உள்ளாட்சி நிறுவனங்களில் நூலகங்களுக்காக பதிவு செய்து தரப்பட்ட மனைகளின் எண்ணிக்கை | 505 | 329.50 | 135.00 |
| உள்ளாட்சி நிறுவனங்களால் தீர்மான வடிவில் தரப்பட்ட மனைகளின் எண்ணிக்கை | 789 | 520.00 | 214.00 |
| இலவசமாகப் பெறப்பட்ட மொத்த மனைகளின் எண்ணிக்கை | 1679 | 1100.00 | 451.00 |

**ii. பொது நூலகங்கள் செயல்படும் ஊர்களில் படித்த ஒவ்வொருவரையும் நூலக உறுப்பினராகச் சேர்த்தல்.**

படிப்பறிவு பெற்ற ஒவ்வொருவரையும் நூலகத்தைப் பயன்படுத்தச் செய்வதே நூலகத்துறையின் முக்கியக் குறிக்கோளாகும். இந்த வகையில்

நூலக உறுப்பினராக்குதல் நூலக இயக்ககத்தின் தலையாயப் பணி ஆகும். இதன்படி கடந்த ஐந்தாண்டுகளில் 9.66 இலட்சம் பேர், தமிழ்நாட்டில் நூலகத்தில் உறுப்பினராகச் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களையும் சேர்த்து 1-4-1994 நிலவரப்படி மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 22.84 இலட்சம் ஆகும். 20ஆம் நூற்றாண்டின் இறுதிக்குள் எண்ணிலடங்கா உறுப்பினர்களைச் சேர்க்க திட்டமிடப்பட்டுள்ளது.

**iii. தமிழகத்தில் ஒவ்வொரு பொது நூலகத்திற்கும் பொது மக்களிடமிருந்து நன்கொடையாகப் போதிய தளவாடங்களைப் பெறுதல்.**

பொது நூலகங்களின் நூலடுக்குகள், மனைத் துணைப் பொருட்கள், மின் சாதனங்கள் முதலியன போதுமானதாக இல்லை. இத்தகைய அடிப்படைக் குறைகளை நீக்க, பொது மக்கள், கொடையுள்ளம் கொண்டவர்கள் ஆகியவர்களிடமிருந்து ரூ.122/- இலட்சம் மதிப்புள்ள பொருட்கள் நன்கொடையாகப் பெறப்பட்டுள்ளன. இதன் விளைவாக பெரும்பாலான நூலகங்கள் தளவாடப் பொருட்களைப் பொறுத்தவரை தன்னிறைவும் பெற்றுள்ளன.

**iv. பொது நூலகம் ஒவ்வொன்றிலும் இரு பகுதி நேர நூலகங்களைத் திறந்து செயல்படுத்துதல்.**

பொது நூலகங்களிலுள்ள நூலிருப்புகளில் 10 விழுக்காடு முதல் 20 விழுக்காடு வரையுள்ள நூல்கள் மட்டுமே உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகின்றன. எஞ்சியுள்ள நூல்கள் நூலகத்தில் நூலடுக்குகளில் தேக்கி வைக்கப்பட்டுள்ளன. இத்தகைய நூல்களை அருகிலுள்ள கிராமங்களில் பகுதி நேர நூலகங்கள் திறப்பதன் மூலம் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள இயலும். இதற்கென 1994-95 நிதியாண்டில் 5,000 மக்கட் தொகைக்குக் குறைவாக உள்ள கிராமங்களில் 250 பகுதி நேர நூலகங்கள் திறக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு திறக்கப்படவிருக்கும் பகுதி நேர நூலகங்கள் கீழ்க்காணுபவை சம்பந்தமாக பொது மக்களின் ஆதரவைப் பெற்றிருத்தல் வேண்டும். அதாவது (1) இலவசக் கட்டடம் (2) 5 செண்ட் முதல் 10 சென்ட் வரை இலவசமனை (3) நூலகத்திற்குப் பயன்தரத் தக்க ரூ. 2,000 மதிப்புள்ள தளவாடங்கள் அல்லது ரொக்கமாக நன்கொடை (4) குறைந்தது 200 உறுப்பினர்களைச் சேர்த்தல் ஆகியவைகளாகும். 1994-95-ம் ஆண்டில் நவம்பர் திங்கள் வரை 92 பகுதி நேர நூலகங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. மாநில அளவில் மொத்தம் இதுவரை 1091

பகுதி நேர நூலகங்கள் கிராமப் பகுதிகளில் திறக்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன.

**v. பொது மக்களிடமிருந்து நூலகங்களுக்கு நன்கொடையாக நூல்கள், நாளேடுகள் மற்றும் பருவ இதழ்கள் பெறுதல்.**

நூல்கள், நாளிதழ்கள் மற்றும் பருவ ஏடுகள் ஆகியவற்றின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இவற்றின் விலையும் பல மடங்கு உயர்ந்து வருகிறது. எனவே நூலக வரியைக் கொண்டு இவற்றை வாங்க நிதி போதுமானதாக இல்லை. இதனை நிவர்த்தி செய்ய ஒவ்வொரு நூலகத்திற்கும் பொது மக்களிடமிருந்து நன்கொடையாக நூல்கள், நாளேடுகள் மற்றும் பருவ இதழ்கள் பெறத் திட்டம் வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை ரூ. 10.20 இலட்சம் மதிப்புள்ள நாளிதழ்களும் பருவ ஏடுகளும் நன்கொடையாகப் பெறப்பட்டுள்ளன.

**vi. நூலகந்தோறும் புரவலர் சேர்த்து நூலக இயக்கத்தை வளர்த்தல்.**

நூலக ஆர்வலர்களிடமிருந்து ரூ. 1000 நன்கொடையாகப் பெற்று புரவலர் சேர்க்கும் திட்டத்தை அரசு வகுத்துத் தந்துள்ளது. இத்திட்டத்தின் நோக்கம் புரவலர்களிடமிருந்து பெறப்படும் நன்கொடைத் தொகையை நீண்ட கால வைப்பு நிதியில் சேர்த்து அதிலிருந்து பெறப்படும் வட்டியைக் கொண்டு நல்ல நூல்கள் மற்றும் பருவ ஏடுகளை வாங்குவதாகும். இத்திட்டம் பெருவாரியாக பொது மக்களின் நன்மதிப்பை பெற்று இதுவரை 5,611 புரவலர்கள் சேர்க்கப்பட்டு இதன் மூலம் ரூ. 56.11 இலட்சம் நிதி நன்கொடையாகப் பெறப்பட்டுள்ளது.

**vii. இருபதாம் நூற்றாண்டின் இறுதிக்குள் ஒவ்வொரு நூலகத்தையும் சொந்த கட்டடத்தில் செயல்படச் செய்தல்.**

மொத்தம் உள்ள 1560 நூலகங்களில் 326 நூலகங்கள் சொந்தக் கட்டடங்களிலும் 482 நூலகங்கள் இலவசக் கட்டடங்களிலும் 752 நூலகங்கள் வாடகைக் கட்டடங்களிலும் செயல்பட்டு வருகின்றன. வாடகை மற்றும் இலவசக் கட்டடங்களில் செயல்பட்டு வரும் பெரும்பாலான நூலகங்களுக்கு கட்டடங்கள் போதுமானதாக இல்லை.

இக்குறையினை நிவர்த்திக்க அரசு குறைந்த பட்ச கட்டடத் திட்டம் ஒன்று வகுத்துத் தந்துள்ளது. இத் திட்டத்தின் கீழ் 15,000 மக்கட் தொகைக்கு கீழ் உள்ள இடங்களில் ரூ. 1 இலட்சம் மதிப்பிலும் 15,000 மக்கட் தொகைக்கு மேல் உள்ள இடங்களில் ரூ. 2 இலட்சம் மதிப்பிலும் கட்டடங்கள் கட்ட அனுமதித்துள்ளது. இதுவரை ரூபாய் ஒரு இலட்சம் செலவில் கட்டப்படவுள்ள கட்டடங்கள் 523-க்கும் ரூபாய் 2 இலட்சம் செலவில் கட்டப்படவுள்ள கட்டடங்கள் 90-க்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன்படி ஏற்கனவே கட்டடம் கட்ட அனுமதிக்கப்பட்ட 210 கட்டடங்களையும் சேர்த்து மொத்தம் 815 கட்டடங்கள் கட்ட கடந்த ஐந்தாண்டுகளில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**viii. நூலகங்களை வங்கிகள் மற்றும் பிற நிறுவனங்கள் தத்து எடுக்க ஆவன செய்தல்.**

பொது நூலகங்கள் மிகவும் சிக்கனமான அதே நேரத்தில் வலிவுமிக்க கல்வி நிறுவனமாகும். ஆனால் இந்நிறுவனங்களில் தேவையான போதிய தளவாடங்கள் இல்லாததால் குறைந்த அளவே பயன்படுத்தப்படுகின்றன. இதற்கு மேலும் கற்கும் கருவிகள் சாதனங்கள், மனைத் துணைப் பொருட்கள், கட்டடங்கள் ஆகியவை தேவைப்படுகின்றன. இத்தேவைகள் முழுமையாக நிறைவு பெறவும் குறிக்கோள் நிறைவேறவும் நூலகங்களை வங்கிகள், தொழில் நிறுவனங்கள் மற்றும் வணிக நிறுவனங்கள் தத்தெடுத்துக் கொள்ளுதல் அவசியம்.

இத்திட்டத்தின் கீழ் சென்னை செங்கை-எம்.ஜி.ஆர்., சேலம், மற்றும் கோவை மாவட்டங்களில் ஏற்கனவே 8 நூலகங்கள் வங்கிகளால் தத்தெடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. நூலக வளர்ச்சி மாநாடுகள் ஒவ்வொரு மாவட்டத்திலும் நடத்தப்படுகின்றன. இதுவரை 14 நூலகச் சீரமைப்பு மாநாடுகள் நடத்தப் பெற்றுள்ளன. அரசுக்கு நூலகம் சம்பந்தமாக ஆலோசனைகளை அளிப்பதற்கான மாநில நூலகக்குழு (1993 முதல் 1996 வரை) ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதன் முதல் கூட்டம் 16-6-93 அன்று நடைபெற்றது.

**8. நூலகவியல் பயிற்சி நிலையம் :**

பயிற்சி பெறா மூன்றாம் நிலை நூலகர்களுக்குப் பயிற்சி தர, பொது நூலக இயக்ககத்தில் ஒரு நூலகவியல் பயிற்சி நிலையம் நடத்தப்படுகிறது.

இந்நிறுவனம், முதல்நிலை/இரண்டாம் நிலை/மூன்றாம் நிலை நூலகர்களுக்கு ஆண்டு தோறும் புத்துணர்வு மற்றும் மறு பயிற்சியும் அளித்து வருகிறது.

## மொத்த நிதி ஒதுக்கீடு

| வரிசை எண் | ஆண்டு | வரவு செலவு மதிப்பீடு திட்டத்தில் சேராதது. | வரவு செலவு மதிப்பீடு திட்டம் | திருத்திய மதிப்பீடு திட்டத்தில் சேராதது. | திருத்திய மதிப்பீடு திட்டம் |
|---|---|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | | |
| 1. | 1992-93 | 1116.83 | 17.07 | 1218.14 | 18.62 |
| 2. | 1993-94 | 1158.55 | 19.51 | 1179.94 | 20.97 |
| 3. | 1994-95 | 1264.08 | 21.49 | 1338.83 | 23.46 |
| 4. | 1995-96 | 1468.88 | 29.09 | .. | .. |

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

1995 ஏப்ரல் 24 ]

# அத்தியாயம் 9

## தமிழ்நாடு ஆவணக்காப்பகம்

இந்தியாவிலேயே முதன்மையானதும், சிறப்பாக அமையப்பெற்றதும் தனிப்பெரும் பெருமையை உடையதுமான தமிழ்நாடு ஆவணக்காப்பகம், 1909-ஆம் ஆண்டு நிறுவப்பட்டதாகும். 1670 ஆம் ஆண்டு முதல் 1989 ஆம் ஆண்டு வரையிலான அசல் ஆவணங்கள் இங்கு பாதுகாக்கப்படுகின்றன. இக்காப்பகத்தில் பாதுகாக்கப்படும் ஆவணங்கள் தலைமை செயலகத்துறைகள், வருவாய்த்துறை வாரியங்கள் மற்றும் சில துறைத் தலைமை அலுவலகங்களைச் சார்ந்தவையாகும். இவை தவிர டச்சு, மற்றும் மராத்தி மொழி ஆவணங்களும் பாதுகாக்கப்படுகின்றன.

கடந்த 30 ஆண்டுகளைச் சார்ந்த ஆவணங்கள் இக்காப்பகத்தில் உள்ள இடைநிலை ஆவணக்காப்பகப் பிரிவில் தனியே பாதுகாக்கப்படுகின்றன.

**2. இக்காப்பகத்தின் முக்கியப் பணிகள் வருமாறு :**

(1) அரசு நிர்வாக இயந்திரத்திற்குத் தேவையான ஆவணங்கள் மற்றும் விவரங்களை வழங்குதல்;

(2) ஆராய்ச்சியாளர்களின் ஆராய்ச்சிக்குத் தேவையான வசதிகள் ஏற்படுத்தித் தருதல்;

(3) சான்றொப்பமிடப்பட்ட அரசிதழ் நகல்களை உரிய கட்டணத்தின் பேரில் பொதுமக்களுக்கு வழங்குதல்;

(4) அறிவியல் முறையில் ஆவணங்களைப் பாதுகாத்தல்;

(5) தேர்ந்தெடுக்கப்பட்ட ஆவணத் தொகுப்பு மற்றும் 'ஆவண அமுதம்' என்னும் காலாண்டு இதழ் ஆகியவற்றை வெளியிடுதல்.

(6) ஆவணப் பராமரிப்பு குறித்து பயிற்சியளித்தல்.

**3. ஆவணங்களை மையப்படுத்துதல் :**

சிப்பாய் கலகத்திற்கு முந்தைய காலத்தைச் சார்ந்த மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட நீதிமன்ற அலுவலக ஆவணங்களும், மற்றும் தற்போது செயல்படாத துறைகளின் ஆவணங்களும்

மையப்படுத்தப்பட்டு, பாதுகாக்கப்படுகின்றன. இங்குள்ள ஆவணங்களில் முதன்மையான ஆவணம், கி.பி. 1670 ஆம் ஆண்டைச் சார்ந்ததாகும். தற்சமயம் இக்காப்பகத்தில் 58,31,296 கோப்புகளும் 7,70,431 தொகுப்புகளும் மற்றும் 2674 ஆவணக்கட்டுகளும் உள்ளன. நில அடமான வங்கி, கூட்டுறவு சங்கங்களைச் சார்ந்த கடன் பத்திரம் மற்றும் ஒப்பந்த பத்திரங்கள் ஆகியவை இவ்வலுவலகத்தில் "பாதுகாப்பு நிலைப் பேழையில்" பராமரிக்கப்பட்டு வருகின்றன. இவை தவிர, 1962 ஆம் ஆண்டு முதல் வெளியிடப்பட்ட வாக்காளர் பட்டியல்களும் இங்கு பராமரிக்கப்பட்டு வருகின்றன.

## 4. ஆவணப் பாதுகாப்பு :

முதன்மை வாய்ந்த அறிவியல் ரீதியிலான முறைகளைப் பின்பற்றுவதால், தமிழ்நாடு ஆவணக்காப்பகத்தில் பின்பற்றப்படும் ஆவணப்பாதுகாப்பு முறை குறிப்பிடத்தக்கதாகும். பழமை வாய்ந்த, சிதிலமடைந்த ஆவணங்கள் முறையாக செப்பனிடப்பட்டு, பைண்டிங் செய்யப்பட்டு பாதுகாக்கப்படுகின்றன. அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ள இரசாயன புகையூட்டும் இயந்திரம் மற்றும் (Vacuum Fumigation Chamber) தொழில்நுட்ப இயந்திரங்களின் துணை கொண்டு ஆவணப் பாதுகாப்புப்பணி நடைபெறுகிறது.

## 5. நுண் நிழற்படப் பிரிவு (Microfilm Unit) :

நுண் நிழற்படப்பிரிவு 1982-ஆம் ஆண்டு நிறுவப்பட்டதாகும். பழைய மூல ஆவணங்களை ஆராய்ச்சியாளர்கள் கையாள்வதைத் தவிர்க்கும் வகையில், இவ்வாவணங்களை நுண்நிழற்படம் (Microfilm) எடுத்து ஆராய்ச்சியாளர்களுக்கு வழங்கப்படுகின்றன. 1994-ஆம் ஆண்டில் 2,11,647 பிரதிகள் எடுக்கப்பட்டு, ஆராய்ச்சியாளர்களுக்கு வழங்கப்பட்டன. இப்பிரிவு நிறுவப்பட்டதிலிருந்து இதுவரை 14,49,674 பிரதிகள் எடுக்கப்பட்டுள்ளன.

## 6. நூலகம் :

முறையாக பகுக்கப்பட்டு பராமரிக்கப்படும் 2,51,986 புத்தகங்கள் தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகத்தில் இடம் பெற்றுள்ளன. இந்நூலகத்தில் உள்ள புத்தகங்களை வெளியில் எடுத்துச் செல்ல அனுமதிப்பது இல்லை. ஆராய்ச்சியாளர்கள் பார்வையிடவும், குறிப்பெடுத்துக் கொள்ளவும் அவை பயன்படுத்தப்படுகின்றன.

## 7. பயிற்சிப் பிரிவு :

அரசு அலுவலகங்களிலும், பொதுத்துறை நிறுவனங்களிலும் ஆவண அறைப் பொறுப்பில் உள்ள பணியாளர்களுக்கான "ஆவணப் பராமரிப்பு" குறித்த 30 நாள் குறுகிய காலப் பயிற்சி ஒன்று இப்பிரிவில் அளிக்கப்படுகிறது. இதுவரை 2219 நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. அரசுத்துறை அல்லாத பொதுத்துறை நிறுவனங்களுக்கும் இப்பயிற்சி விரிவுபடுத்தப்பட்டுள்ளது. பயிற்சி பெறுபவர்களிடமிருந்து ரூ.500 கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. 1995 ஆம் ஆண்டில் சுமார் 150 பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

## 8. விவரச்சுவடிப் பிரிவு :

மாவட்ட விவரச்சுவடிகளை வெளியிடும் பணியில் இப்பிரிவு ஈடுபட்டுள்ளது. இதுவரை, தஞ்சாவூர், மதுரை, கோயம்புத்தூர், தென்னாற்காடு, சேலம், இராமநாதபுரம் மற்றும் புதுக்கோட்டை மாவட்ட விவரச்சுவடிகள் வெளியிடப்பட்டுள்ளன. தர்மபுரி, கன்னியாகுமரி மற்றும் நீலகிரி மாவட்ட விவரச்சுவடிகள் அச்சில் உள்ளன. செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்ட விவரச்சுவடி அரசினால் ஏற்பளிக்கப்பட்டுள்ளது. திருச்சிராப்பள்ளி மாவட்ட விவரச்சுவடி வரைவு முடிக்கப்பட்டு இறுதியாக்கம் நடைபெறுகிறது. திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்ட விவரச்சுவடி தயாரிக்கும் பணியும் முன்னேற்றத்திலுள்ளது. புதுக்கோட்டை மாவட்ட விவரச்சுவடியின் தமிழ் பிரதி வெளியிடப்பட்டுள்ளது. வ. உ. சிதம்பரனார் மாவட்ட விவரச்சுவடி தயாரிக்கும் பணி துவக்கப்பட உள்ளது. கன்னியாகுமரி மாவட்ட விவரச்சுவடி தமிழில் மொழியாக்கம் முடிவுற்று வல்லுநர்கள் பரிசீலனையில் உள்ளது. நீலகிரி மாவட்ட விவரச்சுவடி தமிழில் மொழி பெயர்க்கும் பணி நிறைவுறும் தருவாயில் உள்ளது.

## 9. வெளியீட்டுப் பிரிவு :

வரலாற்றுச் சிறப்புமிக்க மற்றும் அரசு நிருவாகம் சார்ந்த தேர்ந்தெடுத்த ஆவணத் தொகுப்புகளை இக்காப்பகத்தில் வெளியீட்டுப் பிரிவு வெளிக்கொணர்கிறது. அரசால் ஒப்படைக்கப்பட்ட 13 தேர்ந்தெடுத்த ஆவணத் தொகுப்புகளில் 10 தேர்ந்தெடுத்த ஆவணத் தொகுப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. மேலும் 1947-1957 வரையிலான காடு நிர்வாகம் குறித்த ஆவணத் தொகுப்பு அரசின் ஏற்பிற்காக அனுப்பப்பட்டுள்ளது. "கூட்டுறவின் தோற்றம் மற்றும் முன்னேற்றம்"

(Origin and Development of Co-operation) பற்றிய ஆவணத் தொகுப்பு படியெடுக்கும் நிலையில் உள்ளது. மேலும் (1) Watersupply and Drainage Schemes. (2) Role played by Harijan Legislators in the Madras Presidency, since 1920 (3) Agricultural Legislators in Madras Presidency ஆகிய ஆவணத் தொகுப்புகளை அச்சிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவை தவிர விலை நிர்ணயம் செய்யப்பட்ட ஆவண அமுதம் எனும் காலாண்டு இதழும் 1986 ஆம் ஆண்டு முதல் வெளியிடப்படுகிறது. ஜூலை-செப்டம்பர் 1986 முதல் அக்டோபர்-டிசம்பர் 1994 வரை 29 இதழ்கள் வெளியிடப்பட்டுள்ளன.

## 10. தமிழ்நாடு வரலாற்று ஆராய்ச்சி மன்றம் :

வரலாற்று ஆய்வினை ஊக்குவிக்கும் வகையில் தமிழ்நாடு வரலாற்று ஆராய்ச்சிக்குழு ஆண்டுதோறும் தகுதிவாய்ந்த நபர்களுக்கு நான்கு மாணவப் பணியிடங்கள் (Fellowship) வழங்கி வருகிறது. கல்வி அமைச்சர் இக்குழுவின் செயலாளராவார். இதுவரை இக்குழுவில் 20 ஆராய்ச்சி மாணவர்கள் சேர்ந்து அனைவரும் ஆய்வு அறிக்கைகளை சமர்ப்பித்துள்ளனர். இவற்றில் இரண்டு அறிக்கைகள் ஆய்வுக் குழுவினால் ஏற்கப்பட்டு ஆராய்ச்சியாளர்களினால் வெளியிடப்பட தேர்வு செய்யப்பட்டுள்ளது.

மாநிலத்தில் உள்ள தனியாரிடம் உள்ள ஆவணங்களின் விவரங்களை அறிந்து அவ்வாவணங்களை சேகரித்து வரலாற்று ஆராய்ச்சியினை முழுமையடையச் செய்வதே வரலாற்று ஆவண ஆய்வுக்குழுவின் தலையாய பணியாகும்.

## 11. ஆவண வழிகாட்டிப் பிரிவு :

தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் உள்ள ஆவணங்களுக்கான வழிகாட்டி மைய அரசு நிதி உதவியுடன் 1989-ம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இதற்கான செலவினம் மைய மாநில அரசுகளினால் 75% மற்றும் 25% என்ற விகிதங்களின்படி பகிர்ந்து கொள்ளப்படுகிறது. தமிழ்நாடு ஆவணக்காப்பக ஆவணங்களுக்கு தொகுக்கப்பட்ட வழிகாட்டி தயாரிக்கும் பணி 1994-95 ஆம் ஆண்டில் எட்டு படலங்கள் மேற்கொள்ளப்பட்டன.

## மாவட்ட ஆவணக்காப்பகம் :

மாவட்ட அரசு அலுவலகங்களில் சிதறுண்டு கிடக்கும் வரலாற்று மற்றும் நிருவாகச் சிறப்புமிக்க ஆவணங்களை தொகுக்கும் பொருட்டு,

1995 ஏப்ரல் 24 ]

இது நாள்வரை மதுரை, கோவை, கடலூர், திருச்சி மற்றும் சேலம் ஆகிய 5 இடங்களில் ஆவணக்காப்பகங்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இந்த ஐந்து மாவட்ட ஆவணக் காப்பகங்களில் 4,24,450 ஆவணங்களும், 5,500 புத்தகங்கள் மற்றும் 88,469 மோடி ஆவணங்களும், ஓலைச் சுவடிகளும் தொகுத்து வைக்கப்பட்டுள்ளன.

## மொத்த நிதி ஒதுக்கீடு

| வரிசை எண் | ஆண்டு | வரவு செலவு மதிப்பீடு | | திருத்திய மதிப்பீடு | |
|---|---|---|---|---|---|
| | | திட்டத்தில் சேராதது. | திட்டம் | திட்டத்தில் சேராதது. | திட்டம் |
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | | |
| 1. | 1992-93 | 68.52 | 47.38 | 82.56 | 54.15 |
| 2. | 1993-94 | 87.75 | 41.23 | 94.63 | 58.05 |
| 3. | 1994-95 | 96.16 | 46.17 | 92.55 | 51.66 |
| 4. | 1995-96 | 104.13 | 39.53 | .. | .. |

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

# அத்தியாயம் - 10

## விளையாட்டு மற்றும் இளைஞர் பணி.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தலைமையின்கீழ் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இந்த தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் முக்கிய குறிக்கோள்கள் :-

(அ) மாநிலத்தில் விளையாட்டுக்கான அரங்க வசதிகள் ஏற்படுத்துதல்;

(ஆ) திறன் வாய்ந்த விளையாட்டு வீரர்களைக் கண்டறிந்து அவர்கள் தேசிய மற்றும் பன்னாட்டு வீரர்களாக உருவாகப் பயிற்சி அளித்தல்;

(இ) விளையாட்டுக் கழகங்கள் திறம்பட செயல்படுவதற்கு நிதியுதவி அளித்தல்;

(ஈ) இளைஞர் நலப் பணிகளையும் தேசிய நலத் திட்டங்களையும் மேம்படுத்துதல்.

**2. கட்டட அமைப்பு வசதிகள்.**

ஒவ்வொரு மாவட்ட தலைமையிடத்திலும் ஒரு விளையாட்டரங்கமும், ஒரு நீச்சல் குளமும், ஓர் உள் விளையாட்டரங்கமும் அமைக்க வேண்டும் என்பது அரசின் கொள்கையாகும். தற்பொழுது 15 திறந்த வெளி விளையாட்டரங்கங்களும், 4 உள் விளையாட்டரங்கங்களும், 4 நீச்சல் குளங்களும் இந்த மாநிலத்தில் உள்ளன. விருதுநகர், இராமநாதபுரம் மற்றும் புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் விளையாட்டரங்கக் கட்டுமானப் பணி நடந்து கொண்டிருக்கிறது. மேலும் மாவட்ட தலைநகரங்களான சிவகங்கை மற்றும் திண்டுக்கல் ஆகிய இடங்களில் விளையாட்டு அரங்கம், ஈரோடு மற்றும் சேலம் ஆகிய இடங்களில் நீச்சல் குளம் ஆகியவை கட்டுவதற்கான கருத்துரு மைய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. நவீன விளையாட்டுக்களுக்கு தடகள செயற்கை ஓடுபாதை (ரப்பர் மண் ஓடுபாதை) காலத்தோடு ஒட்டிய அறிவியல் வசதிகள் தேவையாதலால் மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆற்றல் வாய்ந்த தலைமையில் 71/2 மாதங்களில் பிரமிக்கத்தக்க வகையில் கட்டப்பட்ட ஜவஹர்லால் நேரு

விளையாட்டரங்கில் சர்வதேச அளவுக்கு இணையாக தடகள விளையாட்டிற்கென செயற்கை ஓடுபாதை அமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்ற விளையாட்டுக்களான கைப்பந்து, பூப்பந்து, டென்னிஸ் ஆகிய விளையாட்டுகளுக்கும் செயற்கையிலான தரை விரிப்புகளை இறக்குமதி செய்வதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து வருகிறது.

**3. மகளிருக்கான பன்னாட்டமைப்பு டாக்டர் ஜெ. ஜெயலலிதா பொற்கோப்பை கால்பந்து போட்டி.**

மகளிருக்கான பன்னாட்டமைப்பு டாக்டர் ஜெ. ஜெயலலிதா பொற்கோப்பை கால்பந்து போட்டி ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் *25-08-94* முதல் *09-09-1994* வரை நடத்தப்பட்டது.

**4. 7வது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள்.**

*1995* டிசம்பர் திங்களில் சென்னையில் *7*-வது தெற்காசிய கூட்டமைப்பு போட்டிகளை நடத்தும் ஒரு சிறப்பான நல்வாய்ப்பு தமிழகத்திற்கு அளிக்கப்பட்டிருக்கிறது. பழைய மிருகக்காட்சி பகுதியில் பல்நோக்கு உள்ளரங்கம், நுங்கம்பாக்கத்தில் டென்னிஸ் அரங்கம், மேயர் ராதாகிருஷ்ணன் ஸ்டேடியத்தில் ஹாக்கி அரங்கம், வேளச்சேரி ரோடில் நீச்சல் வளாகம் போன்ற அடிப்படைத் தேவைகளுக்கான வேலைகள் தொடங்கப்பட்டுள்ளன. இந்த வேலைகளுக்கான திட்ட மதிப்பீடு பின்வருமாறு :-

| | |
|---|---|
| 1. பல்நோக்கு உள்ளரங்கம் | ரூ. 21.12 கோடி |
| 2. நீச்சல் வளாகம் | ரூ. 10.25 கோடி |
| 3. ஹாக்கி ஸ்டேடியம் | ரூ. 7.23 கோடி |
| 4. டென்னிஸ் ஸ்டேடியம் | ரூ. 6.86 கோடி |
| | **ரூ. 45.46 கோடி** |

மேலும், கோயம்பேட்டில் ரூ. *70* கோடி மதிப்பீட்டில் விளையாட்டு கிராமம் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கில் *7-2-1995* அன்று நடைபெற்ற சார்க் நாடுகளின் தேசிய ஒலிம்பிக் கமிட்டி கூட்டத்தில் *13* விளையாட்டுக்களில் *7*-வது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் நடத்த தீர்மானிக்கப்பட்டது.

ஜூடோ, ஸ்குவாஷ் ஆகிய விளையாட்டுப் போட்டிகள் ரிசர்வ் போட்டிகளாக வைக்கப்பட்டுள்ளன. தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் சிறப்பாக நடத்த 18 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

## 5. விளையாட்டுப் பள்ளி மற்றும் விடுதிகள்.

விளையாட்டுத் திறன் உள்ள பள்ளி மாணவ, மாணவிகளுக்கு பயிற்சி தருவதற்காக 3 விளையாட்டுப் பள்ளிகளையும், 5 விளையாட்டு விடுதிகளையும் அரசு நடத்தி வருகிறது. இதில் 2 விளையாட்டு விடுதிகள் சிறுமியர்களுக்கென்று தனியே அரசு நடத்தி வருகிறது. 8-வது வகுப்பு படிக்கும் மாணவ/மாணவிகளை இவ்விளையாட்டுப் பள்ளி/விடுதிக்கு தேர்வு செய்து அவர்கள் 3 ஆண்டும் மற்றும் 11-ம் வகுப்பு படிக்கும் மாணவ/மாணவிகளை இப்பள்ளி/விடுதிக்கு தேர்வு செய்து அவர்கள் இரண்டு ஆண்டும் அவற்றின் விடுதிகளில் தங்கி, விளையாட்டிலும், படிப்பிலும் தேர்ச்சி பெற வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இவர்கள் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் தேசிய விளையாட்டு நிலையத்தில் பயிற்சி பெற்ற சிறந்த பயிற்சியாளர்களால் பயிற்றுவிக்கப்படுகின்றனர். தற்போது 710 மாணவ/மாணவிகள் இப்பள்ளி மற்றும் விடுதிகளில் தங்கி பயின்று வருகின்றனர். மேலும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், இந்திய விளையாட்டு ஆணையத்துடன் இணைந்து இந்திய விளையாட்டு ஆணைய விளையாட்டு விடுதி ஒன்றை சென்னையிலும், சிறப்புத் திட்ட வளர்ச்சிப் பகுதி மையம் (எஸ்.பி.டி.ஏ.) ஒன்றை மாணவர்களுக்காக சேலத்திலும் தொடங்கியுள்ளது. இதில் மாணவர்கள் தங்கி படித்து விளையாட்டிலும் தேர்ச்சி பெற்று சிறந்து விளங்குகிறார்கள்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

## 6. விளையாட்டுச் சிறப்பு விடுதி.

சென்னையில் விளையாட்டுச் சிறப்பு விடுதி ஒன்றை 16 முதல் 20 வயது வரை உள்ள பள்ளி/கல்லூரி மாணவர்களுக்கு விளையாட்டில் நல்வாய்ப்பை உண்டாக்குவதற்காகத் தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் அவர்கள் திறமை பெற்றுள்ள விளையாட்டுகளுக்காக தெரிந்தெடுக்கப்பட்டு சிறப்புப் பயிற்சி தரப்படுவார்கள். சத்துணவு, விளையாட்டு சீருடைகள் மற்றும் கல்வி பயில கட்டணங்கள் முதலானவை அவர்களுக்கு வழங்கப்படும். திறமையுள்ள விளையாட்டு வீரர்கள் கல்வியை தொடர்வதோடு விளையாட்டுப் பயிற்சியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு தேசிய அளவிலும் பன்னாட்டு அளவிலும் மேம்பட்டு விளங்க இது வாய்ப்பினை தரும். இதற்காக தமிழக

அரசால் 1994-95-ம் ஆண்டு வரவு செலவு நிதி ஒதுக்கீட்டின்கீழ் ரூ. 8.08 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**7. சிறப்புத் தொகை வழங்கல்.**

மாணவர்களை விளையாட்டில் ஊக்கப்படுத்துவதற்காக மாநில குடியரசு தின விளையாட்டு போட்டிகள் மற்றும் பாரதியார் தின விளையாட்டுப் போட்டிகள் ஆகியவற்றில் வெற்றி பெற்றவர்களுக்கும், வெற்றி வழியோடியவர்களுக்கும் (ரன்னர்-அப்) முறையே ரூ. 600 மற்றும் ரூ. 400 என்ற விளையாட்டு சிறப்புத் தொகை வழங்கப்படுகிறது. 1994-95ல் அரசு இந்த வகையில் 363 மாணவ/மாணவிகளுக்கு ரூ. 1.94 லட்சம் வழங்கி ஊக்கம் தந்துள்ளது.

**8. சிறந்த விளையாட்டு வீரர்களை தத்து எடுக்கும் திட்டம்.**

சிறந்த விளையாட்டு வீரர்களை தத்தெடுத்தல் என்ற திட்டத்தில் 1994-95ம் ஆண்டில் விளையாட்டில் தேர்ச்சி பெற்ற சிறந்த 8 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு இந்த திட்டத்தின் கீழ் ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கும் மாதம் ரூ. 500 வீதம் பத்து மாதங்களுக்கு ஊட்டச் சத்து உணவுத் தொகையாகவும், ஆண்டொன்றுக்கு ரூ. 1,500 விளையாட்டுச் சீருடையாகவும் வழங்கப்படுகிறது.

1. செல்வன் வி. குற்றாலீஸ்வரன் - தொலைதூர கடல் நீச்சல்
2. செல்வி பி. அனுஜாபதி-டென்னிஸ்
3. செல்வி ம.வெ. கஜலஷ்மி-முத்திற விளையாட்டு
4. செல்வி கே. சோலைமதி-தடகளம்

**9. விளையாட்டு கழகங்களுக்கு நிதியுதவி அளித்தல்**

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் 36 மாநில விளையாட்டுக் கழகங்களைப் பதிவு செய்து, அக்கழக அணி தேசீய/தென் மண்டல மாநிலங்களுக்கிடையேயான போட்டிகளில் பங்கு கொள்வதற்கும், விளையாட்டில் சிறந்த வீரர்கள் மற்றும் வீராங்கணைகள் பன்னாட்டு போட்டிகளில் பங்கு கொள்ளவும் மானியம் வழங்கி வருகிறது.. மேலும் மாநில/தேசீய/பன்னாட்டுப் போட்டிகள் நடத்துவதற்கும் மாநில விளையாட்டுக் கழகங்களுக்கு மானியம் வழங்கப்படுகிறது.

TRUTH ALONE TRIUMPHS

*1994 ஜூலை மாதம் சென்னை மெரினா கடற்கரையில் "ஆசிய கடற்கரை வாலிபால் போட்டியை" தமிழ்நாடு வாலிபால் விளையாட்டுக் கழகம் நடத்தியது.*

**10. விளையாட்டு வீரர்கள் பன்னாட்டு போட்டிகளில் கலந்து கொள்வதற்காகவும், விளையாட்டில் சிறந்த முறையான பயிற்சியை மேற்கொள்வதற்காகவும் தமிழக அரசால் கீழ்க்கண்டவர்களுக்கு சிறப்புநிதி வழங்கப்பட்டுள்ளது.**

*1. திரு. ஆர். ஆனந்த நடராஜன், தடகள வீரர் முறையான சிறப்பு பயிற்சி பெற சுவீடன் நாட்டிற்கு சென்று பயிற்சி பெற ரூ. 2.50 லட்சம் வழங்கப்பட்டுள்ளது.*

*2. செல்வன் சி. சோமனாத், கராத்தே பயிலும் மாணவர். நியூயார்க்கில் ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற உலக கராத்தே சாம்பியன்ஷிப் போட்டியில் பங்குகொள்ள ரூ. 1.20 லட்சம் வழங்கப்பட்டுள்ளது.*

*3. செல்வி ரூபா உன்னிகிருஷ்ணன், துப்பாக்கி வீராங்கனைக்கு பன்னாட்டு போட்டிகளில் கலந்துகொள்ளும்முன் நடைபெறும் பயிற்சி முகாமில் பங்கு கொள்வதற்காக அன்னாருக்கு விமான போக்குவரத்து செலவு வழங்கப்பட்டுள்ளது.*

*4. செல்வன் மணிமாறன், ஊனமுற்ற தடகள வீரர், ஆப்பர்சூனிட்டி பள்ளி, சென்னை, அக்டோபர் மாதம் இந்தோனேஷியாவில் நடைபெற்ற சிறப்பு ஒலிம்பிக் போட்டியில் பங்கு கொள்வதற்காக ரூ. 18,500 வழங்கப்பட்டுள்ளது.*

*5, திரு. எஸ். உசய்யினி, கராத்தே மாஸ்டர் அவர்களின் விளையாட்டுத் திறமையை பாராட்டி ஒரு கராத்தே பள்ளியை அமைப்பதற்கு ரூ. 3.00 இலட்சம் மற்றும் ஒரு காலி மனையும் வழங்கப்பட்டுள்ளது.*

**11. மைய அரசின் நிதியுதவியுடன் விளையாட்டு அரங்க வசதி ஏற்படுத்துதல்**

*மைய அரசின் நிதியுதவியுடன் விளையாட்டு அரங்கம் மற்றும் விளையாட்டு மையம் அமைக்க 50:50 என்ற விகிதத்தில் 41 கருத்துருக்கள் தமிழக அரசின் மூலம் மத்திய அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளது.*

## 12. இளைஞர் நலப் பணிகள்.

இளைஞர் நலப் பணிகளையும் இளைஞர்களிடையே தீரச் செயல்களையும் ஊக்குவிக்க தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் பல திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இளைஞர் நலத் திட்டங்களின் முக்கிய குறிக்கோளாக இளைஞர்களின் ஆக்க சக்தியினை தேசீய திட்டங்களில் முறையாக வழிப்படுத்துவதாகும்.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் இளைஞர் நலத்திட்டங்களை செயல்படுத்துவதுடன், சமூக நலப் பணிகள் செய்யும் சிறந்த நிறுவனத்திற்கும், தனியாருக்கும் நிதி உதவிகள் செய்தும் தேவையான வசதிகளை ஏற்படுத்தியும் உதவி செய்து வருகிறது. அவ்வாறு சாதனைகள் செய்தவர்களின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:-

### *(அ) நீண்ட தூரம் கடலில் நீந்தும் சாதனை*

நீண்ட தூரம் கடலில் நீந்தும் பயிற்சி பெற்றுள்ள செல்வன் வி. குற்றாலீஸ்வரன், 12 வயது, டி.ஏ.வி. மேல்நிலைப்பள்ளி, கோபாலபுரம், சென்னை, கடலில் நீந்தும் போட்டிகளில் கலந்து கொண்டுள்ளார். இச்சிறுவன் 12-04-1994ல் பாக் ஜலசந்தியை கடந்ததுடன், தொடர்ச்சியாக இங்கிலீஷ் கால்வாயினை கடந்துள்ளார். பின்னர் துருக்கியிலுள்ள டார்ன்லெஸ் கால்வாயையும், இங்கிலாந்தில் ஜிப்ரால்டர் கால்வாய் மற்றும் ஆஸ்திரேலியாவில் ரொட்னஸ் கால்வாயையும் கடந்து சாதனை புரிந்துள்ளார். 5 நீண்ட தொலைவு கடல் சாதனையினை நிகழ்த்தியுள்ளதை பாராட்டி கின்னஸ் புத்தகத்தில் இடம்பெற உள்ளார். செல்வன் வி. குற்றாலீஸ்வரன், இச்சாதனையினை நிகழ்த்த தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தினால் கீழ்க்கண்ட நிதியுதவிகள் செய்யப்பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| 1. | பாக் ஜலசந்தி | .. | ரூ. 3.00 இலட்சம் |
| 2. | இங்கிலீஷ் கால்வாய் | .. | ரூ. 6.13 இலட்சம் |
| 3. | டார்ன்லெஸ் (துருக்கி) | .. | ரூ. 4.67 இலட்சம் |
| 4. | ஜிபாரால்டர் (இங்கிலாந்து) | | |
| 5. | ரொட்னஸ் கால்வாய் (ஆஸ்திரேலியா) | .. | ரூ. 1.49 இலட்சம் |

## (ஆ) மோட்டார் சைக்கின் சாதனை

1. உடல் ஊனமுற்ற திரு. எம்.ஆர். சௌந்தரராஜன், இந்தியாவிலும் அனைத்து மாநிலங்களையும் மோட்டார் சைக்கிளில் 28,000 கிலோமீட்டரினை 400 மணி நேரத்தில் கடந்து சாதனை புரிந்துள்ளார். இதற்குமுன் இவர் சைக்கிளில் 2,850 கிலோமீட்டரினை சென்னையிலிருந்து கன்னியாகுமரி வரையிலும் 17 நாட்களில் கடந்து சாதனை புரிந்துள்ளார். இவருக்கு புதிய மோட்டார் சைக்கிள் நன்கொடையாக வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது.

2. லயோலா கல்லூரியினை சார்ந்த நான்கு என்.சி.சி. மாணவர்கள் 20 நாட்களில் மோட்டார் சைக்கிளில் இந்தியா மற்றும் நேப்பாளம் ஆகிய இடங்களுக்கு சுற்றுப் பயணம் செய்து எய்ட்ஸ் விழிப்புணர்ச்சியினை மக்களுக்கு எடுத்துரைத்துள்ளார்கள். அச்சாதனைக்கு ரூ. 20,000-ம் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தினால் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

## (இ) ரோலர் ஸ்கேட்டிங்

மதுரையைச் சார்ந்த 6 வயது சிறுவன் செல்வன் ஆர். விஸ்வநாத், என்பவர் ரோலர் ஸ்கேட்டிங் (காலில் சக்கரத்தினை மாட்டிக் கொண்டு சறுக்குதல்)-கில் சென்னையிலிருந்து பம்பாய் வரையிலும் சென்றுள்ளார். இச்சிறுவனுக்கு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திலிருந்து ரூ. 1.40 லட்சம் இச்சாதனைக்காக நிதியுதவி செய்யப்பட்டுள்ளது.

## (ஈ) டிங்குவாட்ஸ் ( (பஸ்கி)

திரு. எட்ஸின், வயது 22, டெக்னிகல் இன்ஸ்டிட்யூட்டில் படிப்பவர். 22-06-1994 அன்று ஒரு மணி நேரத்தில் உட்கார்ந்து எழுந்திருக்கும் 4,408 பஸ்கியினை செய்து உலக சாதனை செய்துள்ளார். இச்சாதனையினை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் நிதியுதவியுடன் நிகழ்த்தினார்.

## (உ) கயிறு குதித்தல் (ஸ்கிப்பிங்)

சென்னை, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியில் ஹவுஸ் சர்ஜனாக பணிபுரியும் திரு. ஜி. ராம்பிரசாத் என்பவர் 21-11-1994 அன்று 5 மணி நேரத்தில் 40,181 எண்ணிக்கையில் கயிறு குதித்து சாதனை புரிந்துள்ளார். இச்சாதனையினை உலக சாதனையாக கருதிட தக்க வகையில் தொழில் நுட்ப உதவிகள் வழங்கப்பட்டது.

**(ஊ) மலையேறுதல் (மௌண்டெனரிங்)**

ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரியினை சார்ந்த 5 மாணவிகள் மௌண்ட் எவரெஸ்ட் பேஸ் கேம்ப் மற்றும் கல்பதாரு மலையினை ஏறி சாதனை புரிந்திட ரூ. 15,000-ம் நிதியுதவி தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தினால் வழங்கப்பட்டுள்ளது.

## 13. இளைஞர் விழா

1993-94 வரை இளைஞர் விழா, மாணவர்கள் மற்றும் மாணவர்கள் அல்லாதவர்களுக்கு மாநில அளவில் நடத்திட ரூ. 1.30 இலட்சம் நிதியுதவி அளிக்கப்பட்டு வந்தது.

1994-95ல் முதல் தடவையாக, இவ்விளைஞர் விழாவினை ஊராட்சி ஒன்றியம், மாவட்டம் மற்றும் மாநிலம் வாரியாக நடத்த திட்டமிடப்பட்டு மத்திய அரசிடமிருந்து நிதியுதவி பெற்று நடத்தப்பட்டது. இத்திட்டம், மாவட்டங்களிலுள்ள நேரு யுவகேந்திராவினால் மாவட்ட விளையாட்டு அலுவலர்களின் உதவியுடன் மாவட்ட, ஒன்றிய அளவிலும் நடத்தப்பட்டது. மாவட்ட அளவில் சிறந்த குழு மாநில அளவிலான இளைஞர் விழாவில் பங்கெடுக்க அனுமதிக்கப்பட்டனர்.

மாநில அளவிலான இளைஞர் விழா 27-12-1994 மற்றும் 28-12-1994-ல் திருச்சிராப்பள்ளியில் நடத்தப்பட்டன.

மேற்கண்ட மாநில இளைஞர் விழாவில் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த குழு போபாலில் 12-1-1995-ல் நடைபெற்ற தேசிய இளைஞர் விழாவில் கலந்து கொண்டது. தேசிய அளவிலான விழாவில் கலந்து கொண்ட தமிழ்நாடு குழுவினர் கீழ்க்கண்ட பரிசுகளை வென்றுள்ளனர்.

| | | | |
|---|---|---|---|
| 1. | கிராமியப் பாடல்கள் | .. | முதல் பரிசு |
| 2. | வீணை | .. | இரண்டாம் பரிசு |
| 3. | மிருதங்கம் | .. | இரண்டாம் பரிசு |

## 14. இளைஞர் விடுதி

கல்விச் சுற்றுலா, சரித்திர முக்கியத்துவம் மற்றும் கலாச்சார சுற்றுப் பயணம் செய்யும் இளைஞர்கள் குறைந்த வாடகைகளில் தங்குவதற்கான இடவசதிகள் இளைஞர் விடுதியில் செய்யப்பட்டுள்ளன. இந்த திட்டம் மைய மற்றும் மாநில அரசுகளின் கூட்டு முயற்சியாகும். தற்போது, சென்னை, மதுரை மற்றும் தஞ்சாவூர் ஆகிய இடங்களில்

இளைஞர் விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. திருச்சிராப்பள்ளியில் ஒரு இளைஞர் விடுதியொன்று கட்டப்பட்டு முடியும் தருவாயில் உள்ளது.

## 15. ஊரக விளையாட்டு மையங்கள்

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் ஊரக விளையாட்டு மையங்கள் அமைப்பதற்கு அரசு ஆணையிட்டுள்ளது.

ஊரக விளையாட்டு மையங்களில் கீழ்க்கண்ட விளையாட்டுகள் தேர்ந்தெடுத்து நடத்தப்படும். தடகளம், கால்பந்து, கூடைப்பந்து, கைப்பந்து, எடை தூக்குதல் மற்றும் செஸ். அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களில் அதிக புழக்கத்திலுள்ள விளையாட்டினை அந்தப் பகுதியில் ஊக்கப்படுத்துவதே இச் செயல்பாட்டின் முக்கிய நோக்கமாகும்.

ஊரக விளையாட்டு மையம் அமைப்பதற்கான இடவசதி மற்றும் விளையாட்டுக்கு போதுமான வசதிகளை உடைய ஆர்வமுள்ள பள்ளிகளிலிருந்து விருப்ப படிவம் பெற்று அமைக்கப்படும்.

விளையாட்டுக்கான ஆர்வமும், திறமையும் உள்ள கிராமப்புற இளைஞர்களை கண்டறிந்து, தக்க பயிற்சி மற்றும் உபகரணங்களையும் அளித்து சிறந்த திறமையுள்ள விளையாட்டு வீரர்களை உருவாக்குவது இத்திட்டத்தின் குறிக்கோளாகும். இது தவிர, கீழ்க்கண்ட முக்கிய குறிக்கோள்களுக்கு ஊரக விளையாட்டு மையங்களின் பயன்பாட்டை உயர்த்த வழிவகை செய்யும்.

(அ) திறமையான விளையாட்டு வீரர்கள் இணைந்து திறனை பலப்படுத்துதல்

(ஆ) பயிற்சி முகாம் நடத்துதல்

(இ) போட்டிகள் நடத்துதல்

(ஈ) திறமை மிக்கவர்களுக்கு தொடர் பயிற்சி முகாம் நடத்துதல்.

ஒவ்வொரு ஊரக விளையாட்டு மையத்திற்கும் கீழ்க்கண்ட வசதிகளை செய்து கொடுக்கும்பொருட்டு ஜவஹர் வேலைவாய்ப்பு திட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்படும்.

(1) தடகள ஓடுபாதை அமைத்தல் மற்றும் சுற்றுவேலி அமைத்தல் .. ரூ. 50,000

(2) பண்ட பாதுகாப்பு அறை கட்டுவதற்கு .. ரூ. 50,000

(3) விளையாட்டு உபகரணங்கள் .. ரூ. 10,000

இவ்வகையில் ஊரக விளையாட்டு மையங்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் வாங்க அரசு ரூ. 38.00 லட்சம் அனுமதித்துள்ளது.

ஊரக விளையாட்டு மையங்களின் செயல்பாட்டினை கண்காணிக்க ஊராட்சி ஒன்றிய அளவிலும் மற்றும் மாவட்ட அளவிலான ஆய்வுக் குழு நியமிக்கப்படவுள்ளது.

ஊரக விளையாட்டு மையம் அமைப்பதற்கான தேர்வு செய்யப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து வரப்பெற்ற விண்ணப்பங்களில் இருந்து 388 ஊரக விளையாட்டு மையங்கள் மார்ச் 1995க்குள் ஆரம்பிக்கப்படும்.

## 16. மினி மராத்தான் ஓட்டம்.

பொது மக்களிடையே விளையாட்டு தொடர்பான விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் வகையில், இந்த ஆணையம் 14-09-1994 அன்று கொடைக்கானலில் முதல் மினி மராத்தான் ஓட்டத்தை நடத்தியது. ஆண்களுக்கு 20 கி.மீ. தூரமும். பெண்களுக்கு 15 கி.மீ. தூரமும், இந்த போட்டிக்கு நிர்ணயிக்கப்பட்டது. 700 ஆண்களும், பெண்களும் கலந்து கொண்ட இந்த போட்டியில் முதல் 10 இடங்களில் வந்தவர்களுக்கு ரொக்கப்பரிசு வழங்கப்பட்டது.

இதே போன்று 27-11-1994 அன்று கோயம்புத்தூரில் ஒரு மினி மராத்தான் ஓட்டம் நடத்தப்பட்டது. இதில் ஆண்களுக்கான தூரம் 25 கி.மீ. ஆகவும், பெண்களுக்கான தூரம் 20 கி.மீட்டராகவும் நிர்ணயிக்கப்பட்டது. ஆண்களும், பெண்களுமாக 500 பேர் கலந்து கொண்ட இந்த போட்டியிலும் முதல் 10 இடங்களில் வந்தவர்களுக்கு ரொக்கப் பரிசு வழங்கப்பட்டது.

## 17. விளையாட்டுக் கொள்கை

விளையாட்டு மேம்பாட்டுக்கென்று அனைத்து பிரிவினரின் முயற்சிகளையும் ஒருங்கிணைக்கும் வகையில், ஒரு ஒருங்கிணைந்த உடற்கல்வி மற்றும் விளையாட்டுக்கான கொள்கை மற்றும் திட்டம் ஒன்றினை வகுத்திட முடிவு செய்யப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

[1995 ஏப்ரல் 24

## 18. ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம்.

சுமார் ரூ. 48 கோடி செலவில் தமிழ்நாடு விளையாட்டரங்க கழகத்தினால் கட்டப்பட்ட நேரு விளையாட்டரங்கம், நவீன வசதிகள் கொண்ட ஒரு மாபெரும் விளையாட்டரங்கமாகும். மின்னணு ஸ்கோர் போர்டு, பொது அறிவிப்பு வசதிகள், கட்டட கட்டுப்பாடு, பாதுகாப்பு அமைப்பு மற்றும் தொலை தகவல்கள் வசதிகள் கொண்ட இந்த விளையாட்டரங்கத்தினை பராமரிக்கும் பொறுப்பினை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு அரசு வழங்கியுள்ளது. இதன்படி இந்த விளையாட்டரங்கம் 1-4-1994 முதல் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் பொறுப்பிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

### மொத்த நிதி ஒதுக்கீடு

| வரிசை எண் | ஆண்டு | வரவு செலவு மதிப்பீடு | | திருத்திய மதிப்பீடு | |
|---|---|---|---|---|---|
| | | திட்டத்தில் சேராதது. | திட்டம் | திட்டத்தில் சேராதது. | திட்டம் |
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | | |
| 1. | 1992-93 | 181.00 | 181.00 | 206.00 | 180.00 |
| 2. | 1993-94 | 276.00 | 125.00 | 297.00 | 191.63 |
| 3. | 1994-95 | 312.98 | 192.09 | 903.96 | 487.64 |
| 4. | 1995-96 | 806.46 | 827.15 | | |

## தேசிய மாணவர் படை குறித்த குறிப்பு

தமிழ்நாடு தேசிய மாணவர் படை இயக்ககத் தலைமையிடம் சென்னையில் உள்ளது. இதன் கீழ் 5 தேசிய மாணவர் படைத் தொகுதித் தலைமையிடங்கள் உள்ளன. இவற்றில் சென்னை மாநகரில் இரண்டும், மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் ஒவ்வொன்றும் உள்ளன. இம்மாநிலத்தில் 50 முதுநிலை/பெண்கள் மாணவர் படைப்பிரிவும் 671 இளநிலை மாணவர் படைப்பிரிவும் உள்ளன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1995 ஏப்ரல் 24 ]

**எண்ணிக்கை**

தேசிய மாணவர் படையில் அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை விவரம் வருமாறு:-

| பிரிவு | அனுமதிக்கப்பட்ட அதிகாரிகள் | மாணவர்கள் |
|---|---|---|
| அ. முதுநிலைப்பிரிவு (சிறுவர்) | 224 | 18,300 |
| ஆ. இளநிலைப்பிரிவு (சிறுவர்) | 656 | 61,900 |
| இ. பெண்கள் பிரிவு | | |
| முதுநிலைப்பிரிவு | 41 | 3,300 |
| இளநிலைப்பிரிவு | 58 | 5,300 |
| | **979** | **88,800** |

இம்மாநிலத்திலுள்ள தேசிய மாணவர் படைப்பிரிவு பல்வேறு வகையானவை. அவ்விவரம் வருமாறு:-

| | முதுநிலைப்பிரிவு |
|---|---|
| காலாட்படை | 21 |
| தொழில்நுட்பப்படை | 12 |
| கடற்படை | 5 |
| விமானப்படை | 4 |
| பெண்கள் படை | 5 |
| மருத்துவப்படை | 3 |

மேலும் இராணுவப்படை, கடற்படை, விமானப்படையைச் சேர்ந்த இளநிலைப்பிரிவு மாணவர்களுக்கான ஒரு அமைப்பு சைனிக் பள்ளியில் இயங்குகிறது.

இம்மாநிலத்தில் பல்வேறு வகையான இளநிலை தேசிய மாணவர் படைப் பிரிவுகள் உள்ளன

| | | |
|---|---|---|
| இராணுவப் பிரிவு | 520 | படைகள் |
| கடற்பிரிவு | 52 | படைகள் |
| விமானப்பிரிவு | 47 | படைகள் |
| பெண்கள் பிரிவு | 52 | படைகள் |

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

*(சைனிக் பள்ளியின் தேசிய மாணவர் படைப் பிரிவைச் சேர்ந்த 11 படைகளும் இதில் சேர்க்கப்பட்டுள்ளன)*

மேலே குறிப்பிடப்பட்ட இளநிலை படைப் பிரிவுகள் அனைத்தும் நிருவாகம், பயிற்சி ஆகியவற்றுக்காக முதுநிலைப் படைப் பிரிவுகளின் கட்டுப்பாட்டில் உள்ளன.

**நிருவாகம்.**

தேசிய மாணவர் படையின் நிருவாகக் கட்டுப்பாட்டு அதிகாரம் மத்திய அரசிடமும், மாநில அரசிடமும் உள்ளது.

**பணியாளர்.**

சென்னையிலுள்ள தேசிய மாணவர் படை இயக்கக அலுவலகத்திலும் பல்வேறு மாவட்டங்களிலுள்ள தேசியமாணவர் படைத் தலைமையிடங்களிலும் அவற்றின் கட்டுப்பாட்டிலுள்ள பிரிவுகளிலும் அரசு அனுமதி பெற்ற பணியாளர்கள் உள்ளனர். இவர்கள் மாநில அரசுப் பணியாளர்கள். இந்த இயக்ககத்தில் ஒரு 'ஏ' பிரிவு அதிகாரியும், ஒரு 'பி' பிரிவு அதிகாரியும் உள்ளனர். பிற அதிகாரிகள் பாதுகாப்புத்துறை/தேசிய மாணவர் படைப் பணியிலிருந்து பெறப்படுகின்றனர்.

**நிதி.**

தேசிய மாணவர் படைப் பிரிவிற்காகும் செலவை, மைய அரசும் மாநில அரசும் ஏற்கின்றன. பல்வேறு வகை முகாம்கள் நடத்தப்படுகின்றன. இதற்காகும் செலவை தொடக்கத்தில் மாநில அரசு ஏற்கிறது. பின்னர் இச் செலவில் 50 சதவீதத்தை மைய அரசு ஈடுகட்டுகிறது.

தேசிய மாணவர் படையின் துணைத் தலைமை இயக்குநர் துறைத் தலைவராவார். மேலும், இவர் இந்த இயக்ககத்தின் வரவு செலவுத் திட்டக் கட்டுப்பாட்டு அதிகாரியும் ஆவார். மாநில அரசு இவருக்கு நிதி அதிகாரங்களை வழங்கியுள்ளது.

**பணிகள்**

தேசிய மாணவர் படையின் பின்வரும் நோக்கங்களை அடையும் பொருட்டு, கல்வி நிலையங்களிலிருந்து (பள்ளிகள் மற்றும் கல்லூரிகள்) வருகின்ற தெரிந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு இராணுவப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

அ. நற்பண்பு, தைரியம், நட்புடைமைப் பண்பு, ஒழுக்கம், தலைமையேற்று நடத்தும் ஆற்றல், தீரச் செயல் விளையாட்டு ஆகியவற்றில் உற்சாகம், மதச்சார்பற்ற பார்வை, சாதனை புரியும் ஆர்வம், போட்டி, நேர்மை பண்பு மற்றும் தன்னலமற்ற சேவை ஆகியவைகளை இளைஞர்களுக்குள் உண்டாக்கி உபயோகமுள்ள குடிமகனாக்குதல்.

ஆ. நாட்டின் எல்லாத் துறைகளிலும் (பாதுகாப்புத் துறை உள்பட) தலைமையேற்று பணியாற்றும் வகையில் இளைஞர்களுக்கு ஒரு கட்டுப்பாடான பயிற்சி அளித்து அப்படிப்பட்ட இளைஞர்களின் பணியை நாட்டு நலனுக்குப் பயன்படுத்த வகைசெய்தல்.

இவை தவிர, மாணவர்களுக்கு விமானப் பயிற்சி, கப்பல் பயிற்சி, க்ளைடர் பயிற்சி, படகுப் பயிற்சி, நீச்சல் பயிற்சி, மூக்குளிக்கும் பயிற்சி, படகுப் போட்டிப் பயிற்சி, பலகையில் மிதக்கும் பயிற்சி, தொங்கும் க்ளைடர் பயிற்சி, சைக்கிள் பயணம் ஆகியவை நடத்தப்படுகின்றன. இந்த முகாம்களில் இம்மாநிலத்தைச் சேர்ந்த மாணவர்களும் பங்கேற்கின்றனர். தேசிய மாணவர்படை இயக்ககங்கள் பின்வரும் முகாம்களை நடத்துகின்றன.

அ. தலைமைப் பொறுப்பேற்பதற்கான அடிப்படைப் பண்புகளை உருவாக்கும் முகாம்கள்.

ஆ. தலைமைப் பொறுப்பேற்பதற்கான உயர்தரப் பண்புகளே வளர்க்கும் முகாம்கள்.

இ. இந்திய விமானப் படை முகாம்.

ஈ. இந்திய கடற்படை முகாம்.

உ. கடற்படைப் பிரிவிற்குத் தலைமைப் பொறுப்பேற்பதற்கான உயர்தரப் பண்புகளை வளர்க்கும் முகாம்கள்.

ஊ. தேசிய ஒருமைப்பாட்டு முகாம்கள்

எ. மலையேற்றப் பயிற்சி

இந்த இயக்ககங்களுக்கிடையே பல்வேறு வகைப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. இப்போட்டிகளில் வெற்றி பெறுவோருக்கு ஆண்டுதோறும் டில்லியில் நடைபெறும் குடியரசு தின அணிவகுப்பில் பாராட்டுக் 'கொடி' வழங்கப்படுகிறது. 1995 ஜனவரியில் புதுடில்லியில் நடைபெற்ற குடியரசு தின அணிவகுப்பிலும், பிரதம மந்திரி அணிவகுப்பிலும் கலந்துகொள்ளும் பொருட்டு, தமிழ்நாட்டிலுள்ள

முதுநிலை/இளநிலை/பெண்கள் படைப்பிரிவுகளிலிருந்து மொத்தம் 107 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மாணவர்களுக்கு வான்குடை மிதவை பயிற்சியும் அளிக்கப்படுகிறது. மேலும் இளைஞர் காலச்சார பரிவர்த்தனை திட்டத்தின் கீழ் இந்திய மற்றும் கனடா நாட்டை சேர்ந்த தேசிய மாணவர் படை மாணவ மாணவியர்கள் 42 பேர் (தலா 21 வீதம் இருநாடுகளிலிருந்தும்) அடங்கிய குழு இவ்வாண்டு குஜராத்/ராஜஸ்தானில் அக்டோபர் முதல் டிசம்பர் வரை தங்கியிருந்தனர். 21 மாணவர்கள் அடங்கிய இந்தியக்குழுவில் 7 மாணவர்கள் தமிழ்நாடு தேசிய மாணவர் படையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இத்திட்டத்தின் மூலம் நமது தேசிய மாணவர் படை கீழ்க்கண்ட குறிக்கோள்களை அறிந்து செயல்பட்டு சாதனைகள் பல புரிந்தனர்.

(அ) இந்தியாவும், கனடாவும் தற்பொழுது பெற்றுள்ள முன்னேற்றத்திற்கான அடிப்படை காரணங்களை அறிதல்

(ஆ) நாட்டு முன்னேற்றத்தை தெளிவாக உணர்தல்

(இ) தங்களின் கலாச்சாரத்தையும் தனிமனித வாழ்க்கை முறையினைத் தவிர மற்றவர் கலாச்சாரத்தையும் வாழ்க்கை முறைகளையும் தெரிதல்

(ஈ) தாங்கள் பெற்ற நாட்டு வளங்களைக் கொண்டும், நாட்டு முன்னேற்றத்தில் ஏற்படும் பிரச்சனைகளை எப்படித் தீர்ப்பது என்ற மனப்பக்குவத்தை உருவாக்குதல்.

(உ) ஒவ்வொரு நாடும் அதன் மக்களும், பிறநாட்டோடும், மக்களோடும் உறவு கொள்ளவேண்டிய அவசியத்தையும் நேசத்தோடு வாழவேண்டிய கட்டாயத்தையும் நன்கு வலியுறுத்துதல்.

பாதுகாப்புப் பணியில் அமர்த்தப்படுவதற்கான நுழைவுத் தேர்வு எழுதும் தமிழ்நாடு மாநிலத்தைச் சேர்ந்த தேசிய மாணவர்படை மாணவர்களுக்கு மும்முரப் பயிற்சி அளிப்பதற்காகப் பாதுகாப்புப் பணி புதுமுகப் பயிற்சிப் பிரிவு ஒன்றும் செயல்பட்டு வருகின்றது.

இவ்வாண்டு தேசிய மாணவர்படை இயக்ககங்களிடையே டில்லியில் நடந்த பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்று முதன்மையிடத்தை அடைந்த நமது தமிழ்நாட்டு தேசிய மாணவர் படை குடியரசு தின அணிவகுப்பிலும், பிரதம மந்திரிக்கான அணிவகுப்பிலும் கலந்து கொண்டு பிரதம மந்திரியிடமிருந்து அகில இந்திய தேசிய மாணவர்படை

இயக்ககங்களுக்கிடையேயான சாம்பியன்சிப் பேனர் (All India Inter Directorate Championship Banner) பெற்றனர். இந்த வெற்றியை சிறப்பிக்கும் வகையிலும் ஊக்குவிக்கும் வகையிலும் நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கீழ்க்கண்ட ரொக்கப் பரிசுகளை அளித்து மகிழ்வித்தார்

| | | |
|---|---|---|
| ரூபாய் 5,000 | .. | தங்கப்பதக்கம் வென்ற மாணவ/மாணவியர் ஒவ்வொருவருக்கும் (பத்து நபர்கள்) |
| ரூபாய் 3,000 | .. | வெள்ளிப்பதக்கம் வென்ற மாணவ/மாணவியர் ஒவ்வொருவருக்கும் (ஏழு நபர்கள்) |
| ரூபாய் 2,000 | .. | வெண்கலப் பதக்கம் வென்ற மாணவ/மாணவியர் ஒவ்வொருவருக்கும் (ஒன்பது நபர்கள்) |
| ரூபாய் 5,000 | .. | தேசிய மாணவர் படையினை வழிநடத்திச் சென்ற தலைவருக்கு |

இது தவிர தலா ரூபாய் ஆயிரம் வீதம் 107 சிறுவர்களுக்கும் பங்கு கொண்ட பயிற்சியாளர்களுக்கும் ரொக்கப் பரிசினை கொடுத்து கவுரவிக்கப்பட்டது.

தேசிய மாணவர் படையின் மூன்று வெவ்வேறு பிரிவுகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு மாநில அரசின் படிப்பு உதவித் தொகை ரூ. 75,000 கீழ்க்கண்ட விகிதத்தில் வழங்கப்படுகிறது:

| | | |
|---|---|---|
| முதுநிலைப்பிரிவு | .. | 12 மாதத்திற்கு மாதம் ஒன்றிற்கு ரூ. 50 வீதம் 40 மாணவர்களுக்கும் |
| இளநிலைப்பிரிவு | .. | 12 மாதத்திற்கு மாதம் ஒன்றிற்கு ரூ. 25 வீதம் 45 மாணவர்களுக்கு |
| மகளிர்பிரிவு (முதுநிலை) | .. | 12 மாதத்திற்கு மாதம் ஒன்றிற்கு ரூ. 50 வீதம் 40 மாணவியர்கட்கு |
| மகளிர் பிரிவு | .. | 12 மாதத்திற்கு மாதம் ஒன்றிற்கு ரூ. 25 வீதம் 45 மாணவியர்கட்கு |

1995-1996 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் 7,55,28,000 ரூபாய் இவ்வியக்ககத்திற்காக அனுமதிக்கப்பட்டுள்ளது.

[1995 ஏப்ரல் 24

# அத்தியாயம் 11

## அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல்

நமது மாநிலத்தின் வளர்ச்சிக்கு அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் முக்கியத்துவத்தை உணர்ந்து அண்மைக்காலமாக பல்வேறு ஆய்வுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் தொடர்பான பல உயர்மட்ட மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் அரசின் அறிவியல் கொள்கையை உருவாக்கவும், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியலை பரப்பவும் அவற்றின் மூலம் இளைஞர்களிடையே அறிவியல் உணர்வை வளர்ப்பதற்கென தனி நிறுவனங்கள் பல அமைக்கப்பட்டுள்ளன. இப்படி அமைக்கப்பட்ட ஆய்வு நிறுவனங்களை ஒருங்கிணைக்கவும் அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் தொடர்புடைய செயல் திட்டங்கள் பற்றி மைய அரசுடன் தொடர்பு கொள்ளவும் உதவும் வகையில் தலைமைச் செயலக கல்வித்துறையில் அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் தனிப்பகுதி ஒன்று உருவாக்கப்பட்டு இயங்கி வருகிறது. இம்முக்கியத்துவத்தை உணர்ந்து செயலகத்துறையின் பெயர் ‘கல்வி’ அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறை’ என மாற்றப்பட்டுள்ளது. இத்துணைத் துறையில் கீழ்கண்ட நிறுவனங்களும், திட்டங்களும் வருகின்றன:-

(i) தமிழ்நாடு மாநில அறிவியல்-தொழில்நுட்பவியல் மன்றம்

(ii) தமிழ்நாடு அறிவியல்-தொழில்நுட்ப மையங்கள்

(iii) அண்ணா பல்கலைக் கழக உயர்மட்ட மையங்களுடன் அறிவியல் தொழில் நுட்ப பிணைப்பு

(iv) தொலை உணர்வு மையம், அண்ணா பல்கலைக்கழகம்

(v) அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் தொழில் முனைவர்கள் மேம்பாட்டுத் திட்டம்.

(vi) தென் சென்னையில் ஓர் அறிவியல் நகரம்.

மேற்கண்ட தலைப்புகளின் கீழ்வரும் பணிகள் பற்றிய விவரம் அடுத்துவரும் பத்திகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

## (i) தமிழ்நாடு மாநில அறிவியல் தொழில் நுட்பவியல் மன்றம்.

(i) தமிழ்நாடு அரசு, இத்தமிழ்நாடு மாநில அறிவியல் தொழில் நுட்பவியல் மன்றத்தை 1984-ல் அமைத்துள்ளது. தமிழ்நாட்டின் சமூக-

பொருளாதார வளர்ச்சியை உயர்த்தும் நோக்குடன் விவசாயம். சுகாதாரம், கல்வி, சக்தி, மனித குடியேற்றம் போன்ற துறைகளில் அறிவியல் தொழில் நுட்பத்திட்டங்களை உருவாக்கி நிறைவேற்றும் பொறுப்பினை இம்மன்றம் ஏற்றுள்ளது. இந்த மன்றம் மாநில அரசுகளின் இணைப்புப் பாலமாக திகழ்கிறது மற்றும் மாநில அரசின் ஆண்டு மற்றும் ஐந்தாண்டுத் திட்டங்களில், வளர்ச்சித் துறைகளில் அறிவியல் தொழில் நுட்பப்பகுதிகளை உருவாக்குவதற்கான ஆலோசனைகள் வழங்கவும் உள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இம்மன்றத்தின் தலைவர் ஆவார். முதலமைச்சர் அவர்கள், தனக்குப்பதிலாக மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க.பொன்னுசாமி, அவர்களை இம்மன்றத்தின் தலைவராக நியமித்துள்ளார். டாக்டர் ப. இராமசாமி அவர்கள் டாக்டர் மால்கம் ஆதிசேஷய்யாவிற்கு பதிலாக துணைத் தலைவர் மற்றும் செயற்குழுத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

(ii) தமிழக அரசு 1994-95 ஆண்டுகளில் ரூ.214.39 இலட்சங்கள் கீழ்வரும் அறிவியல் மேம்பாட்டு திட்டங்களுக்காக மானியமாக வழங்கியுள்ளது:

அ) அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் குறித்த திட்டங்கள்

ஆ) அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் செய்தி அமைப்பு முறை

இ) அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் பிரபலப்படுத்துதல்

ஈ) தொழில் முனைவர் வளர்ச்சித் திட்டங்கள்

உ) இளம் விஞ்ஞானிகளுக்கு பயண மானிய ஊக்கத்தொகை மற்றும் ஆய்வுப் பயிற்சி உதவித் தொகை வழங்கல்

ஊ) கருத்தரங்குகளும், ஆய்வுக்கூட அரங்குகளும்

ஏ) குழு விவாதங்கள்

ஏ) ஆராய்ச்சியாளர்-தொழில் நிறுவனம்-கருத்து ஒப்புறவு

ஐ) குழந்தைகளிடையை அறிவியல் தொழில் நுட்பவியல் திறன் கூட்டும் திட்டங்களுக்கு உதவி.

ஒ) அறிவியல் தொழில் நுட்ப நூல்களுக்கும் அறிவியல் தமிழ் ஏடுகளுக்கும் நிதியுதவி.

(iii) *1995-96*ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டம் இம்மன்றப் பணிகளுக்காக ரூ.*43.00* இலட்சங்கள் செலவு செய்வதற்கு வகை செய்கிறது.

(iv) இதுவரை *24* அறிவியல்-தொழில் நுட்பவியல் திட்டங்களை இம்மன்றம் நிறைவேற்றியுள்ளது. மேலும் பல்வேறு ஆய்வுத் துறைகளில் *37* திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன.

இத்திட்டங்கள், விவசாயம்-மீன்வளம், நீர்நிலைகள், சுகாதாரம் சுற்றுப்புற மாசு கட்டுப்பாடு ஆகிய துறைகளுடன் சம்பந்தப்பட்டவை. நுட்ப ஆய்வுகளில் கண்ட தெரிவுகள் சிபாரிசுகள் ஆகியவற்றின் தொடர்பான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது. அறிவியல்-தொழில் நுட்பவியல் பிரபலப்படுத்துதல் திட்டத்தின் கீழ் இம்மன்றம் குழந்தைகளிடையேயும் எளிய மக்கள் மத்தியிலும் அறிவியல் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதற்காக அறிவியல்-தொழில் நுட்பவியல் சம்பந்தப்பட்ட பொருட்காட்சிகள், ஆசிரியர்களுக்கு பணியிடைப் பயிற்சி அளித்தல் போன்ற செயல் திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. இச்செயல் திட்டங்கள் மக்கள் மத்தியில் குறிப்பாக கிராமப்புற மக்களிடையே அறிவியல் கண்ணோட்டத்தை ஏற்படுத்தும் நோக்கம் கொண்டவை. மேலும், இளம் விஞ்ஞானிகளுக்கு ஊக்குவிப்பு என்ற திட்டத்தின் கீழ் கருத்தரங்குகளில் பங்கு கொண்டு தங்கள் அறிவியல் கண்டுபிடிப்புகளை அங்கே அரங்கேற்றம் செய்ய உதவியாக (i) பயணச்செலவில் பாதி வழங்கியும், (ii) பல்வேறு நிறுவனங்களில் பணியாற்றும் விஞ்ஞானிகள் சிறந்த ஆய்வு மையங்களிலும் பல்கலைக்கழகங்களிலும் மேலும் பயிற்சி பெற மத்திய அரசின் துணையுடன் உதவித் தொகை வழங்கியும், நிறுவனங்கள் தாங்களே கருத்தரங்குகள் நடத்தவும் அறிவியல் தொழில் நுட்ப பயன்களை மேற்கொள்ள இம்மன்றம் ஆவன செய்கின்றது. இம்மன்றத்தின் ஆதரவில் இயங்கும் தொழில் நுட்ப தகவல் மையம், தொழில் நிறுவனங்கள், ஆராய்ச்சி நிலையங்கள், நிதி நிறுவனங்கள் ஆகியோரிடம் ஒரு சுமுகமான உறவை ஏற்படுத்தி ஆராய்ச்சியின் விளைவுகளை களத்தில் பயன்படுத்த உதவுகிறது. வளர்ச்சித் துறைகள் சார்பான முக்கியத் தலைப்புகள் பற்றி தொழில் நுட்பங்களை கண்டுபிடிப்போருக்கும் அதை உபயோகிப்போருக்கும் இடையே கலந்தாலோசனை நடைபெற குழு விவாதங்களுக்கு ஏற்பாடு செய்யப்படுகின்றது.

(v) வளர்ச்சித் துறைகளில் அறிவியல் தொழில் நுட்பவியலின் முக்கியத்துவத்தைக் கோடிட்டுக் காட்டும் நோக்கோடு, *1995-96*ஆம் ஆண்டில் இம்மன்றம் மேற்கண்ட செயல் திட்டங்களைத் தொடர

உள்ளது. வளர்ச்சித் துறைகளில் சில குறிப்பிட்ட இடங்களுக்குத் தேவையான அறிவியல் தொழில் நுட்பங்கள் பற்றி தமிழ்நாட்டில் கருத்தரங்குகள் நடத்தப்பட உள்ளன. கொள்கை முடிவுகள் எடுக்கும் அரசுக்குத் தேவையான, அறிவியல் தொழில் நுட்பவியல் அடிப்படையுடன் தொடர்புடைய நுண்ணாற்றல், முக்கிய அமைப்புகள், செய்நேர்த்தி ஆகியவை பற்றிய தகவல் முறைகளும் உருவாக்கப்பட உள்ளன. தமிழ்நாட்டில் சமூக, பொருளாதாரத் தேவைகளின் அடிப்படையில் வளர்ச்சித் துறைகளில் காணப்படும் உடனடி பிரச்சனைகள் எவை என்று கண்டு, அவைகளுக்கு முன்னுரிமம் வழங்கப்படவுள்ளன. பயனுடைய சுயவேலைக்கு வாய்ப்பு அளிக்கும் தொழில் முனைவர்கள் மேம்பாட்டு செயல் திட்டங்கள் உருவாக்கப்படவுள்ளன.

சமுதாயத்தில் நலிந்த பிரிவுகளைச் சேர்ந்த பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் நம்மை பயக்கும் மூகத்தான் சத்தில்லா உணவின் கெடுதல் பற்றியும், சுகாதார முறைகள் பற்றியும் பயிற்சி முறை செயல் திட்டங்கள் உருவாக்கப்படவுள்ளன. இம்மன்றத்தின் உதவியுடன் உருவாக்கப்பட்ட கையிலெடுத்துச் செல்லும் குறைந்தவிலை வேதியியல் கருவியுறையின் துணைக்கொண்டு பள்ளியில் செய்ய வேண்டிய அனைத்துப் பரிசோதனைகளையும் வகுப்பிலேயே செய்து காட்டலாம். இதை தொழில் முனைவர்கள் மூலம் மக்களிடையே பிரபலப்படுத்த இம்மன்றம் முனைகிறது.

**(vi) 1995-96 ஆம் ஆண்டில் புதிய திட்டங்கள்:** மேற்காண் திட்டங்களைத் தொடர்வதுடன் இம்மன்றம் திறன் மிக்க மாணவர்களை ஊக்குவிப்பதற்காக "மாணவர் ஆய்வுத் திட்டம்" ஒன்றை புதிதாக உருவாக்கி வருகிற *1995-96* ஆம் ஆண்டில் ரூ.*3.00* இலட்சம் செலவில் செயல்படுத்த உள்ளது. இத்திட்டத்தின் கீழ் B.E./B.E(Agrl.)/M.Sc(Agri.)/MVSc/MFSc/ M.B.B.S./M.S./ போன்ற பட்டப்படிப்புகளின் இறுதியாண்டு மாணவர்கள் தயாரித்த சமுதாயத்திற்குப் பயன்படும் திட்டங்கள் என்று தெரிந்தெடுக்கப்பட்ட திட்டங்கள் ஒவ்வொன்றிற்கும் ரூ.*5,000/-* வரை மானியம் வழங்கப்பட விருக்கிறது. மேலும், தகுதியுள்ள விஞ்ஞானிகளை ஊக்குவிக்க ரூ.1.50 இலட்சம் செலவில் ஒரு புதிய திட்டம் வரும் ஆண்டில் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் மருத்துவம், பொறியியல், விவசாயம், மீனளம் போன்ற துறைகளில் புதிய கண்டுபிடிப்புகள், புதிய மாடல்கள், முறைகள் போன்றவற்றால் விஞ்ஞான அறிவுக்கு சிறப்பு ஆக்கம் தேடிய விஞ்ஞானிகள் ஒவ்வொருவருக்கும் ரூ.*10,000/-* கொண்ட பொற்கிழி கொடுக்கப்படவுள்ளது. வரும் ஆண்டில் *(95-96) 10* விஞ்ஞானிகள்

தெரிந்தெடுக்கப்பட்டு பரிசு வழங்கப்பட உள்ளனர். இவற்றுடன் அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறையில் ரூ.10.00 இலட்சம் செலவில் புதிய ஆய்வுத் திட்டங்கள் உருவாக்கப்பட உள்ளன.

**3. அண்ணா பல்கலைக்கழக உயர்மட்ட மையங்களுடன் அறிவியல் தொழில் நுட்ப பிணைப்பு:**

அறிவியல் தொழில்நுட்பவியல் துறையின் சில குறிப்பிட்ட பகுதிகளில் ஆய்வு மற்றும் மேம்பாடு இவற்றை வளர்க்கும் நோக்கோடு, தமிழக அரசு அண்ணா பல்கலைக்கழகத்தில் மேல் வளர் மையங்கள் சிலவற்றை அமைத்து அவை, ஆய்வு மற்றும் பயிற்சிப் பணிகளில் ஈடுபடுமுகத்தான் அண்ணா பல்கலைக் கழகத்துடன் பிணைக்கப்பட்டுள்ளன. அம்மையங்கள் முறையே:

i. புதிய மற்றும் புதுப்பிக்கக்கூடிய ஆற்றல் மையம்

ii. படிக வளர்ச்சி மையம்-அழகப்பா தொழில் நுட்பக் கல்லூரி வளாகம்

iii. உயிர் சார் நுட்பவியல் மையம்

iv. ஒருங்கிணைந்த பெருங்கடல் மேலாண்மை மையம்-பொறியியல் கல்லூரி வளாகம்

**4. தொலை உணர்வு மையம்:**

தொலை உணர்வு மையம் 1982-ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் தமிழக அரசால் தோற்றுவிக்கப்பட்டது. இம்மையம் அமைக்க ஆன செலவு ரூ.7.50 கோடியாகும். இச்செலவில் தமிழக அரசின் பங்கு ரூ.2.73 கோடியாகும். மீதமுள்ள தொகையை ஜெர்மன் நாட்டு அரசும் இந்திய அரசும் பகிர்ந்து கொண்டன. இம்மையத்தை இந்திய அரசு, ஒரு தேசிய தொலை உணர்வு கிளை மையமாக அங்கீகரித்துள்ளது. இம்மையம் ஏப்ரல் '87லிருந்து அண்ணா பல்கலைக்கழகத்தின் நிரந்தர மையமாக்கப்பட்டுள்ளது. இதற்கு தமிழக அரசு தொடர்ந்து நிதி உதவி அளித்து வருகிறது.

அரசு துறைகளின் தேவைக்கான தொலை உணர்வுத் திட்டங்களை மேற்கொள்வதும், இத்துறைக்கான பயிற்சி கொடுப்பதும், புள்ளி விபரங்கள் சேகரிப்பதும், அண்ணா பல்கலைக் கழக கல்விப்பணிக்கு உதவுவதும் இம்மையத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

1995 ஏப்ரல் 24 ]

1994-95ல், 5 திட்டங்களை ரூ.33.35 இலட்சம் செலவில் எடுத்து முடித்துள்ளது. மேலும், பல நிலைகளில் உள்ள 17 திட்டங்கள் ரூ.201.23 இலட்சம் செலவில் இப்போதைக்கு செயல்பட்டுவருகின்றன. இம்மையம் மத்திய மாநில அரசுகளின் பல திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

மேலும், இம்மையம் போட்டோகிராமட்ரி & கார்டோகிராபி துறையின் வளர்ச்சி பற்றிய உலகளாவிய ஆய்வுக்கூட அரங்கு ஒன்றை நவம்பர் 94-ல் நடத்தியுள்ளது. அத்துடன் ஆசிய நாடுகளிலிருந்து வந்த 14 பேர்களுக்காக "போட்டோகிராமட்ரி" மீதான பயிற்சி முகாம் ஒன்றை செப்டம்பர் 94-ல் உலக மையத்துடன் இணைந்து நடத்தியுள்ளது.

வருகிற 95-96-ல், அடியிற் கண்ட பெரும் திட்டங்களையும் உள்ளடக்கி பல திட்டங்களை மேற்கொள்ள உள்ளது.

(i) பெரியார் மாவட்டத்தில் அமைந்த மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளில் ஏற்புடை மேம்பாட்டுத் திட்டங்களுக்கான ஒருங்கிணைந்த ஆய்வு நடத்தல்.

(ii) மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் உதகமண்டலம் மாவட்டம் வானவெளி புகைப்பட பிடிப்பில் கொண்டுவரப்படும்.

(iii) மத்திய அரசின் துணையுடன் ஏற்புடை ஒருங்கிணைந்த சிறப்பு மேம்பாட்டுத் திட்டம் ஒன்றை உருவாக்குதல்

வரும் ஆண்டில் (95-96-ல்) இம்மையத்திற்காக பயிற்சி மையம் ஒன்றை ரூ.100.00 இலட்சம் செலவில் நிறுவ உள்ளது. இதற்காக மைய அரசும் மாநில அரசும் தலா ரூ.50.00 இலட்சம் நிதி உதவி அளித்துள்ளன. இந்த பயிற்சி மையம் தொலை உணர்வின் பல்வேறு அம்சங்களைப் பற்றி அரசுத்துறைப்பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்க உள்ளது.

### 5. அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் தொழில் முனைவர்கள் மேம்பாட்டுத் திட்டம்:

இந்திய அரசின் முழு உதவியுடன் தொழில் முனைவர்களின் முயற்சிகளை ஊக்குவிப்பதற்காக நான்கு பெரும் திட்டங்கள் தற்போது செயல்பட்டு வருகின்றன. அவை, முறையே:

i. தொழில் வாய்ப்பு பற்றிய தகவல் குறிப்பு ஒன்று தயாரித்தல்

ii. தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் வேலை வாய்ப்புகள் உருவாக்கல் திட்டம்

iii. தொழில் முனைப்பு எண்ணத்தை ஊக்குவிக்கும் பயிற்சி முகாம்கள்

iv. அறிவியல் தொழில் நுட்பவியல் தொழில் முனைவோர் பூங்கா உருவாக்கம்.

மேற்காண் திட்டங்களின் விளக்கம் பின்வருமாறு:

**i. தருமபுரி மற்றும் பசும்பொன் தேவர் திருமகனார் மாவட்டங்களுக்கான "தொழில் வள வாய்ப்பு விவர நூல்":**

இந்திய அரசின் அறிவியல் தொழில் நுட்பவியல் துறையை சேர்ந்த தேசிய அறிவியல் தொழில் நுட்பவியல் தொழில் முனைவர் மேம்பாட்டு வாரியத்தோடு (NSTEDB) இணைந்து, தருமபுரி மாவட்டத்திற்கென "தொழில் வள வாய்ப்பு விவர நூல்" ஒன்று தயாரிக்கும் திட்டத்திற்கு தமிழக அரசு ஒப்புதல் அளித்துள்ளது. தருமபுரி மாவட்ட வளர்ச்சிக்கழகம் இத்திட்டத்தின் முழு செயலாட்சி முகமையாகும். இத்திட்டம் அனைத்து நிலை அறிவியல், தொழில் நுட்பவியல் பணியாளர்களுக்கும், சுய வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தருவதில் அதிக கவனம் செலுத்துகிறது.

இத்துறையில் பசும்பொன் தேவர் திருமகனார் மாவட்டத்திற்கு மேற்காண் மைய நிறுவனத்துடன் இணைந்து உதவி செய்வது காரைக்குடியில் அமைந்துள்ள மத்திய மின் அணு இரசாயன ஆய்வு நிறுவனமாகும் (Central Electro Chemical Research Institute (CECRI))

**ii. தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டங்கள்:**

மைய அரசின் அறிவியல் தொழில் நுட்பவியல் துறையைச் சார்ந்த தேசிய அறிவியல் தொழில் நுட்பவியல் தொழில் முனைவர் மேம்பாட்டு வாரியத்தோடு [NSTEDB] இணைந்து கீழ்க்காணும் நிறுவனங்கள் மூலம் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டங்கள் செயல் படுத்தப்படுகின்றன.

1. தமிழ்நாட்டில் உள்ள தொழில் நுட்பவியல் அறிவுரை கூறும் நிறுவனங்கள்

2. தமிழ்நாடு மாநில அறிவியல் தொழில் நுட்பவியல் மன்றம்

1995 ஏப்ரல் 24 ]

3. அறிவியல் தொழில் நுட்பவியல் தொழில் முனைவர் பூங்கா, திருச்சி

4. திருச்சி வைரம் பட்டை தீட்டும் பூங்கா

5. பி.எஸ்.ஜி. தொழில் நுட்பவியல் கல்லூரி, கோயம்புத்தூர்.

மேற்கண்ட நிறுவனங்கள் 1995-96 ஆம் ஆண்டில், அறிவியல் தொழில் நுட்பவியல் மூலம் பெரிய அளவில் வேலை வாய்ப்பு உருவாக்கல் திட்டத்தின் கீழ் (MEGSAT) சுமார் 2000 புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்க உள்ளன.

**iii. தொழில் முனைப்பு எண்ணத்தை ஊக்குவிக்கும் பயிற்சி முகாம்கள்;**

பல்-தொழில் பயிலகங்களிலும் (Polytechnics) பொறியியல் கல்லூரிகளிலும், இளைஞர்களை புதிய தொழில் முயற்சிகளில் ஈடுபடச் செய்யுமாறு, தொழில் முனைப்பை ஊக்குவிக்கும் முகாம்கள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. இந்த முகாம்கள் இளைஞர்களுக்கு ஒரு தொழிலை ஆரம்பிப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகள் பற்றியும், நிதி ஆதாரங்கள் பற்றியும் தெளிவு பெற உதவுகின்றன.

**iv. அறிவியல் தொழில் நுட்பவியல் தொழில் முனைவோர் பூங்கா:**

திருச்சியில் உள்ள பிராந்திய பொறியியல் கல்லூரியில், இந்திய அரசின் அறிவியல் தொழில் நுட்பவியல் துறையைச் சார்ந்த தேசிய அறிவியல் தொழில்நுட்பவியல் தொழில் முனைவோர் மேம்பாட்டு வாரியத்துடன் (NSTEDB) இணைந்து செயல்பட்டு தமிழக அரசு, அறிவியல் தொழில் நுட்பவியல் தொழில் முனைவோர் பூங்கா ஒன்றை நிறுவியுள்ளது. இப்பூங்கா, பொறியியல் பட்டதாரிகளுக்கு, தொழிற் கூறைகள், மின்சக்தி, நீர் போன்ற வசதிகளையும் அக்கல்லூரியில் கிடைக்கும் ஆய்வு வசதிகளையும் கிடைக்குமாறு செய்து அவர்களுடைய புதிய தொழில் முயற்சிகளுக்கு ஆக்கம் தேடுகின்றது.

மேற்காண் திட்டங்களனைத்தும் 1994-95-ல் ரூ.36.11 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படுகின்றன. புதிய ஆண்டான 1995-96-ல் இந்திய அரசு மேலும் கணிசமான தொகையை இத்திட்டங்களுக்கு அளித்து உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**7. தென்சென்னையில் ஓர் அறிவியல் நகரம்:**

தமிழ்நாடு அரசு தென்சென்னையில் அறிவியல் நகரம் ஒன்றை நிறுவ முடிவு செய்துள்ளது. இதன் முக்கிய நோக்கங்கள் இரண்டாகும்.

அடிப்படையில் மக்கள் மத்தியில் அறிவியல் கண்ணோட்டத்தை ஏற்படுத்துதல் முதலாவதாகும். அடுத்ததாக முதிர்ந்த நிலையில், அறிவியல் சமூகத்தின் ஆய்வுத்திறனை மேம்படுத்த ஊக்கமளித்தல். அறிவியல் ஆய்வு மேம்பாடு தொடர்புடைய நிறுவனங்கள் பல தென் சென்னைப் பகுதியில் செறிந்திருப்பது இம்முயற்சிக்கு உறுதுணையாய் அமைந்துள்ளது. இம்முயற்சி தமிழக அரசின் அறிவியல் தொழில் நுட்பவியல் பரப்பு கொள்கையின் மற்றும் ஒரு முயற்சியாகும். இதற்காக தமிழக அரசு 1995-96-ல் ஒரு கோடி ரூபாய் செலவிட திட்டமிட்டுள்ளது.

நிதி ஒதுக்கீடு

| வரிசை எண் | ஆண்டு | வரவு செலவு மதிப்பீடு | | திருத்திய மதிப்பீடு | |
|---|---|---|---|---|---|
| | | திட்டத்தில் சேராதது. | திட்டம் | திட்டத்தில் சேராதது. | திட்டம் |
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | | |
| 1. | 1992-93 | — | 37.50 | — | 37.50 |
| 2. | 1993-94 | — | 38.25 | — | 38.25 |
| 3. | 1994-95 | — | 38.55 | — | 38.55 |
| 4. | 1995-96 | — | 43.00 | — | - |

## (ii) தமிழ்நாடு அறிவியல் தொழில் நுட்ப மையங்கள்

நகர்ப்புற, கிராம மக்கள் மற்றும் இளம் சிறார்களிடையே அறிவியல் தொழில்நுட்ப கருத்துக்களை பரப்பும் பொருட்டு 1983-ம் ஆண்டு தமிழக அரசால் 1975-ம் ஆண்டு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் இம்மையங்கள் நிறுவப்பட்டது. மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தலைமையின் கீழ் இம்மையம் செயல்பட்டு வருகின்றது. ரூ.401.25 இலட்சங்கள் செலவில் பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையம் 200-க்கும் மேற்பட்ட அறிவியல் சம்பந்தப்பட்ட காட்சிப் பொருட்களைக் கொண்டதாக அமைக்கப்பட்டு 1990 செப்டம்பர் திங்கள் 17 முதல் செயல்பட்டு வருகிறது. திரு. தி.கே.பிர்லா அவர்களது நன்கொடையான ரூ.200 இலட்சங்கள் முதலீட்டில் ஒரு கோளரங்கம் அமைக்கப்பட்டு 1988 மே திங்கள் 11 முதல் செயல்பட்டு வருகிறது.

1995 ஏப்ரல் 24 ]

**கோளரங்க செயல்பாடுகள்:**

இதுவரை பன்னிரண்டு கோளரங்க நிகழ்ச்சிகள் விண் திரையரங்கத்தில் திரையிடப்பட்டு ஏராளமான பொதுமக்கள் மற்றும் பள்ளி சிறுவர்களைக் கவர்ந்துள்ளது. 1994-95ம் ஆண்டில் 'நிலவில் மனிதன்' என்னும் புதிய கோளரங்க நிகழ்ச்சி ஆதரவாளர்கள் ஒத்துழைப்புடன் அறிமுகப்படுத்தல் மேலும் மற்றுமொரு நிகழ்ச்சியான "டைனாசர்களின் உலகம்" என்னும் நிகழ்ச்சி விரைவில் கோளரங்க விண்வெளி அரங்கத்தில் திரையிடப்பட உள்ளது. இவை தவிர இரவு நேர வான் நோக்குதல், சிறிய கோளரங்க நிகழ்ச்சிகள், கருத்தரங்கங்கள் போன்ற நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடத்தப்பெற்று வருகின்றன. 1994 ஜூலை திங்கள் ஏற்பட்ட ஷூமேக்கர் லெவி-9 என்ற வால் நட்சத்திரம் புதன் கிரகத்தில் மோதிய காட்சியினை வான் தொலை நோக்கி மூலம் பொதுமக்கள் பார்வையிட ஏற்பாடுகள் செய்யப்பட்டது.

**பெரியார் தொழில் நுட்ப மையச் செயல்பாடுகள்:**

இம்மையத்தில் உள்ள அறிவியல் தொடர்பான நிரந்தர காட்சிக் கூடத்தைத்தவிர இதர பணிகளான பள்ளிச்சிறுவர்களுக்கான ஓவியப்போட்டி, வினாடி வினா நிகழ்ச்சி, கருத்தரங்கங்கள் போன்றவையும் நடத்தப்பெற்று வருகின்றன. 1994 டிசம்பர் திங்கள் "அணுசக்தியும் அதன் உபயோகங்களும்" என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடத்தப்பெற்றது. இதில் கல்லூரி/ பள்ளிகளைச் சேர்ந்த 148 சார்பாளர்கள் பங்கேற்றனர். பம்பாயைச் சேர்ந்த அணு மின்சக்தி நிறுவன உதவியுடன் சக்தி காட்சிக்கூடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

**விரிவாக்கப் பணிகள்:**

விரிவாக்கப் பணிகள் தொடர்ச்சியாக 24 காட்சிப் பொருட்களை உள்ளடக்கிய ஒரு நடமாடும் காட்சிக்கூட ஊர்தி எல்லா மாவட்டங்களுக்கும் சென்று பள்ளிகளில் காட்சி நடத்தி வருகின்றது. சிறிய கோளரங்க நிகழ்ச்சியும் இதனுடன் நடத்தப்பெறுகிறது.

**எதிர்காலத் திட்டங்கள்**

திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூர் மாநகரங்களில் மண்டல அறிவியல் தொழில் நுட்ப மையங்கள் அமைக்கும் பொருட்டு நில எடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிவடையும் தறுவாயில் உள்ளது.

[1995 ஏப்ரல் 24

## மொத்த நிதி ஒதுக்கீடு

| வரிசை எண் | ஆண்டு | வரவு செலவு மதிப்பீடு திட்டத்தில் சேராதது. | வரவு செலவு மதிப்பீடு திட்டம் | திருத்திய மதிப்பீடு திட்டத்தில் சேராதது. | திருத்திய மதிப்பீடு திட்டம் |
|---|---|---|---|---|---|
| | | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 1. | 1992-93 | — | 34.50 | — | 34.50 |
| 2. | 1993-94 | — | 44.60 | — | 44.60 |
| 3. | 1994-95 | — | 33.60 | — | 33.60 |
| 4. | 1995-96 | — | 63.60 | | |

## புள்ளி விவரம்

**1. பள்ளிக் கல்வி புள்ளி விவரம்:**

I. பள்ளி வயது சிறார், சேர்க்கையும் சதவீதமும்

II. பள்ளிகளின் எண்ணிக்கை

III. ஆசிரியர்களின் எண்ணிக்கை

IV. ஆசிரியர் - மாணவர் விகிதாச்சாரம்

V. பள்ளிகளின் எண்ணிக்கை (நிர்வாக வாரியாக) சேர்க்கையும்-ஆசிரியர்களும்

VI. ஆசிரியர்கள் எண்ணிக்கை - நிர்வாக வாரியாக

VII. பணிபுரியும் ஆசிரியர்களின் எண்ணிக்கை வகுப்பு வாரியாக

VIII. மாணவர் சேர்க்கை நிலவர அட்டவணை

IX. தொழிற்கல்வி பாடங்கள்

X. தமிழ்நாட்டில் பள்ளியை விட்டு விலகுவோர் பற்றிய தகவல் (சதவீதத்தில்)

XI. தமிழ்நாட்டில் மேல்நிலைப் பள்ளிகள் வளர்ச்சி மேலாண்மை வாரியாக

XII. தமிழ்நாட்டில் உயர்நிலைப் பள்ளிகள் வளர்ச்சி மேலாண்மை வாரியாக

XIII. உயர்நிலைப் பள்ளிகளில் மாணவர்கள் சேர்க்கை மேலாண்மை வாரியாக

XIV. மேல்நிலைப் பள்ளிகளில் மாணவர்கள் சேர்க்கை மேலாண்மை வாரியாக

XV. உயர்நிலை மற்றும் மேல்நிலை வகுப்பு தேர்வு முடிவுகள்

XVI. பெண்களின் கல்வி நிலை - புள்ளி விவரம்

XVII. தமிழ்நாட்டில் மாவட்ட தொடக்கக் கல்வித் திட்டம்

**2. உயர்கல்வி புள்ளி விவரம்**

I. கல்லூரிகளின் புள்ளி விவரங்கள்

II. கல்லூரிகளில் ஆசிரியர்கள்/ஆசிரியர் அல்லாதோர் எண்ணிக்கை

*(அ) ஆசிரியர்களின் எண்ணிக்கை*

*(ஆ) ஆசிரியர் அல்லாதோர் எண்ணிக்கை*

III. கல்லூரிகளில் மாணவர்களின் எண்ணிக்கை

IV. மாநிலத்தில் உள்ள கல்லூரிகளின் எண்ணிக்கை (மாவட்ட வாரியாக

V. மொத்த கல்லூரிகளின் எண்ணிக்கை (இன வாரியாக) *-94-95.*

VI. பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்ட கல்லூரிகளின் விவரம்*-94-95.*

VII. பொறியியற் கல்லூரிகளின் எண்ணிக்கை (மாவட்ட வாரியாக)*-94-95*

VIII. பொறியியல் கல்லூரிகளில் மாணவர்கள் எண்ணிக்கை (மாவட்ட வாரியாக) *-94-95.*

IX. பாலிடெக்னிக்குகளின் எண்ணிக்கை (மாவட்ட வாரியாக)*-94-95.*

X. பாலிடெக்னிக்குகளில் மாணவர் எண்ணிக்கை (மாவட்ட வாரியாக) *-94-95.*

# புள்ளி விவரங்கள்

## 1. பள்ளிக் கல்வி 1994-95

### I. பள்ளி வயது சிறார்களின் சேர்க்கை மற்றும் சதவீதம்

| வயது தொகுதி (1) | | மொத்த எண்ணிக்கை (இலட்சத்தில்) (2) | மாணவர் சேர்க்கை (இலட்சத்தில்) (3) | மாணவர் சேர்க்கை (சதவீதத்தில்) (4) |
|---|---|---|---|---|
| 6-11 | மாணவர்கள் | 40.94 | 43.47 | 106.18 |
| | மாணவிகள் | 39.79 | 37.63 | 94.57 |
| | **மொத்தம்** | **80.73** | **81.10** | **100.46** |
| 11-14 | மாணவர்கள் | 18.99 | 20.44 | 107.60 |
| | மாணவிகள் | 18.46 | 16.14 | 87.48 |
| | **மொத்தம்** | **37.45** | **36.58** | **97.69** |
| 14-16 | மாணவர்கள் | 10.46 | 8.12 | 77.60 |
| | மாணவிகள் | 10.22 | 5.51 | 53.96 |
| | **மொத்தம்** | **20.68** | **13.63** | **65.92** |
| 16-18 | மாணவர்கள் | 9.87 | 3.36 | 36.12 |
| | மாணவிகள் | 9.64 | 2.51 | 26.02 |
| | **மொத்தம்** | **19.51** | **6.07** | **31.13** |
| | | **158.37** | **137.38** | **86.75** |

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

53/120—13c

## II. பள்ளிகளின் எண்ணிக்கை

| பள்ளிகளின் வகை | | 1990-91 | 1991-92 | 1992-93 | 1993-94 | 1994-95 |
|---|---|---|---|---|---|---|
| தொடக்கப் பள்ளிகள் | .. | 29,979 | 30,004 | 30,098 | 30,329 | 30,351 |
| நடுநிலைப் பள்ளிகள் | .. | 5,624 | 5,581 | 5,608 | 5,593 | 5,578 |
| உயர்நிலைப் பள்ளிகள் | .. | 3,136 | 3,163 | 3,203 | 3,270 | 3,340 |
| மேல்நிலைப் பள்ளிகள் | .. | 2,008 | 2,084 | 2,165 | 2,221 | 2,318 |
| மொத்தம் | .. | **40,747** | **40,832** | **41,074** | **41,413** | **41,587** |

## III. ஆசிரியர்களின் எண்ணிக்கை

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| தொடக்கப் பள்ளிகள் | .. | 1,19,927 | 1,20,721 | 1,21,212 | 1,16,396 | 1,14,308 |
| நடுநிலைப் பள்ளிகள் | .. | 65,555 | 65,667 | 65,895 | 62,192 | 61,779 |
| உயர்நிலைப் பள்ளிகள் | .. | 42,565 | 42,683 | 42,654 | 42,329 | 43,589 |
| மேல்நிலைப் பள்ளிகள் | .. | 72,816 | 73,872 | 74,443 | 74,496 | 76,034 |
| மொத்தம் | .. | **3,00,863** | **3,02,943** | **3,04,204** | **2,95,413** | **2,95,710** |

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

## IV. ஆசிரியர்-மாணவர் விகிதாச்சாரம்

| பள்ளிகளின் வகைகள் | 1990-91 | 1991-92 | 1992-93 | 1993-94 | 1994-95 |
|---|---|---|---|---|---|
| (சிறப்பு ஆசிரியர் உள்ளிட்ட) | | | | | |
| தொடக்கப் பள்ளிகள் .. | 46 | 47 | 47 | 49 | 50 |
| நடுநிலைப் பள்ளிகள் .. | 46 | 47 | 47 | 51 | 52 |
| உயர்நிலைப் பள்ளிகள் .. | 37 | 39 | 41 | 43 | 44 |
| மேல்நிலைப் பள்ளிகள் .. | 33 | 34 | 35 | 37 | 38 |

## V. பள்ளிகளின் எண்ணிக்கை (நிர்வாக வாரியாக)

### மாணவர்கள் சேர்க்கையும் ஆசிரியர்களும் 1994-95

| பள்ளிகளின் வகைகள் (1) | பள்ளிகளின் எண்ணிக்கை (2) | மாணவர் எண்ணிக்கை (இலட்சத்தில்) (3) | ஆசிரியர்கள் எண்ணிக்கை (4) |
|---|---|---|---|
| **1. தொடக்கப் பள்ளிகள்** | | | |
| அரசுப் பள்ளிகள் .. | 1,481 | 3.63 | 7,523 |
| நகராட்சி, மாநகராட்சி .. | 1,134 | 4.12 | 8,891 |
| ஊராட்சி ஒன்றியம் .. | 22,589 | 35.24 | 67,865 |
| தனியார் .. | 5,147 | 14.37 | 30,029 |
| மொத்தம் .. | **30,351** | **57.37** | **1,14,308** |

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

| பள்ளிகளின் வகைகள் (1) | | பள்ளிகளின் எண்ணிக்கை (2) | மாணவர் எண்ணிக்கை (இலட்சத்தில்) (3) | ஆசிரியர்கள் எண்ணிக்கை (4) |
|---|---|---|---|---|
| **2. நடுநிலைப் பள்ளிகள்** | | | | |
| அரசுப் பள்ளிகள் | .. | 219 | 1.58 | 2,923 |
| நகராட்சிப் பள்ளிகள் | .. | 417 | 3.23 | 6,874 |
| ஊராட்சி ஒன்றியம் | .. | 3,062 | 14.57 | 24,071 |
| தனியார் | .. | 1,880 | 12.70 | 27,911 |
| மொத்தம் | .. | **5,578** | **32.08** | **61,779** |
| மொத்த ஆரம்ப நடுநிலைப் பள்ளிகள் | | **35,929** | **89.45** | **1,76,087** |
| **3. உயர்நிலைப் பள்ளிகள்-மாநிலப் பள்ளிகள்** | | | | |
| அரசு | .. | 1,902 | 10.75 | 25,946 |
| நகராட்சி-மாநகராட்சி | .. | 83 | 0.77 | 1,434 |
| தனியார் | .. | 453 | 4.25 | 8,285 |
| மொத்தம் | .. | **2,438** | **15.77** | **35,665** |
| ஆங்கிலோ-இந்தியன் | .. | 13 | 0.14 | 307 |
| மெட்ரிகுலேசன் | .. | 806 | 2.71 | 6,228 |
| நடுவண் அரசு பள்ளிகள் | .. | 83 | 0.46 | 1,389 |
| மொத்த உயர் நிலைப் பள்ளிகள் | | **3,340** | **19.08** | **43,589** |

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

| பள்ளிகளின் வகைகள் (1) | | பள்ளிகளின் எண்ணிக்கை (2) | மாணவர் எண்ணிக்கை (இலட்சத்தில்) (3) | ஆசிரியர்கள் எண்ணிக்கை (4) |
|---|---|---|---|---|
| **4. மேல்நிலைப் பள்ளிகள்-மாநிலப் பள்ளிகள்** | | | | |
| அரசு | .. | 903 | 11.91 | 30,201 |
| நகராட்சி-மாநகராட்சி | .. | 68 | 1.94 | 3,852 |
| தனியார் | .. | 786 | 11.11 | 31,143 |
| மொத்தம் | .. | **1,757** | **24.96** | **65,196** |
| ஆங்கிலோ-இந்தியன் | .. | 28 | 0.44 | 1,073 |
| மெட்ரிக்குலேசன் | .. | 440 | 2.47 | 6,770 |
| நடுவண் அரசு பள்ளிகள் | .. | 93 | 0.98 | 2,995 |
| மொத்த மேல்நிலைப் பள்ளிகள் | | 2,318 | 28.85 | 76,034 |
| மொத்த உயர்/மேல் நிலைப் பள்ளிகள் | | 5,658 | 47.63 | 1,19,623 |
| பெரு மொத்தம் உயர்/மேல்நிலைப் பள்ளிகள் | | **41,587** | **137.38** | **2,95,710** |

| சேர்க்கை விவரம் | | |
|---|---|---|
| சிறுவர் | .. | 75,59,260 |
| சிறுமியர் | .. | 61,79,499 |
| மொத்தம் | .. | **1,37,38,759** |

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

# VI. நிர்வாக வாரியாக ஆசிரியர்களின் எண்ணிக்கை 1994-95

| பள்ளி வகைகள் (1) | | அரசு மாநிலம் மற்றும் மையம் (2) | நகராட்சி மாநகராட்சி (3) | பஞ்சாயத்து யூனியன் (4) |
|---|---|---|---|---|
| தொடக்கப் பள்ளிகள் | .. | 7,523 | 8,891 | 67,865 |
| நடுநிலைப் பள்ளிகள் | .. | 2,923 | 6,874 | 24,911 |
| உயர்நிலைப் பள்ளிகள் | .. | 26,101 | 1,434 | .. |
| மேல்நிலைப் பள்ளிகள் | .. | 31,012 | 3,852 | .. |
| **மொத்தம்** | .. | **67,559** | **21,051** | **91,936** |

| பள்ளி ள் வகை ள் (1) | | தனியாக (2) | மொத்தம் (3) | ஆசிரியக ள் | |
|---|---|---|---|---|---|
| | | | | ஆண் (4) | பெண் (5) |
| தொடக்கப் பள்ளிகள் | .. | 30,029 | 1,14,308 | 67,233 | 47,075 |
| நடுநிலைப் பள்ளிகள் | .. | 27,911 | 61,779 | 31,998 | 29,781 |
| உயர்நிலைப் பள்ளிகள் | .. | 16,054 | 43,589 | 24,688 | 18,901 |
| மேல்நிலைப் பள்ளிகள் | .. | 41,170 | 76,034 | 44,439 | 31,595 |
| **மொத்தம்** | .. | **1,15,164** | **2,95,710** | **1,68,358** | **1,27,352** |

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

## VII. பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை (வகுப்பு வாரியாக)

### 1994-95

| வகுப்பு (1) | ஆண் (2) | பெண் (3) | மொத்தம் (4) |
|---|---|---|---|
| 1-5 | 89,450 | 69,874 | 1,59,324 |
| 6-8 | 39,003 | 30,232 | 69,235 |
| 9-10 | 26,137 | 16,749 | 42,886 |
| 11-12 | 13,768 | 10,497 | 24,265 |
| 1-12 | 1,68,358 | 1,27,352 | 2,95,710 |

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

## VIII. மாணவர் சேர்க்கைப் பட்டியல்-1994-95 (இலட்சங்களில்)

| வகுப்புகள் (1) | மேல்நிலைப் பள்ளி. (2) | உயர்நிலைப் பள்ளி. (3) | நடுநிலைப் பள்ளி. (4) | தொடக்கப் பள்ளி. (5) | மொத்தம். (6) |
|---|---|---|---|---|---|
| **I-V** | | | | | |
| மாணவர் | 1.40 | 1.37 | 10.04 | 30.66 | **43.47** |
| மாணவியர் | 1.27 | 1.15 | 8.50 | 26.71 | **37.63** |
| மொத்தம் | 2.67 | 2.52 | 18.54 | 57.37 | **81.10** |
| **VI-VIII** | | | | | |
| மாணவர் | 7.12 | 5.82 | 7.50 | .. | **20.14** |
| மாணவியர் | 5.14 | 4.96 | 6.04 | .. | **16.14** |
| மொத்தம் | 12.26 | 10.78 | 13.54 | .. | **36.58** |
| **IX-X** | | | | | |
| மாணவர் | 4.87 | 3.25 | .. | .. | **8.12** |
| மாணவியர் | 2.98 | 2.53 | .. | .. | **5.51** |
| மொத்தம் | 7.85 | 5.78 | .. | .. | **13.63** |
| **XI-XII** | | | | | |
| மாணவர் | 3.56 | .. | .. | .. | **3.56** |
| மாணவியர் | 2.51 | .. | .. | .. | **2.51** |
| மொத்தம் | 6.07 | .. | .. | .. | **6.07** |
| **I-XII** | | | | | |
| மாணவர் | 16.95 | 10.44 | 17.54 | 30.66 | **75.59** |
| மாணவியர் | 11.90 | 8.64 | 14.54 | 26.71 | **61.79** |
| மொத்தம் | 28.85 | 19.08 | 32.08 | 57.37 | **137.38** |

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

# IX. தொழிற் கல்வி பாடங்கள்-1994-95

| வ.எண். (1) | பாடப் பிரிவு (2) | சேர்க்கை மாணவர் (3) | மாணவியர் (4) | மொத்தம் (5) |
|---|---|---|---|---|
| 1. | வேளாண்மை | 9,252 | 645 | 9,897 |
| 2. | மனை இயல் | 162 | 6,798 | 6,960 |
| 3. | வணிகவியல் மற்றும் வாணிபம் | 30,450 | 29,362 | 59,812 |
| 4. | பொறியியல் மற்றும் தொழில் நுட்பம் | 25,314 | 3,435 | 28,749 |
| 5. | சுகாதாரம் | 1,498 | 7,486 | 8,984 |
| 6. | இதரப் பிரிவுகள் | 435 | 396 | 831 |
| | மொத்தம் | **67,113** | **48,120** | **1,15,233** |

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

## X. தமிழ்நாட்டில் பள்ளியைவிட்டு விலகுவோர் பற்றிய தகவல்
### (சதவீதத்தில்)

| ஆண்டு | ஆரம்பப் பள்ளிகள் | | | நடுநிலைப் பள்ளிகள் | | |
|---|---|---|---|---|---|---|
| | மாணவர் | மாணவியர் | மொத்தம் | மாணவர் | மாணவியர் | மொத்தம் |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| *1985-86* | *20.13* | *25.20* | *22.48* | *51.47* | *62.23* | *56.45* |
| *1986-87* | *19.86* | *25.06* | *22.29* | *47.66* | *57.82* | *52.38* |
| *1987-88* | *19.44* | *24.46* | *21.78* | *44.08* | *53.14* | *48.22* |
| *1988-89* | *19.17* | *24.01* | *21.42* | *41.33* | *51.35* | *45.97* |
| *1989-90* | *18.78* | *23.64* | *21.05* | *40.87* | *50.65* | *45.43* |
| *1990-91* | *18.27* | *22.68* | *20.32* | *40.17* | *49.43* | *44.48* |
| *1991-92* | *17.71* | *21.16* | *19.31* | *37.48* | *46.50* | *41.67* |
| *1992-93* | *17.11* | *19.62* | *18.27* | *34.76* | *43.54* | *38.86* |
| *1993-94* | *16.39* | *18.35* | *17.30* | *32.16* | *41.20* | *36.35* |
| *1994-95* | *15.58* | *17.65* | *16.54* | *30.75* | *39.36* | *34.74* |

## தமிழ்நாட்டில் பள்ளியைவிட்டு விலகுவோர் பற்றிய தகவல் (சதவீதத்தில்) - தொடர்ச்சி

| ஆண்டு | உயர்நிலைப் பள்ளிகள் | | | மேல்நிலைப் பள்ளிகள் | | |
|---|---|---|---|---|---|---|
| | மாணவர்கள் | மாணவியர்கள் | மொத்தம் | மாணவர்கள் | மாணவியர்கள் | மொத்தம் |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1985-86 | 72.03 | 79.71 | 75.53 | 88.11 | 90.00 | 88.97 |
| 1986-87 | 71.41 | 78.59 | 74.68 | 87.50 | 89.64 | 88.47 |
| 1987-88 | 69.72 | 77.32 | 73.24 | 87.13 | 88.84 | 87.91 |
| 1988-89 | 66.75 | 76.45 | 71.26 | 86.52 | 88.58 | 87.46 |
| 1989-90 | 66.11 | 73.85 | 69.64 | 85.11 | 87.98 | 86.44 |
| 1990-91 | 64.91 | 72.38 | 68.32 | 84.23 | 86.60 | 85.31 |
| 1991-92 | 64.46 | 71.93 | 67.94 | 83.92 | 86.07 | 84.90 |
| 1992-93 | 63.65 | 71.02 | 67.08 | 82.94 | 85.39 | 84.08 |
| 1993-94 | 62.98 | 69.85 | 66.17 | 81.89 | 84.28 | 83.00 |
| 1994-95 | 61.46 | 69.15 | 65.05 | 80.59 | 84.19 | 82.26 |

# XI. தமிழகத்தில் மேல்நிலைப் பள்ளிகளின் வளர்ச்சி (நிர்வாக வாரியாக)

**(1980-81 to 1994-95)**

| ஆண்டு | மாநில வாரியப் பள்ளிகள் | | | | |
|---|---|---|---|---|---|
| | அரசு | நகராட்சி மாநகராட்சி | உதவிபெறுவது | உதவி பெறாதது | மொத்தம் |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| *1980-81* | *572* | *57* | *542* | - | *1,172* |
| *1981-82* | *653* | *60* | *574* | *1* | *1,288* |
| *1982-83* | *654* | *60* | *576* | *2* | *1,292* |
| *1983-84* | *654* | *60* | *576* | *2* | *1,292* |
| *1984-85* | *686* | *60* | *584* | *1* | *1,331* |
| *1985-86* | *690* | *62* | *627* | *1* | *1,380* |
| *1986-87* | *755* | *62* | *651* | *1* | *1,469* |
| *1987-88* | *765* | *62* | *653* | *1* | *1,481* |
| *1988-89* | *769* | *62* | *676* | *19* | *1,526* |
| *1989-90* | *809* | *68* | *677* | *53* | *1,607* |
| *1990-91* | *848* | *68* | *674* | *70* | *1,660* |
| *1991-92* | *869* | *68* | *674* | *88* | *1,699* |
| *1992-93* | *879* | *68* | *674* | *94* | *1,715* |
| *1993-94* | *891* | *68* | *674* | *98* | *1,731* |
| *1994-95* | *903* | *68* | *674* | *112* | *1,757* |

## தமிழகத்தில் மேல்நிலைப் பள்ளிகளின் வளர்ச்சி (நிர்வாக வாரியாக) - தொடர்ச்சி

| ஆண்டு | மெட்ரிகுலேஷன் (7) | ஆங்கிலோ இந்தியன் (8) | மைய அரசு (9) | மொத்தம் (10) | பெரு மொத்தம் (11) |
|---|---|---|---|---|---|
| 1980-81 | 31 | 26 | 57 | 114 | 1,286 |
| 1981-82 | 36 | 26 | 57 | 119 | 1,407 |
| 1982-83 | 41 | 26 | 57 | 124 | 1,416 |
| 1983-84 | 52 | 26 | 57 | 135 | 1,427 |
| 1984-85 | 59 | 27 | 57 | 143 | 1,474 |
| 1985-86 | 79 | 28 | 67 | 174 | 1,545 |
| 1986-87 | 100 | 30 | 79 | 209 | 1,678 |
| 1987-88 | 121 | 29 | 79 | 229 | 1,710 |
| 1988-89 | 155 | 29 | 79 | 261 | 1,787 |
| 1989-90 | 192 | 29 | 89 | 308 | 1,915 |
| 1990-91 | 276 | 28 | 81 | 385 | 2,045 |
| 1991-92 | 276 | 28 | 81 | 385 | 2,084 |
| 1992-93 | 338 | 28 | 84 | 450 | 2,165 |
| 1993-94 | 373 | 28 | 89 | 490 | 2,221 |
| 1994-95 | 440 | 28 | 93 | 561 | 2,318 |

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

## XII. தமிழகத்தில் உயர்நிலைப் பள்ளிகளின் வளர்ச்சி

**(நிர்வாக வாரியாக - 1980-81 முதல் 1994-95)**

| ஆண்டு | மாநில வாரியப் பள்ளிகள் | | | | |
|---|---|---|---|---|---|
| | அரசு | நகராட்சி மாநகராட்சி | உதவிபெறுவது | உதவி பெறாதது | மொத்தம் |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1980-81 | 1,486 | 72 | 399 | 1 | 1,958 |
| 1981-82 | 1,547 | 69 | 398 | 7 | 2,021 |
| 1982-83 | 1,590 | 71 | 397 | 13 | 2,071 |
| 1983-84 | 1,621 | 72 | 441 | 7 | 2,141 |
| 1984-85 | 1,686 | 73 | 465 | 5 | 2,229 |
| 1985-86 | 1,723 | 80 | 450 | 5 | 2,258 |
| 1986-87 | 1,765 | 80 | 445 | 2 | 2,292 |
| 1987-88 | 1,762 | 80 | 450 | 2 | 2,294 |
| 1988-89 | 1,795 | 80 | 416 | 2 | 2,293 |
| 1989-90 | 1,839 | 78 | 387 | 23 | 2,327 |
| 1990-91 | 1,864 | 83 | 370 | 44 | 2,361 |
| 1991-92 | 1,872 | 83 | 352 | 66 | 2,373 |
| 1992-93 | 1,883 | 83 | 346 | 84 | 2,396 |
| 1993-94 | 1,889 | 83 | 346 | 94 | 2,412 |
| 1994-95 | 1,902 | 83 | 332 | 121 | 2,438 |

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

## XII. தமிழகத்தில் உயர்நிலைப் பள்ளிகளின் வளர்ச்சி - (நிர்வாக வாரியாக 1980-81–1994-95)-தொடர்ச்சி

| ஆண்டு | மெட்ரிகுலேஷன் (7) | ஆங்கிலோ இந்தியன் (8) | மைய அரசு (9) | மொத்தம் (10) | பெரு மொத்தம் (11) |
|---|---|---|---|---|---|
| 1980-81 | 29 | 17 | 65 | 111 | 2,069 |
| 1981-82 | 50 | 18 | 79 | 147 | 2,168 |
| 1982-83 | 78 | 18 | 93 | 189 | 2,260 |
| 1983-84 | 93 | 18 | 99 | 210 | 2,351 |
| 1984-85 | 144 | 14 | 89 | 247 | 2,476 |
| 1985-86 | 212 | 13 | 86 | 311 | 2,569 |
| 1986-87 | 289 | 11 | 96 | 396 | 2,688 |
| 1987-88 | 406 | 13 | 106 | 525 | 2,819 |
| 1988-89 | 1,515 | 13 | 101 | 629 | 2,922 |
| 1989-90 | 606 | 12 | 89 | 707 | 3,034 |
| 1990-91 | 684 | 13 | 93 | 790 | 3,151 |
| 1991-92 | 684 | 13 | 93 | 790 | 3,163 |
| 1992-93 | 709 | 13 | 85 | 807 | 3,203 |
| 1993-94 | 759 | 13 | 86 | 858 | 3,270 |
| 1994-95 | 806 | 13 | 83 | 902 | 3,340 |

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

# XIII. உயர்நிலைப் பள்ளிகளில் சேர்க்கை (நிர்வாக வாரியாக)

## 1980-81 முதல் 1994-95

| ஆண்டு | அரசு | | | நகராட்சி - மாநகராட்சி | | |
|---|---|---|---|---|---|---|
| | மாணவர் | மாணவியர் | மொத்தம் | மாணவர் | மாணவியர் | மொத்தம் |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1980-81 | 2,99,584 | 1,73,495 | 4,73,079 | 17,659 | 18,779 | 36,438 |
| 1981-82 | 3,06,091 | 1,78,284 | 4,84,375 | 19,021 | 19,342 | 38,363 |
| 1982-83 | 3,29,058 | 1,93,913 | 5,22,971 | 19,048 | 20,051 | 39,099 |
| 1983-84 | 3,72,062 | 2,30,676 | 6,02,738 | 19,546 | 22,757 | 42,303 |
| 1984-85 | 3,96,375 | 2,59,454 | 6,55,829 | 19,123 | 22,781 | 41,904 |
| 1985-86 | 4,11,032 | 2,71,770 | 6,82,802 | 22,056 | 23,136 | 45,192 |
| 1986-87 | 4,39,308 | 3,07,396 | 7,46,704 | 22,987 | 23,365 | 46,352 |
| 1987-88 | 4,50,268 | 3,17,398 | 7,67,666 | 23,978 | 28,794 | 52,772 |
| 1988-89 | 4,81,562 | 3,29,688 | 8,11,250 | 26,269 | 28,203 | 54,472 |
| 1989-90 | 5,05,175 | 3,49,658 | 8,54,833 | 24,949 | 29,169 | 54,188 |
| 1990-91 | 5,41,843 | 3,69,505 | 9,11,348 | 31,132 | 31,569 | 62,701 |
| 1991-92 | 5,70,948 | 4,02,332 | 9,73,280 | 32,421 | 32,423 | 64,844 |
| 1992-93 | 6,01,613 | 4,38,733 | 10,40,346 | 34,552 | 33,949 | 68,501 |
| 1993-94 | 5,88,002 | 4,30,111 | 10,18,113 | 36,770 | 35,884 | 72,654 |
| 1994-95 | 6,09,052 | 4,65,799 | 10,74,851 | 39,121 | 37,985 | 77,106 |

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

## XIII. உயர்நிலைப் பள்ளிகளில் சேர்க்கை (நிர்வாக வாரியாக) 1980-81–1994-95—தொடர்ச்சி

| | தனியார் பள்ளிகள். | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | உதவி பெறுவது | | | உதவி பெறாதது | | | பெருமொத்தம் | | |
| ஆண்டு | மாணவர் | மாணவியர் | மொத்தம் | மாணவர் | மாணவியர் | மொத்தம் | மாணவர் | மாணவியர் | மொத்தம் |
| | (8) | (9) | (10) | (11) | (12) | (13) | (14) | (15) | (16) |
| 1980-81 | 1,06,144 | 87,753 | 1,93,897 | 244 | 163 | 407 | 4,23,631 | 2,80,190 | 7,03,821 |
| 1981-82 | 1,10,815 | 88,705 | 1,99,520 | 471 | 359 | 830 | 4,36,398 | 2,86,690 | 7,23,088 |
| 1982-83 | 1,09,797 | 87,295 | 1,97,092 | 1,989 | 1,332 | 3,321 | 4,59,892 | 3,02,591 | 7,62,483 |
| 1983-84 | 1,38,041 | 1,12,481 | 2,50,522 | 600 | 363 | 963 | 5,30,249 | 3,66,277 | 8,96,526 |
| 1984-85 | 1,40,344 | 1,13,419 | 2,53,763 | 687 | 434 | 1,121 | 5,56,529 | 3,96,088 | 9,52,617 |
| 1985-86 | 1,53,907 | 1,26,533 | 2,80,440 | 1,130 | 376 | 1,506 | 5,58,125 | 4,21,815 | 10,09,940 |
| 1986-87 | 1,50,876 | 1,27,990 | 2,78,866 | 1,260 | 391 | 1,651 | 6,14,431 | 4,59,142 | 10,73,573 |
| 1987-88 | 1,65,332 | 1,53,661 | 3,18,993 | 1,378 | 416 | 1,794 | 6,40,956 | 5,00,269 | 11,41,225 |
| 1988-89 | 1,91,676 | 1,70,163 | 3,61,839 | 1,410 | 431 | 1,841 | 7,00,917 | 5,28,485 | 12,29,402 |
| 1989-90 | 1,99,741 | 1,88,212 | 3,87,953 | 7,431 | 3,712 | 11,143 | 7,37,296 | 5,70,751 | 13,08,047 |
| 1990-91 | 1,70,949 | 1,80,766 | 3,51,715 | 11,117 | 5,131 | 16,248 | 7,55,041 | 5,86,971 | 13,42,012 |
| 1991-92 | 1,57,824 | 1,68,298 | 3,26,122 | 22,248 | 20,945 | 43,193 | 7,83,441 | 6,23,998 | 14,07,439 |
| 1992-93 | 1,55,939 | 1,65,003 | 3,20,942 | 27,449 | 25,248 | 52,697 | 8,19,553 | 6,62,933 | 14,82,486 |
| 1993-94 | 1,71,359 | 1,78,938 | 3,50,297 | 29,572 | 27,596 | 57,168 | 8,25,703 | 6,72,529 | 14,98,232 |
| 1994-95 | 1,69,295 | 1,76,489 | 3,45,784 | 42,023 | 36,941 | 78,964 | 8,59,491 | 7,17,214 | 15,76,705 |

## XIII. உயர்நிலைப் பள்ளிகளில் சேர்க்கை (நிர்வாக வாரியாக) 1980-81–1994-95-தொடர்ச்சி

| ஆண்டு | மெட்ரிகுலேஷன் பள்ளிகள் | | | ஆங்கிலோ இந்தியன் பள்ளிகள் | | |
|---|---|---|---|---|---|---|
| | மாணவர் (17) | மாணவியர் (18) | மொத்தம் (19) | மாணவர் (20) | மாணவியர் (21) | மொத்தம் (22) |
| 1980-81 | 6,681 | 6,150 | 12,831 | 4,057 | 7,559 | 11,616 |
| 1981-82 | 12,151 | 10,889 | 23,040 | 3,732 | 7,392 | 11,124 |
| 1982-83 | 13,843 | 10,514 | 24,357 | 3,809 | 8,484 | 12,293 |
| 1983-84 | 22,187 | 17,585 | 39,772 | 3,934 | 8,778 | 12,712 |
| 1984-85 | 33,265 | 32,593 | 67,858 | 3,205 | 7,614 | 10,819 |
| 1985-86 | 41,868 | 33,237 | 75,105 | 3,401 | 7,923 | 11,324 |
| 1986-87 | 43,928 | 32,213 | 76,141 | 3,136 | 6,830 | 9,966 |
| 1987-88 | 52,308 | 38,491 | 90,799 | 2,931 | 6,617 | 9,548 |
| 1988-89 | 56,271 | 48,673 | 1,04,944 | 3,440 | 7,171 | 10,611 |
| 1989-90 | 67,058 | 60,855 | 1,27,913 | 3,559 | 7,333 | 10,892 |
| 1990-91 | 93,763 | 75,157 | 1,68,920 | 3,681 | 7,367 | 11,048 |
| 1991-92 | 1,01,501 | 77,739 | 1,79,240 | 4,070 | 7,837 | 11,907 |
| 1992-93 | 1,12,007 | 83,994 | 1,96,001 | 4,174 | 8,774 | 12,948 |
| 1993-94 | 1,43,512 | 1,14,284 | 2,57,796 | 4,261 | 9,203 | 13,464 |
| 1994-95 | 1,53,269 | 1,17,936 | 2,71,205 | 4,615 | 9,418 | 14,033 |

## உயர்நிலைப் பள்ளிகளில் மாணவர்கள் சேர்க்கை (நிர்வாக வாரியாக) 19980-81–1994-95 – தொடர்ச்சி

| ஆண்டு | மைய அரசு பள்ளிகள் | | | கூட்டு மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|
| | மாணவர் (23) | மாணவியர் (24) | மொத்தம் (25) | மாணவர் (26) | மாணவியர் (27) | மொத்தம் (28) |
| 1980-81 | 18,933 | 11,404 | 30,337 | 4,53,302 | 3,05,303 | 7,58,605 |
| 1981-82 | 23,319 | 13,998 | 37,317 | 4,75,600 | 3,18,969 | 7,94,569 |
| 1982-83 | 24,638 | 14,237 | 38,875 | 5,02,182 | 3,35,826 | 8,38,008 |
| 1983-84 | 31,608 | 18,041 | 49,649 | 5,87,978 | 4,10,681 | 9,98,659 |
| 1984-85 | 31,968 | 18,492 | 50,460 | 6,26,967 | 4,54,787 | 10,81,754 |
| 1985-86 | 24,663 | 16,304 | 40,927 | 6,58,057 | 4,79,279 | 11,37,336 |
| 1986-87 | 23,728 | 14,763 | 38,491 | 6,85,223 | 5,12,948 | 11,98,171 |
| 1987-88 | 29,098 | 20,810 | 49,908 | 7,25,293 | 5,66,187 | 12,91,480 |
| 1988-89 | 28,443 | 20,137 | 48,580 | 7,89,071 | 6,04,466 | 13,93,537 |
| 1989-90 | 28,239 | 20,092 | 43,331 | 8,36,152 | 6,59,031 | 14,95,183 |
| 1990-91 | 30,153 | 23,089 | 53,242 | 8,82,638 | 6,92,584 | 15,75,222 |
| 1991-92 | 28,214 | 21,767 | 49,981 | 9,17,226 | 7,31,341 | 16,48,567 |
| 1992-93 | 26,150 | 19,911 | 46,061 | 9,61,884 | 7,75,612 | 17,37,496 |
| 1993-94 | 25,874 | 19,790 | 45,664 | 9,99,350 | 8,15,806 | 18,15,156 |
| 1994-95 | 26,225 | 19,938 | 46,163 | 10,43,600 | 8,64,506 | 19,08,106 |

# XIV மேல்நிலைப் பள்ளிகளில் மாணவர்கள் சேர்க்கை

## (நிர்வாக வாரியாக) 1980-81 – 1994-95

| ஆண்டு | அரசு மேல்நிலைப்பள்ளிகள் | | | நகராட்சி-மாநகராட்சி மேல்நிலைப் பள்ளிகள் | | |
|---|---|---|---|---|---|---|
| | மாணவர் | மாணவியர் | மொத்தம் | மாணவர் | மாணவியர் | மொத்தம் |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1980-81 | 3,83,366 | 1,70,467 | 5,53,833 | 46,595 | 39,472 | 86,067 |
| 1981-82 | 4,24,255 | 2,01,113 | 6,25,368 | 48,273 | 41,270 | 89,543 |
| 1982-83 | 4,49,442 | 2,03,378 | 6,52,820 | 48,947 | 41,518 | 90,465 |
| 1983-84 | 4,54,506 | 2,04,542 | 6,59,048 | 49,573 | 42,029 | 91,602 |
| 1984-85 | 4,82,302 | 2,27,553 | 7,09,855 | 29,760 | 45,012 | 94,772 |
| 1985-86 | 4,95,158 | 2,50,766 | 7,45,924 | 64,323 | 50,119 | 1,14,442 |
| 1986-87 | 5,41,189 | 2,74,414 | 8,15,603 | 70,191 | 51,583 | 1,19,774 |
| 1987-88 | 5,59,551 | 2,97,530 | 8,57,081 | 72,287 | 52,150 | 1,24,437 |
| 1988-89 | 6,14,432 | 3,38,611 | 9,53,043 | 78,118 | 56,089 | 1,34,207 |
| 1989-90 | 6,34,181 | 3,52,469 | 9,86,650 | 88,181 | 64,675 | 1,52,856 |
| 1990-91 | 6,64,590 | 3,68,321 | 10,32,911 | 95,907 | 71,731 | 1,67,638 |
| 1991-92 | 6,82,038 | 3,87,125 | 10,71,163 | 97,215 | 72,802 | 1,70,017 |
| 1992-93 | 7,04,381 | 4,09,836 | 11,14,217 | 98,024 | 73,398 | 1,71,422 |
| 1993-94 | 6,97,304 | 4,09,168 | 11,06,472 | 1,05,853 | 79,430 | 1,85,283 |
| 1994-95 | 7,39,013 | 4,52,328 | 11,91,341 | 1,10,511 | 83,025 | 1,93,536 |





TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

## XIV. மேல்நிலைப் பள்ளிகளில் மாணவர்கள் சேர்க்கை-தொடர்ச்சி (1980-81 – 1994-95)

| | தனியார் மேல்நிலைப் பள்ளிகள். | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | உதவி பெறுபவை. | | | உதவி பெறாதவை. | | |
| ஆண்டு | மாணவர் (8) | மாணவியர் (9) | மொத்தம் (10) | மாணவர் (11) | மாணவியர் (12) | மொத்தம் (13) |
| 1980-81 | 4,25,895 | 2,72,540 | 6,98,435 | 254 | 145 | 399 |
| 1981-82 | 4,42,257 | 2,86,882 | 7,29,139 | 391 | 210 | 601 |
| 1982-83 | 4,44,100 | 2,86,997 | 7,31,097 | 768 | 367 | 1,135 |
| 1983-84 | 4,48,372 | 2,96,857 | 7,45,229 | 625 | 372 | 997 |
| 1984-85 | 4,57,509 | 3,07,166 | 7,64,675 | 780 | 424 | 1,204 |
| 1985-86 | 4,66,350 | 3,26,707 | 7,93,057 | 543 | 252 | 795 |
| 1986-87 | 4,79,736 | 3,54,197 | 8,34,933 | 763 | 352 | 1,115 |
| 1987-88 | 5,11,400 | 3,59,332 | 8,70,732 | 518 | 221 | 739 |
| 1988-89 | 5,16,815 | 3,79,852 | 8,96,667 | 7,194 | 3,811 | 11,005 |
| 1989-90 | 5,19,816 | 3,94,560 | 9,14,376 | 18,573 | 8,548 | 27,121 |
| 1990-91 | 5,22,202 | 4,10,188 | 9,32,390 | 26,339 | 13,531 | 39,870 |
| 1991-92 | 5,33,999 | 4,22,609 | 9,56,608 | 31,892 | 16,308 | 48,200 |
| 1992-93 | 5,45,340 | 4,21,815 | 9,67,155 | 35,412 | 25,119 | 60,531 |
| 1993-94 | 5,62,496 | 4,38,240 | 10,00,736 | 37,855 | 28,300 | 66,155 |
| 1994-95 | 5,76,925 | 4,51,425 | 10,28,350 | 47,422 | 35,358 | 82,780 |

## XIV. மேல்நிலைப் பள்ளிகளில் மாணவர்கள் சேர்க்கை-தொடர்ச்சி (1980-81 – 1994-95)

| ஆண்டு | | கல்வித் துறையின் கீழ் உள்ள பள்ளிகளின் எண்ணிக்கை. | | |
|---|---|---|---|---|
| | | மாணவர் (14) | மாணவியர் (15) | மொத்தம் (16) |
| *1980-81* | .. | 8,56,110 | 4,82,624 | 13,38,734 |
| *1981-82* | .. | 9,15,170 | 5,29,475 | 14,44,651 |
| *1982-83* | .. | 9,43,257 | 5,32,260 | 14,75,517 |
| *1983-84* | .. | 9,53,076 | 5,43,800 | 14,96,876 |
| *1984-85* | .. | 9,90,351 | 5,80,155 | 15,70,506 |
| *1985-86* | .. | 10,26,374 | 6,27,844 | 16,54,218 |
| *1986-87* | .. | 10,91,879 | 6,79,543 | 17,71,422 |
| *1987-88* | .. | 11,43,756 | 7,09,233 | 18,52,989 |
| *1988-89* | .. | 12,16,559 | 7,78,363 | 19,94,922 |
| *1989-90* | .. | 12,60,751 | 8,20,252 | 20,81,003 |
| *1990-91* | .. | 13,09,038 | 8,63,771 | 21,72,809 |
| *1991-92* | .. | 13,45,144 | 8,98,844 | 22,43,988 |
| *1992-93* | .. | 13,83,157 | 9,30,168 | 23,13,325 |
| *1993-94* | .. | 14,03,508 | 9,55,138 | 23,58,640 |
| *1994-95* | .. | 14,73,771 | 10,22,136 | 24,95,907 |

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

## மேல்நிலைப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை-தொடர்ச்சி (1980-81 – 1994-95)

| ஆண்டு | மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளிகள். | | | ஆங்கிலோ-இந்தியன் மேல்நிலைப் பள்ளிகள். | | |
|---|---|---|---|---|---|---|
| | மாணவர் (17) | மாணவியர் (18) | மொத்தம் (19) | மாணவர் (20) | மாணவியர் (21) | மொத்தம் (22) |
| 1980-81 | 11,250 | 16,292 | 27,542 | 15,299 | 10,469 | 25,768 |
| 1981-82 | 12,281 | 18,938 | 31,219 | 15,398 | 10,902 | 26,500 |
| 1982-83 | 15,202 | 21,537 | 36,739 | 16,929 | 11,335 | 28,264 |
| 1983-84 | 20,054 | 30,302 | 50,356 | 18,122 | 12,096 | 30,218 |
| 1984-85 | 30,119 | 38,398 | 68,517 | 18,160 | 14,270 | 32,380 |
| 1985-86 | 39,689 | 13,817 | 83,506 | 20,024 | 14,970 | 34,994 |
| 1986-87 | 42,433 | 48,374 | 90,807 | 20,195 | 16,252 | 36,447 |
| 1987-88 | 56,411 | 48,460 | 104,871 | 20,359 | 16,407 | 36,766 |
| 1988-89 | 58,085 | 49,068 | 107,153 | 20,498 | 16,462 | 36,960 |
| 1989-90 | 63,706 | 53,548 | 117,254 | 20,505 | 16,592 | 37,097 |
| 1990-91 | 71,575 | 60,311 | 131,886 | 20,809 | 16,710 | 37,519 |
| 1991-92 | 79,667 | 65,744 | 145,411 | 21,523 | 17,111 | 38,634 |
| 1992-93 | 94,759 | 74,860 | 169,619 | 23,507 | 19,922 | 43,429 |
| 1993-94 | 1,27,317 | 1,03,369 | 2,30,686 | 23,556 | 19,983 | 43,539 |
| 1994-95 | 1,38,252 | 1,09,225 | 2,47,277 | 23,982 | 19,867 | 43,849 |

## XIV. மேல்நிலைப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை-தொடர்ச்சி (1980-81 - 1994-95)

| ஆண்டு | மைய அரசு மேல்நிலைப் பள்ளிகள். | | | பெருமொத்தம். | | |
|---|---|---|---|---|---|---|
| | மாணவர் (23) | மாணவியர் (24) | மொத்தம் (25) | மாணவர் (26) | மாணவியர் (27) | மொத்தம் (28) |
| 1980-81 | 43,571 | 21,702 | 65,273 | 9,26,230 | 5,31,087 | 14,57,317 |
| 1981-82 | 43,374 | 22,143 | 65,517 | 9,86,229 | 5,81,458 | 15,67,687 |
| 1982-83 | 43,572 | 22,098 | 65,670 | 10,18,960 | 5,87,230 | 16,06,190 |
| 1983-84 | 43,692 | 22,378 | 66,070 | 10,34,944 | 6,08,576 | 16,43,520 |
| 1984-85 | 48,028 | 25,586 | 73,614 | 10,86,608 | 6,58,409 | 17,45,017 |
| 1985-86 | 49,500 | 27,441 | 76,641 | 11,35,587 | 7,13,772 | 18,49,359 |
| 1986-87 | 51,291 | 34,809 | 86,100 | 12,16,959 | 7,73,823 | 19,90,782 |
| 1987-88 | 53,644 | 38,614 | 92,258 | 12,74,170 | 8,12,714 | 20,86,884 |
| 1988-89 | 52,291 | 35,606 | 87,897 | 13,47,433 | 8,79,499 | 22,26,932 |
| 1989-90 | 57492 | 36,423 | 93,915 | 14,02,454 | 9,26,815 | 23,29,269 |
| 1990-91 | 57,981 | 36,815 | 94,796 | 14,59,403 | 9,77,607 | 24,37,010 |
| 1991-92 | 53,569 | 34,662 | 88,231 | 14,99,903 | 10,16,361 | 25,16,264 |
| 1992-93 | 54,946 | 36,182 | 91,128 | 15,56,369 | 10,61,132 | 26,17,501 |
| 1993-94 | 58,138 | 38,540 | 96,678 | 16,12,519 | 11,17,030 | 27,29,549 |
| 1994-95 | 58,922 | 38,846 | 97,768 | 16,94,927 | 11,90,474 | 28,85,401 |

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

# XV. தமிழ்நாடு மேல்நிலை, உயர்நிலைப் பள்ளி மாணவர்களின் தேர்வுகளின் அறிக்கை (1993-94)

| வ.எண். | மாவட்டம். | உயர்நிலைப்பள்ளி தேர்வு முடிவுகள். (சதவீதத்தில்.) | | | மேல்நிலைப்பள்ளி தேர்வு முடிவுகள். (சதவீதத்தில்.) | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மாணவர் | மாணவியர் | மொத்தம் | மாணவர் | மாணவியர் | மொத்தம் |
| 1. | சென்னை | 61.50 | 75.27 | 68.21 | 72.25 | 78.18 | 75.41 |
| 2. | செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம் | 50.11 | 63.16 | 55.69 | 60.14 | 66.33 | 62.94 |
| 3. | தென் ஆற்காடு | 42.11 | 49.77 | 45.09 | 54.59 | 61.08 | 57.24 |
| 4. | தஞ்சாவூர் | 53.90 | 66.33 | 59.63 | 53.03 | 64.65 | 58.55 |
| 5. | நாகை-காயிதே மில்லத் | 56.34 | 64.95 | 60.19 | 45.53 | 61.09 | 52.48 |
| 6. | மதுரை | 74.37 | 82.20 | 77.89 | 74.92 | 79.64 | 77.14 |
| 7. | திண்டுக்கல் | 74.07 | 79.78 | 76.62 | 72.00 | 78.78 | 75.28 |
| 8. | இராமநாதபுரம் | 61.17 | 65.68 | 62.98 | 67.87 | 73.28 | 69.98 |
| 9. | காமராஜர் | 82.31 | 88.16 | 84.79 | 79.94 | 86.87 | 83.06 |
| 10. | பசும்பொன் முத்துராமலிங்க தேவர் | 67.67 | 74.27 | 70.61 | 64.72 | 73.86 | 69.34 |
| 11. | திருநெல்வேலி கட்டபொம்மன் | 77.12 | 84.77 | 80.39 | 79.23 | 83.38 | 81.21 |
| 12. | சிதம்பரனார் | 78.22 | 86.12 | 81.95 | 80.50 | 85.57 | 83.17 |
| 13. | கன்னியாகுமரி | 74.38 | 78.96 | 76.77 | 60.59 | 64.96 | 63.08 |
| 14. | வடஆற்காடு அம்பேத்கார் | 51.21 | 58.79 | 54.43 | 50.20 | 59.24 | 54.17 |
| 15. | திருவண்ணாமலை சம்புவராயர் | 49.73 | 55.29 | 51.91 | 48.52 | 51.49 | 49.62 |
| 16. | சேலம் | 67.75 | 74.81 | 70.72 | 51.85 | 63.92 | 57.10 |
| 17. | தர்மபுரி | 50.66 | 55.32 | 52.60 | 45.71 | 53.68 | 48.77 |
| 18. | திருச்சி | 71.63 | 79.11 | 74.90 | 67.07 | 77.08 | 71.60 |
| 19. | புதுக்கோட்டை | 53.97 | 52.14 | 53.17 | 61.66 | 62.86 | 62.17 |
| 20. | கோயம்புத்தூர் | 78.77 | 83.62 | 81.18 | 74.80 | 76.40 | 75.70 |
| 21. | பெரியார் | 75.50 | 82.92 | 78.92 | 62.25 | 73.52 | 67.69 |
| 22. | நீலகிரி | 65.91 | 72.65 | 69.20 | 64.04 | 69.37 | 66.57 |
| | **மொத்தம்** | **62.48** | **71.32** | **66.38** | **62.55** | **70.85** | **66.44** |

## XVI. பெண்களின் கல்வி நிலை - புள்ளிவிவரம்.

### (i) பெண்களின் எழுத்தறிவு நிலை 1901 முதல் 1991 வரை

| ஆண்டு | பெண்கள் | மொத்தம் |
|---|---|---|
| 1901 | 1.02 | 7.64 |
| 1911 | 1.53 | 9.18 |
| 1921 | 2.43 | 10.38 |
| 1931 | 2.94 | 11.34 |
| 1941 | 6.88 | 16.19 |
| 1951 | 10.06 | 20.82 |
| 1961 | 18.17 | 31.41 |
| 1971 | 28.86 | 39.46 |
| 1981 | 34.19 | 46.76 |
| 1991 | 52.29 | 63.72 |

### (ii) பெண்களின் சேர்க்கை 1982-83 முதல் 1994-95 வரை

### (I - XII வகுப்புகள் அனைத்துப் பள்ளிகளும்)

| ஆண்டு | மாணவிகள் | மொத்தம் | % |
|---|---|---|---|
| 1982-83 | 41,88,500 | 97,17,352 | 43.10 |
| 1983-84 | 44,16,981 | 1,01,64,076 | 43.46 |
| 1984-85 | 45,99,525 | 1,05,46,019 | 43.61 |
| 1985-86 | 47,87,287 | 1,09,24,927 | 43.82 |
| 1986-87 | 49,47,126 | 1,12,75,998 | 43.87 |
| 1987-88 | 51,40,347 | 1,16,66,494 | 44.06 |
| 1988-89 | 52,79,573 | 1,19,63,482 | 44.13 |
| 1989-90 | 54,24,771 | 1,22,68,168 | 44.21 |
| 1990-91 | 55,73,833 | 1,25,58,707 | 44.38 |
| 1991-92 | 57,22,426 | 1,28,50,511 | 44.53 |
| 1992-93 | 58,73,234 | 1,31,44,999 | 44.68 |
| 1993-94 | 61,06,581 | 1,34,43,297 | 45.42 |
| 1994-95 | 61,79,499 | 1,37,38,759 | 44.98 |

**(iii) அனைத்துப் பள்ளிகளிலும் பணிபுரியும் பெண் ஆசிரியைகள் எண்ணிக்கை (1982-83 முதல் 1994-95)**

| ஆண்டு | ஆசிரியைகள் | மொத்தம் | % |
|---|---|---|---|
| 1982-83 | 1,11,489 | 2,76,370 | 40.3 |
| 1983-84 | 1,14,654 | 2,81,022 | 40.8 |
| 1984-85 | 1,16,166 | 2,84,414 | 40.8 |
| 1985-86 | 1,17,882 | 2,87,869 | 40.9 |
| 1986-87 | 1,19,598 | 2,90,728 | 41.14 |
| 1987-88 | 1,21,347 | 2,93,155 | 41.39 |
| 1988-89 | 1,21,823 | 2,94,339 | 41.39 |
| 1989-90 | 1,24,493 | 2,97,918 | 41.80 |
| 1990-91 | 1,27,841 | 3,00,857 | 42.50 |
| 1991-92 | 1,29,376 | 3,02,943 | 42.71 |
| 1992-93 | 1,29,926 | 3,04,204 | 42.71 |
| 1993-94 | 1,26,106 | 2,95,413 | 42.69 |
| 1994-95 | 1,27,352 | 2,95,710 | 43.06 |

**(iv) பள்ளியை விட்டு நின்றுவிடும் மாணவிகளின் எண்ணிக்கை (சதவீதத்தில்.) (1982-83 முதல் 1994-95)**

| ஆண்டு | I-V | I-VIII | I-X | I-XII |
|---|---|---|---|---|
| 1982-83 | 31.75 | 68.98 | 83.04 | 91.36 |
| 1983-84 | 29.76 | 66.66 | .. | 91.23 |
| 1984-85 | 25.28 | 64.51 | 80.87 | 90.70 |
| 1985-86 | 25.20 | 62.23 | 79.71 | 90.00 |
| 1986-87 | 25.06 | 57.82 | 78.59 | 89.64 |
| 1987-88 | 24.46 | 53.14 | 77.32 | 85.84 |
| 1988-89 | 24.01 | 51.35 | 76.45 | 88.58 |
| 1989-90 | 23.64 | 50.65 | 73.85 | 87.98 |
| 1990-91 | 22.68 | 49.43 | 72.63 | 86.60 |
| 1991-92 | 21.16 | 46.50 | 71.93 | 86.07 |
| 1992-93 | 19.62 | 43.54 | 71.02 | 85.39 |
| 1993-94 | 18.35 | 41.20 | 69.85 | 84.28 |
| 1994-95 | 17.65 | 39.36 | 69.15 | 84.19 |

(v) கல்லூரியில் பயிலும் மாணவியர் எண்ணிக்கை (அரசு மற்றும் அரசு உதவி பெறுபவை)

| வ.எண். | ஆண்டு | சேர்க்கை மொத்தம் | மாணவியர் | சேர்க்கை சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | 1980-81 | 2,03,710 | 64,183 | 31.5 |
| 2. | 1981-82 | 2,14,773 | 69,264 | 32.2 |
| 3. | 1982-83 | 2,30,082 | 75,988 | 33.0 |
| 4. | 1983-84 | 2,34,753 | 80,575 | 34.3 |
| 5. | 1984-85 | 2,17,404 | 83,445 | 38.4 |
| 6. | 1985-86 | 1,97,990 | 77,545 | 39.16 |
| 7. | 1986-87 | 2,00,007 | 78,320 | 39.15 |
| 8. | 1987-88 | 1,99,881 | 79,397 | 39.72 |
| 9. | 1988-89 | 2,01,746 | 80,216 | 39.76 |
| 10. | 1989-90 | 2,08,792 | 81,300 | 38.93 |
| 11. | 1990-91 | 2,07,042 | 83,298 | 40.23 |
| 12. | 1991-92 | 2,19,032 | 91,913 | 41.96 |
| 13. | 1992-93 | 2,59,683 | 1,13,905 | 43.86 |
| 14. | 1993-94 | 2,80,658 | 1,20,362 | 42.88 |
| 15. | 1994-95 | 3,04,201 | 1,38,417 | 45.50 |

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

**(vi) பொறியியல் கல்லூரிகள் மற்றும் பாலிடெக்னிக்குகள் மாணவியர் சேர்க்கை 1981-82 முதல் 1994-95 வரை**

| வ.எண். | ஆண்டு | பொறியியல் கல்லூரிகள் | பாலிடெக்னிக்குகள் |
|---|---|---|---|
| 1. | 1981-82 | 176 | 900 |
| 2. | 1982-83 | 222 | 975 |
| 3. | 1983-84 | 318 | 1,000 |
| 4. | 1984-85 | 647 | 1,225 |
| 5. | 1985-86 | 889 | 1,520 |
| 6. | 1986-87 | 1,004 | 1,620 |
| 7. | 1987-88 | 1,123 | 1,700 |
| 8. | 1988-89 | 1,456 | 1,730 |
| 9. | 1989-90 | 1,574 | 1,900 |
| 10. | 1990-91 | 1,702 | 2,000 |
| 11. | 1991-92 | 1,836 | 2,300 |
| 12. | 1992-93 | 1,957 | 2,700 |
| 13. | 1993-94 | 2,065 | 2,950 |
| 14. | 1994-95 | 2,647 | 3,293 |

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

# XVII. மாவட்ட தொடக்கக் கல்வித் திட்டம்.

## நான்கு மாவட்டங்களுக்கான திட்ட மதிப்பீடு விவரம்.

| வ. எண். | திட்ட விவரம் | திருவண்ணாமலை சம்புவராயர் | தென்னாற்காடு வள்ளலார் & விழுப்புரம் ராமசாமி படையாட்சியார் (ரூபாய் இலட்சத்தில்.) | தர்மபுரி | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1. | அணுகுமுறை மேம்பாடு | 2612.640 | 2112.47 | 2487.100 | 7212.21 |
| 2. | தக்கவைத்தல் கற்போர் சாதனை | 1136.310 | 1663.98 | 1301.810 | 4102.10 |
| 3. | திறன் வளர்ப்பு | 197.795 | 223.745 | 164.985 | 586.525 |
| | மொத்தம் | **3946.745** | **4000.195** | **3953.895** | **11900.835** |
| 4. | முதலாண்டு பணித் திட்ட மதிப்பீடு | 156.875 | 180.565 | 164.705 | 502.145 |
| 5. | இரண்டாவது ஆண்டு பணித்திட்ட மதிப்பீடு | 606.375 | 829.690 | 623.308 | 2059.373 |

## மொத்தச் செலவு மதிப்பீடுகள்.

| | | |
|---|---|---|
| 1. | 4 வருவாய் மாவட்டங்களுக்கான மாவட்ட தொடக்கக் கல்வித் திட்டத்தின் மொத்தச் செலவு மதிப்பீடு (விழுப்புரம் ராமசாமி படையாச்சியார் மாவட்டம் உட்பட) | 11900.835 |
| 2. | மாநிலத் திட்ட மொத்தச் செலவு மதிப்பீடுகள் | 679.555 |
| | ஆக மொத்தம் | **12580.390** |

## 1995-96 ஆம் ஆண்டிற்கான பணித்திட்டம்.

| | | |
|---|---|---|
| 4 மாவட்டங்களுக்கு | .. | 2059.373 |
| மாநிலத் திட்டங்கள் | .. | 322.705 |
| மொத்தம் | .. | **2382.078** |



TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

# உயர்கல்வி புள்ளி விவரங்கள்

## I. கல்லூரிகளின் புள்ளி விவரங்கள்

### 1992-93

| விவரம். | அரசு கல்லூரிகள் | உதவிபெறும் கல்லூரிகள் | உதவிபெறாத கல்லூரிகள் | மொத்தம். |
|---|---|---|---|---|
| கல்லூரிகளின் எண்ணிக்கை கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் | 55 | 132 | 46 | 233 |
| இதர கல்லூரிகள் உடற்பயிற்சி | - | 3 | - | 3 |
| கீழ்த்திசை (ஓரியண்டல்) | - | 9 | 6 | 15 |
| சமுதாயப்பணி பள்ளிகள் | - | 2 | - | 2 |
| அரசு கல்வியியல் கல்லூரிகள் | 7 | 14 | - | 21 |
| | **62** | **160** | **52** | **274** |

### 1993-94

| விவரம். | அரசு கல்லூரிகள் | உதவிபெறும் கல்லூரிகள் | உதவிபெறாத கல்லூரிகள் | மொத்தம். |
|---|---|---|---|---|
| கல்லூரிகளின் எண்ணிக்கை கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் | 56 | 132 | 54 | 242 |
| இதர கல்லூரிகள் | | | | |
| உடற்பயிற்சி | - | 3 | 1 | 4 |
| கீழ்த்திசை (ஓரியண்டல்) | - | 9 | 6 | 15 |
| சமுதாயப் பணி பள்ளிகள் | - | 2 | - | 2 |
| அரசு கல்வியியல் கல்லூரிகள் | 7 | 14 | - | 21 |
| | **63** | **160** | **61** | **284** |

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

## 1994-95

| விவரம். | அரசு கல்லூரிகள் | உதவிபெறும் கல்லூரிகள் | உதவிபெறாத கல்லூரிகள் | மொத்தம். |
|---|---|---|---|---|
| கல்லூரிகள் எண்ணிக்கை | | | | |
| கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் | 57 | 132 | 72 | 261 |
| இதர கல்லூரிகள் | | | | |
| உடற்பயிற்சி | - | 3 | 1 | 4 |
| கீழ்த்திசை (ஓரியண்டல்) | - | 9 | 6 | 15 |
| சமுதாயப் பணி பள்ளிகள் | - | 2 | - | 2 |
| அரசு கல்வியியல் கல்லூரிகள் | 7 | 14 | 1 | 22 |
| | **64** | **160** | **80** | **304** |

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

## II. ஆசிரியர்கள்/ஆசிரியர் அல்லாதவர்கள் எண்ணிக்கை

| | விபரம். | 1984-85 | 1992-93 | 1993-94 | 1994-95 |
|---|---|---|---|---|---|
| (அ) | ஆசிரியர்களின் எண்ணிக்கை | | | | |
| | அரசு கல்லூரிகள் | 4,347 | 4,670 | 4,685 | 4,687 |
| | உதவிபெறும் கல்லூரிகள் | 9,540 | 11,246 | 11,261 | 11,265 |
| | உதவிபெறாத தனியார் கல்லூரிகள் மற்றும் சுயநிதி கல்லூரிகள் | - | 1,278 | 1,298 | 1,909 |
| | **மொத்தம்** | **13,887** | **17,194** | **17,244** | **17,861** |
| (ஆ) | ஆசிரியர் அல்லாதோர் எண்ணிக்கை | | | | |
| | அரசு கல்லூரிகள் | - | 2,308 | 2,325 | 2,340 |
| | உதவிபெறும் கல்லூரிகள் | - | 5,262 | 5,277 | 5,294 |
| | உதவிபெறாத தனியார் கல்லூரிகள் மற்றும் சுயநிதி கல்லூரிகள் | - | 450 | 470 | 854 |
| | **மொத்தம்** | - | **8,020** | **8,070** | **8,488** |

## III. மாணவர்களின் எண்ணிக்கை

| | 1984-85 | 1992-93 | 1993-94 | 1994-95 |
|---|---|---|---|---|
| பி.ஏ. | 61,802 | 80,451 | 83,368 | 90,586 |
| பி.எஸ்ஸி. | 82,596 | 1,11,363 | 1,15,431 | 1,26,543 |
| பி.காம். | 32,028 | 39,754 | 50,576 | 50,769 |
| முதுகலைப் பட்டதாரிகள் | 15,858 | 21,360 | 23,015 | 23,108 |
| பிற | - | 6,755 | 8,268 | 13,195 |
| **மொத்தம்** | **1,92,284** | **2,59,683** | **2,80,658** | **3,04,201** |

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

## IV. மாநிலத்திலுள்ள கல்லூரிகளின் எண்ணிக்கை (மாவட்ட வாரியாக) 1994-95

| வ. எண் | மாவட்டங்களின் பெயர். | அரசு | | உதவிபெறுபவை | | சுயநிதி (உதவிபெறாதவை) | | பெருமொத்தம். | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மொத்தம் | மகளிர் | மொத்தம் | மகளிர் | மொத்தம் | மகளிர் | மொத்தம் | மகளிர் |
| 1. | சென்னை | 8 | 4 | 21 | 9 | 7 | 5 | 36 | 18 |
| 2 | செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். | 3 | - | 9 | 2 | 12 | 2 | 24 | 4 |
| 3. | வடாற்காடு அம்பேத்கார் | 4 | 1 | 7 | 2 | 4 | - | 15 | 3 |
| 4. | திருவண்ணாமலை சம்புவராயர் | 2 | - | - | - | 1 | - | 3 | - |
| 5. | சேலம் | 7 | 2 | 6 | 4 | 5 | - | 18 | 6 |
| 6. | தர்மபுரி | 4 | 2 | - | - | 1 | 1 | 5 | 3 |
| 7. | கோயம்புத்தூர் | 5 | 2 | 11 | 3 | 11 | 2 | 27 | 7 |
| 8. | பெரியார் | - | - | 5 | 1 | 9 | 5 | 14 | 6 |
| 9 | நீலகிரி | 1 | - | 2 | 2 | - | - | 3 | 2 |
| 10. | தென் ஆற்காடு | 5 | - | 2 | 1 | 3 | 1 | 10 | 2 |
| 11. | புதுக்கோட்டை | 3 | 1 | 1 | - | 1 | - | 5 | 1 |
| 12. | மதுரை | 2 | 1 | 23 | 5 | 4 | 2 | 29 | 8 |
| 13. | திண்டுக்கல் அண்ணா | 1 | 1 | 4 | 1 | 1 | - | 6 | 2 |
| 14. | இராமநாதபுரம் | 2 | 1 | 1 | - | 1 | 1 | 4 | 2 |
| 15. | பசும்பொன்முத்துராமலிங்கம் | 3 | - | 5 | 1 | 1 | 1 | 9 | 2 |
| 16. | காமராஜர் | - | - | 8 | 2 | 2 | 2 | 10 | 4 |
| 17. | நெல்லை கட்டபொம்மன் | 1 | 1 | 13 | 3 | 2 | 1 | 16 | 5 |
| 18. | வ.உ. சிதம்பரனார் | - | - | 11 | 3 | 3 | 1 | 14 | 4 |
| 19. | கன்னியாகுமரி | - | - | 13 | 4 | 3 | - | 16 | 4 |
| 20. | திருச்சிராப்பள்ளி | 5 | - | 8 | 2 | 6 | 3 | 19 | 5 |
| 21. | தஞ்சாவூர் | 5 | 2 | 6 | - | 2 | - | 13 | 2 |
| 22. | நாகை காயிதேமில்லத் | 3 | 1 | 4 | 1 | 1 | 1 | 8 | 3 |
| | **மொத்தம்** | **64** | **19** | **160** | **46** | **80** | **28** | **304** | **93** |

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1995 ஏப்ரல் 27

### V. விவர சுருக்கம் 1994-95 (இன வாரியாக)

| விவரம். | அரசு கல்லூரிகள் | உதவிபெறுபவை | உதவி பெறாதவை | மொத்தம் |
|---|---|---|---|---|
| கல்லூரிகளின் எண்ணிக்கை கலைமற்றும் அறிவியல் கல்லூரிகள் | 57 | 132 | 72 | 261 |
| இதர கல்லூரிகள் ஆசிரியர் கல்வியியல் கல்லூரிகள் | 7 | 14 | 1 | 22 |
| உடற்பயிற்சி | - | 3 | 1 | 4 |
| கீழ்த்திசை | - | 9 | 6 | 15 |
| சமுதாய பணிப் பள்ளிகள் | - | 2 | - | 2 |
| மொத்தம் | **64** | **160** | **80** | **304** |

### VI. பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்ட கல்லூரிகளின் விவரம்.

| வ.எண். | பல்கலைக்கழகத்தின் பெயர். | கல்லூரிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | சென்னைப் பல்கலைக்கழகம் | 111 |
| 2. | மதுரை காமராசர் பல்கலைக்கழகம் | 58 |
| 3. | பாரதியார் பல்கலைக்கழகம் | 44 |
| 4. | பாரதிதாசன் பல்கலைக்கழகம் | 45 |
| 5. | மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக் கழகம் | 46 |
| | மொத்தம் | **304** |

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

## VII. பொறியியல் கல்லூரிகள் 1994-95.

### கல்லூரிகளின் எண்ணிக்கை (மாவட்ட வாரியாக)

| வ.எண். | மாவட்டம். | அரசு | அரசு உதவி | சுயநிதி | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1. | சென்னை | - | - | - | - |
| 2. | செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். | - | - | 12 | 12 |
| 3. | தென் ஆற்காடு-வள்ளலார் | - | - | - | - |
| 4. | விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார் | - | - | 1 | 1 |
| 5. | வட ஆற்காடு-அம்பேத்கார் | 1 | - | 1 | 2 |
| 6. | திருவண்ணாமலை சம்புவராயர் | - | - | 2 | 2 |
| 7. | தர்மபுரி | 1 | - | 2 | 3 |
| 8. | சேலம் | 1 | - | 2 | 3 |
| 9. | பெரியார் | - | - | 2 | 2 |
| 10. | கோயம்புத்தூர் | 1 | 2 | 7 | 10 |
| 11. | நீலகிரி | - | - | - | - |
| 12. | திருச்சிராப்பள்ளி | 1 | - | 3 | 4 |
| 13. | தஞ்சாவூர் | - | - | 2 | 2 |
| 14. | நாகப்பட்டினம் காயிதேமில்லத் | - | - | - | - |
| 15. | புதுக்கோட்டை | - | - | 1 | 1 |
| 16. | திண்டுக்கல்-அண்ணா | - | - | 2 | 2 |
| 17. | மதுரை | - | 1 | - | 1 |
| 18. | பசும்பொன்-முத்துராமலிங்கம் | 1 | - | 1 | 2 |
| 19. | இராமநாதபுரம் | - | - | 1 | 1 |
| 20. | காமராஜர் | - | - | 2 | 2 |
| 21. | திருநெல்வேலி-கட்டபொம்மன் | 1 | - | 1 | 2 |
| 22. | வ.உ. சிதம்பரனார் | - | - | 1 | 1 |
| 23. | கன்னியாகுமரி | - | - | 1 | 1 |
| | **மொத்தம்** | **7** | **3** | **44** | **54** |

**VIII. பொறியியற் கல்லூரிகள் (மாவட்ட வாரியாக மாணவர்கள் எண்ணிக்கை) 1994-95.**

| வ. எண். | மாவட்டம். | கல்லூரிகளின் எண்ணிக்கை | மாணவர்கள் எண்ணிக்கை பட்டப் படிப்பு | பட்ட மேற் படிப்பு | மொத்தம். |
|---|---|---|---|---|---|
| 1. | செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர்.- சுயநிதிக் கல்லூரிகள் | 12 | 12,720 | - | 12,720 |
| 2. | விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் சுயநிதித் கல்லூரிகள் | 1 | 140 | - | 140 |
| 3. | வடஆற்காடு அம்பேத்கார் அரசினர் கல்லூரிகள் | 1 | 720 | - | 720 |
| | சுயநிதிக் கல்லூரிகள் | 1 | 1,280 | - | 1,280 |
| 4. | திருவண்ணாமலை- சம்புவராயர் சுயநிதிக்கல்லூரிகள். | 2 | 1,480 | - | 1,480 |
| 5. | தர்மபுரி அரசினர் கல்லூரிகள் | 1 | 180 | - | 180 |
| | சுயநிதிக் கல்லூரிகள் | 2 | 2,320 | - | 2,320 |
| 6. | சேலம் அரசினர் கல்லூரிகள் | 1 | 960 | 40 | 1,000 |
| | சுயநிதிக்கல்லூரிகள் | 2 | 960 | - | 960 |
| 7. | பெரியார் சுயநிதிக் கல்லூரிகள் | 2 | 2,240 | - | 2,240 |
| 8. | கோயம்புத்தூர் அரசினர் கல்லூரிகள் | 1 | 1,280 | 100 | 1,380 |
| | அரசு மானியம் பெறுபவை | 2 | 2,112 | 360 | 2,472 |
| | சுயநிதிக்கல்லூரிகள் | 7 | 4,440 | - | 4,440 |

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

| வ. எண். | மாவட்டம். | கல்லூரிகளின் எண்ணிக்கை | மாணவர்கள் எண்ணிக்கை பட்டப் படிப்பு | பட்ட மேற் படிப்பு | மொத்தம். |
|---|---|---|---|---|---|
| 9. | திருச்சிராப்பள்ளி அரசினர் கல்லூரிகள் (ஆர்இசி) | 1 | 860 | - | 860 |
| | சுயநிதிக் கல்லூரிகள் | 3 | 1,040 | - | 1,040 |
| 10. | தஞ்சாவூர் சுயநிதிக் கல்லூரிகள் | 2 | 2,240 | - | 2,240 |
| 11. | புதுக்கோட்டை சுயநிதிக் கல்லூரிகள் | 1 | 720 | - | 720 |
| 12. | திண்டுக்கல்-அண்ணா சுயநிதிகல்லூரி | 2 | 1440 | - | 1,440 |
| 13. | மதுரை அரசு மானியம் பெறுபவை | 1 | 1,056 | 60 | 1,116 |
| 14. | பசும்பொன் முத்துராமலிங்கம் அரசினர் கல்லூரி | 1 | 800 | 20 | 820 |
| | சுயநிதிக் கல்லூரி | 1 | 140 | - | 140 |
| 15. | இராமநாதபுரம் சுயநிதிக் கல்லூரி | 1 | 1,000 | - | 1,000 |
| 16. | காமராசர் சுயநிதிக் கல்லூரி | 2 | 2,280 | .. | 2,280 |
| 17. | திருநெல்வேலி-கட்டபொம்மன் அரசினர் கல்லூரி | 1 | 800 | - | 800 |
| | சுயநிதிக் கல்லூரி | 1 | 1080 | - | 1,080 |
| 18. | சிதம்பரனார் சுயநிதிக் கல்லூரி | 1 | 1,040 | - | 1,040 |
| 19. | கன்னியாகுமரி சுயநிதிக் கல்லூரி | 1 | 720 | - | 720 |
| | **மொத்தம்** | **54** | **46,048** | **580** | **46,628.** |

## IX. பாலிடெக்னிக்குகளின் எண்ணிக்கை மாவட்ட வாரியாக.

| வ.எண். | மாவட்டம். | அரசு | அரசு உதவி | சுயநிதி | மொத்தம். |
|---|---|---|---|---|---|
| 1. | சென்னை | 7 | 2 | 1 | 10 |
| 2. | செங்கற்பட்டு எம்.ஜி.ஆர். | - | 3 | 15 | 18 |
| 3. | தென்னாற்காடு வள்ளலார் | - | 1 | 1 | 2 |
| 4. | விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார் | - | - | 1 | 1 |
| 5. | வடஆற்காடு-அம்பேத்கார் | 1 | 1 | 2 | 4 |
| 6. | திருவண்ணாமலை-சம்புவராயர் | - | - | 1 | 1 |
| 7. | தர்மபுரி | 1 | - | 2 | 3 |
| 8. | சேலம். | - | 2 | 7 | 9 |
| 9. | பெரியார் | - | 2 | 6 | 8 |
| 10. | கோயம்புத்தூர் | 2 | 6 | 6 | 14 |
| 11. | நீலகிரி | 1 | 1 | - | 2 |
| 12. | திருச்சிராப்பள்ளி | 1 | 2 | 4 | 7 |
| 13 | தஞ்சாவூர் | - | 2 | 2 | 4 |
| 14 | நாகப்பட்டினம்-காயிதேமில்லத் | 1 | 2 | 1 | 4 |
| 15 | புதுக்கோட்டை | 1 | - | 2 | 3 |
| 16 | திண்டுக்கல்-அண்ணா | - | 2 | 2 | 4 |
| 17 | மதுரை | 2 | 1 | 5 | 8 |
| 18 | பசும்பொன் முத்துராமலிங்கம் | 1 | 1 | 2 | 4 |
| 19 | இராமநாதபுரம் | - | 1 | - | 1 |
| 20 | காமராஜர் | - | 4 | 4 | 8 |
| 21 | திருநெல்வேலி-கட்டபொம்மன் | - | 1 | 6 | 7 |
| 22 | வ.உ. சிதம்பரனார் | 2 | - | 2 | 4 |
| 23 | கன்னியாகுமரி | 1 | 1 | 4 | 6 |
| | **மொத்தம்** | **21** | **35** | **76** | **132** |

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

## X. பாலிடெக்னிக்குகள் மாவட்ட வாரியாக மாணவர்களின் எண்ணிக்கை 1994-95

| வ.எண். | மாவட்டம். | பயிலகங்களின் எண்ணிக்கை | மாணவர் எண்ணிக்கை பட்டப் படிப்பு | முதுநிலை பட்டப் படிப்பு | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1. | சென்னை | | | | |
| | அரசு | 7 | 2,985 | 70 | 3,055 |
| | அரசு மான்யம் பெறுபவை | 2 | 660 | 60 | 720 |
| | சுயநிதி | 1 | 540 | - | 540 |
| 2. | செங்கற்பட்டு எம்.ஜி.ஆர் | | | | |
| | அரசு மான்யம் பெறுபவை | 3 | 1,470 | 50 | 1,520 |
| | சுயநிதி | 15 | 7,460 | - | 7,460 |
| 3. | தென்னாற்காடு-வள்ளலார் | | | | |
| | அரசு மான்யம் பெறுபவை | 1 | 900 | - | 900 |
| | சுயநிதி | 1 | 540 | - | 540 |
| 4. | விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார் | | | | |
| | சுயநிதி | 1 | 720 | - | 720 |
| 5. | வடஆற்காடு-அம்பேத்கார் | | | | |
| | அரசு | 1 | 540 | - | 540 |
| | அரசு மான்யம் பெறுபவை | 1 | 540 | - | 540 |
| | சுயநிதி | 2 | 1,080 | - | 1,080 |
| 6. | திருவண்ணாமலை-சம்புவராயர் | | | | |
| | சுயநிதி | 1 | 630 | - | 630 |
| 7. | தர்மபுரி | | | | |
| | அரசு | 1 | 540 | - | 540 |
| | சுயநிதி | 2 | 760 | - | 760 |
| 8. | சேலம் | | | | |
| | அரசு மான்யம் பெறுபவை | 2 | 1,380 | 60 | 1,440 |
| | சுயநிதி | 7 | 3900 | - | 3,900 |

| வ.எண். | மாவட்டம். | பயிலகங்களின் எண்ணிக்கை | மாணவர் பட்டப் படிப்பு | எண்ணிக்கை முதுநிலை பட்டப் படிப்பு | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 9. | பெரியார் | | | | |
| | அரசு மான்யம் பெறுபவை | 2 | 990 | - | 990 |
| | சுயநிதி | 6 | 3,300 | - | 3,300 |
| 10. | கோயம்புத்தூர் | | | | |
| | அரசு | 2 | 1,020 | 50 | 1,070 |
| | அரசு மான்யம் பெறுபவை | 6 | 2,820 | 80 | 2,900 |
| | சுயநிதி | 6 | 3,240 | - | 3,240 |
| 11 | நீலகிரி | | | | |
| | அரசு | 1 | 450 | - | 450 |
| | அரசு மான்யம் பெறுபவை | 1 | 360 | - | 360 |
| 12. | திருச்சிராப்பள்ளி | | | | |
| | அரசு | 1 | 540 | - | 540 |
| | அரசு மான்யம் பெறுபவை | 2 | 1,050 | 24 | 1,074 |
| | சுயநிதி | 4 | 2,340 | - | 2,340 |
| 13. | தஞ்சாவூர் | | | | |
| | அரசு மான்யம் பெறுபவை | 2 | 825 | - | 825 |
| | சுயநிதி | 2 | 1,080 | - | 1,080 |
| 14. | நாகப்பட்டினம்-காயிதேமில்லத் | | | | |
| | அரசு | 1 | 540 | - | 540 |
| | அரசு மான்யம் பெறுபவை | 2 | 1,080 | - | 1,080 |
| | சுயநிதி | 1 | 720 | - | 720 |
| 15. | புதுக்கோட்டை | | | | |
| | அரசு | 1 | 480 | - | 480 |
| | சுயநிதி | 2 | ,1080 | - | 1,080 |
| 16. | திண்டுக்கல்-அண்ணா | | | | |
| | அரசு மான்யம் பெறுபவை | 2 | 780 | - | 780 |
| | சுயநிதி | 2 | 1,260 | - | 1,260 |
| 17. | மதுரை | | | | |
| | அரசு | 2 | 960 | - | 960 |
| | அரசு மான்யம் பெறுபவை | 1 | 165 | - | 165 |
| | சுயநிதி | 5 | 2,700 | - | 2,700 |

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

| வ.எண். | மாவட்டம். | பயிலகங்களின் எண்ணிக்கை | மாணவர் எண்ணிக்கை பட்டப் படிப்பு | முதுநிலை பட்டப் படிப்பு | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 18. | பசும்பொன் முத்துராமலிங்கம் | | | | |
| | அரசு | 1 | 540 | - | 540 |
| | அரசு மான்யம் பெறுபவை | 1 | 900 | - | 900 |
| | சுயநிதி | 2 | 1,260 | - | 1,260 |
| 19. | இராமநாதபுரம் | | | | |
| | அரசு மான்யம் பெறுபவை | 1 | 540 | - | 540 |
| 20 | காமராஜர் | | | | |
| | அரசு மான்யம் பெறுபவை | 4 | 2,325 | - | 2,325 |
| | சுயநிதி | 4 | 2,160 | - | 2,160 |
| 21. | திருநெல்வேலி கட்டபொம்மன் | | | | |
| | அரசு மான்யம் பெறுபவை | 1 | 540 | - | 540 |
| | சுயநிதி | 6 | 2,880 | - | 2,880 |
| 22. | சிதம்பரனார் | | | | |
| | அரசு | 2 | 1,080 | - | 1,080 |
| | சுயநிதி | 2. | 1,080 | - | 1080 |
| 23. | கன்னியாகுமரி | | | | |
| | அரசு | 1 | 600 | - | 600 |
| | அரசு மான்யம் பெறுபவை | 1 | 540 | - | 540 |
| | சுயநிதி | 4 | 2,340 | - | 2,340 |
| | **மொத்தம்** | **132** | **69,210** | **394** | **69,604** |

# இணைப்பு-II

*(238 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத் துறை

மக்களினத்தைப் பிற உயிரினங்கிளிலிருந்து வேறுபடுத்திக் காட்டுவனவற்றுள் மொழி தலையாய இடம்பெறும். மக்களால் மக்களுக்காகவே உருவாக்கப்பட்ட கலை வடிவே மொழியாகும். மொழியால் எண்ணம் வெளிப்படுகிறது. எண்ணமும், வெளியிடும் மொழியும் ஒன்றைவிட்டு ஒன்றைப் பிரிக்கலாகா உறவுடையன. எனவே தாய்மொழி வழியாகவே மாநில மக்களின் பன்முக வாழ்க்கையும், பண்பாடும் நிலைத்து வருகின்றன. தாய்மொழியின் உயர்வு தாழ்வுக்கேற்பவே மக்கள் வாழ்க்கை நிலைகள் உருவாகின்றன. இவ்வகையில், அரசுப் பணிகளிலும், சமுதாயக் கடமைகளிலும் 'எங்கும் தமிழ், எதிலும் தமிழ், என்றும் தமிழ்' என்னும் கோட்பாட்டை நமது அரசு வலியுறுத்துகிறது.

2. அரசு, ஆட்சி, அறிவியல், தொழில் நுணுக்கம், வணிகம், போக்குவரவு, புதிய படைப்புகள், அன்றாட நாகரிக வளர்ச்சி முதலிய பல்வேறு பொருண்மைகளின் தொடர்ந்த வளர்ச்சியால் அவ்வத் துறைகளில் பயன்படும் அளவுக்குப் புதிய சொற்களுடனும், பொலிவார்ந்த வெளிப்பாடுகளுடனும் பல்கிய சொற்றொகுதிகளால் தம்மைப் புதுப்பித்துக் கொள்ளும் சூழல், அந்தந்த மாநில மொழிகளுக்கு இன்றியமையாத் தேவையாக அன்றாடம் அமைந்துள்ளது. எனவே, மொழி வளர்ச்சியும் கலை வளர்ச்சியும் நாட்டின் பிற வளர்ச்சிகளுக்கு அடிப்படையாகின்றன.

3. அனைத்து நிலைகளிலும் தமிழை ஆட்சி மொழியாக்கும் சீரிய நோக்கத்தோடு மொழிப் பயன்பாட்டில் முழு நிறைவெய்த தமிழ் மொழி வழக்கை விரிவான முறையில் ஆட்சியிலும், ஆவணங்களிலும் அன்றாட நடைமுறையிலும் செயற்படுத்துதல், கலை இலக்கிய மரபுச் செல்வங்களைக் காத்தல், பரப்புதல், பேணி வளர்த்தல் ஆகிய நோக்கங்களுடன் மொழி, கலை, பண்பாடு அளாவிய துறைகளும், பிரிவுகளும் ஓர் அமைப்பாகத் தலைமைச் செயலகத்தில் 1984-ஆம் ஆண்டில் பிற மாநிலங்களுக்கு வழிகாட்டியாகத் தமிழ் வளர்ச்சி-

பண்பாட்டுத் துறை எனத் தோற்றுவிக்கப்பட்டது. இப்பெருமை முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களைச் சாரும். இத்துறையின் பொறுப்பில் அமைந்த அமைப்புகளும், நிறுவனங்களும், தமிழ் நலம் பேணல், தொன் மரபு காத்தல், வளர்கலை ஊக்குவித்தல் என முத்திறப்பட்டுச் செயலாற்றுகின்றன.

**தமிழ் நலம் பேணுவன :**

(அ) தமிழ் வளர்ச்சி இயக்ககம்

(ஆ) மொழிபெயர்ப்புத் துறை

(இ) செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

(ஈ) உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

(உ) தமிழ் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

**தொன்மரபு காப்பன :**

(ஊ) தொல்பொருள் ஆய்வு இயக்ககம்

(எ) அரசு கீழ்த்திசை ஓலைச்சுவடி நூலகம்

(ஏ) அரசு அருங்காட்சியக ஆணையம்.

**வளர்கலை ஊக்குவன :**

(ஐ) கலை-பண்பாட்டு இயக்ககம்

அரசு இசைக் கல்லூரிகள்

அரசு ஓவிய-கைவினைத் தொழிற் கல்லூரிகள்

அரசு கட்டட-சிற்பக் கல்லூரி

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்

தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு

ஜவகர் சிறுவர் இல்லம்.

**1995-96-ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் தமிழ்-வளர்ச்சிப் பண்பாடு குறித்த செலவு.**

| கணக்குத் தலைப்பு | | திட்டத்தில் சேராதது | திட்டப் பணிகள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) |
| | | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 2059. | பொதுப்பணிகள் : | | | |
| | அலுவலகக்கட்டடங்கள் பராமரித்தலும், பழுது பார்த்தலும். | 10.00 | - | 10.00 |
| 2202 | பொதுக்கல்வி | 121.00 | 20.00 | 141.00 |
| 05 | மொழி வளர்ச்சி | | | |
| 001 | நெறிப்படுத்தலும் நிருவாகமும் | 82.31 | 6.56 | 88.87 |
| 102 | தற்கால இந்திய மொழிகள் இலக்கிய வளர்ச்சி | 19.51 | 27.02 | 46.53 |
| 800 | ஏனைய செலவு | 87.08 | 9.33 | 96.41 |
| 2205 | கலையும்-பண்பாடும் : | - | - | - |
| 001 | நெறிப்படுத்தலும் நிருவாகமும் | — | 8.58 | 8.58 |
| 101 | நுண்கலைக் கல்வி | 167.77 | 35.90 | 203.67 |
| 102 | கலை, பண்பாட்டை வளர்த்தல். | 1.10 | 126.22 | 127.32 |
| 103 | தொல்பொருள் ஆய்வு | 110.97 | 25.96 | 136.93 |
| 105 | பொது நூலகங்கள் (அரசு கீழ்த்திசை ஓலைச் சுவடி நூலகம்) | 15.31 | 10.90 | 26.21 |
| 107 | அருங்காட்சியகங்கள் | 133.10 | 7.37 | 140.47 |
| 800 | ஏனைய செலவு | 0.01 | - | 0.01 |
| | திருப்பி வசூலிக்கப்பட்டவை | 0.73 | 6.30 | 7.03 |
| | மானியக் கோரிக்கை 51 மொத்தம் | **748.89** | **284.14** | **1033.03** |

# (அ) தமிழ் வளர்ச்சி இயக்ககம்

தமிழ் வளர்ச்சி இயக்ககம் 1968-ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப் பெற்றது. அரசு நிருவாகத்திலும், பொது வழக்கிலும் ஆட்சிமொழியாகிய தமிழ்மொழிப் பயன்பாட்டை விரிவாக்கவும், மேம்படுத்தவும் வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வது இத்துறையின் தலையாய பணியாகும். தமிழ், கலை, இலக்கிய வளர்ச்சிக்குரிய பிற பணிகளும் இத்துறையின் பாற்படும்.

**ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கம் :**

2. ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கத்தில் அமைந்த முன்னேற்றம் குறித்துத் தலைமைச் செயலகம், துறைத் தலைமை அலுவலகங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள், தன்னாட்சி நிறுவனத் தலைமை அலுவலகங்கள் ஆகியவற்றைத் தமிழ் வளர்ச்சி இயக்குநரும், மாவட்டங்களிலமைந்த சார்நிலை அலுவலகங்களை மாவட்ட உதவி இயக்குநர்களும், தமிழாய்வு அலுவலர்களும் ஆய்வு செய்கின்றனர்.

3. ஆட்சிமொழித் திட்டத்தைச் செவ்வனே நிறைவேற்றுவதற்கென மூவாண்டு முனைப்புத் திட்டம் தோற்றுவிக்கப் பெற்றது.

4. ஆட்சிமொழித் திட்டத்தை விரைவுப்படுத்துவதற்குத் தமிழ்த் தட்டச்சுப் பொறிகள் வழங்கும் செயற்பாடு முதலிடம் பெறுகிறது. எந்த அலுவலகமும் புதிதாக ஆங்கிலத் தட்டச்சுப் பொறி வாங்குவதற்குத் தமிழ் வளர்ச்சித் துறையின் இசைவினைப் பெற வேண்டுமென அரசு ஆணையிட்டுள்ளது.

**ஆட்சிச் சொல்லகராதிகள் :**

5. ஆட்சிச் சொல்லகராதிக்கு இதுவரை ஆறு பதிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. அரசுத் துறைகளில் பயன்படுத்தப்படும் பொதுவான சொற்கள் இவ்வகராதியில் இடம் பெற்றுள்ளன. அலுவலர்களும், பணியாளர்களும் பயன்கொள்ளும் வகையில் ஆட்சிச் சொல்லகராதியின் கையடக்கப்பதிப்பு வெளியிடப்பெற்றது. பல்வேறு துறைகளுக்கு அவ்வத் துறைகளில் வழங்கப்படும் அலுவலக ஆங்கிலச் சொற்களைத் தொகுத்து அவற்றிற்குரிய தமிழ்ச் சொற்களைத் தரும் முறையில் 72 சிறப்புச் சொல் துணையகராதிகள் வெளியிடப்பெற்றுள்ளன.

**மாதிரி வரைவுகள், குறிப்புகள் கையேடு :**

6. அரசுத் துறை அலுவலகங்களில் நாள்தோறும் எழுதப்படும் முக்கிய குறிப்புகள். வரைவுகளின் மாதிரிகளைக் கொண்ட கையேடு ஒன்று தயாரிக்கப் பெற்று 1995 சனவரித் திங்கள் திருவள்ளுவர் திருநாளில் வெளியிடப்பெற்றது. இக்கையேடு அலுவலக நடைமுறையில் மிகவும் பயன்படத் தக்கதாகும்.

**ஆட்சிமொழிக் கருத்தரங்கு :**

7. ஆட்சிமொழித் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு வகை செய்ய மாவட்டங்களில் ஆட்சிமொழிக் கருத்தரங்கு நடத்தும் திட்டத்தின்கீழ் இந்த ஆண்டு தென்னார்க்காடு-வள்ளலார், திண்டுக்கல்-அண்ணா, இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்க தேவர் மற்றும் நீலகிரி ஆகிய மாவட்டங்களில் கருத்தரங்குகள் நடைபெற்றுள்ளன.

**தமிழில் சிறந்த வரைவுகள், குறிப்புகள்-பரிசு வழங்குதல் :**

8. அரசு அலுவலகங்களில் ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் தமிழில் சிறந்த வரைவுகள் எழுதுவோர்க்குப் பரிசுகள் வழங்கும் திட்டத்தை அரசு திருத்தியமைத்து, ஒவ்வோர் ஆண்டிலும் மாவட்டங்கள் தோறும், 5 பரிசுகள் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் மாநில அளவில் மிகச் சிறந்தவையாக அமையும் 3 வரைவுகளுக்குப் பரிசுகள் வழங்கப்படும். இத்திட்டத்தின்படி உள்ளாட்சி நிதிக் கணக்குகள் ஆராய்வாளர் அலுவலகம், வேளாண்மை ஆணையாளர் அலுவலகம் ஆகியவற்றின் பணியாளர்களுக்குப் பரிசும், பாராட்டுச் சான்றிதழும் 1995-ஆம் ஆண்டு திருவள்ளுவர் திருநாளில் வழங்கப் பெற்றுள்ளன.

**ஆட்சிமொழி திட்டச் செயலாக்கத்தில் ஆர்வமும், திறமையும் காட்டும் அரசு அலுவலகங்களுக்குக் கேடயமும், பாராட்டும் வழங்கும் திட்டம் :**

9. ஆட்சிமொழித் திட்டச் செயற்பாட்டில் சிறந்து விளங்கும் துறைத் தலைமை அலுவலகம் ஒன்றையும் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களுள் ஒன்றையும் தெரிவு செய்து அவற்றிற்குப் பரிசும் கேடயமும், பாராட்டுச் சான்றிதழும் வழங்கும் திட்டம் ஆண்டுதோறும் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

1993-ஆம் ஆண்டிற்கெனத் தெரிவு செய்யப்பெற்ற பொது நூலக இயக்ககத்திற்கும், மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கும்

கேடயமும் பாராட்டுச் சான்றிதழும் 1995-இல் நடைபெற்ற "திருவள்ளுவர் திருநாளில்" வழங்கப்பட்டன. 1995-இல் அதேபோன்று ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறந்த மாவட்ட நிலை அலுவலகத்திற்குப் பாராட்டும் கேடயமும் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**மொழியாக்க நூல் வெளியீடு :**

10. தமிழில் சிறந்த இலக்கியங்களைப் பிற மொழிகளிலும், பிற மொழிகளில் சிறந்த இலக்கியங்களைத் தமிழிலும் வெளியிட இத்திட்டம் வகை செய்கின்றது. இத்திட்டத்தின்படி இதுவரை 17 நூல்கள் வெளியிடப்பெற்றுள்ளன. இம்மொழிபெயர்ப்புத் திட்டத்தின்படி, கம்பராமாயணத்தின் பாலகாண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், சுந்தர காண்டம், கிட்கிந்தா காண்டம் ஆகியன ஆங்கிலத்தில் முதன் முதலாக மொழிபெயர்த்து வெளியிடப்பட்டுள்ளன. யுத்தகாண்டம் எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பெற்றது. இத்துடன் கம்பராமாயண ஆங்கில மொழியாக்கம் முழுமை பெற்றது.

**தமிழிற் சிறந்த நூல்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம் :**

11. தமிழில் வெளிவரும் சிறந்த நூல்களைப் பாராட்டி ஊக்குவிக்கும் வகையில் 21 தலைப்புகளில் சிறந்த நூல்களுக்கு ஆண்டுதோறும் பரிசுகள் வழங்க இத்திட்டம் வகை செய்கிறது. முதல் பரிசு ரூ. 5 ஆயிரமும், இரண்டாம் பரிசு ரூ. 3 ஆயிரமும், மூன்றாம் பரிசு ரூபாய் ஆயிரமும் எனப் பரிசுகள் வழங்கப் பெறுகின்றன. பரிசுக்குரிய நூல்களைப் பதிப்பிக்கும் பதிப்பகத்தார்க்குப் பாராட்டுச் சான்றிதழ் அளிக்கப்படுகின்றது. 1993-ஆம் ஆண்டில் வெளிவந்த நூல்களில் 49 சிறந்த நூல்களுக்கு ரூ. 1.55 இலட்சம் பரிசாக, 1995-இல் நடைபெற்ற "திருவள்ளுவர் திருநாளில்" வழங்கப் பெற்றது.

**நூற்பதிப்பு — நிதியுதவி வழங்கு திட்டம் :**

12. நிலையான மதிப்பும், தகுதியும் வாய்ந்த சிறந்த நூல்களை வெளியிடுவதற்கு ஊக்கமளிக்கும் வகையில் நூலாசிரியர்களுக்கு அரசு நிதியுதவி வழங்குகிறது. இத்திட்ட விதிகளில் குறித்த தலைப்புகளுக் கிணங்க, நூல் வெளியிட நிதியுதவி வேண்டி நூலாசிரியர்களிடமிருந்து வரப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்கப்பெறுகின்றன. வல்லுநர் குழு தெரிவு செய்து பரிந்துரைக்கும் எழுத்துச் சுவடிகள், நிதியுதவிக்குப் பரிந்துரைக்கப்படுகின்றன. இத்திட்டத்தின்படி நூலாசிரியர்களுக்குப்

பெரும அளவாக ரூ. 8,000/- அல்லது நூல் வெளியீட்டுச் செலவில் 50 விழுக்காடு என்னும் அளவில் எது குறைவோ, அத்தொகை நிதியுதவியாக வழங்கப்பெறும். நிதியுதவிக்குரிய தொகையில் பாதித் தொகை முன்பணமாகவும் அச்சிட்டு வெளியிட்ட பின்னர் எஞ்சிய தொகையும் வழங்கப் பெறுகிறது. 1994-95 இல் 1995 சனவரித் திங்கள் வரை 31 நூலாசிரியர்களுக்கு ரூ. 93,063/- நிதியுதவியாக வழங்கப்பட்டது.

**அரிய நூல்களை வெளியிட நிதியுதவி வழங்கும் திட்டம் :**

13. இத்திட்டம் 1994-95 ஆம் ஆண்டு முதல் அமுல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் வெளியிடப்பெறும் நூல்களுக்கு ரூ. 20,000/- அல்லது நூல் அச்சீட்டுச் செலவில் 60 விழுக்காட்டுத் தொகை இவற்றில் எது குறைவோ அத்தொகை நிதியுதவியாக இரு தவணைகளில் வழங்கப்பெறுகிறது. இத்திட்டத்தின்கீழ் 5 நூல்கள் தெரிவு செய்யப்பட்டு எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பெற்றன.

**தமிழிருக்கை நிறுவுகை - ஆராய்ச்சிப் பணிகள் - பிற மாநிலப் பல்கலைக்கழகங்களில் பட்டய வகுப்பு நடத்துதல் - நிதியுதவித் திட்டம்:**

14. அயல் மாநிலப் பல்கலைக்கழகங்களில் தமிழிருக்கை நிறுவவும், தமிழ்ப் பட்டய வகுப்புத் தொடங்கவும் அரசு நிதியுதவி நல்குகிறது. தமிழ்ப்பணி மேற்கொண்டுள்ள தமிழ் வளர்ச்சி அமைப்புகளும் நிதியுதவி பெறுகின்றன. ஐக்கிய நாட்டுக் கல்வி அறிவியல் பண்பாட்டு மன்றத்தின் 'கூரியர்' இதழை வெளியிடும் தென்மொழிகள் புத்தக நிறுவனம், திருவனந்தபுரம் பன்னாட்டுத் திராவிட மொழியியற்பள்ளி, சென்னை ஆசியவியல் ஆய்வு நிறுவனம், திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக் கழகம், மைசூர் இந்திய மொழிகள் மைய நிறுவனம் முதலிய நிறுவனங்கள் நிதியுதவி பெறுகின்றன. 1994-95-இல் சென்னை ஆசியவியல் நிறுவனத்திற்கு ரூ. 1,79,348/- ம், திருவேங்கடவன் பல்கலைக் கழகத்திற்கு ரூ. 66,830/-ம் தென்மொழிகள் புத்தக நிறுவனத்திற்கு ரூ. 80,000/- ம், வழங்கப் பெற்றுள்ளன.

**தமிழ் நூல் விவர அட்டவணைத் தொகுப்புத் திட்டம் :**

15. தமிழ் வளர்ச்சி இயக்ககம் தமிழ் நூல் விவர அட்டவணைத் தொகுப்புப் பணியைத் தொடர்ந்து நிகழ்த்துகிறது. இதுகாறும் 24 தொகை நூல்கள் வெளி வந்துள்ளன. 1936 முதல் 1945 ஆம் ஆண்டு வரையில் வெளியிடப்பட்ட நூல்களுக்கு நூல்களின் விளக்கம் - பொருள் அகர வரிசை எழுதி முடிக்கப்பட்டுள்ளன.

**அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவி வழங்கு திட்டம் :**

*16.* அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள் ஆண்டுதோறும் இத்திட்டத்தின்படி நிதியுதவி பெறுதற்குரியர். நிதியுதவிக்குத் தேர்வு செய்யப்பெறுவோர் நிதியுதவியாகத் திங்கள்தோறும் ரூ. *400*/- பெறுவர். இவ்வாண்டுக்கு *15* பேர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். *1994-95* வரை மொத்தம் *428* தமிழறிஞர்களுக்கு இந்நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

**மொழிக்காவலர் நிதியுதவித் திட்டம் :**

*17.* மொழிக் காவலர்களுக்குத் திங்கள்தோறும் ரூ. *400*/- நிதியுதவி வழங்க இத்திட்டம் வகை செய்கிறது. இதுவரை *1934* மொழிக்காவலர்கள் இத்திட்டத்தின்படி பயன்பெற்று வருகின்றனர்.

**வரலாற்று வரைவுத் திட்டம் :**

*18.* முறையான தமிழ்நாட்டு வரலாற்றை ஏழு தொகுதிகளில் வெளியிட அரசு முடிவு செய்துள்ளது. தொல் பழங்காலம், சங்ககாலம் பகுதி-*1* (அரசியல்), சங்ககாலம் பகுதி-*11* (வாழ்வியல்), பல்லவர் பாண்டியர் காலம் (முதற்பகுதி) ஆகிய மூன்று தொகுதிகள் வெளியிடப்பட்டுள்ளன. பல்லவர்-பாண்டியர் காலம் (இரண்டாம் பகுதி) சோழப்பெருவேந்தர் காலம், பிற்காலப் பாண்டியர்-விசயநகர வேந்தர் காலம், பெருவேந்து அமையாக் காலம், வெள்ளையர் ஆட்சிக் காலமும்-விடுதலைக்குப் பின்வரும் (இரு பகுதிகள்) ஆகிய ஐந்து தொகுதிகளை வெளியிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**மொழிபெயர்ப்பாளர்களைச் சிறப்புச் செய்தல் :**

*19.* மொழிப்பெயர்ப்பு அருங்கலைகளுள் ஒன்றாகும். இக்கலையினைப் பன்மொழி அறிவும், பட்டறிவும், பயிற்சியும் மிக்கவர்களாலேயே கையாள இயலும். படிக்கும் நூல், மொழிபெயர்க்கப்பட்ட நூல் என்ற எண்ணம் தோன்றாதவாறு ஆற்றொழுக்கு நடையில் அமைவது எளிதன்று. இக்கலையினைக் கைவரப் பெற்றவர்கள் சிலரேயாவர்.

மொழிபெயர்ப்புப் பணியில் ஈடுபட்டு அருந்தொண்டாற்றி வரும் பெருமக்களைச் சிறப்பிக்க அரசு முடிவெடுத்துள்ளது.

அவ்வகையில் *1994-95*-ஆம் ஆண்டில் எண்மர் சிறப்புச் செய்யப் பெற்றனர்.

**விழாக்களும் விருதுகளும் :**

*திருவள்ளுவர் திருநாள் விழா:*

*20. ஆண்டுதோறும் திருவள்ளுவர் திருநாளை அரசு விழாவாகத் தமிழ் வளர்ச்சித் துறை நிகழ்த்துகிறது. ஆண்டுதோறும், திருக்குறள் நெறிபரப்பும் சிறந்த அறிஞர்களுக்கு திருவள்ளுவர் விருது வழங்கப் பெறுகிறது. ரூ. 20,000/- கொண்ட பொற்கிழியும், தகுதி உரையும் வழங்கப்பெறுகின்றன. 1995-ஆம் ஆண்டுக்குரிய திருவள்ளுவர் விருது சனவரித் திங்கள் 15-ஆம் நாள் நடைபெற்ற திருவள்ளுவர் திருநாள் நிகழ்ச்சியில் டாக்டர் சு. சிவகாமசுந்தரி அவர்களுக்கு வழங்கப் பெற்றது.*

*பாவேந்தர் பாரதிதாசன் விருது :*

*21. ஆண்டுதோறும் பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாள் விழாவில் சிறந்த கவிஞர் ஒருவருக்கு விருதாக ரூ.10,000/- வழங்கப்பெறுகிறது. 1994-ஆம் ஆண்டுக்குரிய பாவேந்தர் பாரதிதாசன் விருது கவிஞர் கரு. நாகராசன் அவர்களுக்கு வழங்கப் பெற்றது.*

*திரு.வி.க. விருது:*

*22. தெரிவு செய்யப்படும் நாடறிந்த எழுத்தாளருக்குத் தமிழ்த் தென்றல் திரு.வி.க. விருது ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது. ரூ.10,000/- கொண்ட பொற்கிழியும், நினைவுப் பரிசும் விழாவில் அளிக்கப் பெறும். 1994-ஆம் ஆண்டுக்குரிய திரு.வி.க. விருது, புலவர் இரா. இளங்குமரன் அவர்களுக்கு வழங்கப்பெற்றது.*

**உலகத் தமிழ்ச் சங்கம்**

*23. உலகத் தமிழ்ச் சங்கம் மதுரையில் நிறுவ நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அளித்துள்ள அறிவிப்புக்கிணங்க உலகத் தமிழ்ச் சங்கத்தைத் தோற்றுவிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.*

**எட்டாம் உலகத் தமிழ் மாநாடு :**

*24. 1995-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 1ஆம் நாள் முதல் ,5 ஆம் நாள் முடிய தஞ்சாவூரில் நடைபெற்றது. இம்மாநாட்டில் நடைபெற்ற கண்காட்சியில் தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில் அரங்கு ஒன்று*

அமைக்கப்பெற்று பொது மக்கள் பயனடையும் வகையில் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்களைப் பற்றி 'காற்றின் பெயர் பாரதிதாசன்' எனும் பெயரில் தொலைக்காட்சிப் படமும் காண்பிக்கப்பெற்றது.

**பேரறிஞர் அண்ணா நூல்கள் - நாட்டுடைமையாக்கல்**

25. பேரறிஞர் இலக்கியப் பொது நலம் கருதி - அண்ணாவின் இலக்கியப் படைப்புகள் எழுத்து வடிவங்கள் அனைத்தையும் நாட்டுடைமையாக்கி அரசு ஆணை பிறப்பித்துள்ளது. பேரறிஞர் அண்ணாவின் குடும்பத்திற்குப் பரிசுத்தொகை வழங்குவதற்கான பரிந்துரைகளை வல்லுநர் குழு அளித்துள்ளது. இது குறித்து ஆணை பிறப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**தமிழாய்வுக்கென ஓர் இருக்கையினைக் கீழை நாட்டுப் பல்கலைக்கழகங்களில் நிறுவுதல்:**

26. மொரீசியசு பல்கலைக்கழகத்தில் நிறுவக் கருதப்பட்டுள்ள தமிழிருக்கைக்கென இரு பேராசிரியர்களின் பெயர்களைத் தமிழ் பல்கலைக்கழகம் அரசுக்குப் பரிந்துரைத்துள்ளது. அதனடிப்படையில், அரசு நிலையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதனையொட்டிக் கீழை நாட்டுப் பல்கலைக் கழகங்களில் தமிழ் இருக்கை நிறுவுவது குறித்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

**தமிழ் வளர்ச்சி மன்றம்**

27. தமிழ் வளர்ச்சித் தொடர்பான பணிகளில் அறிவுரை கூறும் ஓர் உயர்நிலை அமைப்பாகச் செயற்படும் வகையில் அரசு தமிழ் வளர்ச்சி மன்றத்தைத் தோற்றுவித்துள்ளது.

இம்மன்றத்தில் தமிழ் வளர்ச்சித் தொடர்பான பணிகளை மேற்கொள்ளும் வகை குறித்துப் பரிந்துரைகள் அளிக்கப்பட்டுள்ளன.

## எட்டாவது உலகத் தமிழ் மாநாடு

தமிழகத்தின் பெருமையினைத் தரணி எங்கும் பரப்பும் வகையில், இந்த ஆண்டின் முதல் விழாவாக எட்டாவது உலகத் தமிழ் மாநாடு சனவரித் திங்கள் முதல் நாள் தொடங்கி ஐந்தாம் நாள் வரையில் தஞ்சாவூரில் சீரும் சிறப்புமாக நடைபெற்றதை இம்மாமன்றத்தின் உறுப்பினர்கள் யாவரும் நன்கறிவர்.

2. இதுவரை தமிழகத்தில் நடைபெற்ற இரண்டு மாநாடுகளைவிட, இம்மாநாட்டில் 23 நாடுகளிலிருந்து பேராளர்களாகவும், பார்வையாளர்களாகவும் 1101 அறிஞர்கள் கலந்துகொண்டனர். தமிழ்ப் பல்கலைக்கழக வளாகத்தில் மிகக் குறுகிய காலத்திற்குள் நேர்த்தியாகக் கட்டி முடிக்கப்பட்ட பெரியதொரு மாநாட்டு அரங்கத்தில் ஆய்வரங்க நிகழ்ச்சிகள் தொடங்கியது அனைவராலும் பாராட்டப்பட்ட சிறப்பம்சமாகும்.

3. இம்மாநாட்டினையொட்டி, தஞ்சை நகர மக்களின் நீண்டகாலக் கோரிக்கைகளான இருப்பூர்தி மேம்பாலம், புறவழிச்சாலை, இருவழி இருப்பூர்திக் கீழ்ப்பாலம், புதிய பேருந்து நிலையம் போன்றவை போர்க்கால அடிப்படையில் அமைக்கப்பட்டதுடன், மாநாட்டிற்கு இலட்சக்கணக்கான மக்கள் சிரமமின்றி வந்து கலந்துகொள்ளும் வகையில் தஞ்சை நகரின் மேம்பாட்டுத் திட்டங்களாகச் சாலைச் சீரமைப்பு, குடிநீர், கழிப்பறை வசதிகள் சிறப்பாகச் செய்து முடிக்கப்பட்டன.

4. தஞ்சை நகர மக்களின் வீட்டுவசதித் தேவைகளை ஓரளவிற்கு நிறைவு செய்யும் வகையில் திட்டமிடப்பட்டு, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கட்டப்பட்ட 867 வீடுகளில் மாநாட்டிற்கு வந்த பேராளர்கள் தங்குவதற்கு அனைத்து வசதிகளும் சிறப்பாகச் செய்து தரப்பட்டன. இம்மாநாட்டினையொட்டி, தஞ்சை அரண்மனையின் நான்கு புராதனக் கட்டடங்களைப் புதுப்பிக்கும் பணி இந்தியத் தொல்பொருள் ஆய்வுத்துறையால் மேற்கொள்ளப்பட்டு, அவை புதுப்பொலிவுடன் மிளிர்கின்றன. தஞ்சை பெரிய கோயில் நிலையொளி விளக்குகளால் ஒளியூட்டப்பட்டு, இரவிலும் தன் எழில்மிகு கட்டடவமைப்பைப் பிரதிபலிக்கும் வண்ணம் பொலிவு பெற்று விளங்குகிறது. இம்மாநாட்டின் நினைவாகத் தஞ்சை நகரில் கட்டப்பட்டுள்ள இராசராசன் மணிமண்டபம், நினைவுக் கோபுரம், அலங்காரத் தோரண வாயில்கள் ஆகியவை என்றென்றும் தமிழக வரலாற்றில் நிலைபெற்றிருக்கும் என்பதில் ஐயமில்லை.

## (ஆ) மொழி பெயர்ப்புத் துறை

தலைமைச் செயலகத்தில் அனைத்துத் துறை அலுவல்களும் தமிழிலேயே நடைபெற வேண்டுமென்பது அரசின் நோக்கமாகும். மொழி பெயர்ப்புத் துறை இந்நோக்கத்திற்கு உறுதுணையாகப் பணியாற்றி வருகிறது. ஆங்கிலத்தில் எழுதப்பெறும் இன்றியமையாக் கோப்புகளைத் தமிழில் இத்துறை மொழி பெயர்க்கின்றது.

2. அறிக்கைகள், பொதுக்கணக்கு, பொது நிறுவனக் குழு அறிக்கைகள், சுற்றோட்டக் குறிப்பு, மாநில ஆட்சியறிக்கை, காவலர் பதக்க மதிப்புரைகள், துறைக் குறிப்புகள், ஆணைய அறிக்கைகள், கொள்கை விளக்கங்கள், விதிகள், துணை விதிகள், விதி முறைகள், பொதுத் துறையின் மறைபொருள் கோப்புகள் முதலியன மொழியாக்கம் பெறுகின்றன.

3. வரவு-செலவுத் திட்ட ஆவணங்கள், துணை மதிப்பீடுகள் ஆகியவற்றை மொழிபெயர்க்கப் பணியாளர்களின் ஒரு தொகுதியினர் ஆண்டுதோறும் நிதித்துறைக்கு அனுப்பப்படுகின்றனர்.

## (இ) செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

செந்தமிழ் சொற்பிறப்பியல் பேரகர முதலியைப் பன்மடலங்களில் வெளியிடுவதே இத்திட்டத்தின் முக்கியக் குறிக்கோளாகும். இருமொழிப் பேரகராதியான இதில், இடம் பெற்றுள்ள ஒவ்வொரு சொல்லுக்கும் உரிய விளக்கமும், செந்தமிழ்ச் சொல்லாட்சியும், வேரும் வரலாறும் அளிக்கப்படுவதால் தமிழியல் மற்றும் திராவிடவியல் ஆராய்ச்சி யாளர்களுக்கு இதுபெரிதும் பயன் நல்குவதாயிருக்கும். திரட்டப்பெறும் சொற்களுக்குச் சான்றாகத் தொல்லியல், நாணயவியல், கல்வெட்டியல், இலக்கியங்கள் ஆகியவற்றின் மேற்கோள் காட்டப்படுவதோடு, தேவையான இடங்களில் வண்ணம் மற்றும் கருப்பு-வெள்ளைப்பட விளக்கங்கள் ஆகியவையும் இப்பேரகர முதலியில் இடம் பெற்றுள்ளன.

2. இத்திட்டத்தின் கீழ் 'அ' கரத்தில் தொடங்கும் முதன் மடல முதற்பகுதி 1985 -ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. இதனையடுத்து 'ஆ' காரம் முதல் 'ஈ' காரம் வரையிலான இரண்டாம் பகுதி 1993-இல் வெளியிடப்பட்டது. இதன் தொடர்ச்சியாக 'உ' காரம் முதல் 'ஔ' காரம் வரையிலான மூன்றாம் பகுதி விரைவில் வெளியிடப்படவுள்ளது. இவற்றைத் தொடர்ந்து 'க', 'ச', 'ஞ', 'த', 'ந', 'ப', 'ம', 'ய', 'வ' ஆகிய உயிர் மெய்யெழுத்துகளில் தொடங்கும் மடலங்கள் வெளியிட நடவடிக்கை

எடுக்கப்பட்டு வருகிறது. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி முழுநிறைவான அளவில் முடிவு பெறதுரித நடவடிக்கை எடுக்கும்பொருட்டு ஐந்தாண்டு முனைப்புத் திட்டமிட கருதப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், "செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி இருபதாம் நூற்றாண்டின் இறுதிக்குள் முழுநிறைவான அளவில் வெளிக்கொணரப்படும் " என்று செய்த அறிவிப்பினை சிரமேற்கொண்டு செயல் வடிவில் செய்து காட்டிடும் முகத்தான் ஐந்தாண்டு முனைப்புத் திட்டமொன்று வடிவமைக்கப்பட்டுள்ளது.

## (ஈ) உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

வளர் தமிழ்ப் பணியை உலகளாவிய நிலையில் வளப்படுத்து வதற்காக உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தை 1970 ஆம் ஆண்டில் அரசு நிறுவியது.

2. ஆண்டுதோறும் இந்நிறுவனத்திற்கு அரசு நிதியுதவி வழங்கி வருகிறது. தமிழ்ப் பயில விரும்புவோருக்கு ஒலியிழை வாயிலாக மொழி கற்பிக்கும் ஏந்துகள் இந்நிறுவனத்தில் உள்ளன. மொழிப் பயிற்சிக் கூடத்தில் தமிழ் வகுப்புகளில் அயல்நாட்டு மாணவர்கள் தமிழ் கற்று வருகின்றனர். புதிதாகத் தமிழ்ப் பயிலும் பிற மொழியினர்க்கேற்ற பாடநூலுடன், ஒலியிழையால், "தானே தமிழ் கற்கும் முறை" உருவாக்கப்பட்டு நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது.

3. இந்நிறுவனத்தில் வாரக் கருத்தரங்குகள், ஆய்வுமன்றக் கருத்தரங்குகள், மாதக் கருத்தரங்குகள் மற்றும் ஆண்டுக் கருத்தரங்குகள், ஆகியன நடத்தப்பெற்று வருகின்றன. துறை வல்லுநர்களும், அறிஞர்களும், ஆய்வாளர்களும் கட்டுரையளிக்கும் கருத்தரங்கேற்றமாக நிகழ்வுகள் திகழ்கின்றன. 'தமிழக மகளிர்' என்ற தலைப்பில் பன்னிரண்டு திங்கள் கருத்தரங்குகள் நடத்தப்பெற்றன. நாற்பத்தேழு வெள்ளிக் கருத்தரங்குகளும், பதினோரு ஆய்வுமன்றக் கருத்தரங்குகளும் நடத்தப்பெற்றன. 'தமிழர் சட்ட மரபுச் செல்வம்' எனும் மூன்று நாள் தேசியக் கருத்தரங்கு ஆண்டுக் கருத்தரங்காக நடத்தப் பெற்றது. இரண்டாம் மொழி கற்பித்தல் எனும் தேசியக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

4. தமிழ் மரபு, ஆடற்கலைகளில் காலடி வைக்கும் (அடைவுகள்) முறை என்ற பயிலரங்கம், சுவடியியல் - குறுகிய காலப் பயிலரங்கம் ஆகியன நிறுவனத்தில் இக்கால கட்டத்தில் நடைபெறவுள்ளன. பாரதி கலை விழா நிகழ்த்தப்பெற்றது.

*4.* நிறுவனத்தில் பல்வேறு பெரியோர்களின் பெயர்களில் அமைந்துள்ள பதினெட்டு அறக்கட்டளைகளில் திங்கள் தோறும் அறக்கட்டளைப் பொழிவுகள் நிகழ்த்தப்பெற்று, நூல்களாக வெளியிடப்பெறுகின்றன. நடப்பு ஆண்டில் பதினைந்து அறக்கட்டளைப் பொழிவுகள் நிகழ்ந்துள்ளன.

*5.* சுவடியியல், மொழிபெயர்ப்பியல் பட்டயப் பயிற்சி வகுப்புகள், முனைவர் பட்ட ஆய்வு மற்றும் குறுங்காலத் தமிழ்ப் பயிற்சி வகுப்புகள் என இந்நிறுவனத்தில் அமைந்த பல்வேறு கல்விக்களங்கள் பய்ன்மிகு மாணவர்களை உருவாக்குகின்றன. பத்து வெளிநாட்டினர் தமிழ்ப் பயிற்சி வகுப்பில் பங்குபெற்று நடப்பு ஆண்டில் பயனடைந்து உள்ளனர். இரு திங்களுக்கு ஒருமுறை செய்திக்கதிர் தொடர்ந்து இந்நிறுவனத்தால் வெளியிடப்பெறுகிறது. உயராய்வு நிலையில் மதிக்கப்பெறும் ஆய்வு நூல்கள், உரை நூல்கள், அறக்கட்டளைப் பொழிவுகள் என்ற வகையில் இவ்வாண்டு 15 நூல்கள் வெளியிடப்பெற்றுள்ளன.

*6.* "தமிழியல்" எனும் ஆண்டிற்கு இருமுறை வெளிவரும் பருவ இதழ் தொடர்ந்து வெளியிடப்பெறுகிறது. இதன் தொகுப்பு எண் 39, 40 ஆகியன இக்கால கட்டத்தில் நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ளன.

*7.* முனைவர் பட்ட ஆய்வுக்கு 3 பேர் புதிதாகச் சேர்க்கப்பெற்றுள்ளனர். நான்கு ஆய்வாளர்கள் இந்நிறுவனத்தின் வாயிலாகச் சென்னைப் பல்கலைக் கழக முனைவர் பட்டம் பெற்றுள்ளனர்.

*8.* தஞ்சையில் நடைபெற்ற எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டின்போது வெளியிட 12 நூல்கள் தெரிவு செய்யப்பெற்று வெளியீட்டுப் பணிகள் நடைபெற்றுள்ளன.

*9.* உலகத் தமிழ் மாநாட்டின்போது தஞ்சைக்கு வருகைதந்த வெளிநாட்டு மாநாட்டுப் பேராளர்களை இந்நிறுவனத்துக்கு அழைத்துவந்து பதினெட்டுக்கும் மேற்பட்ட சிறப்புச் சொற்பொழிவுகள் நிறுவனத்தில் நிகழ்த்தப்பெற்றன. இந்நிறுவனத்தின் சார்பில் எட்டாவது உலகத் தமிழ் நாட்டு மலர் ஆங்கிலத்திலும், தமிழிலும் வெளியிடப்பெற்றது.

**தொடர் திட்டப் பணிகள்**

*10.* தமிழ்ப்பாட நூலுக்கான பயிற்சி நூல், தமிழ் இலக்கியத்தில் ஊனர், எளிய தமிழ் இலக்கணம், தமிழில் முன்னொட்டுகள், தமிழ் இலக்கியத்தில் மகளிர், சென்னை நகர ஊர்ப்பெயராய்வு, அழகியல்

சிந்தனைகள், திரவுபதியம்மன் வழிபாடு, தெருக்கூத்து மற்றும் தமிழக நாட்டுப்புறத் தெய்வங்கள் எனும் ஐ.சி.எஸ்.எஸ்.ஆர். திட்டப்பணி, தமிழ் அறிமுகப் பயிற்சி.

## (உ) தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம்

தமிழ் மொழி, இலக்கியப் பண்பாட்டு வளங்கருதும் உயராய்வு மையமாக 1981-ஆம் ஆண்டு தஞ்சாவூரில் தமிழ்ப் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டது. உலகளாவிய தமிழ் மக்களை இணைக்கும் பாலமாகவும், பிற நாட்டுச் சாத்திரங்களைத் தமிழிலும் தமிழ் மொழியிலுள்ள கருவூலங்களைப் பிற மொழிகளிலும் பரிமாறிக்கொள்ளும் மையமாகவும் தமிழ்ப் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டது. மொழிக்கென்று ஒரு பல்கலைக்கழகம் இத்துணைக் கண்டத்தில் ஏற்படுத்தப்பட்டதென்ற நிலையில் இதுவே முதலாவதாகும். தமிழ்ப் பல்கலைக்கழகத்தைத் தொடர்ந்து தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளில் பல்கலைக்கழகங்கள் தோற்றுவிக்கப்பட்டமை, தமிழகத்தின் முன்னோக்கிய சிந்தனையை வெளிப்படுத்துவதாக அமைகிறது. ஐந்து புலங்களையும் 23 துறைகளையும் கொண்டு விளங்கும் இப்பல்கலைக்கழகத்தில் அரிய பல ஆய்வுகள் நிகழ்ந்துள்ளன. தமிழ் மொழியை வளப்படுத்துவதற்குத் தேவையான களஞ்சியங்களும், அகராதிகளும் உருவாக்குந் தனித் திட்டங்களும் செயற்படுகின்றன. இதுவரை ஏறத்தாழ 400 ஆய்வேடுகள் உருவாகிய நிலையில் தமிழ்ப் பல்கலைக்கழகம் 21 ஆம் நூற்றாண்டை நோக்கித் தன்னுடைய திட்டங்களை வகுத்துள்ளது.

2. தமிழ்ப் பல்கலைக்கழகம் ஒரு தனிநிலைப் பல்கலைக்கழகமாகும். இப்பல்கலைக்கழகத்திற்கு இணைவு பெற்ற கல்லூரிகள் எதுவும் இல்லை. உயர் ஆய்வு மட்டுமே குறிக்கோளாகக் கொண்டிருந்த இப்பல்கலைக்கழகம் தமிழ்ச் சமுதாயத்தின் தேவையைக் கருதி தற்போது முனைவர் பட்ட ஆய்வையும், ஆய்வியல் நிறைஞர் கல்வியையும் முழு நேரமாகவும், பகுதி நேரமாகவும் வழங்குகிறது. மேலும், உலகளாவிய நாடுகளிலிருந்து வரும் ஆய்வாளர்களுக்குத் தமிழ் மொழியை, பண்பாட்டை, கலை நலன்களைக் கற்பிக்கும் நிறுவனமாகவும் இது திகழ்கிறது. சீனம், சப்பான், போலந்து, செக்கோஸ்லோவாகியா, அமெரிக்கா, செருமணி, தென்னாப்பிரிக்கா முதலிய பல நாடுகளிலிருந்து வந்த மாணவர்களுக்குத் தமிழ் மொழி, கலை, இலக்கியம், பண்பாட்டுக் கல்வி வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் தமிழக அரசில்

பணியாற்றும் அயல் மாநில ஆட்சிப் பணியாளர்களுக்குத் தமிழ் மொழிப் பயிற்சியும் வழங்கப்படுகிறது.

*3.* தமிழ்ப் பல்கலைக்கழகம் ஓர் உயராய்வு மையமாகையால் தமிழ்ச் சமுதாயத்திற்குத் தொண்டு சேர்க்கும் பணியில் இதுவரை *200* நூல்களை வெளியிட்டுள்ளது. இந்நூல்கள் தமிழ் அறிஞர்களாலும் வெளிநாட்டு அறிஞர்களாலும் பாராட்டப்பட்டுள்ளன. பல அரிய நூல்களைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் மறுபதிப்பாகவும் வெளியிட்டுள்ளது.

*4.* தமிழ்ப் பல்கலைக்கழகம் *14* ஆண்டுகளுக்கு முன்னர் மதுரையில் நடைபெற்ற ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டின் விளைவாகத் தஞ்சையில் உருவானது. இப்பல்கலைக்கழகம் *1995* சனவரி *1* ஆம் நாள் முதல் *5* ஆம் நாள் வரை எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டுக் களமாக அமைந்தது குறிக்கத்தக்கதாகும். *21* ஆம் நூற்றாண்டுக்குத் தமிழகத்தின் பங்களிப்பு குறித்த விரிவான ஆய்வுகள் உலகத் தமிழ் மாநாட்டில் மேற்கொள்ளப்பட்டன. *400*-க்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் உலகளாவிய அறிஞர்களிடமிருந்து பெறப்பட்டு அரங்கேற்றப்பட்டன. உலகத் தமிழ் மாநாட்டின் விளைவாகத் தமிழ்ப் பல்கலைக்கழகம் புத்துணர்ச்சியையும் புதிய சிந்தனையையும் பெற்றுள்ளது. இசுலாமிய இருக்கை இந்த ஆண்டிலிருந்து செயற்படுகிறது. உலகத் தமிழ் மாநாட்டில் தொடர் நடவடிக்கையாக ''மகளியத் துறை'' ஒன்றும் தோற்றுவிக்கப்படவுள்ளது. பதிப்புப்பணிக்கு ஊக்கமளிக்கும் முறையில் ரூ. *10* இலட்சம் சுழல் நிதியாகத் தமிழக அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இச்சுழல் நிதியிலிருந்து இதுவரை *22* நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. பிற பல்கலைக்கழகங்கள் செய்யவியலாத பணியைத் தமிழ் மொழிக்கும் சமுதாயத்திற்கும் தமிழ்ப் பல்கலைக்கழகம் ஆற்றவேண்டுவது இப் பல்கலைக்கழகத்தின் நோக்கமாகும்.

*5.* தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் இதுவரை *32* அறக்கட்டளைகள் பல்வேறு புரவலர்களால் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் கல்விநிலை/அலுவல் நிலைப் பணியாளர்கள் என்ற வகையில் *370* பேர் பணியாற்றி வருகின்றனர். ஆண்டுதோறும் அரசு நல்கையாக ரூ. *113* இலட்சத்தை வழங்குகிறது. "ஒப்பில்லாத தமிழ்ப் பல்கலைக் கழகம் உலகுக்கோர் புதுமை'' என்ற வகையில் பல்கலைக்கழகம் ஆற்றி வருகின்ற பணிகள் குறிப்பிடத் தக்கனவாகும்.

*6. 1994-95* ஆம் கல்வியாண்டில் *20* எண்ணிக்கை ஆய்வில் நிறைஞர் மாணவர்களும் *11* எண்ணிக்கை முனைவர் பட்ட மாணவர்களும் ஆய்வு மேற்கொண்டுள்ளனர். இத்துடன் துறைகளிலுள்ள

போராசிரியர்கள், இணைப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் எழுபதுக்கு மேற்பட்ட ஆய்வுகளைத் தொடர்ந்துவருகின்றனர். பல்வேறு நல்கை வழங்கும் நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட நல்கைகளிலிருந்து தனித்திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. புதிய திட்டங்களுக்கான கருத்துருக்களும் இத்தகைய நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன. இவ்வாய்வேடுகள் நூல்களாக வெளிவரும்போது அவை தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் நோக்கத்தை நிறைவு செய்வனவாய் அமையும்.

## (ஊ) தொல்பொருள் ஆய்வுத்துறை.

தொல்பொருள் ஆய்வுத்துறை, தமிழகத்தில் பண்டைய வரலாற்றுச் சின்னங்களைக் காத்தோம்பும் நோக்கத்தில் 1961 இல் உருவாக்கப் பெற்றது. தமிழகத்தில் 78 வரலாற்று நினைவிடங்கள் தொல் பொருள் ஆய்வுத்துறையால் தெரிவு செய்யப் பெற்றுக் காக்கப் பெறுகின்றன. மதுரை திருமலை நாயக்கர் அரண்மனை, தஞ்சாவூர் அரண்மனை, தரங்கம்பாடி கோட்டை, இராமநாதபுரம் இராமலிங்க விலாசம், சரபேந்திர ராஜப்பட்டினம் மனோரா முதலியன இவற்றுள் முதன்மையானவை.

**காப்புப் பிரிவு :**

2. 1995-ம் ஆண்டு சனவரித் திங்களில் தஞ்சாவூரில் நடைபெற்ற எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டினையொட்டி, தஞ்சாவூர் அரண்மனை வளாகத்தில் உள்ள சரித்திரப் புகழ் மிக்கதும், தொல்லியல் சிறப்பு வாய்ந்ததுமான நான்கு கட்டடங்களான ஆயுத கோபுரம், மணிக்கோபுரம், சார்ஜா மாடி, மராட்டா தர்பார் மண்டபம் ஆகியவை பழுதுபார்க்கும் பணிக்கென ரூ. 156 இலட்சம் அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இத்துறையின் சார்பாக இப்பணிகள் சென்னை வட்டம் இந்தியத் தொல்பொருள் ஆய்வுத்துறையால் வைப்புப் பணியாக மேற்கொள்ளப்பட்டது. இரண்டு கட்டடப் பகுதிகளின் பழுது பார்த்தல் பணிகள் முடிக்கப்பட்டு விட்டன. மீதமுள்ள இரு சின்னங்களின் பணிகளும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

3. இத்துறையால் பாதுகாக்கப்பட்டு வரும் நினைவுச் சின்னங்களில் மிக முக்கிய சின்னமான மதுரை திருமலை நாயக்கர் அரண்மனைக்கு முதற்கட்ட பழுதுபார்ப்புப் பணிக்காக ரூ. 78.30 இலட்சத்திற்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இதில் வடிகால் அமைப்புப் பணி, மண்வெட்டி எடுக்கும் பணி, கவிவோடு பொருத்துதல், சிமெண்ட் கற்கலவையால்

ஆன பாதை அமைத்தல் ஆகிய பணிகள் அடங்கும். இவ்வரண்மனைக்கு இடிதாங்கி பொருத்தும் பணிக்காக ரூ. 2.85 இலட்சம் அரசு அனுமதித்துள்ளது. இதனைப் பொருத்துவதற்கான முன்னேற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தஞ்சாவூர் மாவட்டத்தில், சரபேந்திர ராஜப்பட்டினத்தில் உள்ள 'மனோரா' என்ற சரித்திரப் புகழ் வாய்ந்த கோட்டையினை மேம்படுத்தும் பணிக்காக ரூ. 6.54 இலட்சத்துக்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இப்பணிக்கான ஏற்பாடுகள் பொதுப் பணித்துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**கல்வெட்டுப் பிரிவு :**

4. மாயவரம் வட்டத்தில் கொருக்கை, திருக்கடவூர், மயானம், செஞ்சி வட்டத்தில் செம்மேடு, பாச்சூர், நல்லாண் பிள்ளை பெற்றாள், பெருங்காப்பூர், திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தில் போளூர் ஆகிய இடங்களில் ஆய்வு செய்யப்பட்டு மொத்தம் 28 கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டன. இவற்றுள் போளூர் போலாட்சியம்மன் கோயிலில் கண்டு பிடிக்கப்பட்ட கல்வெட்டுகளும் செஞ்சிக்கு அருகில் பாச்சூரில் இராஜேந்திர சோழன் காலத்து எழுத்தமைதியுடன் கூடிய ஒரு துண்டு கல்வெட்டும் வரலாற்றுக்குப் புதிய செய்திகளைத் தருவனவாய் உள்ளன. கல்வெட்டுப் பயிற்சி நிறுவனத்தில் மாணவர்களுக்கு வகுப்பெடுத்தல், ஊர்களுக்கு அழைத்துச் சென்று நேர்முகப் பயிற்சி அளித்தல், மாணவர்கள் ஆய்வு நூல் சமர்ப்பிக்க உதவிகள் புரிதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும் எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டினையொட்டி, காட்சி அரங்கம் அமைத்தல் சம்பந்தமான பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.

**அகழாய்வுப் பிரிவு :**

5. படைவீடு, திருக்கோயிலூர் மற்றும் அழகன் குளம் ஆகிய இடங்களில் அகழாய்வு செய்து சேகரித்த தொல்பொருட்களை, இத்துறையின் அகழாய்வுப் பிரிவு ஆய்ந்து உரிய வகையில் பட்டியலிட்டுள்ளது. மேற்காணும் அகழாய்வு குறித்த முன் நிலை அறிக்கை தயாரிக்கப் பெற்றுள்ளது. விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டத்தில் உள்ள சேந்தமங்கலம், நாகை-காயிதே மில்லத் மாவட்டத்தில் உள்ள பூம்புகார், காமராஜர் மாவட்டத்தில் உள்ள திருத்தங்கல் ஆகிய இடங்களில் அகழ் ஆய்வுப் பணிகள் தொடங்கப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

**ஆழ்கடலகழாய்வு :**

*6.* இந்தியாவிலேயே ஆழ்கடல் தொல்பொருளாய்வு இம்மாநிலத்தில் தான் ஒரு மாநில அரசின் நிதியுதவியோடு முதன் முதலில் தொடங்கப்பெற்று, அவ்வாய்வைத் தமிழகத் தொல்லியல் துறையும், கோவா தேசியக் கடலாய்வு நிறுவனமும் இணைந்து *1991* மற்றும் *93* ஆம் ஆண்டுகளில் பூம்புகார் கடற்பகுதியில் இரண்டு கட்டப்பணிகளாக ரூ. *20* இலட்சம் நிதியொதுக்கீட்டில் மேற்கொண்டன. இவ்வாய்வின்போது கடலால் கொள்ளப்பட்ட சங்ககாலத்துப் புகழ்வாய்ந்த நகரமான பூம்புகாரின் கட்டடப் பகுதிகள், உறை கிணறுகள், அக்காலத்திய பானை ஓடுகளான கருப்பு, சிவப்புப் பானை ஓடுகள், மற்றும் கி. பி. *18* ஆம் நூற்றாண்டில் தரை தட்டிய கப்பல் ஆகியவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. *1994-95*-ல் மூன்றாம் கட்ட ஆய்வுப் பணிக்காக ரூ. *16.89* இலட்சத்துக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. அதனைத் தொடர்ந்து ஆகஸ்டுத் திங்களில் கடல் அகழாய்வு மேற்கொள்ளப்பட்டது. மீண்டும் *1995* பிப்ரவரித் திங்களில் இப்பணி தொடங்கப்பட்டுள்ளது.

**மாவட்ட அளவில் தொல்லியல் பணிகள்:**

*7.* மாவட்டந்தோறும் உள்ள தொல்லியல் அலுவலர்கள் சில அரிய ஓலைச்சுவடிகளையும், காசுகளையும் சேகரித்து உள்ளனர். இவை இரசாயன முறையில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. மேலும் கற்சிற்பங்கள், சுடுமண் பொம்மைகள் ஆகியவை சேகரிக்கப்பட்டு, அருகில் உள்ள இத்துறையின் அகழ்வைப்பகங்களில் காட்சிக்கு வைக்கப் பெற்றுள்ளன.

**அகழ்வைப்பகங்கள்:**

*8.* அகழாய்வில் கிடைத்த தொல்பொருள்களையும், அவ்விடங்களின் அருகிலுள்ள பகுதிகளிலிருந்து சேகரிக்கப்பட்ட தொல்பொருட்களையும் கொண்டு, பொதுமக்கள் எளிதில் சென்று பார்த்துப் பயன்பெறும் வகையில், அகழாய்வு நடைபெற்ற இடங்களுக்கு அண்மையிலேயே அகழ்வைப்பகங்கள் அமைக்கப் பெற்றுள்ளன. அகழ்வைப்பகங்களில் திங்கள் தோறும் தமிழ், தொல்லியல் பண்டைய வரலாறு ஆகிய இயல்களில் விளங்கும் வல்லுநர்களை அழைத்துத் திங்கள் பொழிவும் சிறப்புக் காட்சியும் நடத்தப்படுகின்றன. இவ்வாண்டு அகழ்வைப்பகம் மேம்படுத்தும் திட்டத்திற்கென நான்கு அகழ்வைப்பகங்களுக்கு விளம்பரப்படம் காட்டும் திரைப்படக் கருவிகளும், தண்ணீர் குளிர வைக்கும் சாதனமும் பொதுமக்கள் நலனுக்கென தருவிக்கப்பட்டுள்ளன.

**அச்சுப் பிரிவு**

*9.* எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டினையொட்டி, தமிழர் நாகரீகம், இராசராசேச்சுரம், திருமலை நாயக்கர் காலத்துச் செப்பேடுகள் மற்றும் ஆங்கிலக் கட்டுரைத் தொகுப்பு ஆகிய நூல்கள் அச்சாக்கப்பட்டன. இவை தவிர எட்டு நூல்களும் அச்சாக்கப்பட்டுள்ளன.

**பழம்பொருட்கள் பதிவு**

*10.* பழமையான கலைப் பொருட்களைப் பதிவு செய்வதற்காக இவ்வாண்டு *1369* விண்ணப்பங்கள் வரப்பெற்று, அவற்றில் *1022* விண்ணப்பங்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பெற்றன. இதுவரை பழமையான கலைப் பொருட்களைப் பதிவு செய்வதற்காக *43,839* விண்ணப்பங்கள் பெறப்பட்டன. அவற்றில் *30,946* விண்ணப்பங்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. சிலைத் திருட்டுத் தொடர்பான வழக்குகளில் இத்துறையின் பதிவு அலுவலர்கள் அச்சிலைகள் தொடர்பான சான்றாதாரங்களை வழக்கு மன்றத்திற்கு அளித்து வருகின்றனர். பதிவு செய்யப்பட்ட சிலைகளைக் கண்காணிக்கும் பொருட்டு, அவ்வப்போது உரிய கோயில்களுக்குச் சென்று அங்குள்ள பதிவேடுகளோடு ஒப்பிட்டு ஆய்வு செய்கின்றனர்.

**கல்வெட்டுக் கலைச் சொல்லகராதி:**

*11.* கல்வெட்டுக் கலைச் சொல்லகராதி தயாரிக்கும் பணியில் சுமார் *10,000* சொற்கள் தொகுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து உயிரெழுத்துக்களில் தொடங்கும் சொற்கள் மட்டும் சேகரிக்கப்பட்டு பொருள் எழுதும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆங்கிலத்திலும், தமிழிலும் பொருள் எழுதப்படுவதோடு, அச்சொல் நிலை பெறும் இடமும் (Context) தயார் செய்யப்படுகிறது. இதுவரை செய்துள்ள பணிகளின் தரம் மற்றும் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்யும் வகையில், அறிஞர்களை அழைத்து அவர்களிடம் நடைபெற்றுள்ள பணிகள் பற்றி விளக்கி அவர்களின் கருத்துக்கள் கேட்கப்பட்டன. உயிரெழுத்துக்களில் தொடங்கும் சொற்கள் அடங்கிய முதல் தொகுதியை விரைவில் வெளியிடத் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**கல்வெட்டுப் பயிற்சி நிறுவனம் :**

*12.* ஆண்டுதோறும் முதுகலைப் பட்டயப் பயிற்சி வகுப்பும், கோடைக்காலக் கல்வெட்டுப் பயிற்சியும் நடத்தப் பெறுகின்றன. இவ்வாண்டு முதல், சென்னையில் முதுகலைப் பட்டயப் பயிற்சி வகுப்பு நடைபெற்று வருகிறது. விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டத்தில் கோடைக்காலக் கல்வெட்டுப் பயிற்சியும் நடைபெற்றது. முதுகலைப் பட்டயப் பயிற்சியில் ஐந்து முதுகலை பயின்ற மாணவர்களும், கோடைக் காலக் கல்வெட்டுப் பயிற்சியில் உயர்நிலை இடைநிலைப் பயிற்சி ஆசிரியர்கள் மற்றும் கல்லூரி ஆசிரியர்கள் பங்கு பெற்றனர்.

**உலக மரபு விழா :**

*13.* உலக மரபு விழா சென்ற ஆண்டு நவம்பர்த் திங்கள் 19-ம் நாள் தொடங்கி 25 ஆம் நாள் முடிய தமிழகத்தில் பல இடங்களில் ஆங்காங்குள்ள கல்லூரி மற்றும் பள்ளி மாணவர்களை ஈடுபடுத்தி நடத்தப்பெற்றன. இவ்விழா நம்நாட்டுக் கலைச் செல்வங்களைப் போற்றிப் பாதுகாத்தலின் அவசியத்தை மாணவர்களுக்கு எடுத்தியம்புவதாக அமைந்தது.

## (ஏ) அரசு கீழ்த்திசை ஓலைச்சுவடி நூலகம்.

சென்னைப் பல்கலைக் கழக வளாகத்தில் இயங்கும் கீழ்த்திசை ஓலைச்சுவடி நூலகம், கர்னல் மெகன்சி, லாங்டன், பிரவுன் போன்ற மேனாட்டுப் பெருமக்களின் அரிய தொகுப்புகள் கொண்ட பெரிய நூலகமாகும். இந்நூலகத்தில் *71,180* சுவடிகளும், *22,887* அச்சு நூல்களும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இவை, தமிழ், தெலுங்கு, வடமொழி, கன்னடம், மராத்தி, உருது, அரபு, பாரசீகம் முதலிய மொழிகளில் அமைந்தவை. எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டினையொட்டி இந்நூலகச் சுவடிகளிலிருந்தவற்றை பெயர்த்தெழுதி *4* நூல்கள் அச்சாக்கப்பட்டு வெளிக் கொணரப்பட்டன.

*2.* இவை தவிர "தமிழ்ச் சுவடிகளில் விவர அட்டவணை எண்.*26*-"ம் "தமிழக ஊர் வரலாறுகள்" என்னும் நூலும் இத்துறையின் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளிக் கொணரப்பட்டன. *1995-96* ஆம் ஆண்டில் இந்நூலகத்தில் காற்றுப் பதன வசதி செய்தல் மற்றும் தமிழ், வடமொழி, தெலுங்கு, உருது ஆகிய மொழிச் சுவடிகளிலிருந்து *30* நூல்கள் அச்சிடுதல் ஆகியவற்றுக்காக ரூ.*23.62* இலட்சங்களுக்குத் திட்டம் தீட்டப்பட்டுள்ளன.

**புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா ஆய்வுப் பணித்திட்டம்:**

3. தொல் மரபுப் பொருண்மைகளான மொஹஞ்சதாரோ, ஹரப்பா முத்திரை எழுத்துக்களை அறிதல், குமரிக்கண்டம், காவிரிப்பூம்பட்டினம், கொற்கை முதலிய துறைமுகங்களில் ஆழ்கடலாய்வு செய்தல், நாணயவியல் கல்வெட்டியல், கட்டடக்கலை, கலைப்பண்பாடு தொடர்பான துறைகளில் ஈடுபடும் ஆய்வாளருக்கு 'புரட்சித் தலைவி ஆய்வுப் பெருந்தகையாளர் ஊக்குவிப்புத் திட்டம்" என்ற திட்டத்தை ஏற்படுத்தி அரசு ஆணையிட்டுள்ளது. ஆய்வாளர் ஒருவரை தேர்ந்தெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**எட்டாவது உலகத் தமிழ் மாநாடு:**

4. 1995-ஆம் ஆண்டு சனவரித் திங்களில் தஞ்சாவூரில் நடைபெற்ற எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டினையொட்டி தஞ்சாவூர் அரண்மனை வளாகத்தில் உள்ள வரலாற்றுச் சிறப்புப் பெற்ற, தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த நான்கு கட்டடப் பகுதிகளான மராட்டா தர்பார் மண்டபம், ஆயுத கோபுரம், மணிக்கோபுரம், மற்றும் சார்ஜா மாடி ஆகியவற்றைப் பழுது பார்க்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

5. இவை தவிர, தஞ்சாவூர் அரண்மனை வளாகத்தின் கழிவு நீர் அகற்றும் வடிகால் அமைப்புத் திட்டப் பணிகள் பொதுப்பணித்துறை மூலம் ரூ.6.68 இலட்சம் செலவிலும், மராட்டா தர்பார் ஹாலில் உள்ள ஓவியங்களைத் தூய்மை செய்து பாதுகாக்கும் பணி லக்னோ இண்டாக் நிறுவனம் மூலம் ரூ.4,76,100 செலவிலும் நிறைவேற்றப்பட்டு வருகிறது. அரண்மனை வளாகக் கட்டடங்களில் வளர்ந்துள்ள செடி கொடிகள், மரங்கள் மற்றும் புதர்கள் அகற்றும் பணி ரூ.1.54 இலட்சம் செலவில் முடிக்கப்பட்டுள்ளது. மேலும், அரண்மனை வளாகத்தில் உள்ள மராட்டா தர்பார் மண்டபத்திற்கு நிரந்தர ஒளி விளக்குகள் ரூ.5.96 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு வருகிறது. இவை மட்டுமல்லாமல், தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவரால் அனுப்பப்பட்ட கருததுருக்களின் அடிப்படையில் கலைக்கூடம், சங்கீத மஹால் மற்றும் அரண்மனையில் உள்ள அனைத்து முகப்புப் பகுதிகளை மேம்படுத்தும் பணிகளுக்கும், மூத்த இளவரசர் மற்றும் இளைய இளவரசர் வாழ்விடங்கள் பழுதுபார்த்தல் பணிகளுக்கும் ரூ.13.99 இலட்சத்துக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இம்மாநாட்டினையொட்டி, இத்துறையின் சார்பில் காட்சி அரங்கமும் அமைக்கப்பட்டது. தஞ்சை

அரண்மனைப் பாதுகாப்புப் பணி பற்றிய துணை மடல் ஒன்றும் பொதுமக்களின் நன்மைக்காக அச்சடிக்கப்பட்டு இனாமாக விநியோகிக்கப்பட்டது.

## (ஏ) அரசு அருங்காட்சியக ஆணையம்.

இந்தியப் பெருநாட்டை அணி செய்யும் அருங்காட்சியகங்களுள் பழமையும், பெருமையும் வாய்ந்தது சென்னை அருங்காட்சியகமாகும். தொல்பொருளியல், மானிடவியல், விலங்கியல், தாவரவியல், புவியியல், கலையியல், சிறுவர் அருங்காட்சியகம் முதலிய காட்சிக் கூடங்களோடு பழங்கலைப் பொருட்களைத் திரட்டுவதிலும் இவ்வருங்காட்சியகம் புகழ்பெற்றுத் திகழ்கிறது. தேசிய மரபுச் செல்வங்களைக் காக்கும் கலைக் களஞ்சியமாக இவ்வருங்காட்சியகம் அமைந்துள்ளதோடு தொல் பழங்காலப் பொருள்களையும் பேணிக் காக்கிறது. பல்வேறு மாநில மக்களும் ஆர்வத்தோடு திரண்டு வந்து காணும் காட்சியகமாகவும் இவ்வருங்காட்சியகம் அமைந்துள்ளது. இந்திய அருங்காட்சியகங்களுள் ஒரு நூற்றாண்டுக்கு மேலாக அதிக எண்ணிக்கையில் தொடர்ந்து பார்வையாளர்களை ஈர்த்த பெருமை இந்த அருங்காட்சியகத்திற்குரியது.

**மாவட்ட அருங்காட்சியகங்கள்:**

2. மாவட்ட தலைநகரங்களில் அருங்காட்சியகம் அமைக்க வேண்டும் என்ற அரசு கொள்கையின்படி 1979-ஆம் ஆண்டிலிருந்து சேலம், மதுரை, திருச்சிராப்பள்ளி, வேலூர், ஈரோடு, கடலூர், உதகமண்டலம், கோயம்புத்தூர், கன்னியாகுமரி, திருநெல்வேலி ஆகிய இடங்களில் அருங்காட்சியகங்கள் நிறுவப்பட்டுள்ளன. 1993 நவம்பர்த் திங்கள் 8-ஆம் நாள் தருமபுரி மாவட்டத்தில் கிருட்டினகிரியில் அருங்காட்சியகம் துவக்கப்பட்டது. பழனி மற்றும் தஞ்சாவூர் ஆகிய இடங்களில் அருங்காட்சியகம் துவக்குவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**சிறுவர் அருங்காட்சியகம்:**

3. அருங்காட்சியக வளாகத்தில் அமைந்த சிறுவர் அருங்காட்சியகம் வரலாற்று மாட்சி, வனப்புமிகு பொம்மைக் காட்சிகள், இயற்கை எழில், இயற்பியல், அறிவியல் புதுமைகள் தொடர்பான கூடங்களைக் கொண்டதாகும். கலை இயற்கையியல் தொடர்புடைய பொருண்மைகளைப் பற்றிச் சிறுவர்கள் அறிந்துகொள்ளச் செயல்முறை

வடிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. சிறுவர்கள் தாமே இயக்கி அறியும் வண்ணம் மின்னணு விளையாட்டுக் கருவி, சுழலாடி வழியாக மின் ஆக்கம், வளிமத் தந்திக் கருவிகள் முதலியன சிறுவர்கள் அருங்காட்சியகத்தில் நிறுவப்பட்டுள்ளன. தொல்பழங்காலத்தே இருந்து மறைந்த பெரு விலங்கின "இழைம வடிவங்கள்" காட்சியாக முகப்பு வெளியில் நிறுவப்பட்டுள்ளன.

***4. கூடங்கள் சீரமைப்புப் பணி:***

சிறுவர் அருங்காட்சியகக் கூடம், பாலூட்டிகள் கூடம் மற்றும் தேசீயக் கலைக்கூடம் ஆகிய காட்சிக்கூடங்களை நவீனப்படுத்தும் வகையில் நவீன முறையில் காட்சிப் பெட்டிகள் தயாரித்து வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வடிவமைப்புப் பிரிவில் 15 காட்சிப் பெட்டிகள் புதிதாகத் தயாரிக்கப்பட்டன.

***5. கல்விப் பணிகள்:***

இயற்கையியல், மரபுச் சிறப்பு, கலையியல் பற்றிய விழிப்புணர்வை மாணவ மாணவிகள் ஆர்வலர்களிடையே தூண்டும் வகையில் அருங்காட்சியகங்களில் சிறப்புக் கண்காட்சிகள், படக்காட்சிகள், கருத்தரங்குகள், பயிலரங்குகள் நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் கல்வி சம்பந்தமான படங்கள் வாங்கப்பட்டு மாணவர்களின் மேம்பாட்டுக்காகத் திரையிடப்படுகின்றன. இதற்காக இவ்வாண்டு ரூ.30,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

***6. தனியார் அருங்காட்சியகத்திற்கு நிதியுதவி:***

மாவட்டங்களில் அமைந்த அரசு அருங்காட்சியகங்கள் தவிர, தனியார் பேணிவரும் அருங்காட்சியகங்களுக்கும், அரசு நிதியுதவி வழங்குகிறது. இவ்வகையில் மதுரையிலுள்ள அண்ணல் காந்தி அருங்காட்சியகத்திற்கு இந்த ஆண்டிலிருந்து ரூபாய் ஒரு லட்சத்திலிருந்து 1.5 லட்சமாக உயர்த்தப்பட்டு நிதியுதவியாக வழங்கப்படுகிறது.

***7. சிறப்புத் திட்டம்:***

சென்னை அருங்காட்சியகத்தில் புத்த கூடம் அமைத்து அதில் அமராவதியிலிருந்து பெறப்பட்ட சுண்ணாம்புக் கல் புத்த சிற்பங்களை ஒரு தளத்தில் நவீன முறையில் பாதுகாத்து காட்சிக்கு வைக்க அரசு கொள்கையளவில் ஏற்றுக் கொண்டுள்ளது. அதற்காக வெளிநாட்டு நிதியுதவியும் கோரப்பட்டுள்ளது.

*8. எட்டாவது உலகத் தமிழ் மாநாடு:*

*தஞ்சாவூரில் 1-1-95 முதல் 5-1-95 வரையில் நடைபெற்ற எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் இவ்வருங்காட்சியகம் பங்கேற்று காட்சிக்கூடம் அமைத்து பார்வையாளர்களின் கவனத்தை ஈர்த்தது. மேலும் இத்துறையிலிருந்து இரண்டு அலுவலர்கள் உலகத் தமிழ் மாநாட்டு கருத்தரங்கில் கலந்துகொணடு கட்டுரை வாசித்தனர். தஞ்சாவூர் கரந்தைத் தமிழ்ச் சங்கத்திடமிருந்து ரூ.30,00,000 மதிப்புள்ள செப்பேடுகள் வாங்கப்பட்டன.*

*9. வருங்காலத் திட்டங்கள்:*

*வரும் நிதியாண்டில் (1995-96) படிமக்கூடத்தில் முதல்தளத்தை ரூ.22 லட்சத்தில் குளிர்சாதன வசதி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.*

## (ஐ) கலை-பண்பாட்டு இயக்ககம்.

*கலை வளம் மிகுந்த நம் தமிழகத்தில் தனியார் அமைப்புகளுடன் அரசின் பல்வேறு அமைப்புகளும் நிறுவனங்களும் இணைந்து கலைப் பணிகளை ஆற்றுகின்றன. தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரிகள், அரசு கலைத் தொழில் கல்லூரிகள், அரசு கட்டடச் சிற்பக் கல்லூரி, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், ஓவிய நுண்கலைக்குழு, ஜவகர் சிறுவர் இல்லம் ஆகியன கலைப்பணிகளுக்கு உரிய ஆக்கமும், ஊக்கமும் வழங்குகின்றன. கலைப் பண்பாட்டு வளர்ச்சியை ஊக்குவிக்க இவ்வமைப்புகளை ஒருங்கிணைத்து, கலை-பண்பாட்டு இயக்ககம் புதிதாகத் தோற்றுவிக்கப் பெற்றது.*

*2. கலை-பண்பாட்டு இயக்ககம் கலை வளர்ச்சிக்கும் கலைஞர்களுக்கும் ஊக்கமளிக்கும் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருகிறது.*

**பண்பாட்டுப் பலகணி:**

*3. கலை-பண்பாட்டு இயக்ககத்தின் சார்பில் திங்கள்தோறும் பண்பாட்டுப் பலகணிச் சிறப்புக் கலை நிகழ்ச்சிகள் சென்னை அருங்காட்சியகக் கலையரங்கில் நடத்தப்படுகின்றன. புகழ்வாய்ந்த பழம் பெரும் கலைஞர்களையும் அறிஞர்களையும் சிந்தனையாளர் களையும் திங்களுக்கொருமுறை வரவழைத்து எத்துறையில் அவர்கள் வல்லுநர்களாகச் சிறந்து விளங்குகின்றனரோ, அவ்வியல்புகளை விளக்கி*

TRUTH ALONE TRIUMPHS

நடித்துக் காட்டுகின்ற கலை நிகழ்ச்சியாகப் பண்பாட்டுப் பலகணி அமைகின்றது. மேலும் இயல், இசை, நாடகம் ஆகிய மூன்று துறைகளிலும் முனைப்புடன் முன்னேறி வரும் இளம் கலைஞர்களுக்கு வாய்ப்பளிக்கும் வகையிலும், நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையிலும், வாரந்தோறும் புதன், சனிக்கிழமைகளில் சென்னை அருங்காட்சியகக் கலையரங்கில் கலை நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப் பெற்றன. அவ்வகையில் 200-க்கு மேற்பட்ட கலை நிகழ்ச்சிகள் கலை பண்பாட்டு இயக்ககத்தால் சென்னையில் நடத்தப்பட்டுள்ளன. இக்கலை நிகழ்ச்சிகளைக் கிராமப்புற மற்றும் மாவட்டங்களில் உள்ள மக்களும் காண வாய்ப்பு அளிக்கும் வகையில் தற்போது இந்நிகழ்ச்சிகளைத் தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் நடத்தத் திட்டமிடப்பெற்று மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் நடத்தப்பெற்றன. 1995-96 ஆம் ஆண்டில் சென்னை, செங்கை எம்.ஜி.ஆர்., விழுப்புரம் இராமசாமி படையாட்சியார், தென்ஆர்க்காடு வள்ளலார், திருவண்ணாமலை சம்புவராயர், நாகை காயிதே மில்லத், (சீர்காழி, வேளாங்கண்ணி) திண்டுக்கல் அண்ணா, இராமநாதபுரம், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களின் முக்கியப் பகுதிகளில் இந்நிகழ்ச்சிகள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

**மாவட்ட கலைச் சங்கங்கள்:**

4. தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும், கலை பண்பாட்டை மேம்படுத்தி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், அரிய கலை வடிவங்களைப் பாதுகாக்கவும் கலைத்திறமிக்கவர்களை ஊக்குவிக்கவும், மாவட்ட கலைச் சங்கங்கள் நிறுவப் பெறவுள்ளன. கலை வளர்ச்சிப் பணிகளுக்கு இணைப்புப் பாலமாகச் செயல்பட உள்ள இச்சங்கங்கள் பள்ளி நிலைதொடங்கி, தொழில் முறை சாரா மற்றும் தொழில் முறைக் கலைஞர்கள் மூலம் கலை-பண்பாட்டு முன்னேற்றத்திற்கு உதவும். நடனம், இசை, ஓவியச் சிற்பக்கலை ஆகிய கலைகளின் வளர்ச்சிப் பணிகளும் இச்சங்கங்களின் செயற்பாடுகளில் அடங்கும். இதனைத் தொடர்ந்து அனைத்து மாவட்டங்களிலும் கலைச் சங்கங்களுக்கு 1995 ஆம் ஆண்டு தைப் பொங்கல் திருநாளன்று தொடக்க விழா நடத்துவதற்காகத் தமிழ்நாட்டில் 22 மாவட்டங்களுக்குத் தலா ரூ.25,000 வீதம் வழங்கப்பட்டுள்ளது. தவிர சென்னை மாவட்டத்தில் இவ்விழா நடத்துவதற்குத் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மற்றும் தமிழ்நாடு ஓவிய நுண் கலைக்குழு ஆகிய இரு நிறுவனங்களுக்குக் கலைச் சங்க விழா நடத்தத் தலா ரூ.30,000 வழங்கப்பட்டுள்ளது.

**ஓவியக் கலையரங்கு:**

5. மரபுசான்ற ஓவியங்களும், சிற்பங்களும் நடைமுறைக்கால ஓவிய வரைவுகளும் இடம் பெறும் வகையில், நீலகிரி மாவட்டத் தலைநகராகிய உதகையில் ஓவியக் கலையரங்கு அமைக்கப்பெற்றுள்ளது. உதகையில் உள்ள ஓவியக் கலையரங்கிற்குத் தினமும் பல்வேறு சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றனர். இக்கலைக்கூட வளாகத்தில் சென்ற ஆண்டு மே திங்களின் போது ஓர் அகில இந்தியக் கலையரங்கு முகாம் நடத்தப்பெற்றது.

**இராக ஆராய்ச்சி மையம்:**

6. கலைமாமணி திரு.குன்னக்குடி வைத்தியநாதன் அவர்களின் தலைமையில் 1992 ஆம் ஆண்டு ஜுன் திங்களில் தோற்றுவிக்கப்பட்ட இராக ஆராய்ச்சி மையம், இராக ஆராய்ச்சிப் பணிகளைச் செவ்வனே நடத்தி வருகின்றது. இம்மையத்தில் இராக ஆராய்ச்சிப் பணிகளுக்காக ரூ.3 இலட்சத்தை அரசு 1994-95 ஆண்டு மானியமாக வழங்கியது. இதுகாறும் ரூ.9 இலட்சம் மானியமாக வழங்கப் பெற்றுள்ளது.

**குச்சுப்புடி கலைக் கழகத்திற்கு நிதியுதவி:**

7. குச்சுப்புடி கலைக்கழகம், அம்மரபின் நாட்டியக் கலையின் பெருமையினைப் பரப்பி வருகிறது. 'சர சாகர மதனம்' எனும் நாட்டிய நாடகத்தைக் காணொளிப் பதிவு செய்ய அக்கலைக் கழகத்திற்கு அரசு ரூ.10 இலட்சத்தை மானியமாக வழங்கியுள்ளது.

**நாட்டுப்புறக் கலைப்பயிற்சி ஆராய்ச்சி மையம்:**

8. தமிழகத்தில் பாரம்பரியப் பண்பாட்டுப் பெருமைகளையும், வாழ்வியல் நெறிமுறைகளையும் எடுத்தியம்பும் ஏட்டில் எழுதாக்கலை வடிவங்களாக நாட்டுப் புறக் கலைகள் விளங்குகின்றன. நாட்டுப்புறக் கலைக் கூறுகளைக் கண்டறிந்து, ஆராய்ந்து, ஊக்குவித்து மேம்பாடடையச் செய்யும் வகையில் சென்ற ஆண்டில் மதுரை மாநகரில் நாட்டுப்புறக் கலைப் பயிற்சி ஆராய்ச்சி சங்கம் நிறுவப்பட்டது. இவ்வாராய்ச்சிப் பணிகளுக்காக மதுரை காமராஜர் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் டாக்டர் விஜயலட்சுமி நவநீதகிருஷ்ணன் மற்றும் நவநீதகிருஷ்ணன் அவர்களுக்கு அரசு ரூ.5 இலட்சம் மானியமாக வழங்கியுள்ளது.

LEGISLATIVE ... TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

**தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரிகள்:**

அரசு இசைக்கல்லூரிகள் சென்னையிலும், மதுரையிலும் கோயம்புத்தூரிலும் அமைந்து உள்ளன. சென்னை அரசு இசைக் கல்லூரியில் குரலிசை, கருவியிசை, ஆடற்கலை ஆகிய துறைகளில் பயிற்சி அளிக்கப் பெறுகிறது. கடம், கஞ்சிரா, மோர்சிங், நட்டுவாங்கம், முதுகலை இசைக்கலைமணி, கிராமியக் கலைமணி ஆகிய வகுப்புகள் தொடங்கப்பெற்று, பயிற்சியளிக்கப்பட்டு வருகின்றன. சென்னை, தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரியில் முழுநேர வகுப்புகளில் 289 மாணாக்கர்களும் மாலை நேர வகுப்புகளில் 175 மாணாக்கர்களும் இசை பயின்று வருகின்றனர். புகழ் வாய்ந்த இசைப் பேராசிரியர்கள் தனி நிலையில் பெருந்தகையாளர்களாக அமர்த்தப்பெற்று மாணவர்களுக்கு இசைப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

*பயிற்சி உதவித்தொகை:*

2. இசைக்கல்லூரிகளில் நாதசுரம், தவில், கடம், கஞ்சிரா, மோர்சிங் ஆகிய பிரிவுகளில் பயிற்சி பெறும் மாணவர்களுக்குப் பயிற்சிக் காலத்தில் திங்கள்தோறும் அரசின் உதவித்தொகையாக ரூ.100 வழங்கப் பெற்று வருகின்றது. நட்டுவாங்கம் பயிலும் மாணவிகளுக்கு திங்கள் தோறும் அரசின் உதவித் தொகையாக ரூ.150 வழங்கப் பெற்று வருகின்றது.

*தமிழிசை மூவர் விழா:*

3. தமிழிசைக்குத் தொண்டு புரிந்த திரு.முத்துத்தாண்டவர், திரு.மாரிமுத்தாப்பிள்ளை, திரு. அருணாசலக் கவிராயர் ஆகியோரின் பிறந்த இடமான சீர்காழியில் அப்பெருமக்களின் நினைவு நாளினைக் கொண்டாடும் வகையில் மூன்று நாட்கள் 'தமிழிசை மூவர் விழா' அரசின் உதவியுடன் ஆண்டுதோறும் சிறப்புற நடத்தப் பெறுகிறது.

*ஆடல் அரங்கேற்ற விழா:*

4. இசைக்கல்லூரியில் நாட்டியம் பயின்று சான்றிதழ் பெற்று, பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள 10 மாணவிகளுக்கு ஆண்டுதோறும் ஆடல் அரங்கேற்ற நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப் பெறுகிறது. அவ்வகையில் கடந்த ஆண்டு 10 மாணவியரின் ஆடல் அரங்கேற்ற நிகழ்ச்சி நடத்தப்பெற்றது.

*மரபிசையில் சிறப்புப் பயிற்சி:*

5. சென்னை தமிழ்நாடு இசைக்கல்லூரி மாணவர்களுக்கான பாடத் திட்டத்தில் தொன்மைத் தமிழ் இசைப்பாடல்களாகிய தேவாரம்,

திருவாசகம், திருப்புகழ், திருப்பாவை மற்றும் கீர்த்தனைகள் அடங்கியுள்ளன. தமிழிசையின் மரபு குன்றாமல் மாணவர்களுக்கு இவ்விசைப் பாடல்களைக் கற்பிக்கும் வகையில் இரண்டு வருகை விரிவுரையாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டு தமிழிசையினைப் பயிற்றுவித்து வருகின்றனர்.

இசைக் கருவிகள் ஒப்பாய்வுப் பயிற்சி:

6. சென்னை தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரியில் பயிலும் மாணாக்கர்கள் தற்பொழுது கடம், கஞ்சிரா, மோர்சிங், நாதசுரம், வீணை, மிருதங்கம், வயலின், தவில் போன்ற பயிற்சி பெறுகின்றனர். இந்தியாவில் பிற மாநிலங்களிலும் வெளிநாடுகளிலும் உள்ள இசைக்கருவிகளின் இயல்புகளைத் தெரிந்துகொண்டு நம்நாட்டு இசைக்கருவிகளோடு ஒப்பீடு செய்து மரபு இசையினை மெருகூட்டும் வகையில் பயிற்சியளிக்க சென்னை அரசு இசைக்கல்லூரியில் தற்கால இசை ஒப்பீட்டுப் பிரிவு அமைத்து இப்பரிவு மாணாக்கர்களுக்குப் பயிற்சியளிக்க ஒரு பகுதிநேர ஆசிரியர் நியமனம் செய்யவும் அதற்குத் தேவையான இசைக்கருவிகள் வாங்கவும் ஒப்பளிப்பு பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சிலம்புக்கூடம் கட்டப்பெறுமை:

7. தற்பொழுது சென்னை தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரியில் பரதநாட்டியம் மற்றும் நட்டுவாங்கம் வகுப்புக்கள் நடத்துவதற்கு பெரிய வகுப்பு அறைகளில்லாமல், ஏற்கனவே உள்ள சிறிய வகுப்பறைகளில் நடத்தப்பெற்று வருகின்றன. இதன் தொடர்பாக பாதநாட்டியம் மற்றும் நட்டுவாங்கம் பயிலும் மாணவிகள் இட வசதியின்மை காரணமாக ஆடல் பயிற்சியினை மேற்கொள்வதில் மிகவும் இடர்படுகின்றனர் என்பதனைக் கருத்தில் கொண்டு பெரிய வகுப்புறைகளைக் கொண்ட ஒரு சிலம்புக் கூடத்தை 1995-96 ஆம் ஆண்டில் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

பழந்தமிழ் இசைக்கீர்த்தனைகளை புத்தகவடிவில் வெளியிடல்:

8. பழந்தமிழ் மற்றும் கிடைத்தற்கரிய இசைக் கீர்த்தனைகளுக்கு தற்பொழுது அதற்குரிய சுரதாளக் குறிப்புக்களுடன் கூடிய நூல் வெளியீடு ஏதுமில்லை. இதன் காரணமாக குறிப்புக்கள் மேற்கொள்வது மற்றும் பாடத்திட்டம் அமைப்பது தொடர்பாகப் பழந்தமிழ் இசைக்

கீர்த்தனைகளை அவற்றின் சுரதாளக் குறிப்புகளுடன் தேடுவதில் மிகுந்த இடர்பாடு உள்ளது. எனவே பழந்தமிழ் இசைக் கீர்த்தனைகளை அவற்றின் சுரதாளக் குறிப்புக்களுடன் தொகுத்து, வரும் ஆண்டில் சிறு புத்தக வடிவில் வெளியிட அரசின் ஒப்புதலுடன் திட்டமிடப் பட்டுள்ளது.

9. தஞ்சாவூரில் 5-1-95 இல் நடைபெற்ற எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டின் நிறைவு விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் காரைக்கால் அம்மையார் அவர்கள், தமது தமிழ்ப் பண்களால் வகுத்துத் தந்த இசைமுறைதான் பல்வேறு திராவிட மொழிகளில் இன்றைய இசை வளர்ச்சிக்கு அடிப்படையாக விளங்குவதால், அவ்வம்மையாரை, “தென்னக இசையின் தாய்” என இனி அழைக்கலாம் என அறிவித்துள்ளதற்கு இணங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

*அரசு இசைக்கல்லூரி, மதுரை:*

10. மதுரை அரசு இசைக் கல்லூரியில் குரலிசை, கருவியிசை, இசையியல், ஆடற்பயிற்சி, இசை ஆசிரியர் பயிற்சி ஆகிய துறைகள் இயங்கி வருகின்றன. முழுநேர வகுப்புகளில் 100 மாணாக்கர்கள் இசை பயின்று வருகின்றனர். மேலும் இவ்வாண்டிலிருந்து மாலை நேர இசைக்கல்லூரி தொடங்கப்பட உள்ளது.

*அரசு இசைக்கல்லூரி, கோயமுத்தூர்:*

11. சென்னையிலும் மதுரையிலும் அமைந்துள்ள இசைக்கல்லூரிகள் மட்டிலுமே இசைத் துறையில் மிகப் பல மாணவர்களை உருவாக்குவதற்குப் போதாது எனக் கருதி, கோயமுத்தூரில் புதிதாக இசைக்கல்லூரி ஒன்றை அரசு தோற்றுவித்தது. இக்கல்லூரியில் குரலிசை, வீணை, வயலின், பரதநாட்டியம் ஆகிய துறைகளில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது. தற்போது 106 மாணாக்கர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

**அரசினர் கலைத் தொழில் கல்லூரிகள்:**

சென்னையில் படைத்துறை மருத்துவராகத் திகழ்ந்த டாக்டர் அலெக்சாண்டர் அண்டர் 1850-இல் ஓவிய கைவினைத் தொழிற் பள்ளியைச் சென்னையில் தோற்றுவித்தார். புகழ் பொலிந்த இந்த ஓவிய கைவினைத் தொழிற் பள்ளியை 1852-இல் அரசு ஏற்றுக்கொண்டது. கல்வித்துறை, தொழில் வணிகத் துறைகளின் பொறுப்பில் இயங்கிவந்த ஓவிய கைவினைத் தொழிற் பள்ளி 1963-இல் கல்லூரி நிலைக்கு

மேம்படுத்தப் பெற்றது. சென்னையிலும், குடந்தையிலும் இக்கல்லூரிகள் அமைந்துள்ளன. சென்னை அரசினர் கலைத் தொழில் கல்லூரிக்கு தன்னாட்சி நிலை இந்த கல்வி ஆண்டு முதல் வழங்கப்பட்டுள்ளது.

2. சென்னை, குடந்தையில் அமைந்த கலைத் தொழிற் கல்லூரிகளில் வண்ணம், சிற்பம், திரைக்கலை வடிவமைப்பு, ஆடை அணிகலன்தொழிலியல் வடிவமைப்பு, தொழிலியற் சுடுமண் வடிவமைப்பு ஆகிய பிரிவுகளில் பட்டக் கல்விக்குரிய பயிற்சிகள் அளிக்கப் பெறுகின்றன. சென்னை அரசினர் கலைத் தொழில் கல்லூரியில் 80 மாணவர்களும், குடந்தைக் கல்லூரியில் 50 மாணவர்களும் ஆண்டுதோறும் பயிற்சிக்கெனச் சேர்க்கப் பெறுகின்றனர்.

*அரசு கட்டடச் சிற்பக் கல்லூரி, மாமல்லபுரம்:*

3. கல்லெல்லாம் கலை பேசும் கலைப் பெருமை வாய்ந்த மாமல்லையில், மரபு சான்ற சிற்பங்களை வடித்தல், செப்புத் திருமேனிகள் வடிவமைத்தல், கட்டடக்கலைப் பயிற்சி ஆகிய கலைப் பிரிவுகளில் பட்டக் கல்விக்குரிய பயிற்சிகளை மாணவர்கள் பெறுகின்றனர். ஆண்டுதோறும் பட்டயப் படிப்பில் 45 மாணவர்கள் பயிற்சிக்கெனச் சேர்க்கப் பெறுகின்றனர்.

4. கலைத் தொழிற் கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் அனைவருக்கும் படிப்புதவித் தொகை வழங்கப் பெறுகிறது. தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழுவும் இக்கல்லூரிகளில் பயிலும்தகுதி வாய்ந்த மாணவக் கைவினைக் கலைஞர்கள் ஓவியப் பணி மேற்கொள்ளவும் சிறப்புப் பயிற்சிப் பெறவும் ஆண்டுதோறும் படிப்புதவித் தொகை வழங்கி வருகிறது.

**கலைக் கண்காட்சி:**

5. சென்னை, குடந்தையிலுள்ள அரசு கலைத் தொழிற் கல்லூரிகளிலும் மாமல்லபுரம் சிற்பக் கல்லூரியிலும் பயிலும் மாணவர்களின் திறமைகளை எடுத்துக்காட்டும் வகையில் அவர் தம் படைப்புகளை மக்கள் அறியும் வகையிலும், கலைக் கண்காட்சியை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், மைய சங்கீத நாடக அகாதமியின் நோக்கங்களை மாநில அளவில் நிறைவேற்றுவதற்காகவும், தொன்மை வாய்ந்த தமிழகக் கலைகளைப் போற்றிப் பாதுகாக்கவும், மாநில அரசால் தோற்றுவிக்கப் பெற்ற தன்னாட்சி பெற்ற கலை நிறுவனமாகும். இந்நிறுவனத்தால் நிறைவேற்றப்பெறும் அனைத்துத் திட்டங்களுக்கும் அரசு மானியம் அளித்து ஊக்குவித்து வருகிறது. இயல், இசை, நாடகம், நாட்டியம், நாட்டுப்புறக் கலைகள் ஆகியவற்றை தமது மாநிலப் பண்பாட்டு மரபுப் போக்கில் இம்மன்றம் போற்றி வளர்த்து வருகிறது.

**கலைமாமணி விருது:**

2. கலைத்துறையில் அரிய பணியாற்றிய புகழ்மிக்க கலைஞர்களைப் பாராட்டுகின்ற வகையில் இம்மன்றத்தால் 'கலைமாமணி' விருது வழங்கப்பெறுகிறது. இதுவரை 884 கலைஞர்களுக்கு 'கலைமாமணி' விருதுகள் வழங்கப் பெற்றுள்ளன. தமிழகத்துக் கலைஞர்களுக்கு மட்டும் வழங்கப்பட்டுவந்த இவ்விருதினை அரசு தற்பொழுது நமது நாட்டில் உள்ள எல்லா கலைஞர்களுக்கும் விரிவுபடுத்தியுள்ளது. புகழோடு வாழ்ந்து மறைந்த 228 கலைப் பேரறிஞர்களின் திருவுருவப்படங்கள் 'கலைமாமணி' விருது வழங்கும் விழாவின்போது திறந்து வைக்கப்பெற்றுக் காக்கப் பெறுகின்றன. கலைமாமணி விருது பெற்ற நலிவுற்ற கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் வகையில் 147 கலைஞர்களுக்கு ரூ. 1,000-மும், 17 கலைஞர்களுக்கு ரூ. 5000-மும் பொற்கிழியாக இதுவரை வழங்கப்பெற்றன. கலைத் தொண்டாற்றிடும் தனியார் கலை நிறுவனங்களையும், செம்மையுறச் செயற்பட்டுவரும் நாடகக் குழுக்களையும் பாராட்டும் வகையில் 17 கலை நிறுவனங்களுக்கும், 10 நாடகக் குழுக்களுக்கும் நினைவுப் பரிசுகள் வழங்கப்பெற்றன.

**மாநிலங்களுக்கிடையே பண்பாட்டுப் பரிமாற்றம்:**

3. தேசிய ஒருமைப்பாட்டு உணர்வை மேம்படுத்தவும், இந்தியப் பண்பாட்டு மரபினைப் பல்வேறு மாநில மக்களும் அறிந்துகொள்ள உதவும் வகையிலும், இம்மன்றம் மைய சங்கீத நாடக அகாதமியுடன் இணைந்து மாநிலங்களுக்கிடையேயான பண்பாட்டுப் பரிமாற்றத் திட்டத்தைச் செயற்படுத்தி வருகிறது. ஒவ்வோராண்டும் கலைக்

குழுக்களைத் தமிழகத்திலிருந்து மூன்று மாநிலங்களுக்கும் கலை நிகழ்ச்சிகளை நடத்துவதற்காக அனுப்புகிறது. மூன்று மாநிலங்களிலிருந்து தமிழகத்திற்குக் கலைக்குழுக்களை வரவேற்று மாவட்டாட்சியர்களின் உதவியுடன் கலை நிகழ்ச்சிகளை நடத்துகிறது. 1994-95 ஆம் ஆண்டில் தமிழகத்திலிருந்து ஜம்மு-காஷ்மீர் மாநிலத்திற்கு ஒரு கலைக்குழுவை அனுப்பிவைத்து, மேலும் மணிப்பூர் மாநிலத்திற்கு ஒரு கலைக் குழுவினை அனுப்பவும் மன்றம் ஏற்பாடு செய்து வருகின்றது. இத்திட்டத்தின்கீழ் ஜம்மு-காஷ்மீர் மாநிலத்திலிருந்து ஒரு நாட்டியக் குழுவினை மன்றம் வரவேற்றுக் கலை நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளது. மேலும் மணிப்பூர் மாநிலக் கலைக்குழுவினை வரவேற்று, சென்னை மற்றும் தமிழகத்தின் மாவட்டத்தின் தலைநகர்களில் சிறப்புற நடத்திட மன்றம் ஏற்பாடு செய்து வருகின்றது.

**நலிந்த கலைஞர்களுக்கு நிதியுதவி:**

4. வாழ்நாள் முழுவதும் வளர் கலைக்குத் தொண்டாற்றிய நலிந்த கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்கப் பெறுகிறது. இதுகாறும் 3367 கலைஞர்கள் திங்கள்தோறும் ரூ. 400 வீதம் நிதியுதவியாக பெறுகின்றனர். மேலும் 300 கலைஞர்களை மன்றம் தேர்ந்தெடுத்து நிதியுதவி வழங்க உள்ளது.

**மறைந்த கலைஞர்களின் குடும்பங்களுக்குப் பராமரிப்பு நிதி:**

5. மறைந்த புகழ்மிக்க கலைஞர்களின் குடும்ப நலனுக்காக ரூ. 3,000 நிதியுதவியாக வழங்கப் பெறுகிறது. இதுகாறும் 92 குடும்பங்கள் இந்நிதிப் பயன் பெற்றுள்ளன.

**புதிய நாடகப் படைப்பிற்குத் தயாரிப்பு மானியம்:**

6. நாடக மேடையினை மேம்பாடு அடையச் செய்யும் பொருட்டு சிறந்த தமிழ் இலக்கியத்திலுள்ள சீரிய காட்சிகளை நாடகமாக அரங்கேற்றும் தொழில் முறை நாடகக் குழுக்களுக்கு ரூ. 10,000 முதல் 17,000 வரை மானியமாக வழங்கும் திட்டம் செயற்படுத்த பெறுகிறது. சென்ற ஆண்டில் இத்திட்டத்திற்காக, அரசு மன்றத்திற்கு நல்கையாக வழங்கியுள்ள ரூ. 3 இலட்சம் தொகையில் 12 சிறந்த நாடகங்கள் தொழில் முறை நாடகக் குழுவால் உருவாக்கப்பெற்று அந்நாடகங்கள் மன்றத்தின் ஆதரவில் சென்னையில் சிறந்த முறையில் மேடையேற்றம் செய்யப் பெற்றன. இந்நாடகங்களைத் தமிழகத்தில் பல இடங்களில் நடத்த மன்றம் ஏற்பாடு செய்து வருகின்றது.

**புத்திளம் கலைஞர்களை ஊக்குவித்தல்**

7. பரதநாட்டியம், இசை ஆகிய கலைத்துறைகளில் பயிற்சி பெற்ற புத்திளம் கலைஞர்களை அறிமுகம் செய்யும் வண்ணம் அக்கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகளை நடத்துவதற்கெனத் தனிப்பட்ட கலை நிறுவனங்களுக்கு மானியம் வழங்கப்பெறுகிறது. இத்திட்டத்தின்படி தமிழகத்தில் தெரிவு செய்யப்பெற்ற கலை நிறுவனங்களின் வாயிலாக, கலை நிகழ்ச்சிகளை நடத்துவதற்குச் சிறந்த கலைஞர்களுக்கு வாய்ப்பளிக்கப் பெற்றுள்ளது. 1994-95-ம் ஆண்டில் 35 கலைஞர்களுக்கு வாய்ப்புகள் வழங்கப்பெற்றன.

**கலைமாமேதைகளின் நினைவு விழாக்கள்**

8. கலையைப் போற்றிப் புகழால் உயர்ந்த கலைப் பேரறிஞர்களான கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன், பாபநாசம் சிவன், சங்கரதாசு சுவாமிகள், பம்மல் சம்பந்தனார், டி.என். இராசரத்தினம் ஆகியோரின் நினைவு நாள்களை மன்றம் ஆண்டுதோறும் நினைவு கூர்கிறது. விரைவில் காரைக்குடி, திண்டுக்கல், கரூர், திருப்பூர், சேலம், கோவை ஆகிய இடங்களில் இந்நினைவு நாள்களை கொண்டாட மன்றம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. இவ்வாண்டு இசைப் பேரறிஞர் அரியக்குடி ராமனுஜ ஐய்யங்கார் நினைவு நாளையும் கொண்டாட மன்றம் கருதியுள்ளது.

**சலங்கை நவராத்திரி விழாக்கள்**

9. பரதக்கலைஞர்களை ஊக்குவிக்கும் பொருட்டு ஆண்டுதோறும் சலங்கை விழா, நவராத்திரி விழா ஆகிய விழாக்களை மன்றம் பல இடங்களில் நடத்தி வருகிறது. இவ்வாண்டு புகழ்பெற்ற மற்றும் இளம் இசைக்கலைஞர்களுக்கு வாய்ப்பளிக்கும் வகையில் நவராத்திரிப் பண்டிகையை முன்னிட்டு 5 நாள்களுக்கு இசை விழா சென்னையில் நடத்தப் பெற்றுள்ளது. மேலும் சலங்கை விழாவினைக் கன்னியாகுமரி, திருச்செந்தூர், தென்காசி, வத்திராயிருப்பு, மதுரை ஆகிய இடங்களில் நடத்திட மன்றம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

**நாடகக்குழுக்களுக்குப் பேருந்து கட்டணச் சலுகை**

10. நாடகக்குழுக்களுக்குத் தனி ஊக்கம் அளிக்கும் வகையில் நாடகக்குழுக்கள் நாடகம் நடத்த அரசு பேருந்துகளில் பயணம் செய்யும்போது அவர்களுக்கு 50 விழுக்காடு கட்டணச் சலுகை அனுமதிக்கப் பெறுகிறது.

### அருங்கலை நூல்களை வெளியிட நிதியுதவி அளித்தல்

11. அரிதாகி உள்ள அருங்கலை நூல்களை வெளியிடவும் நூலாசிரியர்களுக்கு மன்றம் நிதியுதவி வழங்கி வருகிறது. இதுகாறும் இத்திட்டத்தின் கீழ் 91 நூல்கள் நிதியுதவி பெற்று வெளியிடப் பெற்றுள்ளன.

### கலை நிறுவனங்களில் பயிற்சி பெறும் திறமைமிக்க ஏழை மாணவர்களுக்கு படிப்பு உதவித் தொகை வழங்குதல்

12. அரசு இசைக் கல்லூரிகளில் பயிலும் ஏழ்மை நிலையில் உள்ள திறம் படைத்த மாணவர்கட்குப் படிப்பு உதவித் தொகை வழங்கும் திட்டத்தினை மன்றம் செம்மையுறச் செயல்படுத்தி வருகின்றது.

## தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு

தமிழ்நாட்டில் ஓவிய, சிற்பக் கலை வளர்ச்சித் தொடர்பாக மைய லலித கலா அகாதமியுடன் இணைந்து செயற்படும் நிலையில் தமிழக அரசால் 1975 இல் தோற்றுவிக்கப்பெற்ற ஓவிய நுண்கலைக்குழு, நுண்கலை வளர்ச்சிக்காகப் பணியாற்றுகிறது. இந்நிறுவனத்திற்கு அரசு வழங்கும் மானியத் தொகையிலிருந்து திட்டங்கள் நிறைவேற்றப் பெறுகின்றன.

2. தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் கலைக்காட்சிகள், கலை வல்லுநர்களின் செயல் விளக்கப் பொழிவுகள், மாணவர் களிடையே ஓவியப் போட்டிகள், பயிலரங்குகள் ஆகியவற்றை நடத்தி அதன் மூலம் மக்களிடையே நுண்கலை பற்றிய விழிப்புணர்ச்சியையும் கலையார்வத்தையும் ஏற்படுத்தி வருகிறது.

3. தகுதி வாய்ந்த திறமைமிக்க இளங்கலைஞர்களின் கலைத் திறமைகளை வெளிப்படுத்தவும், இத்திறமைகளை மேம்படுத்திக் கொள்ளவும், ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும் வகையில் தமிழகத்தில் பல்வேறு பகுதிகளிலும் இளங்கலைஞர்களின் பயிலரங்கு நடத்தப் பெறுகிறது. தமிழ்நாட்டில் உயர்நிலை, மேனிலைப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்காக, கல்வி ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவனத்துடன் இணைந்து ஓவிய ஆசிரியர்களுக்கான சிறப்புப் பயிற்சியையும் நடத்துகிறது.

4. ஓவிய சிற்பக் கலைஞர்களின் கலைப்படைப்புகளை ஆண்டுதோறும் காட்சியாக அமைத்து, கண்காட்சியில் சிறந்து விளங்கும் அரிய படைப்புகளை உருவாக்கிய கலைஞர்களுக்கு விருதுகள் அளிக்கப் பெறுகின்றன. ஆண்டுதோறும் சிறந்த ஓவிய, சிற்பப் படைப்பாளிகள் இருவர் தேர்ந்தெடுக்கப் பெற்று 'கலைச் செம்மல்' விருது வழங்கப் பெறுகின்றனர். அவ்வாறே பாரம்பரியக் கலைப் படைப்புகள் கண்காட்சிகள் அமைத்து சிறந்து விளங்கும் படைப்புகள் உருவாக்கிய கலைஞர்களுக்கு விருதுகளும் சிறந்த பாரம்பரியக் கலைப்படைப் பாளர்கள் இருவருக்கு அவர்கள் இத்துறையில் செய்துள்ள பணிகளைப் பாராட்டும் வகையில் விருதுகளும் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டனர். நுண்கலைகள் பயிலும் இளங்கலைஞர்கள் ஓவியச் சிற்பக் கலைகளில் ஆய்வு மேற்கொள்ளவும், இராஜஸ்தானிலுள்ள பனஸ்தாலி நகருக்குச் சென்று சிறப்புப் பயிற்சி பெறுவதற்கு நிதியுதவி வழங்கப் பெறுகிறது. ஓவிய, சிற்பக் கலைஞர்களை ஊக்குவிக்கும் வகையில் கலைப்படைப்புகள் தனியரங்கச் சேமிப்பிற்காக வாங்கப்பெறுகின்றன. பல்வேறு கலைப் பிரிவுகளைச் சார்ந்த கலைஞர்களிடையே கருத்துப் பரிமாற்றம் அமையும் வண்ணம் ஆண்டுதோறும் கலைஞர்கள் உலா அரங்கையும் நடத்தி வருகிறது. தகுதிவாய்ந்த ஓவிய, சிற்பப் படைப்பாளர்களின் கலைத்திறமைகளை வெளிப்படுத்தும் வகையில் தமியர் (தனி நபர்) கண்காட்சியை நடத்தவும், நிதியுதவி வழங்கப்பெறுகிறது. மாநிலங்களுக்கிடையே நுண்கலைக்காட்சியும் அவ்வப்போது நடத்தப்பெறுகின்றது.

5. நலிந்த கலைஞர்கள் மானியம் பெறுவதற்காக விண்ணப்பங்களைக் குழு பரிந்துரை செய்கிறது. ஓவிய 'சிற்பத் துறையில் சிறப்புப் பணிபுரிந்துவரும் மூத்த கலைஞர்களுக்கும் இளங்கலைஞர்களுக்கும் மைய அரசு வழங்கும் விருதுத் தொகை பெறுவதற்காகவும் விண்ணப்பங்களைக் குழு பரிந்துரை செய்கிறது. ஓவிய, சிற்பக் கலை வல்லுநர்களின் உரைகளையும், செயல் விளக்கங்களையும் இக்குழு காணொலிப் பதிவும் செய்கிறது.

6. மைய லலித கலா அகாதமி இவ்வாண்டு நடத்திய எட்டாவது தேசியக் கலை விழாவில் ஓவிய நுண்கலைக் குழு பங்கு கொண்டதோடு ஐந்தாவது முறையாக இவ்வாண்டும் சிறந்த காட்சிக்கூட அரங்கிற்கான பரிசைப் பெற்றுள்ளது.

# தமிழ்நாடு ஜவகர் சிறுவர் இல்லம்

தமிழ்நாடு, ஜவகர் சிறுவரில்லம், பண்டித ஜவகர்லால் நேரு நினைவு நிதியிலிருந்து மைய அரசு வழங்கிய தொகை ரூ. 15.73 இலட்சங்களைக் கொண்டு தமிழக அரசால் 1994-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டுள்ளது. 1994-95-ம் ஆண்டும் சென்னை சிறுவர் இல்லத்தில் 890 மாணவர்களும், மதுரை, புதுக்கோட்டை, பொன்புதுப்பட்டி ஆகிய இடங்களில் முறையே 250, 150, 100 மாணவர்களும் பயன்பெறுகின்றனர். 4 மாநகராட்சிப் பள்ளிகளில் ஜவகர் சிறுவர் இல்லத்தால் நடனம், கைவினை ஆகிய வகுப்புகள் சிறப்பாக நடத்தப்பெறுகின்றன.

2. 1994 அக்டோபர்த் திங்களில் சேலம் நகரில் நடைபெற்ற அனைத்திந்திய 'ஜிம்னாஸ்டிக்ஸ்' போட்டியில் இந்நிறுவனத்தைச் சேர்ந்த 11 குழந்தைகளும், 1995 பிப்ரவரித் திங்களில் செகந்தரபாத்தில் நடைபெற்ற 'ஜிம்னாஸ்டிக்ஸ்' போட்டியில் 4 குழந்தைகளும் கலந்து கொண்டனர். நவம்பர் 14 ஆம் நாள் குழந்தைகள் தின விழா புதுதில்லியில் நடைபெற்றது. இவ்விழாவில் இந்நிறுவனத்தைச் சேர்ந்த 6 குழந்தைகள் கலந்துகொண்டனர். 1995 சனவரித் திங்களில் கல்கத்தாவில் நடைபெற்ற 'Better to live " முகாமில் இந்நிறுவனத்தைச் சேர்ந்த 4 குழந்தைகள் கலந்து கொண்டனர். 26-1-95 அன்று நடைபெற்ற குடியரசு தின அணி வகுப்பில் இந்நிறுவனத்தைச் சேர்ந்த 55 குழந்தைகள் கலந்துகொண்டனர்.

3. ஜவகர் சிறுவர் இல்லத்திற்கு 1990 ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் அரசு ரூ. 1 இலட்சத்தை மானியமாக வழங்கிவருகிறது. 1994-95 ஆம் ஆண்டிற்கான பகுதித் திட்டங்களில் ஜவகர் சிறுவர் இல்லத்திற்குத் தேவையான இசைக்கருவிகள் மற்றும் ஜிம்னாஸ்டிக்ஸ் பொருட்கள் வாங்க ரூ. 1 இலட்சம் மானியமாக அரசு வழங்கியுள்ளது.

4. இவ்வாறு இத்துறைகள் ஆட்சிமொழிச் செயலாக்கம், கலைநலம், மரபு, பண்பாட்டுக் கூறுகளை வளர்த்துக் காத்துப் பரப்பும் விழுமியப் பணிகளை முறையோடு ஆற்றி வருகின்றன.

# இணைப்பு - III

*(357 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க).*

## கோரிக்கை எண்: 29

## சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு

***1995-96***

### *அத்தியாயம்—1*

**முன்னுரை**

*கோரிக்கை எண்.29-ன் கீழ் 1995-96 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 50,76,403 ஆயிரங்கள் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுகிறேன்.*

*1.1* ஊனமுற்றோர் நலனைக் காப்பதில் தமிழ்நாடு எப்போதும் முன்னோடியாக இருந்து வந்துள்ளது. இந்தியாவிலேயே நமது மாநிலம்தான் ஊனமுற்றோர் நலனுக்காக விரிவான கொள்கை ஒன்றை முதன் முதலில் வகுத்துள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களால் 1994 ஆம் ஆண்டு டிசம்பர் 3 ஆம் நாள் அறிவித்து செயல்படத்தொடங்கிய இந்த விரிவான கொள்கையின் முக்கிய நோக்கம் ஊனத்தை இளம் வயதிலேயே கண்டறிதல், ஊனமுற்றோருக்குச் சிகிச்சை அளித்தல், தொழிலுதவி வழங்குதல், பொருளாதார உதவியளித்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு, அவர்களைத் தம்மைத்தாமே பேணிக்கொள்ளும் குடிமக்களாக்கி, சமுதாயத்தின் இணைந்த அங்கமாக அவர்களின் நிலைமையை மேம்படுத்துவதாகும். பார்வையற்றோர், காதுகேளாதோர், கை, கால் இயங்காதோர், மூளைவளர்ச்சி குன்றியோர், மனநோயுள்ளோர் ஆகியோருக்கான திட்டங்கள் வரவு செலவுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. உடல் ஊனமுற்றோருக்கான திட்டங்களை

மேற்கொள்ள இந்த அரசு, அரசு சாராத நிறுவனங்களுக்குப் (N.G.Os) பெரிதும் ஆதரவளிக்கும். ஊனமுற்றோருக்கான உதவித்தொகை திட்டத்தின்கீழ் 37,121 பேர் பயனடைந்து வருகின்றனர். 1995-96 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு மொத்தம் ரூ. 3.35 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. ஊனமுற்றோர் கண்ணியமானதொரு வாழ்க்கையை மேற்கொள்ள இவ்வரசு அவர்களுக்கு நல்ல பாதுகாப்பு வசதியும் அளிப்பதற்குத் தொடர்ந்து அதிக முக்கியத்துவம் கொடுக்கும்.

1.2 1994 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 9 ஆம் நாள் நடைபெற்ற மகளிர் கருத்தரங்கம் ஒன்றில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த மகளிர் குறித்த விரிவான கொள்கை பற்றி மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் அறிவர். சுயவேலைவாய்ப்பையும் நவீனப் பயிற்சியையும் அளிப்பதன் வாயிலாக மகளிருக்கு அதிகாரம் அளித்தல் என்ற முக்கியமான அம்சமும், மகளிர் பற்றிய இவ்வரசின் கொள்கையில் அடங்கும். இந்நோக்கத்தைக் கருத்திற்கொண்டே வேளாண்மை வளர்ச்சிக்கான அனைத்து நாட்டு நிதி (IFAD) யிலிருந்து உதவி பெறும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டத்திற்கு 1995-96 ஆம் ஆண்டிற்கான நிதியொதுக்கத்தை ரூ. 10 கோடி என்ற குறிப்பிடத்தக்க அளவுக்கு நாங்கள் உயர்த்தியுள்ளோம். இத்திட்டம் தற்போது தருமபுரி, சேலம், தென் ஆற்காடு-வள்ளலார், மதுரை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வட ஆற்காடு-அம்பேத்கார், திருநெல்வேலி-கட்டபொம்மன், காமராஜர் ஆகிய மாவட்டங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படும். 1995-96 ஆம் ஆண்டில் இத்திட்டத்தால் 16,100 மகளிர் பயனடைவர். நகர்ப்பகுதிகளில் பொருளாதார நிலையில் நலிவுற்ற பிரிவைச் சேர்ந்த மகளிருக்கு ரூ. 35 இலட்சம் செலவில் சுய வேலைவாய்ப்பு அளிக்கும் புதிய திட்டம் ஒன்றையும் நாங்கள் தொடங்கியுள்ளோம். 1995-96 ஆம் ஆண்டில் இத்திட்டத்தால் 3,500 மகளிர் பயனடைவர். அதிக மகளிர் பயனடையும் வகையில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் முனைப்பாகச் செயல்படுத்தப்படும். 1995-96 ஆம் ஆண்டில் சுய வேலைவாய்ப்புக்கான பல்வேறு வழி வகைகளின் கீழ் 1.50 இலட்சத்திற்கு மேற்பட்ட மகளிர்க்குப் பயன்தர வேண்டும் என்பது எங்களுடைய திட்ட இலக்காகும்.

1.3. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1993 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 14 ஆம் நாள் தொடங்கி வைத்த குழந்தைகள் நலனுக்கான "புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 15 அம்ச திட்டத்தைச்" செயல்படுத்துவதில் இவ்வரசு கொடுத்துள்ள முக்கியத்துவத்தை மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் அறிவர். 15

அம்சத் திட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு அம்சத்தையும் செயல்படுத்துவதில் நாங்கள் தொடர்ந்து முன்னேற்றம் கண்டு வருகிறோம். இத்திட்டத்திலுள்ள அனைத்து அம்சங்களும் திட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்ட நாளுக்குள் நிறைவேற்றப்படும். கடந்த ஆண்டு தொடங்கப்பட்ட குழந்தை நலத் துணைத் திட்டம் *1995-96* ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படவுள்ளது. இதற்கான ஒதுக்கீடு ரூ. *768.62* கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கூறுகள் வருமாறு:

| | ஒதுக்கீடு (ரூபாய் கோடியில்) |
|---|---|
| பாதுகாப்பான மகப்பேற்றிற்கும் பிறந்த குழந்தையின் எடையை 3 கிலோவாக அதிகரிப்பதற்கும் வகை செய்தல். .. | *79.00* |
| தடுப்பூசி மூலம் தடுக்கக் கூடிய நோய்களை முற்றிலுமாக ஒழித்தல் .. | *4.84* |
| குழந்தை இறப்பு வீதத்தை உயிருடன் பிறந்த 1000 குழந்தைகளில் 30 என்ற அளவுக்கும் கீழ்க் குறைத்தல். .. | *6.67* |
| குழந்தைகளிடையே காணப்படுகிற கடுமையான சத்துக் குறைவையும் ஓரளவு சத்துக் குறைவையும் குறைத்தல் .. | *328.84* |
| நுண் ஊட்டச் சத்துக் குறைபாடுகளை முற்றிலுமாக ஒழித்தல் .. | *5.35* |
| அனைத்து மருத்துவ மனைகளையும் மகப்பேறு நிலையங்களையும், மழலையர் சீராட்டும் நிலையங்களாக்குதல் .. | *8.52* |
| மகளிர் இளம் வயதில், அடிக்கடி தாய்மையடைவதைத் தடுத்தல் .. | *90.21* |
| அனைவர்க்கும் கட்டாயத் தொடக்கக் கல்வியளித்தல் .. | *90.17* |
| மகளிரின் எழுத்தறிவையும் நிலையையும் உயர்த்துதல். .. | *40.41* |

| | | ஒதுக்கீடு (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| குழந்தை நல மையங்களுக்குப் பாதுகாப்பான குடிநீர் வழங்குதலும் சிறந்த சுகாதார வசதிகள் செய்து கொடுத்தலும். | .. | 96.98 |
| குழந்தை தொழிலாளர் முறையை முற்றிலுமாக நீக்குதல். | .. | 0.13 |
| பெண்குழந்தை பாதுகாப்புத் திட்டத்தைச் செயல்படுத்துதல் | .. | 10.00 |
| பெண் சிசுக் கொலை என்ற சமுகக் கொடுமையை ஒழித்தல் | .. | 0.45 |
| குழந்தைப் பருவத்தில் ஊனமுறுதலைத் தடுத்தலும் மறுவாழ்வளிக்கும் பொருட்டு தொடக்க நிலையில் கண்டறிதலும் | .. | 6.80 |
| பிறவி இதய நோய்களைத் தொடக்க நிலையில் கண்டறிதல். | .. | 0.25 |
| **மொத்தம்—குழந்தை நலத் திட்டம்** | | **768.62** |

*1.4.* வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள கருவுற்ற பெண்களுக்கு மாதமொன்றிற்கு ரூ. *75* வீதம் நான்கு மாதங்களுக்கு ரூ. *300* உதவித் தொகையாக அரசு வழங்கிவருகிறது. இக்கால கட்டத்தில் இவர்களின் வருமான இழப்பை இது ஈடு செய்த போதிலும், இவர்களுக்குத் தேவையான சத்துணவை வழங்க இந்த உதவித் தொகை போதுமானதாக இல்லை. எனவே, இதுபோன்ற கருவுற்ற பெண்களுக்கு அருகிலுள்ள மதிய சத்துணவு மையத்தின் மூலம் சத்துணவு வழங்க நாம் முடிவு செய்துள்ளோம். இப்புதிய திட்டத்தின் கீழ் உதவித் தொகையாக ரூ. *300* பெறும் கருவுற்ற பெண்கள் அனைவருக்கும் நான்கு மாதங்களுக்கு, சத்துணவு மையத்தில் தினமும் ஒருமுறை சத்துணவு, இலவசமாக வழங்க வழி செய்யப்படும். இத்திட்டம் கருவுற்ற பெண்களில் சுமார் *2* இலட்சம் பேருக்குப் பயனளிக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

கருவுற்ற, பாலூட்டும் தாய்மார்களுக்கு நிதி உதவி அளிக்கும் திட்டம், *1995-96* ஆம் ஆண்டில் ரூ. *6* கோடி நிதி ஒதுக்கீட்டுடன் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

*1.5.* குழந்தை உய்விற்கு மட்டுமின்றி ஒவ்வொரு குழந்தையும் ஆரோக்கியமாகவும் திடகாத்திரமாகவும் வளரவேண்டுமென்பதே தமிழ்நாட்டின் உன்னத முயற்சி என்பதை உறுதி செய்வதற்காக, இவ்வரசு மேற்கொண்டுள்ள மாபெரும் முயற்சியை இம்மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் வரவேற்பர்.

*1.6.* பெண் சிசுக் கொலையைத் தடுத்தல், பெண் குழந்தைகளுக்குத் தொடர்ந்து ஆதரவளித்தல், "சிறியகுடும்பமே சிறந்தது" என்ற கோட்பாட்டை மேம்படுத்துதல் ஆகிய நோக்கங்களுடன் தொடங்கப்பட்ட புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா பெண் குழந்தை நலத் திட்டம் வியத்தகு வெற்றியை அடைந்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை, *14,781* குழந்தைகள் சேர்க்கப்பட்டுள்ளனர். இத்திட்டத்திற்கு *1995-96* ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. *4* கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா பெண் குழந்தை நலத்திட்டம் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. மேம்படுத்தப்பட்ட இத்திட்டத்தின் கீழ் அளிக்கப்படும் பலன்களாவன:-

| | | |
|---|---|---|
| பெண் குழந்தையின் முதல் பிறந்த நாளன்று | .. | ரூ. *800* மதிப்புள்ள *2* கிராம் எடையுள்ள தங்க மோதிரம் ஒன்று |
| பள்ளி சேர்ந்தவுடன் | .. | ரூ. *250/-* |
| ஆறாம் வகுப்பில் சேர்ந்தவுடன் | .. | ரூ. *500/-* |
| *9* ஆம் வகுப்பிலிருந்து *12* ஆம் வகுப்பு வரை ஒவ்வோராண்டும் *10* திங்களுக்கு திங்களொன்றுக்கு ரூ.*50/-* என்ற வீதத்தில் *4* ஆண்டுகளுக்குத் தொகை வழங்கல் | .. | ரூ. *2000/-* (*4* ஆண்டுகளில் வழங்கத்தக்கது) |
| *20* வயது நிறைவடைந்தவுடன் | .. | ரூ. *20,000/-* |

*1.7.* சத்துணவுத் திட்டத்தை, குறிப்பாக மதிய உணவுத் திட்டத்தைச் செயல்படுத்திவருவதில் தமிழ்நாடு ஒரு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. இத்திட்டத்தால் பள்ளிகளில் பயிலும் *60.97* இலட்சம் குழந்தைகளும், பாலர் பள்ளிகளில் பயிலும் *11.56* இலட்சம் சிறார்களும் பயனடைகின்றனர். பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்குச் சத்துணவு அளிக்க *1995-96* ஆம் ஆண்டில் ரூ. *233.10* கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினைப் படிப்படியாக விரிவுபடுத்த, மத்திய அரசு விருப்பங்கொண்டிருப்பதை மத்திய அரசின் வரவு-செலவுத் திட்டம் குறிப்பிடுகிறது. பள்ளிக் குழந்தைகளுக்கான விரிவுபடுத்தப்பட்ட சத்துணவுத் திட்டத்தை *1982-83* ஆம் ஆண்டிலிருந்தே தமிழ்நாடு செயல்படுத்திவந்துள்ளது.

இந்த வகையில் தமிழ்நாடு முன்னோடியாக விளங்குகிறது. இத்திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்த தேவையான நிதி உதவியை மத்திய அரசு அளிக்கும் என்று இந்த அரசு எதிர்பார்க்கிறது.

*1.8.* புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம், தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம் ஆகியவற்றுக்கான ஒட்டுமொத்த நிதியொதுக்கம் *1994-95* ஆம் ஆண்டில் ரூ. *345.36* கோடியாக இருந்தது. *1995-96* ஆம் ஆண்டில் *367.97* கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. *1994-95* ஆம் ஆண்டில் மாநிலத்திலுள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும், தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் ஆகியவை செயல்படுத்தப்பட்டிருப்பது குறித்து மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் பேருவகை அடைவர். *6* மாதம் முதல் *60* மாதங்கள் வரையிலான வயதுத் தொகுதியைச் சேர்ந்த குழந்தைகளின் வளர்ச்சியை முழுவதுமாகக் கண்காணித்தல், துணைச் சத்துணவு அளித்தல் ஆகிய பணிகளின் மூலம் தமிழ்நாடு பெருமை மிகு சாதனை படைத்துள்ளது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

## அத்தியாயம்—2

## மகளிர் நலம்

## மகளிருக்கான பொருளாதார திட்டங்கள்

### 2.1. தையல் கூட்டுறவு சங்கங்கள்

சமூக நலத்துறையின் கீழ் 77 மகளிர் தையல் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் மாநிலம் முழுவதும் இயங்கிவருகின்றன. "புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டத்தின்" மூலம் பயனடையும் ஒன்று முதல் எட்டாவது வகுப்பு வரை கல்வி பயிலும் பள்ளி மாணவ, மாணவியர்; பிற்படுத்தப்பட்டோர் நல இயக்ககக் கட்டுப்பாட்டின்கீழ் பயிலும், பள்ளி மாணவ, மாணவியர்; ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக் கட்டுப்பாட்டின்கீழ் பயிலும் மாணவ, மாணவியர் ஆகியோருக்கு இலவசமாக வழங்கப்படும் சீருடைகளை இந்த மகளிர் தையற் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் தைத்து வழங்குகின்றன. இச்சீருடை தைக்கும் பணியின் மூலம் 26,500 மகளிருக்கு வேலை வாய்ப்பு கிட்டியுள்ளது. இச்சங்கங்களின் ஒவ்வொரு உறுப்பினரும் மாதம் ஒன்றுக்கு ரூ. 400 முதல் ரூ. 500 வரையில் மூன்று அல்லது நான்கு மாதங்களுக்கு குடும்பத்திற்கு கூடுதல் வருமானமாக பெறுகின்றனர். 1994-95 ல் 63 இலட்சம் செட் சீருடைகள் தைத்து வழங்கும் பொறுப்பு சமூக நலத்துறையின் கீழ் இயங்கும் மகளிர் தையற் தொழில் கூட்டுறவு சங்கங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஏறக்குறைய மூன்று கோடியே எழுபத்தொன்பது இலட்சம் ரூபாய் தையல் கூலிக்காகவும், சேவை கட்டணத்திற்காகவும், துணி வெட்டுநர் மற்றும் அவரின் உதவியாளர் சம்பளத்திற்காகவும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. ஒரு சாக்கு கட்டி தயாரிக்கும் கூட்டுறவு சங்கம் தையல் கூட்டுறவு சங்கமாக மாற்றப்பட்டுள்ளது. தற்போது 78 தையல் கூட்டுறவு சங்கங்கள் இயங்கி வருகின்றன.

### 2.2. காலணி தயாரிப்போர் கூட்டுறவு சங்கங்கள்

காலணிகளை தயாரிப்பதற்காக சமூக நலத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் 38 மகளிர் காலணி கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. சுமார் இரண்டாயிரம் ஆதிதிராவிடர் மகளிர், இச்சங்கங்கள் மூலம் பயனடைகின்றார்கள். காலணிகளைத் தயாரிப்பதற்கு சங்க உறுப்பினர் அனைவருக்கும் ஒரு மாத காலம் பயிற்சி அளிக்கப்பட்டது.

பயிற்சி காலத்தில் ஒவ்வொரு மகளிருக்கும், ரூ. 200/- உதவித் தொகையும், காலணிகளைத் தயாரிப்பதற்காக ரூ. 250/- மதிப்புள்ள கருவிகள் மற்றும் உபகரணங்கள் இலவசமாக அரசால் வழங்கப்பட்டுள்ளன. அரசின் தேவைக்காக செய்யப்படும் காலணிகளைத் தவிர மகளிர் தங்களது வருவாயை பெருக்கிக் கொள்ள உதவும் வகையில் சுய வேலை வாய்ப்பின் மூலம் காலணிகள் உற்பத்தி செய்ய ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

## 2.3. எழுது பொருள் தயாரிக்கும் கூட்டுறவு சங்கங்கள்

இத்துறையின் கீழ் எழுது பொருள் தயாரிக்கும் மகளிர் கூட்டுறவு சங்கங்கள் 13 செயல்பட்டு வருகின்றன. இக்கூட்டுறவுச் சங்கங்களில் சுமார் 700 மகளிர் உறுப்பினராக சேர்ந்துள்ளனர். எழுதுபொருள் கூட்டுறவு சங்கங்கள் தங்கள் வியாபாரத்தை அபிவிருத்தி செய்யும் பொருட்டு 7 சங்கங்களுக்கு அச்சு இயந்திரமும், 12 சங்கங்களுக்கு இரு கோடிடும் இயந்திரங்களும், 12 சங்கங்களுக்கு காகித உறை தயாரிக்கும் இயந்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன. மதிய உணவு திட்டத்தின் கீழ் பராமரிக்கப்படும் அனைத்து பதிவேடுகளும் இத்துறையின் கீழ் இயங்கி வரும் சங்கங்களால் தயாரிக்கப்படுகின்றன.

இவை தவிர, இலாபத்தில் இயங்காத 5 சாக்குகட்டி தயாரிப்பு கூட்டுறவு சங்கங்கள், எழுதுபொருள் கூட்டுறவு சங்கங்களாக மாற்றப்பட்டு தற்போது மொத்தம் 18 சங்கங்கள் வாயிலாக மகளிருக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

## 2.4. கயிறு பொருள் தயாரிக்கும் கூட்டுறவு சங்கம்

கயிறு மற்றும் கயிறு சம்பந்தப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் பணியில் மகளிர் கூட்டுறவு சங்கம் ஒன்று இத்துறையின் கீழ் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள நல்லூரில் இயங்கி வருகின்றது. இச்சங்கம் உற்பத்தி நிலையமாகவும், மகளிருக்கு கயிறு தயாரிக்கும் பயிற்சி அளிக்கும் நிலையமாகவும் செயல்பட்டு வருகிறது. இது தவிர இங்கு 125 மகளிருக்கு தொடர்ந்து வேலை வாய்ப்பும் அளிக்கப்படுகிறது. இச்சங்கம் ஆலங்குடி, நீடாமங்கலம், மன்னார்குடி ஆகிய இடங்களில் கிளைகளையும் கொண்டு உள்ளது. மேலும் இலாபகரமாக இயங்காத தஞ்சாவூர் மாவட்டத்தில் இயங்கி வந்த சாக்கு கட்டி கூட்டுறவு சங்கம் ஒன்றும், கயிறு பொருட்கள் தயாரிக்கும் சங்கமாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. தற்போது இரண்டு கயிறு தயாரிக்கும் கூட்டுறவு சங்கங்கள் இயங்கி வருகின்றன.

## 2.5. சாக்கு கட்டி தயாரிக்கும் கூட்டுறவு சங்கங்கள்

இத்துறையின் கீழ் 19 சாக்குகட்டி தயாரிப்போர் கூட்டுறவு சங்கங்கள் செயல்பட்டன. இதில் இலாபகரமாக இயங்காத 8 சாக்கு கட்டி கூட்டுறவு சங்கங்கள் வேறு தொழில்களை மேற்கொண்டு லாபகரமாக இயங்கும் கூட்டுறவு சங்கங்களாக மாற்றி அமைக்கப்பட்டன. இந்த 19 கூட்டுறவு சங்கங்களில் 4 கூட்டுறவு சங்கங்கள் பிரத்தியேகமாக உடல் ஊனமுற்றோருக்கானது.

## 2.6. திரவ சோப்பு தயாரிக்கும் கூட்டுறவு சங்கம்

இந்த கூட்டுறவு சங்கம் 1987 ஆம் ஆண்டு செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டத்தில், நாராயணபுரத்தில் துவங்கப்பட்டது. ரூ. 52,800/-ஐ பங்கு மூலதனமாக கொண்டு இச்சங்கம் இயங்கி வருகிறது. இந்த சங்கத்தில் 25 மகளிர் உறுப்பினர்களாக உள்ளனர். சங்க உறுப்பினர்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்பு அளிக்கும் பொருட்டு தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சத்துணவு மையங்களுக்கும் சுத்திகரிப்பு தூள் (Cleaning powder) தயாரித்து வழங்க அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

சோப்பு தயாரிப்பதற்கு வேண்டிய மூலப்பொருட்களை உற்பத்தி செய்வதற்காக உண்ணத் தகுதியற்ற நெய்(ஸ்கம்) என்ற கழிவை வாங்கி அதனை திரவ வடிவத்தில், சோப்பு தயாரிப்பதற்கான மூலப் பொருளாக மாற்றி கதர் துறைக்கு விற்பனை செய்யப்படுகிறது. இதைத் தவிர நலிந்த ஒரு சாக்குகட்டி தயாரிக்கும் கூட்டுறவு சங்கமும், திருச்சிராப்பள்ளியில் சோப்பு, பினாயில் தயாரிக்கும் சங்கமாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

## 2.7. ஜவ்வரிசி மற்றும் அப்பளம் தயாரிக்கும் கூட்டுறவு சங்கம்

தருமபுரி மாவட்டத்திலுள்ள மாத்தூரில் ஜவ்வரிசி மற்றும் அப்பளம் தயாரிக்கும் தொழிற் கூட்டுறவு சங்கம் தொழில் வணிகத் துறையினரால் பதிவு செய்யப்பட்டு சமூக நலத்துறைக்கு 1992ல் மாற்றப்பட்டது. இந்த சங்கத்தில் சுமார் 35 ஏழை மகளிர் உறுப்பினர்கள் பயன் பெறுகிறார்கள்.

## 2.8. இறால் ஊறுகாய் தயாரிக்கும் கூட்டுறவு சங்கம்

இந்த சங்கம் 29.6.93ல் பதிவு செய்யப்பட்டு சென்னை இராயபுரத்தில் செயல்பட்டு வருகிறது. 50 மீனவ பெண் உறுப்பினர்கள் வேலை வாய்ப்பு பெறுவர்.

## 2.9. இணை உணவு தயாரிக்கும் கூட்டுறவு சங்கங்கள்

இத்துறையின் கீழ் 27 இணை உணவு தயாரிக்கும் தொழில் கூட்டுறவு சங்கங்கள் இயங்கி வருகின்றன. இதன் மூலம் 1900 மகளிருக்கு தொடர்ச்சியாக வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது. இச்சங்கங்கள் மூலம் தயாரிக்கப்படும் இணை உணவு ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித்திட்டத்தின் கீழ் இயங்கி வரும் மையங்களுக்கும், ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்ட மையங்களுக்கும் வழங்கப்படுகிறது. 1994-95 ஆம் ஆண்டில் சுமார் 12000 மெட்ரிக் டன் இணை உணவு தயாரித்து வழங்கப்பட்டுள்ளது.

## 2.10. அலங்கார பொருட்கள் தயாரிக்கும் தொழில் கூட்டுறவு சங்கங்கள்

திருநெல்வேலியில், இலாபகரமாக இயங்காத ஒரு சாக்குக்கட்டி கூட்டுறவு சங்கம் அலங்கார பொருட்கள் தயாரிக்கும் தொழிற் கூட்டுறவு சங்கமாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. 76 ஏழை மகளிர்கள் இச்சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ளனர். கற்றாழை மற்றும் வாழை நார் மூலம் அலங்கார பொருட்கள், பைகள், பொம்மைகள் போன்றவை தயாரிக்கப்படுகின்றன.

## 2.11. மகளிர் பயிற்சி மற்றும் உற்பத்தி நிலையங்கள்

(அ) 49 பயிற்சி மையங்களும், 6 உற்பத்தி நிலையங்களும் மகளிருக்காக இத்துறையின் மூலம் நடத்தப்படுகின்றன.

(ஆ) 41 தையல் பயிற்சி நிலையங்கள், 4 பனை ஓலை பயிற்சி நிலையங்கள், 2 கம்பளி பயிற்சி நிலையங்கள், ஒரு பாய் முடையும் பயிற்சி நிலையம், ஒரு மூங்கில் கைவினை பொருட்கள் பயிற்சி நிலையம் இத்துறையின் கீழ் செயல்படுகின்றன. மேலும் 1 சாக்குகட்டி உற்பத்தி மையம், இரண்டு மெழுகுவர்த்தி உற்பத்தி நிலையங்கள், ஒரு படுக்கை விரிப்பு மற்றும் துண்டு தயாரிப்பு நிலையம், ஒரு ஆயத்த ஆடை தயாரிக்கும் நிலையம், ஒரு துணி பொம்மை தயாரிக்கும் நிலையம், ஆகிய ஆறு உற்பத்தி மையங்கள் இத்துறையின் கீழ் செயல்பட்டு வருகின்றன. ஆண்டுதோறும் சுமார் 775 பெண்களுக்கு இப்பயிற்சி நிலையங்களின் மூலம் பயிற்சி அளிக்கப்படுகின்றது. சமூக நலத்துறையின் கீழ் உள்ள தையல் மற்றும் இதர தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிலும் மாணவிகளுக்கு சமூக நலத் துறையால் மாதம் ரூ.50/- வீதமும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையால் மாதம் ரூ.30/- வீதமும் உதவித் தொகை வழங்கப்படுகிறது. "டிரைசம்"

திட்டத்தின் கீழ் பயிற்சி பெறுவர்களுக்கும் மகளிர் பயிற்சி மற்றும் உற்பத்தி நிலையங்களில் கிடைக்கும் வசதிகளை பயன்படுத்திக் கொள்ள அரசு அனுமதித்துள்ளது.

**2.12. தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்து பயிற்சி அளித்தல்:**

இந்த திட்டத்தின் கீழ் தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்து பயிற்சி ஒவ்வொரு ஆண்டும் சுமார் 1400 பெண்களுக்கு அளிக்கப்படுகிறது. தட்டச்சு பயிற்சியாளர்களுக்கு ரூ.150/- வீதமும், சுருக்கெழுத்து பயிற்சியாளர்களுக்கு ரூ.220/- வீதமும் ஆண்டொன்றுக்கு உதவித் தொகை அளிக்கப்படுகிறது. 1995-96 ஆம் ஆண்டிற்கு ரூ.2.30 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் சுமார் 1400 பெண்கள் பயன் அடைய உள்ளனர்.

**மகளிருக்கு நிதியுதவி வழங்கும் திட்டங்கள்**

சமுதாயத்தில் நலிவுற்ற பெண்களுக்காக பல வகையான நிதியுதவி வழங்கும் திட்டங்களை திருமணத்திற்காகவும், தொடர் கல்விக்காகவும், சுயவேலை வாய்ப்புகளை பெறவும் இத்துறை செயல்படுத்தி வருகிறது.

**2.13 ஏழை விதவையரது மகள் திருமண நிதியுதவி திட்டம்.**

ஆண்டு வருமானம் ரூ.12000-க்கு குறைவாக பெறும் ஏழை விதவையரது மகளிர் திருமணத்திற்காக ரூ.2000/- வீதம் வழங்கப்படுகிறது. திருமண உதவி கோரும் மகளிர் 20 வயதிலிருந்து 30 வயதுக்குள் இருத்தல் வேண்டும். ஒரு மகளின் திருமணத்திற்கு மட்டுமே இவ்வுதவியினை பெற முடியும். 1995-96-ம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு ரூ.21.00 இலட்சங்களாகும்.

**2.14 மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம்.**

இத்திட்டத்தின் கீழ் 8ம் வகுப்பு மற்றும் அதற்கு மேலும் படித்த ஏழை பெண்களுக்கு திருமண உதவியாக ரூ.5000/- வழங்கப்படுகிறது. ஆனால் பழங்குடியின மகளிர் 5ம் வகுப்பு படித்திருந்தால் போதுமானது. இத்திட்டம் மகளிரின் கல்வி மேம்பாட்டிற்கு ஒரு வலுவான தூண்டுதலாக அமையும் என அரசு கருதுகிறது. மாநிலம் முழுவதும் கிராமங்கள் மற்றும் நகர்ப்புறங்களில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப் படுகிறது. இதற்கான நிபந்தனைகள் பின்வருமாறு:

(அ) திருமணம் செய்யும் காலத்தில் மணப்பெண் 20 வயது நிரம்பியவராக இருத்தல் வேண்டும். மற்றும் அவரது குடும்ப ஆண்டு வருமானம் ரூ.12,000/-க்கு குறைவாக இருத்தல் வேண்டும்.

(ஆ) சென்னை, மதுரை மற்றும் கோவை ஆகிய மாநகராட்சிகளில் மாநகராட்சி ஆணையரும், ஊரகங்களில் ஊராட்சி ஒன்றிய அலுவலர்களும், நகராட்சியில் நகராட்சி ஆணையரும், நகரியத்தில் தனி அலுவலரும் அனுமதிக்க அதிகாரமும், அந்தந்த மாவட்ட சமூக நல அலுவலர்கள் இதற்கான தொகையினை பெற்று வழங்கவும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இத்திட்டம் சீரியமுறையில் செயல்பட இவர்கள் பொறுப்பானவர்கள் ஆவார்கள். மாநில அளவில் சமூக நல இயக்குநர் திட்ட செயலாக்கத்திற்கு பொறுப்பானவர்.

இத்திட்டத்தின் கீழ் 1995-96ல், ரூ.5 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் 10,000 ஏழை மகளிர் பயனடைவர்.

**2.15. டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி அம்மையார் நினைவு மகப்பேறு உதவித்திட்டம்.**

வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பத்தை சார்ந்த பெண்களுக்கு பேறு காலத்திற்கு முன் இரு மாதங்களிலும், அதற்குப்பின் இரு மாதங்களிலும் அவர்களது வருமானத்தை ஈடுகட்ட, ஆதரவாக இத்திட்டத்தின் கீழ் நிதியுதவி வழங்கப்படுகிறது. முதல் 2 குழந்தைகளுக்கு மட்டுமே இந்த நிதி ஆதரவு வழங்கப்படும். விண்ணப்பதாரர் திருமணத்தின்போது 20 வயது நிரம்பியவராக இருத்தல் வேண்டும். மொத்த ஆண்டு வருமானம் ரூ.12,000/-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும். பேறு காலத்தின்போது குழந்தை பிறந்தாலும் இறந்தாலும் ரூ.300/- மொத்தமாக (மாதம் ரூ.75/- வீதம் 4 மாதங்களுக்கு) வழங்கப்படும். துணைமருத்துவ செவிலியரது சான்றிதழ் பெற்றவர் இந்நிதி உதவி பெற தகுதி உடையவராவர். ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள், நகரியங்கள் மற்றும் மாநகராட்சிகள் இத்திட்டத்தினை செயல்படுத்தும் அதிகாரம் உடையவை ஆகும். கருவுற்ற பெண்களுக்கு கிராம மருத்துவ செவிலியர், பல்நோக்கு சுகாதார பணியாளர் மூலமாக இத்தொகை வழங்கப்படும். மாநில அளவில் இத்திட்டத்தின் சீரிய செயலாக்கத்திற்கு சமூக நலத்துறை இயக்குநர் பொறுப்பானவர். இத்திட்டத்திற்கென 1995-96 நிதியாண்டில் ரூ.6 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சுமார் 2 இலட்சம் தாய்மார்கள் இத்திட்டத்தின் மூலம் பயன் பெறுவர். கருவுற்ற பெண்களுக்கு, அருகிலுள்ள மதிய சத்துணவு மையத்தின் மூலம் சத்துணவு வழங்க அரசு முடிவு செய்துள்ளது. இப்புதிய

திட்டத்தின்கீழ் உதவித் தொகையாக ரூ.300 பெறும் கருவுற்ற பெண்கள் அனைவருக்கும் 4 மாதங்களுக்கு சத்துணவு மையத்தில் தினமும் ஒருமுறை சத்துணவு இலவசமாக வழங்க வழி செய்யப்படும். இத்திட்டம் கருவுற்ற பெண்களில் ஆண்டுதோறும் சுமார் 2 இலட்சம் பேருக்கு பயனளிக்கும்.

**2.16 டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் திட்டம் (விதவை மறுமணத்திட்டம்)**

இத்திட்டம் விதவை மறுமணத்தை, தம்பதியருக்கு நிதியுதவி வழங்குதல் மூலம் ஊக்குவிக்கிறது. விதவையின் மறுமணத்தின் போது தம்பதியர் இருவரது பெயரிலும் ரூ.5000/-க்கான தேசிய சேமிப்பு பத்திரம் வழங்கப்படுகிறது. இத்திட்ட உதவி 20 வயது முதல் 30 வயதுடைய விதவைகளுக்கு மட்டுமே வழங்கப்படுகிறது. பயனடைவோர் அல்லது அவர்களது குடும்ப ஆண்டு வருமானம் ரூ.12,000/-க்குள் இருத்தல் வேண்டும். 1995-96ம் ஆண்டிற்கு சுமார் 196 தம்பதியர் பயன்பெறும் வண்ணம் ரூ.9.80 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2.17. ஆதரவற்ற பெண்களுக்கு திருமண உதவித்திட்டம்.**

ஆண்டு வருமானம் ரூ.12,000/-க்கு குறைவாக உள்ள குடும்பங்களிலுள்ள 20 வயது முதல் 30 வயதுக்கு இடைப்பட்ட ஆதரவற்ற பெண்கள் திருமணத்திற்கு பயனாளி ஒவ்வொருவருக்கும் ரூ.2000/- நிதியுதவி அளிக்கப்படுகிறது.. 1995-96ம் ஆண்டிற்கு ரூ.1.44 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2.18 தமிழக அரசு கலப்பு திருமண உதவித்திட்டம்**

இத்திட்டம் கலப்பு திருமணத்தை ஊக்குவிக்கிறது. கலப்புத் திருமணம் செய்து கொண்ட தம்பதிகளுக்கு திருமண செலவிற்காக ரூ.1000/- மற்றும் தேசிய சேமிப்பு பத்திரமாக ரூ.4000/-மும் ஆக மொத்தம் ரூ.5000/- வழங்கப்படுகிறது. தம்பதியர் இருவரது ஆண்டு வருமானம் ரூ.12,000/-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும். 1995-96ஆம் ஆண்டு 554 தம்பதியர் பயன்பெறும் வண்ணம் ரூ.27.70 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2.19. இலவச தையல் இயந்திரம் வழங்குதல்**

ஒவ்வொரு ஆண்டும் சுமார் 1000 தையல் இயந்திரங்கள் வறுமைக் கோட்டிற்கு கீழுள்ள விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள் மற்றும் ஊனமுற்ற ஆண், பெண் இரு பாலருக்கும் இலவசமாக

வழங்கப்படுகின்றன. இவர்கள் முறைப்படி தையல் தொழிலை சுயவேலை வாய்ப்பாக கொண்டு, தங்களது வருமானத்தை உயர்த்திக் கொள்கிறார்கள். 1995-96ஆம் ஆண்டிற்கு ரூ.12.35 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அரசு, சிறப்புத் திட்டமாக ரூ.75 இலட்சம் ஒதுக்கீடு செய்து 1995-96 ஆம் ஆண்டு 5000 தையல் இயந்திரங்களை நிலுவையில் உள்ள விண்ணப்பதாரர்களுக்கு வழங்க உத்தேசித்துள்ளது. இந்த ஆண்டு மொத்தம் ரூ.87.35 இலட்சம் இத்திட்டத்திற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2.20. விதவைகளின் குழந்தைகளுக்கு பாட நூல்கள் மற்றும் குறிப்பேடுகள் இலவசமாக வழங்குதல்.**

இலவச பாட புத்தகங்கள் மற்றும் நோட்டுப் புத்தகங்கள் வழங்கும் திட்டம் ரூ.12,000/-க்கு குறைவாக ஆண்டு வருமானம் பெறும் விதவைகளின் குழந்தைகள் பயன் பெறுவதற்காக ஏற்படுத்தப்பட்டது. ரூ.15 முதல் ரூ.190 வரை மதிப்புள்ள பாட புத்தகங்கள் மற்றும் நோட்டுப் புத்தகங்கள் அவர்கள் படிக்கும் வகுப்பிற்கேற்ப இலவசமாக வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் மொத்தம் 4,000 குழந்தைகள் பயன்பெறுகின்றனர். 1995-96 ஆம் ஆண்டுக்கு ரூ. 2.25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## துயருறும் பெண்களுக்கு நிறுவன ஆதரவு அளித்தல்

துயருறும் நிலையில் உள்ள பெண்கள், சமுதாயத்தில் நல்ல தகுதி நிலையை அடைய உதவி புரியும் வகையில், இத்துறை பல நிறுவனங்களை நடத்தி வருகிறது. இந்த நிறுவனங்கள் பெண்களின் உரிமையை அறியவும், திறமையை மேம்படுத்திக் கொள்ளவும் உதவுகின்றன.

**2.21. சேவை இல்லங்கள்.**

(அ) இத்துறை தாம்பரம், கடலூர், தஞ்சாவூர், சேலம், திருநெல்வேலி, காரைக்குடி, ஆகிய 6 இடங்களில் 6 சேவை இல்லங்களை நடத்தி வருகின்றது. ஏழை விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள், மற்றும் ஆதரவற்றோருக்கு கல்வி வசதி அளிப்பதே இவற்றின் நோக்கமாகும். படிப்பை தொடர ஆர்வமில்லாதோருக்கு தையல், பூ வேலை, துணி நெய்தல், மற்றும் வீட்டு பராமரிப்பு போன்றவற்றில் பயிற்சி அளிக்கப்படுகிறது. தையல் மற்றும் பூ வேலையில் ஓராண்டு பயிற்சி முடித்தவர்கள், அரசின் தொழிற் நுட்பத் துறையால் நடத்தப்படும் தேர்வுகள் எழுத தகுதி உடையவராவர்.

(ஆ) சேவை இல்லங்களில் பயிலும் உள்ளுறை மாணவிகளுடன், இரண்டு குழந்தைகள் தங்குவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. இவர்கள் தொடர்ந்து மூன்று ஆண்டு காலம் மேற்படி இல்லத்தில் இருக்கலாம். உள்ளுறை மாணவிகளுக்கு மாதம் ரூ.150/-, குழந்தைகளுக்கு ரூ.120/- வீதமும் வழங்கப்பட்டு வருகின்றது. சீருடைக்காக மாணவிகளுக்கு ரூ.150/-ம் குழந்தைகளுக்கு ரூ.100/-ம் வழங்கப்படுகிறது. இல்ல மாணவிகளுக்கு ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு மாணவியர்களுக்கு ரூ.35/- வீதமும், 6ம் வ்குப்பிலிருந்து 8-ம் வகுப்பு வரை படிக்கும் மாணவிகளுக்கு பாடநூல்கள் மற்றும் குறிப்பேடுகள் வாங்குவதற்கு ரூ.50/- வீதமும் 9 மற்றும் 10ம் வகுப்பு மாணவிகளுக்கு ரூ.90/- வீதமும் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகின்றது.

(இ) தாம்பரம் மற்றும் கடலூர் இல்லங்களில் கலை பாடங்களை கொண்ட மேல்நிலை வகுப்புகள் ஒப்புதலளிக்கப்பட்ட 60 உள்ளுறைவோருடனும், தஞ்சாவூர் சேவை இல்லத்திற்கு அறிவியல் பாடங்களுடன் ஒப்புதல் அளிக்கப்பட்ட 60 உள்ளுறைவோருடனும் நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு உள்ளுறைவோருக்கும் ஒரு மாதத்திற்கு பயிற்சி தொகை தலா ரூ.150/-ம், புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகள் வாங்குவதற்காக ஒவ்வொரு உள்ளுறைவோருக்கும் வருடத்திற்கு தலா ரூ.190/-ம் வழங்கப்படுகிறது. உடல் ஊனமுற்றோருக்காக தனியாக ஒரு பிரிவு தாம்பரம் சேவை இல்லத்தில் இயங்குகிறது. இப்பிரிவில் 30 பெண்களும் 20 குழந்தைகளும் உள்ளனர்.

(ஈ) தாம்பரம், கடலூர் மற்றும் தஞ்சாவூர் சேவை இல்லங்களில் தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்து செயல்க பிரிவு இயங்குகிறது. ஒவ்வொன்றிலும் 20 பயிற்சியாளர்களுக்கு ஒரு வருட பயிற்சி அளிக்கப்படுகின்றது. பயிற்சிக்கு பின் அவர்கள், அரசு தேர்வு எழுதலாம். சேவை இல்லத்துடன் இணைக்கப்பட்ட தையல் பிரிவில் பயிற்சி பெறும் ஒவ்வொரு பயிற்சியாளருக்கும், ஓராண்டு பயிற்சி காலத்தில் தலா ரூ.250/- வழங்கப்படுகிறது.

(உ) இத்துறையில் சேவை இல்லங்கள் மூலம் 10 ஆம் வகுப்பு தேறிய மகளிர் பல நோக்கு சுகாதார பணியாளர் பயிற்சிக்காக பரிந்துரை செய்யப்படுகிறார்கள். பயிற்சி காலம் ஒன்றரை ஆண்டு ஆகும். இதுவரை சுமார் 2000 மகளிர் இப்பயிற்சிக்காக பரிந்துரை செய்யப்பட்டுள்ளார்கள். தொழிற் பயிற்சி பாடங்களுடன் மேல்நிலை வகுப்புகள் காரைக்குடி, திருநெல்வேலி மற்றும் தாம்பரம் சேவை இல்லங்களில் 1994-95ஆம் ஆண்டில் துணி மற்றும் வடிவமைப்பு; செவிலியர்; மற்றும் ஆய்வக தொழில் நுட்பப் பயிற்சி வகுப்புகள் முறையே துவக்கப்பட்டன.

கணிப்பொறி பயிற்சி 1995-96ஆம் வருடத்தில் தஞ்சை சேவை இல்லத்தில் துவங்கப்பட உள்ளது. செவிலியர் பயிற்சி கடலூர் சேவை இல்லத்திலும், துணி மற்றும் வடிவமைப்பு பயிற்சி சேலம் சேவை இல்லத்திலும் துவங்கப்பட உள்ளது. இதன் மூலம் ஒவ்வொரு பாட திட்டத்திலும் 30 பெண்கள் பயனடைவர். 1995-96ஆம் நிதி ஆண்டிற்கு ரூ.91.38 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2.22. தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் சேவை இல்லங்கள்

(அ) அரசு நிதியுதவியுடன் காந்தி கிராமத்திலுள்ள கஸ்தூரிபா சேவிகாஸ்ராமத்திலும், ஈரோட்டிலுள்ள கஸ்தூரிபா தேசிய நினைவு அறக்கட்டளையிலும், மற்றும் மதுரையிலுள்ள சேவாஸ்ரமத்தினாலும் சேவை இல்லங்கள் தொடங்கி நடத்தப்பட்டு வருகின்றன.

(ஆ) காந்தி கிராமத்திலுள்ள சேவை இல்லத்தில் 120 மாணவிகளுக்கும் மதுரை மற்றும் ஈரோட்டிலுள்ள சேவை இல்லங்களில் தலா 40 மாணவிகளுக்கும் இரண்டாண்டு குறுகிய கால 10ஆம் வகுப்பு பயிற்சி அளிக்கப்படுகிறது. இவர்கள் ஒவ்வொருவருக்கும் மாதம் ரூ.75/-வீதம் உதவித்தொகை வழங்கப்படுகிறது. ஒரு பட்டதாரி ஆசிரியர், ஒரு தமிழ் ஆசிரியர் ஆகிய இருவருக்கான ஊதியத் தொகை ஒவ்வொரு சேவை இல்லத்திற்கும் மானியமாக வழங்கப்படுகிறது. சமூகத்தில் மிகவும் பின்தங்கிய மகளிருக்காக தட்டச்சு, சுருக்கெழுத்து மற்றும் செயலக பிரிவு நடத்தும் சென்னை “ஸ்திரி சேவா மந்திர்” என்னும் நிறுவனத்திற்கு மானியம் வழங்கப்படுகிறது. 1995-96ஆம் ஆண்டிற்கு ரூ.1.65 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## 2.23. ஆசிரியர் பயிற்சிப் பள்ளி

60 மகளிர் பயிலும் வண்ணம் ஒரு ஆசிரியர் பயிற்சிப் பள்ளி தாம்பரம் சானடோரியத்தில் செயல்பட்டு வருகிறது. 20 சேவை இல்ல மாணவிகளும், 20 ஆதரவற்றோருக்கான அரசு பராமரிப்பு இல்ல மாணவிகளும், 5 கணவனால் கைவிடப்பட்டவர்களும், 5 விதவைகளும், 5 ஆதரவற்ற பெண்களும், மற்றும் 5 உடல் ஊனமுற்ற பெண்களும் இப்பயிற்சி நிலையத்தில் சேர்க்கப்படுகின்றனர்.

பயிற்சி காலத்தில் பயிற்சி பெறும் ஒவ்வொருவருக்கும் மாதந்தோறும் ரூ.150/- வீதம் உதவித் தொகை வழங்கப்படுகிறது. ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் வருடத்திற்கு ரூ.150/- உடை செலவினத்திற்கு வழங்கப்படுகிறது. 1995-96ஆம் ஆண்டிற்கு ரூ.8.83 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2.24. பணிபுரியும் மகளிர் விடுதிகள்

பணிபுரியும் பெண்களுக்கு, அவர்களது பணியிடத்திற்கு அருகாமையிலேயே பாதுகாப்புடன் கூடிய சிக்கனமான உறைவிடம் தேவைப்படுகிறது. பணிபுரியும் பெண்களில் குறிப்பாக ரூ.3000/-க்கு மிகாமல் மாத வருமானம் பெறும் நடுத்தர வருவாய் வர்க்கத்தினரின் பாதுகாப்பு மற்றும் நியாயமான வாடகையுடன் கூடிய இருப்பிடத்தினை தெரிவு செய்யும் பிரச்சனைக்கு தீர்வு காணும் வகையில் அரசு, சென்னையில் இரண்டும்; கடலூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, மதுரை, ஓசூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் ஒன்று வீதமும், எட்டு பணிபுரியும் பெண்கள் விடுதிகள் ஏற்படுத்தியுள்ளது. இந்த விடுதிகளில் உள்ள மொத்த இருப்பிட வசதி 390 ஆகும். இவ்விடுதி பணியாளர்களான ஒரு கண்காணிப்பாளர், இரண்டு சமையலர்கள், ஒரு அலுவலக உதவியாளர், ஒரு காவலர் மற்றும் ஒரு துப்புரவாளர் ஊதியத்திற்கான மொத்த செலவையும் அரசு ஏற்றுக் கொள்கிறது. உணவுச் செலவு, கட்டிட வாடகை, மின் கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள் உள் உறுப்பினர்களிடமிருந்து சம அளவில் ஈடு செய்யப்படுகிறது. ரூ. 14.60 இலட்சம் 1995-96-ம் ஆண்டிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2.25. பணிபுரியும் மகளிர் விடுதி கட்ட நிதியுதவி அளித்தல்:

தொண்டு நிறுவனங்கள், உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்களால், பணிபுரியும் மகளிர் விடுதி கட்டிடம் கட்டுவதற்கான மொத்த செலவில், 75% மத்திய அரசால் மானியமாக வழங்கப்படுகிறது. மொத்த மதிப்பீட்டில் 15% அல்லது ரூ. 35,000 இவற்றில் எது குறைந்த தொகையோ அத்தொகை விண்ணப்பத்தின்பேரில் மாநில அரசால் மானியமாக வழங்கப்படுகிறது. மீதித் தொகையை நிறுவனமே ஏற்றுக் கொள்ளவேண்டும். இத்திட்டத்தை பயன்படுத்த விரும்பும் நிறுவனங்கள் கட்டிடம் கட்ட சொந்தமாக நிலம் வைத்திருக்க வேண்டும். இந்நிறுவனங்கள் மாநகராட்சி, நகராட்சியின் முன் அனுமதி பெற்றிருக்க வேண்டும். இதே பணிக்காக பிற அரசிடமிருந்தோ, நிறுவனங்களிட மிருந்தோ உதவிகள் பெற்றிருத்தல் கூடாது. கட்டிடம் கட்டப்படும் நிலத்தின் மதிப்பில் 50% மத்திய அரசால் மானியமாக அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் மத்திய, மாநில அரசுகளின் நிதியுதவியுடன் 1994-95 வரை 64 பணிபுரியும் மகளிர் இல்ல கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன. 1995-96 ஆம் ஆண்டிற்கு பணிபுரியும் மகளிர் இல்ல கட்டிடம்

கட்டுவதற்காக மானிய தொகைக்கென ரூ. 0.35 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2.26. மகளிர் மன்றங்கள்:**

அ) ஊரக மகளிரை அவர்களது பொருளாதார விளிம்புகளை நோக்காது, மகளிர் மன்றங்களில் ஒன்றாக கொண்டுவர ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்தின் கீழும் 30 மகளிர் மன்றங்கள் வீதம் தமிழ்நாடெங்கும் 11,520 மகளிர் மன்றங்கள் நடைபெறுகின்றன. அவர்களுக்குள்ளேயே தேர்வு செய்யப்பட்டு ஒரு கன்வீனர் நியமிக்கப்படுகிறார். இம்மகளிர் மன்றங்கள் ஊரக பெண்களிடையே கல்வி, பெண்களை காக்கும் சட்டங்கள் குறித்த ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தவும், அவர்களது பொழுதுபோக்கு நேரத்தை பயிற்சி நேரமாக மாற்றி, அவர்களது பொருளாதாரத்தை உயர்த்தவும் பாடுபடுகின்றன. முகாம்கள் நடத்தவும், பெண்களுக்கு உணவுகளை பதப்படுத்துவது, குழந்தை வளர்ப்பு, சுத்தம், சுற்றுப்புற சுகாதாரம், சத்துணவு ஆகியவற்றில் பயிற்சி அளிக்கவும்; கல்வி சுற்றுலாவிற்காகவும், சமூக கல்வியின் கீழ் புத்தகம் வாங்கி வழங்குதல், ஆகியவற்றிற்காக ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ரூ. 13,000 ஒவ்வொரு வருடமும் சமூக நல நிதியாக வழங்கப்படுகிறது. கிராமப்புற மகளிர் பொருளாதார தடையை தகர்த்து வெளிவர வேண்டுமென்பதே இம்மன்றத்தின் நோக்கமாகும். 1995-96 ஆம் ஆண்டிற்கு ரூ. 49.83 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆ மகளிர் மன்றங்களை ஊக்குவிக்கும் பொருட்டு செயல்படும் மகளிர் மன்றங்களுக்கு கடந்த ஆண்டு முதல் தலா ரூ. 2000 வீதம் பரிசு வழங்கப்படுகிறது. 1995-96 ஆம் ஆண்டிற்காக, ரூ. 1.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

**2.27 வழிகாட்டி மையம்:**

ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்ட சமூக நல அலுவலகத்தில் வழிகாட்டி மையம் இயங்கி வருகிறது. இவ்வழிகாட்டி மையம் முக்கியமாக விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் ஆகியவர்களுக்கு அரசு சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் வங்கி கடன் பெற்றுத் தருகிறது. வழிகாட்டி மையம், கணவனை இழந்த கைம்பெண்களுக்கு கிடைக்க வேண்டிய ஓய்வூதிய நிலுவை, ஆயுள்

காப்பீட்டுத் தொகை மற்றும் பிராவிடன்ட் பண்ட் தொகை ஆகியவை கிடைப்பதற்கும், இதர துறைகளுடன் தொடர்பு கொண்டு அவர்களுக்கு வழிகாட்டி உதவி புரிகிறது. இதுவல்லாமல் பெண்கள் மற்றும் குழந்தைகளை அரசு சேவை இல்லங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசு அனாதை குழந்தைகள் நல மையம் ஆகியவற்றில் சேர்க்க உதவி செய்கிறது. மேலும் 1995-96 ஆம் நிதியாண்டிற்காக ரூ. 30.68 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**2.28 மகளிர்க்கான சுய வேலை வாய்ப்புத்திட்டம்:**

ஏழை மகளிரது பொருளாதார நிலையை உயர்த்தும் வகையில் 1995-96 நிதியாண்டில் ரூ. 35 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனால் 3,500 பெண்கள் பயனடைவார்கள். இவர்கள் சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் பெட்டிக்கடை, இட்லிகடை, காய்கறி கடை, பழக்கடை, ஒயர் பின்னல், பிளாஸ்டிக் கூடை பின்னல், மூங்கில் கூடை பின்னல் போன்ற சுய வேலை வாய்ப்புகள் துவங்க வகை செய்யப்படுகிறது.

**2.29 தமிழ்நாடு மகளிர் நல பாதுகாப்புக்குழு:**

மகளிர் நலன்களைப் பாதுகாக்கவும்,மகளிரின் சமுதாய நிலை தொடர்பான பொதுப் பிரச்சினைகளை நோக்கவும், அது குறித்து அரசுக்கு தகுந்த நடவடிக்கை எடுக்க பரிந்துரை செய்யவும் தமிழ்நாடு மகளிர் நல பாதுகாப்புக்குழு நீதிபதி திரு. செங்கோட்டுவேலன் அவர்களின் தலைமையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இக்குழு இதுவரை பத்து முறை கூடியுள்ளது.

**2.30 "மகிளா சமிரிதி யோஜனா" (மகளிர் மேம்பாட்டு திட்டம்)**

"மகிளா சமிரிதி யோஜனா" என்கின்ற கிராமப்புற மகளிரிடையே அஞ்சல் அலுவலகங்கள் மூலம் சேமிப்புக் கணக்கு துவங்கும் திட்டம் சென்ற ஆண்டு மத்திய அரசால் துவங்கப்பட்டது. இத்திட்டம் தொடங்கிய முதலாண்டிலேயே, அதிக கணக்குகளை ஆரம்பித்து முன்னிலை வகித்ததற்காக, மத்திய அரசு தமிழகத்தைப் பாராட்டி முதல் பரிசாக ரூ. 3.50 இலட்சத்தை வழங்கியுள்ளது.

## தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம்

## (மகம்)

***2.31*** மகம் என்னும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம், தமிழ்நாடு மகளிரை மேம்படுத்தும் குறிக்கோளுடன், தமிழ்நாடு அரசினால் டிசம்பர் திங்கள் 1983-ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. இக்கழகத்தின் பங்கு மூலதனத்தில் மத்திய அரசும் அங்கம் வகிக்கிறது. இன்றைய தேதியில் மாநில அரசும், மத்திய அரசும் முறையே ரூ. 40.00 இலட்சம் மற்றும் ரூ. 38.42 இலட்சம் பங்கு மூலதனமாக இக்கழகத்திற்கு வழங்கியுள்ளன. தற்பொழுது மகம் மேலும் தன்னுடைய குறிக்கோள்களை 1994-ஆம் ஆண்டு விரிவுபடுத்தி மகளிர் மேம்பாட்டுத் திட்டங்கள் தவிர குழந்தை மேம்பாட்டுத் திட்டங்களையும் செயல்படுத்த ஏற்பாடு செய்துள்ளது.

மகத்தின் முக்கிய குறிக்கோள் மிகவும் பின்தங்கிய, ஒதுக்கப்பட்ட மகளிரின் திறமையை வளர்ச்சியடைய செய்வதேயாகும். மகளிர் தங்களுடைய வாழ்க்கைத் தரத்தை வளப்படுத்த திறமை கொண்டவர்களாய் இருப்பினும் அதற்கான சாத்தியக்கூறுகள் கிடைக்காமையால் அவர்கள் வாழ்க்கையை திறம்பட அமைத்துக் கொள்ள முடியவில்லை. மகம் அவர்களிடம் மறைந்திருக்கும் திறமையை வெளிப்படுத்தி தகுந்த சாத்தியக்கூறுகளை வழிவகுத்து, வழங்கி அவர்கள் முன்னேற வழி வகுக்கின்றது.

**மகத்தினுடைய செயல்திறன் கீழ்க்கண்ட நோக்கங்களைக் கொண்டது**

தன்னுடைய பல்வேறு வளர்ச்சித் திட்டங்களில் பெண்கள் சம உரிமையுடன் பங்கு கொள்ள வழி செய்வது;

பல்வேறு நிறுவனங்களை (அரசு மற்றும் அரசு சார்பற்ற நிறுவனங்கள்) மகளிர் மேம்பாட்டு திட்டங்களில் ஈடுபடச் செய்வது;

அரசு சார்பற்ற நிறுவனங்களுடன் சேர்ந்து ஒருமித்த கருத்துக்களை அடையாளம் கண்டு பெண்கள் முன்னேற்றத்திற்கு உதவுவது;

அரசு சார்பற்ற நிறுவனங்களுடன் பரந்த நோக்கத்தினுடனே செயல்படுவது;

கொள்கை திறனாய்வு செய்வது மற்றும் திட்டங்கள் தொடர்பான செயல்களை சரிபார்ப்பது;

பெண்கள் வளர்ச்சிக்கு தூண்டுகோலாக இருக்கும் முறைசாரா கடன்வசதி திட்டங்களை ஆராய்ந்து மதிப்பிடுதல்;

விவசாயம் மற்றும் விவசாயம் சாரா தொழில்கள் மூலம் பெண்கள் வருமானம் ஈட்டுவதற்கு வாய்ப்புகளை ஏற்படுத்துவது.

மகம், வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் சுமார் 38,294 மகளிருக்கு மொத்த மதிப்பீட்டு தொகையான ரூ. 32.55 கோடியில், ரூ. 21.20 கோடி மானியமாகவும் மற்றும் மீதமுள்ள ரூ. 11.35 கோடியை வங்கி கடனாகவும் 31-3-94 ஆம் ஆண்டு முடிய வழங்கி உதவி புரிந்துள்ளது. 1994-95 ஆம் ஆண்டு வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் சுமார் 15,700 மகளிருக்கு மொத்த ஒதுக்கீட்டு தொகையான ரூ. 23.28 கோடியில், ரூ. 13.01 கோடி மானியமாகவும், மீதமுள்ள ரூ. 10.27 கோடி வங்கிக் கடனாகவும், வழங்கி உதவி புரிந்துள்ளது.

## 1995-96 ஆம் ஆண்டிற்கான திட்டங்கள்

### 2.32 தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம்-விவசாய வளர்ச்சிக்கான பன்னாட்டு நிதி நிறுவன உதவியுடன்

மகம், "தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம்" என்னும் மாபெரும் திட்டத்தினை ரோமிலுள்ள விவசாய வளர்ச்சிக்கான பன்னாட்டு நிதி (IFAD) என்னும் நிதி நிறுவன உதவியுடன் தமிழ்நாட்டில் தர்மபுரி, சேலம், தென்னாற்காடு வள்ளலார், மதுரை மற்றும் இராமநாதபுரம் ஆகிய ஐந்து மாவட்டங்களில் செயலாற்றி வருகின்றது. ரூ. 88.69 கோடி மொத்த மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் இத்திட்டம் 7 ஆண்டுகளில் சுமார் 62,500 மகளிரை பயனடையச் செய்யும்.

### திட்டத்தின் குறிக்கோள்கள்:

இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள், மகளிருடைய சமூக மற்றும் பொருளாதார நிலையை உயர்த்தி அவர்களுடைய நிலையை குடும்பத்திலும் சமூகத்திலும் மேம்பாடு அடையச் செய்தல்.

### பயன் பெறத் தகுதி:

இத்திட்டத்தின்கீழ் 21 முதல் 55 வயதிற்குட்பட்ட வறுமைக் கோட்டின்கீழ் வாழும் குடும்பங்களைச் சார்ந்த மகளிர் உதவி பெற

தகுதியுள்ளவராவர். குடும்ப தலைமை பொறுப்பை ஏற்றுள்ள மகளிர், விதவையர் மற்றும் ஆதரவற்ற மகளிர் ஆகியோருக்கு இத்திட்டத்தில் முன்னுரிமை வழங்கப்படுகின்றது.

**செயல்முறை:**

அரசு சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் தேர்வு செய்யப்பட்ட மகளிர், சுமார் 20 பேர் கொண்ட குழுக்களாக ஏற்படுத்தப்படுகின்றனர். குழுக்களில் முறையான சிக்கனச் சேமிப்பு பழக்கத்தை உருவாக்கி, சேமித்தப் பணத்தை அவர்களிடையே சிறு கடன்கள் வழங்குவதற்கு ஊக்குவிக்கப்படுகிறது.

**வருவாய் ஈட்டும் தொழில்கள்:**

நிலம் தொடர்புடைய விவசாயம், தோட்டக்கலை, பயிர் வளர்ச்சி, பட்டு வளர்ச்சி, எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி ஆகிய தொழில்களுக்காக தனிப்பட்ட நில உடைமை அல்லது கூட்டு பட்டா முறையில் நிலம் உள்ள பெண்களுக்கு இத்திட்டத்தின் மூலம் உதவி வழங்கப்படுகிறது. இத்துடன் குத்தகை நிலம் பெற்றுள்ள பெண்களுக்கும் இத்திட்டம் உதவி அளிக்கின்றது. நிலமற்ற பெண்களுக்கு கறவை மாடு வளர்ப்பு, ஆடு வளர்ப்பு போன்ற கால்நடை தொழில்களுக்கும், குடிசை மற்றும் கிராம தொழில்களுக்கும் இத்திட்டத்தின் மூலம் உதவி அளிக்கப்படுகிறது.

மகம், வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள 16,100 மகளிர்க்கு ரூ. 2145.79 இலட்சம் ஆயத்த மதிப்பீட்டில், 1995-96 ஆம் ஆண்டு பயனடையும் வண்ணம் திட்டங்கள் தீட்டியுள்ளது. இதில் ரூ. 1228.89 இலட்சம் மானியமாக வழங்கப்பட உள்ளது. மீதமுள்ள ரூ. 916.90 இலட்சம் கடனாக நிதி வழங்கும் நிறுவனங்களிடம் இருந்து பெறப்பட உள்ளது.

**2.33 திறனை மேம்படுத்தும் பயிற்சித் திட்டங்கள்:**

மகம், 1989-90 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து பலதிறன் மேம்பாட்டுத் திட்டங்களை நடத்தி வருகின்றது. மகளிரை, மின்சார மற்றும் மின்னணு பராமரிப்பு, சிமெண்ட் வேலைப்பாடு, ஆய்வு கூட தொழில் நுட்ப பணியாளர், சிமெண்ட் கட்டைகள் தயாரிப்பு, கொத்தனார் தொழில், தெரிபொருள் பதிவு மற்றும் கணிப்பொறி இயக்கம் மற்றும் பல துறைகளில் பயிற்சி அளிக்கிறது. இப்பயிற்சிகள் மூலம் இம்மகளிர் சுயமாகவோ அல்லது நல்ல முறையில் மேம்பட்ட வேலையில் அமர ஏதுவாகின்றது.

## 2.34 அன்னை சந்தியா சிறுவர் கல்வி-பொழுதுபோக்கு வளாகம்:

அன்னை சந்தியா சிறுவர் கல்வி-பொழுதுபோக்கு வளாகப் பணிகள் இக்கழகத்தால் 1995-96 ஆம் ஆண்டு கோயமுத்தூரில் தொடங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் ஆண்டுதோறும் மகத்திற்கு ஏறத்தாழ ரூபாய் 31 இலட்சம் வருவாய் கிடைக்க வாய்ப்பு உள்ளது. இந்த வருவாயிலிருந்து உடல் ஊனமுற்றோர் மறுவாழ்வு இயக்ககத்திற்கு ஆண்டு தோறும் ரூபாய் 10.00 இலட்சம் வழங்கப்பட உள்ளது. இதனால் உடல் ஊனமுற்ற குழந்தைகள் பெருமளவு பயனடைவார்கள்.

## 2.35 அலுவலக கட்டிடம், பயிற்சி மற்றும் வாய்ப்பு வள மையம்

மாநில அரசு 5 கிரவுண்ட் நிலத்தினை மகத்திற்கு கிண்டியில் வழங்கியுள்ளது. ரோமில் உள்ள விவசாய வளர்ச்சிக்கான பன்னாட்டு நிதி நிறுவனம் கட்டுமான செலவிற்காக ரூ. 60.50 இலட்சம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளது.

## 2.36 எதிர்காலத் திட்டங்கள்:

தண்ணீர் வழிந்து வரும் மலைச்சாரல் மேம்பாட்டுத் திட்டம் (Watershed Development Project) மதுரை மாவட்டத்தில் ரூபாய் 2.46 கோடி மதிப்பீட்டில் உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டம் தொண்டு நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் 1995-96 ஆம் ஆண்டில் செயல்பட உள்ளது.

மகத்தின் மூலம் பன்னாட்டு விவசாய வளர்ச்சி நிதி (IFAD) என்னும் நிதி நிறுவன உதவியுடன் கூடிய தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம் தமிழ்நாட்டில் மேலும், வட ஆற்காடு அம்பேத்கார், திருநெல்வேலி கட்டபொம்மன் மற்றும் காமராஜர் ஆகிய மூன்று மாவட்டங்களில் விரிவுபடுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தின் மூலம் 70,000 மகளிர் ரூபாய் 11,987.73 இலட்சம் செலவில் ஏழு ஆண்டுகளில் பயன்படும் வண்ணம் திட்டங்களைத் தீட்டி செயல்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## அத்தியாயம்-3

## குழந்தைகள் நலம்

***3.1.*** குழந்தைகள் உடல் நலத்தையும், சத்துணவு பெறும் நிலைமையையும், நன்கு பாதுகாத்து அவர்களின் மனத்திறனை, மன ஆற்றலை வளர்க்கும் நோக்குடன் தமிழ்நாடு அரசு, திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறது. நோயாலும், சத்துணவு பற்றாக்குறையினாலும் ஏற்படும் இளம் வயது இறப்பினை குறைத்து, நமது மாநிலத்தில் ஒருங்கிணைந்த சத்துணவும், உடல் நலம் பேணும் வசதிகளும் வழங்கும் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இத்திட்டங்களின்கீழ் குழந்தையின் உடல் வளர்ச்சியை அவ்வப்போது கவனித்தல், அவசியமாயின் அருகிலுள்ள மருத்துவ மையங்களுக்கு அனுப்பி மேல் பரிசோதனை செய்தல், இணை சத்துணவு வழங்குதல், முன்பருவக்கல்வி வழங்குதல் ஆகிய பணிகள் அடங்கும். சத்துணவு, மருத்துவம், முன்பருவக்கல்வி ஆகியவை மறுக்கப்பட்ட நிலையில் வாழும் குழந்தைகளுக்கு முழுமையாக வழங்க முயற்சிகள் எடுப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

### 3.2. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்:

இத்திட்டம் தமிழ்நாட்டில் *1-7-1982* முதல் கிராமப்புறங்களிலும் *15-9-1982* முதல் நகர்ப்புறங்களிலும், தொடங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது *29,496* குழந்தைகள் நல மையங்களும், *2004* பள்ளி மையங்கள் நகர்ப் புறங்களிலும், *36,556* பள்ளி மையங்கள் கிராமப்புறங்களிலும் நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்தில் *103* குழந்தை நல மையங்கள் மலைவாழ் பகுதியினர் மற்றும் பழங்குடியினர் நலனுக்காக நடைபெற்று வருகின்றன. ஊட்டச்சத்து, முன்பருவகல்வி, சுகாதாரப்பாதுகாப்பு ஆகியவை இத்திட்டத்தின் முக்கியமான மூன்று அம்சங்கள் ஆகும். அனைத்து குழந்தைகள் நல மையங்களும் படிப்படியாக தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம்-*2* மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

### அ) ஊட்டச்சத்து:

ஊட்டச்சத்து குறைவினைத் தடுப்பதற்கு, *2* முதல் *4* வயது குழந்தைகளுக்கு சுகாதார முறையில், மையங்களிலேயே சமைக்கப்பட்ட, சூடான மதிய உணவு மையங்களில் வழங்கப்படுகிறது. இந்த உணவு கீழ்க்கண்ட அளவு பொருட்களை கொண்டு சமைக்கப்படுகிறது:

| | | | |
|---|---|---|---|
| அரிசி | .. | 80 | கிராம் |
| பருப்பு | .. | 5 | கிராம் |
| சோயாமாவு | .. | 5 | கிராம் |
| எண்ணெய் | .. | 2 | கிராம் |
| தாளிதம் மற்றும் காய்கறி | .. | 50 | கிராம். |

இது தவிர, இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை, குழந்தைகளுக்கு வேக வைத்த முட்டை வழங்கப்படுகிறது. முட்டை சாப்பிடாத குழந்தைகளுக்கு, புரத சத்து அடங்கிய சத்துருண்டை வழங்கப்படுகிறது.

தற்பொழுது குழந்தைகள் நல மையங்களில், சனி மற்றும் ஞாயிறு ஆகிய நாட்களில் ருசியுள்ள சோளரவை உப்புமா 2 முதல் 4 வயது வரையிலான குழந்தைகளுக்கும் மற்றும் ஓய்வூதியம் பெறும் முதியோர்களுக்கும் வழங்கப்படுகிறது. மேற்படி உப்புமா கீழ்க்கண்ட அளவில் வழங்கப்படுகிறது: -

| | | குழந்தைகளுக்கு (2 முதல் 4 வரையிலான) | முதியோர்களுக்கு |
|---|---|---|---|
| 1. | சோளரவை | 65 கிராம் | 150 கிராம் |
| 2. | எண்ணெய் | 2 கிராம் | 2 கிராம் |
| 3. | காய்கறி | 2 பைசா | 2 பைசா |

**ஆ) முன்பருவக்கல்வி:**

இத்திட்டங்களின் கீழ், அமைப்பாளர்களுக்கு முன்பருவக் கல்விக்கான பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும் கல்வி உபகரணங்கள் மற்றும் விளையாட்டு சாமான்கள் அனைத்து மையங்களுக்கும் வழங்கப்பட்டு உள்ளன. குழந்தையின் உடல் வளர்ச்சி மற்றும் மன வளர்ச்சியில் முன்பருவப் பள்ளியில் அக்குழந்தை பெறுகின்ற அனுபவம், ஓர் பயனுள்ள, வளமான அனுபவமாகும். ஒவ்வொரு குழந்தையும் ஒரு தனிப்படைப்பு மற்றும் தனித் தன்மை கொண்ட ஒரு உயிர். கல்வியின் தேவையும் அவசியமும் குழந்தைகளின் மனதில் ஆழப் பதிய வேண்டும். ஆகவேதான் குழந்தைகளின் முன்பருவக் கல்விக்கு தனியான தலையாய கவனம் செலுத்துவதற்கு முடிவு செய்யப்பட்டு உள்ளது. சமூக கல்வி, உடற்பயிற்சி, அறிவு வளம் மூன்றும் இதில் உள்ளடங்கும்.

**(இ) உடல் நலம் பேணுதல் :**

சீரான உடல் நிலையை பராமரிப்பதற்கான ஆரம்ப சுகாதார மையங்கள் மூலமாக அடிக்கடி மருத்துவப் பரிசோதனை செய்வதன் மூலமும், தடுப்பூசிகள் மூலமும் குழந்தைகளின் உடல் நலம் பேணப்படுகிறது. கிராமப்புறங்களிலும், நகராட்சிகளிலும் பொது சுகாதாரத் துறையினர் குழந்தைகள் உடல் நலத்தைப் பேணுகின்றனர்.

**(ஈ) மையங்கள் பழுது பார்த்தல் :**

பெரிய தொழில் நிறுவனங்கள் மற்றும் வணிக நிறுவனங்களின் உதவியுடன் மாநிலத்திலுள்ள பழுதுபட்ட சத்துணவு மையங்களைப் பழுது பார்க்கும் மற்றும் புதுப்பிக்கும் பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

**(உ) முதியோருக்கான சத்துணவு :**

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் முதியோர் உதவித் தொகை பெறும் முதியோருக்கு சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வொருவருக்கும் நாள் ஒன்றுக்கு 200 கிராம் அரிசி, 7.5 கிராம் பருப்பு, 1 கிராம் எண்ணெய், 50 கிராம் காய்கறி மற்றும் தாளிதம், 7.5 கிராம் சோயா மாவு அடங்கிய சத்துணவு வழங்கப்படுகிறது. அவர்கள் தங்களின் உணவை முன்பருவக் கல்வி பயிலும் குழந்தைகளுக்கு தொந்தரவு இல்லாத வகையில் வீடுகளுக்கு எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுகிறார்கள். இத்திட்டத்தை முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும், அவர்தம் விதவையருக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 1.72 இலட்சம் பேர் பயன் பெறுகின்றனர்.

**(ஊ) பள்ளி செல்லும் குழந்தைகளுக்கான சத்துணவுத் திட்டம் (ஊரக புறம்):**

ஊரக எல்லைக்குட்பட்ட 36556 சத்துணவு மையங்களில் 5 வயது நிறைவடைந்த, 1 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு சத்துணவு வழங்கப்படுகிறது. பலதரப்பட்ட வயது பிரிவைச் சார்ந்த சத்துணவு உண்ணும் குழந்தைகள் ஒவ்வொருவருக்கும் ஒரு நாளைக்கு கீழ்க்கண்டவாறு உணவு பொருட்கள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது: -

வ.எண் உணவுப் பொருள் 5 முதல் 10 வயது முதல் 15 வயது
வரை 9 வயது யிலான
மாணவர்களுக்கு வரை ( 1
முதல் 5ஆம்
6 முதல் 9 முதல் 10 ஆம் ஆம் வகுப்பு
8 ஆம் வகுப்பு வரை வரை.)
வகுப்பு
வரை

(அளவு கிராமில்)

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | அரிசி | 100 | 100 | 120 |
| 2. | பருப்பு | 7.5 | 7.5 | 7.5 |
| 3. | சோயாமாவு | 7.5 | 7.5 | 7.5 |
| 4. | எண்ணெய் | 1.0 | 1.0 | 1.0 |
| 5. | காய்கறி மற்றும் தாளிதம் | 13 காசுகள் | 13 காசுகள் | 13 காசுகள் |

பள்ளி குழந்தைகளுக்கு 15 நாட்களுக்கு ஒருமுறை வேகவைத்த முட்டை வழங்கப்படுகிறது. முட்டை உண்ணாத குழந்தைகளுக்கு புரதச்சத்து கலந்த சத்து உருண்டை வழங்கப்படுகிறது.

**(எ) பள்ளி செல்லும் குழந்தைகளுக்கான சத்துணவுத் திட்டம் (நகர்புறம்) :**

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டம் செப்டம்பர் 15, 1982 முதல் நகர்புறப் பகுதிகளில் அறிமுகப்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. தற்சமயம் நகராட்சி மற்றும் மாநகராட்சி பள்ளிகளில் 2004 பள்ளி சத்துணவு மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

20-9-1994 முதல் இத்திட்ட செயல்பாடு சம்பந்தமாக பொறுப்புகள் அனைத்தும் நகராட்சி நிர்வாக இயக்குநரிடமிருந்து, சமூகநலம் மற்றும் சத்துணவு திட்ட இயக்குநருக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. நகராட்சி மற்றும் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட 2004 சத்துணவு மையங்களில் 5 வயது நிறைவடைந்த, 1 முதல் 10 ஆம் வகுப்புவரை பயிலும் குழந்தைகளுக்கு சத்துணவு வழங்கப்படுகிறது.

**(ஏ) கருவுற்ற மகளிருக்கு சத்துணவு வழங்குதல் :**

வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள கருவுற்ற பெண்களுக்கு மாதமொன்றிற்கு ரூ. 75 வீதம் நான்கு மாதங்களுக்கு ரூ. 300 உதவித்

தொகையாக அரசு வழங்கிவருகிறது. இக்கால கட்டத்தில் இவர்களின் வருமான இழப்பை இது ஈடு செய்த போதிலும், இவர்களுக்குத் தேவையான சத்துணவை வழங்க இந்த உதவித் தொகை போதுமானதாக இல்லை. எனவே, இதுபோன்ற கருவுற்ற பெண்களுக்கு அருகிலுள்ள மதிய சத்துணவு மையத்தின் மூலம் சத்துணவு வழங்க அரசு முடிவு செய்துள்ளது. இப்புதிய திட்டத்தின் கீழ் உதவித் தொகையாக ரூ. 300 பெறும் கருவுற்ற பெண்கள் அனைவருக்கும் நான்கு மாதங்களுக்கு சத்துணவு மையத்தில் தினமும் ஒரு முறை சத்துணவு இலவசமாக வழங்கிட வழி செய்யப்படும். இத்திட்டம் கருவுற்ற பெண்களில் சுமார் 2 இலட்சம் பேருக்குப் பயனளிக்கும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம், தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துத் திட்டம் ஆகியவற்றுக்கான மொத்த நிதியொதுக்கம் 1994-95 ஆம் ஆண்டில் ரூ. 345.36 கோடியாக இருந்தது. 1995-96 ஆம் ஆண்டில் ரூ. 367.97 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. 1994-95 ஆம் ஆண்டில் மாநிலத்திலுள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும், தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துத் திட்டம், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் ஆகியவை செயல்படுத்தப்பட்டிருப்பது குறித்து மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் பேருவகை அடைவர். 6 மாதம் முதல் 60 மாதங்கள் வரையிலான வயதுத் தொகுதியைச் சேர்ந்த குழந்தைகளின் வளர்ச்சியை முழுவதுமாகக் கண்காணித்தல், துணைச் சத்துணவு அளித்தல் ஆகிய பணிகளின் மூலம் தமிழ்நாடு பெருமை மிகு சாதனை படைத்துள்ளது.

### 3.3. இலவச சீருடை வழங்குதல் :

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை கல்வி பயிலும் பள்ளிக் குழந்தைகளுக்கு ஒரு ஜோடி இலவச சீருடை ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் ஏறத்தாழ 65 இலட்சம் ஜோடி சீருடைகள் வழங்கப்படுகின்றன. சீருடைக்குத் தேவையான துணிகள் மாவட்ட சமூக நல அலுவலர்களுக்கு கைத்தறி மற்றும் துணி நூல் இயக்ககம் மூலமாக அனுப்பப்படுகிறது. சமூக நலத் துறையின் கீழ் செயல்படும் மகளிர் தொழிற் கூட்டுறவு சங்கங்களின் மூலம் சீருடைகள் தைக்கப்பட்டு, கல்வித்துறை அதிகாரிகளின் மூலம் பள்ளிக் குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது. இதன் மூலம் 1994-95-ஆம் ஆண்டில் ரூ. 35 கோடி செலவில் 63 இலட்சம் பள்ளிச் சிறார்கள் பயன்பெற்றனர். 1995-96 ஆம் ஆண்டிற்கு ரூ. 35 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 3.4. புரட்சித் தலைவி டாக்டர் ஜெயலலிதா பெண் குழந்தை பாதுகாப்பு திட்டம் :

ஆண் வாரிசு வேண்டும் என்ற மனப்பான்மையைக் குறைக்கவும், பெண் சிசுவதையைத் தடுக்கவும், குடும்பக் கட்டுப்பாட்டினை ஊக்குவிக்கவும், பெண் கல்விக்கு வழி செய்யும் வகையிலும், தமிழக அரசு இந்த திட்டத்தை 1-4-1992 முதல் அமுல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் பயனடைய தகுதிகள்:

1. பயனடைய விரும்பும் பெற்றோருக்கு ஒன்று அல்லது இரண்டு பெண் குழந்தைகள் மட்டுமே இருக்க வேண்டும். ஆண் குழந்தை இருக்கக்கூடாது.
2. 1-4-1992 பின் பெற்றோரில் ஒருவர் கருத்தடை அறுவை சிகிச்சை செய்து கொண்டு இருக்க வேண்டும்.
3. கருத்தடை அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்களின் ஆண்டு வருமானம் ரூ. 12,000-க்குள் இருக்க வேண்டும்.
4. கருத்தடை அறுவை சிகிச்சை செய்து கொள்ளும்போது பெற்றோரின் வயது 40-க்குள் இருக்க வேண்டும்.
5. பயனடையும் பெண் குழந்தையின் வயது 3-க்குள் இருக்க வேண்டும்.

## 3.5. வழங்கப்படும் சலுகைகள் :

1. பயன்பெறுவோர் பெயரில் ரூ. 5,000 நிலையான வைப்புத் தொகையாக பொதுக்கணக்கில் வைக்கப்பட்டு அதற்கான கணக்குப் புத்தகம் அவரிடம் வழங்கப்படும்.
2. முதல் பிறந்த நாள்/திட்டத்தில் சேர்ந்த பிறகு வரும் பிறந்த நாள் பரிசாக ரூ. 800 பெறுமானமுள்ள தங்க மோதிரம் வழங்கப்படும்.
3. துவக்கப்பள்ளியில் ஒன்றாம் வகுப்பு சேரும்போது ரூ. 250 பணமாக வழங்கப்படும்.
4. ஆறாம் வகுப்பு சேரும்போது ரூ. 500 பணமாக வழங்கப்படும்.
5. ஒன்பதாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை பிரதி மாதம் ரூ. 50 (ஒவ்வொரு வகுப்பிலும் 10 மாதங்கள்) பணமாக வழங்கப்படும்.
6. இருபது வயது முடிந்தபின் ரூ. 20,000 மேற்படிப்பு/திருமணத்திற்கு வழங்கப்படும்.

*1995-96* ஆம் ஆண்டு இத்திட்டத்திற்கென ரூ. *4.00* கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பெண் சிசுக் கொலையைத் தடுத்தல், பெண் குழந்தைகளுக்குத் தொடர்ந்து ஆதரவளித்தல், "சிறிய குடும்பமே சிறந்தது" என்ற கோட்பாட்டை மேம்படுத்தல் ஆகிய நோக்கங்களுடன் தொடங்கப்பட்ட புரட்சித் தலைவி டாக்டர் ஜெயலலிதா பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் வியத்தகு வெற்றியை அடைந்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை *14,781* குழந்தைகள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

**3.6. தொட்டில் குழந்தை திட்டம் :**

சேலம் மாவட்டத்தில் ஒரு சில வகுப்பினரிடையே நடைபெறும் கொடுமையான நிகழ்ச்சியான பெண் சிசுவதை நடைமுறையில் உள்ளது என்பதை அறிந்த அரசு உடனடி நடவடிக்கையாக "அரசு மருத்துவமனை", "ஆரம்ப சுகாதார மையம்" மற்றும் "அனாதை குழந்தைகள் பராமரிப்பு நிலையம்" ஆகிய இடங்களில் தொட்டில்களை வைத்துள்ளது. மேலும் பெண் குழந்தைகளை வளர்க்க விரும்பாத பெற்றோர்கள் அக்குழந்தைகளை தொட்டிலில் வைக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இதுவரை *70* பெண் குழந்தைகள் பெறப்பட்டு அதில் *22* குழந்தைகளை குழந்தைகள் இல்லா இந்திய தம்பதியர் தத்து எடுக்க வகை செய்யப்பட்டுள்ளது.

**3.7. ஜப்பானிய அரசின் உதவி கொண்டு சேலம் மாவட்டத்தில் தொட்டில் குழந்தைகள் இல்லம் கட்டுதல் :**

இத்திட்டத்தின் செயல்பாடுகளையும் நோக்கத்தினையும் அறிந்த ஜப்பானிய அரசு ரூ. *22* இலட்சம் நிதியுதவி அளித்து, சேலம் மாவட்டத்தில் இத்திட்டம் இயங்க கட்டிடம் கட்டுவதற்கும், திட்டம் நல்ல முறையில் இயங்குவதற்கு தேவையான பொருட்கள் வாங்கவும் வழிவகை செய்துள்ளது.

சமூக நல இயக்குநர் அவர்களும், ஜப்பானிய அரசின் தூதரும் *24-1-1995* அன்று இந்த ஒப்பந்தத்திற்கு கையெழுத்திட்டார்கள். ரூ. *22* இலட்சத்திற்கான காசோலையை ஜப்பானிய தூதர் *30-3-1995* அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களிடம் வழங்கினார்.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

### 3.8. பெண் சிசுவதையை தடுப்பதற்கான நடவடிக்கைகள் :

பெண் குழந்தைகளை கருவிலோ அல்லது பிறந்தவுடனோ கொன்று விடுகிறார்கள் என்பது ஒரு சமூகப் பிரச்னையாக கருதப்பட்டு இதற்கான உடனடி நடவடிக்கையாக மதுரை மாவட்டத்தில் உசிலம்பட்டி வட்டத்தில், கேசவர்களைப்புதூரில் பெண் குழந்தைகளுக்கான வரவேற்பு மையம் அமைக்கப்பட்டது. தங்களால், பெண் குழந்தைகளை வளர்க்க இயலாத பெற்றோர்கள், தங்கள் பெண் குழந்தைகளை கொல்வதை தவிர்த்து இம்மையத்தில் விட்டுச் செல்லலாம். இதுவரை 50 குழந்தைகள் இம்மையத்தில் பெறப்பட்டு இந்திய குழந்தை நலச் சங்கத்தால் பராமரிக்கப்படுகின்றன. இம்மைய வசதி இல்லையெனில் இந்த குழந்தைகள் ஒரு வேளை சிசுவதை கொடுமைக்கு ஆளாகியிருக்கலாம். சொந்த பெற்றோர்கள் நிராகரித்த இக்குழந்தைகளின் எதிர்காலம் ஒளிமயமாய் அமையும் என்று கருதி குழந்தைகளை நம் நாட்டிலேயே உள்ள குழந்தைகளில்லாத தம்பதியருக்கு தத்து கொடுக்கப்பட்டு உள்ளனர்.

### 3.9. வேலை செய்யும் மற்றும் நோய்வாய்ப்பட்ட தாய்மார்களின் குழந்தைகள் காப்பகம் :

வேலை செய்யும் மற்றும் நோய்வாய்ப்பட்ட தாய்மார்களின் குழந்தைகள் பெரும்பாலும் புழுதியில் விளையாடிக் கொண்டும், பள்ளிக்குச் செல்லாமலும் இருக்கின்றனர். இதற்கு காரணம் தமக்கு இளையவர்களை பார்த்துக் கொள்ள வேண்டிய சூழ்நிலையில் இவர்கள் பள்ளிக்குச் செல்வது இயலாததாகிறது. இதனைத் தடுக்கவும், இவர்கள் சமூக விரோத செயல்களில் ஈடுபடாமல் தடுக்கவும், அரசு தேர்ந்தெடுக்கப்பட்ட சில மாவட்டங்களில், 17 குழந்தைகள் காப்பகங்கள் 1993-94 ஆம் ஆண்டு முதல் நடத்தி வருகிறது. இது தவிர, மேலும் 25 குழந்தைகள் காப்பகங்கள் 1995-96 ஆம் ஆண்டில் தொடங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இக்காப்பகங்கள், சமூக நல வாரியத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்ட மகளிர் மன்றங்கள் மூலம் நடத்தப்பட்டு வருகிறது. 1995-96 ஆம் ஆண்டிற்கு ரூ. 10.36 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 3.10. தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம்/—2 (உலக வங்கி உதவியுடன்) :

(அ) தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம்-2, உலக வங்கி உதவியுடன் 1990-91 ஆம் ஆண்டு கீழ்க்கண்ட குறிக்கோள்களுக்காக தொடங்கப்பட்டது.

1. தாய்நலம் மற்றும் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்துவதன் மூலம் குழந்தை உயிர்வாழ்தல் மற்றும் குழந்தை வளர்ச்சியினை உறுதிப்படுத்துதல்.

2. 0-6 வயது குழந்தைகளின் ஊட்டச்சத்து மற்றும் சுகாதார நிலையை மேம்படுத்துதல்.

3. 3 முதல் 6 வயதுக் குழந்தைகளுக்கு பயனுள்ள முன் பருவ கல்வி அளிப்பது.

4. தனிநபர் மற்றும் சமுதாய நலத்தை மேம்படுத்த, தாய்மார்கள், குடும்பம், சமுதாயம் மற்றும் இளம்பெண்கள் ஆகியோரின் செயல் திறத்தை அதிகரித்தல்.

5. சுகாதாரம், நலக்கல்வி அளித்தல் மற்றும் ஊட்டச்சத்து திட்டங்களை திட்டமிடுவதிலும், செயல்படுத்துவதிலும் மதிப்பீடு செய்வதிலும் சமுதாயத்தின் ஈடுபாட்டை கிராம அளவில் அதிகப்படுத்துதல்.

6. மேற்கூறிய சுகாதாரம், ஊட்டச்சத்து மற்றும் மற்ற நோக்கங்களை நிறைவேற்ற தேவையான மனித ஆற்றலை மேம்படுத்துதல்.

7. மாநிலத்திலுள்ள ஊட்டச்சத்து மற்றும் சுகாதார திட்டங்களை சரிவர நிறைவேற்றுவதற்குத் தேவையான செயல் ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ளுதல்.

**(ஆ) திட்டத்தின் அமைப்பு :**

திட்டப் பணிகளை செயல்படுத்த 1500 மக்கட்தொகை கொண்ட ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு மையம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த மையம் சமுதாய ஊட்டச்சத்து பணியாளர் மற்றும் குழந்தை நல அமைப்பாளர் இருவராலும் நடத்தப்படுகிறது.

சமுதாய ஊட்டச்சத்துப் பணியாளர்களுக்கு உதவியாக உள்ளூர் மருத்துவச்சி நியமிக்கப்படுகிறார். இவர் மையத்தின் ஆயாவாகவும் செயல்படுவார். கிராம நலச் செவிலியர் மாதத்திற்கு ஒருமுறை ஊட்டச்சத்து மையத்திற்கு சென்று தாய்சேய் நல சுகாதார தேவைகளை கவனிப்பார்.

(இ) ஏற்கனவே நடந்துவரும் முன்பருவக் கல்வி வயதினருக்கான "புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். சத்துணவு மையங்கள்", தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டத்தினுள் கொண்டு

வரப்படுகின்றன. இம்மையமானது, குழந்தைகள் நல அமைப்பாளர் மற்றும் ஆயாவினால் நடத்தப்படுகிறது. தேவைக்கேற்ப இம்மையங்கள் துவங்கப்படும். இம்மையங்களுக்கு தளவாடங்கள் முதலியன வழங்கப்படும். இப்பணியாளர்கள் நல்ல முறையில் செயல்படவேண்டிய பயிற்சி அளிக்கப்படும். மூன்று முதல் ஆறு வயது வரையிலான குழந்தைகளுக்கு மதிய உணவு தொடர்ந்து வழங்கப்படும். இவ்வுணவில் ஊட்டச்சத்து அதிகரிக்கப்படும்.

(ஈ) ஒவ்வொரு மையத்திலும் மூன்று வயதிலிருந்து ஆறு வயது வரையிலான குழந்தைகளுக்கு முறைசாரா முன்பருவக் கல்வி அளிக்கப்படும். இதில் குழந்தைகளின் உடல், செயல்திறன், அறிவுவளர்ச்சி, சமுதாய விழிப்புணர்ச்சி ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான விளையாட்டுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும்.

(உ) இத்திட்டமானது, வட்டார அளவில் சமுதாய ஊட்டச்தத்து பயிற்றுநராலும், மண்டல அளவில் மண்டல அலுவலர்களாலும், மாவட்ட அளவில் மாவட்ட ஊட்டச்சத்து அலுவலர்களாலும், மாநில அளவில் திட்ட ஒருங்கிணைப்பாளர் அவர்களாலும் தக்க உதவியாளர்களுடன் தலைமையேற்று நடத்தப்பட்டு வருகிறது.

(ஊ) தலைமைச் செயலாளரின் தலைமையின் கீழ் அதிகாரம் பெற்ற குழு ஒன்று அமைக்கப்பட்டு, அக்குழு திட்டத்திற்கான ஆண்டுத் திட்டம் மற்றும் தேவையான செலவினங்களுக்கு ஒப்புதலளித்தும், முன்னேற்றத்தை கண்காணித்தும் வருகிறது.

(எ) இத்திட்டம் தற்பொழுது மதுரை, திண்டுக்கல் அண்ணா, சேலம், பெரியார், தர்மபுரி, காமராசர், திருநெல்வேலி கட்டபொம்மன், தென்னாற்காடு வள்ளலார், பசும்பொன் முத்துராமலிங்கதேவர், வடஆற்காடு அம்பேத்கார், திருவண்ணாமலை சம்புவராயர், இராமநாதபுரம், சிதம்பரனார், திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், தஞ்சாவூர், நாகைகாயிதேமில்லத், விழுப்புரம் இராமசாமி படையாச்சி மற்றும் கன்னியாகுமரி ஆகிய 19 மாவட்டங்களில் உள்ள 318 வட்டாரங்களில் 18,161 மையங்களில் செயல்படுகிறது.

(ஏ) இத்திட்டம் உலக வங்கி நிதியுதவியுடன் ரூ. 321.34 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## 3.11. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம்

(அ) சமுதாயத்தில் நலிவுற்ற குழந்தைகள், கருவுற்ற மகளிர் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்துணவுக் குறைவு மற்றும்

அது தொடர்பான குறைபாடுகளை சமாளிப்பதற்காக ஒருங்கிணைந்த முறையில் வடிவமைக்கப்பட்ட ஒரு பணியே ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டமாகும். இத்திட்டத்தின் பணிகள், கருவில் உள்ள குழந்தையில் இருந்து தொடங்கி ஆறு வயது ஆகும்வரை, அக்குழந்தைக்குத் தேவையான சத்துணவு, சுகாதாரம் மற்றும் உடல், மன வளர்ச்சிக்கான தேவைகளையும் கருத்தாகக் கவனிப்பதே ஆகும். இத்திட்டத்தின் மூலம் வழங்கப்படும் முக்கியப் பணிகள்:

இணை ஊட்டச் சத்து;

முறைசாரா முன்பருவக் கல்வி;

மருத்துவச் சோதனை;

நோய்த்தடுப்பு;

ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரக் கல்வி; மற்றும்

மேல்மருத்துவப் பரிசோதனைக்கு வழி செய்தல் அடங்கும்.

(ஆ) ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டம் முதன்முதலில் 1975-76ஆம் ஆண்டு சென்னை நகரத்திலும், தளி மற்றும் நிலக்கோட்டை வட்டாரங்களிலும் தொடங்கப்பட்டது. இத்திட்டம் மேலும் விரிவாக்கப்பட்டு தற்போது 42 நகர்ப்புறத் திட்டம் மற்றும் இரண்டு மலைப்பகுதி திட்டம் உட்பட தமிழ்நாட்டில் மொத்தம் 111 பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவற்றில் 47 திட்டங்கள் சுவீடன் நாட்டு (SIDA) உதவியுடன் செயல்பட்டு வருகிறது.

(இ) ஒவ்வொரு ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டப் பகுதியும் ஒரு இலட்சம் மக்கள் தொகையை உள்ளடக்கியதாகும். ஒவ்வொரு திட்டப் பகுதியும் ஒரு குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலரின் தலைமையில் ஒரு மருத்துவ அலுவலர், நான்கு மேற்பார்வையாளர்கள் மற்றும் நான்கு துணை மருத்துவ செவிலியர் உதவியுடன் செயல்படுத்தப்படுகிறது. கிராமம் மற்றும் மலைப்புற பகுதிகளில் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் மூலம் சுகாதாரப் பணிகள் கவனிக்கப்படுகின்றன. ஒவ்வொரு திட்டப் பகுதியிலும், அங்கன்வாடிகள் என்று அழைக்கப்படும் 100 குழந்தைகள் நல மையங்கள் செயல்படுகின்றன.

(ஈ) குழந்தைகள் நல மையங்கள் மூலம்தான் இத்திட்டப்பணிகள் கவனிக்கப்படுகின்றன. சுமார் 1,000 மக்கள் தொகை உள்ள பகுதிக்கு ஒரு குழந்தை நல மையம் என்ற விகிதத்தில் மையங்கள்

அமைக்கப்படுகின்றன. இத்திட்டப் பகுதியில் 2 முதல் 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் 40 பேருக்கும், 0-2 வயதுக்குட்பட்ட குழந்தைகள் 30 பேருக்கும், கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் 30 பேருக்கும் ஆக மொத்தம் 100 நபர்கள் ஒவ்வொரு திட்டப் பகுதியிலும் பயன்பெறுகின்றனர். இப்பணிகள் ஒவ்வொரு மையத்தின் மூலமும் செயல்படுகின்றன.

ஒவ்வொரு அங்கன்வாடி மையத்திலும் கீழ்கண்ட பணிகள் செயல்படுத்தப்படுகின்றன: -

**(உ) துணை ஊட்டச்சத்து.**

திட்டப் பகுதிகளில் மத்திய அரசின் உதவியுடன் கோதுமையை அடிப்படையாகக் கொண்ட “சத்து” என்னும் உணவு 6 மாதத்திலிருந்து 2 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கும், கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் வழங்கப்படுகிறது. இச்சத்துணவு கோதுமை, பருப்பு வகைகள், கேழ்வரகு, சோயாமாவு, வெல்லம் ஆகிய முக்கிய ஊட்டச்சத்து கொண்டது. ஒவ்வொரு பயனாளிக்கும் இதில் 80 கிராம் விகிதத்தில் 300 நாட்களுக்கு வழங்கப்படுகிறது.

2 முதல் 5 வயது வரையிலான குழந்தைகளுக்கு சத்துணவு திட்டத்தின் கீழ் வருடத்தில் எல்லா நாட்களிலும் (365 நாட்களிலும்) மதிய உணவு மையத்திலேயே வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு குழந்தைக்கும் அரிசி 80 கிராம், பருப்பு 5 கிராம், சோயா 5 கிராம், எண்ணெய் 2 கிராம் மற்றும் காய்கறியுடன் சத்துணவு வழங்கப்படுகிறது. இச்செலவினம் மாநில அரசு நிதியிலிருந்து செலவிடப்படுகிறது, மாதத்திற்கு இருமுறை குழந்தைகளுக்கு முட்டை வழங்கப்படுகிறது, விடுமுறை நாட்களில் (சனி, ஞாயிறு) சோள ரவை உப்புமா 65 கிராம், சத்துணவுக்கு பதிலாக வழங்கப்படுகிறது.

**(ஊ) முறைசாரா முன்பருவக் கல்வி**

ஒவ்வொரு குழந்தைகள் நல மையத்திலும் 2 முதல் 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு முறைசாரா முன்பருவக்கல்வி அளிக்கப்படுகிறது. நல்ல மனப்போக்கையும் நடத்தையையும், பழக்க வழக்கங்களையும் வளர்க்க முன்பருவக் கல்வி பயன்படுத்தப்படுகிறது, குழந்தைகளுக்கு ஊக்கம் அளிக்கும் வகையிலும், குழந்தைகள் நலப் பணியாளர்கள் திட்டமிட்டு செயல்படத் தக்க வகையிலும் கருத்தரங்கு முறை செயல்படுத்தப்படுகிறது, ஒவ்வொரு மையத்திற்கும் விளையாட்டு

சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளன, மேலும், குறைந்த செலவில் கல்வி மற்றும் விளையாட்டு உபகரணங்கள் செய்ய பணியாளர்களுக்கு பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

**(எ) மருத்துவப் பரிசோதனை**

ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு உடல் நலம் மற்றும் ஊட்டச்சத்து நிலைமைகளை முறையாக கண்காணிக்கும் வகையில், அவர்கள் எடை பார்க்கப்பட்டு, வளர்ச்சி அட்டையில் ஊட்டச்சத்து நிலை மற்றும் உடல் நலம் ஆகியவற்றை பதிந்த பின் அவ்வப்போது மருத்துவ உதவிகள் வழங்கப்படுகின்றன. மருத்துவ அலுவலரால் மாதத்திற்கொருமுறை, பொது மருத்துவ சோதனைகளும் செய்யப்படுகின்றன. மேலும் அவ்வப்போது வயிற்று பூச்சியை நீக்க மருந்து மற்றும் வயிற்றுபோக்கு, சாதாரண நோய்கள், ரத்த சோகை நீக்கும் மருந்துகளும் வழங்கப்படுகின்றன. ஆறு மாதங்களுக்கு ஒரு முறை வைட்டமின் "ஏ" மாத்திரைகள் கொடுக்கப்படுகின்றன. அனைத்து நகர்ப்புற திட்ட பகுதிகளிலும் நவீன உபகரணங்களுடன் கூடிய *144* துணை மருத்துவ மையங்கள் அந்தந்த பகுதிகளில் உள்ள நோயாளிகளுக்கு மருத்துவ வசதி அளிப்பதற்காக நிறுவப்பட்டுள்ளன. சுகாதார திட்டத்தில் இது ஒரு சிறப்பு அம்சமாகும். பெண்கள் கருவுற்ற காலத்திலும், மகப்பேறுக்கு பின் பாலூட்டும் காலத்திலும் இச்சுகாதார திட்டத்தின் கீழ் அவர்கள் கவனிக்கப்படுகிறார்கள்.

**(ஏ). நோய்தடுப்பு**

*6* வயதுக்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும், இளம்பிள்ளை வாதம், தட்டம்மை, கக்குவான் இருமல், காசநோய், ரணஜன்னி, தொண்டை அடைப்பான் போன்ற நோய்களைத் தடுக்க, தடுப்பூசி மருந்துகள் போடப்படுகின்றன. அனைத்து கருவுற்ற பெண்களுக்கும், ரண ஜன்னிக்கான தடுப்பூசியும் போடப்படுகிறது.

**(ஐ) ஊட்டச்சத்து மற்றும் சுகாதார கல்வி**

*15* வயது முதல் *45* வயதுவரையிலுள்ள அனைத்துப் பெண்களுக்கும் ஊட்டச்சத்து மற்றும் சுகாதார கல்வி வழங்கப்படுகிறது. குறிப்பாக கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் அதிக கவனம் செலுத்தப்படுகிறார்கள். அடிக்கடி நோய்வாய்ப்படும் குழந்தைகள் மற்றும் சத்துக்குறைவான குழந்தைகளுக்கும், அவர்களின்

தாய்மார்களுக்கும், சிறப்பு மேல்நடவடிக்கை எடுக்கப்படுகிறது. சுகாதார மற்றும் ஊட்டச்சத்து கல்வியானது கிராம மகளிர் குழுக்கள் மற்றும் தனி வகுப்புகள் மூலமும், திட்டப் பகுதிகளில் அங்கன்வாடிப் பணியாளர்களின் செயல்முறை விளக்கக் கூட்டங்கள் மூலமும் வானொலி போன்ற மக்கள் தொடர்பு பிரிவுகள் மூலமும், இச்செய்திகள் எல்லா பகுதிகளுக்கும் எட்டும் வகையில் செயல்படுத்தப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| மொத்த ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டங்கள் | .. | 111 |
| நகர்ப்புறப் பகுதி | .. | 42 |
| ஊரகப்பகுதி | .. | 67 |
| மலைப்புறப் பகுதி | .. | 2 |
| மையங்களின் எண்ணிக்கை | .. | 9,926 |

**3.12 சுவீடன் பன்னாட்டு வளர்ச்சி ஆணைக்குழு உதவியுடன் நடத்தப்படும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம்**

செங்கை எம்.ஜி.ஆர்., புதுக்கோட்டை மற்றும் நீலகிரி மாவட்டத்தில் உள்ள 47 திட்டங்கள் சுவீடன் நாட்டு உதவியுடன் 1989 முதல் செயல்படுகின்றன.

இத்திட்டத்திற்கான முதற்கட்டம் 30-6-1993 உடன் முடிவுற்றது. 2ஆம் கட்டமாக 1-7-1993 முதல் தொடங்கப்பட்டு 4 ஆண்டுகளுக்கு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டம் கூடுதல் முதலீட்டின் மூலம் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்தில் அளிக்கப்படும் பணிகளை மேம்படுத்த உதவுகிறது. இத்திட்டத்தின் முக்கிய உறுப்புகள்:

அங்கன்வாடி பணியாளர்கள், மேற்பார்வையாளர்கள், குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர்கள் மற்றும் மருத்துவ அலுவலர்களுக்காக, புத்தாக்க பயிற்சி அடங்கிய தரமான ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டப் பணிகள்;

அங்கன்வாடி மையங்களுக்கு உபகரணங்கள்;

ஊக்கத் தொகை மற்றும் வருவாய் பெருக்கும் பணிகள்;

மேலாண்மை மற்றும் தகவல் திட்டம்;

புதிய கட்டிடங்கள்;

இரண்டாம் நிலை அங்கன்வாடி பணியாளர் மற்றும் உதவியாளர் ஊதியம்; மற்றும்

தலைமை அலுவலகத்திற்கு கூடுதல் பணியிடங்கள்.

இரண்டாம் கட்டமாக, *1-7-1993* முதல் செங்கை எம்.ஜி.ஆர்., நீலகிரி மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்திலும், இத்திட்டம் சிடா உதவியுடன் செயல்படுத்தப்படுகிறது. இதற்கான நிதி ஒதுக்கீடு ரூ. *46* கோடி. இரண்டாம் கட்டத்திற்கான ஒப்பந்தம் செயல்முறையில் உள்ளது.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டம் மற்றும் சிடா திட்டத்தின் கீழ் *6* மாதம் முதல் *6* வயதுக்குட்பட்ட *6,00,000* குழந்தைகளும் *1.50* இலட்சம் கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களும் பயனடைந்துள்ளார்கள்.

| திட்ட மதிப்பீடு *1995-96.* | மத்திய அரசு பங்கு | மாநில அரசு பங்கு (ரூபாய் கோடியில்) | வெளிநாட்டு உதவித் திட்டம். |
|---|---|---|---|
| ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் | *12.40* | *15.04* | .. |
| சிடா ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் | *6.80* | .. | *10.63* |

## 3.13. ஆதரவற்ற குழந்தைகளுக்கான அரசு இல்லங்கள்

*(அ)* *5* வயது முதல் *18* வயதுக்குட்பட்ட ஆதரவற்ற குழந்தைகளை பராமரிப்பதற்காக தமிழ்நாட்டின் அரசு ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு இல்லங்கள் *25* இத்துறையின் கீழ் இயங்கி வருகின்றன. மேற்படி இல்லங்கள் ஒவ்வொன்றிலும் அனுமதிக்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை *250* ஆகும். ஆத்தூர், திக்கனான்கோடு, வேலூர், திருநெல்வேலி மற்றும் சிக்கல் ஆகிய இடங்களில் இள்ள இல்லங்களில்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மட்டும் இவ்வெண்ணிக்கை ஒவ்வொன்றிலும் 100 ஆகும். எவ்வித ஆதரவும் இல்லாத குழந்தைகள் 21 வயது வரை இல்லங்களில் இருக்க அனுமதிக்கப்படுகிறார்கள்.

(ஆ) இவ்வில்லங்களில் உள்ள குழந்தைகளுக்கு இலவச உணவு, உறைவிடம், உடை, பாடநூல், குறிப்பேடுகள், மருத்துவப் பாதுகாப்பு மற்றும் கல்வி ஆகியவை அளிக்கப்படுகின்றன. இல்லத்திலேயே ஒன்று முதல் ஐந்து வகுப்பு வரை கல்வி அளிக்கப்படுகிறது. ஆறாம் வகுப்பு முதல் குழந்தைகள் அரசு உயர்நிலைப்பள்ளி, ஊராட்சி ஒன்றிய பள்ளிகள், நகராட்சி, மாநகராட்சிப் பள்ளிகளுக்கு உயர்கல்வி பயில அனுப்பப்படுகின்றனர்.

(இ) உணவிற்காக ஒரு குழந்தைக்கு மாதம் ரூ. 120 செலவிடப்படுகிறது. 5 வயதிலிருந்து 12 வயதுடைய குழந்தைகளுக்கு ரூ. 100-ம் 13 முதல் 18 வயதுடைய குழந்தைகளுக்கு ரூ. 150-ம் உடைக்காக ஆண்டுதோறும் செலவிடப்படுகிறது. படுக்கை பொருட்களுக்காக ஆண்டொன்றுக்கு ரூ. 20 வீதமும் வழங்கப்படுகிறது.

(ஈ) 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.35 வீதமும், 6 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு ரூ. 50 வீதமும், 9 மற்றும் 10 ஆம் வகுப்புகளில் பயிலும் குழந்தைகளுக்கு ரூ. 90 வீதமும், மேல்நிலை வகுப்புகளில் பயிலும் குழந்தைகளுக்கு ரூ. 190 வீதமும் பாடநூல் மற்றும் குறிப்பேடுகள் வாங்க வழங்கப்படுகின்றன. பெண் கைதிகளின் குழந்தைகளும் அவ்வில்லங்களில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். அனைத்து அரசு ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு இல்லங்களிலும் தையல் மற்றும் இதர தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்திற்கென 1995-96 ஆம் ஆண்டில் ரூ. 215.93 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 3.14. குழந்தைகளுக்கு தேவையான பராமரிப்பும் பாதுகாப்பும்.

(அ) ஆதரவற்ற குழந்தைகளுக்கு மறுவாழ்வு அளித்து தனது சொந்த குடும்பங்களில் வசிப்பது போன்ற உணர்வில் அவர்களை வாழவைக்கும் நோக்கத்துடன் 1974-75ல் மத்திய அரசால் "குடில் திட்டம்" அறிமுகப்படுத்தப்பட்டது. 25 குழந்தைகளை கொண்ட பிரிவு ஒரு குடில் ஆகும். ஒவ்வொரு குடிலும் ஒரு இல்லத்தாயின் பொறுப்பில் இருக்கும். இவ்வில்லத்தாய் தனது குடிலிலுள்ள குழந்தைகளை தன் குழந்தைகளைப் போல் பாவித்து அவர்களுக்கு போதிய உணவு, உடை, இருப்பிடம், மருத்துவ வசதி, கல்வி வசதி, பொழுதுபோக்கு வசதி முதலியன வழங்கி அறிவுரை கூறி வழிகாட்டியாக நடந்து கொள்வார்.

(ஆ) ஆதரவற்ற குழந்தைகளை பராமரிப்பதற்கும், அதற்கான கட்டடங்களை கட்டவும், தொண்டு நிறுவனங்களுக்கு அரசு மானியம் வழங்கியுள்ளது. மொத்த செலவில் 80 % அரசு மானியமாக வழங்குகிறது. மீதம் 20 % அந்தந்த நிறுவனங்களே ஏற்றுக் கொள்ள வேண்டும். இந்த 80 % மானிய தொகையை மாநில அரசே 1-4-1992 முதல் முழுவதுமாக ஏற்றுக்கொண்டுள்ளது. ஒவ்வொரு குழந்தைக்கும் உணவு, உடை, முதலியவற்றிற்காக மாதம் ரூ. 175 வீதம் மான்யம் கணக்கிடப்பட்டு வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்கென 1995-96 ஆம் ஆண்டில் ரூ. 175.07 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. தொண்டு நிறுவனங்களால் நடத்தப்பெறும் அனாதை இல்லங்களுக்கு மானியமாக 1995-96 ஆம் ஆண்டிற்கென ரூ. 65.84 இலட்சம் வழங்கப்படுகிறது.

**3.15. அரசு ஆதரவற்றோர் இல்லக் கட்டிடம் சூலக்கரையில் கட்டுதல்.**

ஆதரவற்ற குழந்தைதளுக்கு எல்லா வசதிகளும் கொண்ட கட்டிடம் கட்ட திட்டமிடப்பட்டு அதன் வகையில் காமராஜர் மாவட்டம் அருப்புக்கோட்டை தாலூகாவில் சூலக்கரை கிராமத்தில் ரூ. 70 இலட்சங்கள் செலவில் அரசு ஆதரவற்றோர் இல்லக் கட்டிடம் கட்டப்பட உள்ளது. 1995-96 ஆம் நிதியாண்டில் ரூ. 25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**3.16. டாக்டர் ஜெ. ஜெயலலிதா குழந்தைகள் நல 15 அம்ச திட்டம்:**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1993 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 14 ஆம் நாள் தொடங்கி வைத்த குழந்தைகள் நலனுக்கான "புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் 15 அம்சத் திட்டத்தைச்" செயல்படுத்துவதில் இவ்வரசு கொடுத்துள்ள முக்கியத்துவத்தை மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் அறிவர். 15 அம்சத் திட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு அம்சத்தையும் செயல்படுத்துவதில் நாங்கள் தொடர்ந்து முன்னேற்றம் கண்டு வருகிறோம். இத்திட்டத்திலுள்ள அனைத்து அம்சங்களும் திட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்ட நாளுக்குள் நிறைவேற்றப்படும். இந்த குழந்தை நலத் துணைத் திட்டம், 1995-96ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படவுள்ளது. இதற்கான ஒதுக்கீடு ரூ.768.62 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. மாநில அளவிலான செயல்திட்டம் வரையப்பட்டு அதன் அடிப்படையில் மாவட்ட அளவிலான பணியரங்குகள் மாவட்ட ஆட்சியரால் நடத்தப்பட்டு மாவட்ட செயல் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு அம்சத்திற்கும் 1995-98 மற்றும் 2000 ஆண்டுகளுக்கு குறியீட்டு அளவு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## அத்தியாயம் - 4

### ஊனமுற்றோர் நலம்

4-1-1981 ஆம் வருடம் டிசம்பர் மாதம் நடத்திய தேசிய மாதிரி ஆய்வுக் கணக்கெடுப்பின்படி, பார்வையற்ற, காது கேளாத, கை, கால் ஊனமுற்ற மன வளர்ச்சி குன்றிய மற்றும் தொழுநோயினால் பாதிக்கப்பட்ட ஊனமுற்றவர்களின் எண்ணிக்கை தமிழகத்தின் மொத்த மக்கள் தொகையில் 2 விழுக்காடு என்பது, 11,12,766 ஆகும். தேசிய மாதிரி கணக்கெடுப்பின் விகிதாச்சாரப்படி ஊனமுற்றோர் வகைவாரியான விவரம் பின்வருமாறு:

| வரிசை எண். | ஊனத்தின் தன்மை | விழுக்காடு | (ஊனமுற்றோரின்) எண்ணிக்கை (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | பார்வையற்றோர் | 19.2 | 2.12 |
| 2. | காது கேளாதவர் | 20.5 | 2.25 |
| 3. | கை,கால் ஊனமுற்றவர் | 58.8 | 6.47 |
| 4. | மனவளர்ச்சி குன்றியவர், தொழுநோயால் பாதிக்கப் பட்டவர்கள் மற்றும் இதரவகை ஊனமுற்றவர்கள். | 1.5 | 0.16. |

ஊனமுற்றோர் நலனில் தமிழக அரசு கொண்டுள்ள ஆழ்ந்த அக்கறையினை, ஆண்டுக்கு ஆண்டு ஊனமுற்றோர் நலனுக்கென நிதி ஒதுக்கீடு உயர்ந்து வருவதைக் கொண்டு அறியலாம்.

| வரிசை எண். | வருடம் | நிதி ஒதுக்கீடு (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|
| 1. | 1990-91 | 433.00 |
| 2. | 1991-92 | 522.96 |
| 3. | 1992-93 | 716.00 |
| 4. | 1993-94 | 775.68 |
| 5. | 1994-95 | 833.14 |
| 6. | 1995-96 | 853.63 |

ஊனமுற்றோர் நலனில் ஆழ்ந்த அக்கறை கொண்டுள்ள தமிழக அரசு, அவர்தம் நலனில் தனி ஈடுபாடு செலுத்துவதற்காக சமூக நலத்துறையிலிருந்து தனியாக ஊனமுற்றோர் மறுவாழ்வு துறை என்ற தனித்துறையை உருவாக்கியுள்ளது. மிகப்பரந்த அளவில் ஊனமுற்றோருக்கு மறுவாழ்வு அளிக்க வேண்டுமென்பதே இத்துறையின் நோக்கமாகும். இதில் ஊனமுற்றோருக்கு சிறப்பு கல்வி, தொழிற் பயிற்சி, வேலைவாய்ப்பு, சுயவேலைவாய்ப்பு மற்றும் இலவச உபகரணங்கள் வழங்கி, ஊனமுற்றோரை அவர்களின் பொருளாதார நிலையில் உயர்த்தி சமூகத்தில் தன்னிறைவு பெற்றவர்களாக ஆக்குவது இத்துறையின் நோக்கமாகும்.

**4.2 ஊனமுற்றோருக்கு சிறப்பு கல்வி:**

அ) கண் பார்வையற்றோர், காது கேளாதோர், மனவளர்ச்சி குன்றியோர் மற்றும் கை, கால் ஊனமுற்றோருக்கு அவர்களுக்காக நிறுவப்பட்டுள்ள சிறப்பு பள்ளிகள் மூலம் கல்வி அளிக்கப்படுகிறது. அரசு மற்றும் அரசு மான்யம் பெற்று நடைபெறும், சிறப்பு பள்ளிகள் விவரம் வருமாறு:-

| வரிசை எண். (1) | பள்ளியின் வகை (2) | அரசு பள்ளிகள் (3) | அங்கீகாரம் பெற்ற அரசு மானியம் பெறும் பள்ளிகள் (4) | அங்கீகாரம் பெற்ற அரசு மானியம் பெறாத பள்ளிகள் (5) | நகராட்சிப் பள்ளிகள் (6) | மொத்தம் (7) |
|---|---|---|---|---|---|---|
| 1. | பார்வையற்றோருக்கான பள்ளி | 11 | 11 | 1 | .. | 23 |
| 2. | காது கேளாதோருக்கான பள்ளி | 10 | 19 | 9 | 2 | 40 |
| 3. | மனவளர்ச்சி குன்றியோருக்கான பள்ளி | 1 | 13 | 13 | .. | 27 |

LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 4. | கை, கால் ஊனமுற்றோருக்கான பள்ளி | 1 | 13 | 11 | .. | 25 |
| 5. | தொழுநோயால் பாதிக்கப்பட்டவர் களுக்கான பள்ளி | .. | 1 | .. | .. | 1 |
| | மொத்தம் | **23** | **57** | **34** | **2** | **116** |

ஆ) பார்வையற்றோருக்கான அரசு சிறப்பு பள்ளிகள், பூவிருந்தவல்லி, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், சேலம், மதுரை, கடலூர், சிவகங்கை, நாகர்கோவில், கோயம்புத்தூர், புதுக்கோட்டை மற்றும் தருமபுரியில் செயல்பட்டு வருகின்றன.

காது கேளாதோருக்கான அரசு சிறப்பு பள்ளிகள் தஞ்சாவூர், தருமபுரி, கடலூர், புதுக்கோட்டை, காஞ்சிபுரம், சேலம், ஈரோடு, விருதுநகர், உதகமண்டலம் மற்றும் சென்னையில் இயங்கி வருகின்றன. கடுமையான அளவில் கை, கால் ஊனமுற்றோருக்கான அரசு பள்ளி, மதுரையில் செயல்பட்டு வருகிறது. மனவளர்ச்சி குன்றியோருக்கான அரசு நிலையம் சென்னையில் இயங்கி வருகிறது. 5 முதல் 9 வயதுக்குட்பட்ட மனவளர்ச்சி குன்றிய குழந்தைகள் அவர்களின் மனவளர்ச்சிக்குத் தகுந்தபடி மூன்று வகையாக மென்மையான, சுமாரான, கடுமையான பாதிப்பு உடையவர்களாக பிரிக்கப்பட்டு இப்பள்ளியில் சிறப்பு கல்வி அளிக்கப்படுகிறார்கள். இப்பள்ளியில் தற்போது 50 பேர் உள்ளனர்.

இ) அரசு வழங்கும் ஒரு இலட்சம் மானியத் தொகையை (ஒரு தடவை மானியம்) கொண்டு புதுக்கோட்டையில் மனவளர்ச்சி குன்றியோருக்கான நிலையம் ஒன்று "ரினைசான்ஸ்" என்ற பெயரில் தனியார் சேவை நிறுவனத்தால் இயக்கப்படுகின்றது.

1993-94 ஆம் ஆண்டிற்கான, பகுதி-2 திட்டத்தின் கீழ் தனியார் சமூக சேவை நிறுவனத்தின் மூலம் ஊனமுற்றோருக்கான பள்ளி சென்னையிலும், காது கேளாதோருக்கான பள்ளி வேலூரிலும் ஆரம்பிக்கப்பட்டது. பருகூரில் ஐ.இ.எல்.சி. நிறுவனத்தின் மூலம்

மாநில அரசின் ரூ. 3.96 இலட்சம் நிதியுதவியுடன் மனவளர்ச்சி குன்றியோருக்கான பள்ளி 1994-95 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

இந்த சிறப்பு பள்ளிகள் மூலம் சுமார் 8726 ஊனமுற்ற குழந்தைகள் கல்வி பெறுகிறார்கள். ஊனமுற்றோருக்கான அரசு சிறப்புப்பள்ளிகள் கல்வி பயிலும் குழந்தைகளுக்கு இலவசமாக உணவு மற்றும் இருப்பிட வசதியுடன் இரண்டு ஜோடி சீருடைகளும் இலவசமாக ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகிறது. 1995-96ஆம் ஆண்டிற்கு சிறப்புக் கல்விக்கான நிதி ஒதுக்கீடு ரூ.431.50 இலட்சம் ஆகும்.

### 4.3 காது கேளாத குழந்தைகளுக்கான முன்பருவப் பள்ளிகள்:

காது கேளாத குழந்தைகளுக்கென முன்பருவப்பள்ளிகள் இருபது மாவட்டங்களில் தலா ஒன்று வீதம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. காது கேளாத குழந்தைகள் 200 பேர் இப்பள்ளிகளின் மூலம் சிறப்புக் கல்வி பெறுகிறார்கள். இத்திட்டத்திற்காக 1995-96-ஆம் ஆண்டிற்கு ரூ.25.41 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 4.4. ஊனமுற்றோருக்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு சிறப்பு பயிற்சி:

#### அ. பார்வையற்றோருக்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு சிறப்பு பயிற்சி.

கண் பார்வையற்றோருக்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு சிறப்பு பயிற்சி அளிக்கும் மண்டல பயிற்சி மையம் ஒன்று பூவிருந்தவல்லி, பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் இயங்கி வருகிறது. இந்த பயிற்சியில் ஒவ்வொரு ஆண்டும் 20 ஆசிரியர்கள் பயிற்சிக்காக சேர்க்கப்படுகிறார்கள். இதற்கான செலவினம் மத்திய அரசிடம் இருந்து மீளப்பெறப்படுகிறது. மாநில அரசும் ஓர் சிறப்பு பயிற்சி பிரிவை நடத்துகிறது. அதில் 15 ஆசிரியர்கள் ஆண்டுதோறும் பயிற்சி பெறுகிறார்கள். 1995-96ஆம் ஆண்டுக்கு, இத்திட்டத்திற்கு ரூ.5.32 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

#### ஆ. காது கேளாதோருக்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு சிறப்பு பயிற்சி

ஒவ்வொரு ஆண்டும் சென்னை "சிறுமலர்" (Little Flower) காது கேளாதோருக்கான மேல்நிலைப்பள்ளி" மூலம் காது கேளாதோருக்கு, கற்பிக்கும் 10 ஆசிரியர்களுக்கு சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. தகுதி வாய்ந்த ஆசிரியர்களின் தேவை அதிகரித்து இருப்பதை முன்னிட்டு 100 சதவீத மானியத்துடன் 25 ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

ஆண்டுதோறும் ஜூன் மாதம் இப்பயிற்சி ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்படுகிறது.

அரசு மற்றும் அரசு மானியம் பெறும் பள்ளிகளில் பணிபுரியும் பயிற்சி பெறாத ஆசிரியர்கள் இப்பயிற்சியில் சேர்க்கப்படுகிறார்கள். இதற்கு 1995-96ஆம் ஆண்டில் ரூ.4.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**இ. மனவளர்ச்சி குன்றியோருக்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு பயிற்சி:-**

மன வளர்ச்சி குன்றியோருக்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு பயிற்சி, அரசு மானியத்துடன், சென்னை, பாலவிஹார் பயிற்சி பள்ளி என்னும் தனியார் சேவை நிறுவனத்தின் மூலம் அளிக்கப்படுகிறது. 20 ஆசிரியர்கள் ஒவ்வோராண்டும் பயிற்சி பெறுகிறார்கள். இதற்காக 1995-96ஆம் ஆண்டிற்கு ரூ.0.75 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.5. ஊனமுற்றோருக்கு கல்வி உதவித் தொகை:**

**அ. மாநில அரசு கல்வி உதவித் தொகை:**

ஒன்றாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை கல்வி பயிலும் ஊனமுற்ற மாணவர்களுக்கு புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகள் வாங்குவதற்காக கல்வி உதவித் தொகை ஓர் ஆண்டுக்கு ரூ.10/-லிருந்து ரூ.84/-வரை அவர்கள் பயிலும் வகுப்பிற்கேற்ப ஊனமுற்றோர் மறுவாழ்வு துறை வழங்குகிறது. 1994-95ஆம் ஆண்டில் 16,767 குழந்தைகள் கல்வி உதவித் தொகை பெற்றுள்ளார்கள்.

**ஆ. இந்திய அரசு கல்வி உதவித் தொகை:**

இந்திய அரசு, 1977-78ஆம் ஆண்டிலிருந்து "இந்திய அரசின் ஊனமுற்ற மாணவர்கள் / பயிற்சியாளர்களுக்கான கல்வி உதவித் திட்டம்" என்னும் திட்டத்தினை ஏற்படுத்தி 9ஆம் வகுப்பிற்கு மேல் பயிலும் மாணவர்களுக்கு மாதாமாதம் ரூ.85 லிருந்து ரூ.240 வரை அவர்கள் பயிலும் வகுப்பிற்கு ஏற்றவாறு வழங்கியது. இத்திட்டத்தை 1993-94ஆம் ஆண்டிலிருந்து இந்திய அரசு மாநில அரசுக்கு மாற்றியதால் நிதியுதவி நிறுத்தப்பட்டது. இந்த நல்ல திட்டத்தின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, மாநில அரசு ரூ.40.00 இலட்சத்தினை

இத்திட்டத்திற்காக, 3000 ஊனமுற்ற மாணவர்கள் பயன்பெறும் வகையில் 1995-96 ஆம் ஆண்டுக்கு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

**4.6. பார்வையற்ற மாணவர்கள் தேர்வு எழுத உதவுபவர்களுக்கு உதவி:-**

பார்வையற்றோருக்கான சிறப்பு பள்ளிகளில் கல்வி பயிலும் பார்வையற்ற மாணவர்கள் தேர்வுகளில் வினாக்களுக்கு இவர்கள் வாய்மூலம் அளிக்கும் பதிலினை அவ்வாறே எழுத பார்வையுள்ள உதவியாளரை வைத்துக் கொள்ள அனுமதி அளிக்கப்படுகிறார்கள்.

பார்வையற்ற மாணவருக்கு தேர்வு எழுத உதவி புரிபவருக்கு ஒரு தேர்வு தாளுக்கு ரூபாய் 6 வீதம் உதவி தொகையை இத்துறை வழங்கி வருகிறது. இந்த உதவித் தொகை பெறும் பள்ளிகள் பின்வருமாறு;

1) பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளி, பூவிருந்தவல்லி, சென்னை.

2) பார்வையற்றோருக்கான அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, திருச்சிராப்பள்ளி.

3) பார்வையற்றோருக்கான சிறுமலர் மேல்நிலைப் பள்ளி, சென்னை.

4) பார்வையற்றோருக்கான புனித லூயிஸ் மேல்நிலைப் பள்ளி, சென்னை.

சுமார் 200 மாணவர்கள் இத்திட்டத்தினால் ஆண்டுதோறும் பயனடைகிறார்கள். 1995-96ஆம் ஆண்டிற்கு ரூ.0.25 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.7. ஊனமுற்றோருக்கு பயிற்சி:**

கண்பார்வையற்றோர், காது கேளாதோர், கை, கால் ஊனமுற்றோர் ஆகியோருக்கு ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள பயிற்சி நிலையங்கள் மூலம் இத்துறை தகுந்த தொழிற்பயிற்சிகளை அளித்து வருகிறது. இதன் விவரங்கள் வருமாறு:-

அ) கிண்டியிலுள்ள அரசு தொழிற் பயிற்சி நிலையத்தில் காது கேளாதோருக்கு பயிற்சி அளிப்பதற்காக ஒரு சிறப்பு பிரிவு ஆரம்பிக்கப்பட்டு தற்போது, காது கேளாத 16 மாணவர்கள் 'பொருத்துநர்' பிரிவில் பயிற்சி பெற்று வருகின்றனர். 1995-96ஆம் ஆண்டிற்கு ரூ.0.40 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆ பூவிருந்தவல்லியில் உள்ள பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் பார்வையற்றோருக்கான அரசு தொழிற் பயிற்சி நிலையம் இயங்கி வருகிறது. இங்கு கீழ்கண்ட தொழில் பிரிவுகளில் திருத்தி அமைக்கப்பட்ட பயிற்சித் திட்டத்தின் கீழ் பயிற்சி அளிக்கப்படுகிறது.

1) பொருத்துநர் மற்றும் அடிப்படை இயந்திரம் இயக்குபவர். (ஓர் ஆண்டு காலம்).
2) புத்தகம் கட்டுபவர். (ஆறு மாத காலம்)
3) மின் கம்பி சுற்றுபவர். (ஓர் ஆண்டு காலம்)

ஒவ்வொராண்டும் 30 பார்வையற்றோர் இந்நிலையத்தில் பயிற்சி பெறுகிறார்கள். பயிற்சி பெறும் மாணவர்களுக்கு இலவசமாக இருப்பிடம், உணவு, இரண்டு ஜதை சீருடைகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்திற்காக 1995-96ஆம் ஆண்டிற்கு ரூ.10.44 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.8. பயிற்சி பெற்ற பார்வையற்ற காது கேளாதோரை சிறப்பு தொழில் பழகுநராக அமர்த்துதல்:-**

பார்வையற்றோருக்கான அரசு தொழிற் பயிற்சி நிலையம் பூவிருந்தவல்லியிலும், சென்னை மற்றும் மதுரையில் இயங்கும் அரசு தொழிற் பயிற்சி நிலையங்களிலும் பயிற்சி பெற்ற கண் பார்வையற்ற மற்றும் காது கேளாதவர்கள், அரசு மற்றும் அரசு சார்பு மற்றும் தனியார் நிறுவனங்களில், தொழில் பழகுநராக மாதம் ரூ.400/- வீதம் உதவித் தொகையுடன் சிறப்புத் தொழிற்பயிற்சியில் அமர்த்தப் படுகின்றனர். தொழில் பழகும் காலம் ஒரு ஆண்டு முடிந்த பின் அவர்கள் பயிற்சி பெற்ற அதே நிறுவனத்தில், காலியிடம் எழும்போது நிரந்தரப் பணியில் அமர்த்தப்படுகிறார்கள். 1995-96ஆம் ஆண்டிற்கு ரூ.0.40 இலட்சம் இத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

**4.9. ஊனமுற்றோருக்கான வேலை வாய்ப்பு உதவிகள்:**

**அ) மாவட்ட மறுவாழ்வு மையங்கள்:**

ஊனமுற்றோருக்கான மண்டல மறுவாழ்வு மையங்கள் சென்னை, கோயம்புத்தூர், மதுரை, வேலூர், தஞ்சாவூர் ஆகிய ஐந்து இடங்களில் இதுகாறும் செயல்பட்டு வந்தது. இம்மையங்கள் மாவட்ட மறுவாழ்வு மையங்கள் என்று மாற்றி ஒவ்வொரு மாவட்டத்திலும் செயலாற்றி வருகிறது. இம்மாவட்ட மறுவாழ்வு மையங்கள், ஊனமுற்றோருக்கு

மருத்துவம், தொழிற் பயிற்சி, பொருளாதாரம் மற்றும் சமூக மறுவாழ்வுக்கான பணிகளை கவனிக்கிறது. இத்திட்டத்திற்காக 1995-96ஆம் ஆண்டில் ரூ.38.36 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**ஆ. வேலை வாய்ப்பில் ஊனமுற்றோருக்கான மூன்று சதவீத இட ஒதுக்கீட்டை கண்காணிக்கும் மாவட்ட அளவிலான குழு:-**

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையக் குழுவின் வரம்பிற்குட்படாத 'சி' மற்றும் 'டி' பிரிவு பணிகளுக்கு வேலை வாய்ப்பில் ஊனமுற்றோருக்கு 3 சதவீத இட ஒதுக்கீட்டின் கீழ் பணி நியமனம் செய்ய கீழே குறிப்பிட்டுள்ள உறுப்பினர்களை கொண்ட மாவட்ட அளவிலான குழு ஒன்று அரசால் நியமிக்கப்பட்டுள்ளது.

1) மாவட்ட ஆட்சித்தலைவர் : தலைவர்
2) மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர் அல்லது உதவி இயக்குநர், வேலை வாய்ப்புத் துறை : உறுப்பினர்
3) எந்த துறையில் பணியிடம் காலியாக உள்ளதோ அந்த துறையை சார்ந்த அலுவலர் : உறுப்பினர்
4) மாவட்ட மறுவாழ்வு அலுவலர் : உறுப்பினர்-செயலர்

## 4.10. வேலை கிடைக்காத பார்வையற்றோருக்கு நிவாரணத் தொகை:-

அ) வேலை கிடைக்காத பார்வையற்றோருக்கு நிவாரணத் தொகை வழங்கும் திட்டம் 1981ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த நிவாரணத் தொகையை பெற கீழ்கண்ட தகுதிகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன:-

1) பார்வையற்றோராக இருக்க வேண்டும்.
2) 18 வயதுக்கு மேல் 40 வயதுக்குள் (தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு 45 வயது வரை) இருக்க வேண்டும்.
3) வேலை வாய்ப்பகத்தில் பதிவு செய்து ஓராண்டுக்கு மேல் காத்திருப்பவராக இருக்க வேண்டும்.

ஆ) வழங்கப்படும் நிவாரணத் தொகையின் விவரம்:-

| | |
|---|---|
| பட்டதாரிகள்/முதுநிலைப் பட்டதாரிகள் | ரூ.250/- |
| புதுமுக வகுப்பு/மேல்நிலை வகுப்பு | ரூ.200/- |
| இதர வகுப்புகள் | ரூ.150/- |

(இ) இந்த நிவாரணத் தொகை தகுதி பெறும் காலத்தில் இருந்து வேலை கிடைக்கும் வரை அல்லது வயது 40 (தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினருக்கு 45 வயது) முடியும் வரை அதிகபட்சம் 5 ஆண்டுகள் வழங்கப்படும். இத்திட்டத்திற்காக 1995-96 ஆம் ஆண்டுக்கு ரூ. 24.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1994-95 ஆம் ஆண்டில் 1136 நபர்கள் பயன் பெற்றுள்ளனர்.

**4.11. ஊனமுற்றோருக்கான நவீன பயிற்சி மற்றும் உற்பத்திக் கூடம், முட்டுக்காடு, செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம்.**

செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம், முட்டுக்காட்டில் ஊனமுற்றோருக்காக நவீன பயிற்சி மற்றும் உற்பத்திக் கூடம் இயங்கி வருகிறது. இந்த பணிமனையில் ஊனமுற்றோருக்கு மூன்று சக்கர வண்டிகள், சக்கர நாற்காலிகள், பெட்டிக் கடைகள், அலமாரிகள் போன்ற உபகரணங்கள், அறைகலன்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இக்கூடம், ஊனமுற்றோருக்கான பயிற்சி மற்றும் உற்பத்திக் கூடமாக துவங்கப்பட்டு தற்போது உற்பத்திக் கூடமாக இயங்கி வருகிறது. 1994-95 ஆம் ஆண்டு இக்கூடத்தில் 38.43 இலட்சம் செலவில் 1594 மூன்று சக்கர வண்டிகள், 126 சக்கர நாற்காலிகள், 1000 மடக்கு குச்சிகள் மற்றும் இதர எஃகு தயாரிப்புகள் உற்பத்தி செய்யப்பட்டன. இத்திட்டத்திற்காக 1995-96 ஆம் ஆண்டில் ரூ. 37.67 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 1600 மூன்று சக்கர வண்டிகளும், 170 சக்கர நாற்காலிகளும், 1000 மடக்கு குச்சிகளும் தயாரிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**4.12. ஊனமுற்றோருக்கு இலவச உபகரணங்கள் வழங்குதல்:-**

| வ. எண். | உபகரணங்கள் விவரம் | 1994-95 ல் பயனடைந்தோர் விபரம் | 1995-96 இல் பயன்பெற உள்ளோர் | 1995-96 ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | மூன்று சக்கர வண்டிகள் | 2300 | 2420 | 54.35 |
| 2. | சக்கர நாற்காலிகள் | 216 | 220 | 3.52 |
| 3. | காதொலிக் கருவிகள் | 1401 | 1800 | 14.40 |
| 4. | கறுப்புக் கண்ணாடி மற்றும் மடக்கு குச்சிகள். | 1000 | 1000 | 1.00 |



TRUTH ALONE TRIUMPHS

**4.13. உடல் ஊனமுற்றோர்களுக்கு பேருந்துகளில் பயணம் செய்ய பயணச் சலுகை வழங்குதல்:-**

(அ) இலவச பயணச் சலுகை பார்வையற்றவர்களுக்கு வயது வரம்பின்றியும், காது கேளாதோருக்கும் உடல் ஊனமுற்றோருக்கும் வயது 20/வயது வரையிலும், ஊனமுற்றோர் மறுவாழ்வு துறையினரால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் உள்ள மன வளர்ச்சி பாதிக்கப்பட்டவர்கள் (வயது வரம்பு கிடையாது) அவர்களின் உதவியாளர் களுடன் மருத்துவமனை/பள்ளி/கல்லூரி/பயிற்சிக் கூடம் அல்லது பணியிடம் ஆகிய இவற்றில் ஏதேனும் ஒன்றுக்கு அரசு பேருந்துகளில் (திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் மற்றும் டாக்டர் ஜெ. ஜெயலலிதா போக்குவரத்துக் கழகம் நீங்கலாக) சென்றுவர தற்சமயம் வழங்கப்பட்டு வருகிறது.

(ஆ) 1993-94 ஆம் நிதியாண்டில் இந்த சலுகையினை 20 வயதிற்கு மேற்பட்ட கீழ்க்கண்ட பிரிவினருக்கு நீட்டித்து 50 % கட்டணம் செலுத்தி மாநில அரசின் அனைத்து போக்குவரத்துக் கழக பேருந்துகளிலும் (திருவள்ளுவர் மற்றும் டாக்டர் ஜெ. ஜெயலலிதா போக்குவரத்துக் கழகம் நீங்கலாக) 30 கி. மீ. தூரம் வரை பள்ளி/கல்லூரிகள்/மருத்துவமனைகள்/பணியிடம் அல்லது பயிற்சிக் கூடம் சென்றுவர மாதம் ஒன்றுக்கு 46 தடவைகள் பயணம் செய்ய வசதி செய்யப்பட்டுள்ளது.

(1) முழுவதும் காது கேளாதோர்.

(2) இரண்டு கால்களும் முழுவதும் இழந்தோர்.

(3) இரண்டு கைகளும் முழுவதும் இழந்தோர்.

(4) கை, கால்கள் முழுவதும் செயலிழந்து 75 சதவீதத்திற்கு மேல் ஊனமுற்றோர்.

(5) நரம்பு சம்பந்தமான நோயினால் பாதிக்கப்பட்டோர், மன வளர்ச்சி குன்றியோர் மற்றும்

(6) ஒரு கை மற்றும் ஒரு கால் இழந்தோர்.

**4.14. செயற்கை அவயங்கள் பொருத்தும் துணை நிலையம், மதுரை:-**

மதுரையிலுள்ள கடுமையான கை, கால் ஊனமுற்ற குழந்தைகளுக்கான அரசு பள்ளியில் பயிலும் 100 ஊனமுற்ற

குழந்தைகளின் தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு, செயற்கை அவயங்கள் பொருத்தும் துணை நிலையம் மதுரையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையம் ஊனமுற்ற குழந்தைகளுக்கு மருத்துவ அறுவை சிகிச்சை, இயற்கை முறை தசை பயிற்சி, பயிற்சி மற்றும் முடநீக்கு சாதனங்கள் ஆகியவைகள் இலவசமாக வழங்கி வருகிறது. இந்த மையம் இயற்பியல் மருத்துவ நிபுணரின் தலைமையின் கீழ் தேவையான பணியாளர்களுடன் இயங்கி வருகிறது. இத்திட்டத்திற்காக 1995-96 ஆம் ஆண்டில் ரூ. 10.52 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.15. பார்வையற்றோரை திருமணம் செய்து கொள்ளும் பார்வையுள்ளவர் களுக்கான சலுகைகள்:-**

கலப்பு திருமணம் செய்து கொள்ளும் தம்பதிகளுக்கு அளிக்கப்படும் சலுகைகள் போன்றே பார்வையற்றவரை திருமணம் செய்து கொள்ளும் பார்வையுள்ளவர்களுக்கு நீடிக்கப்படும் சலுகைகள் பின்வருமாறு:-

பாராட்டுச் சான்றிதழ்.

திருமண செலவிற்காக ரொக்க தொகை ரூ.500/-

தேசிய சேமிப்புப் பத்திரம் ரூ. 5500/-

இத்திட்டத்திற்காக 1995-96 ஆம் ஆண்டில் ரூ. 2.76 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் 46 தம்பதியர்கள் இவ்வாண்டு பயனடைவார்கள்.

**4.16. மாவட்ட மறுவாழ்வு மையம், செங்கல்பட்டு:-**

(அ) 1986 ஆம் ஆண்டு அமெரிக்க ஐக்கிய நாட்டு அரசின் நிதியுதவியுடன் மத்திய அரசால் நம் நாட்டில் 12 மாநிலங்களில் 12 இடங்களில் துவக்கப்பட்ட மாவட்ட மறுவாழ்வு மையங்களில், மாவட்ட மறுவாழ்வு மையம், செங்கல்பட்டு ஒன்றாகும்.

**இத்திட்டத்தின் நோக்கங்கள்:**

ஊனமுற்றோரை கண்டறிதல்.

அவர்களின் மறுவாழ்வுக்கான தேவைகளை கணித்தல்.

அவர்களின் முழுமையான மறுவாழ்வுக்கு உதவிகள் வழங்குதல்.

(ஆ) முதல் கட்டமாக இத்திட்டம் காட்டாங்குளத்தூர், திருக்கழுக்குன்றம், மதுராந்தகம் ஊராட்சி ஒன்றியங்களில் மட்டுமே செயல்படுத்தப்பட்டது. இந்தத் திட்டம் தற்போது செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம் முழுமைக்கும் விரிவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 1986 முதல் 1994 வரை உடல் ஊனமுற்றவர்களை 7 வட்டாரங்களில் கண்டறிந்து, 6674 நபர்களுக்கு மறுவாழ்வு உதவிகள் வழங்கப் பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக 1995-96 ஆம் ஆண்டிற்கு ரூ. 10.82 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.17. அரசு பிரெய்லி அச்சகம்:**

பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளி, பூவிருந்தவல்லி வளாகத்தில் பார்வையற்றோருக்கான பிரெய்லி புத்தகங்களை அச்சிட்டு தரும் அரசு மண்டல பிரெய்லி அச்சகம் இயங்கி வருகிறது. இவ்வச்சகம் 1989-90 ஆம் ஆண்டு முதல் அரசு மற்றும் அரசு மானியம் பெறும் பார்வையற்றோருக்கான பள்ளிகளில் பயிலும் பார்வையற்றோருக்கு இலவசமாக பிரெய்லி புத்தகங்களை அச்சிட்டு வழங்கி வருகிறது. சுமார் 2000 பார்வையற்ற மாணவர்கள், இதன் மூலம் பயனடைகிறார்கள். இத்திட்டத்திற்காக 1995-96 ஆம் ஆண்டு ரூ. 8.52 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.18. ஊனமுற்றோருக்கு சுயவேலை வாய்ப்பிற்கு உதவி அளித்தல் :**

ஊனமுற்றவர்கள் சுயவேலை வாய்ப்பின் மூலம் மறுவாழ்வு பெற தேசிய மயமாக்கப்பட்ட வங்கியின் மூலம் கடனுதவி பெற உதவி செய்யப்படுகிறது. ரூபாய் ஆயிரம் அல்லது மொத்தக் கடன் தொகையில் மூன்றில் ஒரு பங்கு இதில் எது குறைவோ, அது அரசு மானியமாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்காக 1995-96 ஆம் ஆண்டிற்கு ரூ. 8.00 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால் 1500 ஊனமுற்றவர்கள் பயனடைவார்கள்.

**4.19. பார்வையற்ற பெண்களுக்கான தொழிற்கூடத்துடன் கூடிய அரசு மறுவாழ்வு மையம், பூவிருந்தவல்லி:**

செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம் பூவிருந்தவல்லியிலுள்ள பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் பார்வையற்ற பெண்களுக்கான தொழிற்கூடத்துடன் கூடிய அரசு மறுவாழ்வு மையம் இயங்கி வருகிறது.

18 வயதிலிருந்து 40 வயது வரையிலான (தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு 45 வயது வரை) பார்வையற்ற, ஆதரவற்ற அனாதை பெண்கள், இந்த இல்லத்தில் சேர்க்கப்படுகிறார்கள். இவர்களுக்கு சாக்கு கட்டிகள் தயாரிப்பதிலும், துணி நெய்வதிலும், ஆறு மாத காலத்திற்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சிக்குப் பின் இவர்களுக்கு இவ்வில்லத்திலேயே வேலை அளிக்கப்படுகிறது. இங்கு தயாரிக்கப்படும் படுக்கை விரிப்புகள், துண்டுகள், கட்டுத்துணிகள் மற்றும் சாக்கு கட்டிகள் அரசு மருத்துவமனை மற்றும் பள்ளிகளுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. இத்திட்டத்திற்கு 1995-96 ஆம் ஆண்டிற்கு ரூ. 9.38 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. மொத்தம் 40 பார்வையற்ற பெண்கள் இவ்வில்லத்தில் பயிற்சி பெற்று பணிபுரிந்து வருகிறார்கள்.

**4.20. கடும் ஊனத்தால் பாதிக்கப்பட்டோருக்கு பராமரிப்பு உதவித் தொகை:**

எந்தத் திட்டங்கள் மூலமும் உதவியோ, பயனோ அடைய இயலாத அளவிற்கு கடும் ஊனத்தால் பாதிக்கப்பட்ட கை, கால் ஊனமுற்ற மற்றும் மன வளர்ச்சி குன்றிய நபர்களுக்கு மாதமொன்றுக்கு ரூ. 100/-வீதம் பராமரிப்பு உதவித் தொகை அளிக்கப்படுகிறது.

பராமரிப்பு உதவித் தொகை பெற தகுதிகள்:

1. ஊனத்தின் அளவு 75 சதவீதம் அல்லது அதற்கு மேலும் இருக்க வேண்டும்.
2. பெற்றோர்/காப்பாளர் மாத வருமானம் ரூ. 1000/- க்கு கீழ் இருக்க வேண்டும்.
3. அரசின் வேறு எந்த உதவியும் பெறுபவராக இருக்கக் கூடாது. 1995-96 ஆம் ஆண்டிற்கு ரூ. 12.60 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.21. ஊனமுற்ற குழந்தைகளைப் பராமரிக்க தொண்டு நிறுவனங்களுக்கு மானியம்.**

ஊனமுற்ற குழந்தைகள், தொழுநோயினால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் மற்றும் தொழுநோயால் பாதிக்கப்பட்டோரின் குழந்தைகளைப் பராமரிக்கும் தனியார் சேவை நிறுவனங்களுக்கு ஒரு குழந்தைக்கு மாதம் ரூ. 90/- வீதம் அரசு மானியம் வழங்கப்படுகிறது.

பெற்றோர்/பாதுகாவலர் மாதவருமானம் ரூ. 1000/-க்கு கீழ் இருக்க வேண்டும். 1995-96 ஆம் ஆண்டிற்கு ரூ. 12.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 35 தனியார் சேவை நிறுவனங்களில் உள்ள 700 ஊனமுற்ற குழந்தைகள் இந்த ஆண்டு இத்திட்டத்தின் கீழ் பயனடைவார்கள்.

## 4.22. இளம்பிள்ளை வாதத் தடுப்பு மற்றும் மறுவாழ்வு திட்டம்.

இளம்பிள்ளை வாதத் தடுப்பு மற்றும் இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் திட்டம், ஊனமுற்றோர் மறுவாழ்வுத் துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இளம்பிள்ளை வாத நோய் வராமல் தடுப்பது, இளம்பிள்ளை வாத நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டமானது 1989 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு கட்டமாக தெரிவு செய்யப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அவற்றின் விபரங்கள் பின்வருமாறு:-

| வ. எண். | வருடம் | கட்டம் | தெரிவு செய்யப் பட்ட ஊராட்சி ஒன்றியங் களின் எண்ணிக்கை | பயனடைந்த நபர்களின் எண்ணிக்கை | நிர்ணயம் செய்யப் பட்ட தொகை (ரூபாய் இலட்சத் தில்) | செலவு செய்யப் பட்ட தொகை (ரூபாய் இலட்சத் தில்) |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1. | 1989-90 | ஒன்று | 40 | 10509 | 109.50 | 106.42 |
| 2. | 1990-91 | இரண்டு | 51 | 11806 | 80.15 | 70.42 |
| 3. | 1991-92 | மூன்று | 40 | 8825 | 80.48 | 75.85 |
| 4. | 1992-93 | நான்கு | 51 | 6480 | 76.17 | 70.12 |
| 5. | 1993-94 | ஐந்து | 40 | 4360 | 85.15 | 86.79 |
| 6. | 1994-95 | ஆறு | 42 | 3500 (டிசம்பர் '94 வரை) | 88.68 | 46.95 (டிசம்பர் '94 வரை) |
| 7. | 1995-96 | ஏழு | 45 | | 88.51 | |

இத்திட்டத்தில் இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்ட நபர்கள் கண்டறியப்பட்டு தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டு முழுமையான மறுவாழ்வு அளிக்கப்படுகிறது. (அதாவது மருத்துவம், கல்வி மற்றும் சமூக பொருளாதார உதவிகள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டங்களில் மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.) இம்முகாம்கள் மூலம் இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்ட நபர்கள் கண்டறியப்பட்டு அவர்களுக்குத் தேவையான மருத்துவ சிகிச்சைகள், அறுவை சிகிச்சைகள், இயற்கை முறையில் உடற்பயிற்சி, இலவச உபகரணங்கள் (சக்கர நாற்காலி, ஊன்றுகோல், மூன்று சக்கர வண்டி போன்றவை) வழங்குதல், சிறப்பு பள்ளிகளில் சேர்த்தல், வேலை வாய்ப்பு அளித்தல், சுயவேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் அரசு மான்யத்துடன் வங்கி நிதி உதவி அளித்தல், தொழிற் கல்வி பயிற்சி அளித்தல், முதியோர் உதவித் தொகை வழங்குதல், பராமரிப்பு உதவித் தொகை வழங்குதல் மற்றும் அவர்களுக்கு தேவையான உதவிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

இளம்பிள்ளை வாத நோய் தடுப்புத் திட்டம், அரசு சுகாதார நலத்துறை மூலம் செயல்பட்டு வரும்போது, ஊனமுற்றோர் மறுவாழ்வு துறையானது இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்டோரின் மறுவாழ்வுக்காக கீழ்க்கண்ட வழிமுறைகளை பின்பற்றி வருகிறது.

அ. தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்டோரை கணக்கெடுத்தல்.

ஆ. இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்டோரின் மறுவாழ்வுக்கான தேவைகளை கணித்தல்.

இ. தேவையான மறுவாழ்வு உதவிகள் அளித்தல்.

"புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா இளம்பிள்ளை வாதம் சரி செய்யும் அறுவை சிகிச்சை முகாம்கள்", அனைத்து மாவட்ட அரசு மருத்துவ மனைகளிலும் ஒரே சமயத்தில் செயல்பட்டு பாதிக்கப்பட்ட நபர்களுக்கு அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ளப் பட்டன. இத்திட்டத்திற்கென 1995-96 ஆம் ஆண்டில் ரூ. 88.51 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.23. பார்வையற்றோருக்கான வேலை வாய்ப்பு:**

மாண்புமிகு தமிழக முதல்வர், புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 1994 ஆம் ஆண்டில் 50 பார்வையற்ற நபர்களுக்கு

பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் ஆசிரியர்களாக பணியமர்த்த உத்திரவிட்டதன்படி ஆசிரியர்கள் தேர்வாணைக்குழுவின் மூலம் 50 பார்வையற்றோருக்கு நேர்முகத்தேர்வு செய்து கீழ்கண்ட விபரங்களின்படி வேலைவாய்ப்பளிக்கப்பட்டது.

| வ.எண். | பதவியின் பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | கல்லூரி ஆசிரியர்கள் | 11 |
| 2. | முதுநிலை பட்டதாரி ஆசிரியர்கள் | 9 |
| 3. | பட்டதாரி ஆசிரியர்கள் | 21 |
| 4. | இசை ஆசிரியர்கள். | 9 |
| | மொத்தம் | 50 |

**4.24 ஊனமுற்றோருக்கான மாநிலக் கொள்கை:**

1. ஐக்கிய நாட்டு பொது சபையில் "ஊனமுற்றோரின் பன்னாட்டு நாள்" என்றும், அமெரிக்க ஐக்கிய நாடுகளினால் "ஊனத்தின் பெருமை நாள் " என்றும் அறிவிக்கப்பட்ட 1994 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 3 ஆம் நாளில் "ஊனமுற்றோருக்கான தமிழக அரசின் கொள்கை" மாண்புமிகு தமிழக முதல்வரால் வெளியிடப்பட்டது.

அ. மாநிலத்தில் உள்ள அனைத்து ஊனமுற்றோரையும் பதிவு செய்து அவர்களின் ஊனத்தின் தன்மையையும், தேவையையும் மதிப்பீடு செய்து, அவர்கள் வாழ்க்கையில் தன்னிறைவு பெற்றவர்களாகவும், சுயமரியாதையுடனும் சமூகத்தில் வாழ உதவ அரசு தற்போது விரிவான மாநில கொள்கையை வெளியிட்டுள்ளது.

ஆ. இந்த மாநிலக் கொள்கையின் நோக்கம், ஊனத்தினை ஆரம்பத்திலேயே கண்டறிந்து அவர்கள் தன்னிச்சையான குடிமக்களாக விளங்கத் தேவையான மருத்துவ உதவி, தொழிற் பயிற்சி, பொருளாதார உதவி மற்றும் சமூக மேம்பாட்டிற்காக உதவிகளை செய்து அவர்களும் சமுதாயத்தில் ஒருங்கிணைந்து வாழ உதவுவதே ஆகும்.

2. இத்தகைய மறுவாழ்வு பணி கீழ்க்கண்ட அம்சங்களைக் கொண்டது.

**(i) மருத்துவ உதவி:**

அ. அனைத்து வகையான ஊனத்தினையும் தடுக்க, சிறப்பான திட்டங்களை உருவாக்கி தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்.

ஆ. அனைத்து சுகாதார மையங்களிலும் கருவினுள் வளர்கின்ற, பிறந்த மற்றும் வளர்கின்ற குழந்தைகளை நோய்களிலிருந்து பாதுகாக்க நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

இ. ஊனத்தினை ஆரம்பத்திலேயே கண்டறிந்து தக்க சமயத்தில் உதவுவதற்கு தேவையான வசதிகளை நெறிப்படுத்துதல்.

**(ii) சிறப்புக்கல்வி மற்றும் ஒருங்கிணைந்த கல்வி:**

ஊனமுற்ற குழந்தைகளுக்காக தனியாக சிறப்புப் பள்ளிகளின் மூலமோ அல்லது சாதாரண குழந்தைகளுடன் இணைத்தோ இலவசமாக ஆரம்பக்கல்வி வழங்கப்படும்.

**(iii) தொழிற்பயிற்சி:**

அனைத்து ஊனமுற்ற நபருக்கும் அவரது கற்கும் விருப்பம் மற்றும் திறனுக்கேற்ற வகையில் ஒரு தொழிலில் பயிற்சி அளிக்கப்படும்.

**(iv) பொருளாதார உதவி:**

அரசாங்கத்தில் தற்போதுள்ள இட ஒதுக்கீட்டுக் கொள்கையை மறு பரிசீலனை செய்து, ஊனமுற்றோரை தனியார் துறையிலும் இட ஒதுக்கீட்டின் மூலம் பணியமர்த்தி அவர்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக உதவுதல்.

**(v) சமூகத்தில் நிகர அந்தஸ்து.**

சமூகத்தில், ஊனமுற்றோரை மறுவாழ்வு அளிக்க மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் தீவிரப்படுத்துதல்.

**(vi) தடுப்பு**

(அ) தடுப்பு முறை: பெண்களை மருத்துவப் பரிசோதனை செய்து ஊனத்தினை ஆரம்ப நிலையிலேயே கண்டு பிடிக்க பணியாளர்களுக்கு பயிற்சி அளித்தல்.

(ஆ) ஆய்வு: தமிழ் மக்களின் சூழ்நிலை மற்றும் வாழ்க்கைக்கு ஏற்றவாறான குறைந்த செலவில் எளிய சாதனங்களை மறுவாழ்வுத் துறையில் கண்டுபிடிக்க ஆராய்ச்சி செய்தல்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

**4.25. ஊனமுற்றோர் நலனுக்காக அளிக்கப்படும் விருதுகள்:**

**(அ) சுதந்திர தின விழாவன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் வழங்கப்படும் மாநில விருதுகள்:**

(1) ஊனமுற்றவர்களை அதிக அளவில் பணியமர்த்திய தொழில் அதிபர்களுக்கு, "மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் சிறப்பு விருது" வழங்கப்படுகிறது.

(2) ஊனமுற்றோருக்காக சிறப்பாக சேவை புரிந்த மருத்துவருக்கு "மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் சிறப்பு விருது" வழங்கப்படுகிறது.

(3) ஊனமுற்றோருக்காக சிறப்பாக சேவை புரியும் சிறந்த நிறுவனத்திற்கு "மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் சிறப்பு விருது" வழங்கப் படுகிறது.

**(ஆ) ஊனமுற்றோர் உலக நாளன்று வழங்கப்படும் மாநில விருதுகள்:**

(1) ஊனமுற்றோருக்கு அதிக வேலை வாய்ப்பளித்த சிறந்த தொழிலதிபருக்கான மாநில விருது.

(2) ஊனமுற்ற சிறந்த தொழிலாளருக்கான மாநில விருது.

(3) ஊனமுற்றோருக்கு கல்வி கற்பிக்கும் சிறந்த நிறுவனத்திற்கான மாநில விருது.

(4) ஊனமுற்றோருக்கு கல்வி கற்பிக்கும் சிறந்த ஆசிரியருக்கான மாநில விருது.

(5) பள்ளியிறுதி தேர்வு மற்றும் மேல்நிலை வகுப்பில் மாநிலத்திலேயே முதல் மற்றும் இரண்டாவது மதிப்பெண் பெற்ற பார்வையற்ற, காது கேளாத மாணவர்களுக்கு "மாநில விருது" மற்றும் "பரிசுத் தொகை".

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

## அத்தியாயம்-5

## தமிழ்நாடு சமூக நல வாரியம்

*5.1* தமிழ்நாடு சமூக நல வாரியம் 1954-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு தமிழ்நாட்டில் தொண்டு நிறுவனங்கள் வளர்ச்சியிலும் முன்னேற்றத்திலும் முக்கிய பங்கு வகிக்கிறது.

**வாரியத்தின் முக்கிய நோக்கங்கள் வருமாறு:**

1. மாநிலத்தில் சமூக நல அமைப்புக்களை ஆரம்பித்து உயர்வடைய செய்தல்.
2. தனியார் சேவை நிறுவனங்கள் பணித்திறனை வளர்ப்பதற்கு தொழில் நுட்ப மற்றும் நிதியுதவி அளித்தல்.
3. உதவி திட்டங்களை மதிப்பீடு செய்தல்.

*5.2* தமிழ்நாடு சமூக நல வாரியம் மத்திய சமூக நல வாரியத்திடமிருந்து நிதி உதவி பெற்று தொண்டு நிறுவனங்கள் மூலம் குழந்தைகள், ஊனமுற்றவர்கள் மற்றும் மகளிர் ஆகியவர்களுடைய மேம்பாட்டிற்காக பணியாற்றுகிறது. சுமார் 50 % முதல் 90 % வரை தொண்டு நிறுவனங்களுக்கு நிதி உதவி செய்யப்படுகிறது. எஞ்சிய செலவுத் தொகை தொண்டு நிறுவனங்களால் ஏற்கப்படுகிறது. சில சிறப்பு திட்டங்களுக்கு 100 % கூட நிதியுதவி செய்யப்படுகிறது.

தமிழ்நாடு தொண்டு நிறுவனங்களுக்கு உபகரணங்கள் வழங்கவும் மற்றும் குழந்தைகள் காப்பகம் குறிப்பிட்ட இடங்களில் நடத்துவதற்கும் அரசிடமிருந்து வாரியம் மானியம் பெற்று வருகிறது.

*5.3.* 1575 தொண்டு நிறுவனங்களுக்கு 1994 ஏப்ரல் முதல் 1995 மார்ச் முடிய மொத்தம் ரூ. 306.26 இலட்சம் நிதியுதவி செய்யப்பட்டுள்ளது.

*5.4.* மகளிர், குழந்தைகள் மற்றும் ஊனமுற்றோர் நலப்பணிகளில் சேவை நிறுவனங்களுக்கு பெரும் பங்கு அளிக்கப்பட்டுள்ளது. போதை மருந்து உட்கொள்ளுதல், மதுப்பழக்கம் போன்ற தீய பழக்கங்களை எதிர்த்து போராடி ஒழிக்கும் பணியில், தெருக்குழந்தைகள் மேம்பாடு, எய்ட்ஸ் விழிப்புணர்ச்சி மற்றும் பெண் குழந்தைகள் மேம்பாடு, பிற சமூக நல திட்டங்களை செயல்படுத்துவதற்கும், பெண்கள் முன்னேற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் உதவிடக்கூடிய வகையில் அரசுத் துறைகளும், சேவை நிறுவனங்களும் மிகுந்த ஒத்துழைப்புடன் இணைந்து செயல்பட வழி வகுக்கப்படும்.

## *அத்தியாயம்-6*

## சமூக பாதுகாப்பு

*6.1. "படைத்தவனால்-பூமித்தாய்க்கு வழங்கப்பட்ட அனைத்து நலன்களையும் என்னையும் பகிர்ந்துக்கொள்ள அனுமதியுங்கள்.*

*நேர்மை என்னும் ஒளிக்கிரணங்கள்-என் வாழ்க்கைப் பாதையினை புனிதமான குணநலன்களை கொண்டவனாக மாற்றட்டும்" என்னும் கருத்திநுற்கேற்ப.*

*தமிழக அரசு சமூக பாதுகாப்புத்துறை வழியே புறக்கணிக்கப்பட்ட, ஆதரவற்ற சிறார்கள், மற்றும் தவறிழைத்த சிறார்களின் நலனுக்காக பல்வேறு மேம்பாட்டுத் திட்டங்களை செயற்படுத்தி வருகிறது. 1986 ஆம் ஆண்டின் இளைஞர் நீதிச் சட்டம் மற்றும் 1956-ம் ஆண்டின் ஒழுக்கநெறி பிறழ்தல் (தடுப்புச்) சட்டத்தின் கீழ் அமைந்துள்ள நிறுவனங்கள் சமூக பாதுகாப்புத்துறையின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றன.*

*வாழ்க்கைக் களத்தில் இறங்குமுன்னர் பயிற்சியும் பக்குவமும் கொள்வதுடன் இன்றியமையாமையை உணர்ந்து சிறார்களின் நலனுக்கென அமைந்துள்ள இல்லங்களில் கேடில் விழுச்செல்வம் கல்வியுடன், நலிவுறும் வாழ்க்கைக்கு ஊன்றுகோலனைய தொழிற்கல்விப் பயிற்சியும் வழங்கப்படுகிறது.*

**6.2. 1986 ஆம் ஆண்டின் இளைஞர் நீதிச்சட்டத்தின் கீழமைந்த நிறுவனங்கள்:**

*(அ) வழி தவறி, ஆதரவிழந்த நிலையில் வந்தாரை பாதுகாத்துப் பொறுப்பேற்கும் கூர்நோக்கு (குறுகிய கால) இல்லங்கள் 14 ஆகும். இவற்றுள் 11 அரசினராலும், 3 தனியாராலும் நடத்தப்படுகின்றன. புறக்கணிக்கப்பட்ட/ஆதரவற்ற சிறார்கள் இளைஞர் நலக்குழுமங்கள் மூலமாகவும், தவறிழைத்த சிறார்கள் இளைஞர் நீதி மன்றங்கள் மூலமாகவும் இவ்வில்லங்களில் சேர்க்கப்படுகின்றனர். தனியார் கூர்நோக்கு இல்லங்கள் குழந்தைகள் பாதுகாப்பு சங்கம், விடுதலை பெற்ற கைதிகள் உதவிச் சங்கம் மற்றும் பாலமந்திர் ஆகியவை அரசின் மானிய உதவியுடன் இயங்கி வருகின்றன.*

*(ஆ) இளைஞர் நலக்குழுமங்கள் மற்றும் இளைஞர் நீதிமன்றங்களினால் நிறுவனங்களுக்கு கல்வி மற்றும் நன்னெறிப்*

பயிற்சிக்கென அனுப்பப்படும் சிறார்களுக்கென 1986 ஆம் ஆண்டின் இளைஞர் நீதிச்சட்டத்தின்கீழ் மாநிலத்தில் 21 இளைஞர் மற்றும் சிறப்பு இல்லங்கள் உள்ளன. அவற்றில் 2 சிறப்பு இல்லங்கள் மற்றும் 8 இளைஞர் இல்லங்கள் அரசினராலும், 11 இளைஞர் இல்லங்கள் அரசின் மானிய உதவியுடன் தனியாராலும் நடத்தப்படுகின்றன. தவறிழைத்ததாகக் கருதப்படும் சிறார்கள், இளைஞர் நீதிமன்றங்கள் மூலம் சிறப்பு இல்லங்களிலும், ஆதரவற்ற சிறார்கள் இளைஞர் நலக்குழுமங்கள் மூலம் இளைஞர் இல்லங்களிலும் சேர்க்கப்படுகின்றனர். மனநோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கென சென்னை, பாலவிஹார் நிர்வாகத்தின் கீழ் ஓர் இளைஞர் இல்லம் இயங்கி வருகிறது.

(இ) இவ்வகை நிறுவனங்களின்றி, சிறார்களின் முன்னேற்றத்திற்கு தக்கது எனக் கருதும் நிறுவனங்களின் பொறுப்பில் ஒப்படைக்கவும் வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன.

## 6.3. 1986 ஆம் ஆண்டின் இளைஞர் நீதிச்சட்டத்தின் கீழமைந்த முன்மாதிரி இல்லம்.

1986 ஆம் ஆண்டின் இளைஞர் நீதிச்சட்டத்தின் கீழ், யூனிசெப் நிறுவனத்தின் 90 % நிதியான ரூ. 5.15 இலட்சத்தில் செங்கல்பட்டு, அரசினர் சிறப்பில்லம் ஒரு முன்மாதிரி இல்லமாக மேம்படுத்தப்பட்டுள்ளது.

## 6.4. இளைஞர் நலக்குழுமங்கள்:

1986 ஆம் ஆண்டின் இளைஞர் நீதிச்சட்ட பிரிவுகளின் கீழ்வரும் புறக்கணிக்கப்பட்ட சிறார்கள் தொடர்புள்ள வழக்குகளை விசாரிக்க 13 இளைஞர் நலக்குழுமங்கள் இயங்கி வருகின்றன. ஒரு தலைவர் மற்றும் அலுவல் சார்பற்ற 5 உறுப்பினர்களைக் கொண்டு (மகளிர் ஒருவர் உட்பட) இந்த இளைஞர் நலக்குழுமங்கள் இயங்கி வருகின்றன.

## 6.5. இளைஞர் நீதிமன்றங்கள்:

சென்னை நகரின் பன்னிரண்டாவது பெருநகர நீதிமன்ற நடுவரும், மாவட்டங்களில் தலைமைக் குற்றவியல் நீதிமன்ற நடுவர், உட்கோட்ட குற்றவியல் நீதிமன்ற நடுவர், குற்றவியல் முதல் வகுப்பு நடுவர் ஆகியோர் தவறிழைத்த சிறார்களின் வழக்குகளை தீர்வு செய்து வருகின்றனர்.

## 6.6. 1956 ஆம் ஆண்டின் ஒழுக்க நெறி பிறழ்தல் (தடுப்புச்) சட்டத்தின் கீழ் அமைந்த நிறுவனங்கள்:

(அ) 1956 ஆம் ஆண்டின் ஒழுக்க நெறி பிறழ்தல் (தடுப்புச்) சட்டத்தின் கீழ் தவறிழைத்தவர்களாகக் கருதப்படும் பெண்கள் மற்றும் சிறுமியர்க்கு மகளிர் காப்பகங்கள் மற்றும் பெண்கள் பாதுகாப்பு இல்லங்கள் புகலிடம் தந்து பயிற்சி மற்றும் மறுவாழ்வு அளிக்கின்றன. மேலும் பாதுகாப்பு கோரி தானாக சேர விரும்பும் மகளிருக்கு இந்த இல்லங்கள் பாதுகாப்பு அளிக்கின்றன. இத்துறையின்கீழ் ஆறு மகளிர் காப்பகங்கள்/பாதுகாப்பு இல்லங்கள் சென்னையில் இரண்டும், மதுரை, திருச்சி, சேலம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் ஒவ்வொன்றும் இயங்கி வருகின்றன.

(ஆ) நீதிமன்ற விசாரணைக் காலத்தில், மகளிர்க்கு புகலிடம் அளித்து பராமரிக்க ஏதுவாக, ஆறு மீட்பு இல்லங்கள் அரசினர் மகளிர் காப்பகங்கள்/பாதுகாப்பு இல்லங்களுடன் இணைந்து இயங்குகின்றன. இவை தவிர மணமாகாத தாய்மார்களுக்கு என 2 இல்லங்கள் தொண்டு நிறுவனங்களால் அரசின் மானிய உதவியுடன் நடத்தப்படுகின்றன.

## 6.7. கல்விப் பயிற்சி:

அனைத்து சிறப்பு/இளைஞர் இல்லங்களிலும் 8 ஆம் வகுப்பு வரை கல்வி அளிக்கப்படுகிறது. செங்கல்பட்டு, அரசினர் சிறப்பில்லம் மற்றும் சென்னை, அரசினர் பெண்கள் சிறப்பு இல்லங்களிலும் பள்ளியிறுதி வகுப்புவரை கல்வி அளிக்கப்படுகின்றன. இராணிப்பேட்டை மற்றும் தஞ்சாவூர், அரசினர் இளைஞர் இல்லங்களிலும் மைய அரசின் 50 % மானிய உதவியுடன் உயர்நிலைப் பள்ளி பிரிவுகள் துவங்கப்படவுள்ளன. உயர்கல்வியில் நாட்டமும் தகுதியும் உள்ள இல்லவாசிகள் இல்லத்தில் தங்கும் காலத்தைப் பொறுத்து வெளியில் உள்ள மேல்நிலைப்பள்ளி, கல்லூரி/தொழில் நுட்பக்கல்லூரி, தொழிற் பயிற்சி நிறுவனங்களில் சேர்த்து பயிற்றுவிக்கப் படுகின்றார்கள். பள்ளிக் கல்வி மட்டுமல்லாது முறைசாரா கல்வி மூலமும் இல்லவாசிகளுக்கு கல்வியளிக்கப்படுகிறது.

## 6.8. தொழிற் பயிற்சி:

(அ) சிறார்களிடையே தற்காப்பு மற்றும் தன்னம்பிக்கையினை மேம்படுத்தும் நோக்கில் சமூக பாதுகாப்புத்துறையின் கீழ் இயங்கும்

சிறப்பு/இளைஞர் இல்லங்களில் இல்லவாசிகளுக்கு வருவாய் ஈட்டக்கூடிய கீழ்க் குறிப்பிட்ட பிரிவுகளில் தொழிற்பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. தச்சு, புத்தகம் கட்டுதல், இயந்திர தச்சு, கொத்துவேலை, தையல் மற்றும் பூவேலை, சோப்பு தயாரிப்பு, தோட்டம் மற்றும் வேளாண்மை, நெசவு, இசைக்கருவி, பாய் நெசவு, மாட்டுப்பண்ணை, கருமாரப்பணி மற்றும் உலோகப்பணி.

(ஆ) மேற்காணும் தொழிற்பயிற்சிகள் மட்டும் அல்லாமல் பின்வரும் செயல்திறன் வளர்ச்சித் திட்டங்களும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன:

1. மெழுகுவர்த்தி தயாரிப்பு
2. பனைநார் பொருட்கள் தயாரிப்பு
3. பனை ஓலை பொருட்கள் தயாரிப்பு
4. காகித பொம்மைகள் தயாரிப்பு
5. மின்விசை மாவு ஆலை
6. இரண்டு சக்கர தானியங்கி வாகனங்கள் பழுது பார்ப்பு
7. வீட்டு மின் அலகுப்பணி
8. தண்ணீர் குழாய் பழுதுபார்ப்பு.

243 இல்லவாசிகள் மேற்குறிப்பிட்ட செயல்திறன் வளர்ச்சித் திட்டத்தில் பயிற்சி பெற்று வருகின்றனர்.

(இ) மேற்காணும் தொழில் அலகுகளில் சென்னை, அரசினர் பெண்கள் சிறப்பு இல்லம் மற்றும் தஞ்சாவூர், அரசினர் இளைஞர் இல்லங்களில் தையற்தொழில் கூடங்களும், செங்கல்பட்டு சிறப்பில்லத்தில் நெசவுத்தொழிற் கூடமும், தஞ்சாவூர், இராணிப் பேட்டை இளைஞர் இல்லங்களில் தச்சுத் தொழிற்கூடங்களும் நவீன இயந்திரமயமாக்கப்பட்டுள்ளன. இராணிப்பேட்டை, அரசினர் இளைஞர் இல்லத்தில் பற்றவைப்பு மற்றும் உற்பத்தி தொழிற்கூடம் துவங்கப்பட்டு மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

(ஈ) மகளிர் காப்பகங்கள்/பெண்கள் பிற்காப்பு நிறுவனங்களில் தையல் மற்றும் பூவேலை, பாய் நெசவு மற்றும் கை நெசவு ஆகியவற்றில் பயிற்சி வழங்கப்படுகிறது. சென்னை, அரசினர் மகளிர் காப்பகத்தில் இல்லவாசிகளுக்கு மின் சலவையகம் மூலம் பயிற்சி வழங்கப்படுகிறது. மேற்குறிப்பிட்ட தொழிற்கூடங்களில் 52 இல்லவாசிகள் பயிற்சி பெறுகிறார்கள்.

(உ) சிறார்களுக்கான பிற்காப்பு நிறுவனங்களில் புத்தகம் கட்டுதல், கருமாரப்பணி மற்றும் வேளாண்மை ஆகிய தொழில்களில் பயிற்சியளிக்கப்படுகின்றன. இந்நிறுவனங்களில் 20 இல்லவாசிகள் படிப்பு உதவித் தொகையுடன் பயிற்சி பெறுகிறார்கள்.

(ஊ) சென்னை, அரசினர் பெண்கள் சிறப்பு இல்லத்தில் குழந்தைகள் காப்பகம் ஒன்று இயங்கி வருவதுடன் 15 மாணவிகள் இப்பிரிவில் பயிற்சி பெறுகின்றார்கள். சென்னை, அரசினர் மகளிர் காப்பகத்தில் 20 இல்லவாசிகளுக்கு மனையியல் பயிற்சியளிக்கப்படுகிறது.

**6.9. இளைஞர் வழிகாட்டி நிலையங்கள் ஆரம்பித்தல்:**

சென்னை, மதுரை, வேலூர், தர்மபுரி, கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் தனியார் நிர்வாகத்தில் இளைஞர் வழிகாட்டி நிலையங்கள் இயங்கி வருகின்றன. இந்நிலையங்கள், இளைஞர் நலக்குழுமங்கள், இளைஞர் நீதிமன்றங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களால் பரிந்துரைக்கப்படும் சிறுவர் சிறுமியரின் மனநிலையை ஆராய்கின்றன.

**6.10. பிற்காப்பு நிறுவனங்கள்:**

இளைஞர் மற்றும் சிறப்பு இல்லங்களில் பயிற்சி முடிந்து வெளியேறும் சிறுவர்களின் பராமரிப்புக்கான மூன்று பிற்காப்பு இல்லங்கள் உள்ளன. இவற்றில் இரண்டு சிறுவர்களுக்கான இல்லங்கள், ஆத்தூர் (செங்கல்பட்டு எம்.ஜி.ஆர்.. மாவட்டம்) மற்றும் மதுரையிலும், பெண்களுக்கான ஒரு இல்லம் வேலூரிலும் (வடாற்காடு அம்பேத்கார் மாவட்டம்) உள்ளது. கல்விப்பயிற்சி மற்றும் தொழிற்பயிற்சி பெற்று வரும் இல்லவாசிகள், பயிற்சியை முழுமையாக முடித்து வெளியேற ஏதுவாக, அவர்கள் முன்னேற்றத்திற்கு உறுதுணை புரியும் வண்ணமும், அவர்களின் இல்ல நீக்க நாட்களுக்குப் பிறகு மேலும் மூன்று ஆண்டுக்காலம் பிற்காப்பு இல்லங்களில் தங்கி பயன்பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன் முக்கிய நோக்கம் இல்லவாசிகள் நிறைவான கல்வி அல்லது தொழிற்பயிற்சி பெற வேண்டும் என்பதே ஆகும். இவ்வகையான ஏற்பாட்டின் மூலம் பயிற்சி பெற்ற இல்லவாசிகள் தன்னம்பிக்கையுடன் இல்ல நீக்கம் பெற வழி ஏற்படுகிறது.

**6.11. மறுவாழ்வு நடவடிக்கைகள்:**

சமூக பாதுகாப்புத்துறையின் கீழ் இயங்கும் நிறுவனங்களில் பயிற்சி பெற்று வெளியேறும் இல்லவாசிகள் மறுவாழ்வுக்கு மிகுந்த முக்கியத்துவம் வழங்கப்படுகிறது.

முன்னாள் இல்லவாசிகள் மற்றும் இல்லவாசிகள் பயன்பெறும்விதமாக ஒரு தொழிற்கூட்டுறவு சங்கம் "கஸ்தூரிபாய் காந்தி மறுவாழ்வு தொழிற் கூட்டுறவு சங்கம்" என்னும் பெயரில் பதிவு செய்யப்பட்டு சென்னை, அரசினர் பெண்கள் இளைஞர்/சிறப்பு இல்ல வளாகத்தில் இயங்கி வருகிறது.

(1) 13 ஆதரவற்ற பெண்களுக்கு திருமண ஏற்பாடு வழங்கும் திட்டம் மூலம் சமூக பாதுகாப்புத்துறை பெண்கள் இல்லவாசிகளுக்கு மறுவாழ்வு அளிக்கப்பட்டு உள்ளது.

(2) இத்துறையின் தமிழ்நாடு தேர்வாணையத்தின் வரம்புக்குட்படாத பதவிகளில், முன்னாள் இல்லவாசிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கும். திருமணம் செய்துகொள்ளும் மணமக்களுக்கு அவர்களின் திருமண நாள் செலவாக ரூ. 300-ம், புதுவாழ்வு துவங்க, சீதனமாக ரூ. 1,000-ம் வழங்கும் திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(3) மகளிர் காப்பகங்களிலிருந்து விடுவிக்கப்படும் பெண்கள் சுய வேலை வாய்ப்பு பெற "ஒழுக்கநெறி பிறழிய மகளிருக்கான தமிழ்நாடு நல நிதி" ஏற்படுத்தப்பட்டு அதிக பட்சமாக ரூ. 5,000 வரை நிதியுதவியளித்து, கறவை மாடுகள், சிறு கடைகள், தையல்கடை போன்றவை வைத்து சொந்தமாக தொழில் செய்து முன்னேற வகை செய்யப்படுகிறது. இத் திட்டத்தின் மூலம் இதுகாறும் 124 பெண்கள் மறுவாழ்வு பெற்றுள்ளனர்.

**6.12. இளைஞர் நீதிச்சட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் திட்டப்பணிகள்:**

**(அ) தொழிற் பயிற்சி பெறும் இல்லவாசிகளுக்கு ஊக்கத்தொகை வழங்குதல்:**

அரசினர் இளைஞர்/சிறப்பு இல்லங்களில் தொழிற் பயிற்சி பெறும் இல்லவாசிகளில் திறமை வாய்ந்த மற்றும் ஓரளவு திறமை வாய்ந்த இல்லவாசிகளுக்கு முறையே மாதம் ரூ. 50 மற்றும் ரூ. 30 வீதம் ஊக்கத்தொகையளிக்கும் வகையில் 1992-93 ஆம் ஆண்டு திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட இத்திட்டத்தில் ரூ. 0.65 இலட்சம் செலவில் 150 இல்லவாசிகள் பயன்பெற்றுள்ளனர்.

**(ஆ) சிறார்கள் நலனுக்கான குடும்ப உதவித்திட்டம்**

வறுமையின் காரணமாக இளைஞர் இல்லங்களுக்கு அனுப்பப்படும் சிறுவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கு உதவும் வண்ணம் சிறார்களை இயல்பாகவே அவர்களது பெற்றோர்/உறவினரிடம் ஒப்படைத்து அவர்களது குடும்பத்திற்கு நிதி உதவி வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. தகுதியான சிறார்கள் ஒரு குழுவின் மூலம் தேர்வு செய்யப்பட்டு அவர்களின் பராமரிப்பு, கல்வி, உடல் நலம், இவற்றிற்கென ஒரு இல்லவாசிக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 100 வீதம் உதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்கான மதிப்பு ரூ. 1.00 இலட்சம் ஆகும். பயன்பெறும் இல்லவாசிகள் 100.

**(இ) சிறார்கள் பிச்சையெடுத்தலை ஒழித்தல்**

சிறார்கள் பிச்சையெடுக்கும் நிலையினை ஒழிக்கும் திட்டத்தை இத்துறை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம் மூன்று கட்டங்களாக செயல்படுத்தப்படுகிறது. அவையாவன:

குறிப்பிட்ட பகுதிகளில் துயருறும் சூழலில் பிச்சையெடுக்கும் குழந்தைகள் குறித்த தகவல்களை சேகரித்தல், புதிய இளைஞர் வழிகாட்டி நிலையங்கள் துவங்குதல் மற்றும் இளைஞர் வழிகாட்டி நிலையங்களை வலுப்படுத்துதல். இந்திய குழந்தைகள் நலச்சங்கத்தின் கீழ் ஒரு இளைஞர் வழிகாட்டி நிலையம் துவங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

**(ஈ) ஊனமுற்ற சிறார்களுக்கு சிறப்பு வசதிகள் செய்தல்**

மைய/மாநில அரசுகள் செலவுப் பொறுப்பேற்கும் திட்டங்களின் கீழ் ஊனமுற்ற சிறார்களுக்கு சிறப்பு பயிற்சியளிக்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு இத்திட்டத்தின் கீழ் அரசினர் சிறப்பு இல்லம், செங்கல்பட்டு மற்றும் சென்னை இராயபுரத்தில் உள்ள அரசினர் இளைஞர் இல்லங்களில் ஊனமுற்ற சிறுவர்களுக்கு சிறப்பு பயிற்சியளிப்பதற்காக 2 இல்லங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் 50 ஊனமுற்ற சிறுவர்கள் பயன்பெறுகின்றனர்.

## 6.13. சாலையோர சிறார்களுக்கான இரவு விடுதிகள்

(அ) தெருவோரச் சிறார்களின் நலன் குறித்து, தமிழக அரசு சிந்தித்து அவர்களுக்கு முதற்கட்டமாக இரவு விடுதிகளை அமைக்கலாம் என திட்டம் வகுத்தது. இவ்வகைச் சிறார்கள் தங்கள் வாழ்க்கையைப்

பெரும்பாலும் நடைபாதை ஓரங்களிலும், பேருந்து நிழற்குடைகளிலும் கழிக்கின்றனர். இந்த நிலை அவர்களை சமூக விரோதிகளிடம் தொடர்பு ஏற்படுத்தி குற்றவாளிகளாக மாற வழி செய்கிறது. சமூகத்தினால் பாதிக்கப்பட்டுள்ள இச்சிறார்களுக்கு இத்தங்கும் புகலிடங்கள் மறுவாழ்வு வழங்கும் விதத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

(ஆ) இத்திட்டத்தின் கீழ் தனியார் நிறுவனங்களால் அரசின் மானிய உதவியுடன் 13 புகலிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஏழு இல்லங்கள் சென்னையிலும், 2 மதுரையிலும், 1 சேலத்திலும், 1 விழுப்புரத்திலும், 1 வேலூரிலும், 1 கோவையிலும் நடைபெறுகின்றன. இவற்றுள் 6 தனியார் நிறுவனங்களால் நடத்தப்பட்டு வரும் 7 புகலிடங்க்ள் இந்திய அரசின் மானிய உதவியும், எஞ்சியுள்ள 6 புகலிடங்கள் தமிழக அரசின் மானிய உதவியும் பெறுகின்றன. தமிழ்நாடு அரசு இவ்வில்லங்களுக்கு ஆண்டுக்கு தலா ரூ. 40,000 ஒட்டு மொத்த மானியமாகவும், ரூ. 7,500 முறைசாரா கல்வி மற்றும் தொழிற் கல்விக்கென்றும் மற்றும் ஒரு இல்லவாசிக்கு ஒரு நாளைக்கு தலா ஒரு ரூபாய் வீதம் உணவுச் செலவின் மானிய உதவியும் வழங்குகிறது.

சாலையோரச் சிறார்களுக்கு இரவு நேரங்களில் இப்புகலிடங்கள் பாதுகாப்பாக அமைந்துள்ளன. சுமார் 650 சிறார்கள் தொழிற்பயிற்சி மற்றும் முறை சாராக் கல்வி ஆகியவை வழங்குவதின் மூலம் பயன் பெறுகின்றனர்.

## 6.14. 1994-95 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்ட புதிய திட்டங்கள்

(அ) குழந்தைகளை தவறாகப் பயன்படுத்துதல் மற்றும் புறக்கணித்தலை தடுக்கும் நோக்குடன் தன்னார்வ நிறுவனங்களின் கீழ் "இடர்பாடுகள் தலையீட்டு மையம்" ஒன்றைத் துவங்கும் திட்டத்தை அரசு செயல்படுத்தியுள்ளது. சமூக நோக்குள்ள நபர்கள், குழந்தைகள் தவறாக பயன்படுத்தப்படும் நிகழ்வுகளை அறிய நேரிட்டால் இம்மையத்தில் முறையிடலாம்.

இம்மையம் தலையிட்டு அக்குழந்தை தவறாக பயன்படுத்தப் படுதலை தடுக்க நடவடிக்கை மேற்கொள்வதுடன், அக்குழந்தைக்கு தற்காலிகமாக புகலிடம் மற்றும் பாதுகாப்பு அளிக்கிறது. பெற்றோருக்கு ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்கள் வழங்குகிறது. பொதுமக்களிடையே குழந்தைகள் தவறாக பயன்படுத்தல் சார்ந்த விழிப்புணர்வு ஏற்படுத்த பிரச்சாரம் மேற்கொள்ளுகிறது இம்மையம். இத்திட்டத்தில் 100 குழந்தைகள் பயன் பெறுகிறார்கள்.

(ஆ) பாதுகாப்பு ஏற்பாடுகளின் ஒரு பகுதியாக அனைத்து இளைஞர்/சிறப்பு/கூர்நோக்கு இல்லங்கள், மகளிர் காப்பகங்கள் மற்றும் பிற்காப்பு நிறுவனங்களுக்கு ரூ. 1.08 இலட்சம் செலவில் அவசர கால (எமர்ஜென்சி) விளக்குகள் வாங்கி வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் 2,700 இல்லவாசிகள் பயன் பெறுகிறார்கள்.

(இ) ஆதரவற்ற/அனாதை சிறார்களுக்கு அன்பும், அரவணைப்பும் அளிக்கும் வகையில் 10 சிறப்பு பராமரிப்பு மையங்கள் (சிறுமியர்க்கு 5, சிறுவர்களுக்கு 5) துவங்கப்பட்டு நடந்து வருகின்றன.

சென்னை, அரசினர் பெண்கள் சிறப்பில்லத்தில் 5 மையங்களும், இராணிப்பேட்டை, அரசினர் இளைஞர் இல்லத்தில் 5 மையங்களும், தன்னார்வ நிறுவனங்களால் நடத்தப்படுகின்றன. திட்ட மதிப்பு ரூ. 1.20 இலட்சம். 100 சிறார்கள் பயன் பெறுகின்றனர். சிறார்களை பராமரிக்க இல்லத்தாய்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

(ஈ) அரசினர் இளைஞர்/சிறப்பு இல்லங்கள் மற்றும் மகளிர் காப்பகங்களில் பல்வேறு தொழில் மையங்களில் பயிற்சி பெற்று வீடேகும் இல்லவாசிகளுக்கு மொத்த உதவித் தொகை வழங்கும் உன்னதமான திட்டத்தை அரசு செயல்படுத்தியுள்ளது. ரூ. 0.64 இலட்சம் செலவில் 45 இல்லவாசிகள் பயன் பெறுகின்றனர்.

(உ) வேலை வாய்ப்புகள் ஏற்படுத்தித்தரும் தொழில் மையங்களில் பயிற்சியளிக்கும் விதமாக தஞ்சாவூர், அரசினர் இளைஞர் இல்லத்தில் வீட்டு மின்சாரப்பணிகள் மற்றும் சுருள் கம்பிப் பணிகள் ஆகிய தொழில் அலகுகள் தொடங்கவும், அவ்வில்ல புத்தகம் கட்டும் பிரிவுக்கு கோம்ப் பைண்டிங் (Comb Binding) இயந்திரமும், லேமிநேஷன் இயந்திரமும் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி மையங்களில் 40 இல்லவாசிகள் பயிற்சி பெறுகின்றனர். திட்ட மதிப்பு ரூ. 1.40 இலட்சம்.

(ஊ) துறையின் கீழ் இயங்கும் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் விதமாக அரசு இளைஞர்/சிறப்பு/கூர்நோக்கில்லங்களுக்கு சமையல் எரிவாயு இணைப்பு, அரவை இயந்திரம் மற்றும் சமையல் பாத்திரங்கள் ரூ. 4.15 இலட்சம் செலவில் வழங்கப்பட்டன.

(எ) அரசினர் இளைஞர்/சிறப்பு இல்லங்களில் கூடுதலாக கட்டிடங்கள் கட்டுவதற்கும், கட்டிடங்கள் பழுது பார்க்கவும் ரூ. 8.00 இலட்சம் அனுமதிக்கப்பட்டது.

1995 ஏப்ரல் 27]

## 6.15. திட்ட வளர்ச்சி மற்றும் கணிப்பாய்வுப் பிரிவு

சமூக பாதுகாப்புத்துறையின் கீழ் இயங்கும் இல்லங்கள் மற்றும் குழந்தைகள் நலனில் இயங்கும் அனைத்து நிறுவனங்களின் செயல்பாடுகளையும், அவைகளில் சிறார்களுக்கு வழங்கப்படும் அடிப்படை தேவைகளை ஆய்வு செய்யவும், மேம்பாடு குறித்து பரிந்துரை செய்யவும் ஒரு திட்ட வளர்ச்சி மற்றும் கணிப்பாய்வுப்பிரிவு, யூனிசெப் நிறுவனத்தின் 100 % உதவியுடன் சமூக பாதுகாப்புத்துறை இயக்ககத்தில் 1992ஆம் ஆண்டு துவங்கப்பட்டது.

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை செயலரைத் தலைவராகவும், சமூக பாதுகாப்புத்துறை இயக்குநர், தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர், சமூக நல வாரியத்தலைவர், பொது சுகாதாரத்துறை இயக்குநர் மற்றும் சமூக நலத்துறை இயக்குநர் ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்ட உயர்மட்டக்குழுவின் கட்டுப்பாட்டில் திட்ட வளர்ச்சி மற்றும் கணிப்பாய்வுப்பிரிவு செயல்படுகிறது.

1993 ஆம் ஆண்டு முதல் இக்கணிப்பாய்வுப் பிரிவின் செலவினத்தை தமிழ்நாடு அரசே ஏற்றுக் கொண்டுள்ளது. 1986ஆம் ஆண்டின் இளைஞர் நீதிச்சட்டத்தின் கீழ் வரும் இல்லவாசிகளின் செயல்பாடுகளை ஆய்வு செய்வது தவிர, கருத்தரங்குகள், பயிற்சிகள் மற்றும் துயருறும் சூழ்நிலையிலுள்ள சிறார்களின் நலனைக் குறித்து மக்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் நிகழ்ச்சிகள் போன்றவை, இக்கணிப்பாய்வுப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவைகளைத் தவிர பிச்சை எடுக்கும் இளஞ்சிறார்களைத் தடுத்து மறுவாழ்வு வழங்கும் திட்டம், சாலையோர மற்றும் உழைக்கும் சிறார்களின் மேம்பாடு, இளைஞர் நீதிச்சட்டத்தின் கீழ் அமைந்த நிறுவனங்களில் பணிபுரியும் அலுவலர்களுக்கு பயிற்சி வகுப்புகள் நடத்துதல் போன்றவையுடன், துயருறும் சூழ்நிலைகளுக்கு உட்பட்ட சிறார்களுக்கு தொண்டு நிறுவனங்கள் மூலம் உதவி வழங்கும் திட்டம் ஆகியவை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

மேற்குறிப்பிட்ட திட்டங்களுக்கு, தக்க பயனாளிகளை தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு தக்க உதவிகள் வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## அத்தியாயம்-7

# முதியோர்களுக்கான ஓய்வூதியத் திட்டம்

*7.1* இந்தத் திட்டம் முதியோர்களுக்குச் சமூகப் பாதுகாப்பு அளிக்கக்கூடிய முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். உற்றார், உறவினர் ஆதரவின்றி வாழ வழியற்றவர்களுக்கு சமூகப் பாதுகாப்பு அளிக்கும் பொருட்டு கீழ்கண்ட இனங்களின் கீழ் இத்திட்டத்தை மாநில அரசு செயல்படுத்துகிறது.

*(1)* முதியோர் உதவித் தொகை (சாதாரணம்) திட்டம் *(1-4-1962* முதல் அமுல்படுத்தப்படுவது)

*(2)* முதியோர் உதவித் தொகை (ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர்) திட்டம் *(1-11-1974* முதல் அமுல்படுத்தப்படுவது)

*(3)* முதியோர் உதவித்தொகை (ஆதரவற்ற விதவை) திட்டம் *(1-6-1975* முதல் அமுல்படுத்தப்படுவது)

*(4)* முதியோர் உதவித்தொகை (ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர்கள்) திட்டம் *(21-8-1981* முதல் அமுல்படுத்தப்படுவது)

*(5)* கணவனால் கைவிடப்பட்ட ஆதரவற்ற பெண்களுக்கு உதவித் தொகை திட்டம் *(25-4-1986* முதல் அமுல்படுத்தப்படுவது)

### 7.2 முதியோர்களுக்கான ஓய்வூதியத் திட்டம்

### (அ) முதியோர் உதவித் தொகை (சாதாரணம்) திட்டம் (1-4-1962 முதல் அமுல் படுத்தப்படுவது)

கண்பார்வையற்றோர், தொழுநோய், மனநோய், பாரிசவாய்வு மற்றும் அவயம் இழந்து வருவாய் ஈட்ட முடியாத நபர்கள் உதவித் தொகைப் பெற குறைந்த பட்ச வயது வரம்பு *60* ஆகும். மற்ற ஆதரவற்ற நபர்களுக்கு குறைந்த பட்ச வயது வரம்பு *65* ஆகும். இத்திட்டம் *1-4-1962* முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**(ஆ) முதியோர் உதவித்தொகை (ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர் திட்டம் (1-11-1974 முதல்)**

*1974 ஆம் ஆண்டு "முதியோர் உதவித்தொகை" திட்டம் ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர்களும் பயன்பெறும் வகையில் விரிவுபடுத்தப் பட்டது. உடல் ஊனம் 50 சதவிகிதம் அளவும் அதற்கும் மேலும் உள்ள, ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர் 55 வயது நிரம்பியவர் மட்டும் இத்திட்டத்தின் மூலம் பயன் பெறத் தகுதி உடையவர் ஆவர். 1975ல் இத்திட்டத்தின் மூலம் பயன் பெறுவோர் வயது 45 ஆகக் குறைக்கப்பட்டது. 1975 ஆம் ஆண்டில் அரசின் உத்தரவின்படி இந்தகுறைந்த பட்ச வயது வரம்பு கண்பார்வையற்றோர்க்குப் பொருந்தாது. இத்திட்டம் 1982 முதல் தொழுநோயாளிகளும் பயன்பெறும் வகையில் விரிவுபடுத்தப்பட்டது.*

**(இ) முதியோர் உதவித் தொகை (ஆதரவற்ற விதவை) திட்டம் (1-6-1975 முதல்)**

*இந்தத் திட்டம் 1975 முதல் ஆதரவற்ற விதவைகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. முதலில் பயனாளிகளுக்கு குறைந்தபட்ச வயது வரம்பு 45 என ஆணையிடப்பட்டது. 1978 ஆம் ஆண்டு வயது வரம்பு 40 ஆக்கப்பட்டது. 1990 ஆம் ஆண்டு முதல் மேற்கண்ட வயது வரம்பை நீக்கி அரசு ஆணையிட்டுள்ளது. முதியோர் உதவித்தொகை (சாதாரணம்) திட்டத்தில் கூறப்பட்டுள்ள மற்ற நிபந்தனைகள் இவர்களுக்கும் பொருந்தும்.*

**(ஈ) முதியோர் உதவித்தொகை (ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர்கள்) திட்டம் (21-8-1981 முதல்)**

*இத்திட்டம் 21-8-1981 முதல் 60 வயது நிரம்பிய ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு அமுலாக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது.*

**(உ) கணவனால் கைவிடப்பட்ட ஆதரவற்ற பெண்களுக்கு உதவித் தொகை திட்டம் (25-4-1986 முதல்)**

*25-4-1986 முதல் 30 வயது நிரம்பிய, கணவனால் கைவிடப்பட்ட ஆதரவற்ற பெண்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டம் அமுலாக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. கணவருடன் ஐந்து ஆண்டுகளுக்குக் குறையாமல் எவ்வித தொடர்பு இல்லாமலும் அல்லது நீதிமன்றத்திலிருந்து விவாகரத்து சான்றிதழ் பெற்றவரும் இத்திட்டத்தின்கீழ் உதவித் தொகை பெற தகுதி உடையவர்கள் ஆவர்.*

## 7.3 உதவித் தொகை ஒப்பளிப்பு அளிக்கப்படும் முறை

மேற்கண்ட திட்டத்தின் கீழ் உதவித் தொகை ஒப்பளிப்பு அதிகாரம் கோட்டாட்சியருக்கு அளிக்கப்பட்டது. மேற்கண்ட ஒப்பளிக்கும் அதிகாரம் நலிந்தோர் நலம் வட்டாட்சியர்களுக்கு 1989 முதல் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு முதியோர் உதவித் தொகை பெறும் நபர்களுடன் நேரடியாக தொடர்புள்ள அலுவலர்களுக்கு அரசு இந்த அதிகாரத்தை வழங்கி, தேவையான நபர்களுக்கு முதியோர் உதவித் தொகை வழங்குவதில் தாமதத்தை தவிர்த்து உதவி செய்து வருகின்றது.

ஆதரவற்ற அந்த மக்கள் நிலை அறிந்து இவ்வரசு 12-5-1992 அன்று முதியோர் உதவித்தொகை பெறுபவர் விண்ணப்பங்களில் காத்திருப்போர் பட்டியலினால் ஏற்படும் கால தாமதங்களைக் களையும் பொருட்டு, ஒட்டு மொத்தமாக ஆண்டு தொடக்கத்தில் முன்பாகவே ஒட்டுமொத்த எண்ணிக்கையில் இடங்கள் அளித்து, 1992-93 ஆம் ஆண்டுக்கு ஏற்கனவே, 30,000 இடங்களையும் ஒப்பளிப்பு செய்து உத்தரவிட்டுள்ளது.

இந்த அரசு உதவித் தொகை உரியவர்களுக்கு கிடைக்க தாமதம் தவிர்க்கப்பட வேண்டும் என்பதையும், விண்ணப்பங்கள் உரிய நேரத்தில் பரிசீலிக்கப்பட்டு, காத்திருப்போர் பட்டியலில் இருப்பின், உடன் இந்த ஆதரவற்றவர்களுக்கு உதவித் தொகை ஒப்பளிக்கப்பட வேண்டும் என்றும், இந்தப் புதிய நடைமுறையை முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது. இதே போல் 1993-94 ஆம் ஆண்டுக்கு கூடுதலாக25,000 இடங்களையும் ஒப்பளிப்பு செய்து உத்தரவிட்டுள்ளது.

## 7.4 முதியோர் உதவித் தொகை வீதமும், வழங்கும் முறையும்

| | (மாதந்தோறும்) (ரூபாய்) |
|---|---|
| 1-4-1962 முதல் 31-3-1979 வரை | 20/- |
| 1-4-1979 முதல் 31-3-1982 வரை | 25/- |
| 1-4-1982 முதல் 30-4-1989 வரை | 35/- |
| 1-5-1989 முதல் 31-1-1992 வரை | 50/- |
| 1-2-1992 முதல் நாளது தேதி வரை | 75/- |

TRUTH ALONE TRIUMPHS

இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் உதவித் தொகை, பெறுபவர்களின் முகவரிக்கு சிறப்பு வட்டாட்சியரால் அனுப்பபடுகிறது. இதற்கான பண அஞ்சல் கட்டணம் செலவையும் மாநில அரசே ஏற்றுக் கொள்கிறது. முதியோர் உதவித் தொகை பட்டியல்கள் எழுதி வழங்கும் முறைகளில் உள்ள வேலைப்பளுவைக் குறைப்பதுடன் அதில் ஏற்படும் பிழைகளைத் தவிர்க்கும் நோக்கத்துடன் அரசு கணிப்பொறி மூலம் பண அஞ்சல் கட்டணத் தொகையினை அனுப்ப அனுமதி வழங்கியுள்ளது.

கணிப்பொறி மூலம் முதியோர் உதவித் தொகையினை பண அஞ்சல் செய்யும் திட்டத்தினை சென்னை மாவட்டத்தில் சோதனை முறையில் அமுல்படுத்தியுள்ளது. இம்முறை வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டால் மற்ற மாவட்டங்களுக்கும் இத்திட்டத்தினை விரிவுபடுத்த அரசு திட்டமிட்டுள்ளது.

**முதியோர் உதவித் தொகை உயர்வு**

இந்தத் திட்டங்களின்கீழ் வழங்கப்படும் ஓய்வூதியத் தொகை மாதமொன்றுக்கு ரூ.75/-லிருந்து ரூ.100-ஆக உயர்த்தப்படுகிறது.

## 7.5 இதர சலுகைகள்

**(1) இலவச கைத்தறி வேட்டி/சேலை வழங்குதல்**

ஆண்டுக்கு இருமுறை பொங்கல் பண்டிகை மற்றும் சுதந்திர நாள் அன்று உதவித் தொகை பெறும் ஆண்களுக்கு தலா ஒரு கைத்தறி வேட்டியும், பெண்களுக்கு தலா ஒரு கைத்தறி புடவையும் 1979 சுதந்திர நாள்முதல் அளிக்கப்பட்டு வந்தது. 1991 ஆம் ஆண்டு முதல் தீபாவளிக்கும் வேட்டி/புடவை வழங்க அரசு உத்தரவிட்டது. ஆனால் 1992-93ஆம் ஆண்டு முதல் முதியோர் உதவித் தொகைத் திட்டத்தின் கீழ் வருடத்தில் பொங்கல் மற்றும் தீபாவளி ஆகிய இரு பண்டிகை நாட்களுக்கு மட்டிலும் இலவச வேட்டி மற்றும் புடவை, முதியோர் உதவித் தொகை பெறும் நபர்களுக்கு வழங்கப்படுகிறது.

**(2) சத்துணவுக் கூடத்தில் மதிய உணவு வழங்குதல்**

அனைத்து முதியோர் உதவித் தொகை பெறுபவர்களுக்கும் நாள் தோறும் மதிய சத்துணவு இலவசமாக சத்துணவுக் கூடங்களில் வழங்கப்படுகிறது.

அ) சத்துணவுக் கூடங்களில் மதிய சத்துணவு சாப்பிடாத முதியோர் உதவித் தொகை பெறுவோர்களுக்கு வாரந்தோறும் நபருக்கு ஒரு கிலோ அரிசி இலவசமாக வழங்கப்படுகிறது.

ஆ) சத்துணவுக் கூடங்களில் மதிய சத்துணவு சாப்பிடும் முதியோர் உதவித் தொகை பெறும் நபர்களுக்கு வாரந்தோறும் நபருக்கு அரை கிலோ அரிசி இலவசமாக வழங்கப்படுகிறது.

மேற்படி திட்டம் 6-10-1980 முதல் நடைமுறையில் இருந்து வந்தது. பின்பு 8-5-1989 முதல் இலவச அரிசி வழங்கும் திட்டம் கைவிடப்பட்டது.

மறுபடியும், மேற்படி இலவச அரிசி வழங்கும் திட்டமானது 5-1-1991 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**7.6 முதியோர் உதவித் தொகை பயன் அடைவோர் எண்ணிக்கை மற்றும் செலவினம்**

| வருடம் | பயனடைவோர் எண்ணிக்கை | செலவினம் (ஆயிரத்தில்) |
|---|---|---|
| 1990-91 | 4,83,265 | 31,37,38 |
| 1991-92 | 5,54,174 | 36,20,84 |
| 1992-93 | 5,84,174 | 60,08,43 |
| 1993-94 | 5,99,018 | 62,42,81 |
| 1994-95 (நவம்பர் 1994 வரை) | 6,01,139 | 37,77,77 |

## 7.7 முதியோர் உதவித் தொகைத் திட்டம் ஒரு கண்ணோட்டம்

| வ. எண். | திட்டத்தின் பெயர். | தகுதிகள் | இத்திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்ட நாள் | ஓய்வூதியத் தொகை (ரூபாயில்) | ஓய்வூதியம் பெறும் மொத்த நபர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. | முதியோர் உதவித் தொகை (சாதாரணம்) | (அ) பிழைப்புக்கு வழியில்லாமல் இருத்தல் வேண்டும்.<br>(ஆ) காப்பாற்ற உறவினர்கள் இருத்தல் கூடாது.<br>(இ) 65 வயது நிரம்பியிருத்தல் வேண்டும். கண் குருடு, தொழுநோய், மனநோய் மற்றும் பாரிசவாயு போன்ற வியாதிகளால் பாதிக்கப் பட்டவர்களுக்கு குறைந்த பட்ச வயது வரம்பு 60 ஆகும்.<br>(ஈ) நகை மற்றும் வீட்டின் மதிப்பு முறையே ரூ.500/க்கும் ரூ.1000/க்கும் மிகாமல் இருத்தல் வேண்டும். | 1-4-1962 | 75 | 2,43,819 |

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| 2. | ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர். | (அ) 45 வயதுக்கும் குறையாமல் இருத்தல் வேண்டும் | 1-11-74 | 75 | 29,973 |
| | | (ஆ) பார்வையற்ற ஆதரவற்றவர்களுக்கு வயது வரம்பு இல்லை. | | | |
| | | (இ) முதியோர் உதவித் தொகை (சாதாரணம்) பெறுவோர்களுக்குரிய பிற விதிமுறைகள் யாவும் இதற்கும் பொருந்தும். | | | |
| 3. | ஆதரற்ற விதவைகள் | (அ) வயது வரம்பு இல்லை | 1-6-75 | 75 | 2,18,520 |
| | | (ஆ) முதியோர் உதவித் தொகை (சாதாரணம்) பெறுவோர்க்குரிய பிற விதிகள் யாவும் இவ்வினத்திற்கும் பொருந்தும். | | | |
| 4. | ஆதரவற்ற விவசாயத் தொழிலாளர்கள். | (அ) குறைந்த பட்சம் 60 வயது நிரம்பி இருத்தல் வேண்டும். | 21-8-81 | 75 | 79,780 |
| | | (ஆ) முதியோர் உதவித் தொகை (சாதாரணம்) பெறுவோர்க்குரிய பிற விதிமுறைகள் யாவும் இவ்வினத்திற்கும் பொருந்தும். | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | (இ) எந்தவித சொந்த பந்தங்கள்/ உறவினர்கள் இல்லாதிருத்தல் வேண்டும். | | | |
| 5. | கணவனால் கைவிடப்பட்ட ஆதரவற்ற பெண்கள். | (அ) குறைந்த பட்ச வயது 30 ஆகும். | 25-4-86 | 75 | 29,047 |
| | | (ஆ) குறைந்தது 5 ஆண்டுகளுக்கு கணவருடன் எவ்விதத் தொடர்பும் இல்லாதிருத்தல் வேண்டும். அல்லது சட்ட பூர்வமான விவாகரத்து சான்றிதழ் சம்பந்தப்பட்ட நீதிமன்றத்திலிருந்து பெற்று தாக்கல் செய்யவேண்டும். | | | |
| | | (இ) முதியோர் உதவித் தொகை (சாதாரணம்) பெறுவோர்க் குரிய பிற விதிமுறைகள் யாவும் இவ்வினத்திற்கும் பொருந்தும். | | | |
| | | மொத்தம் | .. | | **6,01,139** |

இந்த ஆண்டு முதல் முதியோர் உதவித்தொகை மாதம் ரூ. 75லிருந்து ரூ. 100 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

## 7.8. முதியோர் இல்லங்கள்:

வறுமை நிலையில் உள்ள குடும்பத்தை சார்ந்த முதியோர்கள் மற்றும் ஆதரவற்ற நிலையில் உள்ள முதியோர்கள் ஆகியவர்களின் அன்றாட வாழ்வில் உணவு, உறைவிடம் இன்றி துயருறுவோர் பலர் உள்ளனர். இவர்களுடைய துயர் களைய தனியார் தொண்டு நிறுவனங்களின் தேவையை பயன்படுத்த 5 முதியோர் இல்லங்கள் 1991-92-ல் துவங்கப்பட்டன. மேலும் 5 முதியோர் இல்லங்கள் 1993-94-ல் துவங்கப்பட்டன. ஆக தற்போது உள்ள 10 இல்லங்களில் 320 முதியோர்கள் தங்கிப் பயன் பெறுகின்றனர்.

**1995-96 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டப் பணிகளின் விபரப் பட்டியல்.**

| தொடர் எண். (1) | திட்டப் பணிகளின் விவரம் (2) | நிதி ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) (3) |
|---|---|---|
| | *சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டம்* | |
| 1. | பொருளாதார ரீதியில் நலிந்த மகளிருக்கான சுயவேலை வாய்ப்புத் திட்டம் | 35.00 |
| 2. | பணிபுரியும் தாய்மார்கள், நோயுற்ற தாய்மார்களின் பயனுக்கான குழந்தைகள் காப்பகங்கள் 25-ஐ ஏற்படுத்துதல். | 6.54 |
| 3. | சேலத்தில் உள்ள சேவை இல்லத்தில் மேனிலைப் பாட முறைகளைத் தொடங்குதலும், கடலூர், தஞ்சாவூர் ஆகிய இடங்களிலுள்ள சேவை இல்லங்களில் வாழ்க்கைத் தொழிற்கல்வியைத் தொடங்குதலும். | 12.29 |
| 4. | காமராஜர் மாவட்டம், சூலக்கரையில் அரசினர் அனாதை இல்லத்திற்கு கட்டிடம் கட்டுதல். | 25.00 |

| தொடர் எண். (1) | திட்டப் பணிகளின் விவரம் (2) | நிதி ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) (3) |
|---|---|---|
| | ஊனமுற்றோர் மறுவாழ்வு | |
| 5. | காது அச்சுத் தயாரிப்புப் பிரிவை 10 மாவட்டங்களில் ஏற்படுத்துதல். | 3.00 |
| 6. | சூரிய வெப்பத்தால் இயங்குவதும், மீண்டும் மின்சக்தியூட்டத்தக்கதுமான 1,000 மின்கலன்களை காது கேளாதோருக்கு இலவசமாக வழங்குதல். | 3.50 |
| 7. | ஊனமுற்றோர் மறுவாழ்வு இயக்ககத்திற்கு கணிப்பொறி வசதிகளைச் செய்து கொடுத்தல். | 2.00 |
| 8. | காது கேளாதோருக்கான அரசு சிறப்புப் பள்ளிகள் 10-க்கு பேச்சுப் பயிற்சியளிக்கும் ஒலிக் கருவிகளை வாங்குதல் மற்றும் பேச்சுப் பயிற்சியளிக்கும் சாதனத்தை அமைத்தல். | 1.50 |
| | சமூகப் பாதுகாப்பு | |
| 9. | சென்னையில், அரசு சாரா அமைப்பின்கீழ் இளங்குற்றவாளிகள் இல்லமொன்றை ஏற்படுத்தல். | 3.86 |
| 10. | அரசின் சிறப்பு இல்லங்களில்/ இளங்குற்றவாளிகள் இல்லங்களில் வேலை வாய்ப்பை அடிப்படையாகக் கொண்ட வாழ்க்கைத் தொழிலைத் தொடங்குதல். | 3.59 |
| 11. | திருச்சியில், தெருக்களில் சுற்றித் திரியும் சிறாருக்கு (சிறுவருக்கு ஒன்று; சிறுமியருக்கு ஒன்று என்று) தங்கும் இல்லங்களை ஏற்படுத்துதல். | 2.19 |

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

| தொடர் எண். (1) | திட்டப் பணிகளின் விவரம் (2) | நிதி ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) (3) |
|---|---|---|
| 12. | அரசு இளங்குற்றவாளிகள்/சிறப்பு/கண்காணிப்பு/ஒழுக்கக் கண்காணிப்பு இல்லங்களைச் சேர்ந்த கல்வியளிக்கும் பிரிவுகளுக்கு குறைந்த அளவு அறைக்கலன் வசதிகளைச் செய்து கொடுத்தல். | 1.70 |
| 13. | பஞ்சப்பள்ளியிலுள்ள அரசு இளங் குற்றவாளிகள் பாதுகாப்பு இல்லத்திற்கும், திருநெல்வேலியிலுள்ள அரசு கண் காணிப்பு இல்லத்திற்கும் தொலைபேசி இணைப்பு வசதி செய்து கொடுத்தல். | 0.45 |
| 14. | வேலூரிலுள்ள அரசினர் கண்காணிப்பு இல்லத்திற்கு சுற்றுச் சுவர் கட்டுதல். | 2.00 |
| 15. | அரசினர் சிறப்பு இளங்குற்றவாளிகள் இல்லத்திற்கும், சென்னை அரசினர் ஒழுக்கக் கண்காணிப்பு இல்லத்திற்கும் இசைக் கருவிகள் வழங்குதல். | 0.90 |
| | மொத்தம் -திட்டப் பணிகள் செலவு .. | **1,03.52** |

## நடைமுறையிலுள்ள முக்கிய திட்டப்பணிகள்

| தொடர் எண். (1) | திட்டப் பணிகளின் விவரம் (2) | நிதி ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) (3) |
|---|---|---|
| | *மகளிர் நலம்* | |
| 1. | பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதியிலிருந்து உதவி பெறும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம் | 1000.00 |

TRUTH ALONE TRIUMPHS

| தொடர் எண். (1) | திட்டப் பணிகளின் விவரம் (2) | நிதி ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) (3) |
|---|---|---|
| 2. | வறுமைக் கோட்டிற்கு கீழேயுள்ள கருவுற்ற மகளிருக்கு ரொக்க உதவி | 600.00 |
| 3. | வறுமைக் கோட்டிற்கு கீழேயுள்ள பெண்களின் திருமணத்திற்காக நிதியுதவி | 500.00 |
| 4. | சேவை இல்லங்களும், இடைநிலை பள்ளி ஆசிரியர் பயிற்சி வகுப்பும் | 89.57 |
| 5. | பணி மையங்களும், உற்பத்தி பிரிவும் | 76.05 |
| 6. | மகளிர் மன்றங்கள் | 49.83 |
| 7. | கூட்டுறவு சங்கங்களுக்கான கண்காணிப்பு பிரிவை ஏற்படுத்துதல் | 36.96 |
| 8. | பெண்களுக்கான வழிகாட்டி நிலையங்கள் | 30.68 |
| 9. | தமிழ்நாடு அரசு கலப்பு திருமண உதவித்திட்டம் | 27.70 |
| 10 | ஏழை விதவையரது மகள்களின் திருமணத்திற்காக திருமண உதவித் தொகை | 21.00 |
| 11. | ஆதரவற்ற விதவைகளுக்கு தையல் இயந்திரம் வழங்கும் திட்டம் | 87.35 |
| 12. | பணிபுரியும் மகளிர்க்கான இல்லங்களை நடத்துதல் | 12.61 |
| 13. | தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் முதியோர் நல இல்லங்கள் | 10.00 |
| 14. | விதவை மறுமணத்தை ஊக்குவிக்கச் சேமிப்பு சான்றிதழ்கள் வழங்கும் திட்டம் | 9.86 |

| தொடர் எண். (1) | திட்டப் பணிகளின் விவரம் (2) | நிதி ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) (3) |
|---|---|---|
| 15. | தொண்டு நிறுவனங்களுக்கு நிதியுதவி | 6.10 |
| 16. | தையல் மையங்கள் மலைவாழ் மக்களுக்கான துணை திட்டத்தின்கீழ் தொடங்குதல் | 3.07 |
| 17. | பணிபுரியும் மகளிர் இல்லங்கள் தொடங்குதல் | 2.34 |
| 18. | வாழ்க்கை தொழிற்பயிற்சி பெற ஏழை மகளிருக்கு நிதியுதவி | 2.30 |
| 19. | ஏழை விதவைகளின் பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு நிதியுதவி | 2.25 |
| 20. | ஆதரவற்ற பெண்களுக்கு திருமண நிதியுதவி | 1.44 |
| | குழந்தைகள் நலம் | |
| 1. | புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் | 24730.17 |
| 2. | தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம் | 7580.27 |
| 3. | ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம் (சிடா திட்டமும் சேர்ந்தது) | 4487.47 |
| 4. | பெண் குழந்தைகள் நலனுக்கான புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா திட்டத்திற்கு நிதியுதவி | 400.00 |
| 5. | ஆதரவற்ற குழந்தைகள் காப்பு திட்டத்தில் தனியார் நிறுவனங்களுக்கு நிதியுதவி | 267.12 |

| தொடர் எண். (1) | திட்டப் பணிகளின் விவரம் (2) | நிதி ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) (3) |
|---|---|---|
| 6. | ஆதரவற்ற குழந்தைகள் காப்பு திட்டத்தில் தனியார் நிறுவனங்களுக்கு நிதியுதவி | 175.07 |
| 7. | அனாதை இல்லங்கள் தொடங்குதல் | 10.81 |
| 8. | கிராமப்புற பணிகளுக்காக சமூக நல நிறுவனங்களுக்கு உதவுவதற்காக சமூக நல வாரியத்திற்கு மானியம் | 10.00 |
| 9. | ஆதரவற்ற குழந்தைகள் காப்பகங்கள் தொடங்குதல் | 3.82 |
| | ஊனமுற்றோர் நலம் | |
| 1. | ஊனமுற்றோர் பள்ளிகளுக்கு நிதியுதவி | 196.06 |
| 2. | பார்வையற்றோர் பள்ளி | 105.52 |
| 3. | இளம்பிள்ளைவாத நோய் ஒழிப்பு ஒருங்கிணைந்த திட்டம் | 88.51 |
| 4. | காது கேளாதோர்க்கான பள்ளிகள் | 75.52 |
| 5. | ஊனமுற்றோருக்கான மறுவாழ்வுத்திட்டம் | 62.34 |
| 6. | மண்டல மறுவாழ்வு மையம் | 46.11 |
| 7. | உடல் ஊனமுற்ற மாணவர்களுக்கு படிப்புதவி தொகைகள் | 40.00 |
| 8. | செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம் முட்டுக்காட்டில் உள்ள நவீன பயிற்சி மற்றும் உற்பத்தி மையத்தை நடத்துதல் | 37.67 |
| 9. | வேலைவாய்ப்பகங்களில் பதிவு செய்து இருக்கும் வேலையற்ற பார்வையற்றோருக்கு வேலை வாய்ப்பின்மைப்படி | 24.00 |

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

| தொடர் எண். (1) | திட்டப் பணிகளின் விவரம் (2) | நிதி ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) (3) |
|---|---|---|
| 10. | காது கேளாதோருக்கான முன்பருவப் பள்ளி | 25.41 |
| 11. | பார்வையற்றோருக்கான மறுவாழ்வு | 21.68 |
| 12. | கடுமையாக ஊனமுற்றோருக்கான பராமரிப்புப் படிகள் | 12.60 |
| 13. | இளம்பிள்ளை வாதம், மூளை, மனவளர்ச்சி இன்மையால் பாதிக்கப்பட்ட ஊனமுற்ற பிள்ளைகளை பராமரிக்கும் தொண்டு நிறுவனங்களுக்கு நிதியுதவி | 12.00 |
| 14. | செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம் உடல் ஊனமுற்றோரின் மறுவாழ்வு பணிகளுக்கான முன்னோடித் திட்டம் செயல்படுத்துதல் | 10.82 |
| 15. | கடுமையான கை, கால் ஊனமுற்றோருக்கான பள்ளி | 10.52 |
| 16. | பார்வையற்ற வயது வந்தோருக்கான இலகுரக பொறியியல் கல்வித்திட்டம் | 10.44 |
| 17. | அரசு மண்டல பிரெய்லி அச்சகம் | 9.02 |
| 18. | மனவளர்ச்சி குன்றியோருக்கான நிலையம் தொடங்குதல் | 8.19 |
| 19. | உடல் ஊனமுற்றோருக்கான சுயவேலை வாய்ப்புத் திட்டம் | 8.00 |
| 20. | மனவளர்ச்சி அடையாத குழந்தைகளுக்கான அரசு சாரா நிறுவனங்களுக்கு நிதியுதவி | 7.91 |

| தொடர் எண். (1) | திட்டப் பணிகளின் விவரம் (2) | நிதி ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) (3) |
|---|---|---|
| 21. | காது கேளாதோருக்காக புதிய பள்ளிகளையும், மேல்நிலைப் பள்ளிகளையும் தொடங்குதல் | 6.78 |
| 22. | பார்வையற்றோருக்கான புதிய பள்ளிகளையும் மேல்நிலைப்பள்ளிகளையும் தொடங்குதல் | 5.62 |
| 23. | உடல் ஊனமுற்றோர் நல மாநில வாரியம் | 5.60 |
| 24. | பார்வையற்றோரின் ஆசிரியர்களுக்கான மண்டல பயிற்சி மையங்கள் | 5.32 |
| 25. | காது கேளாதோருக்கான பயிற்சி மையங்கள் | 4.00 |
| 26. | அரசு அங்கீகாரம் பெற்ற ஊனமுற்றோர் பள்ளிகளுக்கு உதவி | 3.20 |
| 27. | காது கேளாதோருக்கான கல்வி கற்பிப்பதில் பயிற்சி அளிக்க தொண்டு நிறுவனங்களுக்கு நிதியுதவி | 3.10 |
| 28. | பார்வையற்றோரை திருமணம் செய்யும் குறைபாடற்றவர்களுக்கு சலுகைகள் | 2.76 |
| 29. | உடல் ஊனமுற்றோருக்கான சாக்குக் கட்டி தயாரிப்பு சங்கங்களை ஏற்படுத்துதல் | 2.18 |
| 30. | சென்னை, பூவிருந்தவல்லி, பார்வையற்றோருக்கான அரசினர் தொழிற் பயிற்சி மையத்திலும், கிண்டி, அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்ற பார்வையற்றவர்களுக்கும், காது கேளாதோருக்கும் சிறப்பு தொழில் பழகுநராக சேர்த்து பணிப்பயிற்சி அளித்தல் | 0.40 |

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

## தொகுப்புரை

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஊனமுற்றோருக்கான மாநிலக் கொள்கையை கடந்த 03-12-1994 அன்று அறிவிக்கும்போது குறிப்பிட்ட பொன்னான வார்த்தைகளை இங்கே குறிப்பிட விழைகிறேன்.

"பொதுவாக எனது கருத்துப்படி வளர்ச்சி என்பது நாட்டின் போக்கைப் பொறுத்தே அமைகின்றது. நாடும் அதன் கொள்கையும் உண்மையான உறுதிப்பாடாக, பிரச்சனைக்கு தீர்வாக இருப்பதே நன்மை பயக்கும். மேற்குறிப்பிட்டவையே "மகளிருக்கான 2000 ஆண்டு தொலைநோக்குத் திட்டம்", "குழந்தைகள் நலத்திற்கான 15 அம்சத் திட்டம்" மற்றும் "ஊனமுற்றோருக்கான மாநில அரசின் கொள்கை" ஆகிய திட்டங்களை வகுத்து, இயக்கி, அறிவிப்பதற்கு உதவிகரமாக இருந்தன".

மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய எமது தாய்க்கும் மேலான தாயின் ஆசியினாலும், வழிகாட்டலினாலும், மாநில அரசு, மத்திய அரசு மற்றும் தனியார் தொண்டு நிறுவனங்களின் ஆழ்ந்த முயற்சிகள் அனைத்தையும் ஒருங்கிணைந்த வகையில் அமைத்து தீட்டப்படும் சிறப்புமிகு திட்டங்கள் உரியவர்களை அடைவது உறுதி செய்யப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

# இணைப்பு-IV

(427 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## அத்தியாயம் 1

### தொழிலாளர்களும், தொழில் அமைதியும்.

தொழிலாளர்களுக்கும், தொழில் அமைதிக்கும் இடையில் இணைந்த உறவு உண்டு என்பதை யாரும் மறுக்க முடியாது. மனித உரிமைகள், வேலை தொழில் உறவுகள், சமூக பாதுகாப்பு மற்றும் பணி நிபந்தனைகள் ஆகியவற்றின் பிரதிபலிப்புதான் இந்த அரசின் தொழிலாளர் கொள்கையாகும். இவை ஒவ்வொன்றும் செம்மையாக அமைந்தால்தான், ஒன்றோடொன்று இணைந்திருந்தால்தான் நல்ல தொழில் உறவு அமையும். தொழில் அமைதி, ஆரோக்கியமான தொழிலாளர் நடவடிக்கைககளையும் தொளிவு பெற்ற முற்போக்கு என்னங்கொண்ட நிர்வாக அமைப்புகளையும்தான் சார்ந்துள்ளது. வளர்ச்சி மற்றும் செழிப்பு ஆகிய லட்சியத்தை அடைவதற்கு ஏதுவாக நிர்வாகத்தினரும், தொழிலாளர்களும் நல்லிணக்கத்தில் செயல்பட வேண்டும். அவ்வாறு அவர்கள் செயல்பட உதவிகரமாக இருப்பதுதான் தொழிலாளர் துறையின் சீரிய பணியாகும். இந்த பணியை தொழிலாளர் துறை திறம்பட செய்கிறது. வரும்முன் காத்தல் என்ற அடிப்படையில் வரும் பிரச்சனைகளை எதிர்நோக்கி அவற்றை தீர்த்து வைக்கிறது. தொழில் உறவை பாதிக்கக்கூடிய வகையில் எழுதநதுள்ள தொழிற் தகராறுகளை சமரச நடவடிக்கை மூலம் துரிதமாக முடித்து வைக்கிறது.

2. தொழிலாளர் துறையில் அமைப்பு பற்றிய விவரம் பிற்சோர்க்கை 1-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

3. இந்த அரசின் அணுகுமுறையினால், வேகமான தொழில் வளர்ச்சி சூழ்நிலையையும் தொழிலாளர் நலனை மேம்பாடு அடையச் செய்தும், தொழில் உறவில் ஒரு ஆரோக்கியமான சூழ்நிலை இம்மாநிலத்தில் உருவாகி உள்ளது. இந்த பின்னனியை பார்த்தால், 1994-ம் ஆண்டு இழந்த மனித நாட்கள் (16.68 லட்சம்), 1993ம் ஆண்டு இழந்த மனித நாட்களாகிய 24.22 லட்சத்தை விட குறைவானதாகும். கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பகுதி குறைந்துள்ளது. தகவடைப்பு மற்றும்

வேலைநிறுத்தம் மூலம் இழந்த மனித நாட்கள் பற்றிய அட்டவணை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| ஆண்டு | வேலைநிறுத்தம் | கதவடைப்பு | மொத்தம் |
|---|---|---|---|
| 1993 | 20,11,593 | 4,10,510 | 24,22,103 |
| 1994 | 12,43,299 | 4,25,196 | 16,68,495 |

4. தமிழ்நாட்டில் அமைப்பு ரீதியான தொழில்கள் பற்றிய விபரம் பிற்சேர்க்கை 2-ல் கொடுக்கப்பட்டுள்ளது. மற்ற தொழில்களைவிட பஞ்சாலை போன்ற சில தொழில்களில் தொழிற்தகராறுகள் எளிதில் எழுந்துவிடுகின்றன. இருப்பினும், பரந்த கண்ணோட்டத்தில் பார்த்தால், அமைப்பு ரீதியான தொழில்களில் 12.10 லட்சம் தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். ஆனால், தொழிற்தகராறுகளால் பாதிப்பு காரணி என்ற கண்ணோட்டத்தில் பார்த்தால் பாதிக்கப்பட்டவை மிகக்குறைவானவை.

5. இந்த துறையை சார்ந்த சமரச அலுவலர்களின் உளமார்ந்த விடாப்பிடியான முயற்சியின் காரணமாக இந்த சாதனை பெருமளவில் சாத்தியமானது. சமரச முயற்சி மூலமாகவும், நீதிமன்ற தீர்ப்புகள் மூலமாகவும், தீர்த்து வைக்கப்பட்ட தொழிற்தகராறுகள் எண்ணிக்கைகளை பிற்சேர்க்கை-3 மற்றும் 4-ல் கொடுக்கப்பட்டுள்ளது. 1993 மற்றும் 94 ஆகிய ஆண்டுகளில் வேலை நிறுத்தங்கள் மற்றும் தகவடைப்புகள் ஆகியவற்றின் கடுமை பற்றிய காரணியை (Severity Factor) மேல்கட்ட, கீழ்கட்ட வரைபடம் மூலம் பிற்சேர்க்கை-5, 6, 7, 8 மற்றும் 9-ல் கொடுக்கப்பட்டுள்ளது. வேலைநிறுத்தங்களில் மூலம் இழக்கப்பட்ட மனித நாட்கள், தகவடைப்புகள் மூலம் இழக்கப்பட்ட மனித நாட்களை விட 2 மடங்குக்கும் அதிகமாகும், பெருவாரியான வேலை நிறுத்தங்களில் தொழிலாளர்கள் சமரத முற்றும் ஆக்கப்பூர்வமான அணுகுமுறை மூலம் உடன்படுக்கைகள் ஏற்பட வாய்ப்பாக இருந்துள்ளனர். வேலை நிறுத்தத்தின் சராசரி கால அளவு 1 முதல் 1½ மாதங்கள் ஆகும். இது எதைக்காட்டுகிறது என்றால், தமிழ்நாட்டில் தொழிலாளர்கள் சமரச வரம்பை மீறிய முரட்டு செயல்பாடு உள்ளவர்கள் இல்லை என்பதாகும். மாறாக, கதவடைப்புகள் மூலம் இழக்கப்பட்ட குறைந்த எண்ணிக்கையிலான மனிதநாட்கள் எதைக்காட்டுகிறது என்றால், சமரச முயற்சி மேற்கொண்டாலும், அதற்கு உட்படாமல் பிடிவாதமாக இருக்கிறார்கள் என்பதுதான்.

6. இத்துறையின் சமரச அலுவலர்கள் வேலைநிறுத்ததங்களையும், தகவடைப்புகளையும், முடிவுக்குக் கொண்டுவரும் பணியை செய்வதோடு அல்லாமல் பலதரப்பட்ட தொழிற்தகராறுகளையும் சுமுகமாக தீர்த்துவைக்கும் பணியிலும் ஈடுபட்டுள்ளார்கள். 1994-ம் ஆண்டிலெழுந்த 14,638 தொழிற்தகராறுகளில் 12,634 தொழிற்தகராறுகள் சுமுகமாக தீர்த்து வைக்கப்பட்டுள்ளன.

7. ஒவ்வொரு ஆண்டும் தீபாவளி சமயத்தில் போனஸ் பிரச்சனை குறித்து தொழிற்தகராறுகள் ஏற்படுவது உண்டு, அதன் தன்மை மற்றும் முக்கியத்துவம் காரணமாக, அது பெரிதாக உருவெடுப்பதோடு அல்லாமல் உணர்ச்சிமயமானதாகவும் ஆகிவிடுகிறது. மாநிலம் முழுவதும் ஆயிரக்கறக்கான தொழிலாளர்கள் இத்தகு தொழிற்தகராறு களினால் பாதிக்கப்படுகிறார்கள். தொழிலாளர் துறையைச் சார்ந்த அலுவலர்கள் அவர்களின் அனுபவத்தில் திறன் கொண்டு இத்தகு பிரச்சனையை மிக நுட்பமாக தீர்த்து வைக்கிறார்கள். 1994ம் ஆண்டில் எழுந்த தொழிற்தகராறுகளில் பெருவாரியானவை மிகக்குறைந்த கால அளவில் சுமுகமாக தீர்க்கப்பட்டன. பிரச்னைகள் தீர்க்கப்பட்ட விதத்தில் சமரச அலுவலர்களின் தொழில் நுட்ப திறன் மிளிர்வதை காணலாம். இத்தகு அணுகுமுறையால் கடந்த ஆண்டு தீபாவளி சமயம் சுமுகமாக தொழில் அமைதியோடு களிக்கப்பட்டது.

8. தொழிலாளர் துறை முடித்துவைத்த தொழிற் தகராறுகளில் சிலவற்றை இங்கே குறிப்பிடப்பட்டுள்ளது.

*அ. வேலைநிறுத்தம்*

**1. இந்தியா டுபாக்கோ கம்பெனி (பிரிண்டிங் & பேக்கேஜிங் டிவிசன்), சென்னை-19.**

சுமார் 400 தொழிலாளர்கள் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி 8-9-1993 முதல் வேலைநிறுத்தத்தில் இருந்தனர். தொழிலாளர் துறை ஆணையர் இதில் தலையிட்டு, 1947-ம் வருட தொழிற்தகராறு சட்டபிரிவு 12(3) கீழ் உடன்படிக்கை செய்துவைத்தார். அதன் பயனாக வேலைநிறுத்தம் 21-2-1994 முதல் விலக்கிக்கொல்ளப்பட்டது.

**2. கூட்டுறவு நூற்பாலைகள்**

பல்வேறு கூட்டுறவு நூற்பாலையிலுள்ள சுமார் 2,00 தொழிலாளர்கள் 14-3-1992 முதல் வேலைநிறுத்தம் செய்தனர். அவர்களது கோரிக்கை சம்பள உயர்வு, மற்றும் அகவிலைப்படி

உள்ளிட்டவையாகும். 10-6-1994 அன்று தொழிலாளர் துறை ஆணையரால் இந்த பிரச்னை சுமுகமாக தீர்த்து வைக்கப்பட்டது.

**3. கில்பர்ன் எலக்ட்ரிகல்ஸ் லிட், மற்றும் அதைச்சார்ந்த நிறுவனங்கள், சென்னை.**

13-10-1993 முதல் சுமார் 300 தொழிலாளர்கள் பல கோரிக்கைகளை வைத்து வேலைநிறுத்தம் செய்தார்கல். தொழிலாளர் துறை இணை ஆணையர் (நிர்வாகம்) அவர்கள் அந்த பிரச்னையில் உடன்படிக்கை செய்துவைத்தார். அதன் விளைவாக தொழிலாளர்கள் 8-2-1994 முதல் வேலை நிறுத்தத்தை விலக்கிக்கொண்டார்கள்.

**4. கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள தனியார் மலைத் தோட்டங்கள்.**

சுமார் 1,000 தொழிலாளர்கள் 4-10-1994 முதல் வேலைநிறுத்தம் செய்தார்கள். தொழிலாளர் துறை இணை ஆணையர் (சமரசம்) அவர்கள் முன்னிலையில் ஏற்பட்ட உடன்படிக்கையின் காரணமாக தொழிலாளர்கள் 23-1-1995 முதல் வேலைநிறுத்தத்தை விலக்கிக் கொண்டார்கள்.

**5. ஸ்ரீசபரி மில்ஸ், திருச்சி**

355 தொழிலாளர்கள் 14-3-1994 முதல் சம்பள உயர்வுக் கோரி வேலைநிறுத்தம் செய்தார்கள். தொழிலாளர் துறை இணை ஆணையர் (சமரசம்) அவர்கள் முன்னிலையில் ஏற்பட்ட உடன்படிக்கையின் காரணமாக தொழிலாளர்கள் 27-10-1994 முதல் வேலைநிறுத்தத்தை விலக்கிக்கொண்டார்கள்.

6. **18 நூற்பாலைகளில் போனஸ் பிரச்னை:** 18 கூட்டுறவு நூற்பாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்கள் 1993-94-ம் ஆண்டிற்கான போனஸ் பிரச்சனை எழுப்பினர். தொழிலாளர் துறை இணை ஆணையர் (நிர்வாகம்) அதில் தலையிட்டு அறிவுரை வழங்கி பிரச்னையை தீர்த்து வைத்தார். அதன் விளைவாக 12,000 தொழிலாளர்கல் பயன் பெற்றனர். இந்த அறிவுரையின் பலனாக உத்தேச வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது.

**இ. கதவடைப்பு:**

**1. தி பெரிய காரமலை டீ & புரடியூஸ் கம்பெனி லிமிடெட், கோயம்புத்தூர்.**

இந்நிறுவனத்தின் 4,500 தொழிலாளர்கள் 20% போனஸ் மற்றும் கருணைத் தொகை கோரி மெல்ல வேலை செய்யும் கோட்பாடு

(கோ-ஸ்லோ) முறையை மேற்கொண்டனர். எனவே, நிர்வாகம் 7-12-1994 முதல் கதவடைப்பு செய்தது. பின்னர் தொழிலாளர் ஆணையர் மூன்பு 17-12-1994 அன்று ஏற்பட்ட ஒப்பந்தத்தினால் நிர்வாகம் 21-12-1994 முதல் கதவடைப்பை விலக்கிக் கொண்டது.

**2. இண்டிகார்ப் லிமிடெட்**

இந்த நிறுவனம் 2-4-1994 முதல் கதவடைப்பு செய்தது. இதனால் 171 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுருந்தனர். பின்னர் தொழிலாளர் இணை ஆணையர் (சமரசம்) முன்னிலையில் 1947ம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டம் பிரிவு 12(3)ன் கீழ் ஒப்பந்தம் ஏற்பட்டதைத்தொடர்ந்து நிரிவாகம் 26-12-1994 முதல் கதவடைப்பை விலக்கிக் கொண்டது.

**3. டன்லப் இந்தியா லிமிடெட், சென்னை.**

இந்த நிறுவனத்தில் 2,500 தொழிலாளர்கள் மெல்ல வேலை செய்யும் கோட்பாடு (கோ-ஸ்லோ) மற்றும் வேலை நிறுத்தம் செய்வதாக கூறியதை தொடர்ந்து நிர்வாகம் 10-6-1994 முதல் கதவடைப்பு செய்தது. தொழிலாளர் இணை ஆணையர் (சமரசம்) 18-6-1994 அன்று வழங்கிய ஆலோசனையின்படி நிர்வாகம் கதவடைப்பினை 20-6-1994 முதல் விலக்கிக்கொண்டது.

**4. தி மெட்ராஸ் அலுமினியம் கம்பெனி லிமிடெட்.**

இந்த நிறுவனம் நிதிப்பிரசினை காரணமாக 1-4-1992 முதல் கதவடைப்பு செய்தது. இதனால் 913 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுருந்தனர். பின்னர் தனித்துணை ஆணையர் முன்பு 22-9-1994 அன்று ஒப்பந்தம் ஏற்பட்டது. இதனை தொடர்ந்து 1-2-1995 முதல் நிறுவனம் மீண்டும் திறக்கப்பட்டது.

**9. முதலமைச்சர் நிவாரண நிதி:**

தொழிலாளர் பிரச்சனைகளின் காரணமாகவோ அல்லது நிர்வாக நெருக்கடி காரணமாகவோ மூடப்படும் நிறுவனத்தில் பணிபுரிந்த தொழிலாளர்களுக்கு நிதி உதவி வழங்குவது இத்திட்டதின் முக்கிய நோக்கமாகும். 1994-ம் ஆண்டு இந்நிதியிலிருந்து தொழிலாளர் நிறுவனங்களைச் சார்ந்த 11,131 தொழிலாவர்களுக்கு நிவாரணத் தொகையாக ரூ. 44.52 லட்சம் வழங்கப்பட்டது. இதைப் போன்ற கருணைத் தொகை வழங்குவதன் மூலம் அரசு பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு நிவாரணம் அளித்து தொழில் அமைதியை பேணுகிறது.

## மூடப்பட்ட ஆலைகளை மீண்டும் திறத்தல்:

10. தொழிலாளர் துறை தொழிலாளர் பிரச்சினையை கண்டறிவதோடு மட்டும் நிறுத்திவிடுவதில்லை. மூடப்பட்ட ஆலைகளை திரும்ப திறப்பதற்கு அதிக அளவில் முயற்சிகள் மேற்கொள்கிறது. உதாரணமாக 13-11-1986 முதல் நலிவின் காரணமாக மூடப்பட்டிருந்த காவேரி ஸ்பின்னிங் & வீவிங் மில்ஸ், புதுக்கோட்டை, தைலா ஸ்பின்னர்ஸ் என்ற புதிய நிறுவனத்தின் கீழ் மீண்டும் 3-6-1994 முதல் செயல்படத்தொடங்கியது. இதே போல் 1-4-1992 முதல் மூடப்பட்டிருந்த மெட்ராஸ் அலுமினியம் கம்பெனி இடைவிடாது மேற்கொண்டு கடும் சமரச முயற்சிகளினால் மீண்டும் 1-2-1995 முதல் ஆலை திறக்கப்பட்டு செயல்பட தொடங்கியது. இதனால் நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் பயன் அடைந்தனர்.

## தொழில் நல்லுறவு பரிசுத் திட்டம்:

11. தொழில் துறையில் தொழில் நல்லுறவை பேணிப் பாதுகாக்கும் பணியில் முன்னிலையில் நிற்க்கும் நிர்வாகத்தினர் மற்றும் தொழிற்சங்கங்களுக்கு பரிசுகள் வழங்கும் பொருட்டு தொழில் நல்லுறவு பரிசு வழங்கும் திட்டத்தை இவ்வரசு உருவாக்கியது. பரிசுக்கு உரியவர்களை தேர்ந்தெடுக்க ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி தலைமையில் 7 நிர்வாகத்தினர் மற்றும் தொழிற்சங்க பிரதிநிதிகள் கொண்ட ஒரு முத்தரப்பு உயர்மட்டக் குழுவை அரசு அமைத்துள்ளது. இத்திட்டம் 1978-ம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

12. 1988ம் ஆண்டு வரை பரிசு பெற்றவர்களுக்கு சுழல் கேடயமும் சான்றிதழும் வழங்கப்பட்டு வந்தன. 1989-ம் ஆண்டு முதல் நிரந்தர கேடயமும் மற்றும் சான்றிதழுடன் ரொக்கப் பரிசுத் தொகையாக முதல் பரிசு பெற்றவர்களுக்கு ரூ. 2,000-மும் இரண்டாம் பரிசு பெற்றவர்களுக்கு ரூ. 1,000-ம் வழங்கப்பட்டு வருகிறது.

13. தொழில் நல்லுறவு பரிசுக் குழு 1989 மற்றும் 1990ம் ஆண்டுகளுக்கான பரிசுக்குரியவர்களை தேர்வு செய்து 3-2-1995 அன்று பரிசுகள் அவர்களுக்கு வழங்கப்பட்டன.

## கோவையில் தொழிலாளர் துறை அலுவலகங்களுக்கு மையக்கட்டிடம்.

14. நிர்வாகம் மற்றும் தொழிற்சங்கங்களின் நீண்டநாள் கோரிக்கைக்கு இணங்க அரசு தீவிர முயற்சிகள் மேற்கொண்டு

கோவை மாநகரின் மையப் பகுதியில் மிகப் பொருத்தமான இடத்தினை ஆரிஜிதம் செய்து தொழிலாளர் துறை அலுவலகங்களுக்கு மையக் கட்டிடம் ஒன்றினை ரூ. 60 லட்சம் செலவில் கட்டியுள்ளது. இந்த நவீன கட்டிடத்திற்கு "டாக்டர் புரட்சித் தலைவி ஜெ.ஜெ. மாளிகை" என்று பெயர் சூட்டப்பட்டு 24-8-1994 அன்று திறந்து வைக்கப்பட்டது.

## தொழிலாளர் நீதி மன்றங்கள்:

15. தொழிலாளர் நலச் சட்டத்தின் கீழ் தொழிலாளர்கள் சட்ட ரீதியான நிவாரணத்தை விரைவில் பெற வசதியாக இம்மாநிலத்தில் 10 தொழிலாளர் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன.

இந்த நீதிமன்றங்களின் இடங்கள் மற்றும் அவைகளின் ஆட்சி எல்லை பின் வருமாறு:

| தொழிலாளர் நீதிமன்றங்கள் | ஆட்சி எல்லை |
|---|---|
| 1. முதன்மை தொழிலாளர் நீதிமன்றம், சென்னை.<br>2. முதல் கூடுதல் தொழிலாளர் நீதிமன்றம், சென்னை.<br>3. இரண்டாம் கூடுதல் தொழிலாளர் நீதிமன்றம், சென்னை. | சென்னை மற்றும் செங்கை எம்.ஜி.ஆர் மாவட்டங்கள். |
| 4. தொழிலாளர் நீதிமன்றம், வேலூர் | வடஆற்காடு-அம்பேத்கார், திருவண்ணாமலை சம்புவராயர் மற்றும் தருமபுரி மாவட்டங்கள். |
| 5. தொழிலாளர் நீதிமன்றம், சேலம். | சேலம் மற்றும் பெரியார் மாவட்டங்கள். |
| 6. தொழிலாளர் நீதிமன்றம், கடலூர் | தென்னாற்காடு-வள்ளலார், விழுப்புரம்-ராமசாமி படையாச்சியார், நாகப்பட்டினம்-காயிதேமில்லத் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்கள். |

TRUTH ALONE TRIUMPHS

| தொழிலாளர் நீதிமன்றங்கள் | ஆட்சி எல்லை |
|---|---|
| 7. தொழிலாளர் நீதிமன்றம், கோயம்புத்தூர். | கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி மாவட்டங்கள். |
| 8. தொழிலாளர் நீதிமன்றம்,. திருச்சி | திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல்-அண்ணா மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள். |
| 9. தொழிலாளர் நீதிமன்றம், மதுரை. | மதுரை, காமராசர், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்கள். |
| 10. தொழிலாளர் நீதிமன்றம், திருநெல்வேலி. | திருநெல்வேலி கட்டபொம்மன், சிதம்பரனார் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள். |

16. தொழில் நீதிமன்றத்தில் தொழில் தகராறுகள், லே-ஆப், ஆட்குறைப்பு மற்றும் நிறுவனம் மூடுதல் தொடர்பான நிலுவையில் உள்ள வழக்குகள் பற்றிய விவரம் பின்சேர்க்கை-10ல் கொடுக்கப்பட்டுள்ளது.

# அத்தியாயம் 2

## சட்ட அமுலாக்கம்.

தொழிலாளர் துறை 25 வகையான தொழிலாளர் நலச்சட்டங்களை அமுல்படுத்தி வருகிறது. பல்வேறு தொழிலாளர் நலச்சட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்பபட்ட ஆய்வுகள் மற்றும் தொடுக்கப்பபட்ட வழக்குகளின் விபரம் பிற்சேர்க்கை-11 மற்றும் 12-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

2. தொழிலாளர் துறை மண்டல இணை ஆணையர்கள், 1947ம் ஆண்டு, தொழிற் தகராறு சட்டத்தில் கூறப்பட்டுள்ளவாறு தொழிற் தகராறுகளைக் கண்டறிந்து தீர்த்து வைக்கின்றனர். மேலும் நிலை ஆணைகளைச் சான்றளித்தல், லே-ஆப் மற்றும் ஆட்குறைப்பு இவைகளுக்கு அனுமதி அளித்தல் ஆகிய பணிகளையும் மேற்கொள்கின்றனர். இதே போல், தொழிலாளர் துணை ஆணையர்கள், வேலையாள் இழப்பீட்டுச் சட்டம், தொழிற் சங்க சட்டம், குறைந்த அளவு ஊதியச்சட்டம், சம்பள பட்டுவாடா சட்டம் மற்றும் பிழைப்பூதிய பட்டுவாடா சட்டம் ஆகிய சட்டங்களின் கீழ் நீதிமுறைப்போல் (க்வாசி ஜுடிஷியல்) செயல்படுகிறார்கள்.

## *எடையளவு சட்டம் அமுலாக்கம் மற்றும் நுகர்வோர் நலன்:*

3. தற்போதைய வெளிப்படுத்தப்பபட்டுள்ள பொருளாதார நிலையில், நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் நுகர்வோர் நலன் முக்கியத்துவம் பெற்று வருகிறது. 1985ம் ஆண்டு தரப்படுத்தப்பட்ட எடைகள் மற்றும் அளவைகள் (அமுல்) சட்டத்தினை தீவிரமாக அமுல்படுத்துவதின் மூலம் அரசு நூகர்வோரின் நலனைப் பாதுகாக்கும் தலையாய பணியைச் செய்துவருகிறது. மேற்குறிப்பிட்ட சட்டத்தின் முக்கிய ஷரத்துக்கள், தரப்படுத்தப்பட்ட எடைகள் மற்றும் அளவைகள் தவிர ஏனைய எடைகள் மற்றும் அளவைகளையோ அல்லது முத்திரையிடப்படாத எடையளவுகளையோ வியாபாரத்தில் பயன் படுத்துவதை தடைசெய்கிறது. இதேபோன்று, 1977ம் ஆண்டு தரப்படுத்தப் பட்ட எடைகள் மற்றும் அளவைகள் (பொட்டலப் பொருள்கள்) விதிகளை இத்துறை அமுல்படுத்துவதின்மூலம் பொட்டலப் பொருள்களின் மீது குறிப்பிடப்பட்டுள்ள விற்பனை விலையைக் காட்டிலும் அதிக விலைக்கு வியாபாரிகள் விற்பனை செய்வதைக் கட்டுப்படுத்துகிறது.

4. தொழிலாளர் ஆணையர் அலுவலகத்திலுள்ள துணை ஆணையர் (ஆய்வு), மாநிலம் முழுமைக்கும் எடையளவு சட்டமுறை கட்டுப்பாடு அலுவலரும் ஆவார். இவரது பணிக்கு, நிர்வாக அலுவலர் ஒருவரும் துணை ஆய்வர் ஒருவரும் உதவியாக உள்ளனர். எடையளவு சட்டமுறை கட்டுப்பாடு அலுவலர், தொழிலாளர் ஆணையரின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் பணிபுரிந்து வருகிறார். மற்றும் 7 வட்டார துணை ஆணையர்கள் கூடுதல் எடையளவு சட்டமுறை கட்டுப்பாட்டு அலுவலர்களாகவும், மாவட்ட அளவில் பணியாற்றும் 23 தொழிலாளர் ஆய்வாளர்கள் துணை எடையளவு சட்டமுறை கட்டுப்பாட்டு அலுவலர்களாகவும், கோட்ட அளவில் பணிபுரியும் 67 துறை ஆய்வர்கள் உதவி எடையளவு சட்டமுறை கட்டுப்பாட்டு அலுவலர்களாகவும், வட்ட அளவில் பணிபுரியும் 210 உதவி ஆய்வர்கள் எடையளவு சட்டமுறை ஆய்வாளர்களாகவும் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளனர்.

5. சட்ட அமுலாக்கம் என்பது தொழிலாளர் துறையின் முக்கிய செயல்பாடு என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. மேலும் சட்ட அமுலாக்கம் என்பது மிகப் பெரிய பணியாகும். சட்ட அமுலாக்கத்தின் மூலம் வியாபாரிகள் தவறான எடை மற்றும் அளவுகளைப் பயன்படுத்துவதையும் மற்றும் பொருட்களை எடை அல்லது அளவு குறைவாக விற்பனை செய்வதையும் தடுத்து நுகர்வோரின் நலன் கண்ணும் கருத்துமாகப் பாதுகாக்கப்படுகிறது. நுகர்வோர் நலனைக் கருத்தில் கொண்டு, சட்ட அமுலாக்கப்பணியில் ஈடுபட்டுள்ள அலுவலர்களுக்கு தற்போது தோன்றியுள்ள பொருளாதார மறுமலர்ச்சிக்கு ஏற்றவாறு தங்கள் பணியினைச் செவ்வனே செய்திட விரிவான பணி அளவு கோல்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

6. 1-1-1994 முதல் 31-12-1994 பொது வினியோக வடிகால் (அ) வெளிச்செல்வாய், பெட்ரோல் பம்பு ஆகியவற்றின் ஆய்வு செய்ய தனி கவனம் செலுத்தப்பட்டது. அதன் விவரம் கீழே காணலாம்.

**(அ) மலிவுவிலை நியாயவிலை கடைகள்:**

| | |
|---|---|
| ஆய்வு நடத்தப்பட்ட மலிவுவிலை நியாயவிலை கடைகளின் எண்ணிக்கை | 32,295 |
| எடைகளில் அளவு குறைகள், கண்டுபிடிக்கப் பட்டவை | 3,700 |
| மற்ற மீறுதல்கள் | 562 |

**(ஆ) பெட்ரோல் பம்புகள்:**

| | |
|---|---|
| ஆய்வு செய்யப்பட்ட பெட்ரோல் பம்புகளின் எண்ணிக்கை | 23,311 |
| தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்ட பெட்ரோல் பம்புகளின் எண்ணிக்கை | 851 |
| மற்ற மீறுதல்கள் | 15 |

7. எடை அளவு சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பபட்ட ஆய்வுகள் மற்றும் தொடுக்கப்பட்ட வழக்குகளின் விபரம், வசூலிக்கப்பட்ட தண்டனைத் தொகையின் விவரங்கள், மற்றும் கண்டுப்பிடிக்கப்பட்ட குற்ற செயல்கள் பற்றிய விவரங்கள் பிற்சேர்க்கை-13, 14 மற்றும் 15-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

## தோட்டத் தொழிலாளர் மற்றும் அவர்கள் நலன்:

8. தோட்டத் தொழிலாளர்களின் பணி நிலைமை, 1951ம் ஆண்டு தோட்டத் தொழிலாளர் சட்டத்தின்படி வரையறுக்கப்பட்டுள்ளது. தேயிலை, காபி மற்றும் ஏலக்காய் ஆகியவை, தமிழ்நாட்டில் பயிரிடப்படும் தோட்டப் பயிர்கள் ஆகும். இவைகளில் தேயிலை மிக அதிகமாகவும் அதற்கு அடுத்ததாக காபியும் பயிரிடப்படுகிறது. தமிழ்நாட்டில் 38,896 ஹெக்டேர் பரப்பளவில் தேயிலை பயிர் பயிரிடப்படுகிறது. இது அகில இந்திய அளவில் 9.2% ஆகும். மேலும் தேயிலைப் பயிர் விளைச்சலைப் பொறுத்த வரையில், அகில இந்திய அளவில் ஒரு ஹெக்டேருக்கு 1,750 கிலோவாக இருக்கும்பொழுது தமிழ்நாட்டில் இது ஒரு ஹெக்டேருக்கு மிக உயர்ந்த அளவில் 2,800 கிலோவாக உள்ளது. தமிழ்நாட்டில் தோட்டப்பயிர்கள் அதிகமாகப் பயிரிடப்படும் பகுதிகள் நீலகிரி, ஆணைமலை (கோயம்புத்தூர்), மதுரை, திருநெல்வேலி, சேர்வராயன் மலைப்பகுதி (சேலம்), கன்யாகுமரி மற்றும் திண்டுக்கல் அண்ணா மாவட்டங்கள் ஆகும். தோட்ட நிறுவனங்களில் பணி புரியும் மொத்த தொழிலாளர்கள் 1.6 லட்சமாகும். இவற்றில் தேயிலைத் தொழிலில் மட்டும் 1 லட்சம் தொழிலாளர்கள் பணி புரிகிறார்கள். தோட்டத் தொழிலாளர் சட்டத்தினை ஏழு தோட்ட நிறுவன ஆய்வாளர்கள் அமுல் செய்கிறார்கள். தோட்டத் தொழிலாளர் சட்டத்தின்படி தொழிலாளர்களுக்கு இலவச வீட்டு வசதி, இலவச அடிப்படைக் கல்வி, இலவச மருத்துவ வசதி, குழந்தை காப்பக வசதி, குழந்தைகளுக்கு இலவச பாலும் உணவும், பணியாளர்களின் இருப்பிடத்திற்கு சுத்தப்படுத்தப்பட்ட தண்ணீர்

வசதி, பலவித பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் கம்பளி வழங்குதல் ஆகிய சட்ட ரீதியான நலன்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த நலன்கள் தொழிலாளர்களுக்கு கிடைக்கின்றனவா என்பதை ஆய்வாளர்கள் கண்காணிக்கின்றனர். தோட்டத் தொழிலாளர்களுக்கு சிறந்த மருத்துவ வசதி அளிக்கப்படுகிறதா என்பதை உறுதி செய்துகொள்ள இரண்டு உதவி மருத்துவர்கள் (தோட்ட நிறுவனங்கள்) நியமனம் செய்யப்பட்டுள்ளனர். தோட்ட நிறுவனங்களில் பணி புரியும் பெண் தொழிலாளர்களுக்கு மகப்பேறு நலச் சட்டம் மற்றும் சம ஊதியச் சட்டம் ஆகியவற்றின் பயன்கள் கிடைக்கின்றனவா என்பதை மூன்று மகளிர் தொழிலாளர் ஆய்வாளர்கள் கண்கானித்து வருகின்றனர். தமிழ்நாட்டிலுள்ள தோட்டத் தொழில்களில் 98% பணியாளர்களுக்கு வீட்டு வசதி வழங்கப்பட்டுள்ளது.

தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு துறையின் செயலர், நிர்வாகம் மற்றும் தொழிலாளர் தரப்பு உள்ளிட்ட தொழிலாளர் அங்கத்தினர்கள் கொண்ட தோட்டத் தொழிலாளர் வீட்டு வசதி ஆலோசனை வாரியம் தொழிலாளர்களுக்கான வீட்டு வசதி குறித்து விவாதம் மேற்கொண்டு முடிவுகளை எடுக்கிறது. தொழிலாளர் ஆணையரை தலைவராகக் கொண்ட தோட்டத் தொழிலாளர் ஆலோசனைக் குழு தொழிலாளர்களின் வீட்டு வசதி தவிர இதர விசயங்களை விவாதித்து முடிவு எடுக்கிறது.

9. தோட்டத் தொழிலாளர் சட்டத்தின் கீழ்மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், காணப்பட்ட முரண்பாடுகள் மற்றும் முரண்பாடுகளின் மீது அளிக்கப்பட்ட தண்டனைகள் மற்றும் விதிக்கப்பட்ட அபராதத் தொகை ஆகிய விவரங்கள் பிற்சேர்க்கை 16-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

TRUTH ALONE TRIUMPHS

# அத்தியாயம் 3

## தொழிலாளர் துறை மற்றும் அமைப்பு ரீதியற்ற பிரிவு:

தமிழ்நாட்டிலுள்ள மொத்த தொழிலாளர்களில் 90% தொழிலாளர்கள் அமைப்பு ரீதியற்ற பிரிவைச் சார்ந்தவர்களாவர். மாறுபட்ட இப்பிரிவினைச் சார்ந்த தொழிலாளர்கள் கூட்டாக தங்களது கோரிக்கையினை வெளிப்படுத்த இயலாத நிலை உள்ளது. இவ்வகை தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகமான அளவில் காணப்பட்டாலும் அவர்கள் வெவ்வேறு இடங்களில் பணி புரிந்து வருவதாலும் அவர்களில் பெண் தொழிலாளர்கள் அதிக அளவில் உள்ளதாலும் மேலும் அவர்கள் தங்களது பணியை வீட்டிலேயே செய்து வருவதாலும் இவ்வகைத் தொழிலாளர்கள் அதிக அளவில் இருப்பது வெளிப்படையாக காண இயலாத நிலை உள்ளது. இவ்வகைத் தொழிலாளர்களின் குறைகளை முழுமையாக கண்டறிந்து நிவர்த்தி செய்யும் பொருட்டு அரசு, குறைந்த அளவு ஊதியச் சட்டம், சம்பள பட்டுவாடாச் சட்டம், போனஸ் பட்டுவாடா சட்டம், பணிக்கொடை சட்டம், பிழைப்பு ஊதியச் சட்டம், சம ஊதியச் சட்டம் மற்றும் மகப்பேறு நலச்சட்டம் ஆகிய தொழிலாளர் நலன் சட்டங்களை இயற்றி அமுல்படுத்தி வருகிறது. கோரிக்கை குரல் எழுப்ப இயலாதிருந்த தொழிலாளர்களுக்கு மேற்குறிப்பிட்ட சட்டங்களின் மூலம் தங்கள் குறைகளை எடுத்து கூற அரசு போதிய வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்துள்ளது. தற்போது தாராளமயமாக்கப்பட்ட பொருவாதார நிலை நிலவும் சூழ்நிலையில் தொழிலாளர்களுக்கு தங்களின் கோரிக்கை குரல் எழுப்ப அரசினால் இயற்றப்பட்ட மேற்குறிப்பிட்ட சட்டங்கள் அதிக முக்கியத்துவம் பெற்றவையாக உள்ளன.

### (அ) பாதுகாப்பு வளையம் போன்ற குறைந்த அளவு ஊதியம்:

குறைந்த பட்ச ஊதியச் சட்டம் வழிகாட்டியாக இயங்கும் ஒரு சட்டம் ஆகும். குறைந்த அளவு ஊதிய பட்டுவாடாவினை உறுதி செய்துகொள்வது என்பது மனித வாழ்க்கை தரத்தினை உறுதி செய்து

கொள்வது என்பதே ஆகும். குறைந்த அளவு ஊதியம் என்பது மிக குறைந்த அளவு ஒரு உதவித் தொகையாகவே ஆகும். அதனையும் தொழிலாளர்களுக்கு வழங்காதிருப்பது மனித நேயமற்ற செயலாகும் என்று கூறலாம். குறைந்த அளவு கூலிச் சட்டத்தின் அட்டவணையில் அமைப்பு ரீதியற்ற 67 தொழில்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இத்தொழில் களுக்கு அரசால் ஏற்படுத்தப்பட்ட குழு மூலமோ அல்லது அறிவிக்கை மூலமோ ஊதிய நிர்ணயம் மற்றும் மறுநிர்ணயம் செய்யப்படுகிறது. ஒரு தொழிலுக்கு முதன்முறையாக ஊதிய நிர்ணயம் செய்யப்படும்பொழுது அக்குறிப்பிட்ட தொழிலில் பணிபுரியும் பல்வேறு வகையான தொழி லாளர்களின் பணி நிலைமையினைக் கருத்தில் கொண்டும், தொழிலின் தன்மையைக் கருத்தில் கொண்டும் குழுவின் பரிந்துரையின்படி ஊதிய நிர்ணயம் செய்யப்படுகிறது. மேலும் ஒவ்வொரு தொழிலுக்கும் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை ஊதிய மறுநிர்ணயம் செய்து அறிவிக்கை வெளியிடப்படுகிறது. தொழிலாளர்களின் வாழ்க்கை செலவினத்தைச் சரிக்கட்டும் வகையில், குறைந்தபட்ச ஊதிய விகிதங்களை நிர்ணயம்/ மறு நிர்ணயம் செய்யும் தருணங்களில், அடிப்படை ஊதிய விகிதங்களைத் தவிர நுகர்வோர் விலைக் குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் அகவிலைப்படியையும் நிர்ணயம் செய்வதை அரசு கொள்கையாக கொண்டுள்ளது. அரசினால் பல்வேறு தொழில்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்து வெளியிடப் படும் அறிவிக்கைகளைச் செயல்படுத்த இயலாதவாறு சில நிர்வாகத்தினரால் உயரிநீதிமன்றத்தில் தடையுத்தரவு பெறப்பட்டு நிறுத்தி வைக்கப்படுகின்றன. இவ்வகையான இடர்பாட்டினைக் களையும் பொருட்டு இந்திய அரசியல் அமைப்பின் 9வது அட்ட வணையில் குறைந்தபட்ச ஊதியத்தை சேர்க்கக்கோரி இந்திய தொழிலாளர் மாநாடு மற்றும் தொழிலாளர் அமைச்சர்கள் மாநாடு போன்ற தேசிய அளவிலான கூட்டங்களில் இவ்வரசு எடுத்துரைத்துள்ளது.

**2. 1994ம் ஆண்டில் பின்வரும் தொழில்களுக்கு அரசால் குறைந்த பட்ச ஊதியம் நிர்ணயம்/மறுநிர்ணயம் செய்யப்பட்டுள்ளன.**

*நிர்ணயம்:*

1. கடல் உணவு பதப்படுத்தும் தொழில்

*மறுநிர்ணயம்:*

1. தையற் தொழில்
2. பட்டு கைத்தறி நெசவுத் தொழில்
3. மருத்துவமனைகள் மற்றும் இல்லத் தொழில் (அரசு இ.எஸ்.ஐ. மருத்துவமனைகள் மற்றும் டிஸ்பென்சரி நீங்கலாக)
4. கைத்தறி நெசவுத் தொழில்
5. புகையிலை (மூக்குப்பொடி தயாரித்தல்) தொழில்
6. பாத்திரங்கள் தயாரிக்கும் தொழில்
7. ஆட்டோ-ரிக்ஷா மற்றும் டாக்சி தொழில்
8. அரிசி ஆலை, மாவு ஆலை மற்றும் பருப்பு ஆலைத் தொழில்
9. செங்கல் மற்றும் ஓடு தயாரிப்பு தொழில்
10. கடைகள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் தொழில்

**குறைந்த பட்ச ஊதிய நிர்ணயம்/மறுநிர்ணயம் செய்யப்பட்டுள்ளது குறித்து ஆலோசனைக் குழுவின் பரிசீலனையில் உள்ள தொழில்களின் விவரம்.**

*நிர்ணயம்:*

1. காற்றூட்டப்பட்ட நீர் தயாரிப்புத் தொழில்

*மறுநிர்ணயம்:*

"ஏதுமில்லை"

குறைந்தபட்ச ஊதிய மறுநிர்ணயம் தொடர்பாக ஆலோசனைக் குழு அமைக்க கீழ்க்காணும் தொழில் தொடர்பான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

1. தங்கம் மற்றும் வெள்ளி பொருட்கள் தயாரிப்புத் தொழில்

பின்வரும் தொழில்களுக்கு குறைந்தபட்ச ஊதிய நிர்ணயம்/ மறுநிர்ணயம் தொடர்பான செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

*நிர்ணயம்:*

"ஏதுமில்லை"

[*1995 ஏப்ரல் 27*

மறுநிர்ணயம்

1. தோட்ட நிறுவனங்கள் தொழில்
2. பொதுப்பொறியியல் மற்றும் கட்டமைப்புத் தொழில்
3. விசைத்தறித் தொழில்
4. வனத் தொழில்
5. புகையிலை (பீடி தயாரிப்பு உட்பட) தயாரிப்புத் தொழில்
6. புகையிலை (வாசனை மற்றும் மெல்லும் புகையிலை) தயாரிப்புத் தொழில்
7. விலைக்கு வாங்கும் தேயிலைகளைப் பதப்படுத்தும் தொழில்
8. பேக்கி மற்றும் பிஸ்கட் தயாரிப்புத் தொழில்
9. லாண்டரி மற்றும் துணிகள் துவைக்கும் தொழில்
10. பொது மோட்டார் போக்குவரத்துத் தொழில்
11. உப்பளங்கள் தொழில்
12. ஓட்டல்கள் மற்றும் உணவு நிறுவனங்கள் தொழில்
13. சோப்பு தயாரிக்கும் தொழில்
14. அச்சகங்கள் தொழில்
15. கயிறு தயாரிக்கும் தொழில்
16. ஜவ்வரிசி தொழில்
17. எண்ணெய் ஆலைத் தொழில்
18. பட்டு இழை முறுக்கும் தொழில்
19. ஆட்டோமொபைல் ஒர்க்ஷாப் தொழில்
20. எலக்ட்ரானிக் தொழில்
21. சலனப்படத் தொழில்
22. தகரக் கொள்கலன்கள் தயாரிப்புத் தொழில்
23. காகிதம் மற்றும் அதனைச் சார்ந்த பிற தொழில்கள்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

*1995 ஏப்ரல் 27]*

## (அ) தொழிலாளர் நலன்:

3. தொழிலாளர் நலன் குறித்ததான அரசின் பட்டியலில், அமைப்பு ரீதியற்ற நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் நலன் தொடர்ந்து முதன்மையிடத்தை வகிக்கிறது. தற்போது, பீடித்தொழில், கட்டுமானத்தொழில் மற்றும் ஒப்பந்த தொழில் ஆகிய அமைப்புரீதியற்ற தொழில்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் நலன் குறித்து அரசு அதிக கவனம் கெலுத்திவருகிறது. முன்னர் குறிப்பட்டவாறு தொழிலாளர் நலச் சட்டங்களை அமுல் படுத்துவத்ன் மூலம் ஒட்டு மொத்த நன்மை ஏப்பட்டுள்ளது. ஆயினும், சில இனங்களில் அரசின் தனிக்கவனம் செலுத்தப்பட்டதின் மூலம், ஒட்டு மொத்தமாக தொழிலாளர் நலன்களுக்கு சிறந்த பயன் கிடைக்கப்பெறுகிறது.

உதாரணமாக கீழ்க்கண்ட இனங்களில் அரசு தனிக்கவனம் செலுத்தியுள்ளது.

### 4. பீடித் தொழிலாளர்களுக்கு வீட்டுவசதி மற்றும் இதர நலத்திட்டங்கள்.

பீடித் தொழிலாளர்கள் அதிகம் உள்ள இம்மாநிலத்தில், அவர்களுக்கு வீடு கட்டித்தர அரசு முழுமூச்சுடன் ஒரு திட்டத்தினை வகுத்துள்ளது. தற்போது, திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில், முக்கூடல் மற்றும் மேலப்பாளையம் ஆகிய இடங்களில் ரூ. 2.20 கோடி திட்டத்தில் 1,000 வீடுகள் விரைவில் கட்டித்தரப்படவுள்ளது. இதில் ரூ. 9,000 மத்திய அரசால் உதவித் தொகையாகவும் மீதமுள்ள ரூ. 13,000 ஹட்கோ நிறுவனத்தால் கடனாகவும் வழங்கப்படவுள்ளது. வீடு கட்டும் பணியை கூட்டுறவுப் பதிவாளரிடம் (வீட்டுவசதி) ஒப்படைக்கப்பட்டுள்ளது. பீடித் தொழிலாளர்களின் கடன் பளுவைக் குறைக்கும் பொருட்டு அரசானது மேற்படி வீடுகட்டும் இடத்தின் மனைவிலை மற்றும் பத்திர பதிவுக்கட்டணம் ஆகியவைகளுக்காக ரூ. 3.69 இலட்சம் செலவினத்தை அரசே ஏற்றுக் கொண்டுள்ளது. இதே போல் பீடித் தொழிலாளர்கள் அதிக அளவில் வசிக்கும் வடஆற்காடு அம்பேத்கார், திருச்சி, பெரியார், சேலம் மற்றும் சென்னை ஆகிய மாவட்டங்களில் வீடு கட்டத்தர தேவையான நில ஆர்ஜிதம் செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணியை தொடர்ந்து செய்திட அரசு தீர்மானித்துள்ளது.

5. தொழிலாளர் நலத்துறை அலுவலர்கள் தங்கள் ஆய்வின் போது, தொழிலாளர்களுக்குச் சேர வேண்டிய சட்ட ரீதியான பயன்கள்

வழங்கப் படாதிருப்பது காணப்படின் சம்மந்தப்பட்ட வேலையளிப்பவர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இதன் விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | தாக்கல் செய்யப்பட்ட கோரிக்கை மனுக்கள். | மொத்த தொழி லாளர்கள் | மொத்த தொகை ரூ |
|---|---|---|---|
| குறைந்தபட்ச ஊதியச் சட்டம் | 135 | 8714 | 16,16,988.20 |
| சம்பளப்பட்டுவாடா சட்டம் | 194 | 909 | 3,54,462.40 |
| பணிக்கொடை சட்டம் | 71 | 71 | 1,18,784.69 |
| மகப்பேறு நலச்சட்டம் | 66 | 66 | 48,850.21 |

6. பீடித்தொழிலாளர்களுக்கு உள்ள சட்டரீதியான உரிமைகள் மற்றும் பயன்கள் குறித்து அவர்கள் அறிந்து கொள்ள தொழிலாளர் துறை உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது. முக்கியமாக, திரையரங்குகளில் ஸ்லைடு காண்பித்தல் மற்றும் அச்சிடப்பட்ட துண்டு வெளியீடுகளை நேரடியாக தொழிலாளர்களுக்கு வழங்குவது போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நிர்வாகத்தினரிடமும் தொழிலாளர்களிடமும் அடிக்கடி கலந்து பேசப்படுகிறது. மேற்குறிப்பிட்ட ஒருங்கிணைந்த நடவடிக்கைகளினால் சட்ட ரீதியானபலன்கள் குறித்து அவர்களின் தெளிவாக்கம் அதிகரிக்கப்படுகிறது.

## தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர்கள் (கட்டிடத் தொழிலாளர்கள்) நலத் திட்டம், 1994

7. தமிழ்நாட்டில் உள்ள உடலுழைப்புத் தொழிலாளர்களின் பணியினை வரன்முறைப்படுத்த அரசு 1982ம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (பணிவரண்முறை மற்றும் பணி நிலைமை) சட்டத்தினை இயற்றியது.

8. இச்சட்டமானது அணைகள் கட்டுதல், பாலங்கள் கட்டுதல் மற்றும் சாலைகள் அமைத்தல் அல்லது வேறு எவ்வகைக் கட்டிடத்தொழிலிலும் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்குப் பொருந்தும்.

இச்சட்டத்தின் பிரிவு, 3-ல், மேற்குறிப்பிட்ட வகையான தொழிலாளர்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களை ஏற்படுத்தவும் அதற்கான நிதியினை திரட்டவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் அரசானது தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் (கட்டிடத் தொழிலாளர்கள்) நலத்திட்டம் 1994 என்ற திட்டத்தினை ஏற்படுத்தியுள்ளது. இத்திட்டம், முதற்கட்டமாக சென்னை, கோவை மற்றும் மதுரை ஆகிய மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 1-11-94 முதல் அமுலுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. பின்னர் இத்திட்டம் மற்ற இடங்களுக்கும் தேவைக்கேற்ப நீட்டிக்கப்பட உள்ளது.

9. இத்திட்டம் குழந்தைகள் காப்பகம் மற்றும் தொழிலாளர்களுக்கு விபத்துக் காப்பீடு, தொழிலாளர் வைப்பு நிதி, தொழிலாளர் ஈட்டுறுதி திட்டம் (இ.எஸ்.ஐ.) மற்றும் ஓய்வூதியம் ஆகிய நலத்திட்டங்கள், பதிவு பெற்ற பணியாளர்கள் பெறுவதற்கு வழிவகை செய்கிறது.

10. மேற்குறிப்பிட்ட நலத்திட்டங்களை செயல்படுத்துவதற்கு தேவையான நிதி திரட்ட இச்சட்டத்தில் புதிதாக சேர்க்கப்பட்ட பிரிவு 8 ஆ, வழிவகை செய்கிறது. இப்பிரிவின்படி, சென்னை, மதுரை மற்றும் கோவை ஆகிய மாநகராட்சி எல்லைகளில் கட்டிடம் கட்டுபவர் மேலே குறிப்பிட்ட நதிக்கு குறிப்பிட்ட தொகையை, மாநகராட்சி அலுவலகத்தில் செலுத்த வேண்டும். இவ்வாறு பெறப்பட்ட தொகையினை, சம்பந்தப்பட்ட மாநகராட்சிகள் இச்சட்டத்தின்படி அமைக்கப்பட்ட வாரியத்திற்குச் செலுத்தவேண்டும் இந்த வாரியத்தின் முதற்கூட்டம் 28-2-95 அன்று சென்னையில் நடத்தப்பெற்றது மற்றும் இந்நலத்திட்டங்கள் 1995-96ம் ஆண்டில் அமல்படுத்தப்படும்.

## திரைப்படத்தொழிலாளர்கள்

11. திரைப்படத் தொழிலாளர்களின் நலனுக்காக ஓய்வுதியத்திட்டம் மற்றும் விபத்து காப்புறுதித்திட்டம், இந்த அரசால் 1-4-1995 முதல் நடைமுறைப்படுத்த ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

## ஒப்பந்த தொழிலாளர்கள்:

12. 1970ம் ஆண்டு ஒப்பந்த தொழிலாளர் (வரன்முறைப் படுத்துதல் & நீக்குதல்) சட்டம், சில தொழில்களில் ஒப்பந்த தொழிலாளர் முறை வரைமுறைப்படுத்தி சில சந்தர்ப்பங்களில் முழுதும் நீக்குகிறது. ஒரு நிறுவனத்தில் ஒப்பந்த அடிப்படையில் கடந்த ஓர் ஆண்டில் எந்த ஒரு

நாளிலாவது 20 அல்லது அதற்கும் அதிகமான தொழிலாளர்கள் நியமிக்கப்பட்டிருந்தால், அந்த நிறுவனத்திற்கு இச்சட்டம் பொருந்தும். இதன்படி, சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்காரர் உரிமம் பெறவேண்டும்.

தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையின் செயலரைத் தலைவராகக் கொண்டு செயல்படும், மாநில (ஒப்பந்தத் தொழிலாளர்) ஆலோசனைக்குழு, தனக்கு அனுப்பப்படும் பலவித நிர்வாக மற்றும் இதர பொருள் குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்குகிறது.

13. இச்சட்டம், பின்குறிப்பிட்டுள்ள நலன்களை ஒப்பந்த தொழிலாளர்கள் பெற வழிவகை செய்கிறது.

1. சிற்றுண்டி சாலை
2. ஓய்வு அறைகள்
3. நல்ல குடிநீர்வசதி
4. போதுமான கழிவறை வசதிகள்
5. சலவை வசதி
6. முதலுதவி வசதிகள்

14. பொறியியல் துறை சம்பந்தப்பட்ட பின் குறிப்பிட்டுள்ள 13 இனங்களுக்கு, மாநில ஆலோசனை (ஒப்பந்த தொழிலாளர்) க்குழுவின் ஆலோசனையுடன் அரசு தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை ஆணை எண்:187, நாள் 2-9-93ல் பணி வரண்முறைகள் செய்யப்பட்டுள்ளன.

1. குடிமுறைக்குரிய கட்டுமானம்
2. புனைந்து கட்டுதல், கொதிகலன் உறுப்புகளின் கட்டமைப்பு
3. துப்புரவு பொருட்கள் இயக்கம் (தொழிற்சாலை துப்புரவு)
4. கட்டமைப்பு மற்றும் மின்சார பொருட்கள் நிறுவுதல்
5. இயந்திரங்களை கட்டுதல் மற்றும் நிலைநாட்டுதல்
6. மின்சார வேலைகள்
7. தொழிற்சாலை துப்புரவு மற்றும் பராமரிப்பு (House-keeping)

8. கட்டிட பராமரிப்பு (வண்ணம் அடித்தல் & வெள்ளை அடித்தல்)

9. இயந்திரங்களை பழுதுபார்த்தல்

10. குழாய் தொடரமைப்பு நிறுவுதல் மற்றும் வேலை.

11. கம்பி வடங்களை இணைத்தல்.

12. அலுவலக தட்டச்சு வேலை

13. வாட்டர் கூலர் மற்றும் தொலைபேசி இயக்குதல்

15. இந்த சட்டத்தின்படி 20க்கு அதிகமாக ஒப்பந்த தொழிலாளர்களைப் பணியில் அமர்த்தும் நிறுவனங்களின் முதன்மை வேலை அளிப்பவர் பதிவுச்சான்று வழங்கும் அதிகாரியிடம் பதிவு செய்திருக்க வேண்டும். தொழிலாளர் துறை துணை ஆணையர்கள் அலுவலகங்களில் பணியாற்றும் உதவி ஆணையர்கள் பதிவுச்சான்று அலுவலர்களாக செயல்படுகின்றனர். முதன்மை வேலை அளிப்பவர் ஒப்பந்த தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தும் போது தாங்களாகவே முன்வந்து பதிவு செய்துகொள்கின்றனர்.

இதன் மூலம் ஒப்பந்தக்காரர்கள் அவர்களது கீழ் பணிபுரியும் ஒப்பந்த தொழிலாளர்களுக்கு சம்பளம் வழங்காமல் அல்லது சட்ட ரீதியான பயன் வழங்காமல் இருக்கும் பட்சத்தில் மேற்குறிப்பிட்ட பயன் தொழிலாளர்களுக்கு வழங்குவதும் முதன்மை வேலை அளிப்பவர்கள் பொறுப்பாகும். இச்சட்டத்திலே கொடுக்கப்பட்டுள்ள மேற்படி விதியின் காரணமாக ஒப்பந்த தொழிலாளர்களுக்கு கிடைக்க வேண்டிய பயன் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் வருடாந்திர ஆண்டு அறிக்கையின்படி தொழிலாளர் துறையின் பதிவு செய்யும் அலுவலகங்களில் 346 முதன்மை வேலை அளிப்பவர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

## தொழிலாளர் துயர் தணிப்பு நிதி:

16. தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் பணி நேரத்தில் ஊனமுற்றாலோ அல்லது மரணம் அடைந்தாலோ வேலையாள் இழப்பீடு சட்டத்தின் கீழ் தீர்ப்பளிக்கப்பட்ட நட்ட ஈட்டுத்தொகையை பெற இயலாத சூழ்நிலையில், பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க அரசு இந்த நிதியை ஏற்படுத்தியுள்ளது. 1994-ம் ஆண்டில் இந்நிதியிலிருந்து 12 வழக்குகளில் ரூ. 18,500 நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

## தொழிலாளர் மறுவாழ்வு நிதி:

17. தொழிற்சாலைகளை நவீனபடுத்துதலினாலோ அல்லது தொழில் நுட்ப மேம்பாட்டினாலோ அல்லது நலிவடைந்து மூடப்பட்ட நிலையினாலோ வேலையின்மை ஏற்படுகின்றது. எனவே, அவ்வாறு பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு பின்ன புனர்வாழ்வு அளிக்கும் பொருட்டு அரசு “புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா தொழிலாளர் நல நிதி” என்னும் ஒரு தொழிலாளர் மறுவாழ்வு நிதியை ஏற்படுத்தி ரூபாய் ஒரு கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

18. அரசு தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை ஆணை எண்.118, நாள் 29-6-94-ல் மேற்குறிப்பிட்டவாறு உண்மையாக பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் யார் யார் என்பதை கண்டறிய ஒரு நிர்வாக குழுவினை அமைத்துள்ளது.

19. இக்குழுவில் பின் குறிப்பட்டவர்கள் உற்ப்பினர்கள் ஆவர்.

1. அரசு செயலர், தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை
2. அரசு செயலர், தொழில் துறை
3. அரசு செயலர், சிறு தொழில் துறை
4. அரசு செயலர், நிதித் துறை
5. தொழிலாளர் ஆணையர், உறுப்பினர்-செயலர்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

# அத்தியாயம் 4

## தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம், சென்னை-6.

தொழிலாளர் நலம் என்றாலே நிர்வாகம் தொழிலாளர்களுக்கு அளிப்பதே என்ற நிலையை 1972-ம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டம் மாற்றியுள்ளது. தொழிலாளர் மற்றும் வேலையளிப்போர் மற்றும் அரசு ஆகியோர் அளிக்கும் நல நிதிப் பங்குத் தொகையினைக்கொண்டு பல்வேறு தொழிலாளர்களுக்கும் அவர்தம் குடும்பங்களுக்கும் பயன்பெறும் வகையில் நலத் திட்டங்களை இவ்வாரியம் செயல்படுத்தி வருகின்றது.

2. இச் சட்டத்தின்படி, மாநில தொழிலாளர் நல அமைச்சர் அவர்களைத் தலைவராகக் கொண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் இயங்கி வருகிறது.

3. இவ்வாரியம் தமிழகம் முழுமையும் 52 தொழிலாளர் நல மையங்களையும் 20 தையற் பயிற்சி மையங்களையும் நடத்தி வருகின்றது. ஒவ்வொரு மையத்திலும் தொழிலாளர்களின் ஆதரவில் வாழ்ந்து வரும் பெண்களுக்கு தையற் பயிற்சிக் கற்பித்தலும், ஒரு பிரிவில் குழந்தைகளுக்குகாக நடத்தப்படுகின்றது. தையற் பயிற்சி பெறுபவர்களுக்கு மாதம் ரூ.80/- வீதம் உதவித் தொகை அளிக்கப்படுகின்றது. குழந்தைகள் பிரிவில் பயிலும் குழந்தைகளுக்கு இலவச சத்துணவு, பால், ப ழம், முட்டை ஆகியவை வழங்கப்படுகின்றன. தவிர அனைத்து குழந்தைகளும் தகுதி பெற்ற மருத்துவர்களால் மாதமிருமுறை மருத்துவ பரிசோதனை செய்யப்படுகின்றார்கள் தொழிலாளர்களுக்கு, அவர்களைச் சார்ந்தோர்களுக்கு படிக்கும் வழக்கத்தை ஊக்குவிக்கும் பொருட்டு தமிழகத்தில் 14 இடங்களில் இலவச படிப்பகத்தை இவ்வாரியம் நடத்தி வருகின்றது. மாமல்லபுரம், குற்றாலம் மற்றும் வால்பாறை ஆகிய இடங்களில் தொழிலாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினர் தங்குவதற்காக ஓய்வு இல்லங்கள் கட்டப்பட்டுள்ளன. இங்கு மிகமிகக் குறைந்த வாடகையே வசூலிக்கப்படுகின்றது. சென்னையில் தொழிற்சங்கப் பிரதிநிகள், தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட வழக்கு/விசாரணை/பேச்சுவார்த்தை

ஆகியவற்றிற்காக வருபவர்கள் தங்குவதற்காக ஓர் இல்லம் டி.எம்.எஸ்.வளாகம், சென்னை-6ல் கட்டப்பட்டுள்ளது.

4. தொழிலாளர் மற்றும் அவர்தம் குடும்பத்தினர் விளையாட்டுத் துறையில் ஆர்வத்தினை ஊக்குவிக்கும் பொருட்டு ஆண்டுதோறும் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுகின்றது.

காசநோயால் அவசியுறும் தொழிலாளர்கள் மருத்துவமனைகளில் தங்கி சிகிச்சை பெறுவதற்காக தாம்பரம், திருப்பூர், ஆசாரிபள்ளம், ஆஸ்டின்பட்டி மற்றும் கீழ்பெண்ணாத்தூர் ஆகிய இடங்களில் உள்ள அரசு மருத்துவமனைகளில் இவ்வாரியம் தனிப்பிரிவினைக் கட்டியுள்ளது.

## எதிர்காலத் திட்டங்கள்

5. தொழிலாளர்கள் சுற்றுலா செல்கையில் தங்குவதற்காக ஊட்டி, கொடைக்கானல், மற்றும் இராமேஸ்வரம் ஆகிய இடங்களில் தங்கும் விடுதிகள் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

# அத்தியாயம் 5

## தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம், சென்னை-5

தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம் 1973-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. 1978-ம் ஆண்டில் இந்த நிலையம் முதன்மை நிலையமாக உயர்த்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின்படி 8-10-1987 முதல் சங்கமாக பதிவுச் செய்யப்பட்டு, தன்னாட்சி நிறுவனமாக இயங்கி வருகிறது. மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களை தலைவராகக் கொண்டு ஆட்சிமன்றக் குழு நிலையத்தின் நிர்வாகத்தினை கவனித்து வருகிறது. இந்நிலையத்திற்கு இயக்குநராக தொழிலாளர் துறையிலிருந்து இணை ஆணையர் நிலையில் அரசு நியமனம் செய்துள்ளது. இக்கல்வி நிலையத்தின் முக்கிய நோக்கங்கள் மற்றவற்றுக்கிடையில் ,

1. தொழிற்சங்கங்களிடையே ஆரோக்கியமான செயல்பாடுகளை உருவாக்குதல்

2. நிர்வாகத்திற்கும் தொழிலாளர்களுக்கும் இணக்கமான நெருக்கத்தை தோற்றுவித்தல்;

3. தொழிலாளர் மற்றும் தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையில் பணியாற்றும் அலுவலர்களின் திறமைகளை வளர்த்தல்,

4. தொழிலாளர்கள் குறித்து ஆராய்ச்சிகள் மேற்கொள்ளுதல்.

செயல்கள்:

2. இக்கல்வி நிலையம் தொழிலாளர் சம்பந்தப்பட்ட பயிற்சி திட்டங்கள், கருத்தரங்குகள், இயல்பாக்க பயிற்சிகள், புத்தாக்கப் பயிற்சிகள் ஆகியவற்றை காலமுறையாக நடத்தி வருகிறது. தொழிலாளர்களுக்கும், தொழிற்சாங்கப் பிரநிதிகளுக்கும், தொழிலகங்களில் பணியாற்றும் மேற்பார்வையாளர்களுக்கும், நிர்வாகப் பணியாளர்களுக்கும், தொழிலாளர் துறை மற்றும் தொழிற்சாலைகள் துறை அலுவலர்களுக்கும், தனியார் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கும் இப்பயிற்சிகள்

நடத்தப்பட்டு வருகின்றன. இதைத் தவிர, இக்கல்வி நிலையம் ஓராண்டிற்கான தொழிலாளர் நிர்வாக முதுநிலை பட்டயப்படிப்பும் (பி.ஜி.டி.எல்.ஏ. பகுதி நேர மற்றும் அஞ்சல் வழி கல்வி மூலம்), தொழிலாளர் நிர்வாக இளங்கலை பட்டப்படிப்பும் (பி.எல்.எம்), தொழிலாளர் நிர்வாக முதுகலை பட்ட மேற்படிப்பும் (எம்.எல்.எம்) நடத்தி வருகிறது. சென்னைப் பல்கலைக் கழகம் இக்கல்வி நிலைய்த்தால் நடத்தப்படும் தொழிலாளர் நிர்வாக இளநிலை பட்டப்படிப்பிற்கும், தொழிலாளர் நிர்வாக முதுநிலை பட்ட மேற்படிப்பிற்கும் அங்கீகாரம் வழங்கியுள்ளது. மேலும் இக்கல்வி நிலையம் உழைப்பவர் உலகம் என்ற மாத இதழையும் வெளியிடுகிறது.

3. 1994-ஆம் ஆண்டில் ஒன்பது வர்த்தக நிறுவன கருத்தரங்குகளும், குழந்தை தொழிலாளர்களை நீக்குதல் திட்ட நடவடிக்கையின் கீழ் மூன்று பயிற்சிகளும் தமிழ்நாடு மின்வாரிய தொழிலாளர்களுக்கான தொழில் உறவு பற்றிய இரு பயிற்சிகளும், மின் வாரிய நிர்வாக அலுவலர்களுக்கான மற்றுமொரு பயிற்சியும் நடத்தப்பட்டன. 1994-95 ஆண்டில் மொத்தம் 611 நபர்கள் இப்பயிற்சிகளில் பங்கேற்றனர். தொழிலாளர் நிர்வாகம் பற்றி ஓராண்டு முதுநிலை பட்டயப் படிப்பில் அஞ்சல் (பகுதிநேரம்) (பி.ஜி.டி.எல்.ஏ.) 61 மாணவர்களும், இதே பட்டயப் படிப்பில் அஞ்சல் வழி மூலம் 184 மாணவர்களும் பயிலுகின்றனர். தொழிலாளர் நிர்வாக இளநிலை பட்டப்படிப்பு, (பி.எல்.எம்) வகுப்பில் 50 மாணவர்களுகம் தொழிலாளர் நிர்வாக முதுநிலை பட்ட மேற்படிப்பில் (எம்.எல்.எம்) 36 மாணவர்களும் 1993-94-ம் ஆண்டில் சேர்க்கப்பட்டு தற்போது கல்வி பயின்று வருகின்றனர்.

4. புதுடில்ல (நோய்டா) தேசிய தொழிலாளர் நிலையத்துடன் இணைந்து 1994-இக் இக்கல்வி நிலையம் சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் முக்கிய திட்டமான குழந்தை தொழிலாளர்களை வேலையில் அமர்த்துதலை ஒழித்தல் நடவடிக்கையின் கீழ் குழந்தை தொழிலாளர்களை வேலையில் அமர்த்துதலை ஒழித்தல் நடவடிக்கையின் கீழ் குழந்தை தொழிலாளர் நீக்குதல் மற்றும் முறைப்படுத்துதல் குழந்தைத் தொழிலாளர் சட்ட விதிகள் அமுலாக்கம் சிறந்த முறையில் இருக்க தமிழ்நாடு, கேரளா, கர்நாடாக மாநிலங்கள் மற்றும் மைய அரசின் ஆட்சிப் பகுதியான பாண்டிச்சேரி ஆகியவற்றில் பணியாற்றும் தொழிலாளர் மற்றும் தொழிற்சாலைகள் துறையைச் சார்ந்த செயலாக்க ஆய்வாளர்களுக்கு நான்கு செயலாக்க பயிற்சிகள் நடத்தப்பட்டது. இப்பயிற்சியில் 120 அலுவலகள் இப்பயிற்சி கருத்தரங்கில் பயிற்சிப் பெற்றனர்.

5. இவ்வலுவலக ஆராய்ச்சி அலுவலரால் மேற்கொள்ளப்பட்ட அமைப்பு ரீதியற்ற விவசாய தொழிலாளர்கள் குறித்த அறிக்கை ஒன்று தமிழ்நாடு திட்ட குழுவினால் 1-7-1994 அன்று நடத்தப்பட்ட கருத்தரங்கில் வெளியிடப்பட்டது. இந்த ஆண்டு, அமைப்பு ரீதியற்ற துறையில் குறைந்தப்பட்ச ஊதிய சட்டத்தின் அறிவிக்கைகள் அமுலாக்கப்படுவது பற்றிய ஆய்வு மேற்கொள்ளப்பட்டு உள்ளது.

## தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம், சென்னை. 5.

### நிலையத்தில் 1995-ஆம் ஆண்டிற்கான மேற்கொள்ளப்படும் திட்டங்கள்

இக்கல்வி நிலையத்தில் கீழ்கண்ட பயிற்சி திட்டங்களும் கருத்தரங்களும் 1995-ம் ஆண்டில் நடத்தப்பவுள்ளன:

1. குழந்தை தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துவதை தடுப்பது தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்குகளை மாவட்ட அளவில் தொழிற்சங்கத் தலைவர்கள் பெற்றோர், வேலை அளிப்பவர்கள் மற்றும் அமலாக்க அதிகாரிகளுக்கு நடத்துதல்.

2. நீதிமுறை சார்பு பற்றி தொழிலாளர் துறை அலுவலர்களுக்கான பயிற்சிகள்.

3. தொழிலாளர்கள் நலச் சட்டங்கள் பற்றி தோட்ட/தொழில் நிறுவனங்கள், பீடி நிறுவனங்கள் மற்றும் கடைகள், சிறு தொழில்கள் ஆகியவற்றில் உள்ளோருக்கு விளக்க முறை கருத்தரங்கு:

4. தொழில் நிறுவனங்களில் பணி புரியும் செயல் அலுவலர்களுக்கு "மேற்பார்வை செயல் திறமையை வளர்ச்சியடையச் செய்தல்" என்பது பற்றிய பயிற்சி:

5. கூட்டுறவு மற்றும் பொதுத் துறை நிறுவனங்களில் "தொழிலாளர் நல அலுவலர்களின் பங்கு" என்பது பற்றிய பயிற்சிகள்:

6. தொழிலாளர் துறை அலுவலர்களுக்கு சமரச நடவடிக்கைகள் மற்றும் அமுலாக்க பணி தொடர்பான பயிற்சிகள்

7. தொழிலாளர்களுக்கு அவர்களது இல்லத்தரசிகளுக்கும் 'தரமிகு வாழ்வு' என்பது பற்றிய பயிற்சி.

[1995 ஏப்ரல் 27

8. 'நல்ல தொழிற்சங்கம் மற்றும் தொழிற்சங்க தலைவர்களை உருவாக்குதல் என்பது பற்றி பயிற்சி:

9. தொழிலாளர் உயர் அதிகாரிகளுக்கு மனித வள மேம்பாடு பற்றிய பயிற்சிகள்:

10. "நிர்வாகம் தொழிலாளர் மனித உறவிற் புதிய நோக்குகள்" பற்றி தொழிற்சங்கங்களின் பணி புரியும் நிர்வாக அலுவலர்களுக்கான பயிற்சி திட்டங்கள்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

# அத்தியாயம் 6

## தொழிற்சாலைகள் ஆய்வகத்துறை நிர்வாகம்:

1948 ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம் மற்றும் 14 முக்கிய தொழிலாளர் நல சட்டங்களை தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் பதிவு பெற்ற தொழிற்சாலைகளில் அமுல்படுத்தப்படுத்துவது தொழிற்சாலைகள் ஆய்வகத்துறையின் பொறுப்பாகும். மேற்குறிப்பிட்டுள்ள தொழிலாளர் நலச்சட்டங்களின் அமுலாக்கத்தினால் தொழிற்சாலைகளில் பணியாற்றும் 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்களின் உடல் நலம், பாதுகப்பு ஆகியவை பேணப்படுகின்றன.

2. இத்துறையின் முழு பொறுப்பினையும், தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளரைச் சாரும். தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளருக்கு உறுதுணையாக ஒரு தொழிற்சாலைகள் கூடுதல் தலைமை ஆய்வாளர், 4 தொழிற்சாலைகள் இணைத் தலைமை ஆய்வாளர்கள், 29 தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளர்கள், 49 தொழிற்சாலைகள் ஆய்வாளர்கள், 43 தொழிற்சாலைகள் உதவி ஆய்வாளர்கள். ஒரு அறுவை சிகிச்சை மருத்துவர், 8 உதவி சிகிச்சை மருத்துவர்கள் ஒரு நிர்வாக அலுவலர் மற்றும் ஒரு கணக்கு அலுவலர் உள்ளனர்.

3. 13 சட்ட அமுல் நடத்தும் கோட்டங்கள் தொழிற்சாலைகள் சட்டம் 1948 மற்றும் தொடர்புள்ள தொழிலாளர் நலச் சட்டங்களை செயல்படுத்துகின்றன. மற்றும் மாநிலத்தில் 10 தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளர் தலைமையில் சோதனை மற்றும் பாதுகாப்பு கோட்டங்கள் செயலாற்றுகின்றன. அழுத்த இயந்திர சோதனை மற்றும் பாதுகாப்பு வகுப்புகள், பாதுகாப்பு ஆய்வுகள், கருத்தரங்குகள் நடத்தல் ஆகியவை இக்கோட்டங்களில் பணியாகும்.

## தொழிற்சாலைகள் மற்றும் ஏனைய சார்புள்ள சட்டங்களை நிர்வகித்தல்:

4 நடப்பு ஆண்டில், 1948-ம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் அதிகப்படியான பதிவுறா தொழிற்சாலைகள்

பதியப்பட்டுள்ளன. 1994-ம் ஆண்டில் இறுதியில் உள்ள தொழிற்சாலைகள் மற்றும் அவற்றில் பணிபுரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கை விவரம் பிற்சேர்க்கை 20-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

5. சட்டங்கள் அமலாக்குவதால், பயன்தரத்தக்க முறைகள் இத்துறையினால் மேற்கொள்ளப்படுவதால், தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு மற்றும் சிறப்பான பணி சூழ்நிலை உறுதிபடுத்தப்படுகிறது. மேற்கூறிய சட்டங்களில் குறிப்பாக, ஊதியம் வழங்குதல் சட்டம் 1936, குறைந்த பட்ச ஊதிய சட்டம் 1948 ஆகியவற்றின் கீழ் தொழிலாளர்களின் உரிமைகள் மற்றும் தனிச்சலுகைகள் உறுதிப்படுத்தப்படுகின்றன.

மேற்கூறிய சட்டங்களில் குறிப்பாக, ஊதியம் வழங்குதல் சட்டம் 1936, குறைந்த பட்ச ஊதிய சட்டம் 1948 ஆகியவற்றின் கீழ் தொழிலாளர்களின் உரிமைகள் மற்றும் தனிச்சலுகைகள் உறுதிப்படுத்தப்படு கின்றன.

6. 1994-ம் ஆண்டு தொழிற்சாலைகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு விவரங்கள் பிற்சேர்க்கை-21,22 மற்றும் 23-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

## வழக்குகள்

7. பொதுவாக ஒரு தொழிற்சாலைகள் ஆய்வர் தொழிற்சட்டங்கள் அமுலாக்குவதில் உள்ள குறைபாடுகளை இரண்டு, மூன்று முறை ஆய்வின்போது சுட்டிக் காட்டியும், களையப்படாவிட்டால், காரணம் காட்டும் அறிக்கை அனுப்புகிறார். நிர்வாகத்தினருக்கு காரணம் காட்டும் அறிக்கைக்கு பதில் அனுப்ப ஏழு நாட்கள் அவகாசம் அளிக்கப்படுகிறது. நிர்வாகத்தினர் குறைகளைக் களைய சிறிது கால அவகாசம் கேட்டால், கால அவகாசமும் அளிக்கப்படுகிறது. நிர்வாகத்தினர் பெரும்பாலான ஆணைகளை நிறைவேற்றி விட்டால், சட்ட பூர்வ தொடர் நடவடிக்கைகள் எடுப்பதில்லை.

கடுமையான குறைபாடுகளை முதல் உரிமம் எடுக்காமை/உரிமம் புதுப்பிக்காமை, வரைபடம் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்காமை, வருகைப் பதிவேடு பேணப்படாமை, நிர்ணயித்த குறைந்த பட்ச ஊதிய விகிதம் வழங்கப்படாமை, சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட விதிகள் அனுசரிக்காமை, ஆகிய குற்றங்களுக்கு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படுகின்றன. அறிவிப்புகள் பார்வைக்கு வைக்கப்படாமல் இருப்பதோ, சில பதிவேடுகள் பராமரிப்பு செய்யப்படாததற்காகவோ வழக்குகள் பதிவு செய்யப்படுவது இல்லை.

8. 1994-ம் ஆண்டில், தொழிற்சாலைகள் சட்டத்தின்கீழ் 1766 வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. மேலும் இதர சட்டங்களின்கீழ் 267 வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. ரூ. 10,64,205/-அபராதத் தொகையாக வசூலிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பான வழக்கு விவரங்கள் பிற்சேர்க்கை-25ல் கொடுக்கப்பட்டுள்ளன.

## குறைந்தபட்ச ஊதிய சட்டம்

1948-ம் ஆண்டு குறைந்தபட்ச ஊதியச் சட்ட விதிகள், மிக நல்லமுறையில அமுலாக்கப்பட்டு செயல்பட்டு வருவதால், தொழிலாளர்கள் அனைவருக்கும் குறைந்த பட்சம் ஊதியத் சட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட ஊதிய விகிதங்களின்படி நியாயமான ஊதியம் வழங்கப்படுகிறது. குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின் கீழ் முரண்பாடுகள் காணப்படின் உடனுக்குடன் இத்துறை ஆய்வாளர்களால் தகுந்த சட்ட நடவடிக்கை தொடரப்படுகிறது.

குறைந்த பட்ச ஊதிய சட்டத்தின் கீழ் தொடரப்பட்ட வழக்குகள் மற்றும் கோரிக்கை மனுக்களின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

## குறைந்தபட்ட ஊதிய சட்டத்தின் கீழ் வழக்குகள்

| 1994ம் ஆண்டின் ஆரம்ப நிலுவை. | நடப்பு ஆண்டில் தொடரப் பட்டவை. | நடப்பு ஆண்டில் முடிவுற்றவை. | ஆண்டு இறுதியில் நிலுவை. |
|---|---|---|---|
| 365 | 72 | 107 | 330 |

## கோரிக்கை மனுக்கள்

| | | |
|---|---|---|
| 1. | நடப்பு ஆண்டில் தாக்கல் செய்யப்பட்ட கோரிக்கை மனுக்கள். | 36 |
| 2. | சம்பந்தப்பட்ட தொழிற்சாலைகள் | 16 |
| 3. | சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள் | 1727 |
| 4. | கோரிக்கை மனு மூலம் கோரிய தொகை | ரூ. 13,64,096 |
| 5. | பயனடைந்த தொழிலாளர்கள் | 282 |
| 6. | தீர்வு செய்யப்பட்ட கோரிக்கை மனுக்கள் | 8 |
| 7. | பட்டுவாடா செய்யப்பட்ட தொகை | ரூ. 2,24,564 |

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

## தொழிலாளர்களின் குறைகள் மற்றும் புகார்கள்

10. தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளர்களால் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாதம் ஒரு முறையும், தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் அவர்களால் காலாண்டிற்கு ஒரு முறையும், தொழிற்சங்க பிரதிநிதிகளைக் கூட்டி தொழிலாளர்களின் குறைகளை அறிந்து அதனை உடனுக்குடன் ஆய்வாளர்களால் கவனிக்கப் படுகின்றன. தொழிற்சங்கங்கள் மற்றும் தொழிலாளர்களிடமிருந்து பெறப்படும் புகார்கள், உடனடியாக விசாரிக்கப்பட்டு 15 தினங்களுக்குள் பதிலளிக்கப்படுகின்றன. இதன் விவரம் பிற்சேர்க்கை-25ல் கொடுக்கப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| நடப்பு ஆண்டில் பெறப்பட்ட புகார்கள் | 467 |
| நடப்பு ஆண்டில் விசாரித்து பதிலளிக்கப்பட்ட புகார்கள். | 455 |

## வரைபடங்கள்

11. வரைபடங்கள் ஒப்புதல் அளிப்பதை துரிதப்படுத்த வரைபடங்கள் ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் பல்வேறு அலுவலர்களுக்கு கீழ்கண்டவாறு பகிர்ந்து அளிக்கப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| 1. அபாயகரமான உற்பத்தி முறைகள் உள்ள தொழிற்சாலைகளை தவிர்த்து 200க்குள் குறைவாக தொழிலாளர்கள் பணிபுரியும் தொழிற்சாலைகள் சம்பந்தப்பட்ட வரைபடங்கள். | தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளர் |
| 2. அபாயகரமான உற்பத்தி முறைகள் உள்ள தொழிற்சாலைகள் தவிர்த்து 200-க்கு மேற்பட்ட 1000 தொழிலாளர்களுக்கு உட்பட்டு பணிபுரியும் தொழிற்சாலைகள் சம்பந்தப்பட்ட வரைபடங்கள். | தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளர் |
| 3. அபாயகரமான உற்பத்திமுறை உள்ள தொழிற்சாலைகள் மற்றும் 1000க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் உள்ள தொழிற்சாலைகள் சம்பந்தப்பட்ட வரைபடங்கள். | தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர். |

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

12. 1994-ம் ஆண்டில் ஒப்புதல் செய்யப்பட்ட தொழிற்சாலைகளில் வரைபடங்கள் விவரங்கள் பின்வருமாறு:-

| வரைபடங்கள் ஒப்புதல் அளித்த அலுவலர் | ஒப்புதல் செய்யப்பட்ட வரைபடங்கள் |
|---|---|
| தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் | 1159 |
| தொழிற்சாலைகள் இணைத் தலைமை ஆய்வாளர் | 245 |
| தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளர் | 2428 |

சிறுதொழில்களின் வளர்ச்சிக்கான எளிதாக்கப்பட்ட நடைமுறை:

13. 1-1-95 தேதியில் உள்ளவாறு 1948ம் வருட தொழிற்சாலைகள் சட்டத்தின்படி, 21,964 தொழிற்சாலைகள் உள்ளன. அவற்றில் 11,623 தொழிற்சாலைகள் சிறு தொழில் பிரிவாகும். சாதாரணமாக தொழிற்சாலைகள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட தொழிற் சாலைகள் ஆறுமாதத்திற்கு ஒருமுறை ஆய்வு செய்ய வேண்டும். மாநிலத்தில் சிறு தொழில் நிறுவனங்களின் வளர்ச்சி கருதி ஆய்வு பணி கால அளவு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. திருத்தியமைக்கப்பட்ட ஆய்வு பணி கால அளவு கீழ்க்கண்டவாறு கடைப்பிடிக்க சார்நில அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

| வரிசை எண். | தொழிற்சாலைகள் வகைப்பாடு | தொழிற்சாலைகள் ஆய்வகத்துறை அலுவலர்கள் ஆய்வு மேற்கொள்ள வேண்டிய காலமுறை |
|---|---|---|
| 1. | சிறுதொழில் நிறுவனங்கள் கேடு விளைவிக்கக் கூடிய மற்றும் அபாயகரமான தொழிலில் ஈடு படாதவை (சிறு தொழில் நிறுவன சான்று பெற்ற தொழிற்சாலைகள்) | இச்சிறு தொழில் நிறு வனங்களை தொழிலாளர் கள் அல்லது தொழிற் சங்களிடமிருந்து புகார் பெறப்பட்டால் மட்டும் ஆய்வு செய்யவேண்டும். அவ்வாறு புகார்கள் பெறப் படாத நிலையில் ஐந் தாண்டுக்கு ஒருமுறை ஆய்வு மேற்கொள்ள வேண்டும். |

| வரிசை எண். | தொழிற்சாலைகள் வகைப்பாடு | தொழிற்சாலைகள் ஆய்வகத்துறை அலுவலர்கள் ஆய்வு மேற்கொள்ள வேண்டிய காலமுறை |
|---|---|---|
| 2. | (1) 1950-ம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதி அட்டவணை 1 முதல் 32 முடிய உள்ள அட்டவணை (அட்டவணை 24 தவிர) படி கேடு விளைவிக்கக் கூடிய மற்றும் அபாயகரமான தொழிலில் ஈடுபட்டுள்ள சிறு தொழில் நிறுவனங்கள். | இத் தொழிற்சாலைகள் ஆறு மாதத்திற்கு ஒரு முறை ஆய்வு செய்ய வேண்டும் |
| | (2) சிறு தொழில் நிறுவனங்கள் வகைப்படுத்தாத இதர தொழிற்சாலைகள் மட்டும் இதில் அடங்கும் | இத் தொழிற்சாலைகள் ஆறு மாதத்திற்கு ஒரு முறை ஆய்வு செய்ய வேண்டும். |
| 3. | அட்டவணை 24-ற்கு உட்பட்ட தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழிற்சாலைகள், அவைகள் சிறுதொழில் நிறுவனமாக வகைப்படுத்தப்பட்டாலும். | இத் தொழிற்சாலைகள் நான்கு மாதத்திற்கு ஒரு முறை ஆய்வு செய்ய வேண்டும். |

14. 1988-ம் ஆண்டு தொழிலாளர் சட்டங்கள் (அறிக்கைகள் அளித்தல் மற்றும் பதிவேடுகள் பராமரித்தல்) சட்டம் குறைந்த தொழிலாளர்கள் பணியாற்றும் நிறுவனங்களுக்கு பதிவேடு பராமரிப்பதிலும், அறிக்கைகள் அளிப்பதிலும் விதிவிலக்கு அளிக்க வகை செய்து இம்மாநிலத்தில் நடைமுறைப்படுத்தப்படுகிறது. 1948-ம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு 19 தொழிலாளர்களுக்கு உள்ளிட்ட தொழிற்சாலைகளுக்கு இச்சட்டம் பொருந்தும்.

## தாராளமாக்கப்பட்ட இதர நடைமுறைகள்

15. 1948-ம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகள் உரிமத் தொகையினை அசல்

செலுத்துச் சீட்டு மூலமாக செலுத்தி வருகின்றன. இந்நடைமுறையினை எளிதாக்கும் உரிமக் கட்டணத்தை கேட்பு வரைவு ஓலை அல்லது செலுத்துச் சீட்டு மூலமாக செலுத்த 1958-ம் ஆண்டு தொழிற்சாலைகள் விதிகளில் திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது.

16. தொழிற்சாலைகள் உரிமையாளர்கள் ஒவ்வொரு ஆண்டும் உரிமத்தினை புதிப்பித்தலுக்கு பதிலாக அவர்கள் விருப்பம் போல் முதல் உரிமத்தினையோ அல்லது புதிப்பிக்கப்படவேண்டிய உரிமத்தினையோ ஓராண்டுக்கோ அல்லது ஐந்தாண்டுக்கோ உரிமம் பெற்றுக் கொள்ள 1950-ம் ஆண்டு தொழிற்சாலைகள் விதிகளில் திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது.

17. அதிக வேலை பளு காரணமாக மிகை நேர வேலை பார்க்க ஆண் தொழிலாளர்களுக்கு விதிவிலக்கு ஓராண்டுக்கு அளிக்கப்பட்டு வந்தது. தற்போது தொடர்ச்சியாக மூன்று ஆண்டுகளுக்கு அளிக்கப்படுகிறது. இது தொடர்பாக சார்நிலை அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

18. பெண் தொழிலாளர்களுக்கு இரவு 7.00 மணிக்கு மேல் 10.00 மணி வரை பணியாற்ற தொழிற்சாலை சட்டம் பிரிவு 66-ஐ தளர்த்தி இரண்டாண்டுக்கு அரசால் கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் விதிவிலக்கு வழங்கப்பட்டு வருகிறது.

1. பெண் தொழிலாளர்களிடமிருந்து இரவு 7.00 மணிக்கு மேல் பணிபுரிய சம்மதக் கடிதம் பெறப்படவேண்டும்.

2. பெண் தொழிலாளர்களை இரவு 7.00 மணிக்கு மேல் பணியில் ஈடுபடுத்துவதான நிமித்தம் தினம் ஒன்றுக்கு 9.00 மணி நேர வேலைக்குமிகாமலும், வாரம் ஒன்றுக்கு 48 மணி நேரத்திற்கு மிகாமலும் இருக்க வேண்டும்.

3. நிர்வாகத்தினர் அவர்களுடைய சொந்த செலவில் பெண் தொழிலாளர்கள் பணி புரிந்து வீடு திரும்ப வாகன வசதி செய்து தர வேண்டும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

4. பெண் தொழிலாளர்களின் பாதுகாப்புக்கு நிர்வாகம் பொறுப்பு ஏற்க வேண்டும்.

5. மேற்கண்ட நிபந்தனைகளில் ஏதேனும் ஒன்று கடைபிடிக்கப்படாவிட்டாலும் விதிவிலக்கு ஆணை ரத்தானதாக கருதப்படும்.

சிறுதொழில் நிறுவனங்களுக்கான குழு:

19. சிறுதொழில் நிறுவனங்களின் தொழிலாளர்கள் சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதை குறித்து, இந்த அரசு மாநில அளவில் ஒரு குழு அமைந்துள்ளது. இக்குழு தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை செயலாளரின் தலைமையில் தொழிற்சாலைகள் தலைமை ஆய்வர் அவர்கள் உறுப்பினர் செயலாளராகக் கொண்டு இயங்குகிறது. இந்த குழுவின் கூட்டம் 18-11-1994 அன்று நடைபெற்றது. இக்குழுவின் உறுப்பினர், தொழிற்சாலை ஆய்வுத்துறையில் பொறுப்பேற்கும் தன்மையை குறித்து தங்களது திருப்தியினை வெளியிட்டனர்.

தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்கள் நிரந்தரப்படுத்துதல்) சட்டம் 1981.

20. இச்சட்டம் தொழிலாளர்கள் 24 மாதங்களில் தொடர்ச்சியாக 480 நாட்கள் தொழிற்சாலையில் பணிபுரிந்திருப்பின் அவர்கள் நிரந்தரம் செய்யக் கோரும் தகுதியை அளிக்கிறது.

இந்த சட்டத்தின் கீழ் ஆய்வு செய்யப்பட்டு, நிரந்தரம் செய்யப்பட்ட தொழிலாளர்கள் விவரம் கீழே தரப்பட்டுள்ளது.

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

| தொழிற்சாலைகள் | | நிரந்தரம் செய்யப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை | |
|---|---|---|---|
| 1993 | 1994 | 1993 | 1994 |
| 2577 | 1752 | 26021 | 18262 |

## பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் பயிற்சி அளித்தல் :-

21. தொழிலாளர் உடல் நலனை பாதுகாக்கவும், அபாயகரமான விளைவுகளினால் உடல் நலம் பாதிக்கப்படும் நிலைமை இருப்பின், அதனின்று பாதுகாத்துக் கொள்ளவும் உரிய பாதுகாப்பு நடைமுறைகளை சேர்த்தும் தொழிற்சாலைகள் சட்டத்திற்கு 1987-ம் ஆண்டு இந்திய அரசு ஒரு திருத்தச் சட்டம் கொண்டு வந்தது. தொழில் பாதுகாப்பு என்ற குறிக்கோளை விரிவுப்படுத்தி தொழிற்சாலைக்குள் பணிபுரியும் தொழிலாளர்களின் பாதுகாப்பினை மட்டும் அல்லாமல் இத் தொழிற்சாலைகளின் சுற்றுப்புறத்தில் குடியிருக்கும் பொது மக்களின் நலனையும் பாதுகாப்பையும் கருத்தில் கொள்ளவேண்டும் என்பதையும் தகுந்த சட்டத்தில் இடம் பெற்றுள்ளது.

பாதுகாப்பு மற்றும் சுகாதாரமான பணிச் சூழ்நிலையை உறுதி செய்யும் பொருட்டு தொழிற்சாலையின் வரைபடங்கள், கட்டிட ஸ்திரத்தன்மை காற்றோட்டம், வெளிச்சம் தட்ப வெப்பம் பணிச் சூழ்நிலை குறிப்பாக செயல்முறைகள் அபாயப்பணி இயந்திரங்கள் நிறுவுதல் மற்றும் பொருட்களை கையாளுதல் ஆகிய கோணங்களில் தொழிற்சாலை ஆய்வகத்தால் ஏற்பளிக்கப்படவேண்டும்.

22. தமிழகத்தில் அபாயகரமான தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிற்சாலைகள் இயங்கும் மணலி, நெய்வேலி, கடலூர், ராணிப்பேட்டை, மேட்டூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய பகுதிகளை அடையாளம் கண்டுள்ளோம். இந்த இடங்களைப் பொறுத்தவரை அபாயகரமான உற்பத்தி முறை கையாளும் தொழிற்சாலைக்கு தொழிற்சாலைகளுக்குள் விபத்து ஏற்படாமல் தடுக்கும் முறைகளும், அவ்வாறு விபத்து ஏற்பட்டால் அதனை சமாளித்துக் கட்டுப்படுத்தும் திட்டங்களும் (Major disaster Control measure) தொழிற்சாலையை சுற்றியுள்ள பகுதியில் எந்தவிதமான பாதிப்பு ஏற்படும்பொழுது மக்களை பாதிப்புக்கு உள்ளாக்கல் பாதுகாப்புக்கான வெளியேற்ற திட்டம், பாதுகாப்பு (Safety measure) நடைமுறைகள் ஆகியவற்றை ஒட்டப்பட வேண்டும்.

23. சோதனை மற்றும் பாதுகாப்பு கோட்டம் மற்றும் பெரும் விபத்து தடுப்பு பிரிவும் (Testing and Safety Division and major Accident Hazard Control cell) இணைந்து இத்திட்டங்களை தயாரிக்க நடவடிக்கை எடுத்து வருகின்றன. அபாயகரமான இரசாயனப் பொருட்களை மூலப் பொருளாகக் கொண்டு செயல்படும் தொழிற்சாலைகளாக 64 தொழிற்சாலைகள் அறிவிக்கப்பட்டுள்ளன. அவற்றில் 40 தொழிற்சாலைகளுக்கு on-site emergy plan இவ்வலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. (Recorded) ஏனையவை பரிசீலனை செய்யப்பட்டு முடிவுறும் நிலையில் உள்ளது.

24. ஒவ்வொரு மாவட்ட ஆட்சியாளர் தலைமையில் அபாயகரமான உற்பத்தி முறைகளைக் கையாளும் தொழிற்சாலைகள் (Highly Hazardous Industries) பொருத்தவரை மாவட்ட அளவில் அவசர கால நிலைமையை சமாளிக்க ஒருங்கிணைந்த திட்டம் தயாரிக்கவும், சோதனை மற்றும் பாதுகாப்பு கோட்ட ஆய்வாளர் இணைந்து செயல்படுகின்றனர்.

மனை மதிப்பீட்டுக்குழு :

25. 1948-ம் ஆண்டு தொழிற்சாலை சட்டம் பிரிவு 41-ஏ-ன் படி ஒரு மனை மதிப்பீட்டுக் குழு 11-7-1994 நாளிட்ட அரசாணை எண். 134, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை மூலமாக அமைக்கப்பட்டுள்ளது. கேடு விளைவிக்க கூடிய உற்பத்தித் துறையில் ஈடுபட்டுள்ள தொழிற்சாலைக்கு ஆரம்ப உரிமம் வழங்குதல் மற்றும் அத்தகைய தொழிற்சாலைக்கு விரிவாக்கம் சம்பந்தமாக உரிமம் வழங்குதல் ஆலோசனைகள் வழங்க இம்மனை மதிப்பீட்டுக் குழு அமைக்கப்பட்டுள்ளது. தொழிற்சாலை தலைமை ஆய்வர் இக்குழுவின் தலைவர் ஆவார். கேடு விளைவிக்கக்கூடிய உற்பத்தி முறையில் ஈடுபட்டுள்ள மற்றும் இத்தகைய தொழிற்சாலைகள் விரிவு படுத்த அரசின் ஒப்புதல் பெற வேண்டும். இக்குழு தொழிற்சாலைகளின் வரைபடங்களை ஆராய்ந்த தொழிற்சாலையின் மனை பொருத்தம், சுற்றுப்புற சூழ்நிலை ஆகியவைகள் குறித்து ஒப்புதல் வழங்க அரசுக்கு ஆலோசனை வழங்கும். இதுவரை இக்குழு 27 வரைபடங்களை பரிசீலனை செய்து அரசுக்கு அனுப்பியுள்ளது.

சோதனை மற்றும் பாதுகாப்புப் பிரிவு

26. அபாயகரமான இரசாயனம் பொருட்களை மூலப் பொருளாகக் கொண்டு செயல்படும் தொழிற்சாலைகளாக 64 தொழிற்சாலைகள் அறிவிக்கப்பட்டுள்ளன. சோதனை மற்றும் பாதுகாப்புப் பிரிவினைச்

சார்ந்த அலுவலர்கள் இத்தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்கள் மேற்பார்வை பணியாளர்கள் மற்றும் நிர்வாக பணியாளர்களுக்கும் வெவ்வேறு பாதுகாப்பு முறைகள் கையாளுவது பற்றிய பயிற்சி வகுப்புகள் நடத்தி வருகிறார்கள். 1994-ம் ஆண்டு பாதுகாப்புச் சம்பந்தப்பட்ட வகுப்புகள் மற்றும் பயன் அடைந்தவர் பற்றியும், மற்றும் ஆய்வுகள் நடத்தப்பட்டது பற்றியும் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| 1994-ம் ஆண்டில் நடத்தப்பட்ட பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள் | பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்ட தொழிற்சாலை களின் எண்ணிக்கை | பாதுகாப்பு பயிற்சி வகுப்புகளின் மூலமாக பயனடைந்த தொழிலாளர் களின் எண்ணிக்கை | அதிக விபத்துக்கள் அறிவித்த தொழிற் சாலைகளில் நடத்தப்பட்ட பாதுகாப்பு பயிற்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 230 | 213 | 6294 | 28 |

27. தொழிற்சாலைகளில் நடத்தப்பெற்று, அதன் முடிவுகள் சம்பந்தப்பட்ட தொழிற்சாலை நிர்வாகத்தினருக்கு தக்க பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுப்பப்பட்டுள்ளன. 40 தொழிற் சார்ந்த சுகாதார அளவீடு (occupational Health Surveys) 1994-ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளன.

28. தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழிற்சாலைகளின் தொழிலாளர்களுக்கு கையாளுதல், செயல்படுத்துதல், ஏற்றுச் செல்லுதல், சேமித்து வைத்தல் போன்ற பணிகளின் பாதுகாப்பு முறைகளைப் பற்றி பயிற்சி அளிப்பதற்கான தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளர் தகுதியில் ஒரு அலுவலரைக் கொண்டு பயிற்சி நிலையம் ஒன்று சிவகாசியில் நிறுவப்பட்டுள்ளது.

29. தொழிலாளர்களுக்கு மருத்துவப் பரிசோதனை, சுகாதார அளவீடு நடத்துதல் மற்றும் சான்று வழங்குதல் குறித்த பணிகள் சோதனை மற்றும் பாதுகாப்பு கோட்டத்துடன் இணைந்த உதவி மருத்துவ அலுவலர் மேற்கொள்கிறார்.

### விபத்துகள்:

30. விபத்துக்கள் பற்றிய கடந்த ஆண்டிற்கான எண்ணிக்கைகள் இந்த ஆண்டுடன் ஒப்பிட்டு, பிற்சேர்க்கை 26-ல் கொடுக்கப்பட்டுள்ளன. இத்துறையின் முயற்சியின் காரணமாக இம்மாநிலத்தில் மரணவிபத்து மற்றும் மரணமில்லா விபத்து எண்ணிக்கைகளில் கணிசமாக குறைவு ஏற்பட்டுள்ளது.

### மாநில பாதுகாப்பு பரிசுகள் மற்றும் சிரம்வீர் பரிசுகள் :

31. தொழிற்சாலையில் சிறந்த பாதுகாப்பு செயல்களை தெரிந்து கொள்ளவும், தொழில் பாதுகாப்பில் ஆழ்ந்த பற்று கொண்டு இயங்கச் செய்யவும், நிர்வாகத்தினருக்கு தமிழக அரசு மாநில பாதுகாப்பு பரிசுகள் வழங்குகிறது. இந்த பரிசு வழங்கும் நோக்கத்திற்காக தொழில் நிறுவனங்கள் கீழ்க்கண்ட மூன்று வகையாக பிரிக்கப்பட்டுள்ளது.

தொகுதி அ :- 10 இலட்சம் மனித நேரத்திற்கு குறைவில்லாமல் வேலை செய்த தொழிற்சாலைகள் :

தொகுதி ஆ :- 5 முதல் 10 இலட்சம் மனித நேரங்களுக்கு இடையில் வேலை செய்த தொழிற்சாலைகள்.

தொகுதி- இ :- 2 முதல் 5 இலட்சம் மனித நேரங்களுக்கு இடையில் வேலை செய்த தொழிற்சாலைகள்.

### கீழ்க்கண்ட மூன்று திட்டங்கள் செயலில் உள்ளன.

திட்டம் 1 :- முந்தைய ஆண்டை ஒப்பு நோக்குகையில் விபத்து விகிதத்தை மிக அதிகமாகக் குறைத்து காண்பிக்கும் தொழிற்சாலைக்கு இந்த பரிசினை வழங்குதல்.

திட்டம் 2 :- இதே வகைப்பட்ட மற்ற தொழிற்சாலைகளுடன் ஒப்பிடும்போது நிறையிட்ட அதிர்வு எண் விகிதத்தை (Largest Frequency) அந்த ஆண்டின் மிகக் குறைந்து காண்பிக்கும் தொழிற்சாலைக்கு இந்த பரிசினை வழங்குதல்.

திட்டம் 3 :- பரிசுக்குரிய ஆண்டில் விபத்தின்றி அதிக மணி நேரம் செயல்புரிந்த தொழிற்சாலைக்கு வழங்குதல்.

இந்த பரிசுத் திட்டத்தில், ரூ. 2500/- மதிப்பில் 90 முதல்பரிசு கேடயங்களும், ரூ. 1500/- மதிப்பில் 90 இரண்டாம் பரிசு கேடயங்களும் உள்ளன. மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களால்

1991-ம் ஆண்டிற்கான விருதுகள், 24-8-1994-ம் தேதி நாள் கோயம்புத்தூரில் நடைபெற்ற மாநில பாதுகாப்பு பரிசளிப்பு விழாவில் வழங்கப்பட்டது.

## *மாநில சிரம்வீர் விருதுகள்:*

32. தொழில் வளர்ச்சியின் பாதுகாப்புத்தரம், தூய்மையான சுற்றுப்புறச் சூழ்நிலை, உற்பத்தி அதிகரிப்பு குறித்து உபயோகமான ஆலோசனைகள் வழங்கும் தொழிலாளர்களுக்கு சிரம்வீர் விருது வழங்கப்படுகிறது. இத்திட்டம் தொழிற்சாலை சட்டத்தின்கீழ் இயங்கும் தொழிற்சாலை தொழிலாளர்களுக்கு பொருந்தும். இத்திட்டம் மாநில அளவிலான திறனை அங்கீகரிக்கவும், மேலும் அவர்களின் இத்திறனை மேம்படுத்தவும் உதவுகிறது.

1. பாதுகாப்பு தரத்தின் முன்னேற்றம் பணிச்சூழ்நிலையில் சுற்றுப்புறத் தூய்மை காரணமாக ஏற்படும் பாதுகாப்பு குறைகள் உடல்நலம் மற்றும் தொழில் முறை நோய்களில் இருந்து பாதுகாப்பளித்தல்.
2. தொடர்ந்து கடினமான வேலை செய்பவரின் உடல் உழைப்பினை எளிதாக்குதல் குறித்த புதிய கண்டுபிடிப்புகள்.
3. தொழிற்சாலைகளில் தளவாட பொருட்கள் கையாளுதல் மற்றும் அவற்றினை முறைப்படி சிப்பம் கட்டுவதில் முன்னேற்றம்.
4. இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் உள்ள இடத்தில் உள்ள நாட்டு பொருட்களை உபயோகிப்பதில் முன்னேற்றம்.
5. கண்டுபிடிப்பு மற்றும் முன்னேற்றத்தின் மூலமாக எரிபொருள், மின்சாரம் ஆகியவற்றுடன் பொருள்களையும் சேமிப்பதில் முன்னேற்றம் மற்றும் இயந்திரங்கள், திட்டங்களை செயல்படுத்துவதில் முன்னேற்றம்.
6. கழிவு அல்லது உலோக முறிவுகளை குறைத்தலின் முன்னேற்றம்.
7. பொருளின் தரத்தையும், வடிவமைப்பினையும் முன்னேற்றம் செய்தல்
8. இதர வழிகளின் மூலமாக உற்பத்தித்திறனை அதிகப்படுத்துவதில் முன்னேற்றம்.
9. நிறுவனம் மற்றும் நிர்வாகத்தின் திறமையினை உயர்த்துவதில் முன்னேற்றம்.

33. இதில் 3 வகையான பரிசுகள் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| வகையினம் 'அ' | .. | ரூ. 5000/- வீதம் மூன்று ரொக்கப் பரிசுகள் (தற்பொழுது ரூ. 1000/- வீதம் கொடுக்கப்படுகிறது.) |
| வகையினம் 'ஆ' | .. | ரூ. 3000/- வீதம் ஆறு ரொக்கப் பரிசுகள் (தற்பொழுது ரூ. 500/- வீதம் கொடுக்கப்படுகிறது.) |
| வகையினம் 'இ' | .. | ரூ. 1000/- வீதம் 15 ரொக்கப் பரிசுகள் (தற்பொழுது ரூ. 250/- வீதம் கொடுக்கப்படுகிறது.) |

*அழுத்த இயந்திரங்கள் சோதனை :*

34. தமிழ்நாட்டில் 19386 அழுத்த இயந்திரங்கள் உள்ளன. தொழிற்சாலைகளில் அமைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு அழுத்த இயந்திரத்தையும் தகுதியுள்ள நபர்களால் காலமுறை முழுமையாக ஆராய்ந்து அதன் பாதுகாப்பான வேலைத்தன்மைக்கு தகுதிச் சான்று வழங்க வேண்டும் என் 1948-ம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம் மற்றும் 1950-ம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்சாலை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு தொழிற்சாலை ஆய்வகத்துறையே இப்பணியினை செய்து வருகின்றனர். அழுத்த இயந்திரங்களை சோதனை செய்யும் பணி, சோதனை மற்றும் பாதுகாப்புக் கோட்டங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

1994-ம் ஆண்டு சோதனை செய்யப்பட்ட கலன்களின் விவரம் கீழே வருமாறு:-

| | | |
|---|---|---|
| வெளிப்புறம் | .. | 36625 |
| உட்புறம் | .. | 326 |
| நீர்மநிலையில் | .. | 4816 |
| கதழ் அதிர்வாய்வு | .. | 1595 |

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இந்த நோக்கத்திற்காக வசூலிக்கப்பட்ட கட்டணத்தொகை ரூ. 83,33,110/- ஆகும்.

## தொழிலாளர் உடல் நலம் பேணுதல் :

35. கடும் விபத்து தடுப்புப் பிரிவுடன் இணைந்துள்ள தொழிற்சாலை துப்புறவு சோதனை கூடத்திற்கு அறுவை சிகிச்சை மருத்துவர் ஒருவர் பொறுப்பிலுள்ளார். இவ்வாய்வகத் துறையில், சென்னை, கோவை, வேலூர், சேலம், திருச்சி, சிவகாசி, திருநெல்வேலி மற்றும் மதுரை ஆகிய 8 இடங்களில் உதவி அறுவை சிகிச்சை மருத்துவர்கள் பணியாற்றுகின்றனர்.

36. தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் அலுவலகத்தில் உள்ள சிவில் சர்ஜன், 1994-ம் ஆண்டு 28 தொழிற்சாலைகளில் மருத்துவ ஆய்வுகள் மேற்கொண்டார்.

இந்த 28 தொழிற்சாலைகளும் கீழ்க்கண்ட 13 வகை தொழிற்சாலைகளில் அடங்கும்.

1. உலோகத் தொழில்
2. சர்க்கரைத் தொழிற்சாலை
3. உரத் தொழிற்சாலை
4. கனரக இன்ஜினியரிங்
5. மதுபான தொழிற்சாலை
6. ஆட்டோமொபைல்
7. அல்ட்ராமரைன் புளூ
8. பிளாஸ்டிக்ஸ்
9. வார்ப்பு இரும்பு தொழிற்சாலைகள்
10. கிரானைட்ஸ்
11. இரசாயன தொழிற்சாலைகள்
12. மருந்து தயாரிப்பு (Pharmaceuticals)
13. உணவுப் பொருட்கள் (Food Industries)

37. மேற்கண்ட தொழிற்சாலைகளில் மருத்துவ ஆய்வு மேற்கொண்டபோது, தொழிலாளர்கள் ஏதேனும் தொழில்வழி

நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனரா எனவும் அதற்கான அறிகுறிகள் தென்படுகின்றனவா எனவும் சிறப்பு பரிசோதனைகள் செய்யப்பட்டன. தொழிலாளர்களுக்கு அவர்களின் உடல் நலம், சுகாதார முக்கியத்துவம் குறித்து விளக்கப்பட்டது. பணி செய்யும் போது சுய தற்காப்பு கருவிகளை பயன்படுத்துவதன் அவசியம் குறித்து தெரிவிக்கப்பட்டது. சிகரெட் புகைத்தல், பான்மசாலா போடுதல், மதுபானம் குடித்தல் ஆகியவற்றால் ஏற்படும் கெடுதல்கள் குறித்து தொழிலாளர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டன. மருத்துவ ஆலோசனை தேவைப்பட்ட தொழிலாளர்களுக்கு சிறப்பான ஆலோசனைகள் வழங்கப்பட்டன. பல தரப்பட்ட தொழிற்சாலைகளில் வெவ்வேறு பிரிவுகளில் பணிபுரிந்து வரும் 312 தொழிலாளர்களுக்கு மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டது. 300 ரத்த மாதிரிகளும், 40 சிறுநீர் மாதிரிகளும் சேகரிக்கப்பட்டன.

38. இந்த ரத்தம், சிறுநீர் பரிசோதனை செய்யப்பட்டு அவற்றில் நோய்க்கான அபரிமிதமான அறிகுறிகள் தென்படுகின்றனவா என ஆராயப்பட்டு பரிசோதனை முடிவுகள் தொழிற்சாலை நிர்வாகத்திற்கு அனுப்பப்பட்டு தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டது.

39. கடந்த 1994-ம் ஆண்டில் 9 தொழிலியல் உடல் நல மற்றும் சுகாதார அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த ஆய்வின்போது காற்றில் பரவக்கூடிய விஷத்தன்மை வாய்ந்த ரசாயனங்கள் குறித்து பரிசோதனை செய்யப்பட்டன. அவற்றினால் சுற்றுச்சூழல் பாதிப்பு குறித்து மதிப்பிடப்பட்டது. தூய்மைக்கேடு உண்டாக்கும் காரணங்கள் வருமாறு :

அ) சப்தம் (Noise)

ஆ) கந்தக-டை-ஆக்ஸைடு

இ) அம்மோனியா

ஈ) தூசி. துகள்

உ) கந்தக அமிலம்

ஊ) டிரை குளோரோ எத்திலின்.

40. இந்த ஆய்வின் போது மேற்கண்ட இரசாயனங்களால் ஏற்படக்கூடிய கடுமையான நோய் விளைவுகள் குறித்து பல்வேறு விதமான பகுப்பாய்வுகள் செய்யப்பட்டு முடிவுகள் தொகுக்கப்பட்டன. ஒரு குறிப்பிட்ட அனுமதிக்கப்பட்ட அளவிற்கு மேல் இந்த இரசாயனங்கள் காற்றின் மூலம் வெளியேறி பரவலாம் என்ற நிலை

ஏற்பட்டால் அதனை தடுக்கும் முறைகள் குறித்து நிர்வாகத்துக்கு பரிந்துரை செய்யப்படுகிறது. தொழிலாளர்களின் உடல்நலம் குறித்து இந்த ஆய்வகத் துறை தகுந்த நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.

41. அறுவை சிகிச்சை மருத்துவர் மற்றும் உதவி சிகிச்சை மருத்துவர்களின் பணிகள் :-

1. 1994-ம் ஆண்டில் பார்வையிட்ட தொழிற்சாலைகள் 1215

2. அபாயத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் பரிசோதிக்கப்பட்ட எண்ணிக்கை -15046

3. நடப்பு ஆண்டில் சான்றளிக்கப்பட்டவை 1994:-

அ. அபாயத் தொழில் -14462

ஆ. இளம் வயதினர் -9871

இ. சிற்றுண்டி விடுதி -2687

ஈ. வசூலிக்கப்பட்ட பரிசோதனை கட்டணம் ரூ. 10,36,550/-

## உற்பத்தி திறன் குழு :

42. ஆலோசனை நல்கும் அமைப்பான உற்பத்தி திறன் குழு உற்பத்தி திறனை மேம்படுத்துதல், அதிக அதிகாரங்களை பயன்படுத்துதல், வீணாவதை நீக்குதல், கால ஆய்வு/ இயக்க ஆய்வு நடத்துவதன் மூலம் பணிக் கோட்பாடுகளை வரையறுத்தல், வேலை பகுப்பாய்வு, வேலை பாதுகாப்பு, பகுப்பாய்வு நடத்துதல், பரிசு வழங்கும் திட்டத்தைக் கொண்டு வருதல், தொழிலாளர்களுக்கும் மேற்பார்வையாளர்களுக்கும் முறையாக பயிற்சி அளித்தல் போன்ற பணிகளையும் புரியும் இணைத் தலைமை தொழிற்சாலைகள் ஆய்வர் பதவியில் ஒரு அலுவலர் இந்த உற்பத்தித் திறன் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டு அவர் மாநில அளவிலான தலைமை அதிகாரியாக செயல்படுகிறார்.

43. இந்த உற்பத்தித் திறன்பிரிவு 1-1-1994 முதல் 31-12-1994 வரையிலான காலத்தில் 72 பயிற்சி வகுப்புகள் நடத்தி 1741 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளார்கள்.

## தொழிலாளர் நலன் பேணுதல் :

44. தமிழ்நாட்டில் உள்ள தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்கள் தொகுதி நபர்

விபத்து ஆயுள் ஈட்டுறுதி திட்டம் : 1986-ம் ஆண்டு சூலைத் திங்கள் முதல் நாளிலிருந்து பட்டாசு மற்றும் தீப்பெட்டி தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களுக்கு என தொகுதி தனி நபர் விபத்து ஈட்டுறுதி திட்டத்தினை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. பின்னர் இத்திட்டம் தமிழ்நாடு முழுவதும் விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது. இத்திட்டம் ஈட்டுறுதி செய்யப்பட்டவர்களுக்கும் பார்வை அல்லது கை, கால்கள் இழப்பு அல்லது இறப்பு ஏற்பட்டால் நிவாரணம் அளிக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளன. ஈட்டுறுதி பயன் தொழிலாளர்கள் பணியில் ஈடுபட்டிருக்கும் போது ஏற்படும் விபத்துகளுக்கு மட்டும் கொடுக்கப்படும். இத்திட்டத்தினால் 10 வயதுமுதல் 65 வயது வரையிலான தீப்பெட்டி பட்டாசு தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் பயனடைவர்.

45. 1-7-1994 முதல் 30-6-1995 முடிய உள்ள நடப்பு காலத்திற்கு பட்டாசு தொழிலாளர்களுக்கு நியூ இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி ரூ. 50.000/- காப்பு நிதிக்கான ஒரு தொழிலாளிக்கு சந்தாத் தொகையாக (Premium) ரூ. 27+5% வரியாக பெற காப்பீட்டு வழங்கியுள்ளது. இதைப் போலவே தீப்பெட்டி தொழிற்சாலைகளுக்கும் தீப்பெட்டி தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு காப்பீட்டு நிதி ரூ.50,000/- க்கு ஒரு தொழிலாளிக்கு வருடத்திற்கு சந்தா தொகையாக ரூ. 5+5% வரியும் வசூலிப்பதற்கான காப்பீடு திட்டமும் வழங்கியுள்ளது. மேற்படி திட்டங்களின்படி 60,252 தொழிலாளர்கள் தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழிற்சாலைகளில் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டு, சந்தா தொகையாக ரூ. 8,32,933/- வசூலிக்கப்பட்டுள்ளது. 1994-ம் ஆண்டில் 12 உரிமை கோரிக்கைகள் தீர்க்கப்பட்டு ரூ. 6,00.000/- வழங்கப்பட்டுள்ளது.

தேசிய குழந்தை தொழிலாளர் வேலைத் திட்டம்:-

46. இந்த திட்டம் 1986 ஏப்ரல் திங்களில் மைய அரசினால் சிவகாசில் ஆரம்பிக்கப்பட்டது. 14 வயதுக்கு கீழ்ப்பட்ட சிறுவர்களை தீப்பெட்டி தொழிற்சாலைகளில் பணிபுரிவதைத் தடுத்து நீக்குதலும், அவர்களது குடும்ப வருமானத்தைப் பெருக்குதலும், கல்வி மற்றும் சுகாதார அடிப்படை வசதிகளை அளிப்பதும் இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும். 1975-ம் ஆண்டு சங்கங்களின் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட தேசிய குழந்தைகள் வேலைத் திட்டச் சங்கத்தினால் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. காமராசர் மாவட்டத்தில் ஆட்சித் தலைவர் இந்த சங்கத்தின் தலைவர். மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் ஒரு திட்ட அலுவலர் இச் சங்கத்தின்

உறுப்பினர்-செயலராகப் பணியாற்றுகின்றார். இத்திட்டத்தின் கீழ், அனைத்துப் பணிகளையும் ஒருங்கிணைத்து செயல்படுத்துவதற்கு ஒரு ஒழுங்கு முறைக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளது.

## குழந்தைத் தொழிலாளர்களை நீக்குதல்:

47. இம்மாநிலத்தில் தற்போது குழந்தை தொழிலாளர்களை நீக்குவதற்கு அரசு முன்னுரிமை வழங்குகிறது. மாண்புமிகு முதல் அமைச்சரின் 15 அம்ச குழந்தைகள் நலத் திட்டத்தில் குழந்தை தொழிலாளர்கள் நீங்குவதற்கான திட்டம் சேர்க்கப்பட்டு, முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரை தலைவராக கொண்டு, மாநில ஆலோசனை வழங்கு வாரியம் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாரியம் சென்ற ஆண்டு 7-12-1994 மற்றும் இவ்வாண்டு 17-3-1995 ஆகிய தேதிகளில் கூடியது. மேலும், அரசு தலைமை செயலாளரை தலைவவாக கொண்டு ஒரு மாநில குழந்தை தொழிலாளர் ஆணைக்குழு அமைக்கப்பட்டுள்ளது. அடுத்து 5 ஆண்டுகளுக்குள், படிப்படியாக, மாவட்ட அளவிலான குழந்தை தொழிலாளர்கள் நீக்குவதற்கான செயல்திட்டம் வகுக்கப்பட்டுள்ளன. ரூ. 249.19 கோடி செலவில், குழந்தை தொழிலாளர்களை நீக்குவதற்கான ஒருங்கிணைந்த மாநில திட்டம் தயாரிக்கப்பட்டு, மத்திய அரசின் நிதி உதவி கோரி அனுப்பப்பட்டுள்ளது. சிவகாசி மற்றும் கோவில்பட்டியில் உள்ள தொழிற்சாலைகள் ஆய்வகத்துறையின் செயலாக்குப்பிரிவினை வலுப்படுத்த இரண்டு தொழிற்சாலைகள் உதவி ஆய்வர் பதவிகள் வேறு இடத்திலிருந்து மாற்றம் செய்து, சிவகாசியிலும், கோவில்பட்டி யிலும் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

48. சிவகாசி மற்றும் கோவில்பட்டியில் உள்ள இத்திட்ட செயலாக்க பரிவினை வலுப்படுத்த இரண்டு தொழிற்சாலைகள் உதவி ஆய்வாளர் பதவிகள் சிவகாசிக்கும் மற்றும் இரண்டு தொழிற்சாலைகள் உதவி ஆய்வாளர் பதவிகள் கோவில்பட்டிக்கும் வேறு இடத்திலிருந்து அமர்த்தப்பட்டுள்ளது.

49. 1-1-1991 முதல் தீப்பெட்டி தொழிற்சாலைகளின் குழந்தைத் தொழிலாளர்களுக்கென, மருத்துவ வசதிகள் மற்றும் கல்வி வசதிகள் குறித்த நலத் திட்டங்களுக்காக 'தமிழ்நாட்டில் தீப்பெட்டி தொழிற் சாலைகளில் தீப்பெட்டி தொழிலாளர்கள் நல நிதி' என்ற பெயரில் ஒரு நலநிதி அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 1-4-1992 முதல் பட்டாசு தொழிற்சாலைகளிலும் விரிவுப்படுத்தப்பட்டுள்ளது. 1-4-1992 முதல்

இத்திட்டத்திற்கான தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழிலாளர்களுக்கு தொழிற்சாலை நிர்வாகம் ஒரு தொழிலாளிக்கு ரூ. 10/- வீதம் வழங்கப்பட்டு, இதற்கு இணையாக அரசும் வழங்கி நிதியினை நிர்வகித்து வருகிறது. மாவட்ட ஆட்சியாளர்கள் தலைவாரகக் கொண்டு, அரசு நலநிதி குழுக்கள் அமைத்துள்ளது. இக்குழுக்களில் அரசு மற்றும் அரசு சார்பற்ற அலுவலர்கள் உறுப்பினர்களாக உள்ளனர்.

50. உச்ச நீதிமன்றம் உரிமை மனு 465/86-ல் தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்காக உத்தரவுகள் பிறப்பித்துள்ளது. இந்த உத்தரவுகள் அமல்படுத்தப் பட்டுள்ளன. இந்த உத்தரவினை அமல்படுத்துவதை கண்காணிக்க மாவட்டங்களில் மாவட்டகுழு ஒரு மாவட்ட நீதிபதியுடன் இயங்கிவருகிறது.

51. தொழிற்சாலை ஆயவகத் துறை குழந்தை தொழிலாளர் பணி புரிவதை தடுப்பதற்கு தொழிற்சாலை சட்ட விதிமுறைகளின் கீழ் வகுக்கப்பட்ட வழிமுறைகள் செவ்வனே செயல்பட நடவடிக்கை எடுத்து வருகிறது. 14 வயதுக்கு கீழ் குழந்தைகள் வேலைக்கு அமர்த்துவதை கண்டிப்பதை தவிர குழந்தை தொழிலாளர்களின் சுகாதாரம் பாதுகாப்பு நலத் திட்டங்களில் சட்டம் மீதும் செயல்கள் ஏற்பட்டால் அதன் மீது கடுமையான நடவடிக்கையை இவ்வரசு மேற்கொள்கிறது. அத்தகைய செயல்களுக்கு அபராதமும் விதிக்கப்படுகிறது.

52. உச்ச நீதிமன்ற உத்திரவுகளின் பேரில் 1950-ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகள் மாற்றியமைக்கப்பட்டது. அதன்படி குழந்தைகள் பிறந்த தேதியினை தினக்கூலி வருகைப்பதிவேட்டில் குறிப்பிட வேண்டும். தீப்பெட்டிகளின் தீக்குச்சிகளை அடைக்கும் பணியை தனியாக வேறு ஒரு இடத்தில் தொழிற்சாலை ஆய்வாளரது விருப்பத்திற்கு ஏற்றவாறு அமைக்க வேண்டும் என்ற நிபந்தனையும் சேர்க்கப்பட்டுள்ளது.

53. 10 தொழிலாளர்களுக்கும் குறைவாக பணிபுரியும் தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழிற்சாலைகளிலும் பிரிவு 85 (1)-ன் கீழ் தொழிற்சாலை சட்டம் 1948-க்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

## மாநில அளவிளான உயர்மட்ட முத்தரப்பு பாதுகாப்பு குழு.

54. பம்பாயில் உள்ள தொழிற்சாலைகள் சட்ட ஆலோசனை இயக்ககம் மற்றும் தொழிலாளர் நிலையம் (DGFASTLI) போல் இம்

மாநிலத்திலும் மாநில அளவிலான உயர்மட்ட முத்தரப்பு பாதுகாப்புக் குழு மற்றும் மாநில அளவிலான வல்லுநர் குழு தொழிற்சாலை ஆய்வகத்திற்கும், அரசுக்குமாக இயங்கி வருகிறது. இந்த மாநிலத்தில் இவ்விரு குழுக்களும், அரசால் குறிப்பிடப்பட்ட அபாயகரமான தொழிற்சாலைகளை பொறுத்தவரை பாதுகாப்பு குறித்த நிலைகள் குறித்து துரிதமான ஆய்வு செய்து, பாதுகாப்பு குறித்து தணிக்கை குறைகளை நிர்ணயிக்கிறது. 1994-ம் ஆண்டில் இக்குழுக்களின் நடவடிக்கை விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

1. தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் தலைமையில் நிறுவப்பட்டு, 18 நிபுணர்கள் கொண்ட மூன்று குழுக்கள் இம்மாநிலத்தில் துரித ஆய்வு மேற்கொண்டது. இம்மாநிலத்தில் 59 மிக அபாயகரமான தொழிற்சாலைகள் இயங்குவதாக அறிக்கையினை கொடுத்துள்ளது. இந்த அறிக்கையை அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

2. ஒரு பாதுகாப்பு தணிக்கை குழு விரைவில் அமைக்கப்பட உள்ளது. இக்குழுக்கள் தோல் பதனிடும், சிமெண்ட் மற்றும் காகித தொழிற்சாலைகளில் உள்ள பாதுகாப்பு உடல் நலம் மற்றும் சுற்றுப்புற சூழநிலைகள் குறித்த தற்போதுள்ள நிலை குறித்து ஆராய்ந்து அரசுக்கு அறிக்கை சமர்ப்பிக்க அமைக்கப்பட்டது. தோல் பதினிடும் மற்றும் காகித தொழிற்சாலைகள் தொடர்பான அறிக்கைகள் இக்குழுவினால் இறுதியாக்கப்பட்டது.

3. இக்குழுவின் நடைமுறைப்படுத்திவரும் திட்டங்களில் மீதமுள்ள ஆஸ்பெஸ்டாஸ் தொழிற்சாலைகள் போன்ற தொழிற்சாலைகளை ஆராய்வதும் மற்றும் பாதுகாப்பு தணிக்கைகத்துறையில் ஓர் பாதுகாப்பு தணிக்கை குழு நிறுவுவதும் ஆகும்.

# அத்தியாயம் 7

## மாநில தொழிலாளர் நலன் காப்புறுதித் திட்டம்

இம்மாநிலத்தில் இத்திட்டம் 1955 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் மத்திய அரசு தொழிலாளர் நலத்துறையின் கீழ் சமூகப் பாதுகாப்பு பிரிவு கட்டுப்பாட்டிற்கு கீழ் இயங்கும். தொழிலாளர் நலக் காப்புறுதி கழகம் மூலம் நிர்வகிக்கப்படுகின்றது. இத்திட்டத்திற்கு இக்கழகத்தினால் நிர்ணயிக்கப்பட்ட தொழிலாளர்கள் மற்றும் முதலாளிகளிடமிருந்து வரப்பட்ட பங்கு தொகைகள் மூலம் வருவாய் கிடைக்கப்படுவதாகும்.

2. இத்திட்டம் மின் சக்தியைப் பயன்படுத்தி 10-க்கு மேற்பட்ட பணியாளர்களைக் கொண்ட தொழிற்சாலைகள் மற்றும் மின்சக்தியைப் பயன்படுத்தாமல் 20-ம் அதற்கு மேற்பட்ட பணியாளர்களைக் கொண்ட தொழிற்சாலைகளுக்குப் பொருந்தும். மாத வருமானம் ரூ. 3,000/- க்கு குறைவாக பெறும் ஊழியர்கள் இத்திட்டத்தின் கீழ் பயன் பெறுவார்கள். இத்திட்டம் தமிழ்நாட்டில் உள்ள எல்லா மாவட்டங்களிலும் விரிவாக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் பின்வரும் உதவிகளை தொழிலாளர்களுக்கும் அவர்களது குடும்பத்தார்களுக்கும் பெறுவதற்கான வகை செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 1. மருத்துவ உதவி | மருத்துவப் பொருட்களும் மற்றும் சிக்கசையுமாக அளித்தல். |
| 2. உடல் நலமின்மைக்கான உதவி<br>3. நீடித்த உடல் நலமின்மைக்கான உதவி<br>4. பேறுகால உதவி<br>5. தற்காலிகமாக இய்லாமையுற்றோருக்கு உதவி<br>6. நிரந்தரமாக இயலாமையுற்றோருக்கு உதவி<br>7. சார்ந்துள்ளோர்கள் நல உதவி<br>8. இறுதிச் சடங்குக்குரிய செலவுத் தொகை<br>9. உடல் நலமின்மைக்கான கூடுதல் உதவி | பணமாக அளித்தல். |

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

*1995 ஏப்ரல் 27*]

3. இத்திட்டத்தின் கீழ் மருத்துவ வசதி அளிக்கும் பொறுப்பு தமிழ்நாடு அரசின் கடமையாகும்.

4. இம்மாநிலத்தில் உள்ள 7 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளும், அந்த மருத்துவ மனைகளில் உள்ள படுக்கைகளின் எண்ணிக்கைகளும் பின்வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| (1) | தொ.அ.ஈ. மருத்துவமனை, அயன்புரம், சென்னை-23 | .. | 616 |
| (2) | தொ.அ.ஈ. மருத்துவமனை, கோயம்புத்தூர் | .. | 540 |
| (3) | தொ.அ.ஈ. மருத்துவமனை, மதுரை | .. | 209 |
| (4) | தொ.அ.ஈ. மருத்துவமனை, வேலூர், வடஆற்காடு அம்பேத்கார் | .. | 50 |
| (5) | தொ.அ.ஈ. மருத்துவமனை, சிவகாசி, காமராசர் மாவட்டம் | .. | 50 |
| (6) | தொ.அ.ஈ. மருத்துவமனை, சேலம் | .. | 50 |
| (7) | தொ.அ.ஈ. மருத்துவமனை, ஓசூர், தர்மபுரி மாவட்டம் | .. | 50 |
| (8) | தொ.அ.ஈ. மருத்துவமனை, இணைப்புகள் | .. | 136 |
| **(10) | படுக்கைகள் அரசு மருத்துவமனையில் ஒதுக்கீடு செய்யப்பட்டது | .. | 266 |
| (11) | படுக்கைகள் தனியார் மருத்துவமனையில் ஒதுக்கீடு செய்யப்பட்டது | .. | 87 |

** இது தவிர, 146 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி நிலையான மருத்துமனை, 6 நடமாடும் மருத்துமனைகள் மற்றும் இரண்டு பயன் படுத்திக்கொள்ளும் மருத்துமனைகள் இம்மாநிலத்தில் இயங்கி வருகின்றன. இவைகள் அந்தந்த மண்டல நிர்வாக மருத்துவ அலுவலர்களின் நிர்வாக கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

5. 154 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி நிலையான மற்றும் நடமாடும் மருந்தகங்களில் 52 மருந்தகங்கள் காப்புறுதிக் கழகத்தினால் கட்டப்பட்ட கட்டிடங்களில் இயங்குகின்றன.

2 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள், தொழிலாளர் அரசு ஈட்டுறுதி கழகத்திற்கு சொந்தமான நிலத்தில் மாநில அரசால் கட்டப்பட்ட கட்டிடங்களிலும் மற்றும் 2 மருந்தகங்கள் மாநிலத்திற்குச் சொந்தமான கட்டிடங்களிலும் இயங்குகின்றன.

6. தனியார் வாடகை கட்டிடங்களில் இயங்கும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் சொந்த கட்டிடங்களில் இயங்குவதற்காக, கட்டிடங்கள் கட்டித்தர 1-4-1990 முதல் 7:1 என்ற விகிதத்தில் மொத்த செலவினை பகிர்ந்துகொள்ள, காப்புறுதிக் கழகமும், தமிழக அரசும் ஒப்புக்கொண்டுள்ளது.

7. 31-12-1994 முடிய இத்திட்டத்தின் மூலம் காப்புறுதி செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை தொடர்பான விவரங்களை கீழ்க்கண்டுள்ளவாறு காணலாம்.

| | | |
|---|---|---|
| (1) இதில் அடங்கிய குடும்பங்களின் (காப்புறுதி செய்து கொண்ட தொழிலாளர்கள்) எண்ணிக்கை | .. | 9,06,761 |
| (2) பயன் அடைவோரின் மொத்த எண்ணிக்கை | ..- | 35,18,233 |

இம்மாநிலத்தில் உள்ள, ஈட்டுறுதி செய்யப்பட்ட தொழிலாளர்களின் உறுப்பினர்களும் இதில் முழு மருத்துவ சிகிச்சை பெற தகுதி உடையவர்கள்.

8. தற்போது உயர்த்தப்பட்டுள்ள உச்ச வரம்பின் மொத்தம் கீழ்க்கண்ட விகிதங்களில் 1-4-1991 முதல் அமைந்துள்ளது. முழுமையான மருத்துவ வசதி ரூ. 245/- ஒவ்வொறு காப்புறுதி நபருக்கு/1 ஆண்டுக்கு இதைத் தவிர இத்திட்டத்திற்கு கீழ் மருந்துகளுக்காக ஒவ்வொரு ஆண்டிற்கும் ஒரு காப்புறுதி நபருக்கு ரூ. 40/- க்கு மேலும் ஆனால் ரூ. 100/- க்குள் ஆகும் செலவானது மேற்படி உச்ச வரம்புத் தொகைக்கு மேல் பகிர்ந்து கொள்வதாகும். மேலும் 1-4-1994 முதல் முழுமையான மருத்துவ வசதிக்காக ஒவ்வொரு தொழிலாளிக்கும் அளிக்கப்பட்ட முழுமையான மருத்துவ வசதிக்கான தொகையை ரூ. 345/-ல் இருந்து ரூ. 410 ஆக புதுதில்லிகாப்புறுதிக் கழகம் உயர்த்தி உத்தரவிட்டுள்ளது. இதில் ரூ. 130/- மருந்துக்கான செலவு மீதி ரூ. 280/- நிர்வாக செலவுக்காக அளிக்கப்பட்டுள்ளது. இத்துடன் இத்தகைய உயர்வினைப் பெற வேண்டுமாயின், மாநில அரசு சொந்த பதிவேடு கணக்கு

(Personal Ledger Accounts) துவக்க வேண்டும் என்று தொழிலாளர் காப்புறுதிக் கழகம் புதுதில்லியிலிருந்து பெறப்பட்ட கடிதம் மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், 1-4-1990 முதல் புதிதாக துவக்கப்படும், மருந்தகங்களுக்கான முழுச் செலவினத்தையும் முதல் மூன்றாண்டுகளுக்கு மட்டும் முழுமையாக ஈட்டுறிக் கழகம் ஏற்றுக் கொள்ள இசைவு தந்துள்ளது. மற்றும் 1-4-1980 முதல் காப்புறுதிக் கழகத்தினால் கட்டப்பட்டு, அதில் குடியிருக்கும் அரசு அலுவலர்கள் இருக்கும் குடியிருப்புகள் மூலம் கிடைக்கக்கூடிய வாடகைத் தொகைகளும் ஒப்புக் கொள்ளப்பட்ட விகிதத்தின் மேற்பட்ட உச்ச வரம்பிற்கு வெளியே பகிர்ந்து கொள்வதாகும்.

**9. 1994-95-ம் ஆண்டில் சாதனைகள்:**

1. கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள ஆரல்வாய்மொழி எனும் தொ.அ.ஈ. மருந்தகத்துடன் 800 தொழிலாளர்கள் இணைக்கப்பட்டுள்ளதன் மூலம், அம்மாவட்டத்தில் உள்ள செண்பகராமபுதூர் பகுதி இத்திட்டத்தில் விரிவாக்கம் செய்யப் பெற்று பயன் பெற்றுள்ளது.
2. சேலம் மாவட்டம், அம்மாபேட்டை என்ற இடத்தில் உள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகத்துடன் 160 காப்புறுதித் தொழிலாளர்கள் இணைக்கப்பட்டதன் மூலம் அம்மாவட்டத்தில் உள்ள எருமாபாளையம் பகுதி விரிவாக்கம் பெற்று பயனடைந்துள்ளது.
3. 300 காப்புறுதிக் தொழிலாளர்களை தொழிலாளர் அரசு ஈட்டுறதி மருந்தகம், அம்பாசமுத்திரத்துடன் இணைக்கப்பட்டுள்ளதன் மூலம் அப்பகுதி பயன் பெற்றுள்ளது.
4. அரசு ஆணை எண். 208, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள். 19-10-1994-ன் மூலம் ஒரு மருத்துவர் வகை, நிலையான தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.
5. அரசு ஆணை எண். 206, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை நாள், 19-10-1994-ன் மூலம் ஒரு மருத்துவர் வகை நிலையான தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், ஆண்டிபட்டி, மதுரை மாவட்டத்தில் தொடங்கிட ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.
6. அரசு ஆணை எண். 207, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை நாள், 19-10-194-ன் மூலம் இரண்டு

மருத்துவர்கள் வகை நிலையான தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம் இளம் பிள்ளை சேலம் மாவட்டத்தில் தொடங்கிட ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

7. இரண்டு மருத்துவர்கள் வகை ஒரு நிலையான தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம் கும்மிடிப்பூண்டி, சென்னையில், தொடங்கிட அரசு ஆணை எண். 135, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை நாள். 12-7-1994-ன் மூலம் ஒப்பளிப்பு செய்யப்பட்டு, 1-6-1994-ஆம் தேதி முதல் இயங்கி வருகின்றன.

8. ஒரு மருத்துவர் வகை நிலையான தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், குளத்தூர், மதுரை மண்டலத்தில் தொடங்கிட அரசு ஆணை எண்.20, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை, நாள் 10-2-1993-ன் மூலம் ஒப்பளிப்பு செய்யப்பட்டு, கடந்த 10-6-1994-ன் முதல் இயங்கி வருகின்றன.

9. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை, ஒசூர், தர்மபுரி மாவட்டத்தில் ஒரு 50 படுக்கைகள் வசதி கொண்ட தொழிலாளர் அரசு ஈட்டறுதி மருத்துவமனை தொடங்கிட அரசு ஆணை எண். 218, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை நாள், 1-11-1994-ன் மூலம் ஒப்பளிப்பு செய்யப்பட்டு மார்ச், 1995 முதல் செயல்பட்டு வருகிறது.

10. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டத்தின் வளர்ச்சித் திட்டங்கள்:

1. அரசு ஆணை எண். 174, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை நாள். 29-8-1994-ன் மூலம், மாநிலத்தில் சிறந்த முறையில் பராமரிக்கப்படும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை மற்றும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகத்திற்கு வெகுமதி வழங்கும் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

இதனால், அவ்விடங்களில், பணியாற்றும் பணியாளர்கள் அவர்தம் மருத்துவமனை (அ) மருந்தகங்களை மாநில மற்றும் தேசீய அளவில் சிறந்த ஒன்றாக கொண்டு வந்திட இயலும்.

2. அரசு மருத்தவமனைக்களுக்கு தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டப் பயன் பெறுவோர் பரிந்துரைக்கப்படும் பொழுது அரசிதழ் பதிவு பெறாத அலுவலர்களுக்கு இணையாக நடத்திட தொழிலாளர் அரசு ஈட்டுறுதி கழகத்தின் ஒப்புதலைப்

பெறுவதற்கான செயற்குறிப்பின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

3. தீச் சிகிச்சை வார்டு, தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை, சிவகாசி

சிவகாசி தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையில் 5 வார்டுகள் தீயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளித்திடும் பொருட்டு ஒதுக்கிடக் கோரி உரிய கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

4. இரத்த வங்கி தொடங்கிடல், சிவகாசி தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையில் சிவகாசி தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையில் இரத்த வங்கி ஒன்று தொடங்கிடவும் ஒரு கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

5. தொழிலாளர்களுக்காக ஈட்டுறுதி மருந்தகங்களில் பணியாற்றும் மருத்துவ அலுவலர்களுக்குப் பயிற்சித் திட்டம்.

தொழிலாளர் அரசு ஈட்டுறுதி கழகம், பெங்களூரின் துணை மருத்துவ ஆணையாளர் அவர்கள் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களில் பணியாற்றும் மருத்துவ அலுவலர்களுக்கும் பயிற்சித் திட்டத்தின் மூலம் பயிற்சி அளித்திட முன் வந்துள்ளார்.

முதல் பயிற்சி முகாம் சென்னையில் பிப்ரவரி 95 மாதத்தின் முதல் வாரத்தில் நடத்தப்பட்டுள்ளது

TRUTH ALONE TRIUMPHS

# அத்தியாயம் 8

## தமிழ்நாடு வட்டாரத்தில், 1952-ம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி, பல்வகை விதித்துறைகள் சட்டத்தின் சிறப்புக்கூறுகள், செயல்முறை குறித்த சுருக்கக்குறிப்பு

1. 1952-ம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி பல்வகை விதித்துறைகள் சட்டத்தின் விதித்துறைகளின் கீழ் வகுக்கப்பட்ட 3 திட்டங்களில், 1952-ம் ஆண்டுத் தொழிலாளர் வைப்பு நிதித் திட்டமும் ஒன்று. இது 1-11-1952-ம் நாளிலிருந்து செயலுக்கு வந்தது. இச்சட்டம் ஜம்முகாஷ்மீர் மாநிலம், அசாம் மாநிலத்தில் தேயிலைத் தோட்டங்கள் நீங்கலாக இந்தியா முழுமைக்கும் விரிவுப்படுத்தப்பட்டுள்ளது. தொழிலாளர்களுக்கு கட்டாய பங்குத் தொகை, வருங்கால வைப்பு நிதியினை ஏற்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இதில் தொழிலாளரும், தொழிலதிபரும் பங்குத் தொகை செலுத்த வேண்டும். தொடக்கத்தில், இச்சட்டம், ஆறு பெருந்தொழில்கள் சம்பந்தப்பட்ட தொழிலாளர்களுக்கு மட்டுமே செயல்படுத்தப்பட்டது. படிப்படியாக, இது மேலும் பல தொழில்களுக்கு ஏனைய நிறுவனங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இன்று, இத்திட்டம், 177 தொழில்களில் ஈடுபடுத்தப்பட்டுள்ள தொழிலாளர்களுக்கும் பல்வகையான நிறுவனங்களும் பொருந்துமாறு செய்யப்பட்டுள்ளது.

*நிதியினை நிருவகித்தல்:*

2. தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித்திட்டம், குடும்ப ஓய்வூதியத் திட்டம், ஈ.டி.எல்.ஐ. திட்டம் ஆகிய இம்மூன்று திட்டங்களை மத்திய பொறுப்பாட்சியால் நிர்வகிக்கப்படுகிறது. இது மத்திய அரசினால் நியமிக்கப்பட்ட தலைவர், துணைத் தலைவர், மத்திய வருங்கால வைப்பு நிதி ஆணையர் (பதவி நிலையால்) மத்திய அரசின் 5 பிரதிநிதிகள், மாநில அரசுகளின் 15 பிரதிநிதிகள், தொழிலாளர் அமைப்புகளின் 10 பிரதிநிதிகள், தொழிலதிபர் அமைப்புகளின் 10 பிரதிநிதிகள் ஆகியோரைக் கொண்ட முத்தரப்புக் குழுவாகும். தற்போதுள்ள மத்திய பொறுப்பாட்சியர் குழு 28-6-1990-ம் ஆண்டு மத்திய அரசால், மீண்டும் மாற்றியமைக்கப்பட்டது.

*1995 ஏப்ரல் 27]*

*பொருந்தும் தன்மை:*

3. இச்சட்டம், இத்திட்டங்களின் விதித்துறைகள் 20 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பணிக்கமர்த்தப்பட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிற்சாலைகள்/நிறுவனங்களுக்கு அல்லது மத்திய அரசு குறிப்பிட்டுள்ள பல்வகை நிறுவனங்களுக்குப் பொருந்தும். 20 தொழிலாளர்களைப் பணியமர்த்தியுள்ள புதிய தொழில் நிறுவனங்களைப் பொறுத்தமட்டில், மூன்று ஆண்டுகளுக்கு இச்சட்டம் பொருந்தாது. 50 தொழிலாளர்களுக்கு குறைவாகப் பணியமர்த்தியுள்ள கூட்டுறவு சங்கங்களின் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள கூட்டறவு சங்கங்களுக்கும், மின்சக்தி உதவியின்றிச் செயல்படுபவையும் கட்டுப்பாட்டிலுள்ள அல்லது அதற்குச் சொந்தமான அல்லது மத்திய/ மாநில அரசின் சட்டத்தால் நிறுவப்பட்ட நிறுவனங்களுக்கும் (ஆனால் இந்த நிறுவனங்களின் பணியாளர்கள் இத்தகைய பயன்களைப் பெற்று, அனுபவித்து வர வேண்டும்) இச்சட்டம் பொருந்தாது. இச்சட்டத்தின் விதித்துறைகள் கீழ் வராத தொழிற்சாலைகள்/நிறுவனங்கள், அவற்றின் பெரும்பான்மை தொழிலாளர்களின் ஒப்புதலுடன் தானாக முன்வந்து இச்சட்டத்தின் கீழ் கொண்டுவருமாறு கோரலாம்.

*பங்குத்தொகை வீதம்:*

4. இத்திட்டத்தின் கீழ், ஒவ்வொரு தொழிலாளிக்கும் தொழிலதிபர் வழங்கும் பங்குத் தொகை தொழிலதிபரின் பங்குத்தொகை ஆகிய இரண்டும் சேர்ந்து, அடிப்படைக் கூலியில் 81/3% அகவிலைப்படி (உணவுச் சலுகைக்கான ரொக்க மதிப்பு உட்பட) தொடர்படி எவையேனும் வழங்கப்படின், அதனையும் சேர்த்து பங்குத்தொகையாக வழங்க வேண்டும். 50 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களைப் பணியமர்த்திய, குறிப்பிடப்பட்டுள்ள 99 தொழில்/தொழில்வகையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள்/தொழிற்சாலைகளைப் பொறுத்த மட்டில் 1-6-1989-ம் நாளிலிருந்து அதிகரிக்கப்பட்ட பங்குத் தொகை 10% ஆகும்.

*நிர்வாகக் கட்டணங்கள்:*

5. இத்திட்டத்தின்கீழ் வருகின்ற நிறுவனங்களின் தொழிலதிபர்களிடமிருந்து, உறுப்பினர்களின் மொத்த சம்பளத்தில் (இதன் அடிப்படையில் வருங்கால வைப்புநிதி வசூலிக்கப்படுகிறது) 0.65 சதவீதம் என்ற வீதத்தில் நிருவாகக் கட்டணம் வசூலிப்பதன்மூலம்,

இந்நிதியை நிருவகிப்பதற்கான செலவு செய்யப்படுகிறது. விலக்களிக்கப்பட்ட நிறுவனங்கள் எந்த மொத்த கூலியில் வருங்கால வைப்புநிதி வசூலிக்கப்படுகின்றதோ அந்த மொத்த கூலித் தொகையில் 0.09% என்ற வீதத்தில் ஆய்வுக்கட்டணம் செலுத்த வேண்டும்.

**1952-ம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்புநிதித் திட்டம் உறுப்பினராதல்:**

6. மாதச் சம்பளம் 5,000 ரூபாய்க்கு மிகைப்படாத தொழிலாளர்கள் அனைவரும் 1-10-1994-ம் நாளிலிருந்து தொழிற்சாலை/ நிறுவனத்தில் பணியில் சேர்ந்த நாளிலிருந்து வருங்கால வைப்பு நிதிதிட்டத்தில் உறுப்பினராக வேண்டும். முன்னர் குறிப்பிடப்பட்ட குறைந்த பணிக்கால அளவிற்கு உட்பட்டு அனைத்து தொழிலாளர்களிடமிருந்தும் வருங்கால வைப்புநிதி பிடிக்கப்பட வேண்டும்.

இத்திட்டத்தின் கீழ் வரும் நிறுவனங்கள்

சந்தாதாரர்கள் (1952-ம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி திட்டம்):

7. இவ்வட்டாரத்தில் 31-12-1994 நாள் வரை இச்சட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ள நிறுவனங்கள், சந்தாதாரர்களின் விவரம் வருமாறு:-

| | விலக்களிக்கப் பட்டவை | விலக்களிக்கப் படாதவை | மொத்தம் |
|---|---|---|---|
| நிறுவனங்கள் எண்ணிக்கை | 534 | 28,985 | 29,519 |
| சந்தாதாரர்களின் எண்ணிக்கை (ரூபாய் இலட்சத்தில்) | 4.76 | 22.65 | 27.41 |

1-1-1994 முதல் 31-121-1994-ஆம் நாள் வரையிலான கால அளவில் 2,238 நிறுவனங்கள் இச்சட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

*வட்டாரக்குழு:*

8. 1952-ம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிச்சட்டம் ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு வட்டாரக் குழுவை அமைக்க வகை

செய்கின்றது. இதில், தமிழ்நாடு அரசின் தொழிலாளர் நலத்துறை செயலாளர் தலைவராவார். இதில் தொழிலாளர் நல ஆணையரும், நிதித்துறை துணைச் செயலாளரும் மாநில அரசின் பிரதிநிதிகளாக உறுப்பினர்களாக இருப்பர். இக்குழுக்கள் மத்திய பொறுப்பாட்சியர் குழுவின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்படுகின்றன.

9. வட்டாரக்குழு மத்திய குழுமத்திற்குப் பின்வரும் பிரச்சினைகளில் அறிவுரை வழங்குகின்றது.

1. மத்திய குழு அவ்வப்போது வட்டாரக் குழுவிற்கு அனுப்புகின்ற விஷயங்கள் குறித்து.
2. பொதுவாக மாநிலத்தில் இத்திட்டத்தின் நிருவாகம் தொடர்பான அனைத்து விஷயங்கள் அதிலும் குறிப்பாக

(அ) வருங்கால வைப்பு நிதி பங்குத் தொகைகள், ஏனைய கட்டணங்களின் வசூல் முன்னேற்றம்.

(ஆ) வழக்குகளுக்கு விரைந்து தீர்வு காணல்.

(இ) உரிமைக் கோரிக்கைகளை விரைந்து தீர்த்துவைத்தல்

(ஈ) இந்நிதி உறுப்பினர்களுக்கு ஆண்டு கணக்குகளை ஒப்படைத்தல்

(உ) திரும்பப் பெறக்கோரும் தொகைகளுக்கு விரைந்து அனுமதி வழங்குதல்.

## துணை வட்டார அலுவலகங்கள்:

10. சென்னையில் உள்ள வட்டார அலுவலகத்துடன், கூடுதலாக சென்னை, செங்கை-அண்ணா, வடஆற்காடு-அம்பேத்கார், திருவண்ணாமலை-சம்புவராயர் மத்திய அரசின் நேரடி ஆட்சிக்கு உட்பட்டு பாண்டிச்சேரி மாநிலம் ஆகியவற்றிலுள்ள சந்தாதாரர்களின் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு தமிழ்நாடு வட்டாரத்தில் கோவை, மதுரை, திருச்சி, திருநெல்வேலி, சேலம் ஆகிய இடங்களில் 5 துணை வட்டார அலுவலகங்கள் அருகிலுள்ள சந்தா தாரர்களின் தேவைகளை நிறைவு செய்வதற்காகச் செயல்பட்டு வருகின்றன.

## துணைவட்டார அலுவலகங்கள் வருமாறு:

| | | |
|---|---|---|
| கோயம்புத்தூர் | - | கோயம்புத்தூர் நீலகிரி பெரியார் மாவட்டங்கள். |

| | | |
|---|---|---|
| மதுரை | - | மதுரை, திண்டுக்கல் காயிதே மில்லத், இராமநாதபுரம், பசும்பொன்தேவர் திருமகன், காமராசர், வ.உ.சி. சிதம்பரனார், கன்னியாகுமரி மாவட்டங்கள் |
| திருச்சி | .. | திருச்சி, புதுக்கோட்டை, தஞ்சாவூர், இராமசாமி படையாச்சி விழுப்புரம், வள்ளலார், கடலூர் மாவட்டங்கள். |
| திருநெல்வேலி | .. | நெல்லை கட்டபொம்மன் மாவட்டம் |
| சேலம் | .. | சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி |

**1952-ம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் திட்டத்தின் பலன்கள்:**

இந்நிதியில், உறுப்பினராக உள்ள ஒருவர், அவருடைய பங்குத்தொகையையும், தொழிலதிபரின் பங்குத் தொகையையும் வட்டியுடன் முழுவதுமாக, பின்வரும் நேர்வுகளில், உடனடியாகத் திரும்பப் பெற உரிமையுடையவராவார்.

1. 55 வயதான பின்னர் பணியிலிருந்து ஓய்வு பெறும்போது
2. நிரந்தரமாக, முழு தகுதியின்மை காரணமாக பிணியிலிருந்து ஓய்வு பெறும்போது.
3. வெளிநாட்டில், நிரந்தரமாக குடியேற அல்லது வேலை வாய்ப்பு தேடி இந்தியாவிலிருந்து குடிபெயரும்போது.
4. ஆட்குறைப்பு காரணமாகப் பணியிலிருந்து, பணியிறவு செய்யப்படும்போது.
5. தனாக முன்வந்து பணி ஓய்வு பெறும் திட்டத்தின்கீழ் பணியிறவு செய்யப்படும்போது.

இதுதவிர, ஒரு உறுப்பினர் பணத்தைப் பெற விண்ணப்பித்த நாளுக்கு அடுத்து முன்னர் குறைந்தது 2 மாதங்கள் தொடர்ந்து பணியாற்றி முடித்ததன் பேரில், இருதரப்பு பங்குத்தொகையையும் வட்டியுடன் சேர்த்து, முழுமையாகப் பெற தகுதி உடையவராவார்.

12. ஒரு உறுப்பினர் இறந்து விட்டால், அவர் நியமித்து ஒருவர் அல்லது சட்டப்படிக்கான அவருடைய வாரிசுதாரர் இருபங்குத்

தொகைகளையும் வட்டியுடன் சேர்த்துப் பெறத்தகுதியுடையவர் ஆவர். திருமணம் காரணமாக பெண் உறுப்பினர்கள் பணியிலிருந்து ராஜினாமா செய்தால், இரண்டுமாதம் காத்திருக்க வேண்டும் என்ற அவசியம் அந்நேர்வில் பொருந்தாது.

## சிறப்பு சேமநிதி:

13. வெளியேறும் உறுப்பினர்களுக்கு அவர்களது கூலியில் பிடித்தம் செய்யப்பட்டு கணக்குகளைத் தீர்க்கும்போது தொழிலதிபரால், இந்நிதியில் தொகை செலுத்தப்படாத, அவர்களுடைய பங்குத் தொகையை மட்டும் கொடுப்பதற்காக சிறப்புசேமநிதி ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. எனினும், சிறப்பு சேமநிதியிலுள்ள இத்தொகை தொழிலதிபர் பங்குத் தொகை செலுத்தாதற்காக, தொகை வழங்கப் பயன்படுத்தப்படக் கூடாது.

## தொகை திரும்பப் பெறுதல்:

14. உறுப்பினர்கள், அவர்கள் உறுப்பினர்களாக பின் வரும்காரணங்களுக்காக இருக்கும் காலத்தில் தொகைகளை திரும்பப்பெற/முன்பணமாக பெற அனுமதிக்கப்படுவர்.

(அ) உறுப்பினர் எடுக்கும் ஆயுள்காப்பீட்டுப் பத்திரத்திற்காக

(ஆ) குடியிருக்கும் வீடு/அடுக்குவீடு அல்லது வீட்டுமனை வாங்க, குடியிருக்கும் வீடு கட்ட

(இ) குறிப்பிட்ட முகவர்களிடமிருந்து பெற்ற வீட்டுக்கடன்களைத் திரும்பச் செலுத்த;

(ஈ) தொழிற்சாலை/நிறுவனம் கதவடைப்பு அல்லது மூடப்பட்டால் அல்லது வேலை நிறுத்தம் நீங்கலாக ஏனைய காரணத்தால் உறுப்பினர் இரண்டுமாதம் தொடர்ந்து கூலி பெறவில்லை எனில்;

(உ) உறுப்பினர் அல்லது அவருடைய சகோதரர் அல்லது சகோதரி திருமணம் அல்லது குழந்தையின் படிப்பிற்காக;

(ஊ) உறுப்பினர் அல்லது அவருடைய குடும்பத்தினர் உடல் நலமின்மைச் செலவிற்காக;

(எ) வெள்ளம், பூகம்பம் அல்லது கலவரம் போன்ற காரணங்களினால் சொத்துகளுக்குச் சேதம் ஏற்படுவதால் ஏற்படும் எதிர்பாராச் செலவு;

(ஏ) உறுப்பினர் பணியாற்றும் தொழிற்சாலை அல்லது நிறுவனத்தில் மின்வெட்டு காரணமாக அவருக்கு ஏற்படும் ஊதிய இழப்பைச் சரிகட்ட; மற்றும்

(ஐ) உடல் ஊனமுற்ற உறுப்பினர் அவருக்குத் தேவையான சாதனங்களை வாங்குவதற்காகும் செலவிற்காக.

15. 1-1-94 முதல் 31-12-94 வரையில் அனுமதிக்கப்பட்ட வரையிலான கால அளவில் திரும்ப பெற்ற/முன்பணம் உறுப்பினர்களுக்கு வழங்கியது பற்றிய விவரம் பிற்சேர்க்கை-27ல் கொடுக்கப்பட்டுள்ளது.

## ஆண்டுக்கணக்கு விவர அறிக்கை வழங்குதல்:

16. இந்நிலையில் உறுப்பினர் கணக்கில் இருந்த தொடக்க இருப்பு, அவ்வாண்டு பெறப்பட்ட பங்குத் தொகை, வரவு வைக்கப்பட்ட மொத்த வட்டித் தொகை, தொகை பெறப்பட்டிருந்தால், அது குறித்த விவரங்கள், ஆண்டு இறுதியில் உள்ளஇறுதி இருப்பு ஆகியவிவரங்களைக் காட்டுகிற கணக்கு குறித்த விவர அறிக்கை, தொழிலாளர் எந்த தொழிற்சாலையில்/நிறுவனத்தில் இறுதியாகப் பணிபுரிந்தாரோ அந்த தொழிற்சாலையின்/நிறுவனத்தில் தொழிலதிபர் மூலமாக, ஒவ்வோர் உறுப்பினர்களுக்கும் வழங்கப்படுகிறது.

1-1-94 ம் நாளிலிருந்து 31-12-94 ம் நாள் வரையிலான கால அளவில், 21.12 இலட்சம் ஆண்டுக்கணக்கு விவர அறிக்கைக் குறிப்புகள் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டன. 31-12-94 ம் நாள்நிலவரப்படி, இன்னும் 25.34 லட்சம் கணக்கு விவர குறிப்புகள் வழங்க வேண்டியுள்ளது.

## தொழிலாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டம், 1971

17. 1971 ம் ஆண்டுத் தொழிலாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டம் குறித்த விவரம் வருமாறு :-

1. தொழிலாளர் வருங்கால வைப்புநிதி உறுப்பினர்கள், பணியிலிருந்து ஓய்வு பெறுவதற்கு முன்னரே இறக்க நேரிட்டின்,

அவர்களுடைய குடும்பங்களுக்கு நீண்ட கால நிதியுதவி வழங்கும் நோக்கத்துடன், 1952 ம் ஆண்டுத் தொழிலாளர் வருங்கால வைப்புநிதி-பல்வகை நிதித்துறைகள் சட்டத்தின்கீழ் வரும் தொழிலாளர்களுக்கு, 1971-ம் ஆண்டுக் குடும்ப ஓய்வூதியத் திட்டத்தை அரசு கொண்டுவந்துள்ளது.

## 2. பொருந்தும் நன்மை:

1952 ம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்புநிதி-பல்வகை விதித்துறைகள் சட்டம் பொருந்தும் அனைத்துத் தொழிற்சாலைகளிலும்/ நிறுவனங்களிலும், 1971 ம் ஆண்டு தொழிலாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டம் 1-3-1971 ம் நாளிலிருந்து செயலுக்கு வந்தது.

## 3. உறுப்பினராவதற்கான தகுதி:

1971 ம் ஆண்டு மார்ச் திங்கள்முதல் நாளன்று அல்லது அதற்குப் பின்னர், வருங்கால வைப்புநிதி உறுப்பினர்களாக ஆகியுள்ள அனைத்துத் தொழிலாளர்களும் இதில் உறுப்பினர்களாக வேண்டியது கட்டாயமாகும். மேலே குறிப்பிட்ட நாளுக்கு முன்னர், வருங்கால வைப்புநிதி உறுப்பினர்களாக இருக்கும் தொழிலாளர்கள் குடும்ப ஓய்வூதியத் திட்டத்தில் உறுப்பினராவது அத்தொழிலாளர்களின் விருப்புரிமைக்கு விடப்பட்டது. முன்னர், தங்கள் விருப்புரிமையைத் தெரிவிக்காத தொழிலாளர்கள், 1971 ஆம் ஆண்டு குடும்ப ஓய்வூதியத் திட்டத்தில் உறுப்பினராவதற்கு 1971 மார்ச்சுத் திங்களிலிருந்து அவர் விருப்பம் தெரிவிக்கும் நாள் வரை பங்குத் தொகை வட்டியுடன் செலுத்தி, எந்தவொரு நேரத்திலும், தங்கள் விருப்புரிமையைத் தெரிவிக்கலாம்.

## 4. பங்குத்தொகை:

குடும்ப ஓய்வூதியநிதிக்குத் தொழிலாளர்களும், தொழிலதிபரும் தனியே பங்குத் தொகை எதுவும் செலுத்த வேண்டியதில்லை. வருங்கால வைப்புநிதி பங்குத் தொகைக்கு தொழிலாளர்களின் பங்காக, அவர்களுடைய சம்பளத்தில் 11/6 சதவீதத்திற்குச் சமமான ஒரு தொகையும், தொழிலதிபர்களின் பங்காக வருங்கால வைப்புநிதியில் தொழிலதிபரின் பங்குத் தொகையாக 11/6 சதவீதத்திற்குச் சமமானதொகையும் தனியே ஒதுக்கி வைக்கப்படுகிறது. மத்திய அரசும், தொழிலதிபர்கள் செலுத்தத்தக்கபங்குத் தொகைக்குச் சமமான ஒரு தொகையைத் தனது பங்காகக் குடும்ப ஓய்வூதியத் திட்டத்திற்கு அளிக்கிறது.

*5.* நிருவாகச் செலவு:

இத்திட்டத்தை நிறுவகிப்பதற்காகும் செலவு முழுவதையும் மத்திய அரசு ஏற்கிறது.

*6.* **இத்திட்டத்தின் நோக்கத்திதற்கு குடும்பம் என்பது:**

(அ) நேர்விற்கேற்ப மனைவி அல்லது கணவர்
(ஆ) உரிய வயதடையாத மகன்கள்
(இ) மணமாகாத மகள்கள்.

*7.* **இத்திட்டத்தின் கீழ் கிடைக்கும் பயன்கள்:**

இத்திட்டத்தின் கீழ் நால்வகைப் பயன்களுக்கு வகை செய்யப்படுகிறது. அவையவன:

(அ) மாதாந்திரக் குடும்ப ஓய்வூதியம்
(ஆ) ஆயுள் ஈட்டுறுதிப் பயன்கள்
(இ) ஓய்வுக்கால-தொகை திரும்பப்பெறும் பயன்
(ஈ) செலுத்தப்பட்டத் தொகையில் உறுப்பினர்களின் பங்குத் தொகையைத் திருப்பிக் கொடுத்தல்.

**8.** **மாதாந்திர குடும்ப ஓய்வூதியம்.**

***(1)* குடும்ப ஓய்வூதியம் பெறுவதற்கான தகுதி:**

(அ) ஓய்வூதியத்திற்குக் கணக்கில் கொள்ளத்தக்க பணிக்காலத்தில் இறப்பு ஏற்பட்டிருக்க வேண்டும்.

(ஆ) இறப்பு நேரும் நாளன்று உறுப்பினர் 60 வயதை அடைத்திருக்கக்கூடாது.

(இ) மூன்று தினங்களுக்கு குறைவாக காலஅளவிற்கு உறுப்பினர், குடும்ப ஓய்வூதிய நிதிக்குப் பங்குத் தொகையைச் செலுத்தியிருக்க வேண்டும். மற்றும்

(ஈ) குடும்ப ஓய்வூதியம் பெறுவதற்கான தகுதியுடைய உறுப்பினர் ஏவராவது ஒருவர் உயிருடன் இருக்க வேண்டும்.

***(2)* குடும்ப ஓய்வூதியத்தின் அளவு:**

உறுப்பினர் இறந்துபடும் நேர்வில், கீழே குறிப்பிட்டுளவாறு, மாதாந்திர குடும்ப ஓய்வூதியம் வழங்கத்தக்கதாகும்.

| திங்களொன்றுக்கு உறுப்பினரின் சம்பளத்தில் குடும்ப ஓய்வூதிய நிதிக்கு 1.4.92 லிருந்து செலுத்த தக்க பங்குத் தொகை | மாதாந்திர குடும்ப ஓய்வூதியம் |
|---|---|
| ரூ. 300/-வரை | ரூ.250/- (நிர்ணயிக்கப்பட்டது) |

*9(1)*சாதாரணமாக வழங்கப்படும் குடும்ப ஓய்வூதியத்தொகை

**அட்டவணை**

| குடும்ப ஓய்வூதியம் நிதிக்கு 1-4-92ம் நாளிலிருந்து பங்குத்தொகை செலுத்தத்தக்க தொழிலாளரின் மாதச்சம்பளம். | மாதாந்திர குடும்ப ஓய்வூதியம் |
|---|---|
| ரூ. 300/- வரை இருந்தால் | ரூ.250/- (வரையறுக்கப்பட்டது) |
| ரூ. 300/-க்கு மேற்பட்டு ஆனால், ரூ.700/-க்கு மேற்படாமல் இருந்தால் | ரூ. 300/- (வரையறுக்கப்பட்டது) |
| ரூ. 700/-க்கு மேற்பட்டு ஆனால், ரூ.1600/-க்கு மேற்படாமல் இருந்தால். | திங்கள் ஒன்றுக்கு குறைந்தளவு ரூ. 300/- உயரளவு ரூ. 600/- என்பதற்குட்பட்டு, சம்பளத்தில் 42.5 சதவீதத் தொகை. |
| ரூ. 1600/- க்கு மேற்பட்டு, ஆனால் ரூ. 2500/- க்கு மேற்படாமல் இருந்தால். | திங்கள் ஒன்றுக்கு குறைந்தளவு ரூ. 600/- உயரளவு ரூ. 850/-என்பதற்குட்பட்டு, சம்பளதில் 35 சதவீதத்தொகை. |
| ரூ.2500/- க்கு மேற்பட்டு இருந்தால். | திங்கள் ஒன்றுக்கு குறைந்தளவு ரூ. 850/- உயரளவு ரூ.1050/- என்பதற்குட்பட்டு சம்பளத்தில் 30 சதவீதத் தொகை. |

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

### *9(2)* உயர்த்தப்பட்ட குடும்ப ஓய்வூதியத்தொகை :

உறுப்பினர் ஒருவர் 7 ஆண்டுகளுக்குக் குறையாத கால அளவிற்கு, தான் இறப்பதற்கு முன்னர் குடும்ப ஓய்வூதிய நிதிக்கு தன்னுடைய பங்குத் தொகையைச் செலுத்தியிருந்தால்,

பயனீட்டாளர் உயர்த்தப்பட்ட வீதத்தில் குடும்ப ஓய்வூதியம் பெறுபவார்.

(அ) காலஞ்சென்ற நாளிலிருந்து 7 ஆண்டுக்கால அளவிற்கு அல்லது

(ஆ) உறுப்பினர் உயிரோடு இருந்திருந்தால், அவர் 60-வது வயதை அடையும் நாள் வரையில், இதில் எது முந்தியதோ, அதுவரையில் உயர்த்தப்பட்ட குடும்ப ஓய்வூதியத் தொகை என்பது, அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள குடும்ப ஓய்வூதியத் தொகையைப்போல், உயரளவு இருமடங்குத்தொகை என்பதற்குட்பட்டு, மேலே குறிப்பிடப்பட்டுள்ள வீதத்துடன், உறுப்பினரின் சம்பளத்தில் 20 சதவீதம் என்ற அளவில் இருக்கும்.

### *10.*ஆயுள் காப்பீட்டுப் பயன்கள்.

### *(அ)*ஆயுள் காப்பீட்டுப் பயன்களைப் பெறுவதற்கான தகுதி:

(1) ஓய்வூதியத்திற்குக் கணக்கில் கொள்ளத்தக்க பணிக்காலத்தில் இறப்பு ஏற்பட்டிருக்க வேண்டும்.

(2) இறப்பு நேரும் நாளன்று 60-வது வயது அடைந்து இருக்க கூடாது.

(3) உறுப்பினர், குடும்ப ஓய்வூதிய நிதிக்கு மூன்று திங்களுக்குக் குறையாத கால அளவிற்கு பங்குத் தொகையைச் செலுத்தியிருக்க வேண்டும்.

### *(ஆ)* வழங்கத்தக்க தொகை

ஒரே நேரத்தில், ஒட்டுமொத்தமாக ரூ. 5000 தொகை வழங்குதல்.

**(இ) யாருக்குத் தொகை வழங்கத்தக்கது என்பது:**

(1) மாத குடும்ப ஓய்வூதிய தொகையை வழங்குவதற்கென குறிப்பிடப்பட்டுள்ள வரிசையில் உள்ள குடும்ப உறுப்பினருக்கு.

(2) வருங்கால வைப்பு நிதிக்குப் பங்குத்தொகை செலுத்தும் உறுப்பினருக்கு, குடும்பம் ஏதுமில்லையென்றால் அந்த உறுப்பினர் இறந்த பின்னர், வருங்கால வைப்பு நிதியில் அவர் கணக்கில் சேர்ந்து வந்துள்ள தொகையைப் பெறுவதற்கு உரிமையுடைய நபருக்கு (நபர்களுக்கு).

***11.* ஓய்வு பெறும் தொகையைத் திரும்பப் பெறும் பயன்கள்:**

***(அ) பயன்களைப் பெறுவதற்கான தகுதி :***

(1) 60 வயதை அடைவதன் பேரில்

அல்லது

(2) இறப்பு அல்லாத ஏனையகாரணங்களுக்காக, 60 வயது அடைவதற்கு முன்னர், குடும்ப ஓய்வூதிய நிதிக்குத் தொகை செலுத்தும் உறுப்பினர் தகுதி அற்றுப் போயிருந்த ஓராண்டுக்கால அளவிற்குக் குறையாமல் குடும்ப ஓய்வூதிய நிதிக்குப் பங்குத் தொகை செலுத்தியிருப்பதன் பேரில்.

***(ஆ) வழங்கத்தக்க தொகை:***

ஓய்வு பெறும் தொகையை திரும்பப்பெறும் பயன்களைக் கணக்கிடுவதற்கென, புதிய விவர அட்டவணை ஒன்று 1-4-92-ம் நாளிலிருந்து கொண்டுவரப்பட்டுள்ளது. இந்த விவர அட்டவணையில், இரு நெடும் பத்திகள் உள்ளன. முதல் நெடும்பத்தி, எத்தனை ஆண்டுகளுக்குப் பங்குத் தொகை செலுத்தப்பட்டிருக்கிறது என்பதையும், இரண்டாம் நெடும்பத்தி உறுப்பினராக இருப்பது அற்றுப்போகும் நேரத்தில், அந்த உறுப்பினர் பெறும் சம்பளம் எந்த எண்ணால் பெருக்கப்படவேண்டும் என்பது தொடர்பான விவரங்களையும் காட்டுகிறது. அவ்வாறு அந்த எண்ணால் பெருக்கி, வந்த சம்பளத்தொகை உறுப்பினருக்கு வழங்க வேண்டிய திரும்பப் பெறத்தக்க பயன் தொகையாகும்.

ஓராண்டு முடிவதற்கு முன்னர், குடும்ப ஓய்வூதிய நிதியிலிருந்து உறுப்பினராக இருப்பது அற்றுப்போகும் நேர்வில், குடும்ப ஓய்வூதிய நிதிக்கு உறுப்பினர் செலுத்திய பங்குத் தொகை, ஆண்டொன்றுக்கு 8½ சதவீதம் வட்டித் தொகையுடன் திருப்பி அளிக்கத்தக்கதாகும்.

**12.** உறுப்பினர் செலுத்திய பங்குத் தொகையைக் கொடுத்துத் தீர்த்தல்:

(அ) பங்குத் தொகையைப் பெறுவதற்கான தகுதி:

மூன்று மாதங்கள் என்ற குறைந்தளவு காலஅளவிற்கு குடும்ப ஓய்வூதிய நிதிக்குப் பங்குத் தொகை செலுத்துவதற்கு முன்னர் உறுப்பினர் இறந்துவிட்டால், இவர் செலுத்திய பங்குத் தொகை திருப்பி வழங்கப்படத் தக்கதாகும்.

(ஆ) வழங்கத்தக்க தொகை:

குடும்ப ஓய்வூதிய நிதிக்கு உறுப்பினர் செலுத்திய பங்குத் தொகையுடன், ஓராண்டிற்கு 8½ சதவீதம் அளவு வட்டித் தொகையும் சேர்த்து வழங்கத்தக்கதாகும்.

**13.** முதலீடு:

குடும்ப நல ஓய்வூதிய நிதிக் கணக்குத் தொடர்பான தொகை அல்லது அத்தகைய கணக்கில் உள்ள தொகைகள் அனைத்தும், மத்திய அரசின் பொது வைப்பீட்டு நிதி கணக்கில் வைக்கப்பட வேண்டும். பொது வைப்பீட்டுக் கணக்கில் வைக்கப்பட்டுள்ள குடும்பநல ஓய்வூதியநிதிக் கணக்கில் இருக்கும் அனைத்துத்தொகைகளுக்கும் ஆண்டொன்றுக்கு 8½ சதவீதத்திற்குக் குறையாத வட்டி வீதத்தில் வட்டி தொகையை மத்திய அரசு அனுமதிக்கிறது.

## 1976-ஆம் ஆண்டிற்கான தொழிலாளர் நல வைப்பீட்டுத் திட்டத்தின்கீழ் இணைந்த காப்புறுதித் திட்டம்.

முன்னுரை:

பணியிலிருக்கும் போது இறக்கக்கூடிய வருங்கால வைப்புநிதி உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு கூடுதல் பாதுகாப்பு அளிக்கும் நோக்குடன் 1976-ம் ஆண்டு, தொழிலாளர் நல வைப்பீட்டுத் திட்டத்துடன் இணைந்த காப்புறுதித் திட்டம், 1952-ம் ஆண்டத் தொழிலாளர் வருங்கால வைப்பீட்டு நிதிகள் மற்றும் பல்வகை விதித்துறைகள் சட்டத்தின்கீழ் இயற்றப்பட்டது.

**2.** பொருத்தமுடைமை:

தொழிலாளர் நல வைப்பீட்டுத் திட்டத்துடன் இணைந்த காப்புறுதித் திட்டம், 1976-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள்முதல் நாள் முதற் கொண்டு

செயலுக்கு வந்தது. 1952-ம் ஆண்டு தொழிலாளர் நல வருங்கால வைப்பு நிதிகள் மற்றும் பல்வகை விதித்துறைகள் சட்டம் பொருந்துகிற அனைத்து தொழிற்சாலைகள்/தொழில் நிறுவனங்களின் தொழிலாளர் களுக்கும் இது பொருந்தக் கூடியதாகும்.

### 3. வருங்கால வைப்புநிதித் திட்டத்தில் உறுப்பினராகுதல்:

வருங்கால வைப்புநிதித் திட்டத்தின், அனைத்து உறுப்பினர்களும், 1952-ம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்புநிதிகள் பல்வகை விதித்துறைகள் சட்டத்தின் 17-ம் பிரிவின்கீழ் விலக்களிக்கப்பட்ட வருங்கால வைப்பு நிதி உறுப்பினர்களும் இத்திட்டத்தின்கீழ் வருவர்.

### 4. பங்குத்தொகைவிகிதம்:

தொழிலாளர், பங்குத் தொகை எதனையும் செலுத்த வேண்டியதில்லை. ஆயினும் தொழிலதிபரும், மத்திய அரசும், உறுப்பினரின் சம்பளத்தில் முறையே 0.5 சதவீதம் மற்றும் 0.25 சதவீதம் என்ற வீதத்தில் காப்புறுதி நிதிக்குப் பங்குத் தொகை செலுத்த வேண்டும்.

### 5. திட்டத்தின் நன்மைகள்:

வருங்கால வைப்புநிதித் திட்டத்தில் உறுப்பினராக உள்ள ஒருவர் பணியில் இருக்கும்போது, இறக்கும் நேர்வில் அவரது வருங்கால வைப்புநிதித் தொகையைப் பெறும் நபருக்கு அத்தொகையுடன் முந்தைய 12 மாதங்களில் அல்லது அவர் உறுப்பினராக இருந்த கால அளவில், இதில் எது குறைவான கால அளவோ அக்கால அளவில் இறந்துவிட்ட உறுப்பினரின் வருங்கால வைப்புநிதி கணக்கிலுள்ள சராசரி இருப்புத் தொகைக்குச் சமமான உத்திரவாத தொகை ஒன்றும் வழங்கப்படுகிறது. ஆனால், கணக்கிலுள்ள சராசரி இருப்புத்தொகை ரூ. 25,000- க்கு மேற்படுகிறபோது, ரூ. 25,000 மும், ரூ. 25,000- க்கு மேற்படுகிற தொகையில் 25 சதவீதத்தொகையும் அவருக்குக் கொடுக்கத்தக்க தொகையாகும். மொத்தத்தில், அவ்வாறு வழங்குகிற தொகை, ரூ. 35,000-க்கு மேற்படக்கூடாது.

### 6. வருங்கால வைப்புநிதித் திட்டத்தின் பயன்களைப் பெறுவதற்கான தகுதிக்குரிய நிபந்தனைகள்:

1. இத்திட்டத்தின் உறுப்பினரான பணியாளரது மரணம்,1-8-1976-ம் நாளன்று அல்லது அதற்குப்பின்வரும் நாளில் அதாவது இந்த ஈட்டுறுதித் திட்டம் செயல்படுத்தப்பட்ட நாளன்று ஏற்பட்டிருக்க வேண்டும்.

2. தொழிற்சாலை/நிறுவனம் ஒன்றில் அவர் பணியில் இருக்கும் போது இறப்பு ஏற்பட்டிருக்கவேண்டும்.

**7. இத்திட்டத்தின் கீழ் உத்திரவாதத் தொகையை எவருக்குக் கொடுக்கவேண்டுமென்பது:**

(1) 1952-ம் ஆண்டுத் தொழிலாளர் நல வருங்கால வைப்புநிதி சட்டத்தின்கீழ் வரும் பணியாளர் ஒருவர் அல்லது வருங்கால வைப்புநிதி சட்டத்தின் 17-ம் பிரிவின்கீழ் விலக்களிக்கப்பட்ட வருங்கால வைப்புநிதி உறுப்பினர் ஒருவர் நேர்விற்கேற்ப செய்துகொண்ட நேமகம், இத் திட்டத்தின்கீழ் செய்துகொண்ட நேமகமாக கருதப்படும், அத்தகைய நேமகதாரர் அல்லது நேமகதாரர்களுக்கு உத்திரவுத் தொகை வழங்கத்தக்கதாகும்.

(2) நேமகதாரர் எவரும் இல்லாதபோது, தொழிலாளர் நல வருங்கால வைப்புநிதித் திட்டத்துடன் இணைந்த காப்புறுதித் திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளவாறு, உத்திரவாதத் தொகை வழங்கப்படும்.

***8.*** *முதலீடு:*

ஈட்டுறுதி நிதியைச் சேர்ந்த அல்லது ஈட்டுறுதி நிதிக்கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ள அனைத்துத் தொகைகளும் மத்திய அரசின் பொது வைப்பீட்டு நிதிக் கணக்கில் வைப்பீடு செய்யப்படும். இந்த வைப்பீட்டுத் தொகை, ஆண்டொன்றுக்கு 8½ சதவீத வட்டி பெறத்தக்கதாகும்.

***9.*** *ஈட்டுறுதி நிதிக்கான நிருவாகச் செலவுகள்:*

ஈட்டுறுதி நிதிக்குத் தொகை செலுத்தும் உறுப்பினர்களின் ஊதியத்தில் 0.01 மற்றும் 0.005 சதவீத அளவுக்குப் பங்குத்தொகையைச் செலுத்துவதன்மூலம், தொழிலாளர் நல வைப்பீட்டுத் திட்டத்துடன் இனைந்த காப்புறுதி திட்டம் குறித்த நிருவாகச் செலவை முறையே தொழிலதிபர்களும், மத்திய அரசும் ஏற்கும்.

19. இந்த வருங்கால வைப்புநிதித் திட்டத்தின்கீழ் பெறப்பட்ட/ தீர்க்கப்பட்ட கோரிக்கைகள் பற்றிய விவரங்களை பிற்சேர்க்கை-28, 29, 30 மற்றும் 31-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

# அத்தியாயம் 9

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்ககம்:

*வேலைவாய்ப்புப் பணிகள்:*

1. போருக்குப்பின் நடந்த படைக்கலைப்பின் போது இந்தியாவில் வேலைவாய்ப்புப் பணிகள் நடைமுறைக்கு வந்தன. முப்படைகளிலிருந்து விடுவிக்கப்பட்ட போர் வீரர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்காகவும், வேலைவாய்ப்பு அளிப்பதற்காகவும் தனியாக ஒரு துறை தேவையென உனரப்பட்டு, வேலைவாய்ப்பு அலுவலகங்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளில் படிப்படியாக தோற்றுவிக்கப்பட்டன. 1946-ம் ஆண்டின் இறுதி வரை படைக் கலைப்பு செய்யப்பட்ட போர் வீரர்களுக்கு மட்டுமே வேலைவாய்ப்பு பணிகள் ஆற்றப்பட்டன. பின்னர் இப்பணிகள் விரிவு படுத்தப்பட்டு, 1948-ல் எல்லாவிதமான மனுதாரர்களுக்கும் வேலைவாய்ப்புப் பணிகள் ஆற்றப்பட்டன. இந்திய அரசிடமிருந்து வேலைவாய்ப்புத் துறையில் அலுவலகங்களின் நிர்வாக கட்டுப்பாடு மாநில அரசுக்கு 1-11-1956 முதல் மாற்றப்பட்டது. இம்மாற்றலுக்குப் பிறகு, தமிழக வேலை வாய்ப்பு அலுவலகங்களின் பராமரிப்பு தொழிலாளர் நல ஆணையரின் கட்டுப்பாட்டில் இயங்கி வந்தது. 1963-ம் ஆண்டு தொழில் துறை கட்டுப்பாட்டில் இயங்கி வந்த தொழில் பயிற்சி நிலையங்களும், வேலைவாய்ப்பு அலுவலகங்களும் ஒன்றாக இணைக்கப்பட்டு, புதிய 'வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை' என்ற துறை உருவாக்கப்பட்டு ஒரே இயக்குநரின் கீழ் கொண்டு வரப்பட்டது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

*வேலைவாய்ப்பு அலுவலகங்கள்:*

2. இந்த வேலை வாய்ப்பு அலுவலகத்தின் மூலமாக தமிழ்நாடு தேர்வாணைக்குழுவின் வரம்பிற்குட்படாத மையஅரசு, மாநில அரசு, அரசு கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வரும் நிறுவனங்கள் மற்றும் இதுபோன்ற இதர நிறுவனங்கள் ஆகியவற்றில் ஏற்படும் காலி பணியிடங்களுக்கு, தகுதிபெற்ற நபர்களின் பெயர்களை அனுப்பி வைக்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் இயங்கிவரும் வேலைவாய்ப்பு அலுவலகங்களின் எண்ணிக்கை வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| 1. | மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் | .. | 24 |
| 2. | துணைவேலைவாய்ப்பு அலுவலகங்கள் | .. | 3 |
| | **சிறப்பு அலுவலகங்கள்:** | | |
| 3. | தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகம், சென்னை-4 | .. | 1 |
| 4. | உடல் ஊனமுற்றோருக்கான சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகம், சென்னை-40 | .. | 1 |
| 5. | மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் (தொழில் திறனற்றோர்) சென்னை-20 | .. | 1 |
| 6. | மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் (தொழில் நுட்ப பணியாளர்கள்) | .. | 4 |
| 7. | பழங்குடியினருக்காண தொழில்நெறி வழிகாட்டும் சிறப்பு நிலையங்கள் (உதகமண்டலம், சங்கராபுரம், சேலம் மற்றும் திருவண்ணாமலை) | .. | 4 |
| 8. | ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக் கான பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டும் நிலையங்கள் (திருச்சி கோயம்புத்தூர், திருநெல்வேலி, வேலூர் மற்றும் கடலூர்) | .. | 5 |
| 9. | பல்கலைக் கழக வேலைவாய்ப்பு தகவல் மற்றும் வழிகாட்டும் நிலையங்கள் | .. | 3 |
| | மொத்தம் | .. | 46 |

3. இவை தவிர சிறப்பு 13 சிறப்பு உடல் ஊனமுற்றோருக்கான சிறப்பு பிரிவுகள் தமிழ்நாட்டில் இயங்கி வருகின்றன. இவைகள் வழக்கமான வேலைவாய்ப்பு அலுவலகங்களுடன் இணைக்கப்பட்டுள்ளன.

4. சுய வேலைவாய்ப்பு சம்பந்தப்பட்ட பணிகளை ஊரக வளர்ச்சி மற்றும் தொழில்துறையில் செய்துவருவதால், வேலூர் மற்றும்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

கோயம்புத்தூரில் இயங்கிவந்த சுய வேலைவாய்ப்பு மேம்பாட்டு பிரிவுகளை நிறுத்திவிட 21-9-94 நாளிட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அரசு ஆணை எண். 884-ல் வெளியிடப்பட்டுள்ளது.

5. வேலைவாய்ப்பு அலுவலகங்களின் பணிகளைக் கண்காணிக்கும் பொருட்டு, சென்னை, திருச்சி, கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகியஇடங்களில் நான்கு மண்டலத் துணைஇயக்குநர் அலுவலகங்களும் இயங்கி வருகின்றன.

*சிறப்புக் குழு அமைத்தல்:*

6. அரசாணை நிலை எண்.1371, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, நாள் 10-7-1989-இன்படி வேலைவாய்ப்பு அலுவலகங்களின் பணிகள் தொடர்பாக தெரிவிக்கப்படும் கடுமையான குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் பொருட்டுச் 'சிறப்புக் குழு' அமைக்கப்பட்டது.

1-1-94 முதல் 31-12-94 வரையில்—

| | | |
|---|---|---|
| 1. | சிறப்புக் குழுவால் நடத்தப் பெற்ற விசாரணைகளின் எண்ணிக்கை .. .. | 2 |
| 2. | சிறப்புக் குழுவின் அறிக்கையின்படி ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட அலுவலர்கள்/பணியாளர்களின் எண்ணிக்கை. .. | இல்லை |

7. வேலைவாய்ப்பகங்களில் வேலைக்காக பதிவு செய்வோர் மற்றும் நிறுவனத்தினரிடமிருந்து புகார் வராமலும், விரைவாகவும் திறம்படவும் பணிசெய்வதற்காக தற்போது நடைமுறையில் உள்ள நபர்களை தேர்ந்தெடுக்கும் முறையை மாற்றி, இந்த வேலைவாய்ப்பு அலுவலகங்களை படிப்படியாக "கணிணி மயமாக்கும் திட்டம்" கொண்டு வரப்பட்டது. இந்த திட்டத்தின் அடிப்படையில், இதுவரை 12 வேலை வாய்ப்பகங்கள் கணிணி மயமாக்கப்பட்டுள்ளது. 1994-95-ம் ஆண்டில் இரண்டு வேலைவாய்ப்பகங்கள் கணிணி மயமாக்க ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

## வேலை நிலவரத் தகவல் திட்டம்:

8. கட்டாய காலியிட அறிவிப்புச் சட்டம் 1959-இன்படி எல்லாப் பொதுத்துறை நிறுவனங்களும் 25 மற்றும் அதற்கு மேற்பட்ட பணியாளர்களைக் கொண்ட தனியார்துறை நிறுவனங்களும் (வேளாண்மை நீங்கலாக), ஒவ்வொரு காலாண்டிலும் தங்கள் பணியாளர்களின் மொத்த எண்ணிக்கை, தோன்றிய மற்றும் நிரப்பப்பட்ட காலியிடங்கள், தகுந்த பணியாளர்கள் கிடைக்காததாதல் அந்தக் காலாண்டில் காலியாக இருந்த பணியிடங்கள் முதலான விவரங்களைக் குறிப்பிட்ட படிவத்தில் வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு அளிக்க வேண்டும். இது தவிர இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை இந்நிறுவனங்களிடமிருந்து தொழில் வாரியாக உள்ள பணியாளர்களின் எண்ணிக்கை பற்றிய விவரங்களும் திரட்டப்படுகின்றன.

## தொழில் முறை வழிகாட்டி நடவடிக்கைகள்:

9. மாணவர்கள் மட்டும் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்தவர்கள் ஆகியோர்களுக்கு உதவிட குழுவிவாதங்கள் பதிவு செய்தலில் வழிகாட்டி, தன்னம்பிக்கையூட்டும் செயல் திட்டங்கள், வாழ்க்கைத் தொழில் விரிவுரைகள், கருத்தரங்குகள் மற்றும் வாழ்க்கைத் தொழில் கண்காட்சிகள் ஆகிய தினசரி செயல் திட்டங்கள் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் உள்ள தொழில் வழிகாட்டி அலகுகள் நிறைவேற்றி வருகின்றன. வேலைவாய்ப்பு அலுவலகங்களில் உள்ள பொதுவான தொழில் முறை வழிகாட்டு அலகுகளை தவிர மூன்று பல்கலைக்கழக வேலைவாய்ப்பு தகவல் மற்றும் வழிகாட்டு செயலகம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்காக ஐந்து பயிற்சி மற்றும் வழிகாட்டு மையங்கள், மற்றும் பழங்குடியின மக்களுக்காக நான்கு தனி தொழிற்முறை வழிகாட்டு மையங்கள் ஆகியவை பல்கலைக்கழக மாணவர்களுக்கும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கும் சிறப்பான முறையில் வழிகாட்டி வருகிறது.

1994-ம் ஆண்டில் குழுவிவாதங்களின் மூலம் வழிகாட்டுதல் தகவல்கள் 14,381 பேர் பெற்று பயன் அடைந்ததுடன், 3,166 பேர் தனிப்பட்ட தகவல்கள் பெற்று பயன் அடைந்துள்ளனர். 73,600 மாணவர்கள் வாழ்க்கைத் தொழில் விரிவுரைகள் மூலம் பயன் பெற்றுள்ளனர். 11,500 மாணவர்கள் வாழ்க்கைத் தொழில் கண்காட்சிகளை பார்வையுற்றுள்ளனர். 3,420 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் தன்னம்பிக்கையூட்டும் செயல்திட்டங்களில் பங்கேற்று பயன் அடைந்துள்ளனர்.

## வேலைவாய்ப்பற்றோர் நிவாரணத் திட்டம்:

10. அரசாணை எண்.548, கல்வித்துறை, நாள் 9-6-93-இன் வாயிலாக அரசு இத்திட்டத்தினைக் கல்வித் துறைக்கு மாற்ற ஆணை பிறப்பித்துள்ளது. கல்வித்துறையில் 1-4-93 முதல் இத்திட்டம் படித்த இளைஞர் தன்னார்வத் தொண்டு திட்டம் என அழைக்கப்படும்.

11. அரசாணை எண்.259, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, நாள் 22-9-93-இன் படி பார்வையற்ற மனுதாரர்களுக்கு வேலைவாய்ப்பற்றோர் நிவாரணம் வழங்கும் திட்டம் தொடர்ந்து தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறையிலேயே அமுல்படுத்தப்படலாம் என ஆணை பிறப்பிக்கப்பட்டது. இதன்படிப் பார்வையற்ற மனுதாரர்களுக்கு வேலைவாய்ப்பற்றோர் நிவாரணம் வழங்கும் திட்டம் இத்துறையிலேயே தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி 1-1-94 முதல் 31-12-94 வரை 1,135 கண் பார்வையற்ற நபர்களுக்கு ரூ. 20.00 லட்சங்கள் வேலைவாய்ப்பற்றோர் நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது. இதுவரை இத்திட்டத்தின்கீழ் 2,568 கண் பார்வையற்ற நபர்கள் பயன் பெற்றுள்ளார்கள்.

## ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன்:

12. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்களிடையே, படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புச் சூழல் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்த சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தமிழ்நாடு தேர்வாணைய தேர்வுகள், பணியாளர் தேர்வாணையம் வங்கிப்பணி, ஆளெடுப்பு வாரியம் ஆகிய பல்வேறு போட்டித் தேர்வுகளில், இதர பங்கேற்பாளர்களோடு ஒரு முனைப்பை அடையும் வகையில் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. 1994-95-ம் ஆண்டில் 8,498 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்களுக்கு பயிற்சி வகுப்புகள் அளிக்கப்பட்டுள்ளன. பல்வேறு போட்டித் தேர்வுகளில் 1,062 பேர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இதற்காக ரூ. 96.56 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1995-ம் ஆண்டிற்கு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு பயிற்சி நடத்துவதற்காக ரூ. 12.6 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தொழில் நுழைவுத் தேர்விற்காக 965 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு ரூ. 5.4 லட்சம் செலவில் பயிற்சி அளிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## தீவிர தொழில்முறை வழிகாட்டுதலுக்காக கிராமப்புற பள்ளிகளை தத்து எடுத்துக் கொள்ளும் திட்டம்.

13. 30-4-94 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக் கூட்டத் தொடரில் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் தீவிர தொழில்முறை வழிகாட்டுதலின் மூலம் உதவி அளிக்க கிராமப்புற பள்ளிகளை தத்து எடுத்துகொள்வது என்று ஒரு முன்னோடித் திட்டத்தை அறிவித்தார்கள். இத்திட்டத்தின்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் சுமார் 200 இரண்டாம் ஆண்டு மேனிலைப் பள்ளி மாணவர்கள் கொண்ட ஒரு கிராமப்புற பள்ளிகளைத் தத்து எடுத்துக்கொண்டு அம்மாணவர்களுக்குத் தீவிரமான முறையில் வழிகாட்டல் உதவிகளை ஆண்டு முழுமைக்கும் தொடர்ந்து அளிக்கப்படும்.

தவிரவும், மைய அரசு தேர்வாணையம், வங்கி பணியாளர் தேர்வுக் கமிஷன், தமிழ்நாடு தேர்வாணைக் குழுவால் நடத்தப்படும் தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகளும் நடத்தப்பட்டு அந்தத் தேர்வுகளில் மாணவர்கள் பங்கு கொள்ளவும் வழிகாட்டப்படும்.

மேற்குறிப்பிட்டுள்ள திட்டத்தை செயல்படுத்த அரசாணை நிலை எண்.17, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, நாள் 23-1-95-ன் வாயிலாக ரூ. 46,000 அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டத்தை செயற்படுத்த உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## *14.* இலகு வாகனம் ஓட்டுவதற்கான பயிற்சித் திட்டம்.

50 மகளிருக்கு இலகு வாகனங்களை ஓட்டுவதற்கு பயிற்சி அளிக்க திட்டம் ஒன்று அரசாணை (பல்வகை) எண்.291, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, நாள் 28-9-94 வழி ஒப்பளிப்புச் செய்யப்பட்டும் இதற்காக ரூ. 1,15,000 வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினை சென்னை, சாலை போக்குவரத்து நிலையத்தின் உதவியுடன் செயற்படுத்த் தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

15. பலவகைப்பட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்யப்பட்ட நபர்களின் எண்ணிக்கை, வேலை காலியிடங்கள் அறிவிக்கப்பட்ட எண்ணிக்கை முதலிய விவரங்கள், பிற்சேர்க்கை-32, 33 மற்றும் 34-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

# அத்தியாயம் 10

## கைவினைஞர் பயிற்சித் திட்டம்

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை,

*(பயிற்சிப்பிரிவு)*

**கைவினைஞர் பயிற்சித்திட்டத்தின் மீதான கொள்கை விளக்கக் குறிப்பு:**

தரம் வாய்ந்த உற்பத்தியினை தொழிற் சாலைகள் அதிக அளவில் பெருக்கிட தேவையான திறமை வாய்ந்த தொழிலாளர்களை சீரான தொழிற் பயிற்சி மூலம் உருவாக்கிடும் கைவினைஞர் பயிற்சித் திட்டத்தை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்ககத்தின் மூலம் செயல்படுத்தப்பட்ட வருகிறது. படித்த இளைஞர்களிடையே வேலையில்லா திண்டாட்டத்தைக் குறைக்க வேலை வாய்ப்பளிக்கக் கூடிய தொழிற் பயிற்சி அளிப்பதில் இத்திட்டம் சிறப்பான பங்காற்றுகிறது. இத்திட்டமானது தமிழகமெங்கும் உள்ள தொழில் பயிற்சி நிலையங்கள் மூலம் தற்சமயம் மற்றும் எதிர்காலத்திற்கு, வாழ்வியல் தொழிற் பயிற்சியுடன் தேவையான கைவினைஞர்களை உருவாக்குவதில் முக்கிய பங்காற்றுகிறது. இதற்காக 36 பொறியியல் மற்றும் 15 பொறியியல் அல்லாத தொழிற் பிரிவுகளில் கைவினைஞர் பயிற்சியளிக்கக் கூடிய 51 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள் இம்மாநிலத்தில் நிறுவப்பட்டுள்ளன. இவற்றில் மகளிருக்கென 10 தொழிற் பயிற்சி நிலையங்களும், தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கென சிதம்பரத்தில் ஒன்றும் பழங்குடியினருக்கென சங்கராபுரத்தில் ஒன்றும் உள்ளடங்கும். பயிற்சியாளர்கள், தேசீய திறனாய்வுத் தேர்வுகளில் கலந்து கொள்ளவும் நாட்டின் எப்பகுதியிலும் அவர்கள் வேலை வாய்ப்பினை பெறும் வகையில் தொழிற் கல்வியின் தரம் ஒரே சீராக இருப்பதற்காகவும் தொழிற் பிரிவுகள் தேசீய வாழ்வியல் பயிற்சிக் குழுவினரால் தேர்ந்தெடுக்கப்பட்டு வடிவமைக்கப்படுகின்றன. இம் மாநிலத்தின் அனைத்து அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களிலும் மொத்தம் 14,549 மாணவர்களும் 1832 மகளிரும் தற்பொழுது தொழிற் பயிற்சி பெற்று வருகின்றனர்.

2. இத்தொழில் பயிற்சி நிலையங்கள் ஆண்டு தோறும் பயிற்சி பெற்ற 16,000 கைவினைஞர்களை உருவாக்குகின்றன. அவர்களில் பெரும்பான்மையினர் பயிற்சி முடித்ததும் வேலைவாய்ப்பு பெறுகின்றனர். சிலர் சுய வேலைவாய்ப்பு பணிமனைகளை செய்கின்றனர். 1994-ஆம் ஆண்டு முடிய நடைபெற்ற 31 அகில இந்திய திறனாய்வுத் தேர்வுகளில் தமிழ்நாடு மாநிலம் 14 முறைகள் முதலாவதாக வந்து தன்னிகரில்லாத் தனித்தன்மை பெற்றுள்ளது. இந்த தனித் தன்மையைப் பேணிட மற்றும் அகில இந்திய தொழிற் தேர்வு விடைத்தாட்களை ஒரே சீராக மதிப்பீடு செய்திட ஜூலை 1979 முதல் "மைய மதிப்பீடு" அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

3. மாறிவரும் தொழில் நுட்பவியல் மற்றும் வளர்ந்து வரும் கைவினைஞர்களின் தேவைக்கேற்ப தொழிற் பயிற்சி நிலையங்களில் புதிய தொழிற்பிரிவுகளை அறிமுகப்படுத்துவதில் இந்த அரசு முனைப்பாக இருக்கிறது. இதன் காரணமாக பிளாஸ்டிக் தொழிற் நிறுவனங்களில் வளர்ந்து வரும் வேலை வாய்ப்பினை கருத்தில் கொண்டு சேலம் மற்றும் கடலூர் தொழிற் பயிற்சி நிலையங்களில் பிளாஸ்டிக் பிராசசிங் ஆபரேட்டர் தொழிற் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக மகளிருக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய திரை அச்சுத் தொழில் மற்றும் ஏற்றுமதி ஆடை தைக்கும் தொழிற் பிரிவுகள் முறையே ஈரோடு மற்றும் கிண்டி தொழிற் பயிற்சி நிலையங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த இரு தொழிற் பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டதன் மூலம் ஆண்டுதோறும் 60 மகளிர் பயிற்சியாளர்கள் பயனடைவர். தற்போதைய தொழிற் நுட்பவியல் வளர்ச்சிக்கு தகுந்தாற்போல் இந்த அரசு 1994-95 ஆம் ஆண்டு கிண்டி அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் அச்சுத் தொழிலாள் "டெஸ்க் டாப் பப்ளிஷிங் ஆபரேட்டர்" (Desk Top Publishing Operator) என்னும் நவீன தொழிற் பிரிவு ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. மகளிர் அதிக அளவில் வேலை வாய்ப்புகளைப் பெற இத் தொழிற் பிரிவுகள் மிகவும் உதவுகின்றன.

4. சென்ற ஆண்டு தமிழ்நாடு சட்டப் பேரவையில் அறிவித்தபடி "மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி ஜெ. ஜெயலலிதா விருதுகள்" வழங்கும் திட்டத்திற்கு இவ்வரசு இசைவு அளித்துள்ளது. இத்திட்டத்தின்படி ஏழு தொழிற்பிரிவுகளில் மாநில அளவில் திறனாய்வுத் தேர்வில் முதன்மையாக வரும் சிறந்த பயிற்சியாளர்களுக்கு அவர்களின் தொழிற் திறன் வளர்ச்சியை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் இந்த விருது வழங்கப்படவிருக்கிறது. அதே நேரத்தில் முதன்மையாக

வந்த சிறந்த பயிற்சியாளர்களை உருவாக்கிய பயிற்றுநர்களையும் கௌரவிக்கும் வண்ணம் அவர்களுக்கும் இப்பரிசுத்தொகை வழங்கப்படவிருக்கின்றது. இதற்காக இந்த அரசு ஆண்டொன்றுக்கு ரூ. 1.23 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

5. பயிற்சியளிப்பதில் முன் மாதிரியான செயலாக்கமுடைய பத்து பயிற்றுநர்களுக்கு அவர்களது பணியை ஊக்கப்படுத்தும் விதம் ஒவ்வொரு ஆண்டும் "நல்லாசிரியர் விருதுகள்" வழங்கப்படுகின்றன.

6. இவ்வரசு கிராமங்களில் நலிவுற்ற ஏழை எளியோருக்கு உதவிட கிராமங்களை தத்து எடுத்துக் கொள்ளும் திட்டம் ஒன்றினை வகுத்துள்ளது. இத்திட்டத்தின்படி கிராமங்கள் பயன் பெறும் வண்ணம் அவர்களின் அடிப்படைத் தேவைகளான குடிநீர்க் குழாய்கள், பம்புகள், மின்சார சாதனங்கள் மற்றும் விவசாய கருவிகள் ஆகியவற்றை பழுது பார்க்கும் பணிகளை தொழிற் பயிற்சி நிலைய பயிற்சியாளர்கள் மற்றும் பணியாளர்களே மேற்கொள்வர். இத்திட்டம் விரைவில் அமுல்படுத்தப்படவுள்ளது.

7. சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்கு எளிதாக வேலைவாய்ப்பு கிடைக்கக் கூடிய தொழிற் பிரிவுகளில் சேருவதற்கு போதிய வாய்ப்பு அளிக்கும் நோக்கமுடன் இம்மாநிலத்தில் 34,596 இருக்கைகள் கொண்ட அங்கீகரிக்கப்பட்ட 390 தனியார் தொழிற் பயிற்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன. இந்த தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களும் அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களைப் போன்றே தொழிற் பயிற்சியை அளிக்கின்றன. ஆண்டு தோறும் இந்த தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் 50 விழுக்காடு பயிற்சி இருக்கைகள் தகுதி மற்றும் நடைமுறையிலுள்ள இன வாரி விகித சுழற்சி அடிப்படையில் அரசினால் நிரப்பப்படுகின்றன. மேலும் 105 அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற் பள்ளிகளும் இம்மாநிலத்தில் உள்ளன. இவைகளில் 50 தொழிற் பள்ளிகள் தங்கள் பணியாளர்களின் ஊதியசெலவு மற்றும் பயிற்சியாளர்களின் பயிற்சி செலவில் 75 விழுக்காடு மானியமாகப் பெறுகின்றன.

8. சென்ற (1994-95) நிதியாண்டில் புதிய தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் துவக்குவதை அரசு தடை விதித்திருந்தது. தமிழ்நாட்டில் பின்தங்கிய மாவட்டங்களில் குறைவான எண்ணிக்கையில் தொழிற்பயிற்சி நிலையங்களும், குறைவான எண்ணிக்கையில் பயிற்சியாளர்களும் உள்ள காரணத்தை கணக்கில் கொண்டு பின் தங்கிய மாவட்டங்களில் புதிதாக தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள்

துவக்குவது அவசியமென அரசு கருதியது. எங்கெல்லாம் வேலைவாய்ப்பு சாத்தியக்கூறு உள்ளதோ அங்கெல்லாம் கூடுதலாக தொழிற்பிரிவுகள், அலகுகள் தொடங்குவதையும் அவசியமென கருதியது. மேற்குறிப்பிட்ட முடிவை அமுல்படுத்தும் முகத்தான் 1995-96 நடப்பு நிதியாண்டில் எண்ணிக்கையில் பத்துக்கும் குறைவாக உள்ள கீழ் குறிப்பிட்டுள்ள மாவட்டங்களில் புதிதாக தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் தொடங்க அரசு அனுமதி அளித்துள்ளது.

1. இராமநாதபுரம்
2. பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்
3. திண்டுக்கல் அண்ணா
4. காமராசர்
5. புதுக்கோட்டை
6. தருமபுரி
7. நாகப்பட்டினம் காயிதே மில்லத்
8. நீலகிரி மற்றும்
9. வ.உ.சிதம்பரனார்.

மேலும் அனைத்து மாவட்டங்களிலுள்ள தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் கூடுதல், தொழிற்பிரிவுகள்/அலகுகள் தொடங்கவும் அரசு அனுமதி அளித்துள்ளது.

9. கைவினைஞர் பயிற்சித் திட்டம் தவிர பின்வரும் துணைத் திட்டங்களும் அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் செயல்படுத்தப்படுகின்றன.

## தொழிற் பழகுநர் பயிற்சித் திட்டம்:

10. தொழிற் பயிற்சி நிலையங்களில் தொழிற் பயிற்சி பயின்று முடித்தவர்களுக்கு 1961-ஆம் ஆண்டில் தொழிற் பழகுநர்கள் சட்டத்தின்படி, பயிற்சியளிக்க வசதியுள்ள தொழில் நிறுவனங்களில் தொழிற் பழகுநராக பயிற்சி பெறும் வாய்ப்பினை இவ்வரசு அளிக்கிறது. 1974 தொழில் நிறுவனங்கள் இச்சட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. இச்சட்டத்தின்படி தொழில் நிறுவனங்களில் பழகுநர் பயிற்சி வசதி வாய்ப்புகள் அவ்வப்போது கணக்கிடப்பட்டு அதற்கேற்ப

பழகுநர் பயிற்சி இடங்கள் நிர்ணயம் செய்யப்படுகின்றன. தற்போது இம்மாநிலம் முழுவதும் 13,659 தொழிற் பழகுநர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். நிர்ணயிக்கப்பட்ட தொழில் நிறுவனங்கள் தொழிற் பழகுநர்களுக்கு குறிப்பிட்ட தொழிற் பிரிவுகளில் செய்முறைப் பயிற்சியளிக்கும் காலத்தில் அவர்களுக்குக் கருத்தியல் பாடங்களைப் போதிக்க 11 தொடர் அறிவுரை மையங்களை அரசு நிறுவியுள்ளது. இதுவரை 1,22,980 தொழிற் பழகுநர்கள் இச்சட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளனர்.

### தொழிலாளர்களுக்கான மாலை நேர வகுப்புகள்:

11. பகுதி நேர பயிற்சி வகுப்புகளின் மூலம் தொழிலாளர்கள் தங்களுடைய தொழிற் பிரிவுகளில் கருத்தியல் அறிவை அடையச் செய்வதே இச்சட்டத்தின் முக்கிய நோக்கமாகும். தொழிற்சாலைகள் அதிகமாகவுள்ள அம்பத்தூர், வடசென்னை, கிண்டி, மதுரை, கோவை, திருச்சி, மேட்டூர் அணை மற்றும் ஒசூர் ஆகிய இடங்களிலுள்ள எட்டு தொழிற் பயிற்சி நிலையங்களில் இவ்வசதி செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் பெருவாரியான தொழில் நிறுவனங்களின் பாராட்டைப் பெற்றுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் 1925 தொழிலாளர்கள் இத்திட்டத்தினால் பயன் பெறுகின்றனர்.

### வாழ்வியல் பயிற்சி திறன் மேம்பாட்டு திட்டம்:

12. வாழ்வியல் பயிற்சி திறன் மேம்பாட்டு திட்டம் என்னும் மற்றொரு திட்டம் அம்பத்தூர், கோவை மற்றும் ஒசூர் ஆகிய தொழிற் பயிற்சி நிலையங்களில் செயல்படுத்தப்படுகின்றது. தொழிலாளர்கள் நுண்கருவிகள், இயந்திரங்கள் மற்றும் தளவாடங்களை கையாளுவதில் மேம்பட்ட தொழில் நுட்பவியலை அறிந்துகொள்ள இத்திட்டத்தின் கீழ் பயிற்சியளிக்கப்படுகிறது. சென்ற ஆண்டு 636 தொழிலாளர்கள் இத்திட்டத்தினால் பயனடைந்துள்ளனர். இது வரை 9,069 தொழிலாளர்கள் இத் திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்றுள்ளனர்.

### ஊரக இளைஞர் சுய வேலைவாய்ப்பு பயிற்சித்திட்டம்:

13. சமூகத்தில் மிகவும் பின் தங்கிய மற்றும் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள ஊரக இளைஞர்கள் சுய வேலை வாய்ப்பிற்கு அவசியமான தொழிற திறன் மற்றும் தொழில் நுட்பவியலைப் பெற பயிற்சியளிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் 35 தொழிற் பயிற்சி நிலையங்களில் செயல்படுத்தப்படுகின்றது.

இப்பயிற்சி 6 மாதம் முதல் ஒரு வருட காலத்திற்கு ஊரக இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்பு மிகுந்த 23 தொழிற் பிரிவுகளில் அளிக்கப்படுகிறது. பயிற்சியின்போது ஒவ்வொருவருக்கும் மாதம் ரூ. 300 உதவித்தொகை வழங்கப்படுகிறது. பயிற்சி முடித்தபின் அவர்கள் சுயவேலை வாய்ப்பினை துவக்கிட ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் ரூ. 600 மதிப்புள்ள கருவிகளடங்கிய பெட்டி இலவசமாக வழங்கப்படுகிறது. இப்பொழுது 265 இளைஞர்கள் இத்திட்டத்தின்படி பயிற்சி பெற்று வருகின்றனர். இதுவரை 23,127 ஊரக இளைஞர்கள் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்து உள்ளனர்.

சீர் மரபு வகுப்பினருக்கு பயிற்சி:

14. பெருமளவில் சீர்மரபு வகுப்பினர் தொழிற் பயிற்சி பெறும் வகையில், பொருத்துனர், போன்ற பிரசித்திப்பெற்ற தொழிற் பிரிவுகளில் செக்கானூரணி, முதுகளத்தூர் மற்றும் வீரக்கேரளம்புதூர் ஆகிய தொழிற் பயிற்சி நிலையங்களில் அவர்களுக்கு தொழிற் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. ஆண்டுதோறும், இத்திட்டத்தின்கீழ் 129 சீர் மரபு பயிற்சியாளர் பயனடைகின்றனர்.

**வனவியல் இணைத்திட்டம்:**

15. வனபாதுகாப்பு பகுதிகளை சார்ந்து உள்ள கிராமப்புற இளைஞர்கள், அவர்களின் சமூக பொருளாதார நிலையை உயர்த்தவும், காடு வளர்ப்பு செயல்கள் மூலம் அவர்கள் சுயவேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ளவும் முனைப்புடன் பங்கேற்க செய்வது இச்சிறப்பு திட்டத்தின் முக்கிய குறிக்கோள் ஆகும். இக்குறிக்கோளை அடையும் வகையில் அவர்களுக்கு திண்டுக்கல் தொழிற் பயிற்சி நிலையத்தில் பகுதிநேர குறுகிய கால பயிற்சியாக சாதாரண மின் இணைப்பு, மின் இயக்கி கம்பி சுற்றுதல், பற்றவைப்பவர் ஆகிய தொழிற் பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. பகுதிநேர பயிற்றுநர்களின் கைமாறு ஊதியம், பயிற்சிக்கு தேவைப்படும் நுகர்பொருள் ஆகியவற்றிற்கான செலவை வனத்துறை ஏற்றுவருகிறது. ஆண்டுதோறும், 90 இளைஞர்கள் இத்திட்டத்தின் கீழ் பயன் அடைந்து வருகின்றனர்.

**பல்நோக்கு கம்மியர் பயிற்சி:**

16. இளைஞர்களிடையே செயல்திறனை ஊக்குவிக்கவும் சுயவேலைவாய்ப்பு/ஊதிய வேலைவாய்ப்பு சந்தர்ப்பங்களை அவர்கள் பயன்படுத்திக்கொள்ளவும் தொழிற் பயிற்சி அளிப்பது இப்பயிற்சித்திட்டத்தின் குறிக்கோளாகும். புதுடெல்லி, மைய அரசின்

அறிவியல் மற்றும் தொழில் நுட்ப துறையால் தர்மபுரி மாவட்டத்தில் இப்பயிற்சி திட்டத்தை அமுல்படுத்த தர்மபுரி மாவட்ட வளர்ச்சி கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவ்வாறாக, ஜனவரி 1995 முதல், ஓசூர் அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில், தர்மபுரி மாவட்ட வளர்ச்சி கழகத்தால் பரிந்துரைக்கப்பட்ட பயிற்சியாளர்களுக்கு சாதாரண மின் இணைப்பு, வீட்டு உபயோக சாதனங்கள் பழுது பார்த்தல், மின் இயக்கி கம்பி சுற்றுதல், இரு சக்கர வாகன கம்மியர், வானொலி மற்றும் தொலைக்காட்சி கம்மியர் ஆகிய தொழிற் பிரிவுகளில் குறுகிய கால பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் ஆண்டுதோறும் 120 பயிற்சியாளர்கள் பயனடைவர்.

உலக வங்கி திட்டங்கள்:

17. தொழிற் பயிற்சி நிலையங்களை நவீனப்படுத்தி பல்வேறு தொழில்களில் மனித ஆற்றலின் தேவைக்கேற்ப தற்பொழுதுள்ள பயிற்சித் திட்டத்தினை விரிவுபடுத்திடும் நோக்குடன் இவ்வரசு உலக வங்கி நிதியுதவியுடன் திறன் மேம்பாட்டுத் திட்டத்தினை தொடங்கியது. இத்திட்டம் 1989-90 ஆம் ஆண்டு 21.74 கோடி மூலதனத்தில் துவங்கப்பட்டு, 1995-96-ம் ஆண்டு முடிய உள்ளது. மூலதனத்தில் ஐம்பது விழுக்காடுகளை இம்மாநில அரசு பொறுப்பேற்கின்றது. 1995-96 வரவு செலவு திட்டத்தில் ரூ. 6.19 கோடி இத்திட்டத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ளது. கைவினைஞர் பயிற்சி தொழில் பழகுநர் பயிற்சி, மகளிருக்கென வாழ்வியல் தொழிற் பயிற்சி மற்றும் திறன் மிக்க தொழிலாளர்களுக்கான வாழ்வியல் மேம்பாட்டு பயிற்சி ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய அம்சங்களாகும்.

18. இத்திறன் மேம்பாட்டுத் திட்டம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு செயல்படுத்தப்படுகிறது.

(1) அதிகமாகிவரும் தேர்ச்சி பெற்ற மனித ஆற்றலின் தேவையினை பூர்த்தி செய்யவும், மகளிரின் வாழ்வியல் பயிற்சித்திட்டத்தை நிறைவானதாகவும், தரமுள்ளதாகவும் மேம்படுத்தவும் அம்பத்தூர், கோவை, சேலம், மதுரை மற்றும் புள்ளம்பாடி ஆகிய ஐந்து இடங்களில் மகளிருக்கென தனி தொழிற் பயிற்சி நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் ஒவ்வொரு ஆண்டும் அதிக மகளிர் பயன்பெற்று வருகின்றனர்.

(2) அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களிலுள்ள இயந்திரங்கள் மற்றும் தளவாடங்களை பழுது பார்த்து பராமரிக்க ஆறு அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் நிறுவப்பட்டுள்ள இயந்தர பராமரிப்பு மையங்களிலும் அம்பத்தூர் தொழிற் பயிற்சி நிலையத்தில் மாநில அளவில் பராயரிப்புத் தொழிலகத்திலும் சீரான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

(3) மனித ஆற்றலின் தேவையானது தொழில் நுட்ப தேவைக்கு ஏற்ப நிறைவு செய்வதாக அமைய வேண்டும். எனவே உண்மையான தேவையின் அடிப்படையில் தொழிற் பயிற்சி நிலையங்களில் தகுந்த மற்றும் தேவையான தொழிற் பிரிவுகளை அறிமுகப்படுத்த இவ்வரசு முடிவு செய்துள்ளது. விரைந்து அதிகமாகி வரும் ஓரளவு தேர்ச்சி பெற்ற (Semi skilled) மனித ஆற்றல் தேவையை நிறைவு செய்திட தற்பொழுதுள்ள 14 தொழிற் பயிற்சி நிலையங்களில் 11 புதிய தொழிற் பிரிவுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. 1995-96 ஆம் ஆண்டில் சேலம் மற்றும் கடலூர் ஆகிய இரு தொழிற் பயிற்சி நிலையங்களில் டாடா பிராசசிங் மற்றும் கம்ப்யூட்டர் சாப்ட்வேர் பயிற்சி பிரிவு புதிதாக அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

(4) தொழிலாளர்கள் தொழிற் சாலைகளில் நுண் கருவிகள், இயந்திரங்கள் மற்றும் தளவாடங்களை கையாளுவதற்கு உதவும் விதத்தில் அவர்கள் பயிற்சி பெற கோயம்புத்தூர் அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் வாழ்வியல் திறன் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டம் விரிவு படுத்தப்பட்டுள்ளது.

(5) தொழில் பழகுநர் பயிற்சியினை விரிவுபடுத்தும் திட்டத்தில் தொழிற்சாலைகளின் தேவையை நிறைவு செய்யும் பொருட்டு இரசாயனம் மற்றும் தோல் தொழில் பிரிவுகளுக்காக இராணிப்பேட்டையில் ஒரு அடிப்படைப் பயிற்சி மையமும், ஹோட்டல் மற்றும் உணவக தொழிற் பிரிவுக்கென அம்பத்தூரில் ஒரு அடிப்படை பயிற்சி மையமும் ஆக இரு அடிப்படை பயிற்சி மையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 8,000 தொழில் பழகுநர்களுக்கு தொடர் அறிவுரை வகுப்புகள் நடத்தும் வண்ணம் 4 தொடர் அறிவுரை மையங்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## *19. மாநில திட்ட பணிகள் (கைவினைஞர் பயிற்சித்திட்டம்):*

### *1. தொழில் பிரிவுகளை மாற்றியமைத்தல்:*

தொழில் பயிற்சி நிலையங்களில் வேலைவாய்ப்புகள் அதிகமில்லாத தொழிற் பிரிவுகள் நீக்கப்பட்டு அவற்றிற்குப் பதிலாக பயிற்சியாளர்கள் வேலைவாய்ப்பு வசதிகளை பெருக்கிக்கொள்ளும் வகையில் புதிய வேலைவாய்ப்பு மிகுதியுள்ள தொழிற் பிரிவுகள் அறிமுகப்படுத்தப்படுகின்றன. எனவே, தேவை ஏற்படின் சில கருவிகள் மற்றும் உபகரணங்கள் கொள்முதல் செய்வதற்கு அடையாள நிதியாக ரூ. 1000-ம் கட்டிட பணிகளுக்கான அடையாள நிதியாக ரூ. 1000-மும் 1995-96 ஆம் ஆண்டின் திட்ட மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### *2. தொழில் பயிற்சி நிலையங்களை மேம்படுத்துதல்:*

1994-95 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தில் (Part-II Scheme) ஒப்பளிக்கப்பட்ட இராமநாதபுரம் தொழிற் பயிற்சி நிலைய நிரந்தர கட்டிடத்தின் கட்டுமான பெரும்பணிகளுக்கென ரூ. 34.99 இலட்சங்களும், சிறு பணிகள் (Minor Works) என்ற தலைப்பின் கீழ் ரூ. 1000-மும் சில கருவிகள் மற்றும் சாதனங்கள் கொள்முதல் செய்வதற்கு ரூ.32 ஆயிரமும் 1995-96-ம் ஆண்டின் வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்டுள்ளது.

### *3. தற்போதுள்ள தொழிற் பயிற்சி நிலையங்களை நவீனப்படுத்துதல்:*

அம்பத்தூர், ஓசூர் மற்றும் கோயம்புத்தூர் தொழிற் பயிற்சி நிலையங்களில் வாழ்க்கை தொழிற் பயிற்சி மேம்பாட்டு திட்டத்தில் எஞ்சியுள்ள தளவாட கருவிகள் கொள்முதல் செய்வதற்கு ரூ. 23 ஆயிரமும் கட்டிடப் பணிகளுக்கு அடையாள நிதியாக ரூ. 1000-மும் 1995-96 ஆம் ஆண்டின் வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டத்தின் கீழ் சேலம் மற்றும் கடலூர் தொழிற் பயிற்சி நிலையங்களில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள "பிளாஸ்டிக்" செய்முறைப்படுத்தும் தொழிற் பிரிவுக்கு (Plastic Processing Operator Trade) கைக்கருவிகள் கொள்முதல் செய்ய ரூ. 17 ஆயிரமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

**4. தட்டுபாடான கருவிகள் மற்றும் சாதனங்கள் கொள்முதல் செய்தல்**

புதுடில்லி மத்திய வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை தலைமை இயக்ககத்தால் வரையறுத்த அளவீட்டுப் பட்டியல்படி இதுவரை கொள்முதல் செய்யப்படாத தட்டுப்பாடன கருவிகள் மற்றும் சாதனங்கள் கொள்முதல் செய்வதற்கு அடையாள நிதியாக ரூ.1000-மும் 1995-96ம் ஆண்டு செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள்**

20. இத்திட்டத்தின் கீழ் சிறுபான்மையினரின் பயனுக்காக நாகப்பட்டினம் தொழிற் பயிற்சி நிலையத்தில் சுருக்கெழுத்துப் பாடப்பிரிவு அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் தொடரா செலவினமாக அடையாள நிதி ரூ.2000/-ம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**உலக வங்கி நிதி உதவியுடன் செயல்திறனை மேம்படுத்தும் திட்டம்**

**21. தொழிற் பயிற்சி நிலைய இயந்திரங்களை நவீனப்படுத்துதல்**

15 முதல் 20 வருடங்களுக்கு முன் துவக்கப்பட்ட தொழிற் பயிற்சி நிலையங்களில் உள்ள இயந்திரங்களும், தளவாட கருவிகளும், வழக்கொழிந்தவைகளாகவும், மிகவும் பழமையானதாகவும் ஆகி வருவதால் ஆண்டு தோறும் அவைகளை படிப்படியாக மாற்றியமைத்து தரம் வாய்ந்த மேம்பட்ட தொழிற்பயிற்சி அளிக்க புதிய இயந்திரங்களும் தளவாட கருவிகளும் கொள்முதல் செய்யப்படுகின்றன. எனவே, தொழிற் பயிற்சி நிலைய இயந்திரங்களை நவீனப்படுத்த 1995-96ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தின் கீழ் ரூ.476.77 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**22. புதிய மகளிர் தொழிற் பயிற்சி நிலையங்கள் ஆரம்பித்தல்**

அம்பத்தூர் மற்றும் புள்ளம்பாடி மகளிர் தொழிற் பயிற்சி நிலையங்களின் கட்டிட கட்டுமான பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இக்கட்டுமான பெரும்பணிகளுக்கென ரூ.14.50 இலட்சம் 1995-96ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் 5 மகளிர் தொழிற் பயிற்சி நிலையங்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய தொழிற்பிரிவுகளுக்கென

இயந்திரங்களும் தளவாடக் கருவிகளும் கொள்முதல் செய்வதற்கு ரூ.3 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 23. இயந்திர பாராமரிப்பு மையங்கள் மற்றும் மாநில அளவில் பணிமனை நிறுவுதல்

தொழிற் பயிற்சி நிலையங்களில் பழுதான இயந்திரங்கள் மற்றும் தளவாடங்களை பழுது பார்த்து அவற்றை பராமரிக்க 6 தொழிற் பயிற்சி நிலையங்களில் இயந்திர பராமரிப்பு மையங்களும், அம்பத்தூரில் மாநில அளவிலான பணிமனை ஒன்றும் நிறுவப்பட்டுள்ளன. அம்பத்தூர் மாநில அளவிலான பணிமனை இயந்திரங்களுக்கு மின் இணைப்புகள் (Power Wiring) செய்வதற்கு கட்டிடப் பெறும் பணியின் கீழ் 1995-96 ஆம் ஆண்டு வரவு செலவு நிதி ஒதுக்கீட்டில் ரூ.1.10 இலட்சமும் இயந்திர பராமரிப்பு மையங்களில் இயந்திரங்கள் மற்றும் தளவாடங்கள் கொள்முதல் செய்வதற்கென ரூ.20 ஆயிரமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 24. தொழிற் பயிற்சி நிலையங்களை விரிவுபடுத்துதல்

கோவை, தேனி, வீரகேரளம்புத்தூர், அரக்கோணம், நாகப்பட்டிணம் மற்றும் புதுக்கோட்டை தொழிற் பயிற்சி நிலையங்களில் இயந்திரங்களுக்கு மின் இணைப்பு அளிப்பதற்காகவும், நாகர்கோவில், அம்பத்தூர், திருச்சி, தொழிற் பயிற்சி நிலையங்களில் கணிப்பொறி வசதி ஏற்படுத்துவதற்கும் 1995-96 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டபெரும் பணியின் கீழ் ரூ. 4.84 இலட்சம் மேலும் இத்திட்டத்தின் கீழ் புதிய தொழிற் பிரிவுகள் அறிமுகப்படுத்தப் படுவதால் அவற்றிற்கு கருவிகள் மற்றும் தளவாடங்கள் கொள்முதல் செய்வதற்கென 1995-96-ம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ரூ. 5.30 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 25. நவீன வாழ்வியல் தொழிற் பயிற்சி விரிவாக்க திட்டம்

உலக வங்கி நிதிஉதவியுடன் செயல்திறனை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் கோவை தொழிற் பயிற்சி நிலையத்தில் செயல்படும் நவீன வாழ்வியல் தொயிற்பயிற்சித் திட்டம் விரிவு படுத்தப்பட்டுள்ளது. இதற்கென்று இயந்திரங்கள் மற்றும் தளவாட பொருட்கள் கொள்முதல் செய்வதற்காக ரூ. 74 ஆயிரமும் கட்டிட பணிக்கு அடையாள தொகையாக ரூ. 1000-ம் 1995-96 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 26. ஒலி, ஒளி காட்சி துணைச் சாதனங்கள் அமைத்தல்

வகுப்பறை போதனை முறையை மேம்படுத்த அனைத்து தொழிற்பயிற்சி நிலையங்களிலும் ஒலி ஒளி காட்சி துணை சாதனங்கள் படிப்படியாக அமைக்கப்பட்டு வருகின்றன. இதற்கென 1995-96 வரவு செலவு திட்டம் மதிப்பீட்டில் அடையாள நிதியாக ரூ.1000-மும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 27. அடிப்படை பயிற்சி மையங்கள் மற்றும் தொடர் அறிவுரை மையங்கள் தோற்றுவித்தல்

உலக வங்கி நிதி உதவியுடன் செயல் திறனை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் இராணிப்பேட்டையில் இரசாயன தொழிற் பிரிவிற்காக ஒரு அடிப்படை பயிற்சி மையமும், அம்பத்தூரில் ஹோட்டல் மற்றும் உணவாக்கத் தொழிற் பிரிவிற்கு மற்றொன்றுமாக இரு அடிப்படை பயிற்சி மையங்களும் அமைக்கப்பட்டு உள்ளன. இந்த அடிப்படை பயிற்சி மையங்களுக்கென்று நிரந்தர கட்டிடம் கட்டுவதற்கென்று 1995-96 வரவு செலவு திட்டத்தில் ரூ.40 இலட்சமும், இவற்றிற்கு கருவிகள் மற்றும் தளவாடங்கள், கொள்முதல் செய்ய ரூ.14 இலட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 28. 1995-96 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட வேண்டிய புதிய திட்டங்கள்

### (1) தொழிற் பயிற்சி நிலையங்களில் கைக்கருவிகளை மாற்றி புதிய கைக்கருவிகள் வழங்குதல்

இத்திட்டத்தின் ஒரு பகுதியாக தொழிற் பயிற்சி நிலையங்களிலுள்ள பழைய மற்றும் வழக்கொழிந்த கைக்கருவிகளுக்குப் பதிலாக புதிய கைக்கருவிகள் வழங்கிட, 1995-96 ஆண்டில் அதற்காக ரூ.5 லட்சம் நிதி ஒதுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### (2) தொழிற் பயிற்சி நிலையங்களில் சி.என்.சி. இயந்திரங்களை அறிமுகப்படுத்துதல்

பெரிய தொழிற் சாலைகள் தமது உற்பத்தியை பெருக்குவதற்காக அதி நவீன இயந்திரங்கள் மற்றும் தளவாடங்களை நிறுவுகின்றன. தொழிற் சாலைகளில் உற்பத்திக்கு முதுகெலும்பாக இருக்கக்கூடிய தொழிற் பயிற்சி நிலையங்களில் பயின்ற பயிற்சியாளர்கள் அவர்களின் பயிற்சிக் காலத்திலேயே இது போன்ற நவீன இயந்திரங்களில் பயிற்சி பெற்றிருந்தால் அவர்களே நேரடியாக உற்பத்தியில் ஈடுபடுத்த முடியும்.

இதற்காக ரூ.32 லட்சம் செலவில் கோவை, ஓசூர், மதுரை மற்றும் சென்னை ஆகிய இடங்களிலுள்ள தொழிற் பயிற்சி நிலையங்களில், முதல் கட்டமாக கடைசல் பிடிப்பவர் மற்றும் இயந்திரப் பணியாள் தொழிற் பிரிவுகளில் சி.என்.சி. இயந்திரங்களை அறிமுகப்படுத்தும் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

### (3) தொழிற் பயிற்சி நியைங்களுக்கு குடிநீரை குளிர வைக்கும் சாதனம் மற்றும் மின்விசிறிகள் அமைத்துக் கொடுத்தல்

கோடை கால வெப்பத்திலிருந்து பயிற்சியாளர்களுக்கும் பணியாளர்களுக்கும் சிரமத்தினைக் குறைத்திட தொழிற் பயிற்சி நிலையங்களில் 1995-96 ஆம் ஆண்டில் ரூ.8.19 இலட்சம் செலவில் 19 குடிநீரை குளிர வைக்கும் இயந்திரங்களும் 819 மின்விசிறிகளைப் பணிமனையிலும் 275 மின்விசிறிகளை வகுப்பறைகளிலும் படிப்படியாக அமைத்திடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### (4) நாகர்கோவில் தொழிற் பயிற்சி நிலையத்திற்கு ஆழ்குழாய் கிணறு அமைத்தல்

நாகர்கோவில் தொழிற் பயிற்சி நிலையத்திற்கும் அதன்பணியாளர்கள் குடியிருப்புகளுக்கும் தடையின்றி குடிநீர் வழங்க 1995-96ஆம் ஆண்டில் ரூ.1.15 இலட்சம் செலவில் ஆழ்குழாய் கிணறு அமைத்திட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

29. தொழிலாளர் ஆணையர், தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் மற்றும் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநர் ஆகிய துறைகளின் 1995-96-ம் ஆண்டு வரவு-செலவு/மதிப்பீடு (பகுதி-1) பற்றிய விவரங்கள் பிற்சேர்க்கை 36-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

30. 1995-96 நிதியாண்டில் செய்யப்படவிருக்கும் பகுதி-II திட்டங்கள் பற்றிய விவரங்கள் பிற்சேர்க்கை-37ல் கொடுக்கப்பட்டுள்ளன.

# அத்தியாயம் 11

அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் தமிழ்நாடு அரசு அமைத்துள்ள ஒரு நிறுவனமாகும். இது மாநில அரசுக்கு சொந்தமான ஒரு வரையறுக்கப்பட்ட நிறுவனமாக 30-11-1978 ஆம் நாளன்று இந்திய கம்பெனிகள் 1956-ஆம் ஆண்டு சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டது.

2. இந்நிறுவனம் வெளிநாட்டில் வேலை வாங்கித்தரும் தனியார் முகவர்கள் மத்தியில் ஆரோக்கியமான போட்டியினை உருவாக்கிடும் நிறுவனமாக செயல்படவும் அதிலும் முக்கியமாக அயல்நாடுகளில் வேலை வாங்கித் தருகிறோம் என்ற போர்வையில் பணம் பறிக்கும் சில தனியார் முகவர்களின் ஏமாற்று வேலைகளிலிருந்து தமிழக மக்களை காப்பாற்றும் பொருட்டு தொடங்கப்பட்டதாகும்.

3. இந்நிறுவனத்தின் அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.50 இலட்சமாகும். சமபங்கு ஒன்று ரூ.1000/- வீதம் 5000 பங்குகளைக் கொண்டது. இதனுடைய செலுத்தப்பட்ட அரசு செலுத்திய பங்குத்தொகை ரூ.25 இலட்சமாகும். இதில் நீண்ட கால கடனாக ரூ.10 இலட்சம் தொகையை 14% வட்டி வீதத்தில் 1994-95 ஆம் ஆண்டு முதல் மாற்றப்பட்டுள்ளது.

4. அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் முக்கிய குறிக்கோள் இந்நிறுவனத்தில் பதிவு செய்துள்ளவர்களுக்கு அயல்நாடுகளில் வேலைவாய்ப்பை தேடித்தருதல் ஆகும். குறைந்தபட்சம் 2 வருடம் முன் அனுபவம் உள்ளவர்கள் அனைவரும் அவரவர்கள் தகுதி மற்றும் திறமைக்கேற்றவாறு உரிய கட்டனம் செலுத்தி அயல்நாடுகளில் வேலைக்காக பதிவு செய்து கொள்ளலாம். இந்நிறுவனத்தின் விவர வங்கி கனிமயமாக்கப்பட்டுள்ளது. இதனால் விரைவாகவும், சிக்கனமாகவும், சீரிய முறையிலும் ஆட்களை தேர்ந்து எடுப்பதில் உதவிகரமாக உள்ளது. இந்நிறுவனம் பன்னாட்டு விமானப் பயணச்சீட்டு விற்பனைக்கு உரிமம் பெற தேவையான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் இந்நிறுவனம் பொதுமக்களுக்கும், பதிவுதாரர்களுக்கும் பாஸ்போர்ட் எடுத்துத் தருவதில் உதவிவருகிறது.

5. இந்நிறுவனம் 31-12-94 ஆம் நாள் வரையில் 4479 நபர்களை அயல்நாடுகளில் வேலைக்கு அனுப்பியுள்ளது (இணைப்பில் உள்ளவாறு). இந்நிறுவனம் 31-12-94 வரையில் அன்னியச் செலவாணியாக ரூ.9,86,431/-ஐ ஈட்டியுள்ளது.